# 5TH ANNUAL RESEARCH SESSION 2023

# PROCEEDINGS

பன்மைத்துவச் சமூகங்களில்
கல்வியின் ஊடாக சமத்துவம், ஒப்புரவு, சமூகநீதி

## Equality, Equity, and Social Justice through Education in Pluralistic Societies

Faculty of Arts and Culture
Eastern University, Sri Lanka

# பன்மைத்துவச் சமூகங்களில் கல்வியின் ஊடாக சமத்துவம், ஒப்புரவு, சமூகநீதி

# Equality, Equity, and Social Justice through Education in Pluralistic Societies

## 5th Annual Research Session-2023

Faculty of Arts & Culture
Eastern University, Sri Lanka

**Title** : Equality, Equity, and Social Justice through Education in Pluralistic Societies


**Editorial Board**

**Chief Editor** : Dr. N. Pushparajah

**Co-editors** : Dr. K. Shrikarunakaran

Mrs. G. Luxmykanthan

Mrs. T. Sathiyajith

Dr. S. Mathanraj

Mrs. Chrisdina Nirojini Mosasrupan

Mr. M. L. Mohamed Helfan

Dr. T. Megarajah



**Edition** : 2023

**Published by**: Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka

**ISBN** : 978-624-5731-37-4

# $5^{th}$ Annual Research Session-2023

## (ARS – 2023)

### Organizing committee

**Chairman** : Dr.V.Gunapalasingam

**Coordinator** : Mr. S. Chandrakumar

**Secretary** : Mrs. Florida Simeon

**Treasurer** : Mr. A. Kanneraj

**Advisory Board** : Prof.V.Gunaretnam
Prof.T.Krishnamohan
Prof.V.Inpamohan
Prof.S.Santhirasegaram
Prof. J. Kennedy
Prof.K. Rajendram
Prof.S.Jeysankar
Prof.K.Suresh

## Message from the Vice Chancellor, Eastern University, Sri Lanka



**Prof. Vallipuram Kanagasingam**
**Vice-Chancellor**
**Eastern University, Sri Lanka**

---

It is with great pleasure that I extend my warm greetings to all participants of the 5th Annual Research Session - 2023 on "Equality, Equity, and Social Justice through Education in Pluralistic Societies" hosted by the Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka. This Conference is a platform to our shared commitment to fostering positive change through education and addressing the pressing social challenges that confront our multicultural societies.

Education, the cornerstone of progress, stands as a beacon of hope in our quest for a more just and equitable world. This conference serves as a platform where brilliant minds from around the globe converge to exchange ideas, share insights, and chart the course towards a more inclusive society. Your participation, dedication, and expertise are invaluable in this noble endeavour.

The theme of this conference, "Equality, Equity, and Social Justice through Education," underscores the pivotal role that education plays in shaping our world. In our increasingly diverse and interconnected global community, education is not just a privilege but a fundamental human right. It is the key to dismantling barriers, dispelling prejudices, and cultivating a society where every individual, regardless of their background, has an equal opportunity to flourish.

As we navigate the intricate landscape of multicultural societies, we must embrace diversity and strive to create educational environments that are inclusive, respectful, and empowering. The knowledge you will impart and the discussions you will foster during this conference are essential in building bridges between cultures and dismantling walls of ignorance and discrimination.

The mission of Eastern University, Sri Lanka has always been to foster a sense of belonging, and our commitment to excellence in education is unwavering. We are proud to host this event that brings together brilliant minds and passionate advocates for change. Together, we can pave the way for a more just and equitable world.

I encourage you to engage wholeheartedly in the sessions, share your knowledge, and open your hearts and minds to the rich tapestry of ideas that will emerge from this conference. Let us work collectively to ensure that the impact of our discussions extends far beyond these proceedings and resonates in the actions we take to create a brighter future for all.

I extend my gratitude to the Dean, organizing committee, presenters, participants, and sponsors who have made this event possible. Your dedication and hard work are appreciated.

Thank you for joining us in this noble pursuit of equality, equity, and justice through education. I am confident that the insights and connections you gain during this conference will have a profound and lasting impact on the world.

Wishing you a successful and transformative conference.

# பீடாதிபதியின் செய்தி, கலை கலாசார பீடம்



**கலாநிதி வ.குணபாலசிங்கம்**
**பீடாதிபதி, கலை கலாசார பீடம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**

கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் ஆய்வறிவுச் செயற்பாடுகளில் வருடாந்த ஆய்வு மாநாடும் ஒன்று. 2023ஆம் ஆண்டுக்கான ஆய்வு மாநாடு பல உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வாளர்களின் ஆய்வுக் கட்டுரைகளை இணைத்துக் கொண்டு **"பன்மைத்துவச் சமூகங்களில் கல்வியின் ஊடாக சமத்துவம், ஒப்புரவு, சமூகநீதி"** எனும் தொனிப் பொருளில் நடைபெறுவது மகிழ்ச்சியளிக்கின்றது. ஆராய்ச்சியினூடாக கற்பிப்பதும் கற்பதும் அதனைச் சமூகத்தில் பிரயோகிப்பதும் இன்றைய தேவையாகும். எமது பீடத்தின் விரிவுரையாளர்கள், மாணவர்கள் இவ்வாறான செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். பல்கலைக்கழகத்திலே கற்றல் - கற்பித்தல் முறைமை ஆராய்ச்சியினை அடித்தளமாகக் கொண்டு அமையப் பெறுவது வரவேற்கத்தக்கது. இவ்வாய்வு மாநாடு இதனையே முதன்மைப்படுத்தி முன்னெடுக்கப்படுகின்றது. இவ்வாய்வு மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரைகள் சமகாலத்தில் எதிர்கொள்ளும் சவால்களில் இருந்து மீள்வதற்குத் துணை நிற்பதுடன், மனிதத்துவ, சூழலியல் சார்ந்த பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளைக் கூறுவனவாகவும் அமைந்துள்ளன. அவற்றிலும், இலங்கையில் வாழ்கின்ற பன்மைத்துவச் சமூகங்கள் கல்வியை மையப்படுத்தி சமத்துவமாக, ஒப்புரவாக, சமூக நீதியுடன் வாழ்வதற்கான கருப்பொருளைக் கொண்டு கட்டுரைகள் கோரப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. கலை கலாசார பீடம் எப்பொழுதும் ஆராய்ச்சியினூடாகவும் ஆற்றுகைகளின் ஊடாகவும் சமூகம் சார்ந்த பங்களிப்பினை வழங்கி வருகின்றது. இவ்வாய்வு மாநாடும் இவ்வாறான பங்களிப்பினை, அறிவுப் பகிர்வை, சமூக மேம்பாட்டை விரிவாக்கும் என நம்புகின்றேன்.

இவ்வாய்வு மாநாட்டின் இணைப்பாளர், உள்ளிட்ட குழுவினர் மிகவும் திறன்படவும், உற்சாகமாகவும் அர்ப்பணிப்புடனும் சரியான முறையில் திட்டமிட்டும் இந்நிகழ்வைச் செய்து முடித்தமைக்கு எமது நன்றியும் பாராட்டுக்களும் உரித்தானவை.

அத்துடன், கிழக்குப் பல்கலைக்கழக உப வேந்தர், பதிவாளர், நிதியாளர், பராமரிப்புப் பிரிவினர், கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியமைக்கு நன்றிகள். அதுமட்டுமன்றி, உள்நாட்டு வெளிநாட்டு ஆய்வாளர்கள் அனைவரும் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து, மதிப்பீட்டாளர்களின் திருத்தங்களைச் செய்து மீளவும் சிறப்பான முறையில் சமர்ப்பித்தமைக்கும் எனது நன்றியினை உரித்தாக்குகின்றேன். அவ்வாறே, மதிப்பீட்டாளர்கள் மிகத் திறமையாகச் சரியான நேரத்திற்கு அதனை முடித்துத் தந்து உதவியமைக்கும் எனது நன்றிகள். அத்துடன் அனைத்து வழிகளிலும் உதவிய கலை கலாசார பீடத்தின் உதவிப் பதிவாளர், ஏனைய கல்விசாரா உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## ஆய்வு மாநாட்டு இணைப்பாளரின் செய்தி



திரு. சு. சந்திரகுமார்
இணைப்பாளர், ஐந்தாவது ஆய்வு மாநாடு
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

---

ஆராய்ச்சி என்பது எப்பொழுதும் உரையாடலுக்கும், கற்றல் - கற்பித்தலுக்கும், மானிட வாழ்வியலுக்கும், சுற்றுச் சூழல் நேயத்திற்கும் புதிய புதிய கண்டுபிடிப்புக்களை மதிப்பீடு செய்து முன்மொழிவதாகும். ஆராய்ச்சியானது ஆய்வாளருக்கும், ஆய்வுப் பொருளுக்கும், குறித்த சமூகத்திற்கும் பயனுடையதாக இருக்க வேண்டும். அப்பொழுதுதே அது பிரயோகத்தைத் தரும். வெறுமனே ஆய்வறிக்கைகளைப் பூட்டிப் பாதுகாத்து வைப்பதால் எவ்வித பயனும் இல்லை. இதனாலேயே கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடம் வருடந்தோறும் 'வருடாந்த ஆய்வு மாநாட்டை' (Annual Research Session) நடத்தி வருகின்றது. இதன் தொடர்ச்சியாக இவ்வாய்வு மாநாடு இவ்வருடம் ஐந்தாவது தடவையாக கல்வி நிலை சார்ந்து நடைபெறுகின்றது. இவ்வருடம் சமகால மனித சமூகத்திற்கு அவசியமானதும், நெருக்கடிச் சூழலில் இருந்து விடுபடுவதற்கும், மனித நேயத்தை மதிப்பதற்கும் ஏற்றவகையில், **'பன்மைத்துவச் சமூகங்களில் கல்வியின் ஊடாக சமத்துவம், ஒப்புரவு, சமூகநீதி'** எனும் பொருண்மையில் ஆராய்ச்சி மாநாடு நடத்தப்படுவது சிறப்பம்சமாகும். ஆராய்சியினூடாக இன்றைய உலக நெருக்கடியை – பொருளாதார வீழ்ச்சியை - சூழலியல் நெருக்கடியை – முரண்பாடுகளை – மனித அழிவை – ஆதிக்க அதிகாரத்தை வீழ்த்த முடியும். ஆராய்ச்சி மகிழ்ச்சிகரமான தொடர் வாழ்வியல் செயற்பாட்டைத் தரவல்லது. ஆராய்ச்சியாளர் ஆய்வுப் பிரச்சினையை முன்வைத்து குறித்த கருதுகோளுடன் குறித்த முறையியலை மையப்படுத்திப் பகுத்து, வியாக்கியானித்துத் தகுந்த நெறிமுறையுடன் முன்வைக்கும் பொழுது, அதில் சமுதாய உள ஆறுதலும் ஆற்றுப்படுத்தலும் மேம்படும்.

கலை கலாசார பீடத்தின் ஐந்தாவது வருடாந்த ஆய்வு மாநாட்டுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரைகள் இளம் ஆய்வாளர்களாலும் மூத்த ஆய்வாளர்களாலும் விரிவான - ஆழமான - முழுமையான தேடலுடன் விவாதித்து, வியாக்கியானித்து, பகுத்து அதற்கான தராதரத்துடன் ஆய்வுக் கோவையாக வெளிவருகின்றது. இவர்கள் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பது மட்டுமல்ல, குறித்த நேரத்திற்குள் கருத்துரைத்து பங்குகொண்டோரின் வினாக்கள், ஐயங்கள் ஆகியவற்றிற்குப் பதிலளித்து விவாதங்கள் வரும் பொழுது ஆரோக்கியமான பதிற்குறியைக் காட்டவேண்டும். மீண்டும் அவர்கள் தமக்கான ஆய்வுச் செயற்பாட்டைச் சரியாகவும் பொருத்தமாகவும் முன்நகர்த்த வேண்டும். இவ்வனுபவம் ஓர் இதழில் ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்து வெளியிடுவதற்கும் ஆய்வுக் கருத்தரங்கில் கட்டுரை சமர்ப்பிப்பதற்கும் இடையிலான வித்தியாசத்தை வெளிப்படுத்தும். ஆராய்ச்சியாளர் கட்புல, செவிப்புல ஆற்றுகையைத் தனது எடுத்துரைப்பு நேரத்தில் பிரயோகிக்க வேண்டும்.

இவ்வருடம் 61 ஆய்வுக் கட்டுரைகள் எமக்குக் கிடைக்கப்பெற்றன. அவற்றுள் 51 ஆய்வுக்கட்டுரைகளே மதிப்பீட்டாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவை. மதிப்பீட்டாளர்களின் கருத்துக்கள், மதிப்பீடுகள், அபிப்பிராயங்கள், வழிகாட்டல்கள் உள்வாங்கப்பட்டு மீண்டும் ஆய்வாளர்களால் திருத்தப்பட்டு சமர்ப்பித்ததும் அதனை ஆசிரியர் குழு உறுப்பினர்கள் மீண்டும் அதன் உள்ளடக்கத்தையும் ஆய்வு நெறிமுறையையும் நுட்பத்தையும் சரிபார்த்து முழுமைப்படுத்துவது முக்கிய தொடர் செயற்பாடுகளாக அமைந்தன.

அத்துடன், மதிப்பீட்டாளர்கள் மதிப்பீட்டின் பொழுது வெளிப்படுத்திய குறிப்புக்களும் கொடுத்த வழிப்படுத்தல்களும் திருத்தப்பட்டுள்ளனவா என்றும் பதிப்பாளர்கள் ஆழமாகச் சரிபார்த்தனர். இவ்வாறான தொடர் செயற்பாட்டுடனே ஆய்வுக் கட்டுரைகள் செம்மைப்படுத்தப்பட்டு, சரிபார்க்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. இத்தொடர் செயற்பாட்டினூடாக ஆய்வாளர்களும் ஒழுங்கமைப்புக் குழுவும் பரஸ்பரம் ஆய்வு முறையியலையும், அதன் நுட்பமுறையையும், ஆய்வுக் கட்டமைப்பையும், உசாத்துணை நூல் பட்டியலையும் ஒழுங்கமைக்கும் புதிய அணுகுமுறையையும் கற்றுக்கொண்டனர். ஏனெனில், ஒழுங்கமைப்பாளர்களும் தொடர் ஆய்வாளர்களே. அவர்களுக்கு இவ்வாறான ஆய்வுச் செயற்பாடு மூலமான கற்றல் அனுபவம் அவசியமானது. இதனால் அவர்களுக்குள்ளும் மாற்றங்கள் மேலெழுந்தன.

அவ்வாறே, ஆய்வுக் கட்டுரைகளை மதிப்பீடு செய்துதந்த மதிப்பீட்டாளர்களுக்கும்கூட மதிப்பீட்டுப் படிவத்தின் நுட்பமும், அதன் வடிவமைப்பும், ஆய்வாளர்களின் ஆய்வுக் கட்டுரைகளின் உள்ளடக்கமும் புதிய அனுபவத்தைக் கொடுத்திருக்கும். ஏனெனில், மதிப்பீட்டாளர்களும் ஒரு வகையான தொடர் ஆராச்சியாளர்கள் ஆவர். நான் இவ்வாறான அணுகுமுறைகளையும் நிலைமாறும் தன்மைகளையும் இவ்வாய்வு மாநாட்டை இணைப்பாக்கம் செய்யும் பொழுது அவதானித்தேன்; உணர்ந்துகொண்டேன். ஓர் ஆராய்ச்சிக் கருத்தரங்க ஒழுங்கமைப்பு என்பது வெறுமனே இயந்திரத்தனமானது அல்ல அதனுள் உயிர்த்துடிப்பான காத்திரமான வாழ்வியல் அனுபவம் நிறைந்திருக்கும் என்பதை உணர்ந்துகொள்ள முடிந்தது. ஆராய்ச்சி மூலமாகப் பல்கலைக்கழகக் கல்விச் சமூகம் தமது கற்றல் - கற்பித்தலை வலுப்படுத்தும் பொழுது வளமான கற்றல் மேம்பாட்டை விரிவாக்குவதுடன் தமது இலக்குக் குழுவான மாணவர் சமுதாயத்தையும் ஆராய்ச்சிக்கு வழிநடத்திச் செல்லும்.

தொடர் ஆராய்ச்சிச் செயற்பாட்டின் அடிப்படையிலேயே புதிய கோட்பாடுகளையும், எண்ணக்கருக்களையும் கல்விச் சமூகத்தால் உருவாக்கி அறிஞர்களாக வளர முடியும். எமக்கான உள்ளூர் ஆய்வு அறிவியலையும் ஆய்வு முறையியலையும் ஆய்வாளர்கள் முன்மொழியும் பொழுது நாம் காலனியநீக்க ஆராய்ச்சி முடிவுகளை முன்வைத்து உள்ளூர் - பிரதேச – தேசிய மனிதவள வளர்ச்சியினை மேலும் வலுப்படுத்த முடியும். சமுதாயம் பயனடைய வேண்டும் என்றால் காலனியநீக்க ஆராய்ச்சி முறையில் தமிழ் அறிவுத் தோற்றவியலில் இருந்து வலுப்படுத்தப்பட்டு பரவலாக்கப்பட வேண்டும். இதற்கு இவ்வாறான ஆராய்ச்சி மாநாடு களம் அமைந்துக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாய்வு மாநாட்டைச் சிறப்பாக ஒழுங்கமைத்து வழிப்படுத்த அனுமதியளித்த கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் அவர்களுக்கு எனது நன்றிகளை முதற்கண் கூறிக்கொள்கின்றேன். இந்நிகழ்வை வெற்றிகரமாக நடத்துவதற்கு

ஆலோசனை வழங்கி, வழிப்படுத்தி நிருவாக ரீதியாக உதவிகளைச் செய்த கலை கலாசார பீடாதிபதி கலாநிதி வ. குணபாலசிங்கம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இவ்வாய்வு மாநாட்டிற்குப் பெரும் துணை புரிந்த ஆய்வு மாநாட்டிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலோசனை சபைக்கும் நன்றிகளை உரித்தாக்குகின்றேன். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர், நிதியாளர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இவ்வாய்வு மாநாட்டைத் திறன்பட வினைத்திறனுடன் செய்து முடிக்க அர்ப்பணிப்புடன் துணைபுரிந்த ஒழுங்கமைப்புக் குழுவினருக்கு எனது மனமார்ந்த நன்றிகள். குறிப்பாக, ஆய்வுக் கோவையின் முதன்மைப் பதிப்பாசிரியர் கலாநிதி ந. புஸ்பராசாவுக்கும் ஏனைய பதிப்பாசிரிய உறுப்பினர்களான திருமதி கௌரி லக்சுமிகாந்தன், திருமதி துஷ்யந்தி சத்தியஜித், திருமதி கிறிஸ்டினா நிறோஜினி மோசஸ்ரூபன், கலாநிதி த. மேகராசா, திரு. ம. லெ. முகம்மது ஹில்பான். க. ஸ்ரீகருணாகரன், கலாநிதி. சீ. மதன்ராஜ் ஆகியோரும் தொடர்ச்சியாக முழு மூச்சுடன் செயற்பட்டனர். இதற்கும் மேலாக மாநாட்டின் செயலாளர் திருமதி புளோரிடா சிமியோன் என்னால் பணிக்கப்படும் ஒவ்வொரு வேலையையும் திட்டமிட்டுத் திறன்படச் செய்தவர். இவர் ஒவ்வொரு பணியையும் விருப்புடனும் சிறப்புடனும் தரமாகச் செய்து முடிக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். அவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இந்நிகழ்வின் காசாளர் திரு. அ. கண்ணேராஜ் அவர்களுக்கும் எனது நன்றிகள். அத்துடன் நிகழ்வு சிறப்பாக நடைபெற விருப்புடன் ஒத்துழைத்த பேராசிரியர்கள், துறைத் தலைவர்கள், முதுநிலை விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான நன்றிகள். கலை கலாசார பீடத்தின் உதவிப் பதிவாளர் வே. பிரகாஷ், கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். இந்த ஆய்வு மாநாடு சிறப்பாக நடைபெறுவதற்குப் பகுதியளவில் நிதி அனுசரணை வழங்கிய அன்பு உள்ளங்களுக்கும் நன்றிகள். இவ்வாய்வு மாநாட்டிற்கு சிறப்பான திருப்புமுனையாக அமைய பலவழிகளிலும் உதவிய நல் உள்ளங்களுக்கும் நன்றிகள்.

# ABSTRACT OF KEYNOTE ADDRESS

Member, Public Service Commision; Former Professor & Head, School of Law, SLIIT; Dean, Faculty of Law, University of Colombo; Chairman, Officiial Languages Commision; Member, Human Rights Commision of Sri Lanka.



## Equality, Equity, and Social Justice through Education in Pluralistic Societies

The Address focuses on the need for understanding, appreciating, protecting and promoting equality, equity and social justice in homogenous societies in general and in pluralistic societies in particular through education. It delves into the meaning of equality, its relevance in public, private and public-cum-private spheres, and how it is understood in a world where it is evident that all are not equal, for example in their status, rights and opportunities, due to various reasons and factors. It also relates the concept of equity to inform the understanding of equality, and explores how observance of 'formal equality' perpetuates inequality and frustrates equity while 'substantive equality' addresses the concerns of equity. Although justice is a relative concept in a general sense, systemic and historic discriminations against people and groups within pluralistic societies demand that social justice tempered with equity and substantive equality is a must to make those societies live in peace and harmony. The Address stresses the importance of our generation and future generations understanding how these diverse concepts interact and impact upon the peoples of pluralistic societies. It concludes with a call for mainstreaming these themes in the academic and extra curricula activities of the undergraduate and postgraduate students as well as in the research activities – theoretical & empirical – undertaken by the academics. Both the academics and students should internalize and absorb these important tenets and live by them.

## ஆய்வரங்கத் தலைவரின் தொடக்கவுரை

கலை கலாசார பீடத்தின் வருடாந்த ஆய்வு அமர்வின் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டிருக்கின்ற உபவேந்தர் அவர்களே, அவ்வமர்விக்கு மையக்கருத்துரை வழங்க வந்திருக்கின்ற பேராசிரியர் நா.செல்வக்குமரன் அவர்களே, ஏனைய பீடங்களின் பீடாதிபதிகளே, அமர்வின் இணைப்பாளர் உள்ளிட்ட ஏனைய உறுப்பினர்களே, பேராசிரியர்களே, விரிவுரையாளர்களே, உதவிப் பதிவாளர் அவர்களே, கல்வி சாரா ஊழியர்களே, ஆய்வாளர்களே, மாணவர்களே உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலை, கலாசார பீடத்தின் இன்றைய வருடாந்த ஆய்வு அமர்வுகள் **"பன்மைத்துவ சமூகங்களில் கல்வியின் ஊடாக சமத்துவம், ஒப்புரவு, சமூகநீதி** (Equality, Equity and Social Justice through Education in Pluralistic Societies)" என்ற தொனிப்பொருளில் இடம்பெற உள்ளது.

முதலில் நாம் "பன்மைத்துவம்" என்னும் எண்ணக்கருவைப் புரிந்துகொள்ளுதல் அவசியமானதாகும். பண்பாட்டுப் பன்முகத்தன்மை, தனித்துவமான பண்பாட்டுச் சூழல், தனித்துவ அடையாளம், விளிம்புநிலைக் குழுக்கள் போன்ற கருத்தாக்கங்களையும் பன்மைத்துவம் என்ற எண்ணக்கருவுடன் இணைத்து விளங்கிக் கொள்ளுதல் வேணடும்.

இன்றைய உலக அரசியல் ஒழுங்கின் இரு முக்கிய போக்குகளாக உலகமயமாதலையும் அதற்கு எதிரான பண்பாட்டுப் பன்முகத்தன்மையைப் பேணுகின்ற பல்வேறு சமூக இயக்கங்களையும் நாம் அடையாளம் காணலாம். முழு உலகிற்கும் ஏற்புடையதான பொருளாதார முறைமை, அரசியல், பண்பாடு என்பவற்றைக் கட்டமைக்கின்ற முயற்சியில் உலகமயமாதலை ஆதரிப்பவர்கள் முனைகின்றனர். மறுதலையாக அவ்வந் நாடுகளின் அல்லது சமூகங்களின் தனித்துவமான பண்பாட்டுச் சூழல்களுக்கேற்ப அதற்கெதிரான எதிர்வினைகளும் மாற்றுக் கதையாடல்களும் முன்வைக்கப்படுகின்றன.

"பண்பாட்டுச் சூழல" என்பது குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தின் ஒட்டு மொத்தமான பௌதீக, அபௌதீகக் கூறுகளை உள்ளடக்கிய முழு வாழ்க்கையையும் குறிக்கின்றது. அதன் உள்ளீடுகளாக வரலாற்றுத் தொடர்ச்சி, அரசியல், பொருளாதாரம், மதம், மொழி, இலக்கியம், வழக்காறுகள், சடங்குகள், மனித உரிமைகளுக்கான மதிப்பீடு போன்ற அபௌதீகக் கூறுகளையும், உணவுப் பழக்க வழக்கங்கள், உடை, உறையுள், போக்குவரத்து, தொடர்பூடகங்கள், பொழுது போக்கு போன்ற பௌதீகக் கூறுகளையும் கொள்ளலாம். குறிப்பிட்ட ஒரு பண்பாடு பற்றிப் பேசுகின்றபோது மேற்கூறிய அனைத்து அம்சங்களும் உள்ளடங்குகின்றன.

உலகின் பல்வேறு இனத்துவ, பண்பாட்டுச் சூழல்களில் வெவ்வேறு காலகட்டங்களில் அதிகாரத்துவத்துக்கு எதிரான கருத்துக்களும் செயற்பாடுகளும் தோன்றியும் தொடர்ந்தும் வந்துள்ளன. இக்கருத்தியல்கள் காலம், பிரதேசம், பண்பாடு எனத் தொடங்கி வர்க்கம், தேசியம், இனத்துவம், மதம், மொழி, சாதி என விரிந்து செல்கின்ற பல்வேறு தனித்த தளங்களில் இயங்குகின்றன. இத்தனித் தனிக் காரணிகளின் முக்கியத்துவத்தையும் அது

தோற்றுவிக்கின்ற பன்முகப்பட்ட நிலைப்பாடுகளையும் விளங்கிக் கொள்வது அவசியமானதாகும்.

பன்மைத்துவம் குறித்த கருத்தியல் உருவாக்கத்திற்கு பின்நவீனத்துவ, பின்காலனித்துவ சிந்தனைகளே வழிகோலின. பின்நவீனத்துவ சிந்தனையானது கலை, இலக்கிய எல்லைகளைக் கடந்து தத்துவம், அரசியல், வாழ்க்கைமுறை எனப் பல தளங்களில் செல்வாக்குச் செலுத்தும் சிந்தனையாகும். மரபு ரீதியான பழைய சமூகங்கள் கொண்டிருந்த கருத்து நிலைகளையும் நவீன முதலாளித்துவ சமூகம் கொண்டிருந்த பல்வேறு சமூக இலக்குகளையும் அது மறுபரிசீலனைக்கு உட்படுத்துகிறது. பெருங்கதையாடல்களையும் ஒற்றைக் கோட்பாடுகளையும் அது சார்ந்த கருத்தியல்களையும் விமர்சித்து அவை மேலாதிக்கப் பண்பு கொண்டவை ஒட்டுமொத்தப்படுத்துபவை (totalising) என நிராகரிக்கிறது.

இத்தகைய பெருங்கதையாடல்களின் தகர்வால் அடித்தள மக்கள் /விளிம்புநிலை மக்கள் குறித்த பார்வை முக்கியத்துவம் பெற்றது. விளிம்புநிலை (Marginalized /Subaltern) என்பது ஒற்றைக் கருத்தியல் கொண்டதல்ல. வர்க்கம், சாதி, பால், நிறுவனம் எனப் பல்வேறு கூறுகளால் தாழ்த்தப்பட்ட மக்களே விளிம்புநிலை மக்களாவர். பின்நவீனத்துவம் குறித்த உரையாடல்களும் எழுத்துக்களும் மேலெழுந்த போது விளிம்புநிலை குறித்த கருத்தாடல்கள் புது வடிவம் பெற்றன.

பல்வேறு சமூகங்களின் பன்மைத்துவங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டன. உலகு தழுவிய பார்வைகள், செயற்பாடுகள், ஒற்றைக்கதையாடல்கள் என்பதற்கு மாற்றாக அவை நிராகரிக்கப்பட்டு தனித்துவங்களை அங்கீகரிக்கின்ற, பிராந்தியமயப்பட்ட அல்லது நுண்ணிதான பார்வைகள் தோன்றின. “வித்தியாசம்” எனும் கருத்தாக்கத்திற்கு முக்கியத்துவம் அளித்தன.

பன்மைத்துவம் பற்றிப் பேசுகின்றபோது “தனித்துவ அடையாளவாதம்” பற்றிய எண்ணக்கருவையும் அதன் தன்மைகளையும் இயங்குநிலைப் போக்கினையும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். தனித்துவ அடையாளம் என்பது ஒரு குறிப்பிட்ட அம்சத்தினை மையமாக வைத்து உருவாக்கப்படுகின்றது. தனித்துவ அடையாளம் ஒன்றின் மைய அம்சமாக இனம், மதம், பால்நிலை, மொழி, தேசியம், இனக்குழு (சாதீயம்), பிராந்தியம் போன்றன அமைகின்றன.

தனித்துவ அடையாளம் ஒன்றின் கூறுகளாக வாழ்க்கைமுறை, நியமங்களும் நியதிகளும், உடைக்கோலம், மதக் கோட்பாட்டு அம்சங்கள், சமூக அமைப்பு, பொருளாதார அமைப்பு, இன ரீதியான, சமூக ரீதியான அடையாளங்கள் மொழிக்கலாசாரங்கள் புவியியல் வாழிடம், பால்நிலை, பாலியல்புகள், கலாசார பண்பாட்டு நடைமுறைகள் போன்ற அம்சங்கள் அமைகின்றன. இத்தகைய பல்வேறு தனித்துவ அடையாளங்கள் மூலம் ஒருவர் அல்லது குழு அடையாளப்படுத்தப்படுகின்ற போது பல்வேறு கூட்டுத்தனித்துவ அடையாளங்கள் உருவாகின்றன.

ஒருவர் இத்தனித்துவ அடையாளங்களில் ஒன்றையோ அல்லது சிலவற்றையோ தனக்குரிய தனித்துவ அடையாளமாகக் கொண்டிருக்கலாம். உதாரணமாக தொழில்நிலை, மதம், தேசியம், வர்க்கம் போன்ற பல்வேறு தனித்துவங்களைக் கொண்ட ஒருவர் இவற்றில்

ஏதாவது ஒன்றையோ சிலவற்றையோ தனக்குரிய தனித்துவ அடையாளமாகக் கொண்டிருக்க முடியும்.

தனித்துவ அடையாளங்களில் பெரும்பாலானவை சமூகரீதியாகக் கட்டமைக்கப்பட்டவை இவை தனிமனித அல்லது குழு சார்ந்ததாக அமைக்கப்படலாம். குறிப்பிட்ட வரலாற்று அரசியல், சமூக நிலைகளில் ஏதாவது ஒரு தனித்துவ அடையாளத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படலாம். தனித்துவ அடையாள வாதங்களில் பெரும்பான்மையானவை குழு சார்ந்தவையாகும். இதனால் தனிமனித தனித்துவம் மறைக்கப்பட்டு குழுத்தனித்துவ அடையாளம் முன்னிறுத்தப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட தனித்துவ அடையாளவாதம் சமூகத்திலுள்ள ஏனைய தனித்துவ அடையாள வாதங்களைப் புறக்கணிக்கின்றது. அல்லது அவற்றை மறுதலிக்கின்றது. அல்லது அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதை நிராகரிக்கிறது. இதனால் சமூக அநீதிகள் இடம்பெறுகின்றன. உதாரணமாக: தேசியத் தனித்துவம், மத அடையாளம், மொழித் தனித்துவம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

சமூங்களில் குழுத்தனித்துவவாதங்கள் முதன்மைபெறும்பொழுது அரசியலதிகாரம், பொருளாதார வளம், கல்வி, தொழில்வாய்ப்புகள் போன்றன குழுவின் கூட்டுமொத்தமான உரிமையாக மாறுகின்றன.

பொதுவாக தனித்துவ வாதங்களின் அரசியல் சித்தாந்தங்கள் இனம், வர்க்கம், பால்நிலை, சாதி போன்ற சமூகத்திற்குள்ளே காணப்படுகின்ற வேறுபாடுகளைக் கடந்து செயற்படுகின்ற தன்மையுடையன என்பதையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

இனம், நிறம், நாடு, சாதி, பால், வர்க்கம், தேசியம், மொழி, பிராந்தியம் என்ற எல்லைகளை/வரையறைகளை அங்கீகரித்து, அவற்றின் தனித்துவங்களை ஏற்றுக்கொண்டு, பன்மைத்துவ சமூகங்களில் கல்வியினூடாக சமத்துவம், ஒப்புரவு, சமூகநீதி பற்றிய அறிவுபூர்வமான சிந்தனைகளை உருவாக்குவதோடு, ஆக்கபூர்வமான செயற்திட்டங்களையும் மேற்கொள்ள வேண்டும். அவ்வகையில் சமத்துவத்தையும் அபிவிருத்தியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தக் கூடிய கல்வி முறைமையை உருவாக்குவது அவசியமாகும். சமத்துவம் எய்தப்படும்போது மனித உரிமைகள் தாமாகவே கிடைக்கின்றன. உதாரணமாக இன்று பால்நிலை அம்சத்தினை சமூகநீதி, சமநீதி அடிப்படையில் கருத்திற்கொண்ட மனித உரிமைச் சட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

எமது கலை, கலாசார பீடத்தின் ஒவ்வொரு துறை சார்ந்த பாடவிதானங்களும் மேற்கூறப்பட்ட கருத்தியல்களை உள்வாங்கிய பல்வேறு அறிவுத் துறைகள் சார்ந்தனவாக வடிவமைக்கப்பட்டுள்ளமையை இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

எனவே ஆய்வுகள் சமூகப் பிரக்ஞையுடன் மேற்கொள்ளப்படுவதும் சமகாலச் சூழலில் அவை உரையாடலுக்கு உட்படுத்தப்படுவதும் அவசியமானதாகும். இன்று நிகழவிருக்கும் ஆய்வு அமர்வுகள் சிறந்த உரையாடலுக்கான தளமாக அமையும் என நினைக்கின்றேன், நன்றி.

கலாநிதி வ.குணபாலசிங்கம்
பீடாதிபதி
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
21.11.2023.

# Content


Message from the Vice Chancellor, Eastern University, Sri Lanka v

பீடாதிபதியின் செய்தி, கலை கலாசாரப்பீடம் vi

ஆய்வு மாநாட்டு இணைப்பாளரின் செய்தி vii

ஆய்வரங்கத் தலைவரின் தொடக்கவுரை x

ABSTRACTS xix

Religions and Cultural Heritage

மட்டக்களப்புத் திருப்படைக் கோயில்களும் பிரபந்தங்களும் 1

ருஜானி நிமலேஸ்வரன்

மரபுவழி கிறிஸ்தவ சபைகளுக்கும் சுயாதீன சபைகளுக்கும் இடையிலான ஓர் ஒப்பாய்வு 13

காமினி டில்மி அப்ஸரா, கணேசன் மதிசீலன்

பாரம்பரிய இந்து சமூகப் பண்பாட்டில் சமகால நாகரிகத்தின் தாக்கம் - யாழ்ப்பாண மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு 27

நிருத்திகா ஜீவராசா, இரத்தினசிங்கம் சகாயசீலன்

இந்து சமயம்சார் தொல்லியல் சின்னங்களும் அழிந்த நகரங்களும்: சிந்துவெளி - அரிக்கமேடு ஆகிய நகரங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 38

பா.ஜேசினி மதுஷிகா, சாந்தி கேசவன்

நாவற்குழி திருவாசக அரண்மணை, கொக்கட்டிச்சோலை திருமந்திர அரண்மனை உருவாக்கத்தில் கலாநிதி ஆறு.திருமுருகனின் பங்களிப்பு 53

தவராசா லக்ஸ்சனா, வ. குணபாலசிங்கம்

Ethics and Human Values

இணையவழிக் குற்றங்களில் தகவல் தொழில்நுட்பத்தின் செல்வாக்கு - ஒரு பிரயோக ஒழுக்கவியல் நோக்கு 69

தேவதாஸ் தவேநிதா, முனியாண்டி ரவி

மகாபாரதம் வெளிப்படுத்தும் வாழ்வியல் தத்துவம் - ஒழுக்கவியல் அடிப்படையிலான ஓர் ஆய்வு 82

நித்திஞானம் றொசாயினி

திருக்குறள் மற்றும் நாலடியாரில் இல்வாழ்க்கை எனும் எண்ணக்கருவும் அதன் தனித்துவமும் - தமிழர் மெய்யியல் சிந்தனை நோக்கில் ஓர் ஒப்பீட்டு ஆய்வு 96

நோமன் றொசாயிறோ ஜான்சி, முனியாண்டி ரவி

இந்து மற்றும் சமண சமயங்களில் காணப்படும் சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் கருத்துக்கள் - ஓர் ஒப்பீட்டு ஆய்வு 111

லிங்கமூர்த்தி விரிதரன், இரத்தினசபாபதி பிரேம்குமார்

Literature and Society

இராஜம்கிருஸ்ணனின் நாவல்கள் வெளிப்படுத்தும் பெண்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகளும் 124

ஞா. சுதர்சுயா

புறப்பாடல்களில் சீறூர் மன்னர் சமுதாயம்: மானிடவியல் அணுகுமுறை 138

ம.பிரேமா, க. விஜயகுமாரி

சங்க இலக்கியத்தில் தாவரங்கள் - ஓர் ஆய்வு 148

வெ.முத்துலட்சுமி

மேலைத்தேய நாடுகளில் இந்து சஞ்சிகைகளும் ஆய்வு இதழ்களும் - ஓர் ஆய்வு 160

செல்வராசா லலிதா, சாந்தி கேசவன்

Literature and Contemporary Voices

பேராசிரியர் வ. மகேஸ்வரனின் தமிழ் இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் – ஒரு நோக்கு 172

சபேசன் சுகன்யா, ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்

வ.ஐ.ச.ஜெயபாலனின் புலம்பெயர் கவிதைகள் - ஓர் ஆய்வு 184

கிருபாகரன் சிந்துஜா, ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்

அ.செ.முருகானந்தனின் சிறுகதைகள் - ஓர் ஆய்வு 202

ஷம்சிகா ஜீவகரன், விஜிதா திவாகரன்

பேராசிரியர் செ.யோகராசாவின் ஈழத்து நவீன தமிழ் இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுகள் - ஓர் மதிப்பீடு 216

அமிர்தலிங்கம் அனிதா, நதிரா மரியசந்தனம்

மூதூர் அனஸின் நவீன காவியங்கள் - ஓர் ஆய்வு 229

பாலரட்ணம் சரண்யா, நதிரா மரியசந்தனம்

Performance and Aesthetics

பற்றிஸ் பவிஸின் ஆற்றுகைப் பகுப்பாய்வும் ஈழத்துத் தமிழ் அரங்கப் போக்கும் - ஓர் ஆய்வு 245

கா. அற்புதன்

வெண்கல உலோக வார்ப்புக் கைவினையாக்கத் தொழில் முனைவும் அதன் சவால்களும்: மட்டக்களப்பு மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 251

இளையதம்பி குகநாதன்

குழந்தை ம. சண்முகலிங்கத்தின் கல்வியியல் அரங்கச் செயற்பாடுகளும் அதன் முக்கியத்துவமும் - ஓர் ஆய்வு 266

கு. ரவிச்சந்திரன், புவனேந்திரன் ரதிகலா

Education and Society

தரம் ஐந்து புலமைப்பரிசில் மாணவர்களின் கற்றல் அடைவில் பெற்றோர்களின் சமூக - பொருளாதார காரணிகளின் செல்வாக்கு (போரதீவுப்பற்றுக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு) 280

சுஜானா சிவசுதன்

கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டை மேம்படுத்துவதில் பாடசாலையின் வளப்பற்றாக்குறை ஏற்படுத்தும் தாக்கம் (பட்டிருப்பு வலய மண்முனை தென் எருவில் பற்றுக் கோட்டப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவை நிலை ஆய்வு) 294

யோ. அகல்யா

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி க.பொ.த. உ/த மாணவர்களின் கற்றலில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் (பிலியந்தல கல்வி வலய தமிழ் மொழிமூலப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு) 307

வனஜா லோகபிரசாத், சபாரட்ணம் அதிரதன்

பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டமும் அதனை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சவால்களும் (ஏறாவூர்ப்பற்று மேற்கு கோட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு) 319

சுப்பிரமணியம் பாலகிருஸ்ணன்

க.பொ.த உயர்தர கலைத்துறை மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்குறைவும் சமூகப்பொருளாதாரக் காரணிகளின் தாக்கமும்: மூதூர் கல்வி வலய ஈச்சிலம்பற்றுக் கல்விக் கோட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 333

ச.ஜீவதரன், ஆ.நித்திலவர்ணன்

## Cultural Diversity and Inclusion

இந்து பௌத்த மக்களின் வாழ்வியல் சடங்குகளுக்கிடையிலான பரஸ்பரத் தொடர்புகள்: கேகாலை மாவட்டத்து தெஹியோவிட்டப் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு 352

சிதிரிசேன துஷாந்தி, வ. குணபாலசிங்கம்

ஐ.எல்.எம். அப்துல் அஸீஸின் சமய, சமூகப் பணிகள் - ஒரு பன்முகப் பார்வை 352

ஏ. ஜ.ஃபர் ஹுஸைன்

இலங்கையின் மத்தியஸ்த சபைகள் எதிர்நோக்குகின்ற சவால்களும் அதற்கான தீர்வுகளும்: ஏறாவூர் மத்தியஸ்த சபையினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 374

தாஜுதீன் முஹம்மது முபாஸ்

இலங்கையில் கிறிஸ்தவக் கல்வி ஊடாக மாணவர்களிடையே சமூக ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புதல் 387

யே. ஹேரோசினி

## Gender and Equality

மலையக லயன் குடியிருப்புகளில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் சமூகப் பாதுகாப்புப் பிரச்சினைகள்: பம்பரகலை தோட்டத்தை மையமாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு 400

சுப்பையா ரிஷாந்தி, குணநாயகம் விக்னேஸ்வரன்

விவாகரத்தான பெண்களின் வாழ்வில் ஏற்படுத்தப்படும் உளவியல் தாக்கங்கள்: ஏறாவூர்பற்று பிரதேச செயலகப்பிரிவை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 411

அரியரெத்தினம் அணோஜா

பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் வேலைக்குச் செல்லும் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள்: செங்கலடி 01 கிராம சேவகர் பிரிவினை மையமாகக் கொண்ட ஆய்வு 427

வரதராஜன் சித்தாரா, இரத்தினசபாபதி பிரேம்குமார்

## Environment and Social Justice


மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பயன்பாட்டு மாற்றம் (2002 – 2022) 439

அஞ்சாநிலை சந்திரமோகன்

நுவரெலியப் பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பயன்பாட்டு மாற்றங்கள் 461

பிச்சமுத்து காயத்திரி

இலங்கையின் பொருளாதார நெருக்கடியினால் மீனவ சமுதாயம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்: ஒலுவில் பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு 475

தாஜுதீன் முஹம்மது முபாஸ்

முதியோர்கள் எதிர்கொள்ளும் சுகாதாரப் பிரச்சினைகள்: நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பெருந்தோட்டங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு மருத்துவ சமூகவியல் ஆய்வு485

பா.திலான், ப.நிரோஷா, சி.சிவகாந்தன்

உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளும் விளைவுகளும்: நுவரெலியா மாவட்டத்தின் லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவினை அடிப்படையாகக்கொண்ட ஒரு மருத்துவ சமூகவியல் ஆய்வு 502

எலோமி ஜெனிட்டா, சி.சிவகாந்தன்

தேயிலைத் தோட்டப் பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைகள்: அம்பகமுவப் பிரதேச செயலகப் பிரிவை அடிப்படையாகக் கொண்ட ஒரு மருத்துவ சமூகவியல் ஆய்வு 519

பா. ரோஹினி, சி. சிவகாந்தன்


## Inclusive Education Policy and Practice


தரம் 06 மாணவர்களின் எழுத்துத்திறன் விருத்தி கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம் 534

அஸீஸ் பாத்திமா ஹாழிறா, ராஜேந்திரன் தக்ஷாயினி

கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் வாசிப்புத்திறன் பின்னடைவு கற்றல் செயற்பாடுகளில் ஏற்படுத்தும் சவால்கள் 547

முஹம்மட் ஜமால்தீன் பாத்திமா ஸஜீதா, ராஜேந்திரன் தக்ஷாயினி

சிரேஷ்ட இடைநிலை வகுப்பு (தரம் 11) மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் திறன்வகுப்பறையின் செல்வாக்கு (மண்முனை வடக்கு கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவைநிலை ஆய்வு) 563

சத்தியராசா பிரியசகி, ராஜேந்திரன் தக்ஷாயினி

INCLUSIVE EDUCATION IN THE BATTICALOA DISTRICT: ANALYZING PRACTICES, STRENGTHS, AND CHALLENGES 578

K. Ketheeswaran, F.M. Nawastheen


## Virtual Education and Equity


நிகழ்நிலைக் கல்வி மலையக பாடசாலைகளில் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களில் ஏற்படுத்தியுள்ள ஒழுக்கவியல் ரீதியான தாக்கங்கள்: கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிட்டப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 595

ராஜா பிரியதர்ஷனி, முனியாண்டி ரவி

விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் வகிபாகம் 609

ந.கோவேந்தன, ராஜேந்திரன் தக்ஷாயினி

கற்றல்-கற்பித்தல் செயன்முறையில் இணையவழிச் சாதனங்களின் பயன்பாடு: சிரேஷ்ட இடைநிலை வகுப்புகள் பற்றிய ஓர் ஆய்வு 629

இராசசிங்கம் நாகேந்திரன், தேவராசா முகுந்தன்

FACTORS AFFECTING SRI LANKAN CHILDREN'S CONCEPTION OF CONSERVATION AND SPACE 644

T. Mukunthan ,D.D.I.Deepthinee Dediwala

ENSURING EQUITY IN EDUCATION THROUGH THE 13 YEARS GUARANTEED EDUCATION PROGRAMME 655

S.Sritharan

## Politics and Human Rights

சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகத்தவர்களுக்கிடையிலான மோதல்களும் நல்லிணக்க முயற்சிகளும் - இலங்கையில் இடம்பெற்ற முக்கிய கலவரங்களை மையப்படுத்திய ஆய்வு 671

பாத்திமா நவாஸ்தீன், பேரின்பம் சச்சிதானந்தம்

மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமையும் பிரயோகமும்: பதுளைத் தேர்தல் மாவட்டத்தில் 2015ஆம் 2020ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு 685

செல்லதுரை புஸ்பகுமார், ஆறுமுகம் யோகராஜா

உள்நாட்டு யுத்தத்திற்குப் பின்னரான மனித உரிமை மீறல்கள் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் ஏற்படுத்திய தாக்கங்கள் 702

வ. ஜெயலோஜினி

PANEL OF REVIEWERS 718

# PROCEEDINGS

# Religions and Cultural Heritage

# மட்டக்களப்புத் திருப்படைக் கோயில்களும் பிரபந்தங்களும்

**ருஜானி நிமலேஸ்வரன்**
மட்/ககு/வாழைச்சேனை இந்துக் கல்லூரி- தேசிய பாடசாலை,
வாழைச்சேனை, மட்டக்களப்பு
nrujani@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கையில் பண்டுதொட்டு இந்து சமயம் சிறந்து விளங்கிய பிராந்தியங்களில் மட்டக்களப்பு மாவட்டம் தனித்துவமானது. மட்டக்களப்பில் திருப்படைக்கோயில்கள், அவற்றின்மீது பாடப்பட்ட பிரபந்தங்கள், அவற்றினூடாக வெளிப்படுத்தப்படும் இந்துப் பண்பாட்டம்சங்களை வெளிக்கொணர்வது ஆய்வு நோக்கமாகும். மட்டக்களப்புத் திருத்தலங்கள்மீது பாடப்பட்ட பிரபந்தங்களின் பாடுபொருள் தமிழர் வரலாற்றில் தாக்கம் செலுத்துகின்றனவா? என்பது இவ்வாய்வின் வினாவாகும். பண்புசார் ஆய்வு அணுகுமுறை நுட்பத்துடன் விளக்க முறையியல் பயன்படுத்தப்படுகின்றது. 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளிலே மட்டக்களப்புத் திருத்தலங்கள்மீது அதிகளவு பிரபந்தங்கள் எழுந்துள்ளன என்பன இவ்வாய்வின் கருதுகோள்களாக அமைகின்றன. மட்டக்களப்பின் சைவசமய வளர்ச்சியில் இங்குள்ள முருகன் கோயில்களுக்குக் கணிசமான இடமுண்டு. மட்டக்களப்பில் அமைந்துள்ள பழமையான முருகன் கோயில்கள் திருப்படைக் கோயில்கள் என அழைக்கப்படுகின்றன. முருகனுடைய திருப்படையாகிய வேல் வைத்து வழிபட்ட தொன்மையான கோயில்கள் திருப்படைக் கோயில்கள் ஆகும். பண்டைய அரசரின் மதிப்பும் மானியமும் சீர்வரிசைகளும் பெற்ற கோயில்களே திருப்படைக் கோயில்களாக அழைக்கப்பட்டன. மட்டக்களப்பின் தனித்துவமான இந்துப் பண்பாட்டை வெளிப்படுத்துவதில் திருப்படைக் கோயில்களுக்கு முக்கிய பங்குண்டு. இத்தகைய திருப்படைக் கோயில்களின் சிறப்பினையும் அவை சார்ந்த பண்பாட்டு அம்சங்களையும் வெளிக்கொணர்வதில் அக்கோயில்கள்மீது பாடப்பட்ட பிரபந்தங்கள் முக்கிய ஆதாரங்களாகத் திகழ்கின்றன. மக்கள் மத்தியில் சமயக் கருத்துக்களைப் நிலைநிறுத்துவதற்கான பல்வேறு அம்சங்களைப் பிரபந்தங்கள் கொண்டிருந்தன. திருப்படைக் கோயில்கள் மீதெழுந்த பிரபந்தங்கள் முருகன் புகழ், தலங்களின் சிறப்பு, புராணக் கதைகள், சமுதாயப் பிரச்சினைகள், ஆன்ம ஈடேற்றத்திற்கு வேண்டிய வழிவகைகள், மட்டக்களப்பின் வரலாற்றியல் அம்சங்கள், வழிபாட்டு முறைகள், சமுதாய அமைப்பு முறைகள் போன்ற பல்வேறு விடயங்களினைப் பாடுபொருளாகக் கொண்டமைந்துள்ளமையினை இவ்வாய்வினூடாக அடையாளங்காண முடிகின்றது. இவற்றினூடாக மட்டக்களப்பில் பண்டுதொட்டு வழக்கிலிருந்த முருக வழிபாட்டின் பரிணாம வளர்ச்சியையும் அதன் பிரதான அம்சங்களையும் அவற்றாற் சமுதாயத்தில் ஏற்பட்ட செல்வாக்கினையும் அறிந்துகொள்ள முடிகின்றது. மட்டக்களப்புத் திருத்தலங்கள்மீது பாடப்பட்ட பிரபந்தங்கள் மட்டக்களப்பு இந்துப் பண்பாடு தொடர்பான பல விடயங்களை வெளிக்கொணர்வதில் முக்கிய ஆதாரங்களாக விளங்குவதனால் இதனை ஆவணப்படுத்துவதற்கு இவ்வாய்வு அவசியமாகின்றது. மேலும் மட்டக்களப்பு இந்துப் பண்பாட்டின் கையளிப்புப் பாரம்பரியத்தில் உள்ள குறைபாட்டினால் பல்வேறு பண்பாட்டு அடையாளங்கள் அழிந்து போகும் நிலை தற்பொழுது உருவாகியுள்ளது. எனவே, மட்டக்களப்பின் பாரம்பரியமான இந்துப் பண்பாட்டினை பாதுகாக்கும் பொருட்டு இவ்வாய்வானது முக்கியத்துவமுடையதாக அமைகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *மட்டக்களப்பு, திருப்படைக் கோயில்கள், பிரபந்தங்கள், முருகன், இந்துப் பண்பாட்டம்சங்கள்*

## அறிமுகம்

மட்டக்களப்பு மக்கள் புராதன காலம் முதலாகவே இந்து சமய மரபைப் பின்பற்றி வந்தமையினால் அவர்தம் பண்பாடும் இந்துப் பண்பாடாகவே வளர்ச்சி பெற்று வந்துள்ளது. மட்டக்களப்பின் தனித்துவமான இந்துப்பண்பாட்டை வெளிப்படுத்துவதில் கோயில்கள் முக்கிய இடம் பெறுகின்றன. இங்கு மக்களுடைய வாழ்விடங்களுக்கும் அவர்களது சமூக,

பொருளாதார, பண்பாடுகளுக்கும் ஏற்றாற்போல் கோயில்கள் அமைக்கப்பட்டு வளர்ச்சி பெற்று வந்துள்ளன. கோயில்கள் வெறுமனே வணக்கத்தலங்களாக மட்டுமன்றி பண்பாட்டு மையங்களாகவும் திகழ்கின்றன.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் நிலைபெற்று விளங்குகின்ற சமய மரபுகளில் சைவ சமயமே மிகப்பழமையானது. மட்டக்களப்புச் சைவநெறியில் விஸ்ணு வழிபாடு, அம்மன் வழிபாடு, முருக வழிபாடு மற்றும் ஏனைய வழிபாடுகளும் கலந்துள்ளமை அதன் தனித்துவத்தை மேலும் வலுப்படுத்துகின்றது.. இதனடிப்படையில் மட்டக்களப்புச் சைவநெறியில் முருகவழிபாடு குறிப்பிடத்தக்க இடத்தினை பெற்று இருந்தமையினை அறியமுடிகின்றது. மட்டக்களப்பில் முருக வழிபாடானது தமிழர்களின் வாழ்வின் ஒரு அங்கமாகவே பின்னிப்பிணைந்துள்ளமையினை மக்களின் வாழ்க்கை முறைகளும், வழிபாடியற்றும் தன்மைகளும், பரந்து செறிந்து வியாபித்திருக்கும் முருகன் ஆலயங்களும் எடுத்துக் காட்டிக்கொண்டு இருக்கும்.

தமிழகத்தில் சிறப்புற்று விளங்குகின்ற முருகன் கோயில்களை ஆறுபடை வீடுகள் என அழைப்பது போன்று, மட்டக்களப்புப் பிரதேசத்தில் அமைந்துள்ள பழமையான முருகன் கோயில்களைத் திருப்படைக் கோயில்களெனஅழைக்கும் வழக்கம் உண்டு. திருப்படைக் கோயில் என்று பெயர்பெறக் காரணம் இக்கோயில் மூலஸ்தானத்தில் முருகனுடைய படையாகிய வேல் பிரதிஸ்டை செய்யப்பட்டிருப்பதனலாகும். மட்டக்களப்பின் திருப்படைக் கோயில்களை அடையாளப்படுத்துவதில் ஆய்வாளர்களிடையே வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. திருப்படை கோயில்கள் தொடர்பாக வி.சீ.கந்தையா பின்வருமாறு கூறியுள்ளார். ‘மட்டக்களப்பிலே பழமையும் பிரசித்தமுடையனவான முருகன் கோயில்களைத் திருப்படைக் கோயில்கள் என்று கூறுவர். பண்டைய அரசரின் மதிப்பும், மானியமும் சீர்வரிசைகளும் பெற்ற கோயில்களே திருப்படைக் கோயில்களாம்’ (கந்தையா, 2002). இவை கலிங்க மாகன் காலத்திலிருந்தே செல்வாக்குப் பெற்றவையாகும்.

அந்தவகையில் திருக்கோயில் சித்திரவேலாயுதர் கோயில் முதலாவது திருப்படைக் கோயிலாகும். இத்துடன் வெருகல் சித்திர வேலாயுதர் கோயில், சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயில், போரதீவு சித்திர வேலாயுதர் கோயில், மண்டூர் முருகன் கோயில் என்பனவும் திருப்படைக்கோயில் என்பதனுள் உள்ளடங்குகின்றன. இவை மட்டக்களப்புப் பிரதேசம் முழுவதற்கும் வழிபாட்டுக்குரிய கோயில்களாகையால் தேசத்துக்கோயில்கள் எனவும் அழைக்கப்படலாயின. இவ்வாலயங்கள் அனைத்திலும் கதிர்காமத்தைப் பின்னணியாகக் கொண்ட ஒரு வழிபாட்டு முறையே பின்பற்றப்படுவதனைக் காணலாம்.

மட்டக்களப்பு ஆதிக்குடிகளான இயக்கர், நாகர் வாழ்ந்த பிரதேசமாகும். பிற்காலத்தில் இவர்கள் வழிவந்த வேட இனத்தவர் மட்டக்களப்புத் தேசத்தில் பல இடங்களில் வாழ்ந்துள்ளனர். இவர்களின் குலதெய்வம் முருகன் ஆகையால் மட்டக்களப்புப் பிரதேசத்தில் முருகவழிபாடு ஆரம்ப காலந்தோட்டே நிலவி வருவதனைக் காணலாம். மட்டக்களப்பின் பாரம்பரிய சமூக முறைமை வேடர்வழிவந்த வழிபாடுகளையே வெளிப்படுத்தி நிற்கின்றன. மட்டக்களப்பில் திருப்படைக் கோயில்கள் என்று சிறப்பிக்கப்படும் திருக்கோயில், மண்டூர், வெருகல், கோயிற்போராதீவு, சித்தாண்டி முதலிய இடங்களிலுள்ள ஆலயங்களின் வரலாற்றுத்

தொடக்கநிலை வேடுவர்களைக் கொண்டே முன்னெடுக்கப்படுகின்றது. திருப்படைக்கோயில் நடைமுறைகளிலும் வழிபாட்டு மரபிலும் வேடுவர்களின் வழக்காறுகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. ஆதிகால வேடர் சம்பிரதாயங்கள் இக்கோயில்களில் இன்றும் பின்பற்றப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டக்களப்புச் சிற்றரசரும், கண்டிச் சிங்கள மன்னர்களும் திருப்படைக் கோயில்களின் நிருவாகம், பராமரிப்பு, மற்றும் தொண்டுகள் என்பவற்றைச் செய்ய சாதியர்களை நியமித்து, அக்கோயில்களில் இடம்பெற வேண்டிய விழாக்களையும் செவ்வனே நடத்தியுள்ளமையினை அறியமுடிகின்றது. பெரும்பாலான திருப்படைக் கோயில்களின் நிருவாகத் தலைமைக்கென கலிங்க வெள்ளாளர் எனும் சாதியார் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இங்கே காணப்படும் முருக வணக்கமுறையினை எடுத்துக் கொண்டால், முருகனை அழகுத் தெய்வமாகவும், வெற்றித் தெய்வமாகவும் வணங்குகின்றனர். ஆண்டுதோறும் முருகனுக்குரிய திருவிழாக்கள் ஆனிமாதம் தொடக்கம் புரட்டாதி மாதம் முடிவதற்குள் இடம்பெறுகின்றது. திருப்படைக் கோயில்களனைத்துமே வேல்வழிபாட்டினை தொடர்ச்சியாக கொண்டவையாகும். இவ்வாலயங்களில் மூடிய பெட்டியில் யந்திரம் வைத்து வழிபடும் முறையே பெரும்பாலும் பின்பற்றப்படுகின்றன. இங்கு பெரும்பாலான கோயில்களில் மூலஸ்தான கதவு திரைச்சீலையால் மூடப்பட்டிருக்க, பூசாரி வாய்கட்டிப் பூசை செய்வதே வழக்கமாகும். சாதி பேதங்களைக் கடந்து அனைத்து இந்து மக்களையும் இந்துப் பண்பாட்டுச் சூழலில் நிலைத்து நிற்கச் செய்வதில் திருப்படைக் கோயில்கள் முக்கிய பங்கினை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**திருப்படைக்கோயில்கள்**

***திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி கோயில்***

'தேசத்துக் கோயில்' என்று அழைக்கப்படுகின்ற திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயம் இலங்கையில் அமைந்துள்ள மிகப்பழமை வாய்ந்த முருக வழிபாட்டுத் தலங்களுள் ஒன்றாகும். இலங்கையின் கிழக்கே அம்பாறை மாவட்டத்தில் திருக்கோயில் (நாகர்முனை) என்னும் ஊரில் இவ்வாலயம் அமைந்துள்ளது. முருக வழிபாட்டின் அம்சமான வேல் வழிபாட்டைக் கொண்ட இவ்வாலயம் ஆதிக்குடிகளான வேடுவரின் வழிபாட்டிலேயே தொடங்கப்பட்டது. மட்டக்களப்பில் உள்ள முதலாவது திருப்படைக் கோயில் என்ற சிறப்பும் இத்தலத்திற்குரியது. ஈழத்து திருச்செந்தூர் என்று இவ்வாலயம் சிறப்பிக்கப்படுகின்றது. கி.பி. 1ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புவனேகபாகு மன்னனால் இவ்வாலயம் அழகுற அமைக்கப்பட்டதாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. மாகோனின் திருப்பணிகள் அவ்வாலயத்திற்கு இடம் பெற்றுள்ளமையையும் இந்நூல் குறிப்பிடுகின்றது.

நாகர்முனைக் கோயிலென்று பழங்காலத்தில் வழங்கப்பட்டு வந்த இவ்வாலயம் திருக்கோயில் எனப் பெயர்பெற்றமைக்கு கர்ணபரம்பரைக் கதையொன்று கூறப்பட்டு வருகின்றது. மட்டக்களப்பு பிரதேசத்தில் நிலவிவரும் பழங்கதையின் அடிப்படையில், சூரனைக் கொன்று வெற்றியுடன் மீண்ட வேலானது உக்கிரத்தோடு வரும் வழியில் வாகூர மலையை இரு கூறுகளாகப் பிளந்த பின் கடலில் மூழ்கிய பின் மூன்று கதிர்களைச் சிந்திச்

சென்றதென்றும் வேலுருக் கொண்ட அக்கதிர்கள் மூன்றும் முறையே உகந்த மலை உச்சியிலும், திருக்கோயிலில் வெள்ளை நாவல் மரத்தின் மீதும், மண்டூரில் தில்லை மரத்தின் மீதும் தங்கியிருந்தன. இதனைக் கண்ட வேடுவரால் கொத்துப் பந்தலிட்டு அவர்களது பாரம்பரிய பூசை முறைகளால் வளர்த்தெடுக்கப்பட்ட இவ்வாலயம் பின்னர் வீரசைவ மரபினரான சங்கமரின் நீண்ட கால பூசை முறைமைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது. காலப் போக்கில் சோழர்களுடைய தொடர்பினைப் பெற்ற இவ்வாலயம் ஆகம நெறிகளுக்கு அமைந்த வழிபாட்டு முறைகளை பின்பற்றி வருகின்றது.

ஆடி அமாவாசைக்கு முன்னைய எட்டு நாட்கள் சுவாமிக்குச் சிறப்பாக திருவிழாக்கள் நடைபெற்று அமாவாசை நன்னாளில் சமுத்திர தீர்த்தோற்சவம் இடம்பெறும். அன்றைய நாளிலே மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரருக்கும் தீர்த்தோற்சவம் நிகழும். அதற்கென திருக்கோயில் முன் கடல் நீர் எடுத்து மாமாங்கத் திருக்குளத்தில் கலக்க விடுவது பண்டைய மரபாக இருந்து வருகின்றது. ஐப்பசி மாதத்தில் கந்தசஸ்டியும், சூரபத்மனுடன் சூரன் போரும் இடம்பெற்று வருகின்றன. மேலும் கார்த்திகை விளக்கீடு, திருவெம்பாவை, மார்கழித் திருவாதிரை, சிவராத்திரி, சித்திரைப்புத்தாண்டு விழா என்பனவும் நடைபெற்று வருகின்றன. மட்டக்களப்பத் தமிழரது சிற்பக்கலை ஆர்வத்துக்குத் திருக்கோயிலில் அமைந்துள்ள சிற்பவேலைப்பாடுகள் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

திருக்கோயில் சித்திரவேலாயுதர் கோயில் மீது சித்திரவேல் வருக்கமாலை, திருக்கோவில் ஊஞ்சல், திருக்கோயிற் பதிகம், திருக்கோயிற் திருப்பதிகம், திருக்கோயிற் சித்திரவேலாயுதர் திருத்தலபுராணம், சித்திர வேலாயுதசுவாமி பேரில் போற்றிப் பதிகமாலை போன்ற பிரபந்தங்கள் பாடப்பட்டுள்ளன.

***கோயிற் போரதீவு சித்திரவேலாயுதர் கோயில்***

கோயிற் போரதீவு சித்திரவேலாயுதர் கோயில் மட்டக்களப்பிற்குத் தெற்கே, வாவிக்குமேற்குப் பகுதியில் 19 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. போர்முனை நாடு, வெள்ளை நாவற்பதி, போரதீவு என பண்டைய நாளில் அழைக்கப்பட்ட இவ்வூர் கோயிற் சிறப்பு காரணமாக கோயில் போரதீவு என மாற்றம் பெற்றது.

காலசேனனின் படையெடுப்பில் மண்டூர் ஆலயத்துடன் இவ்வாலயமும் அழிக்கப்பட்ட பின் மதிசுதன் இவ்வாலயங்களைத் தமிழ்நாட்டு சிற்பிகளை வரவழைத்துக் கட்டுவித்ததாக மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகிறது. ஆலய மூலஸ்தான வாசலின் படிக்கல்லில், “தென்னிந்திய காரைக்குடி நாகப்பச் செட்டி உபயம் பிராமணர் பராபரிப்பு’ (கந்தையா, 2002) என பொறிக்கப்பட்டுள்ளமை பிற்காலத்தில் செட்டிகளின் திருப்பணியை இக்கோயில் பெற்றுள்ளமையினைக் காட்டுகின்றது.

இவ்வாலயமானது கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிருத்தமண்டபம் என்பவற்றோடு களஞ்சிய அறையும் மதிலும் கொண்டு காணப்படுகின்றது. இவ்வாலயத்தைப் பராமரிக்க வேண்டி களுவாஞ்சிக்குடி பெரிய கவுத்தன் குடியைச் சேர்ந்த வேளாளர் இவ்வாலய வண்ணக்கராகவும், கோயில் போரதீவு பொன்னாச்சி குடியைச் சேர்ந்த கோவிலார் கண்காணிப்பாளராகவும், முற்குகர் இனத்தின் பணிக்கனா குடியைச் சேர்ந்தவர்

முகாமையாளராகவும் இப்பகுதியைச் சேர்ந்த வண்ணார், அம்பட்டர், பறையர், தட்டார், உட்பட சகல குடிகளும் இவ்வாலயத்திற்கு உரித்துடையவர்களாக்கப்பட்டு இவ்வாலயம் பரிபாலிக்கப்பட்டு வந்தது. ஆலயத்தை அண்டியிருந்த கிராமங்களின் அனைத்து சமுகங்களிற்கும் குடிவழிப் பிரிவினா்களுக்கும் இவ்வாலயத்திற்கான உரிமைகள் சாசன ரீதியாக வழங்கப்பட்டிருந்தன.

ஆடிப்பூரணையில் தீர்த்தோற்சவம் நடைபெறும் வகையில் 10 நாட்கள் திருவிழா இடம்பெறுவதோடு சூரன் போரும் இங்கு பெரு விழாவாகக் கொண்டாடப்படும். மாதந்தோறும் வரும் விசேட பூசைகள் இவ்வாலயத்தில் கொண்டாடப்பட்டு வந்தாலும் சில பூசைகள் அன்று தொடக்கம் குறிப்பிடப்பட்ட குடியினரால் செய்யப்பட்டு வருகின்றன. சித்திரை பௌர்ணமி விரதம் கச்சிலார் குடியினராலும், கார்த்திகை விளக்கீடு எருவில் பணிக்கனார் குடியாராலும், திருவெம்பாவை பெரிய போரைதீவு பணிக்கனார் குடியினராலும், திருவாதிரை மகிழூர் பணிக்கனார் குடியினராலும் விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இவ்வாலயத்தைப் பற்றி பல்வேறு கதைகள் நிலவுகின்றன. இந்தியாவைச் சேர்ந்த கொங்கண முனிவர் என்பவர் ஈழத்தல யாத்திரை மேற்கொண்ட போது ஏழு லிங்கங்களைத் தன்னுடன் கொண்டு வந்தாரென்றும், அவற்றை வெருகல், கொக்கட்டிச்சோலை, தாந்தாமலை, கோவில் போரதீவு, மண்டூர் கந்தபாணந்துறை, உகந்தை முதலிய இடங்களில் ஒவ்வொன்றாக பிரதிஸ்டை செய்ததாகவும் அதைத் தொடர்ந்து அவ்வவ் இடங்களில் வழிபாடு மேற்கொண்டதாகவும் வெள்ளை நாவலம்பதி என்ற இடமே தற்போது கோயில் போரதீவு என அழைக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது. ஐரோப்பியர் படையெடுப்பினால் அழிக்கப்பட்ட இவ்வாலயத்தில் பின்னர் லிங்கத்திற்குப் பதிலாக சித்திரவேலாயுதம் பிரதிஸ்டை செய்யப்பட்டதென்பதும் பரவலான கதை.

***மண்டூர் முருகன் கோயில்***

மண்டூர் கந்தசுவாமி கோயில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு நகரின் தெற்கே சுமார் 20 மைல் தூரத்தில் மண்டூர் கிராமத்தில் அமைந்துள்ள ஒரு தொன்மை வாய்ந்த முருகன் கோயில். இது தில்லை மண்டூர் அல்லது சின்னக் கதிர்காமம் என்று சிறப்பாக அழைக்கப்படுகிறது (கந்தையா,வி.சீ.,2002). மட்டக்களப்புப் பிரதேசத்தில் நீண்ட பாரம்பரிய வழிபாட்டு முறைகளையும் அதனோடு கூடிய பண்பாட்டுக் கோலங்களையும் இயற்கையோடு இயைந்த வழிபாட்டையும் கட்டிக்காக்கின்ற பெருமை மண்டூர் ஆலயத்திற்கே உண்டு. இதன் அடிப்படை மாறாதிருப்பது சிறப்பானதொன்று.

மண்டுநாகன் என்னும் மன்னன் மண்டூர் முருகன் கோயிலைக் கட்டுவித்தான் என மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. இங்கு மட்டக்களப்பு மான்மியம் கூறும் மாகோன் வகுத்த வன்னிமை, திருப்படைக் கோயில் ஒழுங்கின் படியே பூசை, நிருவாக நடைமுறைகள் என்பன நடைபெறுகின்றன. ஆலயத்தின் உட்பிரகாரத்தில் வேடர் வணக்க முறைப்படி சிறிய குமாரத்தன் கோயில் அமைந்துள்ளது. இங்கு பூசை வேளையில் திரை மூடிப் பூசை நடைபெறும். துணியினால் வாய் மூடி, கப்புகனார் பூசை செய்வார். கதிர்காமம் போன்று வேடர்

பூசையும் மரக்கறி, மான் இறைச்சி சேர்ந்த அவிபாகமும் குமாரத்தன் கோயிலில் வைக்கும் பூசையும் நடைபெறுகின்றது.

ஆவணிமாதப் பூரணை அன்று தீர்த்த விழாவும், அதற்கு முன்னருள்ள இருபது நாட்களும் திருவிழாக்களும் நடைபெற்று வருகின்றது. கதிர்காமத் தீர்த்தம் கழித்து பத்தாம் நாள் மண்டூர் முருகனின் கொடியேற்றம் நடைபெறும். இவ்வாலயத்தில் இடம்பெறும் விழாக்களுள் கந்தசஸ்டி விரதம் முக்கியத்துவம் பெற்றதாகும். ஏனைய ஆலயங்களைப் போன்று இங்கு கந்தபுராணம் படிப்பதில்லை, மாறாகத் திருச்செந்தூர் புராணமே படிக்கப்படுகின்றது. மேலும் சூரனைச் சம்காரம் செய்யும் விழாவும் நிகழ்த்தப்படுவதில்லை. வேடுவப்பெண்ணான வள்ளிக்கு முதன்மையளிக்கும் நிகழ்வுகளே இங்கு முதன்மை பெறுகின்றன. கந்தசஸ்டியின் மூன்றாம் நாள் இடம்பெறும் வள்ளி திருமண நிகழ்வு ஒரு பாரம்பரியத்தை வெளிக்கொணர்கிறது. மாப்பிள்ளை வீட்டார், பெண் வீட்டார் என இரு பக்கமும் மக்கள் குழுமி மட்டக்களப்பாரின் பாரம்பரிய திருமண முறையினை அடியொற்றியதாக குரவை ஒலியுடன் இடம்பெறும்.

இக்கோயிலை மையமாகக் கொண்டு காரைதீவில் வாழ்ந்த வித்துவான் வைத்திலிங்க தேசிகர் மண்டூர் கந்தசுவாமி லீலா சங்கிரகமானவரூஞ்சல், மண்டூர் இரட்டைமணிமாலை, மண்டூர்ப்பதிகம் என்பவற்றைப் பாடியுள்ளார். மேலும் மண்டூர்ப்பதிகம் எனும் பிரபந்தம் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையால் பாடப்பட்டதாகும்.

***சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயில்***

சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயில் மட்டக்களப்பு நகரிற்கு வடக்கே பதின்மூன்று மைல் தொலைவில் அமைந்துள்ளது. தொடக்க காலத்தே சித்திர வேலாயுதர் ஆலயம் எனக் குறிப்பிடப்பட்ட இவ்வாலயம் தற்போது கந்தசுவாமி கோயில் என அழைக்கப்படுகிறது.

இக்கோயில் பழமையுஞ் சிறப்பும் கொண்டதெனினும் அதன் வரலாறு பற்றிய புராதனமான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. தல யாத்திரை ஒன்றினை மேற்கொண்டு வந்த சிகண்டி எனும் சித்தர் தான் கொண்டு வந்த வேலினை இங்கு வைத்து பூசை செய்தாரென்றும் ஆண்டி போன்ற தோற்றம் கொண்ட இச் சித்தாண்டியே சித்தாண்டி என்ற பெயரால் அழைக்கப்பட்டு அதுவே ஊர்ப்பெயரானது எனவும் குறிப்பிடுவர்.

இங்கு வேடர்களுடன் தொடர்புடைய குமாரத்தன் கோயில் அமைந்துள்ளதுடன், வள்ளியம்மைக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதையும் பூசை நடைமுறையின்போது அவதானிக்க முடிகின்றது. இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச்சிறப்புகளோடு அமைந்துள்ளது என்பதற்கு தென்கிழக்கில் அமைந்துள்ள "தீர்த்தக்கேணி" சான்று பகர்கின்றது. கோயில் வழமைகளை ஆதாரமாகக் கொண்டு நோக்குமிடத்து, சித்தாண்டியில் ஆலய பரிபாலனத்தில் முதன்மை அதிகாரம் தேசத்து வன்னியருக்குரியதாகும். வண்ணக்கரே இங்கு நிருவாகத்திற்குப் பொறுப்புடையவராவார். இக்கோயில் வருடாந்த உற்சவம் ஆவணி பிரதமையில் கொடியேறி பௌர்ணமி தினத்தன்று தீர்த்தோற்சவத்துடன் முடிவடையும். இக்கோயிற் திருவிழாவில் 12 ஆம் நாள் நடைபெறும் மயிற்கட்டுத் திருவிழா சிறப்பானதாகும்.

இவ்வாலயத்தின் மீது சித்தாண்டித் திருத்தல புராணம், அருள்மிகு சிற்றாண்டிவேலவர் ஊஞ்சல், சித்தாண்டிக் கீர்த்தனை, சித்தாண்டி முருகன் அந்தாதி போன்ற பிரபந்தங்கள் பாடப்பட்டுள்ளன.

***வெருகலம்பதி சித்திரவேலாயுதர் சுவாமி கோயில்***

வெருகலம்பதி சித்திரவேலாயுதர் சுவாமி கோயில் மண்டூர் முருகன் கோயிலைப் போன்று "சின்னக் கதிர்காமம்" என்று அழைக்கப்படுகின்றது. திருகோணமலைக்குத் தெற்கே 37 மைல் தூரத்திலும், மட்டக்களப்பு நகருக்கு வடக்கே 47 மைல் தூரத்திலும் இது அமைந்துள்ளது. மகாவலி கங்கையின் கிளை நதியான வெருகல் ஆற்றங்கரையில் இவ்வாலயம் உள்ளது. ஆதி காலத்தில் இப்பகுதிகளில் வாழ்ந்த வேடுவர்களால் இவ்விடத்தில் வழிபாடு நிகழ்த்தப்பட்டதாக மரபு வழிக் கதைகள் கூறுகின்றன. இருந்தபோதிலும் வெருகலம்பதி பற்றிய ஆதாரபூர்வமான தகவல்களை நாம் 17 ஆம் நூற்றாண்டு முதலே பெற்றுக் கொள்ள முடிகின்றது.

குளக்கோட்டன் பற்றிய பாடலில் குறிப்பிடப்படும் 'வெற்றிபுனை மயூர சித்திர சங்கார வேல்' எனும் பாடலடிகள் வெருகலையே குறிப்பிடுவதாக அறிஞர்கள் கருதுகின்றனர். "வெருகல் சித்திரவேலாயுதர் காதல்' எனும் நூலும், கோயிலில் நடைபெற்ற திருப்பணி பற்றிய விடயங்களைக் கூறும் சாசனமொன்றும் வெருகலம்பதி பற்றிய ஆதாரபூர்வமான பழைய குறிப்புகளாகும். ஆரம்ப காலத்திலிருந்து திருகோணமலை, மட்டக்களப்பு தேசத்து மக்களால் இவ்வாலயம் வழிபடப்பட்டு வந்துள்ளது என்பதை ஆதாரங்களிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. வெருகலம்பதியின் வருடாந்த உற்சவம் ஆவணித் திங்கள் ஆரம்பமாகி பதினெட்டு நாட்கள் நடைபெற்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும்.

இவ்வாலயத்தின் மீது வெருகல் சித்திரவேலாயுதர் காதல், வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி பதிகம், வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி திருவூஞ்சல், வெருகலம்பதி சித்திரவேலாயுத சுவாமி பேரில் சிறைவிடு பதிகம், வெருகலம்பதிப் பதிகம், வெருகலம்பதிப் போற்றிப்பத்து போன்ற பிரபந்தங்கள் பாடப்பட்டுள்ளன.

**பிரபந்தங்கள்**

ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கில் பத்தொன்பதாம் நூற்றாண்டு சமயப் பிரச்சாரம் இடம்பெற்ற காலமாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அந்நிய மத, கலாசார ஊடுருவலுக்கு எதிராகச் சைவர்களும் இஸ்லாமியர்களும் தங்கள் மதங்களைப் பிரச்சாரம் செய்யவும், சுதேசிய கலாசார மதிப்பீடுகளை பேணவும் விழைந்தனர். இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்கள் தம் மதக் கருத்துக்களை மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதற்கு இலக்கியங்களையே பயன்படுத்தின. இதனால் சமயப் பிரச்சார வாகனமாக அமைதல் என்ற பண்பு பத்தொன்பதாம் நூற்றாண்டு இலக்கியங்களிற்குரியதாகின்றது. அந்தவகையில் ஈழத்திலுள்ள சைவாலயங்கள் மீது எழுந்தருளியுள்ள கடவுள் மீது பாடப்பட்ட அந்தாதி, ஊஞ்சல், அகவல், மான்மியம் போன்ற பிரபந்தங்கள் இந்து மதப் பிரச்சார இலக்கியங்களாகும்.

மட்டக்களப்பில் பிள்ளைத்தமிழ், தூது, உலா, கோவை, கலம்பகம், மடல், குறவஞ்சி, அந்தாதி, இரட்டைமணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை, சதகம், அம்மானை, பதிகம், ஊஞ்சல் ஆகிய பிரபந்த வகைகளும் புராணங்களும் ஆங்கிலேயர் காலப்பிரிவிலேயே பெருமளவிற் தோன்றின (நடராசா,1970). கோயில்களை மையமாகக் கொண்டு இப்பிரபந்தங்கள் தோன்றுவதற்கு பக்திநோக்கு மாத்திரமன்றி அக்கால சமூகத்தில் கல்விப்புலமை ஏற்படுத்திய சமூக மாற்றமும் காரணம் எனலாம்.

இதனடிப்படையில் திருப்படைக் கோயில்களின் சிறப்பினை வெளிக்கொணர்வதில் அக்கோயில்கள் மீது பாடப்பட்ட பிரபந்தங்கள் முக்கிய ஆதாரங்களாகத் திகழ்கின்றன. இவற்றுள் வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல் எனும் பிரபந்தம் காலத்தால் முற்பட்டது. இந்நூல் தம்பலகாமத்தைச் சேர்ந்த வீரக்கோன் முதலியாரால் 17 ஆம் நூற்றாண்டில் பாடப்பட்டது. பெரும்பாலான பிரபந்தங்கள் 19ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் பாடப்பட்டவையாகும். அவற்றுள் பதிகம், அந்தாதி, நவமணிமாலை, திருவிருத்தமாலை, திருப்பவளமணிமாலை, ஊஞ்சல், கீர்த்தனை, பாமாலை, போற்றிப்பதிகமாலை, பிள்ளைத்தமிழ், இரட்டைமணிமாலை முதலான பிரபந்த வடிவங்கள் உள்ளடங்குகின்றன. திருப்படைக் கோயில்களுள் மண்டூர் திருத்தலத்தின் மீதே அதிக பிரபந்தங்கள் பாடப்பட்டுள்ளமையினைக் காணக்கூடியதாகவுள்ளது.

**பிரபந்தங்கள் வெளிப்படுத்தும் இந்துப்பண்பாட்டம்சங்கள்**

சமயப் பண்பாட்டில் கோயில்கள் முக்கிய இடத்தினைப் பெறுகின்றன. அவை பண்பாட்டின் உறைவிடமாகவும், சமய வாழ்க்கையின் கேந்திரமாகவும் விளங்கி வருகின்றன. கோயில்களை மையமாகக் கொண்டு ஆலய வழிபாடு, வழிபாட்டு முறைகள், விரதங்கள், விழாக்கள், இறை பற்றிய தெய்வீக வரலாறுகள் என்பன முக்கியத்துவம் வாய்ந்தனவாக விளங்குகின்றன. மட்டக்களப்பில் உள்ள கோயில்களிலும் இவற்றை அவதானிக்கலாம். மட்டக்களப்புப் பிராந்தியத்தில் நிலவிய பல்வேறு வழிபாட்டு முறைகளினை மட்டக்களப்புத் திருப்படைக் கோயில்கள் மீது பாடப்பட்ட பிரபந்தங்களினூடாக காணக்கூடியதாகவுள்ளது.

தலயாத்திரைகளின் சிறப்பினை திருப்படைக்கோயில்களின் மீது பாடப்பட்ட பிரபந்தங்களின் ஊடாக அறிந்து கொள்ள முடிகின்றது.

“தலயாத்திரை மேவியே பொருப்பழச் சக்தி போக்கும்

குமரனின் திருக்கதிரைப் பதி சேவிக்கச் சென்றனன்”(குணபாலசிங்கம், வாமன்,2018)

பிரதேச ரீதியாக அருகருகே இருந்த ஆலயங்கள் இணைத்துக் கூறப்பட்டுள்ளதோடு பாடல்பெற்ற தலங்களும் தொடர்புபடுத்திப் போற்றப்பட்டுள்ளன. இந்து சமயத்தைப் பின்பற்றும் மக்கள் மத்தியில் சமூக உறவைப் பலப்படுத்தும் முயற்சியாக இதனை நோக்க முடியும்.

மேலும் ஆன்மீக நிலையிலுள்ள மக்களை வழிநடத்தும் நோக்கில் விரதம் தொடர்பான விரிவான விளக்கத்தினை பிரபந்தங்கள் வெளிப்படுத்தி நிற்பதனைக் காணலாம். விரதத்தின் பயன், விரத காலம், நோற்கும் முறையென இன்னோரன்ன விடயங்களை

இனங்காணக்கூடியதாகவுள்ளது. எடுத்துக் காட்டாக திருக்கோயில் சித்திரவேலாயுதர் தலபுராணத்தில்,

“ஆறுநாள் நோற்கும் நோன்பு கருதிய பலனைக் கூட்டும்…

ஐப்பசி மாதம் வரும் அமாவாசைக் கடுத்த நாளில்

ஒப்பிலா இந்த நோன்பை உலகத்தார் நோற்க வேண்டும்” (குணபாலசிங்கம் & வாமன், 2018) எனக் கூறப்பட்டுள்ளமையினைக் காணலாம்.

குடியானவர்கள் தமக்குற்ற இடர்களையும், துன்பங்களையும் போக்குவதற்கு மேற்கொண்ட நேர்த்திக்கடன் பற்றிய செய்திகளைப் பிரபந்தங்களினூடாக அறியலாம். வெருகல் சித்திரவேலாயுதர் காதலில் நேர்த்திக் கடனாக அபிஸேகம் செய்தல், வெருகலம்பதி கோயில் வாசலில் காசு வைத்தல், நீலாப்பளை பத்தினியை வேண்டி நேர்த்தி செய்தல், சம்பூர் பத்திரகாளி கோயிலில் இழை கட்டுதல் முதலியவற்றை தேசத்தார் செய்வது வழமை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. காப்புக் கட்டுதலினை வெருகல் சித்திரவேலாயுதர் காதல் பாடலொன்று பின்வருமாறு கூறுகின்றது.

“தேவி பத்திரகாளிதனக் கையமற

நேர்ந்திழைய யாயிழை கைக் கட்டுமென்பார்” (வடிவேல், 2000)

ஈழத்தின் கிழக்கு மாகாணத்துக்கே விசேடமான வசந்தன் விளையாட்டு வெருகல் சித்திரவேலாயுதர் உலாவரும் போது ஆடப்படுவதாகக் கூறப்படுகிறது. மட்டக்களப்பு மக்களால் பாரம்பரியமாக சில ஆடற்கலைகள் பேணப்பட்டு வந்துள்ளன. இவற்றில் முக்கியமானது வசந்தன் கூத்து. இப்பிரதேசத் தமிழரது பண்பாட்டு பழக்கவழக்கங்கள், பாரம்பரிய வழக்காறுகள் முதலியவற்றைப் பிரதிபலிக்கின்ற கலையம்சங்களில் ஒன்றாக வசந்தன் ஆட்டம் இருந்துள்ளது. வசந்தன் பாடல்கள் மட்டக்களப்புப் பிரதேசத் தமிழர்களின் உழவுத் தொழில், பொழுதுபோக்குகள், பழக்கவழக்கங்கள், முதலியன பற்றிய செய்திகளையும் தருகின்றன. மட்டக்களப்புத் தமிழரின் வாழ்வுடன் தொழிலும் கலையும் பிணைந்துள்ளதை வசந்தன் ஆட்டம் எடுத்துக் காட்டுகின்றது இதனை வெருகல் சித்திர வேலாயுதர் காதல் பின்வருமாறு கூறுகின்றது.

“ஏந்துதனப் பெண்கள் சிலரின்பமுடன் கம்பெடுத்து

மாந்தளிர் மெய் வேர்க்க வசந்தன் விளையாடிவர” (வடிவேல்,2000)

சமய நம்பிக்கைகளில் சோதிடம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. சோதிடக்கலையின் செல்வாக்கு பற்றி,

“தேரிலங்கு சோதிடரை யிங்கே யாழையுமென்றார்” (வடிவேல்.இ.,2000)

“எக்கலையுங் கற்ற வியல்புறு நற் சோதிடரை மிக்க மகிழ்வாயழைத்து…”(வடிவேல்.2000) என்ற வரிகளினூடாக வெருகல் சித்திரவேலாயுதர் காதலில் கூறப்படுகின்றது.

ஆலயங்களில் ஆகம முறைப்படி பூசைகள் இடம்பெறுவதற்கு மன்னர்கள் ஆவண செய்தமையினைக் கொண்டு சிவாகமங்கள் பெற்றிருந்த செல்வாக்கினை அறிய முடிகின்றது. இதற்கு,

''வேதம் சொல்லிடும் முறையிற் பூசை செய்திடும் சங்கமர்கள்

எல்லையில் ஆகமங்கள் எழுத்தறக் கற்றோர் இவரை

நல்லதாய் வரவேற்புச் செய்து நாட்டிலே குடியும் வைத்தார்''(குணபாலசிங்கம், வாமன்,2018)

என்ற பிரபந்த அடிகள் சான்றாக அமைகின்றன. ஆலயங்களில் நடைபெறுகின்ற கிரியை முறைகள் ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுவதனை வெருகல் சித்திர வேலாயுதர் காதல்,

''இங்காகமச் சடங்கை இக்கணத்திற் செய்யுமென்றார்'' (வடிவேல், 2000)

எனக் குறிப்பிடுகின்றது.

ஆகமம் கூறுகின்ற அபிஷேகத்தின் சிறப்பினை திருப்படைக் கோயில்கள் மீது பாடப்பட்ட பிரபந்தங்களினூடாகவும் அறிந்துகொள்ள முடிகின்றது. இதனை திருக்கோயில் சித்திரவேலாயுதர் திருத்தலபுராணம் மேல்வருமாறு கூறுகின்றதைக் காணலாம்.

''தேனொடு பால்தயிர் செவ்விள நீரொடு

ஆனின் பால் மஞ்சணம் அழகுற வாட்டினர்

போனகம் நெய்யொடு பொங்கல் செய்துமே

ஞானவேல் முருகனை நயந்து போற்றினர்'' (குணபாலசிங்கம் & வாமன், 2018)

திருப்படைக் கோயில்கள் மீது பாடப்பட்ட பிரபந்தங்களினூடாக பல்வேறு இந்துப் பண்பாட்டம்சங்களை அடையாளங் காணக் கூடியதாகவுள்ளது.

**நிறைவுரை**

திருப்படைக் கோயில் என்பது மட்டக்களப்பு மாவட்டத்திற்கே உரித்தான தனித்துவமான பண்பாகக் காணப்படுகின்றது. திருப்படைக் கோயில்களின் சிறப்பினை வெளிக்கொணர்வதில் அக்கோயில்கள் மீது பாடப்பட்ட பிரபந்தங்கள் முக்கிய ஆதாரங்களாகத் திகழ்கின்றன. அந்தவகையில் பதிகம், அந்தாதி, நவமணிமாலை, திருவிருத்தமாலை, திருப்பவளமணிமாலை, ஊஞ்சல், கீர்த்தனை, பாமாலை, போற்றிப்பதிகமாலை, பிள்ளைத்தமிழ், இரட்டைமணிமாலை முதலான பிரபந்த வடிவங்கள் திருப்படைக் கோயில்கள் தொடர்பாக பாடப் பெற்றவையாகும்.

இப்பிரபந்தங்களை பண்டிதர்கள் முதல் சாதாரண கிராமத்துப் புலவர்கள் வரை பாடியுள்ளனர். மட்டக்களப்புத் தமிழறிஞர்கள் மட்டுமல்லாது யாழ்ப்பாணத்து அறிஞர்களும் மட்டக்களப்புத் திருத்தலங்கள் மீது பிரபந்தங்கள் பாடியுள்ளனர். உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர், புலோலியூர் பொ.வைத்திலிங்க தேசிகர் ஆகியோர் இவர்களுள்

குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்களுள் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரது பாடல்களை உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர் பிரபந்தத் திரட்டு எனும் நூலில் இருந்து பெறமுடிந்தது. எனினும் வைத்திலிங்க தேசிகரால் பாடப்பட்ட பாடல்களை பெற்றுக் கொள்ளமுடியவில்லை.

திருப்படைக் கோயில்களுள் மண்டூர் திருத்தலத்தின் மீதே அதிக எண்ணிக்கையான பிரபந்தங்கள் பாடப்பெற்றுள்ளமையினைக் காணமுடிகின்றது. திருப்படைக்கோயில்களுள் ஒன்றான கோயிற்போரதீவு சித்திரவேலாயுதர் ஆலயத்தின் மீது பாடப்பட்ட பிரபந்தங்கள் எதனையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. திருப்படைக் கோயில்கள் மீது பாடப்பட்ட பிரபந்தங்கள் பல வாய்மொழி மரபாக பாடப்பட்டு வந்தமையினை அறிந்து கொள்ளக்கூடியதாகவிருந்தது.

திருப்படைக் கோயில்கள் மீது பாடப்பட்ட பிரபந்தங்கள் இவ்வாலயங்களின் அமைவிடம், கர்ண பரம்பரைக் கதைகள், வரலாற்றுத் தகவல்கள், நிர்வாக நடைமுறைகள், பூசை முறைகள், முருகனின் புகழ் என்பவற்றின் தொன்மைக்கு சான்றாகின்றன. ஆலயங்கள் மீது மக்களைப் பக்தி கொள்ளச் செய்வதற்காக ஆலயத்தின் பெருமை, இறைவனின் பிரதிமாலட்சணங்கள், அற்புதங்கள், ஆலயச் சூழலின் வனப்புக்கள், ஆலயத்தின் மரபு வழிக்கதைகள் போன்ற அம்சங்களினை பிரபந்தங்கள் கொண்டிருந்தன. அவை அக்காலத்து சமயநிலையை மாத்திரமன்றி சமூகநிலையினையும் வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. இப்பிரபந்தங்களில் மட்டக்களப்புப் பண்பாட்டு அடையாளங்கள் குறித்த விடயங்களும் முக்கியமானவையாக இருந்தன.

கோயில்களே பண்பாட்டின் உறைவிடமாகும். அங்கு பல்வேறு நிலைகளில் இடம்பெறும் இறைவனது மூர்த்தங்கள் காலங்காலமாக சமயப் பாரம்பரியத்தின் பண்பாட்டுத்துறைகளை வளம்படுத்துவதிற் பெருந்துணை புரிந்து வருகின்றன. திருப்படைக் கோயில்கள் மீது பாடப்பட்ட பிரபந்தங்கள் இறைவனை வழிபடுவதற்கும், சமய உணர்வினை உள்ளத்தில் வளர்ப்பதற்கும் அடிப்படையாக விளங்குகின்றன. இப்பிரபந்தங்கள் இறை உருவங்களின் அமைப்புக்கள், வாகனங்கள், ஆயுதங்கள், ஆபரணங்கள், திருவுருக்கான பெயர்க் காரணம், பெயருக்கான கதை மரபுகள் போன்ற பல்வேறு விடயங்களை நன்கு புலப்படுத்துகின்றன.

கோயில்களின் சிறப்பினை வலியுறுத்தும் வகையில் பிரபந்தங்களில் புராணக்கதைகள் மறுசீராக்கம் பெறுகின்றன. முருகன் சூரனை வதைத்தமை, மாங்கனியைப் பெற உலகைச் சுற்றி வந்தமை, பிரமதேவனுடைய தலையிற்குட்டி பிரணவப் பொருளுரைத்தமை, ஔவைக்குப் பழம் கொடுத்துணர வைத்தமை, தந்தைக்கு உபதேசமளித்தமை போன்ற முருகனுடன் தொடர்புடைய பல்வேறு புராணக்கதைகளினை திருப்படைக் கோயில்கள் மீது பாடப்பட்ட பிரபந்தங்களினூடாக அறியமுடிகின்றது.

மேலும் முருக வழிபாட்டின் வருடாந்த திருவிழாவின் ஒருநாள் நிகழ்ச்சியான மயில்கட்டுத் திருவிழா, முருகன் வள்ளியம்மையை திருக்கல்யாணம் செய்தல் மக்களுடைய வாழ்க்கை முறையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மண்டூர் கிராமத்தில் அமைந்துள்ள கந்தசுவாமி கோயில் உற்சவத்தின் போது குரவைத் திருநாள் உற்சவம் இடம்பெறுகிறது.

முருக வழிபாட்டு முறையோடு தொடர்புடைய சூரன்போர் நிகழ்ச்சி, கந்தசஸ்டி, கார்த்திகைத் திருநாள் என்பன சமய வாழ்விலே தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

இந்துசமய மரபில் பல்வேறு தத்துவ சிந்தனைப் பள்ளிகள் காணப்படுகின்றன. அவற்றின் தாக்கம் பிற்காலங்களில் மட்டக்களப்பில் எழுந்த பிரபந்தங்களிலும் எதிரொலித்தன. அவ்வகையில் மட்டக்களப்பிலுள்ள திருப்படைக் கோயில்கள் மீது பாடப்பட்ட பிரபந்தங்கள் அதிகம் சைவசித்தாந்த சிந்தனைகளை வெளிப்படுத்துவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

**உசாத்துணை நூல்கள்**

கந்தையா,வி.சீ. (1997). *மட்டக்களப்பு சைவக்கோயில்கள்.* இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

கந்தையா,வி.சீ. (200*2). மட்டக்களப்புத் தமிழகம்.* எக்ஸில் வெளியீடு..

குணபாலசிங்கம், வ., வாமன்,நா. (2018). திருப்படைக் கோயில்கள் மீதான பிரபந்தங்கள். இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

சோமசுந்தரம்பிள்ளை,மு. (2016). *பக்திப்பாமாலை.* கலை இலக்கிய அவை.

பத்மநாதன்,சி. (2004). *ஈழத்து இலக்கியமும் வரலாறும்.* குமரன் புத்தக இல்லம்.

மௌனகுரு,சி. (2003). மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப்பண்பாடு. 2ஆம் உலக இந்து மாநாடு மட்டக்களப்புப் பிரதேசக் கிளை.

# மரபுவழி கிறிஸ்தவ சபைகளுக்கும் சுயாதீன சபைகளுக்கும் இடையிலான ஓர் ஒப்பாய்வு

**காமினி டில்மி அப்ஸரா, கணேசன் மதிசீலன்**
ஒப்பீட்டுச் சமயமும் சமூக நல்லுறவும் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
dilmiapsaragamini@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

மீட்பின் திட்டத்தை மானிட சந்ததிக்கு இறுதிவரை எடுத்துச் செல்ல இயேசு கிறிஸ்து திருத்தூதர் பேதுரு தலைமைத்துவத்தின் கீழ் திருச்சபையை நிறுவினார். இத்திருச்சபையானது இயேசு கிறிஸ்துவை தேவ குமாரன் என்று விசுவாசித்து, அவரைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவரிடத்தில் பாவமன்னிப்புப் பெற்று, அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்க அர்ப்பணிக்கும் கூட்டமே திருச்சபையாகும். அந்தத் திருச்சபையானது ஒரே திருச்சபையாக ஆரம்ப காலங்களில் காணப்பட்டாலும் காலப்போக்கில் மாறுபட்ட புதிய போதனைகளினால் திருச்சபை 1054ஆம் ஆண்டு பிளவுபட்டு கீழைத்தேயம், மேலைத்தேயம் என இரு பெரும் பிரிவுகளாகச் செயற்படுகின்றது. 15ஆம் நூற்றாண்டின் பின்னர் மாட்டின் லூத்தரின் சீர்த்திருத்தத்தினால் (1517ஆம் ஆண்டு ஒக்டோபர் 31) திருச்சபைக்குள் மேலும் பல பிளவுகள் ஏற்பட்டன. அதன் விளைவாக கத்தோலிக்க சபையில் இருந்து பிரிந்தவை 'சீர்திருத்தச்சபை' என அழைக்கப்பட்டன. இப்பிளவினைக் காரணியாகக் கொண்டு திருச்சபையினுள் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. இவ்வாறாக திருச்சபையில் பிளவுகள் ஏற்படும் போது அதன் ஒருமைக்குப் பங்கம் ஏற்படுவதாகக் கருதப்படுகின்றது. இயேசுவினால் அழைப்புப் பெற்று அவருக்குரிய ஒரே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டதாகக் கருதப்படுகின்ற ஒரே திருச்சபையின் ஒன்றிப்பு வெளிவாரியாகத் தெளிவுபடுத்தப்படவும், திருச்சபை எவ்வாறு பிளவுபட்டு போதனைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு அதனுடைய வழிமுறைகள் எவ்வாறு பின்பற்றப்படுகிறது என்பதைத் தெளிவுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் வரலாற்றை மையப்படுத்திய இவ்வாய்வானது நோக்கத்தினை அடைந்து கொள்ளும் வகையில் பண்புசார் அளவை நிலையினைக் கைக்கொண்டுள்ளது. நேர்காணல், உரையாடல் மற்றும் அவதானிப்பு மூலம் பெற்ற முதலாம் நிலைத்தரவுகளையும், இரண்டாம் நிலைத்தரவுகளான நூல்கள், திருவிவிலியம், சஞ்சிகைகள், இணையத்தளத் தகவல்கள் போன்றவற்றையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெறப்பட்ட தரவுகள் வரலாற்றுப் பகுப்பாய்வு மற்றும் விபரணப் பகுப்பாய்வு முறை மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. மரபுவழி கிறிஸ்தவ சபைகளும் சுயாதீன சபைகளும் போதனைகளின் அடிப்படையில் தமக்குள் பிளவுபட்டு இருந்தாலும் அவர்களுக்கிடையில் பல ஒன்றுபட்ட போக்குகளும் காணப்படுகின்றன என்பதே இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்**: அருட்கொடைகள், சுயாதீன திருச்சபை, திருச்சபை, பரிசுத்த ஆவி, மரபுவழித் திருச்சபை*

## ஆய்வு அறிமுகம்

சமயம் என்பது உலகலாவிய ரீதியில் சமூகக் கட்டமைப்பினையும், கட்டுக் கோப்பினையும் பேணுகின்ற சமூக அமைப்பாக உள்ளது. இறைநம்பிக்கையே பெரும்பாலான சமயங்களுக்கு அடித்தளமாக இருக்கிறது. இதுவே அவற்றிற்கு உயிர் தரும் சக்தி எனவும் கொள்ளப்படுகின்றது. சமயங்கள் மீது நம்பிக்கை கொள்ளும் ஒவ்வொருவரும் இறை நம்பிக்கையில் தினந்தோறும் வளர வேண்டும் எனவும், அதற்காக பயிற்சியும், முயற்சியும், ஆழ்ந்த அமைதிநிறை சிந்தனையும் தேவை எனவும் கருதப்படுகின்றது. அந்தவகையில் இயேசுவைப் பின்பற்றுகின்றவர்கள் கிறிஸ்தவ இறை நம்பிக்கையில் வளரும் பொருட்டு, கடவுளானவர் வேதத்தின் மூலமாக உபதேசங்களை உபதேசித்து அவர்களைச் சிறந்த ஒரு

கட்டமைப்புக்குள் ஒழுங்குப்படுத்தியுள்ளார். அத்தகைய ஒரு குழுமமே ‘கிறிஸ்தவ திருச்சபை’ எனக் கொள்ளப்படுகின்றது (பக்தவத்சலபாரதி, 2019).

‘திருச்சபை’ என்னும் சொல் ஆங்கிலத்தில் ‘Church’ என்றும், இலத்தீன் மொழியில் ‘Ecclesia’ என்றும் அழைக்கப்படுகிறது. இந்த இலத்தீன் சொல் ‘Ekklesia’ எனும் கிரேக்கச் சொல்லிலிருந்து உருவாகியது. இது இரண்டு வார்த்தைகளிலிருந்து தொகுப்பப்பட்டது. ‘Ek’ என்றால் வெளியே என்றும் ‘Kaleo’ என்றால் அழைக்க என்று பொருள்படும். இது குறிப்பிட்ட இடத்திலிருந்து வெளியே அழைக்கப்பட்டவர்கள் ஒன்று கூடுதல் என்பதாக கருதப்பட்டதாகும். இஸ்ரவேலர்களை, இறைவன் தெரிந்துகொண்ட மக்களை சிறப்புடன் வழிநடத்திய நிகழ்வுகள் அவர்கள் இறைவனுக்குச் சொந்தம் என்பதையே நினைவூட்டுகிறது (தஞ்சைடோமி, 2013).

ஆக, திருச்சபை என்ற சொல்லாடல் பழைய ஏற்பாட்டில் அது சீனாய்மலையில் ஒன்றாய்கூடிய இறைமக்களின் கூட்டத்தைக் குறிக்கின்றது. புதிய ஏற்பாட்டில் இயேசு தாம் தெரிந்து கொண்டவர்களை அழைத்து தூய சமூகமாகக் கட்டியெழுப்பிய சீடத்துவ குழுமமே திருச்சபையாகும். திருச்சபை உருவாக்கப்படுவதற்கு இயேசுவே மூலகாரண கர்த்தாவாக இருக்கிறார். இயேசு இத்திருக்கூட்டத்தின் கட்டமைப்பினை பேதுருவின் தலைமையின் கீழ் உருவாக்கினார். ‘‘நான் உனக்கு கூறுகிறேன். உன் பெயர் பேதுரு. இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையை கட்டுவேன்.... விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருகிறேன்’’ (மத்தேயு 16:18-19).

விண்ணகத் திருக்கூட்டத்தில் தகுதி பெறுவதற்கு இம்மண்ணக திருக்கூட்டத்தினர் பின்பற்ற வேண்டிய அன்பின் வழிமுறைகளைக் வகுத்துக் கொடுத்தார். ‘ஒரே ஆயனும் ஒரே மந்தையும்’ என்ற எதிர்நோக்கோடு கிறிஸ்தவ சமூகம் ஒரே தலைமையின் கீழ் இருக்கவேண்டுமென கருதினார். நம்பிக்கை கொண்டோர் பிளவுபடாத உள்ளத்தோடு ஒரே சமூகமாக இணைந்திருக்க வேண்டுமென்று வலியுறுத்தினார். அந்த ஒன்றிப்பை உண்மையாக பெந்தகோஸ்தே என்னும் நாளில் தூய ஆவியைத் தந்து அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தினார். திருச்சபையில் அந்த நம்பிக்கை கொண்ட அனைவரும் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர் (யோவா 10:11, அப் 2:1-4).

ஆக, மனித குலம் முழுவதன் ஒற்றுமைக்கான அருளடையாளமாகவும், கருவியாகவும் திருச்சபை அமைந்துள்ளது. எனவேதான் தூய சிப்பிரியான் (210 - 258) திருச்சபை என்பது, இயேசுவை நிறைவாழ்வு அளிப்பவராகவும், ஒற்றுமை அமைதி ஆகியவற்றின் ஊற்றாகவும் நம்பிக்கை கண்கொண்டு நோக்குபவர்களைக்கூட்டி ஒன்றுசேர்க்கும் அமைப்பு என்றும் அனைவருக்கும் நிறைவாழ்வு தரும் ஒற்றுமையின் காணக்கூடிய அருளடையாளம் என்றும் விளக்கம் தந்தார் (தஞ்சைடோமி, 2013).

இயேசு கிறிஸ்துக்குள் ஒன்று கூடிய மக்கள் காலப்போக்கில் மார்க்கப் போதனைகளினாலும், தவறான உபதேசங்களினாலும், தாங்கள் விரும்பிய நம்பிக்கையை வெளிப்படுத்தியதாலும், தங்களை முன் நிறுத்தியதாலும் திருச்சபைக்குள் பாதிப்பு ஏற்பட்டது. இவ்வாறு பாதிப்புக்கள் திருச்சபைக்குள் இருந்தாலும் திருச்சபையானது இதனூடாக

வளர்ச்சியடைந்து சென்றது. ஆனால் காலப்போக்கில் இந்த பாதிப்புக்கள் பிளவுகளுக்கு வித்திட்டது. இதனால் திருச்சபையானது மேலைத்தேயம், கீழைத்தேயம் என இரண்டாகப் பிரிந்தது (ஹீத்தீன் மனோகர், 2006).

இவ்வாறாக ஒவ்வொரு காலக்கட்டங்களிலும் பிளவுகள் ஏற்பட்டு திருச்சபையானது இன்று உரோமன் கத்தோலிக்கம், கீழைத்தேய திருச்சபை, மரபுவழி திருச்சபை, அங்கிலிக்கன் சுயாதீன திருச்சபை என ஐந்து பிரதான பிரிவுகளை கொண்டதாக காணப்படுகிறது. அந்தவகையில் மரபுவழி கிறிஸ்தவ சபைகளுக்கும் சுயாதீன சபைகளுக்கும் இடையில், பிளவுக்கான காரணங்களை ஆய்வு செய்வதாகவும் அவற்றுக்கிடையிலான நம்பிக்கைகள், விசுவாசம், விழுமியங்கள்இ கலாசாரம் போன்றவற்றில் காணப்படும் ஒத்த தன்மைகளையும், வேறுபாடுகளையும் ஒப்பிடுவதாகவும் இவ்வாய்வானது அமைகிறது.

**ஆய்வுப் பிரச்சினை**

இவ்வாய்வின் பிரச்சினையாக அமைவது மரபுவழி கிறிஸ்தவ சபைகளும் சுயாதீன சபைகளும் போதனையின் அடிப்படையில் பிளவுபட்டு இருப்பதே ஆகும்.

**ஆய்வின் நோக்கம்**

இவ்வாய்வின் நோக்கங்களாக திருச்சபை பிளவுபட்டதற்கான காரணங்களை கண்டறிதல், இரு திருச்சபை பிரிவுகளையும் ஒன்றுபடுத்துவதற்கான காரணிகளை ஆராய்தல், இரு திருச்சபை பிரிவினருக்குமிடையிலான இணக்கப்பாட்டிற்கான ஒரு வரைபினை முன்மொழிதல் என்பனவாக அமைகின்றன.

**ஆய்வு வினாக்கள்**

1. திருச்சபை பிளவுறுவதற்கான பின்னணி எவை?
2. மரபுவழி திருச்சபையில் இருந்து சுயாதீன சபைகள் பிரிந்ததற்கான காரணங்கள் யாவை?
3. பிரிந்த சபைகள் மேலும் மேலும் பிரிவதற்கான காரணங்கள் எவை?
4. மரபுவழி கிறிஸ்தவ சபையின் உறுப்பினர்கள் சுயாதீன சபையில் சேருவதற்கான காரணங்கள் எவை?
5. இரு திருச்சபை பிரிவுகளையும் ஒன்றுபடுத்துவதற்கான போக்குகள் யாவை?

**ஆய்வு கருதுகோள்**

மரபுவழி கிறிஸ்தவ சபைகளும் சுயாதீன சபைகளும் போதனைகளின் அடிப்படையில் தமக்குள் பிளவுபட்டு இருந்தாலும், அவர்களுக்கிடையில் பல ஒன்றுபட்ட போக்குகளும் காணப்படுகின்றது என்பதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

**இலக்கிய மீளாய்வு**

யேசுதாஸ் தங்கசாமி என்பவரால் எழுதப்பட்ட ‘‘திருச்சபையின் வரலாறு’’ எனும் நூலில் உயிர்த்த இயேசு நிலைநாட்டிச் சென்ற திருச்சபை, இராயப்பர் முதல் பாப்பரசரைக் கொண்டு

பயணத்தை தொடங்கியது. காலப்போக்கில் திருச்சபையில் மாறுபட்ட கருத்துக்கள் புகுந்து சில ஆயர்களும், குருக்களும் திருச்சபையின் நெறிகளுக்கும், திருச்சபைத் தொண்டிற்கும் எதிராக செயலாற்றினர். இதன் விளைவாக பிளவுகள் ஏற்பட்டு சபைகள் உருவாகியது போன்ற விடயங்களும் மற்றும் திருச்சபை எதிர்த்த பேதகங்கள், பேரரசர்களின் எதிர்ப்புக்கள், கொடுங்கோலரின் வாதனைகள் தொடர்பாக விளக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக திருச்சபையின் ஆரம்ப காலக்கட்டங்கள் பற்றிய விடயங்களை அறிந்துக் கொள்ள இந்நூல் உறுதுணையாக அமைந்துள்ளது.

யேசுதாசன், அ.ம.தி.இ (2002) என்பவரால் எழுதப்பட்ட "கிறிஸ்தவ வாழ்வு" எனும் நூலில் இன்றைய உலகில் திருச்சபையின் வகிபங்கு எவ்வாறு காணப்படுகின்றது என்பதையும் உலகத் திருச்சபையின் வரலாறு மற்றும் இலங்கைத் திருச்சபையின் வரலாறு போன்ற விடயங்கள் விளக்கப்பட்டுள்ளது. இந்நூல் மூலம் திருச்சபையின் இன்றைய நிலை எவ்வாறு உள்ளது என்பதை அறிந்துக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

மத்தியு, எஸ். ஏ. ஐ., (2001) என்பவரால் எழுதப்பட்ட "உலகத் திருச்சபை வரலாறு" எனும் நூலானது வேதாகம அறிவு, தொடக்க காலம் முதல் இன்றைய காலம் வரை திருச்சபையின் நிலையையும், ஆதி கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறை எவ்வாறு காணப்பட்டதையும் மற்றும் இலங்கை திருச்சபை தொடர்பான கருத்துக்கள் போன்ற தகவல்களைத் தருகிறது. இந்நூல் ஆய்வினை மேற்கொள்ள உறுதுணையாக அமைந்துள்ளது.

ஏபனேசர்,அ., (2005) என்பவரால் எழுதப்பட்ட "திருச்சபையின் வரலாறு" எனும் நூலில் உலகிலுள்ள திருச்சபை வரலாற்றின் முழு விபரங்களையும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் அறிந்து கொள்ள முடிகின்றது. இப்புத்தகமானது இயேசு கிறிஸ்துவின் திருச்சபை உலக வரலாற்றில் கடந்து சென்றுள்ள ஆறு காலங்களையும் விளங்கிக் கொள்ள உறுதுணையாக அமைந்துள்ளது.

ஹீத்தீன் மனோகர், (2006) என்பவரால் எழுதப்பட்ட "உலக சபை சரித்திரம்" எனும் நூலில் திருச்சபையின் வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. 5ம் நூற்றாண்டில் இருந்து 19ம் நூற்றாண்டு வரை திருச்சபையின் வளர்ச்சி, திருச்சபைக்குள் ஏற்பட்ட பிளவுகள், அதற்கான காரணங்கள் போன்ற திருச்சபை பற்றிய முழு விபரங்களையும் தருகிறது.

தியாகு, (1993) என்பவரால் எழுதப்பட்ட "விவிலியக் களஞ்சியம் III" எனும் நூலில் திருச்சபை என்றால் என்ன? அதன் சொற்பொருள் விளக்கம் முதல் திருச்சபையின் பல்வேறு கட்டங்கள்இ பன்னிருவர்களின் பணிஇ திருச்சபையின் பிறப்பும் வாழ்வும், திருச்சபை எவ்வாறாக பரவி வளர்ச்சி அடைந்தது போன்ற விடயங்களை குறிப்பிடுகின்றது.

பியால் ஜரனக்க, (2015) என்பவரால் எழுதப்பட்ட "கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் தேர்வு" கைநூலில் திருத்தூதர் காலத்தில் இருந்து திருச்சபை எவ்வாறு வளர்ச்சியடைந்தது. பின்பு திருச்சபைக்குள் எவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டு திருச்சபை எவ்வாறு சிதறிப் போனது பின்பு மதச் சுதந்திரம் கிடைத்தது. அதன்பின்னர் பல்வேறு காரணிகளால் திருச்சபை எவ்வாறு பிளவுபட்டது. நவீன காலத்திலே திருச்சபையின் வளர்ச்சி

போக்கு, இலங்கையின் திருச்சபை மற்றும் திருச்சபையின் சமூகக் கண்ணோட்டம் போன்ற விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

**ஆய்வு முறையியல்**

***தரவுசேகரிப்பு நுட்பங்கள்***

இவ்வாய்விற்கு முதல்நிலை தரவுகளான கலந்துரையாடல், நேர்காணல், அவதானிப்பு ஆகிய முறைகள் மூலம் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகள் என்ற வகையில் இவ்வாய்வுடன் தொடர்புடைய நூல்கள், திருவிலியம், சஞ்சிகைகள், இணையத்தளத் தகவல்கள் போன்றன இவ்வாய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

***தரவுப் பகுப்பாய்வு***

குறித்த ஆய்விற்காக சேகரிக்கப்பட்ட பண்புசார் தரவுகள் வரலாற்றுப் பகுப்பாய்வு, விபரணப் பகுப்பாய்வு மற்றும் உள்ளடக்கப் பகுப்பாய்வு போன்ற முறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் வரையறை**

இவ்வாய்வானது ஆய்வின் நோக்கத்தை பூர்த்திசெய்யும் முகமாகவும், தெளிவான முடிவினைப் பெற்றுக்கொள்ளவும், எல்லை மீறிச் செல்லாத வகையில் வரையறைகளுக்கு உட்படுகின்றன. அந்தவகையில் மரபுவழி கிறிஸ்தவ சபைகள் என்ற ரீதியில் கத்தோலிக்கம், அங்கிலிக்கன், மெதடிஸ், தென்னிந்தியத் திருச்சபை பற்றியும் சுயாதீன சபைகள் என்ற ரீதியில் பெந்தகோஸ்தே பற்றியும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

**முடிவுகளும் கலந்துரையாடல்களும்**

***மரபுவழிக் கிறிஸ்தவ சபைகள்***

16ஆம் நூற்றாண்டின் ஏற்படுத்தப்பட்ட சீர்த்திருத்தத்தின் விளைவாக பல பிளவுகள் திருச்சபைக்குள் ஏற்பட்டன. குறிப்பாக இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட பிளவுகளே மரபுவழி திருச்சபையின் தோற்றத்திற்கும் உருவாக்கத்திற்கும் காரணமாக விளங்கியது. ஆரம்பத்தில் உரோமன் கத்தோலிக்க திருச்சபையே காணப்பட்டது. இக் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக எதிர்வாதம் புரிந்து அவற்றில் இருந்து பிரிந்த சபைகளே புரட்டஸ்தாந்து சபைகள் என அழைக்கிறோம். இவ்விரண்டு சபைகளையும் உள்ளடக்கியதே மரபுவழித் திருச்சபையாகும். ஏனெனில் இவர்கள் காலம் காலமாய் பின்பற்றி வந்த சம்பிரதாயங்கள், மரபுகள் போன்றவற்றை பின்பற்றுவதனால் இவர்களை மரபுவழித் திருச்சபை என அழைக்கின்றனர்.

***சுயாதீன சபைகள்***

19ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் அல்லது 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் திருச்சபைகளில் எழுப்புதல் இல்லாமல் இருந்தபடியினால் அவைகள் மங்கி எரியும் திரியைப்

போல் காணப்பட்டு இருந்தாலும் அதற்கு ஓர் உயிரோட்டம் கொடுக்க வேண்டும் என எண்ணினார்கள். அக்காலங்களில் பரிசுத்த ஆவியானவரும் அவருடைய வரங்களைக் குறித்து எந்தவொரு செய்தியும் கொடுக்கப்படாமல் இருந்தது. அப்போஸ்தலர் காலத்தில் செயல்பட்ட பரிசுத்த ஆவியானவரும், அவருடைய வரங்களும் இக் காலத்திலும் செயல்படும் என உறுதியாக நம்பினார்கள். பரிசுத்த ஆவியானவர் தான் நம்முடைய பரிசுத்த வாழ்க்கைக்குக் காரண கர்த்தா என நம்பினார்கள். அவர்கள் இல்லாமல் எந்தவோர் மனிதனும் கிறிஸ்துவிற்குள் நிலைத்து வாழ முடியாது என உறுதியாக நிலைத்து இருந்தார்கள். அந்த நம்பிக்கை தான் சுயாதீனத் திருச்சபையாக உருப்பெற்றது (டேவிட், 1992).

**மரபுவழி கிறிஸ்தவ சபைகளுக்கும் சுயாதீன சபைகளுமிடையிலான ஒப்பீடு**

இவ்வாறாக இன்று பிளவடைந்த நிலையில் காணப்படும் திருச்சபைக்குள், மரபுவழி திருச்சபை என்பது நீண்டகால வரலாற்றை உள்ளடக்கிய திருச்சபையாகும். இவற்றுக்குள் உரோமன் கத்தோலிக்க திருச்சபையும், புரட்டஸ்தாந்து திருச்சபையும் பிரதான அமைப்புக்கள் ஆகும். புரட்டஸ்தாந்து திருச்சபைக்குள் அங்கிலிக்கன் திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, தென்னிந்திய திருச்சபை போன்றவை உள்ளடக்கப்படுகின்றன. மேலும் சுயாதீன திருச்சபைக்குள் பெரும் திருச்சபை பிரிவாக பெந்தகோஸ்தே திருச்சபை காணப்படுகிறது. இத்தகைய மரபுவழி கிறிஸ்தவ சபையும், சுயாதீன சபையும் வழிபாட்டு முறை, அருட்கொள்கைள், சம்பிரதாயங்கள், திருவிழாக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒற்றுமை, வேற்றுமைப் போக்குகளைக் கொண்டிருப்பதனை இவ்வாய்வின் மூலம் கண்டுகொள்ள முடிகின்றது.

***வழிபாடு***

வழிபாடு என்பதற்குப் ''பின்பற்றி ஒழுகுதல்'' என்பது பொருள். வழிபடு என்ற சொல்லிலிருந்து வழிபாடு என்ற சொல் தோன்றியது. தான் வழிபடும் இறைவனின் அருள் நெறிகளைப் பின்பற்றி ஒழுகுதல் எனப் பொருள்பெறும். ஓர் தனிமனிதனோ அல்லது சமூகமோ கடவுளுக்குரிய மதிப்பையும், மரியாதையும் வார்த்தையாலோ, செயலாலோ தெரிவிப்பதே வழிபாடு என்கிறோம். மரபுவழி திருச்சபைக்கும், சுயாதீன திருச்சபைக்கும் இவ்வழிபாடு பிரதானமாக காணப்படுகிறது. இவ் இரு அமைப்புகளிலும் பிரதான வழிபாடு ஞாயிற்றுக்கிழமையில் நடைபெறுகிறது. இவ்வழிபாடுகளில் ஆரம்ப மன்றாடல், பாடல், பாவமன்னிப்பு, திருமறை வாசிப்புக்கள், அருளுரை, மன்றாடல்கள், இறை ஆசி போன்றவைகள் இரு பிரிவினருக்கும் வழிபாட்டில் பொதுவானவை ஆகும் (அருளம்பலம், 2008).

மரபுவழி திருச்சபை வழிபாடு கட்டமைக்கப்பட்ட ஓர் ஒழுங்கமைப்பில் தொகுக்கப்படுகிறது. ஆனால் சுயாதீன திருச்சபையில் அவ் ஒழுங்கமைப்பு காணப்படுவதில்லை. மரபுவழி திருச்சபையில் அருளுரை ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழைமையும் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட திருச்சபை நாட்காட்டிற்கு அமைய வேறுபட்ட தலைப்புகளில் இடம்பெறும். ஆனால் சுயாதீன திருச்சபையில் இவ் ஒழுங்கமைப்பு காணப்படமாட்டாது. மாறாக இது தனி ஒரு மனிதனாகிய போதகரின் விருப்பத்திற்கு அமைய

தெரிந்தெடுக்கப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் தலைமைப் போதகர் பரிசுத்த ஆவியின் வழி நடத்தலுக்கு அமைய தலைப்புகளையும், திருமறைப் பகுதிகளையும் தெரிந்தெடுப்பதாக கூறுகின்றார்.

மரவுவழி திருச்சபைக்குள் உரோமன் கத்தோலிக்கம், அங்கிலிக்கன், தென்னிந்திய திருச்சபை போன்றவைகள் வழிபாட்டில் 'சாக்கிரமெந்துக்கு' (அருள் அடையாளங்கள்) அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றது. ஆனால் மெதடிஸ்த திருச்சபை கடவுளுடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. மரபுவழி திருச்சபையில் தன்னாட்டு மயமாக்க சிந்தனையை மையமாகக் கொண்டு அமைதியான முறையில் வழிபாடுகளை நடாத்துகின்றனர். ஆனால் சுயாதீன சபைகளில் வழிபாட்டில் உணர்ச்சியை மையப்படுத்தி பரவச உணர்வுடன் சத்தம் எழுப்பி வழிபாட்டில் ஈடுபடுவர். இவ்வழிபாட்டு முறை அநேகரால் விமர்சிக்கப்பட்ட போதிலும் இன்று வரை இம்முறையே நடைமுறையில் காணப்படுகிறது (ஏபனேசர், 2005).

மரபுவழித் திருச்சபையின் வழிபாட்டில் அருளுரை இருபது நிமிடங்களுக்குள் மட்டுப்படுத்தப்படும். ஆனால் சுயாதீன திருச்சபையில் ஒரு மணி நேரம் வரை நீண்டு செல்கின்றகிறது. எனவே இதனை மையமாகக் கொண்டே வழிபாட்டின் நேரமும் தீர்மானிக்கப்படுகிறது. மரபுவழித் திருச்சபையின் வழிபாடு ஆகக் குறைந்தது 1 ½ மணிநேரம் காணப்படும். ஆனால் சுயாதீன திருச்சபைகளில் இந்நேரம் மூன்று மணி நேரமாகக் காணப்படுகிறது. மேலும் மரபுவழித் திருச்சபைகளில் அருளுரை சூழல் சார்ந்ததாக அதாவது இறைவார்த்தை சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் விளக்கம் அளிக்கப்படும். இறை வார்த்தை இக்கால சூழ்நிலையோடு பொருத்தி பார்க்கப்படும். உதாரணமாக வறுமை மற்றும் பல்சமயச் சூழல், போருக்கு பின்னரான சூழல், மனித உரிமை மீறல் சூழல், ஆண் ஆதிக்கம் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகச் சூழல், அங்கவீன தன்மையுடைய மக்களுடைய சூழல் போன்ற சூழலுடன் தொடர்புபடுத்தப்பட்டு ஆற்றப்படுகிறது. ஆனால் சுயாதீன திருச்சபைகளில் அருளுரை பெருமளவிற்கு சூழல் சார்ந்தவையாக காணப்படாமல் மாறாக தனிமனிதம் சார்ந்து கட்டுக்கோப்புடையவையாகக் காணப்படுகிறது.

மரபுவழி திருச்சபைகளில் மன்றாடல்கள் அதாவது மக்கள் மன்றாடல்கள் பொதுநிலையாளர்களால் மன்றாடப்படுகின்றன. உரோமன் கத்தோலிக்க திருச்சபையிலும், அங்கிலிக்கன் திருச்சபையிலும் இம்மன்றாடல்கள் பாடல்கள் வழியிலும் படைக்கப்படுகிறது. இது தன்னாட்டு மயமாக்கல் சிந்தனையின் ஒரு வடிவம் ஆகும். இதனை இசை வழிபாடு என அழைப்பர். இம் மன்றாடல்கள் எழுதப்பட்டுப் பாடப்படுகின்றன. ஆனால் சுயாதீன திருச்சபைகளில் மன்றாடல்கள் வார்த்தையாலேயே ஒப்படைக்கப்படுகின்றன. பெருமளவிற்கு தலைமைப் போதகரால் இவ் வழிபாடு நடாத்தப்படுகிறது (சந்திரகாந்தன், 1980).

மரபுவழி திருச்சபையில் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட, எழுதப்பட்ட, அச்சடிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட வழிபாட்டு ஒழுங்கே வழிபாட்டில் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக உரோமன் கத்தோலிக்க திருச்சபையில் இவ் ஒழுங்கு மனப்பாடமான முறையில் மக்களிடத்தே காணப்படுகிறது. ஆனால் அங்கிலிக்கன், மெதடிஸ்த, தென்னிந்திய திருச்சபைகளில் வழிபாட்டு ஒழுங்குமுறை கட்டமைக்கப்பட்ட வகையில் வழிபாட்டில் பயன்படுத்தப்படுகிறது. மக்கள் அத்தகைய வழிபாட்டு ஒழுங்கிற்கு கட்டுப்பட்டவர்களாக உள்ளனர். இத்தகைய வழிபாட்டிற்குரிய நூல்கள் மக்களை வழிபாட்டுக்குள் அழைத்துச் செல்லும் உபகரணமாகவும்,

வழிகாட்டியாகவும் காணப்படுகிறன. ஆனால் சுயாதீன திருச்சபைகளில் வழிபாடு இத்தகைய ஒழுங்கு முறையில் காணப்படுவதில்லை. மாறாக அவர்கள் தமக்கு விரும்பிய வார்த்தையைப் பயன்படுத்தியே கடவுளை வழிபடுகின்றனர் (அருளம்பலம், 2006).

மரபுவழித் திருச்சபைகளில் வழிபாட்டில் வார்த்தைகள் மாத்திரமின்றி அடையாளச் சின்னங்களும் பயன்படுத்தப்படுகின்றன. சிறப்பாக உரோமன் கத்தோலிக்கம், அங்கிலிக்கன் மற்றும் தென்னிந்திய திருச்சபைகளில் மக்கள் இவ்வடையாளச் சின்னங்களை அதிகளவு பயன்படுத்துகின்றனர். பலிபீட வழிபாட்டில் பலிபீடத்தை வணங்கி மதிப்பளிப்பதன் ஊடாக கடவுளின் பிரசன்னத்தை மதிக்கின்றனர். மேலும் பலிபீடத்தில் காணப்படும் சிலுவைக்கு வணக்கம் செலுத்தி ஆண்டவர் இயேசுவின் சிலுவைப் பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல் போன்றவற்றை ஞாபகப்படுத்துகின்றனர்.

செப நேரங்களிலும், பாவமன்னிப்பு நேரங்களிலும் முழங்காலில் மண்டியிடுகின்றனர். இதனூடாக வானோரும் பூமியிலுள்ள அனைவரும் இயேசுவுக்கு முன்பாக முழங்கால் படியிட்டனர் என்பதை நினைவுப்படுத்தும் வகையில் இவ்வாறு நடாத்தப்படுகிறது. மேலும் நற்செய்தி வாசிக்கப்படும் வேளையில் மக்கள் எழுந்து நிற்பர். இதற்கூடாக நற்செய்தியில் கூறப்பட்ட காரியங்களை விரைவாகச் சென்று கடைப்பிடிக்கும் வகையிலேயே அவர்கள் எழுந்து நிற்பதாக அறியமுடிகின்றது.

வழிபாட்டில் இன்னுமோர் பகுதியாகவும் அடையாளச் சின்னமாகவும் காணிக்கை என்பது காணப்படுகிறது. காணிக்கை நான்கு அல்லது ஆறு பேரால் இதற்கு எனத் தயாரிக்கப்பட்ட பைகளில் சேர்க்கப்படுகிறது. பின்னர் இக்காணிக்கையுடன் திருவிருந்துப் பொருட்கள், நாளாந்தப் பாவனைப் பொருட்கள் போன்றவைகளும் காணிக்கையாகக் கொடுக்கப்படும். இவ்வாறு முதலில் திருவிருந்துப் பொருட்களையும் பின்னர் காணிக்கைகளையும் கொண்டு வரிசையாக பலிபீடத்தை நோக்கி நடப்பர். ஆனால் இத்தகைய அடையாளச் சின்னங்கள் சுயாதீன திருச்சபையில் காணப்படுவதில்லை.

### *அருட்கொடைகள் அல்லது சாக்கிரமெந்துகள்*

உள்ளத்தில் ஏற்பட்ட மாற்றத்திற்கு கொடுக்கப்படும் வெளிப்பிரகாரமான அடையாளமே சாக்கிரமெந்து (அருட்கொடைகள்) ஆகும். மரவுவழி திருச்சபைகளான உரோமன் கத்தோலிக்க திருச்சபை, அங்கிலிக்கன் திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, தென்னிந்திய திருச்சபை போன்ற சபைகளில் அருட்கொடைகள் அல்லது சாக்கிரமெந்துகள் முக்கிய இடம் பெறுகின்றன. கடவுள் தன்னை மக்களுக்கு வெளிப்படுத்தும் சாதனங்களாக, ஊடகங்களாக இவைகள் காணப்படுகின்றன. பொதுவாக இயேசுவால் ஏற்படுத்தப்பட்ட திருமுழுக்கு, திருவிருந்து ஆகிய அருட்கொடைகள் பாவமன்னிப்பு, திடப்படுத்தல், திருமணம், எண்ணெய் பூசி செபித்தல், குரு அபிஷேகம் போன்றவைகளும் காணப்படுகின்றன. இவை ஏழும் உரோமன் கத்தோலிக்க திருச்சபையில் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இவைகள் மரபுவழி திருச்சபையின் பிரதான கூறுகளாக காணப்பட்ட போதிலும் சுயாதீன சபைகளில் இவைகள் ஏற்றுகொள்ளப்பட்டாலும் இவைகளுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவம் மரபுவழி திருச்சபை போன்று காணப்படுவதில்லை (ஏபனேசர், 2005).

மரபுவழி திருச்சபைகளில் பாவமன்னிப்பு சமூகம் சார்ந்ததாகவும், தனிநபர் சார்ந்ததாகவும் காணப்படுகிறது. மேலும் தவறு இழைத்தோர் திருப்பணியாளரிடம் சென்று தமது தவறுகளைக் கூறி மன்னிப்பைப் பெறுவர். ஆனால் சுயாதீன திருச்சபைகளில் இப் பாவமன்னிப்பு மனஸ்தாபத்தோடு கட்டாயமாக முக்கியத்துவப்படுத்தப்படுகிறது. மேலும் சுயாதீன திருச்சபைகளில் பாவமன்னிப்பு திருமுழுக்கின் நுழைவாயிலாகவும் அமைகிறது (இராசநாயகம், 2012).

மரபுவழி திருச்சபைகளில் தண்ணீரால் வழங்கப்படும் திருமுழுக்கு சிறுவர் திருமுழுக்கு, வளர்ந்தோர் திருமுழுக்கு வகையிலும் காணப்படுகின்றது. இங்கு வளர்ந்தோர் திருமுழுக்கு போதிய ஆயத்தத்துடன் வகுப்புகளுக்கு சமூகமளித்த பின்னர் திருமுழுக்கு பெற அனுமதிக்கப்படுவர். சிறுவர் திருமுழுக்கு எனின் ஞானப்பெற்றோரின் உதவியுடன் பிள்ளை பிறந்து ஒரு மாதத்திலோ அல்லது மூன்று மாதங்களிலோ வழங்கப்படும். திருமுழுக்கின் போது வெள்ளை ஆடை அணிந்து, திருமுழுக்கு பெற்ற பின் நெற்றியில் சிலுவை அடையாளம் போடப்பட்டு, பின்னர் பலிபீடத்தில் வைத்து எரியூட்டப்பட்ட மெழுகுத்திரி வழங்கப்படும். இதற்கூடாகத் திருமுழுக்கு பெற்றவர்களும் உலகத்திற்கு ஒளியாக வாழ வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது (கெனட் பரனாந்து, 1990).

சுயாதீன திருச்சபைகளைப பொறுத்தவரையில் திருமுழுக்கு, பாவமன்னிப்பின் அடையாளச் சின்னமாகக் காணப்படுகிறது. இவர்கள் வளர்ந்தோருக்கான திருமுழுக்கை மாத்திரம் கடைப்பிடிக்கின்றனர். சிறுவர்கள் மனந்திரும்புதலுக்கான வயதை அடையாதபடியால் அவர்களுக்கு திருமுழுக்கு வழங்குவதில்லை. அவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிடுவதற்கான போதிய அறிவு காணப்படாதபடியால் இவர்கள் திருமுழுக்கை நிராகரிக்கின்றனர். வளர்ந்தோர் திருமுழுக்கானது ஆலயத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற திருமுழுக்கு தடாகத்திலோ அல்லது கடலுக்குள்ளேயோ இடம் பெறுகின்றன. திருமுழுக்கின் ஊடாக இவர்கள் திருச்சபையின் அங்கமாக மாறுகின்றனர். இரண்டு திருச்சபைப் பிரிவுகளிலும் அதாவது மரபுவழி, சுயாதீன திருச்சபைகளிலும் திருமுழுக்கின் நோக்கம் ஒன்றாகக் காணப்படுகிறது (மாற்கு 16:16, ரோமர் 7:8-9).

மரபுவழி திருச்சபையிலும், சுயாதீன திருச்சபையிலும் அனுஷ்டிக்கப்படும் திருவருட்சாதனங்களில் இன்னொன்றாக திருவிருந்து காணப்படுகிறது. திருவிருந்தின் ஊடாக ஆண்டவர் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல், இரண்டாம் வருகை போன்றவைகள் இரு சபையாலும் நினைவுக் கூரப்படுகின்றன. மேலும் இரண்டு அமைப்பினரும் வழிபாட்டில் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். மரபுவழி திருச்சபையாகிய உரோமன் கத்தோலிக்க திருச்சபை, அங்கிலிக்கன் திருச்சபை போன்ற திருச்சபைகளில் திருவிருந்துச் சடங்கு ஒவ்வொரு நாளும் நினைத்துக் கொள்ளப்படுகிறது. ஆனால் மெதடிஸ்த திருச்சபையில் மாதத்திற்கு ஒருமுறை நினைவு கூரப்படுகிறது. இதுபோன்றே சுயாதீன திருச்சபைகளும் மாதத்திற்கு ஒருமுறை இதனை நினைத்துக் கொள்கின்றனர்.

உரோமன் கத்தோலிக்கம், அங்கிலிக்கன், தென்னிந்திய, மெதடிஸ்த ஆகிய மரபு திருச்சபைகளில் இதற்கு என தயாரிக்கப்பட்ட அப்பம், திராட்சைரசம் போன்றவைகள் பரிமாறப்படும். ஆனால் சுயாதீன திருச்சபைகளில் பாண் அல்லது ரொட்டி அல்லது கேக் போன்றவற்றோடு மென்பானங்கள் திருவிருந்து பொருட்களாக பரிமாறப்படுகின்றன. மேலும் திருவிருந்தைக் குறித்து அளிக்கப்படுகின்ற இறையியல் விளக்கங்கள் சபைகளுக்கு சபைகள்

வேறுபடுகின்றன. மரபுவழி திருச்சபைகளில் ஒன்றாகிய உரோமன் கத்தோலிக்க திருச்சபை திருவிருந்தின் போது திருவிருந்தில் பயன்படுத்தப்படும் அப்பமும் திராட்சை ரசமும் இயேசுவின் உடலாகவும், உதிரமாகவும் மாறுகிறது என்ற சிந்தனை முன்வைக்கப்படுகிறது. அதே போன்று அங்கிலிக்கன் திருச்சபை மற்றும் தென்னிந்திய திருச்சபையில் திருவிருந்தின் போது ஆண்டவர் இயேசு எமக்குள்ளும் நாம் அவருக்குள்ளும் ஒரு பகுதியாக மாறுகிறோம் என்ற சிந்தனை முன்வைக்கப்படுகிறது.

இது நாம் இறையரசில் அருந்தப்போகும் விருந்திற்கான முன் அடையாளம் என்ற சிந்தனை இங்கு நிலவுகிறது. திருவிருந்தின் போதும் பின்னரும் விருந்தின் மூலங்கள் புனிதப் பொருளாகக் கொள்ளப்படும். ஆனால் மெதடிஸ்த திருச்சபையில் திருவிருந்தின் போது மாத்திரமே இவைகள் புனிதப் பொருளாகக் கருதப்படும். ஆனால் சுயாதீன திருச்சபைகளில் இவற்றின் புனிதத்தன்மை அதிகளவு வலியுறுத்தப்படுகிறது. 1கொரிந்தியர் 11:25 வசனம் தொடங்கி திருமறைப் பகுதி வாசிக்கப்பட்டு மக்களுக்கு அவற்றுக்கான விளக்கம் அளிக்கப்பட்டு திருவிருந்து பரிமாறப்படும். இதனை அவர்கள் ஒரு அடையாளச் சின்னமாக நினைவுக் கூருகின்றனர். இது தலைமைப் போதகராலேயே நடாத்தப்படுகிறது. தகுதியான நிலையில் இருந்தே இதனைப் பெற வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

ஆனால் மரபுவழித் திருச்சபையை எடுத்துக்கொண்டால் ஞாயிறு வழிபாட்டின் ஒரு பகுதியாக திருவிருந்து காணப்படுகிறது. இதற்கென தயாரிக்கப்பட்ட வழிபாட்டு ஒழுங்கு இதற்காக பயன்படுத்தப்படுகிறது. இது மக்களுக்கான வழிகாட்டியாகக் கருதப்படும். சுயாதீன திருச்சபைகளில் மக்கள் இருக்கும் இடத்திற்கு திருவிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பரிமாறப்படும்.

மரபுவழி திருச்சபையில் பலிபீடத்தை நோக்கி நடந்துச் சென்று முழங்கால்மண்டியிட்டு திருவிருந்தைப் பெற்றுக் கொள்வார்கள். உரோமன் கத்தோலிக்க திருச்சபையானது சிறுவர்களுக்கு திருமுழுக்கு கொடுத்து பதின்ம வயதில் பிள்ளை திடப்படுத்தப்பட்டு அல்லது உறுதிபூசப்பட்டு திருவிருந்து வழங்கப்படுகிறது. அங்கிலிக்கன் திருச்சபையில் திருமுழுக்கு பெற்ற பின்னர் சிறுவர்கள் திடப்படுத்தல் பெறும் வரை பெற்றோரின் அனுதியுடன் திருவிருந்து வழங்கப்படுகிறது. பின்னர் திடப்படுத்தல் பெற்றவுடன் திருவிருந்து வழங்கப்படும். தென்னிந்தியத் திருச்சபை, மெதடிஸ்த திருச்சபையைப் பொறுத்தவரையில் திருமுழுக்கு பெற்று, திடப்படுத்தலின் பின்னர் திருவிருந்து வழங்கப்படுகிறது. ஆனால் சுயாதீன திருச்சபையில் வளர்ந்தோர் திருமுழுக்கு பெற்ற பின்னர் திருவிருந்து வழங்கப்படுகிறது. இங்கு திடப்படுத்தல் என்ற செயற்பாடு சுயாதீன திருச்சபையில் காணப்படுவதில்லை.

அருட்கொடைகளில் இன்னுமொரு கொடையாக திருமணம் காணப்படுகிறது. மரபுவழித் திருச்சபையில் திருமணம் கலாசார விழுமியங்களுக்கு ஏற்றவகையில் இடம்பெறுகிறது. குறிப்பாக உரோமன் கத்தோலிக்க திருச்சபையில் பெற்றோரை வணங்குதல் முக்கியமான நிகழ்வாக காணப்படுகிறது. மேலும் திருமணத் தம்பதியினர் தாலி, மாங்கால்யம், மோதிரம் போன்றவற்றை கலாசார பாரம்பரியங்களுக்கு அமைய பரிமாறிக் கொள்கின்றனர். அத்துடன் திருமணத்தின் போது நடைபெறும் வழிபாட்டில் கீழைத்தேய இசைக்கருவிகள் பெருமளவிற்கு பயன்படுத்தப்படுகின்றன (பியால் ஜானக்க, 2015).

சில சந்தர்ப்பங்களில் மணமகன், மணமகள் கலாசார ஆடைகளை அணிவதை நாம் காணலாம். இவ் அருட்கொடை சட்டபூர்வமாக்கப்படுகின்ற வேளைகளில் திருப்பணியாளர்களே

பதிவாளராகக் காணப்படுவர். அதேபோன்று சுயாதீன திருச்சபையைப் பொறுத்தவரையில் திருமண வழிபாடு நடத்தப்பட்ட பின்னரே சட்டப்படியான பதிவு விவாகப் பதிவாளரால் நடாத்தப்படுகிறது. இவை இவ் அருட்கொடையின் பிராதானமான வேறுபாடாகும். எனினும் உரோமன் கத்தோலிக்க திருச்சபைத் திருப்பணியாளர்கள் விவாகத்தில் ஈடுபடுவதில்லை. ஆனால் பொதுநிலையாளர்கள் திருமண பந்தத்தில் இணைந்து கொள்ளலாம்.

மரபுவழி திருச்சபை மற்றும் சுயாதீன திருச்சபைகளில் எண்ணெய் பூசி செபித்தல் இன்னுமோர் அருட்கொடையாகும். நோயாளர்கள் மத்தியில் இச் சடங்கு நடாத்தப்பட்டு வருகிறது. உரோமன் கத்தோலிக்க திருச்சபையில் குருவானவர் மாத்திரமே இச் சடங்கில் ஈடுபடுவர். அவ்வாறே தென்னிந்தியத் திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை அங்கிலிக்கன் திருச்சபைகளில் திருப்பணியாளர்களே எண்ணெய் பூசி செபிக்கின்றனர். இந்நிகழ்வே சுயாதீனத் திருச்சபைகளில் பொதுநிலையாளர்கள் மற்றும் திருப்பணியாளர்கள் ஈடுபடுவதைக் காண்கிறோம்.

அருட்கொடையில் இன்னுமோர் அங்கமாக காணப்படுவது குரு அபிஷேகம் ஆகும். மரபுவழித் திருச்சபையில் உரோமன் கத்தோலிக்க திருச்சபை அதிக சடங்காச்சாரத்துடன் நடாத்தப்படுகிறது. சிறப்பாக முதலில் தகுதிகாண் காலத்தின் பின்னர் திருத்தொண்டராக திருநிலைப்படுத்தப்படுவர். திருத்தொண்டர் காலம் நிறைவடைந்த பின்னர் திருப்பணியாளராக திருநிலைப்படுத்துவர். அதன் பின்னர் அவருக்கான திருச்சபை அல்லது பங்கு தனியாக நிருவகிப்பதற்காக வழங்கப்படுகிறது. திருப்பணியாளராக திருநிலைப்படுத்தப்பட்ட பின்னர் பாவமன்னிப்பு, திருமுழுக்கு, திடப்படுத்தல், திருவிருந்து, எண்ணெய் பூசி செபித்தல், போன்ற அருட்கொடைகளை மக்களுக்கு வழங்க முடியும். சுயாதீன திருச்சபையின் உதவிப் போதகராக திருநிலைப்படுத்தப்பட்ட பின்னரே தலைமைப் போதகராக திருநிலைப்படுத்தப்படுவர். இவை இரண்டிற்குமிடையேயான காலப்பகுதி தலைமை போதகரால் தீர்மானிக்கப்படுகிறது.

***சம்பிரதாயங்கள்***

உரோமன் கத்தோலிக்க திருச்சபையைப பொறுத்தவரையில் பல சம்பிரதாயங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக புனிதர்களின் ஊடான வழிபாடு முக்கியமானதாகும். அதாவது வாழும் போது நல்வாழ்வை வாழ்ந்து இறைவனுடன் இரண்டறக் கலந்த பின்னர் அவருடைய பெயரால் அல்லது புனிதருடைய பெயரால் புதுமைகள் நடைபெறுமானால் அவர் புனித நிலைக்கு உயர்த்தப்படுவார். எனவே இவர் ஊடாகவே கடவுளை நோக்கி மன்றாடும் அணுகுமுறை கத்தோலிக்க திருச்சபையில் காணப்படுகிறது (மேத்யூ, 2016).

புனிதப்பொருட்கள் முக்கியமானதாக காணப்படுகிறது. குறிப்பாக சிலுவை அடையாளம், அப்பம், புனிதர்கள் பயன்படுத்திய பொருட்கள் போன்றவைகள் வழிபாட்டில் முக்கிய இடத்தை எடுக்கின்றன. மேலும் புனித யாத்திரை மிகப் பிரபல்யமானதாகும். சிறப்பாக திருப்பாடுகள் காலத்தில் ‘கினிதும’ என்ற மலைக்கு மக்கள் பவனியாகச் செல்வர். மேலும் இத்தாலியுள்ள உரோம் நகரத்திற்கும், பலஸ்தீனாவிலுள்ள புனித பூமிக்கும் யாத்திரையாகச் செல்வதை நாம் அவதானிக்கலாம்.

ஆனால் அங்கிலிக்கன், மெதடிஸ்த, தென்னிந்திய திருச்சபையைப் பொறுத்தவரையில் புனிதர்கள் மூலமான வழிபாடோ, புனித பொருட்களின் மீதான நம்பிக்கையோ அதிகம் காணப்படுவதில்லை. எனினும் புனித யாத்திரைகளை முக்கியத்துவப்படுத்துகின்றனர். சுயாதீன திருச்சபையைப் பொறுத்தவரையில் மேற்கூறப்பட்ட எத்தகைய செயற்பாடுகளும் காணப்படுவதில்லை. இவர்கள் தங்கள் வழிபாட்டில் இவைகளை இணைத்துக் கொள்ளுவதுமில்லை. இவர்களின் கருத்துப்படி ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ள நாம் அழைக்கப்படுகிறோம் என்பதாகும்.

மேலும் கடவுளிடம் நாம் புனிதர்களின் துணைக்கொண்டு செல்ல வேண்டிய தேவையில்லை. மாறாக நேரடியாகவே நாம் கடவுளை அணுகலாம் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. கடவுளைப் புனிதப் பொருட்களுக்குள் கட்டுப்படுத்தி விட எம்மால் முடியாது என்ற காரணத்தினால் புனிதப் பொருட்களின் மீதான நம்பிக்கையும் பெருமளவிற்கு அவர்களிடம் இருப்பதில்லை.

***திருவிழாக்கள்***

உரோமன் கத்தோலிக்க திருச்சபை, அங்கிலிக்கன் திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, தென்னிந்திய திருச்சபை போன்ற திருச்சபைகள் தமது சமுதாயத்தில் காணப்படும் பிற சமயத்தினருடைய பண்டிகைகளாகிய தைப்பொங்கல், தீபாவளி போன்றவற்றுக்கு கிறிஸ்தவ விளக்கம் அளித்து அவைகளைக் கொண்டாடி வருகின்றனர். ஊதாரணமாக தமிழர் கொண்டாடுகின்ற தைப்பொங்கல் கொண்டாட்டத்தைக் குறிப்பிடலாம் (அருளம்பலம், 2017). ஆனால் சுயாதீன திருச்சபையை பொறுத்தவரையில் பிறசமயங்களில் காணப்படும் திருவிழாக்களை இவர்கள் கொண்டாடுவதில்லை. சிறப்பாக உபாகமம் 20:1-10 வரையுள்ள பகுதியில் ''உன் தேவனாகிய கர்த்தர் நானே உனக்கு வேறொரு தெய்வத்தை உருவாக்கவோ, நமஸ்கரிக்கவோ வேண்டாம்'' மேலும் இந்து மக்கள் ஓரிறைக் கடவுள் கோட்பாடுகளை உடையவர் அல்ல எனக் காரணம் காட்டி இந்துமக்களின் விழாக்களையோ, பண்டிகைகளையோ சுயாதீன திருச்சபை மக்கள் கொண்டாடுவதில்லை. எனினும் தற்காலத்தில் அவர்களுக்கு இடையேயும் ஒரு சில சிந்தனை மாற்றங்கள் ஏற்படுவதைக் காணலாம்.

**முடிவுரை**

இவ்வாறாக இருபெரும் திருச்சபைப் பிரிவுகளை நாம் ஒப்பீட்டு அடிப்படையில் ஆய்வு செய்யுமிடத்து, இவ்விரு அமைப்புகளும் திருச்சபையின் ஸ்தாபகராகிய கிறிஸ்துவை வழிபடுகின்றனர். அதாவது அவருக்குரிய மதிப்பையும், மரியாதையும் வழிபாட்டில் அடையாளச் செயல்கள் மூலமாகவோஇ வார்த்தைகள் மூலமாகவோ தெரிவித்து நிற்கின்றனர். இரு அமைப்புகளும் கிறிஸ்துவின் பெயரையே தமது அடையாளமாக கொண்டு கிறிஸ்தவர் என பொதுப்படை கொண்டு அழைக்கப்படுகின்றனர். வழிபாட்டில் இரு அமைப்புகளும் திருமறையை மையமாகக் கொண்டு செயற்பட்ட போதிலும் அத்திருமறையை விளக்கம் அளிப்பதிலேயே இவர்கள் வேறுபடுகின்றனர் என்பதனை இவ்வாய்வு சுட்டிக்காட்டுகின்றது.

இதனடிப்படையில் இயேசுவால் ஏற்படுத்தப்பட்ட பிரதான அருட்கொடையாகிய திருமுழுக்கு, திருவிருந்து ஆகியவற்றை இரு சபையினரும் அனுஷ்டிக்கும் அதேவேளை அது பயன்படுத்தப்படும் மூலங்களுக்குமிடையேயும் அனுஷ்டிக்கும் காலங்களுக்குமிடையேயும் வேறுபாடு காணப்படுகின்றது. அவ்வாறு இருந்த போதிலும் அருட்கொடைகளின் தன்மை, இறையருள் போன்றவற்றுக்கிடையில் இத்தகைய வேறுபாடுகள் காணப்படுவதில்லை என்பதனை இவ்வாய்வு எடுத்துக்காட்டுகின்றது.

மேலும் கிறிஸ்தவ சமயத்தின் பிரதான விசுவாசக் கொள்கைகளை இவ் இரண்டு அமைப்புகளும் ஒருமித்தே அறிக்கையிடுகின்றன. கடவுள் படைப்பாளன் என்றும் அவரே இயேசு கிறிஸ்துவை உலகிற்கு அனுப்பினார் என்றும் அவர் கன்னிமரியாளிடத்தில் உற்பவித்து மனுஷனானார் என்றும் பொந்தியு பிலாத்து காலத்தில் சிலுவையில் அறையப்பட்டு, பாடுபட்டு, மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து பிதாவின் வலது பக்கத்தில் வீற்றிருக்கின்றார் எனவும் நம்புகின்றனர்.

மேலும் அவர் உயிருள்ளோரையும், இறந்தோரையும் நியாயம் தீர்க்க இவ் உலகிற்கே வருவார் எனவும் நம்புகின்றனர். எனவே இந்த நம்பிக்கை கிறிஸ்தவர்களின் பிரதான நம்பிக்கையாகும். இந் நம்பிக்கை இரண்டு திருச்சபை பிரிவுகளையும் ஒன்றாக இணைக்கிறது எனலாம். இவ்விரண்டு திருச்சபைப் பிரிவுகளை நோக்கும் போது மேற்கொள்ளப்படும் செபம் அவர்களை இணைக்கும் பாலமாக காணப்படுகிறது. மத்தேயு 6:9-12 இயேசுவின் சீடர்கள் இயேசுவிடத்தே வந்து நாங்கள் எவ்வாறு செபிக்க வேண்டும் என கேட்கின்றனர். அப்போது இயேசு அவர்களை நோக்கி பின்வருமாறு செபியுங்கள் என்று கூறுகிறார். “பரலோகத்தில் இருக்கும் எங்கள் பிதாவே உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக… எனக் கூறும் இச் செபத்தை மரபுவழி திருச்சபையும்இ சுயாதீன திருச்சபையும் இணைந்தே செபிக்கின்றனர். இச் செபம் இரண்டு அமைப்பினருக்கும் பொதுவாக காணப்படும் செபமாகும்.

இவ்வாறாக இரு சபைகளையும் ஒப்பிட்டு ஆய்வு செய்யுமிடத்து மேலே சுட்டிக்காட்டப்பட்ட வழிபாடு, அருட்கொடைகள், சம்பிரதாயங்கள், திருவிழாக்கள் என்பவை கோட்பாட்டு அடிப்படையில் இவற்றை வேறுபடுத்தினாலும் நடைமுறை சார்ந்து வேற்றுமையை விட ஒற்றுமை போக்கே அதிகமாக காணப்படுவதனை இவ்வாய்வு எமக்கு எடுத்துரைக்கின்றது. ஆயினும் இவ்விரு சபைகளுக்கிடையேயும் கோட்பாடு மற்றும் நடைமுறை ரீதியாக சில முரண்பட்ட போக்குகள் இருப்பதும் தவிர்க்க முடியாததாக உள்ளது.

எவ்வாறாயினும் இவ்விரு சபைகளுக்குமிடையே பொதுவான அம்சங்களின் நடைமுறையில் உள்ள ஒற்றுமை போக்கானது இவற்றுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படாதவாறு பாதுகாத்து கொள்கின்றது. அந்தவகையில் கோட்பாட்டு ரீதியாக அறியப்படுகின்ற இவ்விரு சபைகளுக்குமிடையிலான வேறுபாடுகள் மக்களிடையே எவ்வித தாக்கத்தையும் உண்டுபண்ணவில்லை என்பது இவ்வாய்வினூடாகக் கண்டுக் கொள்ளப்பட்ட உண்மையாகும்.

**உசாத்துணை நூல்கள்**

இருதராஜ் இராயப்பன், அழகுசெல்வன், நார்பர்ட் தாமஸ். (2005). *திருச்சபையின் சட்டத் தொகுப்பு.* தேடல் வெளியீடு.

ஏபனேசர், ஏ. (2005). *திருச்சபையின் வரலாறு.* வேர்டு ஆப் கிரைஸ்ட்.

சந்திரகாந்தன். (1980). *நவீன அடிப்படை இறையியல்.* கொழும்பு துறை மாவட்டம் வெளியீடு.

தஞ்ஞை டோமி. (2013). *கத்தோலிக்க இறைநம்பிக்கையின் வேர்கள்.* நல்வாழ்வு வெளியீடு.

மத்தியு, எஸ்.ஏ.ஐ. (2001). *உலகத் திருச்சபை வரலாறு.* ஆசிரியர் வெளியீடு.

மார்க்கு றேஜிஸ் இராசநாயகம். (2012). *கிறிஸ்துவில் வளர ஆயர் இல்லம்.* கொழும்பு.

மேத்யூ, எஸ். (2016). *கிறிஸ்துவில் ஒன்றாய்.* வைகறை வெளியீடு.

யேசுதாசன், அ.ம.தி. (2002). *கிறிஸ்தவ வாழ்வு.* அமலி வெளியீடு.

யேசுதாஸ் தங்கசாமி. ஆ.ளு. *திருச்சபையின் வரலாறு.* நாஞ்சில் பதிப்பகம்.

ராஜ துரை.(2014). *மெதடிஸ்த திருச்சபை வரலாறு.* மெதடிஸ்த திருச்சபை. யாழ்ப்பாணம்.

றெக்ஸ் ஜோசப். (1990). *குருதியில் விளைந்து குவளையம் நிரம்பிய கிறிஸ்தவம்.*கண்டி திருத்துவக் கல்லூரி வெளியீடு.

ஸ்டீபன் அருளம்பலம். (2006). *அங்கிலிக்கன் திருச்சபை வரலாறு.* கத்தோலிக்க அச்சகம்.

ஹீத்தீன் மனோகர். (2006). *உலக சபை சரித்திரம்,* இலங்கை வேதகாம கல்லூரி வெளியீடு.

கத்தோலிக்க மற்றும் புரட்டஸ்தாந்து ஒப்பீடு. Retrieved June 12, 2023, from https://gigafox.u,

கிறிஸ்தவம்- பெந்தகோஸ்து. Retrieved June 10, 2023, from https://www.dinamani.com,

Christianuity General Introduction And History. Institute of Distance Education, University of Madras, pcs 101, Indiya.

Jerome Rasiah, Eva Rasiah.(2021). *Light to the East*, *Youth With A mission*. Trincomalee.

Paul Faby.(1998). Origns of Pentecostalim and the Charismatic Movement.Understanding Ministries.

# பாரம்பரிய இந்து சமூகப் பண்பாட்டில் சமகால நாகரிகத்தின் தாக்கம் - யாழ்ப்பாண மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு

**நிருத்திகா ஜீவராசா, இரத்தினசிங்கம் சகாயசீலன்**
ஒப்பீட்டுச் சமயமும் சமூக நல்லுறவும் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*niruthtika1997105@gmail.com*

## ஆய்வுச் சுருக்கம்

பண்பாடு என்பது வாழ்க்கை முறை (Way of Life) ஆகும். ஒரு சமுதாயத்தில் வாழும் மக்களின் பெருமைகளையும் எண்ணங்களையும் ஒருமித்த நடத்தைகளையும் வெளிப்படுத்தும் மையப்புள்ளியாகப் பண்பாடு காணப்படுகிறது. இன்றைய காலகட்டத்தில் மக்களுக்குப் புதிய விடயங்களை அறிமுகப்படுத்துவதிலும் தெரியப்படுத்துவதிலும் நவீன தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. புதிய விடயங்களைத் தெரிய வேண்டுமென்றால் இணையத்தை நாடுகிறார்கள். ஆனால், பழைமையான விடயங்களையும் பண்பாடுகளையும் விளம்பரம் செய்வதற்கு யாரும் முன்வருவதும் இல்லை பழைமையான பொருட்கள் மீது மக்கள் ஆர்வம் காட்டுவதுமில்லை. பழையன கழிதல் புதியன புகுதல் என்றரீதியில் தமது வாழ்க்கை முறைகளை மாற்றி அமைத்துக் கொள்கின்றார்கள். நவீன தகவல் தொழில்நுட்ப சாதனங்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் கவர்ச்சிகரமான கலாசார விளம்பரங்களால் ஈர்க்கப்பட்ட மக்கள் நாகரிகமான முறையிலேயே வாழ்வதற்கு விரும்புகின்றார்கள். இவ்வாறான மக்களால் ஒரு நாட்டினுடைய பழைமையான பண்பாட்டம்சங்களைத் தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதென்பது இயலாமல் உள்ளது. பாரம்பரிய பண்பாட்டின் சிதறல் என்பது நவநாகரிகத்தின் தாக்கம் எனலாம். இவ்வாறான தாக்கத்தினால் ஏற்படும் பாரிய பிரச்சினைகளை ஆராயும் பொருட்டு பாரம்பரிய இந்து சமூகப் பண்பாட்டில் சமகால நாகரிகத்தின் தாக்கம்- யாழ்ப்பாண மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு என்ற தலைப்பின் ஊடாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாரம்பரிய இந்து சமூகப் பண்பாட்டு முறைகளையும், அதன் நன்மைகளையும், அவற்றின் தேவைகளையும் தற்கால மற்றும் எதிர்கால சந்ததிக்கு நினைவுபடுத்தி அவற்றைப் பின்பற்ற வைப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வானது இந்து சமூகப் பண்பாட்டின் ஆரம்ப காலம் தற்காலப் பாரம்பரியங்களை ஒப்பீட்டாய்வு செய்வதன் மூலம் எதிர்கால ஆய்வு முயற்சியாளர்களின் அறிவு விருத்திக்கு உந்து சக்தியாக அமைகின்றது. இவ் ஆய்வின் முறையியலாக அளவை முறைத் தகவல்கள் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள் முதன்நிலைத் தரவுகளாக விளங்குகின்றன. இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் இணையத்தளத் தரவுகள் என்பன இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்தி பண்புசார் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நவநாகரிகத் தாக்கத்தின் விளைவால் சமூக நல்லுறவில் ஏற்பட்ட முரண்பாடுகளைச் சீர்செய்தல், பாரம்பரிய இந்து சமூகப் பண்பாட்டில் சமகால நாகரிகம் ஏற்படுத்திய தாக்கத்தினையும், அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் கண்டறிதல் என்பவற்றின் மூலம் தற்கால சந்ததியினரும், எதிர்காலச் சந்ததியினரும் தவறான கலாசாரத்தைப் பின்பற்றுவதனை இல்லாது செய்தலாகும். தற்காலத்தில் ஏற்படும் பாதிப்புக்களைச் சரிசெய்து எதிர்காலத்திற்குச் சிறந்த பாதைக்குரிய உந்துசக்தியினை உருவாக்க முடியும் எனலாம்.

***திறவுச் சொற்கள்:*** *பண்பாடு, நவநாகரிகம், சமூக நல்லுறவு, இந்து சமூகம், கலாசாரம்.*

**அறிமுகம்**

மனிதனை மனிதனாக வாழ வழிசெய்யும் பாதையாக இவ்வுலகில் காணப்படுவது சமயங்களாகும். எல்லாச் சமயங்களுமே தீமைகளை ஒழித்து நன்மைகள் செய்யவேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றது. அந்தவகையில் மனிதனின் சிந்தனையைச் சீர்ப்படுத்தத் தோன்றியவையே சமயங்கள் எனலாம். இருப்பினும் சில சமயங்கள் இறைவனை ஏற்றுக் கொண்டு ஒழுக்கநெறிகளின் மூலம் மனிதனை செம்மைப்படுத்துகின்றன. வேறு சில சமயங்கள் கடவுள் நம்பிக்கையற்றவையாக இருந்தாலும் ஒழுக்கநெறிகள் மூலம் மனிதனை வாழ்வாங்கு வாழ வழி செய்கின்றன. பாரம்பரியமான யாழ்ப்பாண மாவட்டத்தில் நவநாகரிகத்தின் தாக்கம் இந்து சமூகப் பண்பாட்டில் ஆரம்ப காலத்திலும் விட தற்காலத்தில் அதிகமாகக் காணப்படுகின்றது எனவே தான் நவீன காலம், தற்காலம் எனும் அடிப்படையில் ஒப்பீட்டு ஆராய்வதனால் சமகாலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்து சமூகப் பண்பாட்டில் நவநாகரிகத்தினால் ஏற்பட்ட தாக்கத்தை ஆராய்வதே இந்த ஆய்வாக அமைகின்றது.

ஒவ்வொரு சமூகத்திற்கும் தனிப்பட்ட பண்பாடு உள்ளது. ஆனால் எந்த ஒரு பண்பாடும் மாறாத் தன்மை உடையதாக இருக்க முடியாது. இத்தகைய பண்பாட்டு மாற்றமானது சமயங்களில் நாகரிக தாக்கத்தினை ஏற்படுத்துவதனால் சமுதாய சீர்கேடுகள், முரண்பாடுகள், தவறான பழக்கவழக்கங்களினாலும் மனிதர்களுக்கிடையில் ஏற்படும் மோதல் போன்ற எதிர் முரணான செயற்பாட்டு வடிவங்கள் தோற்றம் பெறுகின்றன. இதனால் தற்காலத்திலுள்ள சந்ததிமட்டுமல்லாமல் எதிர்காலமும் தவறான பாதையை நோக்கியே செல்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே காணப்படுகின்றன. இதற்கான தீர்வுகளைக் கண்டறிந்து அவற்றை விளக்கும் ஆய்வாகக் காணப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

பாரம்பரிய இந்து சமூகப் பண்பாட்டில் சமகால நாகரிகம் ஏற்படுத்திய தாக்கத்தினையும், அதனால் ஏற்பட்ட விளைவுகளைக் கண்டறிவது ஆய்வுக்குரிய பிரச்சினையாகும். பாரம்பரிய செயற்பாடுகள் மருகி நவநாகரிக செயற்பாடுகள் காணப்படுகின்றமையினால் தற்கால மானிடர்களும், எதிர்கால சந்ததியும் தவறான பாதையினை நோக்கிய புதிய முறையிலான கலாசாரத்தை உருவாக்குகின்றனர். இதுவே ஆய்வின் பிரச்சனையாகும்.

**யாழ்ப்பாண இந்துப் பண்பாடும் சமுதாய வழமைகளும்**

யாழ்ப்பாணம் மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமுள்ள ஒரு பிரதேசமாகும். யாழ்ப்பாணம் எனும் பெயரானது அருணகிரிநாதரின் திருப்புகழில் 759வது பாடல் வரியில் ''யாழ்ப்பாணாயன் பட்டிணமேவிய பெருமாளே'' எனக் குறிப்பிட்டுள்ளமையை காணக் கூடியதாக உள்ளது (இந்திரகலா,1972).

ஒல்லாந்தர் காலத்துத் தோம்புப் பதிவிலேயே ''யாழ்ப்பாணாயன் பட்டிணம்'' குறிப்பிடப்பட்டிருப்பதனைக் காண முடிகிறது. அருணகிரிநாதர் வாழ்ந்த காலம் கி.பி 16 அல்லது 17 ஆம் நூற்றாண்டு ஆரம்பம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண வைபவமாலையில் மயில்வாகனப்புலவர் ''யாழ்பாடி'' உடன் இணைத்துக் காட்டப்பட்டுள்ள

கதை மரபின் அடியாக யாழ்ப்பாணம் என்ற பெயர் வந்த வரலாறு பற்றி எடுத்துக்காட்டியுள்ளார் (சிவலிங்கராஜா, 2014). யாழ்ப்பாண மாவட்டத்திற்கென மொழி, மதம், இனம், கலாசாரம் என்பன காணப்படுகின்றன. யாழ்ப்பாணம் என்பது வரலாற்று அடிப்படையில் பல்வேறு ஆட்சியாளர்களின் ஆதிக்கத்தினால் அடிமைத்தனத்திற்குள் அகப்பட்டு பண்பாட்டுச் சிதறல் நிலைக்குச் சென்றுள்ளது என்ற வகையில் நவநாகரிகத்தின் தாக்கம் அதிகரித்து இன்று யாழ்ப்பாண இந்து சமய சமூகம் பாரிய அழிவு நிலை நோக்கிச் சென்று கொண்டிருப்பதனைக் காணமுடிகின்றது.

பண்பாடு என்பதன் பொருள் பண்படுத்துவது என்று அர்த்தமாகிறது. மேலும் சீர்படுத்துவது திருத்தமாய் இருப்பது என்றும் கூறலாம். பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுத் தொகுப்பாகும். பண்பாட்டிற்கு விளக்கங்களைக் குறிப்பிடும் பக்தவத்சலபாரதி, ‘‘பண்பாடு என்பது ஒரு முறைப்படியான நடத்தை முறைக்கு மக்கள் ஏற்படுத்திக்கொள்ளும் ஓர் அமைப்பு அல்லது மன அளவிலான விதி’’ என வரைவிலக்கங்களைத் தருகின்றார் (இரகுநாதன்,2009). மனிதன் தன் இனத்துடன் சேர்ந்து வாழும் இயல்புடையவன். அவன் தன் இனத்தாரோடு கூடிக் கலந்து வாழ்வதில் சமூகம் (Community) உருவாகின்றது (சிவத்தம்பி, 2000). தனித்துவமான பண்பாடு, நிறுவனம் சார்ந்த தொடர்புகள், ஒரே மாதிரியான நிலப்பகுதியில் வாழ்தல், ஒரே மொழியினைப் பேசுதல் போன்ற ஒற்றுமைகளைக் கொண்ட மக்கள் குழுவினைச் சமூகம் எனலாம் (Bindeshwar Prasad Mandal, 2021:72).

**சமகால நாகரிக உருவாக்கத்திற்கான காரணிகளும் அதன் வளர்ச்சி நிலையும்.**

நவநாகரிகத்தின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் முக்கிய காரணமே உலகமயமாதலாகும். தொலைத்தொடர்பு, போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், அரசியல், பண்பாடு, ஆகிய துறைகளின் முன்னேற்றங்களினால் உந்தப்பட்டு உலக சமூகங்களுக்கிடையேயான அதிகரிக்கும் தொடர்பையும் அதனால் ஏற்படுத்தப்பட்டுவரும் ஒருவரில் ஒருவர் தங்கி வாழ்கின்ற நிலையையும் உலகமயமாதல் எனலாம் (இந்திரகலா, 1972:66-67).

உலகமயதாதல் என்பதன் முதற்காலகட்டப் பகுதியினைக் குறிப்பாக கி.பி.1492 - கி.பி.1800 வரையிலான காலகட்டப்பகுதியினைக் குறிக்கின்றது. இக்காலத்தில் பேரரசுகள் அரசாங்கத்தின் மூலம் வணிகத்தில் ஈடுபட்டன. உலகமயமாதல் காலகட்டமானது பன்னாட்டு நிறுவனங்கள் (Multi-National Companies) வணிகத்தில் மேலோங்கிய காலமாகும் (Prathibha Rajasinghe, 2022:73). இக்காலத்தில் தான் கிழக்கிந்தியக் கம்பெனி போன்ற வணிக நிறுவனங்கள் வலுப்பெற்றன. இக்காலத்தின் முதற்பாதியில் சாலை, புகை வண்டி ஆகியவற்றின் பங்களிப்பாலும் இரண்டாம் பாதியில் தகவல் தொடர்புச்சாதனங்கள், தொழில் புரட்சி, கணனிப்பொறி, செயற்கைக்கோள் போன்ற சாதனங்களின் வரவாலும் மிக வேகமாக உலகமயமாதல் ஏற்படத் தொடங்கியது.

உலகமயமாதலின் மூன்றாவது தலைமுறை என்பது தனிநபரின் பங்களிப்பும் உயர் தொழில்நுட்பமும் நிறைந்த தற்காலமாகும். இது புதிய உலகமயமாக்கல் எனப்படுகின்றது.

உலகமயமாக்கல், திறந்த பொருளாதாரக்கொள்கை, பிற்பண்பாட்டு ஊட்டம், புலப்பெயர்வு, கையளிப்புக் குறைபாடு, பழைமை போற்றாத பண்பு, நவீன தகவல் தொழில்நுட்பத் துறையின் அதீத வளர்ச்சி போன்றனவற்றால் பண்பாட்டில் பல மாற்றமடைந்துள்ளது (வேதநாயகன், அருள்நேசன், 2018:18-20). உணவு, பழக்கவழக்கம், கலை, இரசனையென அனைத்து சமூக பண்பாட்டு விழுமியங்களையும் தீர்மானிப்பதாக உலகமயமாக்கல் மாறியிருக்கின்றது.

**யாழ்ப்பாணத்தில் இந்துப் பண்பாடுகளின் நிலைப்பாடு**

சிந்து நதிப்பள்ளத்தாக்கில் ஆரம்பமானதாகக் கணிக்கப்படுகின்றது. இந்து சமயப் பண்பாடு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேல் இன்று வரை காணப்படுகின்றது. இப்பண்பாடானது யாழ்ப்பாணத்திலும் முக்கியம் பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்தில் இந்து சமயத்தின் நிலை மிக முக்கியம் பெற்றதாகும். இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டம் இந்துப் பண்பாடு முதன்மை பெற்று விளங்கும் இடங்களுள் ஒன்றாகும். இந்துக் கலாசாரத்தில் ஊறித் திழைத்த சமுதாயக் கட்டமைப்பு இங்கு காணப்படுகின்றது. அதன் வழி வந்தோர் இந்துப்பண்பாட்டைப் போற்றும் தன்மை பெற்றவர்கள் ஆவார்கள். இருப்பினும் நவீன கால பண்பாட்டு மாற்றம் இங்குள்ள இந்துசமயப் பாரம்பரியத்தை சீர்குலைப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றது.

இதில் அதிகம் பாதிக்கப்படுவது இளைஞர் சமுதாயமாகும். இந்துக்களின் சிறப்புமிகு மரபுகளையும் பழக்க வழக்கங்களையும் விழுமியங்களையும் அலட்சியப்படுத்தி காலப்போக்கில் அவற்றை மறந்து போகின்றனர் (வேலுப்பிள்ளை, இராமகிருஷ்ணன், 2001:43). யாழ்ப்பாண இந்து சமய மக்கள் தங்கள் வாழ்க்கையில் முன்னோர் வகுத்த வழியிலே சடங்கு, சம்பிரதாயங்கள் என்பவற்றை பின்பற்றி வந்தவர்கள். இருப்பினும் உலகமயமாக்கலின் தன்மையினால் சமூகப் பண்பாடு மாற்றமடைந்து சீர்குலைந்த நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே இந்துப் பண்பாட்டின் சிறப்புக்கள் தொடர்ச்சியாக சமூகத்தில் வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். இல்லையெனில் மாறிக் கொண்டிருக்கும் பண்பாட்டியலில் இந்துசமயம் தனது தனித்துவத்தை இழக்க நேரிடும். இன்றைய சமுதாயத்தில் இந்துப் பண்பாட்டுச் சிறப்புகளை பேணுவது முக்கிய கடமையாகும்.

**நவீன கால நாகரிக மாற்றத்தினால் பல்வேறு தாக்கங்களுக்கு உள்ளாகிய இந்து சமூகப் பண்பாட்டம்சங்கள்**

- வாழ்வியல் சடங்குகள்
    - பிறப்புச் சடங்குகள்
    - பூப்பெய்தல் சடங்குகள்
    - திருமணச் சடங்குகள்
    - இறப்புச் சடங்குகள்
- ஆடை, ஆபரணங்கள்
    - ஆடைமாற்றத்தில் ஆண்கள், பெண்கள்
    - ஆபரணங்களின் மாற்றத்தில் ஆண்கள், பெண்கள்
- வழிபாட்டு முறைகள்
    - ஆலய வழிபாடுகள்
    - கிராமிய வழிபாடுகள்
- கலைப் பாரம்பரியம்

    - வாத்தியங்களில் மாற்றம்
    - கூத்துக் கலை
    - கோவில் கலை
    - கிராமிய நடனக்கலை
    - கிராமிய இசைக்கலை
    - கட்டடக்கலை
- உணவுமுறைகள்
    - பருவ கால உணவு முறைகள் (கோடை, குளிர்)
    - விசேட தினங்களில் உணவு முறைகள்
    - பூப்பெய்தல் பெண்களுக்கான உணவு முறைகள்
    - கர்ப்பிணிப் பெண்களுக்கான உணவு முறைகள்
- மருத்துவம்
    - ஆயுள் வேத சித்த மருத்துவம்
        - 19ம் நூற்றாண்டு
        - (20 ஆம் நூற்றாண்டு) தற்காலம்
        - மருத்துவிச்சி முறை
- விழுமியங்கள்
    - சமய அனுட்டானங்கள்

**இந்துப் பண்பாடுகளில் சமகால நாகரிகத்தின் தாக்கம் (நவீன கால மாற்றம்)**

யாழ்ப்பாண மக்களிடம் காணப்படும் சமூகப் பண்பாட்டுக் கூறுகள் அதிகளவில் மாறுவதற்கு காரணங்கள் பலவுள்ளன. இருப்பினும் மேலே கூறப்பட்டுள்ள பண்பாட்டம்சங்களில் நவநாகரிகத்தின் தாக்கம் அதிகமாகவே காணப்பட்டு புதிய முறையிலான கலாசாரம் மற்றும் பண்பாடு பழக்கவழக்கங்கள் தோன்றி விருத்தியடைந்து காணப்படுகின்றன.

புராதனகால மக்கள் சிறந்த சுகாதார வசதியுடன் ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். இவர்களது ஆயுட்காலம் 100 வருடங்களுக்கு மேலாக இருந்தது. இதற்கு காரணம் இயற்கையானதும் போசாக்குமிக்கதுமான உணவுகளை உண்டமையாகும். புராதன மக்கள் அம்மி, ஆட்டுக்கல், உரல் என்பவற்றின் மூலம் உணவுகளை இடித்தும் அரைத்துமே உட்கொண்டார்கள் ஆனால் தற்காலத்தில் இளைஞர்களும் யுவதிகளும் அம்மி உலக்கை, ஆட்டுக்கல் என்பவற்றின் பயன்பாடுகள் பற்றி அறியாமல் உளளனர் (சிவலிங்கராஜா, 2014:26). இதற்குக் காரணம் நவீன தொழில்நுட்பசாதனங்களின் வளர்ச்சியாகும். இதன் காரணமாக சிறிது காலத்தின் பின் புராதன பாவனைப் பொருட்கள் பயன்பாட்டில் இல்லாமல் மருவிவிடும் நிலை ஏற்பட இடமுள்ளது. அந்த வகையில் தற்காலத்தில் வழக்கொழிந்து வரும் யாழ்ப்பாணத்தின் பண்பாட்டு மரபுகள் பற்றி ஆராய்வது காலத்தின் தேவையாகவே அமைகின்றது.

யாழ்ப்பாணத்தில் மையங்கொண்ட பண்பாட்டுப் போக்கொன்றின் தொடர்ச்சியாக, பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமய, மொழி, கல்வி, பண்பாட்டு மறுமலர்ச்சியானது யாழ்ப்பாண வரலாற்றை எழுதுவதிலும் புதியதொரு உத்வேகத்தைத் தந்தது எனலாம். (மனோண்மனி,சண்முகதாஸ், மயில்வாகனம ் இரகுநாதன்,2006:50-63). இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முதலியார் செ.இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர், ஆசுகவி கல்லடி

வேலுப்பிள்ளை ஆகியோரது யாழ்ப்பாண வரலாற்று நூல்கள் இதன் வளர்ச்சியாகவே தோன்றின எனலாம்.

இன்றைய தொழில்முறைக் கல்வியின் விருத்தியினால் சமயக் கல்வி (ஆன்மீகக் கல்வி) செல்வாக்கினை இழந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். நவீன இலத்திரனியல் சாதனங்களான இணையம், (Internet), முகப்புத்தகம் (facebook) கைப்பேசி (Handphone), தொலைக்காட்சி (Television) முதலியவற்றின் ஆக்கிரமிப்புக்குள் இளந்தலைமுறையினர் உள்வாங்கப்பட்டிருத்தலானது அபயகரமானதாக உள்ளது. இது போன்ற உள்வாங்கல்களுக்கு சுயகௌரவம் என்ற நிலையில் பெற்றோர்களின் பங்களிப்புகள் காரணமாதல், சிறுதெய்வ வழிபாட்டு முறைகளின் எழுச்சி, அழகியல் மெருகூட்டல் செயற்பாடுகள் மேலெழுந்து காணப்படுதல், வாக்கியப் பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாங்கம் எனும் இருவகைப் பஞ்சாங்கங்களைப் பின்பற்றுகின்ற சமூகக் குழுமங்கள் காணப்படுகின்றமை, பாடசாலைகளில் சமயபாடம் யாவரினாலும் கற்பிக்கலாமென்ற நிலைப்பாடு காணப்படுகின்றமை போன்றனவும் எமது சமூக, சமயப் பண்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்துவனவாக அமைகின்றன (வனஜா தவயோகராஜா, 2005:101,102).

**இந்து சமூகத்தின் ஆரம்ப மற்றும் தற்காலப் பண்பாடுகளை ஒப்பிட்டு ஆராய்தல்**

ஒரு பண்பாட்டு நடத்தையின் முக்கியத்துவத்தை நாம் ஆங்காங்கே உள்ளவாறா மனிதனின் கூட்டு நடத்தையூடாக உருவாக்கி ஏற்படுத்தப்பட்டு மாறக்கூடிய தன்மையுடையதாகவும், புரிந்துகொண்டு விட்டால் மாத்திரமே போதாது, எண்ணத்திலும் செயலிலும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான முறையாகத் தான் பண்பாடும் ஒரு தனி மனிதனில் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு பண்பாட்டிலும் மற்றைய சமூகங்களிலில்லாத பல நோக்கங்கள் இருக்கின்றது. இவற்றிற்காக ஒவ்வொரு மக்களும் தங்கள் அனுபவங்களை மேலும் உறுதிப்படுத்திக் கொள்கின்றனர். நடத்தையின் தொடர்பில்லா பல விவரங்கள் இந்த நோக்கங்களையொட்டியே ஒரு உருவகத்தை அடைகின்றன. நன்றாய் இணைந்த ஒரு பண்பாட்டால் எடுத்துக்கொள்ளப்பட்ட வகைப்படுத்தப்படாத விவரங்கள் அதன் குறிப்பிட்ட குறிக்கோள்களுக்கேற்றவாறு மாற்றங்களை அடைகின்றன என்ற கருத்து பண்பாட்டின் பின்புலத்தை உணர்த்தும் என அனித்தா யோகராசா (2014:70) விளக்குகின்றார்.

முன்பு ஒரு திருமணவிழாவோ, பூப்புனித நீராட்டு விழாவோ இடம்பெற்றால் அது ஒரு குடும்பத்தின் கொண்டாட்டம் என மட்டுப்படுத்தப்படுவதில்லை. சம்மந்தப்பட்ட குடும்பத்தின் உறவுகள் அயலவர்கள் என எல்லோரும் சில நாட்களுக்கு முன்பே குறிப்பிட்ட குடும்பத்தின் வீட்டில் ஒன்றுகூடி விடுவார்கள். பந்தல் போடுதலுக்கான பொருட்களை சேகரித்தல், பந்தல் போடுதல் போன்ற விடயங்களை இளைஞர்களே மேற்கொள்வார்கள். அதே போன்று ஆண்கள் வேலி அடைத்தல், காணிகளைத்துப்பரவு செய்தல் போன்ற விடயங்களில் ஈடுபடுவர். சலவைத் தொழிலாளர்கள் பந்தலுக்கு வெள்ளைகட்டி அலங்கரிப்பாளர்கள். மாலைகள் கட்டுதல் மணவறையலங்காரம் செய்தல், தோரணம் பின்னல், கோலங்கள் போடுதல் போன்ற பணிகளை இளம் பெண்களே செய்வார்கள். இங்கு இளைஞர்கள் ஆண்கள், பெண்கள் என எவருக்கும் கூலி என்ற பேச்சிற்கே இடமில்லை. அனைவரும் தங்கள் சொந்த வீட்டுவேலை போன்றே அக்கறையுடனும் பொறுப்புடனும் செயற்படுவார்கள் (சிவசாமி, 2005). இது அந்நாட்களில்

நிலவிய கூட்டு வாழ்வின் ஒரு வெளிப்பாடாகும். இவ்வாறான சடங்குகளில் மட்டுமன்றி வீடுவேய்தல், வேலி அடைத்தல், வயல்வேலைகள், தோட்ட வேலைகள் என்பவற்றிலும் ஒரு கூட்டுறவு முறையே நிலவிவந்தது எனலாம்.

குறிப்பாக உப உணவு பயிரிடும் தோட்டங்களில் அந்த கிணற்று நீரில் பயிர் செய்யும் அனைவரும் உழுதல் கொத்துதல், துலாமிதித்தல், தண்ணீர்பாய்ச்சுதல் போன்ற வேலைகளை கூட்டு அடிப்படையிலேயே மேற்கொள்வார்கள் (சிவலிங்கராஜா, 2014:32). சமூகம் முதலாளித்துவ கட்டமைப்பை நோக்கி மாறிக்கொண்டிருக்கும் வேளையில், அந்த கூட்டு வாழ்வு மெல்லமெல்ல செயலிழந்து போய் விட்டது. இயந்திர சாதனங்களின் பயன்பாடு பிரதான பரிவர்தனை பணம் மூலம் மேற்கொள்ளப்படுதல் என பல மாற்றங்கள் கூட்டு உழைப்பின் தேவையை இல்லாமல் மாற்றிவிட்டன.

இந்த மாற்றம் சடங்குகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தாமல் விடவில்லை. கன்னிக்கால் நட்டு, பந்தல் போட்டு, மாலை தோரணம் கட்டி, கோலம் போட்டு, மணவறை வைத்து விழா நடாத்தும் முறை அருகிப்போய் சடங்குகள் மண்டபங்களுக்கு மாறிவிட்டன. எனினும் அவற்றின் அடிப்படை மாறவில்லை மண்டபங்களிலும் கூட மணவறைவைத்து பிள்ளையார் பூஜை செய்து தாலி கட்டும் சம்பிரதாயம் இன்னும் பிறழ்வின்றி தொடர்கிறது. அதே போன்று பந்திப்பாய் விருந்து பற்றியும் பந்திவைத்து வாழையிலையில் வடை பாயாசத்துடன் விருந்து பரிமாறும் வழக்கம் அற்றுப்போனாலும் மண்டபங்களில் இடம்பெறுகின்றமை கவனிக்கத்தக்கதாகும். ஆனால் விருந்துபசாரம் உறவினர்களை அழைத்து வீடுகளில் விருந்து வைக்கும் நாலாம் சடங்கு எனும் நிகழ்வானது இன்னும் கைவிடப்படவில்லை என்பது ஒரளவிற்கு நமது பண்பாடுகள் பேணப்படுகின்றனவா இல்லையா என்பதும் கேள்விற்குறியாகும்.

இவ்வாறே மரணச் சடங்குகளும் ஒரு காலத்தில் ஒருவித கூட்டுறவு முறையிலேயே மேற்கொள்ளப்பட்டன. சமூகக்கூட்டும் கட்டமைப்பு நிலை பெற்றிருந்தன. அந்த நாட்களில் இழவு சொல்லுதல், தட்டைப்பந்தல் போடுதல், பாடைகட்டுதல், வெள்ளைகட்டுதல் பறையடித்தல், சிதைக்கு (குற்றி) விறகு தறித்தல், பிரேதம் காவுதல், பொரி அரிசி எறிதல், நில பாவாடை விரித்தல், கொள்ளிக்குடம் உடைத்தல் என ஒவ்வொரு பணிகளும் ஒவ்வொரு சாராருக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. அவர்களும் அதைக்கடமையாகக் கருதாமல் உரிமையாகச் செய்தனர் (Santh, 2015). தற்சமயம் தகரப்பந்தல்கள், மேளக் குழுக்கள், பிரேத ஊர்திகள் (hearse) என மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. மாற்றங்கள் பல ஏற்பட்டுள்ளன என்பதை நாம் மறுக்கவே முடியாது. எனினும் பொற்சுண்ணம் இடித்தல், கிருத்தியம் செய்தல், கொள்ளி வைத்தல் போன்ற பிரதான சம்பிரதாயங்கள் இன்னும் கட்டிக்காப்பாற்றப்படுகின்றன. எனினும் கூட்டு உழைப்பாகவும் சாதி அடிப்படையிலான கடமைகளாகவும் இடம்பெற்றவை அனைத்தும் மாற்றமுற்று சகல விடயங்களும் கூலி கொடுத்தே மேற்கொள்ளப்படுகின்றன.

திருமணம் பூப்புனித நீராட்டுவிழா போன்ற வீட்டுச்சடங்குகளிலும் ஆலயங்களிலும் பொது விழாக்களிலும் எமது பாரம்பரிய ஆடைகளே அணியப்படுகின்றன. அவ்விடயங்களில் எம் பண்பாட்டு அடையாளங்கள் முழுமையாக வெளிப்படுத்தப்படுவதனை நாம் காணலாம். காலமும் வாழ்வும் எவ்வளவு தான் நவீன யுகத்தினுள் பிரவேசித்துவிட்டாலும் தைப்பொங்கல் சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி போன்ற பண்டிகைகளின் மெருகு குறையாமல்

கொண்டாடப்பட்டு வருகின்றன. வீடுகள் மாளிகைகளாக மாறிவிட்டாலும் முற்றத்திற்கு கோலமிட்டு புதுப்பானை வைத்து சூரியப்பொங்கல் செய்யும் பாரம்பரிய வழக்கம் இன்னும் உயிர்ப்புடனேயே உள்ளது. பொங்கல் அன்று இடம்பெறும் மாட்டுவண்டிச்சவாரி, போர்த்தேங்காய் அடித்தல் போன்ற எமது பண்பாடு சார்ந்த விளையாட்டுக்களும் எமது வாழ்வியலின் வலிமையான அம்சங்களாகும் (புஸ்பரட்ணம், 2012:40-45).

இவ்வாறே சித்திரை வருடப்பிறப்பன்று புத்தாடைதரித்து, பலகாரங்கள் தயாரித்து, உறவினர்கள் நண்பர்கள் வீடுகளுக்கு சென்று வருவதும் கைவிசேடம் கொடுத்தல், வாங்குதல் போன்ற விடயங்களும் எமது வாழ்வியல் முறையில் பிரிக்க முடியாத அம்சங்களாக விளங்கி வருகின்றன. எமது விருந்தோம்பல் பண்பாடு திருமணம், பூப்புனித நீராட்டு விழாவில் காணப்படுவது போலவே மரணமடைந்த ஒருவரின் எட்டுச் செலவு மற்றும் அந்தியேட்டிக் கிரியைகள் இடம் பெறும் நாட்களிலும் உறவினர் நண்பர்களுக்கு உணவு வழங்குதல் மேலும் ஆலயங்கள் உற்சவங்கள் தோறும் வெள்ளி, அமாவாசை பௌர்ணமி போன்ற சிறப்பு விரதங்கள் அனுட்டிக்கப்படும் போதும் உறவினர்கள், அயலவர்கள் அழைக்கப்பட்டு பந்திப்பரிமாறல் இடம்பெறுவதுண்டு.

ஒரு வீட்டில் மரணம் ஏற்பட்டால் எட்டுச்செலவுவரை அடுப்பு மூட்டமாட்டார்கள். அயலவர்களும் உறவினர்களும் அந்த வீட்டாருக்கும் இறப்பு வீட்டுடன் சம்பந்தப்பட்ட ஏனையோருக்கும் உணவு வழங்குவார்கள் என்பது வழக்கமாகவே இருந்து வந்தது (Jeyaruby, Alleraja, 2014). ஆனால் இப்பொழுதெல்லாம் இறந்த வீட்டு காரியம் நடைபெறும் நேரம் மட்டுமே போய் வந்து விட்டு பின்னர் செல்கின்ற வழக்கம் அல்லது துக்கம் பகிரும் வழக்கம் அருகியே வருகின்றது.

**இந்து சமூகப் பண்பாட்டில் நவநாகரிகத் தாக்கத்தின் விளைவுகளை ஆராய்தல்,**

- கலாசாரச் சீரழிவு
- சமூக நல்லுறவு சீர்குலைவு
- ஆரோக்கியம் இல்லாமை
- தொன்மைப்பண்பாடு அருகிப்போதல்
- விழுமியப்பண்புகள் குறைவடைதல்

**நாகரிகங்களை ஏற்றுக்கொள்ளவதற்கான காரணம் மற்றும் பாரம்பரிய பண்பாடுகளைப் புறக்கணித்தல் பற்றிய வியாக்கியாணங்கள்.**

1. தற்காலத்து மக்களின் வாழ்கை முறையானது உலகாயுத சமயத்தின் வழியிலே காணப்படுகின்றது என பல ஆசிரியர்களின் அனுபவப்பகிர்வாகவே காணப்படுகின்றது எனலாம். இதன் காரணத்தை வினவும் போது வெளிப்படும் கருத்தாக இவ்வுலக வாழ்க்கையிலே இன்பங்களை அனுபவித்து விட்டே இறந்து விடுதலாகும் என நம்பிக்கொண்டு வாழும் மக்களாகவே உள்ளனர் எனலாம். நவநாகரிகத்தின் வழியில் இருப்போர் பாவ புண்ணியத்தின் மறுபக்கத்தை பார்க்காது இருக்கின்றார்கள். வேகமாக வளரும் சமூகத்தில் நேரம் குறைவாக கிடைக்கும் உணவிற்கும், பணத்தின் மூலம்

கிடைக்கும் மரியாதையையும், ஆடம்பர வாழ்க்கை முறையும் மக்களுடன் ஒன்றோடொன்று ஒட்டியதாகவே காணப்படுகின்றது இதனாலேயே தான் நவநாகரிகத்தின் தன்மையை அதிகமாகவே மக்கள் விரும்புகின்றனர் எனலாம்.

2. பாரம்பரியங்களையும், தொன்மைப் பண்பாடுகளையும் கணிசமான மக்கள் மறுப்பதற்கு முக்கிய காரணம் அவை பிற்போக்கான தத்துவ முறை என்பதாக கள ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன. இவற்றை பின்பற்றுவதனால் சமூகமட்டத்தில் பின்தங்கி இருப்போர் என தம்மைத்தாமே கருதுகின்றனர். அடுத்து மரியாதை, அந்தஸ்து முறை நவநாகரிகத்தின் விளைவால் ஏற்படும் பொருட்கள், உற்பத்திகள், என்பவற்றின் மீது மக்களுக்கு ஏற்படும் மோகம் போன்ற விடையங்களினாலும் தொன்மைப் பண்பாடு என்பனவற்றை அவர்கள் விரும்பாமைக்கான காரணம் ஆகும்.
3. முக்கிய விடயமாகக் காணப்படுவது தொன்மைப் பண்பாட்டைச் சொல்லித் தருவதற்கான மக்கள் இக்காலத்தில் இல்லை என்றே கூறவேண்டும். ஏனெனில் ஆரம்ப காலத்தில் கூட்டுக்குடும்பமாக வாழும் போது அங்கு இருக்கும் முதியவர்கள், பெரியோர்கள் நல்லது கெட்டது போன்றவற்றை கூறுவதற்கு ஆர்வமாக இருந்தார்கள். ஆனால் இப்போது கருக்குடும்பமே அதிகளவில் உள்ளது. முதியோர்கள் வீட்டிற்குப் பாரம் என முதியோர் இல்லங்களில் கொண்டு போய் விடுவது வழக்கமாகி விட்டது எனலாம். இதன் பாரிய விளைவே பண்பாடுகள் பற்றிய அறிவு இக்காலத்து மக்களுக்கு இல்லை என்றே கூறவேண்டும். ஒரு சில இடங்களில் இருந்தாலும் அவற்றைப் பின்பற்றத் தயக்கம் காட்டும் மக்களும் யாழ்ப்பாணத்தில் இன்றும் உள்ளனர் எனலாம்.

**நிறைவுரை**

தமிழர்கள் ஆரம்ப காலத்திலிருந்து இனக்குழுவாக வாழ்ந்த பிரதேசமாக யாழ்ப்பாணம் காணப்படுகின்றது. பல்வேறுபட்ட பண்பாட்டுப் பாரம்பரியங்களையும், கலாசாரச் சிறப்புக்களையும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே தன்னகத்தே கொண்டு ஒப்பீட்டளவில் ஏனைய பிரதேசங்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டும் அளவிற்கு தனித்துவமான அம்சங்களையும் கொண்டுள்ளது. யாழ்ப்பாண மக்களுடைய புராதன கால பண்பாட்டம்சங்களாகிய கலைகள், உணவுப் பழக்கங்கள், உறவுமுறைகள், கலாசார சிறப்புக்கள் அனைத்தும் தற்காலத்தில் மாற்றமடைந்து வருவதனைக் கண்டுகொள்ள முடிகின்றது.

உலகமயமாக்கல், திறந்த பொருளாதாரக்கொள்கை, பிறபண்பாட்டு ஊட்டம், புலப்பெயர்வு, கையளிப்புக் குறைபாடு, பழைமை போற்றாத பண்பு, தகவல் தொழில்நுட்பத் துறையின் அதீத வளர்ச்சி போன்ற பல்வேறு காரணிகளால் தொன்மைச் சிறப்புமிக்க யாழ்ப்பாணப் பண்பாடு மிகவேகமாக வழக்கிழந்து வருகின்றன. யாழ்ப்பாணப் பிரதேசத்தின் இன்றைய இளம் சந்ததியினர் மேலைத்தேச பண்பாட்டம்சங்களாகிய கலை, கலாசாரம் உணவுமுறை, ஆடை அமைப்பு, என்பவற்றால் தமது இனத்திற்கென்று பழைமையான அடையாளங்கள் மற்றும் மூதாதையர் வரலாறு என்பவற்றையும் மறந்து விடுகின்றனர் (சண்முகம் பிள்ளை, 2003:232). அதனை அவர்களுக்கு உணர்த்தும் வகையில் மூதாதையர்களினுடைய பழக்கவழக்கங்கள், பண்பாட்டு வாழ்க்கைமுறை என்பவற்றை

எடுத்துக் கூறவேண்டிய தேவை தற்காலத்தில் ஏற்பட்டுள்ளது. ஒரு பிரதேசத்தை மொழி, மதம், கலை, பண்பாடு, பழக்கவழக்கங்கள். வாழ்க்கைமுறை, சடங்குகள், சம்பிரதாயங்கள் என்பவற்றால் தனித்து அடையாளப்படுத்தி பாரக்கும் மரபு நெடுங்காலமாக இருந்து வருகின்றது. இவற்றை குடும்பம், சமூகம், பாடசாலை போன்ற இடங்களில் இருந்து தற்கால சந்ததிக்கு கூறுவதன் மூலம் அல்லது பின்பற்ற வைப்பதன் மூலம் எதிர்காலச் சந்ததியை வலுவாக்க முடியும்.

பண்பாடு என்பதற்கு முடிவு என்பதே கிடையாது (காஞ்சனா, 2021:135). ஏனெனில் காலத்திற்குகேற்ப மாறும் விடயமாக இது காணப்படுகின்றது. இருப்பினும் நமது முன்னோர்களின் பண்பாட்டை மறந்தும், மறைத்தும் இவ்வுலகில் வாழ்வது என்பது அர்த்தமற்ற செயற்பாடாகும். வேகமாக, தொழில் முன்னேற்றமடையும் காலத்தில் வளர்ச்சியடைந்து வரும் நகரமாகவே யாழ்மாவட்டம் காணப்பட்டாலும் பழையனவற்றை மறக்காது அதனோடு அதன் முக்கியத்துவத்தையும் பின்பற்றும் சமுதாயமாகவே மாற வேண்டும். இவ்மாற்றமானது தற்காலத்தில் மட்டுமல்ல எதிர்காலத்தின் தேவையாகும். என்பது பல சான்றோர்களின் எண்ணமாகும் என்பதில் ஐயமில்லை எனலாம்.

**உசாத்துணைகள்**


அருண்குமார்,ஸ்ரீ. (2017).உலகமயமாக்கல் - இனி என்ன செய்யும்?, இந்து தமிழ் திசை இணையத்தளப்பதிவு. Retrieved April 16, 2023, from https://www.freetnbooks.com

இந்திரகலா,கா. (1972). *யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம்.* வெளியீடு பேராதனைப் பல்கலைக்கழகம்.

இரகுநாதன்,ம. (2009). *பண்டைத் தமிழர் பண்பாட்டுத் தடங்கள்.* யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இரத்தினசிங்கம்,சி.வ.(2008). *உலகமதங்கள் 40ஐப் பற்றிய அரிய தகவல்கள்.* மணிமேகலை பிரசுரம்.

இராமநாதன், பொன். (2008). *சித்த மருத்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்.* ஸ்ரீ சாயி பிறிண்டேர்ஸ்.

காஞ்சனா,நீ. (2021). *தமிழர் வழிபாட்டுச் சடங்குகள்.* Srimath Sivagnana Balaya Swamigal Tamil Arts and Science College Mailam.

கிருஸ்ணராசா, செ.,ஜெயானந்தி,ரூ,சி. (1997). *நங்கையரின் அணிகலன்கள் யாழ்ப்பாணப் பாரம்பரியம் பற்றிய நுண்கலை ஆய்வு.* பிறைநிலா வெளியீடு.

கிருஸ்ணராசா, செ. (2006). *யாழ்ப்பாணம்: மொழியும் வாழ்வும்.* கோகுலம் வெளியீடு.

சண்முகலிங்கம்,என். (2000). *சமூகமாற்றத்தில் பண்பாடு.* சவுத்வின் வெளியீடு.

சத்குரு. (2015). காது, மூக்கு குத்திக் கொள்வதிலுள்ள விஞ்ஞான அறிவு. (ISHA இணையத்தளம்). Retrieved May 24, 2023, from https://isha.sadhguru.org

சிவசண்முகராஜா,சே.(1993). *ஈழத்துச் சித்த மருத்துவ நூல்கள்.* சித்த மருத்துவ

வளர்ச்சிக்கழகம்.

சிவசாமி,வி. (2005). *இந்துப் பண்பாடு அன்றும் இன்றும்.* யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

சிவத்தம்பி,கா,பேராசிரியர். (2000). *யாழ்ப்பாணம்: சமூகம், பண்பாடு, கருத்துநிலை.* குமரன் அச்சகம் கொழும்பு.

சிவலிங்கராஜா,எஸ். (2014). *யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும்.* குமரன் புத்தக இல்லம்.

சிற்றம்பலம்,.சி.க.,(2002).*யாழ்ப்பாணம்: தொன்மை வரலாறு.* யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தில்லைநடேசன்,ச.(n.d..). யாழ்ப்பாண இராச்சிய அரசர்களின் காலமும் சமூகமும் - ஒருசமூக வரலாற்றுத்தேடல். வெளியீடு: ஆரையம்பதி தடங்களைத்தேடி இணையத்தளப்பகுதி. Retrieved June 30, 2023, from http://www.arayampathy.lk/history

Arnold wright. (1999). *Twentieth century impression of Ceylon*. Asian educational services.

Bindeshwar Prasad Mandal.B. (2021). *Globalization and Society*. K.k Publications Publisher.

Jeyaruby.A, (2016). மாற்றம் ஒன்று தான் மாறாதது - ஆடையும் கலாசாரமும், Jaffna university internafianal Research conference.

Jeyaruby, A, (2014). வழக்கொழிந்து வரும் யாழ்ப்பாணத்தின் பண்பாட்டம்சங்கள். (ஆய்வுக்கட்டுரை). வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Santh, (2015). Archaeology an Toirism, யாழ்ப்பாணப் பாரம்பரியக் கலை வடிவங்கள். *ஆய்வு இதழ்.*

Santh, (2014). Archaeology an Toirism, யாழ்ப்பாணப் பாரம்பரியக் பண்பாடு. *ஆய்வு இதழ்.*

Sutharsan.s.(2022). நாவில்லாத உபதேசிகள்: காலனிய யாழ்ப்பாணத்தில் சிறு புத்தகக் கலாசாரமும் சமயக் கருத்தாடல். university of Jaffna.

# இந்து சமயம்சார் தொல்லியல் சின்னங்களும் அழிந்த நகரங்களும்: சிந்துவெளி - அரிக்கமேடு ஆகிய நகரங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**பா.ஜேசினி மதுஷிகா, சாந்தி கேசவன்**
இந்து நாகரிகத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
bjmadushika@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

தென்னாசியாவில் இந்தியா நீண்ட தொடர்ச்சியான வரலாற்றுப் பாரம்பரியங்களைக் கொண்ட நாடாக விளங்குகின்றது. அந்தவகையில் இந்தியாவின் ஏராளமான இந்துசமயம்சார் தொல்லியல் சின்னங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் சிந்துவெளி, அரிக்கமேடு ஆகிய நகரங்களின் தொன்மையையும் தொடர்ச்சியான வரலாற்றையும் நிரூபிக்கும் வகையில் ஏராளமான தொல்லியற் சின்னங்கள் காணப்படுகின்றன. இவ்விரு இடங்களில் ஆராய்ச்சிகள் பல மேற்கொண்டு இருந்தாலும், இந்நகரங்களைப் பற்றி முழுமையான விபரங்கள் வெளிக்கொணரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நகரங்களை மேலும் அகழ்வாய்வுகளிற்கு உட்படுத்தும் போது தமிழரின் பெருமை உலக அரங்கில் பேசப்படும். இவ்விரு இடங்களையும் அகழ்வாய்வு செய்யும் பொழுது வழிபாட்டுக் கட்டடங்கள், மட்பாண்டங்கள், செங்கற்கள், ஈமத்தாழிகள், தெய்வச்சிலைகள், பிராமி ஓடுகள், மதுச்சாடிகள் எனப் பல பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இச்சின்னங்கள் இவ்விரு நகரங்களின் வரலாற்றுத் தொன்மையை எடுத்துக்காட்டுபவையாக அமைகின்றன. இந்நகரங்களில் வாழ்ந்தவர்களது வாழ்க்கைமுறை என்பவற்றைக் கூறுவதோடு இந்நகரங்கள் என்ன காரணத்தினால் அழிந்தது என்பது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆரம்ப காலத்தில் இந்நகரங்களின் விஸ்தரிப்பு ஏனைய நாடுகளுடன் இருந்தாலும் இன்று இவ்விரு நகரங்களின் நிலை என்னவென்பதும் இந்நகரங்கள் தமிழர்களின் பிறப்பிடமாகவும் இருந்துள்ளது என்பதனை நிரூபிக்கவும், இந்நகரங்களின் வரலாற்றுத் தொன்மையை வெளிக்கொணர்வதால் உலக வரலாற்றில் தமிழருக்கான மதிப்பினை அடையாளப்படுத்தவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *அரிக்கமேடு, சிந்துவெளி, நகரங்கள்*

## ஆய்வு அறிமுகம்

வளத்துக்கும் வாணிபத்துக்கும் இந்தியா எப்பொழுதும் உலக மக்களின் கண்ணில் நிழலாடிக்கொண்டிருக்கின்றது. அப்படியே கலை, நாகரிகம் முதலிய பல தலையாய ஆராய்ச்சிகளிற்கும் உலக அறிஞர்களின் உள்ளத்தை என்றும் அது கவர்ந்து கொண்டிருக்கின்றது. மிகப்பழங்கால இந்து மக்கள் தங்கள் வரலாறுகளை எழுதி வைத்திராவிடினும் பல இடங்களில் காணப்படும் சமாதிகள் மீதும் கற்கம்பங்கள் மீதும் அப்பழங்கால மொழிகளில் பல செய்திகள் எழுதப்பட்டுள்ளன. அவர்களைப் பற்றிய சில குறிப்புக்கள் செவியறாக வந்து பிற்காலத்தில் தோன்றிய ரிக்வேதம், புராணங்கள், இதிகாசங்கள் முதலியவற்றில் எழுதப்பட்டுள்ளன. இப்பழங்கால மக்கள் நடத்திய போர்கள், கடல்கொந்தளிப்புக்களால் பல நகரங்கள் அழிந்தமை போன்ற சில குறிப்புக்கள் பிற்கால மக்களின் கவனத்தினை ஈர்த்தன.

ரிக்வேதம் புராணங்கள், இதிகாசங்கள் போன்ற நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள அழகிய நகரங்கள் பல இன்று காணப்படவில்லை. இவ்வாய்வானது சிந்துவெளி, அரிக்கமேடு ஆகிய நகரங்களை அடிப்படையாக கொண்ட ஆய்வாக காணப்படுகின்றது. அழிவடைந்து செல்லும் இந்துசமயம்சார் தொல்லியல் சின்னங்கள் மூலம் இவ்வழிந்த நகரங்களின் வரலாற்றுத்

தொன்மையான வெளிக்கொணர்தல், இவ்வழிந்த நகரங்களின் வரலாற்றுத் தொன்மையானது மறைக்கப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. எனவே இம்மரபுரிமைசின்னங்களை பேணி எமது பண்பாடு, கலாசாரம், வாழ்க்கைமுறை என்பவற்றை சமூகத்திற்கு எடுத்துக்கூறுதல், இந்துசமயம்சார் தொல்லியல் சின்னங்களையும், அழிந்த நகரங்களையும் பற்றிய உண்மையானத் தகவலை மக்களுக்கு உணர்த்துதல், பழம்பெரும் வரலாற்றைக் கொண்ட நகரங்களில் கிடைக்கப்பெற்ற தொல்லியல் சின்னங்களை ஆவணப்படுத்தல் என்பதே ஆய்வின் நோக்கமாகும்.

இந்நகரங்கள் அழிந்தமையினால் இதன் உண்மையான வரலாற்றை மக்கள் ஏற்க மறுக்கின்றனர். இந்நகரங்களில் நடைபெற்ற ஆராய்ச்சிகள் பற்றி பாமர மக்கள் இன்றளவும் பெரிதும் அறிந்திலார். இந்நகரங்கள் பற்றிய இந்துக்கள் உண்மைத் தன்மையான வரலாறு இந்துக்களே அறியா வண்ணம் உள்ளது. இந்துக்களின் பெருமை இந்துக்களே அறியா வண்ணம் உள்ளமையினால் வேற்று மதங்கள் உரிமைக் கொண்டாட முனைவது என்பதெல்லாம் ஆய்வுப்பிரச்சினையாக கொள்ளப்படுகின்றது.

இன்று இவ்விரு நகரங்களையும் காணக்கூடியாக இல்லை. இவற்றிக் எச்சல்களையாவது மீட்டெடுத்து எமது பராம்பரியத்தை பாதுகாத்து உலகறியச் செய்வது எமது கடமையாகவே கருதுகின்றேன். என்னுடைய இந்த ஆய்வினூடாக அழிந்த இரு நகரங்களை பற்றியும் அங்கு கிடைத்த இந்து சமயம்சார் தொல்லியல் சின்னங்கள் பற்றியும் அறியச்செய்வதாக அமைகின்றது.

**இலக்கிய மீளாய்வு**

இந்து சமயம்சார் தொல்லியல் சின்னங்களும் அழிந்த நகரங்களும் பற்றிய தகவல்களை பல்வேறு நூல்கள் மற்றும் கட்டுரைகள் மூலம் அறிந்துக்கொள்ள முடிகின்றது. அன்தோனவா.கொ.அ, போன்காரத் - லேவின் கி.ம, (1987) ‘‘இந்தியாவின் வரலாறு’’ எனும் நூலில் ஹரப்பா நாகரிகம் எவ்வாறு காணப்பட்டது என்பது பற்றிய தகவலை பெறமுடிந்தது.

இராசமாணிக்கம். மா, (1907), ‘‘மொஹஞ்சதாரோ சிந்துவெளி நாகரிகம்’’ எனும் நூலில் சிந்துவெளி நாகரிகம் பற்றியும், அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்வு, பண்பாடு, கலையம்சம், வழிபாட்டு முறைகள் பற்றியும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. சொக்கலிங்கம். கு, (2009), ‘‘இந்து நாகரிகம்’’ எனும் நூலில் சிந்துவெளி நகரமைப்பு, மக்கள் வாழ்க்கை முறை என்பன பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேங்கடசாமி. மயிலை சீனி, (1960), ‘‘தமிழர் சால்பு’’ எனும் நூலில் அரிக்கமேடு துறைமுகப்பட்டினம் பற்றியும் அங்கு நடைப்பெற்ற வணிக முறையும், ஏனைய நாடுகளுக்கு இடையிலான தொடர்பு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. பசாம். A. L., (1963), ‘‘வியத்தகு இந்தியா’’ எனும் நூலில் ஹரப்பா நகர் அதன் பண்பாடு, அங்கு வாழ்ந்த மக்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வானமாமலை. நா, (1992) ‘‘தமிழர் வரலாறும் பண்பாடும்’’ எனும் சிந்து வெளிநாகரிக மக்களின் பொருளாதார நிலைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. Wheelar. R. E. M. (1946) ‘‘Arikanmedu and indo Roman trading – station on the East coast if India’’ எனும் நூலில் அரிக்கமேடு பற்றி ஆய்வு செய்த அறிஞர்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. Belgy. V. (1996), ‘‘The Ancient port of Arikanmedu’’எனும் நூலில் அரிக்கமேட்டிய கிடைத்த தொல்பொருட்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது வரலாற்றாய்வு, விவரண ஆய்வு, பண்புசார் ஆய்வு ஆகிய முறைகளைப் பின்பற்றி ஆய்வு செய்யப்படுகின்றது. நேர்காணல் மூலமும் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இது முதலாம்தர மூலமாய் பயன்படுத்தப்படும் ஆய்வின் துணை மூலகங்களாக தொல்லியல் தொடர்பாக வெளிவந்துள்ள நூல்கள், வெளிநாட்டு கடலாராய்ச்சி நிபுணர்களால் ஆய்வு செய்யப்பட்ட அழிந்த நகரங்களைப் பற்றிய நூல்கள் இணையத்தளத்தில் பெறப்பட்ட அதிகாரபூர்வமான கட்டுரைகள் மற்றும் நேர்காணல்கள்.

**ஆய்வு பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்**

பாரத நாட்டிலுள்ள அழிவடைந்த நகரங்களை சிந்துவெளி, அரிக்கமேடு ஆகிய நகரங்களை மட்டும் கொண்ட மட்டுப்படுத்திய ஆய்வாகும்.

***சிந்துவெளி நாகரிகம் (Indus Valley Civilization)***

இந்தியாவிற்கு குடி புகுந்த ஆரியர் முதன் முதலில் தங்கியிருந்த இடம் சிந்துவெளியே ஆகும். அவ்விடத்தில் தான் அவர்கள் ரிக் வேதம் பாடினர். அங்கு அவர்களுக்கு முன்பிருந்த பண்டைய மக்களோடு போர் செய்தனர். அந்த பகைவர் நல்ல நகரங்களை அமைத்துக் கொண்டு மாட மாளிகையில் சிறந்த செல்வப் பெருக்கத்தோடு வாழ்ந்து வந்தனர். அவர்கள் வேள்வி செய்யாதவர்கள்; உருவ வழிபாடு உடையவர்கள்; தட்டை முக்குடையவர்கள்; குள்ளர்கள்; மாயா ஜாலங்களில் வல்லவர்கள்; வாணிபத் திறமை உடையவர்கள் என்றெல்லாம் ரிக் வேதம் கூறுகின்றது. இக்குறிப்புகளால் ஆரியர்க்கு முற்பட்ட இந்திய மக்கள் சிந்துவெளியில் சிறந்த பட்டணங்களை அமைத்துக்கொண்டு வாழ்ந்தனர் என்னும் செய்தி புலனாகின்றது. இ∴து உண்மையே என்பதை உணர்த்தவே சிந்துவெளியில் உள்ள ஹரப்பாவும், மொஹஞ்சதாரோவும் அறிஞர் கண்களுக்குப் புலப்பட்டன.

1920ஆம் ஆண்டில் பஞ்சாப் மாநிலத்தில் மான்ட் கோமாரிக் கோட்டத்தில் ராவி – சட்லெஞ்யாறுகளுக்கு இடையில், லாஹீர் - முல்ட்டான் புகை வண்டிப் பாதையில் ‘‘ஹரப்பா’’ என்னும் ஆராய்ச்சிக்குரிய இடம் அகப்பட்டது. 1922 இல் சிந்து மண்டிலத்தில் உள்ள லாக்கானாக் கோட்டத்தில் 2100 செ. மீ உயரம் உடைய மண்மேடு ஒன்று கண்டறியப்பட்டது. அதனுள் புதைந்துள்ள நகரமோ ‘‘மொஹஞ்சதாரோ’’ என்பது, அம்மேட்டின் மேல் நெடுந்தூண் ஒன்று நின்றிருந்தது. இவ்விரண்டு இடங்களுக்கும் இடைப்பட்ட தொலைவு 640 கி.மீ ஆகும்.

இரண்டு இடங்களிலும் பலுசிஸ்தானத்திலும் கிடைத்த மட்பாண்டங்களை ஒப்பிட்டுப் பார்த்த ஆராய்ச்சி குழுவின் தலைவரான “சேர்.ஜோன்.மார்ஷல்” எனும் பேரறிஞர் பெருவியப்புக் கொண்டார். அப்பொருட்களை ஆராய்ச்சி செய்து தாம் அறிந்த செய்திகளை மேனாட்டுப் பத்திரிகை ஒன்றில் வெளியிட்டார் (இராசமாணிக்கனார், 1907:07). இந்திய அரசாங்கம் மகிழ்ந்து பண உதவி செய்தது. அதனால் ஹரப்பாவும், மொஹஞ்சதாரவும் சுறுசுறுப்போடு ஆராய்ச்சி செய்யப்பட்டன. இவ்விரண்டு இடங்களுக்கும் இடைப்பட்ட பல்வேறு இடங்களிலும் கீர்தர் மலைத்தொடரை அடுத்துள்ள இடங்களிலும் ஆராய்ச்சி வேலைகள் நடைபெற்றன.

**தெருக்களின் அமைப்பு:** நகரத்தின் தெருக்கள் கிழக்கு மேற்காகவும், தெற்கு வடக்காகவும் அமைந்துள்ளன. தென்கிழக்குப் பருவக்காற்று, வடகிழக்குப் பருவகாற்று என்பவற்றினைக் கணித்து நல்ல காற்றோட்டத்தை எதிர்பார்த்தே இத்தெருக்கள் அமைக்கப்பட்டு இருத்தல் வேண்டும். காற்றோட்டம் கருதி தெருக்களை அமைந்துள்ள முறை “உயரிய நாகரிக மக்கள்” எனப் போற்றப்பட்ட பாபிலோனியர் நகரங்களிலும் காணப்படவில்லை என்பதை கவனத்திற்குரியது.

பெரிய தெருக்களை சிறிய தெருக்கள் ஒரே நேராக வெட்டிச் சென்றுள்ளன. ஒரு பெருந்தெரு முக்கால் கல்நீளம் உடையது. இது நகர அண்மேட்டையே இரண்டாகப் பிரித்துள்ளது. இதன் அகலம் 990 செ.மீ. இது வண்டிப் போக்குவரத்திற்கே இவ்வளவு அகலமாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இதன் இரு புறங்களிலும் மக்கள் நடந்து செல்லும் நடைபாதையும் அமைந்துள்ளது. இத்தெருவில் சிந்து மண்ணில் வண்டிகள் மூன்று ஒரே வரிசையிற் போக வசதி உண்டென்று அறிஞர் கூறுகின்றனர். இதன் இடையிடையே சிறிய தெருக்கள் பல சந்திக்கின்றன. இந்நெடுந் தெருவின் மேற்குப் புறத்தில் குறிப்பிடத்தக்க பெரிய கட்டடங்கள் இருந்திருந்திருத்தல் வேண்டும். இதைவிடப் பெரிய தெரு ஒன்று சிறிதளவே தோண்டப்பட்டுள்ளது. 540 செ.மீ அகலமுடைய தெருக்கள் சில இருக்கின்றன. 390 செ.மீ அகலமுள்ள சில 270 செ.மீ அகலம் முதல் 360 செ.மீ அகலம் வரை உள்ள தெருக்கள் பல 120 செ.மீ அகலமுடைய சந்துக்கள் பல. இங்கு குறுந்தெருக்கள், நெடுந் தெருக்களையும் நடுத்தரமான தெருக்களையும் பல இடங்களில் இணைத்துள்ளன. பொதுவாக கூறின் எல்லாத் தெருக்களுக்கும் இணைப்பு இருக்கின்றது.

சிந்துவெளியில் பல நகரங்கள் புதையுண்டு உள்ளன. ஆராய்ச்சியாளர்களால் மொஹஞ்சதாரோ (Mohanjataro), ஹரப்பா (Harappa), லோஹீஞ்குசா – தாரோ (Lo Kanja taro), தகஞ்சா – தாரோ (Thakachataro), சக் பூர்பாணி சியாஸ் (Sak purbani siyas), அலி முராத் (Ali Murad), பாண்டி வாஹி (Pandi wahi), அம்ரி (Amri) என்பன கண்டுபிடிக்கப்பட்ட நகரங்களாகும். இவ்விடங்களைத் தவிர சிந்து சமவெளியில் இன்று நூற்றுக்கணக்கான மண்மேடுகள் அறிஞர்கள் ஆராய்ந்த வண்ணம் இருக்கின்றனர்.

**உணவுப்பொருட்கள்:** இந்நகர மக்களது உணவுப்பொருட்கள் பற்றி நோக்கின், அரசன், பேரதிகாரிகள், ஏவலாளர்கள், கைவினைஞர்கள், கலைஞர்கள், பொதுமக்கள் முதலியோர் இங்கு வாழ்ந்திருக்கின்றனர். இவர்கள் கோதுமை, பார்லி, ரவை, பேரீச்சம்பழம்,

பாற்பொருட்கள், மீன் மற்றும் இறைச்சி வகைகள் முதலியவற்றை உணவாக உட்கொண்டுள்ளார்கள். பல இடங்களில் சிதறிக்கிடக்கும் எலும்புத் துண்டுகளை காணும் போது இம்மக்கள் ஆடு, மாடு, பன்றி ஆமை, முதலை முதலியவற்றை உண்டார்களென்றும் கிடைத்துள்ள தூண்டில் முட்களைக் கொண்டு மீன் பிடிக்கும் வழக்கமுடையவர்கள் என்பதனையும் அறியலாம். எஞ்சிய இறைச்சியை பதப்படுத்தி தாழிகளில் அடைத்து வைத்திருந்தவர்கள் என்பதற்குப் பல தாழிகளில் வெள்ளாடு, செம்மறியாடு ஆகியவற்றின் எலும்புகள் கிடைப்பதைக் கொண்டு அறியலாம்.

**உடைகள்:** சிந்துவெளியில் கிடைத்துள்ள ஓவியங்கள், பதுமைகள், முத்திரைகள் முதலியவற்றை ஆராய்ந்தால் அம்மக்கள் எத்தகைய உடைகளை அணிந்துள்ளார்களென ஊகிக்கலாம். இங்கு கண்டெடுக்கப்பட்ட ஆண், பெண் பதுமைகளை நோக்கினால் இருபாலருமே முழு ஆடைகளை அணிந்தார் என்பது தெளிவாகிறது. பூவேலைப்பாடு மிகுந்த பருத்தியாடைகளையும், முரட்டு ஆடைகளையும், நாராலான ஆடைகளையும் மக்கள் அணிந்தனர். மொஹஞ்சதாரோவில் கிடைத்துள்ள பொத்தான்களைக் கொண்டு சட்டைகளையும், கழுத்து பட்டைகளையும் அணிந்தார்கள் எனத் தெரிய வருகிறது.

**தொழில்கள்:** சிந்து வெளி மக்கள் சிறந்த கொத்தனார்களையும், வேட்கோவர்களையும், மரத்தச்சர்களையும், கன்னார்களையும், பொற்கொல்லர்களையும், பளிங்கு, சங்கு முதலியவற்றை கொண்டு பொருள்களைச் செய்யும் கைவினைஞர்களையும், மீன் பிடித்தல், பறவை பிடித்தல், ஆடு, மாடு மேய்த்தல், வண்டியோட்டுதல், மழித்தல், புறத்தூய்மை செய்தல், காவல் தொழில் செய்தல் ஆகியவற்றில் சிறந்தவர்களாகவும் காணப்பட்டனர். வாழ்க்கைக்கு இன்றியமையாத பயிர்த்தொழில், நெசவுத்தொழில் ஆகியவற்றிலும், கப்பல் கட்டுதல், வணிகம் செய்தல் ஆகியவற்றிலும் ஓவியம், சிற்பம், இசை, நடனம், கணிதம், மருத்துவம், இலக்கியம், வனநூல் முதலிய அறிவியல்களிலும் சிறந்து விளங்கினார்கள். இங்கு காணப்படும் கட்டங்களைக் கொண்டு அவர்களின் கொத்து வேலைத்திறனையும், மட்பாண்டங்கள், மண்ணப்பங்கள், தாழிகள், தாம்பளங்கள் முதலியவற்றிலிருந்து அணிமணிகள் வரை களிமண்ணால் செய்யப்பட்டவை என்பதை நோக்கும் போது அவர்களின் மட்பாண்ட தொழிலின் மிகச்சிறந்த நுண்ணறிவையும் அறியலாம். கற்சட்டிகள், சிறுகல் ஏனங்கள், அம்மிகள், குழவிகள், ஆட்டுக் கற்கள், ஏந்திரங்கள், லிங்கங்கள் போன்ற அரிய பொருட்களை கற்களால் செய்து இருக்கின்றனர். ஹரப்பாவில் பல வடிவில் கிடைத்துள்ள லிங்கங்களும், மாந்தர் சிலைகளும் கல் தொழிலில் பெற்றிருந்த திறமையும், சமயத் தத்துவத்தையும் நமக்கு விளக்குகின்றன.

**வாணிபம்:** சிந்துவெளி மக்கள் உள்நாட்டுடனும், வெளிநாட்டுடனும் வாணிபம் மேற்கொண்டிருந்தார்கள் என்பதற்கு அங்கு கிடைத்துள்ள பொருட்களே சான்றுகளாய் உள்ளன. செம்பு, வெண்கலம் ஆகிய கனிப்பொருள்களை இராசபுதனம், மைய மாநிலம் முதலிய இடங்களிலிருந்தும், மான் கொம்புகளைக் காமீரகத்திலிருந்தும், வெள்ளி கலந்த ஈயத்தை ஆப்கானிஸ்தானிலிருந்தும், உயர்தரப்பச்சை கல்லை வடபர்மா அல்லது திபேத்திலிருந்தும், பொன்னை கோலார், அனந்தப்பூரிலிருந்தும், அமேசான் என்னும் பச்சைக்

கல்லை தமிழகத்திலுள்ள நீலகிரியிலிருந்தும், சங்கு, முத்து முதலியவற்றைப் பாண்டி நாட்டிலிருந்தும் வணிகப் பொருட்களாக பெற்றனர்.

இங்கு கிடைத்துள்ள முத்திரைகள், எழுத்துக்குறிகள், ஓவியங்கள், மட்பாண்டங்கள் பல்வேறு கருவிகள் ஆகியவை சுமேரியா, மெசப்பதேமியா, எகிப்து முதலிய நாடுகளில் காணப்படும் பண்டைய நாகரிகச் சின்னங்களோடு ஒப்புவமை உடையனவாயிருக்கின்றன. துவாரமுள்ள மட்பாண்டங்கள் சிந்துவில் கிடைத்துள்ளன. அவை ஈராக்கில் அதிகமாக காணப்படுகின்றன. உயர்தரப்பச்சை கற்கைக் கொண்டு செய்யப்பட்ட மணிகள் மொஹஞ்சதாரோவிலும், சுமேரியாவில் உர் என்னும் நகரிலும் காணப்படுகின்றன. மற்றும் சுமேரியாவில் அதிகமாக கிடைக்கின்ற புதுவகை கோடரியொன்றும் மொஹஞ்சதாரோவில் கிடைத்துள்ளது.

சிந்துவெளி மக்கள் யானைத் தந்தத்தையும், தந்தத்திலான பொருட்களையும், சதுரங்க விளையாட்டுக்கருவிகளையும் சுமேரியாவிற்கு ஏற்றுமதி செய்திருக்கிறார்கள். மற்றும் தட்டுக்கள், தண்டுகள் முதலிய பொருள்கள் சுமேரியாவிலும் சிந்துவிலும் ஒரே மாதிரியாகக் கிடைத்துள்ளன. சிந்துவில் கிடைத்த கோடரியை போல் காகசஸ் மலையில் ஒரு வெண்கலக் கோடாரி கூப்பன் ஆற்றில் கிடைத்துள்ளது. எகிப்தியரோடும் வணிகதொடர்பினை இவர்கள் பேணியிருந்தனர். அதாவது, சிந்துவிலும், எகிப்திலும் கிடைத்துள்ள கழுத்து மாலைகள், வட்டமாகவே அமைந்துள்ளன. எகிப்திலுள்ள பிரமிடுக் கோபுரச் சவக்குழிகளில் பெண்ணுருவங்கள் செதுக்கப்பட்ட மணிகள் கிடைத்துள்ளதைப் போலவே சிந்துவிலும், சுமேரியாவிலும் கிடைத்துள்ளன. பல முகப்புக்களைக் கொண்ட உயர்தரமணிகள் இந்தியாவிற்கே உரியவையாகும்.

**சமயம்:** சிந்துவெளி மக்களின் சமயமும், அவர்கள் வழிபட்ட கடவுளும் இன்னவைதானென்னு யாராலும் குறிப்பிட்டுக் கூறமுடியவில்லை. அங்கு கிடைத்துள்ள பலதரப்பட்ட முத்திரைகளையும் படிமங்களையும் கொண்டு பலரும் பலவாறாக கூறுகின்றனர். சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட ஆயிரக்கணக்கான முத்திரைகளில் பெரும்பாலனவை பெண்ணுருவங்களைத் தாங்கியுள்ளன. பண்டைய மக்கள் தரையை பெண்ணாகக் கொண்டு வணங்கி வந்தார்களென்றும், இதற்கான ஆதாரங்கள் பலுஸ்தானம் முதல் கிரேக்கம் வரையில் எல்லா இடங்களிலும் கிடைக்கின்றனவென்றும் தி மார்கள் என்பார் கூறுவதிலிருந்து சிந்துவெளி மக்களும் “தரைப்பெண் தெய்வத்தை” வழிப்பட்டார்கள் என கருத முடிகிறது. (பிள்ளை. 2006:54)

இங்கு கிடைத்துள்ள சிறிய, பெரிய லிங்கங்களைக் கொண்டும், இடக்காலைத் தூக்கியாடும் ஓர் உருவத்தைக் கொண்டும், ஒரு முத்திரையில் காணப்படும் மூன்று முகங்களையுடைய மாந்தர் உருவத்தைக் கொண்டும், எருதின் உருவங்களைக் கொண்டும், சிந்துவெளி மக்கள் தமிழரின் சமயமான சைவசமயத்தைப் பின்பற்றினார்களென்று சிலர் கருதுகின்றனர். மூன்று முகங்களைக் கொண்ட உருவம் யோகத்தில் அமர்ந்திருப்பது போலக் காணப்படுகின்றது. மார்பில் முக்கோண வடிவிலான பதக்கங்கள், கையில் கடகங்கள், இடுப்பில் இரட்டைப்பட்டையிலான கச்சை, தலை மீது வளைந்த எருமை கொம்புகள், அவற்றில் நடுவில் இலைக்கொத்துக்கள் முதலியவை காணப்படுகின்றன. இவ்வுருவத்தின்

வலப்புறத்தில் யானையும் புலியும், இடப்புறத்தில் எருதும் காண்டாமிருகமும் நிற்கின்றன. அடிப்புறத்தில் இரு மான்கள் இருக்கின்றன. இவற்றை கூர்ந்து நோக்கிய அறிஞர்கள் இது சிவபெருமானின் அக்காலத் திருவுருவம் என்கின்றனர். (பிள்ளை, 2006:54)

**கட்டட அமைப்பு முறை:** மொஹஞ்சொ – தரோ மக்கள் அகன்ற காற்றோட்டம் மிக்க தெருக்களை அமைத்து, நகர அமைப்பில் தங்களுக்கிருந்த பண்பட்ட அறிவை உலகத்திற்கு உணர்த்தியது போன்றே, கட்டட அமைப்பு முறையிலும் தங்களுக்கு இருந்த பண்பட்ட அறிவைத் தங்கள் கட்டடங்களின் வாயிலாக விளக்கியுள்ளனர். அப்பெருமக்கள், தங்கள் கட்டடங்களிற்குச் சுட்ட செங்கற்களையும் உலர்ந்த செங்கற்களையும் பயன்படுத்தி உள்ளனர். மழை, வெயில், வெள்ளம், புயற்காற்று அவற்றுக்கு எளிதில் ஆட்டுபடுபவை கட்டடங்களின் புறச்சுவர்களே ஆகும். ஆதலின் அவ்வறிஞர்கள், அப்புறச் சுவர்களை உலர்ந்த சூளையிடப்படாத செங்கற்களால் அமைத்துள்ளனர். அவர்கள் இக்காலத்திய சிமென்டை அறியார். கான்க்ரீட் என்பதையும் அறியார். ஆதலின், அக்கால முறைக்கு ஏற்றபடி களிமண் சாந்தையே சுவர்களின் மேற்பூச்சாக பயன்படுத்தினர். சில இல்லச் சுவர்களைத் தவிடுகலந்த களிமண் சாந்தால் மெழுகியுள்ளனர். சுவர், தரை, கூரை இம்மூன்றும் களிமண் சாந்தால் ஆனவை. அவர்கள் மர உத்திரங்களைப் போட்டு அவற்றின் மீது நாணற்பாய் பரப்பி அப்பாய்கள் மீது களிமண் சாந்தைக் கனமாய் பூசிக் கூரை அமைத்து வாழ்ந்தனர்.

உத்திரங்களை நுழைப்பதற்கென்றே சுவர்களின் தலைப்புறங்களில் சதுர வடிவில் சிறு துளைகளை விட்டிருந்தனர். கட்டடக் கலைஞர்கள் பழமை மிக்க சுவர்களையும் தரையையும் மேற்கூரையையும் ஒழுங்குபடுத்த மட்டப் பலகையைப் பயன்படுத்தினர். அப்பலகைகள் பல மொஹெஞ்சா – தாரோவில் கிடைத்துள்ளன.

இங்கு அணிஅணியான கட்டடங்கள், பருத்தசுவர்கள், நெடுஞ்சுவர்கள், பலவகைக் கட்டடங்கள், எளிய சுவர் இல்லங்கள், பெரிய முற்றமுடைய இல்லங்கள், செல்வர் தம்மாடமாளிகைகள், நீராடும் அறை, சமையல் அறைகள், அல்காடி அல்லது அம்பலம், வேட்கோவர் விடுதிகள், தூண்கள் என்பன கட்டடக்கலையாக சிறப்பை எடுத்துக்காட்டுக்கின்றன.

இங்கு கிடைத்த தொல்லியல் சின்னங்களை நோக்கின் வழிபாட்டுச் சின்னங்கள், தாழிகள், பறவை முகமனித உருவங்கள், மயில்களின் முத்திரை, இடுதல் (உடல்கள் தனித்தனியே இடம் விட்டுப் புதைத்தல்), செங்கற்கள் (கட்டடங்கள்), ஓவியம் கொண்ட மட்பாண்டங்கள், நாகராணி முத்திரை, மனித சிலைகள், பொம்மைகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சிந்துவெளி நாகரிகத்தின் தற்கால நிலையை நோக்கி, ஊரின் பெயரை வைத்து மனிதர்களின் புலம்பெயர்வை கண்டுபிடிக்கும் ஆய்வுகள் பிரபலமாக உள்ளது. இவ்வாறானதொரு ஆய்வின் மூலமாக ஆய்வாளர் திரு. பாலகிருஸ்ணன் அவர்கள் சிந்துவெளி நாகரிகத்திற்கும் தமிழகத்திற்கும் தொடர்பு உள்ளதென கண்டுபிடித்துள்ளார். இவரது ஆராய்ச்சியின் படி சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள துறைமுகங்கள், தலைநகரங்கள், ஊரின் பெயர்கள் சிந்துவெளி முழுவதும் பரவியுள்ளது என்கிறார்.

ஊதாரணமாக பாகிஸ்தானில் கொற்கை, வஞ்சி, மதுரை, உறை, கூடல்கட், கோளி, பூம்புகார் எனும் ஊர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேலும் இவர் சிந்துவெளி தொடக்கம் தமிழகம் வரை அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பானைகளை வைத்து ‘‘பானை வழித்தரம்’’ எனும் முறையைக் கையாண்டு அங்கு வாழ்ந்தோர் வாழ்க்கையினையும் இவர் நிரூபித்துள்ளார். இவ்வாறு சிந்துவெளி நாகரிகம் பற்றி மேலும் ஆய்வுகள் இடம்பெற்றால் தமிழருடைய வரலாறு, பண்பாடுகள் என்பவை வெளிப்படும் சிந்துவெளி நகரத்தில் இதுவரை செய்த ஆய்வுகளை அடிப்படையாக கொண்டு அதன் கட்டட நிர்மாணம் போன்றவற்றை நவீனகால தொழிநுட்ப அறிவு கொண்டு முப்பரிமாண வடிவில் கற்பவையாக வெளிக்கொணரும் பட்சத்தில் ஒரு நூலினை வாசித்து அதனைத் தெரிந்துக் கொள்வதைக் காட்டிலும் ஒரு வரைபடமாக, காணொளியாக காணும் பொழுது எம்மவர்க்கே எமது நாகரிகம் இத்தகைய தொழிநுட்ப வளர்ச்சியுடன் உயர்தரத்தில் இருந்துள்ளது தெரியவரும் என்பது இவ்வாய்வை மேற்கொள்ளும் எனது கருத்தாக திகழ்கின்றது.

**சிந்துவெளி நாகரிகம் அழிந்தமைக்கான காரணங்கள்:** சிந்துவெளி நாகரிகம் சுமார் 900 ஆண்டுகளாக நிலவிவந்த வறட்சியின் காரணமாகவே அழிந்ததாக ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. காரக்பூர் ஐஜடி – யில் உள்ள அறிவியல் ஆய்வாளர்கள், இயற்பியல் மற்றும் புவியியல் சார்ந்த படிப்புக்காக கடந்த 5000 ஆண்டுகளின் மழை பொழிவு குறித்து ஜம்மு – கா'மீர், லாடாக் பகுதியில் உள்ள நதிக்கரையில் ஆய்வு மேற்கொண்டார். அந்த ஆய்வில் 4350 ஆண்டுகளிற்கு முன் சிந்துவெளி நாகரிக காலத்தில் அப்பகுதியில் சுமார் 900 ஆண்டுகளாக வறட்சிக்கு சிந்து நதியின் நீரோட்டம் குறைந்ததே காரணம் எனத் தெரிவித்துள்ளனர். மேலும், அப்பகுதிகளில் மிதமான மழை மட்டுமே பெய்துள்ளதாகவும் குறிப்பிட்டு உள்ளார்.

> கி. மு 1450 முதல் கி. மு 2350 ஆண்டு வரை சிந்து சமவெளி பகுதிகளில் மிகப்பெரிய பருவநிலை மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. அதன் பிறகு உருவான வறட்சியின் காரணமாக அப்பகுதி மக்கள் தண்ணீர் மற்றும் பசுமையை தேடி வேறு இடங்களிற்குச் செல்லும் கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர். இடம்பெயர்ந்த மக்கள், படிப்படியாக கங்கை – யமுனா பள்ளத்தாக்கு கிழக்கு மற்றும் மத்திய உத்திரப்பிரதேசம் நோக்கி நகர்ந்து உள்ளனர். கிழக்கில் பீகார் மற்றும் வங்காளம் ஆகிய பகுதிகளிலும் குடிபெயர்ந்து உள்ளனர்.

என காரக்பூர் ஐஜடி – யின் பேராசிரியரும், இந்த ஆய்வின் தலைமை ஆராய்ச்சியாளருமான அனிதா குப்தா தெரிவித்துள்ளார். சிந்துவெளி அழிவு குறித்து முன்னதான நடைபெற்ற ஆராய்ச்சியில் அங்கு 200 ஆண்டுகளாக இருந்த வரட்சியே அழிவின் காரணம் எனக் கூறப்பட்டிருந்தது. தற்போது ஐஜடி தெரிவித்துள்ள இந்த புதிய ஆய்வு சுமார் 900 ஆண்டுகளாக வறட்சி நிலவியது என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

**அரிக்கமேடு**

பண்டைத் தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையில் பல துறைமுகங்கள் இருந்துள்ளதையும் அத்துறைமுக நகரங்களிலிருந்து கடல் வழி வணிகம் பெரிதும் நடைபெற்றதையும் சங்க இலக்கியங்களும் அயல் நாட்டார் குறிப்புக்களும் தெரிவிக்கின்றன. குறிப்பாகப் பெரிப்ளஸ் ஆப் எரிதரியன்ஸீர் என்ற கிரேக்கப் பயண நூலில் “பொதுகே” என்ற கடற்கரைத் துறைமுகத்தைப் பற்றியக் குறிப்பு காணப்படுகிறது. தாலமி எனும் கடல்வழிப் பயணி தமது குறிப்பில் “ஈபேரிசு” (காவேரிப்பூம்பட்டினம்) துறைமுகத்திற்கு வடக்கே பொதுகே அமைந்திருந்தது என்பதையும் குறித்துள்ளார். இத்துறைமுகப்பட்டினம் யவனர் வணிகத்துடன் தொடர்புடையது என்றும் இக்குறிப்புக்கள் குறிப்பிடுகின்றன. இக்குறிப்புக்களில் குறிக்கப்படும் பொதுகே என்னும் முறைமுக நகரம் இன்றைய அரிக்கமேடு என்னும் பகுதியே எனக் கண்டறியப்பட்டு அகழாய்வுகள் நடைபெற்றன.

**அமைவிடம்:** அரிக்கமேடு என்று தற்பொழுது வழங்கப்படும் பகுதி அருகன்மேடு என்பதின் திரிபாகும். புதுச்சேரியிலிருந்து கடலூர் செல்லும் சாலையில் புதுச்சேரிக்கு தெற்கே 4 கி.மீ தொலைவில் அரியாங்குப்பம் ஆற்றின் வலக்கரையில் அரிக்கமேடு அமைந்துள்ளது. அகநானூற்றில் “வீரை” என்ற கடற்கரைப்பட்டினம் குறித்துக் குறிப்புக்கள் உள்ளன. இது வேலூர் சிற்றரசர்களின் துறைமுக நகரமாக விளங்கியது. அரிக்கமேட்டிற்குச் சற்றுக் தொலைவில் வீராம்பட்டினம் என்னும் ஊரும் உள்ளது. சங்க இலக்கியங்கள் சுட்டும் வீரையே தற்பொழுது வீராம்பட்டினம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இப்பட்டினத்தின் ஒரு பகுதியே அரிக்கமேடு எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அரிக்கமேட்டினை ஆராய்சி செய்த ஆராய்ச்சியாளர்களின் வரிசையில் வி. ஜென்டில், ஜீவ்யோ துப்ராயில், பௌசெகக்ஸ், மார்டிமர் வீலர், விமலா பெக்ளி ஆகியோர் உள்ளடங்குவர்.

**வணிகம்:** அக்காலத்தில் அரிக்கமேடு சிறந்த வணிகத்தலமாக விளங்கியது. அரிக்கமேட்டில் கிடைத்த மணிகள், மட்பாண்ட ஓடுகள் ஆகியவற்றை கொண்டு அவ்விடம் 2000 ஆண்டுகாலப் பழமையுடையது எனக் கருதுகின்றனர். அரிக்கமேட்டில் கிரேக்க ரோமானியர்கள் வந்து தங்கி ஏற்றுமதி, இறக்குமதி செய்தனர். துணி நெய்தல், மட்பாண்டம் செய்தல், மணிவகைகள் செய்தல், சங்கு வளையல் செய்தல், உருக்கு மணி செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டனர். அங்கு பெரிய நகரமே புதையுண்டு கிடக்கிறது. இவற்றிற்கு அடையாளமாகப் பல சாயத்தொட்டிகள், உறை கிணறுகள் அங்கு கிடைத்து வருகின்றன. அரிக்கமேட்டில் உருக்குமணி செய்தல் நடைபெற்றுள்ளது. உருக்குந் தன்மையுடைய மணற்பொருட்களைச் சூளையிலிட்டு உருகச்செய்து வண்ணமேற்றி நீண்ட இழைகளாகச் செய்து, அதனுள்ளே காற்றைச் செலுத்தி ஊது குழலாக்கிச் சூடு குறைந்த பின்னர் சிறுசிறு துண்டுகளாக வெட்டி மணிகள் செய்து மெருகூட்டி மணிமாலையாகக் கோர்த்துள்ளனர். கருப்பு, நீலம், ஊதா, மஞ்சள், சிவப்பு, பச்சை முதலிய நிறங்களில்ல் மணிகள் செய்யப்பட்டுள்ளன. அங்கு அகழ்வராய்ச்சி செய்தபோது மணி செய்த பொருட்களும் உருக்குக் கிண்ணங்களும் கிடைத்துள்ளன.

ஒளியூடுருவக் கூடிய கண்ணாடிக் கற்களைக் கொண்டு மணிகள் (Semi precious stones), செய்தனர். நீலக்கல், பச்சைக்கல், சிவப்புக்கல், கோமேதகம் முதலிய கற்களைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிப்பட்டை தீட்டித் துளையிட்டு, மெருகேற்றி மணியாக்கினார். கடினமான கற்களில் மெல்லிய துளையிட்டுள்ளதைக் காணும் போது அவர்களின் கைவினைத்திறன் தெளிவாகப் புரிகிறது.

அரிக்கமேடு கட்டடக்கலை பற்றி நோக்கின், இந்த இடம் அழகான அமைதியான இடம் என்பது மட்டுமின்றி அங்கு வெளிநாட்டு வாணிபம் சிறப்புற்று இருந்தது. இந்த இடம் எவ்வளவு வனத்துடனும் வனப்புடனும் விளங்கியது என்பதை அங்குள்ள "திரு. பிஞ்ஞா தெ பெகெய்ன்" (MGR PIGNAY DE BEHAINE) என்ற கிறிஸ்தவ மதகுருவின் அழகிய வீடு நமக்கு நன்கு புலப்படுத்துகின்றது. இக்கட்டடம் செங்கற்களால் ஆனது.

அரிக்கமேடு தொல்லியல் சின்னங்களாக பிராமி எழுத்துக்கள் உள்ள பானை ஒடுகள், உறைகிணறுகள், தங்க செம்பு காசுகள், மோதிரங்கள், கண்ணாடி மணிகள், சங்கு வளையல்கள், பறவையோடு நிற்கும் பெண் சிலை, கூர்முனை ஜாடிகள் என்பன அமைந்துள்ளன.

இங்குள்ள தொல்லியல் சின்னங்கள் இந்நகரங்களில் வாழ்ந்தோரின் சமூக, கலாசார, சமய விடயங்களை உள்ளடக்கியதாக உள்ளது. தற்காலத்தில் "எரித்திரேன் கட்டடம்" மக்களின் பார்வைக்கு விடப்பட்ட இடமாக உள்ளது. இந்நகரம் தமிழர்களுக்கு மட்டுமின்றி ரோமானியர்களுக்கும் நெருக்கமான ஒரு நகரமாக உள்ளது. காரணம் அவர்களுக்கு வணிகம் செய்த இடம் ஆகையால் தற்காலத்தில் ரோமானிய ஆராய்ச்சியாளர்களும் தங்களது ஆய்வுகளை இங்கே மேற்கொண்டு வருகின்றனர். 1734 இல் லசாண்டே என்பவர் அரிக்கமேடு ஒரு தொல்லியல் பிரதேசம் என்பதனை கண்டுபிடித்தார். அவரிற்குப் பின்பு இன்று வரை மூன்று அகழாய்வுகள் இடம்பெற்று உள்ளது.

அரிக்கமேடு இயற்கையாகவே ஒரு மேடான பகுதி. கடலில் ஆறு கலக்கும் இடம். செஞ்சியில் இருந்துவரும் ஆறு வங்களாவிரிகுடாவினை கலங்கும் இடமாகும். கடலில் ஒரு வளைவுடனேயே சென்று கலப்பதற்கு இவ்மேட்டுப்பகுதி உதவியுள்ளது. இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டாலும் வணிகர்கள் மற்றும் மீனவர்களிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. இது ஒரு அரணாக இருந்து மக்களை பாதுகாத்துள்ளது. இதனால் தான் பல நாடுகளிற்கு இவ்விடத்தில் இருந்து வாணிபம் மேற்கொள்ளப்பட்டது.

இது உண்மைதானா என்பதனை நிரூபிக்க புவியியல் ஆராய்ச்சியாளர்கள் இந்திய வரைபடத்தை தொலை உணர்வு தொழில்நுட்பங்கள், GPS, GIS, Google Earth ஆகிய தொழிநுட்பங்களின் துணையுடன் புவிமேற்பரப்பில் ஏற்பட்டுவரும் விடயங்களை அவதானித்து இந்நகரத்தில் வாழ்ந்த மக்கள் கூறியது உண்மை என்பதனை நிரூபித்து உள்ளனர். இவை யாவும் அரிக்கமேடு நகரத்தின் சிறப்பையே எடுத்துக்காட்டுக்கின்றது என்பதனை அறிய முடிகின்றது.

**அரிக்கமேடு அழிந்தமைக்கான காரணங்கள்:** அரிக்கமேடு நகரம் எவ்வாறு அழிந்தது என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படாத ஒரு புதிராகவே காணப்படுகின்றது. இவற்றினை ஆராய்வதற்காகவே தற்போது திரு. ஒரிசாபாலு தலைமையிலான குழு அரிக்கமேடு, குமரிக்கண்டம், பூம்புகார் ஆகிய இடங்கள் அதாவது 36 இடங்களில் ஆய்வு செய்ய 20 பேரிற்கு நீரடி குளியல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இதன் முதற்கட்ட செயற்பாடாகவே இது அமைந்துள்ளது.

அரிக்கமேடு சிறந்த ஒரு வணிகநகரமாகக் காணப்பட்டது. இந்நகரம் அழிந்தமைக்கு முக்கிய காரணம், வணிகம் வீழ்ச்சியடைந்தது ஆகும். இதனால் பண்பாட்டு மாற்றங்கள் ஏற்பட்டது. குறிப்பிட்ட ஒரு மக்கட் குழுவினருக்கு உயரிய பண்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுவதைப் பண்பாட்டு மாற்றம் எனக் கூறுவர். வணிகம் குன்றியதால் இவர்கள் வேறுவேறு தொழில்களைச்செய்ய நேர்ந்தது. இக்காரணத்தினால் இந்நகரைவிட்டுப் புலம்பெயர்ந்துள்ளனர். இது ஓர் துறைமுக நகரம் என்பதனால் கடலாய்வுகள் செய்வதன் மூலமும் இதன் உண்மையான வரலாறு வெளிப்படும்.

**முடிவுரை**

இவ்விரு நகரங்களினதும் சமகால நிலைமையை பார்க்கும் போது அடுத்தக்கட்ட நகர்வுகளுக்கான அடித்தளம் இடப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இலக்கியங்களில் கூறப்பட்ட விடயங்களையும், இடங்களையும் நாடிச்சென்று அங்கு அகழாய்வுகள் மேற்கொள்ளும் நடவடிக்கை சாலச்சிறந்தது. இலக்கியங்களில் கூறப்படுபவை உண்மையா என கேள்வி எழுப்புவோருக்கு இலக்கியமும் உண்மை, இலக்கியத்தில் கூறப்பட்டதும் உண்மை என்பதனை நிரூபிக்க முடியும்.

இவ்விரு நகரங்களையும் கல்வெட்டுத்தொகுப்பு, முதுமக்கள் தாழி, கடலுக்குள் இழந்த நிலப்பகுதி, மீன்கள் நிறைந்த பகுதி, மனிதர்கள் வாழ்ந்து மறைந்து போன இடம் போன்றவற்றையும் ஆய்விற்கு உட்படுத்தினால் மட்டுமெ உண்மையான தகவல்களை பெறமுடியும் என்பதே எனது கருத்தாக முன்மொழிகின்றறேன். இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களே எம்மை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. மேலும் ஆய்வுகள் மேற்கொள்ளும் போது உலக வரலாற்றில் தமிழர்களின் மதிப்பு உயரும்.

காலத்தின் தேவையினையும் இன்றைய காலகட்டத்தில் ஆரம்பம் தொடக்கம் இன்றுவரை மனித முக்கியத்துவத்தினையும் கருத்திற்கொண்டு வாழ்வின் பண்பாடுகள், கலாசாரங்கள், பாரம்பரியங்கள் எவ்வகையில் மக்களோடு ஒன்றித்து காணப்படுகின்றன என்பதற்கு நம்பகரமானதோர் அம்சமாக காணப்படுவது இந்துசமயம்சார் தொல்லியல் சின்னங்களும் அழிந்த நகரங்களுமாகும். ஒவ்வொரு நகரமும் தனது பண்பாடுகள், வரலாற்று பாரம்பரியங்கள் மற்றும் கலாசார விழுமியங்களை நுணுக்கமாகவும் ஆழமாகவும் பதிவு செய்ய வேண்டியதன் அவசியத்தை கொண்டுள்ளது. இன்று எம் மரபுகள், பாரம்பரியங்கள் சிதைக்கப்படும் ஒரு காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் உண்மையான உறுதியான எமக்கான வரலாற்றை தெரிந்து கொள்ள அதற்கான களத்தை உருவாக்க வேண்டியது அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது.

அழிவடைந்து செல்லும் இந்துசமயம்சார் தொல்லியல் சின்னங்களின் மூலம் இவ்வழிவந்த நகரங்களின் வரலாற்றுத் தொன்மையினை வெளிக்கொணர்தல், இவ்வழிவந்த நகரங்களின் வரலாற்றுத் தொன்மையானது தற்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் வெளிவரப்படாத மறைக்கப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. எனவே இவ்மரபுரிமை சின்னங்கள் பேணி எமது பண்பாடு, கலாசாரம், வாழ்க்கை முறை என்பவற்றை சமூகத்துக்கு, எடுத்துக் காட்டுதல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே இவ் ஆய்வானது அமைந்துள்ளது.

அந்தவகையில் இந்து சமயம்சார் தொல்லியல் சின்னங்களும் அழிந்த நகரங்களும் என்ற அடிப்படையில் சிந்துவெளி நாகரிகம், அரிக்கமேடு ஆகிய இரு நகரங்கள் பற்றியும் இந்நகரங்கள் இந்துக்களாகிய எமக்கு எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதும், அங்கு கிடைத்த தொல்லியல் சின்னங்கள் எமது மூதாதையர்கள் எத்தகைய பண்பாடுகள் நிறைந்த நாகரிக வாழ்க்கையை வாழ்ந்தனர் என்பதனையும், மேற்கத்தையர்கள் காடுகளில் மிருகங்களின் தோலைப் போர்த்திக்கொண்டு காடுகளில் அலைந்து திரிந்த காலத்தில் எத்தகைய நாகரிக உச்சியிலான வாழ்க்கை முறையினை வாழ்ந்துள்ளனர் என்பதனை இவ் ஆய்வினூடாக அறியமுடிகின்றது.

நாகரிகங்களின் நகர அமைப்பு, ஆட்சிமுறை, உணவுப்பழக்கங்கள், உடை, சமயநிலை, வணிகம் கட்டங்களை அமைத்து இன்று நாம் வாழும் வாழ்க்கையினை விட சுகாதாரமான வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர் என்பதும் தெரியவருகின்றது. நகர ஆட்சிமுறை பற்றி நோக்கும் போது ஒரு நகரம் நன்முறையில் அமைந்துள்ளது எனில் இது பரந்த இடத்தில் அமைந்திருத்தல் வேண்டும். நீண்டு அகன்ற தெருக்களை பெற்றிருத்தல் வேண்டும். மேலும் இந்நகரங்களில் வாழ்ந்தோரின் உணவுப் பழக்கவழக்கங்கள் இயற்கையோடு இணைந்தவை. இவற்றில் எந்த செயற்கை இரசாயன பொருள்களும் கலக்கப்படாத உயர்சக்தி உடைய பார்லி, பேரீச்சம்பழம், பாற்பொருட்கள், மீன், இறைச்சி போன்றவற்றை உண்டு ஆரோக்கியமாக வாழ்ந்த சமூகமாக இவ்விரு நகரங்களிலும் வாழ்ந்தோரைக் குறிப்பிடமுடிகிறது.

இந்நகரங்களில் வாழ்ந்தோரின் சமயநிலையை மற்றும் பார்க்கும்போது இன்று நாம் வழிபடும் உருவ வழிபாட்டிற்கு வகுத்தோராய் இவ்விரு நகரங்களிலும் வாழ்ந்தோரைக் குறிப்பிடமுடியும். காரணம் இங்கு முக்கட் செல்வன் முத்திரைகள், மரதேவதை வழிபாட்டு முத்திரைகள், நாகவழிபாட்டு முத்திரைகள் என்பன கிடைக்கப்பெற்றுள்ளன. தொழிநுட்ப வளர்ச்சி இல்லாத காலத்தில் கலைநயம் மிக்க சிலைகளை வைத்து வழிபட்டமை வியப்புக்குரிய விடயமாகவே உள்ளது.

இவ்விரு நகரங்களிலும் வசித்தோரின் வாழ்க்கைத்தரத்தை நோக்கும் போது உள்நாட்டு வணிகமுறையிலும், வெளிநாட்டு வணிகமுறையிலும் சிறந்து விளங்கியுள்ளனர். அரிக்கமேடு தலைசிறந்த வர்த்தக துறைமுகப்பட்டினமாகத் திகழ்ந்து உள்ளமைக்கு அங்கு கிடைத்த தொல்லியல் சின்னங்களே சான்றாகும். இவர்களது கட்டடக்கலை நிர்மாணம் இன்று வாழும் மாந்தரின் வாழ்க்கையைக் காட்டிலும் சுதந்திரமாகவும், சுகாதாரமாகவும்

வாழ்ந்துள்ளனர் என்பதனைக் காட்டுகின்றது. காரணம் சுட்ட செங்கற்களைக் கொண்டு வீடுகள், மாடமாளிகைகள், அங்காடிகள் கட்டுவதனை கண்டு நாம் வியப்படைகின்றோம்.

இவர்களது கட்டுமான நுட்பத்தின் பருத்த சுவர்கள், நெடுஞ்சுவர்கள், எளியவர் இல்லம், சமையல் அறைகள், தூண்கள், கோயிற்கட்டட அமைப்பு, தெருக்கள், மன்றங்கள், பண்டகசாலைகள், துறைமுகப்பட்டின கட்டுமானம் போன்றவை உறுதியாகவும் பிற்காலத்தில் வந்த காவல்களிற்கு அடிப்படையானதாகவும் அமைந்தது என்றே கூறலாம். இன்று நாம் கட்டும் கட்டடங்கள் இவற்றின் சாயலாகவே அமைந்துள்ளது. 21ம் நூற்றாண்டில் நாம் வாழும் கட்டட வீடமைப்புத் திட்டங்களையே இந்நகரங்களில் வாழ்ந்தோரும் கையாண்டுள்ளனர். இத்தகைய அறிவுத்திறம் படைத்தோர் எமது முன்னோர்கள் என்பதில் நாம் பெருமிதம் கொள்ளத் தோன்றுகின்றது எனலாம்.

தொல்லியல் சின்னங்களைப் பொருத்தமட்டில் தொல்லியல் என்பது ஆதி மனிதன் விட்டுச் சென்ற அன்றாடம் பயன்படுத்திய பொருட்களாகும். இவற்றில் கட்டடங்கள், மனித எச்சங்கள், சூழலியல் எச்சங்கள், தானியங்கள், செப்பேடுகள், இலக்கியங்கள் என்பன உள்ளடங்கலும். இவ்வாறான தொல்லியல் சான்றுகள் நம்பகத்தன்மை உடையதாகவும் நிலையான வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்கும் உதவுகின்றன.

வரலாற்றிற்கு முந்தைய மற்றும் வரலாற்றுக்கால மனித பண்பாட்டின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் ஆவணப்படுத்தல், அவற்றை விளக்குதல், மனித வரலாற்றினை காலவரிசைப்படுத்துதல் என்பவற்றுக்குத் தொல்லியல் ஆதாரங்கள் முக்கியத்துவமுடையதாகக் காணப்படுகின்றது. இங்கு கிடைக்கப்பெற்ற தாழிகள், மட்கலங்கள், நாணயங்கள், பொம்மைகள், கண்ணாடிக் குவளைகள், தமிழர்கள் யார் என்பதனையும், இந்துக்களும், இந்து சமய சம்பிரதாயங்களும் எத்தகைய சிறப்பு வாய்ந்தது என்பதனையும் உறுதி செய்வதற்கு இந்நகரங்களில் கிடைத்த தொல்லியல் சின்னங்கள் பெரிதும் துணைபுரிவதோடு உலகையும், இந்தியாவின் பக்கம் பார்க்க வைத்துள்ளது என்றே கூறவேண்டும்.

இத்தகைய சிறப்புமிக்க நகரங்கள் அழிந்தமைக்கான காரணங்களை நோக்கின் அதற்கு இயற்கைச் சீற்றங்களும் பிற்காலத்தில் வந்த யுத்தங்களுமே காரணம் எனக் கூறலாம். அதில் கடல் கோள்களும், வறட்சியும் முக்கிய காரணங்களாக உள்ளன. இதனை இலக்கியங்கள் நிரூபித்துக் கூறுகின்றன. அதற்கு இலக்கியச் சான்றுகளும் உண்டு. ஆயினும் அதை ஏற்க மறுப்போர் இலக்கியங்கள் இலக்கிய வாதிகளினதும், கவிஞர்களினதும் கற்பனை கலந்த கதைகளும் மெருகூட்டும் கவிநயம் மிக்கவை என்றும் ஒரு சிலர் கூறுகின்றனர்.

இவற்றின் உண்மையை தமிழர்களே புறக்கணித்த காலத்தில் பிற நாட்டறிஞர்களின் ஆய்வுகளின் மூலம் நிரூபித்து வெளிக்கொணர்ந்த விடயங்கள் ஏராளம். ஆயினும் ஒரு சிலர் இன்றளவு இந்நகரங்கள் கட்டுக்கதைகள் எனக் கூறினாலும் நவீன தொழில்நுட்ப சாதனங்களின் மூலம் இந்தியப் பல்கலைக்கழகங்கள் பல இன்று இவற்றின் உண்மைத்தன்மையை விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்க திட்டமிட்டு செயல்படுத்த தொடங்கிவிட்டன.

இவற்றுக்கு அப்பால் வரலாற்றிற்கு முந்திய மற்றும் வரலாற்றுக்கால மனித பண்பாட்டின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் ஆவணப்படுத்தல், அவற்றை விளக்குதல் மனித வரலாற்றினை காலவரிசைப்படுத்துதல் என்பவற்றுக்குத் தொல்லியல் ஆதாரங்கள் முக்கியத்துவமுடையதாகக் காணப்படுகின்றது. எந்த இயற்கையால் அழிந்ததோ இன்று அந்த பூமித்தாயே தன்னுள் மறைந்த நகரங்களை வெளிக்கொணர சில தடயங்களை ஏற்படுத்துகின்றாள்.

அதன் விளைவே இந்நகரங்கள் உண்மை என்பதை நிரூபிக்க வந்ததே கீழடி அகழ்வாய்வின் மூலம் சிந்துவெளி, அரிக்கமேடு நகரங்கள் பற்றிய பல்லாயிரம் விடயங்கள் வெளிக்கொணரப்பட்டு உலகத்தின் பார்வை இந்தியா மீது வைக்கப்பட்டு உள்ளது.

இவ்விரு நாகரிகங்களினதும் உண்மை வரலாறு குறிப்பாக கல்வெட்டுத் தொகுப்பு முதுமக்கள் தாழி, புதையுண்ட நகரங்கள் போன்றவற்றை முழுமையாக ஆய்வு செய்தலும் மேலும் கடலிற்குள் இழந்த நிலப்பகுதி, மனிதர்கள் வாழ்ந்து, மறைந்த இடம் போன்றவற்றையும் ஆய்விற்கு உட்படுத்துவதனால் மட்டுமே உண்மைத் தரவுகளைப் பெற முடியும் என்பது எனது கருத்தாகும்.

இந்துக்களாகிய நாம் இவற்றின் உண்மையான தாற்பரியத்தை அறிந்து பழமையான சமயம் இந்து சமயம் என்பதனையும் பழமையான பண்பாடும் எமது என்பதனை உணர்ந்தது இந்நகரங்களின் கிடைத்த தொல்லியல் சின்னங்களைப் பேணி பாதுகாத்து எமது பெருமையை உலகறியச் செய்ய வேண்டும். இவை காலத்தால் அழியப்பட்டது என்றாலும் இன்று அவை வெளிவரவிடாமல் மறைக்கின்றனர் என்றே கூறவேண்டும். அவை வெளிக்கொணரப்பட வேண்டியதாகும். இவ்விரு நகரங்களில் மேலும் ஆய்வுகள் செய்வதன் மூலம் பல உண்மைகள் வெளிவரும். அத்தோடு இந்துக்களது பெருமை இந்துக்களுக்கே தெரியவரும் என்பதையும் இவ்வாய்வு செய்வதன் வாயிலாக மெய்க்கின்றேன்.

**உசாத்துணைகள்**


அப்பாத்துரைப்பிள்ளை, கே., (1941). *தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.* திருநெல்வேலி.

அறுவர், (1973). *தொல்பொருள் ஆய்வுத்துறை.* தமிழ்நாடு அரசு.

இராசமாணிக்கம், மா. (1907). *தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.* திருநெல்வேலி.

இராஜவேலு, சு., திருமூர்த்தி,கே., (1995). *தமிழ்நாட்டுத் தொல்லியல் அகழாய்வுகள்.* பண்பாட்டு வெளியீட்டகம்.

சொக்கலிங்கம்,கு. (2009). *இந்து நாகரிகம்.* குமரன் புத்தக இல்லம்.

நந்திவர்மன்.(2010). *அண்ணாமலை நகர்.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

பசாம்,A.L. (1963). *வியத்தகு இந்தியா*, அரச கருமமொழி திணைக்களம்.

முத்துச்சாமி,கோ.(2008). *தொல்லியல் துறை.* தமிநாடு அரசு.

வானமாமலை, நா. (1992). *தமிழர் வாழ்வும் பண்பாடும்.* நியூ செஞ்சரி புக் ஹவுஸ்.

வேங்கடசாமி, மயிலை சீனி. (1960). *தமிழர்சால்பு.* சென்னைப் பல்கலைக்கழகம்.

ஜோசப், டோ.(2020). *ஆதி இந்தியர்கள்.* மஞ்சள் பப்ளிசிங் ஹவுஸ்.

Begly, V. (1996). *The Ancient port of vol-1.* Ecolefranchcasise D, Estreame- orient.

Masson, P. (1939). *Ancient India and Indian Civilization*. London.

Raj kumar. (2010). *Early History Jammu pre- historic to 6th century*. Gyan publishingHouse.

# நாவற்குழி திருவாசக அரண்மனை, கொக்கட்டிச்சோலை திருமந்திர அரண்மனை உருவாக்கத்தில் கலாநிதி ஆறு.திருமுருகனின் பங்களிப்பு

**தவராசா லக்ஸ்சனா, வ. குணபாலசிங்கம்**
இந்து நாகரிகத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
Shanaluxshi19970118@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

நீண்ட கால வரலாற்றைக் கொண்ட இந்துசமயம் பல தலைமுறைகளாக பண்பாடு, கலை, கலாசாரம், இந்து இலக்கியங்கள் என்பவற்றைப் பாதுகாக்கின்றது. இவை அன்று தொட்டு இன்று வரை சமயப்பெருந்தகைகளினால் பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகின்ற போக்கைக் காணமுடிகின்றது. அந்தவகையில், ஈழத்திலும் சமயப்பெருந்தகைகள் தோற்றம் பெற்றுள்ளனர். அவர்களில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் குறிப்பிடத்தக்கவர். சிவபூமியின் அறக்காவலனாக இருந்து சைவசமயத்தை வளர்த்து வருகின்றவர்களில் இவரும் ஒருவராவார். இந்து சமய இலக்கியங்கள் அச்சு நூல் வடிவங்களிலும் இணையவழிகளிலும் பாதுகாக்கப்படுகின்றன. இவற்றை அழியாது பாதுகாப்பதற்காக அரண்மனையினை அமைத்து புதிய முயற்சிக்கு வித்திட்டார். இவை எதிர்காலத்திற்கும் பாதுகாப்பாக அமையும் என நம்பப்படுகிறது. ஆறு திருமுருகனின் சமய, சமூகப் பணிகளை வெளிப்படுத்தல், சிவபூமி அறக்கட்டளையின் பணிகளை விபரித்தல், நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை மற்றும் கொக்கட்டிச்சோலை சிவபூமி திருமந்திர அரண்மனை தொடர்பான விடயங்களை ஆராய்தல் போன்றவற்றை நோக்காகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வானது ஆறு. திருமுருகனுடனான நேர்காணல், இணையக் காணொளிகள், நேரடி அவதானிப்பு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதாக அமைந்துள்ளது. களஆய்வு, பகுப்பாய்வு, விபரணஆய்வு போன்ற ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. திருவாசக அரண்மனை, திருமந்திர அரண்மனை அமைவிடம், திருவாசக மற்றும் திருமந்திர பொறிப்பு முறை, வழிபாட்டு முறைகள், நுண்கலைவளர்ச்சி, அரண்மனைகளின் சிறப்புகள், அரண்மனை வெளிப்படுத்தும் பண்பாட்டுக் கோலம், சமூக நல்லுறவு போன்றவற்றைச் சமூகத்திற்கு வெளிப்படுத்தும் வகையில் இவ்வாய்வு அமைகின்றது. மேலும் இவ்வாய்வு இது போன்ற புதிய சிந்தனைகள் தோற்றம் பெறுவதற்கும் வழிவகுக்கும்.

**திறவுச் சொற்கள்:** *கலாநிதி ஆறு.திருமுருகன், திருவாசக அரண்மனை, திருமந்திர அரண்மனை, கருங்கல் தேர்*
.

## ஆய்வு அறிமுகம்

உலகிலுள்ள சமயங்களில் தொன்மையான சமயம் இந்து சமயமாகும். இச்சமயத்திற்கும் இச்சமயம் சார்ந்த மக்களுக்கும் காலத்துக்கு காலம் பல சோதனைகளும், வேதனைகளும் ஏற்பட்ட வண்ணம் உள்ளன. குறிப்பாக பல்வேறுபட்ட உபாயங்களைக் கையாண்டு வேற்று மதத்தவர்கள் தம்மதம் சார் கருத்துக்களை முன்வைப்பதில் அன்றும் இன்றும் ஆர்வம்காட்டி வருகின்றனர். அதனால் இந்துப் பண்பாட்டிற்கும், இந்து சமயத்தவர்களின் வாழ்வியலுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் நிலை காணப்படுகின்றது.

இத்தகைய சூழலின் மத்தியிலும் இளமைக் காலத்திலிருந்தே இந்து சமயத்தையும், பண்பாட்டையும் பேணிப்பாதுகாக்கும் நோக்கில் சமூகத்தில் பல சமய பெரியாரிகள் மற்றும் ஆர்வலர்கள் தோன்றி சைவ சமயத்தை மிளிரச் செய்தனர். இவர்களைப் போன்று தற்காலத்தில் சைவத்தின் ஒளியூட்டியாகச் செயற்பட்டு வருபவர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆவார்.

கலாநிதி ஆறு.திருமுருகன் சைவத்துக்கும், தமிழுக்கும் தமிழ் கூறும் நல்லுலகிற்கும் ஆற்றிவரும் பணிகள் அளப்பெரியதாகும். ஆன்மிகச் சொற்பொழிவுகள், அருள் ஒளி சஞ்சிகை வெளியிடல், சமய நிறுவனங்களுக்கு ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் திகழுதல், சமய நூல்கள் வெளியிடல், மக்களை சைவத்தின்பால் பற்றுக் கொள்ளும் பொருட்டு ஆலயங்களை நிறுவுதல் மற்றும் மக்கள் நலன் கருதி ஆலயச் சூழலில் மடங்களை அமைத்தல் போன்ற பல செயற்றிட்டங்களைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றார்.

சிவபூமி அறக்கட்டளையின் ஊடான இவரின் பணிகள் அளப்பெரியவை ஆகும். முதியோர் இல்லங்கள், தொழிற்பயிற்சி பாடசாலைகள், சிவபூமி ஞான ஆச்சிரமம், சிவபூமி மருத்துவ நிதியம், சிவபூமி அரும்பொருள் காட்சியகம், நாவற்குழி திருவாசக அரண்மனை, கொக்கட்டிச்சோலை திருமந்திர அரண்மனை மற்றும் மனவிருத்தி பாடசாலைகள் என்பவற்றின் உருவாக்கத்திற்காக அயராது பாடுபட்டார்.

உலகிலேயே முதல் முதலில் திருவாசக மற்றும் திருமந்திர அரண்மனையினை உருவாக்கிய பெருமை இவரையே சாரும். இவ்வரண்மனைகளின் ஊடாக இலக்கியங்களைப் பேணிப் பாதுகாப்பதற்காக புதிய முயற்சியினை ஆரம்பித்து வைத்துள்ளார். இனிவரும் காலங்களிலும் இது போன்ற முயற்சியினை உருவாக்குவதற்கு வழிவகுத்துள்ளார். இவ்வாறு பல ஆலயங்களை நிறுவுவதற்கு இவரின் பங்களிப்பு முக்கியமானதாக காணப்படுகின்றது. ஆறு.திருமுருகன் அவர்களின் சமயப்பணி இன்றுவரை தொடர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். நாவற்குழி திருவாசக அரண்மனை, கொக்கட்டிச்சோலை திருமந்திர அரண்மனை உருவாக்கத்தில் கலாநிதி ஆறு.திருமுருகனின் பங்களிப்பினை எடுத்துரைப்பதாக இவ்வாய்வு அமைகிறது.

**ஆய்வின் நோக்கம்**

***முதன்மை நோக்கம்***

நாவற்குழி திருவாசக அரண்மனை, கொக்கட்டிச்சோலை திருமந்திர அரண்மனை பற்றிய ஆய்வு இதுவரை வெளிவரவில்லை, இதன் உருவாக்கத்திற்கு கலாநிதி ஆறு.திருமுருகனின் பங்களிப்பு பற்றி சமூகத்திற்கு வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

***துணை நோக்கம்***

- ஆறு.திருமுருகனின் சமய, சமூக பணிகளை வெளிப்படுத்தல்
- சிவபூமி அறக்கட்டளையின் பணிகளை விபரித்தல்
- நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துதல்
- கொக்கட்டிச்சோலை சிவபூமி திருமந்திர அரண்மனை தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துதல்

**ஆய்வுப் பிரச்சினை**

கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் ஈழத்து சைவசமயப் பணிகளை ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவர் தொடர்பான ஆய்வுகள் விரிவாக வெளிவரவில்லை என்பதுடன், இதுவரையில்லாத வகையில் புதுமையான முறைகளைப் பின்பற்றி சைவப்பணிகளை செய்து வருகின்றார். இதன் பின்னணி என்ன என்பதும், இதன் மூலம் இவர் சைவப்பண்பாட்டுக்காக புதுப்புரட்சியை செய்ய தலைப்படுகின்றாரா என்பது ஆய்வுப்பிரச்சினையாக உள்ளது.

**ஆய்வு பரப்பு**

இந்து சமயத்தினை வளர்ப்பதற்கு ஆறு.திருமுருகன் அவர்கள் பல பணிகளை செய்திருந்தாலும், அவரின் சிவபூமி அறக்கட்டளையின் பணிகள், யாழ்ப்பாண நாவற்குழி திருவாசக அரண்மனை மற்றும் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை திருமந்திர அரண்மனை பற்றியும் இவ்வாய்வில் ஆராயப்படுகிறது

**ஆய்வு முறையியல்**

ஆய்வினை வழிநடத்திச் செல்கின்ற ஒரு வழிகாட்டியே ஆய்வு முறையியல் ஆகும். விவரண ஆய்வு, களஆய்வு, பகுப்பாய்வு போன்ற ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பண்பு ரீதியான முறையில் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வானது இரண்டு வழிமுறையினைக் கருத்தில் கொள்கிறது.

1. தரவு சேகரிப்பு முறை
2. தரவு பகுப்பாய்வு முறை

**இலக்கிய மீளாய்வு**

சிவலிங்கம்.மூ., (2009) சித்தர்களும் சிவபூமி மண்ணின் எழுகோலம், திருவாசக அரண்மனை தொடர்பான விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆறு.திருமுருகனின் பொன்விழாச் சிறப்பு மலர் (2007-2017) சிவபூமி முதியோர் இல்லம், சிவபூமி பணிகள் தொடர்பான விடயம் கூறப்பட்டுள்ளது

ஆறு.திருமுருகன் மணிவிழா மலர்., திருமுருகம் 60 (2021), இதில் திருமுருகனின் பணிகள் தொடர்பாக கூறப்பட்டுள்ளது.

திருமுருகனின் 50வது பொன்விழா மலர்., (2011) ஆறுதிருமன் சமூகப்பணி தொடர்பாக கூறப்பட்டுள்ளது.

சிவபூமி திருவாசக அரண்மனை ஓராண்டு நிறைவு சிறப்பு மலர்., (2019) திருவாசக அரண்மனை சிறப்புக்கள் தொடர்பான விடயங்கள் கூறப்பட்டுள்ளது.

திருவாசக அரண்மனை திறப்பு விழா மலர் (2018)., சிவபூமி அறக்கட்டளை, அரண்மனை உருவாக்க வரலாறு பற்றிக் கூறுகின்றது.

**செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகனின் வாழ்கைப் பின்னணி**

***பிறப்பு***

சமயப்பெருந்தகைகளின் வழியில் என்பது தமிழையும் சமயத்தையும் வளர்த்த வழி என்பர். சைவத்திற்கும், தமிழுக்கும் தன் வாழ்நாளை அர்ப்பணித்து தனது பணிகளை முன்னெடுத்துச் செல்கின்றவராவார். இவர் கோப்பாய் வராம்பற்றை இலுப்பையடி பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த ஆசிரியர் கந்தையா ஆறுமுகம் சரஸ்வதி தம்பதியினரினருக்குப் புதல்வனாக 1961 மே மாதம் 28ஆம் திகதி வைகாசி விசாகத்தன்று பிறந்தார்.

***கல்வி***

இவர் தனது ஆரம்பக் கல்வியை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பயின்று உயர் கல்வியை பேராதனை பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு பட்டதாரியானார். மஹரகம தேசியகல்வி நிறுவகத்தில் பட்டப்பின் படிப்பை மேற்கொண்டார். இலங்கையில் திருக்குறலுக்கு முதன் முதலாக உரை வகுத்து முப்பாநூற்சர்க்கம் என வெளியிட்ட பண்டிதர் வி.வேலுப்பிள்ளை இவரது குடும்ப மூதாதை என்பது குறிப்படத்தக்கதாகும். இவரின் வழிப்பாதையே ஆறு.திருமுருகனின் தமிழை வளர்ப்பதற்கு உந்துசக்தியாக இருந்திருக்கலாம். திருமுருகன் சைவமும் தமிழும் பிரகாசிக்க கல்வியுடன் நாவன்மையும் இன்சொல்லின் பண்பையும் உலகறியச் செய்தார்.

***சமய சமூகப் பணிகள்***

ஆறு.திருமுருகனின் சமய, சமூகப் பணியிற்கு வித்திட்டவர் தங்கம்மா அப்பாக்குட்டியாவார். றிய சிவத்தமிழ் செல்வி அம்மையாரின் இழப்புக்குப்பின் ஆறு.திருமுருகன் அவர்கள் துர்காதேவி தேவஸ்தான தலைவராக 29.06.2008இல் நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். பின்னர் ஆலயத்தில் பல்வேறு பணிகளைச் செய்தார். அவற்றில் ஆலயத்தில் பெரியமணி பூட்டப்பட்டதுடன் கோபுர வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றினார். தலைவாசல் கோபுரங்கள் அமைக்கப்பட்துடன் மொத்தமாக நான்கு கோபுரம் அமைத்துள்ளார். மற்றும் ஆலயத்தில் புதிய மண்டபங்கள் அமைக்க உதவினார். துர்காபுர மகளீர் இல்லத்தின் தலைவராகவிருந்து பிள்ளைகளின் நல்வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் காணப்படுகின்றார்.

பல ஆலயங்களில் சொற்பொழிவினை நிகழ்த்தியுள்ளார். பல நினைவுப் பேருரைகளையும் நிகழ்த்தியுள்ளார். சிவபூமி அறக்கட்டளையின் ஊடாக பல பணிகளை செய்தார். சிவபூமி அறக்கட்டளை 2004 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது

**நாவற்குழி திருவாசக அரண்மனை**

சைவநெறி தழைத்தோங்கிய பூமியை ஆன்றோரான திருமூலர் சிவபூமி என ஈழத்தினை அறிமுகப்படுத்தினார். இன்றும் மட்டுமல்ல இனிவரும் காலங்களிலும் மரபுகளை வெளிப்படுத்தும் பதமாகவே காணப்படுகின்றது. சைவமும் தமிழும் தழைத்தோங்கிய புண்ணிய பூமியான யாழ்நகரில் சம்பகுண்டம் என்னும் இலக்கியப் பெயரினை உடைய நாவற்குழி

என்னும் கிராமத்தில் பழமையை வெளிப்படுத்தும் முகமாக சைவத்தமிழை நிலைநிறுத்தும் தற்கால அரண்மணையாக சிவபூமி திருவாசக அரண்மனை காணப்படுகிறது.

திருவாசகங்கள் ஓலைச் சுவடிகள், புத்தகங்கள், கணிணி போன்றவற்றில் தான் தற்போது திருவாசகம் பாதுகாக்கப்படுகிறது. இத்திருவாசகங்கள் இயற்கை அழிவுகளாலும், மனிதர்களாலும் அழிவடைய கூடியவை. இவை காலாகாலத்துக்கு பாதுகாக்கப்படும் என்பது உறுதியில்லை. அரண்மனைகளில் பொறிக்கப்படுவது எக்காலத்திற்கும் பாதுகாப்பாக இருக்கும். தமிழின் இருப்புக்கும் சைவத்தின் நிலைபேறுக்கும் சவாலான காலம் தற்போது நிலவுகிறது. இந்து சமயத்தைப் பாதுகாக்க வேண்டிய நிலை உள்ளன. திருவாசத்தினைப் பாதுகாப்பது காலத்தின் தேவையாகும். தீர்மானத்தின் வழி ஒரு விடயத்தை தலைமுறை கடந்தும் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என தீர்மானிக்கப்பட்டால் அந்த விடயத்தை எவர் நினைத்தாலும் எத்தகைய பலம் கொண்டும் அழித்து விட முடியாது. அவ்வாறு பாதுகாக்க உருவாக்கப்பட்டதே திருவாசக அரண்மனை ஆகும்.

இவ் அரண்மனை உருவாகுவதற்கு காரணமாக இருந்தவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களாவர். இவர் சிவபூமி அறக்கட்டளையின் ஊடாவே இவ்வரண்மனையை உருவாக்கியுள்ளார். ஆறு.திருமுருகன் 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற ஓதுவார் சங்க மாநாட்டில் கலந்துகொள்ளும் போது அங்குள்ள சித்தர் ஒருவர் அரண்மனை உருவாக்குவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தார்.

கருங்கல் தட்டுப்பாடான சூழ்நிலையிலும் கூட இந்தியாவில் இருந்து கருங்கற்கல் கொண்டுவரப்பட்டு அரண்மனை அமைப்பதற்கான வேலைப்பாடுகளை திருமுருகன் முன்னெடுத்துள்ளார். இந்துக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி அரண்மனையினை ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அரண்மனை அமைப்பதற்கான நிதியினை பலர் வழங்கியிருந்தனர். குறிப்பபாக புலம்பெயர் தழிழர்களால் அரண்மனை அமைப்பதற்காக பெரும்பாலான நிதியினை வழங்கினார்கள். திருவாசக அரண்மனையில் கருங்கல்தேர், சிவதெட்சணாமூர்த்தி ஆலயம், 108 சிவலிங்கம் பிரதிஷ்டை செய்தல், திருவாசகப்பாடல்களை பொறித்தல், யாத்திரிகர் மடத்தினை அமைத்தல், திருவாசக நூல்நிலையங்களை அமைத்தல், சுற்றுமதில் அமைத்தல், குடிநீர்தாங்கி போன்றவற்றை திருமுருகனில் முயற்சியில் நிறுவப்பட்டது குறிப்பிடத்தக்கவையாகும்.

***அமைவிடம்***

இலங்கையின் வட பாகத்தே அமைந்துள்ள யாழ்ப்பாணக் குடாநாடு வரலாற்று ரீதியிலே சிறப்பும் முக்கியத்துவம் பெறுகின்றது. இம்மாவட்டத்தின் பரப்பு 2025 ச.கி.மீ ஆகும். வட மாகாணத்தின் தலைநகரம் யாழ்ப்பாணமாகும். அதிகளவிலான தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற இடமாக காணப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டம் பண்டைக் காலம் தொட்டு இலக்கியங்களில் நாகதீபம் எனவும் தமிழில் நாகநாடு எனவும் அழைக்கப்பட்டு வந்துள்ளது. தொன்று தொட்டு சைவசமயம், கலை, கலாசாரப் பண்பாட்டினை பேணிப்பாதுகாக்கும் இடமாகக் காணப்படுகின்றன. பல்வேறு சமயங்கள் காணப்பட்டாலும் இந்துக்களே அதிகம் வாழ்கின்றனர். இந்து சமயத்தை வளர்ப்பதற்கு ஆலயங்கள், சைவ நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் சிவபூமியினால் அமைக்கப்பட்ட திருவாசக அரண்மனையும் ஒன்றாகும்.

ஈழத்து இந்து சமய வளர்ச்சியில் நாவற்குழி மண் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் புண்ணிய பூமியாகும். நாவற்குழி என்னும் ஊரில் இத்திருவாசக அரண்மனை அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த அரண்மனையானது ஏ9 பிரதான நெடுஞ்சாலையில் நாவற்குழி முற்சந்தியிலிருந்து நாவற்குழி பாலம் நோக்கி செல்லும் பாதையில் அரச உணவுக் களஞ்சியத்துக்கு எதிராக பரந்த விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பில் கம்பீரமாக காட்சி தருகிறது.

**திருவாசக அரண்மனையின் அமைப்புகள்**

சிவபூமி என்ற பெயரிலான திருவாசக அரண்மனை தமிழர்களின் பாரம்பரிய இலக்கியமான திருவாசகத்தின் சிறப்பினை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளன. இத்தகைய சிறப்பினை உடைய திருவாசக அரண்மனை அழகாக காட்சியளிக்கின்றது. இது அரண்மனை போல் அமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ பத்துப் பரப்பில் இவ்அரண்மனை அமைந்துள்ளது. ஆலயத்தினுள் செல்ல முதல் ஆலய வாசலில் நுழைவாயில் அழகாக காட்சியளிக்கிறது. சிவபூமி திருவாசக அரண்மனை என்னும் பெயருடன் காணப்படுகிறது. ஆலயத்தினுள் நுழையும் போது அரண்மனை வளாகத்தின் முன் விநாயகர் சிலை காணப்படுகிறது. அடுத்து முன்னே செல்லும் போது பகுதியில் முற்றிலும் கருங்கல்லினால் வடிக்கப்பட்ட தென்திசையில் 21 அடி உயரங்கொண்ட கற்தேர் அமைக்கப்பட்டுள்ளது. அதன் அருகே நந்தியும், பலிபீடமும் அமைக்கப்பட்டுள்ளது. அதன் முன்னால் விநாயகர் காட்சி தருகிறார். வலது பக்கத்தில் நவக்கிரகங்கள் காணப்படுகின்றது.

அரண்மனையில் மேல் உயர்ந்த விமானம் பொருந்திய கருவறையில் தெட்சணாமூர்த்தி சந்நிதியும் அமைந்துள்ளது. தேரிற்கு முன்பாக கருங்கல்லாலான மூலவரான தெட்சணாமூர்த்தி தெற்கு நோக்கி அமர்ந்துள்ளதுடன் முன்னால் பெரிய நந்தியும் அமைக்கப்பட்டுள்ளது.

**சிவ தெட்சணாமூர்த்தி ஆலய அமைப்பு:** நாவற்குழியில் உள்ள திருவாசக அரண்மனையில் மூலவராக சிவதெட்சணாமூர்த்தி விளங்குகிறார். தெற்கு நோக்கி கருங்கல்லில் நான்கரை அடி உயரமுடையதாக அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தில மேல் விமானம் 21 அடி உயரம் கொண்டவை. விமானம் ஐந்து அடுக்குகளைக் கொண்டது. ஒவ்வொரு அடுக்குகளிலும் சிறிய அளவுடையதாக சிவலிங்கம் சுற்றிக் காணப்படுகிறது. இங்கு 108 சிவலிங்கம் வைக்கப்பட்டுள்ளன. ஆலயத்தைச் சுற்றி பன்னிரண்டு தூண்கள் காணப்படுகிறது. தூண்களில் கபோதங்கள் காணப்படுகின்றன. இங்கு அமைக்கப்பட்டுள்ள விமானம் திராவிடக் கட்டடக் கலையினை ஒத்ததாக காணப்படுகிறது. ஆலய வெளிப்பிரகாரத்தில் இருபக்கங்களிலும் பிள்ளையார் மற்றும் முருகன் காணப்படுகிறார். ஆலயத்தைச் சுற்றி சிவலிங்கம் பிரதி‘டை செய்யப்பட்டுள்ளது.

**கருங்கல் தேர் அமைப்பு:** ஈழத்தில் முதன் முதலில் அமைக்கப்பட்ட கருங்கல் தேர் கொண்ட ஆலயமாக சிவபூமி திருவாசக அரண்மனை விளங்குகிறது. இவ் ஆலயத்தின் முற்றலில் அழகான தேரின் கீழ் நீர்நிலை காணப்படுவது பார்ப்பதற்கு கண்கொள்ளாக்காட்சியாக அமைந்துள்ளது. இது சிவதெட்சிணாமூர்த்தி சன்னிதானத்துக்கு முன்பாக 21 அடியில் கருங்கல்லால் ஆன தேர் பல்வேறு கலையம்சங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. ‘‘கல்லாமனத்து கடைப்பட்ட நாடகனை என்று தன்னைத் தாழ்த்தி இறையன்பு மீதுரப்பெற்று

சிவனடியையே தித்திக்கும்'' எனப் போற்றப்படும் மாணிக்கவாசகப் பெருமான் உருவம் காணப்படுகிறது. அத்தோடு நாகத்தோடு சிவலிங்கப் பெருமான் வீற்றிருக்கின்றார். இவை பார்ப்பதற்கு கண்கொள்ளாக் காட்சியாகும். தேர் அமைப்பில் நான்கு சக்கரங்கள் நீருக்குள் உள்ளன. கருங்கல் தேர் சுவரில் நாக சிற்பங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அத்துடன் தேரில் சக்கரம், தாமரைப்பூ வடிவ சிற்பங்கள் பொறிக்கப்பட்டுள்ளது.

**108 சிவலிங்க அமைப்பு:** ஈழத்தில் சிவலிங்க வழிபாடு சிறப்பிடம் பெறுகின்றது. பல பாகங்களில் தானாக தோன்றிய லிங்கங்கள் காணப்படுகின்றன. அண்மைக் காலங்களில் சிவலிங்கங்களின் வழிபாட்டு முறை ஈழத்தில் அதிகரித்து செல்வதைக்காணலாம். இவற்றில் முதன் முதலில் யாழ்ப்பாணத்தில் 108 சிவலிங்கங்கள் அமைக்கப்பட்ட ஆலயமாக திருவாசக அரண்மனை விளங்குகின்றது. இந்த உலகம் தோன்றி ஒடுங்குவதற்கு மூல காரணமாக அமைந்தது லிங்கம் ஆகும். சிவபூமி அரண்மனையில் 108 சிவலிங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள சிவலிங்கங்கள் ஒரே நேரில் பகர வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. இதில் ஆலய மூலஸ்தானத்தினைச் சுற்றி 16 சிவலிங்கங்கள் பிரதி'டை செய்யப்பட்டுள்ளன. அன்பர்கள் பூஜித்து வழிபடுவதற்கான முறையில் வைக்கப்பட்டுள்ளது. இதில் இடது பக்கமாக 36 சிவலிங்கங்களும் கோயில் பின்பக்கமாக 20 சிவலிங்களும் அமைக்கப்பட்டுள்ளன. மற்றும் வலது பக்கமாக 36 சிவலிங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் கோயில் இடது பக்கம் 8 சிவலிங்கமும், வலது பக்கம் 8 சிவலிங்கமும் அமைக்கப்பட்டுள்ளன. மொத்தமாக ஆலயத்தில் 108 சிவலிங்கங்கள் பிரதி'டை செய்யப்பட்டுள்ளது. இங்கு அமைக்கப்பட்டுள்ள சிவலிங்கத்தின் விட்டம் கிட்டத்தட்ட இரண்டரை (2 ½) அடி கொண்டுள்ளது. மற்றும் உயரம் இரண்டரை (2½) அடி ஆகும். இது முழுமையாக கருங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ளது. சிவலிங்கம் ஒவ்வொன்றிலும் உருத்திராக்க மாலை காணப்படுகிறது. இங்குள்ள சிவலிங்கங்கள் மூலஸ்தானத்தினை பார்த்தவாறு அமைக்கப்பட்டுள்ளன.

**பொறிக்கப்பட்ட திருவாசக அமைப்பும் அதன் செல்வாக்கும்**

இலங்கை நாவற்குழியிலுள்ள திருவாசக அரண்மனை திருவாசக இலக்கியப் பண்பாட்டினைப் பிரதிபலிக்கும் சான்றாதாரங்களில் தனித்துவமான அடையாளத்தினை பெற்றிருக்கின்றமை சிறப்பான அம்சமாகும். திருவாசக முற்றோதல் நடைபெறும் அரண்மனையாக இது காணப்படுகிறது. இவ்வரண்மனைக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் விடயாக திருவாசகப் படல்கள் பெறிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

அரண்மனையில் திருவாசக அமைப்பானது கருங்கல் பளிங்கினால் அரண்மனையைச் சுற்றி பதிக்கப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. அரண்மனையின் இடது மற்றும் வலது பக்க சுவர்களில் கருங்கல்லில் பதிக்கப்பட்ட திருவாசகப்பாடல்கள் காட்சி தருகின்றது. மொத்தமாக 658 திருவாசகப் பாடல்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இந்த பாடல்கள் இடது பக்கங்களிலிருந்து ஆரம்பிக்கப்படுகின்றன. முதலாவதாக பொறிக்கப்பட்டுள்ள பாடல்களாக சிவபுராணமான "நமச்சிவாய வாழ்க நாதன்தான் வாழ்க…'' என்ற பாடல் பொறிக்கப்பட்டுள்ளது. திருவாசகப் பாடலின் இறுதிப்பாடலாக ''செம்மை நலம் அறியாத

சிதரோடும் திரிவேனை மும்மை மலம் அறிவித்து" என்ற பாடல் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

இங்கு பொறிக்கப்பட்டுள்ள கற்கள் ஒன்று 8 இஞ்சி அகலமும் 1 மீற்றர் உயரமுடையவையாகும். இவ்வரண்மனையில் சிவபுராணம் பல மொழிகளிலே அமைக்கப்பட்டுள்ளன. இவை ஆங்கிலம், சிங்களம், யப்பான், பிரெஞ்சு, கன்னடம், ஜேர்மன், தெலுங்கு, இத்தாலி, பெங்காலி(கிரந்தம்), அரபி, சீயம் போன்ற 11 மொழிகளில் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு வரிசையில் நான்கு கற்களில் பாடல் பொறிக்கப்பட்டுள்ளது. சில இடத்தில் மூன்று கற்களிலும் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த திருவாசகத்தினை கருங்கல்லில் உளி கொண்டு செதுக்கப்பட்டுள்ளன.

**திருவாசக அரண்மணையின் சிறப்புக்கள்**

திருவாசகத்தை பெருமைப்படுத்தும் வகையில் அதற்காக அரண்மனை போன்று ஓர் ஆலயம் அமைக்கப்பட்டிருப்பது சிறப்புக்குரியது ஆகும். அத்துடன் 658 திருவாசகப் பாடல்களையும் சுற்றிவர நடந்து படிக்க ஒரு புதிய வழிபாட்டு மரபு தொடங்கப் பெற்றுள்ளமை சிறப்பானதாகும். இலங்கையில் முதன் முதலில் அமைக்கப்பட்ட சிவதெட்சணாமூர்த்தி ஆலயம் என்ற சிறப்பை பெருகின்றது.

சோழர் காலக் கட்டடக்கலைக்கு ஒப்பாக தஞ்சைப் பெருங்கோவிலை நினைவுறுத்தும் வகையில் முப்பது அடி உயரத்தில் விமானம் நிமிர்ந்துநிற்கின்றது. இலங்கையில் தட்சணாமூர்த்தியை மூலவராகக் கொண்ட முதற்கோவிலும் இதுவாகும்.

வாயிலில் சிவபுராணத்தை கிரந்தம், சீனம், தங்கோலோ, சிங்களம் முதலிய பன்னிரண்டு மொழிகளில் மொழிபெயர்த்து முப்பது அடி நீளச்சுவரில் அமைத்துள்ளனர்

இலங்கையிலே கருங்கற் தேர் முதன் முதலில் இங்கு தான் அமைக்கப்பட்டுள்ளது என்பது சிறப்பான விடயமாகும்.

**வழிபாட்டு முறைகள்**

திருவாசக அரண்மனையில் ஆகம முறைப்படி பூஜைகள் நடைபெறுகின்றன. தினமும் சிவதெட்சணாமூர்த்தி பூஜை வழிபாடுகளுடன் நெய்விளக்கேற்றி வழிபாடு செய்தலும் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பிரதோஷ நாளன்றும் சிவதெட்சணாமூர்த்திக்கு சிறப்பு பூஜைகள், வழிபாடுகளும், விஷேட அபிஷேகங்களும் இடம்பெற்று வருகின்றது. இவ் வியாழக்கிழமைகளில் பக்தர்கள் கருங்கற்தேரைச் சுற்ற அமைந்திருக்கும் தண்ணீர் தடாகத்தில் இருக்கும் நீரினை சிறு குடங்களில் ஏந்தி நந்தி தேவருக்கும் நூற்றெட்டு சிவலிங்கத்திற்கும் வரிசையில் நின்று நிராட்டுவது சிறப்பான வழிபாடாகக் காணப்படுகின்றது. ஐந்து வேளைப் பூஜைகள் நடைபெருகின்றன.

**கட்டடக்கலை**

வட இலங்கையில் இந்துக் கோயில்கள் பொதுவாக திராவிடக்கலையின் அடிப்படைகளை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டு வந்தன. தனித்தே திராவிடக் கட்டடக்கலையுமின்றி, தனித்தே வட இலங்கையின் பாரம்பரியக் கட்டடக்கலை வடிவமும் இன்றி இரண்டு வடிவங்களையும் ஓரளவுக்கு இணைத்து வெளிக்கொணரப்பட்ட வடிவாக இது காணப்படுகின்றது.

தெரு வாசலில் அமைந்த வளாகத்தின் பிரதான வாசல் ஓரளவுக்குத் திராவிடக் கலையின் வெளிப்பாடு. உள்ளே முன்றிலில் கருங்கல்லில் நந்தி. இது கோவில் ஒன்றினுள் போகின்ற உணர்வைத்தருகின்றது. அதனைத்தொடர்ந்து கருங்கல்லில் முழுமையாகவே அமைக்கப்பட்ட தேர். அதன் பின்னால் பெரிய நடு முற்றம். முற்றத்தின் பின் நடுப்பகுதியில் திராவிடக் கலையின் வெளிப்பாடான அரண்மனையின் மையப்புள்ளியாக அமைந்த சிறிய சிவதெட்சணாமூர்த்தி ஆலயம் காணப்படுகிறது.

**சமூக நல்லுறவு**

சமூக நல்லுறவு என்பது ஒரு நாட்டுக்குள் வாழும் பல பண்பாட்டு சமூகங்களிடையே ஒற்றுமை, புரிந்துணர்வு, சகவாழ்வு ஆகியவற்றை நிலைநிறுத்துவதற்காக பேசப்பட்டு வரும் எண்ணக்கரு சார்ந்த விடயமாகும். ஆலயங்களின் ஊடாக சமூக நல்லுறவு பேணப்படும் இடமாகும். கலாசாரம், பண்பாடுகள் மக்களிற்கு கடத்தப்படுவது ஆலயத்தினூடாக ஆகும். இவ் அனைத்தினையும் வெளிப்படுத்துவதாக இந்த நாவற்குழி திருவாசக அரண்மனை அமைக்கப்பட்டுள்ளது. திருவாசக அரண்மனைக்கு உலகில் எல்லாப்பாகங்களிலும் இருந்து வருகை தருகின்றனர்.

ஈழத்தில் இன்றும் பல ஆலயங்களின் ஊடாக சாதிவேற்றுப் பாகுபாடு காணப்படுகின்றன இதில் இருந்து திருவாசக அரண்மனை வேறுபடுகின்றன. சாதி, மத பேதமின்றி ‘‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’’ என்ற நோக்குடன் அனைவரும் வழிபடுவதைக் காணலாம். உதாரணமாக 108 சிவலிங்கங்களுக்கு மக்கள் நேர்த்திக்கடன் வைத்து தண்ணீர் ஊற்றி வழிபடுகின்ற மரபு காணப்படுகின்றது.

திருவாசக அரண்மனையின் ஊடாக மீவியல் சமூகம் உருவாகின்றது. இங்கு ‘‘மீசமூகம்’’ என்பது இயல்பான சமூகத்திலிருந்து விலகி சடங்குக் களத்தில் ஒன்று சேரும் மீவியளாளர்கள் உருவாக்கும் இயல்பு மீறிய சமூகத்தன்மையைக் குறிக்கும். சடங்கு நிகழக் கூடிய மீவியல் காலத்தில் உயர்தகுதி நிலையுடையவர்கள் அதாவது சிறந்த கைவினையரின் மகன், சாதாரண நிலையில் உளள்வரின் மகனும் ஓரே மீவியல் களத்தில் சந்திக்கும் போது அவர்கள் முன்னைய தகுதிப்பாடுகளை மறந்து ஓரே தகுதி நிலையில் சங்கமம் பெற்றவர்களாக மாறுகின்றனர். அவர்களிற்குரிய ஒரோயொரு அடையாளம் சடங்குக்கு உட்பட்டுப் புதிய தகுதிநிலையை அடைய உளள்வர்கள் என்பதாகும். இவ்வாறான சமூகம் திருவாசக அரண்மனையில் உருவாவதனைக் காணலாம்.

திருவாசக முற்றோதல் நடைபெறுவது வழக்கம். உலகில் எல்லாப்பாகத்திலும் இருந்து வருகை தருகின்றமை குறிப்பிடத்தக்கவை இவ்வாறான நிகழ்வுகளிற்கு பலர் வருகை

தருவதைக் காணலாம். உள்நாட்டு வெளிநாட்டு மக்களிடம் சமூக நல்லுறவினை ஏற்படுத்துகின்றன.

**கொக்கட்டிச்சோலை திருமந்திர அரண்மனை**

சிவபூமி என்று சிறப்பாக அழைக்கப்படும் ஈழத்திருநாட்டின் மட்டக்களப்பு என்னும் பிரதேசத்திலுள்ள கொக்கட்டிச்சோலை என்னும் கிராமத்தில் கலாநிதி ஆறு.திருமுருகனால் அமைக்கப்பட்டது கொக்கட்டிச்சோலை திருமந்திர அரண்மனையாகும். இதனை சிவபூமி அறக்கட்டளையின் ஊடாகவே இவர் நிறுவியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த அரண்மனை உருவாகுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தவர் திருவெண்ணாமலைச் சித்தர் ஒருவர் ஆவார். சித்தர் கூறிய கருத்து திருமந்திர அரண்மனை உருவாவதற்கான அடிப்படையாக அமைந்தது.

ஆறு.திருமுருகனுக்கு சிறுவயது முதல் திருமந்திரத்தை வாசிக்கும் பழக்கம் காணப்பட்டது. கிழக்கிழங்கையில் சைவப்பணியினை அமைக்க வேண்டும் என்ற ஆர்வமும் திருமந்திர அரண்மனை அமைவதற்கான காரணமாக அமைந்தன. இவ்விலக்கியத்தினை காலத்துக்கும் அழியாது பாதுகாக்க வேண்டும். அடுத்த சந்ததியினருக்குக் கொண்டுசெல்லவேண்டும் என்ற நோக்குடனும் இந்தத் திருமந்திர அரண்மனை அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

திருமந்திர அரண்மனை அமைப்பதற்கான நிலப்பரப்பினை கொக்கட்டிச்சோலை நிர்வாகம் வழங்கியிருந்தது. திருமுருகனுடன் ஆலயத்தினை அமைப்பதற்காகப் பலர் நிதியினை வழங்கி உதவினார்கள். இந்த அரண்மனை ஒரு வருட கால முயற்சியில் அமைக்கப்பட்டது. இந்தியாவில் இருந்து மிகச் சிரமத்தின் மத்தியில் கருங் கற்களைக் கொண்டு வந்து கொழும்பிலே இயந்திரத்தின் மூலம் சிறிய அளவுகளாக வெட்டி கிளிநொச்சியில் வைத்து ஒவ்வொரு கற்களாகக் கையினால் 26 இளைஞர்கள் பதிப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த அரண்மனை ஒன்பது கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

***அமைவிடம்***

சிவபூமி என்று அழைக்கப்படும் இலங்கைத் திருநாட்டில் கிழக்கு மாகாணத்தில் தமிழர் பூர்வீக காலம் முதலாக செறிந்து வாழும் பிரதானமான நிலப்பகுதிகளில் மட்டக்களப்பும் ஒன்றாகும். இப்பிரதேசத்தில் அமைந்துள்ள அழகிய கிராமமாக கொக்கட்டிச் சோலை காணப்படுகின்றது. ஈழத்திலுள்ள சுயம்பு லிங்கம் கொண்ட பிரசித்தி பெற்ற ஆலயமாகக் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வர ஆலயம் விளங்குகிறது. இந்த ஆலயத்தின் வளாகத்தின் முன் வீதியில் கொக்கட்டிச்சோலை சிவபூமி திருமந்திர அரண்மனை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

***திருமந்திர அரண்மனை அமைப்பு***

திருவாசக அரண்மனை போன்று அதே அமைப்பில் கிழக்கிலங்கையிலும் புதுப் பொழிவுடன் திருமந்திர அரண்மனை காட்சியளிக்கிறது. கிட்டத்தட்ட முக்கால் (3/4) ஏக்கர் பரப்பில் இந்த அரண்மனை அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தினுள்ளே நுழையும் போது வாசலில் அழகிய தேர் கருங்கல்லில் காணப்படுகின்றது. அதில் திருமூலரும், சிவலிங்கமும் வீற்றிருப்பதைக் காணலாம். இதில் தங்க மூலாம் இடப்பட்ட நாகத்துடன் சிவலிங்கப் பெருமான் வீற்றிருப்பது கண்கொள்ளாக் காட்சியாகக் காணப்படுகின்றது. இவற்றினைக் கடந்து செல்லும் போது விநாயகர் பரிதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். அதன் அருகே நந்தியும் பலிபீடமும் அமைக்கப்பட்டுள்ளது. நந்தி வாசலை பார்த்தவாறு அமைக்கப்பட்டுள்ளது. நடுப்பகுதியில் கருங்கல்லினால் ஒரு ஆலயம் எழுப்பப்பட்டு மூலவராக முகலிங்கப்பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

***பொறிக்கப்பட்ட திருமந்திரத்தின் அமைப்புகள்***

திருமந்திர அரண்மனையில் திருமந்திர பாடல்கள் அமைக்கப்பட்டுள்ள அமைப்பானது நீள் வரிசையில் ஏறத்தாழ 13 அல்லது 12 பாடல்களைக் கொண்டு மொத்தமாக 235 வரிசைகளில் பாடல்கள் பொறிக்கப்பட்டுள்ளன. தெற்குத் திசையில் 1-1142 பாடல்கள் வரை பொறிக்கப்பட்டுள்ளது. மேற்குப் பக்க சுவரில் 1143 ல் ஆரம்பித்து 1772 வரையிலான பாடல்கள் பொறிக்கப்பட்டுள்ளன. 1143 பாடல் தொடக்கம் “பேச்சு அற்ற நாரபொருள் கானும் பெருந்தகை…” என்னும் பாடலாகும். வடக்குப் பக்க சுவர்களில் 1773 தொடக்கம் 3000 வரையிலான பாடல்கள் பொறிக்கப்பட்டுள்ளன. “ஒன்று அவன் தானே இரண்டு அவன் இன்னருள்..” என்ற கடவுள் வாழ்த்துப் பாடலில் “ஆரம்பித்து வாழ்கவே வாழ்க என் நந்தி குவடி…” என்ற பாடலில் முடிவடைகின்றது. இங்கு பொறிக்கப்பட்டுள்ள கல்லின் 8 இஞ்சி அகலமும் 16 மீற்றர் உயரமும் உடையவை ஆகும்.

***சிவலிங்க அமைப்பு முறை***

திருமந்திர அரண்மனையில் 108 சிவலிங்கம பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அரண்மனையினைச் சுற்றி வைக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக செவ்வக வடிவில் சிவலிங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள சிவலிங்கங்கள் கருங்கற்களில் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கு பார்த்தவாறு நாற்பத்துநான்கு சிவலிங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தெற்கு நோக்கியவாறு பத்தொன்பது சிவலிங்கங்கள் காணப்படுகின்றன. மற்றும் கிழக்கு நோக்கி நாற்பத்தைந்து சிவலிங்கங்கள் காணப்படுகின்றன.

சிவலிங்கம் மூலஸ்தானத்தை பார்த்தவாறு கிழக்கு பக்கம் அமைக்கப்பட்டுள்ளது. சிவலிங்கத்திற்கு அபிசேகம் செய்யும் போது தீர்த்தம் வெளியேறும் கோமுகி வடக்கு பக்கம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு அமைக்கப்பட்டுள்ள சிவலிங்கத்தின் விட்டம் கிட்டத்தட்ட இரண்டரை (2½) அடி கொண்டுள்ளது. உயரம் இரண்டரை (2½) ஆகும். இது முழுமையாக கருங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ளது.

***கட்டடக்கலை***

திருமந்திர அரண்மனையான திராவிடக் கட்டடக்கலைப் பாணியில் அமைக்கப்பட்டுள்ளது. உள்ளே முன்றிலில் கருங்கல்லில் நந்தி இது கோவில் ஒன்றினுள் போகின்ற உணர்வைத்தருகின்றது. அதனைத்தொடர்ந்து கருங்கல்லில் முழுமையாகவே அமைக்கப்பட்ட தேர். அதன் பின்னால் பெரிய நடு முற்றம். முற்றத்தின் பின் நடுப்பகுதியில் திராவிடக் கலையின் வெளிப்பாடாக அரண்மனையின் மையப்புள்ளியாக அமைந்த சிறிய முகலிங்கப் பெருமான் ஆலயம் அமைந்துள்ளது.

***சிற்பக் கலை***

திருமந்திர அரண்மனையில் பல சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு முகலிங்கப் பெருமான் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. மற்றும் விநாயகர், திருமூலர், நந்தி, பலிபீடம் போன்ற சிற்பங்கள் காணப்படுகின்றன. இவை சிற்ப சாஸ்திர முறைக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள சிற்பங்கள் கருங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியச் சிற்பக் கலைஞர் புருஷோத்தமன் இங்குள்ள சிற்பங்களினை அழகாக அமைத்துள்ளமையைக் காணலாம்.

***வழிபாட்டு முறைகள்***

இங்கு சிறப்பாக சிவராத்திரி வழிபாடு நடைபெறுகின்றது. இந் நாளில் சிவலிங்கத்திற்கு மக்கள் நீராட்டி வழிபடுவது சிறப்பாகும். கொக்கட்டிச் சோலை ஆலயத்திற்கு வருபவர்கள் இந்த அரண்மனையினை வழிபட்டு செல்வதைக் காணலாம்.. பூஜை ஒரு வேளை நடைபெறுகின்றது. கருங்கற் தேரில் வீற்றிருக்கும் சிவலிங்கப் பெருமானுக்கும், திருமூலருக்கும் பூஜை நடைபெறுவதுடன் அங்கு சிறப்பாக முகலிங்கப் பெருமானுக்கு தினம் தோறும் நைமித்திய பூஜை, அபிஷேகங்கள் நடைபெற்று வருகின்றன.

***திருமந்திர அரண்மனையின் சிறப்புகள்***

உலகிலே மூவாயிரம் திருமந்திர தமிழ் பாடல்கள் காலத்திற்கு அழியாதவாறு செதுக்கப்பட்டு கருங்கல்லில் உளி கொண்டு செதுக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருப்பது இதுவே முதன் முறையாகும். இது ஈழத்தில் கொக்கட்டிச் சோலையில் அமைத்திருப்பது சிறப்பாகும். கருங்கல்லில் உருவாக்கப்பட்ட 108 சிவலிங்கங்கள் அரண்மனை பிரகாரத்தில் பிதிஷ்டை செய்யப்பட்டு அடியார்கள் அனைவரும் தங்கள் கரங்களால் அபிஷேகம் செய்வதற்கு வசதி காணப்படுவது சிறப்பாகும்.

21 அடி உயரமான நிலையான இரதம் அதில் சிவனும் திருமூலரும் எழுந்தருளியிருக்கும் காட்சி அற்புதமானவை இவ்வாறு இரதத்தில் முதன் முதலில் சிவலிங்கப் பெருமான் அருகில் திருமந்திரத்தை எழுதிய திருமூலர் பெருமான் அமைக்கப்பட்டிருக்கும் அரண்மனை இதுவாகும்.

***சமூக நல்லுறவு***

திருமந்திர அரண்மனை சமூக நல்லுறவை வளர்க்கும் இடமாக காணப்படுகின்றது சிறப்பாகும். ஆலயங்கள் ஊடாகவே பண்பாடு, கலை, கலாசாரம் வளர்க்கப்படுகின்றன. இங்கு இந்த ஆலயத்திற்கு உலகில் எல்லாப் பாகங்களிலும் இருந்து மக்கள் வருகை தருகின்றனர்.

இங்கு சிவலிங்கங்களுக்கு தண்ணீர் ஊற்றி வழிபடும் ஈழத்து ஆலயங்களில் தனிச்சிறப்பினை உடைய ஆலயமாக காணப்படுகின்றது. இங்கு இந்த வழிபாடு அனைவரையும் ஓரே இடத்தில் பாகுபாடு இன்றி வழிபடும் சிறப்பினை மக்களுக்கு வழங்கியுள்ளது. கலாசாரம், பண்பாடுகளைப் பிரதிபலிப்பதாக உள்ளன.

**நிறைவுரை**

ஈழத்து இந்து பண்பாட்டு அம்சங்கள் காலத்துக்கு காலம் எழுச்சியடைந்தும் வீழச்சியடைந்தும் செல்லும் போக்கினை அறிய முடிகிறது. ஆறுமுகநாவலர் காலத்திலிருந்து இன்றுவரை சைவசமயம் பல சவால்களிற்கு மத்தியில் பாதுகாக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அச்சு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டது சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே ஆகும். அதற்குப் பின்பே நூல்கள் அச்சு வாகனம் ஏறின. இருந்தும் தமிழின் நீண்ட தொடர்ச்சியான இலக்கியப் பாரம்பரியமிக்க நூல்கள் சற்று சிதைந்து தொலைந்தாலும் கணிசமானளவு காலம் கடந்தும் கைகளுக்கு கிடைத்திருக்கின்றது. அந்த இலக்கியங்களை பலதலைமுறைகளாகப் பாதுகாக்க வேண்டும். இவற்றில் திருவாசகம், திருமந்திரம் சைவத்தின் பொக்கிஷங்கள் ஆகும். இவற்றினை இன்றைய சூழலில் பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளது.

சைவ இலக்கியங்களைப் பொறிக்கும் முறை காணப்படவில்லை. முதல் முதலில் ஈழத்தில் இறைவனுக்கு அரண்மனைகள் 2008ஆம் ஆண்டு தோற்றம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதனை அமைத்தவர் ஆறு.திருமுருகன் ஆவார். இவர் இலங்கையின் வடக்கில் திருவாசக அரண்மனையினையும், கிழக்கில் திருமந்திர அரண்மனையினையும் அமைக்கப்பட்டுள்ளது.

திருவாசகம் மற்றும் திருமந்திரங்களை சுவரில் பொறிப்பதால் காலத்துக்கும் அழியாது பேணப்படும். இவை பற்றி தெரிந்த கொள்ளாதவர்களும் தெரிந்த கொள்ள அரிய வாய்ப்பாக இது அமைந்துள்ளது. இவ் அரண்மனையினை ஒப்பிட்டு நோக்கும் போது இரண்டும் கிட்டடத்தட்ட ஒரே அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் வித்தியாசங்களும் இவ் இரு அரண்மனைகளிலும் காணப்படுகின்றன.

அரண்மனைகளின் இன்றைய நிலையினை நோக்கும் போது அரண்மனை அமைக்கப்பட்டதன் பின்னர் மக்கள் அதிகளவானவர்கள் வருகை தருவதையும் அவதானிக்க முடிகிறது. திருவாசகம், திருமந்திரம் தொடர்பான விடயம் மக்களை சென்றடைந்துள்ளது. அது தொடர்பான விடயங்களை ஆர்வத்துடன் படிக்கின்றமையைக் காணலாம். திருவாசக மற்றும் திருமந்திர அரண்மனைகள் தொடர்பாக சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை

அறிந்துள்ளமை சிறப்பான விடயமாகும். இதனால் இப்பாடல்கள் என்றும் காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கையும் மனநிறைவும் ஏற்படுகின்றது. எக்காலத்துக்கும் அழியாது பாதுகாப்பதன் மூலம் அடுத்த சந்ததி வரையும் சைவப் பாரம்பரியங்களை பாதுகாத்து இந்துசமயத்தை நிலைநாட்ட முடியும் என்பது மிகையாகாது. திருவாசக, திருமந்திர அரண்மனைகளில் உள்ள பாடல்கள் திருமந்திரம், திருவாசகம் தொடர்பாக ஆய்வினை மேற்கொள்வதற்கு உதவியாக அமையும்.

இவ்வரண்மனைகளினால் எமது சைவ பாரம்பரியங்கள் பாதுகாக்கப்படுகின்றது. அரண்மனை அமைப்பு பண்டைய பாரம்பரியங்களை வெளிப்படுத்துகின்றன. இங்குள்ள கருங்கற் தேர் அமைப்பு ஈழத்து ஆலயங்களிற்கு புதிதான விடயமாகும். கருங்கல்லில் ஆலயம் அமைந்துள்ளது. பழைய சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன. திருவாசகம் மற்றும் திருமந்திரப் பாடல்கள் ஆலயத்தில் காணப்படுவதால் அதனை படிக்கும் வாய்ப்பு கிடைக்கின்றது. இதன் மூலம் மக்களிற்கு விழுமியச்சிந்தனைகளைத் தூண்டுவதாக காணப்படுவதோடு அதனை பின்பற்றி நடக்கும் வாய்ப்பு உருவாகின்றமை குறிப்பிடத்தக்கவையாகும். இந்து சமய வாழ்வியலோடு தொடர்புடைய பாடல்கள் காணப்படுகின்றன. இவ்வரண்மனைகளில் இவற்றைப் படிப்பதால் மக்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைகின்றன. இவ் அரண்மன தொடர்பான விடயங்கள் இதுவரை வெளிவரவில்லை என்பதுடன் எனது ஆய்வு அரண்மனை தொடர்பான விடயங்களை தெளிவாக வெளிப்படுத்துவதாக அமைகிறது.

திருவாசக, திருமந்திர அரண்மனையில் பொறிக்கப்பட்ட பாடல்கள் பொருள் விளக்கத்துடன் பொறித்திருந்தால் பாடல்களின் சிறப்புக்களை இலகுவான முறையில் வாசித்து அதனை தெரிந்து கொள்ள முடியும் என்பது எனது பரிந்துரையாக உள்ளது. இனிவரும் காலங்களில் இவ்வாறான அரண்மனைகள் உருவாக்க வேண்டும். இதனால் மட்டுமே காலம் கடந்தும் சைவத் தமிழ் பாரம்பரியங்கள் அழிவடையாது பாதுகாக்க வேண்டும். இவ் அரண்மனை அமைத்ததனால் விமர்சனங்களும் காணப்படுகின்றன. இருப்பினும் விமர்சனங்களைத் தாண்டி அரண்மனை மக்களினால் வரவேற்கப்படுகின்றன. திருமுருகனின் நல் முயற்சி உலகில் உள்ள அனைவரையும் திரும்பி பார்க்க வைத்துள்ளன. இவ்வரண்மனைகளை அமைத்ததனால் இளம் சமூகத்தினர் இது தொடர்பான விடயங்களை அறிந்து கொள்வதற்கும் உதவியாக இருப்பதுடன் இனிவரும் காலங்களில் இது போன்ற விடயங்களைப் பாதுகாப்பதற்கு இவ்வரண்மனைகள் முன்னோடியாக இருக்கும்.

**உசாத்துணைகள்**

அருளம்பலவாணர்.சு.(1993). *திருவாசக ஆராய்சியுரை.* பாரி நிலையம்.

அறு.திருமுருகன் அகவை ஐம்பது. *சிறப்புமலர்*(2011). அகில இலங்கை இந்துமாமன்றம்.

இந்திரபாலா.க. (1970). *இலங்கையில் திராவிடக்கட்டடக்கலை.* குமரன் புத்தக இல்லம்.

கலைவாணி.இ.(1997), *இந்துமரபில் வர்ணதர்மமும் சைவசித்தாந்த ஒழுக்கவியலும்.* கரிகணண் பிரிண்டோர்ஸ்.

சிவபூமி திருமந்திர அரண்மனை. *சிவபூமி மாத இதழ்* (2022). சிவபூமி அறக்கட்டளை.

சிவலிங்கராஜா, க.(2014). தென்னிந்திய சிற்பவடிவங்கள். *கலைக்கோரி.*

திருவாசக அரண்மனை ஓராண்டு சிறப்பு மலர (2019). சிவபூமி அறக்கட்டளை.

திருமுருகம் 60. *மணிவிழா மலர்* (2021). துர்காதேவி தேவஸ்தானம்.

# Ethics and Human Values

# இணையவழிக் குற்றங்களில் தகவல் தொழில்நுட்பத்தின் செல்வாக்கு - ஒரு பிரயோக ஒழுக்கவியல் நோக்கு

**தேவதாஸ் தவேநிதா, முனியாண்டி ரவி**
தத்துவவியல் மற்றும் விழுமிய கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், *இலங்கை.*
thavanithathevathas@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

நவநாகரிக யுகத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது துரிதமான வளர்ச்சியை அடைந்துள்ளது. இது ஒரு புறம் இருக்க மறுபுறம் இணையப் பாவனையானது சமூகத்தின் மத்தியில் இன்றியமையாததாக காணப்படுகின்றது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை இணையத்தின் வாயிலாக பாவிக்கின்ற போது ஏற்படுகின்ற ஒரு பெரும் பாதகமான விளைவாகவே இணையவழிக் குற்றங்கள் கருதப்படுகின்றன. புதியவகை பிரச்சினையாக உருவெடுத்துள்ள இணையவழிக் குற்றங்கள் பற்றிய ஆய்வாகவே இவ்வாய்வானது அமையப் பெற்றுள்ளது. அந்தவகையில் இணையவழிக் குற்றங்களிற்கு அடிப்படையாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான அபரிமிதமான வளர்ச்சிதான் காரணமாகின்றது என்பதனையும் இதன்வழியாக சமூகத்தில் ஏற்படுத்தப்படுகின்ற ஒழுக்கமீறுகைகளைக் கண்டறிவதையும் நோக்கமாக இவ்வாய்வு கொண்டுள்ளது. கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்தான் இணையவழிக் குற்றங்களுக்கு அடிநாதமாக அமைகின்றது எனும் முடிவுக்கு வர முடிகின்றது. இதன் அடிப்படையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துகின்ற பயனர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நுட்பமுறைகள், கொள்கை மற்றும் திட்டமிடுதல் சார்ந்தோர்கள் பின்பற்ற வேண்டிய நியதிகள், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வடிவமைப்பாளர்கள் எதிர்காலத்தில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் போன்ற பரிந்துரைகளையும் இவ்வாய்வானது வெளிப்படுத்துகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *இணையவழிக் குற்றங்கள், ஊடுருவுதல், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், தரவுத் திருடர்கள்*

## அறிமுகம்

இணையவழி விருத்தியில் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் செல்வாக்கு ஏற்படுத்தும் சமூக, கலாசார, விழுமிய, நம்பிக்கை ரீதியான ஒழுக்க மீறுகைகளை வெளிக்கொணர்வதே இவ் ஆய்வின் நோக்கமாக உள்ளது. மனிதர்கள் தமது தகவல் பரிமாற்றத்தை இலகுபடுத்த அறிமுகப்படுத்தப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துகின்ற போது பல பாதமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். அதாவது தம்மோடு தொடர்புபட்ட பல அந்தரங்க, தொழில் சார்ந்த, கல்வி சார்ந்த பல தகவல்களை பரிமாற்றம் செய்கின்றனர். இது குறித்த நிறுவனத்தினால் பாதுகாப்பாக பேணப்படுகின்றது எனவும் நம்பிக்கை கொள்கின்றனர். இதனை ஒரு களமாக பயன்படுத்தி இணையத்தின் ஊடாக தரவுத்திருடர்கள் (Hackers) திருடுகின்றனர். இது எமது சமூகத்தில் தற்காலத்தில் அதிகமாகவே காணப்படுகின்றது. இதனால் உயிர் மாய்ப்பு, பண இழப்பு, சமூக அந்தஸ்து குறைதல், குற்றவாளியாதல் போன்ற துர்பாக்கிய நிலை எழுகின்றது. இவ்வகையில் அபரிமிதமான தகவல் தொழில்நுட்பத்தின் இணையவழி தளத்தின் மீதான செல்வாக்கு இணையவழி குற்றங்களுக்கு காரணமாக அமைகின்றது. இதுவே இவ்வாய்வின் முக்கிய பிரச்சினையாகும்.

**ஆய்வுக் கருதுகோள்**

இணையவழி குற்றங்கள் தகவல் தொழினுட்பங்களின் செல்வாக்கினால் நிகழ்கின்றது.

**ஆய்வின் முக்கியத்துவம்**

மனிதன் தனது தொடர்பாடல் முறையை மிகவும் இலகுவாக மாற்றி அமைப்பதற்காக தகவல் தொழில்நுட்பத்தினை உருவாக்கினான். இத் தொழில்நுட்பமானது மனிதனின் தேவையை இலகுபடுத்திய அதே நேரம் தொடர்பாடல் முறையையும் துரிதப்படுத்தியது. இத் துரிதப்படுத்தலின் தாக்கமாக உருவாகியதே இணையவழி குற்றங்களாகும்.

தற்கால உலகியல் பிரச்சினைகளுள் நவீன தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் வருகையினால் மனிதர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மிகவும் முக்கியமானதாகும். சமூக வலைத்தளங்கள், தொலைக்காட்சி, பண வைப்பு, பணம் மீளப்பெறும் இயந்திரம், கணினி, கைத்தொலைபேசி போன்றன நவநாகரிக தகவல் தொடர்பாடல் சாதனங்களாகும். தொழில்நுட்பங்களின்அபரீத வளர்ச்சியின் விளைவாக இன்றைய காலகட்டத்தில் தனிநபர் சார்ந்த, வியாபாரம் சார்ந்த, கல்வி சார்ந்த, நாட்டின் பாதுகாப்பு சார்ந்த பல தரவுகள் மென்பொதிகளின் உதவியுடன் களவாடப்படுகின்ற அதே நேரம் அதனை ஒற்றியதான கொலை மிரட்டல், தற்கொலை, இணையத்திற்கு அடிமையாதல், அச்சுறுத்தல், திருட்டு போன்ற பல சம்பவங்கள் சமூகத்தில் இடம்பெற்ற வண்ணமே உள்ளது.

அதிலும் குறிப்பாக சமூக வலைத்தளங்களிலே அதிகளவான இணையவழி குற்றங்கள் நிகழ்கின்றன. ஆகவே இன்றைய வளர்ச்சி அடைந்த உலகில் மனிதர்களின் அறியாமை காரணமாக பல விதமான இன்னல்களை எதிர் நோக்க வேண்டியேற்படுகின்றது. அவ்வாறான பிரதான இணையவழி குற்றங்கள் எவை எனவும், இவ் இணைய வழி குற்றமானது மனிதனின் முக்கிய அங்கமாக இருக்கின்ற தகவல் தொழில்நுட்பத்தில் எவ்வாறான செல்வாக்கினை வகிக்கின்றது என்பதையும் வெளிக்கொணரும் வகையில் இவ் ஆய்வு முக்கியம் பெறுகின்றது.

தகவல் தொடர்பாடல் சாதனங்கள் மனிதர்கள் மத்தியில் எவ்வளவு தூரம் செல்வாக்கு செலுத்துகின்றது. அதனை அடிப்படையாக கொண்டு இணையவழி குற்றங்கள் நிகழ்வதற்கு மனிதர்களை எது தூண்டுகின்றது? அதற்கான காரணங்கள் என்ன? இவ்வாறான இணையவழி குற்றங்களால் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் எவ்வாறான சர்ச்சசைக்குள்ளாகியுள்ளது? போன்றவற்றை தேடுவதும் இவ் ஆய்வின் முக்கிய நோக்கமாக உள்ளது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு ஓர் பண்புசார் ஆய்வு அணுகுமுறையினை பிரதானமாக கொண்டதொன்றாகும். இப் பின்னணியில் கவனக்குழு நேர்காணல் (FOCUS GROUP INTERVIEW) பிரதான வகிபாகத்தை கொண்டுள்ளது. ஒழுக்க கொள்கை பிரயோகம் பற்றிய கலந்துரையாடல் இரண்டாம் அத்தியாயத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது. நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகை தகவல்கள், ஆய்வு தலைப்புடன் தொடர்புபட்ட முன்னைய ஆய்வு வெளிப்படுத்துதல்கள்

போன்றவை இரண்டாம் நிலைத் தரவுகளாகவும், இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் இணையத்தளம் போன்ற மூன்றாம் நிலைத் தரவுகள் ஊடாகவும் தரவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**ஆய்வு வரையறை**

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது பாரிய வளர்ச்சியை அடைந்துள்ள இந்த யுகத்தில் இணையவழி குற்றங்களால் தமது இடத்தில் சற்று சரிவினை கண்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. இத் தகவல் பரிமாற்ற தொழில்நுட்பமானது மனிதனின் தகவல் தேவையினை இலகுபடுத்தி உடனுக்குடன் முழு உலகத்துடனும் தொடர்பினை ஏற்படுத்தி கொள்வதற்காக உருவாக்கப்பட்டது ஆனால் அதன் பாதுகாப்பு தற்போது கேள்விக்குறியாக்கபட்டுள்ளது என கூறமுடியும். இந்நிலை ஒழுக்க விழுமியங்களுடன் தொடர்புபட்டது என்ற வகையில் நான் இவ்வாய்வினை ஒழுக்கவியலின் பிரதான பிரிவுகளில் ஒன்றான பிரயோக ஒழுக்கவியலுடன் தொடர்புபடுத்தியே மேற்கொள்ள உத்தேசித்து உள்ளேன்.

‘‘இணையவழி குற்றங்களில் தகவல் தொழில்நுட்பத்தின் செல்வாக்கு- ஓர் பிரயோக ஒழுக்கவியல் நோக்கு.’’ எனும் தலைப்பை கொண்ட இவ்வாய்வானது ஓர் இரண்டாம் நிலை ஆய்வாகவே காணப்படுகின்றது.

**இலக்கிய மீளாய்வு**

நவநாகரிக காலத்தில் மனிதன் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வசதிகளையும் கருவிகளையும் பயன்படுத்துவதனால் எற்படுகின்ற இணையவழி குற்றங்கள் இன்று உலகளாவிய ரீதியில் பேசப்படும் முக்கிய பிரச்சினையாக காணபப்படுகின்றது. அபரித தகவல் தொழில்நுட்பத்தின் செல்வாக்கு இணையவழி குற்றங்களுக்கு காரணமாக அமைகின்றது என அடையாளப்படுத்தும் வகையில் அமைந்திருக்கும் இவ் ஆய்வுக்கமைய வெளியிடப்பட்டுள்ள ஆய்வுகள், கட்டுரைகள், நூல்கள் போன்றன இவ் ஆய்வினை முன்னெடுத்துச் செல்ல பெரிதும் உதவியாக அமைந்துள்ளது. அவற்றுள் சில இங்கு குறிப்பிடப்படுகின்றது.

1. 2019 ஆம் ஆண்டு வெளிவந்த ‘‘நவீன தொடர்பாடல் தொழில்நுட்ப சாதனங்களின் பயன்பாடும் இளைஞர்களில் ஏற்படுத்தும் உளவியல் மற்றும் ஒழுக்கவியல் பாதிப்புக்களும்’’ எனும் தலைப்பில் தங்கவடிவேல் விறோன்சென் என்பவரால் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரை நோக்கத்தக்கது. இதில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி, சமூகத்தில் இணையத்தள மற்றும் கைத்தொலைபேசியின் தாக்கம் எவ்வாறு உள்ளது போன்ற விடயங்கள் விபரிக்கப்பட்டுள்ளது.

2. 2019ம் ஆண்டு வீரகேசரி பத்திரிகையில் வெளியான ‘‘இன்றைய உலகில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பங்களிப்பு’’ எனும் தலைப்பில் சிந்துஜா.சி

என்பவரால் எழுதப்பட்ட கட்டுரை நோக்கத்தக்கது. இதில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் வரலாறு, சமகால போக்கு போன்றவை வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

3. 2019ஆம் ஆண்டு வெளிவந்த *"An introduction to cyber crime and cyber law"* எனும் தலைப்பில் *Prof.R.K.Chaubey* என்பவரால் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரை நோக்கத்தக்கது.

4. 2019ஆம் ஆண்டு வெளியான "cyber crime and cyber law: an overview" எனும் தலைப்பில் சாம்பவி.தி என்பவரால் எழுதப்பட்ட கட்டுரை நோக்கத்தக்கது. இதில் இணையவழி குற்றங்களின் தாக்கம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், இணையவழி குற்றங்களை தடுப்பதற்கான சட்ட கோவைகள் தொடர்பான விளக்கங்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன.

5. 2012ஆம் ஆண்டு வெளிவந்த *"An overviewstudy on cyber crimes in internet"* எனும் தலைப்பில் *Prof.karamchand gandhi* என்பவரால் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரை நோக்கத்தக்கது. இதில் இணையவழி குற்றங்கள், இணையவழி திருட்டு போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

பொதுவாக இணையவழிக் குற்றங்களை இரு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தபட்டுள்ளன.

1. இலக்கிற்காக கணினியை பயன்படுத்துதல் : அதாவது பிற கணினிகளை இலக்கு வைத்து தாக்குவதற்காக ஒரு கணணியை பயன்படுத்துவதே இலக்கிற்காக கணினியை பயன்படுத்துதல் எனப்படுகின்றது. உதாரணமாக தரவு திரட்டு, வைரஸ் தாக்குதல்கள், DOS தாக்குதல்கள்.
2. கணினியை ஆயுதமாக பயன்படுத்துதல் : அதாவது கணினியினை ஆயுதமாக பயன்படுத்தி உலகளாவிய குற்றங்களை புரிதல். உதாரணமாக இணைய தீவிரவாதம், IPR மீறல்கள், பணவரவட்டை, கடனட்டை மோசடிகள், EFT மோசடிகள், ஆபாச படங்கள்.

மேற்கூறிய இரு வகைக்கும் மேலதிகமாக அங்கீகரிக்கப்படாத அனுமதி (unauthorized access), ஊடுருவுதல் மற்றும் உடைத்தல் (Hacking & Cracking), இணைய மோசடிகள் அல்லது நிகழ்நிலை மோசடிகள் (online Fraud), அதிஷ்ட இலாப சீட்டு மோசடிகள் (lottery Frauds), இலத்திரனியல் பண அட்டை மோசடிகள். (Credit Card Fraud), பல்லூடக குற்றங்கள், போலி கணக்குகள் (Fake ID) போன்றனவும் இணையவழி குற்றங்கங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. (Kejal Vadsha, 2013).

இவ் ஆய்வுக்காக தகவல்களைப் பெறும் பொருட்டு கவனக்குழு கலந்துரையாடல்( focus group interview) அதிகளவில் பயன்படுத்தப்பட்டது. எழுமாற்று முறையில் பல்கலைக்கழக மாணவர்களை தேர்வு செய்து அவர்களுடன் கலந்துரையாடி என்னால்

முன்வைப்பு செய்யப்பட்ட வினாக்களின் அடிப்படையில் அவர்களிடம் இருந்து பதில் பெறப்பட்டு தொகுப்பாக்கம் செய்யப்பட்டது. இவை தவிர இவ்வாய்வுடன் தொடர்புபட்ட முன்னைய ஆய்வு கட்டுரைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் போன்றவையும் இவ்வாய்வுக்காக பயன்படுத்தப்பட்டது.

தற்காலத்தை பொறுத்தவரையில் தொழில்நுட்ப சாதனங்கள் அதிகளவில் உருவெடுத்துள்ளது. மனிதனின் தேவையை இலகுபடுத்த உருவாக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் தான் இணையவழி குற்றங்களுக்கு ஊன்றுகோலாய் அமைந்துள்ளது. இவ் இணையவழி குற்றம் என்பது புதியவகை குற்றமாக கருதப்படுகின்றது. இணையவழி குற்றங்களினால் வங்கிகள், நிதி மற்றும் தொழில் நிறுவனங்கள், காப்பீட்டு கழகங்கள், முதலீட்டு கழகங்கள், பெண்கள், சிறுவர்கள், ஆண்கள், மாணவர்கள் போன்றோர் பெரும் சவாலை எதிர்நோக்கி வருகின்றனர். பொருளாதார ரீதியாக, சமூகரீதியாக மற்றும் தனிநபர் ரீதியாக என பல நிலைகளில் இளம்வயதினர் பாதிக்கப்படுகின்றனர். இளைஞர்கள் அளவுக்கு அதிகமாக கணினி மற்றும் இணையத்தினை பாவனை செய்வதன் காரணமாக இணையவழி குற்றங்கள் அதிகளவில் அவர்கள் மீது செல்வாக்கு செலுத்துகின்ற ஒன்றாக மாறியுள்ளது. அதிகாரம் அற்ற அனுமதியின் ஊடாக (unauthorized access) புறப்படுகின்ற மின்னஞ்சல்கள், மின்னஞ்சலின் வழியாக பெறப்படுகின்ற ஆபாச படங்கள் மூலமான அச்சுறுத்தல்கள், எச்சரிக்கைகள், தரவுகளை அழித்தல், இதனால் செய்திகளை அனுப்புவது மற்றும் காணொளிகளை அனுப்புவதில் உள்ள இடர்பாடு காரணமாக இளைஞர்கள் உளரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர். ஆபாசமான புகைப்படங்கள், காணொளிகள் போன்றவற்றின் ஊடாக நிகழ்கின்ற இணையவழி குற்றங்களானவை தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியுடனாக நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது எனலாம்.

அடுத்து இணையவழி குற்றங்களினால் அதிகம் பாதிப்புக்கு உள்ளாகின்ற தரப்பினராக பெண்கள் காணப்படுகின்றனர். இந்த ஆய்வுக்காக என்னால் மேற்கொள்ளப்பட்ட கவனக் குழு கலந்துரையாடலில் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இணையவழி குற்றங்களின் மூலமாக அதிகமான பாதிப்புகளை எதிர்கொள்ளும் நபர்களாக பெண்கள் அடையாளப்படுத்தப்பட்டனர். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பாவனையானது அதிகரித்த கணத்திலிருந்து பெண்கள் மீதான இணையவழி குற்றங்களும் அதிகரித்துள்ளது. பெண்கள் பொதுவாக நலிவு நிலையினராக சமூகத்தில் இணையவழி குற்றவாளிகள் பெண்களை இலக்கு வைத்து அவர்களது தரவுகளை இணைய வழியினூடாக திருடுகின்றனர். அன்றாடம் அவளது புகைப்படங்கள், ஏனைய நபர்களுடன் அவள் உரையாடிய உரையாடல்கள், சமூக வலைத்தளங்களில் அவளால் திறக்கப்பட்டிருந்த கணக்குகள் போன்றவற்றினை குறி வைத்து குறித்த பெண்ணை இணையவழி குற்றத்திற்கு ஆளாக்க எத்தணிக்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு உலக நாடுகளில் நடாத்திய ஆய்வில் 60% பெண்கள் சமூக வலைத்தளங்கள் மூலம் இணையவழி குற்றங்களுக்கு பலியாகின்றனர் என்றும் 39% பெண்கள் முகநூல் வாயிலாக இணையவழி குற்றங்களுக்கு இரையாகின்றனர் என்றும் இணையவழி குற்றங்களை எதிர்கொள்ளும் பெண்களில் 20% பேர் இணைய பயன்பாட்டினை

முற்றிலுமாக தவிர்த்து விடுகின்றனர் என்றும் தெரியவந்துள்ளது. 2022 ஆம் ஆண்டில் இணையம் வழியாக சிறுமிகளிடம் நடாத்தப்பட்ட ஆய்வில் 58% சிறுமிகள் இணையவழி குற்றங்களால் பாலியல் கொடுமையை எதிர்கொண்டதாகவும் 50% சிறுமிகள் சாலைகளில் பயணிக்கும் பொழுது ஏற்படும் பாலியல் துன்புறுத்தலை காட்டிலும் அதிகமான துன்புறுத்தலை இணையவழி குற்றங்களால் எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர் (இணையவழி குற்றங்கள் 2013).

அடுத்து இணையவழி குற்றங்களினால் அதிகமாக பாதிக்கப்படுகின்ற தரப்பினர்களாக மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் அடையாளப்படுத்தப்படுகின்றனர். விசேஷமாக மாணவர்களை நிகழ்நிலை விளையாட்டுக்கு அடிமையாக்கி அதன் மூலமாக மாணவர்கள் மற்றும் சிறுவர்களின் உயிர்கள் காவு கொல்லப்பட்ட சம்பவங்களும் கொரோனா காலப்பகுதியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகவே உள்ளது. இத்தகைய விளையாட்டுகளை இணையவழி திருட்டு நிறுவனங்கள் இத்தகைய தரப்பினரே குறி வைத்தே வடிவமைக்கின்றனர். இதற்கு உதாரணமாக நீலத்திமிங்கில விளையாட்டு (BLUE WHALE GAME) மற்றும் பப்ஜி போன்ற நிகழ்நிலை விளையாட்டுகளை குறிப்படலாம் (இணைய குற்றங்கள் அதிகரிப்பு )

இலங்கையை பொறுத்தவரையில், 2003ம் ஆண்டு 27ம் இலக்க தகவல் மட்டும் தொடர்பாடல் சட்டகோவை , 2006ம் ஆண்டு 19ம் இலக்க இலத்திரனியல் பரிமாற்ற சட்டக்கோவை, 2007ம் ஆண்டு 24ம் இலக்க கணினி குற்ற சட்டக்கோவை போன்ற சட்டங்களின் கீழ் வழக்கு தாக்கல் தொடுத்து தீர்வினை பெற்றுகொள்ள முடியும்.

The digital millennium copyright Act (DMCA), The European Union's General Data Production, Regulation (GDPR), The computer Fraud and Abuse Act (CFAA), The Cybercrime Convention of the council of Europe, The children's Online Privacy Protection Act (COPPA) போன்ற சர்வதேச ரீதியாக சட்ட ஏற்பாடுகள் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

**முடிவுரை**

இவ்வாய்வானது ஆறு அத்தியாயங்களை கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. முதலாவது அத்தியாயமானது ஆய்வு தொடர்பான சுருக்கமான விளக்கத்தை முன்வைக்கின்ற அதே நேரம் இரண்டாம் மூன்றாம் நான்காம் அத்தியாயங்கள் இவ்வாய்வு விடயத்தை அறிமுகம் செய்வதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து முறையே ஐந்தாம் ஆறாம் அத்தியாயங்கள் இணையவழி குற்றங்கள் தொடர்பான விளக்கங்களையும் அதற்கான தீர்வாலோசனைகளையும் முன்வைப்பதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

உலகில் தகவல் தொழில்நுட்பத்தின் வகிபாகம் என்பது இன்றியமையாத ஒன்றாகவே காணப்படுகின்றது. இத்தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியினால் தான் எமது தகவல் பரிமாற்றம் இலகுபடுத்தப்பட்டுள்ளது. இருந்த போதிலும் இத் தகவல் தொழில் நுட்பத்தினை

மையப்படுத்தியதாகத் தான் இணையவழி குற்றங்கள் தோற்றம் பெறுகின்றனவா என்பதற்கு விடை காண்பதாகவே இவ்வாய்வு நிகழ்த்தப்பட்டது எனலாம்.

ஆரம்ப காலங்களில் புறாவிடு தூது, அன்னம்விடு தூது, பறை, சங்கொலி, தீ போன்ற தகவல் தொடர்பாடல் நுட்பமுறைகள் பயன்படுத்தப்பட்ட போது இணையவழி குற்றம் என்ற ஒன்று இருக்கவில்லை. மாறாக சமூகத்தில் நேர்மைத் தன்மையும், பிரச்சினைகள் அற்ற அமைதியான வாழ்க்கையையுமே காணப்பட்டது. ஆனால் விஞ்ஞானத்தின் வளர்ச்சி காரணமாக அறிமுகப்படுத்தப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் வருகையின் பின்னர் இத்தகைய வாழ்வில் பாரியளவான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு இணைய வழி குற்றங்களானது ஊற்றெடுத்துள்ளது. இதனால் சமூகத்தில் பல வகையான ஒழுக்க மீறுகைகளும் உயிர் இழப்புகளும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

இவ்வாறான இணையவழி குற்றம் பற்றிய விழிப்புணர்வு சமூகத்தினரிடையே காணப்படுகின்ற போது இத்தகைய இணையவழி குற்றங்களிலிருந்து எம்மால் விடுபட முடியும். அதற்கான மனோபக்குவமும் வழிமுறைகளையும் நாமே வடிவமைத்துக் கொண்டு செயல்பட வேண்டும். எமக்கான கட்டுபாடுகளை நாமே வரையறுத்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் இணையவழி குற்றங்களிருந்து விடுபட முடியும். ஆகவே தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களில் மாற்றம் கொண்டு வருவது என்பது சவாலுக்குரியதாக காணப்படுகின்ற அதே நேரம் மனித நடத்தையில் மாற்றத்தினை கொண்டு வருவதென்பது சாத்தியமானதாக உள்ளது.

ஆகவே இணையவழி குற்றம் என்கின்ற ஒன்று உருவெடுத்திருப்பதனால் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வளர்ச்சி என்பது தவறானது தான் என சுட்டிக்காட்ட முடியாது. ஏனெனில் அளவுக்கதிகமான நன்மைகளையும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது எமக்கு அளித்துள்ளது என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் இணையவழி குற்றங்களை முற்றாக ஒழிப்பது என்பது கேள்விக்குறியாக காணப்படுகின்ற அதே நேரம் எமது செயற்பாடுகள் மூலமாக அவற்றினை கட்டுப்படுத்த முடியும் என்பதே நிதர்சனமாக உள்ளது.

**பரிந்துரைகள்**

இணையவழி மூலமான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பாவனையானது தவிர்க்க முடியாத ஒன்றாக சமூகத்தின் மத்தியில் உருவெடுத்துள்ளது. இவ்வாறான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியானது பல நன்மைகளை எமக்கு அளிக்கின்ற போதிலும் மறு புறமாக பல தீமைகளையும் நாம் எதிர் கொள்ள வேண்டி ஏற்படுகின்றது என்பது நிதர்சனமான உண்மை. இப் பின்னணியில் இவ்வாறான பிரச்சனைகளில் இருந்து விடுபடுவதற்கு இவ்வாய்வினை மேற்கொண்ட ஆய்வாளன் என்ற வகையில் நான் சில பரிந்துரைகளை இங்கு முன்வைக்க விரும்புகின்றேன்.

## தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மென்பொருளை பாவனை செய்யும் பயனர்களுக்கான உத்தேச பரிந்துரைகள்

நவநாகரிக யுகத்தில் தகவல் பரிமாற்றம் என்பது தகவல் தொழில்நுட்பத்தின் வாயிலாகத்தான் இடம்பெறுகின்றது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. ஆகவே இங்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் செல்வாக்கானது இன்றியமையாத ஒன்றாக காணப்படுகின்றது. அதனை பயன்படுத்துவதை தடுப்பது என்பது சவாலுக்குரிய ஒன்றாக இருக்கின்ற அதே நேரம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துகின்ற போது சில வரையறைகளோடும் பாதுகாப்பான நுட்பங்களோடும் பயன்படுத்துவது என்பது சாலச் சிறந்ததாக அமையும். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துகின்ற போது அது தொடர்பான முழுமையான அறிவினை பெற்றவனாக பயனர்கள் இருத்தல் வேண்டும். அவ்வாறு இருக்கின்ற பொழுது தான் இணையவழி குற்றங்களிலிருந்து அவனால் ஓரளவு விடுபட முடியும்.

நுகர்வோனும் சாதாரண மனிதன் என்ற வகையில் அவனுக்கும் வரையறுக்கப்பட்ட சில ஒழுக்க கடப்பாடுகள் காணப்படுகின்றன. இந்த ஒழுக்க கடப்பாடுகளை அவன் மீறி செயல்படுகின்ற போதே ஒழுக்க சீர்கேடான நடத்தைகள் சமூகத்தில் பதிவாகின்றது. மனிதனுக்கெனவே வரையறுக்கப்பட்டுள்ள கடவுள், விசுவாசம், நம்பிக்கை, மனிதத்துவம், ஒழுக்கம், நியமம் போன்றவற்றினை அவன் கடைபிடிக்கின்ற போது ஒழுக்க சீர்கேடுகள் என்பவை சமூகத்தில் இல்லாமல் செய்யப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமாகவே காணப்படுகின்றன.

ஜே.எஸ்.மில் என்பவரால் முன்வைக்கப்பட்ட பயன்பாட்டு வாதத்தின் அடிப்படையில் ஒரு செயலானது ஒரு நபரினால் செய்யப்படுகின்ற போது அந்த செயலினால் அனேகமானவர்கள் பயனடைவார்களாயின் அச்செயலானது ஒழுக்க ரீதியான செயல் என வரையறுக்கப்படுகின்றது. இந்த அடிப்படையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை நுகருகின்ற நுகர்வோன் தான் நிகழ்த்துகின்ற செயலினால் தானும் தன்னை சுற்றியுள்ளவர்களும் அதிகளவான பயனை பெறுகின்றார்களா? என்பதனை அவன் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். தனது செயலினால் அனேகமானவர்கள் பயனை பெற முடியாதவர்களாக இருப்பார்களாயின் தன்னால் செய்யப்படுகின்ற அந்த செயல் ஒழுக்க ரீதியற்ற செயலாகும் என்பதனை ஒவ்வொரு பயனரும் உணர வேண்டும்.

ஆகவே இவ்வாறான ஒழுக்க ரீதியற்ற செயற்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்து கொள்வதற்கான மனப்பக்குவமானது முதலில் நுகர்வோரின் மனப்பாங்குகளிலேயே கட்டி எழுப்பப்பட வேண்டும். அவ்வாறு கட்டியெழுப்பப்படுகின்ற போது தவறான செயல்களில் இருந்து தன்னைத்தானே விடுவித்துக் கொள்பவனாக குறித்த நுகர்வோன் காணப்படுவான்.

தவறான விடயம் ஒன்று தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் பகிரப்படுகின்ற போது குறித்த நபர் அதனை தன்னோடு மாத்திரமே வைத்துக் கொண்டு இரகசியம் பேணும் மனப்பாங்கு கொண்டவனாக இருக்க வேண்டும். மாறாக அதிகமானவர்களுக்கு பயனளிக்கக் கூடிய ஒரு விடயமானது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களில் பகிரப்படுகின்ற போது

இதனால் அதிகமானவர்கள் பயனடைவர் என்பதனை உறுதிப்படுத்திக் கொண்டு குறித்த நுகர்வோர் அதனை அனைத்து மக்களுக்கும் பகிரக் கூடியவனாக இருத்தல் வேண்டும்.

உதாரணமாக சமூக வலைத்தளங்களை பொறுத்தவரையில் ஒர் பெண்ணின் ஆபாச புகைப்படங்கள் பகிரப்படுகின்ற பட்சத்தில் ஒழுக்க ரீதியான நடத்தையுடைய நுகர்வோன் அதனை பகிராமல் அதனை தன்னோடு மாத்திரமே மட்டுப்படுத்த கூடியவனாக இருத்தல் வேண்டும். அதே போல் ஒட்டு மொத்த சமூகத்திற்கும் பயன் தரக்கூடிய போதைவஸ்து பாவனை தொடர்பான விழிப்புணர்வானது அனைவராலும் சமூக வலைத்தளங்களில் பகிரப்படலாம் இதனால் அதிக மக்கள் பயனடைவர்.

'யான் பெற்ற இன்பம் பெறுக வையகம்' எனும் தாரக மந்திரத்திற்கு அமைவாக தனக்கு கிடைக்கின்ற நன்மையான ஒரு செயற்பாடானது ஏனையவர்களுக்கும் கிடைக்க வேண்டும் எனும் நோக்கில் குறித்த நுகர்வோன் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்த எத்தணிப்பானாயின் குறித்த சமூகத்தில் சமூக சீர்கேடுகள் என்பது இல்லாமல் செய்யப்படும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

இருந்த போதிலும் இவ்வாறான மனப்பான்மைக்கும் மேலதிகமாக நுகர்வோர்கள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துகின்ற போது சில வரையறைகளை தாங்கள் கொண்டு செயற்படுதல் வேண்டும். அவையாவன:

- பயனர்கள் தமது கடவுச்சொல்லினை இரகசியமான முறையில் பயன்படுத்த வேண்டும். தமது கையடக்க தொலைபேசிகள், மடிக்கணினிகள் போன்றவற்றினை கவனமான முறையில் கடவுச்சீட்டு ஒன்றின் மூலமாக இயக்க வேண்டும்.
- நிகழ்நிலையில் எமது இலத்திரனியல் பண அட்டைகளை பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்கின்ற போதும் பொருட்களை கொள்வனவு செய்கின்ற போதும் பாதுகாப்பான முறைகளை கையாள வேண்டும் உதாரணமாக மூவீ கிடைக்கப்பெறுகின்ற நடவடிக்கைகளை மாத்திரம் பயன்படுத்தி வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.
- பயனர்கள் தமது அனைத்து தகவல் தொடர்பாடல் மென்பொதிகளுக்கும் ஒரே இரகசிய இலக்கத்தினை பாவனை செய்வதனை தவிர்க்க வேண்டும் ஏனெனில் ஒரு தகவல் தொடர்பாடல் மென்பொதியானது தரவுத்திருடர்களினால் திருடப்படும் போது அனைத்து மென்பொதிகளும் ஒரே தரத்தில் திருடப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.
- இணைய வழியினூடாக எவரேனும் ஒரு நபர் பண மிரட்டல்களோ, உயிர் அச்சுறுத்தல்களோ, பாலியல் து்'பிரயோக செயற்பாடுகளிலோ ஈடுபடுகின்ற போது அதனை குடும்பத்தாரிடம் பகிர்ந்து அதனை தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- கடவுச்சொல் முகாமை செய்கின்ற மென்பொதியினை (password manager) பாவனை செய்யலாம். ஒவ்வொரு தகவல் தொடர்பாடல் மென்பொதிக்கும் ஒவ்வொரு கடவுச்சொல்லினை பாவனை செய்யும் போது அனைத்து கடவுச்சொல்லையும் ஞாபகம்

வைப்பது சிரமம் இவ்வாறான சந்தர்ப்பத்தில் இவ்வாறான மென்பொதிகளை பாவனை செய்வதன் ஊடாக இந்த மென்பொதி வழியே அனைத்து மென்பொதிகளையும் இயக்க முடியும்.

இவ்வாறு பயனர்கள் மேற்கூறப்பட்ட விடயங்களை கவனத்தில் கொண்டு செயல்படுவதன் மூலம் ஓரளவு இணையவழி குற்றங்களிலிருந்து விடுபட முடியும்.

**கொள்கை மற்றும் திட்டமிடுதல் சார்ந்தோருக்கான உத்தேச பரிந்துரைகள்**

- தற்காலத்தை பொறுத்த வரையில் அதிகரித்து வருகின்ற இணையவழி குற்றங்களை கட்டுப்படுத்தும் நோக்கோடு கொள்கை மற்றும் திட்டமிடுதல் சார்ந்தோர்கள் பல சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாக இணையவழி குற்றங்களை தடுக்க முடியும்.
- குறிப்பாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மென்பொருளை பாவனை செய்கின்ற பயனர்களின் வயதினை அதிகரிப்பது சாலச் சிறந்ததாக அமையும். மாணவர்கள், சிறுவர்கள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதன் ஊடாக தேவையற்ற பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனை கட்டுப்படுத்தும் நோக்கோடு சட்டரீதியான வரையறைகளை அரசாங்கம் அமுல்படுத்துகின்ற போது இணையவழி குற்றங்களிலிருந்து மாணவர்கள் மற்றும் சிறுமிகள் விடுபடுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படுகின்றது.
- பல்கலைக்கழகங்களில் அல்லது உயர் தரத்தில் இணையவழி குற்றங்கள் தொடர்பான கற்றை நெறியை அறிமுகம் செய்வதன் ஊடாக பல திறமையான இணையவழி குற்றங்களை தடுக்கின்ற புத்திஜீவிகளை உருவாக்குவதோடு அவர்களுக்கான வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதற்கான சாத்தியங்களும் அதிகமாக காணப்படும். இதனால் ஒரு புறம் இணையவழி குற்றங்கள் தடுக்கப்படுகின்ற அதே நேரம் மறுபுறம் இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்புகளை பெறுவதற்கான சந்தர்ப்பமாகவும் இதனை பயன்படுத்தக் கூடியவாறும் இருக்கும்.
- நிகழ்நிலையில் இணையவழி குற்றங்களுக்கு எதிரான புகார்களை அளிப்பதற்கான தொலைபேசி இலக்கங்கள் உலகம் பூராகவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அதே நேரம் அது தொடர்பான விழிப்புணர்வானது சமூகத்தின் மத்தியில் காணப்படுவதில்லை. ஆகவே இத் தொலைபேசி இலக்கங்களை பிரசித்தப்படுத்துவதற்குரிய விழிப்புணர்வு செயலமர்வுகளை அரசாங்கமானது நடைமுறைப்படுத்த வேண்டும்.
- இணையவழி குற்றங்களில் ஈடுபடுகின்ற குற்றவாளிகள் அகப்படுகின்ற போது அவர்களுக்கான சீர்திருத்த தண்டனைகளை வழங்குவதன் ஊடாக சமூகத்தில் வேறு நபர்கள் அவ்வாறான குற்றங்களை செய்யக் கூடாது எனும் மனநிலைக்கு கொண்டு வருதலின் போது இணையவழி குற்றங்களை கட்டுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் காணப்படும்.

- இணையவழி குற்றங்களினால் பாதிக்கப்படுகின்ற நபர்களின் மன உறுதியை அதிகரிக்கும் நோக்கோடு பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ள நபர்களுக்கு உளஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் ஒழுக்கம்மிக்க நற்பிரஜையாக மாற்ற முடியும்.

இவ்வாறான செயற்பாடுகளை கொள்கை மற்றும் திட்டமிடுதல் சார்ந்தோர் மேற்கொள்கின்ற போது சமூகத்தில் இணையவழி குற்றங்களை தடுப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படுகின்றது.

**தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வடிவமைப்பாளர்களுக்கான உத்தேச பரிந்துரைகள்**

தகவல்களை பரிமாற்றம் செய்யும் நோக்கோடு உருவாக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பமானது தகவல்களை மாத்திரமே பரிமாற்றம் செய்யக்கூடிய ஒரு தளமாக இருக்க வேண்டுமே தவிர இணையவழி குற்றங்களை துரிதபடுத்துகின்ற ஒரு கருவியாக அது செயல்படக்கூடாது. தகவல் பரிமாற்றத்தை இலகுபடுத்துகின்ற வகையில் உருவாக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பத்தால் இணையவழி குற்றங்கள் ஏற்படுகின்றது என்பதனை கருத்தில் கொண்டு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வடிவமைப்பாளர்களுக்கு சில சிபாரிசுகள் என்னால் முன்வைக்கப்படுகின்றது.

- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது புதிதாக வடிவமைக்கப்படும் போது பொதுவானகொள்கை ஒன்றினை பின்பற்றி வடிவமைக்கப்படுதல் வேண்டும்.
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஒன்று வடிவமைக்கப்படும் போது பயனர்களின் கருத்துக்களை கவனத்தில் கொண்டு அது வடிவமைக்கப்படுதல் வேண்டும்.
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களின் அளவுக்கு அதிகமான எண்ணிக்கையை குறைத்து குறிப்பிட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை மாத்திரம் பாதுகாப்பானதாக பயனர்களுக்கு வழங்க வேண்டும்.
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது பாதுகாப்பான வகையில் உருவாக்கம் செய்யப்படுதல் வேண்டும்
  உதாரணமாக: கட்செவியானது ஒரே நேரத்தில் நான்கு சாதனங்களில் பயன்படுத்தக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் அதில் பாதுகாப்புத் தன்மை குறைந்து காணப்படுகின்றது. ஆகவே இவ்வாறான நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படாமல் குறித்த வரையறைகளோடு ஒருவர் மாத்திரமே ஒரு சாதனத்தில் மாத்திரமே பயன்படுத்தக்கூடியதான வடிவமைப்புகளை உருவாக்கம் செய்தல் வேண்டும்.
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள், புதிதாக தொடர்பாடல் நுட்பங்களை அறிமுகம் செய்கின்ற போது அது பாதுகாப்பானது தானா ஒழுக்க மீறுகைகள் நிகழ வாய்ப்புண்டா என்பதனை உறுதிப்படுத்திய பின்னரே பயர்களின் பாவனைக்கு அல்லது புழக்கத்திற்கு விடுதல் வேண்டும்.
- குறித்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது அந்த நோக்கத்தை மாத்திரமே நிறைவு செய்கின்றதாக இருத்தல் வேண்டும் மாறாக

இணையவழி குற்றங்களை நிகழத்துவதற்குரிய ஒரு களமாக அது பயன்படுத்தப்படக் கூடாது என்பதனை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை மேலும் வடிவமைக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டும்.

- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் மூலமாக தமது பயனர்களுக்கு நன்மையான விடயங்கள் மாத்திரம் தான் நிகழ்கின்றது என்பதனை அடிக்கடி தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறான மாற்றங்களை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது உள்வாங்கி கொண்டு சமூகத்தில் செயல்படுவதன் மூலமாகவே தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் நோக்கமானது எய்திக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

**உசாத்துணைகள்**


அனஸ்,எம்.எஸ்.எம். (2006). *மெய்யியல் கிரேக்கம் முதல் தற்காலம் வரை.* குமரன் புத்தக இல்லம்.

அபிராமி, கு. (2000*). மல்டிமீடியா கற்றுக்கொள்ளுங்கள்.* தமிழ் புத்தகாலயம், உதயம் எண்டர்பிரைசஸ்.

ஆன்டோ பீட்டர், மா, & ராஜ்மோகன், ரூ. (1990). *இன்டர்நெட் கையேடு.* வீக்காஸ் பப்ளிங் ஹவுஸ்.

இசாதீன்,ஐ. (2014). ஒழுக்கவியல் நியாயித்தல் விஞ்ஞான நியாயித்தலுடனான ஓர் அறிவாராய்ச்சியியல் நோக்கு. *சமூக விஞ்ஞான துறை.*

இணைய குற்றங்கள். Retrieved June 07. 2023 from https://www.vidhai2virutcham.com

இணைய குற்றங்கள் அதிகரிப்பு. Retrieved June 28, 2023 from https://www.dinamalar.com

தவிர்க்க முடியாது தள்ளி வைப்போம். Retrieved June 08, 2023 from https://www.dinamani.com

இணையத்தின் பயன்கள். Retrieved June 09, 2023 from https://www.alltamiltips.com

இணையத்தின் வளர்ச்சி படிகள் சில ஆச்சரிய தகவல்கள். Retrieved June 20, 2023 from https://www.kananitips.blogpost.com

இணையம் கட்டுரை. Retrieved June 09, 2023 from https://www.kprakashtamil.blogpost.com

இணையவழி குற்றங்கள். (2013). Retrieved June 19, 2023 from https://www.dinamani.com

இராமலிங்கம், அ. (2003). *ஒழுக்கம்.* மோனாரிக் கிராபிக்ஸ.

இராமச்சந்திரம், கே.என். (2001). *இணையத்தில் இணைவோம்.* கங்கை புத்தக நிலையம்.

கல்வியில் தொழில்நுட்பத்தின் செல்வாக்கு. Retrieved June 06, 2023 from https://www.kaanpiyam.com

கேசவன், க. (1998). *மெய்யியல் - முதற்கலை தேர்வு மாணவர்கட்கானது.* பதிப்பு 1: கோபிகா பதிப்பகம்.

சிவானந்தமூர்த்தி, க. (1998). *ஒழுக்க நியமங்களும் அதன் நடைமுறைகளும்.* லங்கா புத்தகசாலை.

சைபர் குற்றமும் பெண்களின் பாதுகாப்பும். Retrieved June 25, 2023 from https://www.tnpscthervupettagam.com

பிரேம்குமார், இ. (2020). *கலை இலக்கிய மெய்யியல் கொள்கைகள். குமரன் புத்தக இல்லம்.*

விறொன்சன், த. (2019). நவீன தொடர்பாடல் தொழில்நுட்ப சாதனங்களின் பயன்பாடும் இளைஞர்களில் ஏற்படுத்தும் உளவியல் மற்றும் ஒழுக்கவியல் பாதிப்புகளும். தென்கிழக்கு பல்கலைக்கழகம்.

Kejal Vadsha. (2013). Cyber Crime & its categories: Research Gate (https://www.researchgate.net/publication/274652160).

Osman, G., & Mahbub, A. & Haidar, A. ( 2022). The Basic Concept Of Cyber Crime Research Gate (https://www.researchgate.net/publication/360454079).

# மகாபாரதம் வெளிப்படுத்தும் வாழ்வியல் தத்துவம் - ஒழுக்கவியல் அடிப்படையிலான ஓர் ஆய்வு


**நித்திஞானம் றொசாயினி**

gnanam746knithirosh@gmail.com



## ஆய்வுச் சுருக்கம்

இந்த உலகில் மானிடராய்ப் பிறந்த அனைவரும் வாழ்தல் பொருட்டு பல்வேறு ஒழுக்கக் கருத்துக்களையும் விழுமியப் பண்புகளையும் பின்பற்றுபவர்களாகவே காணப்படுகின்றனர். ஆதிகாலம் தொடக்கம் இன்று வரை நல்லொழுக்கமானது மனிதனின் உயர்பண்பாக கருதப்படுகின்றது. நல்லொழுக்கம் எனப்படுவது மனிதர்களை நல்வழிப்படுத்தும் சிறந்த ஆயுதமாகவும் காணப்படுகின்றது. அந்தவகையில், மகாபாரதம் வெளிப்படுத்தும் வாழ்வியல் தத்துவம் - ஒழுக்கவியல் அடிப்படையிலான ஓர் ஆய்வு எனும் தலைப்பின் ஊடாக மகாபாரதமானது சமயச்சார்புடையதாகக் காணப்பட்டாலும் ஒழுக்கவியல் கருத்துக்களையும் கொண்டதாகவே காணப்படுகிறது என்பதனையும் இவ்வொழுக்கவியல் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்குமாற்றினையும் வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். மேலும், ஒழுக்கத்தின் முக்கியத்துவம் என்ன என்பதை அறிந்து கொள்ளுதல், ஒரு மனிதன் கடைப்பிடிக்கும் ஒழுக்கத்தின் மூலம் வாழ்வில் எவ்வாறான உயர்ந்த நிலையினை அடையலாம், ஒழுக்கமற்ற மனிதர்களின் வாழ்வு எவ்வாறு காணப்படும் ஆகிய துணை நோக்கங்களையும் இந்த ஆய்வு கொண்டுள்ளது. இவ்வாய்வு இலக்கியத்தில் காணப்படும் கோட்பாட்டு விடயங்களைப் பகுப்பாய்வு செய்வதனால் இது விபரிப்பு ஆய்வாகவே அமையும். இதனால் பண்புசார் ஆய்வுமுறை இங்கே பிரயோகிக்கப்படுகின்றது. இந்த ஆய்வினை மேற்கொள்வதற்கு இரண்டாம் மற்றும் மூன்றாம் தர மூலங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஆய்வுக்குரிய விடயம் பண்புசார் அடிப்படையில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு முடிவு காணப்படுகின்றது. மனிதன் தனக்கெனக் காணப்படும் வாழ்வியல் ஒழுக்கத்திலிருந்து மீறாது அவ்வொழுக்கத்தினைப் பேணுவதன் மூலம் சமூகத்தில் பல்வேறு விதமான சமூக சீர்கேடுகளிலிருந்தும் பிரச்சினைகளிலிருந்தும் மீள முடியும். அந்தவகையில், மகாபாரதத்தில் குறிப்பிடப்படும் ஒழுக்க சிந்தனைகள் குறித்த இவ்வாய்வு ஒரு மனிதனின் நல்வாழ்க்கைக்கு உகந்ததாகவே காணப்படுகின்றது.


***திறவுச் சொற்கள்:*** *ஒழுக்கம், மகாபாரதம், தர்மம், கர்மம்*

## ஆய்வு அறிமுகம்

மெய்யியலின் பிரிவுகளில் அடிப்படையான பிரிப்பாக அமைவது அதனை மூன்று துறைக்குள் அடக்குவதாகும். அவை அறிவாராய்ச்சியியல், அழகியல், ஒழுக்கவியல் என்பனவாகும். இவற்றில் ஒழுக்கவியல் மனித நடத்தையுடன் தொடர்புபட்ட ஒரு செயற்பாடாகும். மிருகங்களுக்கு இல்லாத ஒரு தனித்தன்மை மனிதன் ஒழுக்கத்தினை பேணுவதாகும். கிரேக்க காலம் முதல் இன்று வரை ஒழுக்கம் சம்பந்தமான ஆய்வுகளும் முன்வைப்புகளும் நடந்த வண்ணம் இருக்கின்றன. அதேபோன்று இந்திய மரபிலும் ஒழுக்கவியலுக்கு முக்கியத்துவம் உள்ளது. தோத்திரங்கள் தொடக்கம் சாஸ்திரங்கள் வரை ஒழுக்க விழுமியங்கள் பிரேரிக்கப்பட்டிருக்கின்றன. புராதன காலத்தில் எழுந்த காவியங்கள், இலக்கியங்கள் அனைத்தும் ஒழுக்க விழுமியத்தைப்பிரேரிப்பதாகவே அமைந்திருக்கின்றன.

ஒழுக்கவியல் என்ற சொல் ஆங்கிலத்தில் Ethics என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. Ethics என்ற இவ்வாங்கிலச் சொல் Ethose என்ற கிரேக்க சொல்லில் இருந்து தோன்றியதாகும். இச்சொல்லின் நேரடி அர்த்தம் வழக்கம், மரபு, பழகிப்போன நடத்தை எனக்குறிக்கப்படுகிறது. இது போன்று ஒழுக்கவியலுடன் மிகவும் தொடர்புடைய இன்னுமொரு சொல்லாகிய Moral என்ற ஆங்கிலச் சொல் இலத்தீன் மொழியில் உள்ள Mores என்ற

சொல்லில் இருந்து தோன்றியதாகும். இச்சொல்லும் பழக்கம், வழக்கம் என்ற அர்த்தத்தினையே பெறுகிறது. வழக்கம் என்ற இச்சொல் வெறும் வழமையான செயற்பாடுகளைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படவில்லை. மாறாக அது ஒரு பரந்துபட்ட அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது சமூகத்தால், குழுக்களால் அங்கீகரிக்கப்பட்ட நடத்தை வழியைக் கொண்டது என்று கருதப்படலாம். இன்று இவ்வார்த்தைப் பிரயோகம் மிகவும் சிக்கலான, உயர்ந்த வாழ்க்கைக்கோலத்துடன் தொடர்புபட்டதாக அமைகிறது. ஒழுக்கம் பற்றிய ஆய்வானது மனித ஒழுக்கத்தை மையப்படுத்தியது. மேலும் இது மனிதனின் ஒழுக்கம், ஒழுக்கத்தோடு தொடர்பான பல்வேறு நடத்தைகள் மற்றும் அவை பற்றிய கோட்பாடுகள் பற்றி ஆராய்கின்றது. இதனால் ஒழுக்கவியலை மனித ஒழுக்கம் பற்றி ஆய்வு செய்யும் இயலென ஓரளவு வரையறுக்கலாம்.

ஒரு மனிதன் சமூகத்தில் உயர்ந்த நிலையில் மதிக்கப்பட வேண்டுமாயின் அவன் சுயவொழுக்கம் உடையவனாகவும் நற்பண்புகளை பின்பற்றுபவனாகவும் இருக்க வேண்டும். நமது பண்டைய காலத் தமிழர்கள் ஒழுக்கத்தினை பேணிக்காத்தமைக்கு சங்ககாலம், சங்கமருவிய காலம், பல்லவர்காலம், சோழர்காலம், நாயக்கர்காலம் போன்ற காலங்களில் எழுந்த பல நூல்களில் குறிப்பிடப்படும் ஒழுக்கக்கருத்துக்களை கொண்டு நாம் அறியலாம். உதாரணமாக திருக்குறளில் திருவள்ளுவர் ஒழுக்கத்தை மிகவும் வலியுறுத்தி கூறியுள்ளார். இதில் ஒழுக்கத்திற்கான தனியாக ‘‘ஒழுக்கமுடைமை’’ எனும் அதிகாரத்தை உருவாக்கியுள்ளார். ‘‘அழுக்கானுடையான் கண் ஆக்கம் போன்று இல்லை ஒழுக்கம் இலான் கண் உயர்வு’’ என ஒழுக்கத்தின் அவசியத்தை வலியுறுத்துகின்றார் வள்ளுவர். அதாவது மற்றவர்கள் மேல் பொறாமை கொண்டு அவர்களின் அழிவைப்பற்றி எப்போதும் சிந்திப்பவனிடத்தே எவ்வாறு ஆக்கம் அமையாதோ அதே போன்று ஒழுக்கம் இல்லாதவன் வாழ்விலும் உயர்வு காணப்படமாட்டாது என வலியுறுத்துகின்றார். மேலும் சங்ககால புலவர்களில் ஒருவரான ஔவையார் ஒழுக்கம் பற்றிக் குறிப்பிடும் போது கொன்றைவேந்தனில் ‘‘ஓதலின் நன்றே வேதியர்க்கு வேந்தனில் ஒழுக்கம்’’ என்பதன் மூலம் ஒழுக்கமானது வேதம் ஓதுவதை விட அவசியமானதென குறிப்பிடுகின்றார். இவ்வாறாக எமது தமிழர் சமுதாயத்தில் ஒழுக்கத்தின் மேன்மை அக்கால நூல்களில் காணலாம்.

ஒழுக்க விழுமியங்களைக்கூறிய பல காவியங்களையும் இலக்கியங்களையும் வடமொழியிலும் ஏனைய இந்திய மொழிகளிலும் காணலாம். இவற்றில் ஒன்றே மகாபாரதம் எனும் காவியம் ஆகும். மேலோட்டமான நோக்கில் இது இந்தியாவில் நடந்த ஓர் யுத்தம் பற்றிய கதையாகவே கருதப்படுகின்றது. ஆனால் காவியத்தின் அடிப்படை ஒழுக்க விழுமியங்களைப்போதிப்பதாகவே அமைந்துள்ளது. இந்த போதனை எந்தளவு சாத்தியமாகின்றது. என்பது ஒரு முக்கிய விடயமாகும்.

மனிதனாகப் பிறந்ததன் பயன்களுள் ஒன்று. மகாபாரதத்தை வாசித்து மகிழ்வதாகும் என்பார்கள் முன்னோர்கள். இலட்சம் சுலோகங்களோடு கூடிய பாரதம், பார்க்கத்தக்க, கேட்கத்தக்க, அறியத்தக்க அனைத்திலும் உயர்ந்ததால் ‘‘ஐந்தாம் வேதம்’’ எனும் சிறப்புப்பெயர் பெற்றது. வியாசபகவான் பாரதம் என்கிற இந்த ஞானதீபத்தை மானுடசாதிக்கு

ஏற்றிவைக்காமல் போயிருந்தால் உலகம் இருள் சூழ்ந்து போயிருக்கும் என்று பண்டைய முனிவர்கள் கூறியுள்ளனர்.

பல்லவ மன்னர்கள் காலத்தில் ஊர்தோறும் ''பாரதமண்டபங்கள்'' அமைக்கப்பெற்று நாள்தோறும் பாரதம் படிக்கப்பட்டு வந்தது. இந்திய இலக்கியங்களுக்கு மகத்தான மூலப்பொருள்களைத் தந்துதவியுள்ளதுடன் மாமுனிவர்கள், இல்லறச்சான்றோர், தூய கற்பரசிகள், கூர்மதியும் பண்பறமும் கொண்ட இளைஞர்கள் உருவாக எண்ணற்ற அடிப்படைப்பண்புகளையும் மகத்தான ஒழுக்கச்சிந்தனைகளையும் கொண்டுள்ளது.

பாண்டவர் ஐவரின் வெற்றி அறத்தின் வெற்றியாகவே சித்தரிக்கப்படுகிறது. பாரதக்கதையின் பாத்திரங்களைப் பற்றி அறிந்து கொள்ளும்போது வாழ்க்கைக்குத் தேவையான நன்மையின்பாற்படுகின்ற உடன்பாட்டு குணங்களையும் வாழ்க்கைக்கு தேவையற்ற தீமையான, எதிர்மறையான குணங்களையும் ஒருங்கே அறிந்து கொள்ள முடிகிறது. ''அறமே குறிக்கோள்'' என்று நிற்போரை நாம் காண முடிகிறது. மாறாக மறமும், தீமையும், சூதும், வஞ்சகமுமே வாழ்வு என்று மயங்கி தவறான வழிகளால் தம்மையே ஏமாற்றிக் கொள்ளுபவர்களையும் காணமுடிகிறது. மனித வாழ்க்கையில் என்றுமே நிலைத்த அமைப்போடு இடம்பெற்றிருக்கும் உத்தமம், அதமம், மத்திமம் போன்ற குணங்களை பாரதக்கதையின் மூலம் புரிந்து கொள்கின்றோம். இவ்வாறு மேற்குறிப்பிட்ட விடயங்கள் பற்றிய விரிவான தெளிவுபடுத்தலாகவே இந்த ஆய்வு காணப்படுகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

மகாபாரதமானது சமயச்சார்புடையதாக காணப்பட்டாலும் ஒழுக்கவியல் கருத்துக்களையும் கொண்டதாகவே காணப்படுகிறது. இவ்வொழுக்கவியல் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்குமாற்றினை தெளிவுபடுத்தப்படுத்துவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகக் காணப்படுகிறது. மேலும் ஒழுக்கத்தின் முக்கியத்துவம் என்ன என்பதை அறிந்து கொள்ளுதல், ஓர் மனிதன் கடைப்பிடிக்கும் ஒழுக்கத்தின் மூலம் வாழ்வில் எவ்வாறான உயர்ந்த நிலையினை அடைதல், ஒழுக்கமற்ற மனிதர்களின் வாழ்வு எவ்வாறு காணப்படும் போன்ற துணை நோக்கங்களையும் இந்த ஆய்வு கொண்டுள்ளது.

**ஆய்வு பிரச்சினை**

எல்லா ஆய்வுகளும் குறிப்பிட்ட ஒரு பிரச்சினையை முன்வைத்தும் புதிய விடயங்களை வெளிப்படுத்துவதாகவும் அமைகிறது. அந்தவகையில் மகாபாரதமானது கிருஷ்ணபகவானின் அவதார சித்தாந்தத்தினை வெளிப்படுத்தும் ஓர் இதிகாசம் என்ற கருத்து எம் எல்லோர் மனதிலும் ஆழமாக காணப்படுகின்றது. மகாபாரதம் கடவுள்சார்ந்த கருத்தினை கொண்டது என்பதற்கு மேலாக மனிதவாழ்வியலுக்கு தேவையான ஒழுக்கத்தினை போதிப்பதாக காணப்படுகிறது என்பதை அறிந்து கொள்வதே ஆய்வுப்பிரச்சினையாக முன்னெடுத்து செல்லப்படுகின்றது.

**இலக்கிய மீளாய்வு**

மகாபாரதம் என்பது இந்திய அறிவு மற்றும் இலக்கியத்துறையில் மிகவும் பழையதொரு காவியமாகும். இதைப்பற்றி பல்வேறு நோக்குகளிலும் ஆய்வுகள் இடம் பெற்றிருக்கின்றன. சமயம், தத்துவம், பெண்ணியம், அரசியல், சமூகவியல் முதலான பல்வேறுபட்ட நோக்கு நிலைகளில் மகாபாரதம் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது. எனவே ஒழுக்கவியல் சார்ந்து மேற்கொள்ளப்படும் இவ்வாய்வுக்கு முன்னர் மகாபாரதம் பற்றி ஏற்கனவே வந்த ஆய்வுகளை மீளாய்வுக்கு உட்படுத்துதல் முக்கியமானதாகும்.

மகாபாரதம் பற்றிய மற்றுமொரு ஆய்வாக சுமிதாசாகல் (Sahal, 2021) என்பவரால் மேற்கொள்ளப்பட்டது. இது மகாபாரதத்தில் காணப்படும் ஒழுக்கவியல் மற்றும் அரசியல்சார் விடயங்களை தெளிவுபடுத்துவதாக உள்ளது. இவர் பிரதானமாக அபதர்மம் எனும் அவசரசட்டம் பற்றிய கொள்கைகளை விளக்குகின்றார். மேலும் அரசியல் நடத்தைகள் எவ்வாறு ஒழுக்கவியல் பின்னணியில் செயற்படுத்தப்பட வேண்டும் என்பது இவரது முக்கிய நோக்கமாகும். எனவே இவரது ஆய்வு சட்டம் மற்றும் அரசியல் பற்றியதாகவே இருந்தது.

மகாபாரதத்தின் ஒழுக்கம் பற்றிய ஓர் ஆய்வு ராணிநாத் (Nath, 2020) என்பவரால் மேற்கொள்ளப்பட்டதாகும். இவர் கர்ணனது பாத்திரப்படைப்பை முதன்மைப்படுத்தி அதனூடாகவே ஒழுக்கவியல் சார்ந்த கருத்துக்களை வெளிப்படுத்த முனைகின்றார். தர்மத்திற்கும் கடமைக்கும் இடையிலான செயற்பாடுகள் இடம்பெறும் பொழுது நாம் எதனை செய்வது என்ற சங்கடம் முக்கியமாகின்றது. கடமையைச்செய்யும் விடயத்தில் கர்ணன் எத்தகைய ஒழுக்க நிலையில் இருக்கின்றார் என்பது இங்கு முக்கியமாகின்றது. எனவே இவ்வாய்வு கர்ணன் எனும் பாத்திரத்தை அடிப்படையாக கொண்டு அவருக்குரிய சோதனையை வைத்து விளக்குவதாகவே ஆய்வானது அமைகின்றது.

மகாபாரதம் பற்றிய மற்றுமொரு முக்கிய ஆய்வு சுவாமி போதாநந்தா (Bodhananda, 2010) என்பவரால் செய்யப்பட்டது. இவர் முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவ பண்புகளில் தர்மத்தின் பெறுமானம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை மகாபாரதத்தை அடிப்படையாக வைத்து விளக்குகின்றார். இங்கு முகாமைத்துவம் என்பது என்ன?, தலைமைத்துவம் என்பது என்ன? என விளக்கும் இவர் இவ்விரண்டிற்கும் தர்மம் எவ்வாறு அடிப்படையாக அமையும் என சுட்டிக்காட்டுகின்றார். இவரின்படி சரியான செயல் அல்லது தர்மம் என்பதே மகாபாரதத்தின் அடிப்படை என்கின்றார். இவருடைய ஆய்வில் கர்மம் என்றால் என்ன என்பதனை வரைவிலக்கணப்படுத்தி அது எவ்வாறு முகாமைத்துவத்தில் பிரதிபலிக்கின்றது எனக் கூறுகின்றார். எனவே இவரது ஆய்வு வணிக ஒழுக்கவியல் சார்ந்ததாகவே காணப்பட்டது.

மகாபாரதம் பற்றிய மற்றுமொரு ஆய்வாக தல்மியா (Dalmiya, 2016) என்பவரது ஆய்வு குறிப்பிடத்தக்கதாகும். இவர் பெண்ணியவாத சிந்தனையின் அடிப்படையில் ஒழுக்கவியலை அறிவாராய்ச்சியியல் நோக்கில் விளக்குகின்றார். இதில் பராமரிப்பு ஒழுக்கவியல் (Care Ethics) என்பது ஒரு விடயமாகவும் காணப்படுகின்றது. பெண்ணியவாதிகள் இதில் அக்கறை கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

மகாபாரதத்தில் இவ்வெண்ணம் எவ்வாறு காணப்படுகின்றது என்பது இவ்வாய்வின் அடிப்படையாகும். எனவே இவ்வாய்வு ஒரு பெண்ணிய நோக்கு ஆய்வாகவே காணப்படுகின்றது.

அடுத்து மகாபாரதம் பற்றிய ஆய்வாக பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா (2016) என்பவரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு குறிப்பிடத்தக்கதாகும். இவர் தனது ஆய்வில் குந்தி தேவியின் பாத்திரப்படைப்பை முதன்மைப்படுத்தி அதனூடாக ஒழுக்கக்கருத்துக்களை வெளிப்படுத்த முனைகின்றார். குந்திதேவியின் பிறப்பிலிருந்து குந்திதேவியின் வாழ்க்கை வரலாற்றினை கூறுவதன் மூலம் அதனோடு தொடர்புபட்ட அனைத்து விடயங்களும் இவரின் ஆய்வில் அமைந்துள்ளது.

மேற்கூறிய மீளாய்வுகள் மகாபாரதத்தில் குறிப்பிடப்படுகின்ற முகாமைத்துவம், யுத்தம், அரசியல், சமயம், பெண்ணியல் என பல்வேறுபட்ட தனித்தன்மையான தளங்களில் விளக்கப்படுகின்றன. ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு ஆய்வும் மகாபாரதத்தில் கூறப்படுகின்ற ஒழுக்கவிடயங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாகவே காணப்படுகின்றது. எனவே இது ஒரு தனித்தன்மையான ஆய்வாக உள்ளது எனக்கூறக்கூடியதாய் உள்ளது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு இலக்கியத்தில் காணப்படும் கோட்பாட்டு விடயங்களை பகுப்பாய்வு செய்வதனால் இது விபரிப்பு ஆய்வாகவே இருக்கும். இதனால் பண்புசார் ஆய்வு முறை இங்கே பிரயோகிக்கப்படுகின்றது. இந்த ஆய்வினை மேற்கொள்வதற்கு இரண்டாம் தராதர மூலங்களும் மூன்றாம் தராதர மூலங்களும் பயன்படுத்தப்படுகின்றன. பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஆய்வுக்குரிய விடயம் பண்புசார் அடிப்படையில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு முடிவு காணப்படுகின்றது.

**மகாபாரதத்தின் ஒழுக்கவியல் கூறுகள்**

பிரபஞ்ச இயக்கத்தில் தொடர்ந்து தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் இடையே நடக்கும் போராட்டத்தில் இறுதியில் தர்மமே வெல்லுகிறது. அதர்மம் அழிகிறது. தர்மத்திற்குத் தெய்வத்தின் உதவி கிட்டுகிறது. பாண்டவர் ஐவரின் வெற்றி அறத்தின் வெற்றியாகவே சித்தரிக்கப்படுகிறது. பாரதக் கதையின் பாத்திரங்களை பற்றி அறிந்து கொள்ளும் போது வாழ்க்கைக்குத்தேவையான நன்மையின்பாற்படுகின்ற உடன்பாட்டு குணங்களையும் வாழ்க்கைக்கு தேவையற்ற தீமையான, எதிர்மறையான குணங்களையும் ஒருங்கே அறிந்து கொள்ள முடிகிறது.

துரியோதனன் மனைவியாகிய பானுமதியைப் பற்றிச் சிறிதளவு இங்கு கூறலாம். வஞ்சகக்கலப்பில்லாத தூய்மையான வெள்ளையுள்ளமும், பிறருக்குத் தீமை நினையாத எண்ண நலமும் பெற்றிருக்கும் இவளுடைய நலம் பெரிதும் பாராட்டிச் சித்திரிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சியைக்காணலாம். துரியோதனன் மன்னன் அரண்மனையில் இல்லாத ஒரு பொழுதில் அவன் மனைவி பானுமதி துரியோதனனுக்கு நெருங்கிய நண்பன் என்ற முறையுரிமை கொண்டு கர்ணனோடு சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருந்தாள்.

விளையாட்டில் தன்னை மறந்து போய் ஈடுபட்டிருந்த கர்ணன் சிறிது நேரத்தில் துரியோதனன் அங்கே வந்ததைக்கூட கவனிக்கவில்லை. ஆனால் துரியோதனன் உள்ளே வருவதை அவன் மனைவி பானுமதி கண்டு கொண்டாள். கண்டவுடன் கணவனுக்குச்செய்ய வேண்டிய மரியாதையை வழங்கி முறைப்படி எழுந்து நின்றாள். திடீரென்று ஆட்டத்தை நிறுத்திவிட்டு அவள் எழுந்து நின்றதை கண்ட கர்ணன் அவள் எதற்காக எழுந்து நிற்கின்றாள் என்ற காரணம் விளங்காமல் மனத்தில் தவறாக எண்ணிக்கொண்டு அவளை உட்காரச் செய்யும் கருத்துடன் விளையாட்டு வெறியில் அவளைத்தொட்டு மேகலையைப்பற்றி இழுத்து உட்காரச்செய்து விட்டான். துரியோதனன் இதற்காகக்கர்ணனை மன்னித்து விட்டதோடு இதை ஒரு பெருங்குற்றமாகவே எடுத்துக் கொள்ளவில்லை என்பதைப்பாரதம் விவரிக்கிறது. இந்நிகழ்ச்சியில் துரியோதனனுடைய பெருந்தன்மைக்கும் மேற்பட்ட பெருந்தன்மையாகப் பானுமதியின் சிறந்த கற்பு நிலை எனும் ஒழுக்கம் விளக்கம் பெறக்காண்கின்றோம் (பார்த்தசாரதி, 2000).

‘‘பொறுத்தவர் பூமியாள்வார்’’ இந்தப்பழமொழி மக்கள் பாண்டவர்களின் பொறுமையை வியந்து அவர்களுக்குப் பொறுத்தவர் என்றே பெயர் சூட்டி மகிழ்ந்திருக்கிறார்கள் என்று தெரிவிக்கிறது. விதுரர் மனையில் தங்கிய கண்ணன் அவன் உபசரிப்பால் மெய்மறந்து விதுரர் தந்த வாழைப் பழத்தோல்களை உண்கிறான். தவறுணர்ந்த விதுரர் பதறுகிறார். கண்ணன் சாந்தமாகக் கூறுகிறான். ‘‘விதுரரே! நான் எனக்குப் படைக்கப்படும் பொருள்களுக்குப் பின்னே மறைந்துள்ள மனத்தின் அன்பையே நுகர்கிறேன் படைக்கும் பொருள்களை அல்ல! வருந்தாதீர்’’ என்று குறிப்பிடுவதன் மூலம் பொறுமை, எதிரியாக இருந்தாலும் அன்போடு இருத்தல், விருந்தோம்பலின் சிறப்பு போன்ற ஒழுக்கத்தினை நாம் காணமுடிகிறது (அமுதன்,2007). பீஷ்மரின் சரிதத்தைப் படித்த ஒரு குழந்தை எப்படித் தாய் தந்தையரைப் பேணாமல் இருக்க முடியும். பெற்றோர்க்கு ஒரு பிள்ளை செய்ய முடியாத தியாக எல்லையின் உச்ச வரம்பு என குறிப்பிடப்படுகின்றது. இதன் மூலம் பெற்றோரைக்கணம்பண்ணுதல் எனும் ஒழுக்கத்தினை காணமுடிகிறது.

அடுத்து தருமன் நச்சு குளக்கரைச்சென்று சகோதரர்கள் இறந்துகிடப்பதையும் மணல் மீது நீர் பருகினால் இறந்துவிடுவீர் என எழுதியிருப்பதையும் கண்டு அவனும் இறக்க எண்ணி குளத்தில் இறங்கும் வேளையில் இறங்காதே என்ற அசரீதி கேட்கிறது. அதனை பொருட்படுத்தாது மீண்டும் ‘‘வீண்பிரம்மை’’ என்று எண்ணிக் கொண்டு இறங்கினான். ‘‘நான் சொல்வது கேட்கவில்லை? இறங்கி நீரைக் குடித்தால் இறந்து போவாய், நான் சில கேள்விகளைக் கேட்கிறேன். அவற்றிக்கு பதில் கூறினால் இறந்து கிடப்பவர்களை உயிர் மீட்டுத் தருவேன். பதில் சொல்வாயா?’’ தாராளமாகப் பதில் கூறுகிறேன் கேள் எனத் தருமன் மகிழ்ச்சியோடு இணங்கினான். உருவமில்லாத அந்தக்குரல் கேட்டது. இதனையே,

‘‘ நிற்பது ஏதுகொல் நீடிசை ஒன்றுமே நிற்கும்

கற்பது ஏதுகொல் கசடறக் கற்பதே கல்வி......’’ (வில்லி பாரதம்,2001)

எல்லாக்கேள்விகளுக்கும் மிகவிரைவாக மறுமொழி கூறிமுடித்து விட்டான் தருமன். கேள்விகளுக்கு விடைகூறி முடித்தவுடன் அவன்முன் எமன் தோன்றினான். தருமன் தந்தையை

வணங்கினான். எமன் தருமனை வாழ்த்தி அவனுக்கு ஒரு மந்திரத்தைக்கூறி, ‘‘இந்த மந்திரத்தைக்கூறினால் உன் தம்பியர் நால்வருள் யாராவது ஒருவரைப்பிழைக்கச் செய்யலாம்’’ என்றான். உடனே தருமன் அப்படியே கூறி, சகாதேவனை மட்டும் உயிர் பெறச் செய்தான். அது கண்ட எமன், ‘‘ஏன் இவனை மட்டும் உயிர் பெறச் செய்தாய்? மற்ற மூவர் மேலும் உனக்கு அன்பில்லையா?’’ என்று கேட்டான். ‘‘தந்தையே! நாங்கள் நால்வரும் குந்தியின் மக்கள், இவன் மாத்ரியின் மகன். குந்தி வயிற்றில் தோன்றிய முறைக்கு நான் ஒருவனாவது இருக்கின்றேன். மாத்ரி வயிற்றில் தோன்றிய முறைக்கு இவன் இருக்கட்டும் என்றே இவனை எழுப்பினேன்!’’ என்று தருமன் எமனுக்கு மறுமொழி கூறினான். தருமனுடைய தன்னலமற்ற பெருந்தன்மை என்ற ஒழுக்கம் எமனை வியப்புக்குள்ளாக்கியது.

மேலும் தருமனை நம்பி கூடவே வருகிறது சுவர்க்கம் ஏகும் பயணத்தில் ஒரு நாய். அந்த நாயை விட்டுத்தான் தருமன் சுவர்க்கத்திற்கு வரமுடியும் என்கிறான். அப்படியெனில் எனக்குச்சுவர்க்கம் வேண்டாம் எனச்சொல்லிவிடுகிறார் தருமர். ஓர் இளைத்த நாய்க்காகச் சொர்க்கத்தையும் இழக்கத்துணிந்த ஒரேயொருவர் ஒப்புயர்வற்ற மேலோர் தருமர். தருமரின் அந்த ஆன்ம நேயமானது பிற ஜீவராசிகளை பேணிக்காத்தல் எனும் ஒழுக்கத்தினை குறிப்பிடுகின்றது.

ஏகலைவன் தன்கட்டை விரலை குருகாணிக்கையாக உவந்து தந்ததன் மூலம் அந்த ஏழை வேடன் குருபக்தியின் எல்லைக்கோட்டை எட்டிவிட்டான். அருச்சுனன் முதலிய அரசிளங்குமரருக்குக் கிட்டாத பெருமையை அந்த ஏழை வேடன் ஏற்றுக்கொண்டு போகிறான். பணம் கொடுத்துக் கற்றவன் அருச்சுனன், பக்தி கொடுத்துக் கற்றவன் ஏகலைவன். இந்த ஒப்புயர்வற்ற நிகழ்ச்சியால் மகாபாரதம் உலகுக்கு உணர்த்தும் உண்மையாக குருவை மதித்தல் என்னும் ஒழுக்கவியல் பண்பு வெளிப்படுத்தப்படுகிறது.

கர்ணன் சாதி சமுதாயத்தாக்குதலால் சல்லடையாகத் துளைக்கப்பட்டவன். ஆனாலும் கொடையென்னும் குன்றேறி நின்றவன். நல்லோன் ஒருவன் சமுதாயப் புறக்கணிப்பால் தீமைக்குள் தள்ளப்பட்டு, அல்லலுறுவதை அழகாகச்சித்திரிக்கிறது கர்ணனது பாத்திரப்படைப்பு. தனிமனிதனைச் சமுதாயம் மதிக்காது போனால் அந்தத் தனிமனிதன் சமுதாயத்தை ஒருகாலமும் மதிக்கப்போவதில்லை என்பதற்குச்சான்றானது. இது சமுதாயத்தின் ஒழுக்கம் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என வலியுறுத்துகிறது.

அடுத்து துரியோதனன் பல இடங்களில் நாம் எப்படி எல்லாம் வாழக்கூடாது, ஒரு வாழ்க்கையில் நாம் இழிவான ஒழுக்கத்தினை பின்பற்றக்கூடாது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக இருந்தாலும் சில இடங்களில் அவனுக்குள் இருந்த அரிய அறச்சிந்தனையை அல்லது அறவொழுக்கம் என்பது புலப்படுவதாகவே காணப்படுகின்றது எனலாம். அதாவது அர்ச்சுனனை கர்ணன் போருக்கு அழைக்கும் வேளை கர்ணனின் பிறப்பினை மையப்படுத்தி தேர்ப்பாகனின் வளர்ப்பு மகனான கர்ணனுக்கு தகுதி உண்டா என விமர்சிக்கப்படும் வேளை கர்ணனை தன் உயிர் நண்பனாக எண்ணி வந்த துரியோதனன் இந்த வார்த்தைகளை கேட்டு ஆத்திரமும் மனக்கொதிப்பும் கொள்கின்றான். ‘‘கல்வியினால் பிறரை காட்டிலும் உயர்நிலை பெற்றவர்கள், அழகினால் கவர்ச்சி நிறைந்து விளங்குபவர்கள்,

பிறருக்கு கொடுத்து மகிழும் கொடை பண்பு பூண்டவர்கள் இவைகள் போன்ற தகுதியுடையவர்களுக்கு சராசரி உலகம் நிர்ணயிக்கும் சாதாரணமான பொருத்தங்களும், தகுதிகளும் அவசியம் இல்லை பிறவியும் செல்வ நிலையும் கொண்டு மனிதர்களை இழிவு செய்து பேசுவது நேரியதாகாது'' என்று கூறி கர்ணனுக்கான தகுதியை அந்தக்கணமே அங்கநாட்டு வேந்தனாக முடிசூட்டி துரியோதனனுக்கும் கர்ணனுக்கும் இடையே அமைந்த நட்பின் பெருமையை சிறக்க செய்தான்.

''என்று நல்ல உரைடுத்தி
யம்பி யேனை இழிவினோடு......'' (வில்லி பாரதம்,2001)

''கற்ற வார்க்கும் நலன்றிறைந்த
கன்னி யர்க்கும் வண்மைகை.....'' (வில்லி பாரதம்,2001)

அதாவது ஒருவனின் பிறப்பினை இழிந்துரைப்பது ஆகாத செயல் என்ற சீரிய ஒழுக்க பண்பினை கொண்டவனாகவும் இந்த சந்தர்ப்பத்தில் அவனது சிறந்த நட்பு என்ற இந்த பண்பு மட்டும் அவன் வழி உயரிய ஒழுக்கமாக மகாபாரதத்தில் காணப்படுகின்றது. இதன் மூலம் நட்புறவு என்பது எவ்வாறு இருக்க வேண்டும் என்ற ஒழுக்கப்பண்பினை வெளிப்படுத்துகின்றது.

மேலும் காட்டிலே ஒரு நெல்லிக்கனியை கண்டு அதனை பறித்து உண்ணக்கருதி அர்ச்சுனனிடம் திரௌபதி கேட்டபோது அர்ச்சுனனும் அதனை பறித்தான். ஆனால் அது மாபெரும் முனிவராகிய அமித்திகர் உண்ணுவதற்குரியதென அறியவரும் போது இதனால் கலக்கமுற்று பாண்டவர்கள் செய்வதறியாது திகைத்தனர். இதனால் வீமன் முனிவரிடம் மன்னிப்பு கேட்டு விடலாம் என்ற அறக்கருத்தினை வெளிப்படுத்துகின்றான். இறுதியாக இதிலிருந்து முற்றாக விலகுவதற்காக கண்ணபிரானின் உதவியை நாடி நிற்கின்றனர். உடன்தோன்றி என் உதவியைவிட உங்கள் தருமமே உங்களை காக்க வேண்டும் எனக்கூறி பாண்டவர்கள் மற்றும் திரௌபதி ஆகிய ஆறு பேரின் மனதில் இருக்கும் எண்ணங்களை மறக்காமல் கூறவேண்டும். அப்படி நடந்தால் அந்த கனி தானாகவே அம்மரத்தில் இருந்த இடத்தில் இருக்கும் என்பதனை கூறுகின்றார் கண்ணன். ஒவ்வொருவராக மனதில் இருந்ததனை கூறலாயினர். இவர்கள் கூறி முடித்ததும் நெல்லிக்கனி அதே காம்பில் பொருந்தி காணப்பட்டது. இதனால் கண்ணபிரானுக்கு நன்றியை தெரிவித்தனர். இதற்கு கண்ணன் கூறியது என் உதவி ஒன்றும் இதில் கலந்துவிடவில்லை உங்கள் தருமத்தாலும், சத்தியத்தாலும் உங்களை நீங்களே காத்துக்கொண்டீர்கள் வழிகூறிய பெருமை மட்டுமே எனக்கு உண்டு எனக்கூறினார். இதன் மூலம் உண்மையினை உரைத்தல், மாசற்ற மனத்தூய்மை, பிறர்மனை விரும்பாமை, பிறஉயிர்களைத் துன்புறுத்தாமை, மானத்துடன் வாழ்தல் போன்ற ஒழுக்கங்கள் மகாபாரதத்தில் வலியுறுத்தப்படுகின்றன (பார்த்தசாரதி,2000).

அடுத்து மகாபாரதத்தில் குறிப்பிடப்படும் கொடை வள்ளல் என்ற அறச்செயல் குறித்துப்பேசும் பொழுது நம்நினைவுக்கு வருபவன் ஒருவன் கர்ணனே ஆவான். போர்க்களத்தில் தன் உயிர்துறக்க இருக்கும் நேரத்திலும்கூட முதியவர் வடிவிலான வேதியர் உருவில் வந்து கர்ணனிடம் புண்ணியத்தினை தானமாக கேட்கும் கண்ணனிடம் இல்லை

என்று மறுக்காது வழங்கிய வள்ளல் பிரானாக கர்ணன் காணப்படுகின்றான். நீ எவ்வளவு பிறவி பெற்றாலும் ஒவ்வொரு பிறவியிலும் மாபெரும் செல்வத்தையும் கொடைக்குணத்தையும் பெற்று வாழ்வாயாக! பின்பு கிடைப்பதற்கரிய மோட்சபதவியும் உனக்குக்கிடைக்கும் என அந்த வேதியர் வரத்தினைக் கொடுக்கின்றார். இது பிறருக்கு கொடுத்து உதவவேண்டும் என்ற ஒழுக்கத்தினை போதிக்கின்றது.

**மகாபாரதத்தில் குறிப்பிடப்படும் போர் ஒழுக்கவியல்**

மகாபாரதத்தின் பீஷ்மபருவம் குருக்ஷேத்திரப் போரில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய போரியல் நெறிமுறைகள் பற்றிய விவரணத்தைக் கொண்டுள்ளது. வைசம்பாயனர் பாரதமகாயுத்தம் பற்றிய கதையைக் கூறிக்கொண்டிருக்கும்போது ஜன்மஜெயன் என்ற மன்னனால் கேட்கப்படும் ஒரு வினாவுடன் மகாபாரத பீஷ்மபருவம் ஆரம்பிக்கிறது.

அக்கேள்வி பின்வருமாறு அமைந்தது. ‘‘வீரர்களாகிய கௌரவர்கள், பாண்டவர்கள். சோமகர்கள் மற்றும் பல்வேறு நாடுகளிலிருந்து குருக்ஷேத்திரத்துக்கு வந்திருந்த பலம்பொருந்திய அரசர்கள் போரை எப்படி நடத்தினார்கள்? இதற்கான பதில் பீஷ்மபருவத்தில் பின்வருமாறு விரிகிறது. ‘‘போர்க்களத்துக்கு வந்து அவர்கள் எல்லோரும் தமது பாசறைகளை அமைத்துக் கொண்டார்கள். யுத்தம் ஆரம்பிக்கப்பட முன்னதாக அது எப்படி நடாத்தப்பட வேண்டும் என்பது குறித்துச்சில விதிகளை அமைத்துக் கொண்டார்கள். போரிலிருந்து பின்வாங்கியோர் தாக்கப்படக்கூடாது. தேரில் நிற்பவன் தேரில் நிற்பவனுடனேயே போரிட வேண்டும். குதிரைவீரன் குதிரை வீரனுடனும் காலாட்படையைச் சேர்ந்தவன் காலாட்படை வீரனுடனும் போரிட வேண்டும். போர் முடியும் வரையில் தாம் மேன்மையான முறையிலும், ஆண்மையுடனும் நடந்து கொள்ள வேண்டும். போர் முடிவுற்ற பின்னர் அவர்கள் ஒருவர் மீது ஒருவர் வைத்துள்ள மதிப்புக்கும், மரியாதைக்கும் எவ்விதத்திலும் குந்தகம் ஏற்படக்கூடாது. இந்த விதிமுறைகளை அவர்கள் ஏற்படுத்திக் கொண்டதும் இருதரப்பு படைவீரர்களும் மகிழ்ச்சியுற்றனர். பரஸ்பரம் தமது திருப்தியைத் தெரிவித்துக் கொண்டனர்’’ எனக்குறிப்பிடப்படுகிறது (முகுந்தன், 2020).

தூதுவர்களையும் ராஜதந்திரிகளையும் கண்ணியமாக நடத்துதல் தொடர்பாக நோக்குகின்ற போது தூதுவர்களையும் பகைநாட்டு ராஜதந்திரிகளையும் கண்ணியமாக நடத்துதல் பற்றிய ஒழுக்க விதிமுறைகளும், புராதன இந்துமரபில் நிலவியிருந்தன. மகாபாரதத்தின் சாந்திபர்வம் போர்க்கைதிகளை மனிதாபிமானத்துடன் பராமரித்தல் என்பது தொடர்பான நெறிமுறைகளை விபரித்து குறிப்பிடுகின்றது. போரில் ஈடுபடாத ஒருவனைக் கொல்வதானது அப்பாவிப்பெண்ணொருத்தியை பலாத்காரம் செய்வதற்கும் கல்விக்காகவும் கற்றலுக்காகவுமே தன்னை அர்ப்பணித்த ஒருவனிடம் வழிப்பறிசெய்வதனை விடவும் கீழ்த்தரமானது எனச்சாந்திபர்வம் குறிப்பிடுகிறது. இதனை ‘‘கயவ்ய’’ என்ற திருடர் தலைவனொருவனைப் பற்றிய கதையினூடாக சாந்திபர்வம் வலியுறுத்த முற்படுகிறது. போர்க்கைதிகள் ‘‘அடிமைகளாக்கப்படுதல்’’ அக்காலத்தில் உலகின் எல்லா நாகரிகங்களிலும் நிலவிய வழக்கமாகவே இருந்தது. இந்து சமூகத்திலும் போர்க்கைதிகள் அடிமைகளாக ராஜசேவையிலும், பொதுப்பணிகளிலும் ஈடுபடுத்தப்பட்டமைக்கு ரிக்வேதத்திலும்,

இதிகாசங்களிலும் சான்றுகள் உள்ளன. ஆயினும் இவர்கள் ஒரு வருடம் வரையிலேயே இவ்வாறு அடிமைகளாகப் பணியாற்ற வேண்டியிருந்தது. பின்னர் அவர்களை விடுதலை செய்ய வேண்டியது ஸ்மிருதிகளில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இது அக்கால நடைமுறையில் பயின்று வந்துள்ளது என்பதனை முத்ராராகா என்ற நூல் வெளிப்படுத்தியுள்ளது. சந்திரகுப்தமௌரியனால் போரில் சிறைபிடிக்கப்பட்ட கைதிகள் கௌடில்யரின் அறிவுறுத்தலின்படி போரில் விடுதலை செய்யப்பட்டனர் என்பதே அந்நூல் தரும் செய்தியாகும் (முகுந்தன், 2020).

பேரழிவைத்தரும் ஆயுதங்களின் பிரயோகத்தைத் தவிர்த்தல் என்பது மகாபாரதத்திலே அருச்சுனன் தனது மகனாகிய அபிமன்யு சூழ்ச்சியால் கொல்லப்படும் சந்தர்ப்பத்தில், ஜயத்திரனைத்தேடி வதம் செய்யத்துடிக்கும் தருணத்திலும் பேரழிவைத்தரும் சிவனுடைய படைக்கலமாகிய பாசுபதாஸ்திரத்தினைப் பிரயோகிக்க எண்ணவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

“தர்மக்ஷேத்திரே குருக்ஷேத்திரே” எனப்பகவத்கீதை குறிப்பிடுவது போல புராதன இந்து சமூகத்தில் போரியல் நெறிமுறைகள் தர்மயுத்த நிலைகளுக்குட்பட்டு அமைந்தவையேயாகும். செயற்பாட்டு நிலையில் அவற்றில் ஒழுங்கீனங்கள் சில சந்தர்ப்பங்களில் நடைபெற்றிருப்பினும் அவற்றையும் அதர்மயுத்தங்கள் என அடையாளப்படுத்தக்கூடிய விதத்தில் புராதன இந்துப் போரியல் நெறிமுறைகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன என்பதும் மறுக்கப்பட முடியாத உண்மையாகும். போர்க்காலங்களில் பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பிலும் போர்க்களத்தில் பின்பற்றப்படவேண்டிய யுத்தநியதிகள் தொடர்பிலும் தனது சபைவந்த பகைநாட்டுத் தூதுவர்களையும் ராஜதந்திரிகளையும் கண்ணியமாக நடாத்துதல் தொடர்பிலும் புராதன இந்துப்பனுவல்கள் காத்திரமான கருத்துக்களை முன்வைத்துள்ளன. எடுத்துக்காட்டாக மகாபாரதத்தில் கண்ணன் தூது செல்லும் போது விதுரர் விருந்துபசாரத்தினை சிறப்பாக நடத்தியமை குறிப்பிடத்தக்கது. பேரழிவைத்தரும் ஆயுதங்களின் பிரயோகத்தைத் தவிர்த்தல், போரில்வென்ற தரப்பினர் பின்பற்றவேண்டிய அணுகுமுறைகள் மற்றும் போர்க்கைதிகளைப் பராமரித்தல் தொடர்பில் இவை முன்வைத்த சிந்தனைகள் முக்கியப்படுத்தப்படுகிறது (முகுந்தன், 2020).

**பகவத்கீதையில் வர்ணாச்சிரமதர்மம்**

கர்மத்தை விட்டுவிட்டால் ஜாதிக்கலப்பு ஏற்படும் என்பது பகவான் போதனை. இங்கு கர்மம், ஜாதி என்ற கருத்தில் பேசுகின்றார். வினைப்பயனுக்கு ஏற்றாற்போன்று வர்ணங்களைப் படைக்கின்றார். ஒவ்வொருவரும் தத்தம் குலத்தொழிலையே ஆற்றல் வேண்டும் என்பது வர்ணாச்சிரமதர்மம் என்று கூறப்படுகின்றது. வர்ணத்தின் தோற்றம் குணகர்ம பேதத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததே தவிர பிறப்பில் உண்டானதல்ல எனப்பகவத்கீதையில் கண்ணன் கூறியுள்ளமை குறிப்பிடதக்கது.

“சதுர்வர்ணம் மயாசிருஷ்டம் குணகர்ம விபாக.................” (கீதை 4:13)

இவ்வாறு ஆதிகாலத்திலே வர்ணம் என்பது மனிதனின் சுதந்திரத்தையும், அவன் இயல்பையும் பிரகிருதி இயல்பையும் வெளிப்படுத்தும் சொல்லாகவும் வழக்கத்திலே

இருந்துள்ளது (கலைவாணி இராமநாதன், 2010). மூன்று குணங்களும் ஒரு மனிதனிடம் கூடியோ, குறைந்தோ, சமஅளவிலோ அமைந்துள்ளன. அதனால் பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திரத் தன்மையானது ஒவ்வோர் மனிதனிடமும் கூடியோ அல்லது குறைந்தோ அல்லது சமஅளவிலோ காணப்படுவதால், எந்தக்குணம் அதிகளவிலே தலைதூக்குமோ அக்குணம் மேலோங்கித் தோன்றுவதால் அந்தக் குணத்தின் இயல்பினையொட்டி ஒருவனை அது பிராமணனாகவோ, சத்திரியனாகவோ, சூத்திரனாகவோ ஆக்குகின்றது. அதனால் சத்வகுணம் மேலோங்கியோர் பிராமணர் என்றும் ராஜஸ் என்னும் போர்க்குணம் மேலோங்கியோர் சத்திரியர் எனவும் தாமசகுணம் மேலோங்கியோர் சூத்திரர் எனவும் கூறப்படுவதுண்டு. இக்குணபேதங்கள் இன்று சாதியடிப்படையிலே காணப்படும் பிரிவினரிடையே மாறுபட்டுத்தோன்றுவதையும் அவதானிக்கலாம். பிராமணவர்ணத்தில் பிறந்த பலர் வைசியத்தொழிலையும் சூத்திரத்தொழிலையும் செய்பவர்களாக இருப்பதுடன் அரசாங்கப் பாதுகாப்புப் படையிலே இராணுவவீரர்களாகவும் கடமையாற்றுகின்றனர் என்பதை அனைவருமறிவர். அதன்படி ஒரு குடும்பத்தின் நான்கு சகோதர்களின் மனபாகத்தின்படி ஒருவன் பிராமணனாகவும் இன்னொருவன் சத்திரியனாகவும் இருக்கமுடியும். இவ்வாறு நான்கு வர்ணங்களையும் பற்றி கூறிய பகவான் தனது கடைசிப்போதனையில் வர்ணங்களின் கர்மங்களை எடுத்து கூறுகின்றார்.

நான்கு யோகமும் ஒரு மனிதனிடத்து ஒழுங்காக அமைந்திருந்தால் அவன் நிறைமனிதனாகின்றான். நான்கு வர்ணங்களும் ஒரு சமூகத்தில் சிறப்பான முறையில் அமைந்திருந்தால் அது தலைசிறந்த சமூகமாகின்றது. இவ்வகையில் மனிதர்கள் அவர்களுக்குரிய கடமைகளைச் செய்வதன் மூலம் சமுதாயத்தில் ஒழுக்கம் பேணப்படும் என்பது தெளிவாகின்றது (கலைவாணி இராமநாதன்,2010).

**பகுப்பாய்வு**

ஒழுக்கமானது மனிதவாழ்வினை மேம்படச்செய்யும் ஒரு முக்கியகாரணியாகவே காணப்படுகிறது. மெய்யியல் வளர்ச்சிப்போக்கில் ஒழுக்கவியலானது கிரேக்க காலத்தில்தான் ஒரு தனித்துறையாக வளர்ச்சியடைந்தது எனக் கூறப்படுகின்றது. சோபிஸ்ட்டுக்கள் தமக்கென சில ஒழுக்கக்கருத்துக்களைக் கொண்டிருந்த போதும் கூட கிரேக்க ஒழுக்கவியலாளர்களே மீள்வடிவமைத்தனர் எனக்கூறப்படுகின்றது. அவ்வொழுக்கக் கருத்துக்களை சமயத்துக்கும் ஒழுக்கத்திற்கும் நெருக்கமான தொடர்பு இருந்ததனை மத்தியகால மெய்யியல் எமக்குச் சுட்டிக்காட்டுகின்றது. இறையியல் சார்பான ஒழுக்கக்கருத்துக்கள் இங்கு முதன்மை பெற்றிருந்தது. அவ்வாறே புத்தொளிக்காலத்திலும் மறுமலர்ச்சிக்காலத்திலும் பலபுதிய பரிணாமங்களைப் பெற்றுக்கொண்டது. மேலைத்தேசங்களில் மட்டுமின்றி கீழைத்தேசங்களிலும் அறவாழ்வொன்று ஒரு முக்கிய அம்சமாக மனிதவாழ்வில் வற்புறுத்தப்பட்ட நிலையில் இங்கு அறக்கருத்துக்கள் பௌதீகவதீத நிலையில் முன்வைக்கப்பட்டாலும் மனித சமூகத்தின் சீர்கேடான தன்மையினை கட்டுப்படுத்த ஒழுக்கவியலானது கடிவாளமாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மகாபாரதம் என்னும் வாழ்வியல் தத்துவ நூலில் வெளிப்படுத்தப்படும் ஒழுக்கவியல் அல்லது அறம்சார்ந்த கருத்துக்களை நாம் நோக்குமிடத்து பல்வேறு அறம்சார்ந்த

கருத்துக்கள் இங்கே சுட்டப்படுகின்றது. கற்புநெறியிலிருந்து தவறாது ஒழுகுதல், சிறப்பான விருந்தோம்பல் பண்புகளைக் கொண்டிருத்தல், தானதர்மத்தை செய்தல், பிறருடைய பொருட்களினை நாடாதிருத்தல், மனிதர்களிலும் ஏனைய உயிர்களிடத்திலும் மிகுந்த அன்பு செலுத்துதல், குருவை வணங்குதல், சிறப்பான, மேன்மையான நட்பினை பேணுதல், சகோதரத்துவம் பேணல், நமது கடமைகளை சரிவர செய்தல், கொடுத்த வாக்கிற்கு இணங்க செயல்படுதல் அதாவது சத்தியத்தினை காப்பாற்றுதல், பெற்றோரின் சொற்களைக்கேட்டு நடத்தல், பெரியோருக்கு மதிப்பளித்தல், போர்த்தர்மங்களை கடைப்பிடித்தல் போன்ற பல்வேறுபட்ட ஒழுக்கவியல் கருத்துக்களை தன்னகத்தே கொண்டமைந்ததாக காணப்படுகின்றது எனலாம்.

பெண் என்பவள் போற்றுவதற்குரிய அரிதான மானிட பிறவியாக தோன்றுகின்றாள். மானம் என்பது ஒரு மனிதனுக்கு அவனது உயிருக்கு மேலானதாக காணப்படுகின்ற ஒன்றாகும். இந்த இரண்டையும் உணர்ந்திடாத துரியோதனன் கூட மரணப்படுக்கையில் இளம் பாண்டவர்கள் தூங்கும் நேரத்தில் கொன்ற அஸ்வத்தாமனை பழித்து கூறுகின்றான். அது மட்டுமில்லாது தன்னைப்போல் வாழ்நாளெல்லாம் தீமையே வடிவாக வாழ்ந்த எவருக்கும் இப்படியான மரணமே கிடைக்கும் என்றும், நான் செய்த தீமைகளை எண்ணி கண்ணீர் விடுவதாகவும், தான் எப்படி வாழ்ந்திருக்கின்றேன் ஆனால் எப்படி வாழ்ந்திருந்தால் நன்றாக இருக்கும் என்பவை துரியோதனன் அவனது மரணத்திற்குமுன் சில விநாடிகள் சிந்தனையில் ஓடிய ஒன்றாகவே காணப்படுகின்றது. இதன் மூலம் நாம் புரிந்து கொள்ள வேண்டிய விடயம் யாதெனில் ஒருவனுக்கு சிறப்பான மரணத்தை கொடுப்பது கூட ஒழுக்கம் நிறைந்த வாழ்வால் மட்டுமே இயலுமான ஒன்றாக கூறப்படுகின்றது.

இவ்வாறாக மகாபாரதத்தில் குறிப்பிடப்படும் போர்ஒழுக்கவியல் என்பது நோக்கப்படுமிடத்தில் தூதுவர்களையும் ராஜதந்திரிகளையும் கண்ணியமாக நடாத்துதல் என்ற ஒழுக்கவியலானது இன்றைய யுகத்தில் ஒரு தூதுவனின் எதிர்காலம் பற்றிய கொள்கைகள் மற்றும் செயற்பாட்டு சுதந்திரம் ஆகியவற்றை பொருத்தவரையில் 1961 வியன்னா ராஜதந்திர உறவுகள் சம்பந்தமான மாநாடு (1961 vienna convention on Diplomatic Relations) கரிசனை கொள்கின்றது எனலாம்.

மேலும் மகாபாரதத்தின் சாந்திபர்வம் போர் கைதிகளை மனிதாபிமானத்துடன் பராமரித்தலுடன் தொடர்புடைய நெறிமுறைகளை விவரித்துள்ளது. போரில் ஈடுபடாத ஒருவனை கொல்வதானது அப்பாவி பொண்ணொருத்தியை பலாத்காரம் செய்வதற்கும் கல்விக்காகவும் கற்றலுக்காகவுமே தன்னை அர்ப்பணித்த ஒருவனிடம் வழிப்பறி செய்வதனை விடவும் கீழ்த்தனமானது எனச்சாந்திபர்வம் குறிப்பிடுகின்றது. இவ்வாறு குறிப்பிட்டவற்றை பிற்காலத்தில் வடிவமாக 1949 ஓகஸ்ட் 12ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்ட ஜெனிவா மாநாட்டு தீர்மானங்கள் சிலவற்றில் நோக்க வேண்டியுள்ளது. இவ் உடன்படிக்கையில் இரண்டாம் பகுதியான போர்க்கைதிகளின் பொதுவான பாதுகாப்பு குறித்தும் அதன் 12ஆம் 13ஆம் சரத்துக்கள் யுத்தகைதிகள் மனிதாபிமானத்துடன் நடத்தப்பட வேண்டியமை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறைக்கைதிகளுக்கான தங்குமிட வசதி, உணவு, உடை போன்ற அத்தியாவசியத் தேவைகள் இடையூறின்றி வழங்கப்படுதல் வேண்டும் என்ற மகாபாரத

சாந்திபர்வத்தின் கருத்துக்கள் ஜெனிவா உடன்படிக்கையில் பல்வேறு பிரிவுகளில் விரிவாக கூறப்பட்டுள்ளது. உதாரணமாக ஜெனிவா உடன்படிக்கையில் இரண்டாம் அத்தியாயம் சிறைக்கைதிகளுக்கான இருப்பிட வசதி, உணவு, உடை போன்ற அடிப்படை வசதிகள் பற்றி குறிப்பிடுகின்றது. இதன் மூன்றாம் அத்தியாயம் சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் பற்றி குறிப்பிடுகின்றது. குறிப்பாக மூன்றாம் அத்தியாயத்தின் 30வது சரத்து ஓர் கைதிக்கான வைத்திய பராமரிப்பு முறைகள் பற்றியும் அதே அத்தியாயத்தின் 31வது சரத்து வைத்திய பரிசோதனைகள் குறித்தும் கருத்துக்களை எடுத்துரைத்துள்ளது.

பேரழிவை தரும் ஆயுதங்களை பிரயோகித்தல் தொடர்பாக நோக்குகின்ற போது மகாபாரதத்தில் அர்ச்சுனன் தனது மகனாகிய அபிமன்யு சூழ்ச்சியால் கொல்லப்பட்ட போதும் பேரழிவை தரும் சிவனுடைய படைக்கலமாகிய பாசுபதாஸ்திரத்தினை பிரயோகிக்க எண்ணவில்லை. இதனை தற்கால போர்நியதிகளில் காணக்கூடியவாறு உள்ளது. அதாவது சென்பீற்றர்பேர்க் பிரகடனம் (St.Petersburg Declaration, 1868), ஹேக் மாநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட பிரகடனங்கள் (Hague Declaration concerning expanding Bullets, Hague Regulations, 1907) என்பவற்றில் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களின் பிரயோகம் பற்றிய கட்டுப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தியமை நோக்கத்தக்கது. இவை இன்றைய உலக அரங்கில் போரும் போருக்கு பிந்திய கொடூரங்களுக்கும் எதிராக எடுக்கப்பட்டுள்ள பல்வேறு மனிதஉரிமை பிரகடனங்களுக்கு முன்னோடியானவை என்பதை மறுக்க முடியாது.

மேலும் ‘‘பற்றற்று கர்மம் செய்’’ என்கிறது கர்மயோகம் எனவே பற்றில்லாது கடமையைச்செய்யும் பொழுது மனிதமனங்கள் எதிலும் ஆசைகொள்ளப் போவதில்லை. ஆசை இல்லாவிட்டால் எதனையும் வலிந்து மற்றவர்களிடம் இருந்து பெற யாரும் முன்னிற்கப் போவதில்லை எனவும் மகாபாரத ஒழுக்க கருத்துக்கள் மூலம் சமூகத்தில் வன்முறைகளோ, கலவரங்களோ இடம்பெறப்போவதில்லை எனவும் இதனால் சமூகம் சீர்மை பெறும் எனக்குறிப்பிடப்படுகிறது. ஆகவே மேற்குறிப்பிட்ட விடயங்களை நாம் நோக்கும்போது மகாபாரதத்தில் குறிப்பிடப்படும் ஒழுக்கவியல் கருத்துக்கள் நடைமுறையில் சாத்தியப்படுவதாயும் காணப்படுவதோடு இந்த ஒழுக்கவியல் பற்றிய கருத்துக்கள் சமூகத்தின் சீர்கேடுகளைத்தடுத்து சமூகத்தின் மேன்மைகளை வளர்த்து வாழ வழிகோலுகின்றது.

**முடிவுரை**

ஒரு மனிதனாக பிறந்தால் எப்படியும் நாம் வாழ்ந்து விடலாம் என்ற சிந்தை இல்லாது நமக்கான சில விதிகளையும், நியதிகளையும் கொண்டு வாழவேண்டும் என்ற கொள்கையை நமக்கு மிகவும் தத்ரூபமாக ஒவ்வொரு விடயத்திலும் எடுத்துரைப்பதாகவே மகாபாரதகாவியம் அமைந்துள்ளது. வாழ்க்கை என்பதன் அர்த்தத்தினை பகவத்கீதையில் கிருஷ்ணரால் குறிப்பிடப்படும் கீதாசாரத்தில் இலகுவான முறையில் கற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. நமது இறப்பின் பின்னதான வாழ்க்கையும் நமது கர்மவினை அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றது. இதற்கு தர்மரின் வாழ்வானது சிறப்பான எடுத்துக்காட்டாக காணப்படுகின்றது.

ஒரு மனிதனின் ஒழுக்க வாழ்வானது அவனது கர்மவினை பயனைத்தோற்றுவிக்கின்றது. அதனால் நாம் நமது வினைப்பயன்கள் எவ்வாறு அமையவேண்டும் என்பதை தீர்மானித்தல் மிக அவசியமான ஒன்றாகும். ஒரு மனிதனது வாழ்வு ஒழுக்கம் நிறைந்ததான விழுமியங்களை கொண்டதாக அமைவது அவன் வாழும் சூழலினை பொறுத்தே அமைகின்றது. கௌரவர்களும், சகுனி என்ற ஓர் உறவு காணப்படாது இருந்தால் அவர்களும் இன்று பஞ்சபாண்டவர்களைப் போல போற்றப்படுபவர்களாக காணப்பட்டிருப்பார்கள். ஆகவே ஒரு மனிதன் பிறப்பிலிருந்து இறப்பு வரை அவன் வாழும் சூழலும் அவன் சேர்ந்து கொள்ளும் உறவுகளும் அவனது ஒழுக்கத்தில் அதிகப்படியான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடியதொன்றாகும். மனிதர்கள் தங்களது வாழ்வினை அதிகமாக இறைவனுடன் சேர்த்துக் கொள்ளும் வேளை ஒழுக்கத்துடன் கூடிய வாழ்வினை அடைந்து கொள்ள முடியும். "எப்படியும் வாழ்வோம் என்பதை விட நாம் இப்படி வாழ்வோம்" என்ற நல்ல எண்ணச்சிந்தனைகளுடன் நாம் நமது வாழ்வினை வாழ்வது சிறப்புக்குரியதாகும்.

**உசாத்துணைகள்**


அமுதன். (2007). *அறம் எனப்படுவது.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்.

கலைவாணி இராமநாதன். (2010). *இந்து மரபில் வருணதர்மமும் வைசித்தாந்த ஒழுக்கவியலும்.* கரிகணன் பிறின்டேர்ஸ்

சுவாமி அசுதோசபனந்தர்.*ஸ்ரீமத் பகவத்கீதை கடமை முலம் கடவுள்.* ஸ்ரீ இராமகிருஷ்ண மடம்.

சுவாமி சித்பவனாந்தர். (1956). *ஸ்ரீமத் பகவத்கீதை.* தபோரன பிரசுராலயம்

பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா,அ.ச. (2016). *குந்தி மகாராணியின் போதனைகள்.* பக்தி வேதாந்த புத்தக அறக்கட்டளை.

பார்த்தசாரதி, நா. (2000). *மகாபாரதம் அறத்தின் குரல்.* தமிழ் புத்தகாலயம்

முகுந்தன், ச. (2020). *புராதன இந்து சமுதாயத்தில் போரியல்.* குமரன் புத்தக இல்லம்

வில்லிபுத்தூர் ஆழ்வார். (2001). *வில்லிபாரதம் முதல் பாகம்.* பூம்புகார் பதிப்பகம்.

வில்லிபுத்தூர் ஆழ்வார். (2001). *வில்லிபாரதம் மூன்றாம் பாகம்.* பூம்புகார் பதிப்பகம்.

Dalmiya,D. (2016). *Care-based Epistemology and the Comparative Feminist Context*. Oxford Scholarship Online: August 2016 DOI: 10.1093/acprof:oso/9780199464760.001.0001.

Rima Rani Nath. (2020). Ethical Dilemma of Karna "The Mahabharata":A Critical study of karna's Character in The Light of Episode The Temptation of Karna. *International Journal of Educational Science and Research (IJESR)*,10 (3), 1-6.

Sahgal, S. (2021). Apaddharmaparva: Articulating the Dilemma on Ethics and Politics within the Epic, the Mahabharata. *Advances in Social Sciences Research Journal*, 8(6). 224-239.

Swami Bodhananda. (2010). Dharma in the Mahabharata Values for Management and Leadership. *Journal of Management & Leadership*,2(1).

# திருக்குறள் மற்றும் நாலடியாரில் இல்வாழ்க்கை எனும் எண்ணக்கருவும் அதன் தனித்துவமும் - தமிழர் மெய்யியல் சிந்தனை நோக்கில் ஓர் ஒப்பீட்டு ஆய்வு

**நோமன் றொசாயிறோ ஜான்சி, முனியாண்டி ரவி**
தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை
jency1997.07@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழர் மெய்யியலின் ஆய்வுப் பொருண்மைகளில் திருக்குறள் மற்றும் நாலடியார் எனும் இரு பதினெண் கீழ்க்கணக்கு நீதி நூல்களும் தனித்துவமான இடத்தினைப் பெற்றுக்கொள்கின்றன. சங்கமருவிய கால/அறநெறிக்கால நூல்களாக இவை இரண்டும் அறியப்படுகின்றன. திருக்குறளில் இல்லறவியல் இல்வாழ்க்கை தொடக்கம் புகழ் ஈராக இருபது அதிகாரங்களையும் கொண்டமைந்தது. இல்லறவியலில் இடம்பெறும் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், புதல்வரைப் பெறல், அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்நன்றி அறிதல், நடுவு நிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, தீவினை அச்சம், ஒப்பறிவறிதல், ஈகை, புகழ் என்னும் அதிகாரங்கள் இல்லறத்தின் தனித்துவமான விடயங்களை வெளிப்படுத்துகின்றது. நாலடியார் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரதான பகுதிகளையும் அறத்துப்பாலில் இரண்டு இயல்களும், பொருட்பாலில் ஏழு இயல்களும், காமத்துப்பாலில் இரண்டு இயல்களுமாக மொத்தம் பதினொரு இயல்களில் நாற்பது அதிகாரங்களையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்து பாடல்கள் உள்ளடங்களாக நானூறு வெண்பா பாடல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. நாலடியாரின் அறத்துப்பாலில் உள்ளடங்கும் பொறையுடைமை, பிறர்மனை நயவாமை, ஈகை, பழவினை, மெய்மை, தீவினை அச்சம் போன்ற அதிகாரங்களில் இல்லறம் தொடர்பான கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, நாலடியாரிலும் திருக்குறளிலும் இல்லறத்தின் சிறப்பு மற்றும் அதன் தனித்துவமான பண்புகளைப் பகுத்தறிந்து சிறந்த இல்லற வாழ்விற்கான அடையாளத்தினை இனங்கண்டு கொள்வதனைப் பிரதான நோக்கமாகக் கொண்டதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. இதற்காக நாலடியார் மற்றும் திருக்குறளின் மூலநூல்களும் தெளிவுரைகளும் மற்றும் இவை தொடர்பாக இணையதளத்தில் இருந்து பெறப்பட்ட தகவல்களும் இரண்டாம் நிலைத் தரவுகளாக பயன்படுத்தப்பட்டு பண்பு சார்ந்த ஆய்வாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இல்வாழ்க்கை பற்றிய பல பரிணாமங்களில் இருந்து மிகச்சிறந்த இல்வாழ்க்கையின் தனித்துவமான பண்புகளை வளர்ப்பதில் நாலடியார் மற்றும் திருக்குறளில் உள்ள தத்துவ சிந்தனைகள் எவ்வாறு பிரயோகிக்கப்பட முடியும் என்ற ஆய்வுப் பிரச்சினையினை மையமாகக் கொண்டு இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. நாலடியாரிலும் திருக்குறளிலும் இல்வாழ்க்கையின் சிறப்பு எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டு இருக்கின்றது. இல்வாழ்க்கையும் அதன் தனித்துவமான பண்புகள் பற்றி இவ்விரு நூல்களிலும் முன்வைக்கப்பட்டுள்ள முன்வைப்புக்களிலுள்ள தத்துவார்த்தப் போக்கு என்ன, இல்வாழ்வான் மற்றும் இல்வாழ்வாளின் கடமை என்ன, இல்லற வாழ்க்கையினைச் சிறப்படையச் செய்யத் தேவையான பண்புகள் தொடர்பாக இவ்விரு நூல்களிலும் முன்வைக்கப்படடுள்ள முன்வைப்புக்கள் எவை என்பன குறித்த ஆய்வு வினாக்களுக்கு விடைகளை கண்டறியும் முயற்சியாக இவ்வாய்வு உள்ளது. இவ்வாய்வின் மூலம் இல்வாழ்க்கை எனும் கருத்தினைத் திருக்குறள் மற்றும் நாலடியார் என்பன சில இடங்களில் ஒரே விதமாகவும் வேறுவிதமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பதை விளங்கிக் கொள்ள முடிகின்றது. மேலும் சிறந்த இல்வாழ்க்கையின் தனித்துவமான பண்புகளையும், இல்வாழ்க்கையின் முக்கியத்துவத்தினையும், சிறந்த கணவன் மற்றும் மனைவியின் கடமைகளையும், இன்றைய காலத்தில் இல்லற வாழ்க்கை சிறந்ததாகப் பேணப்பட வேண்டிய அவசியத்தினையும் குறித்து அறிந்து கொள்வதோடு இல்லற வாழ்விற்கான சரியான அர்த்தத்தையும் பண்டைய தமிழர் வாழ்வில் இல்வாழ்க்கை எத்தகைய சிறப்பிடம் பெற்றிருக்கின்றது என்பதையும் விளங்கிக் கொள்ள முடியும்.

***திறவுச் சொற்கள்:*** *இல்வாழ்க்கை, திருக்குறள், நாலடியார், இல்வாழ்க்கையின் சிறப்பு*

**அறிமுகம்**

உலகையும் வாழ்வையும் பற்றிய கல்வியே மெய்யியல். நாம் வாழ்கின்ற உலகைத் திருத்தி அமைக்கவல்ல வழிகாட்டியாக ஒரு சிந்தனை மாதிரி அல்லது சிந்தனை முறை அமைகினற் போது மெய்யியல் உலகியலாக மாற்றம் பெறுகின்றது. நாம் அறிந்த கருத்துக்களையும், உணர்ச்சிகளையும் பிறருக்கு எடுத்துக் கூறுகின்ற ஒரு கருவியாக மொழி விளங்குகின்றது. மொழியைப் பேசுகின்ற மக்களது உணர்ச்சிகளையும், கொள்கைகளையும், குறிக்கோள்களையும் எடுத்துக்கூறுகின்றவை இலக்கியங்களாகும். சமுதாய மக்களின் வாழ்க்கை முறை, அவர்களினுடைய இலட்சியம், அவர்களுடைய இலக்கு போன்றவற்றை அவ்வாறே இலக்கியங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. எனவே இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடி எனலாம். சங்ககாலம் முதல் தற்காலம் வரை இலக்கியங்கள் மக்களுடைய வாழ்க்கை முறையையும், அதனுடைய வளர்ச்சியையும் பிரதிபலிப்பவையாகவே காணப்படுகின்றன.

தமிழர் மெய்யியல் சிந்தனை மரபில் பல்வேறு நூல்கள் தோற்றம் பெற்று தமிழருடைய வாழ்க்கை முறையினை சித்தரித்துக் காட்டினாலும் மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் திறன்பட தொகுத்து வழங்கும் நூல் திருக்குறள் ஒன்றே. அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருள்களையும் குறைந்த அடிகளில் சிறப்புற (நான்கு அடிகளுக்கு மிகாமல்) உரைப்பது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் இயல்பாகும். சங்ககாலச் சான்றோர்கள் பட்டறிந்த உண்மைகளையே பிற்காலப் புலவர்கள் நீதிக் கருத்துக்களாகப் போற்றினர். நீதி நூல்களில் இலக்கியச் சுவையும் கற்பனையும் குன்றித் தோன்றினாலும் அவை மக்களின் வாழ்வைச் செம்மைப்படுத்தும் சீரிய தொண்டினைச் செய்கின்றன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, சிறுபஞ்சமூலம், பழமொழி நானூறு, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி என்கிற பதினொரு நூல்களும் நீதிநூல்களாகும்.

சங்கமருவிய கால பதிணென்கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள் மற்றும் நாலடியார் எனும் இவ்விரு நூல்களும் தனிச்சிறப்பு வாய்ந்த நீதி நூல்களாகும். ''ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'', ''பழகுதமிழ் சொல்லருமை நாலிரண்டில்'' என்கிற கூற்றுகள் நாலடியார் மற்றும் திருக்குறளின் பெருமையினை எடுத்தியம்புகின்றன. திருக்குறள் நாலடியாருக்கு முன்பாகவே எழுதப்பட்ட இலக்கியமென தமிழ் வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். நாலடியார் கி.பி ஏழாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இலக்கியம் என அறியப்படுகின்றது (Vaiyapuripillai,1988:64). இவ்விரு நூல்களும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால எனும் முப்பிரிவுகளை உடையதாக விளங்குகின்றன. இரண்டு நூல்களும் வெண்பா பாடல் முறையினைப் பின்பற்றுகின்றன. நாலடியார் நானூறு நான்கடி வெண்பாக்களையும், திருக்குறள் ஆயிரத்து முன்னூற்று முப்பது இரண்டடி வெண்பாக்களையும் கொண்டமைந்திருக்கின்றன. திருக்குறள் ஒரே ஆசிரியரால் இயற்றப்பட்டது. நாலடியாரோ சமண முனிவர் நானூறு பேர் பாடிய வெண்பாக்களின் தொகுப்பாகும். பதிணென்கீழ்க்கணக்கு நூல்கள் பற்றிய வெண்பாவில் நாலடியார் முதலிடத்தையும் திருக்குறள் ஐந்தாம் இடத்தினையும் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. பதிணென் கீழ்க்கணக்கு என்பது பதினெட்டு நூல்களை உள்ளடக்கியது என்பதனை,

"நாலடி நான்மணி நாணாற்பது ஐந்திணை
முப் பால்கடுகங் கோலை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியோடு ஏலாதி என்பவே
கைந்நிலைய ஆங்கீழ்க் கணக்கு'' (மேற்கோள்: மது.ச.விமலானந்தம்)

என்ற தனிப்பாடல் வழி உணர்த்துகிறது. நாலடியாரின் இயல் மற்றும் அதிகார வைப்புமுறையினை பதுமனாரும் அறம், பொருள், இன்பம் எனும் முறையில் பாடல்களை வகுத்தவர் தருமர் எனவும் கூறப்படுகின்றது.

மனிதப் பிறவியின் மேலான தன்மை, மனிதரின் நடத்தை, நல்லொழுக்கம், நற்பண்புகள் நிறைந்த நல் வாழ்க்கையின் மூலமே மனிதனின் நல்வாழ்வு விளக்கப்படுகின்றது. மனித சமுதாயத்தின் உயிர்நாடியாக விளங்குவது குடும்பம். குடும்ப அமைப்பில் முக்கிய இடம்பெறுபவர்கள் கணவனும் மனைவியும் ஆவார். இல்லறம் நல்லறமாக மாற வேண்டுமானால் கணவனும் மனைவியும் அறவழியில் செயல்பட வேண்டும். ''கூடி வாழ்தல் மனித இயல்பு" என்று கிரேக்க தத்துவஞானியான அரிஸ்டோட்டில் குறிப்பிட்டுள்ளார். கூடி வாழ்தலில் சிறப்பினை இருவகையினராக பிரித்தனர். துறவறத்தின் கண் செயலாற்றுபவர் "துறவிகள்'' என்றும் இல்லறத்தின் கண் செயலாற்றுபவர் "இல்வாழ்வார்'' என்றும் பிரித்தனர். இரு அறங்களில் ''இல்லறமே சிறந்தது" என்பது வள்ளுவர் போன்ற பெரியோர்களின் துணிவு எனலாம். இல்வாழ்க்கையே நல்வாழ்க்கை என்பர். இல்லறமல்லாது நல்லறம் இல்லை என்பர். வள்ளுவர் தம் குறளில்

''அறத்தூற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போலுய்ப் பெறுவது எவன்" (குறள் 46)

என்று அறவழியில் இல்வாழ்க்கை வாழ்வதே இல்லறத்தை விட்டு வாழும் துறவறத்தை விட சிறந்தது என்கிறார். மேலும் ''மனைக்கு விளக்காகிய வானுதல் கணவன் முனைக்கு பிரம்பாகிய வெண்வேல் நெடுந்தகை" என்ற சங்கப்பாடல் இல்லறத்தில் மனைவி, கணவன் இருவரின் கடமையை எடுத்துரைக்கிறது.

இவ்வாறு தமிழர் மெய்யியல் வரலாற்றில் பல்வேறு தமிழ் இலக்கியங்கள் இல்லறம் பற்றிய கருத்துக்களை முன்வைத்துள்ளன. அதிலும் உலகப் பொதுமறை என்று அழைக்கப்படும் திருக்குறளில் வாழ்வின் பெரும் பகுதியான இல்லறம் தொடர்பாக வள்ளுவர் முன்வைக்கும் வாழ்க்கை முறையை நாம் வாழ்வில் கடைப்பிடித்தாலே துன்பம் இன்றி துயர் இன்றி நாம் மனிதனாகப் பிறந்ததின் பயனையே அனுபவித்து விடலாம் என்பதே மறுக்க முடியாத உண்மை. மேலும் இவ்விரு நூல்களும் தம்மளவில் ஒத்த பல கருத்தாக்கங்களைக் கொண்டமைந்துள்ளமையினைக் காணமுடிகின்றது. இவற்றில் இல்லறவியல் எனும் இயலானது இல்லறத்தினை பேசுபொருளாகக் கொண்டமைந்துள்ளது. இவ்விரு நூல்களிலும் இல்வாழ்க்கையின் முக்கியத்துவம், இல்லறத்திற்கான அடிப்படை அம்சம், நல்ல கணவன் மற்றும் மனைவிக்குமான அடிப்படைகள், இல்லறத்தின் தனித்துவமான பண்புகள், நல்ல இல்லற வாழ்க்கையினால் கிடைக்கும் நன்மைகள், சிறந்த இல்லற வாழ்க்கையினை சிறப்படைய உதவும் வழிமுறைகள்

போன்ற விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. எனவே இவ்விரு நூல்களிலும் இல்லறம் குறித்த வெளிப்பாடும் அதன் பின்னணி அம்சங்களையும் அறிந்துகொள்ளும் வகையிலான தகவல்கள் பெறப்பட்டு ஆய்வு முன்னகர்த்தி செல்லப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

ஆய்வின் நோக்கம் என்பது ஆய்வினுடைய இலக்கை அடைவதாகும். ஆகையால் ஆய்வின் நோக்கம் எப்பொழுதும் தெளிவானதாக இருக்க வேண்டும். மேலும் ஆய்வின் நோக்கமானது அறிவுத் தேட்டத்திற்கு அடிப்படையானதாக காணப்படுகின்றது. அந்தவகையில் ஒரு தனிமனிதனின் முழுமையான விருத்தியில் குடும்ப உறவுகளின் பங்களிப்புகள் மிகவும் அத்தியாவசியமானது என்பது உளவியல் உண்மை. இன்றைய காலத்தில் இல்லற வாழ்க்கையின் முக்கியத்துவம் அறியப்படாமல் அவை உதாசீனப்படுத்தப்படுகின்றன. இதனால் பெற்றோர்களும் பிள்ளைகளும் உளரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையினை சரியான முறையில் கையாண்டு கொள்வதற்கு குடும்ப உறவுகளில் கணவன், மனைவி நடத்தை கோலங்களினையும் பெற்றோர், பிள்ளை உறவின் நடத்தை கோலங்களினையும் குடும்ப உறவில் பேணப்பட வேண்டிய பண்புகளினையும் குடும்ப உறவினை மேம்படுத்த உதவும் நுட்பங்களினையும் சங்கமருவிய பதினெண்கீழ்கணக்கு நூல்களான திருக்குறள் மற்றும் நாலடியாரில் முன்மொழியப்பட்டுள்ள கருத்துக்களினை ஆதாரமாகக் கொண்டு தொகுத்து கூறுவதே இவ்வாய்வின் நோக்கமாக காணப்படுகின்றது.

மனித வாழ்க்கைக்கு அடித்தளமாக இல்லறம் அமைய பெற்றிருப்பதனால் குறித்த இவ்விடயம் தொடர்பாக ஒரு தெளிவுடைமை இருப்பதானது மனித வாழ்வின் சகல செயல்பாடுகளுக்கும் உதவுவதாக இருக்கும் என்னும் வகையில் குறித்த இவ்வாய்வு என்னால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

***உப நோக்கம்***

- திருக்குறள் மற்றும் நாலடியார் போன்றவற்றில் கூறப்படுகின்ற இல்லறம் தொடர்பான கருத்துக்களின் ஊடாக இல்லறத்தின் தனித்துவமான பண்புகளை அறிந்து கொள்ளுதல்.
- தமிழர் மெய்யியல் வரலாற்று ரீதியான வளர்ச்சியில் தோன்றிய இலக்கியங்கள் முன்வைத்த இல்லறம் பற்றிய கருத்துக்களை ஆய்வு செய்வதன் ஊடாக குடும்பம் எண்ணக்கரு பற்றிய பூரண அறிவினை பெற்றுக்கொள்ளுதல்.
- திருக்குறள் மற்றும் நாலடியார் என்ற நூல்களில் கூறப்பட்டுள்ள இல்லறம் தொடர்பான சிந்தனைகள் எவ்வாறு இல்லற வாழ்க்கைக்கான வழிகாட்டலாக அமைகின்றது?, இவ்விடயங்களை எவ்வாறு தற்கால குடும்ப உறவுகளில் பிரயோகிக்கலாம்? போன்றவற்றை அறிய முற்படுதல்.

**ஆய்வு பிரச்சினை**

ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் இல்லறம் எனும் உறவு இன்றியமையாத ஒன்றாக உள்ளது. இந்த உறவு முறையினை நாம் சரியான விதத்தில் அடையாளம் கண்டு கொள்வதும் அதன் முக்கியத்துவத்தினை அறிந்து செயல்படுவதும் அவசியமாக உள்ளது. குடும்ப உறவின்

முக்கியத்துவம் சரியாக உணரப்படாமையினால் விவாகரத்து, கணவன் மனைவி தற்கொலை, பாலியல் துஸ்பிரயோகம், குடும்ப வன்முறை, கணவனால் மனைவி துன்புறுத்தப்படுதல், மதுப்பாவனை, பிள்ளைகள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகுதல் மற்றும் இலத்திரனியில் ஊடகங்களுக்கு அடிமையாகுதல் போன்ற நவீன தொழில்நுட்ப கலாச்சார ரீதியான பிரச்சினைகள் இன்றைய உலகில் இல்லற வாழ்க்கையின் தனித்தன்மையினை இழக்கச் செய்கின்றது. சங்கமருவிய கால பதினெண்கீழ்க்கணக்கு எனும் பிரிவுக்குள் உள்ளடங்கும் திருக்குறள் மற்றும் நாலடியார் போன்றவற்றில் கூறப்படும் இல்லறம் தொடர்பான தத்துவ சிந்தனைகள் எவ்வாறு இன்றைய இல்லற வாழ்வில் பிரயோகிக்கப்பட முடியும்? மற்றும் சங்கமருவிய கால அறிநெறி நூல்களான திருக்குறள், நாலடியார் போன்றன தம்மளவில் இல்லறம் தொடர்பாக ஒருமித்த கருத்துக்களை கொண்டுள்ளனவா? என்பதும் இந்த ஆய்வின் பிரதான பிரச்சினையாக உள்ளது.

**ஆய்வு வினாக்கள்**

ஆய்வின் நோக்கத்தினை திறன்பட அடைந்து கொள்வதற்கு ஆய்வு வினா சிறப்பாக துணை புரிகின்றது. அந்தவகையில் இவ்வாய்வின் இலக்கினை அடைந்து கொள்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ள ஆய்வு வினாக்கள் பின்வருமாறு

- இல்வாழ்க்கை என்றால் என்ன?
- தமிழர் மெய்யியல் வரலாற்று ரீதியான வளர்ச்சியில் தோன்றிய இலக்கியங்கள் முன்வைத்த இல்லறம் பற்றிய கருத்துக்களை ஆய்வு செய்வதன் ஊடாக இல்லற வாழ்வை குறித்த கருத்துக்கள் உள்ளனவா?
- திருக்குறள் மற்றும் நாலடியாரிலும் கூறப்பட்டுள்ள இல்லற வாழ்க்கையினை சிறப்படைய உதவும் பண்புகள் தொடர்பான தத்துவார்த்தப் போக்கு என்ன என்னும் ஆய்வு வினாக்கள் கட்டமைக்கப்பட்டு அவற்றுக்கான விடையினை பெற்றுக்கொள்வதினை இலக்காகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது பண்பு சார்ந்த ஆய்வாகவும் இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது. இதற்காக நாலடியார் மற்றும் திருக்குறளின் மூலநூல்களும் தெளிவுரைகளும் மற்றும் இவை தொடர்பாக இணையத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களும் ஆய்வுக் கட்டுரைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

“நட்பு என்னும் எண்ணக்கரு தொடர்பில் திருவள்ளுவர் மற்றும் அரிஸ்டோட்டிலின் கருத்துக்கள் ஓர் தத்துவார்த்த ஒப்பிட்டு ஆய்வு” மா. பிரகாசன் என்பவர் எழுதிய ஆய்வுக் கட்டுரையானது வாசிப்பிற்குட்படுத்தப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன. இதிலிருந்து திருக்குறளின் காலப்பகுபாடு மற்றும் நூல் அமைப்பு தொடர்பான விடயங்களை அறிந்து கொள்ள முடிந்துத (பிரகாசன், 2020).

“திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிகள்” மு. பத்மாசினி என்பவரினால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையில் திருக்குறளின் அறிமுகம், திருக்குறள் உணர்த்தும் அறநெறிக் கொள்கைகள், திருக்குறள் உணர்த்தும் உளவியல் அறக்கொள்கைகள், திருக்குறள் உணர்த்தும் வினை ஊழ் அறக் கொள்கைகள் மற்றும் திருக்குறள் உணர்த்தும் சமூக அறக் கொள்கைகள் முதலான முன்வைப்புக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து திருக்குறளின் அறிமுகம், திருக்குறள் உணர்த்தும் அறநெறிக் கொள்கைகள், திருக்குறள் உணர்த்தும் சமூக அறக் கொள்கைகள் முதலான விடயங்கள் ஆய்வு வாசிப்பினூடாக பெறப்பட்டன (பத்மாசினி.2007).

“திருக்குறளில் மேலாண்மை நெறிகள்” ஜே. ஜாஸ்மின் ரோசி என்பவர் எழுதிய ஆய்வுக் கட்டுரையானது வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன. இதிலிருந்து திருக்குறளின் அமைப்பும் பகுப்பும், திருக்குறளில் உணர்த்தப்படும் மேலாண்மை நெறிகள் தொடர்பான முன்வைப்புக்கள் ஆய்வு வாசிப்பினூடாக பெறப்பட்டன (ஜாஸ்மின் ரோசி, 2007).

“நாலடியாரிலும் திருக்குறளிலும் ஊழ் ஓர் ஒப்பீட்டு ஆய்வு” எனும் தலைப்பில் இ.பிறேம்குமார் என்பவர் எழுதிய ஆய்வுக் கட்டுரையானது ஆய்வு வாசிப்புக்கு உட்படுத்தப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன இதிலிருந்து திருக்குறள் மற்றும் நாலடியாரின் காலப் பாகுபாடு குறித்த தகவல்கள் பெறப்பட்டன (பிரேம்குமார், 2022).

“திருக்குறள் கூறும் குடும்ப உறவு நடத்தை கோலங்களும் அவற்றினை மேம்படுத்தும் நுட்பங்களும் - ஓர் உளவியல் நோக்கு’’ என்னும் தலைப்பில் மேனகா சிவகரன் என்பவர் எழுதிய ஆய்வுக் கட்டுரையில் குடும்ப உறவு முறையில் கணவன் மற்றும் மனைவியின் கடமைகள் குறித்தும் குடும்ப உறவினை மேம்படுத்த உதவும் நுட்பங்கள் குறித்தும் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து இவ்வாறான தகவல்கள் என்னுடைய ஆய்வுக்காக பெறப்பட்டன. (மேனகா சிவகரன், 2018).

“திருக்குறள் உணர்த்தும் குடும்ப நெறி” எனும் தலைப்பில் ஆ. இராமேஸ்குமார் என்பவரினால் எழுதப்பட்ட ஆய்வு கட்டுரையில் இல்வாழ்க்கை, வாழ்க்கை துணைநலம், மக்கட்பேறு மற்றும் விருந்தோம்பல் போன்ற விடயங்கள் எழுதப்பட்டுள்ளது. இதிலிருந்து திருக்குறளில் கூறப்படும் இல்வாழ்க்கை, வாழ்க்கை துணைநலம், மக்கட்பேறு தொடர்பான கருத்து முன்வைப்புக்கள் ஆய்வு வாசிப்பினூடாக பெறப்பட்டன (இராமேஸ்குமார், 2022).

“திருக்குறளில் இல்வாழ்க்கை” எனும் தலைப்பில் முனைவர் க. விஜயா கலைவாணி என்பவரினால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையிலிருந்து திருக்குறளின் சிறப்பு, இல்லறம், மனைமாட்சி, மகளிர்க்கு அணிகலம் தொடர்பான கருத்து முன்வைப்புக்கள் ஆய்வு வாசிப்பின் ஊடாக பெறப்பட்டன (விஜயா கலைவாணி, 2020).

“தமிழ் இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்” என்னும் தலைப்பில் டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை என்பவர் எழுதிய ஆய்வுக் கட்டுரையானதே வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன. இதிலிருந்து பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பற்றிய விபரம் மற்றும் திருக்குறளில் கூறப்படும் விருந்தோம்பல் பெண்களின் நிலை தொடர்பான விடயங்கள் ஆய்வு வாசிப்பினூடாக பெற்றுக் கொண்டேன். (வேலுப்பிள்ளை, 2020) எவ்வாறு இருப்பினும் நாலடியாரையும் திருக்குறளையும் ஒப்பிட்டு இரண்டிலும் இல்வாழ்க்கையின் தனித்துவமான

பண்புகள் பற்றிய முன்வைப்புக்களை ஆராய்வதில் இவ்வாய்வு முயன்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**இல்வாழ்க்கை எனும் எண்ணக்கரு பற்றிய ஓர் அறிமுகம்**

தமிழர்கள் அகத்தையும், புறத்தையும் இரு கண்களாக கண்டனர். அகம், புறம் என்னும் இரண்டும் ஒற்றுமை, வேற்றுமைகளைப் பெற்றிருப்பினும் புறத்திலும் அகமே சிறப்புடையதாகக் கருதப்பட்டது. புறத்திணைப் பொருளான வீரம் மக்களுள் சிலர்க்கே உரியது. ஆனால் அகத்திணைக்குப் பொருளான காமமோ ஆண், பெண் என்னும் பிரிவுகளைக் கொண்ட உயர்திணை, அ்.றிணை உயிர்களுக்கெல்லாம் பொதுவானதாகும். ஆண், பெண் இணைந்து வாழும் உயர்திணை வாழ்வினை இல்லறம் என சிறப்பிக்கின்றனர். இல்லற மக்கள் கைக்கொள்ளும் ஒழுக்கங்களுக்கு இடப்படும் சிறப்புப் பெயரே பண்பு. பயன் தரும் பண்பின் இரட்டைக் குழந்தைகள் தான் அன்பும், அறமும். அவை வெளிப்படும் இடமே இல்லறம். ‘‘புலன் இன்பம் சார்ந்த இல்வாழ்க்கை” என்ற சங்ககால நோக்கு சங்கமருவிய காலத்தில் மாற்றப்பட்டு துறவற வாழ்க்கைக்கு சமமாக அல்லது அதற்கு மேலான வாழக்கையாக “இல்வாழ்க்கை’’ சங்கமருவிய காலத்தில் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. இல்வாழ்க்கை என்பது சங்ககாலத்திலும் சங்கமருவிய காலத்திலும் ஒரே அர்த்தத்தினை பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. சங்ககால இலக்கியமான குறுந்தொகையில் இல்வாழ்க்கை என்பது

‘‘பிரிவுஅரிது ஆகிய தண்டா காமமொடு
உடன ்உயிர் போகுகதில்ல -
இருவேம் ஆகிய உலகத்து ஒருவேம் ஆகிய புள்மை நாம் உயற்கே” (குறுந்தொகை:57)

என்ற பின்வரும் பாடலடி மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றது.

சங்கமருவியகால இலக்கியமான திருக்குறள் இல்வாழ்க்கையினை துறவற வாழ்க்கையினை விட மேலானதாக கருதுவது குறிப்பிடத்தக்கது. இதனை பினவரும் குறள் மூலம் அறியலாம்.

“அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவது எவன்.
இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை” (குற:5:46,47)

இல்வாழ்க்கையினை ஒரு அறமாக பார்க்கக்கூடிய நோக்கு சங்க காலத்தில் காணப்படவில்லை. சங்கமருவிய காலத்தில் ஏற்பட்ட துறவற வாழ்க்கையின் முக்கியத்துவம் காரணமாக இல்வாழ்க்கை ஓர் அறமாக (இல்லறம்) நோக்கப்பட்டது. திருமணம் என்பது ஒரு சடங்கு. இல்லறம் என்பது இரு இதயங்கள் அன்பு மட்டுமே கொண்டு வாழும் உண்ணமயான வாழ்வு இல்லறத்தின் ஆன்மாவான கணவன் மனைவிக்குள் வலுவான நீடித்த பிணைப்புக்கு பலமான அத்திவாரம் அன்பும், பாசமும் மட்டுமே. எவ்வளவோ செல்வமும் சுதந்திரமும் இருந்தாலும் இல்வாழ்க்கையில் பண்பும் பயனும் பெற அன்பும் அறனும் வேண்டும். இல்லறம் வெற்றி பெறுவதில்தான் வாழ்க்கையின் வெற்றி அடங்கி உள்ளது.

## திருக்குறளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இல்வாழ்க்கையும் அதன் தனித்துவமான பண்புகளும்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாக விளங்கும் திருக்குறள் முப்பால், உத்திர வேதம், தெய்வநூல், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, பொதுமறை, திருவள்ளுவம் என்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இந்நூலின் ஆசிரியர் திருவள்ளுவர், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நான்முகன், மாதாநுபங்கி, செந்நாப் போதார், பெருநாவலர், பொய்யில் புலவன் போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றார். (பிறேம்குமார், 2022). மனித சமுதாயத்தின் உயிர் நாடியாக விளங்குவது குடும்பம். குடும்ப அமைப்பில் முக்கிய இடம் பெறுபவர்கள் கணவனும் மனைவியும் ஆவார். இல்லறம் நல்லறமாக மாற வேண்டுமானால் கணவனும் மனைவியும் அறவழியில் செயல்பட வேண்டும். இல்லற வாழ்வில் மக்கட்செல்வம் சிறந்த செல்வமாகக் கருதப்படுகிறது. சங்கமருவிய காலத்தில் இயற்றப்பட்ட பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள அறநூல்களில் ஒன்றாகத் திருக்குறள் அமைந்துள்ளது. இதிலுள்ள ஒவ்வொரு குறளும் இரண்டு அடிகளால், ஏழு சீர்களைக் கொண்டு இயற்றப்பட்டன. பல்வேறு உலகியல் வள்ளுவத்தில் இடம்பெற்றுள்ள செய்திகள் அறிவியல் நோக்கில் பேசப்பட்டுள்ளன. குறிப்பாக மனிதன் அறவழியில் செல்ல வேண்டும் என்பதை முதன்மையாகக் கொண்டு வள்ளுவர் தம் கருத்துக்களை பதிவு செய்துள்ளார். அக்கருத்துக்களில் இல்லறம் பற்றிய கருத்துக்களும் அடங்கும்.

கூடி வாழ்தல் மனித இயல்பு" என்று அரிஸ்டோட்டில் என்ற மேலைநாட்டு அறிஞர் கூறுகிறார். கூடி வாழ்தலில் சிறப்பினை இருவகையினராக பிரித்தனர். துறவறத்தின் கண் செயலாற்றுபவர் 'துறவிகள்' என்றும், இல்லறத்தின் கண் செயலாற்றுபவர் 'இல்வாழ்வார்' என்றும் பிரித்தனர். இரு அறங்களிலும் "இல்லறமே சிறந்தது" என்பது வள்ளுவர் போன்ற பெரியோர்களின் துணிவு எனலாம். திருவள்ளுவர் இல்வாழ்க்கையே நல்வாழ்க்கை என்பார். இல்லறமல்லது நல்லறமில்லை என்பர். வள்ளுவரும் தம் குறளில்,

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவது எவன்" (குறள் 46)

மேலும் தன்னையும் காத்து பிறரையும் காக்க வல்லது இல்லறம் என்பதனை வள்ளுவர்,

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை" (குறள் 41) என்கிறார்.

தாம் மட்டும் நன்மையடைவதற்காகத் தவம் செய்வோரின் வாழ்க்கையை விடப் பிறர்நலம் கருதிய பலருக்கு நல்ல துணையாகிய இல்வாழ்க்கை சிறப்புடையது என்கிறார் வள்ளுவர்.

"ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து" (குறள் 48) என்ற குறளில் நோற்பாரின், நோன்மையுடைய இல்வாழ்க்கையைச் சிறப்பிக்கிறார்.

ஆறம் இழுக்காது அன்பு செய்து இல்வாழ்க்கை வாழ்பவர் இவ்வுலக வாழ்விலேயே தெய்வநிலை அடைந்தவராக வள்ளுவரால் போற்றப்படுகிறார். இதனை பின்வரும் குறளினூடாக அறியலாம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப் படும்" (குறள் 48) என இல்வாழ்க்கையில் சிறந்தவனை வானுறையும் தெய்வத்துள் வைக்கிறார்.

சுயநலம் மட்டுமே தேடும் குடும்பத் தலைவனை வள்ளுவர் படைக்கவில்லை. மாறாக இல்லறத்தானுக்குரிய தனித்த சில பண்புகளைச் சுட்டுவதன் மூலம் சமூக நலனில் அக்கறையுள்ளவனாகவே குடும்பத் தலைவனைப் படைத்துக்காட்டுகிறார். இல்வாழ்க்கை என்ற நிறுவனம்தான் மனிதன் பிறருக்காக வாழவேண்டும் என்ற உணர்வை உண்டாக்குகிறது என்பதை இதன் வழி உணர்த்திவிடுகிறார். இல்வாழ்வான் என்பவன் பிரமசரிய ஒழுக்கத்தான். வானப்பிரத்தன், முற்றும் துறந்த யோக ஒழுக்கத்தான் என்போருக்கும் துறவிகள், நல்கூர்ந்தார், தன்பால் வந்திரந்தார் என்போருக்கும் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்ற வேண்டியவன். மேலும் தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐவரையும் பாதுகாக்க வேண்டியவன் இல்வாழ்வான் என்கிறது குறள். தன்னைப் பாதுகாத்தலையும் கடமைகளிலொன்றாக வள்ளுவர் குறித்திருப்பது சிறப்பானது (41:43).

இல்வாழ்வான் என்பான் எல்லோரிடத்தும் அன்பாக இருக்கும் தன்மையுடையவனாகவும் நல்வழியில் நடப்பவனாகவும் இருத்தல் வேண்டும். அவ்விதம் அன்பும் அறிவும் கொண்டு வாழ்வதே சிறந்த இல்லற வாழ்வாகும். இத்தகைய இல்லறவாழ்வை மேற்கொள்பவனுக்கு அவ்வாழ்வால் பெறவேண்டிய பலன்கள் யாவும் தானாகவே வந்து சேர்ந்துவிடும்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது." (45)

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவது எவன்" (46)

பெண்களைப் போலவே ஆண்களும் கற்புநெறி தவறாது, ஒருத்தியுடன் மட்டுமே வாழவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை காட்டியுள்ளார். இதன் காரணம் பற்றியே "பிறனில் விழையாமை" எனும் அதிகாரத்தை யாத்துள்ளா.பெண்களுக்குக் கற்பு எவ்வளவு அவசியமோ அதே போல ஆண்களுக்கும் கற்பு அவசியம் என்று வலியுறுத்துவார் வள்ளுவர.

இல்லறக் கடமை என்பது விரிந்து பரந்த ஒன்று. அதை முழுவதும் கணவனோடு இணைந்து செவ்வனே செய்து புகழ் பெற வாழ்வது இல்லாளின் கடமைகளில் சிறந்தது. அதுபோல் அவள் தன்னையும் காத்து தன் கணவனையும் காத்து குடும்ப பாரம்பரியப் புகழுக்கு ஊறுவராமல் குடும்பத்தைக் காக்கும் திறன் கொண்டவளாக இருப்பது பெருமைக்குப் பெருமை சேர்ப்பது போலாகும்.

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்" (56) என்பார் வள்ளுவர்.

"இல்லறத்திற்கு ஏற்ற பண்பு மனைவியிடத்தில் இல்லையானால் அந்த இல்வாழ்க்கை வேறு எவ்வளவு சிறப்புப் பெற்றிருந்தாலும் பயன் இல்லை" என்கிறார்.

"மனைமாட்சி இல்லாள் கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்" (குறள்:48) என்கிறார் வள்ளுவர்.

உலகில் பெறக்கூடிய செல்வங்களில் எல்லாம் உயர்வானது மக்கட்பேறு. அதிலும் அறிவிற் சிறந்த நன்மக்களைப் பெறுதல்தான் உண்மையான செல்வம் என்கிறார். மக்கட்பேறு என்பதில் பிள்ளைகளுக்குப் பங்கில்லை. மாறாக முழுப் பொறுப்பையும் பெற்றோர்களின் மேல் சார்த்தி விடுகிறார் வள்ளுவர். அவரவர்கள் செய்யும் வினைப் பயனையே காரணமாக்குகின்றதோடு பண்பில்லாத மக்களைப் பெறுவதால் ஏழேழு பிறவிக்கும் துன்பம் தொடரும் என்கிறார்.
வாழ்விற்கு அடிப்படையாய் அமைவது அன்பு.

அவ்வகையில் குடும்ப அமைப்பில் கணவன் மனைவியின் அன்பு என்பது சரியான இலக்கை நோக்கி செல்லப் பயன்படுகிறது. மக்கள் தங்கள் வாழ்வியல் நெறிமுறைகளில் விருந்தினரை உபசரித்தல் என்பதனையும், கேட்பார் மனமகிழும் இனிய சொற்களை பேசவேண்டும் என அறநூல்கள் வலியுறுத்துகின்றன. மேலும் இல்வாழ்க்கையினை சிறப்புறச் செய்யத் தேவையான அடிப்படைப் பண்புகளாக அன்புடைமை, விருந்தோம்பல், இனியவைகூறல், செய்நன்றி அறிதல், நடுவு நிலைமை, புறங்கூறாமை, தீவினையச்சம், வெ.்.காமை, ஈகை போன்றவற்றை திருக்குறளில் திருவள்ளுவர் எடுத்துக்காட்டியுள்ளார்.

**நாலடியார் குறிப்பிடும் இல்வாழ்க்கையும் அதன் பண்புகளும்**

நாலடியார் சங்கமருவிய காலத்தின் பதினெண் கீழ்க்கணக்கு நூல் தொகுப்பைச் சேர்ந்த ஒரு தமிழ் நீதி நூல் என்பதினை நாம் ஏற்கனவே அறிந்துள்ளோம். இது சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நானூறு தனிப்பாடல்களின் தொகுப்பாகக் கருதப்படுகிறது. இது புகழ் பெற்ற தமிழ் நீதி நூலான திருக்குறளுக்கு இணையாகப் பேசப்படும் சிறப்பைப் பெற்றுள்ளது. வாழ்க்கையின் எளிமையான விடயங்களை உவமானங்களாகக் கையாண்டு நீதி புகட்டுவதில் நாலடியார் தனித்துவம் பெற்று விளங்குகிறது.

நான்கடிகளைக் கொண்ட வெண்பாக்களால் இயற்றப்பட்டமையினால் இந்நூல் நாலடி என்று அழைக்கப்பட்டு பின்னர் ஆர் என்னும் சிறப்பு விகுதியும் சேர்ந்து "நாலடியார்" என்று வழங்கப்படலாயிற்று. நானூறு வெண்பாக்கள் இடம் பெற்றிருந்தமையால் எண்ணிக்கையால் பெயர் பெற்றச் சங்க நூல்களான அகநானூறு, புறநானூறு என்பன போன்று இதுவும் "நாலடி நானூறு" என்று வழங்கப்படுவதாயிற்று. இது "வேளாண் வேதம்" எனவும் குறிக்கப்படுகின்றது.

வாழ்க்கையின் எளிமையான பொருட்களை உவமைகளாகக் கையாண்டு நீதி புகட்டுவதில் தனித்துவம் பெற்று விளங்கும் நாலடியார் எனும் நூலின் அறத்துப்பாலில் உள்ளடங்கும் பொறையுடைமை, பிறர்மனை நயாவமை, ஈகை, பழவினை, மெய்ம்மை, தீவினையச்சம் போன்ற அதிகாரங்களில் இல்வாழ்க்கையும் அதன் தனித்துவமான பண்புகளும் விளக்கப்படுகின்றது. திருக்குறள் துறவறத்தை விட இல்லறத்தை முதன்மையாக கருத நாலடியார் இல்லறத்தை விட மேலானதாக துறவறத்தை கருதுகின்றது. வேளாண்மை வேதம் என்று அழைக்கப்படும் நாலடியார் இல்லறத்தை துறவறத்துக்கு அடுத்த நிலையாக (இரண்டாம் நிலையாக) வைத்து நோக்குகின்றது.
இல்லற நெறி என்பது இல்லத்தில் மனையாளோடு கூடிவாழும் ஒழுக்கம். இல்லறத்திற்குரிய அறங்களை இல்லறவியலில் நாலடியார் கூறுகிறது. இல்லறத்திற்குத் தேவையான நல்லறங்களை விவரிக்கின்றது. நாலடியார் நூலும் திருக்குறளைப் போல இல்வாழ்வான், இல்வாழ்வாள், பிள்ளைகள் (மக்கட்பேறு) எனும் மூன்று கூறுகளும் இல்லற வாழ்வின் ஒழுங்கமைப்பின் அடிப்படை எனும் கருத்தினை ஏற்றுக் கொள்கின்றது.

நாலடியார் இல்வாழ்வாளின் சிறப்பினை பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றது. நல்ல மனைவி இல்லாத வீடு வீடல்ல. அது வெறும் காடு என்பதை பின்வரும் பாடல் அடிகள் தெரிவிக்கிறது.

"மாண்ட மனையாளை இல்லாதான்
இல்லகம் காண்டற்கு அரிய தோர்காடு"

இம்மை, மறுமை ஆகிய இருமை இன்பங்களையும் அனுபவிப்பதற்கு உரிய இல்வாழ்க்கை நெறியில் நின்று, அதற்குத் துணையாகிய கற்புடைய மனைவியோடு செய்யும் தர்மமே இல்லறம் ஆகும் என நாலடியார் கூறுகின்றது. நாலடியார் ஈகை, பொறுமை, தீய செயல்களை செய்ய அஞ்சுதல் மற்றும் அஞ்ச வேண்டிய பழி பாவங்களுக்கு அஞ்சுதல் முதலிய நற்குணங்கள் இனிய இல்லறத்திற்கு அடிப்படையாகும் என்பதை ஈகை, பொறையுடைமை, தீவினை அச்சம், பழவினை எனும் அதிகாரங்களில் கூறுகின்றது.

இல்லற வாழ்வின் நெறியைக் காக்க பிறர்மனை நயத்தல், பொய் கூறுதல் போன்ற பண்புகளை விலக்க வேண்டுமென்ற அறிவுரையை நாலடியார் கூறுகின்றது. காமமின்மை என்பது முற்றுமுழுதானத் துறவியர்க்கு உரியதாக உள்ளது. எனவே காமக் கட்டுப்பாட்டு நெறியை இல்லறத்தார்க்கும் வலியுறுத்த வேண்டி 'பிறன்மனை நயவாமை' என்னும் அதிகாரம் இல்லறவியலில் வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பின்பற்றாதவர்களை நோக்கும் போது அவர்கள் துன்பம் அடைவார்கள் என்ற கருத்தினை நமக்கு இந்நூல் காட்டுகின்றது.

"புக்கவிடத்து அச்சம் போதரும் போது அச்சம்
துய்க்கும் இடத்து அச்சம், தோன்றாமை காப்பு அச்சம்
எக்காலும் அச்சம் தருமால், எவன்கொலோ,
உட்கான் பிறன்இல் புகல்" (நாலடியார்- 83)

மேலும் நாலடியார் மெய்ம்மை எனும் அதிகாரத்தினூடாக இல்லற வாழ்வில் பொய் கூறுதல் என்பது இல்லற வாழ்வின் மாண்பினை அழிக்கும் என்பதையும் இல்லற வாழ்வின் வெற்றிக்கு வாய்மை அவசியம் என்பதையும் நாலடியார் பின்வரும் பாடலடி எடுத்துக் காட்டுகின்றது. அதாவது இரவலன் ஒருவன் பொருளை ஒருவனிடம் யாசிக்கிறான். அவன் உடனடியாகப் பொருளைத் தரவில்லை. கொடுக்க மாட்டேன் என்று மறுக்கவுமில்லை. பிறகு என்ன செய்தான் தெரியுமா? கொடுக்கிறேன், கொடுக்கிறேன் என்று சொல்லிக் கொண்டே இருந்து நீண்ட காலம் கழித்துச் சொன்ன சொல்லைப் பொய்யாக்கி விட்டான். இந்தப் பொய்யைத் தான் பெரிய குற்றம் என்கிறது நாலடியார். எவ்வளவு பெரிய குற்றம் என்றால், பிறர் செய்த நன்றியைக் கொன்றவரது குற்றத்தைக் காட்டிலும் பெரிய குற்றம் உடையதாகும். இதனை

"இசையா ஒருபொருள் இல்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை - நசையழுங்க
நின்றோடிப் பொய்த்தல் நிரைதொடீஇ! செய்ந்நன்றி
கொன்றாரின் குற்றம் உடைத்து." (நாலடி:111)

இவ்வாறு சங்கமருவியகால நூலான நாலடியார் பொறையுடைமை, பிறர்மனை நயாவமை, ஈகை, பழவினை, மெய்ம்மை, தீவினையச்சம் போன்ற அதிகாரங்களினூடாக இல்வாழ்வானின் கடமைகள், இல்வாழ்வாளின் சிறப்புக்கள், இல்லறத்துக்கு வேண்டிய பண்புகள், இல்லறத்தார் விலக்க வேண்டிய பண்புகள் தொடர்பான கருத்து முன்வைப்புக்களை முன்வைக்கின்றது எனலாம்.

## திருக்குறள் மற்றும் நாலடியாரில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இல்வாழ்க்கையும் அதன் தனித்துவமான பண்புகளும் பற்றியதோர் ஒப்பீடு

உலகில் மக்களாய்ப் பிறந்தார்க்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் உறுதிப் பொருள்களென உயர்ந்தோரால் எடுத்தாளப்படும். அவற்றுள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும் திருக்குறள் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றது. திருக்குறளை அடுத்து நாலடியாரும் இம்மூன்று கருத்துக்களையும் விரிவாக விளக்குகின்றது. அவற்றுள் முதலாவதான அறம் பற்றிய கருத்துக்களை திருக்குறளிலும் நாலடியாரிலும் ஒத்த நிலையில் காணப்படுகிறது. இங்கு அறம் என்னும் பொருளை ஆசிரியர் இல்லறம், துறவறம் என வகுத்து கூறியுள்ளார்.

அறம் என்பது அன்பின் அடியாகத் தோன்றும் அருளை உணர்த்துவதாகும். அறப் பணிகள் அனைத்தும் அருட்பணிகளேயாகும். அறத்தைச் சான்றோர்கள் இல்லறம், துறவறம் என இரு வகையாக வகுத்துச் சென்றுள்ளனர். இல்லறம் என்பது ஒருவன் மனைத்தக்க மாண்புடையாளை மனையாளாகக் கொண்டு நல்லொழுக்க நெறி நின்று அறவோர்க் களித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க் கெதிர்தல் போன்ற நல்லறப் பண்புடையாளர்களாய் திகழ்ந்து இனிது வாழ்தலாகும்.

இல்லறமே அருள் நெறியின் - அறப்பணியின் தொடக்கமாகும். இல்லறம் பேணாதவர் உலகில் அறம் போற்றல் இயலாது என்பது வள்ளுவர் நெறியால் விளங்குகின்றது. இல்லத்தில் அருள் நெறியையும் அதன் பயனாகிய அறப்பணியையும் பயின்றும் தேர்ந்த பின்னரே, பற்றற்ற துறவினை மேற்கொள்ளல் வேண்டும் என்பது வள்ளுவர் காட்டும் வழியாகும். இல்லறம் பேணாது துறவறம் பூணல் என்பது உலகியலுக்கு ஒவ்வாத ஒன்றாம். பேரின்ப வீட்டுக்கு வழி காட்டும் இல்லறத்தைச் சான்றோர்கள் பெரிதும் மதித்துப் போற்றி வாழ்ந்து சென்றுள்ளனர். இதனையே வள்ளுவரும் “அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை” என்றும் “இல்லறம் அல்லது நல்லறமன்று” என்றும் பலபடப் போற்றியுரைத்துள்ளனர். வள்ளுவரும் முதற்கண் இல்லறத்தை வைத்து பின்னர் துறவறத்தை அமைத்து அறத்துப்பால் இயற்றியுள்ளமையும் இக்கருத்தினை வலியுறுத்துகின்றது. ஆனால் நாலடியார் அதற்கு மாறாக கடவுள் வாழ்த்தை அடுத்து துறவற இயலையும் அதற்கு அடுத்து இல்லறவியலையும் அமைத்துள்ளமை ஒப்பு நோக்கத்தக்கது. சமணர்கள் துறவறத்தையே உயர்ந்தது என்று கருதுகின்றவர்கள். ஆயினும் இல்லறத்தில் இருந்து கொண்டும் நன்மை செய்ய முடியும் என்ற உண்மையையும் அவர்கள் மறுக்கவில்லை. எனவேதான் துறவறத்தை அடுத்து இல்லறவியலை அமைத்துள்ளனர்.

திருக்குறள் இல்லறவியல் என்னும் தலைப்பில் 20 அதிகாரங்களில் இல்லறத்தின் சிறப்பினை எடுத்துக் கூறுகிறது. திருக்குறளைப் போன்றே அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றினையும் எடுத்துக் கூறும் நாலடியாரும் இல்லறவியலில் 6 அதிகாரங்களில் இல்லறத்தின் சிறப்பினை இயம்புகிறது. அவற்றுள் பொதுவாகத் திகழ்பவை பொறையுடைமை, பிறர்மனை விழையாமை, தீவினையச்சம், ஈகை என்பனவாகும்.

இல்வாழ்க்கை நடத்துவோருக்கு அமையவேண்டிய இன்றியமையாத பண்பு பொறுமையாகும். ஆகவேதான் நாலடியாரும் இல்லறவியலில் பொறையுடைமையை முதன்மைப்படுத்தியுள்ளது. பொறுமை உடையவனின் இல்வாழ்க்கை தான் பெருமை மிக்கதாக இருக்கக்கூடும். எனவேதான் சான்றோர்கள் “பொறுமை கடலினும் பெரிது” என்றார்கள். வள்ளுவப் பெருந்தகையும்,

“அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை” என மொழிந்துள்ளார். நாலடியாரும் அதே கருத்தை முன்வைக்கிறது.

இல்லறத் தலைவன்பால் இருக்க வேண்டிய சிறப்புப் பண்புகளுள் ஒன்று பிறர் மனைவியை விரும்பாமையாகும். பிறர் மனைவியை நோக்காத குற்றமற்ற கற்புடைய மனையாளுக்குக் கணவனாக அமைவோன் சிறந்த கற்பொழுக்கம் உடையவனாக இருத்தல் வேண்டும். இதனை நாலடியார் பிறர்மனை நயவாமை என்றும் வள்ளுவர் “பிறனில் விழையாமை” என்றும் கூறி அதற்கென தனியதிகாரத்தையே அமைத்துள்ளனர். இத்தகைய சிறந்த ஒழுக்கத்தை “பேராண்மை” என்கிறார் வள்ளுவர்.

“பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
னென்றோ வான்ற ஒழுக்கு”

வறியவர் துயர் கண்டபோது மனமிரங்கி உதவும் தன்மையினை திருக்குறளும் நாலடியாரும் வலியுறுத்துகிறது. உதவும் தன்மை இல்லத்தானுக்கு வேண்டும் என்பதை திருக்குறளும் நாலடியும் வலியுறுத்துகின்றன. வாழ வழியற்று இருக்கும் வறியவர்களுக்கு உதவுவதே சிறந்தது ஆகும். “வறியார்க்கொன் றீவதே ஈகை” என்கிறார் வள்ளுவர்.

“கொடையொடு பட்ட குணன்உடை மாந்தர்க்கு
அடையாவாம் ஆண்டைக் கதவு.”

இல்லற வாழ்வில் இல்லாளனும் இல்லாளும் தீய செயல்களைச் செய்ய அஞ்சி, அடக்கமுடையவராக வாழ வேண்டும் எனும் கருத்தினை திருக்குறளும் நாலடியாரும் வலியுறுத்துகின்றது. புலால் உண்பது தீய செயல் என்றும் புலால் உண்பவர்கள் அறிவற்றவர்கள் என்கிறது நாலடியார். தீவினை ஒரு பாவச் செயல், அதனை சான்றோர் செய்ய அஞ்சுவர். கொடியவர்கள் அஞ்சாது செய்வர். தீய செயல்கள் துன்பத்தைத் தருவதால் அவை தீயை விட பெரிதும் அஞ்சத்தக்கதாகும். ஆகவே தீயை விடக் கொடியது தீயச் செயலாகும். பிறருக்குத் தீங்கு செய்பவன் தவறாமல் மறுபிறப்பில் தான் செய்த தீவினையை அனுபவிப்பான் என்பன போன்ற கருத்துக்களை முன்வைக்கின்றன.

**முடிவுரை**

‘இல்வாழ்க்கை’ என்பது என்பது ஒருவன் மனைத்தக்க மாண்புடையாளை மனையாளாகக் கொண்டு நல்லொழுக்க நெறி நின்று அறவோர்க்களித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க் கெதிர்தல் போன்ற நல்லறப் பண்புடையாளர்களாய் திகழ்ந்து இனிது வாழ்தலாகும். இல்லறமே அருள் நெறியின் - அறப்பணியின் தொடக்கமாகும். இல்லறம் பேணாதவர் உலகில் அறம் போற்றல் இயலாது என்பது வள்ளுவர் நெறியால் விளங்குகின்றது. இல்லத்தில் அருள்

நெறியையும் அதன் பயனாகிய அறப்பணியையும் பயின்றும் தேர்ந்த பின்னரே, பற்றற்ற துறவினை மேற்கொள்ளல் வேண்டும் என்பது வள்ளுவர் காட்டும் வழியாகும். ஒருவரின் வாழ்க்கை முழுவதிலுமே சிறந்த இல்வாழ்க்கை அவசியமாகின்றது. அந்தவகையில் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட குறள்கள் மற்றும் நாலடியாரின் வெண்பாப்பாடல்கள் சிறந்த இல்லறத்தார் கொண்டிருக்க வேண்டிய பண்புகளையும் சிறந்த இல்வாழ்க்கையினை அடையாளம் காண்பதற்கான வழிகாட்டல்களையும் வழங்கியுள்ளமையானது ஆய்வு நோக்கத்தினை அடைந்துகொள்ள துணைநின்றுள்ளது.

அன்பு, அறம், விருந்தோம்பல், பிறருக்கு உதவுதல், கல்வி ஆகியவை குடும்பத்தில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சிறந்த விழுமியங்களாக திருக்குறள் மற்றும் நாலடியார் வலியுறுத்துகின்றது. திருவள்ளுவர் திருக்குறள் எழுதி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகிறது. குடும்பம் தொடர்பான அவரது கருத்துக்கள் இன்றும் செல்லுபடியாகும் என்பது அவரது வயது முதிர்ந்த ஞானத்திற்குச் சான்றாகும். ஒட்டுமொத்தமாக பார்க்கின்ற போது சங்கமருவிய கால அறநூல்களான திருக்குறள் மற்றும் நாலடியார் காட்டும் இல்லறம் என்பது ஒரு முழு வாழ்க்கை நடைமுறை. அது ஒரு குடும்பத்தோடு நிற்கும் ஒன்று அல்ல. திருவள்ளுவர் காட்டும் இல்லறம் என்பது வீடு பேற்றை அடையும் வழி. இல்லறம் என்பது வீடு குடும்ப வாழ்க்கையோடு முடிவது அல்ல. அது முதல்படி. குடும்பம், சமுதாயம், துறவறம், வீடு பேறு என்று ஒரு நீண்ட பாதையின் முதல் படி இல்லறம். அனைத்து அறங்களுக்கும் ஆணிவேர் இல்லறமேயாகும் என்பதை நாம் புரிந்துக் கொள்ள முடிகின்றது.

பேரின்ப வீட்டுக்கு வழி காட்டும் இல்லறத்தைச் சான்றோர்கள் பெரிதும் மதித்துப் போற்றி வாழ்ந்து சென்றுள்ளனர். இதனையே வள்ளுவரும் "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்றும் "இல்லறம் அல்லது நல்லறமன்று" என்றும் பலபடப் போற்றியுரைத்துள்ளனர். வள்ளுவரும் முதற்கண் இல்லறத்தை வைத்து பின்னர் துறவறத்தை அமைத்து அறத்துப்பால் இயற்றியுள்ளமையும் இக்கருத்தினை வலியுறுத்துகின்றது. ஆனால் நாலடியார் அதற்கு மாறாக கடவுள் வாழ்த்தை அடுத்து துறவற இயலையும் அதற்கு அடுத்து இல்லறவியலையும் அமைத்துள்ளமை ஒப்பு நோக்கத்தக்கது. சமணர்கள் துறவறத்தையே உயர்ந்தது என்று கருதுகின்றவர்கள். ஆயினும் இல்லறத்தில் இருந்து கொண்டும் நன்மை செய்ய முடியும் என்ற உண்மையையும் அவர்கள் மறுக்கவில்லை. எனவேதான˙ துறவறத்தை அடுத்து இல்லறவியலை அமைத்துள்ளனர். இக் கருத்துக்களை வெளிப்படுத்துவதில் இவ்விரு நூல்களும் மிகச் சிறப்பான பங்கினையே வகிக்கின்றன என கூறுவது சாலச் சிறந்ததாகும்.

**உசாத்துணைகள்**

அடைக்கலசுவாமி. (1960). *தமிழ் இலக்கிய வரலாறு.* லயோலோ கல்லூரி பதிப்பகம்

அண்ணாமலைநகர் தமிழண்ணல்.(1989). *திருவள்ளுவர் அருளிய திருக்குறள்.* மீனாட்சி புத்தக நிலையம்.

அருணாசலம்,மு. (1969). *தமிழ் இலக்கிய வரலாறு பதினைந்தாம் நூற்றாண்டு:* சென்னை.

அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை.(2018,November 18). Retrieved May 27, 2023 from http://manimozhian.com/ta/articles/family/

இல்லறமே நல்லறம். (2021,November 05). Retrieved May 18, 2023, from https://thirukkuralkatturaikal.blogspot.com/2019/11/blog-post.html

குறள் கூறும் இல்லறம்.(July 12, 2021). Retrieved May 05, 2023 from https://thirukkuralessays.blogspot.com/2021/07/family-life-in-thirukkural.html

திருக்குறள்- இல்லறம் - இல்லறத்தின் நோக்கம.(2021, June 29). Retrieved May 21, 2023,from http://interestingtamilpoems.blogspot.com/2021/06/blog-post_29.html

திருக்குறளில் இல்லறம;.(2015,August 15). Retrieved May 19, 2023)>from https://puthu.thinnai.com/archives/30069

Domestic and Married life. Retrieved May 11,2023, from https://www.thirukkural.net/en/kural/adhigaram-005.html

Ganapathy Ilango. (2014). *Ancient Tamil People life*, First Edition. Pavai Publishing.

Gurusamy, A.S.(2002). *Naladiyar Moolamum Eliya Uraiyum*. Sura Books.

Helan Jaba Rose.S.L.(2022). திருக்குறளில் உள்ள அகத்திணைக் கூறுகள். Retrieved 21, 2023, from https://irjt.iorpress.org/index.php/irjt/article/view/1230

Morals of Naladiyar.( 2019, July 28). Retrieved June 11, 2023, from https://www.exoticindiaart.com/book/details/morals-of-naladiyar-tamil-uap350/

Kalaselvi.R, and Saravanakumar A.R.(2019). *Life Skills on Thirukkural*. Shanlax Publications

Karunakaran, K. (2020). குறள் நெறி போற்றும் பொருள் நெறி: The Concept of Material Culture highlighted in Thirukkural. *Journal of Valartamil*, 1(1), 107- 118. ttps://ejournal.upsi.edu.my/index.php/JTS/article/view/3807

Oneindia.இல்வாழ்க்கை. Retrieved May 05, 2023 from https://tamil.oneindia.com/art-culture/kural/05.html

Raman Vimalan. (2022). திருக்குறள், நாலடியாரில் கருத்துவளமும் கவித்துவ வளமும். Retrieved Auguest 02, 2023, from http://hdl.handle.net/10497/24855

Rathika K. (2022). பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உலகயில் வாழ்வு கோட்பாடுகள். Retrieved November 28, 2022, from https://irjt.iorpress.org/index.php/irjt/article/view/1257

Tamilkani. B. (2016). Dhamma is Wealth - Thirukkural and Naladiyar's views, Sembulam. *International Tamil Quarterly Journal.*

# இந்து மற்றும் சமண சமயங்களில் காணப்படும் சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் கருத்துக்கள் - ஓர் ஒப்பீட்டு ஆய்வு

**லிங்கமூர்த்தி விரிதரன், இரத்தினசபாபதி பிரேம்குமார்**
தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*viritharanmoorthy@gmail.com*

## ஆய்வுச் சுருக்கம்

ஞானத்தின் தேடலாக அமைந்த மெய்யியல் துறைகளில் ஒன்றாக ஒழுக்கவியல் காணப்படுகிறது. ஒழுக்கவியலானது பல்வேறுபட்ட ஒழுக்கப் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. அந்தவகையில், ஒழுக்கவியலின் ஒரு முக்கிய பகுதியாக சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் காணப்படுகின்றது. சமயங்கள் சுற்றுச்சூழல் ஒழுக்கச் சிந்தனைகளில் தனது பங்களிப்பினைச் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. உலகில் உள்ள பல்வேறு மதங்களும் பிரபஞ்சம், பூமி, உயிரினங்கள் என்பன ஒன்றையொன்று சார்ந்துள்ளன எனவும் அன்பு, அகிம்சை, ஒழுக்கம், சமாதானம், இரக்கம் முதலான பண்புகளைப் பரஸ்பரம் கொண்டிருக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றன. சூழலானது உலகத்திற்கு அவசியமான ஒன்றாகும். அதிலும் சுற்றுச்சூழலை ஒழுங்காக வைத்திருப்பது எமது கடமையாகும். சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் என்பது மிகவும் அண்மைக்காலத்தில் உருவான ஒழுக்கவியலின் ஒரு பகுதியாகும். இது மனிதர்கள் மற்றும் மனிதர்கள் அல்லாத விலங்குகள், தாவரங்கள் மற்றும் உயிரற்ற பொருட்கள் என்பவற்றுக்கிடையே காணப்படும் தொடர்பினை ஆராய்வதுடன் மனிதர்களைப் போலவே மனிதர்கள் அல்லாதவை நடத்தப்பட வேண்டும். அவற்றிற்கும் மனிதர்களைப் போலவே சம உரிமை உள்ளதெனக் கூறுகின்றது. இத்தகைய பின்புலத்திலேயே இந்து மற்றும் சமண சமயத்தில் காணப்படும் சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் கருத்துக்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. இவ்வாய்வுக் கட்டுரை இந்து மற்றும் சமண சமயங்களில் எவ்வாறு சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் கருத்துக்கள் காணப்படுகின்றது என்பது பற்றி ஆய்வு செய்கிறது. சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் கருத்துக்கள் இரு மதங்களிலும் காணப்படும் உயிருள்ள, உயிரற்ற பொருட்களான தாவரங்கள், விலங்குகள். ஐம்பூதங்கள், வழிபாடுகள் போன்றவற்றை உள்ளடக்குவது குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வுக் கட்டுரை இந்து மற்றும் சமண மதங்களின் சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் கருத்துக்களில் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பிட்டுப் பகுப்பாய்வு செய்வதை முக்கிய இலக்காக கொண்டுள்ளது. மேலும், சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகவும் இவ்வாய்வு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வு இந்து சமண இலக்கிய மூல நூல்களையும் சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் தொடர்பான ஆய்வு மூலங்களையும் அடிப்படையாக கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

***திறவுச் சொற்கள்:*** *இந்து, சமணம், சுற்றுச்சூழல் ஒழுக்கவியல், விழிப்புணர்வு*

## அறிமுகம்

இன்றைய தொழில்நுட்பமானது புதிய பாதையினை நோக்கியே செல்கிறது. இதன் காரணமாக விவசாயம், கைத்தொழில் துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியினால் சுற்றுச்சூழலானது முன்னிருந்த சூழல் சமநிலையை சீர்குலையவைத்துள்ளது. மனித வர்க்கத்தின் மீதும் பெருமளவு அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளது. அதனால் மனித இனத்திற்கு பாதகமான பல்வேறு விளைவுகள் உருவாகின. உதாரணமாக சுற்றுச்சூழல் மாசடைவதால் மனிதனின் சுகாதார நிலை பாதிப்படைதல், வளங்கள் குறைவடைதல், வாழ்க்கைக்கு அச்சுறுத்தல், காலநிலை மாற்றத்தினால் இயற்கை அழிவுகள் ஏற்படல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

இதனால் முறையான சூழல் சமநிலையைப் பேணுதல் தொடர்பான பொறுப்பும், அக்கறையும் தேசிய சர்வதேச மட்டங்களில் இன்று ஏற்பட்டுள்ளது. மனிதயுகம் அறிவியல் ரீதியான வாழ்வை அமைத்துக் கொள்ளும் அதேசமயம் அறிவியல் முறைமைகளையும் உள்ளபடி விளங்கிக் கொள்வது அவசியம். இயற்கையிடம் இருந்து அற ஒழுக்கங்களை கற்றுக்கொள்ள தவறுகின்றது. இன்றைய கால கட்டத்தில் சுற்றுச்சூழலை பாதுகாப்பது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும். மனித சந்ததியின் தற்கால எதிர்கால நலன்கருதி இச்சூழலைப் பாதுகாப்பது ஒவ்வொருவரது கடமையாகும். இந்நிலையில் சமயங்களில் சுற்றுச்சூழல் ஒழுக்கவியலை பாதிக்கின்ற கருத்துக்கள் இங்கு ஆராயப்படுகின்றன. சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் சூழலுடன் தொடர்பு பட்ட பல்வேறு பிரச்சினைகளை இக்கட்டுரை ஆய்வுச் செய்வதாக உள்ளது. அழிந்துவரும் இயற்கை வளங்கள் மனிதர்களினாலும் சூழலுக்கு ஏற்படுத்தப்படும் தொடர்ச்சியான பாதகமான விளைவுகள், சூழலை பாதுகாத்தல், சூழலை பழைய நிலைக்கு கொண்டு வருதல் என சூழல் தொடர்பாக காணப்படும் பொதுக் கொள்கைகள் பற்றிய தத்துவங்கள் மற்றும் வழக்காறுகள் தொடர்பாக எழுப்பப்படும் ஒழுக்க ரீதியான நடைமுறைசார் பிரச்சினைகள் மனிதர்கள் எவ்வாறான மதிப்பீடுகளை இயற்கை சூழல் மீதும் நகர மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த சூழல் மீதும் கொண்டுள்ளனர்? போன்றவை குறிப்பிடத்தக்கன. இயற்கை சூழல் தன்னளவில் பெறுமதி வாய்ந்ததா? அல்லது கருவி ரீதியிலான பெறுமதியினை கொண்டதா? என்ற பிரச்சினை சுற்றுச்சூழல் ஒழுக்கவியலின் முக்கிய பிரச்சினையாக ஆராயப்பட்டு வருகிறது. சமயங்களின் ஊடாகவும் சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் என்பது மிக இன்றியமையாத ஒரு விடயமாக பேசப்பட்டுக் கொண்டிருப்பதை வெளிக்கொண்டு வருவதாக இவ்வாய்வு அமைகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

இந்து, சமண மதங்களில் காணப்படும் சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் ஒப்பீட்டு ஆய்வில் இவ்விரு சமயங்களிலும் உள்ள ஒழுக்கவியல் கருத்துக்களை இனங்காண்பதே ஆய்வின் நோக்கமாகும்.

1. சமண சமயத்துடன் ஒப்பிட்டு நோக்கும் போது இந்து சமயத்தில் அதிகளவான சுற்றுச்சூழல் கருத்துக்கள் காணப்படுகின்றனவா?
2. இரு சமயங்களிற்கு இடையிலான சுற்றுச்சூழல் ஒழுக்கவியலில் காணப்படுகின்ற ஒற்றுமைகள் யாவை?
3. இரு சமயங்களிற்கு இடையிலான சுற்றுச்சூழல் ஒழுக்கவியலில் காணப்படுகின்ற வேற்றுமைகள் யாவை?

**ஆய்வுப் பிரச்சினை**

இந்து மற்றும் சமண சமயங்களில் காணப்படுகின்ற சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் தொடர்பாக ஒப்பீட்டாய்வுகள் பாரியளவில் மேற்கொள்ளப்படவில்லை. எனவே அவை குறித்து அறிந்து கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது என்பதனால் இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. அதாவது சமய நோக்கில் சூழலை நடக்காது விஞ்ஞான தொழில்நுட்ப நோக்குடன் மாத்திரம் பார்ப்பதனால் சூழல் பிரச்சினைகள் உருவாகின்றன.

ஆகவே உலக நோக்கினை மாற்றியமைப்பதன் ஊடாக சூழல் ஒழுக்கத்தினை ஏற்படுத்த முடியும் என்பதோடு சமயம் குறிப்பிடும் அடிப்படையில் வாழ்வில் ஒழுக்கத்தை அமைத்துக் கொள்வதன் மூலம் இதனை சாத்தியமாக்கிக் கொள்ளலாம். ஆகவே பல நூறு வருடங்களுக்கு முன்னர் இந்து மற்றும் சமண சமயங்களில் கூறியுள்ள சூழல் ஒழுக்கவியல் தொடர்பான கருத்துக்களை எடுத்துக் கூறுவதனூடாக மக்கள் மத்தியில் சூழல் ஒழுக்கம் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்த முடியும். இதனால் இன்றைய கால மக்கள் அதன் விளைவால் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இவற்றிலிருந்து விடுபட இந்து மற்றும் சமண சமயங்களில் காணப்படும் சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் கருத்துக்கள் பற்றிய ஒப்பிட்டு ஆராய்வது முக்கியமானதாகும்.

**ஆய்வுக் கருதுகோள்**

ஓர் ஆய்வினை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு கருதுகோள் அவசியம் ஆகும். அந்த வகையில் இந்த ஆய்வுக்கான கருதுகோள்களாக குறிப்பிடப்படுவன. நவீன உலகில் பாரிய பிரச்சினையாக சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் காணப்படுகின்றது. இதற்கான அடிப்படைக் காரணம் மனிதன்தான் சமயத்தில் இருந்து தூரவாகுவதும், விஞ்ஞானம், தொழில்நுட்பம் என்பன சமயத்தின் புறம் தள்ளிவிட்டு சமயத்தில் இடத்தினை அபகரித்துக் கொண்டதின் விளைவே சுற்றுச்சூழல் ஒழுக்கப் பிரச்சினைகள் ஆகும். சமணம் தனது சூழலியல் கருத்துக்களை விளக்குவதற்கு நேர்க்காட்சி வாதம் மற்றும் பௌதீக அதீத அடிப்படைகளை கொண்டுள்ளன. அதேவேளை இந்து மதம் அதிகளவிற்கு பௌதீக அதீத அடிப்படைகளைக் கொண்டு சூழலியல் கருத்துக்களை வெளிப்படுத்துவதாக உள்ளமை இவ் ஆய்வின் கருதுகோளாகும்.

**ஆய்வு முறையியல்**

ஆய்வு ஒன்றினை மேற்கொள்கின்ற விதமும் அதற்காக தரவுகள் பெற்றுக்கொள்ளப்படுகின்ற வழிமுறையுமே ஆய்வு முறையியல் ஆகும். ஆய்வு முறையியல் ஒன்றின் தன்மையிலேயே அதன் சிறப்பும் வெற்றியும் தங்கியுள்ளது. அத்துடன் கிடைக்கப்பெறும் தகவல்கள் செம்மையானதாக இருக்கும் போதுதான் ஆய்வினை இலகுவாக மேற்கொள்ள முடியும். அப்போதே முடிவுகளும் நம்பகத்தன்மையுடையதாக இருக்கும். ஆய்வு வகையில் பெரும்பாலும் இவ்வாய்வில் தொகுத்தறி மற்றும் விபரணப் பகுப்பாய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதல் நிலைத் தரவுகளாக இந்து மற்றும் சமண சமயங்களில் காணப்படுகின்ற மூல நூல்களும். இரண்டாம் நிலைத் தரவுகளாக இந்து மற்றும் சமண சமய கருத்துக்கள் தொடர்பாக வெளிவந்த ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், வார இதழ்களும், மூன்றாம் நிலைத்தரவுகளாக இணையத்தளம் மூலம் பெற்றுக் கொண்ட தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

சித்பவானந்தர், (1993), ‘‘திருவாசகம்’’ எனும் நூல் இயற்கைக்கும் கடவுளுக்கும் இடையிலுள்ள தொடர்பினை ஆழமாக எடுத்துரைக்கின்றது. ‘‘வளர்ப்பு பிராணிகளையும்

விலங்குகளையும் கொள்பவன் தீயில் எரிக்கப்படுவான் என யாக்ஞவல்கியர் ஸ்மிருதி எச்சரிக்கின்றது" எனும் விலங்குகள் பாதுகாப்பு தொடர்பான கருத்து குல ரௌத்திரன்.க.சி, (1979), "இந்து நாகரீகம்" எனும் நூல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் எனது ஆய்விற்கு உதவியது.

நிரஞ்சினி. தி, (2017), "இந்து மதமும் சூழலியல் போதனைகள்", "கங்கையாடில் என் காவிரியாடில் என் ……. எனும் பாடலில் தாவரங்களில் எவ்வாறு சூழல் கருத்துக்கள் காணப்படுகின்றன.

சுற்றுச்சூழல் ஒழுக்கவியலின் தன்மை அதன் நோக்கங்கள், பரப்பு மற்றும் அது ஆராயும் பிரச்சினைகள் என்பவற்றினை அன்ரூ லயிட் மற்றும் ரோல்டன் தொகுத்த சூழலியல் ஒழுக்கவியல் ஒரு தொகுப்பு (2003) என்ற படைப்பு நேர்காட்சிவாத அடிப்படையில் விளக்குகின்றது.

பிரேம்குமார்.இ,(இணையாசிரியர்)(2020) "கலை இலக்கிய மெய்யியல் கொள்கைகள்", சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் தொடர்பான தெளிவினையும், ஒழுக்கவியலின் அடிப்படை விடயங்களையும் பெறமுடிந்தது.

கமலநாதன். செ, (2018), "சூழல்சார் சவால்களுக்கு இந்துமதம் கூறும் தீர்வுகள்" எனும் புத்தகத்தில் சமயத்திற்கும் சூழலுக்கும் காணப்படும் விடயங்கள் பற்றி கூறப்படுகின்றது.

மாணிக்கம்.அ (உரையாசிரியர்),(2001) திருமந்திரத்தின் பாடல்கள் மூலம் சுற்றுச்சூழலில் ஒழுக்கவியலில் உள்ளடங்கும் விலங்குகள் நலன்கள் தொடர்பான கருத்துக்களைப் பெறமுடிந்தது. அத்துடன் இந்து சமய மற்றும் சமண சமயங்களில் காணப்படுகின்ற மூல நூல்கள் அதாவது உபநிடதங்களின் சில வரிகளும், ஆச்சாரங்க சூத்திரம் எனும் நூல்களிலும் இருந்து அறிய முடியும்.

சமண சமயத்தின் ஒழுக்க ஆசார நூல்களான டீ.மு.கடபாடி என்பவரினால் எழுதப்பட்ட சிராவகசாரம், சமண சமய இல்லறத்தாருக்குரிய ஒழுக்க விதிகள் (1992) மற்றும் ஊ.சு. ஜெயின் என்பவரினால் தொகுக்கப்பட்ட இரத்தினக் கரண்டா சிராவகசாரம் (1975) என்பன சூழலுக்கு ஆதரவான ஒழுக்க விதிகளைப் பேசுகின்றன. இந்த ஒழுக்க விதிகள் தீர்த்தங்கரர்களின் போதனைகளிலிருந்தும் அவர்களது ஒழுக்க நடைமுறைகளிலிருந்தும் பெறப்பட்டவை.

சமண சமயததின் அடிப்படைத் தத்துவங்களை விளக்குகின்ற டீ.பட்டாச்சாரியாரால் எழுதப்பட்ட சமண மெய்யியல் (1976) மற்றும் சி.ஜெயினால் எழுதப்பட்ட சமண சமயத்தின் அடிப்படைகள் போன்ற நூல்கள் இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**இந்து சமயத்தில் சுற்றுச்சூழல் கருத்துக்கள்**

இந்துமதம் என்பது அதைப் பின்பற்றுபவர்கள் ஏற்றுக்கொள்ளும் ஒரு வாழ்க்கை முறையாகும். கடுமையான நம்பிக்கைகள் அல்லது நடைமுறைகளின் தொகுப்பு அல்ல இது பல்வேறு நம்பிக்கைகளை உள்ளடக்கியது. இந்து மக்களின் நீண்டகால வரலாற்றை ஆய்வு

செய்கையில் இந்துக்கள் இயற்கைக்கும் இயற்கை சூழலில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் முன்னுரிமை வழங்கினர் இதனால் இயற்கையை பாதுகாக்கும் நோக்கில் இயற்கையை இறைவனுக்கும் இணையானதாக கருதினர் இயற்கையை அழிப்பது இறைவனை அழிப்பதற்கு ஒப்பானது எனும் அடிப்படையில் சூழலியல்சார் போதனைகளை முன்வைத்துள்ளது (கமலநாதன், 2018).

பௌதிக சூழலில் நீர், நிலம், வளி, தீ, ஆகாயம் என்பன அடங்கும் இவற்றையே இந்து சமயம் பஞ்சபூதம் என்கின்றது. பண்பாட்டுச்சூழல் என்பதனுள் மனிதர்கள் ஏனைய உயிரினங்கள் மனிதர்களால் ஆக்கப்பட்ட பௌதீகப் பொருட்கள் முதலானவை உள்ளடங்குகின்றன. மனிதன், கடல், தரை, காலநிலை, நதிகள், தாவரக் கூட்டம் என்பன சூழல் தொகுதியில் அடங்கும் என்று ஜெ.எச். ஜி. லெபன் கூறியுள்ளமை மேற்கூறிய கருத்தியலுடன் தொடர்படுவதை காணலாம் (கமலநாதன், 2018).

நவீன சிந்தனையாளர்கள் மனிதனுக்கும் பௌதீக சூழலுக்கும் இடையிலான இடைத்தொடர்புகள் யாவும் தொகுதியில் அடங்கும் என்று குறிப்பிடப்படுகின்றன. இயற்கை வளங்களை உள்ளடக்கிய சூழலுக்கும், மனிதர்களுக்கும் இடையே நிகழ்ந்த போராட்டத்தினால் இயற்கை சூழலின் சமநிலையில் பங்கம் ஏற்பட்டு முழு உலகமும் பெரிய பாதிப்பிற்குள்ளாகும் நிலை தோன்றியது. இதிலிருந்து மீண்டெளுவதற்குரிய வழிமுறைகளை இந்து சமயம் கூறுகின்றது.

இந்து வழிபாட்டில் இயற்கை என்றும் கூறும் நாம் சூரிய வழிபாடு அதாவது மனிதன் இயற்கையில் இணைந்தவுடன் முதலாவதாக அவனுடைய வாழ்க்கையில் வெளிச்சத்தை வீசியது சூரியனும் சந்திரனும் காட்டுத்தீயை பிறகுதான் கண்டனர் ஆதி மனித சமூகத்தில் முதலாவதாக ஆதிக்கம் செலுத்திய இயற்கை சக்திகளில் சூரியன் முன்வரிசையில் நிற்பதை காணலாம். அதனை ஒரு வழிபாடாக உருவம் கொள்ள ஆரம்பித்தான் அடுத்து நெருப்பினை வழிபாடு செய்தான் (ஞானகுமாரன், 2012).

**மரங்களும் விலங்குகளும் பறவைகளும்**

பண்டைய மனிதனின் ஆடையாக மரவுரி காணப்பட்டது. குறிப்பிட்ட காலகட்டம் முழுவதும் மரங்கள் புகலிடமாகவும் பாதுகாப்பு இடமாகவும் இருந்தன. இந்துக்கள் ஆலமரத்தை வழிபாடு செய்து யாவரும் அறிந்ததே அத்தோடு வேப்பமரத்தில் அம்மன் நிறைந்திருப்பதாகவும் அதனை வழிபாடு செய்வதனையும் நாம் காணலாம். விலங்கு வழிபாடு இயற்கையோடு இணைந்ததாகும் இந்து சமயத்தில் அதாவது மனிதனின் எண்ணத்தில் கடவுளைப் பற்றிய கற்பனைகள் பலவாகவும் வியப்பானவையாகவும் இருந்தன இந்தக் கடவுள்களில் ஒன்றான சிவனின் வாகனம் காளி என்பதனால் அதனை வழிபாட்டு வந்தனர் இதனால் பசு வழிபாடு என்பது இந்துக்களுக்கு இப்போது விருப்பமானதாகும் (அமலா, 2008:43).

அத்துடன் இந்து மதம் பஞ்ச புதங்களையும் இவ்வுலகினையும் கடவுளாக காண்கின்றது.

“பாரிடை ஐந்தாய் போற்றி!

நீரிடை நான்காய் திகழ்தாய் போற்றி!

தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி!

வெளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி!

வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி! (திருஅகவல் 137-144)

“கங்கையாடில் என் காவிரியாடில் என்

கொங்கைதான் குமரித்துறை ஆடில் என்

ஓங்குமாகடல் ஓத நீர் ஆடில் என்

எங்கும் ஈசன் எனாதவர்கு இல்லை”

(நிரஞ்சினி.தி, 2017)

விலங்குகள், பறவைகள் இந்து மதத்தில் ஆழமான ஆன்மீக முக்கியத்துவத்தை கொண்டிருக்கின்றன. இந்த புராணங்களில் உள்ள பறவைகள் வேதங்கள் புராணங்கள் இராமாயணம் மற்றும் மகாபாரதம் உள்ளடக்கிய நூல்களில் பறவைகள் பற்றி கூறப்படுகின்றது. வேதங்களில் வாயு என அழைக்கப்படுவதோடு தெய்வமாக காற்றினை வழிபடுகின்றனர் இவ்வாறாக இந்த சமயமானது சுற்றுச்சூழலை போற்றுகின்றது அதாவது கடவுளையும் சூழலையும் ஒன்றாக பார்க்கின்றது. அதுமட்டுமல்லாது நம்பிக்கை ஊட்டி உலகத்தில் ஒழுக்கத்தை நிலை நாட்டுகின்றது.

**சமண சமயத்தில் சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் கருத்துக்கள்**

சிரமண என்னும் வட சொல்லின் விரிவாக சமணம் காணப்படுகிறது. இதனால் சிரமணர் தமிழிலே சமணர் என அழைக்கப்பட்டதுடன் சிரமணர் என்பதற்கு பொருள் இன்ப துன்பம் ஆகிய இரண்டையும் சமமாக கொண்டவர் என்பதாகும். அந்த வகையில் சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் கருத்துக்கள் சமண சமயத்தில் இயற்கையோடு இணைந்து அழகாக எடுத்துக் கூறப்படுகின்றது. சமணத்தில் 24 தீர்த்தங்கரர்கள் சமண சமய கொள்கைகளை உலகத்தில் பரப்புவதற்காக தோன்றினார்கள். சமண சமய சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் கருத்துக்கள் பகுத்தறிவு மற்றும் நேர்காட்சி வாத அடிப்படை எனக்கொண்டதாக காணப்படுகின்றது.

உயிர்களை அன்பு செய்யுங்கள் என்ற கோட்பாட்டைத் தலையில் சுமந்து நாடெங்கும் அலைந்தவர்கள் சமணர்கள். அகிம்சை என்றால் உயிர்களைக் கொல்லாமை என்று நாம் கூறுகிறோம். சமணர்களின் கருத்துப்படி உயிர்களைக் கொல்லாமல் இருப்பது மட்டும் அகிம்சை அல்ல. அவ்வுயிருக்கு நன்மை செய்வதும் சேர்ந்ததுதான் அகிம்சை. ஆபத்து நிலையில் இருக்கின்ற ஓர் உயிரைக் காப்பாற்றாமல் போவது கூட அவ்வுயிருக்கு இழைக்கப்படும் அநீதிதான் என்ற கொள்கை உடையவர்கள் சமணர்கள். சமணர்களின் கருத்துப்படி அனைத்தும் உயர் உள்ளவையே. இக்கொள்கை சுற்றுச்சூழல் ஒழுக்கவியலுக்கு முதுகெலும்பாக அமைகின்றது.

இவர்கள் உயிர்களை இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கின்றனர்.

1. ஸ்தாவர உயிர்கள் (அசையாத உயிர்கள்)
2. சங்கம உயிர்கள் (நடமாடும் உயிர்கள்)

ஸ்தாவர உயிர்களுக்குள் நான்கு பூதங்கள் (நீர், நிலம், காற்று மற்றும் நெருப்பு) மற்றும் மரங்கள் செடி கொடிகள் உள்ளடக்கப்படுகின்றன. இத்தகைய உயிர்கள் ஒரு உணர்வினை மாத்திரம் கொண்டிருப்பதாக சமணர்கள் கருதுகின்றனர். பின்வருவன ஸ்தாவர வகைக்குள் அடங்குகின்றன. (பிரேம்குமார்,2021).

1. பூமி சார்ந்த உயிர்கள் (இரத்தினக்கல், உப்பு ,மண், பாதரசம்)
2. நீர் சார்ந்த உயிர்கள் (பனி, நீர், ஈரலிப்பு, மழை)
3. நெருப்பு சார்ந்த உயிர்கள் (நெருப்பு. நெருப்புச் சுவாலை. மின்னல்)
4. காற்று சார்ந்த உயிர்கள் (வீசும் காற்று)

காய்கறி சார்ந்த உயிர்கள் இரண்டு வகையாக பிரிக்கப்படுகின்றன.

1. ஒன்றுக்கு மேற்பட்ட உயிர்களைக் கொண்ட காய்கறிகள் - முளைவிட்ட தானியங்கள், வேர் கிழங்கு வகைகள், கீரை வகைகள் உள்ளடங்குகின்றன.
2. ஒரு உயிரினை மட்டும் கொண்டவை - பழங்கள், தானியங்கள், இலைகள், மலர்கள் என்பன உள்ளடங்குகின்றன.

நன்னூல் உயிர்களைப் பகுக்கும்போது ஓரறிவுயிர் முதலாக ஐந்தறிவு ஈறாக அமைத்திருக்கும் முறையும் சமணர் முறையை ஒட்டியதாகும்.

ஓரறிவு உயிர் - புல், மரம்

ஈரறிவு உயிர் - சங்கு, நத்தை

மூவறிவு உயிர் - எறும்பு, செல்

நாலறிவு உயிர் நண்டு, தும்பி

ஐயறிவு உயிர் - மான், மயில்

மேலும் இந்த ஐந்து வகை ஸ்தாவர உயிர்கள் இரண்டு வகையாக பிரிக்கப்படுகின்றன.

சூக்கும உயிர்கள் இப்பிரபஞ்சம் முழுவதும் பரந்து காணப்படுவதுடன் ஐம்புலன்களுக்கு புலனாகாமல் இருக்கின்றன. ஸ்தூல உயிர்கள் அதேவேளை ஐம்புலனுக்கு உட்படுபவையாக இருப்பதுடன் பிரபஞ்சத்தின் ஒரு பகுதியிலேயே காணப்படுகின்றன.

சமணக் கொள்கையின் படி ஆன்மீகத்தின் மிகவும் உயர்ந்த நிலையான ஞானத்தை பெறுவதற்கு தடையாக வன்முறையே காணப்படுகிறது. எந்த ஆன்மா வன்முறையில் ஈடுபடவில்லையோ அந்த ஆன்மா நற்குணங்களை கொண்டிருக்கும் என சமணர்கள் நம்புகின்றனர். தாவரங்களில் ஆத்மாக்கள் அல்லது ஒரு சில தாவரங்களில் ஒன்றுக்கு

மேற்பட்ட ஆத்மாக்கள் இருப்பதாக சமணர்கள் நம்புகின்றனர். இதனால் தாவரங்களை கொள்வது பாவமானது என அனைவருக்கும் உணர்த்தியவர்கள் இவர்களே.

> ''இந்த தாவரங்களை துன்பத்திற்குள்ளாக்குபவர்கள் பாவச் செயல்களை சரியாக புரிந்து கொண்டு விடுபடவில்லை தாவரத்திற்கு துன்பத்தினை விளைவிக்காதவர்கள் பாவச் செயல்கள் புரிந்து கொண்டு விடுபடுகின்றனர். இவற்றை அறிந்து அறிவுள்ளவர் தாவரங்களுக்கு துன்பங்களை விளைவிப்பதில்லை ஏனையவர்கள் அத்தகைய தவறுகள் செய்வதற்கு காரணமாக இருப்பதுமில்லை ஏனையவர்களை இத்தகைய தவறுகள் செய்ய அனுமதிப்பதில்லை தாவரங்களுடன் தொடர்புபட்ட பாவங்களை அறிபவர்கள் தனது செயலுக்குரிய பலனை அறியும் முனிவனாகின்றான்''(ஆச்சாரங்க சூத்திரம்1.1.5.7).

இத்தகைய தாவரங்களை துன்பப்படுத்துவது மிகவும் பாவமான காரியமாக கருதப்படுகிறது. பொறுத்த வரையில் சமண துறவிகள் சமயத்தை நூற்றுக்கு வீதம் அஹிம்சையினை கடைப்பிடிக்க எதிர்பார்க்கப்படுகின்றது வேண்டும். அதேவேளை இல்லறத்தார் துறவிகள் அளவிற்கு இல்லாவிட்டாலும் ஓரளவிற்கு அஹிம்சையினை கடைபிடிக்க வேண்டும் என கூறப்படுகின்றது. இவ்வகையில் தாவரங்களின் பாதுகாப்பு சமணத்தில் உறுதி செய்யப்படுகிறது. எனவே உலகதோற்றம், உயிரினங்கள், பறவைகள், விலங்குகள், தாவரங்கள், ஐம்பூதங்கள், என பல சூழல் கூறுகளுடன் சமண மதமானது ஒன்றித்து காணப்படுகின்ற தன்மையானது சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான ஒழுக்க விதிகளை வலியுறுத்துவதாக காணப்படுகிறது.

**இந்து மற்றும் சமண சமயங்களில் காணப்படும் சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் கருத்துக்கள் ஓர் ஒப்பீட்டு ஆய்வு**

இன்றைய காலகட்டத்தில் சுற்றுச்சூழல் ஒழுக்கவியலானானது மிக முக்கியமான ஒன்றாக உள்ளது. ஏனெனில் சுற்றுச்சூழல் பல வழிகளில் பாதிக்கப்பட்டு இருப்பதனை நாம் கண்ணூடாக காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக மாசடைதல், பருவநிலை மாற்றம், இயற்கை அழிவுகள், புவி வெப்பமடைதல் போன்றவை நம்மை துன்பமடைய செய்கிறது. இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு வெறும் பார்வையாளர்களாக நாம் இருந்து விட முடியாது. சுற்றுச்சூழல் மதங்களின் அறிவு சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த, நல்வழி சார்ந்த, மனவலி சார்ந்த வாழ்விற்கு இது அடித்தளமாக அமைகின்றது. இத்தகைய சூழ்நிலை சுற்றுச்சூழலைப் பேணி பாதுகாக்க எம்மை தூண்டுகின்றது. எமது எண்ணங்களை மாற்றி அமைத்துக் கொள்ள மதங்களில் காணப்படும் சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் கருத்துக்கள் அடிப்படையாக உள்ளதனை நாம் காணலாம். அத்துடன் இயற்கையின் கொடைகளை அழிவில்லாமல் வீணாக்காமல் நன்கு பயன்படுத்த நம்மை தூண்ட வைப்பதும் இச் சுற்றுச்சூழல் ஒழுக்கத்தினை புகட்டும் மதங்களேயாகும். சுற்றுச்சூழல அனைவரும் பயன்படுத்தக்கூடிய ஒரு பொதுச் சொத்து எனவே அதனை அக்கறையுடன் பாதுகாப்பது நமது கடமையாகும்.

மகிழ்ச்சிகரமான ஆரோக்கியமான வாழ்க்கைக்கு சுற்றுச்சூழல் மிகவும் இன்றி அமையாதது என்பதை இன்று எல்லாத்தரப்பினரும் நன்கு உணர்ந்துள்ளனர். சுற்றுச்சூழல் என்பது உயிருள்ள மற்றும் உயிரற்றவற்றின் தொகுப்பாகும். நிலம், நீர், காற்று, ஒளி, சக்தி, புவியீர்ப்பு, தடை வெப்பநிலை, காந்த தன்மை, பொருண்மை ஆகியவை உயிர் அற்றவையில் அடங்கும். நுண்ணுயிர் முதல் மனிதர்கள் வரை அனைத்தும் உயிருள்ளவையில் அடங்கும். ஆனால் அவை வண்ணத்திலும் வடிவத்திலும் அளவிலும் அமைப்பிலும் எண்ணற்ற வேறுபாடுகள் கொண்டனவாக காணப்படுகின்றன.

இப்படிப்பட்ட வேறுபாடுகள் இருந்தாலும் சுற்றுச்சூழலில் உயிருள்ளவற்றிற்கும் உயிர் இல்லாதவற்றிற்கும் இடையே நிலையான தொடர்பு உள்ளது. இவை ஒன்றை ஒன்று சார்ந்து இருக்கின்றன. இவை அனைத்து வாழ்க்கை நிலையும் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டுள்ளது. இந்த உறவு நிலையானது சங்கிலித்தொடர் போன்றது. விந்தையானது கடவுளின் படைப்புகள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையன. ஆரம்பகால கட்டங்களில் சுற்றுச்சூழலியலாளர்கள் இயற்கையின் ஒழுங்கு முறை பிணைப்பு மற்றும் இயல்பில் கடவுளின் கரம் இருப்பதாக நம்பினர். இறைவன் இயற்கையோடு இணைந்து செயலாற்றுகிறார் எனவும் கருதினர்.

இந்த சுற்றுச்சூழல் ஒரு பகுதியை இன்னும் நாம் தவறாக பயன்படுத்தினால் ஒட்டுமொத்த உயிருள்ளவை, உயிரற்றவை என அனைத்திற்கும் நிச்சயமாக பாதிப்பு ஏற்படும். நாம் வாழும் இந்த பூமியை நாம் எப்படி பார்க்கின்றோமா? அதனை எப்படி அணுகுகின்றோம்? என்பதை பொறுத்துத்தான் நமது சுற்றுச்சூழல் கண்ணோட்டம் அமையும். நமது பார்வையை பொறுத்து தான் சுற்றுச்சூழல் பற்றிய கருத்தும் அமைகிறது. ஆதலால் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு நல்ல அணுகுமுறை மிகவும் முக்கியம். எனவே சுற்றுச்சூழல் கடந்த காலத்தில் எவ்வாறு இருந்தது, நிகழ்காலத்தில் எப்படி இருக்கிறது, எதிர்காலத்தில் எப்படி இருக்கும் என பல கருத்துக்களை மதங்கள் எடுத்துக் கூறுகிறது.

மதங்கள் ஒவ்வொன்றும் சுற்றுச்சூழல் கருத்துக்களை அதிகம் வெளிக்காட்டுவனவாக காணப்படுகின்றன. பல்வேறுபட்ட மதங்கள் காணப்பட்டாலும் அவற்றுள் நாம் இந்து மற்றும் சமண மதங்களின் சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் கருத்துக்களை ஒப்பிட முடியும். அவற்றை கீழ்வருவன மூலம் அறியலாம்.

இந்து மற்றும் சமண மதத்தில், சுற்றுச்சூழல் என்பது தெய்வாம்சம் பொருந்திய ஒன்றாகக் கருதப்படுகிறது. பல்வேறு மரங்களும், தாவரங்களும் மதச் சடங்குகளின் போதும் வழிபாடுகளின் போதும் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் சில மரங்கள் மிகவும் புனிதத் தன்மை வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. அம்மரங்களில் குறிப்பிட்ட கடவுள்களும், பெண் தெய்வங்களும் குடி கொண்டுள்ளதாகக் கருதுகின்றனர்.

இந்து பாரம்பரியத்தின்படி பூமி தாயாகக் கருதப்படுகிறது. அனைத்து உயிரினங்களும் இணக்கத்தோடு வாழ்கின்றன என்றும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பிற மதங்களைப் போன்று இந்து மதம் ˙ இயற்கையைக் கடவுள் அளித்த பரிசு என வலியுறுத்துகிறது. மக்கள் வாழ்கின்ற தெய்வாம்சம் பொருந்திய இந்தச் சுற்றுச்சூழல் இறைவனின் வெளிப்பாடு என்று

இந்து மதம் கருதுகிறது. இயற்கை மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த இந்து மதக் கோட்பாடு படைப்புக் கோட்பாட்டினைத் தழுவிக்காணப்படுகிறது. அனைத்தும் இறைமையின் வெளிப்பாடுதான் என்று கூறுகிறது.

மரங்கள், நதிகள், மலைகள், கனிம வளம் நிறைந்த பகுதிகள் அனைத்துமே கடவுளின் அருட்கொடைகள். இவற்றை மனிதகுலத்தின் பொது நன்மைக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும். அவற்றை நிர்வகிப்பவர்கள் அறங்காவலர்களைப் போல நடந்து கொள்ள வேண்டும். மனிதன் இந்தப் பூமியில் தர்மகர்த்தாவாகச் செயல்பட்டு, மனிதகுல மேன்மைக்காக இயற்கை வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாமே தவிர, இயற்கையைக் கட்டுப்படுத்தவோ, அதன்மீது அதிகாரம் செலுத்தவோ கூடாது.

மேலும் சுற்றுச்சூழல் ஒழுக்கம் பற்றிய கருத்துக்களை இந்து மற்றும் சமண மதங்களில் தாவரம், விலங்கு, பறவைகள், பஞ்சபூதங்கள் பற்றி அதிகளவிலான இலக்கியங்களில் கூறி இருப்பதை என்னால் காண முடிந்தது. அதாவது இந்து மதத்தில் உபநிடதங்கள், வேதங்கள், மகாபாரதம், ராமாயணம், இன்னும் பலவற்றை கூறலாம். சமண மதத்தில் சிலப்பதிகாரம், சங்க இலக்கிய நூல்கள், சங்கமருவிய கால காப்பிய நூல்களிலும் கூறப்படுகிறது.

**முடிவுரை**

உலகம் தோன்றிய காலம் தொட்டு இயற்கை தன் இயல்பில் இயங்கி வருகின்றது. அந்த இயல்பில் சிக்கல் ஏற்படுவது மனித சமூகத்திற்கு தீங்கானது. உண்மையான சுற்றுச்சூழல் ஒழுக்கவியல் அறிவு, சுற்றுசுழல் பாதுகாப்புக்கிடைக்க சமுதாயம் ஒன்றுபட்டு சுற்றுச்சூழலை பற்றிய முடிவுகளை எடுப்பது அவசியமாகின்றது. அந்தவகையில் இந்து மற்றும் சமண மதங்களில் காணப்படும் இலக்கியங்கள் பல சுற்றுச்சூழல் ஒழுக்க கருத்துக்களை கூறுவனாக உள்ளன. அந்த வகையில் சுற்றுச்சூழல் ஒழுக்கமானது இறைவனைச் சுற்றுச்சூழலில் காண்பதிலிருந்தும் உய்த்துணர்வதிலிருந்தும் உருவாகின்ற ஒன்றாகும். சுற்றுச்சூழலுக்கு ஒரு தனித்துவம் உண்டு அதை அறிந்து உணர்வதிலிருந்து உருவாகின்றது. சுற்றுச்சூழலில் இறையின் அன்பினை நாம் உணருகின்றோம். நமது அறிவு சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த, நல்வழி சார்ந்த, மனவலி சார்ந்த வாழ்விற்கு இவை அடித்தளமாக அமைகின்றது. சுற்றுச்சூழல் ஒழுக்கத்திற்காக நம்மை பணி செய்ய தூண்டுகின்றது. நமது எண்ணங்களை மாற்றி அமைத்துக் கொள்ள அழைப்புவிடுக்கின்றது. சுற்றுச்சூழலானது இறைவனின் அபரிவிதமான கொடைகளையும், நன்மைகளையும் நன்கு வழங்கும் கருவியாக உள்ளது என்பதை சூழல் ஒழுக்க கருத்துக்கள் நமக்கு கூறியுள்ளன. மேலும் சுற்றுச்சூழல் மூலமாக நமக்கு எத்தனையோ பயன்கள் கிடைக்கின்றன. வாழ்வாதாரங்கள், மன அமைதி, மருத்துவங்கள், உணவுப் பொருட்கள் என்று எத்தனையோ அடிப்படை தேவைகளை நமக்கு சுற்றுச்சூழல் வழங்குகின்றது. எனவே இவற்றினை பாதுகாப்பது எமது கடமையாகும். இதனாலே மதங்களின் ஊடாக ஒழுக்க கருத்தினை கூறினால் மக்கள் ஓரளவேனும் பயந்து அவற்றை கைக்கொள்ள முற்படுவார்கள் என்று கூறப்படுகின்றது. அந்த வகையில் இவ்விரு மதங்களிலும் பல்வேறுபட்ட கருத்துக்கள் காணப்பட்ட போதிலும் இந்து மற்றும் சமண மதங்களில் கூறப்பட்ட சூழல் ஒழுக்கம் பற்றிய கருத்துக்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது

பல ஒற்றுமைகளையும் சில வேற்றுமைகளையும் காணமுடிகிறது. இந்து மதமும் சமண மதமும் விலங்குகள் கொள்ளப்படக்கூடாது என்ற கருத்தில் ஒன்றுபடுவதை காணமுடிகிறது. எனவே உலகில் வாழும் அனைவரும் சூழலினை பாதுகாக்க வேண்டும் என்றால் மதம் என்று சொல்லின் ஊடாக அனைவரும் ஒழுக்கத்தை கடைபிடித்து சூழலை பேணுவார்கள், அந்த வகையில் இந்து மதமானது பல சூழலியல் கருத்துக்களை முன்வைக்கின்றது. அதாவது இயற்கை வழிபாடுகள் ஆரோக்கியமான உணவு முறைகள், ஆதிக்க நிலையற்ற உணர்வு நிலைகள், நேரடியாகவும் மறைமுகமாகவும் சுற்றுச்சூழல் ஒழுக்கத்தில் முக்கியபங்கு வகிக்கின்றன என்று கூறுவது மிகையாகாது. ஆன்மீக மனித வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்ததாக சுற்றுச்சூழல் காணப்படுகின்றது. இதனை இந்து மதமும் சமண மதமும் வெளிக்கொண்டு வருகிறது. சூழலியல் தொடர்பான விடயங்களில் இந்து மதமும் சமண மதமும் சில தனித்துவமான பண்புகளை கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது இந்து மதத்தின் வழிபாடுகளிலும் சடங்குகளிலும் சூழலியல் சார்ந்த கருத்துக்களை காணமுடிகிறது. சமண சமயத்தில் சூழல்சார் கருத்துக்கள் அதிகளவு ஒழுக்க நடைமுறைகளையும் விழுமியங்களையும் அடிப்படையாகக் கொண்டு விளங்குவதை அவதானிக்க முடிகின்றது. சமணம் தனது சூழலியல் கருத்துக்களை விளக்குவதற்கு நேர்க்காட்சி வாதம் மற்றும் பௌதீகஅதீத அடிப்படைகளை கொண்டுள்ளன. அதேவேளை இந்து மதம் அதிகளவிற்கு பௌதீக அதீத அடிப்படைகளைக் கொண்டு சூழலியல் கருத்துக்களை எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணைகள்**


அமலா.த. (2008). *மதமும் பகுத்தறிவும்.* குலூர் வெளியீட்டகம்.

அரசு.வீ.(செவ்விதாக்கம்)., (தமிழாக்கம் - ஜம்புநாதன்.மரா).(2004). *ரிக் வேதம் (தொகுதி 1,2,3).* அலைகள் வெளியீட்டகம்.

கணேசன். என். (2014). மகாவீரரின் மகத்தான போதனைகள். *தினத்தந்தி.*

கமலநாதன். செ. (2018). சூழல்சார் சவால்களுக்கு இந்துமதம் கூறும் தீர்வுகள். Retrieved June 13, 2023, from https://www.thinakaran.lk

குணபாலசிங்கம்.த.(1990). *சைவசித்தாந்தமும் விஞ்ஞான உலகமும்.* சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம்.

சக்கரவர்த்தி.அ.(1955). *நீலகேசி.* பாரி நிலையம்.

சிவானந்தமூர்த்தி.க. (2004). *சைவசித்தாந்தம் - தமிழர் மெய்யியல்.* அம்பால் வெளியீடு.

ஞானகுமாரன்.நா.(2012). *சைவசித்தாந்த தெளிவு.* தூண்டி வெளியீட்டகம்.

நிரஞ்சினி. தி. (2017). இந்து மதமும் சூழலியல் போதனைகள

பிரேம்குமார்.இ.(இணையாசிரியர்),(2020). *கலை இலக்கிய மெய்யியல் கொள்கை.* குமரன் புத்தக இல்லம்.

பிரேம்குமார். இ. (2021). சமண சமயத்தில் காணப்படும் சூழலிய மெய்யியல் கருத்துக்கள்.

லக்ஷ்மன்.கி. (2008). *இந்திய தத்துவ ஞானம்.* ஏஸியன் பிரிண்டஸ்.

ஜமாஹீர்.பீ.எம். (2012). *ஒழுக்கவியல் ஓர் அறிமுகம்.* எம்.ஜே.எம். அச்சகம்.

Herman.J.(2006). *The Golden Book of Jainism, Humanity's Oldest Relligion of Non –*

*Violence*.Lotus press.

Natubhai,S. (2004). *Jainism. The World of conquerors.Vol i&ii*, Motilal Banarsidass Publishers Pvt, Ltd.

# Literature and Society

# இராஜம்கிருஸ்ணனின் நாவல்கள் வெளிப்படுத்தும் பெண்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகளும்

**ஞா. சுதர்சுயா**
தமிழ்க் கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
vgsuya1027@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

இராஜம்கிருஸ்ணனின் படைப்புக்களுக்கென இலக்கிய உலகில் ஓர் முக்கியத்துவம் உண்டு. 1925 ஆம் ஆண்டு முசிறி என்ற இடத்தில் பிறந்தவர் இராஜம்கிருஸ்ணன். இவர் ஒரு இலக்கியப் படைப்பாளியாக உருவெடுப்பதற்கு இவரது மும்மொழி நூற்புலமையும் தமிழ் இதழ்களின் மீதான வாசிப்பனுபவமும் முக்கிய காரணங்களாக அமைந்தன. இராஜம்கிருஸ்ணனின் சிறுகதை, நாடகம், பயணக்கட்டுரை, மொழிபெயர்ப்பு போன்ற படைப்புக்கள் முற்போக்குச் சிந்தனை, சமூக நோக்கு, உறுதியான கொள்கைப் பிடிப்பு, பெண்ணியப்பார்வை, அடித்தட்டு மக்களையும் பாத்திரமாக்கும் திறன், நேர்த்தியான கதை சொல்லல், வேறுபட்ட உள்ளடக்கங்கள், சிறந்த மொழிநடை முதலானவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளன. இவ்வாறு பல்துறைசார் படைப்புக்களை வெளியிட்டிருந்தாலும் இலக்கியப்புலத்தில், இவரது கூட்டுக்குஞ்சுகள், சேற்றில் மனிதர்கள், மானுடத்தின் மகரந்தங்கள், சுழலில் மிதக்கும் தீபங்கள், மண்ணகத்துப் பூந்துளிகள், கோபுர பொம்மைகள், மாறிமாறிப் பின்னும், கோடுகளும் கோலங்களும் ஆகிய நாவல்கள் தனித்துவம் வாய்ந்தவையாக விளங்குகின்றன. ஏனைய இலக்கிய ஆளுமைகளின் நாவல்களை விட இவரது நாவல்கள் பல விடயங்களைப் பற்றி பேசினாலும் அவற்றுள் பெண்ணியத்தை பற்றி எடுத்துரைப்பதில் இணையற்றவையாகத் திகழ்கின்றன. பெண் அடக்குமுறைக்குட்பட்ட சூழலில் இவர் வாழ்ந்ததனால் பெண்ணியம் சார்ந்த விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளமை இவரது நாவல்களைப் படிக்கும்போது நன்கு புலனாகிறது. சுருங்கக்கூறின் பெண்ணியம் என்பது அனைத்து வகைப்பெண்களும் சம உரிமைகளோடு வாழ்தல் ஆகும். அந்தவகையில், ஆண், பெண் சமத்துவம், பெண்சிசுக்கொலை, பெண்கல்வி மறுக்கப்படுதல், வரதட்சணை, பாலியல் சுரண்டல், கைம்பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், மறுமணத்தடை, வேலைக்குச்செல்லும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கலாசாரச் சிக்கல் என சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அவற்றிற்கான தீர்வுகளையும் இவரது நாவல்கள் எடுத்துரைக்கின்றன. பெண்கள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்பட இவரது நாவல்கள் அளப்பரிய பங்காற்றுகின்றன. அந்தவகையில் 1980 – 2000 வரையான காலப்பகுதில் எழுந்த இவரது நாவல்களில் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் பற்றியும், அந்நாவல்களினூடாகவே அச்சிக்கல்களுக்காக அவர் கூறியுள்ள தீர்வினையும் சமூகத்திற்கு எடுத்துரைக்கும் நோக்கத்துடன் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. ஈழத்தைப் பொறுத்தவரையில், இவரது படைப்புகளில் வெளிப்படும் பெண்ணியம் சார்ந்த விடயங்கள் தொடர்பான ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது ஆய்வுப் பிரச்சினையாகும். இராஜம்கிருஸ்ணனின் நாவல்கள் மற்றும் குறித்த ஆய்வுடன் தொடர்புபட்டவகையில் வெளிவந்துள்ள நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வு மூலங்களாகப் பயன்படுகின்றன. இவ்வாய்வானது விபரண ஆய்வு அணுகுமுறையினூடாக மேற்கொள்ளப்படுகிறது.

***திறவுச் சொற்கள்:*** *பெண்ணியம், நாவல்கள், சமஉரிமை, தனித்துவம், சமூகம்*

**அறிமுகம்**

1925 ஆம் ஆண்டு முசிறியில் பிறந்த இராமஜம்கிருஸ்ணணின், மும்மொழிப் புலமை மற்றும் தமிழ் இதழ்களைப் படிப்பதன் மூலம் பெற்ற நுணுக்கமான புரிதல் மூலம் தன்னை ஒரு படைப்பாற்றல் மிக்கவராக நிலைநிறுத்தினார். சிறுகதைகள், நாடகங்கள், பயணக்கட்டுரைகள் மற்றும் மொழிபெயர்ப்புகள் உட்பட பல்வேறு இலக்கிய வடிவங்களில் அவரது திறமை பரவியுள்ளது, ஒவ்வொன்றும் முற்போக்கான சித்தாந்தங்கள், வலுவான சமூக நோக்குநிலை, அசைக்க முடியாத கொள்கைகள், பெண்ணிய முன்னோக்குகள், கீழ் சமூகத்தில் உள்ள பாத்திரங்களின் திறமையான சித்தரிப்பு, நேர்த்தியான கதைசொல்லல், மாறுபட்ட உள்ளடக்கம் மற்றும் மொழியியல் சிறப்பு. அவரது படைப்புகள் பன்முகத்தன்மை கொண்டதாக இருந்தாலும், ஏராளமான மற்றும் வசீகரிக்கும் அவரது நாவல்கள் குறிப்பிட்ட வாசகர் ஆர்வத்தைப் பெறுகின்றன.

இவரது நாவல்கள் பெரும்பாலும் பெண்ணியச் சிந்தனையை வெளிப்படுத்தி நிற்கின்றன. அண்மைக்காலங்களில் இவரது இலக்கியப்படைப்புக்கள் பற்றியும் அவரது வாழ்க்கைக் குறிப்புக்கள் பற்றியும் தமிழகத்தில் பல ஆய்வுகள் இடம்பெற்றிருந்தாலும், ஈழத்தைப் பொறுத்தவரையில் இவரது படைப்பாக்கங்கள் மீதான விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே இவரது ஆக்க இலக்கியப் படைப்புக்கள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது அவசியமானதாகும். அந்தவகையில் 1980 தொடக்கம் 2000 வரையில் எழுந்த இவரது எட்டு நாவல்களில் வெளிப்படும் பெண்ணியச் சிந்தனைகளை ஆராய்ந்து அவற்றினை சமூகத்திற்கு கொண்டு செல்லும் நோக்கத்துடன் இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகிறது.

**ஆய்வு நோக்கம்**

‘‘இராஜம்கிருஸ்ணனின் நாவல்களில் பெண்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகளும்’’ என்ற தலைப்பில் அமைந்த இவ் ஆய்வினூடாக குடும்பம், சமூகம், தொழிற்களம், நிறுவனங்கள் ஆகியவற்றில் பெண்கள் சந்திக்கும் சிக்கல்கள் மற்றும் அச்சிக்கல்களுக்கான தீர்வுகளையும் அவரது நாவல்களினூடே கண்டறிந்து சமூகத்திற்கு அறிவித்தல்.

**ஆய்வுப் பிரச்சினை**

இராஜம்கிருஸ்ணனின் சிறுகதைகள் மற்றும் நாவல்கள் பற்றிய விரிவான ஆய்வுகள் இருந்தபோதிலும், ஈழத்தின் சூழலில் அவரது படைப்புகளின் மையக் கருப்பொருளான பெண்ணியம் பற்றிய விரிவான ஆய்வுகளில் குறிப்பிடத்தக்க ஆய்வு இடைவெளி உள்ளது.

**ஆய்வுக்கருதுகோள்**

பெண்ணிய நோக்கில் எழுந்த நாவல்களுள் இராஜம்கிருஸ்ணனுடைய நாவல்கள் தனித்துவமுடையனவாகவும், முக்கியத்துவமுடையனவாகவும் அமைகின்றன.

**இலக்கிய மீளாய்வு**

அரங்க மல்லிகா, (2002), ‘‘தமிழ் இலக்கியமும் பெண்ணியமும்’’, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லீட், அம்பத்தூர், சென்னை – தமிழ் இலக்கியங்களில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடம் மற்றும் பெண்ணியம் சார்ந்த சிந்தனைகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. இந்நூலானது பெண்களின் பிரச்சினைகளைக் குறிப்பிடுவதற்கு இவ்வாய்விற்கு துணை செய்கிறது. இந்நூலில் கூறப்படாத இராஜம்கிருஸ்ணன் நாவல்களில் வெளிப்படும் பெண்ணியம் சார்ந்த விடயங்களை கட்டவிழ்ப்புச் செய்வதாக இவ்வாய்வானது அமைகிறது.

சிதம்பரசுப்ரமணியன்.ச., (1994), ‘‘தமிழ் நாவல்களில் பெண்கதை மாந்தர்கள்’’, பாரி நிலையம், சென்னை - இதில் மு. வ, ஜெயகாந்தன், இராஜம்கிருஸ்ணன் ஆகிய மூவர்களின் நாவல்களில் உருவாக்கப்பட்ட பெண்கதை மாந்தர்கள் பற்றி இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலானது பெண்ணியம் சார்ந்த விடயங்களை எழுதுவதற்கு இவ்வாய்விற்கு பகுதியளவில் துணை புரிகின்றது. அத்துடன் இராஜம்கிருஸ்ணன் நாவல்களில் வெளிப்பட்டு நிற்கும் பெண்ணியச்சிந்தனைகள் இந்நூலில் முழுமையாக கூறப்படவில்லை. ஆகவே அதனை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வானது அமைகிறது.

ஏழுமலை.சு., (2012), ‘‘மனித மதிப்புகள் இராஜம்கிருஸ்ணன் நாவல்களில்’’, காவ்யா பதிப்பகம், சென்னை – இந்நூலில் இராஜம்கிருஸ்ணன் நாவல்களில் மனிதர்களின் மகத்துவம், மேன்மை, உயர்வு பற்றியும் சமூகத்தில் மனிதன் எவ்வாறு மதிக்கப்பட வேண்டியவனாக விளங்குகிறான் போன்றனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. மனித மதிப்புகளில், பெண்களுடைய மதிப்புகள் பற்றி எழுதுவற்கு இந்நூல் இவ்வாய்விற்கு துணை புரிகின்றது. இந்நூலில் கூறப்படாத இராஜம்கிருஸ்ணன் நாவல்களில் வெளிப்படும் பெண்ணியம் சார்ந்த விடயங்களை எடுத்தியம்புவதாக இவ்வாய்வானது அமைகிறது.

கலா.ரெ., (2011), ‘‘இராஜம்கிருஸ்ணன் நாவல்களில் பெண் பாத்திரங்கள்’’, சாரதா பதிப்பகம், சென்னை - இந்நூலில் கல்வி, காதல், உரிமையின்மை, மண வாழ்க்கையில் ஏற்படும் இடர்பாடுகள், வரதட்சனைச் சிக்கல், பெண் கற்பு வலியுறுத்தல், விதவை நிலை என இராஜம்கிருஸ்ணன் நாவல்களில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன. இராஜம்கிருஸ்ணன் நாவல்களில் வெளிப்படும் பெண்ணியச் சிந்தனைகளை எழுதுவதற்கு இந்நூல் துணை புரிகின்றது. இந்நூலில் குறிப்பிடப்படாத ஏனைய விடயங்கள் இவ்வாய்வில் கூறப்பட்டுள்ளன.

தமிழ்ச்செல்வன்.பா., ‘‘சமகாலத் தமிழ் நாவல்களில் மகளிர் சிக்கல்கள்’’ இந்நூல் பெண்களுக்கு ஏற்படும் சிக்கல்களை காதல், திருமணம், குடும்பம், வேலைக்குச் செல்லும் பெண், தனிநபர், பொது என்ற அடிப்படையில் ஆய்வு செய்கிறது. இந்நூல் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் பற்றி குறிப்பிடுவதற்கு இவ்வாய்விற்கு துணை புரிகிறது. இந்நூலில் கூறப்படாத இராஜம்கிருஸ்ணன் நாவல்களில் வெளிப்படும் பெண்ணியம் சார்ந்த சிந்தனைகளை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வானது அமைகிறது.

சங்கீதா., (2018), ‘‘நாவல்களில் பெண்ணியம்’’-சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், இதழ்-3. இந்த ஆய்வுக்கட்டுரையானது, சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்கிறது. பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் பற்றி குறிப்பிடுவதற்கு இவ்வாய்விற்கு பகுதியளவில் துணை புரிகிறது.

நாகராணி.இரா., (2022), ‘‘இராஜம்கிருஸ்ணனின் விருது பெற்ற நாவல்களில் சமுதாயச்சிந்தனைகள்’’- சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், தொகுதி-04. இக்கட்டுரையில் இராஜம்கிருஸ்ணனின் விருது பெற்ற நாவல்களில் வெளிப்படும் பெண் சிந்தனை பற்றிய விடயங்கள் மிகச்சுருக்கமாக ஆராயப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்கட்டுரையானது, இராஜம்கிருஸ்ணனின் நாவல்களில் வெளிப்படும் பெண்ணியச் சிந்தனைகளை எழுதுவதற்கு இவ்வாய்விற்கு பகுதியளவில் உதவுகிறது.

**ஆய்வு முறையியல்**

இராஜம்கிருஸ்ணனால் 1980 தொடக்கம் 2000 ஆண்டு வரையான காலகட்டங்களில் எழுதப்பட்ட கூட்டுக்குஞ்சுகள், சேற்றில் மனிதர்கள், மானுடத்தின் மகரந்தங்கள், சுழலில் மிதக்கும் தீபங்கள், மண்ணகத்துப் பூந்துளிகள், கோபுர பொம்மைகள், மாறிமாறிப் பின்னும், கோடுகளும் கோலங்களும், ஆகிய நாவல்களை மையப்படுத்தி விபரண ஆய்வு அணுகுமுறையில் இவ் ஆய்வானது மேற்கொள்ளப்படுகிறது.

**முடிவும் கலந்துரையாடலும்**

***இராஜம்கிருஸ்ணன் நாவல்களில் பெண்கள் எதிர்நோக்கும் சமூகப் பிரச்சினைகள்***

இலக்கியங்கள் சமூகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குகின்றன. சமுதாய மறுமலர்ச்சிக் காலகட்டத்தில் தோன்றிய இலக்கிய வகைமையாகிய நாவலிலும் சமுதாயம் படம் பிடித்துக் காட்டப்படுகிறது. மக்களின் வாழ்க்கை முறை, பண்பாடு, உறவுமுறைப்பிணைப்பு, சிக்கல்கள், போராட்டங்கள், முரண்கள் போன்றவற்றைப் படைப்பாக்கம் செய்யும் சமூகப்பாவை மிக்க படைப்புக்கள் தமக்கென தனித்த இடத்தைப் பிடித்துள்ளன. அதே போன்று சமுதாயத்தில் மண்டிக்கிடக்கும் அவலங்களை வெளிக்கொணர்வதும் தீர்வுகளைத் தேடுவதுமே இன்றைய தேவையாக உள்ளது. அந்தவகையில் இராஜம்கிருஸ்ணன் பெண்கள் எதிர்நோக்கும் சமுதாயச்சிக்கல்களைக் கதையோட்டத்தின் நடுவே விளக்கிச் செல்கிறார். அந்தவகையில் இராஜம்கிஸ்ணனின் நாவல்கள் வெளிப்படுத்தும் பெண்கள் தொடர்பான சமுதாயச் சிக்கல்களை பின்வருமாறு காணலாம்.

***பெண்சிசுக்கொலை***

ஆணை ஆளப்பிறந்தவனாக மதிப்பிடும் சமூகம் பெண்ணை அடங்கப் பிறந்தவளாக புரிந்து கொள்கிறது. பிறக்கப்போகும் குழந்தையின் பாலினத்தைத் தீர்மானிக்கும் திறன் தாயின் கையில் இல்லை என்று தெரிந்த பின்னரும், பெண் குழந்தையின் பிறப்புக்குத் தாய்மீது பழிபோடும் செயல்களும் மிகுந்து காணப்படுகின்றன. ஆண்களிடம் பெண் குழந்தையை வரவேற்கும் எண்ணவோட்டம் இல்லாதிருக்கும் அதே பொழுதில், பெண்களே பெண் குழந்தை

பிறப்பதற்கு எதிரியாக இருப்பதையும் சமூகத்தில் காணமுடிகிறது. அந்த வகையில் பெண் சிசுக்கொலையை இராஜம்கிருஷ்ணனின் எழுத்து எதிர்க்கிறது.

பெண் குழந்தையை பெண்ணே வெறுக்கும் கொடிய நிலை உள்ளது. 'மண்ணகத்துப் பூந்துளிகள்' நாவலில் வெள்ளைச்சாமி குடும்பக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை செய்த பின்னர் அவனது மனைவி அழகாயி கருவுற்று விடுகிறாள். மூன்று பெண் குழந்தைகள் இருந்தும் அதில் நிறைவுறாத அழகாயி, ஆண் குழந்தை வேண்டும் என ஆவல் கொள்கிறாள். பாட்டியும் ஆண் குழந்தை பெறாத ஆண் ஆணல்ல என்ற கருத்தைப் பதிய வைக்கிறாள். வேற்று உறவால் பிறந்த அக்குழந்தை பெண்ணினம் சார்ந்ததாக இருந்தது. பிறந்தது பெண் குழந்தை என்பதால் அது பெற்ற தாயான அழகாயியால் கொல்லப்படுகிறது.

''அன்று.... அந்தச் சிசுவை, பாட்டி அகன்றதும் சுவாசத்தில் இரண்டு நெல்மணிகளைப் போட்டு முடித்துவிட்டாள். விடிந்து செய்தி கேள்விப்பட்டு வந்த புருஷன் செத்த பிண்டத்தை அந்தக் கொல்லையில்தான் புதைத்தான்'' எனப் பெண்சிசுக்கொலையில் பெண்ணே முன்னிற்பது சொல்லப்படுகிறது. 'மண்ணகத்துப் பூந்துளிகள்' நாவலும் பெண் குழந்தை பிறந்தால் தாயைக் கொன்று விடுவதாக மிரட்டும் கணவன் ஒரு பாத்திரமாய்ப் படைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது (இராஜம்கிருஸ்ணன், 1990:64).

### *வளர்ப்பு முறை வேறுபாடு*

ஆணும் பெண்ணும் பிறப்பால் உடலியல்க்கூறுகளில் வேறுபட்டிருப்பதைப் போன்று வளர்ப்பு முறையிலும் ஆணுக்கு ஒரு வகைப்பட்டதாகவும் பெண்ணுக்கு இன்னொரு வகைப்பட்டதாகவும் வேறுபட்டு அமைகின்றது. அந்தவகையில் ஆண் வன்மையானவனாகவும், புறத்துக்குரியவனாகவும், பெண் மென்மையானவளாவும், வீட்டுக்குரியவளாகவும் வளர்க்கப்படுகின்றனர். அதே போன்று ஆணுக்கு வீரம் வேண்டும் என்றும் பெண்ணுக்கு அச்சம் வேண்டும் என்றும் அவர்களின் ஆடை, அணிகலன்கள், உண்ணும் உணவு, விளையாடும் பொருட்கள் என சிறுவயது முதலே வேறுபாடு கற்பிக்கப்படுகின்றது.

அந்தவகையில் 'கோடுகளும் கோலங்களும்' நாவலில் சின்னம்மாளுக்குத் தாய்ப்பால் இல்லாத நேரம் அப்பெண் குழந்தைகளுக்கு பசும்பால் கொடுக்க முயன்ற போது செவந்தியின் அம்மாவிடம் இருந்து கடும் எதிர்ப்பு வந்தது. படித்து வரும் ஆண் குழந்தைக்குத்தான் பால் கொடுக்கப்பட வேண்டும். என்றும் பெண் குழந்தைக்குக் கஞ்சி கொடுக்கும் படியும் சின்னம்மாக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

### *காலம், புழங்குவெளி சுருக்கப்படுதல்*

'சேற்றில் மனிதர்கள்' நாவலில் வரும் அம்சு மாலை ஆறுமணிக்கு மேல் குடத்தை எடுத்துக்கொண்டு குளிக்கப் புறப்பட்டபோது அவளது தாய் நேரத்தைக் காரணம் காட்டித் தடை செய்கிறாள். வேலை செய்து உடல் முழுக்க மண்ணும், வியர்வையுமாய் இருக்கும் அம்சு, அம்மாவுக்குக் கீழ்ப்படிந்து குளிப்பதைத் தவிர்க்கிறாள். அம்சு குளிக்கக் கிளம்பும்போது லட்சுமிக்கும் அம்சுக்கும் இடையே நடைபெறும் உரையாடல் பெண்ணின் காலமும் சுதந்திரமும் கட்டுக்குள் இருப்பதைப் புலப்படுத்துகிறது.

"எந்நேரண்டி நீ குளிக்கிறது, இருட்டில ஆத்துக்குப் போயி" "குளிக்க வாணாம், இப்ப நீ உள்ளற போ, ஈரமா இருந்தா சீலய அவுத்து மாத்திக்க" (இராஜம்கிருஸ்ணன், 1990:52-53

கிராமங்களில் ஒரு பெண் பருவமடைந்த பின் வீட்டைவிட்டு வெளியிலெங்கும் செல்லக்கூடாது என்ற எழுதப்படாத தடை உள்ளது. என்பதனை 'மண்ணகத்துப் பூந்துளிகள்' நாவலில், "பூவு ஆளான பிறகு வெளியே செல்வதில்லை பொன்னுவும் ராக்குவும் தானே" (இராஜம்கிருஸ்ணன், 1990:43). எனப் பருவமடைந்த பெண்களின் புழங்குவெளி சுருக்கப்படுவது எடுத்துக்காட்டப்படுகிறது).

***பெண்கல்வி மறுக்கப்படுதல்***

ஆண் உயர்கல்வி கற்பதை வரவேற்கும் சமூகம் அதே அளவுக்கான ஏற்றத்தைப் பெண்கல்விக்கு வழங்குவதில்லை. கல்வி கற்கும் பெண்ணிற்கு சிந்திக்கும் திறன், வினா எழுப்பும் ஆற்றல் மேலோங்கிக் காணப்படும். இவ்வாறான நிலையில் ஆண்களின் அடிமைத்தனத்திற்கு எதிராக கேள்வி எழுப்ப நேரிடும். அத்தோடு கல்வியில் சாதிக்கும் பெண் வேலைவாய்ப்புப் பெற்று பொருளாதார மேம்பாடடைந்தால் அவள் ஆணைச் சார்ந்திருக்க வேண்டியதில்லை. அதனால் அவர்களின் அதிகாரம் செயலிழந்து போய்விடும் என்ற காரணத்தால் பெண்கள் அதிகம் கல்வி கற்பதை ஆண்கள் விரும்புவதில்லை.

'கோடுகளும் கோலங்களும்' நாவலின் தலைமைப் பாத்திரமான செவ்வந்தி தலைமைத்தன்மை மிக்கவளாகக் காட்டப்பட்டாலும், அவள் தனது மகளுடைய கல்வி ஈடுபாட்டை ஊக்குவிக்காத முறையிலேயே பல இடங்களில் பேசுகிறாள். வரதட்சணைக்கான பொருளீட்டும் பொறுப்பு பெண்ணைச் சார்ந்தது என அவள் கருதுகிறாள்.

தாயின் பாரத்தைச் சுமக்கும் இடத்தில் பெண் குழந்தைகள் வைக்கப்படுகிறன்றனர். படிக்கச் செல்லும் பெண் குழந்தையால் வீட்டுவேலைகளில் முழுமையாகக் கவனம் செலுத்த முடியாது என்பதால் பெண் கல்வி முடக்கப்படுகிறது. 'சேற்றில் மனிதர்கள்' நாவலில் சம்முகம் தன் மகள் காந்தியைப் படிக்க வைக்கிறார். ஆனால் இன்னொரு மகளைப் படிக்கவிடவில்லை. வீட்டுவேலை செய்யும் நோக்கத்தில் அவளுக்கான கல்வி மறுக்கப்படுகிறது திருமணத்தை முன்னிட்டுப் பெண் கல்வி தடைப்படுவதை இராஜம் கிருஷ்ணன் நாவல்கள் எடுத்துக்காட்டுகின்றன. லேடி லிவிங்டன் பள்ளியில் படிக்கும் பத்தாம் வகுப்பு மாணவியின் கல்வியானது திருமணத்தை முன்னிட்டு நிறுத்தப்படுவதை 'ஓசைகள் அடங்கிய பிறகு' நாவல் காட்டுகிறது (இராஜம்கிருஸ்ணன், 1990:27).

வறுமை, தாய் மறுமணம் செய்தல், பொறுப்பற்ற தந்தை, அதிகமான குழந்தைளைப் பெற்றமை போன்ற குடும்பச் சூழல்களால் கல்வி தடைபெறுகிறது. 'மாறிமாறிப் பின்னும்' நாவலில் வரும் ரேவதி ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் போது மூன்றாம் வகுப்புப் படிக்கும் அவளது தம்பி, வேம்புவுக்குக் கல்வி கற்றால்தான் முன்னேற்றம் வரும் என்று குறிப்பிடுகிறாள். அவள் படித்து மருத்துவத் தாதியாகவோ, ஆசிரியையாகவோ வரவேண்டும் என்று கனவு கண்டாள். ஆனால் அவளது தாய் குடும்பத்தைக் குலைத்து விட்டு கூத்தரசன் என்ற மருத்துவரோடு சென்றுவிட்டமையால், வீட்டின் நலன் கருதி ரேவதியைத் திருமணம் செய்து கொடுத்து விட்டார் இவ்வாறு குடும்பச் சூழலாலும் பெண் கல்வி தடைப்படுவதை அறிந்து கொள்ள முடிகிறது.

***வரதட்சணை***

பெண்ணுக்கெதிரான சமூகப் பிரச்சினைகளில் மிக முக்கியமானது வரதட்சணைக் கொடுமையாகும். வாழ்க்கைத்துணையின் அன்பு, பண்பு, அறிவு, ஆற்றல் போன்றவற்றை பொருட்படுத்தாமல் அவளது செல்வம் மட்டுமே திருமணத்தில் முன்னிறுத்தப்படுகிறது. பெண்ணானவள் வரதட்சணை கொடுத்தாலும் வெறுங்கையுடன் வரும் ஆண் அவளை அடிமைப்படுத்தியே வாழ்கின்ற நிலை காணப்படுகிறது..

‘மண்ணகத்துப் பூந்துளிகள்’ நாவலில் அழகாயி தன்மகள் பூவுக்குச் சுந்தரம் மணமகனாக வரவேண்டும் என ஆசைப்பட்டும், வரதட்சணை காரணமாக அது நிறைவேறாமல் போனது. சுந்தரத்துக்கு ஐம்பது பவுன் நகையும், ஐம்பதாயிரம் ரொக்கமும் கொடுத்த பெண்ணுடன் திருமணம் நடைபெறுகிறது. இதனை மேல்தட்டு வர்க்கத்தைச் சார்ந்த குடும்பத்தின் வரதட்சணையாகக் கருதமுடிகிறது. மேல்தட்டு வர்க்கத்தைச்சார்ந்த கல்லூரிப் பேராசிரியரை மணம் முடிப்பதற்கு ஐம்பது சவரன் நகையும், ஐந்து கிலோ வெள்ளியும், இருபதாயிரம் ரூபாயும் சீர்வரிசையும் கேட்கப்படுவதைத் ‘தோட்டக்காரி’ நாவல் கூறுகிறது. (இராஜம்கிருஸ்ணன், 1992:8) அதே போன்று ‘கூட்டுக்குஞ்சுகள்’ நாவலில் மருத்துவர் ஒருவரை மணக்க இலட்சரூபாய் வரதட்சணை கொடுக்கப்பட்ட நிகழ்வு கூறப்பட்டுள்ளது (இராஜம்கிருஸ்ணன், 1985:33).

***பாலியல் சுரண்டல்***

பாலியல் சுரண்டல் என்பது வேலைதருதல், பதவி உயர்வு தருதல், கலையைக் கற்றுத் தருதல், திருமணம் செய்து கொள்வதாக கூறுதல் போன்ற நம்பிக்கைகளைப் பெண்ணுக்கு ஏற்படுத்தி அவளது உடலைச் சுரண்டுதல் ஆகும். இது பெண்ணின் உடன்பாட்டுக்கு மாறாக நிகழ்கிறது.

அந்த வகையில் ‘சேற்றில் மனிதர்கள்’ நாவலில் நாயகி காந்தியைச் சாலி என்பவன் காதலிப்பதாகக் கூறி நம்ப வைக்கிறான். காந்தியின் மேற்படிப்புக்குத் தான் பொறுப்பேற்பதாகச் சொல்லி தன்னுடைய வீட்டுக்கு அழைத்துச் செல்கிறான். திருமண ஆசை காட்டி அவளிடம் இன்பம் துய்த்தபின் வேறோரு அரசியல்வாதியின் காமத்துக்கும் இவளை பலியாக்க எண்ணுகின்றான் என்ற உண்மையைறிந்து காந்தி பொங்குகிறாள். பல ஆண்களுடன் உடல் சார்ந்த நட்பு வைப்பதன் மூலம் அரசியலில் உயர்ந்த இடத்தைப் பிடிக்க முடியும் என்று கூறுகிறான். பெண்ணின் மென்மையையும் அதன் மீதான ஏக்கத்தையும் பயன்படுத்தி அவளை ஆண்கள் வீழ்த்தி விடுவதாக ஆசிரியர் கூறுகின்றார்.

இவ்வாறு திருமணம் செய்து கொள்வதாக ஆசைகாட்டி பெண்ணிடம் உடலின்பம் அடைந்துவிட்டு, பின்னர் வேறு பெண்ணை மணக்கும் கொடுமை பற்றி இராஜம் கிருஷ்ணனின் பல நாவல்கள் பேசுகிறது.

***கைம்பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்***

கணவனை இழந்த பெண்ணை சமூகம் கைம்பெண் என அழைக்கிறது. கணவனை இழந்ததும் பெண் ஆடம்பரங்களைத் துறக்க வேண்டும் என்றும், அணிகலன்களை இழக்க வேண்டும் என்றும் சமூகம் எதிர்பார்க்கின்றது. வயது வேறுபாடின்றி அழகைக் கலைப்பதும்,

இளமையைக் குலைப்பதும் நிகழ்கிறது. இதனை இராஜம்கிருஸ்ணனின் நாவல்களில் காண முடிகின்றது.

'கோடுகளும் கோலங்களும்' நாவலில் வரும் செவ்வந்தியின் மகள் சின்னம்மா கணவன் இறந்த பின் வடிவச் சிதைவுக்கு ஆளாகிறாள். சின்னம்மாவின் உடல் துரும்பாக இளைத்துப் போகிறது. கன்னம் ஒட்டிப் போகிறது. நெற்றிப் பொட்டு இல்லாமல் போகிறது. மூக்குத்தித் திருக்காணிகளைக் கூட இழக்கிறாள். தோடுகள் காணாமல் போகின்றன. வளையல், மாலை எல்லாவற்றையும் துறந்தாள். கைம்பெண்ணின் அவலத்தை எடுத்துரைக்கிறார் நாவலாசிரியர் (இராஜம்கிருஸ்ணன், 1998:42).

'சுழலில் மிதக்கும் தீபங்கள்' நாவலில் கைம்பெண்கள் மஞ்சள் குங்குமம் வைத்து நிழச்சிகளில் முன்னால் செல்ல முடியாமையை நாவல் எடுத்துரைக்கிறது (இராஜம்கிருஸ்ணன், 1994:32-33). திருணமான பின் கணவன் திடீரென இளவயதில் மரணமடைந்தால் அதற்கான முழுப்பழியையும் பெண் ஏற்க வேண்டியதாகிறது. மனைவி இறந்துவிட்டால் அதற்கான பொறுப்பும் பழியும் ஆண்மீது சுமத்தப்படுவதில்லை. மனைவி வந்த நேரம், அவளது இராசி, மற்றும் சாதகபலன் ஆகியவையே மரணத்துக்கான காரணியாகச் சொல்லப்பட்டு அக்கைம்பெண் ஒரு கொலைக் குற்றவாளியாகவே பார்க்கப்படுகிறாள்.

அந்தவகையில் 'கோடுகளும் கோலங்களும்' நாவல் பாத்திரமான சின்னம்மாவின் கணவன் மூன்று நாள் காய்ச்சலில் மரணமடைந்ததற்கான பழி சின்னம்மா வந்த நேரத்தின் மீது விழுந்தது. அத்துடன் அவள் பருவத்துக்கு வந்த நேரமும் அவன் மரணத்திற்கு காரணம் என ஆனது. ''அவ ஆளான நேரமே சரியில்ல, அததா புகுந்த எடம் புருசன் உருப்படல'' எனும் கூற்று இதற்கு சான்றாகின்றது (இராஜம்கிருஸ்ணன், 1998:7).

***மறுமணத்தடை***

மனைவியை இழந்த ஆண் மறுமணம் செய்வதை இயல்பான நிகழ்வாக ஏற்றுக்கொள்ளும் சமூகம், கணவனை இழந்த பெண் மறுமணம் செய்வதை ஏற்றுக்கொள்வதில்லை. அதனடிப்படையில் கைம்பெண்ணின் மறுமணம் கூட அவளது ஒழுக்கக் குறைவாகவே சமூகத்தால் கருதப்படும் நிலை உள்ளது.

'கோடுகளும் கோலங்களும்' நாவல் இத்தகைய நிலையை வெளிப்படுத்துகிறது.

''வேற கலியாணம் கூடக் கட்டலாம், ஆம்புளங்க கட்டுவாங்க. புள்ளிங்களை வளர்க்கன்னு, பொம்புள, இந்த பிஞ்சுகளுக்கு ஓராண்டு காவல் வேணும் அப்பன் ஸ்தானத்திலன்னு கல்யாணம் கட்டலாமா? கூடாது. அத்தோட விட்டதா? சொந்தக்காரங்க, கூடப்பெறந்தவங்க கூட நடத்த சரியில்லன்னு கரியத்தீத்தும்''எனக் கைம்பெண் மறுமணம் புரிந்து கொள்வதில் உள்ள பிரச்சினைகள் உணர்த்தப்படுகின்றன (இராஜம்கிருஸ்ணன், 1998:96).

***வேலைக்குச் செல்லும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்***

வேலை செய்யுமிடத்தில் பெண்கள் சந்திக்கும் மிக முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று பாலியல் சுரண்டலாகும். முதலாளிகள், மேலாண்மை, செய்வோர். அதிகாரிகள் ஆகியோர்

தங்கள் பாலியல் வேட்கைக்குப் பெண்களைப் பயன்படுத்திக் கொள்வதை இராஜம்கிருஷ்ணன் நாவல்களில் பல இடங்களில் காணமுடிகிறது. 'மானுடத்தின் மகரந்தங்கள்' நாவலில் கழனி வேலை செய்கிற அனைத்துப் பெண்களும் மேலாண்மை செய்பவனின் பாலியல் வேட்கைக்குப் பலியாக்கப்படுவதைக் காட்டுகிறது (இராஜம்கிருஸ்ணன், 1984:118).

அத்தோடு வேலைக்கு செல்லும் பெண்கள் எதிர்நோக்கும் சிக்கல்களில் இன்னொன்று கூலி வேறுபாடாகும். ஆணிற்கு அதிக கூலியும் பெண்ணிற்கு குறைந்த கூலியும் வழங்கும் நிலை இன்றும் இருந்து வருகின்றது. அதாவது வேலை செய்யும் நேரம் மற்றும் வேலை என்பன ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமாக இருந்தாலும் அவர்களுக்கு வழங்கப்படும் கூலியில் வேறுபாடு காணப்படுகின்றது. இந்நிலையை 'சேற்றில் மனிதர்கள்' எனும் நாவலூடாக அறிய முடிகின்றது. நாற்று நடவுப் பணி செய்ய ஆணுக்கு ஐந்து ரூபாயும் பெண்ணுக்கு மூன்று ரூபாயும் கொடுக்கப்படுகின்ற பெண்கூலி தொழிலாளர்களுக்கெதிரான அநீதியை நாவல் கூறுகின்றது (இராஜம்கிருஸ்ணன், 1990:204).

**பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள்**

சமூகப் பிரச்சினைகளைக் கோடிட்டுக்காட்டுவது, அலசி ஆராய்வது என்பதோடு நின்றுவிடாமல் பிரச்சினைகளுக்கான தீர்வை நோக்கி சமூகப்பார்வை மிக்க இலக்கியங்கள் நகர்கின்றன. இலக்கியத்தின் பெரும்பான்மைப் பகுதியைச் சமூகச்சிக்கல் பற்றிய சித்திரிப்பாய் வைத்துவிட்டு, இறுதியில் சிறுபக்கங்களை தீர்வுகள் எனப் பட்டியலிட்டால் அது படைப்பாக அமைய முடியாது. எனவே சிக்கலின் நடுவே தீர்வுகளும் ஊடாடிக்கிடக்கும் வண்ணம் இராஜம்கிருஸ்ணனின் எழுத்துக்கள் அமைக்கப்படுகின்றன.

***கல்வி கற்றல்***

கல்வி என்பது குடும்பத்தின் பொருளாதார மட்டத்தை உயர்த்தும் ஓர் நிறுவனமாகும். கல்வியின் ஊடே பொருளாதாரத்தை உயர்த்துவதன் மூலம் சமூகத்தில் மரியாதை கிடைக்கின்றது. கல்வியின் வழியாக செல்வம், பதவி ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும். பெண் அடிமைத்தனத்தில் இருந்து மீளவும் கல்வி அனுபவம் துணைநிற்கின்றது. ஆணாதிக்கத்தால் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளில் இருந்து மீள கல்வி கற்றல் உறுதுணையாக உள்ளது. உயர் பதவியில் வருவதற்குரிய கல்வியை பெண்கள் கற்பதன் அவசியம் பற்றி இராஜம்கிருஸ்ணன் எடுத்துரைக்கிறார்.

அந்தவகையில் 'மானுடத்தின் மகரந்தங்கள்' நாவலில் அஞ்சு ஐ.ஏ.எஸ் படித்து ஆந்திராவில் மாவட்ட ஆட்சியர் பதவியில் இருக்கிறாள். நாகு தன் மகள் பேபியிடம் அஞ்சுவை மாதிரியாகக் காட்டித் தற்காலத்தில் பெண் பிள்ளைகள் படித்து பெரிய பதவியில் வருவது சாதாரண நிகழ்வாகி விட்டது என்றும், படிப்புக்குத்தான் மதிப்பு என்றும் புரியவைக்கிறார் (இராஜம்கிருஸ்ணன், 1984:97).

கல்வி கற்ற பெண் கணவனால் மதிக்கப்படுவதையும், கல்வி கற்காத பெண் கணவனால் தாழ்வாக நடத்தப்படுவதையும் 'மாறிமாறிப் பின்னும்' நாவல் உணர்த்துகிறது. குறைந்த அளவு பெண்கள் பள்ளிக் கல்வியையாவது நிறைவு செய்ய வேண்டும் என்று

நாவலாசிரியர் தனது நாவலூடாக கூறுகிறார். ரேவதி அவளது கணவனால் மதிக்கப்படாமைக்கான காரணமாகக் கல்வி பயிலாமை சுட்டப்படுகிறது. பெண்ணின் வாழ்க்கையைக் கணவன் காப்பாற்றுவதாக நம்பப்படுவது மாறவேண்டும் என்று நாவல் அறிவுறுத்துவதோடு, கல்வியே பெண்ணைக் காப்பாற்றும் என்றும் கூறுகின்றது.

***தொழில் செய்தல்***

இவ்வுலக வாழ்வு பொருளாதாரத்தை மையமாகக் கொண்டே இயங்குகிறது. பொருளாதாரத்தை ஆண் தன் கைவசம் வைத்திருப்பதால் பெண் தனித்து இயங்கும் ஆற்றலற்றவளாக திகழ்கிறாள். பெண்ணுக்கு ஆற்றலையும் மதிப்பையும் தருவதில் உழைப்பு முக்கிய பங்காற்றுகின்றது. 'ஓசைகள் அடங்கிய பிறகு' நாவல் மீனா உழைப்பு மூலம் பெறும் பொருளாதார சுதந்திரத்தைச் சிறப்பித்துக்கூறுகிறாள்.

பொருளாதாரத் தேவைகள் இல்லாவிடினும் பெண்கள் கட்டாயமாக வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற கருத்தைச் 'சுழலில் மிதக்கும் தீபங்கள்' என்ற நாவல் கூறுகின்றது. வேலைக்குச் செல்வது பெண்ணின் உரிமை என இந்நாவல் வாதிடுகின்றது. தொடர்ந்து சுயதொழில் மூலம் பொருளாதார வளர்ச்சியைப் பெண்ணுக்கு ஏற்படுத்தினால் மரியாதைக்குரிய வாழ்க்கை அமைந்து விடும். வரதட்சணைப் பிரச்சினையும் மாறிவிடும் என 'மண்ணகத்துப் பூந்துளிகள்' நாவல் குறிப்பிடுகிறது. பெண்ணுக்குத் தொழில் மூலம் பொருளாதார உயர்வை ஏற்படுத்திப் பிரச்சினைகளிலிருந்து வெளியேவரும் தீர்வை அந்நாவல் கூறுகிகின்றது.

***குடும்பத்திற்குள் சீர்திருத்தம்***

இராஜம்கிருஷ்ணன் குடும்ப அமைப்பை உடைத்து நொறுக்கும் நோக்கம் கொண்ட பெண்ணிய எழுத்தாளரல்ல. அவர் குடும்ப அமைப்புக்குள் சீர்திருத்தம் கோரும் எழுத்தாளராவார். ஆணின் அதிகாரப் பிடியினின்று பெண் விடுவிக்கப்படவேண்டும் என்று அவர் கருதுவதோடு, ஆண் காலத்திற்கேற்பவும் குடும்பத்திற்கேற்பவும் தன்னை மாற்றிக்கொள்வதன் மூலம் குடும்ப அமைப்பு சமத்துவம் நிறைந்ததாக உருப்பெரும் என அவர் கருதுகிறார்.

***பெண்களுக்கான பணிகளில் ஆணும் சம பங்கெடுத்தல்***

பெண்கள் குடும்பத்தின் அனைத்துப் பணிகளையும் சுமக்கும் தியாகிகள் என எண்ணாது அனைத்துப் பணிகளையும் ஆணும், பெண்ணும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என இராஜம்கிருஸ்ணன் தனது தனது நாவல்களூடாக எடுத்தியம்புகிறார். வீட்டு வேலைகளுக்கென்று பெண்ணைக்கட்டம் கட்டி ஒதுக்கும் ஆண்களின் நடுவே அவ்வேலைகளில் தன்னை மனைவிக்குச் சமமாக ஈடுபடுத்திக் கொள்ளும் விதிவிலக்கான கணவனைத் 'தோட்டக்காரி' நாவல் காட்டுகிறது. சரயுவின் கணவரான சடாகோபன் வீட்டு வேலைகளில் மனைவிக்குத் துணையாக இருக்கிறார். (இராஜம்கிருஸ்ணன், தோட்டக்காரி: 23)

அதேபோன்று 'மானுடத்தின் மகரந்தங்கள்' நாவலில் கதைத் தலைவியான மதுராம்பாள் தேவதாசி வகுப்பைச் சார்ந்தவளாக இருந்த பின்னும் அவளது மூப்பத்தைந்தாம் வயதில் சாமிநாதன் என்ற ஆசிரியர் திருமணம் செய்து கொள்கிறார். அவர் மதுராம்பாள் கருவுறும்

வேளையில் உறுதுணையாக இருக்கிறார். ஊரார் இதனை இழிவாகப் பேசுவதைப்பற்றி அவர் பொருட்படுத்துவதில்லை என நாவல் கூறுகின்றது.

*முடிவெடுக்கும் உரிமை*

பெண்களைப் பொறுத்தமட்டில் அவரவர் வாழ்க்கைப்பற்றி முடிவெடுக்கும் சுதந்திரம் இருப்பதாகக் 'கூட்டுக்குஞ்சுகள்' நாவலில் வரும் விஜி குறிப்பிடுகிறாள். விஜி தனது முடிவுகளை எடுக்கும் உரிமையை ஒருபோதும் கணவரிடமோ, அவளது வீட்டாரிடமோ விட்டதில்லை. தன் முடிவைத் தானே எடுக்கும் உரிமையை யாருக்காகவும் விட்டுக்ததில்லை. குடும்ப அமைப்புக்குள் இருந்தபோதும், அதனை விட்டு வெளியேறும் போதும் அவள் துணிச்சல் மிக்க முடிவுகளை எடுப்பவளாக இருக்கிறாள்.

"இந்தக் காலத்துல அவங்களுக்கு அவங்க வாழ்க்கையைப் பத்தி முடிவெடுக்க தைரியமும் சுதந்திரமும் இருக்கு" என்று விஜி குறிப்பிடுகிறாள். பெண்கள் முடிவெடுக்கும் உரிமையைத் தக்கவைத்துக் கொள்வதன் மூலம் ஆண்களின் பிடியில் இருந்து ஓரளவு தப்பித்துச் செல்ல முடிகிறது என்ற தீர்வு இங்கு எடுத்துரைக்கப்படுகிறது (இராஜம்கிருஸ்ணன், 1985:187).

*சமய ஒற்றுமை*

பெண்கள் 'பெண்' எனும் ஒற்றை அடையாளத்துடன் ஒன்றுபடும் போது பேரெழுச்சியை உருவாக்கமுடியும் எனக் 'கோடுகளும் கோலங்களும்' நாவலின் தலைவி பேசுகிறாள். சாதி, கட்சி, மொழி, இனம், நிறம், மதம் போன்றவற்றுள் தம்மைச் சிறைப்படுத்திக் கொள்வது பெண்களின் எழுச்சிக்குத் தடையாகி விடுகிறது என்ற விரிந்த பொருளை நாவல் உணர்த்துகிறது. அத்தோடு சாதி, மத வேறுபாடுகளைக் களைதல் வேண்டும் என்றும் நாவல் கூறிநிற்கிறது.

"யாரு இந்து, யாரு கிறிஸ்தியன், யாரு அல்லான்று தெரியாது. எங்களுக்குச் சொல்லிக் குடுத்த மேடம் என்ன சாதின்னு தெரியாது. எல்லாரும் பொம்புளங்க. எல்லாரும் நோவும் நொம்பலமும் மாசந்தோறும் அனுபவிக்கிறவுங்க" (இராஜம்கிருஸ்ணன், 1998:28) என்று பெண் எனும் அடையாளம் தவிர்த்த பிற அடையாளங்கள் பெண் குலத்துக்குத் தேவையில்லை என்பதை அந்நாவல் உணர்த்துகிறது.

*சம உரிமை*

பெண்களுக்கென சம உரிமை சமூகத்தில் உண்டு என அவை பற்றிய போலியான எண்ணங்களே இன்றைய சமுதாயத்தில் நிலவுகின்றன. நாகரிக உடையணிவதும், உடலை அழகுபடுத்துவதும் பெண் விடுதலையின் முக்கியக்கூறுகள் எனத் தவறாகக் கருதும் போக்கு உள்ளது. மக்கள் மனதில் படிந்த தவறான பெண் விடுதலை பற்றிய சிந்தனைகளை இராஜம்கிருஷ்ணனின் எழுத்து மூலம் தகர்த்தெறிகிறார். ஆணைப்போல புகை பிடிப்பதாலோ, மது அருந்துவதாலோ பெண்ணுரிமையை மீட்டுக் கொணர முடியாது. ஆணின் உதவியுமில்லாமல் தனித்த அடையாளத்துடன் பெண் சாதித்துக் காட்டுவதே சம உரிமை என்று 'கோபுரபொம்மைகள்' நாவல் குறிப்பிடுகிறது.

*வரதட்சணை ஒழிப்பு*

நகரம், கிராமம் என எவ்வித வேறுபாடும் இன்றி அனைத்துப் பகுதிகளிலும் வரதட்சணை என்ற அபகரிப்பு நிகழ்ந்த வண்ணமே உள்ளது. எனினும் கிராமங்களில் இதன் தாக்கம் அதிகமாகவே உள்ளது. ஆகவே இவ்வரதட்சணைக்கு எதிராக ஊருக்கு நீதி வழங்கும் அமைப்புக்கள் தீர்ப்பு வழங்க வேண்டும் என 'மண்ணகத்தப் பூந்துளிகள்' எனும் நாவல் வேண்டிநிற்கின்றது.

"ஆமா, இருந்து என்ன செஞ்சிட்டீங்க? அவுங்கவுங்க சொத்து சேத்துக்கிட்டு "போடிசா" நடக்கிறாங்க. சொந்த அயித்த மவனக்கட்ட அம்பது பவுன் கேட்கிறா. அம்பதாயிரம்னு கன்டிசன் வக்கிறா. என்ன நாயம் பண்ணீங்க" என்ற அழகாயியின் கூற்று இதற்கு சான்றுபகிர்கிறது (இராஜம்கிருஸ்ணன், 1993:68).

*தமக்குள் மாற்றத்தைக் கொண்டு வருதல்*

சமூக மாற்றத்தை விரும்பும் பெண்கள் முதலில் தமக்குள் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என நாவலாசிரியர் தனது நாவல்களூடாக இயம்புகிறார். விரக்தி அடைவதும், அழுது புலம்புவதும் பிரச்சினைக்கான தீர்வாக அமையாது எனக் கூறும் நாவலாசிரியர் தமக்குள் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு நல்ல வழிகாட்டிகளைப் பின்பற்றுதல், திரைப்பட மோகத்தில் இருந்து விடுபடுதல், அழுவதை நிறுத்துதல், தாழ்வு மனப்பாண்மையை அகற்றுதல், தலைமைப்பண்புகளை வளர்த்தல், துணிச்சல் பெறுதல், அநியாயத்துக்கு அடிபணியாமை, சார்புத்தன்மையை அகற்றுதல், தனித்து நின்று சாதித்தல் போன்ற நடவடிக்கைகளை தனது நாவலில் எடுத்தியம்புகிறார்.

*விழிப்புணர்வூட்டல்*

பெண்களின் புழங்குவெளி சுருக்கப்பட்டு வீட்டிற்குள்ளேயே வைத்து வளர்ப்பதனால் உலக நடப்புக்களை அறியாது ஆணாதிக்கத்தின் கீழ் முடங்கியே கிடக்கின்றனர். இது பெரும்பான்மையாக கிராமப் புறங்களிலேயே இடம்பெறுகின்றது. அவ்வாறான பெண்களுக்க விழிப்புணர்வூட்டல் அவசியமாகும் என்பது குறித்தும் இராஜம்கிருஸ்ணனின் நாவல்கள் பேசுகிறது. அந்தவகையில் 'கூட்டுக்குஞ்சுகள்' நாவலில் விஜி தனிநபராகவே பெண்களிடம் விழிப்புணர்வை ஊட்டும் ஆர்வம் கொண்டவராகக் காட்டப்படுகிறார். "இந்தக் கட்டுக்களை அறுத்துக்கொண்டு, தன்னிலும் எளிய வசதியற்ற, மூடநம்பிக்கைகளுடைய பெண்களின் உள்ளங்களில் விழிப்புணர்வை ஊட்டச்செல்லவேண்டும்" என்ற விஜியின் குறிக்கோளானது இத்தீர்வுக்கு அரண் செய்வதாக அமைந்துள்ளது. மேலும் 'மானுடத்தின் மகரந்தங்கள்' நாவலில் பொதுவுடைமை இயக்கம் சார்ந்த இளைஞர்கள் தப்பட்டை போன்ற இசைக்கருவிகளுடன் கூத்து நிகழ்த்தி பெண்களுக்கு விழிப்புணர்வூட்டுகின்றனர (இராஜம்கிருஸ்ணன், 1985:133).

***பெண்களுக்கான அமைப்பு, இயக்கங்களை உருவாக்கல்***

பெண்கள் தனிநபர்களாக சிதறிக்கிடக்காமல், குழுக்களாக இணைந்து அமைப்புக்கள், இயக்கங்கள் என ஒன்றிணைவதால் பெண்களின் சிக்கல்களுக்கான தீர்வு கிடைக்கும் என நாவலாசிரியர் தனது நாவலூடாக புலப்படுத்துகிறார்.

அந்தவகையில் பெண்களின் சிக்கல்களுக்குத் தீர்வு காணவும், பாதிக்கப்படும் பெண்களுக்கு உதவவும் பெண்கள் அமைப்புகள் உள்ளன. அறிவுரை வழங்குதல், வழக்கு தொடுத்தல், விவாகரத்து வாங்கிக் கொடுத்தல், புனர்வாழ்வுக்கு உதவுதல் போன்ற பணிகளைச் செய்யும் பெண்கள் அமைப்பின் சிறப்பை 'மாறிமாறிப்பின்னும்' என்ற நாவல் உணர்த்துகிறது. கணவனால் துன்புறுத்தப்படும் ரேவதிக்கு உறுதுணையாக இருந்த சுதா 'சினேகிதி' எனும் பெண்கள் அமைப்பு குறித்து விவரிக்கிறாள். தொடர்ந்து 'மானுடத்தின் மகரந்தங்கள்' நாவலில் பெண் சக்தி திரட்டப்பட்டு வெகுமக்கள் இயக்கமாக மாற்றப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது. பெண்களின் பிரச்சினைக்கான தீர்வில் பெண்களின் பங்களிப்பு முக்கியமானது என இந்நாவல் வலியுறுத்துகிறது.

**முடிவுரை**

பெண்ணிய எழுத்தாகவும், சமுதாயவியல் எழுத்தாகவும் விளங்குவதனால் இலக்கிய உலகில் இராஜம்கிருஸ்ணனின் நாவல்களுக்கு ஓர் முக்கியத்துவம் உண்டு. பெண்களின் பிரச்சினைகளைச் சுட்டுதல், விபரித்தல், விமர்சித்தல், கண்டித்தல், சிக்கல்களுக்கு தீர்வுகளை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களைக் கொண்டு இவை படைக்கப்பட்டுள்ளன. எனவே இராஜம்கிருஸ்ணனின் நாவல்களை தரமான சமூக நாவல்களாகவும், பெண்ணிய நாவல்களாகவும் மதிப்பிட முடிகிறது. அன்றைய சமூக வழக்கப்படி பூப்படைய முன்னர் பதினைந்து வயதிலேயே திருமணம் செய்து ஆணாதிக்க சூழலில் வாழ்ந்த இராஜம்கிருஸ்ணனின் நாவல்கள் பெண்ணியம் சார்ந்த விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதாய் விளங்குகின்றன. இவற்றின் அடிப்படையில் 1980 – 2000 வரையான காலப்பகுதியில் எழுந்த இவரது எட்டு நாவல்களினூடான சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும், அவற்றிற்கான தீர்வுகளையும் இவ்வாய்வு எடுத்துக்காட்டுகிறது. அவரது காலப்பகுதியில் வாழ்ந்த பெண்களுக்கு மட்டுமன்றி தற்காலப் பெண்களுக்குமான பிரச்சினைகளாக இவை காணப்படுவதோடு அவற்றிலிருந்து மீள்வதற்குமான வழிமுறைகளையும் தனது நாவல்கள் ஊடாக சமூகத்திற்கு எடுத்துரைப்பதில் இராஜம்கிருஸ்ணன் தனித்துவமுடையவராகத் திகழ்கிறார்.

**உசாத்துணைகள்**


அரங்க மல்லிகா, (2002). *தமிழ் இலக்கியமும் பெண்ணியமும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்.

இராஜம்கிருஸ்ணன்.(1982).*ஓசைகள் அடங்கிய பிறகு.* பாரி புத்தகப் பண்ணை.

இராஜம்கிருஸ்ணன்.1984).*மானுடத்தின் மகரந்தங்கள்.* பாரி புத்தகப் பண்ணை.

இராஜம்கிருஸ்ணன்.(1985).*கூட்டுக்குஞ்சுகள்.* பாரி புத்தகப் பண்ணை.

இராஜம்கிருஸ்ணன்.(1990). *சேற்றில் மனிதர்கள்.* தாகம் பதிப்பகம்.

இராஜம்கிருஸ்ணன்.(1990). *மண்ணகத்துப்பூந்துளிகள்.* தாகம் பதிப்பகம்.

இராஜம்கிருஸ்ணன்.(1992). *தோட்டக்காரி.* தாகம் பதிப்பகம்.

இராஜம்கிருஸ்ணன். (1993). *கோபுர பொம்மைகள்.* தாகம் பதிப்பகம்.

இராஜம்கிருஸ்ணன்.(1994).*சுழலில் மிதக்கும் தீபங்கள்.* தாகம் பதிப்பகம்.

இராஜம்கிருஸ்ணன்.(1996).*மாறிமாறிப் பின்னும்.* தாகம் பதிப்பகம்.

இராஜம்கிருஸ்ணன்.(1998). *கோடுகளும் கோலங்களும்.* தாகம் பதிப்பகம்.

இராஜலட்சுமி.ஏ.(2021). எளிய மனிதர்களின் நாயகி. Retrieved May 20, 2022, from https://www.hindutamil.in,

சிதம்பரசுப்ரமணியன்.ச.(1994). *தமிழ் நாவல்களில் பெண்கதை மாந்தர்கள்.* பாரி நிலையம்.

சுசீலா.ஏ.எம்.(2015). ராஜம்கிருஸ்ணன் - தமிழ் இலக்கியப்பாதையில் பதிந்த அடிகள். Retrieved from April 28, 2022, from https://solvanam.com.

திருப்பூர் கிருஸ்ணன். (2016). கள ஆய்வுத்துறையில் ஒரு நட்சத்திரம். Retrieved May 20.2022, from http://s-pasupathy.blogspot.com.

பாரதி. கே. (2014). எழுத்தே வாழ்வு: ராஜம்கிருஸ்ணன். Retrieved April 10,2022, from https://www.hindutamil.in,

பிரேமா.இரா.(2008).*பெண் விடுதலையும் பெண்ணுரிமையும்.* அறிவுப் பதிப்பகம்.

முருகானந்தன். ச (2005). *பெண் விடுதலையும் சமத்துவமும்.* மணிமேகலைப்பிரசுரம்.

யோதிலட்சுமி. கோ. (2020). ராஜம் கிருஸ்ணன் ஒரு வாழும் சகாப்தம. Retrieved April 10,2022, from https://www.dinamani.com

ரசூல்.ஜி.ஹெச். (2014). ராஜம்கிருஸ்ணன் எழுதிய துன்பியல் நிறைந்த காவியத்தின் இறுதி வரிகள். Retrieved April 21,2022, from http://keetru.com

ஸ்ரீதேவி மோகன் (2017). நேர்மையான படைப்பாளி ராஜம்கிருஸ்ணன். Retrieved April 10,2022, from http://www.kungumam.co.in.

# புறப்பாடல்களில் சீறூர் மன்னர் சமுதாயம்: மானிடவியல் அணுகுமுறை

**ம. பிரேமா**
தமிழாய்வுத்துறை,
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி- 620002.
premasusairaj@gmail.com

**க. விஜயகுமாரி**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி-02.
vijisurya277@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

சங்கப் பாடல்கள் அகம், புறம் எனும் இருவகையில் அடங்குகின்றன. இவை ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாய் அக்கால மக்களின் பண்பாடு, அரசியல், சமூகம், பொருளாதாரம் பற்றிப் பல்வேறு செய்திகள் தருவதாய் அமைந்துள்ளன. குறிப்பாக, புறப்பாடல்கள் தொன்மை இனக்குழு மக்களின் வாழ்வியல் முறைகளை எடுத்தியம்பும் அடையாளச் சின்னமாய் விளங்குகிறன. நால்வகை நிலங்களிலும் சங்காலத் தலைவர்களாகத் திகழ்ந்தவர்களை சீறூர் மன்னர், முதுகுடி மன்னர், குறுநில மன்னர், வேந்தர் என நான்கு வகையில் அறியமுடிகின்றது. இவ்வகையில் பண்பாட்டு மானிடவியல் அணுகுமுறையின் மூலம் சீறூர் மன்னர்களின் சமுதாய அமைப்பினை ஆய்வு செய்து இனக்குழுக்களின் பொதுவுடைமைச் சிந்தனைகளின் தொகுப்பு பெறப்படுகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *பண்பாட்டு மானிடவியல், சீறூர் மன்னர், வல்லாண்முல்லை, வன்புலம், பாதீடு, புராதன பொதுவுடைமை*

## அறிமுகம்

சங்ககாலப் புறப்பாடல்களில் மானிடவியல் வெளிப்பாடுகள் அதிகம் உண்டு. மானிடவியல் கூறுகளைப் புறப்பாடுகளில் அதிகம் காணலாம். இலக்கியங்கள் வர்ணனைக்கு அப்பால், மனித வாழ்வியலின் முழுவடிவத்தையும் ஆவணப்படுத்தவல்ல சாதனம். இவ்வாயின் நோக்கம் சங்கப் பனுவலில் ஒன்றான புறநானூறு காட்டும் சீறூர் மன்னர்களின் உயர்ந்த சிந்தனைகளை இனங்கண்டு சமகாலத்திற்கு அறிமுகம் செய்வது. ஆய்வின் கருதுகோள் வன்புலம் சார்ந்த சீறூர் மன்னர்களின் வாழ்வியல் முறைகளில் புராதனப் பொதுவுடைமைப் பண்புகள் நிறைந்துள்ளன. ஆய்வு வினா புராதன சீறூர் மன்னர்களின் வாழ்வியலில் ஜனநாயகப் பண்புகள் நிறைந்துள்ளனவா? என்பதாகும். ஆய்வு எல்லை எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூற்றின் புறத்திணைகளில் வல்லாண்முல்லை பாடல்கள் பிரதானமாகவும், அவற்றுடன் சில மூதின்முல்லை பாடல்களும் ஆய்வெல்லையாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

## இலக்கி மீளாய்வு

### *இலக்கிய மானிடவியல் - எண்ணக்கரு*

இலக்கியம் என்பது மனிதன் தன் அன்றாட வாழ்வின் நெருக்கடிகளிலிருந்து விடுபட்டு ஒரு உகந்த நிலையைத் தேடிச்செல்ல விரும்பும்போது பயன்படக்கூடிய ஒரு ஊடகமாக விளங்குகிறது. இலக்கியம் வாழ்வின் அம்சங்களை வெளிப்படுத்துகிறது. இவ்வகையில் தமிழ் இலக்கியத்தைப் பண்பாட்டு மானிடவில் நோக்கில் அணுகுகையில் புதிய பரிமாணத்தை அடையும் வழியாக 'இலக்கிய மானிடவியல்' திகழ்கிறது. இக்கருத்திற்கு பக்தவத்சல பாரதி "இலக்கிய மானிடவியல் ஒரு புதிய அறிவுப்புலம். இலக்கியத்தை மானிடவியல் நோக்கிலும்,

மானிடவியலை இலக்கியவியல் நோக்கிலும் அறியக்கூடிய வாய்ப்பினை இப்புலம் கொண்டிருக்கிறது. இலக்கியம், மானிடவியல் இரண்டு துறைகளையும் இணைத்தறியும் 'துறையிடை அணுகுமுறை' (Inter-Disciplinary Approach) ஆகும். இது புதிய உள்ளொளிகளைக் காட்ட வல்லது. இதன்மூலம் தமிழ் இலக்கியத்தில் புதைந்திருக்கும் மானிடவியல் கூறுகளை இனங்கண்டு அவற்றின் வாயிலாகத் தமிழ்ச் சமூகத்தையும், பண்பாட்டையும் நுட்பமாக அறிய இயலும்" (பாரதி, 2014) என்கிறார். அத்துடன், "பண்பாட்டின் பயன்முறை கலையாகவே (Cultural Pragmatics) இலக்கியம் அமைகிறது. இலக்கியத்தின் மொழியையும், அது தரும் பொருளையும் சமூகம் சார்ந்து பொருள் கோடல் செய்யும் போது மொழியானது சமூகக் குறியீட்டியிலாக (Social Semiotics) மாறுகிறது. ஆதலின் இலக்கிய மானிடவியலானது மொழியையும் பனுவலையும் சமூகம், பண்பாடு ஆகிய இரண்டோடும் இணைத்தறிய முற்படுகிறது" (பாரதி, 2014) என்றும் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கவை.

பண்பாட்டு மானிடவியலானது மனித சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளை படிமலர்ச்சி நிலையில் ஆராய்கிறது. படிமலர்ச்சி என்பது நாகரிக வளர்ச்சி பெற்ற மக்களைவிட, நாகரிக வளர்ச்சி பெற்றுக்கொண்டிருந்த, தொழில் மரபுகளுடன் வாழ்ந்த மக்களின் பண்பாட்டை குறிப்பதாகும் என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வில் பண்புசார் ஆய்வு அணுகுமுறை (Qualitative research) மைப்படுத்தப்பட்டு, சங்க இலக்கியப் புறப்பாடல்களில் வெளிப்படும் சீறூர் மன்னர்கள் சார்ந்த சமுதாய வாழ்வியல் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு விளக்கமுறை ஆய்வு முறையில் (An Exploratory Research Approach) பயன்படுத்தப்படுகின்றது.

இவ்வாய்வுக்கான வடிவமைப்பு (Research Design) சங்ககால இலக்கியங்கள், ஆய்வுத் தொகுப்புக்கள், எழுத்துக்கள் ஆகியன மாதிரிகளாகக் (Samples) கையாளப்பட்டு நேர்காணல், இலக்கிய வாசிப்பு ஆகிய கருவிகள் ஊடாகத் தகவல்கள் சேகரிக்கப்பட்டு (Data Collection) விளக்கமுறை முறையியலினூடாக வியாக்கியானித்து, பகுப்பாய்வு செய்து வெளிப்படுத்துவதாக அமைகின்றன.

**முடிவும் கலந்துரையாடலும்**

**இனக்குழு வாழ்வியலில் சீறூர் மன்னர்கள்**

பண்டைய இனக்குழு சமூகத்தில் 'சமூகப் பொதுவுடைமை' என்பது ஆதாரப் பண்பாக விளங்கியது. கூட்டுண்ணும் முறை, தம்மிடம் இருப்பதைப் பகிர்ந்து அளித்தல் போன்ற பண்புகள் இனக்குழு பண்பாட்டின் அடித்தளமாக அமையப்பெற்றது. மேற்கண்ட பண்புகளைப் பெற்ற சீறூர் மன்னர்களை புறநானூற்றில் இடம்பெற்றுள்ள வல்லாண்முல்லைப் பாடல்கள் விதந்து போற்றுகின்றன. பெ. மாதையனின் 'சங்ககால இனக்குழு சமுதாயமும்' அரசு உருவாக்கமும் என்ற நூலில் எடுத்தாட்டுள்ள தேவிபிரசாத் சட்டோபாத்யாயாவின் கருத்து

குறிப்பிடத்தக்கது. "இனக்குழு வாழ்வுமுறை அழிந்து நிலவுடைமையாக மாறுகின்ற சூழலில் பழைய சமுதாயத்தின் எச்சங்களும் நிலவுவது இயல்பே. இனக்குழு அழிவு முழுமையாக இராமல் அரைகுறையாக இருந்தால் இனக்குழு மக்களின் சிந்தனைகள், நம்பிக்கைகள், பண்பாட்டு எச்சங்கள் அதற்கடுத்து உருவாகும் சமுதாயத்தில் எஞ்சி நிற்கும்" (மாதையன், 2012). இந்தவகையில் இனக்குழு சமுதாயத்தின் எச்சங்களைத் தாங்கிய சங்கச் சமுதாயமாகச் சீறூர் மன்னரின் சமுதாயங்கள் உள்ளன என்று குறிப்பிட்டிருப்பது கவனிக்கதக்கதாகும்.

'அரசு' என்ற அமைப்பு தோன்றுவதற்கு முன்னர் தொல் குடி திணைமக்களின் சமுதாயத் தலைவர்களை சீறூர் மன்னராக புறநானூற்றுப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. இவர்கள் வன்புலம் சார்ந்தவர்களாகவும், இயற்பெயரால் எங்கும் குறிப்பிடப்படாத ஆனால் அதே நேரத்தில் புலவர்களால் வரவேற்கத்தக்க பண்பு கொண்டவர்களாக வாழ்ந்துள்ளனர் என்பதை குறிப்பிடும் ஒரு புறநானூறு பாடல் இது.

'நடுகற் பிறங்கிய வுவலிடு பறந்தலைப்
புன்காழ் நெல்லி வன்புலச் சீறூர்க்
குடியு மன்னுந் தானே கொடியெடுத்து
நிறையழிந் தெழுதரு தானைக்குச்
சிறையுந் தானேதன் னிறைவிழு முறினே' (3) புறம் 314:3-7 ஐயூர் முடவனார் என்னும் புலவரால் பாடப் பெற்ற பாடலின் பொருளானது, நடுகற்களால் உயர்ந்த தழைகள் உதிர்ந்த பறந்தலைகளையும், நெல்லி மரங்கள் நிற்கும் புன்செய் நிலங்களையுடைய சீறூரின் கண் வாழும் குடிகளுள் ஒரு குடியாகி இருப்பவனும் அவனே. போரில் தன் வேந்தன் துன்பமுறுங்காலமாயின் அக்காலத்தே கொடியை உயர்த்தி நிறுத்தப்படும் நிறைக்கடங்காது முந்துற்றெழுந்து வரும் பகைவர் படைக்கு மேற்செல்லாதபடிக்கு குறுக்கிட்டுத் தடுத்து நின்று காக்கும் அணையாய் நிற்பதும் அவனே என்று சீறூர் தலைவனின் பண்பானது இயற்பெயர் சுட்டப்படாவில்லாலும், தன் குடியைக்காக்கும் வேல்வன்மை கொண்டவனாக புலவரால் அறியச் செய்யப்படுகிறான்.

**நற்பண்பை உடைய தலைவன்**

இடையன் கொளுத்திய சிறுதீயின் வெளிச்சத்தில் பாணர் கூட்டத்தோடு குடியோடு குடியாக வாழும் நற்பண்பைப் பெற்றவனாக சீறூர் மன்னன் அறியப்படுகின்றான்.

'பருத்தி வேலிக் கரும்பைப் பார்க்கும்
புன்புலந்த தழீஇய வங்குடிச் சீறூர்க்
குமிழண் வெள்ளை மறுவாய் பெயர்ந்த
வெண்காழ் தாய வண்காற் பந்தர்
இடையன் பொத்திய சிறுதீ விளக்கத்துப்
பாணரொ டிருந்த நாணுடை நெடுந்தகை (4) புறம் 324:7-12

பருத்தியாலாகிய வேலியின் அடியில் உறையும் காட்டெலியை வீழ்த்துவதற்கு குறிபார்த்திருக்கும் புன்செய் வயல்கள் சூழந்துள்ள அழகிய குடிகள் வாழும் சீறூரின் கண்

குமிழம் பழத்தை உண்ணும் வெள்ளாடுகள் எருவாய் வழியாக வெளிப்படுத்த வெள்ளிய கொட்டைபோலப் பிழுக்கைகள் பரந்து கிடக்கின்ற பந்தரின் கீழ் இடையன் கொழுத்திய சிறிய விளக்கொளியில் பாணர் சூழ்ந்திருக்க சுவரிடையே வீற்றிருந்த நாணமாகிய நற்பண்பையுடைய நெடுந்தகையாக தலைவர் குறிப்பிடப்பட்டுள்ளான் என்பது சிறப்பாகும். இந்த காட்சிப்படுத்துதலை காணும் போது தலைவன் குடிமக்களோடு குடிமக்களாக இணைந்து அவர்களின் நலம் போற்றுதல் என்னும் பண்பு பெற்றவனாக இனக்குழு சமுதாயத்தின் பண்பாட்டை கடைபிடித்துள்ளான் என்னும் கருத்து பண்பாட்டு மானியடவியலின் படி பெறப்படுகின்றது.

**உடைமை அற்ற தலைவன்**

மூதின் முல்லைப் பாடலொன்று இச்சீறூர் தலைவன் தனக்கென்று உடைமை எதுவும் அற்றவனாய் காணப்படுவதோடு வீரம் செறிந்தவனாகவும் குறிப்பிடுகிறது.

'எருதுகா ஓறாஅ திளைஞர் கொன்ற
சில்விளை வரகின் புல்லென் குப்பை
தொடுத்த கடவர்க்குக் கொடுத்த மிச்சில்
பசித்த பாண ருண்டுகடை தப்பலின்
ஒக்க லொற்கஞ் சொலியத் தன்னூர்ச்
சிறுபுல் லாளர் முகத்தவை கூறி
வரகுகட னிரக்கு நெடுந்தகை
அரசுவரிற் றாங்கும் வல்லா ளன்னே' (5): 327

சீறூர் தலைவன் ஒருவன் சிலவாய் விளைந்த வரகையறுத்துக் காலால் மிதித்துக் கொண்டதைக் கடன்காரர்க்குக் கொடுத்து எஞ்சியதைப் பசித்து வந்த பாணர்க்கு அளித்து, அவரும் உண்டு சென்றபின்பு வந்த சுற்றத்தாருடைய வறுமையைத் தீர்த்தல் வேண்டிப் பிறரிடம் வரகு கடன் பெறுவானாயினன். இவ்வாறு வறுமை களையும் செயலில் வெற்றி மேம்படும் இத்தலைமகன் பேரரசுப் படையை எதிர்நின்று வெல்லும் வீரமுடையவன் என்று இப்பாடலின் பொருளானது சீறூர் மன்னனின் மாண்பினை குறிப்பிடுகின்றது.

**விருந்து பேணும் இயல்பினன்**

தன்னைத் தேடி வரும் பாணர்க்கு தன் வாளையும், சீறியாழையும் பணையம் வைத்து கொடை தந்து விருந்து பேணும் இயல்பினனாக சீறூர் தலைவன் பாணர் தலைவனால் போற்றப்பட்டிருக்கின்றான் என்ற செய்தியை கீழ்க்கண்ட பாடலடிகள் தருகின்றன.

'அவனெம் மிறைவன் யாமவன் பாணர்
நெருநை வந்த விருத்திற்கு மற்றந்தன்
இரும்புடைப் பழவாள் வைத்தன னின்றிக்
கருங்கோட்டுச் சிறியாழ் பணைய மிதுகொண்
டீவதி லாள னென்னாது நீயும்' (6) புறம் 316 : 3-7

என பணயம் வைத்து பாணரைப் போற்றியவன் என்ற செய்தி பெறப்படுகிறது. இவ்வாறு சீறூர் தலைவன் வீரம் மிக்கவனாகவும், வறுமையுற்றநிலையிலும் தம் குடியின் பெருமையான கொடைப்பண்பை போற்றுபவனாகவும், வேட்டையானது நிரந்தர

உணவாதாரத்தை கொடுக்காத நிலையில் சுற்றத்தாரின் பசியைப் போக்க கடன் பெற்றவனாகவும், பற்றாக்குறை நிலையில் கூட 'சமூகப் பொதுவுடைமை' என்ற பண்பாட்டைப் பின்பற்றியவனாக எண்ண இடமுள்ளது.

**வரிசையறிந்து வழங்கும் வண்மையுடையன்**

தன்னிடம் உள்ள பொருள் சிறிதாயினும் வருவோர் வரிசையறிந்து வழங்கும் வண்மையுடையவனாக உள்ள சீறூர்த் தலைவனைப் பற்றி உறையூர் முதுகூத்தனார் எனும் புலவர் பின்வரும் வரிகளில் சீறூர் மன்னனின் ஈகை நலத்தை எடுத்தோதுகின்றார்.

'கல்லா விடையன் போலக் குறிப்பின்
இல்லது படைக்கவும் வல்ல னுள்ளது
தவறிச் சிறிதாயினும் மிகப்பல ரென்னான்
நீணெடும் பந்த ரூண்முறை யூட்டும்
இற்பொலி மகடூஉப் போலச் சிற்சில
வரிசையா னளிக்கவும் வல்லன்' (7) புறம் 331:5-10

மாலையில் தீக்கடைக் கோலைக் கடைந்து தீயுண்டாக்கும் இடையன் போல மரியையில் இல்லாததை குறிப்பாயறிந்து விரைந்து படைத்தாற் கொள்ளும் தன்மையின் பரிசிலர் மிகப் பலாக உள்ளாரே என்று மயங்காமல் பந்தரின் கீழ் இருத்தி உணவை முறைமுறையாகத் தரும் இல்வாழ்க்கையில் சிறந்த மகளைப் போல அவரவர் வரிசை அறிந்து கொடுக்கவல்லவன் இச்சீறூர் தலைவன் எனப் பாடல் வரிகள் பொருள் தருவதன் வாயிலாக தொல்குடி மக்களின் இனக்குழு வாழ்வியலில் இருப்பதை பகிர்ந்தளித்தல் என்னும் பண்போடு கூடுதலாக வந்தவர்களின் வரிசையறிந்து கொடுக்கின்ற பாங்கும், அதனைப் பெறுகின்றவருக்கு வருத்தம் ஏற்படாத வகையில் தலைவனின் 'பாதீடு' அமைந்துள்ளதை அறியமுடிகின்றது.

**சீறூர்த் தலைவியின் இயல்பு**

'நால்வகையான சமுதாயத் தலைவர்களில் சீறூர் மன்னரின் தலைவியர் மட்டுமே சமூகத்தோட தொடர்புடையவராய் இருந்துள்ளனர். மூதின் முல்லைப் பாடல்கள் இவர்களின் விருந்தோம்பல் பண்பையும், வீரத்தையும் சீறூர் மன்னர் சமுதாய மாற்றத்தையும் காட்டுவவையாய் உள்ளன' (மாதையன், 2012).

தன்னிடம் இருப்பவற்றை மற்றவர்களுக்கு கொடையாயக் கொடுக்கம் பண்புடையவனாக சீறூர் மன்னன் புலவர்களால் போற்றப்பட்டது போல சீறூர் தலைவியும் பகிர்ந்தளிக்கும் பண்பு மேலிட திகழ்ந்ததை புறநானூறு குறிப்பிடுகிறது. அவ்வகையில் சீறூர் தலைவியின் பண்பினை தங்காற் பொற்கொல்லனார் என்னும் புலவர் பின்வரும் பாடல் வரிகளில் பகேற்கிறார்.

'அருமிளை யருக்கை யதுவே மனைவியும்
வேட்டை சிறாஅர் சேட்புலம் படராது
படுமடைக் கொண்ட குறுந்தா ளுடும்பின்

விழக்கு நிணம் பெய்த தயிர்க் கண் விதவை
யாணர் நல்லவை பாணரொ டொராங்கு
வருவிருந்த தயரும் விருப்பினள்" (9) புறம் 326:7-12

அதாவது கடத்தற்கரிய காவற்காடு சூழ்ந்த இடத்தின் கண்ணது மனைக்கிழத்தியானவள் வேட்டுவருடைய சிறுவர்கள் நெடுந்தொலைவு செல்லாமல் மடுக்கரையில் பிடித்தன்கொண்டு வந்த குறுகிய காலையுடைய உடும்பினது தசையைப் பெய்து சமைக்கப்பட்ட உணவையும் (கூழ்) புதியவாக இருந்த வேறு நல்ல உணவுப் பொருளையும் பாணருக்குப் அவரோடு வந்த ஏனை விருந்தினருக்கும் ஒரு சேரக் கொடுத்து உண்பிக்கும் விருப்பமுடையவள் என்று பொருள் தரும் வகையில் அமைகின்றது.

**சீறூரின் தன்மை (வன்புலம்)**

செழிப்பான விளைச்சல் தரும் விளைநிலங்கள் இன்றி வானம் பார்த்த பூமியாய் அமைந்த இடங்களே சீறூர் மக்களின் வாழ்விடமாக இருந்துள்ளது. விளைச்சல் குறைந்தும் உண்பதற்கு எளிதில் கிடைக்காத நீர் நிலைகளைக் கொண்டதால் பொதுவாக இந்நிலங்கள் 'வன்புலம்' என்றே புலவர் பெருமக்களால் குறிப்பிடப்பட்டுள்ளது.

'களிறுபொரக் கலங்கு கழன்முள் வேலி
அரிதுண் கூவ லங்குடிச் சீறூர்" (10) புறம் 306:1-2

என்று களிறு படிந்துழக்கக் கலங்கிச் சேராகி உண்ணும் நீர் அரிதாகிய நீர்நிலை கொண்டது என்று மேற்கண்ட வரிகள் குறிப்பிடுகின்றன.

'புன்காழ் நெல்லி வன்புலச் சீறூர்' (11) புறம் 314:4

என நெல்லி மரங்களை நிற்கும் புன்செய் நிலங்களையுடைய சீறூர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இந்நிலங்களில் நெல் போன்ற வருவாய் ஈட்டக் காரணமாக அமைகின்ற பயிர்கள் விளைவதில்லை என்ற செய்தியை, மூதின்முல்லை பாடலொன்று படம் பிடிக்கின்றது.

......புல்லெ னடைமுதற் புறவு சேர்ந் திருந்த
புன்புலச் சீறூர் நெல்விளை யாதே' 12 புறம் 328:1-2

**உணவு**

சீறூர் மக்களுக்கு உணவாதாரமாக புன்செய் விளை பொருட்களும், வேட்டை மூலம் பெறப்பட்டவையும் உணவாக இருந்துள்ளன. வரகும் தினையும் விளைந்தன. வேட்டையில் கிடைத்த கானக்கோழி, உடும்பு, முள்ளம்பன்றி, சுட்ட முயல்கறி போன்றவை உணவாகக் கொண்டனர் என்பதை புறநானூற்றுப் பாடல்கள் சான்று பகர்கின்றன.

'உழுதூர் காளை யூழ்கோ டன்ன
கவைமுட் கள்ளிப் பொரியரைப் பொருந்திப்
புதுவர கரிகாற் கருப்பை பார்க்கும்' புறம் 322:1-3 மேற்கண்ட வரிகள் வரகு விளைந்த வயல் எனவும்,

'வரகுந் தினையு முள்ளவை யெல்லாம்' - புறம் 328:3 என்று தினை விளைந்ததையும்,

'மானதட் பெய்த வுணங்குதினை வல்சி
கானக் கோழியொ டிதல்கவர்ந் துண்டென
ஆர நெருப்பினார னாறத்
தடிவார்ந் திட்ட முழுவள்ளூரம்
இருப்பேரொக்க லொ டொருங்கினி தருந்தி' புறம் 320:10-15

அத்தினையை காட்டுக் கோழியும் இதற் பறவையும் கவர்ந்துண்டு அகப்பட்டுக் கொள்ள அவற்றை அறுத்து அந்த இறைச்சியையும் ஆரல் மீனையும் சுற்றத்தாரோடு உண்டனர் எனவும் செய்தி மேற்கண்ட பாக்களால் பெறப்படுகின்றது. மேற்கண்ட உதாரணங்களின் வாயிலாக பண்டைய இனக்குழுக்களில் காணப்பட்ட புராதனப் பொதுவுடைமை என்பதில் உணவு என்பது முக்கிய இடம் வகிக்கின்றது என கருத இடம் உள்ளது. உணவு என்பதில் அமைப்பியம் சார்ந்த விளக்கங்கள் பெறப்படலாம். பண்பாட்டின் படிமலர்ச்சியில் இனக்குழுவினர் அன்றாடப் பிழைப்புக்கு மட்டுமே உணவாதாரத்தை ஈட்டினார்கள். இதில் சேமிப்பு என்ற உள்நோக்கம் இடம்பெறுவதில்லை என்பதை சீறூர் மக்களின் உணவாதாரங்கள் காட்டுகின்றன. வேட்டையில் கிடைத்தவற்றை பாதீடு செய்வதென்பது ஒரு தலையாய, பொருளியல் பண்பாக காணமுடிகின்றது. இக்கருத்திற்கு வலுவூட்டமாக பக்தவத்சல பாரதியின் 'சங்ககால தமிழர் உணவு' நூலில் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை எடுத்துக்கொள்ளலாம் "இனக்குழு வாழ்வில் 'உறவு சார்ந்த உற்பத்திமுறை' காணப்பட்டது. உறவுமுறை சார்ந்த உழைப்பில் 'பாதீடு' அடிப்படையானது. ஈட்டிய உணவாதாரத்தைப் பொதுவில் அனைவரும் பங்கிட்டுக் கொண்டதே பாதீடு. இது ஆதி பொதுவுடைமை சார்ந்தது. சமூகச் சமத்துவம் இதன் ஆதார சுருதியாகும். இவற்றால் தான் இனக்குழு தன்மை முழுமை பெற்றது" (பாரதி, 2021).

சீறூர் சமுதாய மக்களின் வாழ்வு முறையில் மிகையான பொருட்களோ, உபரியோ, சேமிப்போ வைத்துக்கொள்ளாத நிலையை அறியமுடிகின்றது. வேட்டையாடி உணவு தேடுதல், வன்புலத்தில் விளைகின்ற உணவுப் பொருட்கள் சார்ந்த பொருளாதார முறையை பிழைப்பாதார பொருளாதார முறையை 'பிழைப்பாதாரப் பொருளாதாரம்' என மானிடவியலாளர்கள் வகைப்படுத்துவார்கள்.

**வழிபாடு**

'மனித உயிர் உடலை விட்டுப் பிரிந்துவிட்டாலும், அது தொடர்ந்து ஆவி வடிவில் தன் வாழ்க்கையைத் தொடர்கின்றது என்னும் நம்பிக்கை உலகிலுள்ள பண்பாடுகள் பலவற்றிலும் இடம் பெற்றுள்ளது. இந்த நம்பிக்கை பழந்தமிழ் சமுதாயத்திலும் இருந்தது' (பாண்டுரங்கன், 2019).

வீரயுகம் என்று அறிஞர்களால் குறிப்பிடப்பட்ட சங்ககாலத்தில் வாழ்ந்த இனக்குழுச் சமுதாயத்தின் வழிபாட்டு முறையாக 'வீர வணக்கம்' என்பதே இருந்துள்ளதை எண்ணிப் பார்க்கின்ற வகையில் புறநானூற்றுப் பாடல்கள் கரந்தைப் போரில் இறந்துபட்ட சீறூர்

வீரர்களுக்கு நடப்பட்ட நடுகற்களே வீர வழிபாட்டிற்கான அடிப்படையாக அமைந்துள்ளதாக குறிப்படுகின்றன.

சீறூர் தலைவி ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து தவறாது நடுகல்லைத் தொழுது வரங்களை கேட்பதாக அள்ளுக் நன்முல்லையார் மறக்குடி மகளின் வழிபாட்டு முறைக்கு சான்று தருகின்றார்.

‘ஒலிமென் கூந்த லொண்ணுத லரிவை
நடுகற் கைதொழுது பரவு மொடியாது
விருந்தெதிர் பெறுகதில் யானே யென்னையும்
ஓ..... வேந்தனொடு
நாடுதரு விழுப்பகை யெய்துக வெனவே (17) புறம் 306: 3-7

சீறூர் தலைவியானவள் தன் குடியின் முன்னோர் புகழ் நிலவப் பொருது நடுகல்லாய் ஆனது அறிந்து அவர் நடுகல்லை நாள்தோறும் தவறாது வழிபாட்டு, அவ்வழிபாட்டில் தான் நாளும் விருந்தினர் வரப்பெறவேண்டும் என்றும் தன் கணவன் போரில் வெற்றிபெறவும், அதற்குப் போர் செய்யும் பகை வேந்தரும் வேண்டுமென்றும் வரம் கேட்பதாக மேற்கண்ட வரிகளின் பொருள் தருவதாக எண்ண இடம் அளிக்கின்றது.

**வேந்துவிடு தொழில்**

சீறூர் மக்கள் வரகு, தினை விளைபொருட்களையும், புன்செய் விளைபொருளை அவற்றை மற்றவர்க்கு உணவாய் கொடுப்பவராகவும் தன்னிடம் உள்ளவற்றை பகிர்ந்தளிக்கும் குணத்துடனும் இருந்தனர் என்பதாலே அவர்களுக்கு உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கக் கூடும் என்ற காரணத்தினலாலேயே சீறூர் தலைவன் வேந்து விடு தொழிலை மேற்கொண்டிருக்க வேண்டும் என்று எண்ண இடமுள்ளது.

சீறூர் தலைவன் வேந்து விடு தொழில் மேற்கொண்டதை பல பாடல்கள் குறிப்பிட்டுள்ளன.

‘சீறூர் மன்னன் நெருநை ஞாங்கர்
வேந்துவிடு தொழிலொடு சென்றனன் வந்துநின்
பாடினி மாலை யணிய
வாடாத் தாமரை சூட்டுவன னினக்கே’ (18) புறம் 319 : 12:15 என்றும்

‘வேந்துதரு விழுக்கூழ் பரிசிலர்க் கென்றும்
அருகா தீயும் வண்மை
உரைசா னெடுந்தகை யோம்பு மூரே’ (19) புறம் 320: 16-18 என்றும்

‘அருஞ்சமந் ததையத் தாக்கிப் பெருஞ்சமத்
தண்ணல் யானை யணிந்த
பொன்செ யோயை பெரும்பரி சிலனே’ (20) புறம் 326:13-15 என்னும் சீறூர் தலைவன் வேந்தருக்காக போர்த் தொழிலில் ஈடுபட்டதை மேற்கண்ட பாக்கள் வழி அறிப்படும் செய்தியாகின்றது.

'வேந்துவிடு தொழிலுக்கு ஆட்பட்டமை இனக்குழுச் சமூக அமைப்பில் ஒரு புதிய தொழில்முறையை ஏற்படுத்தியது எனலாம். இதனால் இவர்கள் மரபான தொழில் மூலம் உணவாதாரம் பெறுவதிலிருந்து விலகினர். மன்னர்கள் கொடுத்த பொருட்களோடு நெல்லையும் பெற்றனர் (பாரதி, 2018).

இவ்வாறு சீறூர் தலைவன் மேற்கொண்ட வேந்து விடு தொழிலானது இச்சமுதாயத்தின் இயல்பு மாற்றத்திற்கு காரணமாக அமைகிறது என்று யூகிக்க இடமளிக்கிற வகையில் அமைந்துள்ளது.

'பகிர்ந்துண்ணும் வழக்கம் கொண்ட சீறூர் மக்கள் வெட்சி வீரர்களாகவோ, மறக்குடியினராகவோ, வேட்டைத் தலைவர்களாகவோ 'வேந்துவிடு தொழில்' மேற்சென்று போரிட்டு, வேந்தனிடம் பொருள் அல்லது 'புரவுகோள்' பெற்றவர்களாகவோ மன்னராட்சி சமூக அமைப்பிற்கு மாறிக் கொண்டிருந்தார்கள். வன்புலம், புன்புலம், கரம்பை, அருமிளை மற்றும் மலைப்பகுதிகளிலிருந்த சீறூர் மன்னர்களாக இவர்களிலிருந்து 'தலைவர்கள்' உருவானார்கள். இவர்களிடம் நெல்விளையும் மென்புலமும், செல்வம் தரும் வேளாண்மையும் இல்லாததால் நேந்து விடு தொழிலுக்காகப் பெற்ற பொருளும் பாரம்பரியான வேட்டையால் கிடைத்த பொருளும் புண்பலத்தில் விளைந்த பொருளம் இவர்களது 'அரசாட்சிக்கு' உரிய பொருளாதார அடிப்படையை அமைத்தன' (கௌதமன், 2018).

**முடிவுரை**

தொல்பனுவலாக அறிப்படுகின்ற சங்க இலக்கியங்களுள் ஒன்றான புறநானூறு வரலாற்றுக் கருவூலம் என்று போற்றப்படுகின்ற சிறப்புடையது. அந்நூலின் வழி தொன்மை பழங்குடி சமுதாயங்களில் ஒன்றான இனக்குழு சமூகமான சீறூர் மன்னர் எளிமையான வாழ்க்கை முறையை கொண்டவர்களாகவும் வன்புலம் என்றழழைக்கப்பட் புன்செய் வேளாண்மையில் வரகு, தினை விளைவித்ததையும் அவை வாழ்க்கைக்குப் போதுமானதாக இல்லாத நிலை ஏற்படும் போதும், அவ்வரகை கடன் பெற்று விருந்து பேணும் பண்புடையவர்களாகவும், வேட்டையாடி கிடைக்கப்பெற்ற விலங்குகளின் இறைச்சியை விருந்தினர்க்கு தந்து உபசரித்தவர்களாகவும் வருமானப் பற்றாக்குறை ஏற்பட்ட பொழுதும் ஈகைக்குணம் மிக்கவர்களாகவும், மூத்தோர் வழிபாட்டு முறையான 'நடுகல் வழிபாட்டு' தொடக்க நிலையாளர்களாகவும் தம் சுற்றத்துடன் தாம் சார்ந்த வேந்தரின் வெற்றிக்காக வேந்து விடு தொழிலில் ஈடுபட்டு தன் உயிரையும் பொருட்படுத்தாமல் களத்தில் போர் புரிந்து வீரப்பண்பில் சிறந்தவர்களாகவும் உடைமைச் சமூகம் உருவாக்கத்தில் கரைந்து போனவர்களாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

நற்குடியாக அறியப்பட்ட சீறூர் மன்னர் வள்ளல் தன்மை கொண்டும் அருட்குணம் பெற்றும் பிறர்க்கு வழங்கும் பெரும் பண்பு பெற்றவர்களாகவும் பெருமை மிகுந்த குடியினராக வாழ்ந்து காட்டியுள்ளதை இக்கட்டுரை பதிவு செய்ய முயற்சித்துள்ளது. பண்பாட்டு மானிடவியல் அடிப்படையில் தொல்குடி கூறுகளான கூட்டுழைப்பு, பாதீடு, பகிர்ந்துண்ணுதல், ஈகை குணம் கொண்டு கலப்புப் பொருளாதாரம் சார்ந்தவர்களாக சீறூர் மன்னர்கள் சமுதாயம் பற்றிய செய்திகளை புறநானூறு காட்டும் வல்லாண்முல்லை பாடல்களின் வழியே இனம்

காண முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சங்கப்பாடல்கள் இலக்கியச் சுவைக்காக போற்றப்பட்டாலும் தமிழ்குடிகளின் வாழ்வியலை படம் பிடித்து காட்டியுள்ளதை மானிடவியல் அணுகு முறையில் காணவும் இவ்வாய்வு முயற்சி மேற்கொண்டுள்ளதாக முடிகின்றது.

**உசாத்துணைகள்**


கௌதமன். ராஜ். (2018). *பாட்டுப் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட.

துரைசாமிப்பிள்ளை, ஔ, (2016). *புறநானூறு.* திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பக் கழகம் லிட்.

பாண்டுரங்கன். அ. (2019). *தமிழ் மக்களின் தொல் சமயம்*, கேரல் பதிப்பகம்.

பாரதி. பு. (2021). *சங்ககால தமிழர் உணவு.* காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்.

பாரதி. பு,(2018*). பண்பாட்டு மானிடவியல்.* அடையாளம் பதிப்பகம்.

பாரதி. பு.(2014). *இலக்கிய மானிடவியல்.* அடையாளம் பதிப்பகம்.

மாதையன். பெ. (2012). *சங்க கால இனக்குழு சமுதாயமும் அரசு உருவாக்கமும்.* பாவை பப்ளிகேஸன்ஸ்

# சங்க இலக்கியத்தில் தாவரங்கள் - ஓர் ஆய்வு

**வெ.முத்துலட்சுமி**
தமிழ்த்துறை,
ஜி.டி.என். கலைக்கல்லூரி,
திண்டுக்கல், தமிழ்நாடு.
profmuthulakshmiv@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பழந்தமிழர் மிகுந்த இரசனையோடு வாழ்ந்தார்கள் என்பதற்கு அவர்கள் நமக்கு அளித்த இலக்கியமே சாட்சியாகும். அவர்கள் இயற்கையோடு இயைந்த இயல்பான வாழ்வை வாழ்ந்திருக்க வேண்டும். இயற்கையை இரசித்ததோடு அன்றி, அவற்றைப் பாதுகாக்கும் குறிப்புகளை இலக்கிய நூல்கள் தோறும் காணமுடிகிறது. சங்க இலக்கியத்தில் நீர் நிறைந்த ஆறுகளையும் நிழல் அமைந்த சோலைகளையும் தண்ணிலவையும் காணமுடிகிறது. சங்க இலக்கியத்தில் தாவரங்கள், செடிகொடிகள் பற்றிய பல்வேறு குறிப்புகள் காணப்படுகின்றன. சூழ்நிலை தட்பவெப்பம், மழை ஆகியவற்றைக் கொண்டே நிலங்கள் பகுக்கப்பட்டன. இவ்வாறான நிலங்களில் மரம், பூ முதலியவற்றின் பெயர்களை வைத்துதான் திணைகளைப் பிரித்தனர். திணைகள் வாரியாக மரங்களையும், செடிகளையும், கொடிகளையும் பல பயிரின வகைகளையும் பயிரிட்டனர் என்பதை மரபுவழியாக அறியமுடிகிறது. பழங்காலம் தொட்டே மா, பலா, வாழை ஆகியவற்றை முக்கனிகளாக சேர்த்து அரசர்க்குரிய விருந்தாக கருதி வந்தனர். மருதம், கோங்கு, வேங்கை, மூங்கில் போன்ற மரங்களை வைத்துப் பறை போன்ற கருவிகள் செய்தனர். மூங்கில் மரத்தினைப் பெண்களின் தோளுக்கு உவமித்து ‘ஆடுமை புரையும் வனப்பிற் பணைத்தோள் பேரமர்க் கன்னி’ என்று குறுந்தொகை பாடல் கூறுகிறது. கபிலர் 99 வகையான பூக்கள் குறிஞ்சி நிலத்தில் இருப்பதாகவும் குறிஞ்சிப்பாட்டின் வழி எடுத்தியம்பியுள்ளார். சங்க இலக்கியத்தில் மரங்கள் மட்டுமின்றி செடி கொடிகளையும் புலவர்கள் பலவாறாகப் பாடியுள்ளனர். பொதுவாக கொடிகளை பெண்களின் சிற்றிடைக்கு உவமை கூறுவதும் உண்டு. இயற்கையாக வளர்ந்த பயிரினங்களைக் கண்டறிந்த மனிதன் நிலவாரியாக பயிர்களைப் பயிரிட்டு உண்டு வாழ்ந்தனர் என்ற குறிப்பை இலக்கியத்தின் வாயிலாக தெரிந்துகொள்ள முடிகிறது. நீர்நிறைந்த பகுதிகளில் நெல் போன்ற பயிர்களைப் பயிரிட்டும், நீர்நிலை குறைவான வானம் பார்த்த பூமியில் கம்பு, சோளம், கேழ்வரகு, அவரை, கொள், உழுந்து போன்ற பயிர்களை பயிரிட்டும் விவசாயம் செய்யும் முறையை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

***திறவுச் சொற்கள்:*** *சங்க இலக்கியம், தாவரங்கள், கொடிகள், நெல் வகைகள், பயிர் வகைகள்*

## ஆய்வு அறிமுகம்

“சங்க இலக்கியத்தில் தாவரங்கள் - ஓர் ஆய்வு” எனும் தலைப்பில் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாய்வானது சங்ககாலத் தாவரகளின் சிறப்பை அடிப்படையாகக் கொண்டதாகும். இன்றைய சூழலில் நவீனமாயமாக்கலில் நாம் காடுகளையும், இயற்கை வளங்களையும் படிப்படியாக இழந்து கொண்டிருக்கின்றோம். முன்னோர்கள் பேணிக்காத்த இயற்கை வளங்களைப் பாதுகாக்கத் தவறவிட்டு இன்று செயற்கை வாழ்வில் சிக்குண்டு கிடக்கின்றோம். ‘வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வள்ளலார் வாடினேன் என்று கூறியதைப் போல மனிதர்கள் இயற்கை வளங்களை நேசித்து பின் வரும் சந்ததிகளுக்கும் மரபுசார்ந்த முறையில் கற்றுக்கொடுப்பதே இவ்வாய்வின் அவசியமான ஒன்றாக அமைந்துள்ளது. சங்க காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் இயற்கையை எவ்வாறு பாதுகாத்தனர் என்பதைப் பற்றியும், இயற்கை முறையில் விவசாயம் செய்யும் முறையும், இயற்கையின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும். சங்க இலக்கியத்திலுள்ள தாவரங்களின் சிறப்புகளை புலவர்கள் தங்களின் புலத்திறமையால் பின் வரும் சந்ததிகளுக்காக

ஆவணப்படுத்தினர். ஆனால் இன்றைய சமகால மனிதர்கள் இயற்கையைப் பேணிபாதுகாக்கினறனவா என்பதே இவ்வாய்வின் வினாவாகும். இவ்வாய்வின் கருதுகோளாக சங்ககாலப் புலவர்கள் தாவரங்கள் முக்கியத்துவம் பற்றி சமகாலத்திற்குப் பொருந்தியவாறு பதிவுசெய்துள்ளனர்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வில் பண்புசார் ஆய்வு அணுகுமுறை ஊடாக கொடுக்கப்பட்டு சங்ககால மற்றும் சமகால தாவரங்களின் வளர்நிலையை களஆய்வு மேற்கொண்டு பகுப்பாய்வு முறையில் விளக்கமுறை ஆய்வாக இவ்வாய்வு அணுகுமுறை அமைகின்றன.

**இலக்கிய மீளாய்வு**

**தாவரங்களின் சிறப்புகள்**

இயற்கையையே நம்பிவாழும் மனிதன் பன்னெடுங்காலமாகத் தன் சொந்த முயற்சியால் சிறிது சிறிதாக எவ்வாறெல்லாம் இயற்கையைப் பயனுள்ள வகையில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கண்டு கொண்டான். அவனது வாழ்க்கைக்குக் காடுகள் பெருமளவில் உதவுகின்றன. அங்கு அவனுக்குத் தேவையான உணவு உறைந்து கிடக்கிறது. உறையுளுக்குத் தேவையான பொருள்கள் பொதிந்து கிடக்கின்றன. நாகரிகம் வளர்ந்தபின் அவன் உடுக்கத் தேவையான உடையையும் காடுகள் அளிக்கின்றன. காடுகளில் எல்லா வகையான உயிர்களும் ஒருங்கிணைந்து வாழுகின்றன. மரங்கள் மட்டும் நிறைந்ததல்ல. மரங்களோடு செடிகளும் கொடிகளும் விலங்குகளும் பறவைகளும் மண்ணும் நீரும் கூட அங்கு உயிர் வாழ்கின்றன. இதற்கு ‘‘இலக்கியத்திற்கு இலக்கணம் கண்ட தொல்காப்பியர் மரபியல் நூற்பாவில் (572-576) ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை உயிரினத்தை வகைப்படுத்திக் கூறுகிறார்’’ (தொல்.பொருள்.இளம்.மரபு.ப, 520-521).

வளஞ்சான்ற மருதநிலத்தில் மா செழித்து வளரும். கழனிகளிலும் வரப்பு ஓரங்களிலும் குளக்கரையிலும் பொய்கையின் அருகிலும் மாமரங்களைப் பயிர்செய்வர். குறிஞ்சி நிலமக்கள் இல்லத்தின் முன்றிலிலும் மாமரங்களை வளர்ப்பர். இதை,

‘‘……………….முன்றில்
தேன்தேர் சுவைய திரளரை மாஅத்துக்’’ (அகம்.348:1-2)

என்ற பாடலடிகளின் மூலம் கூறப்படுகின்றது. மேலும், ‘‘குளத்தருகே மாமரம் வளர்ப்பதை மக்கள் பெருவழக்காகக் கொண்டிருந்தனர். காவிரியின் வடக்கே உள்ள பண்ணன் சிறுகுடி என்ற ஊரின் குளத்தருகில் நீண்ட அடிமரத்தையுடைய மாமரம் வளர்ந்திருந்ததாக அறிய முடிகின்றது. நீர்நிலையருகில் மாமரமும் அதைத் தொடர்ந்து விளை வயல்களும் அமைந்திருப்பதும் உண்டு. அத்தகைய மரங்கள் நெற்களத்திற்கு நிழல்தருமாறு அமைந்திருக்கும்’’ (சண்முகசுந்தரம், 1970) என்று சண்முகசுந்தரம் குறிப்பிடுகின்றார். மாமரத்தின் அடிப்பகுதியின் மரப்பட்டைகள் பொரிந்தால் போல் இருக்கும். மாமரம் இளவேனில் காலத்தில் தீக்கொழுந்து போன்ற இளந்தளிர்களை ஈனும் என்பதை,

‘‘பொரிகால் மாஞ்சினை புதைய

ஏரிகால் இளந்தளிர் ஈனும்பொழுதே'' (ஐங்.349:2-3)

என்ற பாடலடிகள் கூறுகின்றது. அழகிய தளிர்களை உடைய மாமரத்தில் மயில்கள் தங்கியிருக்கும். மாமரத்தின் பூங்கொத்துகள் கீழ்நோக்கி அமைந்திருக்கும். குயில்கள் அவற்றின் பூந்தாதுக்களைக் கோதும். மாமரங்கள் உயர்ந்து வளர்ந்திருத்தலின் கடுங்காற்றுக்கு மாம்பிஞ்சுகள் உதிர்ந்து விழும். நீர்த்துறைக்கு அருகிலுள்ள மாமரங்களில் வடுக்கள் நிறைந்திருக்கும் சில வடுக்கள் முற்றாமல் காம்புகள் இற்று வீழ்ந்து விடுவதும் உண்டு'' என்று உ.வே.சா. குறிப்பிடுகின்றார்.

குறிஞ்சி நிலத்தில் பலா மரங்கள் பயிராகும். குறிஞ்சிநில மக்கள் இல்லத்தின் முன்புறம் பலாமரங்களை வைத்து வளர்ப்பர். மருதநிலங்களிலும் பலாமரங்களை வளர்ப்பது உண்டு. பொது இடமாகிய மன்றங்களிலும் பலாமரங்களை வளர்ப்பர். மலைநாட்டிலுள்ள பலா மரங்களில் கிளைகள்தோறும் இனிய பழங்கள் தொங்கும் என்பதை,

''………..சினைதொறும்

தீம்பழம் தூங்கும் பலவின்

ஓங்கு மலைநாடன் மலை'' (குறுந்.83:3-4) என்ற பாடலடிகள் கூறுகின்றன. தொண்டை நாட்டுத் தோப்புக் குடிகள் தாழ்ந்த குலைகளை உடைய பலா மரங்களைப் பயிர் செய்தனர். பலாமரங்களில் ஆசினிப்பலா, வேர்ப்பலா என்ற இரண்டு வகைகள் இருந்ததை அறிய முடிகின்றது. ஆசினிப்பலா நீண்ட அடிமரத்தை உடையது. ஆசினியின் பழங்கள் குடம் போன்ற அமைப்புடன் இருக்கும். வேர்ப்பலாவின் கனி, வேர், அடிமரம், கிளைகள் ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் தொடுத்து வைக்கப்பட்டது போல் தொங்கும். பழங்கள் கீழே விழுந்துவிடுதல் போன்று குலைகள் மிக்கனவாய் இருக்கும். இத்தகைய வேர்ப்பலாக்கள் மலைச்சாரல்களில் மிகுதியாக இருந்தன என்பதை,

''தாழ்கோட் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்

வீழ்இல் தாழைக் குழவித் தீம்நீர்'' (பெரும்.356-357) என்ற பாடலடிகளின் மூலம் கூறப்படுகின்றது. பலாமரங்கள் அதிகமாக வளைந்திருக்கும். அவற்றின் வேர்கள் சிவந்த நிறமுடையவை. பலாமரத்தின் இலைகள் அகன்றும் செறிந்தும் இருக்கும். முதுவேனிலில் பலாமரங்களில் முதிர்ந்த காய்கள் வாடியிருக்கும் என்பதை,

''சுடர்முழுது எறிப்பத் திரங்கிச் செழுங்காய

முடமுதிர் பலவின் அத்தம்'' (நற்.26:5-6) என்ற பாடலடிகள் காட்டுகின்றன. தொண்டை நாட்டுத் தோப்புக்குடிகள் பலாமரங்களோடு வாழை, பனை ஆகியவற்றையும் சேர்த்துப் பயிரிடுவர். பலாமரத்தில் படர்ந்து விளையுமாறு மிளகுக் கொடியை வளர்ப்பர். பலாமரத்தின் நிழலில் மஞ்சளைப் பயிரிடுவர். ஒரு குறிப்பிட்ட இடத்தில் மூன்று பயிர்களைப் பயிரிட்டுப் பயன்கொள்ளும் முறை பண்டைத் தமிழ்மக்களின் வேளாண்மை நுட்பத்தை வெளிப்படுத்துகின்றது. இதை,

''பைங்கறி நிவந்த பலவின் நீழல்

மஞ்சள் மெல்லிலை மயிர்ப்புறம் தைவர'' (சிறுபாண்.43-44) என்று சிறுபாணாற்றுப்படை கூறுகின்றது. வாழை மலைச்சாரலில் நீர்வளமுடைய பகுதியிலும் அருவி வீழ்கின்ற பகுதியிலும் பயிரிடுவர். நன்னனது மலையடிவாரத்தில் வாழைமரச் சோலைகள்

இருந்ததை அறிய முடிகின்றது. நெல்வயல்களின் அருகிலும் வாழையைப் பயிரிடுவர். வாழையில் இயல்பாக நீண்ட மரமன்றிக் குட்டையான வாழை, செவ்வாழை என்ற வகைகள் உள்ளன. குட்டையான வாழையினது பழங்கள் பெண்யானையின் துதிக்கைபோல் திரண்டும் மென்மையாகவும் வளைந்தும் மரத்திலேயே பழுத்தும் இருக்கும். செவ்வாழை மலைப்பகுதிகளில் வளரும் தன்மையுடையது. அதன் இலைகள் நீண்டிருக்கும். வாழை இலைகள் நெருக்கமாக மடல்விட்டு இருக்கும், வாழைக் குலையில் காய்கள் நெருங்கி இருக்கும். அவை முற்றிப் பழுக்கும் என்பதை,

‘‘கடுங்கண் உழுவை அடிபோல் வாழைக்

கொடுங்காய் குலைதொறும் தூங்கும்’’ (கலி.43:24-25) என்ற பாடலடிகளின் மூலம் வாழைக் குலையின் காய்கள் புலியின் அடிபோல் வளைந்திருக்கும் என்று கூறப்படுகின்றது. மேலும், நாவல் மரம் கடற்கரைப் பகுதியிலும் நீர் நிறைந்த துறை அருகிலும் கான்யாற்றின் கரைமருங்கிலும் வளஞ்சான்ற மலைப்பகுதியிலும் நீர் வளமும் மண்வளமும் சான்ற பகுதிகளிலும் வளரும். நாவல் மரத்தின் இலை அகன்று இருக்கும். நாவல்பழம் சதைப் பற்றுள்ளதாகவும் கரிய நிறத்துடனும் இருக்கும். பழத்துடன் ஒட்டியுள்ள காம்பு மெல்லியதாக இருக்கும். நீர்த்துறையருகில் இருக்கும் என்பதை,

‘‘மட்டுஅறல் நல்யாற்று எக்கர் ஏறி

கருங்கனி நாவல் இருந்துகொய்து உண்ணும்’’ (புறம்.177:10-11) என்ற பாடலடிகளின் மூலம் காட்டப்படுகிறது. புன்செய் நிலங்களில் புல்லிய நெல்லி மரங்கள் வளரும். மனைகளில் முன்றிலின் முன்னர் நெல்லி மரங்களை வளர்ப்பதுண்டு. நெல்லி மரங்கள் மலைச்சாரலிலும் மலையின் உச்சியிலும் இயல்பாக வளரும் சிறப்புடையது. மனைகளில் நெல்லி மரங்களை வேலியாக வைப்பதும் உண்டு. நெல்லிமரத்தின் அடிப்பகுதி பருத்தும் அதன் இலைகள் சிறியதாகவும் இருக்கும். இனிய புளிப்புச் சுவையுடைய நெல்லிக்காய்களை மான்கள் உண்ணும். நெல்லிக்காய்கள் வேனில் காலத்தில் காய்க்கும் என்பதை,

‘‘…………புல்லிலைப்

பராரை நெல்லி அம்புளித் திரள்காய்

கான மடமரைக் கணநிரை கவரும்

வேனில் அத்தம்’’ (அகம்.69:6-9) என்ற பாடலடிகள் கூறுகின்றன. முல்லை நிலத்திலும் குறிஞ்சி நிலத்திலும் விளாமரம் வளரும். வன்புலச் சிற்றூர்களில் ஊர் மன்றத்தில் விளாமரங்கள் வளர்க்கப்படுவது உண்டு. வேட்டுவர் குடிலின் முன்புறத்திலும் விளாமரங்களை வளர்ப்பர். விளாவின் அடிமரம் புள்ளிகளை உடையதாக இருக்கும். அம்மரத்தில் பார்வை மானைக் கட்டி வைப்பர். அதன் கயிறு பட்டுப்பட்டு அடிமரம் தேய்ந்து இருக்கும். விளாமரம் நிலம் பிளந்து ஆழ வேர்விட்டு நன்கு கிளைத்த கிளைகளையும் உடும்புகளை ஒட்டவைத்தாற் போன்ற செதில்களையும் நீண்ட அடிமரத்தையும் உடையதாக இருக்கும் என்பதை,

‘‘பார்பக வீழ்ந்த வேருடை விழுக்கோட்டு

உடும்படைந் தன்ன நெடுபொரி விளவின்’’ (நற்.24:1-2) என்ற பாடலடிகளின் மூலம் விளாமரத்தின் சிறப்பை கூறுகின்றது.

குறிஞ்சி நிலத்தில் மிளகு விளையும் பகுதிகளில் அகில் நன்குவளரும். அகிற்கட்டையின் பொடியை நெருப்பிலிட்டு மகளிர் கூந்தலுக்கு அகிற்புகை ஊட்டுவர். தலைவன் ஒருவன் அகில் நெய்யைத் தடவினான் என்ற குறிப்பால் அகில் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கும் வழக்கம் இருந்ததை அறியமுடிகின்றது. குறிஞ்சிநில மக்கள் தோரை நெல்லை விதைக்க அகில், சந்தன மரங்களை அழித்து அந்நிலத்தைச் சமப்படுத்துவர். அகில்மரம் மிகுந்திருந்த இடங்களில் அதுவே விறகாகவும் பயன்படுத்தப்பட்டது என்பதை,

''தண்நறுந் தகர முளரி நெருப்பு அமைத்து

இருங்காழ் அகிலொடு வெள்அயிர் புகைப்ப'' (நெடு.55-56) என்ற பாடலடிகள் கூறுகின்றன. உன்னம் மரத்தின் அடியில் புற்கென்று இருக்கும். இதன் இலை சிறியதாகவும், இதன் மலர் பொன்னிறமாகவும் இருக்கும். வேனில் காலத்தில் உன்னமரம் இலை இன்றி உலர்ந்த கொம்புகளுடன் இருக்கும். உன்ன மரத்தில் பருந்துகள் குடியிருக்கும். வேந்தர்க்கு ஆக்கமுண்டாயின் முன்னே நற்குறியாகக் குழைந்து காட்டும் என்றும், கேடுவிளைவதாயின் தீக்குறியாகக் கரிந்து காட்டுமென்றும் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். இதனை இலவமரம் என்பர் பழைய உரைகாரர். இதை,

''புன்கால் உன்னம் சாய – உரை'' (பதிற்.40:17) என்ற பாடலடிகளின் மூலம் கூறப்படுகின்றது. ''உழுஞ்சில் மரம் வன்நிலத்தில் வளரும். இதன் அடிமரம் குறுகியதாக இருக்கும். இம்மரக் கிளைகளின் கவட்டில் பருந்துகள் குடியிருக்கும். உழிஞ்சிலை வாகை என்பார் அடியார்க்கு நல்லார்'' என்று உ.வே.சா. குறிப்பிடுகின்றார். கோங்கு முல்லை நிலமரமாகும். இது இலவின் வகையைச் சேர்ந்தது. காடுகளில் மிகுதியாக வளரும். இளவேனிற்காலத்தில் மிகுதியாகப் பூக்கத் தொடங்கும். பருவமல்லாத காலத்திலும் பூப்பது உண்டு. கொத்தாக மலரும் இம்மலர்களில் தேன் நிறைந்திருக்கும் என்பதை,

''பருவமில் கோங்கம்'' (பரி.19:18)

''வண்டறைஇய சண்பகநிரை'' (பரி.11:18)

''கரையன சுரபுன்னை'' (பரி.11:7)

''கடிமலர்ப் பிண்டி'' (பரி.12:88) என்ற பாடலடிகளில் சண்பகம் மலர் பெரிதாகவும் மணம் நிறைந்ததாகவும் குளிர்ச்சி உடையதாகவும் இருக்கும்.

இவை இளவேனிற் காலத்தில் பூக்கும். சண்பக மலரை வண்டுகள் மொய்க்கும் என்றும், சுரபுன்னை மரம் மலையிலும் ஆற்றங்கரைகளிலும் நெய்தல் நிலத்திலும் வளரும். இதனை நாகம் என்றும், வழை என்றும் அழைப்பர். இம்மரத்தில் கொம்புகளும் பூக்களும் செறிந்திருக்கும். இதன் பூக்களில் தேன் நிறைந்திருக்கும் என்றும், செயலை மரம் காடுகளில் சுனைகளின் அருகில் வளரும். இதனைப் 'பிண்டி' என்றும் வழங்குவர். இதன் மலர் நெருப்புப்போல் செந்நிறமாக இருக்கும். இதன் மலர் மிக்க மணமுடையதாகும். சிறுபாணாற்றுப்படையில் செருந்தி மரத்தின் சிறப்பை எடுத்துக்கூறுகின்றது. இது நெய்தல் நிலத்தில் வளரும் மரம். செருந்தி இளவேனில் காலத்தில் மலரும். பொன்னிறமான பூக்களை உடையது என்பதை,

“தலைநாள் செருந்தி தமனியம் மருட்டவும்” (சிறுபாண்.147) என்ற பாடலடிகளின் மூலம் காட்டப்படுகிறது.

**மரங்களின் வகைகள்**

சங்க இலக்கியத்தில் குறிக்கப்பெற்றுள்ள மரங்களின் எண்ணிக்கை 81வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. அவை அகில், அசோகு, அத்தி, ஆசினி, ஆல், இகணை, இரவம், இருப்பை, இலந்தை, இலவம், இற்றி, ஈந்து, உகாய், உடை, உழுஞ்சில், உன்னம், ஓடு, ஓமை, கரந்தை, கருங்காலி, கருப்பூரம், கள்ளி, காஞ்சி, காயா, குடசம், குமிழம், குரவம், குருந்தம், கூவிரம், கூவிளம், கொன்றை, கோங்கு, சண்பகம், சந்தனம், சிந்துவாரம், சிலை, சிறுமாரோடம், சுரபுன்னை, செங்கடம்பு, செயலை, செருந்தி, சேடல், ஞாழல், ஞெமை, தடா, தணக்கம், தாழை, தில்லை, நரந்தம், நாகம், நுணவம், நெட்டி, நொச்சி, நொய், பலாசம், பனை, பாதிரி, பாலை, பிடா, புன்கு, புன்னாகம், புன்னை, மஞ்சாடி, மராம், மருதம், முருக்கு, முள்முருங்கை, மூங்கில், யாமரம், வகுளம், வடவனம், வழை, வாகை, வானி, விடத்தேரி, வெட்சி, வெள்ளோத்திரம், வேங்கை, வேம்பு, வேரல், வேலம் எனப்பவையாகும்.

**செடி கொடிகள்**

“செடி கொடிகளைப் பற்றிய விரிவும் நுணுகிய கணிப்பும் கொண்ட குறிப்புகள் நிறையக் காணப்படுகின்றன. எனினும், இக்குறிப்புகள் யாவும் புறத்தோற்ற எழில் பற்றியே அமைந்துள்ளன. இது எல்லைக் கடந்து செல்லும் குறிப்புகள் அருகியே வருகின்றன” (சாமி, 1967) என்று பி.எல்.சாமி குறிப்பிடுகின்றார். குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல், வெட்சி, கரந்தை, காஞ்சி, உழிஞை, நொச்சி முதலான பெயர்கள் தாவரங்களின் குறிப்புகள் பற்றிக் கூறுகின்றன. மேலும் சங்க இலக்கியங்களில் செடிகள் பல வகைகளாகக் காணப்படுகின்றன. அவை, அதிரல், அந்தி, அரலை, ஆவிரை, ஈங்கை, எருக்கு, எறுழ், கணவீரம், கரந்தை, காந்தள், குல்லை, குளவி, குறிஞ்சி, குறுநறுங்கண்ணி, சூரல், செம்மல், தும்பை, துழாய், நந்தி, நள்ளிருள் நாறி, நீலம், நெருஞ்சி, பிடவம், பூளை, முண்டகம், வேழம், வேளை எனப்படும். இதை,

“அலந்தலை வேலத் துலவை யஞ்சினை” (பதிற்.29:12)
“வெந்து ஆறு பொன்னின் அந்தி பூப்ப” (அகம்.71:6)
“எரிஇதழ் அலரி” (பட்.42)
“வெண்கொடி ஈங்கைப் பைம்புதல்” (ஐங்.456:3)
“குவிமுகிழ் எருக்கம்” (நற்.220:2)
“………. நீடுகுலைக்
காந்தளஞ் சிலம்பு” (பெரும்.371-372)
“அணில்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகம்” (குறுந்.49:1)
“வேழப் பழனத்து நூழி லாட்டு” (மதுரைக்.257)
“வெண்பூ வேளையொடு சுரைதலை மயங்கி” (பதிற்.90:29)

என்ற பாடலடிகளின் மூலம் செடிகளின் சிறப்புகள் கூறப்படுகின்றன. கொடிகளின் சிறப்புகள் பற்றியும் அவற்றின் வகைகளைப் பற்றியும் கூறப்படுகின்றன. அவை, அடும்பு, ஆம்பல், உயவை, உழிஞை, கருவிளை, கல்லிவர், முல்லை, குருக்கத்தி, கொகுடி, சிறுசெங்குரலி, செருவிளை, தாமரை, தொய்யில், நறவம், நெய்தல், பகன்றை, பித்திகம், முசுண்டை, முல்லை, மௌவல், வள்ளை, வெற்றிலை எனப்படும். இதை,

‘‘…………. அடும்பின்
தார்மணி யன்ன வொண்பூக் கொழுதி’’ (குறுந்.243:1-2)
‘‘படிவ மகளிர் கொடிகொய்து அழித்த
பொம்மல் அடும்பின் வெண்மணல் ஒருசிறை’’ (நற்.272:2-3)
‘‘அருவி ஆம்பல் அகலடை துடக்கி’’ (அகம்.96:5)
‘‘மெல்லிலை யரியாம்பலொடு
வண்டிறை கொண்ட கமழ்பூம் பொய்கை’’ (மதுரைக்.251-252)
‘‘செவ்வாய் ஆம்பல்’’ (பரி.8:115)
சிறுவெள் ளாம்பல்’’ (புறம்.70:12)
‘‘…..நுண்கொடி யுழிஞை’’ (பதிற்.43:23)
‘‘மாதரார் முறுவல்போல் மணமௌவல்
முகை யூழ்ப்ப……………….’’ (கலி.89)

என்ற பாடலடிகளின் மூலம் கொடிகளின் சிறப்புகள் கூறப்படுகின்றது.

**பயிரினங்களின் வகைகள்**

சங்க இலக்கியத்தில் உள்ள பயிரினங்களின் வகைகள் குறித்து இப்பகுதியில் ஆராயப்படுகிறது. உலகில் உணவுக்காகப் பயிரிடப்படும் தானிய வகைகளில் நெல் மிகவும் முக்கியமான பயிராகும். நெல்மணிகள் பல வகைப்படும். அவை செந்நெல், வெண்ணெல், சாலிநெல், முடந்தைநெல், ஐவனநெல், தோரைநெல், குளநெல், தோப்பிநெல், மூங்கில்நெல் என வகைப்படுத்தப்படுகிறது. செந்நெல்லை நீர்வளஞ்சான்ற கழனியில் விளைவிப்பர். விளைந்த செந்நெல் சிவந்து கதிர்கள் வளைந்து இருக்கும். செந்நெற் கதிர்களை உழவர்கள் அரிந்து குவிப்பர். நெல் அறுவடையின்போது நெய்தல் மலரும் சேர்ந்து அறுபடும். அகன்ற வயலில் விளைந்த நெல்லுடன் ஆம்பலையும் அறுத்துக் களத்தில் இடுவர். எருமைகிடாக்களை மிதிக்கவிட்டு மெல்லிய செந்நெல்லினைத் தூற்றி மரக்கால் கொண்டு அளப்பர். நெல்லில் சிவந்த நெல் சிறந்தது. அதுவும் பழையதாயின் மிகவும் சிறந்ததாகும். இதை,

‘‘முடங்குபுறச் செந்நெற் றரீஇயர் ஓராங்கு’’ (அகம்.303:12)
‘‘செந்நெல் அரிநர் கூர்வாள் புண்ணுறக்
காணார் முதலொடு போந்தெனப் பூவே’’ (நற்.275:1-2)

என்ற பாடலடிகள் காட்டுகின்றன. வெண்ணெல்லைக் குளத்துப் பாசனத்தில் விளைவிப்பர். வெண்ணெல்லின் விளைந்த நெற்கதிர்கள் வெண்மையாக இருக்கும். நெல்லரியப் புகுமுன்

உழவர்கள் தண்ணுமை முழக்குவதை மரபாகக் கொண்டிருந்தனர். அத்தண்ணுமை ஒலியை வெறுத்து நாரைகள் வயலைவிட்டு அகலும். பிற புள்ளினங்களும் வயலை விட்டு மருத மரத்தில் சென்று தங்கும் என்பதை,

‘‘குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணல்’’ (புறம்.33:5)

‘‘வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇச்
செங்கண் எருமை இனம்பிரி ஒருத்தல்’’ (மலைபடு.471-472)

‘‘தண்ணறு நெய்தல் தளையவிழ் வான்பூ
வெண்ணெல் அரிநர் மாற்றினர் அறுக்கும்’’ (ஐங்.190:1-2)

என்ற பாடலடிகளின் மூலம் வெண்ணெல் அறுவடையின் போது வயலில் உள்ள நெய்தலையும் சேர்த்தே அறுப்பர் என்பதை அறிய முடிகிறது. சாலிநெல் என்பதோர் நெல் வகை உள்ளது. இது ஆற்றுப்பாசனத்தில் விளைவது. சாலி என்ற சிறந்த நெல்லின் பெயரில் ‘சாலியூர்’ என்ற ஊரும் இருந்துள்ளது’’ என்று ஆர்.ஆளவந்தார் குறிப்பிடுகின்றார் (ஆர்.ஆளவந்தார், இலக்கியத்தில் ஊர்பெயர்கள், ப.134). அந்நெல்லின் சிறப்பிற்கு ஒரு சான்றாகும். காவிரி பாயும் சோழநாட்டில் சாலி நெல்லைப் பயிர்செய்து ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் விளைவிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர் என்பதை,

‘‘சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட்டாகக்
காவிரி புரக்கும் நாடு கிழவோனே’’ (பொரு.246-248)

என்ற பொருநராற்றுப்படை பாடலடிகள் காட்டுகின்றன. முடந்தை நெல் என்பதும் நெல்லின் வகைகளுள் ஒன்றாகும் இதுவும் மருத நிலத்தில் விளைவதாகும். முடந்தைநெல் வளைந்த கதிர்களையுடையதாய் இருக்கும். இதன் தாள்கள் மூங்கில்போல் நீண்டும் பருத்தும் இருக்கும் என்பதை,

‘‘முடந்தை நெல்லின் விளைவயல் பரந்த
தடந்தாள் நாரை இரிய’’ (பதிற்.29:3)

என்ற பாடலடிகள் காட்டுகின்றன. ஐவனநெல் குறிஞ்சியில் விளையும் நெல்லாகும். இதனை ஐவன வெண்ணெல் என்றும் மலைநெல் என்றும் வழங்குவர். மலைச்சாரலில் காடுகளைத் தீயிட்டு கொளுத்திச் செய்த புன்செய் கொல்லையில் ஐவன நெல்லை விதைப்பர் என்றும் கூறப்படுகிறது. தோரைநெல்லின் சிறப்பு கூறப்படுகிறது. தோரைநெல் மேட்டு நிலத்தில் விளைகின்ற நெல் வகைகளுள் ஒன்றாகும். நறிய அகிலையும் சந்தனத்தையும் வெட்டி விளை நிலமாக்கிய மேட்டு நிலத்தே தோரை நெல்லை விதைப்பர். இந்நெல்லின் கதிர்கள் குட்டையாக இருக்கும். பருவ மழையில் விதைத்த தோரைநெல் அம்மழை நீரைக் கொண்டே அழகிய குலைகளோடு முற்றி விளையும். இதை,

‘‘ஐவன வெண்நெல் குறூஉம் நாடனொடு’’ (நற்.373:4)

‘‘புயல்புனிறு போகிய பூமலி புறவின்
அவல்பதம் கொண்டன அம்பொதித் தோரை’’ (மலை.120-121)

என்ற பாடலடிகள் காட்டுகின்றன. ‘‘மருதநிலத்தில் நன்செய்யில் நெல் விளைவிக்கப்பட்டது போலவே குறிஞ்சியிலும் புன்செய்யில் நெல்விளைவிக்கப்பட்டுள்ளது. இப்புன்செய் வகைகளை இனங்கண்டால் இன்றைய வறட்சிப் பகுதிகட்குப்பெரிதும் பயன்படுவதாக அமையும்’’ என்று சுந்தர சோபித ராஜ் குறிப்பிடுகின்றார் (சுந்தர சோபிதராஜ், 1982).

**சிறுபயிர்கள்**

***தினை***

தினை குறிஞ்சியின் முதன்மையான விளைபொருளாகும். குறிஞ்சிநில மக்கள் மரங்களை வெட்டி அழித்த கொல்லையைக் கொத்தித் தினையை விளைவிப்பர். விலையுயர்ந்த சந்தன மரங்களை வெட்டியும் நிலத்தைப் பண்படுத்தித் தினை விளைவிப்பர். சிற்சில இடங்களில் மரங்களைத் தீயால் சுட்டெரித்தும் நிலத்தை உழுது பண்படுத்தித் தினை விதைப்பர். குறிஞ்சிநில மக்கள் நிலத்தை நன்கு உழுதும் தினையை விதைப்பர். தினையின் வகைகளாகச் செந்தினை, சிறுதினை ஆகியன குறிப்பிடப்படுகின்றன. ஆனால் அதற்குரிய தெளிவான வேறுபாடுகள் வரையறுத்துக் கூறும்படியாக இல்லை. சிறுதினை கிளைத்து வளரும் என்றும் செந்தினை கிளைக்காது என்றும் கூறுவர். இதை,

‘‘கிளைமலி சிறுதினைக் கிளிகடிந்து அசைஇச்’’ (நற்.386:2-3)

என்ற பாடலடி காட்டுகின்றது. தினைவிதைத்த பிறகு மழையின்மையால் தினைப்புனம் காய்ந்துவிடும். அருவியின் அருகில் உள்ள தினைப்புனத்திற்கு நீர் பாய்ச்சியும் தினையை விளைவித்தனர். மழையை எதிர் நோக்கி விளையும் தினையைவிட நீர்பாய்ச்சி விளைவிக்கும் தினை முன்னர் விளையும். தினையுடன் பருத்தியையும் கலந்து விதைக்கும் வழக்கம் பண்டை நாளிலிரந்தே இருந்து வந்துள்ளது. தினை வளர்ந்த இடத்தில் பருத்தியை விதைத்து, அத்தினை முதிர்ந்து கொய்யப்பட்ட பின்னர்ப் பருத்தி விளைய அதனைக் கொள்வர். தினையுடன் அவரையையும் விதைப்பர். தினைவிளைந்து அறுவடை செய்தபின் அத்தட்டையில் படர்ந்து அவரை காய்க்கும். தினை விளையும் காலத்தில் குறிஞ்சி, முல்லை நிலங்களில் பிற பயிர்களும் விளையும் என்பதை,

‘‘உணங்குவ கொல்லோநின் தினையே’’ (ஐங்.207-2)

‘‘பரீஇ வித்திய ஏனல்’’ (குறுந்.72:4)

‘‘சிறுதினை கொய்த இருவி வெண்கால்<br>காய்த்த அவரைப் படுகிளி கடியும்’’ (ஐங்.286:1-2)

என்றப் பாடலடிகள் காட்டுகின்றன.

***வரகு***

வரகு விதைக்க விளைநிலம் தயாரிப்பர். பழைய வரகக்கொல்லையை விரிவுபடுத்த, அதைச் சுற்றியுள்ள காடுகளைத் தீயிட்டுக் கொளுத்துவர். அந்நிலத்தைச் சுற்றி இடுமுட்களால் வேலியமைத்துக் கொள்வர். பிறகு பருவ மழையில் உழவுசெய்யத் தொடங்குவர். பலபடியாக உழுது புரட்டிய புழுதியில் முறைப்படி வரகினை விதைப்பர். வறட்சி மிகுந்த கரிசல் மண்ணையுடைய குறிஞ்சி நிலத்திலும் செம்மண்ணையுடைய முல்லை நிலத்திலும் வரகு நன்கு பயிராகும். வரகு ஆறு மாதத்தில் விளைவுக்கு வரும். மேட்டு நிலத்தில் கார்கால

மழையில் பலமுறை புழுதி மயங்க உழுது வரகினை விதைப்பர். வரகுக் கொல்லையில் வளரும் பல்லி என்ற களையினைக் களைவர். வரகின் இலை தழைத்து மயிற்பேடை போன்று கரிய தண்டு நீண்டு எல்லாம் ஒரே நேரத்தில் சூல் விரிந்து வரகின் அடியும் தலையும் ஒரே சீராக விளையும். முன்னரே உழவு செய்திருந்த செம்மண் நிலத்தில், மழை பெய்ததும் வரகினை விதைப்பர். அவை வளர்ந்த பின் மழைக் காலத்திலேயே களை எடுப்பர் என்பதை,

''இலங்கெயிற்று ஏஎர் இன்நகை மகளிர்
உணங்குதினை துழவும் கைபோல் ஞாழல்'' (நற்.267:4-5)

''கவைக்கதிர் வரகின் யாணர்ப் பைந்தாள்
முதைச்சுவல் மூழ்கிய கான்சுடு குரூஉப்புகை'' (அகம்.59:13-14)

''பூழி மயங்கப் பலஉழுது வித்தி'' (புறம்.120:2)

''செவ்விகொள் வரகின் செஞ்சுவல் கலித்த
கௌவை நாற்றின் காரிருள் ஓரிலை'' (குறுந்.282:1-2)

என்ற பாடலடிகளின் மூலம் கூறப்பட்டுள்ளது. கிளைத்த கதிரையுடைய வரகினை அறுவடை செய்து அதனை நன்கு குற்றி அரிசியாக்குவர். வரகின் உமி கடினமாக இருக்குமாதலின் நன்கு குற்றவே முழுமையான அரிசியாகும். நன்கு குற்றப்பட்ட அரிசியை 'அவைப்பு மாண் அரிசி' என்பர்.

**பயறு வகைகள்**

***அவரை***

குறிஞ்சிநிலப் பகுதிகளில் படர்ந்து வளர்வது அவரையாகும். அவரையைத் தனிப்பயிராகவும், தினையுடன் கலந்தும் விதைப்பர். அவரைப்பூக்கள் பவளம்போல் செந்நிறமுடையதாக இருக்கும். தினையை அறுவடை செய்தபிறகு வயலிலுள்ள அவரை வளர்ந்து, அதன் கொழுமையான வடமுடைய அரும்புகள் பனிப்பருவத்தில் மலரும். அவரைப்பூ மலர்வதைப் பற்றிய குறிப்புகள் சங்கஇலக்கியத்தில் மிகுந்து காணப்படுகின்றன. அவரைப்பூ மணிபோலும் பவழம்போலும் பொன்னிறமலர்களைக் கொண்டதாக இருக்கும். முன்பனிக்காலத்தில் அவரைப்பூ மலர்ந்தும், நெல் வயல்களில் கதிர்நீண்டு நன்கு காய்ந்து விளைந்தும் இருக்கும். காய் பிடிக்காத அவரைப்பூக்கள் பனிமுதிர் பருவத்தில் உதிர்ந்துவிடும். அவரைப்பூக்கள் தயிரைச் சிதறினாற்போலத் தம் பூக்களை உதிரச்செய்து, தினையரிதாள்தோறும் அரிவாளை ஒக்கும். வளைந்த காய்களைக் கொண்டு விளங்கும். இதை,

''................சிறுதினை மறுகால்
கொழுங்கொடி அவரை பூக்கும்'' (குறுந்.82:3-4)

''மணிப்பூ அவரைக் குரூஉத்தளிர்'' (மதுரைக்.293)

''பைந்நனை அவரை பவழம் கோப்பவும்'' (சிறுபாண்.164)

''அவரை ஆய்மலர் உதிர'' (அகம்.243:1)

என்ற பாடலடிகளின் மூலம் கூறப்பட்டுள்ளன.

***கொள்***

புன்செய்யிலும் கரம்பை நிலத்திலும் கொள் விளையும். ''கல்லைப் பிளந்து கானம் விதை என்பது முன்னோர் மொழி'' என்று இல.செ.கந்தசாமி குறிப்பிடுகின்றார் (கந்தசாமி, 1987). நிலத்தைத் திருத்திப் புதிதாகச் சாகுபடிக்குக் கொண்டுவரும்பொழுது கொள்ளை முதல் பயிராக விதைப்பது உலகியல் மரபாகும். மழை குறைந்தாலும் மிகுதியானாலும் நன்கு வளர்ந்து பயன்தரக்கூடியது கொள். நிலத்தை நன்கு உழுது கொள்ளை விதைப்பர். கொள் செடியின் கொடிகள் சிறியதாக இருக்கும். குறிஞ்சி, முல்லை நில மக்களுக்கு வரகும் தினையும் கொள்ளும் அவரையும் முதன்மையான உணவுப் பொருள்களாகும். வெற்றி பெற்ற மன்னர்கள் பகைவர் நாட்டை உழுது வரகும் கொள்ளும் விதைப்பதை மரபாகக்கொண்டிருந்தனர் என்பதை,

> ''வெள்வரகு உழுத கொள்ளுடைக் கரம்பை''(பதிற்.75:11)
>
> ''கொள்ளுழு வியன்புலத்து உழைகா லாக'' (புறம்.15:5)

என்ற பாடலடிகளின் மூலம் கூறப்படுகின்றது.

***உழுந்து***

முல்லைநிலப் புன்செய்ப் பயிர்களில் உழுந்தும் ஒன்றாகும். மிகுதியாக மழைபெய்த கார்ப்பருவத்தின் இறுதியில் விதைத்து வளர்ந்த உழுந்து, முன்பனிப் பருவத்தில் காய் பிடிக்கும். உழுந்தின் காய்கள் மயிர்க்கால் உடையதாகவும் இலைகள் அகன்றதாகவும் இருக்கும். இதை,

> ''உழுந்துடைக் கழுந்தின்'' (குறுந்.384:1)
>
> ''அழிதுளி கழிப்பியஅழிபெயற் கடைநாள்
> இரும்பனிப் பருவத்த மயிர்க்காய் உழுந்தின்
> அகலிலை அகல வீசி'' (நற்.89:4-6)

என்ற பாடலடிகளின் மூலம் கூறப்படுகின்றது. பயறு வகைகளைத் தனிப் பயிராகப் பயிரிடுவதைவிடக் கலப்புப் பயிராகவும் தொடர் பயிராகவும் பயிரிட்டதால், தானியப்பயிர்கள்போலப் பயறுவகைகளுக்கு முதன்னை கொடுக்கப்பெறவில்லை என்பது அறியப்படுகின்றது.

**முடிவுரை**

புலவர்கள் மக்களின் உளப்பாங்கினை நன்கறிந்து விளக்கியதுடன் இயற்கையின் எழில்களை, கூறுகளை, இயல்புகளைப் பாடியிருப்பதை அறிய முடிகிறது. தத்தம் நாட்டுச் செடிகளை மரங்களை மட்டும் பாடாமல் மற்ற நிலத்து மரங்களையும் பாடியிருப்பதை அறிய முடிகிறது. மேலும், இதில் வரும் மரங்கள் அனைத்தும் தமிழகத்தில் காணப்படும் மரங்களாக இருப்பதையும் அறியமுடிகிறது.

பல்வேறு நிலங்களில் காணப்படுகின்ற செடி, கொடி, புதர்கள் யாவும் தத்தம் பெயரோடு தனித்தனியே குறிக்கப்பட்டுள்ளன. படிப்போரின் சுவை நலம் பெருகும் ஈடுபாட்டுடன் புலவர்கள் பயிரினங்களைப் பற்றித் தம் நுண்மான் நுழைபுலத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

இத்தகைய பயிரினங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அவற்றோடு தொடர்புடைய விலங்குகளும் பறவைகளும் மனிதர்களும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளனர் என்பதை அறிய முடிகிறது. இவை போன்ற இன்னும் பல பயிரினங்களும் இவ்வாய்வில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**உசாத்துணை நூல்கள்**


ஆளவந்தார்,ஆர். (1988). *இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்.* நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்.

இளம்பூரணார்.(2008). *பொருளதிகாரம்.* சாரதா பதிப்பகம.

கந்தசாமி, இல.செ.(1987). *தமிழர் வேளாண்மை மரபுகள்.* கலைச் செல்வம் பதிப்பகம்.

சண்முகசுந்தரம் வித்வான், ல. (1970). *தமிழும் தாவரமும்.* ஆசிரியர் வெளியீடு.

சாமி, பி.எல்.(1967).*சங்க இலக்கியத்தில் செடி, கொடி, விளக்கம்.* சைவ சிந்தாந்த நூற்பதிப்பு கழகம்.

சுந்தர சோபிதராஜ். (1982). *தமிழில் தாவரச் செய்திகள் (தொகுதி - 1).* சோபிதம் பதிப்பகம்.

தானம்மாள், இல. (1981). *சங்க இலக்கியத்தில் மலர்கள்.* வானதி பதிப்பகம்.

பாலசுப்பிரமணியன், சி. (1980). *மலர் காட்டும் வாழ்க்கை.* நறுமலர்ப் பதிப்பகம்.

மோகன், இரா. (உ.ஆ). (2011). *பத்துப்பாட்டு.* நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்.

# மேலைத்தேய நாடுகளில் இந்து சஞ்சிகைகளும் ஆய்வு இதழ்களும் - ஓர் ஆய்வு

**செல்வராசா லலிதா, சாந்தி கேசவன்**
இந்து நாகரிகத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
danulalitha@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

“மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்” என்பது கச்சியப்ப சிவாசாரியார் வாக்கு. இவ்வாக்கிற்கு அமைய இந்து மதத்தின் பல கூறுகளும் பண்பாடுகளும் இன்று மேலைத்தேய கலாசாரம் கொண்ட, இந்து மதத்தோடு தொடர்பில்லாத மேலைத்தேய நாடுகளில் சிறந்த முறையில் கடைப்பிடிக்கப்பட்டும், வளர்க்கப்பட்டும் வருகின்றன. இந்து மதம் தோன்றி வளர்ந்த எமது நாடுகளைக் காட்டிலும் இம்மேலைநாடுகளில் பெரும் செல்வாக்கினைப் பெற்றுக் காணப்படுகின்றது. இவ்வகையில், இவ்வாய்வானது மேலைத்தேய நாடுகளில் வெளிவரும் அன்புநெறி, ஆத்மஜோதி, கலசம், Journal of Hindu Studies, சிவஒளி, மின்மினி, Hinduism Today ஆகிய இந்து சஞ்சிகைகள் அங்கு புலம்பெயர்ந்து வாழும் இந்து சுதேச மக்களிடத்திலும் அந்நாட்டு மக்களிடத்திலும் இந்து மதக் கருத்துக்களை எவ்வகையில் பரப்புகின்றது என்பதனை ஒருங்கிணைத்துத் தருவதோடு இந்துப் பண்பாட்டினைப் பரப்பும் ஓர் ஊடகமாக எத்தகைய பணிகளை ஆற்றுகின்றது என்பது பற்றியும் அந்நாடுகளில் இந்து மதம் கொண்டுள்ள செல்வாக்கு பற்றியும் தெரியப்படுத்துவதாக அமைந்துள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *சுதேச இந்து மக்கள், இந்துப் பண்பாடு, மேலைத்தேய நாடுகள்*

## ஆய்வு அறிமுகம்

இந்து சமயம் உலகப் பழமை வாய்ந்த சமயங்களில் ஒன்று. அது எப்பொழுது தொடங்கப்பட்டது,எவ்விதம் வளர்ந்தது என்பன போன்ற விவரங்கள் இதுவரை எவருக்கும் சரிவர தெரியவில்லை. இன்றுள்ள பல சமயங்களைப் போன்று தனிப்பட்ட ஒருவரால் அது தோற்றுவிக்கப்பட்வில்லை என்பதும் அது தோன்றி வளர்ந்தது இந்தியத் துணைக் கண்டத்தில் என்பதும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் உண்மையாகும். இந்து சமயம் ஒரு போதனை சமயம் அன்று, அது ஓர் சாதனை சமயமாகும். எல்லா உயிர்களுக்கும் உரிமை அளிப்பதோடு இயற்கை சூழலுக்கும் முக்கியத்துவம் அளிக்கும் பெருமையுடையது இந்தச் சமயம். இது போன்று வழிபாட்டுச் சுதந்திரம் உள்ள சமயம் உலகில் வேறு இல்லை.

இந்து சமயமானது அது தோன்றிய நாட்டில் மட்டுமல்லாமல் கடல் கடந்த பல நாடுகளிலும் தனது ஆதிக்கத்தினை நிலைநாட்டி வருகின்றது. இந்து சமயத்தினை உலக நாடுகளிலும் உள்ள மக்கள் பின்பற்றி வருகின்றனர். நம் நாடுகளில் இருந்து வெளி நாடுகளுக்கு இடம்பெயர்ந்து சென்றவர்கள் தமது இந்து மதத்தை தாம் சென்ற நாடுகளில் வளர்த்தனர். இவர்கள் மட்டுமின்றி அந்நாட்டு மக்களும் இந்துப் பண்பாட்டினைப் பேணுகின்றனர். அதுமட்டுமின்றி இந்து அறிஞர்கள் மற்றும் இந்து இயக்கங்களின் செல்வாக்கு என்பவற்றோடு இந்துக்களது குடியேற்றங்கள் ஆகியவற்றின் மூலம் இந்தியாவிலிருந்து இந்துப்பண்பாடானது பெரும்பாலும் மேலை நாடுகளுக்கு கொண்டுசெல்லப்பட்டது என அறியலாம். குறிப்பாக சுவாமி விவேகானந்தருடைய சிக்காகோ சொற்பொழிவுகள் மிக முக்கியமாகக் கொள்ளப்படுகின்றது (சுதர்சினி, 2021).

மேலைத்தேசத்தவர்களின் வருகையும் இந்துப் பண்பாடு பரவுவதற்கு காரணமாக அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் இந்துக்கள் மேலை நாடுகளுக்குச் செல்வதற்கு முன்பே மேலைத்தேசத்தவர்களின் வருகையானது இந்துப்பண்பாட்டினைக் கொண்ட இந்தியாவில் ஏற்பட்டதை பழங்காலம் தொட்டே அறியலாம். மேலைத்தேயர்கள் இந்துப்பண்பாட்டு அம்சங்களில் பிரதிபலிக்கின்ற தத்துவம், இலக்கியம், சமயம், கலை, மற்றும் வழிபாடுகள், நிறுவனங்கள், ஆலயங்கள் எனும் அம்சங்களின் அடிப்படையில் தமது பங்களிப்புகளை மேற்கொண்டுள்ளனர்.அந்தவகையில் அகழ்வாராய்ச்சி மூலம் இந்தியாவில் தோன்றிய பண்பாடு இந்துப் பண்பாடு எனும் குறிப்பை உலகத்திற்கு வழங்கியவர்கள் மேலைத்தேய அகழ்வாராய்ச்சியாளர்களே ஆவர் (சுதர்சினி, 2021).

மேலைத்தேயத்தவர்கள் இந்தியாவிற்கு வருகை தந்ததுடன் மட்டுமல்லாமல் இங்கிருந்த இந்துப்பண்பாடுகளை அங்கு கொண்டு சென்று இந்து மதத்தினையும்,இந்துப் பண்பாட்டினையும் உலகறியச் செய்தனர். இதற்கு அடையாளமாக இன்று பல நாடுகளிலும் இந்து மதத்தினையும்,இந்துப் பண்பாட்டினையும் பேணும் முகமாக பல பிரமாண்டமான ஆலயங்கள்,இந்து சமய நிறுவனங்கள் என்பன அமைக்கப்பட்டு இந்து மதம் வளர்க்கப்பட்டு வருகின்றன.

இந்து மதத்தை வளர்க்கும் நோக்கில் பல இந்து நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் தோற்றம் பெற்று இந்து மதத்திற்குப் பெரும் பணிகளை ஆற்றி வருகின்றது. குறிப்பாக அமெரிக்காவில் காணப்படும் பக்தி வேதாந்த ஆச்சிரமம்,இத்தாலியில் உள்ள சுவாமி கீதானந்த ஆச்சிரமம், ஹவாய் இந்து ஆதீனம், கனடா இந்து மாமன்றம்,கனடா ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை போன்ற நிறவனங்களைச் சிறப்பாகக் கூறலாம். இந்நிறுவனங்கள் மூலமாக இம் மேலை நாடுகளில் பல இந்து சமயம் சார்பான சஞ்சிகைகளும் வெளிவந்து இந்து மதத்தை வளர்ப்பதில் பெரும் பங்கினை ஆற்றுகின்றது என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் இம்மேலை நாடுகளில் இந்து மதம் சார்பான பல சஞ்சிகைகள் வெளிவருவதனை நம்மால் அறியமுடிகிறது.

எமது இந்துப் பண்பாடானது தனது சுதேச நாட்டைக் கடந்து மேலை நாடுகளில் தனது கால் தடத்தை எவ்வாறு பதித்துள்ளது,மேலை நாட்டு மக்களிடம் எவ்வாறாக தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது,இந்நாட்டவர்கள் தம் மொழி,மதத்தைக் கடந்து அவர்களுக்கு அந்நியமான ஓர் மதத்தை எவ்வாறு ஏற்றுப் பின்பற்றுகின்றனர்,இதன் மூலம் இந்து சமயம் கொண்டுள்ள செல்வாக்கு போன்றவற்றை மேலை நாடுகளில் வெளிவரும் இந்து சஞ்சிகைகள் மற்றும் ஆய்வு இதழ்கள் துணை கொண்டு ஆராயப்படுகின்றது.

அமெரிக்கா ஹவாய் தீவில் காவாய் இந்து ஆதீனத்தினால் Hindusium today என்னும் சஞ்சிகையும், கனடா நாட்டில் கனடா சைவ சித்தாந்த மன்றத்தினால் அன்பு நெறி சஞ்சிகை, கனடா ஒன்ராறியோ சமயப் பேரவையினால் ஆத்மஜோதி சஞ்சிகை, கனடா இந்து மாமன்றத்தினால் சைவ நீதி சஞ்சிகை என்பனவும்( பிரான்ஸ் நாட்டில் இருந்து சிவநெறி சஞ்சிகை, சிவ ஒளி சஞ்சிகை, அவுஸ்திரேலியா சிட்னி முருகன் சிறப்பிதழ், சுவிஸர்லாந்த் மின்மினி சஞ்சிகை.

ஜேர்மனி சிந்தனை சஞ்சிகை, நோர்வே சக்தி இதழ் மற்றும் நெய்தல் சஞ்சிகை, டென்மார்க் சஞ்சீவி சஞ்சிகை, எனப் பல இந்து சஞ்சிகைகள் அச்சிட்டு வார, மாத

இதழ்களாக வெளிவருகின்றன. இவ்வாறு வெளிவரும் இச் சஞ்சிகைகளில் குறிப்பிட்ட சில சஞ்சிகைகளை மையமாகக் கொண்டு இம் மேலை நாடுகளில் இந்து மதம் கொண்டுள்ள வளர்ச்சியினை ஆராய்வதே இவ் ஆய்வாகும். அதாவது இந்து மத வளர்ச்சியில் ஒரு கூறாக சஞ்சிகைகள் எத்தகைய பங்கினை ஆற்றுகின்றது என்பதனை தோற்றம்,தோற்றுவித்தவர்கள், தோற்றுவித்த நிறுவனம்,நோக்கம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதாகும்.

**ஆய்வின் நோக்கங்கள்**

ஒரு ஆய்வுக்கான குறிப்பான மற்றும் துல்லியமான நோக்கத்தினை குறிப்பிட்டுக் காட்டுவது முக்கியமாகின்றது.ஓர் ஆய்வாளர் தனது ஆய்வில் ஒட்டு மொத்தமாக எதனைச் செய்ய விரும்புகிறாரோ அதுவே ஆய்வின் பிரதான நோக்கமாகும்.இவ்வகையில் எந்தவொரு ஆய்விற்கும் அதன் நோக்கம் என்பது இன்றியமையாத ஒன்றாகும். அந்தவகையில் இவ் ஆய்வின் நோக்கங்களாக பின்வருவன அமைகின்றன.

1. மேலைத்தேய நாடுகளில் இந்து சமய வளர்ச்சியில் பிரதான பங்கு வகிப்பதில் இந்து சஞ்சிகைகள் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. அந்தவகையில் இம் மேலை நாடுகளில் வெளியாகும் இந்து சஞ்சிகைகள் தொடர்பான தகவல்களை ஒருங்கிணைத்து வழங்குதல்.
2. மேலை நாடுகளில் இந்துப் பாரம்பரியம் பேணப்படுவதற்கான காரணங்களை அறிதலும், இந்துப் பண்பாட்டினை அறிந்து எந்த வகையில், எதற்காக இந் நாட்டினர் உள்வாங்குகின்றார்கள் என்பதனை ஆராய்வதோடு இங்கு வெளியிடப்படும் இந்து சஞ்சிகைகள் எத்தகைய முக்கியத்துவத்தனைப் பெறுகின்றன என்பதனையும் ஆராய்தல்.
3. இச்சஞ்சிகைகளில் வெளியாகும் இந்து சமயம் சார்பான கருத்துக்கள், சிந்தனைகள், கட்டுரைகள், கதைகள் போன்றவற்றின் துணை கொண்டு அந் நாடுகளில் இந்து சமயம் புலம் பெயர்ந்து அந் நாடுகளில் வாழும் இந்து மக்களிடத்தில் மட்டுமல்லாது அந்நாட்டு சுதேச மக்களிடமும் எத்தகைய மாற்றத்தினை ஏற்படுத்துகின்றது என்பதனையும் இந்து சமய சிந்தனைகள் இச் சஞ்சிகைகள் மூலம் எவ்வாறு அம் மக்களிடம் சென்றடைகின்றன என்பதனை எடுத்துரைத்தல்.

**ஆய்வு வரையறை**

ஆய்வின் வரையறையானது ஆய்வு தொடர்பான மட்டுப்படுத்தல்களைக் குறிக்கின்றது. அந்தவகையில் இவ் ஆய்வானது மேலை நாடுகளளன அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அச்சிட்டு வெளியிடப்படும் குறிப்பாக 21 ஆம் நூற்றாண்டினை மையப்படுதியதாக வெளிவந்துகொண்டிருக்கும் அன்புநெறி, ஆத்மஜோதி, கலசம், மின்மினி, சிவஒளி, Hinduism Today, Journal of hindu studies ஆகிய இந்து சஞ்சிகைகள், ஆய்வு இதழ்கள் என்பவ்றறை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு வரையறை செய்கிறது.

**ஆய்வு முறையியல்**

குறித்த ஆய்வின் ஒவ்வொரு ஆய்வுக் குறிக்கோள்களையும் அல்லது ஆய்வு வினாக்களையும் அடைந்து கொள்ள பயன்படுத்தப்படும் படிமுறைகளை ஆய்வு முறையியல் விளக்கி நிற்கிறது. இவ்வகையில் இவ் ஆய்வானது விவரண ஆய்வு, பகுப்பாய்வு மற்றும் வரலாற்று ஆய்வுகளாக அமைகின்றது.

**இலக்கிய மீளாய்வு**

ஆய்வு முன்மொழிவில் தெரிவு செய்த ஆய்வுத் தலைப்பு, ஆய்வுப் பிரச்சினை தொடர்பாக ஆய்வாளர் தான் அறிந்துள்ளவற்றை வெளிக்காட்டும் பகுதி இலக்கிய மீளாய்வு ஆகும். இலக்கிய மீளாய்வானது ஆய்வு பிரச்சினைக்கான பின்னணி மற்றும் சூழலமைவு விபரங்களை தருவதாக அமைகின்றது.

இவ்வகையில் ச. முகுந்தன் அவர்களால் எழுதப்பட்ட *இந்துக் கற்கைகளை வளமூட்டிய மேலைத்தேசத்து ஆளுமைகளும் ஆய்வுகளும்,* (2021) என்னும் இவ்விலக்கியத்தில் இவ்வாய்விற்கான அடிப்படை விடயங்களை அறிந்துகொள்ள முடிந்தது. அதாவது மேலைத்தேசத்தவருக்கு இந்துப் பண்பாடு குறித்த கரிசனை மற்றும் இந்தியாவிற்குத் மேலைத்தேசத்தவருக்குமான தொடர்பு, இந்து மதத்தின் மீது கொண்ட ஈர்ப்பு, இந்து இலக்கியங்கள் மீது கொண்ட ஈடுபாடு போன்றவை தொடர்பாக அறிந்து கொள்ள முடிந்தது. குறிப்பாக இந்து கற்கைகள் புலத்தில் மேலை நாட்டு அறிஞர்கள் கொண்ட ஈடுபாடு மற்றும் இந்து மதக் கற்கைகளை அவர்கள் நாடுகளில் பரவச் செய்ய அடிப்படையாக அமைந்த காரணிகள் போன்றவற்றை தெளிவாக விளக்குவதாக இந்நூல் அமைந்துள்ளது.

வி.கந்தவனம் அவர்களால் எழுதப்பட்டு கனடா ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையினால் வெளியிடப்படும் *கனடாவில் சைவ சமயம், (2000)* என்னும் இந் நூலானது கனட நாட்டிற்கு இந்து மதம் எவ்வாறு பரவியது என்பதை தெளிவாக ஆராய்வதோடு மட்டுமின்றி புலம்பெயர்ந்து சென்ற மக்கள் தமது மதத்தை அந்நாட்டில் பரப்பினர் அதிலும் குறிப்பாக இந்து மத வளர்ச்சியில் ஆலயங்கள் மற்றும் இந்து சமயத்தை வளர்க்கும் மன்றங்கள் குறித்தும் விளக்குகின்றது. அதிலும் குறிப்பாக *ஆத்மஜோதி* சஞ்சிகையினை வெளியிடும் ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை, *அன்புநெறி* சஞ்சிகையினை வெளியிடும் கனடா சைவ சித்தாந்த மன்றம் தொடர்பான தகவல்களைக் கொ்டுள்ளது.

இராமதாஸ்.டீ.எஸ்.ஆர்., (1981), *இந்தியப் பண்பாடு* என்னும் இந் நூலில் இயல் 12 இல் உலகப் பண்பாட்டிற்கு இந்தியாவின் பங்கு என்னும் தலைப்பின் கீழ் பிற நாடுகளில் இந்தியப் பண்பாடு பரவிய விதம் இந்து இலக்கியங்கள் மேலைநாட்டு மொமெமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டமை போன்ற தொடர்பான தகவலைப் எடுத்துரைக்கின்றது. மேலும் இந்து சமயம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட மேலை நாட்டைச் சேர்ந்த அறிஞர்களையும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளையும் அவ்வாய்வின் முக்கியத்துவத்தினையும் ஆதார பூர்வமாக *இந்து மதமும் மேற்கத்தேயவர்களின் ஆய்வுகளும்* (2012) என்னும் இந்நூல் எடுத்துக்கூறுகின்றது. இந் நூல் ந. சுபராஜ் அவர்களால் எழுதப்பட்டது.

இவைதவிர *அன்புநெறி, ஆத்மஜோதி, கலசம், சிவஒளி, Hinduism Today, Journal of Hindu Studies* போன்ற சஞ்சிகைகள் மற்றும் ஆய்வு இதழ்கள் என்பன இச் சஞ்சிகைகளை வெளியிடும் நிறுவனம், அதன் செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகள், சேவைகள் என்பன தொடர்பாகவும், இச் சஞ்சிகையின் தோற்றம், வரலாறு, இவை வெளியிடப்படுவதன் நோக்கம், இந்து சமய சிந்தனைகள் தொடர்பான கட்டுரைகள் என்பவற்றை உள்ளடக்கி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**இந்து சஞ்சிகைகள், ஆய்வு இதழ்களும் அதன் பிரதான நோக்கங்களும்**

**Hinduism Today**

1979ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதி சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்டு *Hinduism Today* எனும் பெயரில் வெளிவந்து கொண்டிருக்கும் இந்நிறுவனத்தினுடைய சஞ்சிகையானது இன்று சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளால் மேற்பார்வை செய்யப்படுவதோடு வெளியிடப்பட்டும் வருகின்றது. இச் சஞ்சிகை ஹவாயில் உள்ள காவாய் தீவில் ஹிமாலயன் அகடமியால் வெளியிடப்படுகின்றது. இந்த இதழ் முற்றிலும் சேவை சார்ந்தது ஆகும். நிறுவனர் சத்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமி, பதிப்பாளர் சத்குரு போதிநாத வெய்லஸ்வாமி, தலைமை ஆசிரியர் பரமாச்சார்ய சிவநாத பழனி சுவாமி,பதிப்பக உதவியாளர் பரமாச்சார்ய சிவநாத சுவாமி,துணை ஆசிரியர் ஆச்சார்ய குமாரநாத சுவாமி,நிர்வாக ஆசிரியர் ஆச்சார்ய ஆறுமுகநாத சுவாமி, தயாரிப்பு மேலாளர் சன்னியாசின் பிரம்மநாத சுவாமி, உதவி ஆசிரியர்கள் சன்னியாசின் தில்லைநாத சுவாமி, சன்னியாசின் சரவணநாத சுவாமி, விநியோக மேலாளர் சன்னியாசின் சண்முகநாத சுவாமி, விளம்பரம் சன்னியாசின் கைவல்யநாத சுவாமி போன்றோர் காணப்படுகின்றனர்.

சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் (Social Network), மின்னஞ்சல் மூலமாகவும் (E-mail) உலகில் காணப்படுகின்ற மிகவும் திறமை மிக்க ஊடகவியலாளர்கள், புகைப்படக் கலைஞர்கள், ஏனைய துறைசார் கலைஞர்கள் ஆகியோர்களுடன் சிறந்த முறையில் தொடர்புகளையும் ஊதியங்களையும் பேணி அவர்களின் உதவிகளின் ஊடாக இச் சஞ்சிகையானது உலகம் பூராகவும் வெளியிடப்பட்டு வருகின்றது.

இச்சஞ்சிகையின் பிரதான நோக்கங்களாக அமைவது அமெரிக்காவில் வாழும் அனைத்து பிரிவுகள் மற்றும் பரம்பரையினரிடையே வேற்றுமையில் ஒற்றுமையாக இந்து ஒற்றுமையை வளர்ப்பது, உலகெங்கிலும் உள்ள இந்துக்களுக்கும், இந்து மதத்தில் ஆர்வமுள்ள மக்களுக்கும் தெரிவிக்கவும், ஊக்கப்படுத்தவும், இந்து மதம் பற்றிய கட்டுக் கதைகள், மாயைகள் மற்றும் தவறான தகவல்களை அகற்றல், புனிதமான வேதங்களையும், இந்து மதத்தையும் பாதுகாத்தல் மற்றம் மேம்படுத்தல், நடந்து கொண்டிருக்கும் ஆன்மீக இந்து மறுமலர்ச்சியை வளர்ப்பதற்கும், கண்காணிப்பதற்கும் உதவுகின்றது, சனாதன தர்மத்தை வளர்க்கும் இந்து தலைவர்கள் மற்றம் கல்வியாளர்களுக்கான ஆதாரத்தை வெளியிடுதல், நிகழ்வுகள் பற்றிய அறிக்கைகளை அனுப்புவதன் மூலம் இந்த சேவையில்

சேரவும் மற்றும் மற்றவர்களை குழுசேர ஊக்குவித்தல் போன்ற பல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இச் சஞ்சிகையானது வெளிவருகின்றது.

**அன்பு நெறி சஞ்சிகை**

அன்புநெறி சஞ்சிகையானது கனடா சைவ சித்தாந்த மன்றத்தின் ஆன்மீக மாத வெளியீடாகும். இவ் இதழின் ஆசிரியராக திருமதி வடிவழகாம்பாள் விசுவலிங்கம் அவர்கள் காணப்படுகின்றார். நிர்வாக ஆசிரியர் சிவநெறிச் செல்வர் திரு.தில்லையம்பலம் விசுவலிங்கம் உள்ளார். இவ் உதவி ஆசிரியர் திருமதி அநிதா திருமுருகா உள்ளார். இதழின் வெளியீடு 1995 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக இன்று வரை வெளிவருகின்றது.

அன்புநெறி சைவத் தமிழ் அறிஞர்களின் ஆன்மீகக் கட்டுரைகளையும், சைவத்தமிழ் இலக்கியங்களையும் கனடா சைவ சித்தாந்த மன்றம் தொடர்பான தகவல்களையும் உள்ளடக்கியதாக வெளிவருகின்றது. இன்றைய காலத்தில் இளைஞர் முதல் முதியவர் வரை அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய அரிய ஆன்மீக சிந்தனைகளை சஞ்சிகை வழங்குகிறது. அன்புநெறியின் வாசகர்களாகச் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரைக் காணப்படுகின்றனர். அன்புநெறி சிவ மணமும், தமிழ் மணமும் பரப்பி வர சிவபெருமான் திருவருளே காரணமாகும் என அன்புநெறி சஞ்சிகைக் குழுவினர் குறிப்பிடுகின்றனர்.

இச்சஞ்சிகையின் அடிப்படை நோக்கமாக அமைவது புலம்பெயர்ந்த நாடான கனடாவில் வளரும் சிறுவர்கள் பண்புடன் வளர்ந்து பயனுற வாழ வேண்டும். என்ற நோக்கோடும் கனடா சைவ சித்தாந்த மன்றத்தின் நிறுவனரும் தலைவருமான சிவத்திரு விசுவலிங்கம் அவர்களும், அவருக்கு துணையாக நிற்கும் அவரின் துணைவியாரும் அன்புநெறி ஆசிரியையுமான வடிவழகாம்பாள் அவர்களும் அளப்பெரும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். அவற்றுள் முதன்மைப் பணியாக அமைவது இச் சஞ்சிகை வெளியீடாகும். இம் மன்றப் பணிகள் மூலமும், சஞ்சிகை வெளியீடு மூலமும் நீண்ட காலமாகச் சிறுவர்களுக்கு சைவ அறிவை ஊட்டி அவர்களை ஒழுக்கத்துடன் சைவநெறியில் நிற்கச் செய்யும் பணியை நோக்கமாகக் கொண்டு இவ் வெளியீட்டினை செய்து வருகின்றனர்

**ஆத்மஜோதி சஞ்சிகை**

இவ் ஆத்மஜோதி சஞ்சிகையானது ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையின் இலவச வெளியீடு ஆகும். இது கனடாவிலிருந்து வெளிவரும் ஆன்மீக காலாண்டு இதழாகும். கனடா இந்து சமயப் பேரவையினர் 2007 இல் சிறப்புடன் நடத்திய திருமுறை மாநாட்டின் சிறப்பு மலராக இவ் ஆத்மஜோதி இதழ் வெளியிடப்பட்டது. இச் சஞ்சிகையானது 1940-80கள் வரை ஈழத்தில் வெளிவந்த ஆத்மஜோதி இதழின் தொடர்ச்சியாகவே இன்றுவரை வெளிவருகின்றது. இதன் ஆசிரியர் நா.முத்தையா ஆவார். இன்று இவ்விதழானது கனடாவிலும் வெளிவருகின்றது. இலங்கையில் வெளியான அளவிலேயே கனடாவிலும் வெளிவருகின்றது.

ஆத்மஜோதி சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் 'கவிராயர்', 'சைவதுரந்தர்' திரு.வி. கந்தவனம் அவர்கள் தலைமையிலும், செயலாளர் சிவ முத்துலிங்கம், பொருலாளர் செ. சோமசுந்தரம் ஆகியோரின் முயற்சியினாலும் கனடா வாழ் சைவத் தமிழர்களின்

பேராதரவுடன் வெளிவந்துள்ளது. இச்சஞ்சிகையின் கௌரவ ஆசிரியர்களாகப் பேரறிஞர் முருகவே. பரமநாதன் அவர்களும், டாக்டர் இ. லம்போதரன் அவர்களும் உள்ளனர். சஞ்சிகையின் எழுத்தமைப்பு திரு.மா. கனகசபாபதி ஆவார். இதனை விவேகா அச்சகம் பதிப்பிக்கின்றது. இச் சஞ்சிகையை ஆத்மஜோதி தியான நிலையம் வெளியிட்டு வருகின்றது.

இச் சஞ்சிகையானது கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர் மத்தியில் சமயக் கல்வியை நிலைநிறுத்தும் வகையில் வெளியிடப்படுகின்றது. சைவத் தமிழர்கள் மத்தியிலும் எதிர்கால தலைமுறையினர் மத்தியிலும் ஆன்மீக சிந்தனைகள், இந்துப் பண்பாடு போன்றவற்றை வளர்க்கும் நோக்கத்துடனும், புலம்பெயர்ந்து வாழும் இந் நாட்டின் கலாசாத்திற்கு அடிமையாகாமல் தமது இந்துப் பண்பாட்டினை பேணும் முகமாகவும், இந்து மதத்தை நிலைகொள்ளச் செய்தல் போன்ற பல்வேறு நோக்கங்களை மையமாகக் கொண்டு இவ் ஆத்மஜோதி சஞ்சிகையானது இன்று வரை வெளிவந்துகொண்டிருக்கின்றது.

## Journal of Hindu Studies Magazine

*Journal of Hindu Studies Magazine* என்பது 2008 இல் நிறுவப்பட்ட ஒரு முக்கோண சக மதிப்பாய்வு செய்யப்பட்ட இந்துக் கல்வி ஆய்வு இதழாகும். இது இந்து ஆய்வுகளுக்கான ஆக்ஸ்போர்ட் மையத்தின் சார்பாக ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக அச்சகத்தால் வெளியிடப்படுகிறது. இதில் இந்து சமயம் தொடர்பான ஆய்வுகள், விமர்சனங்கள், அணுகுமுறைகள், போன்ற உறுதிப்பாடான விடையங்கள் மற்றும் துறையில் உள்ள மேலோட்டமான சிக்கல்களினைத் தீர்க்கும் கருப்பொருட்கள் மீது கவனம் செலுத்துவதாக அமைகின்றது. இது ஒரு ஆய்வு இதழாகும். இச் சஞ்சிகை ஆண்டுக்கு மூன்று இதழ்களை வெளியிடுகின்றது. ஒவ்வொரு இதழிலும் ஏறக்குறைய ஆறு கட்டுரைகள் இடம்பெறும். மேலும் புத்தக மதிப்புரைகள், அவ்வப்போது ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் செயல்பாட்டில் உள்ள பணிகள் பற்றிய அறிக்கைகளும் காணப்படும். இந்து ஆய்வுகளின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய இவ்விதழில் வரலாறு, தத்துவவியல், இலக்கியம் மற்றும் கலைகள், மானுடவியல், சமூகவியல், தொல்லியல் மற்றும் மத ஆய்வுகள் ஆகியவை அடங்கும்.

இந்து ஆய்வுகளுக்கான விமர்சன அணுகுமுறைக்கான அர்பணிப்புடன் செயல்படுகிறது. இது துறையில் உள்ள மேலோட்டமான சிக்கல்களைத் தீர்க்கும் வருடாந்திர கருப்பொருட்களில் கவனம் செலுத்துகிறது. தங்களின் சொந்த ஆராய்ச்சியின் முக்கிய கேள்விகள் மற்றம் சிக்கல்களை ஆராய்வதில் அறிஞர்களின் பரந்த சமூகத்தை இணைப்பதன் மூலம் ஆக்கபூர்வமான இடைநிலை உரையாடலுக்கான ஒரு மன்றத்தை உருவாக்குவதே இந்த இதழின் நோக்கமாகும்.

### கலசம் சஞ்சிகை

சைவ முன்னேற்றக் கழகத்தினால் வெளியிடப்படும் இக் கலசம் சஞ்சிகையானது 1993 ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை வெளிவரும் ஓர் இதழாக அமைகின்றது. கடந்த இருபத்தொன்பது ஆண்டுகளாகக் கலசம் எனும் இவ்விதழ் லண்டனில் இருந்து வந்துகொண்டிருக்கிது. சைவமும் தமிழும் எதிர்கால சந்ததியினரிடத்தில் ஆழ

வேரூன்றுவதற்கு யாது செய்ய வேண்டும் என்பது பற்றிக் கலசம் கூறுகிறது. சைவத் தமிழ் பண்பாடு கொண்ட சமூகம் நின்று நிலைப்பதற்கும் படிப்பவர்கள் பயன் கொள்வதற்கும் தக்க வகையில் சைவத்தமிழ் பண்பாடுடைய பிரதேசங்களில் அனைவரது கரங்களிலும் கலசம் கிடைக்கின்றது. இது ஒரு காலாண்டிதழ் ஆகும். இந்த இதழின் இணை ஆசிரியர்கள் மு. நற்குண தயாளன் மற்றும் ச. ஆனந்த தியாகர், நிர்வாகத் தொடர்பு வ. இ. இராமநாதன், பொருளாதாரத் தொடர்பு சிவ. அசோகன், பொது மக்கள் தொடர்பு மாணிக்கம். சுரேஷ், மகளிர் பகுதித் தொடர்பு செல்வி. திருச்செல்வ உமா மூர்த்தி போன்றோர் காணப்படுகின்றனர்.

இவர்களின் கைவண்ணத்தில் உருவாகும் “கலசம்” சஞ்சிகையானது எழுத்துலகில் ஒரு புதிய உணர்வையும், ஏற்படுத்தும் என நம்பப்படுகின்றது. பல்வேறு ரசனை உணர்வு கொண்ட தமிழ் மக்கள் வாழும் இந்நாட்டிலும், மற்றைய ஐரோப்பிய நாடுகளிலும் மக்களின் உள்ளத்தைக் கவரக்கூடிய வகையில் இச்சஞ்சிகை பல படைப்புக்களை வெளியிடுகின்றது. இதுவரை காலமும் ஐரோப்பிய நாடுகளில் மாத்திரம் இன்றுவரை வெளிவந்து கொண்டிருந்த இச் சஞ்சிகையானது சென்ற வருடத்தில் இருந்து இலங்கையிலும் வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

நாள்தோறும் வளர்ந்து வேரூன்றி தலவிருட்சமாய் கிளைபரப்பி சைவ மக்களின் மனங்களை தன்னிடம் அழைக்கும் சைவ முன்னேற்றச் சங்கத்தின் உயர்ந்த நோக்கங்களின் எழுத்துருவமாக உருவாக்கப்பட்டதே இக் கலசம் சஞ்சிகை ஆகும். சைவ விழுமியங்கள் எங்கெல்லாம் நெறிமுறை பிறழாது பின்பற்றப்படுகிறதோ அங்கெல்லாம் பண்பாடுடைய மனிதர்களைக் கொண்ட சமூகம் உருவாகும். அத்தகைய சமூகத்தை எல்லா இடங்களிலும் உருவாவதற்கு ஏற்ற வகையிலேயே கலசம் வெளிவந்துகொண்டிருக்கிறது. சிறியவர்கள் முதல் பெரியவர் வரை படித்துப் பயன் கொள்ளத்தக்க வகையில் வெளிவருகிறது.

**சிவஒளி**

இது பிரான்ஸைக் களமாகக் கொண்டு வெளிவரும் ஓர் ஆன்மீக சஞ்சிகை ஆகும். இச் சஞ்சிகை மாத மின்னிதழாக வெளிவருகின்றது. ஆரம்ப காலங்களில் மாதத்திற்கு ஒருமுறை வெளிவந்த இவ்விதழானது தற்பொழுது காலாண்டிதழாக வெளிவருகின்றது. இதன் முதல் இதழானது 2020 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதி தமிழரின் திருநாளாம் தைப்பொங்கல் தினத்தன்று வெளியானது.

தென்கைலை ஆதீனத்தின் சிறப்பு உறுப்பினராகவும், திட்டமிடல் மேம்பாடு தொடர்பான அனைத்துலக ஒருங்கணைபாளராகவும் பணியாற்றும் பிரான்ஸில் உள்ள திரு.குகன் குணரத்தினம் அவர்களின் சிறப்புத் திட்டங்கில் ஒன்றாகவே சிவஒளி மின்னிதழ் வெளியீடு இடம்பெறுகிறது. இச்சஞ்சிகையின் சிறப்பாக அமைவது அதன் அட்டைப்படம் தெய்வீகமாக ஒளிபெற்றிருத்தல் ஆகும். இதன் அட்டையின் முன்பக்கத்தில் வாசகரை ஈர்க்கும் வகையிலான சில கட்டுரைத் தலைப்புகளை கொடுத்திருத்தல் இதழாசிரியரின் பத்திரிகை உத்தியைக் காட்டுகிறது. இவ் இதழ் தொடர்பான ஆலோசனையினை தென்கயிலை ஆதீனம் குரு முதல்வர் அகத்தியர் அடிகளார் அவர்கள் வழங்குகின்றார்.

சிவஒளி சஞ்சிகையின் பிரதான நோக்கமாக அமைவது என்னவெனில் சைவ சமயத்தினுடைய குறிக்கோள்கள் அதாவது ஆன்மீகம் சம்பந்தமான குறிக்கோள்களை மக்களிடம் இலகுவான முறையில் எடுத்துச் சொல்லுதல் ஆகும். ஆன்மீகத்தோடு மட்டுமல்லாது இந்து சமய வரலாறுகளை, பண்டைய வரலாறுகள் மற்றும் இன்று அழிந்து போனவை, திட்டமிட்டு மறைக்கப்பட்டவை போன்ற விடயங்களை வெளிக்கொண்டு வருதல் மற்றம் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு வெளிவருகின்றது.

**மின்மினி சஞ்சிகை**

சுவிற்சர்லாந்தில் வெளிவரும் இச் சஞ்சிகையானது ஓர் ஆன்மீக இதழாகும். இது ஒரு மாத இதழாக வெளிவருகின்றது. அதுமட்டுமின்றி இது ஒரு இலவச வெளியீடாக வெளிவருகின்றது. இவ்விதழ் இன்றுவரை வெளிவந்து கொணடே உள்ளது.

இதழாசிரியர் விபரம்

ஆசிரியர் : தில்லை சிதப்பரப்பிள்ளை

இணை ஆசிரியர் : வே. கணேசகுமார்

அச்சுப் பதிப்பு : கவிஞர் பதிப்பகம்

மாதாந்த இலவச வெளியீடாக வெளிவரும் இம் மின்மினி சஞ்சிகையின் இலக்காக அமைவது "புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள்டையே உள்ள திறமைகளை வெளிக்கொணர்வதற்கு முடிந்தளவு முயல்வதும், எமது கலை, கலாசாரம், பண்பாடுகளை பாதுகாப்பதற்கு ஊக்கமளிப்பதும், தமிழ் அன்பனர்கள் எல்லோர்க்கும் எவ்வித வேறுபாடின்றி தமது நல்லெண்ணங்களையும், ஆற்றல்களையும் வெளிப்படுத்த உதவுவதுமே மின்மினியின் இலக்கு" ஆகும்.

**முடிவுரை**

புலம்பெயர் தமிழர்கள், மேலை நாடுகளில் இருந்து வந்த அறிஞர்கள், மேலை நாடுகளுக்குச் சென்ற இந்து மத ஆளுமைகள், கலாசார உலகமயமாக்கல், இந்துமத இயக்கங்களின் செல்வாக்கு, மேலைத்தேசத்தவர்களின் இந்து ஆச்சிரமங்கள், சுற்றுலா, கலையாக்க செயற்பாடுகள் போன்ற காரணிகள் மூலமும் இந்துப் பண்பாடு மேலைநாடுகளில் பரவியது எனலாம். அதிலும் குறிப்பாக நம் நாடுகளில் இருந்து மேலை நாடுகளுக்கு சென்றவர்கள் அந் நாடுகளில் தங்கள் பண்பாட்டினைப் பேணும் வகையிலும் தம் பண்பாட்டுக் கூறுகளை எதிர்கால இந்து சந்ததியினர் வாழ்வில் வேரூன்றச் செய்யும் நோக்கில் இந்து மதம் சார்ந்த அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களை உருவாக்கி இவ் அமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் ஊடாக இந்துக் கல்வி மற்றும் கலை, கலாசாரம், விழுமியங்கள் என்பவற்றைப் போதித்தனர், இவ்வகையில் இந்து மதத்தின் அடிப்படை அம்சங்களை மக்கள் மத்தியில் இலகுவான முறையில் எடுத்துச் செல்ல இவ் அமைப்புகளுக்கு ஓர் ஊடகம் தேவைப்பட்டது. இதன் அடிப்படையிலேயே இந்து சஞ்சிகைகளின் தோற்றம் இடம்பெற்றது.

இச்சஞ்சிகைகளின் தோற்றத்தினாலேயே இந்து மதச் சிந்தனைகள் இலகுவான முறையில் மக்களிடம் சென்று அடைகின்றன எனலாம். புலம் பெயர்ந்து சென்றவர்கள் தாம் சென்ற நாட்டின் கலாசாரத்திற்கு அடிமையாகிவிடாமல் அவர்களின் பண்பாட்டினை பேணும் வகையில் பல பணிகளை இச் சஞ்சிகைகள், ஆய்வு இதழ்கள் மேற்கொண்டு வருகின்றன என்றால் அது மிகையாகாது. எத்தகைய தடைகள் வந்தாலும் அவற்றினைத் தாண்டி தான் எடுத்த பணியின் நோக்கத்தை நிறைவேற்றுவேன் என்பதற்கு அமைய இன்று வரை வெளிவந்து கொண்டே உள்ளன. இவை அனைத்திற்கும் காரணம் சொந்த நாட்டினைக் கடந்து மேலைநாடுகளில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழர்களே ஆவர். இவைமட்டுமின்றி மேலை நாட்டினரும் இந்துப் பண்பாட்டின் ஆழமான அர்த்தங்களையும், சிறப்புக்களையும் புரிந்து கொண்டு அதனை உலகறியச் செய்யும் நோக்கில் பல சஞ்சிகைகளை வெளியிடுகின்றனர். எடுத்துக்காட்டாக காவாய் இந்து ஆதினத்தினால் வெளிவரும் Hinduism Today சஞ்சிகையினைக் குறிப்பிடலாம்.

இவ்வகையில் இம் மேலை நாடுகளில் வெளிவரும் இச் சஞ்சிகைகள் அந்நாடுகளில் வாழும் தமிழர்கள் வாழ்வில் மாத்திரமின்றி அந்நாட்டு சுதேசிகள் மத்தியிலும் இந்து மத சிந்தனைகளையும் பண்பாட்டு அம்சங்களையும் கொண்டு சேர்ப்பதில் இன்றுவரை செயல்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். எமது நாட்டு இந்து சுதேசிகள் மத்தியிலும் மதத்தின் முக்கியத்துவத்தை எடுத்து சொல்வதாகவும் அமைகின்றது. அதாவது இந்து மதம் தோன்றி வளர்ந்த எமது நாடுகளில் உள்ள இந்துக்கள் வேறு மதங்களுக்கு மதம் மாறுகின்ற அதேவேளை மேலை நாடுகளில் வாழும் தமிழர்களும், மேலைத்தேய மதச் சிந்தனைகளைக் கொண்ட வெளி நாட்டினரும் இந்து மதத்தை பின்பற்றி வளர்க்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை அந் நாடுகளில் இந்து மதம் கொண்டுள்ள செல்வாக்கினை எடுத்துக்காட்டுகிறது.

இவ்வகையில் இனிவரும் காலங்களில் இவ் இந்து சமயம் சார்ந்த சஞ்சிகைகள் தொடர்ந்து வெளிவருகின்ற வேளைகளில் மேலைத்தேய நாட்டவரின் பண்பாடானது இந்து மதப் பண்பாட்டோடு கலக்காமல் மற்றும் இந்துப் பண்பாட்டிலே தனது தாக்கத்தினைச் செலுத்தாமல் இருப்பதற்கும் இந்து மதப் பண்பாட்டிலே சிதைவுகள் ஏற்படாமல் இருப்பதற்கும் இது போன்ற சஞ்சிகைகளினதும் இச் சஞ்சிகைகளில் வெளிவரும் ஆக்கங்களினதும் பங்களிப்புகள் மிகவும் அவசியமான ஒன்றாக உள்ளது.

ஆகையினால் இச் சஞ்சிகைகள் தொடர்ந்து எத்தடையுமின்றி வெளிவருவதற்கு இவற்றிற்கான வாசகர்கள் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும். அதாவது இச் சஞ்சிகைகள் மற்றும் ஆய்வு இதழ்கள் என்பன இலகுவான முறையில் அனைவரிடத்திலும் கிடைக்கக்கூடிய வகையில் இணைய விற்பனைத் தளங்கள் மூலம் (Amazon.com) பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் கிடைக்கப்பெறச் செய்தல் சிறந்த ஒன்றாக காணப்படும். ஏனெனில் இவை அனைவர் கைகளிலும் இலகுவான முறைகளில் சென்றடையும். இவற்றை வாசிப்பதற்கான ஊக்கத்தினையும் வளங்குவதோடு இந்து மதம் மென்மேலும் வளர்ச்சி பெறவும் வாய்ப்பினை நல்கும் என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**உசாத்துணை நூல்கள்**

இராமதாஸ்,டீ.எஸ்.ஆர். (1981). *இந்தியப் பண்பாடு.* தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம்.

கந்தவனம்,வி.(2000). *கனடாவில் சைவ சமயம்.* ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை.

கேசவன்,எஸ். (2013). *மேனாட்டுப் பல்கலைக்கழகங்களில் இந்து நாகரிகம், ஆயதனம்.* தேசிய கல்வி நிறுவகம்.

சுதர்சினி,பே. (2021). இந்துப் பண்பாடு தொடர்பான மேலைத்தேசத்தவரின் பங்களிப்புகள். *இலக்கியச்சுடர்.*

சுபராஜ்,ந.(2012). *இந்து மதமும் மேற்கத்தேயவர்களின் ஆய்வுகளும்.* அறிவகம்.

முகுந்தன்,ச.(2021*).இந்துக் கற்கைகளை வளமூட்டிய தேலைத்தேசத்து ஆளுமைகளும் ஆய்வுகளும்.*குமரன் புத்தக இல்லம்.

# Literature and Contemporary Voices

# பேராசிரியர் வ. மகேஸ்வரனின் தமிழ் இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் - ஒரு நோக்கு

**சபேசன் சுகன்யா, ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்**
தமிழ்க் கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
sukanjasapesan@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

பேராசிரியர் வ. மகேஸ்வரனின் எழுத்துக்கள் ஈழத்து ஆய்வு உலகில் முக்கியத்துவமுடையனவாகவும் தனித்துவமிக்கனவாகவும் அமைகின்றன. அந்தவகையில், இவ்வாய்வானது பேராசிரியர் வ. மகேஸ்வரனின் ஆய்வுக்கட்டுரைகளைக் கால அடிப்படையில் பகுத்து ஆராய்கின்றது. இவரின் தமிழ் இலக்கிய ஆய்வுக் கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டு அவை குறித்த கருத்துநிலையினையும் கண்ணோட்டத்தினையும் வெளிக்கொணரும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக 1990 - 2022 வரை இவரால் எழுதப்பட்ட கட்டுரைகள் இவ்வாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மகேஸ்வரன் எழுதிய தமிழ் இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் பற்றிய முழுமையான ஆய்வுகள் எதுவும் இதுவரை வெளிவரவில்லை என்பது ஆய்வுப்பிரச்சினையாக அமைகின்றதுடன் இவ்வாய்வானது விவரண மற்றும் பகுப்பாய்வு முறையியல் என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்விற்காக அவருடனான செவ்வி மற்றும் ஆண்டு மலர்கள், சஞ்சிகைகள், பருவ இதழ்கள், நூல்கள், ஆய்விதழ்கள், என்பவற்றில் வெளிவந்த மகேஸ்வரனின் ஆய்வுக்கட்டுரைகள் முதலாம் நிலைத்தரவுகளாகவும், வ. மகேஸ்வரன் பற்றி இதழ்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், பணிநயப்பு விழா மலர், வானொலி நிகழ்ச்சிகள் என்பவற்றில் வெளியான கட்டுரைகள், இணையத்தினூடாக பெற்றுக்கொண்ட வ. மகேஸ்வரன் பற்றிய தகவல்கள் என்பன இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. பேராசிரியர் வ. மகேஸ்வரனின் தமிழ் இலக்கிய ஆய்வுக்கட்டுரைகள் பெறும் முக்கியத்துவத்தினை இலக்கிய உலகிற்கு வெளிக்கொண்டு வருதல் என்ற அடிப்படையில் இவ்வாய்வானது முக்கியத்துவம் பெறுகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *பேராசிரியர் வ. மகேஸ்வரன், இலக்கியப்படைப்புக்கள், படைப்பாளுமை, ஆய்வுக்கட்டுரைகள், ஆய்விதழ்கள்*

## அறிமுகம்

பேராசிரியர் வ.மகேஸ்வரனின் தமிழ் இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் - ஒரு நோக்கு என்ற தலைப்பில் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாய்வானது ஈழத்து இலக்கிய வரலாற்றில் தனக்கென ஓர் இடத்தைப் பெற்றுள்ள மகேஸ்வரனின் கிடைக்கப்பெற்ற தமிழ் இலக்கிய ஆய்வுக்கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். பேராசிரியரின் ஆய்வுப்பரப்பு பரந்துபட்டது என்பதனால் முழுமையாக எல்லாவற்றையும் ஆய்வு செய்யமுடியவில்லை. ஆய்வு வரையறை கருதி சில பகுதிகளைச் சுருக்கமாகவும் சில பகுதிகளை விரிவாகவும் கொண்டு இவ்வாய்வு செய்யப்படுகின்றது.

ஞானசேகரன் என்பவரால் 2007ஆம் ஆண்டு “பல்துறைப் புலமையும் ஆற்றலும் மிக்க பேராசிரியர் வ.மகேஸ்வரன்” எனும் தலைப்பில் ஞானம் சஞ்சிகையில் எழுதப்பட்ட கட்டுரையின் மூலமாக பேராசிரியர் வ.மகேஸ்வரனது வாழ்க்கை வரலாறு, இவரது நூல்கள்,

பெற்ற பட்டங்கள், பதவிகள், இவருக்கும் இவரது மாணவருக்கும் இடையிலான நட்புறவுகள், ஞானம் சஞ்சிகையின் வளர்ச்சிக்கு அவருக்கு இருந்த ஈடுபாடு போன்ற விடயங்களை பெற்றுக்கொள்ளமுடிகின்றது. மார்க்கண்டு ரூபவதனன் என்பவர் 2012 ஆம் ஆண்டு ‘‘பன்மைத்துவ சிந்தனாவாதி பேராசிரியர் மகேஸ்வரன்’’ எனும் தலைப்பில் தினகரன் பத்திரிகையில் எழுதிய கட்டுரையினூடாகவும் மகேஸ்வரனின் வாழ்க்கை வரலாறு, அவரது இலக்கியப் படைப்புக்கள், அவருக்குக் கிடைத்த விருதுகள், பாராட்டுக்கள் என்பன வெளிப்படுத்தப்பட்டிருப்பதனை அறிய முடிகின்றது.

‘‘வரகிணி’’ (2017) என்ற பணிநயப்பு விழா மலரிலும், வ.மகேஸ்வரனின் தமிழ் இலக்கிய ஆய்வுகள் தொடர்பாக சிலர் கட்டுரைகளை எழுதியுள்ளனர். அந்தவகையில் ‘‘சோழர் காலத்துக் கோயிலும் சமூகமும்’’ எனும் தலைப்பில் பேராசிரியர் எ.சுப்பராயனு அவர்களும், ‘‘தமிழும் அயலும்’’ எனும் தலைப்பில் கலாநிதி க. இராஜேந்திரம் அவர்களும், ‘‘சோழர் காலத்து இடையர் சமூகம் கோவில் கலாசாரத்தின் புறநிலைத் தொண்டர்கள்’’ எனும் தலைப்பில் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் அவர்களும், ‘‘தமிழ் நாட்டில் வைணவம்’’ எனும் தலைப்பில் பேராசிரியர் க. அருணாசலம் அவர்களும் ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

இராமசாமி என்பவரால் 2018ஆம் ஆண்டு ‘‘பெரியதும் சிறியதும் பண்பாட்டாய்வின் ஒருவகை’’ எனும் தலைப்பில் இலக்கியம் எனும் சஞ்சிகையில் எழுதப்பட்ட கட்டுரையானது மகேஸ்வரனின் ‘பெரியதும் சிறியதும்’ என்ற நூல் பெறுகின்ற முக்கியத்துவத்துவத்தை வெளிப்படுத்தப்படுகின்றது.

**பேராசிரியர் வ.மகேஸ்வரனின் வாழ்க்கையும் இலக்கியப் பிரவேசமும்**

இருபதாம் நூற்றாண்டின் ஈழத்துத் தலை சிறந்த ஆய்வாளர்களுள் வ.மகேஸ்வரனும் ஒருவராவார். இவர் தனது படைப்புக்கள் மூலம் ஈழத்து இலக்கிய உலகில் இற்றைவரை தனக்கென ஒரு இடத்தைப் பெற்றவர். யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தமிழ் இலக்கியச் சூழலில் சிறப்புப் பெற்று விளங்குகின்றார். யாழ்ப்பாணத்தில் கவின்கலைகளிலும் கல்வியிலும் சிறந்து விளங்கும் இணுவிலில் வல்லிபுரம் - ஞானமணி தம்பதிகளுக்கு இரண்டாவது மகனாக 24.06.1955ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தமது ஆரம்பக் கல்வியை சைவ மகாஜனாவிலும் (இணுவில் மத்திய கல்லூரி) இடைநிலைக் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார்.

பேராசிரியர் வ.மகேஸ்வரன் மொழி, இலக்கியம், சமயம், சமூகம், வரலாறு, நாட்டாரியல், சாசனவியல் முதலான துறைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இவற்றில் பல கட்டுரைகள் சர்வதேச மாநாடுகளில் சமர்ப்பிக்கப்பட்டவை. அவர் நூலாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் பல நூல்களை வெளியிட்டுள்ளார். நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளின் ஆசிரியரான இவர், தவில்மேதை தட்சணாமூர்த்தி (2007), தமிழ் நாட்டில் வைணவம் (2007), சோழர் காலக் கோயிலும் சமூகமும் (2007), உருத்திர கணிகையர் (2011), பெரியதும் சிறியதும் (2015),

நீலாவணன் கவிதைகள் (2015), தமிழ்ச் சூழலில் தாய்மாமன் (2011) ஆகிய நூல்களின் ஆசிரியரும் ஆவார்.

இவர் எழுதிய தமிழ் இலக்கிய ஆய்வுக் கட்டுரைகளை பண்டைய காலம், இடைக்காலம், நவீனகாலம் தொடர்பான இலக்கியக் கட்டுரைகள் எனப் பாகுபடுத்தி நோக்கலாம். எழுதத் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை சமூக விடுதலைச் சிந்தனைகள், அரசியற்கோட்பாடுகள் எனப் பலதரப்பட்ட ஆக்கங்களைப் படைத்துக் கொண்டிருக்கின்றார். இவருடைய ஆய்வுக்கட்டுரைகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வெளியிடப்பட்ட ஆய்வேடுகள், தொகுப்புக்கள், விழாமலர்கள் மற்றும் சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டியல் ஆய்வறிஞராக அடையாளப்படுத்தப்படுகின்ற பேராசிரியர் வ.மகேஸ்வரன் சமயம் சார்ந்தும் இலக்கியம் சார்ந்தும் பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளார். இவற்றுள் அவரது தமிழ் இலக்கிய ஆய்வுக்கட்டுரைகள் பற்றியதாகவே இந்த ஆய்வு அமைகின்றது. ஒவ்வொரு படைப்பாளியும் தனக்கென சில தனித்துவங்களைக் கொண்டு காணப்படுவர். மகேஸ்வரனும் பல ஆளுமைகளையும் தனித்துவங்களையும் ஒருங்கே கொண்டவராகக் காணப்படுகின்றார்.

**பேராசிரியர் வ.மகேஸ்வரனின் தமிழ் இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள்**

பேராசிரியர் வ.மகேஸ்வரன் மொழி, இலக்கியம், சமயம், சமூகம், வரலாறு, நாட்டாரியல், சாசனவியல் முதலான துறைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இவ்வாய்வில் இவரால் எழுதப்பட்ட கட்டுரைகள் காலரீதியாகப் பகுக்கப்பட்டு நோக்கப்படுகின்றன.

**ஆரம்ப காலம்/ செவ்வியல் காலம் தொடர்பான கட்டுரை**

**திருவள்ளுவ மாலை - அதன் சாராம்சம் குறித்து ஓர் உசாவல்**

திருக்குறள் என்ற நூல் தமிழ் கூறு நல்லுலகில் மிகவும் ஏற்புடைமை பெற்றதொன்றாகும். காலங்களையும் கருத்துக்களையும் சமய நெறியினையும் கடந்த பொதுமைநூல் என்பதுதான் அதனது இன்றைய அடையாளமாகும். இந்நூலின் தமிழ்ச் சூழல் ஏற்புடைமை என்பது இருவழிகளில் நிகழ்ந்துள்ளது. ஒன்று திருக்குறள் தமிழ் நூல்கள் யாவற்றுள்ளும் தலைமை நூல் என்பதும்

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

என்ற பாரதியின் கூற்று இக்கருத்து நிலைப்பட்டது. மற்றையது வள்ளுவன் திருவள்ளுவன் ஆகியதும், இன்று அவன் ஐயன் திருவள்ளுவன் ஆனதும் தமிழகத்தில் தமிழின் அடையாளமாக அவரது படிமம் நிலைபேறாக்கம் பெற்றதுமாகும். இவ்விரு ஏற்புடைமைக்கும் அடிப்படையான முன் வரலாறு ஒன்று இதற்குண்டு என்றும் அந்த முன் வரலாற்றில் திருவள்ளுவ மாலை என்ற தொகுப்புப் பாடல்களின் வகிபாகம் பற்றியே இக்கட்டுரையின் மையப்பொருள் அமைந்துள்ளது.

அதாவது திருக்குறள் என்பது தமிழின் அடையாளம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை என்றும் அது தோன்றிய சூழல், அதன் மதம் முதலான கருத்தாடல்கள் பற்றிப் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் தமிழ்ச் சூழலில் நிகழ்ந்தபோதும், நல்ல நூல் ஒன்று அதன் சிறப்பால் காலங்களை வென்று நிற்கும் என்ற கருத்துக்கு ஏற்ப, தடைகளைத் தாண்டி அது தலையாய நூல்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதையும், திருவள்ளுவ மாலை என்ற வ.மகேஸ்வரனின் இக்கட்டுரை விளக்கி நிற்கிறது. அதன் அருட்டுணர்வாலும், திருக்குறளின் சமூக இசைவாக்கத் தன்மையாலும் தமிழின் அடையாளமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதைப் பாடல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன என்பதும் இக்கட்டுரையின் மூலம் தெளிவுபடுத்துகின்றார்.

‘திருக்குறள்’ தமிழின் அடையாளமாக எவ்வாறு மாறியது என்பது பற்றி நோக்குவதற்கு திருவள்ளுவமாலை பெரிதும் துணை புரிகின்றது. திருவள்ளுவமாலை எனும் ஒரு கதை தமிழ்ச் சூழலில் எவ்வாறு நிலவியது என்பதற்கு க.பஞ்சாங்கத்தின் பின்வரும் கூற்றைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

> திருவள்ளுவர் திருக்குறளைப் பாண்டியன் அவையில் அரங்கேற்றம் செய்யும்போது, சங்கப் பலகையில் இருந்த புலவர்கள் வள்ளுவரின் குலம் குறித்து நகைத்தனர் எனவும் உடனே சங்கப் பலகை குறளளவு சுருங்கியதால் புலவர்கள் அனைவரும் பொற்றாமரைக் குளத்துள் வீழ்ந்தனர் எனவும் உடனே தவறுணர்ந்து நூல்நயம் கேட்டு வியந்து ஆளுக்கொரு வெண்பா பாடினர் எனவும் அவ்வெண்பாக்களின் தொகுப்பே ‘திருவள்ளுவமாலை’ எனும் ஒரு கதை தமிழ்ச் சூழலில் நிலவியது (மகேஸ்வரன்.வ, முப்பால், 2011: 46).

இந்த மாலை பற்றித் தமிழ்ச் சூழலில் பல கருத்துக்கள் நிலவி வந்துள்ள தன்மையை சில அறிஞர்களது கருத்துக்களை எடுத்துக்காட்டி விளக்கிச் செல்கின்றார். இதனைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> டி.வி பண்டாரத்தார், வ.உ.சிதம்பரப்பிள்ளை முதலியோர் இப்பாடல்கள் பிற்காலப் புலவர்களால் இயற்றப்பட்டவை என்கின்றனர். எம்.சீனிவாசக ஐயங்கார் இப்பாடல்கள் அனைத்தையும் ஒருவரே கி.பி 9ஆம் நூற்றாண்டில் இயற்றி இருக்க வேண்டும் என்கிறார். ஏ.வி.சுப்பிரமணிய ஐயர் சங்ககாலப் புலவர்களால் பாடப்பட்டு ஒன்பதாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டு திருவள்ளுவமாலை எனப் பெயர் பெற்றிருக்கலாம் எனக் கருதுகின்றார்.
>
> (மகேஸ்வரன்.வ, முப்பால், 2011: 46)

இக்கருத்துக்களுக்குப் புறம்பாக திருக்குறள் நூற்பதிப்புக்கள் பல இதுவரை வெளிவந்தபோதும் அப்பதிப்புக்களின் இறுதியிலேயே இது இடம்பெற்றிருப்பதால் இது பாயிரத்துக்குரிய தகுதியுடையதல்ல என்றும் குறிப்பிடுவர். திருவள்ளுவமாலையில் இடம்பெற்றுள்ள பாடல்களை வகைப்படுத்தும்போது அவை பல்வேறு விடயங்கள் பற்றிப் பேசுகின்ற தன்மையையும் இக்கட்டுரையின் மூலம் ஆசிரியர் கட்டமைக்க முயல்கிறார். அதாவது திருக்குறளின் யாப்பு, அதன் இயல் வைப்புமுறை, அது நாற்பொருள் பயக்கும் தன்மை, அது வேதத்திற்குச் சமனாக வைத்து எண்ணப்படல், அதன் சிறப்பு எனப் பல்வேறு

கோணங்களில் திருக்குறள் நோக்கப்பட்டதையும், அது விமர்சன முறையில் நோக்கப்பட்டதையும் இவர் ஆராய்ந்துள்ளார். அதாவது திருக்குறளின் உருவம், உள்ளடக்கம், பயன், சிறப்பு முதலான விடயங்களை இப்பாடல்கள் வெளிப்படுத்தின என்பது இவரது கருத்தாக உள்ளது.

அதுமட்டுமன்றி திருவள்ளுவமாலை குறளையும், வேதத்தையும் ஒருசேர ஒப்பிடுவதைப் பல பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன என்ற தன்மையையும் இக்கட்டுரையின் மூலம் விளக்குகின்றார். இதற்கு உக்கிரப் பெருவழுதியார் பாடல், கோதமனார் பாடல், வெள்ளிவீதியார் பாடல், செயலூர் கொடுங்கண்ணரது பாடல், வண்ணக்கச் சாத்தனார் பாடல், பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடல் போன்றோரது பாடல் வரிகளினை ஆதாரங்காட்டிச் செல்கின்றார். எது எவ்வாறாயினும் இங்கே குறளுக்கான அகில பாரத நூல் அந்தஸ்தை நிலை நிறுத்துவதே பெருந்தேவனாரது கருத்து என எண்ண இடமுண்டு.

திருவள்ளுவமாலையில் குறிப்பிட்ட விடயங்களுக்குப் புறம்பாகத் தமிழ்ச் சூழலில் திருக்குறளின் ஏற்புடைமை பற்றி நோக்குவதன் அவசியத்தைப் பின்வரும் அவரது கருத்தின் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

> திருவள்ளுவமாலையில் வேதம் மனுஷ்மிருதி பாரதம், இராமகதை ஆகியவற்றுடனேயே திருக்குறள் ஒப்பிடப்பட்டுள்ளது. இந்நூல்கள் தமிழ்ச் சூழலில் நிலவினவேனும், அவை தமிழ் மொழி மூல நூல்களல்ல. அகில பாரத பெருநீரோட்டத்துள் திருக்குறளையும் நுழைத்து அதற்கான மேல்நிலையாக்க அங்கீகாரம் பெறச் செய்வதற்கான முயற்சி அல்லது திருக்குறளை முன்னிறுத்திய தமிழ் நூல் தலைமைக்கான செயற்பாடுகளாக இவற்றைக் கட்டமைக்க முடியும் (மகேஸ்வரன்.வ, முப்பால், 2011: 51) என்று குறிப்பிடுகின்றார்.

திருக்குறள் தமிழ்ச் சூழலுள் இசைவாக்கம் பெறுவதற்கு செய்யப்பட்ட முயற்சிகளாகப் பின் நாட்களில் எழுந்த பாடல்களை நோக்க முடியும் என்கின்ற தன்மையையும் விளக்கியுள்ளார். அதாவது ‘நல்வழியில்’ ஔவையாரால் பாடப்பட்ட பாடல் ஒன்றினை எடுத்துக்காட்டி அப்பாடல் வேதத்தை முதன்மையாகக் கொண்டாலும், தேவாரம், அகத்தியம், திருக்கோவையர், திருவாசகம், திருமந்திரம் ஆகிய தமிழ்ச் சூழலில் எழுந்த நூல்களுடன் ஒப்பிடுவது திருக்குறளின் தமிழ் மயப்பாட்டை வெளிப்படுத்துவதாக உள்ளது என்கிறார்.

அதுமட்டுமன்றி உமாபதி சிவாச்சாரியாரால் பாடப்பட்டதாகக் குறிப்பிடப்படும் ஒரு பாடல் தமிழ் நூல்கள் பலவற்றுடன் திருக்குறளை ஒப்பிடுகின்றது என்று பாடல் வரியினை ஆதாரங்காட்டியுள்ளார். அதாவது இதிலும் வேதம் பற்றிய கூற்று இல்லை என்பதும், தமிழ்ச் சூழலில் எழுந்த பிரதானமான பலவகை நூல்கள் இடம்பெற்றிருப்பதையும் அவதானிக்கலாம் என்பதனையும் எடுத்துக்கூறி இது தமிழ்ச் சூழலின் ஏற்புடைமைக்கான வெளிப்பாடு என்ற கருத்தையும் குறிப்பிடுகின்றார்.

எனவே திருக்குறள் என்பது தமிழின் அடையாளம் என்பதையும் அதனது பல்வேறு கருத்தாடல்கள் பற்றிப் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் தமிழ்ச் சூழலில் நிகழ்ந்தபோதும்

நல்ல நூல் அதன் சிறப்பால் வென்று நிற்கும் என்ற கருத்துக்கேற்ப பல தடைகளையும் தாண்டி தலையாய நூல்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதனையும் திருவள்ளுவமாலை என்ற இக்கட்டுரை விளக்கி நிற்கின்றது.

**இடைக்காலம் தொடர்பான கட்டுரை**

**சீறாப்புராணத்தில் உலா - பழமையும் புதுமையும்**

பாட்டுடைத்தலைவன் ஒருவனது தன்னிகரில்லாத சிறப்புக்களை விரித்துரைப்பதற்குத் தமிழ்ப்புலவர்கள் பல்வேறு இலக்கிய வடிவங்களைக் கையாண்டனர். பொதுப்படையாகப் பேரிலக்கியம், சிற்றிலக்கியம் பேசப்பட்டபோதும், சிற்றிலக்கியங்கள் பலவகையான உத்திகள் ஊடாகப் பல்வேறு வகையினவாக வெளியாகின. அந்தவகையில் உலா, பிள்ளைத்தமிழ், தூது, மெய்க்கீர்த்தி, பரணி முதலானவையாக அவை வடிவமைக்கப்பட்டன. பாட்டுடைத் தலைவன் மீது கொண்ட ஈடுபாட்டைத் தம் புலமை நெறியினூடாகப் புதுப்புது உபாயங்களைப் புகுத்திய வெளிப்பாட்டுத்திறன்களின் அடையாளமே இவ்வகையான வடிவங்கள் எனலாம்.

உலா என்பது பொது வழக்கில் இடம்பெறும் ஒரு நிகழ்வாகும். அரசர் இராஜ வீதிகளில் உலா வருவதும், பின்னர் கடவுளர் படிமங்கள் திருவீதிகளில் உலாவருவதும் மரபு. இந்த மரபு இலக்கியத்தின் பாடுபொருளாக அமைந்தபோது ‘உலா’ என்ற தனி இலக்கிய வடிவம் பிறந்தது. இயல்பான நிகழ்ச்சி ஒன்றுக்கு கற்பனை வடிவம் கொடுக்கும் போது அதில் பல்வேறு அழகியல் அம்சங்களும் சேர்வது இயல்பு. இந்த வகையிலேயே உலா என்ற இலக்கிய வடிவம் பின்னாட்களில் கட்டமைக்கப்பட்டது எனலாம்.

சீறாப்புராணத்தில் உலாப்பிரபந்தக் கூறுகளூடாக உமறுப் புலவர் படைத்த புதுமையையும், உலாப்பிரபந்தத்தின் வரையறையையும், தமிழ்ச் சூழலில் உலா எனும் இலக்கிய நெறிக்கு இருவகையான தன்மைகள் உண்டு என்பதனையும் அவர் பழமையிலும் காலூன்றியவர் என்ற கருத்தமைவினையும் சிறந்த முறையில் வ.மகேஸ்வரனின் இக்கட்டுரை வெளிப்படுத்தி நிற்கின்றது.

முதலில் உலா பிரபந்தத்தின் வரையறையாகத் தொல்காப்பியப் பொருளதிகார நூற்பா அமைகின்றது என்று அந்த நூற்பாவை எடுத்துக்கூறி, அதற்கு இளம்பூரணர், நச்சினார்க்கு இனியர் கொடுத்த விளக்கங்களையும் கூறிச்செல்கிறார். உலா என்ற இலக்கிய வடிவம் தமிழ் இலக்கிய வரலாற்றில் எவ்வாறு புகழப்படுகின்றது என்பது பற்றி வ.மகேஸ்வரன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> உலா என்ற இலக்கிய வடிவம் தமிழ் இலக்கிய வரலாற்றில் மிகவும் சனரஞ்சகப்படுத்தப்பட்ட புகழ்பெற்ற இலக்கிய வடிவமாகத் திகழ்கின்றது என்பதை அவ்வடிவத்தினுடைய பரவல், அதன் நிலைபேறாக்கம் ஆகிய இரு நிலைகளினூடாகவும் அறியமுடிகின்றது. சேரமான் பெருமாள் நாயனார் எழுதிய திருக்கைலாய ஞான உலா என்ற ஆதி உலா தொடங்கி, 19 ஆம் நூற்றாண்டின் கடைக்கூறுவரை பல வகையில் தனி இலக்கிய வடிவமாக இது எழுதப்பட்டுள்ளது. அதுபோலவே தமிழில் எழுந்த பேரிலக்கியங்கள் பலவற்றிலும் அகக் கூறுகள் இடம்பெற்றுள்ளன (மகேஸ்வரன்.வ, 2011: 215).

பாட்டுடைத்தலைவனின் புகழ், வீரம் முதலிய விடயங்கள் சிறப்பித்துக் கூறப்படுதல் என்பது பொதுவிதி. ஆயின், மகளிர் அவனைக் கண்டு காதல் கொண்டு பலபடக்கூறுவது என்பதே சிறப்பு அம்சம் என்று கூறுகின்றார். அதாவது, பேதை முதலாகப் பேரிளம் பெண் ஈறாக உள்ள எழுவகைப் பருவ மகளிரும் அவனைக் காதல் கொள்வதே சிறப்பு உத்தியாகும். இவர்கள் யார்? பொதுமகளிரா? கற்புடைய மகளிரா? என்று அறிஞரிடையே கருத்து முரண்பாடுகள் உண்டு எனினும் தத்தமது சார்பு நிலைகளுக்கு ஏற்ப அவர்கள் விளக்கப்படுகிறார்கள். இவ்வாறான சர்ச்சையையும் மீறி இந்த வடிவம் இலக்கியகாரர்களால் பலபடக் கையாளப்பட்டிருப்பதே அதன் ஏற்புடைமையும் அதன் சிறப்புமாகும் என்ற கருத்தினையும் இவ்விடத்தில் பதிவு செய்கின்றார்.

தமிழ்ச் சூழலிலே நிலைபெற்ற அரசில் பண்பாட்டுப் பின்புலத்தில் மட்டுமின்றித் தமிழ்ச் சூழலுள் நுழைந்த வேற்றுப் பண்பாடுகளும் இவ்வாறான இலக்கிய வடிவத்தை ஏற்றுக்கொண்டன என்பதன் வெளிப்பாட்டு வடிவம்தான் சீறாப்புராணத்தில் 'உலா' என்ற வடிவத்தின் உள்வாங்கலும், வெளிப்பாடுமாகும் என்று குறிப்பிடுகின்றார். இதனைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> தமிழகச் சூழலில் இஸ்லாத்தின் வருகை என்பது நீண்ட வரலாற்றைக் கொண்டது எனினும், மத்திய காலத்திலேதான் அவர்களது இலக்கிய வெளிப்பாடுகளை அறிய முடிகின்றது. இதற்கு அவர்களது தமிழ்ச் சூழலின் இசைவாக்கமே காரணமாகியது எனலாம். தமிழ்ச்சூழலுள் நுழைந்த சமண, பௌத்த, சைவ, வைணவ நெறிகள் தமது நெறிகளின் வெளிப்பாடாகத் தமிழை ஊடகமாகக் கருதியது போல இஸ்லாமியரும் கருதினர் (மகேஸ்வரன், 2011: 215).

இவ்வாறானதொரு பின்புலத்தில் நின்றுதான் சீறாப்புராணத்தில் உலாப்பிரபந்தக் கூறுகள் ஊடாக உமறுப் புலவர் படைத்த புதுமையை இக்கட்டுரை ஆசிரியர் நோக்கியுள்ளார். உதாரணமாக 'புராணம்' என்ற சொல்லாடல் இந்திய சமயப் பின்புலத்திலே மிகவும் பிரபல்யம் வாய்ந்தது. அது தொன்மம், புராதனம் என்ற கருத்து நிலையின் அடியாகத் தோன்றியது. பஞ்ச இலட்சணங்களுடன் எழுதப்படுவது, பதினெண்புராணம், உபபுராணங்கள், தல புராணங்கள் எனப் பலபட விரிந்த தன்மையுடையது. தமிழ்ச்சூழலில் புராணங்கள் மொழி பெயர்ப்பாக உருவாகிய செயல் முறைக்குப் புறம்பாக தமிழ்ப்புராண மரபு என்று கருத்தமைப்பு முனைப்புப் பெற்றபோது பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் என்ற புராணங்கள் உருவாக இந்து மத சம்பிரதாயத்தைத் துலக்கம் செய்த ஒரு சூழலினை உள்வாங்கி உமறுப்புலவர் தான் எழுதிய காவியத்துக்கும் 'புராணம்' என்ற பின்னொட்டை வழங்கி தனது மதம் சார்ந்த தொன்மத்தை நிலை நிறுத்தியும் தமிழ் இலக்கிய மரபினூடான இசைவாக்கத்தையும் ஒரு சேரச் செய்தார் என்று குறிப்படுகின்றார்.

அடுத்து சீறாப்புராணத்தில் வரும் மணம்புரி படலம், பாத்திமா திருமணப் படலம் பற்றிய பகுதிகளை விரிவாக நோக்கி அவ்இருவகையான அமைப்புக்களைத் தமிழ்ச் சூழலில் நிலவிய உலாப்பிரபந்தங்களுடன் ஒப்பிடுவதின் அவசியத்தையும் நோக்கியுள்ளார்.

அதுமட்டுமன்றி உலாப்பிரபந்த வகைக்கு இன்னோர் - உதாரணமாக மூவர் உலாவில் குலோத்துங்கசோழன் உலாவிலும் சில பகுதிகளை மிகவும் சிறப்பாக எடுத்துக்காட்டுக்களுடன் விபரிக்கின்றார். இவ்வாறு விபரிக்கப்பட்ட முறைகளில் இருந்து தமிழ்ச் சூழலில் உலா எனும் இலக்கிய நெறிக்கு இருவகையான தன்மைகள் உண்டு என்பதனைப் புலப்படுத்துகின்றார். ஒன்று உலாப்போந்த தலைமகனைக்கண்டு தலைவனது நாட்டம், சொல் என்பன எதிர்ப்பெறாத பருவமகளிர் பலபட உரைத்தல். இரண்டாவது வகை தலைமகனும் பருவ மகளிரும் இடையுறவு கொள்வதாக அமைவதுமாகும்.

மேற்குறித்த கருத்து நிலைகளை உமறுப்புலவர் சரியாக மனதில் பதிவு செய்துள்ளார் என்றும் தமிழ் இலக்கியமரபு அவர் வாழிடச் சூழலாக அமைந்தது எனவும், அதேவேளை இஸ்லாமிய வாழ்க்கைச் சூழல் அவரது இருப்பாக அமைந்தது என்றும் இந்த இருநிலைகளிலும் நின்று கொண்டு ஒன்றையொன்று பிறழாமல் இலக்கியமரபைப் பேணுவதையும் புதுமைகள் நிகழ்த்தியுள்ளதனையும் இக்கட்டுரை ஆசிரியர் எடுத்துக்கூறியுள்ளார்.

அரபு தேசம் செய்த புதுமை ஒன்றில் நடந்தேறிய நிழ்ச்சிகளுக்குத் தமிழ்மரபு பேணி தமிழ்ச் சூழலுக்கு அந்நியப்படாது அதனைக் கட்டமைத்தமை உமறு செய்த முதற் புதுமையாகும். பிறிதொரு பண்பாட்டுச் சூழலில் நடந்தேறிய நிகழ்வை, உள்ளதை உள்ளபடியே உரைக்கும் இன்னோர் பண்பாட்டுச் சூழலுக்கு அந்நியமாகிவிடும் அபாயம் உண்டு. எனவே தாம் விளக்கும் பண்பாட்டுச் சூழலின் தன்மைக்கு எதுவித பங்கமும் ஏற்படாது இசைவாக்கம் செய்வதே சிறப்பான புலமைக்கு அடையாளம் - களனி நாட்டைப் பாட வந்த கம்பன் ‘காவிரி நாடன்ன களனி நாடு’ என்று பாடுவது பண்பாட்டு இசைவாக்கம்தான். பாரசீகக் கவிஞன் உமர்கையாம் தனது ரூப்பையாத்தில் - A Book of verse - என்று எழுதிய வரிகளுக்குக் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை ‘கையில் கம்பன் கவி உண்டு’ என்று எழுதியதும் இந்தப் பண்பாட்டு இசைவாக்கம் தான் என்று குறிப்பிடுகின்றார். இதையேதான் உமறுவும் செய்தார் என்பதனை பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்:

> தான் சொல்வது அரபுலக நிகழ்ச்சியாக இருந்தாலும் தான் வாழும் சூழலின் இலக்கியப் போக்கிற்கேற்ப கூறி - இலக்கிய நிகழ்ச்சிகளை அந்நியப்படுத்தாது, இந்த உலா இலக்கிய உத்தியைப் புகுத்தியமை அவரது பண்பாட்டுப் பின்புலம் சார்ந்த புதுமை காணும் செயற்பாடன்றி வேறில்லை (மகேஸ்வரன், 2011: 221).

அடுத்து முகம்மது நபி (ஸல்) அவர்கள் உலா வரும்போது காணும் பெண்கள் அவரை எவ்வாறு நோக்கியுள்ளனர் என்தனையும் சிறப்பாக நோக்கியுள்ளார். அதாவது தாய்மை உணர்வுடன் அவரை நோக்கியதனையும் மணம்புரி படலத்தில் உலாக்காணும் பெண்கள் பெருமிதம் அடைவதனையும், அரிவைப் பெண்கள் அடைந்த காமத் துயரத்தினையும் சித்திரிக்கப்பட்டிருக்கும் விதத்தினை எடுத்துக்காட்டியுள்ளார். அதுமட்டுமன்றி மூவர் உலா முதலிய உலாக்களில் பாட்டுடைத் தலைவர் இப்பருவப் பெண்களது

செயற்பாட்டை மேலும் தூண்டுவதான செயல்களை ஆற்றியதாகக் குறிப்பிடப்பட்ட விடயத்தையும் அழகாக விளக்கியுள்ளார்.

நிறைவாக தமிழ் இலக்கிய மரபில் தலைவன் தலைவி தொடர்பில் அகத்தினை மரபு பேசப்பட்ட போது எல்லை தாண்டாத பெண் பெரிதும் பேசப்பட்டது. ஆயின் அகமரபு பக்தி மரபாக மாறியபோது பெண்காதல் என்னும் பாவனை, எல்லை தாண்டியது. காமமிக்க கழிபடர்கிளவி - என்ற கருத்தியல் முதன்மை பெற்றது. இதுவே ஆண் நிலைப்பாட்டை மேன்மையுறுத்தும் இலக்கிய செயற்பாடாகவும் கட்டமைக்கப்பட்டது. பின்நாட்களில் இந்த பெண் காதல் என்பது அதீதமான கற்பனை வளத்துடன் இழிவான செயற்பாடுகளுடன் சித்திரிக்கப்பட காமம் மிக்க கழிபடர் கிளவிக்கும் - அதீதமான சித்திரிப்பு நிலைக்கும் இடைப்பட்ட ஒரு இடைமாறுகாலப் பெண் காதலனையே உலாப் பிரபந்தங்கள் வெளிப்படுத்தின. இலக்கியத்தில் மரபும் மாற்றமும் அவசியமானவை என்பதை அவை வெளிப்படுத்தின எனினும் ஆண்நிலைப்பட்ட கருத்தாக்க வளர்ச்சியில் பெண்நிலைப்பட்ட கூற்றுக்களை மிகைப்படுத்திக் கூறும் தொடர் வளர்ச்சியின் ஒரு கூறாக தமிழ் உலாக்கள் அமைந்ததில் வியப்பில்லை. உமறுவும் இந்தப் பெரு நீரோட்டத்துள் உள்வாங்கப்பட்டுள்ளார். எனினும் அவருக்கான சமய மரபு அபி எல்லை தாண்ட விடவில்லை. எனவே தனது இலக்கியத்துள் பெண் காமம் உத்தியை மிக நிதானமாக நின்று படைத்துள்ளார் என்ற கருத்தாக்கத்தினை இவ்விடத்தில் பதிவு செய்துள்ளார்.

அவர் பெண்களின் இயல்பான உணர்வுகளுக்குத் தடை போட்டாரில்லை அவர்களது இயல்புகளை வெளிப்படுத்திய அவர் அவர்களை வரம்பு மீறாமல் படைக்க முயற்சித்துள்ளார். அக்கால இலக்கியப் போக்கில் அவர் நிகழ்த்திய புதுமை இது என்று குறிப்பிடுகின்றார். இன்னோர் வகையிலும் இதனை விளக்குகின்றார். இதனைப் பின்வருமாறு வ.மகேஸ்வரன் குறிப்பிடுகின்றார்:

> இலக்கிய உத்தியில் பெண்களின் கூற்றுக்கள் வழி பாட்டுடைத்தலைவனின் சிறப்புக் கூறல் என்பது தடம்மாறிப் போன சூழல் ஒன்றில் பெண்ணின் மரபு சார்ந்த இருப்பைக் கொச்சைப்படுத்தாது மேன்மைப்படுத்தியதும் அவர் செய்த இலக்கியப் புதுமை எனலாம் (மகேஸ்வரன், 2011:223).

அதுமட்டுமன்றி ஒரு இலக்கியத்தில் தன்னிகரில்லாத்தலைவரே சிறப்புடையவராவர். அவருக்கேயுரிய கல்யாண குணங்களைச் சிறப்பித்தே இலக்கியங்கள் படைக்கப்படுவதுண்டு. இங்கே முகம்மது நபி (ஸல்) அவர்களும் அவரது மருகரும் ஒரே நிலையில் நோக்கப்பட்டு அவ்விருவருக்கும் தனித்தனியே உலா அமைப்புக்களை வகுத்தமை என்று உமர் செய்த இன்னோர் புதுமையினையும் எடுத்துக்கூறியுள்ளார்.

உமறுப்புலவர் தமிழ் இலக்கியச் சூழலுக்குள் நன்கு ஊறித்திளைத்தவர். அது அவரது படைப்பாற்றல் திறனால் புலனாகும். எனின், அவர் தமிழ்ச் சூழல் இஸ்லாமியச் சூழல் எனும் இரு மரபுகளுக்கும் இடையே நின்றுகொண்டு மரபு பிசகாமலும் மரபு வழுப்படாமலும் இலக்கியம் செய்ததே அவரது புதுமை என்ற ஒரு தெளிவான விளக்கத்தினை இக்கட்டுரையின் மூலம் அவதானிக்க முடிகின்றது.

**நவீனகாலம் தொடர்பான கட்டுரை**

**பாரதியாரின் விநாயகர் நான்மணிமாலை**

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையின் செல்நெறியில் மிகப்பெரும் ஆளுமையாக விளங்கியவர் பாரதி. சொல் சுவை, பொருள் முதலியவற்றைப் புதிதாக்கி நவ கவிதை படைப்பதே அவரது தாரக மந்திரமாக விளங்கியது. அவ்வாறே கவிதையையும் படைத்தார். நான்மணிமாலை என்பது நான்கு மணிகள் சேர்ந்த மாலை எனப் பொருள்படும். நான்கு பாவினங்கள் விரவிவர நாற்பது பாடல்கள் அமையப் பாடுவது 'நான்மணிமாலை' என இலக்கிய உலகில் இது அறியப்பட்டது.

''வெண்பா, கலித்துறை, அகவல், விருத்தம் ஆகியவை அந்தாதித் தொடையாய் அமைவது'' எனப் பன்னிரு பாட்டியலும் (257, 259), இலக்கணப் பாட்டியலும் (61) இலக்கணங்கள் கூறுகின்றன. இதில் அடங்கும் பாவினங்களான வெண்பாவும், அகவலும், விருத்தமும், கலித்துறையும், அந்தாதியும் தமிழ் இலக்கியத்தில் நீண்டகாலமாகப் பயின்று வந்த பாவினங்களாகும். இவற்றைச் சேர்த்து நான்மணிமாலை எனப்படும் பிரபந்தம் செய்யும் மரபு நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது. எனினும் இது விஜயநகர நாயக்கர் காலத்தில் பெரு வழக்காக விளங்கியது. ஏதோவொரு சூழலில் பாரதியார் இவ்வடிவத்தைக் கையாண்ட போதும், பாரதியாரின் உள்நின்று இயக்கும் புதுமைக் கவிஞனை இதனூடாகவும் இனங்காண முடிகின்றது. இதுவே பாரதியாரின் கவிதைகளுக்குரிய தனித்துவம்.

நான்மணிமாலையில் ஒரு ஒழுங்குமுறை பின்பற்றப்பட்டுள்ளது. வெண்பாக்களில் பெரும்பாலும் விநாயகரிடம் அபயம் கேட்கும் முறைமை காணப்படுகின்றது. கலித்துறைகளில் விநாயகர் புகழ் பெரும்பாலும் பேசப்படுகின்றது. விநாயகரை வாழ்த்துதல், வரங்கேட்டல், அவன் அருளில் திளைத்தல் ஆகிய அம்சங்கள் விருத்தங்களிற் காணப்படுகின்றன. அகவற்பாக்களிலே விநாயகரின் தனித்துவம், அவனை அடைதலால் ஏற்படும் பயன்கள், அவனது ஏகத்தன்மை அல்லது சகல மதங்களையும் தன்னுள் அடக்கித் தரித்து நிற்கும் தன்மை, அவனிடம் கவிஞர் வேண்டுவன எனப் பலவாறு விடயங்கள் விரிந்து காணப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட அமைப்பியலை அடிப்படையாகக் கொண்டு அவர் விநாயகரிடம் வேண்டுவன, பாரதியாரது கவிதை மதம், விநாயகரைக் காணும் முறைமை, பாரதியாரது ஆத்மீகச் சிந்தனைகளின் வெளிப்பாடு, பக்தி என்பது அவரது ஆன்மீக விடுதலைக்கும், ஆளுமை விருத்திக்கும், சமூக விடுதலைக்கும் எவ்வாறு பயன்பட்டுள்ளது முதலிய அம்சங்களைப் பற்றியதாகவே வ.மகேஸ்வரனின் இக்கட்டுரை அமைந்துள்ளது.

பாரதியாரிடம் ஒரு பொதுமை நோக்கு இருப்பதனை இவர் இக்கட்டுரையில் எடுத்துக்காட்டுகின்றார். அதாவது சகல எல்லைகளையும் கடந்த ஒருமைப் பொருளாக, ஏக பொருளாக விநாயகரை அவர் காணும் முறைமையில் அவர் விநாயகர் மீது கொண்ட பற்றும் விநாயகர் மூலம் சகல கடவுளரையும் இனங்காணச் செய்யும் திறமும் வெளிப்பட்டு நிற்கின்றன. இவ்வாறான பொதுமை நோக்குநிலை பாரதி போன்ற கவிஞருக்கே கைவரப்பெற்றது என்றும் அவர் குறிப்பிடுகின்றார். அதுமட்டுமன்றி தமிழ் நாட்டுச்சித்தர்

தத்துவத்தில் ஈடுபாடு கொண்டவர் பாரதி என்று பாரதியின் இன்னொரு பரிமாணத்தையும் புலப்படுத்தி நிற்கின்றார் இக்கட்டுரை ஆசிரியர்.

மேலும் பாரதியார் விநாயகரிடம் வேண்டுவன தொடர்பாகவும் பெரும் பட்டியல் ஒன்றை வரைந்திருக்கின்றார். எனினும் அதில் தொக்கு நிற்கும் தொனிப் பொருள் தனிப்பட்ட விருப்பும், பொது நோக்கும் என வெளிப்படையாகக் கூறலாம். ஆனால் அவரது தனிப்பட்ட விருப்புகள் கூட சுயதேவைப் பூர்த்தி என்ற நிலையினின்றும் மாறுபட்டு, மானிடத்தைப் பயனுற வாழவைப்பதற்கான வல்லமை கேட்டலாகிய பொது நோக்கை கொண்டிருப்பதனை அறியலாம் என்றும் குறிப்பிடுகின்றார்.

இலக்கிய வடிவத்தினூடே பாரதியார் தமது கவிதையையும் ஆங்காங்கே உரைத்துச் செல்வதனையும் இக்கட்டுரையில் பதிவு செய்துள்ளார். தம்மைச் சோர்வில்லாத கவிஞனாக, முழுநேரக் கவிஞனாக பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திடும் கவிஞனாகச் சுயபிரகடனம் செய்கின்றார் பாரதி என்றும், தனது கவிதைப் பிரவாகம் - பராசக்தியாலும், வாணியின் அருளினாலும் ஏற்பட்டது என்று கூறுவதனையும் எடுத்துக்காட்டுக்கள் மூலம் ஆராய்ந்துள்ளார்.

பாரதியாரது மனவோடையில் உருவாகிய அனைத்துக் கவிதைகளும் இன்றும் அக்கினிக் குஞ்சுகளாகி, பொய்மையும், ஏமாற்றும் கொண்ட உலகை வெந்து தணியச் செய்தது மட்டுமன்றித் தாழும் நிலைத்து நிற்கின்றன என்றும் கவிகள் மானிடத் தேவைகளுக்கான கோசங்களாக வேண்டுகோள்களாக மட்டும் முன்வைக்கத்தக்கவை மட்டுமல்ல, அவை மனித மனங்களைக் களிக்கச் செய்கின்ற சாதனங்களாகவும் உள்ளன என்பதுதான் பாரதியினது கருத்து என்று சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார் கட்டுரையாசிரியர்.

பாரதியினுடைய கவிதைகளை ஆராய்வோர் அவரது கவிதைகளுக்கான சந்தர்ப்ப சூழ்நிலை, அவரது நாட்டபிமானம், தமிழ்ச்சூழல் எனும் தளத்தில் நின்றும் வெளிப்படுந்திறன், அவரது பாடல்களின் நேரடித் தன்மையும், உடனடித் தன்மையும், அவரது சமயச்சார்பு அல்லது தத்துவச் சார்பு ஆகிய பல விடயங்களையும் மனதிற்கொண்டே ஆராய வேண்டும். அவ்வாறான ஒரு ஆழ்ந்த அகலித்த தளத்தில் நின்று நான்மணிமாலை நோக்கப்படும்போது பாரதியார் மேலும் விளக்கம் பெறுவார் என்ற ஒரு நோக்கு நிலையிலேயே மகேஸ்வரன் 'பாரதியாரின் விநாயகர் நான்மணிமாலை' எனும் இக்கட்டுரையை ஆராய்ந்துள்ளார்.

**முடிவுரை**

ஈழத்துப் பேராசிரியர்கள் வரிசையில் மகேஸ்வரன் மேற்கொண்ட தமிழ் இலக்கிய ஆய்வுக் கட்டுரை முயற்சிகளின் பயனாக இவர் இன்றும் தனக்கென ஒரு இடத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளமை மறுக்க முடியாத உண்மை. ஆரம்பகாலம், இடைக்காலம், நவீனகாலம் தொடர்பாக இவர் எழுதிய தமிழ் இலக்கிய ஆய்வுக்கட்டுரைகளின் அணுகுமுறையானது ஏனைய ஆய்வாளர்களின் அணுகுமுறைகளில் இருந்து வேறுபட்ட தன்மையினைக் கொண்டிருப்பதனால் பிற்பட்ட இலக்கிய ஆய்வாளருக்கும், மாணவ சமுதாயத்திற்கும் வழிகாட்டியாக உள்ளன. இவருடைய இத்தமிழ் இலக்கிய ஆய்வுக்கட்டுரை இவரைப் பெருமைப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

தமிழ் இலக்கிய வரலாற்றின் மீது இவர் கொண்ட ஈடுபாட்டினை இவரது ஆய்வுக்கட்டுரைகள் மூலம் கண்டுகொள்ள முடிகின்றது. இலங்கையில் பண்பாட்டியல்சார் காத்திரமான ஆய்வுகளின் வருகை அரிதாகவே இடம்பெற்று வருகின்றது. அதிலும் சமய வழிபாட்டு மரபுகள், நம்பிக்கைகள் பற்றிய நுண்ணாய்வுகளும் அவை பற்றிய மாற்று உரைகளும் மிக அரிது. அத்தகைய ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றவர்களுள் வ.மகேஸ்வரனுக்கு முக்கிய இடமுண்டு.

சங்க இலக்கியம் முதல் சமகால இலக்கியம் வரையில் உள்ள பரிச்சயமும் அவற்றை நயப்பட எடுத்துரைப்பதில் காட்டும் ஆற்றலும் இவரது ஆய்வுகளில் வெளிப்பட்டுள்ளன. சங்ககாலம் முதல் சமகாலம் வரை எழுந்த இலக்கியங்கள், இலக்கண நூல்கள், வரலாற்று நூல்கள், தொல்பொருளாய்வுகள், சாசனங்கள், அவை தொடர்பான ஆய்வுகள் முதலியனவற்றைக் கூர்ந்து கவனித்து அறிவியல் பூர்வமாக ஆய்வுக்கட்டுரைகளினை மேற்கொண்டுள்ளார்.

வாசிப்பில் ஆர்வம் மிக்கவராக விளங்கிய மகேஸ்வரன் பல்துறை சார்ந்த அறிவுமிக்கவராக விளங்கியுள்ளார். தனது ஆய்வுக் கட்டுரைகளினூடாக தனக்குத் தெரிந்த பல்துதுறை சார்ந்த விடயங்களை இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்துகின்றார். இவரது ஆய்வுக்கட்டுரைகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் தனித்துவமிக்கனவாகவும், முக்கியத்துவமிக்கனவாகவும் விளங்குகின்றன.

**உசாத்துணைகள்**


ஞானசேகரன். தி. (2018). பல்துறைப் புலமையும் ஆற்றலும் மிக்க பேராசிரியர் வ.மகேஸ்வரன். *ஞானம்* - 214வது இதழ். (பக்: 03-07).

மகேஸ்வரன்.வ. (2000). பாரதியாரின் விநாயகர் நான்மணிமாலை. *அகிலம், (காலாண்டு சஞ்சிகை).* அகிலம் வெளியீடு. (பக்: 167-173).

மகேஸ்வரன்.வ. (2011). *தமிழ்ச் சூழலில் தாய்மாமன்.* பொன்னெழுத்துப் பதிப்பகம்.

மகேஸ்வரன்.வ. (2011). *சீறாப்புராணத்தில் உலா: பழமையும் புதுமையும்.* ஆய்வரங்கக் கோவை. மலேசியா: சர்வதேச இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு.(பக்: 213 – 224).

மகேஸ்வரன்.வ. (2011). *திருவள்ளுவமாலை - அதன் சாராம்சம் குறித்து ஓர் உசாவல்.* முப்பால், திருக்குறள் மாநாட்டு மலர். கொழும்புத் தமிழ்ச் சங்கம். (பக்: 45-52).

ரூபவதனன், மா (2012.11.04). பன்மைத்துவ சிந்தனாவாதி பேராசிரியர் மகேஸ்வரன். *தினகரன்.* Retrieved October 25, 2023, from http://archives.thinakaran.lk.

# வ.ஐ.ச.ஜெயபாலனின் புலம்பெயர் கவிதைகள் - ஓர் ஆய்வு

**கிருபாகரன் சிந்துஜா, ரூபி வலன்ரீனா பிரான்சிஸ்**
தமிழ்க் கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
sinthuya008@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

1970களின் பின்னர் ஈழத்துக் கவிதை பெரும்பாலும் புதுக்கவிதையாகவே மாறிவிட்டது. முற்போக்கான கவிதைகளே இன்றைய புதுக்கவிதையின் பலம் என்று சொல்ல வேண்டும். அந்தவகையில், சொந்த அனுபவ வெளிப்பாட்டுக்கு முதன்மை கொடுக்கும் வகையிலும், சமூக அரசியல் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையிலும் வ.ஐ.ச.ஜெயபாலன் புதுக்கவிதையைப் படைக்கத் தொடங்கினார். 1970களின் பின்னர் கவிதையுலகில் பிரவேசித்த வ.ஐ.ச.ஜெயபாலன் புலம்பெயர்ந்து செல்லும் முன்பிருந்தே கவிதை எழுதிவந்துள்ளார். இன ஒடுக்குதலால் உண்டான பிரச்சினைகளால் கவிஞர் புலம்பெயரவேண்டிய நிர்ப்பந்தம் உருவானது. கவிஞரின் வாழ்வில் இரு புலம்பெயர்வுகள் இடம்பெற்றன. 1984ல் இந்தியாவை நோக்கியும், பின் சமாதான காலத்தில் இலங்கை வந்த கவிஞர் இலங்கையின் அசமந்தமான சூழ்நிலையால் மீண்டும் 1987இல் நோர்வே நாட்டையும் நோக்கியதாக கவிஞரின் புலப்பெயர்வு அமைந்தது. எனினும், இவ்வாய்வில் வ.ஐ.ச.ஜெயபாலனின் கவிதைகளில் அவர் புலம்பெயர்ந்து சென்ற பின்னர் எழுதிய கவிதைகளே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலனுடைய கவிதைகள் ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் இன்றியமையாத பங்களிப்பை வழங்கியதோடு தனித்துவமான இடத்தையும் பெற்றுள்ளன என்ற அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வ.ஐ.ச.ஜெயபாலனின் புலம்பெயர்ந்த பின்னரான கவிதைகள் புலம்பெயர் மக்களின் வாழ்வியல் அம்சங்களையும், புலப்பெயர்வின் சூழலையும், அதன் அவலங்களையும், காதல் மற்றும் பிரிவின் வலியையும் பிரதிபலிப்பனவாக அமைகின்றன. எனவே, வ.ஐ.ச. ஜெயபாலன் புலம்பெயர்ந்த பின்னர் எழுதிய கவிதைகளைத் தொகுத்து அதன் தனித்துவத்தை வெளிக்கொண்டுவரும் நோக்குடன் இவ்வாய்வு அமைந்துள்ளது. இவ்வாய்வில் வ.ஐ.ச.ஜெயபாலனின் புலம்பெயர்ந்த பின்னரான கவிதைகளின் உள்ளடக்கமும் ஆக்கமுறைமையும் கருத்துவெளிப்பாடும் ஆராயப்பட்டுள்ளன. ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் வ.ஐ.ச.ஜெயபாலன் பெறும் முக்கியத்துவம் வெளிப்படும் வகையிலும் இவ்வாய்வானது அமைகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *அந்நியமாதல், புகலிடம், இனஒடுக்கல், நிறவெறி, சமூகம்*

## அறிமுகம்

வ.ஐ.ச.ஜெயபாலனின் புலம்பெயர் கவிதைகள் - ஓர் ஆய்வு என்ற மகேஸ்வரன். இவ் ஆய்வானது வ.ஐ.ச.ஜெயபாலன் புலம்பெயர்ந்த பின்னர் எழுதிய கவிதைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். வ.ஐ.ச.ஜெயபாலன் 1970களில் கவியுலகில் பிரவேசித்தார். ஆரம்பத்தில் மரபுக் கவிதையைப் பின்பற்றிப் பின்னர் தனக்கென ஒரு பாணியை அமைத்துப் பல கவிதைகளைப் படைக்கத்தொடங்கினார். இவரது ஆரம்பகாலக் கவிதைகள் போர், சாதி எதிர்ப்பு, இனஒடுக்கல், காதல் போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளன. நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளால் ஈழத்தமிழர்கள் பலர் 1980களின் பின்னர் உலகின் பல நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றனர். இவ்வாறு சென்றவர்கள் பிரயாண அவலம், வீசாச்சிக்கல், தங்குமிடமின்மை, நிறவெறி, புதியபண்பாட்டுச்சூழல், அந்நியமாதல், தாயக ஏக்கம், உறவுகளின் பிரிவு என்பவற்றால் பல்வேறு துன்பங்களுக்குள்ளாகினர். இதனைத் தங்களது கவிதைகளில் வெளிப்படுத்திய கவிஞர்களில் ஒருவராக வ.ஐ.ச.ஜெயபாலன்

விளங்குகிறார். இவர் புலம்பெயர்ந்து சென்றபின்னர் எழுதிய கவிதைகள் பற்றிய ஆய்வு இதுவரையில் வெளிவராமையால் அக்கவிதைகள் பற்றிய விடயங்களை வெளிக்கொணர்வதாகவும், ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் வ.ஐ.ச.ஜெயபாலன் பெறும் முக்கியத்துவத்தை அறிந்துகொள்வதாகவும் இவ் ஆய்வானது அமைகிறது.

**ஆய்வுக் கருதுகோள்**

வ.ஐ.ச.ஜெயபாலன் ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் முக்கிய இடத்தைப் பெறுவதோடு அவருடைய கவிதைகள் புலம்பெயர் மக்களின் வாழ்க்கைமுறைகள், அவர்களது அனுபவங்கள் போன்றவற்றை வெளிப்படுத்துவதால் தனித்துவமுடையதாகின்றன.

**ஆய்வு முறையியல்**

விளக்கமுறை, விமர்சனமுறை, பகுப்பாய்வு அணுகுமுறை போன்றன இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

அ.சிவஞானசீலன், யாழ் பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டத்திற்காக ‘‘கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன் கவிதைகள் - ஓர் ஆய்வு’’ (1998) என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வ.ஐ.ச.ஜெயபாலனால் 1968-1993 காலப்பகுதியில் எழுதப்பட்ட கவிதைகள் விளக்கமுறையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. அதில் ‘‘இலையுதிர்கால நினைவுகள், பிராங்போர்ட் நகரத்து ஓர் இரவு’’ போன்ற கவிதைகள் புலம்பெயர் அனுபவங்களைப் பேசுவதாக உள்ளன.

தம்பிப்பிள்ளை மேகராசா வெளியிட்ட ‘‘பின்காலனித்துவ நோக்கில் ஈழத்துத் தமிழ்க்கவிதைகள்’’ (2020) என்ற நூலில் வ.ஐ.ச.ஜெயபாலனின் சில கவிதைகள் பின்காலனித்துவரீதியில் நோக்கப்பட்டுள்ளன.

சோ.பத்மநாதன் வெளியிட்ட ‘‘நோக்கு ஆய்வுக் கட்டுரைகள்’’ (2019) என்ற தலைப்பில் வெளிவந்த நூலில் ‘‘ஈழத்துப் போர்க்காலக் கவிதைகள்’’ என்ற பகுதியில் வ.ஐ.ச ஜெயபாலனின் இலையுதிர்கால நினைவுகள் என்ற கவிதை எடுத்தாளப்பட்டுள்ளது.

தெ.வெற்றிச்செல்வன் வெளியிட்ட ‘‘ஈழத் தமிழர் புகலிட வாழ்வும் படைப்பும்’’ (2009) என்ற நூலில் வ.ஐ.ச.ஜெயபாலனது ‘‘இலையுதிர் கால நினைவுகள்’’, ‘‘வாழ்வின் கவிதை’’ போன்ற சில கவிதைகள் புகலிடத்தின் அனுபவத்தை வெளிப்படுத்தும்நோக்கில் எடுத்துநோக்கப்பட்டுள்ளன.

**வ.ஐ.ச.ஜெயபாலனின் வாழ்வும், பணியும்**

வ.ஐ.சண்முகம்பிள்ளைக்கும் இராசம்மாவுக்கும் மகனாக ஜெயபாலன் 1944 மார்கழி 13ம் திகதி உடுவில் கிராமத்தில் பிறந்தார். கல்வியில் சிறந்துவிளங்கிய இவர் யாழ் பல்கலைக்கழகத்தின் பொருளியல் பட்டதாரி மாணவனாக வெளியேறினார். வாசுகி என்பரைத் திருமணம் செய்தார்.

1970களில் எழுத்துலகில் பிரவேசித்த கவிஞர் பல கவிதைகளைப் படைக்கத்தொடங்கினார். ஆரம்பகாலத்தில் இனப்பிரச்சினை, சாதி எதிர்ப்பு, காதல், சமூகக்கருத்துக்கள் போன்றன அவரது கவிதைகளின் பொருளாகக்காணப்பட்டது. பின்னர் 1984ம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரம் காரணமாக புலம்பெயர்ந்து முதலில் இந்தியாவிற்கும் பின்னர் நோர்வே நாட்டிற்கும் சென்றார். அங்கு அனுபவித்தவற்றை சிறந்தமுறையில் கவிதையாக வெளியிட்டார். 'சூரியனோடு பேசுதல்'' (1987), 'நமக்கென்றொரு புல்வெளி' (1987), 'ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்' (1986), 'ஒரு அகதியின் பாடல்'(1991), 'உயிர்த்தெழுகிற கவிதை'(1998) 'வ.ஐ.ச.ஜெயபாலன் கவிதைகள் பெருந்தொகை'(2002), 'வ.ஐ.ச ஜெயபாலன் கவிதைகள் குறுந்தொகை' (2013) 'நீலம்' (2022) போன்ற நூல்களை வெளியிட்டுள்ளார். வ.ஐ.ச.ஜெயபாலன், கவிஞனாக மட்டுமல்லாது எழுத்தாளன் என்றும் நோக்கப்பட வேண்டியவர் என்பதற்கு அவர் எழுதிய புனைகதைகள், பாடல்கள் போன்றனவும் சான்றாகின்றன. இவர் ஒரு சமூக அரசியல் ஆய்வாளனுமாவார் ('சாதி அமைப்பும் இலங்கைத் தமிழர்களும்' , 'சாதியமைப்பும் யாழ்ப்பாணத் தமிழர்களும்-ஒரு சமூகவியல் பரிசீலினை', 'யாழ்ப்பாண மாவட்டத்து அடிமை முறை'). இவரது ஆய்வுகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் கட்டுரையாக்கம் பெற்றுள்ளன.

இன்று வ.ஐ.ச.ஜெயபாலன் இந்திய சினிமாத்துறையிலும் சிறந்து விளங்குகிறார். இவ்வாறு வ.ஐ.ச.ஜெயபாலன் கவிஞனாக, எழுத்தாளனாக, ஆய்வாளனாக, நடிகனாகப் பல்துறைகளில் சிறந்து விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**வ.ஐ.ச.ஜெயபாலனின் புலம்பெயர் கவிதைகளின் உள்ளடக்கம்**

வ.ஐ.ச.ஜெயபாலனின் புலம்பெயர்கவிதைகளின் உள்ளடக்கங்களாகப் போர்க்காலச்சூழல் மற்றும் இனப்பிரச்சினை, தாயகநினைவு மற்றும் உறவுகளைப் பிரிந்த ஏக்கம், விடுதலை உணர்வு, வசதியற்ற தங்குமிடம், அரசியல்நோக்கு, அந்நியமனோபாவமும் அகதி உணர்வும், இயற்கை வர்ணனை, காதல், அஞ்சலிக்கவிதைகள், சமூகக்கருத்துக்கள், பெண்ணியம் சார்ந்தவை போன்றன அமைகின்றன.

**போர்க்காலச்சூழல் மற்றும் இனப்பிரச்சினை**

ஈழப்போரில் இனவிடுதலைக்குப் போராடியவர்கள் பற்றியும், அவர்களது இனவிடுதலை உணர்வையும் அறிந்திருந்த கவிஞர் போர்காலக்கவிதைகளினூடாக விடுதலை உணர்வையும், போரின் அவலங்களையும் வெளிப்படுத்தியுள்ளார். சான்றாக 'இரத்தம் எழுதிய கவிதை', 'ஒரு யுகத்தின் தரிசனம்', 'எந்நாளும் தமிழ்ப்பெண் அழவிதியோ', 'காயத்திரி' போன்ற பல கவிதைகளில் போரின் வடுக்களையும், இனஒடுக்குதலையும் வெளிப்படுத்தியுள்ளார். உதாரணமாக **"காயத்திரி"** என்ற கவிதையில் 1986ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படை ஈழத்திற்கு வருகைதந்தபோது ஈழத்தில் ஏற்பட்ட சம்பவங்களைக் கவிதையினூடாக வெளிக்காட்டுகிறார். அன்றையகாலகட்டத்தில் மக்கள் எதிர்கொண்ட அவலத்தினையும், போரின் வடுக்களையும் இக்கவிதையினூடாகப் புலப்படுத்தியுள்ளார். இக்காலத்தில் மக்களுக்கு

நேர்ந்த அவலங்களின் சான்றாக காயத்திரி என்ற தாயை இழந்த சிறுமியின் வேதனையினை எடுத்துக்காட்டுவதாக இக்கவிதை அமைகிறது.

மேலும் இந்திய இராணுவம் பெண்களுக்கு இழைத்திருந்த பெருந்துயரத்தையும் கூறுகிறார். எரிக்கின்ற நெருப்புக்கு ஆண், பெண் பேதமில்லை என்றும் எரியுற்ற உடலின் கபாலத்திற்கு அருகே மின்னும் தங்கத்தின்மூலம் பெண் என்று அடையாளம் காணமுடிவதாகவும் விவரித்து செல்கிறார். மேலும் காயத்திரி வீட்டுக்கு பின்புறம் இருக்கின்ற காட்டையும், சூரியன் மறைந்தபின்னர் ஆயுதம்தரித்த இளைஞர்கள் ஜீப்பைவிட்டு இறங்கிவந்து உதவிசெய்வதையும் விவரிக்கின்றார். இவ்வாறாக இந்திய இராணுவத்தின் வருகைக்குப் பின்னரான சூழலை வெளிப்படுத்துகின்றார். ஆயுதம்தாங்கிய இளைஞர்களைக் கண்ட மனிதர்கள் தமக்குச் சுதந்திரம் கிடைத்த உணர்வுடன் மரண அமைதியிலிருந்து விடுபட்டு வெளியில் வந்தனர் எனவும் கூறுகிறார். இதனை

‘‘காடுகளுக்கு காது முளைத்தது

கண்கள் கால்கள் கைகளும் முளைத்தன

வாயும் முளைத்தது

காளான்களாகக் கிடந்த மனிதர்கள்

வெளியில் வந்தனர்..’’ (ஜெயபாலன்.வ.ஐ.ச,2022,75)

எனும் வரியில் காணமுடியும்.

அத்துடன் ‘‘அழுவதே விதியென்றால்’’ என்ற கவிதை வடகிழக்கில் முஸ்லிம்மக்கள் ஈழப்போராட்டகாரர்களால் விரட்டியடிக்கப்பட்டதைக் கண்டிக்கும்முகமாக எழுதப்பட்டதாகும். இதில் முஸ்லிம்மக்களை வடகிழக்கு பிரதேசத்தைவிட்டு வெளியேற்றி தமிழர்கள் கொடுமை இழைத்துவிட்டதாகவும் வடபுலத்துமுஸ்லிம் மக்களைப்போல் மகத்தான இனத்தைப் பார்க்கவில்லை என்றும் கூறும் கவிஞர் தமிழர்களது அத்தகையசெயலால் தமிழ் இனத்திற்கே தலைகுனிவு ஏற்பட்டுவிட்டதாகவும் கூறுகிறார். வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மீண்டும் வரும்வரை நம் மண்ணுக்கு விடிவில்லை, அவர்களிடம் மன்னிப்பு கேட்கும்வரை தன் இனத்திற்கு கைவிலங்கு ஒடிவதில்லை என்றும் கூறுகிறார். இவ்வாறாகக் கவிஞரின் கவிதைகளில் போர்க்காலஅவலமும், இனஒடுக்குதலும் வெளிப்படுவதைக் காணமுடிகிறது.

**தாயக நினைவுகளும் உறவுகளைப் பிரிந்த ஏக்கமும்**

புலம்பெயர் கவிதைகளின் உள்ளடக்கங்களில் பெரும்பாலானவை தாயக மண்ணில் உறவுகளுடனும், சுற்றங்களுடனும் இணைந்து வாழ்ந்த வாழ்க்கையையும், அந்த மண்ணின் நினைவுகளில் இருந்து விடுபடமுடியாத ஏக்கமும், தவிப்பும் வெளிப்படுவதாகவே அமைந்துள்ளன. வ.ஐ.ச.ஜெயபாலனது ‘எமது மண்ணும் இனிய வசந்தமும்’, தோற்றுப் போனவர்களின் பாடல்’, ‘ஈழத்து அகதி’, ‘தானா’, ‘அம்மா’, ‘இலையுதிர்கால நினைவுகள்’ போன்ற பல கவிதைகளில் இத்தன்மையைக் காணமுடிகிறது.

சான்றாக 'இலையுதிர்கால நினைவுகள்' எனும் கவிதையில் மக்பை பறவையைக் குறியீடாக எடுத்துக்கொண்ட கவிஞர் அப்பறவையோடு பேசுவதாகக் கவிதையை அமைத்துள்ளார். நடுங்கவைக்கும் குளிரிலும் நாடுவிட்டு நாடுபாயாமல் தன் சொந்தமண்ணிலேயே கால்பதித்துநிற்கும் மக்பை பறவையைப் பார்க்கும்போது புலம்பெயர்ந்தவனுக்கு வெட்கம் மேலிடுவதாகக் கூறுகிறார். எக்காலத்தினையும் சமாளித்து தன் நாட்டைவிட்டு இடம்பெயராது வாழப்பழகிக்கொண்ட மக்பையானது தான் புலம்பெயர்ந்து வந்ததால் தன்னைப் பறவை இழிவாகப் பார்ப்பதாகக் கவிஞர் கருதுகிறார். இதனை

"வெய்யிற் சுகம் தேடி

வடதுருவப் பறவைகளும்

என் தாய்நாட்டின் திசை நோக்கி

தங்களது சிறகசைக்கும்

வான்நோக்கி கையுயர்த்தித் தொழுகின்ற

கறுப்பர்களைப் போல்

இலைஉதிர்த்து நிற்கும்

ஓக் மரங்களின் கீழே

தனிதலையும் மக்பாய் இழிவாக என்னை நோக்கும்"

(ஜெயபாலன்.வ.ஐ.ச,2022:70)

என மக்பாய்பறவை தன்னை இழிவாகநோக்குவதாகக் கூறுகின்றார். மேலும் இயல்புவாழ்க்கை சிதைக்கப்பட்டுள்ளநிலையையும், உறவுகளின் பிரிவையும் இக்கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார். இதனை

"..யாழ் நகரில் என் பையன்

கொழும்பில் என் பெண்டாட்டி

வன்னியில் என் தந்தை

தள்ளாத வயதினிலே

தமிழ்நாட்டில் என் அம்மா

சுற்றம் பிராங்போட்டில்

ஒரு சகோதரியோ பிரான்ஸ் நாட்டில்

நானோ

வழி தவறி அலாஸ்கா வந்துவிட்ட ஒட்டகம் போல்

ஒஸ்லோவில்……'' (ஜெயபாலன்.வ.ஐ.ச,2022:70)

எனும் வரிகளில் காணலாம். 'வெய்யில் நாள்' என்கின்ற கவிதையில் அந்நியதேசத்தில் புலம்பெயர்ந்திருக்கும் ஒருவனது மனஉணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளார். மேலும் இக்கவிதையில் நோர்வீஜியர்கள் இளவேனிற்காலத்தில் சந்தோஷத்தைத் தேடித்திரிய தான் மட்டும் நாட்டைப் பற்றிய ஏக்கத்தினைத் தொலைப்பதற்காகக் கார்ல்யோன் சாலையில் அலைகிறேன் என்கிறார். இதனை

''ஈக்களை தொலைக்க ஓடித்திரிகிற

குதிரையைபோல்

நாட்டேக்கத்தைத் தொலைப்பதற்காக

கார்ல்யோன் சாலையில் நானும் அலைகிறேன்'' (ஜெயபாலன்.வ.ஐ.ச,2002:107)

என்ற வரிகளில் காணமுடியும். இவ்வாறு தாயகநினைவுகளும் உறவின்பிரிவும் வ.ஐ.ச.ஜெயபாலனின் கவிதைகளில் வெளிப்பட்டுள்ளதைக்காணமுடிகிறது.

**விடுதலை**

கவிஞர் தன் கவிதைகள் பலவற்றில் இனஒடுக்குதலாலும், போராலும் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியிலிருக்கும் விடுதலை எண்ணத்தை எடுத்துரைக்கின்றார். அவ்வகையில் 'தோற்றுப் போனவர்களின் பாடல்', 'ஒரு யுகத்தின் தரிசனம்', 'போர்களத்துள்வாழும் மனிதர்கள்', எமது மண்ணும் இனிய வசந்தமும்' போன்ற பல கவிதைகளைக் குறிப்பிடலாம். சான்றாக தோற்றுப்போனவர்களின் பாடல் என்ற கவிதையில் அடக்கிஒடுக்கப்பட்டு வாழ்ந்துவரும் மக்களிடையே விடுதலை எண்ணமே மேலோங்கும் என்பதே யதார்த்தம், உலகவரலாற்றில் ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாறுகள் இதற்கு சான்றாகும் என்ற கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் கவிவடித்துள்ளார். இதனை

''அல்லல் படும்மக்கள்

ஆற்றாது அழுதகண்ணீரின் முன்

எது நிலைக்கும்?

துளிர்க்கும் விடுதலை கனவைத்தவிர

எது நிலைக்கும்? (ஜெயபாலன்.வ.ஐ.ச,2022:44)

என்ற வரிகளில் காணமுடியும்.

**வசதியற்ற தங்குமிடம்**

புகலிடவாழ்வில் மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவாலான வசதியற்ற தங்குமிடத்தையும், அதன் அவலத்தையும் வ.ஐ.ச.ஜெயபாலன் 'பிராங்போட் நகரத்து ஓர் இரவு' என்ற கவிதையில் எடுத்துரைத்துள்ளார். இதனை

"சூல்கொண்ட பன்றியின் கருவறை போன்ற

பிராங்போட் நகரச்சந்தியில் ஓர் அறை

போர்வையில் சுருண்ட

யாழ்ப்பாணத்து நடைபிணம் சிலது

எகிப்திய மம்மியாய் அடுக்கிக் கிடக்கும்...."

(ஜெயபாலன்.வ.ஐ.ச,2002:213)

என்ற வரிகளூடாக இருப்பிடத்தின் நெருக்கடியைக்காட்ட பன்றியின் கருவறையை உவமையாக்கியுள்ளார். இதன்மூலம் புலம்பெயர்நாட்டின் வசதியற்ற தங்குமிடத்தையும் புலம்பெயர்மக்கள் அனுபவிக்கும் அவலத்தையும் எடுத்துரைத்துள்ளார்.

**அரசியல்**

இலங்கை அரசியல் பற்றிய விமர்சனங்களும் புலம்பெயர் எழுத்தாளர்களால் பேசப்படும் முக்கியவிடயமாகும். அந்தவகையில் புலம்பெயர் கவிதைகளின் பாடுபொருளில் அரசியல் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. வடபுலத்திலிருந்து முஸ்லிம்மக்கள் வெளியேற்றப்பட்டமையினால் உண்டான விரிசல்கள் குறித்து வ.ஐ.ச.ஜெயபாலன் 'எட்டாவது பேய்' என்ற கவிதையில் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் உள்நாட்டு அரசியல் பற்றிய கருத்துக்களைக் கொண்டதான "உயில்" என்கிற கவிதையில் போர்ச்சூழலில் இனிவரும் காலங்களில் வாழப்போகும் இளைஞர்களைப் பார்த்து உங்களுக்காக இல்லாமல் போன நேற்றும், இன்னும் தோன்றாதுள்ள நாளையும், இன்றய வாழ்வையும் கற்களில் பொறிப்பேன் என்று குறிப்பிடும் கவிஞர், போர்ச் சூழலின் ஆரம்பத்தில் இனவிடுதலை இயக்கங்கள் பலஇருந்ததாகவும், அவ் இயக்கங்களிடையேயான முரண்பாடுகள் இருந்ததையும், அவற்றால் கவிஞர்களது வாழ்வு பாதிக்கப்பட்டதையும் குறிப்பிடுகிறார். இவ்வாறாக அரசியல் கருத்துக்களை காணமுடிகிறது.

**அந்நிய மனோபாவமும், அகதி உணர்வும்**

தாய்நாட்டின் அவலநிலைகளால் சொந்தங்களையும், உறவுகளையும் சுற்றங்களையும் விட்டுப்பிரிந்தவனுக்குப் புகலிடநாட்டின் தனிமையானது அந்நிய உணர்வை ஏற்படுத்துகிறது. அந்தவகையில் தாய்நாட்டையும் தன்சொந்தங்களையும், சுற்றத்தார்களையும் பிரிந்து முற்றிலும் வேறுபட்ட நாட்டில் சென்று வாழ்கின்ற நிலையில் புகலிட நாட்டின் தனிமையானது கொடுமையாவதைக் கவிஞர் 'சன்னல்' என்ற கவிதையில் விளக்கியுள்ளார். இதனை

“நான் மந்தையைப் பிரிந்த தனிஆடு

போர் என்ற ஓநாயின்

பிடி உதறித் தப்பிய நான்

அதிட்டத்தால்

வாட்டும் குளிர்நாளில் கூட

வாழ்வை ரசிக்கும் கலையை அறிந்தவரின்

நாடு வந்தேன்…” (ஜெயபாலன்.வ.ஐ.ச,2002:101)

என்ற கவிதையில் அந்நியமனோபான்மையை அறியமுடிகிறது. மேலும் ‘நெடுந்தீவு ஆச்சிக்கு’ என்ற கவிதையில் அகதியுணர்வு வெளிக்காட்டப்பட்டுள்ளது. இதில் திசைகாட்டி, சுக்கான் தவறினால் எவ்வாறு மாலுமி துன்பப்படுவானோ அதுபோல தன்வாழ்வும் திசைமாறிப்போனதையும் அதனால் உண்டானதுன்பத்தையும் குறிப்பிடுகிறார் (ஜெயபாலன்.வ.ஐ.ச,2022:84).

**இயற்கை சார்ந்தவை**

கருத்துவெளிப்பாட்டிற்கு இயற்கையைப் பின்புலமாகக்கொண்டுபாடுதல் சங்ககால அகத்திணை இலக்கியமரபாகும். இம்மரபு வ.ஐ.ச.ஜெயபாலனது கவிதைகளில் அதிகம் காணமுடிகிறது. வாழ்க்கை குறித்த நிலைமையை வெளிக்காட்டவும் கவிஞர் இயற்கையைக் கையாண்டுள்ளார். முதுமைகொள்ளும்காலத்தில் உலகின் மீதான தீராக்காதலை உணர்ச்சிவெளிப்பாட்டுடன் வெளிப்படுத்தும் கவிதையாக ‘நதிவட்டம்’ என்ற கவிதை காணப்படுகிறது. வாழ்க்கையின் இளமைக்காலம் முழுவதும் இயற்கையோடே வாழ்ந்து கழித்ததாக இக் கவிதையில் குறிப்பிட்டுள்ளார். இதனை

“கடற்கொள்ளை அடித்த முகில்

காமத்தில் மலையேற

தேன் சிந்தும் குறிஞ்சிப்பூ மடிமீது

பெயல் நீராய்ப் பொழிந்தேனே..” (ஜெயபாலன்.வ.ஐ.ச,2022:29)

என்ற வரிகளில் காணமுடிகிறது. மேலும் ‘அறியப்படாத புல்வெளி’ என்ற கவிதையில் கிராமியவாசனையை அழகாக எடுத்துக்காட்டுகிறார். புல்வெளிகள் நிறைந்த கிராமத்தையும், கடல், சூரிய அஸ்தமனம், மாடுகள், ஆடுகள் என இயற்கைக்காட்சியை இக்கவிதையூடாக எடுத்துரைத்துள்ளார். இரவுநேர இயற்கையை ரசித்து தன் ஏக்கத்தினை இயற்கையோடு இணைத்து வெளிபடுத்துகின்றார் கவிஞர். இவற்றைவிட ‘போர்களத்துள் வாழும் மனிதர்கள்’ ,‘அகதி விசாரம்’ போன்ற பல கவிதைகளிலும் இயற்கைஅம்சங்கள் பாடப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

**காதல்**

வ.ஐ.ச.ஜெயபாலனது கவிதைகளில் சிறப்பான பாடுபொருளாகக் காதல் எனும் கருப்பொருள் காணப்படுகிறது. அந்தவகையில் காதலர்களுக்கிடையே சிறு ஊடல் காரணமாக ஏற்பட்ட மனஉணர்வுகளை வெளிப்படுத்திச்செல்வதாக ''அறியப்படாத புல்வெளிகள்'' என்கின்ற கவிதை அமைந்துள்ளது. இரவுநேர இயற்கையை ரசித்து தன் ஏக்கத்தினை இயற்கையோடு இணைத்து வெளிப்படுத்துகின்றார். காதலியின் கடுங்கோபம் காரணமாக அவளை அணுகமுடியாதிருந்து காதலன் தவிப்பதை வெளிப்படுத்துகிறார். காதலியை அணுகமுயலும்போது காதலி எதிர்க்கின்ற காட்சியினைப் பின்வரும் வரிகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

''கண்ணில் மனதுதிர உன்

காதலில் நான் எரிந்தேன்

உன்னில் உயிர்படர அதனை

உரித்துரித்தே எறிந்தாய்

ஐம்புலச் சிப்பியுள்ளே

தைத்து அரித்துடும் விழிச்சுடரே....'' (ஜெயபாலன்.வ.ஐ.ச,2002:16)

எனப் பாடும் கவிஞர் ஆண் என்கின்ற ஆணாதிக்கத்தன்மையால் தான்விட்டதவறை நினைத்துக் காதலியின் அன்பிற்காக ஏங்கிப்பாடுகிறார். மேலும் ''முதற் காதல்'', 'நீலம்' போன்ற கவிதைகளிலும் காதல் பொருளாக்கப்பட்டுள்ளது.

**அஞ்சலிக் கவிதைகள்**

ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்துசென்ற கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன் அவர்கள் இனவிடுதலைக்காகப் போராடியவர்களுக்காக பல அஞ்சலிக்கவிதைகளையும் வடித்துள்ளார். அந்தவகையில் 'பால்ராஜ் அமரனுக்கு' என்ற கவிதையில் ஈழ விடுதலைக்காகப் போராடி உயிர்திறந்த பால்ராஜிற்கு கவிஞர் தன் உணர்வுபூர்மாக அஞ்சலி செலுத்துவதாக இக்கவி அமைந்துள்ளது. அவருடைய வீரத்தினையும், மக்களடைந்த துயரத்தினையும் கூறுகின்றார்.

மேலும் 'வரமுடியவில்லை அம்மா' என்ற கவிதையில் தாயின் மரணச்செய்திகேட்டு ஈழத்திற்கு போகமுடியாதசூழலில் சென்னையிலிருந்து இக்கவியைப்படைத்துள்ளார். தாயின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்ள முடியாத சோகநிலையை பின்வருமாறு எடுத்துரைக்கிறார்.

''வரமுடியவில்லை அம்மா

தீயினை முந்தி உந்தன்

திரு உடலில் முத்தமிட

சிங்கமும் நரிகளும் பதுங்கும்

நீர்ச் சுனையின் வழி அஞ்சி

உயிர் வற்றும் மானானேன்…" (ஜெயபாலன்.வ.ஐ.ச,2022:57)

**சமூகக் கருத்துக்கள்**

கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன் நற்கருத்துக்கள், சமூகஒற்றுமை, சமூகத்திலுள்ள பிரச்சினைகள், பொதுவானசெயற்பாடுகள் போன்றவற்றையும் தன்கவிதைகளில் படைத்துள்ளார். அந்தவகையில் சில கவிதைகளை உதாரணமாகக்கொண்டு கவிஞரின் சமூகம்சார்ந்த கருத்துக்களைப் பின்வருமாறு அறிந்துகொள்ளலாம்.

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வின் எதிர்காலம் பற்றிக் கனவின்றி வாழக்கூடாது என்பதை கவிதையினூடாக வெளிப்படுத்தியுள்ளார். கனவில்லாத மனிதன் பாறாங்கல்லைப் போன்றவன், கனவில்லாதவன் கொள்ளும் காதல்கூட பிணத்தைத் தழுவியது போன்றது எனக் "கனவு" என்கின்ற கவிதையில் அழகாக வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் "இருமை", "கடற்கோள்", "இன்றையமது" போன்ற பல கவிதைகளையும் குறிப்பிடலாம். இவைதவிர கவிஞர் சாதியத்துக்கு எதிரான பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததோடு சாதிய ஒடுக்குமுறைகளை இளமையிலிருந்தே எதிர்த்துவந்தார். அந்தவகையில் சாதிய ஒடுக்குமுறையின் எதிர்ப்புக் கவிதைகளாக 'வாழும் ஆசையால்' என்கின்ற கவிதையில்

"வாழும் ஆசையால் கல்வெடிப்பிலும்

வேரோடி மலர்கிறதே சிறு புல்…." (ஜெயபாலன்.வ.ஐ.ச,2022:11)

என ஒவ்வொரு உயிரினமும் தான் வாழ்தலையே விரும்புகின்றது. அவ்வுயிர் வாழ்வதற்காக அவை போராடவேண்டும் என்பதையும் வெளிப்படுத்துகிறார். 'பாலைப்பாட்டு' என்கிற கவிதையில் ஒடுக்கப்பட்ட மக்களையும், அம்மக்களின் கலையான பறையையும் பற்றிக் குறிப்பிடுகிறார். காதலிலும் இருளிலும் சாதிபேதம் ஏதெனக்கூறுகிறார். இவ்வாறு சமூகக் கருத்துக்களை வ.ஐ.ச ஜெயபாலனின் கவிதைகளில் காணமுடியும்.

**பெண்ணியம் சார்ந்தவை**

வ.ஐ.ச.ஜெயபாலன் கவிதைகளில் பெண்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுள் சாதியஒடுக்குமுறை, காதல் தொடர்பானவை, பெண்ணடிமைத்தனம், போரில் பெண்கள் வதைக்கப்படல் போன்ற பிரச்சினைகளைக் காணமுடிகிறது. சான்றாக 'தோற்றுப் போனவர்களின் பாடல்' என்ற கவிதையில் பெண்களுக்கெதிரான வன்முறையைக் கூறுவதாகப் பின்வரும் வரிகள் அமைகின்றன.

"..விடியல்கள் தோறும்

தொடைகளில் ரத்தம் சிந்தச்சிந்த

மரங்களின் கீழே குந்தியிருந்து

மூண்டெரிகிற நம் பெண்களுடைய

அன்னை மண்ணே..” (ஜெயபாலன்.வ.ஐ.ச,2022:50)

“தாய் நிலமும் தனையர்களும்” என்ற கவிதையில் பெண்களுக்கு ஏற்பட்ட வன்முறைகளையும் அவர்களது அவலநிலையையும் எடுத்துரைத்துள்ளார். சான்றாக பின்வரும் வரிகளைக் குறிப்பிடலாம்.

“முகங்கள் சிதைந்து

யோனிகள் கிழிந்து

சவக்குழிகளிலும்

திருகப்பட்ட முலைகளோடும்…..” (ஜெயபாலன்.வ.ஐ.ச,2002:135)

இவ்வாறு இவரது கவிதைகள் மேற்கூறப்பட்டவாறான கருப்பொருட்களைக் கொண்டமைந்துள்ளமையைக் காணமுடிகிறது.

**வ.ஐ.ச.ஜெயபாலனின் கவிதைகளில் வெளிப்படும் கருத்து வெளிப்பாட்டு முறைமை.**

படைக்கப்பட்ட இலக்கியத்தின் உள்ளடக்கம் மட்டுமன்றி அந்த உள்ளடக்கம் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதுபற்றி நோக்குவதும் ஒரு ஆய்வின் முக்கியபண்பாகும். அந்தவகையில் வ.ஐ.ச.ஜெயபாலனின் கவிதைகளில் பயன்படுத்தப்பட்ட ஆக்கமுறைமைகளைப் பார்க்கின்றபோது அவர் கையாண்டுள்ள உத்திமுறைகளுள் குறியீடு, படிமம், தொன்மம், முரண், அணிப்பயன்பாடு, பேச்சுவழக்குச்சொற்கள், பிறமொழிச்சொற்கள், சங்ககவிதைமரபு, யதார்த்தப்பாங்கு போன்றன குறிப்பிடத்தக்கன.

**குறியீட்டு மொழிப் பயன்பாடு**

சொற்களின் பொருளை நேரடியாகத்தராமல் பிறிதொரு சொல்லால் உணர்த்திநிற்பது குறியீடாகும். கவிஞரின் குறியீட்டுப்பயன்பாட்டிற்கு உதாரணமாக ‘இலையுதிர்கால நினைவுகள்’ எனும் கவிதையில் சொந்தநாட்டின் போர்ச்சூழலிலும் நெருக்கடியிலும் தம் நாட்டிலிருந்து புலம்பெயராதிருருக்கும் மக்களுக்கான குறியீடாக ‘மக்பை’ பறவையைப் பயன்படுத்தியுள்ளார். கூதிர்காலம் ஆரம்பமானதும் ஒஸ்லோ நகரிலுள்ள பிறபறவைகள் புலம்பெயர்ந்து வேறுஇடங்களுக்குச் செல்லத்தொடங்கும். மக்பை பறவை மட்டும் எத்தகைய குளிரிலும் தன் சொந்தநாட்டை விட்டு வேறு இடங்களுக்கு செல்லாமல் அந்நாட்டிலே சுற்றித் திரியும். எனவே கவிஞர் புலம்பெயராத மக்களுக்கான குறியீடாக மக்பை பறவையைக் கையாண்டுள்ளார்.

மேலும் ‘விடைபெறுதல்’ என்ற கவிதையில் சென்னையிலுள்ள வீடுகளில் மக்கள் முடங்கிக்கிடப்பதைக் குறிப்பிடும் கவிஞர், சென்னையிலுள்ள வீடுகளைக் குறிப்பதற்கு கொங்கிறீட் பொந்துக்குகைகள் என்ற குறியீட்டுச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளதோடு சென்னைநகரின் கட்டடங்களையும், அதன் நெருக்கடியையும் குறிப்பிடும் கவிஞர், சென்னை

நகர்கட்டடங்களைக் குறிப்பதற்குச் சுவர்க்காடு என்ற குறியீட்டையும் பயன்படுத்தியுள்ளார். இதனை

‘‘காங்கிறீட் பொந்துக்குகைகள் தோறும்

முடங்கிப் போனதோ ஏனைய மானிடம்..’’ (ஜெயபாலன்.வ.ஐ.ச,2002:139)

என்ற வரிகளில் காணமுடியும்.

**படிமப் பயன்பாடு**

படிமம் என்பது காட்சி என்ற அர்த்தத்தைக்கொண்டு சொல்லவந்த விடயத்தினை அப்படியே மனக்காட்சியாகக் காணும்வகையில் சொல்லின்மூலம் தோன்றச்செய்வதாக அமைகின்றது. வ.ஐ.ச.ஜெயபாலனின் கவிதைகளிலும் இத்தகைய படிமப்பயன்பாட்டை காணமுடிகிறது. உதாரணமாக ‘விடைபெறுதல்’ என்ற கவிதையில்

‘‘நகரின் வறண்ட சுவர்கள் மீது

மந்திரக்கோலால் தொட்டநிலவே

சென்னையின் மலக்குடலாக நெளியும்

கூவத்திற்கும்

வெள்ளிச்சரிகை போர்த்த நிலவே’’ ( ஜெயபாலன்.வ.ஐ.ச,2002:139)

என்று கூவம்ஆற்றிற்கும், சென்னைநகரிற்கும் நிலாவானது வெண்ணிற ஒளியினைப் போர்த்தி அதனை மினுங்கவைக்கும் காட்சியினைப் படிமமாக்கியுள்ளார்.

**தொன்மப் பயன்பாடு**

புதுக்கவிதைகளில் தொன்மம் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. இப்பின்னணியில் ஜெயபாலனின் கவிதைகளில் தொன்மக்குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளமையைக் காணமுடிகிறது. ‘அகதி விசாரம்’ எனும் கவிதையில் இலங்கை அரசியலில் அதிகாரத்தில் இருப்பவர்களால் தாயகத்திற்கு நிகழும் வன்முறைகளைக் குறிப்பதற்காக இராமாயணத்தில் இராவணனாலும், அனுமனாலும் இலங்கை தீயிடப்பட்ட நிகழ்வினைத் தொன்மமாகக் காட்சிப்படுத்தியுள்ளார்.

‘‘இராவணனாலும், அனுமனாலும்

மீண்டும் மீண்டுமென் ஈழத்தாயகம்

தீயிடப்படுகின்ற துயரத்தினாலா?..’’ (ஜெயபாலன்.வ.ஐ.ச,2002:99)

எனும் வரிகளில் காணமுடியும். மேலும் ‘அழுவதே விதியென்றால்’ எனும் கவிதை வடபகுதியிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்காகப் படைக்கப்பட்டதாகும். இக்கவிதையில் விரட்டியடிக்கப்பட்டமக்கள் மீண்டும் வடபகுதி வரும்வரை வடபகுதி

மக்களுக்கு விடிவில்லை என்பதனைக் கூறுவதற்கு, இராமாயணத்தில் அகலிகையானவள் கல்லாகி விமோசனம்பெற்ற சம்பவத்தினை தொன்மமாகக் குறிப்பிட்டுள்ளார்.

**உவமை**

வ.ஐ.ச.ஜெயபாலனின் கவிதைகளில் சிறந்த உவமையணிப் பயன்பாட்டினை அதிகம் காணமுடியும். சான்றாக 'இலையுதிர்கால நினைவுகள்' என்ற கவிதையில் இதுவரை யாரும் எடுத்தாளாதவகையில் புதுமையான உவமையினைக் கையாண்டுள்ளார். அதாவது பாலைவனத்தில் வாழவேண்டிய ஒட்டகம் வழிதவறி வடதுருவப்பிரதேசமான அலாஸ்காவிற்கு வந்து வாழ்வதுபோல, ஈழத்தில் வாழவேண்டிய கவிஞர் பௌதீகப் பண்பாட்டம்சங்களால் முற்றிலும் வேறுபட்ட நோர்வே நாட்டில் வாழநிர்ப்பந்தப்பட்டுவிட்டதை சிறப்பான உவமையினைக் கொண்டு சித்திரித்துள்ளார். இதனை

''நானோ

வழிதவறி அலாஸ்கா வந்துவிட்ட ஒட்டகம் போல்

ஒஸ்லோவில்' (ஜெயபாலன்.வ.ஐ.ச,2002,104)

என்ற அடிகளில் விளக்கியுள்ளார். இவ்வாறு வழிதவறிச்சென்ற ஒட்டகத்தினை திசைமாறிச்சென்ற தனக்கு உவமையாகக் கூறியுள்ளார்.

**உருவக அணி**

வ.ஐ.ச.ஜெயபாலன் கவிதைகளில் உருவக அணியினைக் கையாண்டுள்ளமை அவற்றின் சிறப்பை மேலும் மெருகூட்டுவதாகக் காணப்படுகிறது. 'இருத்தல்' என்ற கவிதையில் சூரியஅஸ்தமனத்தினைக் கூறும் கவிஞர் வானத்தினைச் சிற்பியாக உருவகித்து அதன் வயிற்றினுள் மிளிருகின்ற சூரியனும் மறைந்து விடும் என சூரியஅஸ்தமனத்தினை உருவக அணியினைக் கையாண்டு வெளிப்படுத்தியுள்ளார். இதனை

''இனி வானத்துச் சிப்பி வயிற்றுள்

மிளிருகின்ற சூரியனும் செரித்து விடும்'' (ஜெயபாலன்.வ.ஐ.ச,2002:94)

எனும் அடிகள் வெளிப்படுத்துகின்றன. 'நெடுந்தீவு ஆச்சிக்கு' என்ற கவிதையில் நெடுந்தீவுப் பிரதேசத்தின் அழகையும் அங்கு நடைபெறுகின்ற செயற்பாடுகளையும் விபரித்த கவிஞர் நெடுந்தீவை ஆச்சியாக உருவகிப்பதோடு கடற்கரையில் பனைகள் உயர்ந்தோங்கியிருப்பதைக் கைகளுக்கு உருவகித்துள்ளார். இதனை

''அலைகளின் மீது பனைக்கரம் உயர

எப்போதும் இருக்கிற

என்னுடைய ஆச்சி'' (ஜெயபாலன்.வ.ஐ.ச,2022:85)

என்ற அடிகள்மூலம் வெளிப்படுத்துகிறார்.

**முரண்**

அங்கதம், குறியீடு, படிமம் போல முரணும் புதுக்கவிதை உத்திமுறைகளில் ஒன்றாகும். கருத்தை நுட்பமாக வெளிப்படுத்தவும், கவிதையின் பாடுபொருளை அழகுற உணர்த்தவும் முரண்சுவை பயன்படுகிறது. அந்தவகையில் ஜெயபாலனின் கவிதைகளில் கையாண்ட முரண்சுவைக்கு உதாரணமாக 'நெடுந்தீவு ஆச்சிக்கு' எனும் கவிதையில் நீர்ப்பாலை (ஜெயபாலன்.வ.ஐ.ச,2022:85) என்ற முரண்சொல்லும், 'வாழ்வின் கவிதை' எனும் கவிதையில் சாவையும் வாழ்தல் (ஜெயபாலன்.வ.ஐ.ச,2022:34) எனும் சொல்லும், 'அறியப்படாத புல்வெளிகள்' எனும் கவிதையில் 'கண்ணீரைச் துப்பிச் சிரித்தேன்' (ஜெயபாலன்.வ.ஐ.ச,2002:16) எனும் முரண்சுவையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 'என் இனிய லோதி' என்ற கவிதையில் 'கூவியழைத்துவிட்டு கதவையடைத்ததென்ன' (ஜெயபாலன்.வ.ஐ.ச,2002:171) என்ற சொல் இடம்பெற்றுள்ளது.

**கவிதைகளில் வெளிப்படுத்தப்படும் சங்க இலக்கிய மரபு**

கவிஞர்களில் சங்க இலக்கியமரபைப் பின்பற்றுவதில் வ.ஐ.ச ஜெயபாலன் முக்கியஇடத்தினைப் பெற்றுள்ளார். அந்தவகையில் தன் கவிதைத் தொகுதிகளுக்கு குறுந்தொகை, பெருந்தொகை எனப் பெயரிட்டுள்ளதோடு குறிஞ்சிப் பாட்டு, முல்லைப் பாட்டு, மருதப்பாட்டு, பாலைப் பாட்டு, நெய்தல் பாட்டு என்றும் பெயரிட்டு அந்நிலஒழுக்கத்தை தற்கால சூழலுக்கு ஏற்றவாறு அமைத்துக் கவிபுனைந்துள்ளார். அதுமட்டுமன்றி வீரம், காதல் என்பவற்றைக் கையாளும் சங்கமரபு இவரது கவிதைகளில் வெளிப்பட்டுள்ளது.

***முதல், கருப் பொருட்களின் வெளிப்பாடு***

குறிஞ்சிப் பாடல் என்னும் கவிதையில் மலைகளின் அழகு, அதன் வர்ணனை என்பவற்றில் சங்ககால இலக்கியங்களில் வெளிப்படும் வர்ணனையின் தன்மைகளைக் காணமுடிகிறது. இக்கவிதையில் மலை, நிலா, நட்சத்திரம், வண்ணத்துப்பூச்சிகள், மனிதன், புலி, கரடி என அந்நிலத்திலுள்ள கருப்பொருட்களைக் கையாண்டுள்ளமையைக் காணமுடிகிறது. இதன்மூலம் சங்கக்கவிதையின் செல்வாக்கினை அறியலாம்.

'மருதப்பாட்டு' எனும் கவிதையில் போரின்பின் வயல்கள் காடுகளான செயலையும், அது மீண்டும் பழையநிலை பெறவேண்டும், உயிர்பெறவேண்டும் எனவும் கூறுகின்றார். இதனை

"அழிக்கப்பட்ட காடுகளும்

காடு மண்டிய வயல்களுமானதே

நீர்ப் பறவைகளை இழந்த

என் மருத வழி…" (ஜெயபாலன்.வ.ஐ.ச,2013:15)

என்ற வரிகளில் காணமுடியும். இக்கவிதையில் மலைப்பொழுதினைக் கூறுவது சங்கஇலக்கியத்தில் பொழுதுகளைக்கூறும் தன்மையை வெளிப்படுத்துகிறது.

சங்கஇலக்கியங்களில் காணப்படும் வலியார்க்கு நிமிர்தலும் மெலியார்க்குப் பணிந்து செல்லும் பண்பையும் வ.ஐ.ச.ஜெயபாலனின் 'விடைபெறுதல்' என்ற கவிதையில் காணலாம். இக்கவிதையில் எதிரிக்குப் பதில்சொல்லத் துப்பாக்கிகளைத் தூக்கி நடப்பேன், சிறார்களின் பொம்மைத்துப்பாக்கிகளுக்குச் சரணடைவேன், சிறார்களின் குதூகலச்சிரிப்பை உயிரைக் கொடுத்தும் பாதுகாத்திட உறுதிபூண்ட நெஞ்சுடன் நடப்பேன் என்றும் கூறுகிறார்.

மேலும் நாரை, வண்டு, அன்னம், கிளி போன்றவற்றுடன் உரையாடும்பாங்கும் அவற்றைத் தூது அனுப்புதலும் சங்க இலக்கியங்களின் மரபாகும். அந்தவகையில் '4 பெப்ரவரி 1987' எனும் கவிதையை நாரையுடன் உரையாடுதல் போன்று அமைத்துள்ளார். அதாவது கோடிக்கரையில் அமர்ந்திருக்கும் கவிஞர் ஈழநாட்டின் கீழைக்கரைகளைத் தேடிச்செல்லும் நாரையைப் பார்த்து உரையாடுவது போன்று கவிதையை அமைத்துள்ளார். இனப்போராட்டத்தால் சுடுகாடான ஈழநாட்டின் மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலையை நாரைக்குக் கூறுவதாகவும், பின்னர் அந்நிலைமாறி மட்டக்களப்பு மாவட்டம் சோலையாகும் என்றும் விடிவினை எடுத்துக்கூறுவதாகவும் அமைத்துள்ளார்.

சங்க இலக்கியங்களில் கையாளப்பட்ட சொற்களைப் பயன்படுத்திக் கவிஞர் தன் கவிதையை வடித்துள்ளார். உதாரணமாக 'பாவைக் கூத்து' எனும் கவிதையில் வாழியதோழி என ஆரம்பிக்கின்றார். சான்றாக

"அம்ம வாழிய தோழி என்றேன்.." (ஜெயபாலன்.வ.ஐ.ச,2022:26)

என்ற வரிகளில் காணமுடியும். மேலும் 'பாலைப்பாட்டு' எனும் கவிதையில் பாடினி எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி 'நொண்டிச் சிந்து' எனும் கவிதையில் சங்ககாலத்தில் பாணர்களின் வாழ்க்கைமுறையைப் போன்று தன் வாழ்க்கை ஒரு காலத்தில் எல்லா இடங்களிலும் சுற்றித்திரிந்ததாகக் கவிஞர் எண்ணுகிறார்.

**பேச்சுவழக்குச்சொற்களின் பயன்பாடு**

வ.ஐ.ச ஜெயபாலனின் கவிதைகளில் கிராமிய மண்வாசனைகளும், நாட்டுப்பற்றும் அதிகம் இடம்பெறுவதால் பேச்சுவழக்குச்சொற்களின் செல்வாக்கினைக் காணமுடிகிறது. உதாரணமாக 'பூவால் குருவி' எனும் கவிதையில் பெட்டை, சேதி, முந்தானை, திரிகிறியாம், குந்தி(இருத்தல்), சிறுக்கி, சிறுபயல் போன்ற பேச்சுவழக்குச்சொற்களைக் கையாண்டுள்ளார். மேலும் 'இருமை' எனும் கவிதையில் சிறுசாய், உருண்டை போன்ற பேச்சுவழக்குச்சொற்களும் (ஜெயபாலன்.வ.ஐ.ச,2002:18) இடம்பெற்றுள்ளன.

**பிறமொழிச்சொற்களின் பயன்பாடு**

கவிஞர் புலம்பெயர்ந்துசென்ற காரணத்தினாலும் பிரதேசவழக்குச்சொற்களின் இயல்பான பிறமொழிக்கலப்பினாலும் அவரது கவிதைகளில் பிறமொழிச் செல்வாக்கினை அறியமுடிகிறது. புலம்பெயர்நாட்டிலுள்ள மரங்களின் பெயரான பேர்ச் மரமும் புலம்பெயர்நாட்டு நகரின் பெயரான பிராங்போர்ட் மற்றும் அலாஸ்கா, பெசன்ட் நகர், ஒஸ்லோ நகர் போன்ற சொற்களும் இடம்பெற்றுள்ளன.

ஒல்லாந்து மொழிச் சொற்கள்: கக்கூஸ் (காயத்திரி) ஆங்கில மொழிச் சொற்கள்: கொங்கிறீட், பைல் (எமது மண்ணும் இனிய வசந்தமும்), லேபில்கள், பியானோ, ஐஸ்கிறீம் (நமக்கென்றொரு புல்வெளி)

**யதார்த்தப் பாங்கு**

சமூகத்தின் பிரச்சினைகளை மையமாகக்கொண்டு எழுதப்படும் இலக்கியங்கள் யதார்த்தப்பாங்கானவையாக இருக்கவேண்டியது அவசியமாகும். அந்தவகையில் கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன் தன் கவிதைகளில் கற்பனை நிகழ்ச்சிகளை அதிகம் உள்வாங்காமல் உண்மைச்சம்பவங்களையும், போரினால் உண்டான வலியையும் கூறுகின்றமையால் இவரது கவிதைகள் அதிகம் கற்பனையின்றி யதார்த்தப்பாங்கில் அமைந்தவையாகவே காணப்படுகின்றது.

**சூழல் சித்திரிப்பும் அர்த்த வெளிப்பாடும்**

இலக்கியங்களில் மனிதனது மனஉணர்வுகளையும், சமூகநடைமுறையினையும் வெளிப்படுத்துவதற்குச் சூழல் சித்திரிப்புமுறை உத்தியாகப்பயன்படுத்தப்படுகிறது. புதிய சூழலில் ஏற்படும் அனுபவங்களை வெளிப்படுத்தும்போது மொழிக்கையாளுகையிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

பொதுவாக இயற்கையின் வெளிப்பாடான குளிர்ச்சி, குளிர்காலம் போன்றன மனிதனுக்கு இதமளிப்பதாகவே இருக்கும். அதேபோன்று வெயில், வெப்பம், கோடைகாலம் போன்றன வெறுப்பு, கோபம் போன்ற மனஉணர்வுகளுடன் தொடர்புபட்டன. ஆனால் இத்தகைய அர்த்தவெளிப்பாடுகள் கடுமையான குளிர் பருவ நாடுகளான ஐரோப்பிய, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு மாற்றமுற்றுத்தோன்றுகின்றன. அதாவது கோடை, வெயில், வெப்பம் போன்றன புலம்பெயர்ந்தவர்களுக்கு இனிமை, சந்தோசம், சுகம் போன்ற அர்த்தங்களைக் கொடுப்பதாக அமைகின்றது.

அந்தவகையில் வ.ஐ.ச.ஜெயபாலனின் கவிதைகளில் இத்தன்மையைக் காணமுடியும். ‘இலையுதிர்கால நினைவுகள்’ என்ற கவிதையில் ஒஸ்லோவிலிருக்கும் கவிஞர் இன்பம் தந்த கோடை காலம் மறைந்தமையையும், வடதுருவப் பறவைகள் வெயிலின் சுகம்தேடி ஈழத்திற்குகச் செல்வதாகவும் கூறுகிறார். இங்கு கோடை இனிமையையும், வெயில் சுகத்தைத் தருவதாகவும் அமைத்துள்ளார். இதனை

“இன்பக் கனவுபோல்

தோன்றி மறைந்தது கோடை

காற்றுக் குதிரைகளில்

குளிர்சாட்டை சொடுக்கி வரும்

வெய்யிற் சுகம் தேடி

வடதுருவப் பறவைகளும்….” (ஜெயபாலன்.வ.ஐ.ச,2022:70)

என்ற வரிகளில் காணமுடியும். இவ்வாறாக சூழல் சித்திரிப்பையும் அர்த்தவெளிப்பாட்டையும் கவிஞரின் கவிகளில் காணலாம்.

**முடிவுரை**

வ.ஐ.ச.ஜெயபாலனின் கவிதைகள் தனது நேரடி அனுபவங்களைக்கொண்டு யதார்த்தத்தை வெளிப்படுத்துவதாகவே காணப்படுகின்றன். இவருடைய கவிதைகள் போரிலும், இனஒடுக்குதலிலும் ஆட்பட்டு அவற்றின் வடுக்களையும் வலியையும் அதனால் ஏற்பட்ட புலம்பெயர்வும், புலம்பெயர்நாடுகளில் உண்டான அனுபவம் என்ற கருத்துச் செறிவுடனும், ஆழமான உணர்வு வெளிப்பாட்டுடனும் அமைகின்றது. இத்தன்மை ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் அவரது கவிதைகளைத் தனித்துவமாக அடையாளப்படுத்துகின்றன.

புலம்பெயர்விற்குப் பின்னரான கவிதைகள் புலம்பெயர் மக்களின் வாழ்வியல் அனுபவங்கள், பௌதிகப்பண்பாட்டு அம்சங்களால் முற்றிலும் வேறுபட்ட நாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்களின் தாய்மண் மீதானஏக்கம், உறவுகளின் பிரிவு, அந்நியஉணர்வு, விடுதலை உணர்வு, காதல் போன்ற பலவற்றை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. இவரது கவிதையில் காணப்படும் அழகியல் அம்சங்களும் உத்திமுறைகளும் வித்தியாசமானவையாகக் காணப்படுகின்றன. பருவகால மாற்றங்களும் அவற்றினூடாகப் புதிய அனுபவவெளிப்பாடும் இவரது கவிதைகளில் முதன்மைவகிக்கத் தொடங்கியது. இயற்கைச் சூழலைக் கொண்டும் அங்குள்ள கருப்பொருட்களைக் கொண்டும் கவிபுனையும் தன்மையும், சங்ககவிதை மரபின் தாக்கமும் கவிஞரின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

தொகுத்துநோக்கும்போது வ.ஐ.ச.ஜெயபாலன் கவியுலகில் பிரவேசித்த காலப்பகுதியிலிருந்து இன்றுவரை கவிதை எழுதிவருவதோடு புலம்பெயர்ந்து சென்ற பின்னரான கவிதைகளின் சிறப்புக்களும், கவிஞர் கையாளும் மொழிநடை, உத்திமுறைகள் என்பன அவரை தனித்துவம்மிக்கதாகக் அடையாளப்படுத்துகின்றது. இப்பின்னணியில் ஈழத்துக்கவிதை வளர்ச்சியில் வ.ஐ.ச.ஜெயபாலன் பெறும் முக்கியத்துவத்தையும் இவ் ஆய்வின்மூலம் அறியமுடிகிறது.

**உசாத்துணைகள்**

குணேஸ்வரன்.சு. (2009). *அலைவும் உலைவும்- புலம்பெயர் படைப்பிலக்கியம் குறித்த பார்வைகள்.* தினைப்புனம் வெளியீடு.

சித்திரலேகா, மௌ.(1995). *இலங்கைத் தமிழரின் புலம்பெயர் இலக்கியங்கள்.* மிரிஹான, நுகேகொட, சுதந்திர இலக்கியவிழா அமைப்புக் குழு.

பாலசுப்பிரமணியம், இ. (2014). இலங்கைத் தமிழரின் புலம்பெயர் இலக்கியத் தோற்றமும் மாற்றமும் (பக்32-351). *ஞானம்* (ஈழத்துப் புலம்பெயர் இலக்கியச் சிறப்பிதழ்)

விஜேந்திரன், சி. (2002). *ஈழத்துக் கவிதை நயம்.* சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

விஜேந்திரன், சி. (2003). *ஈழத்துக் கவிதைக் கனிகள்.* வில்லிவாக்கம்.

ஜெயபாலன்.வ.ஐ.ச.(1987). *சூரியனோடு பேசுதல்.* ஆசியா வெளியீடு.

ஜெயபாலன்.வ.ஐ.ச.(1987). *நமக்கென்றொரு புல்வெளி.* க்ரியா வெளியீடு.

ஜெயபாலன்.வ.ஐ.ச. (1998). *உயிர்த்தெழுகிறகவிதை.* மூன்றாவது மனிதன். வெளியீடு.

ஜெயபாலன்.வ.ஐ.ச.(2002). *வ.ஐ.ச.ஜெயபாலன் கவிதைகள் பெருந்தொகை.* ஸ்நோகா வெளியீடு.

ஜெயபாலன்.வ.ஐ.ச.(2013). *வ.ஐ.ச.ஜெயபாலன் கவிதைகள் குறுந்தொகை.* க்ரியா வெளியீடு.

ஜெயபாலன்.வ.ஐ.ச.(2022). *நீலம்.* டிஸ்கவரி பப்ளிக்கேஷன்ஸ்.

# அ.செ.முருகானந்தனின் சிறுகதைகள் - ஓர் ஆய்வு

**ஷம்சிகா ஜீவகரன், விஜிதா திவாகரன்**
தமிழ்க் கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
shamshamshi417@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

அ.செ.முருகானந்தன் ஈழத்துச் சிறுகதை ஆசிரியர்களில் முக்கியமான எழுத்தாளராவார். இவ் ஆய்வானது அ.செ.முருகானந்தனது சிறுகதைகளை உள்ளடக்கரீதியிலும், சிறுகதைகளில் கையாளப்பட்டுள்ள உத்திமுறைகளின் அடிப்படையிலும் விரிவாக ஆராய்கின்றது. ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் மக்களின் வாழ்வை யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்தும் சிறுகதைகளாக இவரின் சிறுகதைகள் எங்ஙனம் அமைகின்றன என்பது பற்றியும், ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் அ.செ.முருகானந்தனின் பங்களிப்பு மற்றும் அவரின் சிறுகதைகள் பெறும் முக்கியத்துவம் என்பது குறித்து மதிப்பிடுவதும் ஆய்வின் நோக்கங்கள் ஆகும். அ.செ.முருகானந்தனது அனைத்துச் சிறுகதைகளும் கிடைக்கப்பெறாமை இவ்வாய்வில் எதிர்கொண்ட சவால் ஆகும். இருப்பினும், அ.செ.முருகானந்தனது நூல்களில் வெளிவந்த சிறுகதைகளை மட்டும் இவவாய்விற்கு எடுத்துக்கொண்டு, அ.செ.முருகானந்தனது சிறுகதைகள் வெளிவந்த நூல்களை முதல்நிலைத்தரவாகவும் அவர் தொடர்பாக சஞ்சிகைகள், பிறநூல்களில் வெளிவந்த கட்டுரைகளை இரண்டாம் நிலைத்தரவாகவும் கொண்டு இவவாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. அ.செ.முருகானந்தனின் சிறுகதைகளை விரிவாக ஆய்வுக்கு உட்படுத்தி அவரது சிறுகதைகளின் தனித்துவத்தை வெளிக்கொணர்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *அ.செ.முருகானந்தன், இலங்கைத் தமிழ்ச் சிறுகதை, சிறுகதை உத்திகள், மறுமலர்ச்சிக் காலம்*

## ஆய்வு அறிமுகம்

“அ.செ.முருகானந்தனின் சிறுகதைகள் - ஓர் ஆய்வு” எனும் தலைப்பில் அமையும் இவ் ஆய்வானது ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்களில் தனக்கென தனித்துவமானதோர் இடத்தினைப் பெற்றுக்கொண்ட அ.செ.முருகானந்தனின் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

சிறுவயது முதலே எழுத்துத் துறைக்குள் வந்துவிட்ட ‘அ.செ.மு’ என எழுத்துலகில் சுருக்கமாக அழைக்கப்படும் அ.செ.முருகானந்தன் வாழ்நாளின் பெரும்பகுதியை வறுமையில் கழித்தபோதிலும் வேறெந்தத் தொழிலையும் செய்யாமல் எழுத்தாளராகவே பணிபுரிந்துள்ளார். அ.செ.முருகானந்தன் சுருக்கமாக ‘அ.செ.மு’ என அழைக்கப்படுவர். (இந்த ஆய்வில் அ.செ.முருகானந்தன் ‘அ.செ.மு’ என்றும் இனி குறிப்பிடப்படுவார்)

‘அ.செ.மு’ சிறுகதை மட்டுமல்லாது நாவல், குறுநாவல், கட்டுரைகள் போன்றவற்றையும் எழுதியுள்ளார். இவர் பத்திரிகைத்துறையிலும் பணிபுரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் மூத்த எழுத்தாளர்களில் ஒருவராக விளங்கும் அ.செ.முருகானந்தனது சிறுகதைகளை ஆய்வுக்குட்படுத்தி அவரின் சிறுகதைகளின் அமைப்பு

முறை, உள்ளடக்கம் மற்றும் அவர் தனது சிறுகதைகளில் கையாண்டுள்ள உத்திமுறைகள் என்பவற்றை இவ் ஆய்வு எடுத்து நோக்குகின்றது.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் அ.செ.முருகானந்தனின் சிறுகதைகள் பெறும் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டி அ.செ.முருகானந்தனின் சிறுகதைகளினூடாக ஈழத்து மக்களின் வாழ்வில் இடம்பெற்ற சமூகப் பிரச்சினைகளை எடுத்துக்கூறுவது இவ் ஆய்வின் நோக்கமாக உள்ளது. இவ் ஆய்வானது அ.செ.முருகானந்தனின் நூல்களில் வெளிவந்த சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுப் பரப்பை வரையறை செய்து கொள்கின்றது. அ. செ மு தொடர்பாகப் பலர் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளையும், பத்திரிகைக் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளனர். செம்பியின் செல்வன் எழுதிய ‘‘ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை மணிகள்’’ (1973) எனும் நூலில் ஏழு ஈழத்து சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவராக அ. செ. முவைப் பற்றிக் கூறுகின்றார். அகஸ்தியர் பதிவுகள் (1973) என்ற நூலில் ‘‘அ.ந.கவும் அ.செ.முவும்’’ என்ற கட்டுரை இடம்பெற்றுள்ளது. அ. யேசுராசா ‘‘ ‘மனிதமாடு’ சிறுகதை விமர்சனம்’’ (1995) என்ற தலைப்பில் ‘வெளிச்சம்’ இதழில் எழுதிய கட்டுரை குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் செ. யோகராசா எழுதிய ‘‘இன்றுவரை கிடைக்காத ‘எரிமலை’ சஞ்சிகை பற்றி’’ (2022) என்ற தலைப்பில் ‘ஞானம்’ சஞ்சிகையில் எழுதிய கட்டுரையில் அ.செ.முருகானந்தனால் ‘எரிமலை’ எனும் பத்திரிகை உருவானமை தொடர்பாகக் கூறியுள்ளார்.

**ஈழத்தில் தமிழ்ச் சிறுகதைகளின் தோற்றமும் வளர்ச்சியும்**

இலங்கையில் 1930 ஆம் ஆண்டுகளின் பின் அரைவாசியிலேயே சிறுகதை தோன்றி வளரத்தொடங்கியது. ஆங்கிலேயர் ஆட்சியின் பயனாகச் சமூகத்தில் ஏற்பட்டுவந்த மாற்றங்களின் விளைவே இதுவாகும். புதிய சமுதாய மாற்றமும் ஆங்கிலக்கல்வியும் மட்டுமன்றி, தமிழக சஞ்சிகைகளினதும் சிறுகதை எழுத்தாளர்களினதும் செல்வாக்கும் இலங்கையில் சிறுகதை தோன்றுவதற்கான முக்கிய காரணிகளாக இருந்துள்ளன.

ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் அ.செ.முருகானந்தனது வகிபாகம் என்று பார்க்கின்றபோது மறுமலர்ச்சிக்கால எழுத்தாளராக இவர் அடையாளப்படுத்தப்படுகின்றார். ஈழகேசரிப் பத்திரிகையில் தனது சிறுகதைப்பயணத்தை ஆரம்பித்த இவர் மறுமலர்ச்சி சஞ்சிகை, சுதந்திரன், ஈழநாடு போன்ற பத்திரிகைகளிலும் தொடர்ந்து எழுதி வந்துள்ளார். ஈழத்துச் சிறுகதை வளர்ச்சிக்கு வழிவகுத்த சிறுகதை ஆசிரியர்களின் வரிசையில் அ.செ.முருகானந்தனையும் ஒருவராக கொள்ளமுடியும்.

**அ.செ.முருகானந்தனின் வாழ்க்கைப் பின்னணியும் படைப்புலகும்**

அ.செ.முருகானந்தன் 1921 ஆம் ஆண்டு மாவிட்டபுரம் கிராமத்தில் பிறந்தார். முருகானந்தனின் இளமைக்காலம் மாவிட்டபுரம், அளவெட்டி ஆகிய கிராமங்களில் மாறி மாறிக் கழிந்தன. அ.செ.முருகானந்தனது எழுத்துலகப் பிரவேசமானது இந்தியப் பத்திரிகையாகிய

ஆனந்தபோதினியில் 'கண்டிக் கடைசி அரசன்' என்ற உரைச் சித்திரம் ஒன்றை எழுதியதில் இருந்து ஆரம்பமாகியது.

அ.செ.முருகானந்தன் நல்ல சிறுகதை எழுத்தாளர் மட்டுமல்ல. 'புகையில் தெரிந்த முகம்' எனும் குறுநாவலையும், 'யாத்திரிகன்' எனும் நாவலையும், 'வசந்த மல்லிகை' எனும் சிறு நாவலையும் எழுதியுள்ளார். அத்துடன் இலக்கிய நாடகங்கள், வானொலியில் ஒலிபரப்பான நிகழ்ச்சிகள், கட்டுரைகள் என்பவற்றையும் எழுதியுள்ளார்.

'அ.செ.மு' இறுதிவரையில் பிரமச்சாரியாகவே வாழ்ந்து மறைந்துபோனவர். அவரது இறுதிக்காலம் திருகோணமலை முதியோர் இல்லத்திலேயே கழிந்தது. 'அ.செ.மு' என்று பிரபலமாக அறியப்பட்ட அ.செ.முருகானந்தன், நாற்பதுகளில் எழுத்துலகில் காலடி எடுத்து வைத்து இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக எழுத்தே வாழ்க்கை என்று வாழ்ந்து ஓய்ந்து போனவர். சிறுகதை, நாவல், கட்டுரை என்று பல துறைகளில் எழுதிய இவர், சிறுகதைத் துறையிலேயே மேலோங்கி நிற்கின்றார்.

அ.செ.முருகானந்தன் நாவல், கட்டுரைகள், சிறுகதைகள், மொழிபெயர்ப்பு சிறுகதைகள், வானொலி நாடகங்கள் போன்ற பல துறைகளில் தன் எழுத்துத் திறமையை கையாண்டுள்ளதுடன் பத்திரிகைகளிலும் பணி புரிந்துள்ளார். எரிமலை எனும் பத்திரிகையை சுயமாக நடத்தியுள்ளார்.

**அ.செ.முருகானந்தனின் சிறுகதைகளின் உள்ளடக்கங்கள்**

அ.செ.முருகானந்தனது கதைகளில் போலியான கற்பனைகளின்றிய யதார்த்தச் சித்திரிப்புக்களையே காணமுடிகின்றது. யாழ்ப்பாணத்துக் கிராமங்கள் மட்டுமன்றி, இவர் திருகோணமலை, கொழும்பு, மலையகம் போன்ற இலங்கையின் பல இடங்களைத் தனது சிறுகதைகளுக்கான களங்களாக எடுத்துள்ளார். இவ்வாறான கள அமைவுகளுக்கு அவரது வாழ்வும் பணிகளும் ஒரு காரணமாக இருக்கலாம். ஏனெனில், 'அ.செ.மு' யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்தாலும் அவர் கொழும்பில் பல பத்திரிகைகளில் பணிபுரிந்து இருக்கின்றார். அத்துடன் திருகோணமலையில் 'எரிமலை' எனும் பத்திரிகையையும் நடத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்து நாட்டுப்புற வாழ்க்கையை மண்வாசனை கமழ அதற்கேற்ற நடையில் முதன் முதலில் எழுதிய பெருமை 'அ.செ.மு' வையே சாரும். முற்போக்கு சிந்தனைக்காலத்திற்கு முன்பே முற்போக்கான சிறுகதைகளை இவர் படைத்துள்ளார். மேலும், சிங்களத்தில் வந்த சிறுகதையை முதலில் தமிழில் மொழி பெயர்த்தவர் என்ற வகையிலும் மலையகம் பற்றி மலையகத்திற்கு வெளியே இருந்து அவர்களது பிரச்சினைகளைப் பேசியவர் என்ற வகையிலும் 'அ.செ.மு' முக்கியமானவராகக் காணப்படுகின்றார்.

பொதுவாக 'அ.செ.மு' இன் சிறுகதைகள் வறுமை, தொழில், காதல், சமூக ஏற்றத்தாழ்வுகள், இனப்பிரச்சினைகள், அரசியல், நாதஸ்வர கலைக்குடும்பம், மக்களின் வாழ்க்கை முறை, பிரதேச சித்திரிப்புகள், சமூகத்தில் பெண்களின் நிலை போன்ற விடயங்களை உள்ளடக்கங்களாகக் கொண்டுள்ளன.

## வறுமை

அ.செ.முருகானந்தனின் சிறுகதைகளில் வறுமையை 'எச்சில் இலை வாழ்க்கை', 'ஏழை அழுத கண்ணீர்', 'விளம்பர வாழ்வு' 'மனம் பொங்கவேணும்', 'மனிதமாடு' போன்ற சிறுகதைகளில் சமூகத்தில் சாதாரணமாக நடைபெறும் விடயங்களின் ஊடாக எடுத்துக்காட்டியுள்ளார். உதாரணமாக 'எச்சில் இலை வாழ்க்கை' எனும் சிறுகதையில் வரும் பின்வரும் பகுதியை காட்டலாம்.

> "பத்துப் பன்னிரண்டு பேர்கள், பெண்களும் குழந்தைகளுமாக எங்களை நோக்கி ஓடி வந்தார்கள். ஒருவரையொருவர் தள்ளியும் இடித்தும் ஓடிவந்து "ஐயா இங்கே தாருங்கள், என்னிடம் தாருங்கள்" என்று வாயைப்பிளந்து கொண்டு கையை நீட்டினார்கள். சிலர் போட்டியில் இலைகளைப் பிடுங்கினார்கள். நெருக்கடியில் இலைகள் சில கிழிந்து உள்ளேயிருந்த கழிவுகள் கீழே சிதறுண்டன. குழந்தைகள் போட்டி போட்டுக்கொண்டு அவற்றைக் கூட்டி அள்ளிக்கொண்டு ஓடினார்கள். ஐயோ, அப்போது அவர்கள் முகத்தில் வீசிய அந்தப் பேரானந்தப் பிரவாகம் இப்போதும் கண்முன்னே வந்து உள்ளத்தை ஊடுருவிக் கொண்டிருக்கின்றது. இலைகளை உருப்படியாக வாங்கிக்கொண்ட அதிர்ஷ்டசாலிகள் ஓடோடியுஞ் சென்று அவற்றைத் தங்கள் ஓலைப்பெட்டிகளில் வைத்து மூடினார்கள். குழந்தைகள் எவ்வளவு ஆவலுடன் அவர்களைச் சுற்றி உட்கார்ந்து கொண்டன! இந்த அமளியில் என்னோடு வந்தவர்கள் சிலர் இலைகளை எறிந்தே விட்டார்கள். நாய்கள் பாய்ந்துவந்தன. ஆனால் அவற்றை விரட்டிவிட்டு இலைகளை எடுத்துக்கொண்டு ஓடினார்கள் சில பெண்கள் அவர்களைத் தொடர்ந்து ஓடின சில குழந்தைகள். நாய்கள் குரைத்துக்கொண்டு நின்றன." (முருகானந்தன்,1986)

## தொழில்

'அ.செ.மு' இன் சிறுகதைகளில் அக்கால மக்கள் செய்த தொழில்கள் பற்றியும் பேசியுள்ளார். ஒரு காலகட்டத்து மக்களது வாழ்க்கை முறையினை அறிந்து கொள்வதில் அம்மக்கள் செய்த தொழில்கள் பற்றியும் அறிந்து கொள்ளலாம். அந்தவகையில் ஏறத்தாழ நாற்பதுகள் தொடக்கம் எழுபதுகள் வரையான காலகட்டத்தில் 'அ.செ.மு' சிறுகதைகளைப் படைத்துள்ளார் என்ற வகையில் அக்காலகட்ட மக்களது வாழ்வில் அவர்கள் செய்த தொழில்கள் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றன.

'ஏழை அழுத கண்ணீர்' எனும் சிறுகதையில் புகையிலைத் தோட்டத் தொழில் செய்பவர்களாக பொன்னுச்சாமி, கந்தன் ஆகிய பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளனர். புகையிலைத் தோட்டங்கள் பற்றியும் அங்கு நடைபெறும் இறைப்பு வேலைகளையும் இச்சிறுகதையில் காட்டுகின்றார்.

"இறைப்பு ஆரம்பமாயிற்று. கந்தன் துலாவில் முன்னுக்கும் பின்னுக்கும் ஓடினான். பொன்னுச்சாமி கொடி பிடித்து வாரி வாரித் தண்ணீரை அள்ளி ஊற்றினான். ஓடிய நீர் வாய்க்கால் வழியே நின்ற புல்லுக்கும் பொசிந்தது. காற்றில் அடிபட்டுச் சாய்ந்து உலர்ந்து கிடந்த புல்லுகள் சிலிர்த்து எழும்பின." (முருகானந்தன்,1986)

## காதல்

அ.செ.முவின் சிறுகதைகளில் 'அம்பிகை சந்நிதியில்', 'சித்தக் குழப்பம்', 'இன்னமும் சோதனையா', 'அருவியின் அழைப்பு', 'தளராவளர் தெங்கு' ஆகிய சிறுகதைகள் காதல் கதைகளாக உள்ளன. இவரது காதல் கதைகளில் பெரும்பாலானவை சேராத தன்மையினையும் ஒரு துயரத்தையும் கொண்டனவாக உள்ளன.

'இன்னமும் சோதனையா' என்ற சிறுகதையில் ஞானகுமாரன், தேவகி ஆகிய இருவருக்குமான காதல் எடுத்துக்காட்டப்படுகின்றது. எனினும் இக்காதலில் அவர்கள் இருவருக்கும் இடையிலான பிணைப்புப் பாலமாக இசையே காணப்படுவதையும் இக்கதையில் காணலாம்.

'சித்தக் குழப்பம்' இனம் கடந்த காதலைக் காட்டுகின்றது. இச்சிறுகதையில் கோவிந்தன் நந்தாவதி ஆகிய இருவரது காதலும் ஒன்றுசேரவில்லை ஆயினும் நந்தாவதியின் புத்தர் சிலையை தன் காதலுக்கு அதுவே இடையூறு என எண்ணி கோவிந்தன் எடுத்து செல்கிறான். நந்தாவதி அதனால் பைத்தியம் ஆகின்றாள். புத்தர் சிலையை எடுத்துச் சென்ற கோவிந்தனும் பைத்தியம் ஆகின்றான். இருவரும் மீண்டும் பைத்திய வைத்தியசாலையில் சந்திக்கின்றனர். அங்கு மீண்டும் தன்னுடைய புத்தர் சிலையைக் கண்டு நந்தாவதி பைத்தியம் தெளிகின்றாள். அங்கு பராமரிப்பாளராகவும் இருக்கின்றாள். அதேநேரம் கோவிந்தனை தாயைப்போல பராமரித்தும் வருகின்றாள். இச்சிறுகதையிலும் அவர்களது காதலானது இல்லற வாழ்வில் இணையவில்லை. ஆனால் அவர்களின் அன்பானது மாறாது உள்ள தன்மையை இச்சிறுகதையில் காணலாம்.

'தளராவளர் தெங்கு' என்ற சிறுகதையானது கடற்படை வீரனான றொபின், அவனை சந்திக்கும் ரீட்டா என்ற பறங்கிப் பெண்ணுக்கும் இடையில் மலரும் காதலைக் காட்டுகின்றது. அக்காதலானது றொபினின் மரணத்துடனேயே முடிகின்றது.

இவ்வாறு 'அ.செ.மு' வின் சிறுகதைகளில் காதல் எனும் கருப்பொருள் பற்றியும் சித்திரிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது. எனினும், அச்சிறுகதைகள் முழுக்க முழுக்க காதல் கதையாக மட்டுமே அமைந்துள்ளன என்றும் கூறிவிட முடியாது. சில காதல் கதைகளில் நாதஸ்வரக் கலையழகும், இசையுணர்வும் மேலோங்கிக் காணப்படுவதையும் காணலாம்.

## சமூக ஏற்றத்தாழ்வுகள்

ஒரு சமூகத்திலே பல்வேறு வகைப்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் வாழ்வானது ஒரே தன்மையில் இருப்பதில்லை. மக்களுக்கிடையில் வேறுபாடு காணப்படாதபோதிலும் அவர்களின் வாழ்க்கை முறையில் வேறுபாடு இருந்துள்ளதை சிறுகதைகள் வெளிப்படுத்த தவறியதில்லை. இவ்வேறுபாடுகளுக்குரிய பிரதானமான காரணமாக சாதிப்பிரச்சினைகளும் காணப்பட்டுள்ளன. 'அ.செ.மு'வும் தனது சிறுகதைகளில் இவ்வாறான சமூக ஏற்றத்தாழ்வுகளை நாற்பதுகளில் சமூகத்தில் காணப்பட்ட நடைமுறைகளையும் எடுத்துக்காட்டியுள்ளார். 'அ.செ.மு'வின் கதைகளில் சாதிப்பிரச்சினைகளை வெளிப்படையாக பேசாவிட்டாலும், வாசகன் மனதில் ஊசி குத்துவது போல மறைமுகமாக அப்பிரச்சினைகளைப் பேசிச் செல்கின்றார்.

அந்தவகையில் 'இன்னமும் சோதனையா', 'விளம்பரவாழ்வு', 'வெயிலும் மழையும்', 'அருவியின் அழைப்பு' போன்ற சிறுகதைகளில் சமூகத்திலே காணப்படுகின்ற ஏற்றத்தாழ்வுகளை மறைமுகமாக சுட்டிக்காட்டியுள்ளார்.

'வண்டிற்சவாரி' என்னும் சிறுகதையில் அக்காலகட்டத்தில் ஆலயத்திற்குள் எல்லோரும் போக முடியாது இருந்த ஒரு சூழலை அ.செ.மு சொல்லிச் செல்கிறார். இதனை அவர் வெளிப்படையாக கூறாவிடினும் இச்சிறுகதையில் இச்சம்பாஷனையினை ஆசிரியர் புகுத்தியதிலிருந்து அவர் சமூகத்தில் நடைபெறும் சமூக ஏற்றத்தாழ்வுகளைச் சுட்டிச் சென்றுள்ளார்.

> "அண்டைக்குத் திருவிழாவிலே வேலனை அடித்துப்போட்டீர்களாமே, எதற்காக?"
>
> "எதற்காகவா? சபைப் பழக்கம் தெரியாத மாடுகள்! கோயிலுக்கு உள்ளே வந்து நுழைந்து விடுவான் போல நின்று எட்டி எட்டிப் பார்த்தானே…" (குணராசா,2001)

ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் ஐம்பதுகளிலேயே சிறுகதைகளில் தாழ்த்தப்பட்டவர்களின் பிரச்சினைகள் பேசப்படுகின்றன. ஆனாலும் இக்காலகட்டங்களுக்கு முன்னரே 'அ.செ.மு'வின் சிறுகதைகள் சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராக குரல்

கொடுத்துள்ளதை இவரது சிறுகதைகள் எடுத்துக் காட்டுகின்றன என்பதை யாராலும் மறுக்க முடியாது. ஐம்பதுகளில் வந்த சிறுகதைகள் சாதிப்பிரச்சினைகளை வெளிப்படையாக பேசியது. உதாரணமாக, ரகுநாதனின் 'நிலவிலே பேசுவோம்', ஆனால் இவற்றுக்கெல்லாம் முன்பே 'அ.செ.மு'வின் சிறுகதைகளில் சாதிப்பிரச்சினைகள் பேசப்பட்டுள்ளன. பிரச்சினைக்கான தீர்வை ஆசிரியர் தனது சிறுகதையில் குறிப்பிடவில்லை எனினும் அப்பிரச்சினையை நாசூக்காக எடுத்துக்காட்டுவதற்கு மேற்கூறப்பட்ட சிறுகதைகளே சான்றாகும்.

## இனப்பிரச்சினைகள்

ஈழத்தில் எண்பதுகளிலேயே தமிழ் சிங்கள இனப்பிரச்சினைகள் பரவலாக இருந்தன. எனினும் ஐம்பதுகளுக்குப் பின்னரே, அவை சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியதை அக்கால சிறுகதைகளின் ஊடாகவே நாம் அறிய முடிகின்றது. 'அ.செ.மு'வின் 'சித்தக் குழப்பம்', 'தந்தை மொழி' ஆகிய இரண்டு சிறுகதைகளிலும் தமிழ், சிங்கள மக்களை காட்டுகின்றார். இவ்விரு கதைகளும் எழுந்த சூழலுக்கேற்ப ஆசிரியர் இனப்பிரச்சினையை காட்டும் விதமும் வேறுபட்டிருப்பதைக் காணமுடிகின்றது. 'சித்தக் குழப்பம்' எனும் சிறுகதை 1941 இல் எழுதப்பட்டது. 1956 இல் 'தந்தை மொழி' எனும் சிறுகதை எழுதப்பட்டது.

'சித்தக்குழப்பம்' என்ற சிறுகதையில் தமிழ் சிங்கள மக்களிடையே காணப்படும் உறவு நிலையையும் 'தந்தை மொழி என்ற சிறுகதையில் தமிழ் சிங்கள மக்களின் நடுவே காணப்படும் முரண்பாட்டினையும் காணமுடிகிறது.

நாற்பதுகள், ஐம்பதுகளில் ஈழத்தில் காணப்பட்ட தமிழ், சிங்கள இனங்களுக்கிடையில் ஆரம்பத்தில் முரண்பாடுகள் காணப்பட்ட போதும் இலைமறை காயாக அவர்களுக்கிடையில் அன்பான உறவு நிலை நிலவியதையும், பின் அரசியல் சமூக சூழ்நிலைகளினால் அவ் முரண்பாடுகள் விரிசலடைந்ததையும் அவற்றின் தீவிரப்போக்கையும் தன் சிறுகதைகளில் உள்ளடக்கியிருக்கின்றார் என்றவகையில் அரசியல்ரீதியான சமூக பிரச்சினைகளையும் தன் சிறுகதைகளுக்குள் உள்வாங்கியவர் என்ற வகையிலும் இவரை முக்கியப்படுத்த வேண்டும்.

## அரசியல்

நாற்பதுகளில் சிறுகதை எழுதியோரின் சிறுகதைகளில் சமகால அரசியல் விடயங்கள் சுவைபடச் சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம். அந்தவகையில் 'அ.செ.மு' தன் சிறுகதைகளில் எந்த அரசியல் கட்சியின் பக்கமும் நிற்கவில்லை. மாறாக அரசியல் பிரச்சினைகளினால் மக்களிடம் ஏற்படும் மாற்றங்களையும், அக்காலகட்டத்தில் புதிதாக அறிமுகமான தேர்தல் பற்றிய போதிய அறிவு மக்களிடம் காணப்படவில்லை என்ற குறையை

நகைச்சுவை தழும்ப தன் சிறுகதைகளில் கூறிச் செல்வதைக் காணலாம். மேலும் தேர்தல் கால மோசடிகளையும் இவர் விபரித்துள்ளார்.

## நாதஸ்வர கலைக்குடும்பம்

அ.செ.மு இன் குடும்பம் கலையுணர்வு மிக்கதாக இருந்ததினாலோ அவரது சிறுகதைகளிலும் கலையுணர்வு மிகுந்து காணப்பட்டன எனலாம். கலையுணர்வை சித்திரிக்கும் சிறுகதைகளில் நாதஸ்வர கலைக்குடும்பச் சித்திரங்களாக கலைஞனின் சொர்க்கம், நேற்று இன்று வந்த உறவல்லடி போன்ற சிறுகதைகள் காணப்படுகின்றன. அத்துடன் காதல் கதையாக உள்ள அம்பிகை சந்நிதியில் எனும் சிறுகதையும் நாதஸ்வர கலைக்குடும்ப பின்னணியில் எழுதப்பட்டதாகவே காணப்படுகிறது.

அந்தக்கால கட்டத்தில் யாழ்ப்பாணத்தில் நாதஸ்வரக் கலைக்குடும்பத்துக்கு பெரும் மதிப்பு காணப்பட்டுள்ளது. அதிலும் இந்தியாவில் இருந்து வரும் நாதஸ்வர வித்துவான்களுக்கு பெரிய வரவேற்பே காணப்பட்டிருப்பதை கலைஞனின் சொர்க்கம் சிறுகதை உணர்த்துகிறது.

## மக்கள் வாழ்க்கை முறைகள்

அ.செ.மு இன் சிறுகதைகளில் அவரது சிறுகதைகளின் சமகால மக்களின் வாழ்க்கை முறைகளினை காணமுடிகிறது. அந்த வகையில் மக்களின் நடைமுறை வாழ்க்கையில் காணப்படும் யதார்த்தமான விடயங்களையும் மக்களது வாழ்வில் அவர்கள் விடும் குறைகளையும் அ.செ.மு சுட்டிச் சென்றுள்ளதை காணலாம்.

அந்தவகையில் சமய நம்பிக்கைகள், சமூகத்தில் மக்களால் கடைப்பிடிக்கப்படுகின்ற பழக்கவழக்கங்கள், மக்களிடம் காணப்படும் கஞ்சத்தனமான சிக்கன வாழ்க்கை, போலியான கௌரவ வாழ்க்கை, சமூகத்தில் நடைபெறுகின்ற ஊழல்கள் என்பவற்றை சாதாரணமான பாத்திரங்களின் ஊடாக தனது சிறுகதைகளில் எடுத்துக்காட்டியுள்ளார்.

## பிரதேச சித்திரிப்புகள்

அ.செ.மு இன் சிறுகதைகள் மண்வாசனை மிகுந்து காணப்படுகின்றன என்று சொல்வதற்கு காரணம் அவரது சிறுகதைகளில் காணப்படுகின்ற பிரதேச சித்திரிப்புக்களே ஆகும். யாழ்ப்பாணம், கொழும்பு, மலையகம் போன்ற ஈழத்தின் பல இடங்களை தன் சிறுகதைகளில் உள்ளடக்கிய அ.செ.மு கடல் கடந்து தமிழகத்தையும் தன் சிறுகதைகளில் கொண்டுவந்துள்ளதை காணலாம்.

## பெண்கள்

சிறுகதைகள் பெரும்பாலும் சமூகத்தில் காணப்படுகின்ற பெண்களின் பிரச்சினைகளை பேசாமல் இருப்பதில்லை. அ.செ.மு இன் சிறுகதைகளில் பெண்களது பிரச்சினைகளுக்கு எதிரான குரல் ஒலிக்காவிடினும் சமூகத்தில் வாழ்கின்ற பல்வேறு விதமான பெண்களை அவரது சிறுகதைகளில் காணலாம். அவரது சிறுகதைகளில் படிக்காத பாமர பெண்ணையும் காட்டுகிறார். அதேநேரம் படித்த பெண்பாத்திரங்களையும் அவரது சிறுகதைகளில் காணலாம். 40 கள் தொடக்கம் 80 கள் வரையான காலப்பகுதியில் படித்த வேலைக்கு போகின்ற பெண்களை தனது சிறுகதைகளில் பாத்திரங்களாக அ.செ.மு படைத்திருப்பது அவரது முற்போக்கு சிந்தனையையே காட்டுகிறது. அதே நேரம் பெண்களது சில பிரச்சினைகளையும் அவர் தனது பெண்பாத்திர வடிவமைபப்பின் ஊடாக கூறிச் செல்கின்றார். வெளிப்படையாக அவர் எதுவும் கூறாவிடினும் அவரது பெண்பாத்திரங்களில் சில அவரது முற்போக்கு சிந்தனையை காட்டுவதை காணலாம்.

## அ.செ.முருகானந்தனின் சிறுகதைகளில் உத்திமுறைகள்

இலக்கியத்தில் உணர்ச்சியைக் கருத்தாக மாற்ற உதவும் வடிவங்கள் அனைத்தும் உத்திகள் எனப்படுகின்றன. சிறுகதை, ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் திறம்பட அமையச் சில உத்திகள் பின்பற்றப்படுகின்றன. சிறந்த உத்திகள் மூலமே சிறுகதைகள் புதுமை படைக்கின்றன. உத்திகள் படைப்பாளரின் தனித்தன்மையைக் காட்டுவதாயுள்ளன. இந்த உத்திகள் அனைத்தும் கதையமைப்பு, கதைமாந்தர்கள் மூலமே வெளிப்படுகின்றன. ஒரு எழுத்தாளரின் சிறுகதைகள் மனதில் நின்று நிலைப்பதற்கு அதில் இடம்பெறும் உத்திகளும் காரணமாகின்றன. உத்திகளின் மூலம் செய்திகளை எளிதாக உணரச்செய்யலாம். ஒரு படைப்பாளரது சிறுகதைகளை மதிப்பிட அச்சிறுகதைகளின் உள்ளடக்கத்தினை மட்டும் ஆராய்வது போதாது. அச்சிறுகதையில் பயன்படுத்தப்பட்டுள்ள உத்திகளும் அவற்றை மதிப்பிட முக்கிய பங்குவகிக்கின்றன.

அ.செ.முருகானந்தனது சிறுகதைகளில் அவர் கையாண்டுள்ள உத்திகள் மூலம் அவரது படைப்பாற்றல் தன்மையை மேலும் விளங்கிக்கொள்ள முடியும். அந்தவகையில் அ.செ.முருகானந்தனது சிறுகதைகளில் அவர் கையாண்டுள்ள உத்திமுறைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

## மொழிநடை

அ.செ.முருகானந்தனின் மொழிநடை, தான் எடுத்துக்கொண்ட விடயத்தோடு நெருங்கி நேராக உறவாடும் வல்லமை பெற்ற நடை. சிக்கலற்ற இலகுவான வசனங்களை அவர் தனது சிறுகதைகளில் கையாண்டுள்ளார். உவமை, உருவகங்களை அளவாக தேவையான இடத்திற்கேற்ப கையாண்டு கிராமிய மண்வாசனை வீசும் சொற்கள் அதிகம் இடம்பெறும்படியாக இவரது சிறுகதைகள் காணப்படுவதை காணலாம். எனினும் ஆங்கில, சமஸ்கிருத சொற்களின் பயன்பாடும் இவரது கதைகளில் பரவலாக காணப்படுவதை இவரது சிறுகதைகள் எடுத்துக்காட்டுகின்றன. அத்துடன் மெல்லிய நகைச்சுவை ததும்பும்

வசனங்களையும் நாசூக்கான கிண்டலுடன் கவிதை நயமும் இணைந்து இவரது நடையை மேலும் மெருகூட்டியுள்ளது.

அ.செ.முருகானந்தன் தனது சிறுகதைகளில் வாசகர்களைக் கவரும் வகையில், தான் சொல்ல வருகின்ற விடயத்தை நகைச்சுவையாகச் சொல்லும் உத்தி முறையை பயன்படுத்தியிருக்கின்றார். இந்த உத்தி முறையினால் ஆசிரியர் வாசகனின் மனதில் தான் சொல்ல நினைப்பதைத் தெளிவாக உணரச்செய்கின்றார்.

'விளம்பர வாழ்வு' என்ற சிறுகதையில் கிணற்றடியில் பெண்கள் நின்று பல மணி நேரமாகக் கதை அளந்து குளிப்பதையும் அவர்கள் பணக்கார வீட்டுப்பெண்கள் என்பதையும் நாசூக்காக ஆசிரியர் கூறிச்செல்கின்றார்.

> "அதென்ன வெள்ளை வெளேரென்று நுரை நுரையாக இருக்கிறது? ஆமாம். வாசனை சோப் கரைந்த நீர். தண்ணீர்கூட கமகம என்று வாசனை அடிக்கிறதா? விலையான சோப்!" (முருகானந்தன்,1986)

## நனவோடை உத்திமுறை

அ.செ.முருகானந்தனின் சிறுகதைகளில் நனவோடை உத்திமுறையினை கையாண்டுள்ளார். அம்பிகை சந்நிதியில், தந்தை மொழி, வெளிச்சம் போன்ற சிறுகதைகளில் பாத்திரங்களின் பழைய கால நினைவுகளை வாசகருக்கு காட்டும் வகையில் இவ் உத்தி கையாளப்பட்டுள்ளது.

'அம்பிகை சந்நிதியில்' என்ற சிறுகதையில் ராஜப்பன், மோகனாங்கி தனக்கு ஆலயத்தில் மாலை போட்ட நிகழ்வை நினைத்துப்பார்ப்பதாகக் கதை தொடங்குகிறது.

> "பக்கத்திலிருக்கும் அம்மன் கோவிலில் ஆலாட்சிமணி அடிக்கும் வேளைகளில் அவன் உள்ளத்தில் உறைந்து போயிருக்கும் ஒரு பழைய ஞாபகம் உயிர் பெற்று எழும்". (முருகானந்தன்,1986)

## பின்னோக்கு உத்திமுறை

பின்னோக்கு உத்தி என்பது நேரடியாக கதை சொல்லும் முறையில் இருந்து மாறுபட்டு கதையின் முடிவிலிருந்தோ அல்லது இடையிலிருந்தோ தொடங்கி பின்னர் முன்னைய கதையைக் கூறுவதாக அமைவதாகும். இது வாசகரின் எதிர்பார்ப்பையும் ஆர்வத்தையும் தூண்டுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. அந்தவகையில் அ.செ.முருகானந்தனது பெரும்பாலான கதைகள் பின்னோக்கு உத்திமுறையிலேயே அமைந்துள்ளன.

தந்தை மொழி என்ற சிறுகதையில் தொடக்கத்தில் வேலாயுதம் வைத்தியசாலையில் இருப்பதைக் கூறிவிட்டு பின்பே அவனுக்கு என்ன நடந்தது என்று கூறப்படுகிறது. இதனை பின்வரும் பகுதி எடுத்துக்காட்டுகின்றது.

> ''தலையிலும் காலிலும் கட்டுப் போட்டுக் கொண்டு வேலாயுதம் ஆஸ்பத்திரிப் படுக்கையிற் கிடந்தான். நாலு நாட்களாக அறிவு நினைவு இல்லாமலிருந்து ஐந்தாவது நாள் சற்றே கண்விழித்துப் பார்த்தான்.
>
> நாலு தினங்களுக்கு முன் அவனுக்கு என்ன சம்பவித்தது? ஏன் ஆஸ்பத்திரிக்கு வந்தான்?'' (முருகானந்தன்,1986)

**நோக்குநிலை**

அ.செ.முருகானந்தனின் சிறுகதைகளின் கதை கூறும் முறையானது ஆசிரியர் நோக்கு, முக்கிய பாத்திர நோக்கு, விலங்குகள், அஃறிணைப்பொருட்கள் கதை கூறும் நோக்கு, உரையாடல்கள் மூலம் கதை நகர்த்தும் முறை போன்ற பல்வேறு விதங்களில் காணப்படுகின்றன.

**வர்ணனை**

அ.செ.முருகானந்தன் தனது சிறுகதைகளிலே வர்ணனைகளை இயற்கை காட்சிகளை காட்டுவதற்கும், சிறுகதைகளில் வரும் இடங்களை காட்டவும், பாத்திரங்களின் தோற்றங்களை எடுத்துக்காட்டும் போதும் பயன்படுத்தி உள்ளார். சிறுகதைகளில் அளவான வர்ணனைகளை கதையமைப்பிற்கேற்ப கையாண்டிருப்பதை கானலாம்.

'அம்பிகை சந்நிதியில்' எனும் சிறுகதையில் வரும் மோகனாங்கியின் தோற்றம் சித்திரிக்கப்பட்டுள்ளது.

> வயது இருபது வரையில் இருக்கும். நாதஸ்வரக்காரர்மேல் வைத்த கண் எடுக்காது அப்படியே அசைவற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் கண்களிலிருந்து நீர் பெருகி ஓடியது. ஆனால், அவள் முகம் மட்டும் வாடாது ஒருவித மந்தஹாசத்துடன் பிரகாசித்தது. (முருகானந்தன்,1986)

**பாத்திரப்படைப்பு**

அ.செ.முருகானந்தனின் சிறுகதைகளில் பாத்திரப்படைப்பினை நோக்கினால் ஆசிரியர் அதில் வெற்றி பெற்றுள்ளார் என்றே கூறவேண்டும். இவரது பாத்திரங்கள் யதார்த்தமான பாத்திரங்களாகவே காணப்படுகின்றமை இவரது படைப்புக்களுக்கு ஒரு சிறப்பாக காணப்படுகின்றது. இவரின் சிறுகதைகளில் ஆண் பாத்திரங்களும், பெண் பாத்திரங்களும் படைக்கப்பட்டிருந்தாலும் பெரும்பாலும் பிரதான பாத்திரம் ஆண் பாத்திரமாகவே

காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக மாடு சிரித்தது, வண்டிச்சவாரி, சோமலதை, சிங்கக்கொடி சிரித்தது, வியாபாரியார் போன்ற கதைகளை இதற்கு உதாரணமாக கூறலாம்.

அ.செ.முருகானந்தனின் சிறுகதைகளில் மிகக் குறைவான பாத்திரங்களையே பயன்படுத்தியுள்ளார். எடுத்துக்காட்டாக 'ஏழை அழுத கண்ணீர்' என்ற சிறுகதையில் பொன்னுச்சாமி, கந்தன் என்ற இரண்டு பாத்திரங்களின் ஊடாகவே கதை நகர்த்தப்படுகிறது.

சில சிறுகதைகளில் கதையில் பிரதானமாக ஒரு பாத்திரத்தை படைத்துவிட்டு கதையை ஆசிரியரே அப்பாத்திரத்துடன் உரையாடி கதையை நகர்த்துமாறு படைத்துள்ளார். உதாரணமாக 'பழையதும் புதியதும்', 'மாடு சிரித்தது' என்ற சிறுகதைகளில் பிரதான பாத்திரமாக கார்த்திகேசுவே காணப்படுகின்றான். கதையை ஆசிரியர் கதையில் ஒரு பாத்திரமாக மாறி அவனுடன் பயணம் செய்வதாகவே படைக்கப்பட்டுள்ளது.

இவரது சிறுகதைகளின் பாத்திரங்கள் பெரும்பாலும் சமூகத்தில் நாம் காண்கின்ற சாதாரண மனிதர்களாகவே காணப்படுகின்றன. வண்டிச்சவாரி செய்பவர்கள், தோட்டத்தொழிலாளிகள், பெண்கள், நாதஸ்வர கலை குடும்பத்தவர், பூசகர், வியாபாரி போன்ற பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன. அப்பாத்திரங்களின் அறிமுகமானது அப்பாத்திரத்தின் குண இயல்பை வாசகருக்கு காட்டி நிற்பதாய் அமைந்துள்ளது. பாத்திரங்களின் பண்பினை தானே சில இடங்களில் அறிமுகம் செய்கின்றார். சில சிறுகதைகளில் வேறொரு பாத்திரம் அறிமுகப்படுத்தும் விதமாகவும் கையாண்டுள்ளார்.

**தலைப்பின் பொருத்தப்பாடு**

அ.செ.முருகானந்தனின் சிறுகதைகளின் தலைப்புக்கள் கதை கூறும் பொருளை மையமாக வைத்தும் மையப்பாத்திரத்தின் பெயரிலும் சிறுகதையின் முடிவை மையமாக கொண்டும் அமைந்திருப்பதை காணலாம்.

'எச்சில் இலை வாழ்க்கை' என்ற சிறுகதையில் பிரதானமாக கூறப்படும் விடயமே ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழும் மக்கள் வறுமையினால் உணவின்றி எச்சில் இலைகளை உண்டு வரும் சம்பவம் பற்றியே பேசப்பட்டுள்ளது. எனவே இக்கதைக்கு இத்தலைப்பை விட பொருத்தமான தலைப்பு வேறு எதுவும் இருக்க முடியாது.

'கிழவி' என்ற சிறுகதையில் சாகும் தருவாயில் உள்ள கிழவியைப்பற்றியே கதை சொல்லப்பட்டுள்ளது. இப்பாத்திரம் கிழவி என்றே கூறப்படுகிறது. இப்பாத்திரமே கதையை நகர்த்திச் செல்வதாகவும் உள்ளது. எனவே இக்கதைக்கு இத்தலைப்புப் பொருத்தமானதாக காணப்பட்டுள்ளது.

'மாடு சிரித்தது' என்ற சிறுகதையை எடுத்துக்கொண்டால், இது அரசியலில் நடக்கும் ஊழல்களையும் அரசியல் அறிவில்லாது ஏமாறும் மக்களையும் கார்த்திகேசு என்ற பாத்திரத்தின் ஊடாக எடுத்துக் கூறுவதாக அமைகிறது. இச்சிறுகதையின் தலைப்பானது சிறுகதையின் முடிவை வைத்து அமைந்துள்ளது.

**முடிவுரை**

அ.செ.முருகானந்தன் ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் முக்கியமான ஆரம்பகால எழுத்தாளர். 1940 களில் சிறுகதை உலகில் கால்பதித்த அ.செ.முருகானந்தன் ஏறத்தாழ 40 ஆண்டுகள் எழுத்துப்பணியை மேற்கொண்டவர். இவரது எழுத்துக்கள் அவரது காலகட்டத்தை வெளிப்படுத்தி நிற்பதோடு தற்காலத்திற்கும் பொருந்துவனவாக காணப்படுகின்ற தன்மையை இவ்வாய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மண்வாசனை மிகுந்த சிறுகதைகளை எழுதியவர் என்ற வகையில் இவருக்கு ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் முக்கியத்துவம் உண்டு. யாழ்ப்பாணப் பண்பாட்டம்சங்களையும் புகையிலைத் தோட்டங்களையும் சிறுகதைகளில் புகுத்தி சிறுகதைகளில் மண்வாசனை வீசச்செய்தவர். தான் வாழ்ந்த பிரதேசம் மட்டுமல்லாது கொழும்பு, மலையகம் போன்ற பிரதேங்களையும் தனது சிறுகதைகளில் உள்ளடக்கி தன் சிறுகதைகளின் பாடுபொருளினை மேலும் விரிவாக்கி கொண்டவர்.

மலையகத் தோட்டத் தொழிலாளிகளின் பிரச்சினைகளை மலையகத்திற்கு வெளியே நின்று ‘காளிமுத்துவின் பிரஜா உரிமை’ என்ற சிறுகதை மூலம் வெளியுலகிற்கு வெளிக்கொண்டு வந்தவர் என்ற ரீதியிலும் இவர் முக்கியம் பெறுகின்றார்.

அ.செ.முருகானந்தனது எழுத்துக்கள் அவரது காலத்து மக்களது வாழ்க்கைப் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதாகக் காணப்படுகின்ற அதேவேளை, சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை ‘அ.செ.மு’ உரத்துச் சத்தமிடாது நகைச்சுவையுடன் கேலி செய்து செல்லுதல் அவரது சிறுகதைகளில் காணப்படும் தனித்துவமாகவே அமைந்துள்ளது.

அ.செ.முருகானந்தனின் சிறுகதைகள் யாழ்ப்பாணப் பண்பாட்டம்சங்களை எடுத்துக்கூறுகின்றன என்று மேலோட்டமாகக் கூறிச்சென்றாலும் ‘அ.செ.மு’ இன் சிறுகதைகளைக் கூர்ந்து ஆராய்கின்ற போது, அவர் சமூகப்பிரச்சினைகள் பலவற்றை தனது சிறுகதைகளில் பேசியுள்ளார். ஆனால் அவருக்கு பின் வந்த எழுத்தாளர்களைப் போன்று வெளிப்படையாகப் பேசவில்லை. மாறாக தனது சிறுகதைகளில் ஆங்காங்கே சொல்லிச் செல்கின்றார். உதாரணமாக, அவர் சாதிப்பிரச்சினைகளைப் பற்றி எந்த சிறுகதையிலும் வெளிப்படையாகப் பேசவில்லை. ஆனால் அவரது சிறுகதைகளைக் கூர்ந்து நோக்கினால் அவர் சமூகத்தில் சாதி சார்ந்த பிரச்சினைகள் பற்றியும் அதனால் மக்களிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகளையும் கூறிச்செல்வதை அவரது சிறுகதைகள் எடுத்துக்காட்டுகின்றன.

அ.செ.முருகானந்தனின் சிறுகதைகள் உள்ளடக்க ரீதியில் மட்டும் காத்திரமான சிறுகதைகளாக அமையாது உருவ அடிப்படையிலும் சிறந்து விளங்குகின்றன. சிறுகதைகளில் பயன்படுத்தப்படுகின்ற பல உத்திகளை அவர் கையாண்டிருப்பது இவ் ஆய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் ‘அ.செ.மு’ இன் உரைநடையானது பேச்சுமொழிச்

சொற்களைத் தேவையான இடங்களில் பயன்படுத்தி கிராமிய மண்வாசனையை வீசியதுடன் அளவான வர்ணனைகளை கொண்டு கவிதை நயம் மிக்க தன்மையில் அமைந்திருந்தன. அத்துடன் அவரது உரைநடையின் தனிச்சிறப்பாக விளங்கியது அவர் கையாண்ட நகைச்சுவைப்பாணியிலான சிறு எள்ளல் கலந்த வசனங்களைப் பேசியமையே ஆகும்.

**உசாத்துணைகள்:**


அகஸ்தியர், எஸ். (1993). *அகஸ்தியர் பதிவுகள்.* மதுரை ஜெகனி பதிப்பகம்.

குணராசா,க. (2000). *ஈழகேசரிச் சிறுகதைகள்.* திருகோணமலை பண்பாட்டலுவல்கள திணைக்களம்.

குணராசா,க. (2001). *ஈழத்து முன்னோடிச் சிறுகதைகள்.* கொழும்பு பூபாலசிங்கம் பதிப்பகம்.

குணராசா, க. (2001). *ஈழத்துச் சிறுகதை வரலாறு.* யாழ்ப்பாணம் வரதர் வெளியீடு.

குணராசா, க. (2008). *ஈழநாடு சிறுகதைகள்.* வடமாகாணம் பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.

கோப்பாய் சிவம்., சுதர்சன், செ. (ப.ஆ), (2016). *மறுமலர்ச்சி இதழ்களின் தொகுப்பு.* யாழ்ப்பாணம் குரு பிறின்டேர்ஸ்.

சிவத்தம்பி, கா. (1980). *தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்.* சென்னை தமிழ்ப்புத்தகாலயம்.

சுந்தரலட்சுமி, யோ. யோகநாதன், செ. (தொ.ஆ), (1994). *ஒரு கூடைக்கொழுந்து.* சென்னை சத்தியபாரதி பதிப்பகம்.

செந்திநாதன், கனக. (1964). *ஈழத்து இலக்கிய வளர்ச்சி.* கொழும்பு அரசு வெளியீடு.

முருகானந்தன், அ.செ. (1986). *மனிதமாடு.* யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவை இலக்கியக் குழு வெளியீடு.

முல்லை. ஆ. (2008). *இலக்கியப்பூக்கள்.* காற்றுவெளி வெளியீடு.

மௌனகுரு, சி., சித்திரலேகா, மௌ., நு.ஃமான், எம்.ஏ. (1979). *இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்.* கல்முனை வாசகர் சங்கம்.

விஸ்வநாதன், துரை. (1997). *உழைக்கப் பிறந்தவர்கள்.* சென்னை துரை விஸ்வநாதன் வெளியீடு.

றஜீபன்,கு., ரமேஸ்,சி., ஸ்ரீகுமரன், இராஜேஸ்கண்ணன்,இ. (தொ.ஆ), (2019). *ஈழத்துச் சிறுகதைக் களஞ்சியம் தொகுதி 01.* வடக்கு மாகாணம் பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.

# பேராசிரியர் செ.யோகராசாவின் ஈழத்து நவீன தமிழ் இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுகள் - ஓர் மதிப்பீடு

**அமிர்தலிங்கம் அனிதா, நதிரா மரியசந்தனம்**
தமிழ்க் கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
Ani19970802@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

ஈழத்துக் கல்விப் புலத்திலும் இலக்கியப் புலத்திலும் நன்கறியப்பட்ட பன்முக ஆளுமை கொண்டவராகத் திகழும் செ.யோகராசா ஈழத்து நவீன தமிழ் இலக்கியங்கள் பற்றி மேற்கொண்ட ஆய்வுகள் தனித்துவமுடையனவாகவும் முக்கியத்துவம் உடையனவாகவும் அமைகின்றன. செ.யோகராசா ஈழத்து நவீன தமிழிலக்கியம் பற்றி மேற்கொண்ட ஆய்வுகள் அனைத்தையும் ஒன்றுதிரட்டி இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. ஈழத்து நவீன தமிழிலக்கியம் பற்றிய இவருடைய ஆய்வுகளை வெளிக்கொணர்தல் இவ்வாய்வின் முக்கியத்துவமாக அமைந்துள்ளது. ஆரம்ப காலத்தில் படைப்பிலக்கியகர்த்தாவாக அறிமுகமாகிய இவர் எழுதிய சிறுகதைகளும் கவிதைகளும் அவரது இலக்கியப் படைப்பாளுமையை வெளிப்படுத்தின. செ.யோகராசாவின் பன்முக ஆளுமை அவர் எழுதிய நூல்கள், சிறு பிரசுரங்கள், கட்டுரைகள், மேடைப்பேச்சுக்கள், நேர்காணல்கள், உரையாடல்கள் வழியே வெளிப்படுகின்றன. கவிதை, புனைகதை உள்ளிட்ட நவீன இலக்கியம், பெண்கள் இலக்கியம், புகலிட இலக்கியம், ஈழத்து இலக்கியங்கள், சிறுவர் இலக்கியம், நாட்டார் இலக்கியம், வாய்மொழி இலக்கியம், திறனாய்வு என்பவற்றில் அதிக ஈடுபாடு கொண்டவராகவும், இவை குறித்த படைப்புக்களைத் தேடுவதிலும், ஆராய்வதிலும், திறனாய்வு செய்வதிலும் தொடர்ந்து ஈடுபட்டுவருபவராகவும் விளங்குகின்றார். எனவே, ஈழத்து நவீன தமிழ் இலக்கியங்கள் தொடர்பான அவரது ஆய்வுகளை மதிப்பீடு செய்வது ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சியில் அவரது ஆய்வுகளின் முக்கியத்துவத்தை வெளிக்கொண்டுவருவதற்கு அவசியமானதாகும். இதுவரையில் செ.யோகராசா ஈழத்து நவீன தமிழ் இலக்கியம் தொடர்பாக மேற்கொண்ட ஆய்வுகள் பற்றிய முழுமையான மதிப்பீடுகள் இடம்பெறவில்லை. அவ்வகையில், இவ்வாய்வானது அவரது ஈழத்து நவீன தமிழிலக்கிய ஆய்வுகள் பற்றிய முழுமையான மதிப்பீட்டாய்வாக அமைகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *நவீன தமிழிலக்கியம், செ.யோகராசா, நவீன கவிதை, திறனாய்வு, எதிர்ப்பிலக்கியம், புனைகதை*

## அறிமுகம்

1960களில் கருணையோகன் எனும் புனைபெயரில் இலக்கிய உலகில் கவிஞராக அறிமுகமாகிய செ.யோகராசா 1970களில் இருந்து ஆய்வுத்துறையைத் தனது பிரதான தளமாகக் கொண்டு எழுதி வருபவர். இவரது குறிப்பிடத்தக்க கவிதைகளாக "நாவுக்கரசரே வாருமையா", "உயர்திரு கந்தசாமியும் ஒரு மரண ஊர்வலமும்", "சுடுநெருப்பும் கட்டெறும்புகளும்" போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவரது சிறுகதைகளுள் "அகதிகள்" "கட்டெறும்பு", "கல்" போன்றவற்றைக் குறிப்பிடலாம். செ.யோகராசாவின் பன்முக ஆளுமை அவர் எழுதிய நூல்கள், சிறு பிரசுரங்கள், கட்டுரைகள், மேடைப்பேச்சுக்கள், நேர்காணல்கள், உரையாடல்கள், பிற நூல்களுக்கு அவர் எழுதிய முன்னுரைகள், மற்றும் அவரது பதிப்பு முயற்சிகள், தொகுப்பு முயற்சிகள் வழியே வெளிப்படுகின்றன. இவரது இலக்கிய ஆளுமைக்கு இவர் பெற்ற பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவு விருது (1999), கலைவாரிதி விருது (2011), தேனகக் கலைச்சுடர் விருது (2013) என்பவற்றைக் குறிப்பிடலாம். எனவே இவரது ஆய்வுகளின் முக்கியத்துவம் கருதி செ.யோகராசா ஈழத்து நவீன

தமிழிலக்கியம் பற்றி மேற்கொண்ட ஆய்வுகள் அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டு ‘‘பேராசிரியர் செ.யோகராசாவின் ஈழத்து நவீன தமிழ் இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுகள் - ஓர் மதிப்பீடு’’ என்ற தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு நோக்கம்**

செ.யோகராசாவின் ஈழத்து நவீன தமிழ் இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுகள் பெரிதும் முழுமையாக வெளிவரவில்லை. இவ்விடயங்களை வெளிக்கொணர்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வுக் கருதுகோள்**

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் செ.யோகராசாவின் ஈழத்து நவீன தமிழ் இலக்கியங்கள் பற்றிய ஆய்வு தனித்துவமுடையனவாகவும், முக்கியத்துவம் உடையனவாகவும் அமைகின்றன.

**ஆய்வு முறையியல்**

பகுப்பாய்வுமுறை, விளக்கமுறை, விமர்சன அணுகுமுறை ஆகியன இவ்வாய்வின் ஆய்வு அணுகுமுறைகளாக அமைகின்றன.

**இலக்கிய மீளாய்வு**

‘‘கருணையோகம்’’ (2016) என்ற சிறப்பு மலரில், செ.யோகராசாவின் ஈழத்து நவீன இலக்கியம் தொடர்பான ஆய்வுகள் பற்றிச் சிலர் ஆய்வுக்கட்டுரைகள் எழுதியுள்ளனர். அந்தவகையில் ‘‘ஈழத்துத் தமிழ் நாவல் ஆய்வுகளும் பேராசிரியர் செ.யோகராசாவும்’’ (பேராசிரியர் ம.இரகுநாதன்), ‘‘பேராசிரியர் செ.யோகராசாவின் பெண்கள் இலக்கியம் குறித்த ஆய்வுகள்’’ (கலாநிதி ம.நதிரா), ‘‘ஈழத்து நவீன கவிதை இலக்கியப் பின்புலத்தில் பேராசிரியர் செ.யோகராசாவின் இடமும் இருப்பும்’’ (சி.ரமேஷ்) ஆகியோர் ஆய்வுக்கட்டுரைகள் எழுதியுள்ளனர். கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையைச் சேர்ந்த மாணவி லாகினி செல்வராஜா ‘‘பேராசிரியர் செ.யோகராசா அவர்களின் வாழ்வும் பணியும்: ஒரு வரலாற்றுப்பார்வை’’ (2018) என்னும் தலைப்பில் கலைமாணிப் பட்டத்திற்காக ஆய்வினை மேற்கொண்டுள்ளார். அதில் சிறு பகுதியில் செ.யோகராசாவின் ஈழத்து நவீன இலக்கியங்கள் பற்றிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ‘‘கிழக்கிலங்கைத் தமிழ் இலக்கியத் திறனாய்வு வளர்ச்சி – பார்வையும் மதிப்பீடும்’’ (2021 ஜீலை) எனும் ஆய்வுத் தொகுப்பில் எம்.அப்துல்.றசாக்கின் ‘‘செ.யோகராசா’’ எனும் தலைப்பில் அமைந்த ஆய்வுக்கட்டுரையில் செ.யோகராசா பற்றிய அறிமுகம், செ.யோகராசாவினுடைய நவீன இலக்கியம் தொடர்பான ஆய்வுகள் பற்றி அறியமுடிகின்றது.

**ஈழத்து நவீன இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுகள்**

நாவல், சிறுகதை முதலான நவீன இலக்கிய வகைகள் தமிழில் ஏறத்தாள 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து தோற்றம் பெற்றதுபோல, ஆய்வு என்பது இக்காலப்பகுதியிலே தமிழில்

தோற்றம் பெறத் தொடங்கியது. ஆங்கில ஆட்சியினால் ஏற்பட்ட நவீனமயவாக்கச் சூழலும், இப்பின்புலத்தில் எழுந்த கல்வியின் வரவும் இத்தகைய ஆய்வு முயற்சிகள் தமிழில் தோற்றம் பெறுவதற்கு பின்புலமாக இருந்துள்ளன. இந்தவகையில் செ.யோகராசா, நவீன இலக்கியங்களான கவிதை, சிறுகதை, நாவல் ஆகியவற்றை ஆய்வும், திறனாய்வும் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். நவீன இலக்கியம் தொடர்பான அவரது ஆய்வுகளை பின்வருமாறு வகைப்படுத்தி ஆராயலாம்:

**ஈழத்துத் தமிழ்க் கவிதை பற்றிய ஆய்வுகள்**

செ.யோகராசா கவிதைத் திறனாய்வில் ஆழ்ந்த பிரக்ஞையுடன் செயற்பட்டுவரும் ஒருவராவார். மரபுக்கவிதை, வசனகவிதை, புதுக்கவிதை, நவீனகவிதை என்று பல தளங்களிலும் தனது திறனாய்வுப் பார்வையை செலுத்திவரும் இவர் புதுக்கவிதை, நவீனகவிதை குறித்து ஆழமாகத் திறனாய்வை மேற்கொண்டு வருபவர். ‘‘இலக்கியத் தேட்டம்: ஈழத்து நவீன இலக்கியம்’’ (2000), ‘‘ஈழத்து நவீன கவிதை புதிய உள்ளடக்கங்கள்- புதிய தரவுகள் - புதிய போக்குகள்’’ (2007) முதலிய நூல்களும், நூல்வடிவம் பெறாத ஒரு தொகுதிக் கட்டுரைகளும் இவரது கவிதை பற்றிய ஆய்வை விளக்கும் திறனுடையனவாகும்.

***ஈழத்து நவீன தமிழ்க் கவிதை***

ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் வளர்ச்சி பற்றி விபரிக்கும் நூலாக ‘‘ஈழத்து நவீன கவிதை புதிய உள்ளடக்கங்கள்- புதிய தரவுகள் -புதிய போக்குகள்’’ (2007) எனும் நூல் விளங்குகிறது. இந்நூலில் உள்ள இருபத்துநான்கு கட்டுரைகளும் ஈழத்து நவீன கவிதையின் தோற்றம் குறித்தும், முக்கியமான முன்னோடிகள் குறித்தும், பிரதேச அடிப்படையிலும், கோட்பாட்டு நிலையிலும், பொதுப்பார்வையிலும் ஈழத்து நவீன கவிதை பற்றிப் பேசுகின்றன. இந்நூல் ஈழத்து நவீன கவிதையின் புதிய உள்ளடக்கங்களையும், புதிய தரவுகளையும், புதிய போக்குகள் பற்றியும் விபரிக்கின்றது.

நவீன கவிதையின் தோற்றம் பற்றிய வரையறைகளிலும், அதன் தோற்றுவாய்களிலும் அதிக அக்கறை செலுத்தும் செ.யோகராசா இந்தத் தேடலை ‘‘நவீன கவிதைக்கான ஊற்றுக்கள்’’ என குறிப்பிடுகின்றார். இவ்வாறு ஈழத்து நவீன தமிழ்க் கவிதையை ஒன்பது ஊற்றுக்களாகவும், ஊற்றுக்களின் கிளைகளாகவும் குறிப்பிடுகிறார். ‘‘ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி ஊற்றுக்களும் ஓட்டங்களும் கிளைகளும்’’ (2007) என்ற கட்டுரை நவீன கவிதைக்கான அறிமுகமாக அமைகிறது. இருபதாம் நூற்றாண்டின் நவீன கவிதையின் திறவுகோலாக அமைந்த பாவலர் துரையப்பாப்பிள்ளையின் கவிதை முயற்சி குறித்தும் ஆராயப்படுகின்றது. இவர்களைத் தொடர்ந்துவந்த ‘‘ஈழகேசரிக் காலமே’’ நவீனகவிதையின் தொடக்க காலம் என்பது இவரது கருத்தாகும். இதனை நிறுவும் வகையில் ‘‘ஈழத்தில் நவீன கவிதையின் தோற்றமும் மறுமலர்ச்சிக் குழுவினரும்’’, ‘‘ஈழத்து இலக்கிய சஞ்சிகைகளும் நவீன கவிதையின் தோற்றமும் மறுமதிப்பீடு’’, ‘‘ஈழத்தின் நவீன கவிதையின் தோற்றம்

மறுமதிப்பீடு'', ''ஈழகேசரிக் கவிதைகள்'' முதலிய கட்டுரைகளில் தனது ஆழ்ந்த திறனாய்வுப் பார்வையை முன்வைக்கின்றார்.

''ஈழத்து நவீனகவிதை ஊற்றுக்களும், ஓட்டங்களும் கிளைகளும்'' (2007) என்ற கட்டுரையின் தொடர்ச்சியினை ''ஈழத்தில் நவீன கவிதையின் தோற்றமும் மறுமலர்ச்சிக் குழுவினரும்'' (2007) என்ற கட்டுரையிலும் காணலாம். பேராசிரியர்கள் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி போன்றவர்கள் முற்போக்கு இலக்கியத்தை முன்னிறுத்தி ஈழத்திலக்கிய வளர்ச்சியை நோக்கிய நிலையில் செ.யோகராசா மறுமலர்ச்சிக் கவிதைகளை முன்னிறுத்தி ஆராய்ந்த முதல் பேராசிரியர் ஆவார்.

''ஈழத்தில் நவீன கவிதையின் தோற்றமும் மறுமலர்ச்சிக் குழுவினரும்'' (2007) என்ற கட்டுரை, ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் மறுமலர்ச்சிக் குழுவினர் ஏற்படுத்திய தாக்கத்தினை தனித்துவமாக ஆராய்வதாகும். ''ஈழத்தில் தமிழ்க் கவிதையின் தோற்றம்'' (2007) எனும் கட்டுரையில் ஈழத்தில் நவீன தமிழ்க் கவிதையின் தோற்றத்தினை நாற்பதுகளளவில் முகிழ்த்த மறுமலர்ச்சிக் குழுவினருடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதே அண்மைக்காலம் வரையும் ஆய்வுலகின் வழக்கமாக இருந்து வந்துள்ளது. எனினும் இவ்விடயம் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும்போது ஈழத்தில் முப்பதுகள் அளவிலேயே நவீன தமிழ்க்கவிதை முகிழ்க்கத்தொடங்கியுள்ளமை தெளிவாகிறது. அது யாழ்ப்பாணம், மலைநாடு ஆகிய இரு பிரதேசங்களில் நிகழ்கின்றது என்று குறிப்பிடுகின்றார்.

வசன கவிதையின் நீட்சியாகப் புதுக்கவிதையைக் கொள்ளலாம் என்பது இவரது கருத்தாகும். ஈழத்தைப் பொறுத்தவரை ஆரம்பகாலப் புதுக்கவிதை படைப்பாளிகள் புதுக்கவிதை அல்லது வசனகவிதை எழுதவேண்டும் என்ற பிரக்ஞை இல்லாமல் புதுமுயற்சி என்ற விதத்தில் மேலெழுந்தவாரியாகத் தோன்றிய ஆர்வத்தின் வெளிப்பாட்டிலேயே எழுதினார்கள் என்பதை ''ஈழத்தின் புதுக்கவிதையின் தோற்றம்'' (2007) என்ற கட்டுரையினூடாக விளக்குகின்றார் ''ஈழத்துத் தமிழ்ப் புதுக்கவிதை தோற்றம் வளர்ச்சி தேக்கம்'' (1986) என்ற கட்டுரை ஈழத்துப் புதுக்கவிதையின் தோற்றத்தினை மறுமலர்ச்சிக் குழுவினரோடு தொடர்புபடுத்தி புதுக்கவிதைகளின் தோற்றத்துக்கான காரணங்களாக தருமு சிவராம், மு.பொன்னம்பலம், கே.எஸ்.சிவகுமாரன் போன்றோர் மேற்கொண்ட புதுக்கவிதை முயற்சிகளைக் குறிப்பிட்டு விளக்குகிறார்

**ஈழத்து நவீன தமிழ்க் கவிதை முன்னோடிகள்**

''ஈழத்து நவீன கவிதை'' (2007) நூலில் முக்கியமான முன்னோடிகள், ஆளுமைகள் பலரை அடையாளம் கண்டு அவர்களின் தனித்துவங்களை விளக்குகின்றார். இவ்வகையில் மீனாட்சியம்மாள் நடேசய்யர், சாரதா, அ.ந.கந்தசாமி, ஆரையூர் அமரன், எம்.ஏ.நு.்.மான், சு.விஸ்வரத்தினம், சி.சிவசேகரம், சோலைக்கிளி போன்றவர்களை திறனாய்கின்றார். இவர்களினூடே ஒரு வரலாற்றுத் தொடர்ச்சியைக் காணலாம் என்பதே அவரது பார்வைக்கோணம் ஆகும்.

மலையகத்தின் முதற் கவிதாயினியாக மீனாட்சியம்மாள் நடேசையரின் பணிகளை முதன்முதல் விரிவாக எடுத்தாராய்ந்தவர் செ.யோகராசா ஆவார். ‘‘ஈழத்தின் முதற் பெண் கவிஞர்: மீனாட்சியம்மாள் நடேசய்யர்’’ (2007) என்ற கட்டுரை ஆழமான திறனாய்வுப் பார்வையோடு எழுதப்பட்டதாகும். மீனாட்சியம்மாள் நடேசய்யரே தொழிலாளர் பற்றிப் பிரக்ஞை பூர்வமாக முதன்முதலில் பாடியவராவார் என்பர்.

‘‘நவீன கவிதை முன்னோடி: சாரதா’’ (2007) எனும் கட்டுரையில் ஈழகேசரி மறுமலர்ச்சிக் கவிஞருள் ஒருவராகிய சாரதாவின் கவிதைத் தொகுப்பு காலங் கடந்தே வெளியாகியது. சாரதா சமகாலக் கவிஞர்களுடன் ஒப்பிட்டு நோக்கும்போது சமூக நோக்குடைய கவிதைகளை அதிகம் எழுதியுள்ளமை புலப்படுகின்றது. பேச்சோசைப் பாங்குடைய கவிதைகளையும் சாரதா எழுத முற்பட்டார். கவனிக்கப்படவேண்டிய ஈழத்து முன்னோடிக் கவிஞர்களுள் சாரதாவும் ஒருவர் என்பதை உறுதி செய்ய முடியும் என கட்டுரையில் குறிப்பிடுகின்றார். ‘‘தனித்துவமான மொழி உணர்ச்சிக் கவிஞர்’’ (2007) என்ற அடிப்படையில் ஆரையூர் அமரனைக் குறிப்பிடுகின்றார்.

‘‘ஈழத்து நவீனகவிதையின் மற்றொரு முன்னோடி: நு.ஃமான்’’ (2007) என்ற கட்டுரையில், கவிதைகளின் உள்ளடக்கத்தையும், வடிவம் சார்ந்த பண்புகளையும் அவதானிப்பதற்கு வரலாற்றுப் பின்புலமும், ஒப்பீட்டு முறையும் அடிப்படையாக உள்ளன என்று குறிப்பிடுவதோடு, புதுக்கவிதையை அரசியலுக்குப் பயன்படுத்திய முதன்மையானவராகவும், ஈழத்துக் கவிதைப்பரப்பில் மாற்றத்தை ஏற்படுத்திய ஒருவராகவும் எம்.ஏ.நு.ஃமானைக் கணிக்கிறார். நு.ஃமானின் சுயமான கவிதைகளூடாக மட்டுமன்றி மொழிபெயர்ப்புக்களூடாகவும் வளமும், வலுவும் பெறுகின்றமை பற்றி ‘‘பலஸ்தீனக் கவிதைகள்’’ இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எழுபதுகளில் வெவ்வேறு தளங்களில் இயங்கிய சு.வில்வரத்தினம், சி.சிவசேகரம் ஆகியோரை ‘‘எழுபதுகளின் இரு ஆளுமைகள்: வில்வரத்தினம், சிவசேகரம்’’ (2007) என்கின்ற கட்டுரையினூடாக செ.யோகராசா நோக்குகின்றார். சு.வில்வரத்தினத்தினது கவிதைப்பொருள் ஒன்றேயாயினும் சொற்புதிது, சுவைபுதிது, வளம் புதிதாக உள்ளன என்பதும், சி.சிவசேகரத்தின் கவிதைப் பொருளும், உத்திகளும் பன்முகப்பட்டதாகவும் அவை சுவை புதிது, வளம் புதிதாக உள்ளன என்பதும் மனங்கொள்ளத்தக்கதாகும் என்று குறிப்பிடுகின்றார். ஈழத்துக் கவிதைகளைக் கோட்பாட்டு நோக்கில் திறனாயும் பல கட்டுரைகளும் செ.யோகராசாவால் எழுதப்பட்டுள்ளன. ‘‘உருவ நோக்கில் ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி’’ (2007), ‘‘ஈழத்துக் கவிதையில் எதிர்ப்புக் குரல்கள்’’ (2007) ‘‘இருபதாம் நூற்றாண்டு ஈழத்துக் கவிதைகளில் பெண்களும் பெண் கவிஞர்களும்’’ (2007) முதலியவற்றை இவ்வகையில் குறிப்பிடலாம்.

ஈழத்து நவீனகவிதை பற்றிய ஆய்வில் பெரும்பாலும் உள்ளடக்கத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. உருவத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து கவிதை வளர்ச்சியை நோக்கும்போது ஈழத்தின் நவீன கவிதையின் தனித்துவம் புலப்படும் என்கின்ற

சிந்தனையை முன்வைத்து ‘‘உருவ நோக்கில் ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி’’ (2007) என்ற கட்டுரையை செ.யோகராசா எழுதியுள்ளார்.

‘‘ஈழத்துக் கவிதையில் எதிர்ப்புக் குரல்கள்’’ (2007) என்ற கட்டுரை ‘‘எதிர்ப்பு’’ எனும் இலக்கியப் பண்பை முன்நிறுத்தி இவரால் எழுதப்பட்ட சிறந்த கட்டுரைகளுள் ஒன்றாகும். அந்நியராதிக்கம், தொழிற்சங்கப் போராட்டம், மார்க்ஸிய எழுச்சி, தமிழ்த்தேசிய உணர்வு, சாதியம், சமூகக் குறைபாடுகள், அரசியல் எழுச்சி, போராட்டம், என்பவற்றினூடாக எதிர்ப்பு உள்ளடக்கமானதை இக்கட்டுரையினூடாகத் திறனாயும் இவர், ஒரு காலகட்டத்தில் மெல்லிசைப்பாடல்கள், சுவரொட்டிகள் மூலமாகவும் எதிர்ப்பு வெளிப்படுத்தப்பட்டதைக் கூர்மையுடன் ஆராய்கிறார்.

**ஈழத்துப் பெண்கள் கவிதைகள்**

எண்பதுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க பிறிதொரு முயற்சி படித்த ஈழத்துப் பெண்கள் மத்தியிலே முகிழ்த்த சமூக விழிப்புணர்ச்சியின் பின்னணியில் நீண்டகால ஆணாதிக்கத்திற்கெதிராக பெண் கவிஞர்கள் முதன்முதலாக எதிர்ப்புக்குரல் எழுப்பியமை ஆகும். இவ்வாறான பெண் கவிஞர்களுள் சிலர் பெண்ணிலைவாத நோக்கிலான கவிதைகளை மட்டுமன்றி அரசியல் சார்ந்த கவிதைகளையும் எழுத முற்பட்டனர். எண்பதுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க இன்னொரு முயற்சி, புகலிடக் கவிதைகளுடனான எதிர்ப்புக் குரல்களாகும். புகலிடம் சார்ந்த அரசியல் எதிர்ப்புக் குரல்களும், ஆணாதிக்கத்திற்கெதிரான பெண்ணிலைவாதக் குரல்களும் ஈழத்துக் கவிதையை மூன்றாம் உலகநாட்டுக் கவிதைப் போக்குடன் சங்கமிக்கச் செய்கிறது.

ஈழத்துக் கவிதைத்துறையில் பெண்களின் பங்களிப்பை ஆழமான திறனாய்வுக்குட்படுத்தியவர்களில் செ.யோகராசா முதன்மையானவராவார். இவரது ‘‘இருபதாம் நூற்றாண்டு ஈழத்துக் கவிதைகளில் பெண்களும், பெண் கவிஞர்களும்’’ (2007) ‘‘நவீன வாய்மொழிப் பாரம்பரியத்தில் கிழக்குப் பெண் கவிஞர்கள்’’ (2009), ‘‘தமிழ் இலக்கிய வரலாற்றில் சமூகம் பாடிய முதல் பெண் கவிஞர்’’, ‘‘ஈழத்துப் பெண்கள் கவிதை வளர்ச்சியும் தளர்ச்சியும் வளமும்’’ (2009) , ‘‘ஈழத்து பெண்கள் கவிதை வளர்ச்சியும் தளர்ச்சியும் வளமும்’’(2009), ‘‘ஈழத்துப் பெண் போராளிகளது படைப்புக்கள் சில அவதானங்கள்’’ (2005), ‘‘சுதந்திரத்திற்கு முற்பட்ட கால ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் பெண்கள்’’ (2011) முதலிய கட்டுரைகள் பெண்களின் கவிதைப் பங்களிப்புக்கள் பற்றியும், அவர்களது கவிதைகளின் பலம், பலவீனம் பற்றியும் எழுதப்பட்ட கட்டுரைகளாகும்.

பெண்கள் பற்றி உருவ நோக்கில் ஆராய விளைந்த ‘‘இருபதாம் நூற்றாண்டு ஈழத்துக் கவிதைகளில் பெண்களும், பெண் கவிஞர்களும்’’ (2007) என்ற கட்டுரை, ஈழத்துக் கவிதைகளில் இடம்பெறும் பெண்களது பிரச்சினைகளும், அவற்றின் கருத்துநிலைத் தளமும், ஈழத்துக் கவிஞரின் பெண்கள் பற்றிய நோக்கும், ஈழத்துக் கவிதைகளில் பெண்களது உணர்வுகளும் ஈழத்துக் கவிதை வளர்ச்சிப் போக்கினை மனங்கொண்டும், முக்கிய கவிஞர் சிலரை முதன்மைப்படுத்தியும் இவரது ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளமை

குறிப்பிடப்படுகின்றது. ''தமிழக இலங்கைப் பெண் கவிஞர்கள் ஓர் ஒப்பு நோக்கு'' (1997) என்ற கட்டுரையில் அறுபதுகளின் தொடக்கத்தில் இருந்து தற்காலம் வரை எழுதும் பெண் கவிஞர்களின் கவிதைகள் ஒப்பீட்டு முறையில் திறனாய்வுக்குட்படுத்தப்படுகின்றன. இக்கட்டுரையில் ஈழத்துப் பெண் கவிஞர்களின் கவிதைகளும், தமிழகப் பெண் கவிஞர்களின் கவிதைகளும் ஒருங்கே ஆராயப்படுகின்றன.

**பிரதேச ரீதியிலான ஈழத்துத் தமிழ்க் கவிதைகள்**

செ.யோகராசா பிரதேச அடிப்படைகளினூடாகவும் ஈழத்துக் கவிதை வளர்ச்சியை மட்டிடலாம் என்கின்ற சிந்தனையுடையவர். இவ்வகையில் பிரதேசங்களை முன்னிறுத்தி இவரால் எழுதப்பட்ட ''ஒப்புநோக்கில் மலையகக் கவிதை'' (2007), ''தமிழ்த்தேசியமும் மட்டக்களப்பு பிரதேசக் கவிஞர்களும்'' (2007), ''மட்டக்களப்பு பிரதேச நவீன கவிதை ஊற்று புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை'' (2007) போன்ற கட்டுரைகள் கவனத்திற்குரியவையாகும். மலையகக் கவிதைகளின் எழுச்சிகளை பல்வேறு கட்டுரைகளில் குறிப்பிட்டிருந்தாலும் ''ஒப்பு நோக்கில் மலையகக் கவிதை'' (2007) என்ற கட்டுரை ஆரம்பகால கவிதைகளுக்கும், எண்பதுகளுக்குப் பின்னரான கவிதைகளுக்குமிடையிலான நுணுக்கமான வேறுபாடுகளைச் சமூக அரசியல் பின்புலங்களில் ஆராய்வதொன்றாகும்.

தனிநபர் இயக்கமாக இருந்து கவிதையியலில் சமூகச் சிறுமை, அதிகார எதிர்ப்பு, முஸ்லீம்-தமிழ் ஒற்றுமை, சாதிய எதிர்ப்பு என்ற வகையில் கவிதை பாடிய புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் கவிதை மதிப்பீடு ''மட்டக்களப்புப் பிரதேச நவீன கவிதையின் ஊற்று புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை'' (2007) என்ற கட்டுரையில் திறனாயப்பட்டுள்ளது. காலகட்ட ரீதியிலான வளர்ச்சிப் போக்குகளையும், மாற்றங்களையும் சுருக்கமாக வெளிப்படுத்துவதாக ''கிழக்கின் நவீன கவிதை வளர்ச்சி'' (2009) எனும் கட்டுரை அமைகின்றது. நவீனகவிதையின் தோற்றம் இப்பகுதியில் நாற்பதுகளின் பிற்பகுதியளவில் முகிழ்த்ததாயினும் அதன் முனைப்பான வெளிப்பாடு ஐம்பதுகள் அளவிலேயே திகழ்கின்றது.

**ஈழத்து நவீன தமிழ்க் கவிதையில் புதிய போக்குகள்**

எழுபதுகளிலும் புதிய கவிதைப் போக்குகள் உருவாகின எனினும் முன்னய போக்குகள் இக்காலத்தில் ஆழமும், அகலமும் பெறுகின்றன. மார்க்சிய நோக்குடைய ஈழத்தின் இன்றைய முற்போக்குக் கவிதைகளுள் தனித்துவமாக இடம்பெற்றுள்ள சிவசேகரத்தின் கவிதையுலகப் பிரவேசம் பற்றிக் குறிப்பிடுகின்றார். எண்பதுகளில் மார்க்சிய நோக்குடைய முன்னையகால கவிதைப் போக்கு இக்கால அரசியல் நெருக்கடிகளால் தளர்ச்சிபெற்று இன ஒடுக்கமுறைக்கெதிரான கவிதைப் போக்கு உருவாகின்றது. தொண்ணூறுகளில் கவிதைப் பொருள் ரீதியில் ஏற்பட்ட மாற்றங்களில் முக்கியமானதாக முஸ்லீம் தேசிய உணர்ச்சி முனைப்பு பெறுகிறது. ஈழத்துக் கவிதை பெற்றுள்ள வளர்ச்சியை வளமாகவும், புதிய அலையாகவும் விளக்கும், நாட்டார்பாடல் கூறுகளை நவீன கவிதைகளில் பயன்படுத்திய கவிஞர்கள் பற்றிய ஆய்வாக இவரது ''ஈழத்து நவீன கவிதையின் வளம் நோக்கி'' (2007), ''ஈழத்து நவீனகவிதை வளர்ச்சியில் நாட்டார் பாடலின் செல்வாக்கு'' (2017) போன்ற

கட்டுரைகள் அமைகின்றன. இலங்கையில் நவீனகவிதைகள் குறித்து வெளியான முதலில் எழுந்த நூல் என்ற அடிப்படையில் ''ஈழத்து நவீன கவிதை – புதிய உள்ளடக்கம் - புதிய தரவுகள் - புதிய போக்குகள்'' (2007) என்னும் நூல் கனதியான தகவல்களைத் தருகின்றது.

**ஈழத்துத் தமிழ்க் கவிதை: இலக்கியத்தேட்டம்**

''ஈழத்து நவீன கவிதை'' (2007) என்ற நூலில் இடம்பெறாததும், இவரால் அறியப்பட்டவர்களுமாகிய பல கவிதா ஆளுமைகள் குறித்துப் பேசும் ''இலக்கியத்தேட்டம்: ஈழத்து நவீன இலக்கியம்'' (2000) என்ற நூலும், இன்ன பிற கட்டுரைகள் பலவும் ஈழத்துக் கவிதை மரபு பற்றிய இவரது பார்வையின் ஆழத்தை குறித்துக் காட்டுவனவாகும். ''இலக்கியத்தேட்டம்'' என்கின்ற நூலில் இடம்பெறும் ''ஈழத்து நவீன கவிதை'' பற்றிய தொடர் முக்கியத்துவம் பெறுகின்றது. நவீன கவிதை வரலாற்றை காலகட்ட அடிப்படையில் பகுத்து அக்காலப் பகுதிகளில் முதன்மைபெற்றோரை முன்னிலைப்படுத்தி எழுதப்பட்ட இத்தொடரில் 1945 – 1960 வரை, 1960-1970 வரை, 1970-1980 வரை, 1980-1992 வரையான காலங்களில் இடம்பெற்ற கவிதைப்போக்குகள் ஆராயப்படுகின்றன. மேலும் பெண்ணிலைவாத நோக்கு, புகலிட அனுபவங்கள், புதிய தலைமுறைகள், புதிய போக்குகள் என்றவாறாக இக்கட்டுரை விசாலித்துச் செல்கின்றது.

''ஈழத்து நவீன கவிதை உருவாக்கத்தில் வாய்மொழிப் பாடலின் செல்வாக்கு'' (2014) எனும் கட்டுரையில் இன்றைய பின்நவீனத்துவ நோக்கிலான நவீன சிந்தனைகளும், வாய்மொழிப்பாடல்கள் ஆய்வில் ஏற்பட்ட புதிய பார்வைகளும், வாய்மொழி மரபிலே உருவான அண்மைக்காலம் வரை கவனத்திற்குட்படாத புலவர் பரம்பரையினருள் ஒரு சாராரை முக்கியப்படுத்துகின்றன. மேலும் சுவாமி விபுலானந்தர், யூ.எல்.எம்.இஸ்மாயில், தாமரைத்தீவான், மண்டூர் அசோகா, அனலக்தர், கவிஞர் குழந்தை, போன்றோரை ஆழமான திறனாய்வுக்குட்படுத்தி அவர்களின் பங்களிப்பினை மதிப்பிடுகின்றார். ஈழத்து தமிழ் இலக்கியப்பரப்பில் பழமை வழியில் வீறுநடை போட்ட விபுலானந்தருடைய கவிதைகளை, பொருண்மையை அடிப்படையாகக் கொண்டு ''ஆய்வு நோக்கில் சுவாமி விபுலானந்தரது கவிதைகள்'' (2003), ''விபுலானந்தர் கவிதைகள் ஒரு கண்ணோட்டம்'' (1992) ஆகிய கட்டுரைகளில் விபுலானந்தருடைய கவிதைகளை ஆழமான திறனாய்வுக்குட்படுத்துகின்றார்.

''ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் தாமரைத்தீவானின் தடங்கள்'' (2012) எனும் கட்டுரையில் தாமரைத்தீவான் தான் பயன்படுத்திய இலக்கிய வடிவங்களுள் மரபுக்கவிதை வடிவங்களை உயிர்த்துடிப்புடன் பயன்படுத்தியவரென்பதும், அவ்விதங்களில் திருகோணமலைக் கவிஞராக மட்டுமன்றி, முக்கியமான ஈழத்துக் கவிஞராகத் தாமரைத்தீவான் பரிணமித்துள்ளாரென்பதும் நன்கு புலப்படும் என்பதில் ஐயமில்லை என திறனாய்கின்றார். ''நவீன ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சியில் அ.ந.கந்தசாமியின் பங்கு'' (1975) எனும் கட்டுரையில் அ.ந.கந்தசாமியின் கவிதைகள் பற்றித் திறனாய்வு செய்துள்ளார். முற்போக்குச் சிந்தனைகள் பல பரிமாணங்களில் மண்டூரத் தேசிகனின் கவிதைகளில் வெளிப்பட்டுள்ளன என்பதை ''ஈழத்து முற்போக்குக் கவிஞர் வரிசையில் மண்டூர் தேசிகன்''

(2012) எனும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். ''கவிஞர் அல்வையூர் மு.செல்லையாவின் கவிதைகள் ஒரு கண்ணோட்டம்'' (2008) எனும் கட்டுரையில் சமகால ஈழத்துக் கவிஞருள் அரசியல் சார்பான கவிதைகள் அதிகம் எழுதியவர் இவர் என்றும், இவரது அரசியல் சார்பான கவிதைகளில் இலங்கைத் தேசியம், சர்வதேச அரசியல் சார்பான பாடல்கள பாடப்பட்டமை பற்றிக் குறிப்பிடுகின்றார்.

கவிதையின் பல்வேறு வடிவங்களாக அமையும் நவீன காவியங்கள், குறுங்காவியங்கள், ஹைக்கூ கவிதைகள், சிறுவர் பாடல் குறித்தும் தனது திறனாய்வுப் பார்வையை செ.யோகராசா முன்வைத்துள்ளார். இவ்விதத்தில் அப்துல் காதிர், பாலமுனை பாறூக், மலரவன், சா.இ.கமலநாதன், ஆரையூர் அமரன், திமிலைத்துமிலன் போன்றோரின் படைப்புக்களை ஆழமாகத் திறனாய்ந்துள்ளார். போர்க்காலம் சார்ந்து, போராட்டம் சார்ந்து மலரவன் எழுதிய ஹைக்கூ கவிதைகள் முக்கிய கவனிப்பிற்குரியவை. அந்தவகையில் போராளிகளின் அர்ப்பணிப்பு உள்ளத்தின் உன்னத வீச்சுடன் ''மலரவனின் ஹைக்கூ கவிதை'' (2017) எனும் கட்டுரையில் வெளிப்படுத்தப்படுகின்றன. ஏறத்தாள முப்பது ஆண்டு காலமாக இலங்கையிலே நடைபெற்று வந்துள்ள போர்பற்றி இலங்கையின் நவீன தமிழ் இலக்கியங்களில் பெருமளவு பேசப்பட்ட விடயங்களும், பேசப்படாத விடயங்களும் இனங்காணமுடிகின்றது. அந்தவகையில் ''ஈழத்துப் போர்க்கால இலக்கியங்கள்: பேசியவையும், பேசாப்பொருள்களும்'' (2013) எனும் கட்டுரை குறிப்பிடத்தக்கதாகும்.

**ஈழத்துத் தமிழ் நாவல் பற்றிய ஆய்வுகள்**

ஈழத்து இலக்கியங்களைப் பொறுத்தவரை ஏனைய இலக்கிய வடிவங்களை விட நாவல் இலக்கிய வளர்ச்சி பின்தங்கியுள்ளதென்பது செ.யோகராசாவினது பார்வையாகும். அதேபோன்று நாவல் இலக்கியத் திறனாய்வு முயற்சிகளும் போதாமையினையே உணர்த்துகின்றன என்று கூறும் இவர், தனது ''ஈழத்து தமிழ் நாவல்: வளமும், வளர்ச்சியும்'' என்ற நூலின் வரவும், அது ஏற்படுத்தும் நிறைவும் குறித்து பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> எனது நூல்களைத் தொடர்ந்து வருகின்ற இந்நூலின் வரவு முன்னைய நூல்களைவிட, எனக்குத் திருப்தி தருகின்றது. ஈழத்து நாவல் இலக்கிய வளர்ச்சி தொடர்பாக எழுபதுகளில் வெளிவந்த (நா.சுப்பிரமணியன்) நூல் எழுபதுகள் வரையான நாவல் வளர்ச்சி பற்றிக் கூறுவதுடன் நின்றுவிட, பிற்பட்டகால நாவல் வளர்ச்சி பற்றி நூலுருவில் எவையும் வெளிவராத ஆரோக்கியமற்ற சூழலில் அத்தகைய குறைபாட்டினை இந்நூல் ஓரளவு பூர்த்தி செய்வதாக உள்ளமையே அதற்கான காரணமாகும் (ஈழத்து தமிழ் நாவல் வளமும் வளர்ச்சியும், 2008: முன்னுரை vii) எனக் குறிப்பிடுகின்றார்.

''ஈழத்து தமிழ் நாவலின் தோற்றமும் எழுபதுகள் வரையான வளர்ச்சியும் மறுமதிப்பீடு'' (2008) என்னும் கட்டுரை, ஆரம்ப நாவல்களின் தோற்றம், வளர்ச்சி பற்றி இதுவரை நிலவிவந்த பார்வைகளை மறுமதிப்பீடு செய்வதொன்றாகும். இதேவேளை ''தமிழ் நாவல் வரலாற்றில் அசன்பே சரித்திரம்: சில அவதானிப்புக்கள்'' (2011) என்கின்ற பிறிதொரு

கட்டுரையினூடாக அசன்பே சரித்திரம் பற்றி ஆழமான திறனாய்வுக் கருத்துக்களை செ.யோகராசா முன்வைக்கின்றார்.

ஈழத்து நாவல் இலக்கியத் திறனாய்வைக் காலகட்ட அடிப்படையில் வகுத்து அதன் வளர்ச்சிப்போக்கை ஆராய்கிறார். இவ்விதத்தில் ''எழுபதுகளில் ஈழத்துத் தமிழ் நாவல்கள்'' (2008), ''எண்பதுகளில் ஈழத்துத் தமிழ் நாவல்கள்'' (2008), ''எண்பதுகளில் ஈழத்துத் தமிழ் நாவல்: ஒரு புதிய அலை'' (2008), ''தொண்ணூறுகளில் ஈழத்துத் தமிழ் நாவல்: புதிய போக்குகள்'' (2008) முதலிய கட்டுரைகள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியனவாகும்.

எழுபது தொடக்கம் வெளிவந்த நாவல்களை ஆராய்வதற்கு ஏற்ற முறையில் பொழுதுபோக்கு நாவல்கள், யதார்த்த நாவல்கள் என இரு பிரிவுகளாகப் பிரித்து நோக்கி, தமிழக வாசிப்பின் வழிவந்ததாகவே ஈழத்துப் பொழுதுபோக்கு நாவல்கள் அமைந்திருப்பதாகக் கூறுகின்றார். எண்பதுகளில் ஏற்பட்ட அரசியல் சமூக மாற்றங்கள் காரணமாக, முதன்முதலாக ஈழத்தின் எல்லாப்பிரதேசங்களையும் சார்ந்த – எல்லா மட்டங்களையும் சார்ந்த தமிழ்பேசும் மக்கள் அனைவரும் பொதுவான சமூக அனுபவங்களுக்குட்பட்டனர். இத்தகைய பரந்துபட்ட அனுபவமே இக்கால நாவல் வளர்ச்சிக்கான அடிப்படை என்று கூறுகின்றார். ''தொண்ணூறுகளில் ஈழத்து தமிழ் நாவல்: புதிய போக்குகள்'' (2008) எனும் கட்டுரை ஈழத்து நாவல்களின் பொதுவான மற்றும் சிறப்பான அடையாளங்களைக் கூறுவதோடல்லாமல், நாவல்கள் பற்றிய மிக நுணுக்கமான ஆராய்ச்சியாக அமைகின்றது.

ஈழத்து நாவல்களை வளர்ச்சிப் போக்கின் அடிப்படையில் திறனாய்வது மாத்திரமன்றி, சிறப்பு நோக்கிலும் செ.யோகராசா திறனாய்ந்துள்ளார், அதேவேளை இருபதிற்கும் மேற்பட்ட நாவல்களுக்கு காத்திரமான முன்னுரைகள் எழுதி நாவல்களை மதிப்பீடு செய்துள்ளார். இவ்விதத்தில் ''மட்டக்களப்பின் முதல் நாவல்: அரங்கநாயகி'' (2008), ''நாற்பதுகளில் எழுதப்பட்ட ஈழத்து நாவல்: அனிச்சமலரின் காதல்'' (2008), ''எண்பதுகளில் வெளிவந்த ஒரு நாவல்: மரக்கொக்கு'' (2008) போன்ற கட்டுரைகள் அமைகின்றன. ஈழத்து நாவலிலக்கியச் சூழலில் ஏறத்தாழ நாற்பதுக்கும் மேற்பட்ட நாவல்கள் எழுதிய செ.கணேசலிங்கனின் நாவல்கள் பற்றிய திறனாய்வாக ''மார்க்சிய நோக்கில் ஈழத்து நாவல்கள் செ.கணேசலிங்கனின் நாவல்கள் பற்றிய அவதானிப்பு'' (2008) என்ற கட்டுரையும் ''ஈழத்து சாதிய நாவல்களின் பின்புலத்தில் டானியலின் நாவல்கள்'' (2008) எனும் கட்டுரையும் குறிப்பிடத்தக்கன.

''இலங்கை புகலிட நாவல்கள்'' (2007) எனும் கட்டுரையில் நவீன இலக்கிய வடிவங்களுக்குரிய தனித்துவ இயல்புகள் காரணமாகத் தவிர்க்க முடியாதவாறு புகலிட இலக்கியங்களுள் கவிதைகளே முதன்மை பெற்றன. ''வயலான்குருவி: ஈழத்து நாவல் உலகிற்கு புதியதொரு வரவு'' (2010) எனும் கட்டுரை சிங்களப் பேரினவாதத்தால் முஸ்லீம் மக்கள் நசுக்கப்படுவது பற்றி ஆழமாகப் பேசும் முதல் நாவல் என்ற பெருமை வயலான்குருவிக்குள்ளது.

பிரதேச நாவலான ‘‘ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கின்றது: பன்முகப்பார்வை’’ (2019) எனும் கட்டுரையில் வ.அ.இராசரத்தினத்தினது நேரடியான வாழ்க்கை அனுபவமும், உண்மைக்கலப்பும் மிகுந்திருப்பது காரணமாக சமகால வரலாற்று நாவலாகவும் பரிணமித்துள்ளது என்று குறிப்பிடுகிறார். ஈழத்து முஸ்லீம் எழுத்தாளர்களது நாவல் செல்நெறியை மனங்கொண்டு திக்குவெல்லை கமால் எழுதிய நாவல்களின் சிறப்பியல்புகளைப் பற்றிச் சுருக்கமாக அவதானிக்கும் முயற்சியாக ‘‘ஈழத்து நாவல் வளர்ச்சியில் திக்குவல்லை கமாலின் சில தடங்கள்’’ (2022 மாசி, ஜீவநதி) எனும் கட்டுரை அமைகின்றது.

**ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை பற்றிய ஆய்வுகள்**

ஏனைய இலக்கிய வடிவங்களைப் போலவே சிறுகதையும் சமூகத்தில் மிகப்பெரிய தாக்கத்தை உண்டுபண்ணக் கூடியது என்பது இவரது அபிப்பிராயமாகும். தனது ‘‘இலக்கியத் தேட்டம்’’ (2002) என்ற நூலினூடாக நவீன இலக்கியங்களில் ஒன்றான ஈழத்துச் சிறுகதையையும், அதன் வளர்ச்சியையும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் இவர், சிறுகதைகளின் உள்ளடக்கத்தை, சமூக நோக்கை ஆராய்வதோடன்றி அதற்குச் சமமாக அப்படைப்பின் கலையாக்க முறையும் முக்கியமானது எனக் குறிப்பிடுகின்றார்.

ஈழத்துச் சிறுகதை வளர்ச்சி பற்றி ஒரு மறுமதிப்பீட்டிற்கான அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது என்பதனால் ‘‘ஈழத்துச் சிறுகதை வளர்ச்சி பற்றிய ஒரு மறுமதிப்பீடு’’ (2004) எனும் கட்டுரை எழுதினார். ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளை மறுமதிப்பீடு செய்யும் வகையில் அமைந்த ‘‘ஈழத்து சிறுகதை முன்னோடிகளான இலங்கையர்கோன், சி.வைத்தியலிங்கம் ஆகியோர் சிறுகதைகள் மறுமதிப்பீடு’’ (2009) எனும் கட்டுரை முக்கியமானதொன்றாகும். இதுவரை யாராலும் கவனத்திற்குக் கொண்டுவராத நிலையில் தான் முதன்முதலில் கவனத்திற்குக் கொண்டுவந்தமை பற்றி அவரது ‘‘கவனிக்கப்படவேண்டிய ஈழத்துச் சிறுகதை முன்னோடி: அல்வையூர் மு. செல்லையா’’ (2020) எனும் கட்டுரையில் குறிப்பிடுகின்றார். செ.யோகராசா, சிறுகதைகளை கோட்பாட்டுத் தளத்தில் அணுகிய கட்டுரையாக ‘‘தலித்தியக் கோட்பாட்டு நோக்கில் ஈழத்துச் சிறுகதைகள்’’ (2017) என்கின்ற கட்டுரை அமைந்துள்ளது. சாதிய வரலாற்றுப் பின்னணியை சுருக்கமாகக் கூறுவதோடு, அதன் பின்னணியில் ஈழத்தில் எழுதப்பட்ட தலித்தியம் சார்பான கதைகளை காலகட்ட அடிப்படையில் பகுத்தாராய்கிறார்.

‘‘இருபத்தோராம் நூற்றாண்டின் கிழக்கிலங்கை இலக்கியம் சில அவதானிப்புகள்’’ (2016) என்ற கட்டுரையில் கிழக்கிலங்கைச் சிறுகதையாளர்களை வரிசைப்படுத்துவதுடன், ‘‘வன்னிப்பிரதேச இலக்கியம் - சில முக்கியமான அவதானிப்புக்கள்’’ (2016) என்ற கட்டுரையினூடாக வன்னிப்பிரதேசச் சிறுகதையாளர்கள் பற்றியும் குறிப்பிடுகின்றார். ‘‘ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் தடம் பதித்த பெண் படைப்பாளர்கள்’’ (2018) என்ற கட்டுரையில் ஈழத்தில் சிறுகதை எழுதுகின்ற பெண் படைப்பாளிகள் பற்றியும், ஆளுமைகள் பலரை

ஆராயும்போது அவர்களின் சிறுகதைகள் குறித்த மதிப்பீடுகளையும் இவர் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**முடிவுரை**

நவீன தமிழிலக்கியம் செ.யோகராசாவினது தனித்துவமான ஆய்வுத்துறையாக அமைந்திருந்தாலும் ஒரு குறிப்பிட்ட தனித்துறை சார்ந்திராது, தமிழிலக்கியத்தின் பல்வேறு பரிமாணங்களையும் வெளிப்படுத்துவனவாக செ.யோகராசாவினது ஆய்வுகள் அமைகின்றன. அந்தவகையில் அறியப்படாத நிலையிலும், ஆவணப்படுத்தப்படாத நிலையிலும் உள்ள விடயங்கள் குறித்த பதிவுகளாக இவரது பல கட்டுரைகள் காணப்படுகின்றன. இவரது எழுத்துக்கள் ஆய்வாளர்களுக்கும், பல தளங்களில் உள்ள வாசகர்களுக்கும் சிந்தனைக் கருவூலமாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

பெண்கள் இலக்கியம் குறித்த இவரது எழுத்துக்கள் நூல்களிலும், இதழ்களிலும் பல்வேறு தேவைகளையொட்டிப் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதப்பட்டவையாகும். பெண்ணியம், பெண்களது எழுத்துக்கள் பற்றிப் பெரிதும் பேச விரும்பாத பெரும்பகுதியினர் உள்ள நிலையில், தமது ஆய்வுப்பரப்பின் ஒரு பகுதியாகப் பெண்கள் இலக்கியம் குறித்த ஆய்வுகளைக் கொண்டுள்ளமை கவனத்திற்குரியது. இவரது பெண்கள் இலக்கியம் பற்றிய கட்டுரைகளில் கணிசமானவை பெண் கவிஞர்களது கவிதைகளை அடிப்படையாகக் கொண்டவை. ஏனையவை புனைகதைகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

ஈழத்தில் முஸ்லிம் எழுத்தாளர்களது படைப்புக்களுக்கு இலக்கிய ரீதியாக அங்கீகாரம் வழங்க வேண்டும் என்ற நோக்கில் முன்நின்று செயற்பட்டுள்ளார். இதனூடாக இன, மத பேதங்களைக் கடந்து இவர் தனது இலக்கியப் பணியை மேற்கொண்டமையை நோக்க முடிகின்றது. இதுவரை அறியப்படாத ஆக்கங்கள், நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் ஆளுமைகள் தொடர்பில் மறைந்து இருந்தவற்றை வெளிக்கொணர்ந்து, இலக்கிய உலகிற்கு அறியப்படுத்துவது, அவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்தும் நோக்கில், அவரால் மேற்கொள்ளப்பட்ட அறியப்படாத இலக்கியங்களைக் கண்டறியும் ஆய்வுகள் குறிப்பிடத்தக்கன. இவர் பல்துறைப் பரிமாணங்களைக் கொண்ட எழுத்தாளராகவும், ஆற்றல் மிக்க ஆய்வாளராகவும், சிறந்த திறனாய்வாளராகவும் ஈழத்து இலக்கிய வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகின்றார். விமர்சன அடிப்படையில் இவரது ஏனைய துறைகள் சார்ந்த ஆய்வுமுயற்சிகள் தொடர்பாக அதாவது சிறுவர் இலக்கியம், பெண்கள் இலக்கியம், நாட்டார் இலக்கியம் போன்ற ஆய்வுகளை இனிவருவோர் சிறப்பாக மேற்கொள்ளவேண்டும்.

**துணை நூற்பட்டியல்**


அப்துல் றசாக், எம். (2021 ஜீலை). *கிழக்கிலங்கை தமிழ் இலக்கிய திறனாய்வு வளர்ச்சி – பார்வையும் மதிப்பீடும்.* தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

பாலமுனை பாறூக். (2023, January 23). ஈழத்து தமிழ் இலக்கிய ஆய்வுகளில் பெரும் பங்காற்றிவரும் பேராசிரியர் செ.யோகராசா. *தமிழ் முரசு,* 05.

யோகராசா.செ. (2000). *இலக்கியத்தேட்டம்: ஈழத்து நவீன இலக்கியம்.* கொழும்பு தமிழ்ச் சங்கம்.

யோகராசா.செ. (2002). *ஈழத்து வாய்மொழி பாடல் மரபு.* பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்.

யோகராசா.செ. (2003). *இன்றைய இலக்கியங்களில் இதிகாச பெண் பாத்திரங்கள்.* குறிஞ்சிநிலா பதிப்பகம்.

யோகராசா.செ. (2007). *ஈழத்து நவீன கவிதை புதிய உள்ளடக்கங்கள் - புதிய தரவுகள் -*

யோகராசா.செ. (2007). *பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை.* கொழும்புத் தமிழ்ச்சங்கம்.

யோகராசா.செ. (2008). *ஈழத்து தமிழ் நாவல் வளமும் வளர்ச்சியும்.* குமரன் புத்தக இல்லம். *புதிய போக்குகள்.* குமரன் புத்தக இல்லம்.

யோகராசா.செ. (2010). *கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தியின் இலக்கியத்தடங்கள்.* பன்குடாவெளி.

யோகராசா.செ. (2011). *புலம்பெயர் இலக்கிய வளர்ச்சிக்கு வடமராட்சியின் பங்களிப்பு.* கொழும்பு தமிழ்ச்சங்கம்.

யோகராசா.செ. (2013). *ஈழத்து முச்சந்தி இலக்கியம்.* மகுடம் பப்ளிகேஷனல் 90.

யோகராசா.செ. (2016). *ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் வ.அ.இராசரத்தினத்தின் தடங்கள்.* மடோனா அச்சகம.

யோகராசா.செ. (2018). *ஈழத்தின் முதற் பெண் கவிஞர் மீனாட்சியம்மாள் நடேசையர்.* (பக்.07-10). தென்றல்.

யோகராசா.செ. (2019). *ஈழத்து நவீன இலக்கிய உருவாக்கத்தில் பெண் ஆளுமைகள்.* (1900-1950). யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

யோகராசா.செ. (2022). *ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் மண்டூர் அசோகாவின் வலுவான வளமான தடங்கள் (பக்.09-12).* ஜீவநதி.

யோகராசா.செ. (2022). *ஈழத்து நவீன கவிதை வளர்ச்சியில் பாலமுனை பாறூக்கின் சில தடங்கள் (பக்.43-53).* பாவேந்தல் பொன்னேடு.

# மூதூர் அனஸின் நவீன காவியங்கள் - ஓர் ஆய்வு

**பாலரட்ணம் சரண்யா, நதிரா மரியசந்தனம்**
தமிழ் கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
balarathnamsaranya2@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

மூதூர் அனஸின் படைப்புகளில் நவீன காவியங்களுக்குத் தனியானதொரு இடமுண்டு. மூதூர் அனஸின் நவீன காவியங்கள் ஓர் ஆய்வு எனும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வானது மூதூர் அனஸ் எழுதிய நவீன காவியங்களை அவற்றின் உள்ளடக்க மற்றும் காவிய வெளிப்பாட்டு முறைமை என்ற அடிப்படையில் ஆராய்கின்றது. ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் குறிப்பாக நவீன தமிழ்க் காவிய கர்த்தாக்களுள் மூதூர் அனஸ் குறிப்பிடத்தக்கவர். ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சியில் மூதூர் அனஸின் நவீன காவியங்கள் முக்கியமானவை என்பதோடு இலக்கியதரம் வாய்ந்தவை என்ற வகையில் அவரது காவியப் படைப்பாளுமையை வெளிக்கொண்டு வருவதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது. இவரது நவீன காவியங்கள் தொடர்பாக இதுவரை எவ்வித ஆய்வுகளும் இடம்பெறவில்லை. இவ்வாய்வானது விமர்சன மற்றும் விளக்கமுறை ஆய்வு அணுகுமுறை என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்விற்காக மூதூர் அனஸ் எழுதிய நவீன காவியங்கள் அனைத்தும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. அனஸின் அச்சில் வெளிவந்த நவீன காவியங்கள், கையெழுத்துப் பிரதிகளாகவுள்ள நவீன காவியங்கள், மூதூர் அனஸுடனான நேர்காணல்கள் என்பன முதலாம் நிலைத்தரவுகளாகவும் காவிய ஆய்வுகள் குறித்த நூல்கள், சஞ்சிகைகள், இணையதளங்களில் பிற ஆய்வாளர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள் இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. எனவே மூதூர் அனஸின் நவீன காவியங்களையும், காவியப் படைப்பாளுமையையும் வெளிக்கொண்டு வருதல் என்ற அடிப்படையில் இவ்வாய்வானது முக்கியத்துவம் பெறுகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *நவீன காவியங்கள், காவியப் படைப்பாளுமை, மூதூர் அனஸ், காவிய வெளிப்பாட்டு முறை, ஈழத்துத் தமிழிலக்கியம்*

## ஆய்வு அறிமுகம்

'மூதூர் அனஸின் நவீன காவியங்கள் ஓர் ஆய்வு' எனும் தலைப்பில் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாய்வானது மூதூர் அனஸின் நவீன காவியங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் நவீன காவியங்கள் பற்றிய ஆய்வுகள் குறைந்தளவிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்தவகையில் மூதூர் அனஸ் ஈழத்து நவீன காவிய எழுத்தாளர்களில் தற்போது எல்லோராலும் குறிப்பிடப்படும் ஒருவராகக் காணப்படுகின்றார். இவர் சிறந்த எழுத்தாளர், சமூகவியலாளர், இலக்கிய ஆர்வலர், அரசியல்வாதி எனப் பன்முகம் கொண்டவர். இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலை மாவட்டத்தில் மூதூரில் பிறந்த எம்.எம்.ஏ.அனஸ் புலவர் பரம்பரையைச் சேர்ந்தவராவார். இவர் இளம்வயதிலேயே எழுத்தார்வம் மிக்கவராகத் திகழ்ந்தார். கவிதை, நவீன காவியங்கள், சிறுவர் பாடல்கள், ஆய்வுக் கட்டுரைகள் எனப் பல காத்திரமான படைப்புக்களைப் படைத்து வருகின்றார். தனது புலமையாற்றலால் தன் மண்ணிற்கும் தமிழிற்கும் பல அரிய சேவைகளை ஆற்றிக் கொண்டிருக்கும் மூதூர் அனஸின் நவீன காவியங்களை ஆய்வு செய்வது மிக அவசியமானதாகும்.

**ஆய்வு நோக்கம்**

ஈழத்து இலக்கிய வரலாற்றில் மூதூர் அனஸின் நவீன காவியங்கள் முக்கியமானவை என்பதோடு இலக்கியதரம் வாய்ந்தவை. ஆகவே மூதூர் அனஸ் எழுதிய நவீன காவியங்களையும் அவரது காவியப் படைப்பாளுமையையும் வெளிக்கொண்டு வருவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வுப் பிரச்சினை**

மூதூர் அனஸ் மிகப் பெரும் தமிழார்வலர், கவிஞர், புலவர் பட்டம் பெற்றவர், தமிழ் மீது அளவுகடந்த பற்றும் திறனும் கொண்டவர். அத்தகைய படைப்பாளரின் நவீன காவியங்கள் தொடர்பாக இதுவரை எவ்வித ஆய்வுகளும் இடம்பெறவில்லை என்பது இவ்வாய்வுப் பிரச்சினையாகும்.

**ஆய்வுக் கருதுகோள்**

மூதூர் அனஸின் நவீன காவியங்கள் இலக்கியத் தரம் வாய்ந்தவை என்பதோடு ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் அவற்றுக்கென தனியிடம் உண்டு.

**ஆய்வு முறையியல்**

விளக்கமுறை மற்றும் விமர்சன அணுகுமுறை அடிப்படையில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு வரையறை**

மூதூர் அனஸ் எழுதிய நவீன காவியங்கள் அனைத்தும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**ஆய்வு மூலங்கள்**

இவ்வாய்விற்காக அனஸின் அச்சில் வெளிவந்த நவீன காவியங்கள், கையெழுத்துப் பிரதிகளாகவுள்ள நவீன காவியங்கள், மூதூர் அனஸுடனான நேர்காணல்கள் என்பன முதலாம் நிலைத்தரவுகளாகவும் மூதூர் அனஸ் எழுதிய நவீன காவியம் தவிர்ந்த ஏனைய நூல்கள், காவிய ஆய்வுகள் குறித்த நூல்கள், சஞ்சிகைகள், இணையதளங்களில் பிற ஆய்வாளர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

**மூதூர் அனஸின் வாழ்க்கை வரலாறும் இலக்கிய முயற்சிகளும்**

ஈழத்து இலக்கிய வரலாற்றில் மூதூர் மண்ணையும், மூதூர் மக்களையும் பேசுபொருளாகக் கொண்டு இலக்கியம் படைத்தவர்களுள் மூதூர் அனஸும் முக்கியமானவர். திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பகுதியில் உள்ள நெய்தல் கிராமத்தில் 01.09.1964 ஆம் ஆண்டு முகமது முகைதீனுக்கும், சபியா உம்மாக்கும் மகனாக பிறந்தார். ஜவாப்தீனதும் ஜெஸிமாவினதும் மகளாகிய ஜபிராவை 25.08.1994 ஆம் ஆண்டு திருமணம் முடித்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை திருகோணமலை அல்கிலால் மகா வித்தியாலயத்தில் தொடங்கி

சாதாரணதரம் வரை அதே பாடசாலையிலும், அதனைத் தொடர்ந்து தனது உயர்க்கல்வியை மூதூர் மத்திய மகா வித்தியாலயத்தில் கலைத்துறையிலும் கற்றார். கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று 1986 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு அங்கு சட்டத்துறையில் பயின்றார். எனினும் அரசியல் மீது கொண்ட விருப்பு காரணமாக அரசியல் வேலைகளில் ஈடுபாடு கொண்டு பல்கலைக்கழகக் கல்வியை இடை நிறுத்திவிட்டார்.

கவிஞர் மூதூர் அனஸ் 1996 முதல் 2022 வரை திருகோணமலை துறைமுக தொழில் உறவு அதிகாரியாகத் தொடர்ந்து இருபத்தியாறு வருடங்கள் கடமையாற்றி ஓய்வு பெற்றார். இவரது நூல்களில் காப்பியங்களுக்கு சிறப்பிடமுண்டு. அதன் காரணமாகவே இவர் ‘காப்பியக் கதிரோன்’ என அழைக்கப்படுகின்றார். பதின்மூன்று நவீன காவியங்கள், எட்டு கவிதை நூல்கள், மூன்று தொகுப்பு நூல்கள், இரு குறள்கள் (நூல்), இரு சிறுவர் பாடல்கள், நான்கு ஆய்வு நூல்கள் என்பன இவரது ஆக்கங்களாக வெளிவந்துள்ளன. அச்சில் வெளிவராமல் இவரால் எழுதப்பட்ட பல நூல்கள் கையெழுத்துருவில் காணப்படுகின்றன. மேலும் இவர் பல்வேறு பட்டங்களையும், விருதுகளையும், பரிசில்களையும், கௌரவிப்புக்களையும் பெற்றுள்ளார்.

**மூதூர் அனஸின் காவியங்களில் வெளிப்படும் நவீன காவியங்களின் பண்புகள்**

மரபுவழிக் காவிய மரபில் இருந்து விடுபட்டு காலத்தேவைக்கேற்றாற் போல அமைந்துள்ள நவீன இலக்கிய வடிவமான நவீன காவியம் மரபுவழிக் காவிய இலக்கணப் பண்புகள் சிலவற்றைக் கொண்டுள்ளதோடு நவீன கால இலக்கிய, சமூக, அரசியல், சூழல் மாற்றத்திற்கேற்ற வகையிலான பண்புகளையும் தன்னகத்தே கொண்டமைந்துள்ளது. அவையாவன:

**எளிமை**

நவீன காவியங்களுக்குரிய பண்புகளான எளிய சொற்கள், எளிய நடை, எளிதில் அறியக்கூடிய சந்தம், பொதுமக்கள் விரும்பும் மெட்டு ஆகியவற்றை இவருடைய காவியங்களில் காணலாம். யாராலும் எளிதாகக் கற்றுணரக் கூடியதாக எளிமையாக அமைந்துள்ளன. காவியங்களில் அமைந்துள்ள செய்யுள்கள் எளிமைக்கும் இனிமைக்கும் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். இவை ஓசைச் சிறப்பு மிகுந்தவை. இவருடைய காவியங்களின் சிறப்பம்சம் அதன் எளிமைத் தன்மையாகும். இதற்கு அவருடைய மூதூர் சுனாமிக் காவியம், ஊர் துறந்த காவியம், மனையாள் மாட்சிமைக் காவியம், மூதூர் முன்னேற்றக் காவியம் முதலிய காவியங்களை சிறந்த எடுத்துக்காட்டுக்களாகக் குறிப்பிடலாம்.

“ஆழிப் பேரலை அனர்த்தத்தில்
ஆவி தப்பிய மாந்தரெலாம்
வாழ வழிஇனி ஏதுவென
வேதனை மிகைத்து வாடினரே!”

(மூதூர் சுனாமிக் காவியம்,2019:17)

**செய்யுள் நடையில் அமைந்திருத்தல்**

இவரது நவீன காவியங்கள் செய்யுள் நடையில் அமைந்திருக்கின்றன. அனைத்துக் கவிதைகளும் நான்கடிக் கவிதைகளாக உள்ளன. மரபுக் கவிதை வடிவிலேயே கவிதைகளை அமைத்துள்ளார். சிறந்த அணிப் பயன்பாட்டை இவரது செய்யுள்களில் காணலாம். தற்காலத்தில் அதிகளவாக நவீன கவிதை வடிவிலேயே நவீன காவியங்கள் படைக்கப்படுகின்றன. எனினும் இவர் பழமையைப் போற்றி மரபுக் கவிதை வடிவில் நவீன காவியம் அமைப்பது சிறப்புக்குரியதாகும். இவை உணர்ச்சி நிலைப்பட்ட பாடல்களாகக் காணப்படுகின்றமையை அவரது காவியங்களின் வழி காணக்கூடியதாக உள்ளது.

**கதைப்பாங்கான காவியப் போக்கு**

நவீன காவியங்களில் முதன்மை பெறுவது அவற்றில் இடம்பெறும் கதையாகும். கதையின் அமைப்பே காவியத்திற்கு வலுசேர்க்கின்றது. இவை கதைத் தொடக்கம், வளர்ச்சி, விளைவு, முடிவு என வரிசைப்படி அமைந்திருப்பதைக் காணலாம். நாயகன் ஒருவரைப் பற்றிய காவியமாயின் அவர் பிறந்தது முதற் கொண்டு இளம்பிராயம், கல்வி, தொழில், குடும்பம், ஆற்றிய சேவைகள், குணநலன்கள், சமூகத்தில் அவர்கள் பெறும் முக்கியத்தும், அவரது மறைவு, மறைவின் பின்னர் அவர் சமூகத்தில் பெற்றுள்ள நிலை வரை அனைத்தையும் கதையமைப்பில் குறிப்பிட்டிருக்கின்றார். குறிப்பிட்ட நிகழ்வு சார்ந்த காவியமாயின், நிகழ்ச்சிக்கு முன்னரான நிலை, நிகழ்ச்சி மற்றும் நிகழ்ச்சிக்குப் பின்னரான நிலை முதலியவற்றை கதைப்பாங்கில் அமைத்திருப்பதைக் காணலாம். படகு மூழ்கிய காவியம், ஊர்துறந்த காவியம், சுனாமிக் காவியம் முதலியவை கதைப்போக்கில் அமைந்துள்ளன.

எடுத்துக்காட்டாக சுமார் இருபத்தாறு வருடங்களுக்கு முன்பு மூதூர்க் கடலில் இடம்பெற்ற படகு விபத்தை மையமாகக் கொண்டு கதைப்போக்கில் எழுதப்பட்டுள்ளது. விபத்துக்கு முன்னர் மக்களுக்கு இருந்த பிரயாணக் கஷ்டம் முதலியவற்றைக் கூறி, பின்னர் படகு விபத்தை எடுத்துரைத்து, இறுதியாக விபத்தின் பின்னர் மூதூர் மக்களுக்கு அரசினால் கிடைத்த படகு சேவைகள் மற்றும் தரைவழி பயணத்திற்கான ஏற்பாடுகள் முதலியவற்றைக் கதைவடிவில் படகு மூழ்கிய காவியமாகப் பாடியுள்ளார்.

‘‘சிலநேரம் படகதுவும் செயலிழந்த நிலைக்குச்
சென்றிடுமே நடுகடலில் செய்வதுமே அறியா
பலமணியின் நேரங்கள் பெருந்துயரில் தவிப்பர்
பயணத்தில் தொடர்கதையாய் பெரிதிதுதான் நிகழும்’’

(படகு மூழ்கிய காவியம்,2019:19)

**காவியத் தலைவனது வாழ்க்கையை முழுமையாகப் பாடுதல்**

பாட்டுடைத் தலைவனுடைய வாழ்க்கையை முழுமையாகக் கூறுவது ஒரு நவீன காப்பியத்திற்கு இருக்க வேண்டிய முக்கியமான பண்பாகும். நபிகள் நாயகத்தின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்க்கைப் பகுதியினை 'நாயகக் காவியம்' நன்கு விபரிக்கின்றது. நபி அவர்களின் பிறப்பினையும் (18 ஆவது பாடல்), இறப்பினையும் (584 ஆவது பாடல்) பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"..பேரிறையின் பெருங்கொடையாய் பூவுலகும் மகிழ

பெருமானார் நபிமுகம்மது புவியினிலே பிறந்தார்"

(நாயகக் காவியம்,2014,பாடல்18:03)

"திங்கள்ரபி யுள்அவ்வல் திகழ்பிறைபண் னிரண்டில்

திருநபியும் தம்வாழ்வைத் தரணியில் முடித்தார்"

(நாயகக் காவியம்,2014,பாடல்584:85)

மூதூர் அனஸின் நவீன காவியங்களை அவற்றின் பண்புகளின் அடிப்படையில் வகைப்படுத்தி விளக்கலாம். சமகால விடயங்களைப் பேசும் மூதூர் அனஸின் நவீன காவியங்களின் விடயப்பரப்பானது பரந்தளவில் அமைந்திருப்பதால் அவற்றை உள்ளடக்க அடிப்படையில் வகைப்படுத்தி ஆய்வுக்குட்படுத்துவது சிறப்பாக அமையும். அவ்வகையில் அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

1. சமூக யதார்த்தம் பற்றியவை
2. அரசியல் பற்றியவை
3. ஆன்மீகம் குறித்தவை
4. இயற்கை அனர்த்தங்கள் பற்றியவை
5. வரலாற்று ஆவணமாக அமைபவை
6. தனிப்பட்ட உறவுகள் சார்ந்தவை

**சமூக யதார்த்தம் பேசுபவை:** சமூக யதார்த்தப் படைப்பு என்பது அன்றாட சமுதாய வாழ்வையும் சமுதாயப் பிரச்சினைகளையும் இயல்பான முறையில் அமைத்தலாகும். மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள், தொழில், தொழில்சார் பிரச்சினைகள், சமூக சமய பண்பாடு மற்றும் விழுமியங்கள், கல்வியின் அவசியம், சமூகத்தில் பெண்களுக்கான நிலை, அவர்களுக்கான உரிமை, ஒற்றுமை, சமத்துவம், சமாதானம், தீண்டாமை, சமுதாய முன்னேற்றம், தனிமனித சுதந்திரம், சிறந்த சமூக தலைவர்கள் முதலியவற்றைப் பாடுபொருளாகக் கொண்டமைந்தவையாகும்.

எடுத்துக்காட்டாக இவரது 'மஜீது மாகாவியம்', 'ஊர் துறந்த காவியம்', 'மூதூர் முன்னேற்றக் காவியம்', 'மூதூர் மீன்பிடிக் காவியம்', 'அமீன் அருங்காவியம்' ஆகிய அச்சில்

வெளிவந்த நவீன காவியங்களையும், 'மூதூர் விவசாயக் காவியம்', 'மே தினக் காவியம்', 'தோப்புக் காவியம்', 'மலையக மாந்தர் காவியம்', 'தோப்பூர் காவியம்', 'குரங்குத் தொல்லைக் காவியம்', 'பெண் உரிமைக் காவியம்', 'மூதூர் வயல்வெளிக் காவியம்', 'நெய்தல் நகர் நேர்த்திக் காவியம்', 'மகாவலி கங்கைக் காவியம்' முதலிய அச்சில் வெளிவராத நவீன காவியங்களையும் சமூக யதார்த்தங்களைப் பேசும் நவீன காவியங்களாகக் குறிப்பிடலாம்.

''கற்றவர் கல்வியை மதிக்கின்ற
கண்ணிய நிலைமை தோன்றட்டும்
பற்றெலாம் ஊரின் உயர்வென்கும்
பண்பார் கரங்கள் ஓங்கட்டும்''

(மூதூர் முன்னேற்றக் காவியம்,2019:67)

**அரசியல் பற்றியவை:** அரசியல் மற்றும் அரசியல் சார்ந்த விடயங்களைப் பேசுபவை இவ்வகைப்பாட்டினுள் அடங்கும். அரசியல் வாழ்க்கை, அரசியல் அனுபவங்கள், சிறந்த அரசியல் தலைவர்கள், அவர்களது வாழ்க்கை வரலாறு, சமூகப் பணிகள், அரசியல் போராட்டங்கள், போர்க்கால வாழ்க்கை, இலஞ்சம், ஊழல் சார்ந்த கேலி கிண்டல்கள், போலி அரசியல் வாதிகளுக்கு எதிரான குரல், விடுதலை வேட்கை, மக்களை ஏமாற்றும் கீழ்த்தனமான அரசு பற்றிய விமர்சனம், தேர்தல், ஜனநாயகம், அரசின் நலத்திட்டங்கள் முதலானவற்றை பாடுவதாக அமைகின்றன. அவ்வகையில் மூதூர் அனஸ் எழுதிய 'அஷ்ரப் அமர காவியம்', 'தங்கத்துரைக் காவியம்', 'மஜீது மாகாவியம்' முதலியவற்றையும் 'ஜீனைட் யுகக் காவியம்', 'அஷ்ர.ஃப் ஆற்றுப்படைக் காவியம்', 'சேர்.றாஸிக் பரீத் சிறப்புக் காவியம்' முதலிய வெளியிடப்படாத நவீன காவியங்கள் அரசியல் பேசும் காவியங்களாகக் குறிப்பிடலாம்.

''தமிழர்தம் தலைமைகளில் தன்னிகரே அற்ற
தனித்தபெரும் தலைவனெனத் திகழ்ந்திட்ட நல்லோன்
தமக்காக வாழாத தரம்மிக்க தலைவன்
தங்கத்துரை என்றேதான் தினமுரைப்போம் நாமும்''

(தங்கத்துரைக் காவியம்,2016:47)

ஆன்மீகம் மற்றும் இஸ்லாமிய மத, பண்பாட்டைப் பிரதிபலிப்பவை: மூதூர் அனஸின் நவீன காவியங்கள் இஸ்லாமிய மதத்தையும், அவர்களின் இறைவழிப்பாட்டையும், மதம் கூறும் நற்சிந்தனைகளையும், இஸ்லாமிய மார்க்கத்தையும், அவர்களின் கலாசார பண்பாட்டையும்

வெளிப்படுத்துகின்றனவாக அமைகின்றன. இவர் இஸ்லாமிய மதத்தின் புனித ஒளியும் எல்லாம்வல்ல இறைவனுமான முகமதுநபியின் வாழ்க்கை வரலாற்றைக் கருப்பொருளாகக் கொண்டு நாயகக் காவியம் அமைத்தார். நபியைப் போல் நாமும் எத்தகைய சூழலிலும் மார்க்கம் தவறாமல், நன்னெறித் தவறாமல் இருப்பதற்கான அவசியத்தை வலியுறுத்துகின்றார். எடுத்துக்காட்டாக,

''கூடுகின்ற கூட்டத்தின் காதுகளில் நபியைக்

கூடாத வார்த்தைகளால் குறித்துரைப்பர் நாளும்

கேடரே சூனியத்துக் காரரே என்பர்

குறிப்பாகப் பைத்தியத்துப் பேர்வழியாய்ப் பகர்வர்''

(நாயகக் காவியம்,2014:32)

அக்காவியத்தில் நபிகள் நாயகத்தின் பிறப்பு, அவரது இளமைக்காலம், திருமணவாழ்க்கை, மக்களுக்காக அவர் ஆற்றிய மகத்தான சேவைகள் மற்றும் பணிகள் முதலியவற்றை மிக அழகாக எடுத்துரைக்கின்றார். மேலும் இவரது 'சுந்தர நபியூசுப் சரிதைக் காவியம்', 'நோன்பின் மாண்புக் காவியம்' ஆகிய இரு நவீன காவியங்களை உள்ளடக்கிய 'இரு குறுங்காவியம்', 'அருள்மறை ஆற்றுப்படைக் காவியம்' எனும் வெளியிடப்படாத இரு நவீன காவியங்களையும் மதம் சார்ந்த காவியங்களாகக் குறிப்பிடலாம்.

**இயற்கை அனர்த்தங்கள் பற்றியவை:** இயற்கையுடன் ஒன்றித்து வாழும் நாம் அவற்றால் ஏற்படும் நன்மைகளை சுவிகரித்துக் கொள்வதுபோல் அவற்றினால் ஏற்படும் அனர்த்தங்களிலும் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இயற்கை அனர்த்தங்களால் மனிதர்கள் மாத்திரமன்றி ஏனைய உயிரினங்களும் பல இன்னல்களைச் சுமப்பதுடன் பலவகையான இழப்புகள் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் ஏற்படுகின்றன. மக்கள் சொல்லி தீரமுடியாத பல துன்ப துயரங்களை அனுபவிக்கின்றனர். அவற்றினை அடிப்படையாகக் கொண்டு 'சுனாமிக் காவியம்', 'சூறாவளிக் காவியம்' முதலிய நவீன காவியங்கள் கிழக்கில் எழுந்தன.

அவ்வகையில் மூதூர் அனஸ் 2004 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட அனர்த்தத்தை மையமாகக் கொண்டு சுனாமி குறித்தும் அதனால் மக்கள் அடைந்த அவலங்கள் குறித்தும் குறிப்பாக மூதூரை மையமாகக் கொண்டு 'மூதூர் சுனாமிக் காவியம்' என்ற நவீன காவியத்தை எழுதினார்.

''காலமெல்லாம்

கடலின் கரையைத் தழுவிய

கடல் அலை...... அன்று

ஊருக்குள் ஊடுருவி வந்த நாள்''

(மூதூர் சுனாமிக் காவியம்,2019:38)

“இயற்கையின் சீற்றம்

மூதூர் மண்ணை

முகர்ந்த நாள்”

(மூதூர் சுனாமிக் காவியம்,2019:43)

**வரலாற்று ஆவணமாக அமைபவை:** கடந்த காலத்தில் குறித்த நிகழ்வு இன்ன நாளில் இன்ன நேரத்தில் இன்னவர்களால் இவ்வாறு நடந்தது என்பதைக் கூறுவதாக அமைவதே வரலாற்று ஆவணமாகும். அவ்வகையில் சுனாமி அனர்த்தம், படகு மூழ்கிய விபத்து, வன்செயலால் மூதூர் மக்கள் மூதூரை விட்டு கந்தளாய்க்கு இடம்பெயரல், கடந்த காலங்களில் நாட்டின் சிறந்த அரசியல்வாதிகள் வாழ்க்கை வரலாற்றின் வழியாக அப்போதைய அரசியல், சமூக நிலை மற்றும் மக்களின் வாழ்வியல் பிரச்சினைகள், அவர்கள் அதற்குப் பெற்றுக் கொண்ட தீர்வுகள் முதலியவற்றை எடுத்துரைத்தல் என்ற அடிப்படையில் இவரது நவீன காவியங்கள் வரலாற்றுக் காவிய வகைப்பாட்டிற்குள்ளும் உள்ளடங்குகின்றன.

அவருடைய வெளியிடப்படாத நவீன காவியங்களான ‘இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றுக் காவியம்’ ஆரம்பம் முதல் கொண்டு இலங்கையில் முஸ்லிம்கள் குடியேறிய வரலாற்றைக் கூறுகின்றது. ‘கொரோனாக் காவியம்’ இலங்கையின் வரலாற்றில் கொரோனா தொற்று ஏற்பட்டதையும் அதனால் மக்கள் அடைந்த துயரங்களையும் அவர்களது வாழ்வியலில் ஏற்பட்ட மாற்றங்களையும் கூறுகின்றது.

**தனிப்பட்ட உறவுகள் சார்ந்தவை:** காவியங்களில் தன்னைப் பற்றியும், தன் உறவுகளைப் பற்றியும் பாடும் காவியங்கள் குறைந்தளவிலேயே உள்ளன. அவ்வகையில் மூதூர் அனஸ் தன்னுடைய வாழ்க்கை வரலாற்றை மையமாக வைத்து நவீன காவியமாக ‘என் சரிதைக் காவியத்தையும்’, தன் தாயைப் பற்றிய நவீன காவியமாக ‘தாய் தட்சணைக் காவியத்தையும்’ எழுதியுள்ளார். இக்காவியங்கள் இன்னும் வெளிவரவில்லை. இவர் தனது மனைவியை காவிய நாயகியாக அமைத்து ‘மனையாள் மாட்சிமைக் காவியம்’ எனும் நவீன காவியத்தை எழுதி வெளியிட்டார். இவரது சிறந்த நவீன காவியங்களில் இதுவும் ஒன்று.

“உன்னை எந்தன் மனைவியென

உலகில் யானும் அடைவதற்கு

என்ன தவம்தான் செய்தேனோ!

ஏகன் கொடைதான் என்பேனோ!”

(மனையாள் மாட்சிமைக் காவியம்,2019:11)

மூதூர் அனஸின் காவியங்களை அவற்றின் பண்புகளின் அடிப்படையில் ஆய்வு செய்கின்றபோது தமிழ்க்காவிய மரபில் அவை பெறுகின்ற முக்கியத்துவத்தையும் அவற்றின் இலக்கியத்தரத்தையும் அறியக்கூடியதாக உள்ளது. அவரின் காவியங்களில் வெளிப்படும்

நவீன காவியங்களின் பண்புகள் என்ற தலைப்பின் கீழ் ஆராயப்பட்ட விடயங்கள் நவீன தமிழ்க்காப்பிய மரபினை பின்பற்றி அமையப்பெற்றுள்ளமையை தெளிவுப்படுத்துகின்றது.

**மூதூர் அனஸின் நவீன காவியங்களின் உள்ளடக்கம்**

மூதூர் அனஸ் முற்போக்கு சிந்தனையாளர். ‘மூதூர் சமூகம்’, ‘மூதூர் அரசியல் தலைமைத்துவம்’, ‘மூதூர் பிரதேசம்’ ஆகிய மூன்று தளங்களிலேயே அவரது நவீன காவியங்கள் பெரும்பாலும் நகர்கின்றன. இவரைப் பிரதேச நிலைப்பட்ட எழுத்தாளர் என்று குறிப்பிடுவது சிறந்ததாக இருக்கும். காரணம் இவரது படைப்புக்களில் பெரும்பாலானவை மூதூரை உள்ளடக்கமாக கொண்டவையாகும்.

**வறுமை**

வறுமை மூதூர் மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்டமையையும், அது மூதூர் மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்திய தாக்கத்தையும் தனது நவீன காவியங்களில் அனஸ் குறிப்பிட்டுள்ளார். மூதூர் முன்னேற்றக் காவியத்தில் மூதூர் மக்களின் வாழ்வியல் பற்றி பேசும் போது மூதூர் மக்களின் வறுமைநிலையையும் குறிப்பிடுகின்றார். செழிப்புடன் வாழ்ந்த மக்களின் வறுமைமிக்க வளமில்லாத வாழ்வு நீங்க வேண்டும். வறுமையின் கொடுமை சமூகத்தில் கள்வர் கூட்டத்தை உருவாக்க கூடிய சூழலை ஏற்படுத்தும். ஆகையால் வறுமை ஒழிய வேண்டும். கள்வர் கூட்டம் ஒழிய வேண்டும் என்று கூறுகின்றார்.

‘‘நெல்லினது களஞ்சியமாய் நிலைபெற்ற வீட்டில்

நாளாந்த உணவுக்கும் நெறியில்லா நிலைமை’’

(ஊர் துறந்த காவியம்,2014:10)

கோடை காலத்தில் வயல்கள் வறட்சி அடைவதால் பயிர்கள் கருகிப் போகின்றன. இவற்றினால் நெல்லின் களஞ்சியமாக இருந்த வீடுகள் நாளாந்த உணவுக்கு வழியில்லாமல் போகின்ற வறுமை நிலையைக் குறிப்பிடுகின்றார். பின்வரும் பகுதிகள் மூதூர் விவசாயிகள் வறட்சி, வெள்ளம் முதலியவற்றால் பாதிப்படைந்து விளைச்சல் ஏதும் பெறாமல் நட்டமடைந்து வறுமை வாழ்வை அடைந்தமையை வெளிப்படுத்துகின்றது.

**மூதூர் அரசியல் தலைமைத்துவம்**

தான் பிறந்த மண்ணை அதிகமாக நேசிக்கும் அனஸ் மூதூரின் சமூக அமைப்பில் மாத்திரமல்லாது மூதூரின் அரசியலிலும் அக்கறை கொண்டவராக விளங்குகிறார். மூதூரின் முன்னேற்றத்திற்கும், மூதூர் மக்களின் எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமைவதற்கும் மூதூரில் ஓர் சிறந்த அரசியல் தலைமைத்துவம் வேண்டும் என்பதை தனது பெரும்பாலான நவீன காவியங்களில் வலியுறுத்துகின்றார். சிறந்த அரசியல் தலைமைத்துவம் அவரது நவீன காவியங்களின் உள்ளடக்கங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாகக் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்:

‘‘ஊரை உயர்த்தும் நோக்குடைய

உன்னத தலைவன் வாய்க்கட்டும்

பாரிய பணிகள் எல்லாமும்

பாங்காய் அவனும் செய்யட்டும்''

(மூதூர் முன்னேற்றக் காவியம்,2019:64)

**மூதூரின் அவலம்**

மூதூர் சமூகத்தின் மீது மிகுந்த அக்கறைக் கொண்ட மூதூர் அனஸ் மூதூரின் அவலம் குறித்தும் குறிப்பிடுகின்றார். மூதூர் அழகும் செழிப்பும் நிறைந்த ஊர் எனினும் காலத்தால் ஏற்பட்ட பல பேரழிவுகளாலும், மக்களின் செயற்பாடுகளாலும், இனப்பிரச்சினை வன்முறைகளாலும் மூதூருக்கு ஏற்பட்ட அழிவுகளால் அதன் நிலை சிதைந்துவிட்டது. இத்தகைய அழிவுகளில் இருந்து மூதூரை மீட்டு அதன் பழைய நிலைக்கு கொண்டு செல்ல யாரும் முன்வரவில்லை என்ற வருத்தத்தையும், இதனால் மூதூர் தற்போது அடைந்திருக்கும் அவல நிலையையும் தனது நவீன காவியங்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

''இனங்களது ஒற்றுமையின் இருப்பிடமாய் இருந்த

இனியபதி மூதூரில் இனமோதல் வந்து

சனங்களினை அகதிகளாய் சங்கமிக்கச் செய்து

சரித்திரத்தைக் கறைபடியச் செய்துவிட்ட தம்மா''

(ஊர்துறந்த காவியம்,2014:09)

**மூதூர் பெரியார்களின் மகிமை**

மூதூரின் முன்னேற்றத்திற்காக பாடுப்பட்ட மூதூர் பெரியார்களைப் பற்றியும் மூதூர் அனஸ் தனது நவீன காவியங்களில் குறிப்பிட்டுள்ளார். அதனிலும் இருவகை போக்கு காணப்படுகின்றது. ஒன்று மூதூர் பெரியார்களைப் பற்றிய தனித்தனி நவீன காவியங்களைப் பாடுதல். எடுத்துக்காட்டாக வாப்பு மரைக்கார் வழிக்காவியம், தங்கத்துரைக் காவியம், மஜீது மாகாவியம், அமீன் அருங்காவியம் முதலிய நவீன காவியங்களைக் குறிப்பிடலாம். மற்றையது நவீன காவியங்களினுள்ளே பெரியார்களது மகிமையை பாடுதல். எடுத்துக்காட்டாக 'படகு மூழ்கிய காவியம்', 'மூதூர் முன்னேற்றக் காவியம்', 'மூதூர் சுனாமிக் காவியம்', 'ஊர் துறந்த காவியம்' முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

''பொறுமை என்பது உந்தனுக்கு
பெரியோன் இறையின் கொடைதானே!
சிறுமைத் தனங்கள் எதனினிலும்
சிறிதும் சிந்தை உனக்கிலையே!

(அமீன்அருங்காவியம்,2017:93)

**மூதூர் மண்ணின் சிறப்பு**

மூதூர் மண்ணின் மீது மிகுந்த பற்றுக் கொண்ட இவரது நவீன காவியங்களில் மூதூர் மண்ணின் சிறப்புக்களும் எடுத்துக் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மூதூரின் அழகு, செழுமை, சிறப்பு முதலியவற்றைத் தனது நவீன காவியங்களில் குறிப்பிட்டுள்ளார். எடுத்துக்காட்டாக மூதூர் முன்னேற்றக் காவியத்தில் மூதூரின் அழகு பற்றி பேசும் போது கடலலைகள் அழகு சேர்க்க நெல்வயல்கள் சிறக்க, வனப்புமிக்க காடுகளும் வரமாக நெடுமலைகளும் அமைந்த பதிதான் மூதூர் எனக் குறிப்பிடுகின்றார். முக்கனிகளும், காய்கறிகளும், முதிர்ந்த தேனும் நிறைந்த ஊர்தான் மூதூர் என்றும், சாதிமத பேதம் என்பது மூதூரின் சரித்திரத்திலேயே இருக்கவில்லை என்றும், இனங்களின் ஒற்றுமையின் இருப்பிடமாய் அமைந்த இனிய ஊர் மூதூர் என்றும் குறிப்பிடுகின்றார். எடுத்துக்காட்டாக பின்வரும் பகுதிகள் மூதூர் மண்ணின் சிறப்புக்களைக் கூறுகின்றன.

"பொன்விளையும் பூமியெனப் பேரதுவும் பெற்று
பொங்குநதி மாவலியின் பாய்ச்சலுமே கண்டு
மண்ணகத்துப் பகுதிகட்கு மகுடமெனத் திகழும்
மூதூரின் மகிமையது மண்ணுலகில் பெரிது"

(வாப்பு மரைக்கார் வழிக்காவியம்,2015:14)

**தொழில்**

மனித வாழ்க்கையில் தொழில்கள் பிரதான இடம் வகிக்கின்றன. தொழில் முறைகளும், அவற்றினால் கிடைக்கும் வருமானங்களும், தொழிலில் ஏற்படுகின்ற சிக்கல்களும் மனிதர்களின் வாழ்க்கையில் முக்கிய இடம்பெறுகின்றன. அந்த வகையில் மூதூர் அனஸின் மூதூர் முன்னேற்றக் காவியம், படகு மூழ்கிய காவியம், மீன்பிடிக் காவியம், வட்டக் காவியம், ஊர் துறந்த காவியம் முதலிய நவீன காவியங்கள் மூதூரில் மேற்கொள்ளப்படும் மீன்பிடித் தொழில், விவசாயம், உப்பளம், நன்னீர் மீன்வளர்ப்பு, கால்நடை முதலிய தொழில் முறைகள் பற்றிக் குறிப்பிடுகின்றார். தொழில் முறைகளில் அதிகளவாக மீன்பிடித் தொழிலைப் பற்றியே அதிகமாக குறிப்பிடுகின்றார். மீன்பிடித் தொழில் பற்றித் தனியே மீன்பிடிக் காவியம் எனும் நவீன காவியத்தையும் எழுதியுள்ளார். இது முழுவதுமாக மீன்பிடித் தொழிலைப் பற்றியதாக அமைந்துள்ளது.

"மூதூரில் தொழில்களிலே மீன்பிடிக்கும் தொழிலே
முக்கியதாம் இடத்தினிலே மிளிர்வதுவும் புரிவோம்
பாதகமாம் நிலையினிலே பரிணமிக்கும் தொழிலிது
பேருயர்வு காணும்நிலை பதியினிலே வேண்டும்"

(மூதூர் மீன்பிடிக் காவியம்,2023:30)

**மூதூர் அனஸின் காவியங்களின் உருவமும் மொழியும்**

இவருடைய நவீன காவியங்களில் இவருடைய உள்ளார்ந்த வாழ்க்கை அனுபவங்களே வெளிப்படுகின்றன. இவர் நவீன காவியங்களில் கற்பனை விடயங்களுக்குப் பதிலாக உண்மை நிகழ்வுகள் அதிக முக்கியம் பெறுவதைக் காணலாம். இவரது நவீன காவியங்கள் மூடநம்பிக்கைகள் மற்றும் சமூக தீண்டாமைக்கு எதிரான குரலாக அமைந்துள்ளன.

காவியத்தின் குறித்த பொருளை வாசிப்பவருக்கு எளிதில் புலப்படச் செய்யும் வான்மையை இவருடைய நவீன காவியங்களில் காணலாம். தன்னுடைய எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் புலப்படுத்துவதற்கு நவீன காவியத்தைக் கருவியாகப் பயன்படுத்தியுள்ளமையை அறியக்கூடியதாக உள்ளது. மக்களுடைய பேச்சிற் பயின்று வரும் சொல், நடை, ஓசை முதலியவற்றைப் பயன்படுத்தி சீரிய முறையில் தன் கருத்தைப் புலப்படுத்தி நவீன காவியம் எழுதுகின்றார்.

இவருடைய நவீன காவியங்களில் சொல்வளம், ஓசைவளம், மனித இயல்பினை உள்ளவாறு கண்டறியும் பேராற்றல் முதலிய பண்புகளைக் காணலாம். உணர்ச்சி மிகுதியைப் புலப்படுத்தும் சந்தர்ப்பங்களிலெல்லாம் சொற்கள் யாதொரு தடையுமின்றி ஒன்றன்பின் ஒன்றாய் அவருடைய கருத்தை தெளிவாய் புலப்படுத்தி செல்லுமாற்றை அவருடைய நவீன காவியம் எங்கும் காணலாம். உயிர்துடிப்பற்ற சொற்களைக் காண்பது மிக அரிது. இவருடைய நவீன காவியங்கள் அனைத்திலுமே காவியக் கதை சொல்லுபவராக மூதூர் அனஸே உள்ளார். சாதாரண மக்கள் பேசும் மொழிநடையை ஒத்த ஒரு எளிய நடையை இவர் தனது நவீன காவியங்களில் கையாண்டுள்ளார்.

மூதூர் அனஸின் நவீன காவியங்களில் படகு மூழ்கிய காவியம், தங்கதுரைக்காவியம், வாப்பு மரைக்கார் வழிக்காவியம், மஜீது மாகாவியம், மூதூர் முன்னேற்றக் காவியம், அமீன் அருங்காவியம், மூதூர் சுனாமிக் காவியம், மனையாள் மாட்சிமைக் காவியம் முதலிய நவீன காவியங்கள் காப்பு, இறையஞ்சல், அவையடக்கம், நகர் வாழ்த்து ஆகியவற்றைக் கொண்டமைந்துள்ளதைக் காணலாம்.

தான் நவீன காவியங்களைப் பாடும் போது அக்காவியங்கள் குறித்து குறள்களையும், வெண்பாக்களையும், கும்மிப்பாக்களையும், புகழ்ப்பாக்களையும், வாழ்த்துப்பாக்களையும் தனியே காவியங்களின் இறுதியில் அமைத்துள்ளார். எடுத்துக்காட்டுக்களாக மஜீது மாகாவியத்தில் இடம்பெறும் 'மஜீது குறள்' எனும் பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்:

"அச்சமெனும் வார்த்தை அறியா மஜிதினது
உச்சத் தலைமை உணர்"

(மஜீது மாகாவியம்,2017:71)

காவியத்துக்கு மேலும் அழகு சேர்ப்பது அதன் ஓசைநயமாகும். வாசிப்பவருக்கும் எழுதுபவருக்கும் இடையிலான உறவின் நெருக்கத்தை வலுச்சேர்க்கும். ஓசைநயமானது மூதூர் அனஸின் நவீன காவியத்திலும் சிறப்பாக அமைந்துள்ளது. எடுத்துக்காட்டாக நாயகக்

காவியம் முழுமையாக மூன்றசை - மூன்றசை - மூன்றசை - ஈரசை என்ற ஓசைநயத்தோடு அமையப்பெற்றுள்ளது. மூதூர் அனஸ் தனது நவீன காவியங்களில் நாயகக் காவியத்தை தவிர்த்து வேறெந்தக் காவியத்தையும் காண்டங்களாகவோ, அத்தியாயங்களாகவோ, பகுதிகளாகவோ பகுக்கவில்லை. கதைப்போக்கில் தொடர்ச்சியாக நீண்ட காவியங்களாகவே பாடியுள்ளார். இவரது நாயகக் காவியம் மாத்திரம் ‘மக்காக் காண்டம்’, ‘மதினாக் காண்டம்’ என இரு காண்டங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

**மூதூர் அனஸின் நவீன காவிய எடுத்துரைப்பு முறைமை**

**அறிவுரை கூறும் மரபு**

மூதூர் அனஸின் குறிப்பிட்ட நவீன காவியங்கள் அறிவுரை கூறும் முறையில் எழுதப்பட்டவையாக அமைகின்றன. அவ்வகையில் அவர் தனது சமூக வாழ் மக்களுக்கும், தனது வாசகர்களுக்கும், எதிர்கால சந்ததியினருக்கும் பலதரபட்ட வகையில் தமது வாழ்க்கை அனுபவங்களின் ஊடாகவும், மண்ணில் வாழ்ந்து மறைந்து போன தமது முன்னோர்களது வாழ்க்கைப் பயணத்தின் ஊடாகவும் பல்வேறு அறிவுரைகளை வழங்குவதைக் காணலாம். அவ்வகையில் அவரது மூதூர் முன்னேற்றக் காவியம், நாயகக் காவியம், மனையாள் மாட்சிமைக் காவியம் முதலிய காவியங்கள் அறிவுரை கூறும் மரபைப் பின்பற்றி உள்ளதனைக் காணலாம்.

**விவரண முறை**

புனைதிறன் உத்திகளுள் விவரண உத்தியும் ஒன்றாகக் காணப்படுகின்றது. மூதூர் அனஸும் தன்னுடைய நவீன காவியங்களில் இவ்வுத்தியைக் கையாண்டுள்ளார். தானே கவிதை சொல்லியாக இருந்து முழுக்களத்தையும் விவரணப்படுத்தும் தன்மை அவரது அனைத்து நவீன காவியங்களிலும் காணப்படுகின்றது.

‘‘அருணாசலம் யோகம்மா அருந்தவப்புதல் வனென

ஆயிரத்து தொழியிரத்து அமைமுப்பத் தாறில்

பெருமைமிகு தைமாதத்தின் பதினேழாம் திகதி

பதிகிளிவெட் டிமண்ணதனில் தங்கத்துரை பிறந்தார்’’

(தங்கத்துரை காவியம்,2016:24)

**தன்னுணர்ச்சி வெளிப்பாடு**

கவிஞர் தமது மன உணர்வினையும் எண்ணங்களையும் கவிதையின் மூலம் செறிவாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்துவார். அவ்வாறு வெளிப்படுத்தும் உத்தி தன்னுணர்ச்சி வெளிப்பாட்டு உத்தியாகும். மூதூர் அனஸினுடைய நவீன காவியங்களிலும் இவ்வுத்தியைக் காணலாம். எடுத்துக்காட்டாக மூதூர் முன்னேற்றக் காவியத்தைக் கூறலாம். மூதூர்

முன்னேற்றக் காவியத்தில் தன்னுடைய தனிப்பட்ட மன உணர்வினை நன்கு வெளிப்படுத்தியுள்ளார். தனது ஊர் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் காண வேண்டும் என்ற அவருடைய ஆசை, எண்ணம் போன்றவற்றைச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

**முடிவுரை**

மூதூர் அனஸ் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் தனக்கென ஓரிடத்தினைப் பெற்றுள்ளார். இவரது நவீன காவியங்களின் எண்ணிக்கைக்கேற்ப அவை கனதியும் ஆழமும் உடையவை. இவரின் காவியங்களில் வெளிப்படுத்தப்படும் சமூகப் பிரச்சினைகளும் இவ்வாய்வில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அந்தவகையில் மூதூர் அனஸ் தனது நவீன காவியங்களில் வறுமை, மூதூர் அரசியல் தலைமைத்துவம், மூதூரின் அவலம், மூதூர் மண்ணின் சிறப்பு, மூதூர் முன்னேற்றச் சிந்தனை, தொழில், போர்க்கால வாழ்க்கை, உறவுகள் என்பவற்றைச் சித்திரித்துள்ளமையைக் காணமுடிகிறது.

குறிப்பாக இவரது எழுத்துக்களில் யதார்த்த நிலை வெளிப்படுவதனைக் கண்டுக்கொள்ள முடிகிறது. அதிகளவான வர்ணனைகள் இடம்பெறவில்லை. காவிய அழகிற்காக அதிகளவான அலங்காரங்களைக் காவியங்களில் பயன்படுத்தவில்லை. தேவையான கவிச் சுவையுடன், வாசிப்போருக்கு எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் அழகுற, தெளிவாக தனது நவீன காவியங்களை அவர் படைத்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

மூதூர் அனஸ் கவிஞர், புலவர், காப்பியக்கோன் என பல பட்டங்களைப் பெற்ற தமிழ் மீது அளவு கடந்த பற்றும் திறனும் கொண்ட ஓர் எழுத்தாளர். இவரது புலமைக்கான உண்மையான அங்கிகாரம் இவரது நவீன காவியங்கள் வாசகர்களை முழுமையாகச் சென்றடையும் போதே கிடைக்கும்.

ஆகையால் இவ்வாய்வினூடாக இவரது நவீன காவியங்கள் வெளித் தெரிய வேண்டும், இவரது எழுத்தாற்றலை வெளியுலகம் அறிய வேண்டும், இப்படியொரு நவீன காவிய எழுத்தாளரை இவ்வுலகம் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் அமைவதனால் இவருடைய புலமைக்கான அங்கிகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான, இவரது நவீன காவியங்களை வெளிக்கொணர்வதற்கான ஒரு சிறு முயற்சியே இவ்வாய்வாக அமைகின்றது. வெளியுலகம் போற்றும் வகையில் இவரது நவீன காவியங்கள் இலக்கியதரம் வாய்ந்தவையாக காணப்படுகின்றன. ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்று வளர்ச்சியில் குறிப்பாக நவீன தமிழ்க் காவியகர்த்தாக்களுள் குறிப்பிடத்தக்க எழுத்தாளராக மூதூர் அனஸ் விளங்குகின்றார்.

**உசாத்துணை**


அமிர்தசாகரர். (1938). *யாப்பருங்கலக்காரிகை குமாரசுவாமிப் புலவர் உரை.* இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

அனஸ்,எம்.எம்.ஏ. (2014). *ஊர் துறந்த காவியம்.* மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்.

அனஸ்,எம்.எம்.ஏ. (2014). *நாயகக் காவியம்.* மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்.

அனஸ்,எம்.எம்.ஏ. (2015). *அஃ்ர.ஃப் அமர காவியம்.* மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்.

அனஸ்,எம்.எம்.ஏ. (2015). *வாப்பு மரைக்கார் வழிக்காவியம்.* மூதூர் கலை இலக்கிய ஒன்றியம

அனஸ்,எம்.எம்.ஏ. (தி.ன.இ). *இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றுக் காவியம்.* **ஜ**அச்சில் வெளிவராதவைஸ.

அனஸ்,எம்.எம்.ஏ. (தி.ன.இ). *கொரோனாக் காவியம்.* **ஜ**அச்சில் வெளிவராதவைஸ.

அனஸ்,எம்.எம்.ஏ. (தி.ன.இ). *குரு தட்சிணைக் காவியம்.* **ஜ**அச்சில் வெளிவராதவைஸ.

அனஸ்,எம்.எம்.ஏ. (தி.ன.இ). *மூதூர் விவசாயக் காவியம்.* **ஜ**அச்சில் வெளிவராதவைஸ.

அனஸ்,எம்.எம்.ஏ. (தி.ன.இ). *ஜீனைட் யுகக் காவியம்.* **ஜ**அச்சில் வெளிவராதவைஸ.

கந்தசாமி,ந.சோ. (1989). *தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் (முதற்பாகம் - இரண்டாம் பகுதி).* தமிழ்ப்பல்கலைகழகம்.

சஞ்சீவி,செ. து. (2012). இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் காப்பிய மரபில் தமிழ்ஒளி. Retrieved from http://keetur.com.

சீனிச்சாமி,து. (1985). *தமிழில் காப்பியக் கொள்கை.* தமிழ் பல்கலைக்கழகம் - இலக்கியத்துறை.

நஸீரா,ஏ. (2014). நீலாவணன் காவியங்கள் : நவீன தமிழ்க் காவியங்களின் அடிப்படையில் ஒரு நோக்கு - ஆய்வு சுருக்கம். Retrieved from https://www.seu.ac.lk.

நுஃமான்,எம்.ஏ (பதிப்பாசிரியர்). (1978). *மல்லிகை திறனாய்வுக் கட்டுரைகள்.* அன்னம்..

நுஃமான்,எம்.ஏ (பதிப்பாசிரியர்). (2000). *மகாகவியின் ஆறு காவியங்கள்.* தேசிய கலை இலக்கிய பேரவை.

# Performance and Aesthetics

# பற்றிஸ் பவிஸின் ஆற்றுகைப் பகுப்பாய்வும் ஈழத்துத் தமிழ் அரங்கப் போக்கும் - ஓர் ஆய்வு

**கா. அற்புதன்**
atputhan1902@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

ஈழத்துச் சமகால தமிழ் அரங்கச் சூழலில் புதிய நுட்பமுறைகள், பயிற்சிகள், கோட்பாடுகள் உருப்பெறுகின்ற நிலையில் பற்றிஸ் பவிஸ் அவர்களால் முன்மொழியப்பட்ட ஆற்றுகைப் பகுப்பாய்வுக்கான வினாக்கொத்து, வினாக்களின் சமகாலச் சாத்தியப்பாடுகள் பற்றி ஆய்வு செய்வதாக இவ்வாய்வு அமைகின்றது. அரங்கவியலாளர்கள் ஆரோக்கியமான ஆற்றுகையைப் பெற அரங்கில் பல அம்சங்களை ஒன்றிணைக்கின்றனர். அந்தவகையில், பற்றிஸ் பவிஸ் அவர்கள் ஆற்றுகையில் காணப்படும் பல அம்சங்களை ஆராய்வதனூடாக வினாக்களை தொடுக்கின்றார். இவ் வினாக்கள் ஈழத்துச் சமகால தமிழ் அரங்கில் ஓர் ஆற்றுகையினைப் பகுப்பாய்வு செய்வதற்கு எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது இவ்வாய்வின் நோக்கமாக் கொள்ளப்படுகின்றது. இவ்வாய்வானது பற்றிஸ் பவிஸ் உடைய வினாக்கொத்தில் எவ்வாறான அம்சங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பதனை ஆராய்வதுடன் அவ்அம்சங்கள் சமகாலச் சூழலின் மதிப்பீடு பற்றியும் உற்றுநோக்குகின்றது. இவ்வாய்வில் பற்றிஸ் பவிஸ் உடைய வினாக்கொத்து முதலாம் நிலைத் தரவாகவும் அதனோடு தொடர்புடைய இணையம், வெளியீடு, புத்தகங்கள், பத்திரிகைகள் இரண்டாம் நிலைத்தரவாகவும் அமைகின்றன.

***திறவுச் சொற்கள்:*** *வினாக்கொத்து, ஆற்றுகைகள், நுட்பங்கள், சமகாலம், அம்சங்கள்*

## அறிமுகம்

சமகாலச் சூழலில் ஆற்றுகை என்ற சொல்லுக்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்கப்படுவதனை அரங்கில் உணரமுடிகின்றது. நாடகவியலாளர்கள் சமகாலச் சூழலில் சிறந்த ஆரோக்கியமான ஆற்றுகையினை பெற பலநுட்பங்கள், பயிற்சிகளை அரங்கச் செயற்பாடுகளில் பயன்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் பல அரங்க அம்சங்களையும் புதிய உத்திமுறைகளையும் பிரயோகிப்பதன் மூலம் புதிய சிந்தனைகளையும் புதிய அரங்கச் சூழலினையும் பார்வையாளர்களுக்கு வழங்குகின்றமையினை காணமுடிகின்றது.

பற்றிஸ் பவிஸ் அவர்களின் உத்திமுறையில் உருவான வினாக்கொத்து முறை என்பது ஆற்றுகையினை பகுப்பாய்வு (analyzing performance) செய்வதாக அமைகின்றது. இந்த வினாக்கொத்தில் பல அரங்க அம்சங்களைக் கொண்டு அவர் பிரயோகித்துள்ளமையினை அவருடைய ஆய்வுகளில் பெறமுடிகின்றது. காலத்திற்கேற்ப அரங்கச் சூழலிலும் அரங்க அம்சங்களிலும் மாறுபாடுகள் இடம்பெறுவதனைக் குறிப்பிடமுடிகின்னது. பற்றிஸ் பவிஸ்னுடைய ஆற்றுகைப் பகுப்பாய்வு ஓர் ஆற்றுகையினை அதன் தன்மையிலும் அதன் அம்சங்களில் நின்றும் அதன் ஆரோக்கியத்தினை நிறுவ முயல்கின்றது. ஆற்றுகைப் பகுப்பாய்வானது எனும் போது "உளவியல் மாற்றம் அல்லது உளவியல் பிரதிபலிப்பினை பொறுத்தே அமைவதோடு பகுப்பாய்வானது ஆற்றுகையினை மீளக்கட்டடமைக்கும், அக்கறை செலுத்தும் ஊடகமாகவும் விளங்குகின்றது" (Pavis, 2006).

ஒரு நாடக எழுத்துரு அல்லது ஆற்றுகை உருப்பெறும் போது பலவிடயங்களை அரங்கவியலாளர்கள் கருத்தில் கொள்வர். ஓர் ஆற்றுகை இடம்பெறும்போது அதனுடைய ஆற்றுகை அம்சங்கள், அழகியல் போன்ற விடயங்களை கருத்தில் கொள்வது ஒரு சிறந்த படைப்பினை உருவாக்க வழிவகுக்கும் எனலாம். அரங்க ஆற்றுகையானது கூட்டுக்கலைகளின் சங்கமாகும். பற்றிஸ் பவிஸ் கையாண்ட அணுகுமுறையானது ஒரு நாடகப் பகுப்பாய்வாளனை சுதந்திரமாகவும் நேர்த்தியாகவும் பகுப்பாய்வு செய்வதற்கு வழிவகுக்கின்றது.

ஓர் ஆற்றுகையினை பகுப்பாய்வு செய்யும் போது அந்த ஊடகத்தின் தன்மை, சூழல், முறை போன்ற பலவற்றில் நின்று ஆய்வு செய்வதும் விமர்சிப்பதும் ஆரோக்கியத் தன்மையினை கொடுக்கும் எனலாம். இங்கு பற்றிஸ் பவிஸ் உடைய வினாக்கொத்தின் மூலமாக ஓர் ஆற்றுகையின் மதிப்பீடு செய்ய அவர் கையாண்டுள்ள அணுகுமுறையானது சமகால அரங்க ஆற்றுகைககளோடு தொடர்பை, செல்வாக்கை ஏற்படுத்துகின்றதா? அல்லது சாத்தியப்பாடு உடையதா? என்பது ஆய்வில் வினவாக கொள்ளமுடியும் ஆற்றுகை மதிப்பீடு காலத்திற்கேற்ப மாறுபடக்கூடியது. ஏனெனில் தொழில் நுட்ப, விஞ்ஞான, அறிவியல் வளர்ச்சி கலைகளிலும் செல்வாக்கு செலுத்துவதனைக் குறிப்பிடலாம்.

இவ்வாய்வானது ஆற்றுகைக் கோட்பாட்டினை பிரயோகிப்பதோடு ஆற்றுகை நுட்பங்களையும் நுணுக்கங்களையும் பகுப்பாய்வு செய்வதாகும் (Schechner, 2003). ஆற்றுகை எனும் சொல்லானது பரந்துபட்டது என்கின்றார். மனித செயற்பாடுகள்: அன்றாட வாழ்க்கை, விளையாட்டு, நிகழ்வுகள், சடங்குகள் போன்றவற்றை உதாரணமாக்குகின்றார். ஆற்றுகையானது தெரிந்து செய்கின்ற செயற்பாடுகள், இடம், பார்வையாளர்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது என்கிறார். இருந்தாலும் ஆற்றுகை வடிவமானது அரங்கச் செயல்களில் இருந்து மாறுபடுவதாக குறிப்பிடுகின்றார். நாடகம் நடிகனால் மேடையில் நிகழ்த்தப்படுகின்றது (ப.13).

Schechner ஆற்றுகை அம்சங்களாக ஆற்றுகையாளன் காட்சி (scenery), உடை (costume) ஒளி அமைப்பு, சத்தம் (sound), இசை மேடைப் பொருட்கள் போன்ற இன்னும் பலவற்றை குறிப்பிடுகின்றார். இவ்வாய்வானது மேற்குறிப்பிட்ட அம்சங்கள் ஊடாக ஆற்றுகை வடிவத்தினை கவியூடாகப் பெறுவதாகும். Elirozik என்பவரின் கருத்துப்படி ஆற்றுகையாளனுடைய உடலானது Non-verbal acts, symbolic non verbal acts, hand gestures, உருவக ரீதியான பாத்திரம் ஊடாக ஆற்றுகையினை நகர்த்தி செல்லமுடியும் என்கிறார்.

ஆற்றுகையானது சைகைகள் அசைவுகளின் வெளிப்பாட்டு வடிவமாகும். Weistein (2010) இது உடல் சொல் (physical text, p.7) என அழைக்கப்படுகின்றது. அது மாத்திரமின்றி குரல், ஓசை, வாய்மொழி இல்லாத குறிப்புக்கள் ஆகியன ஆற்றுகையினை வெளிப்படுத்துவதில் பங்குவகிக்கின்றன. இவை அனைத்தும் பார்வையாளர்களுக்கு ஆற்றுகை பற்றிய விபரிப்பைக் கொடுக்க உதவி புரிகின்றன. Klich and Scheer (2012) முக்கிய ஆற்றுகைப் பண்புகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றார். ஆற்றுகை உடலினை (performance

body) கையாளுதல். இடத்தினைக் (space) கையாளுதல் ஆற்றுகையாளனுக்கும் பார்வையாளனுக்குமான உறவு நிலையினை விஸ்தரித்தல்.

**பற்றிஸ் பவிஸ்**

பற்றிஸ் பவிஸ் (Patrice Pavis, 1947) உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற ஓர் அரங்கவியலாளர் இவர் கென் (Kent) பல்கலைக்கழகத்தின் பேராசியராக நாடகத்துறையில் பணி புரிந்தார். இவர் அரங்கில் பலவிடயங்களை உற்று நோக்கியவராக, ஆய்வு செய்வபராக காணப்படுகின்ற அதேவேளை ஆற்றுகை (Performance), குறியியல் (Semiology), கலாசாரங்களுக்கிடையிலான அரங்கு (Interculturalism) போன்றவற்றில் அதிக கவனம் செலுத்தினார். இவர் எழுத்தாளராகவும் பதிப்பாசிரியராகவும் இருந்து பல நூல்களை வெளியிட்டார். உதாரணமாக - Dictionary of contemporary theatre and performance, Analyzing performance, Intercultural performance, Performance korea போன்ற நூல்கள் குறிப்படத்தக்கன. இதில் Analyzing performance எனும் கருப்பொருளில் theatre analyzing ஆய்வில் ஓர் ஆற்றுகையினை பகுப்பாய்வு செய்வதற்கான அணுகுமுறையை கையாண்டார். இதில் வினாக் கொத்து, வினாக்கள் முறையானது மிகவும் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது.

**ஆய்வுப் பிரச்சினை**:

பவிஸ்னுடைய ஆற்றுகை பகுப்பாய்வு முறையானது சமகால ஆற்றுகைகளைப் பகுப்பாய்வு செய்ய சாத்தியப்படவில்லை.

**ஆய்வு நோக்கம்**:

ஆற்றுகை பகுப்பாய்வு சார்ந்து பல்வேறு விதமான ஆய்வுகளை மேற்கொள்ள தூண்டுதல்.

**பற்றிஸ் பவிஸ்சின் ஆற்றுகைப் பகுப்பாய்வு முறையும் அதனுடைய சமகால செல்வாக்கும்**

ஆற்றுகையினைப் பகுப்பாய்வு செய்வதற்காக பவிஸ் அவர்களுடைய Theatre analyzing எனும் கோட்பாட்டின் ஊடாக வினாக்களையும் வினாக்கொத்தினையும் முன்வைக்கின்றார். இவர் முன்வைக்கும் இந்த வினாக்களானது ஓர் அணுகுமுறையாகப் பயன்படுத்தப்பட்டது. 1983-1984ஆம் ஆண்டளவில் இவருடைய அணுகுமுறை அரங்கச் சூழலில் பரீசாத்திட்டதாகக் கூறப்படுகின்றது (Susan Bassnett 2019, ப 208). இவ்வினாக் கொத்து முறையானது ஒரு கோட்பாடாக அல்லாமல் ஓர் ஆற்றுகையினைப் பகுப்பாய்வு செய்வதற்கான கருவியாகப் பயன்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. ஓர் ஒழுங்குமுறை அடிப்படையில் வினாக்களை அமைத்து அந்த வினாக்களுக்கிடையான தொடர்பினையும் மேம்படுத்திப் பதிலளிக்கும் வகையில் அமையப்பெற்றுள்ளது. பகுப்பாய்வாளர்கள் அவர்களின் அறிவிற்கும் திறமைக்கும் ஏற்ப மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு பவிஸ் அவர்கள் இதனை வடிவமைத்துள்ளமை இவரின் தனித்தன்மையினை எடுத்துக் காட்டுகின்றது.

ஆற்றுகையானது பார்வையாளர்களை மையமாகக் கொண்டே நிகழ்த்தப்படுகின்றது. பார்வையாளர்கள் அவர்களுடைய அனுபவத்தினை வழங்குவது மாத்திரமன்றி ஏதோ ஒன்றினைப் பெறுவது அல்லது கொடுப்பது என்ற அடிப்படையில் பார்வையாளர்களை ஆற்றுகைக்குள் முழுமைப்படுத்துவதாக அமைகின்றது. பவிஸ் அவர்களுடைய பகுப்பாய்வு முறையானது அதன் அம்சங்களில் நின்று நோக்குகின்றபோது ஓர் ஆற்றுகை பற்றிய பொதுவான கலந்துரையாடலுடன் தொடங்குவதாக அமைகின்றது. இவருடைய வினாக்கொத்து முறையினை நோக்குகின்ற போது, ஆற்றுகை பற்றி பொதுவாக கலந்துரையாடல், எவ்வாறான ஆற்றுகை அம்சங்கள், அரங்க அமைப்பின் உறவு நிலை, ஒத்திசைவு, தொடர்புத் தன்மை, அழகியல் அம்சங்கள், பார்வையாளரின் தொந்தரவு செய்யும் தன்மைகள் அதாவது வலுவான, வலுவற்ற, சலிப்புத் தன்மைகள் போன்ற விடயங்கள் முதற் தொகுதி வினாக்களாக அமைகின்றது. இந்த வினாக்களை நோக்குகின்றபோது சமகாலச் சூழலில் ஆற்றுகை செய்யப்படுகின்ற ஆற்றுகைகளில் மிகவும் முக்கியமான அம்சங்களாகவே கொள்ளப்படுகின்றது. அந்தவகையில் பார்வயைாளர்களை அடிப்படையாக வைத்து ஆற்றப்படுகின்ற சமகால ஆற்றுகைகள் அழகியல் அம்சங்களில் கூடிய கவனம் செலுத்துவதனை அவதானிக்கமுடிகின்றது. அதேபோன்று அரங்கு ஆற்றுகை பார்வயைாளர்கள் உறவுநிலை என்பதும் சமகாலத்தில் உற்று நோக்கப்படுகின்றது.

அரிஸ்ரோட்டில் தனித்தனிப் பொருட்களின் பண்புகளுக்கு ஏற்ப அவற்றை முறைப்படுத்தும் போது அழகு உண்டாகின்றது என்கின்றார். இவர் Plot என்ற விடயமூடாக இதனை நிறுவுகின்றார். சம்பவங்களை, விடயங்களை ஒழுங்குபடுத்துதலில் இதனை விளங்கிக் கொள்ளமுடியும். அகச்சீர்மையும் சமூகச் செயற்பாடும் சமூக மதிப்பும் ஒன்றுசேரும்போது அழகுடையதாகின்றது என MVkarousky (1979) கூறுகின்றார். அதேபோன்று முறையே ஒத்திசைவு, துல்லியம் போன்ற விடயங்கள் ஊடாக G.LVKACH அழகியலை நிறுவுகின்றார். மேற்கூறப்பட்ட விடயங்களுடாக நோக்கும் போது சமகாலச் சூழலில் பவிஸ்னுடைய பகுப்பாய்வு முறை செல்வாக்கு செலுத்துவதாகவே அமைகின்றது.

அதேபோன்று பவிஸ் அவர்கள் காட்சி அமைப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார். இதில் இடத்தினுடைய தன்மை, பார்வையாளர்களின் இடத்திற்கும் நடிக்கின்ற இடத்திற்குமான உறவு, அதேபோன்று வர்ணங்கள் அவற்றின் கருத்து வெளிப்பாடு, ஆற்றுகை இடத்தினை ஒழுங்கமைப்பதில் தங்கியுள்ள அடிப்படை அம்சங்கள், முன்மேடை, பின்மேடை என்பவற்றின் உறவு போன்ற அம்சங்சகளை வைத்து வினாக்களைத் தொடுக்கும் பவிஸ் ஆற்றுகை மட்டுமன்றி ஆற்றுகைக்கான சூழலுக்கு முக்கியத்துவம் கொடுப்பதனை காணமுடிகின்றது. சமகாலச் சூழலின் ஆற்றுகையின் தன்மைக்கு ஏற்ப அரங்க அமைப்புகளும் மாறுபட்டுச் செல்வதனைக் காணமுடிகின்றது. Pamela Howard அவா்கள் Scenography எனும் விடயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதனைப் போன்று சமகாலத்திலும் பேசு பொருளாகவேயுள்ளது. அந்தவகையில் பவிஸ் அவர்கள் கூறுகின்ற வினாவுகின்ற விடயங்கள் சமகால அரங்கவியலாளர்களால் சாத்தியப்பாடு உடையதாக இருக்கின்றமையினை காணமுடிகின்றது.

அதேபோன்று ஒலியமைப்பு மேடைப்பொருட்கள் ஆற்றுகையாளனுக்கும் மேடைப் பொருட்களுக்குமான உறவு உடையமைப்பு போன்றவற்றிலும் வினாக்களை தொடுக்கின்றார்.

இன்றைய சமகால ஆற்றுகைகளைப் பொறுத்தமட்டில் ஆடை அணிகலன்களுக்கும் மேடைப் பொருட்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுப்பதனை காணமுடிகின்றது. பார்வையாளர்கள் அனுபவத்தினை பெறவேண்டும் என்ற அடிப்படையில் அந்த அனுபவமானது கதையில் மாத்திரம் நின்று விடாமல் காட்சியின் ஊடாகவும் வெளிப்படுத்த முயல்கின்றனர். ஒளியின் ஊடாக மேடைப் பொருட்கள் ஊடாக உடையமைப்பு ஊடாக பாத்திரங்களையும் சூழலையும் மேம்படுத்திக் காட்டுவதற்காக சமகாலத்தில் இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

அதேபோன்று நடிகரின் ஆற்றுகையில் கவனம் செலுத்திய பவிஸ் அவர்கள் அதில் பின்வரும் வினாக்களை வினாவுகின்றார். தனிப்பட்ட நடிப்பு வழக்கமான நடிப்பு, நடிகருக்கும் அதில் வரும் குழுக்களுக்கும் இடையிலான உறவு உடைகள் உடல் மொழி நடிகர் பாத்திரம் போன்றவற்றின் உறவு அசைவு சைகை என்பவற்றின் மதிப்பீடு, குரல் மதிப்பீடு உரையாடல் அல்லது தொடர்பாடலின் விருத்தி போன்றவற்றில் கேள்வியைத் தொடுக்கும் பவிஸ் அவர்கள் நடிகருடைய பழக்கவழக்கங்கள் அவருடைய தொடர்பு அதேபோன்று உடல் மொழி தொடர்பாடல் என்பவற்றை முக்கியத்துப்படுத்துகின்றார்.

பவிஸ் அவர்கள் இசை, சத்தம் போன்றவற்றின் விளைவு பற்றி பகுப்பாய்வு செய்கின்றார். அது மாத்திரமன்றி ஆற்றுகையின் நகர்வு மிக முக்கியமான ஒன்றாகக் கருதுகின்றார். சமகாலச் சூழலில் ஆற்றுகை நகர்வு என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. பார்வையாளர்கள் ஒரே விடயத்தைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருப்பதை புறக்கணிப்பவர்களாகவே காணப்படுகின்றார்கள். அதுமாத்திரமன்றி நாடகக் கதையில் கவனம் செலுத்தும் பவிஸ் அவர்கள் கதைகூறும் விடயம் அந்தக் கதை எந்த வகையான நாடக அம்சங்களை கொண்டுள்ளது. தெளிவு, தெளிவற்ற தன்மைகள் சம்பவங்களின் ஒழுங்கமைப்பு நடிகர், அரங்கத் தொடர்பு நாடக வடிவம் போன்றவற்றில் வினாக்களை எழுப்பும் அதேவேளை இவ்வினாக்களின் ஊடாக ஓர் அரங்க ஆற்றுகையினை பகுப்பாய்வு செய்ய முனைகின்றார். சம்பவங்களின் ஒழுங்கமைப்பு என்பது சமகால அரங்கில் மிகவும் முக்கியமான ஒன்றாகவே கொள்ளப்படுகின்றது. அதே போன்று எழுத்துப் பிரதியில் கவனம் செலுத்தும் வகையில் அந்த எழுத்துப் பிரதி எங்கிருந்து எடுக்கப்பட்டது. ஆற்றுகையில் பிரதிகளினது தாக்கம். எழுத்துப்பரிதியினை ஒப்புவிக்கும் தன்மை போன்ற அம்சங்களில் கவனம் செலுத்துகின்றார். இன்றைய சமகால நாடகச் சூழலில் ஒரு நாடகத்தினை ஒப்புவிக்கும் தன்மையானது முக்கியமானதாக காணப்படுகின்றது. ஒப்புவிக்கும் தன்மைக்கு ஏற்பவே நாடகத்தினுடைய ஆரோக்கியத்தன்மையினை விளங்கிக் கொள்ளமுடியும்.

பார்வையாளர் பற்றி சிந்திக்கும் பவிஸ் எங்கு ஆற்றுகை செய்யப்படுகின்றது. யாருக்கு செய்யப்படுகின்றது. ஆற்றுகையின் எதிர்பார்ப்பு ஆற்றுகையின் பார்வையாளர்களின் எதிர்பார்ப்பு பார்வையாளர்களின் எதிர்வினை பார்வையாளரின் பங்குபோன்ற விடயங்கள் பற்றியும் பகுப்பாய்வு செய்கின்றார். இப்பகுப்பாய்வானது சமகால அரங்க ஆற்றுகைகளுக்கும் பொருத்தப்பாடு உடையதாக அமைகின்றது.

**முடிவுரை**

சமகால அரங்கச் சூழலில் பற்றிஸ் பவிஸ் உடைய பகுப்பாய்வு கருவியாக மேற்கூறப்பட்ட வினாக்கள் சமகாலத்தில் செல்வாக்கு செலுத்துகின்றன. ஆற்றுகை பற்றிய உரையாடல்கள், காட்சி அமைப்பு, ஒளியமைப்பு, மேடைப் பொருட்கள், உடையமைப்பு, நடிகரின் ஆற்றுகைத் தன்மை, இசை சப்பதங்களின் தன்மை, அசைவுகள், கதையோட்டத்தின் விவரிப்பு போன்ற அம்சங்கள் அடிப்படையில் நாடக ஆற்றுகைக்கு முக்கியமான அம்சங்களாகவே காணப்படுகின்றன. இந்த அம்சங்களில் வினாக்களை தொடுக்கின்றபோது ஓர் ஆரோக்கியமான ஆற்றுகை மதிப்பீட்டினை பெறுவதற்கான சாத்தியப்பபாடுகள் காணப்படுகின்றது.

## உசாத்துணை


Baskar, I.A. (2022, June 21).From a position of perspective: an interview with Patrice Pavis. *The Threatre Times*. Retrieved November 15, 2023, from https://thetheatretimes.com/from-a-position-of-perspectives-an-interview-with-patrice-pavis/

Pamela, H. (2002). *What is Scenography?* Routledge.

Pavis, P. (2018). On the analysis of texts or performances in playwriting workshop: a brief reflection on a long odyssey. *Brazillian Journal on Presence Studies*.

Pavis, P. (2016). *Dictionary of performance and contemporary theatre*. Taylor & Francis Group.

Pavis, P. (2006). *Analyzing performance (Theatre, Dance, Film )*. University of Michigan Press.

Schechner, R. (2003). *Performance Theory (3rd ed.)*. Routledge

Theatre Analysis: Some Questions and a Questionnaire. Retrieved from http://www.cambridge.org

# வெண்கல உலோக வார்ப்புக் கைவினையாக்கத் தொழில் முனைவும் அதன் சவால்களும்: மட்டக்களப்பு மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**இளையதம்பி குகநாதன்**
Kuganathan67@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

ஆதி மனிதர்களின் அறிவுப் புலத்தின் வளர்ச்சிப் போக்கில் காலத்திற்குக் காலம் பல்வேறு அறிவுச் சாதனங்கள் உருவாக்கியுள்ளன. அவை மனித குலம் நீடித்து வாழ்வதற்குப் பயன்பட்டு இருக்கின்றன. இங்கு அறிவினை விருத்தி செய்யும் அடிப்படையின் ஆரம்பம் இயற்கையாகும். இயற்கை மனிதர் வாழ்வதற்கு அடிப்படையானதாய் அமைவதோடு நாகரிகத்தின் கால கட்ட வளர்ச்சிக்கும் மூலவேராய் அமைகின்றது. இங்கு இயற்கையின் உள்ளீடுகளைப் பயன்படுத்தி சூழலிற்குப் பாதிப்பு ஏற்படாவண்ணம் உருவாக்கப்படுவது வெண்கல வார்ப்புத் தொழில் முனைவாகும். நாட்டுப்புற சமூகத்தின் கைவினை கலைகள் மிகவும் சமூகவயப்பட்டதாகும்; பண்பாட்டு வாழ்வின் அங்கங்களாகும். அன்றாட வாழ்வோடு மிகவும் ஒன்றிக் காணப்படுவதாகும். இந்தக் கலைகளின் சமூகவயத் தன்மை என்பது ஒரு சமூகத்திற்குத் தேவையான கலைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதற்கும் அதன்மூலம் அம்மக்கள் தேவைகள் நிறைவு செய்வதற்கும் உள்ள உறவாகும். அதனுடன் கைவினைப் பொருட்கள் வாயிலாக அச்சமூகம் வெளிப்படுத்தும் கருத்துக்கள், விழுமியங்கள், நெறிமுறைகள், பிற கற்பிதங்கள்யாவும் கலையின் சமூகவயப்பட்ட தன்மையை உணர்த்துவனவாகும். உள்ளூர் அறிவியலில் உருவாக்கப்படும் வெண்கல வார்ப்பு வரலாறு, அதன் உருவாக்கமுறை, உருவாக்கும் சமூகம், மட்டக்களப்பில் இதனை முன்னெடுப்போர், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் எனப் பலவற்றை ஆய்வியல் நோக்கில் ஆராய்கிறது. வெண்கல உலோகக் கைவினையாக்கத் தொழில் முனைவின் உற்பத்திப் பொருட்கள் உருவாக்குவதில் தொடர் பரவாலாக்கத்தின் தொடர்சியின்மையை ஆய்வின் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. வெண்கல வார்ப்பு எனும்போது பயன்பாட்டுப் பொருட்கள், சடங்குப் பொருட்கள், கலைப் பொருட்கள் என்பன உள்ளடங்கும். தமிழ்ச் சமூக பண்பாட்டு வரலாற்றில் அம்மக்கள் செய்யும் தொழில்களின் அடிப்படையில் பல்வேறு சாதிகள் கட்டமைக்கப்பட்டு அவை பரம்பரையாக கடத்தப்பட்டு வந்திருக்கின்றது. இவை தொழில்களின் அடிப்படையில் உயர்ந்த, தாழ்ந்த என்ற எண்ணப்பாடுகளைக் கட்டமைத்து சிந்தனைரீதியாக பரிமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன. இங்கு வார்ப்புக் கலைத் தொழிலைச் செய்கின்றவர்களாக கம்மாளர் எனும் சாதி அமைப்பினர் காணப்படுகின்றனர். தச்சர், சிற்பி, குயவர், தட்டார், கொல்லர் என ஐவகைத் தொழில்களைச் செய்கின்றவர்கள் கம்மாளர்கள் என கூறப்படுகின்றனர். ஆரம்பத்தில் மேற்கூறிய சமூகத்திற்குரியதாய் இத்தொழில் முனைவு மட்டக்களப்பில் காணப்பட்டாலும் பின்னர் வார்ப்புத் தொழில் முனைவில் விருப்புள்ளவர்களும் முன்னெடுக்கும் தொழிலாக மாறுகின்றது. எனவே, இத்தொழில் முனைவு குறித்த ஒரு சமூகத்தில் இருந்து விடுபடுவதற்கும் அல்லது இக்கலைஞர்கள் விடுபட்டு வெற்றிகராமாக செல்வதற்கான காரணங்களை அறிந்து, அவற்றை இன்றைய சூழலில் முன்னெடுப்பதற்கான சாத்தியப்பாட்டை நோக்கமாகக் கொண்டு சமகால இலங்கைச் சூழலில் கல்வி முறை மற்றும் ஏனைய தளங்களில் மேற்கொள்ள வேண்டியவற்றை இவ்வாய்வு நிருபிக்கின்றது.

***திறவுச் சொற்கள்:*** *உள்ளூர் அறிவு, தொழில் முனைவு, கம்மாளர், காலனியம்*

## அறிமுகம்

உள்ளூர் அறிவு என்பது உலக அறிவின் சொத்து. “குறித்த பாணியில் அறிந்து, நடைமுறைப்படுத்தி தலைமுறை தலை முறைகளாக ஒரு சமூகத்துள் கடத்தப்பட்டு வரும் அறிவு” என்று வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. அவ்வறிவு அச்சமூகத்தின் கலாசார ஆன்மீக அடையாளமாகவும் இருக்கும். பாரம்பரிய அறிவு பற்றி இன்னுமொரு வரைவிலக்கண கருத்தியல் உள்ளது. “உலக மடங்கிலும் உள்ள தேசிய மற்றும் உள்ளூர் சமூகங்கள் கொண்டிருக்கும் உயிர் பல்வகைமை பற்றிய அறிவாகும் இந்த அறிவை பல

நூற்றாண்டுகளாக தனது சூழலுடன் வாழ்வதன் மூலமாக அச்சமூகம் ஈட்டிக் கொள்கின்றது. அவ்வறிவு வாய் மொழிமூலமாக கடத்தப்பட்டும், திருத்தப்பட்டும் வருவதாகும்'' (கமினா, 2018:5).

மேற்குலக அறிவியல் உள்ளூர் அறிவை நாகரீக மற்றது, மூட நம்பிக்கையானது, பாதகமானது என்ற கருத்து நிலைகளை உருவாக்கி அவற்றை திட்டமிட்டு இல்லாது செய்து கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டு மருத்துவிச்சி இவர்களின் அறிவும் அனுபவமும் இத்தொழிலை செய்வதற்கு தங்களுக்குள் ஏற்பட்ட தைரியமும், துணிவும் குறிப்பிடத்தக்கவை

வார்ப்புக் கலையாக்க தொழில் முனைவில் வெண்கல உலோக வார்ப்பு உருவாக்கம் பற்றிய ஆவணப்படுத்தப்பட்ட ஆவணங்கள் எதுவும் இல்லை இவை முன்னெடுத்துக் கொண்டிருக்கும் கலைஞர்களால் தொழிவாரியாக பயிலப்பட்டுகையளிக்கப்பட்டு வருகின்றன. ''உள்ளூர் அறிவியலில் உருவாக்கப்படும் கைவினை கலைகள் அது வாழும் சூழலில் சமூக மக்களின் தேவையறிந்து அவர்களுக்கு தேவைகளை நிறைவு செய்கின்றன'' (பாரதி, 2015: 310).

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாக வெண்கல வார்ப்புத் தொழில் முனைவினை முன்னெடுக்கும் கலைஞர்கள் அதிகம் காணப்பட்ட போதிலும் தற்கால சூழலில் இவை வீழ்ச்சியடைந்து ஓர் இருவர் எனும் நிலைக்கு மாறியுள்ள நிலையில் அதனைப் பற்றி அறிதலும் ஆய்வுச் செயற்பாட்டின் ஊடாக தொடர் செயற்பாடுகளுக்கு வசதி செய்தலும் முக்கியமாகின்றன.

**ஆய்வின் கருதுகோள்**

வெண்கல கைவினையாக்க தொழில்முனைவு சமூக பரவலாக்கத்தின் தொடர்ச்சியின்மைக்கு அவை எதிர்கொண்ட சவால்கள் முக்கியமாகின்றன என்பதனை ஆய்வின் கருதுகோளாக கொண்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

வார்ப்புக் கலை தொடர்பான அறிவும் வெண்கல பொருட்களின் புளங்கு பாவனை நிலையும் சமூக பரவலாக்கத்தில் தொடர்ச்சியின்மை

**தரவுகளும், தரவு சேகரிப்பு முறைகளும்**

முதலாம் நிலைத் தரவு
இரண்டாம் நிலைத் தரவு

***முதலாம் நிலைத் தரவு***

மட்டக்களப்பு மாவட்டத்தில் வார்ப்புக்கலை முன்னெடுக்கும் கலைஞர்கள் அவர்கள் ஆக்குகின்ற செயல்முறைகள் முதன்மை நிலைத் தரவாக காணப்படுவதனால் கீழ்வரும் அடிப்படையில் தரவுகளும், தரவு சேகரிப்பு முறைகளும் இவ்வாய்வு கொண்டுள்ளது.

- நேரடியாக அவதானித்தல்

- நேர் காணல்
- கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்
- கள ஆய்வு

***இரண்டாம் நிலைத்தரவு***

- வார்ப்பு கலை பற்றி கூறுகின்ற நூல்கள்
- உலோக வார்ப்புபற்றி வெளிவந்துள்ள ஆய்வு நூல்கள்
- சஞ்சிகைகள், பத்திரிகை கட்டுரைகள்
- கூத்துப் பிரதிகள்

**இலக்கிய மீளாய்வு**

கே, எச் இலியனாச்சியின் உலோக வேலை என்ற நூலில் உலோக வேலைப்பாடுகள் செய்யப்பட்ட முறையினை கூறியிருக்கின்றார். இவற்றில் வெண்கல உருவாக்கம் சார்ந்து பேசப்படவில்லை

டாக்டர் எம் சாலமன் பெர்னாட்சா பேராசிரியர் பி.முத்துக்குமார் போன்றோரின் இந்தியக்கலை வரலாறு என்ற நூல் திருவுருவங்கள் சார்ந்து பேசுகின்றன அவை உற்பத்தி முறை பற்றி நுணுக்கமாக பேசவில்லை செப்புத்திருமேனிகள் செய்த முறையினை கூறுகின்றனர்.

பக்தவத்சலபாரதியின் தமிழர் பண்பாட்டு மானிடவியலும் உலோக வார்ப்பு பற்றியோ வெண்கல பொருட்களின் உருவாக்கம் பற்றியோ நுண்ணியமாக கூறியதில்லை இந்நூலில் உலோக வார்ப்பு கலையினை முன்னெடுக்கும் கம்மாளர் சாதி பற்றி கூறப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

ஒரு சமூகத்தின் வார்ப்பு தொழில்முனைவினையும் அதன் சவால்களையும் ஆய்வு செய்வதற்காக வரலாற்றியல் ஆய்வுமுறை பயன்படுத்த பட்டதுடன் மட்டக்களப்பு கம்மாளர் எனும் சமூகத்தையும் வார்ப்பு தொழில் முனைவினையும் முன்னெடுக்கும் கலைஞர்களையும் ஆய்வு எல்லையாக கொண்டதனால் சமூகவியல் ஆய்வுநுட்பம் மூலம் பண்புசார் ஆய்வு முறைமை பயன்படுத்தப் பட்டுள்ளது.

**வெண்கல உலோக வரலாறு**

தமிழர் பண்பாட்டில் உலோக வார்ப்புக்கலை முக்கியமானது. உலோகம் எனும்போது இரும்பு, செம்பு, பித்தளை, வெள்ளி, பொன், தங்கம், வெண்கலம் என பல அடங்குகின்றன. இவை ஒவ்வொன்றின் தாக்கங்களும் வெவ்வேறு. வெண்கல உலோகம் ஏனையவையினைவிட கவனிப்புக்குரியவை இதற்கான நீண்ட வரலாற்று நீட்சியும் காணப்படுகிறது.

‘‘உலகமெங்கிலும் மனிதர் கடந்து வந்த காலகட்டங்களில் ஏறத்தாழ குகைகளில்தான் வசித்தனர். இக்காலங்களில் கல்லாலான ஆயுதங்களை பயன்படுத்தி வேட்டையின் மூலம்

தாம் உணவைத் தேடிக் கொண்டனர் சிக்கி முக்கி கற்களை பயன்படுத்தி நெருப்பை உண்டாக்க கற்றபின் தான் மாமிசத்தை வாட்டி சுவையேற்றும் வித்தை கைகூடிற்று'' (பெர்னாட்ஷா. முத்துகமரன், 2011:6).

எனவே இந்த கல்லாலான கருவிகள்தான் மனித நாகரிகத்தின் முதல் கலைப் பொருட்கள் என்று கூற வேண்டும்.

மிகப் பழைய காலத்திலிருந்தே உலோக வேலை நடைபெற்று வருகிறதென்று சரித்திரம் சாட்சி தந்து புதை பொருள் காட்சி தந்தும் நிரூபிக்கின்றன.

ஆதிகால மனிதர்கள் காடுகளிலலைந்து திரிந்த பொழுது எதிர்ப்பட்ட கொடிய விலங்குகளிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஒரு கல்லாலதனை அடித்து தாக்கியிருக்க கூடும் பின்னர் உணவுக்காக மிருகங்களை கொல்லுவதற்கு கற்களையே ஆயுதங்களாக வழங்கத் தொடங்கி விட்டனர். கொல்லப்பட்ட மிருகங்களைக் கொத்துவதற்கும், வெட்டுவதற்கும் கற்களே உதவி செய்தன இவ்வாறு மனிதர் விலங்குகளைக் கொன்று தின்று கற்குகைகளிலே வாழ்ந்த ஆதிகாலமே ''பழைய கற்காலம்'' எனப்படும்.

பழைய கற்காலத்தின் பின்தோன்றிய புதிய கற்காலமான இற்றைக்கு பத்தாயிரம் ஆண்டுகளுக்கும் இருபதாயிரம் ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் மனிதர் நாடோடிகளாகப் பல பாகங்களிலும் பரவத்தொடங்கினர். அக் காலத்தில் அவர்கள் கூர்மையும், நீளமுமான ஒரு துண்டுக் கல்லை ஒரு மரத்துண்டுடன் இணைத்துக் கட்டி புதிய ஆயுதமாக பயன்படுத்த தொடங்கினர். இப்படியான ஆயுதங்கள் உலகின் பல பாகங்களிலும் கண்டெடுக்கப்பட்டுருக்கின்றன.

காலப்போக்கில் கல் ஆயுதங்களும் வளர்ச்சியடையலாயின சுலபமாக மிருகங்களைக் கொல்லவும் மரங்களை வெட்டவும் தக்க ஆயுதங்கள் மாற்றமடைந்தன இவ்வாயுத வளர்ச்சியினால் மனிதர் வன விலங்குகளுக்கு பயமின்றி அமைதியான வாழ்கையை நடாத்த தொடங்கினர். ''காலம் செல்ல செல்ல பழைய வாழ்விலும் மாற்றங்கள் சில நிகழத் தொடங்கின இதுகாறும் இருப்பிடமாக அமைந்த கற்குகைகளை கைவிட்டு கம்பு, இலை, குழை களிமண் என்பவற்றால் சிறு வீடுகளை அமைப்பதில் ஈடுபட்டனர் இதன் போது கல், எலும்பு, கொம்பு, தந்தம் என்பவற்றை செய்து கொள்ள திறமையை பெற்றிருந்தனர்''.

கற்காலம் மறைய மனிதர் வாழ்வில் முக்கியமான பொற்காலம் எழுகிறது ''மனிதர்கள் செப்பு, தகரம் என்பவற்றை நிலத்துக்கு மேல் இயற்கையாகக் கிடைக்கும் அவற்றின் தாதுப் பொருட்களில் இருந்து பெற்றுக்கொண்டனர். செம்பினால் ஆயுதம் ஆக்கப்பட்டு எங்கும் பயன்படுத்தப்பட்டன அன்றைய மனிதர்களினால் செய்யப்பட்ட செம்பாயுதங்களின் அமைப்பினையே இன்றைய நவீன காலத்து ஆயுதங்கள் கொண்டிருக்கின்றன. ''இப்பொழுது ஏழாயிரம் வயதென மதிப்பிடத்தக்க மிகப்பழைய செப்புக் கம்பியொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இக்கம்பி ஆதிகால நாகரீகத்தின் முதன்மை பெற்று விளங்கிய எகிப்த்து தேசத்தின் கூர்நுதப் கோபுரத்திலிருந்து கிடைத்ததாகும்'' (இலியனாராச்சி, 1964:02).

செம்பினால் ஆயுதங்களைச் செய்வதற்கு அக்காலத்து மக்கள் அதிசிரத்தை எடுத்துள்ளனர். ஆனால் செம்பு மென்மை வாய்ந்திருந்தமையினால் வலிமையுள்ள ஆயுதங்களாக்க முடியாதிருந்தது. எனவே செம்புடன் தகரத்தையும் கலந்து வெண்கலமெனும் வன்மையான உருவாக்கத்தை உண்டாக்கலாமெனக் கண்டு பிடித்தனர் இதனால் வாழ்க்கை முன்னிலும் நாகரிகமடையத் தொடங்கிற்று.

''கல், எலும்பு, மரம், செம்பு முதலிய பொருட்களால் வேலைகளைச் செய்து பயிற்சி பெற்றிருந்த மக்களுக்கு வெண்கலம் மிகவும் நன்மை செய்தது வெண்கலத்தின் சேவை நாட்டை நகரமாக்கி நாகரீகத்தை வளரச்செய்தது''. இக்காலம் வெண்கலக் காலமாக வளர்ச்சி பெற்றன.

வெண்கல காலம் வரலாற்றுக்கு முந்திய சமூகங்களுக்கான முக்காலமுறையில் இரண்டாவது காலகட்டமாகும். இம்முக்காலங்களில் முதலாவது கற்காலமும் மூன்றாவது இரும்புக்காலமும் ஆகும். இந்த முறையின் கீழ் சில பகுதிகளில் வெண்கல காலம் புதிய கற்காலத்தையடுத்து வருகிறது. ''ஆபிரிக்காவின் சில பகுதிகளிலும் தென்இந்தியாவிலும் வேறு சில பகுதிகளிலும் வெண்கல காலம் இல்லாமலேயே புதிய கற்காலத்தை அடுத்து இரும்புக்காலம் உள்ளது''.

சிந்துவெளி நாகரிகத்திலும் வெண்கலத்தின் பயன்பாடு கி.மு முப்பத்தி மூன்றாம் நூற்றாண்டில் இருந்தே தொடங்குகின்றது அரபிய மக்கள் உலோகவியலில் செம்பு, வெண்கலம்,ஈயம் மற்றும் தகரம் போன்றவற்றை பற்றிய புதிய நுட்பங்களை உருவாக்கினர்.

பண்டைய எகிப்தில் வெண்கலத்தின் பயன்பாடு கி.மு முப்பத்து இரண்டாம் நூற்றாண்டில் இருந்தே தொடங்குகிறது. ''எகிப்தின் முந்தய அரசுகள் கி.மு மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முன் தொடங்கி கி.மு இரண்டாயிரம் ஆண்டில் முடிவடைகிறது. மத்திய வெண்கல அரசுகள் கி.மு இரண்டாயிரமாண்டுக்கு முன்தொடங்கி கி.மு பதினேழாம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் முடிவடைகிறது''.

ஐயாயிரம் வயதென மதிப்பிடப்படும் வெண்கலத்தால் ஆக்கப்பட்ட சத்திர சிகிச்சைக்கான கருவிகள் இந்தியாவில் இருந்து நதியோரத்திற் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மிக்பழைய சரித்திரமுடைய தைகிரிசு நதியோரத்தில் வாழ்ந்த சுமேரியர்களும் வெண்கலவுலோக வேலையில் மிகவும் சிறந்து விளங்கினர் என்பதைச் சரித்திரம் வாயிலாக அறிகிறோம் பபிலோனியாவில் கி.மு 4000 ஆண்டளவிற் பயன்பட்ட வெண்கலப் பிடியுடன் உருவாக்கப்பட்ட ஆயுதமும் எகிப்தில் கி.மு 3700 வருடமளவில் வழங்கிய வெண்கலச் சடங்குகளும் கி.மு 1783 ஆம் ஆண்டிலே வழங்கிய சீன சேங்கு அரச வம்சத்துக்குரிய சிறந்த வெண்கல கருவிகளும் வெண்கல வேலையின் திறமையை இன்று எடுத்துக் காட்டுகின்றன (இலியனாராச்சி, 1964:03).

சோழர்கால செப்புக் காவியங்கள் அளவிற்கான வளர்ச்சி ஒரே நாளில் ஏற்பட்டுவிடவில்லை பரிணாம வளர்ச்சியில் உச்சக்கட்டம்தான் இவை இதன் தொடக்கத்தை முதன்முதலாக நாம் சந்திப்பது ஹரப்பா நாகரிகத்தின் நாட்டியத்தாரகை செப்பு

சிலையில்தான் கனிஸ்கரின் நினைவுச்சின்னங்களை காக்கும் பேழை என்பது போன்ற உலோகத்திலான குசானர் காலக் கலைப் பொருட்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. குப்தர் காலத்தில் உலோக வார்ப்பு தொழிநுட்பம் அடைந்த உயர் வளர்ச்சிக்கு சான்றாக நின்ற நிலை புத்தர் சிலைகளும் கிடைத்துள்ளன.

இலங்கை தமிழர்களுடன் செம்பு, வெண்கல, பித்தளை வார்ப்பு பொருட்களை தொடர்புபடுத்தி பார்க்குமிடத்து திராவிடம் தழுவிய இந்திய கலைப்போக்கை ஆரம்பத்தில் பிரதிபலித்திருந்தாலும் பின்னரான காலங்களில் வார்ப்புத்தொழில் இலங்கை தமிழர்களுக்கான மரபுத் தொழிலாகவும் மாறியது அபயகிரி, ஜோதவனராமய அகழ்வுகள் அனுராதபுரத்துக் காலத்து வார்ப்புத் தொழில் பற்றி பேச உகந்த பொருட்களை கொண்டுள்ளன.

பின்னரான பொலனறுவை காலத்தில் சோழராட்சி வீரியம் பெற்ற காலத்தில் திராவிட இந்துச் சிற்பங்கள் இந்து ஆலய இறை கருத்தியல் சார் அலங்கார பொருட்களும் என வெண்கல, பித்தளை பாவனை அதிகமாகியது. திருகோணமலை, பதவியா போன்ற இடங்களில் கிடைக்கப்பெற்ற படிமங்களும் பயன்பாட்டுப் பொருட்களும் கிழக்கிலங்கைக்கான வார்ப்பு பொருள் பாவனையை தொடர்புபடுத்துகின்றது. ஆரம்பத்தில் இறக்குமதி பொருட்களாகவும் அவற்றை வார்த்து உருவாக்கவும் ஆரம்பித்தனர்.

இலங்கையிலே பழைய கற்காலத்தைய இரத்தினபுரியில் ஆதிகால நாகரிக வளர்ச்சியைக் காட்டும் கிலிமலை, பரம்பரபொட்டுவை முதலிய கற்குகைளில் கண்டெடுக்கப்பட்ட கல்லாயுதங்களும் அதேபோன்று பலாங்கொடையின் ஆதிகால நாகரிக வளர்ச்சியைக் காட்டும் ஆயுதங்கள் பலாங்கொடை கல்முகட்டுக் கல்லில்லங்களிலும் குருவிற்றை வட்டத்தொம்பை கற்குகைகளிலும் இராவண எல்லை கற்குகைகளிலும் கண்டெடுக்கப்பட்டு கொழும்பு நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. அதேபோல் அனுராதபுரமும், பொலநறுவையும் இராசதானியாக இருந்த காலத்திலே செம்பினாற் பொருட்களும் இங்கு வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இலங்கையில் காணப்பட்ட வார்ப்புக்கலை சாதிக்குரிய கலை வடிவமாக மாறுகின்றன. கன்னார சாதியினர் இதற்கு உரித்துடையவராக மாறுகின்றனர் இவை வீடுகளிலும் சடங்குகளிலும் மக்கள் வாழ்வியலில் பயன்படுத்தும் பொருட்களாக காணப்பட, வெண்கல பொருட்கள் பாவித்தல் என்பது சமூகத்தில் தங்களை உயர்ந்தவராக காட்டும் அந்தஸ்து நிலைமைக்கு மாற்றுகின்றது. இவ்வகையில் வளர்ச்சி பெற்ற வெண்கலம் காலப்போக்கில் இறப்பர் பொருட்களின் பயன்பாடு அதிகரிக்க சமூக மட்டத்தில் இதன் பாவனை குறைய ஆரம்பிக்கின்றது.

வெண்கல உலோகத்தினை பல்வேறு வகையில் பயன்படுத்திய மனிதர்கள் நீண்ட வரலாற்றுப் பின்னணியில் வெண்கல உலோகம் ஒலியை எழுப்பும் தன்மையினை இனங்கண்டு ஒலியெழுப்புக் கருவிகள் உருவாக்கப்படுகின்றன. சதங்கை இயற்கையில் இருந்து உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டவை பின்னர் வெண்கலத்தில் உருவாக்கப்படுகின்றன.

**வெண்கல பொருட்களும் உருவாக்கமுறையும்**

வார்ப்புக் கலைகளுக்குள் பல அடங்கும் இதில் வெண்கல பொருட்களின் வகைகளும் அதன் உருவாக்கும் முறையும் பற்றியும் முக்கியமானது. அடிப்படையில் வெண்கலம்தான் ஆனால் அவை எவ்வகையான கைவினைப் பொருட்களாக உருவாக்கப்படுகின்றதோ அதன் அடிப்படையில் அவைகள் ஒவ்வொன்றும் தனித்துவமான கவனிப்பையும், குறியீடுகளையும் பெறுகின்றது. மூலக்கூறு ஒன்றுதான் அவை வெண்கலமாக பொருண்மை பெறுவதில்லை. வெண்கலப் பொருட்களை அதன் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு மூன்று வகையாகப் பார்க்கலாம்.

1. பயன்பாட்டுப் பொருட்கள்
2. சடங்குப் பொருட்கள்
3. கலைப் பொருட்கள்

***பயன்பாட்டுப் பொருட்கள்*** - அன்றாட வாழ்வியலில் மக்கள் பல் தேவைகளுக்காக பயன்படுத்திய பொருட்களில் அதிகம் வெண்கலப் பொருட்களாகும். வெண்கலத்தினை ஒரு மங்கலப் பொருளாக கருதி ஒவ்வொரு வீடுகளிலும் பயன்படுத்தினர் அத்தோடு இவை சமூகத்தில் புழங்கு பொருளாகவும் பண்டு தொட்டு காலத்திற்கேற்ப பல மாறுதல்களுடன் இப்புழங்கு பொருட்கள் கையளிக்கப்பட்டு வருகின்றன.

பொருளும் பண்பாடும் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. பண்பாட்டின் கண்ணாடி புழங்கு பொருட்கள் என்று கூறலாம். அந்த வகையில் ஒன்றையொன்று பரஸ்பரம் பிரதிபலிப்பவை புழங்கு பொருள் பண்பாட்டில் குறிப்பிட்ட சில வகையான பொருட்கள் அன்றாட வாழ்க்கை சார்ந்த சமூக பொருளாதார செயற்பாடுகளுக்கு நேரடியாக உதவக்கூடியவையாக உள்ளவற்றை craft என்று வகைப்படுத்திக் கொண்டனர். மற்றொரு பிரிவானது அழகியல் சார்ந்த மகிழ்ச்சி தருகின்ற அலங்காரத் தன்மை கொண்டதாக இனங்கண்டு அதனை art என வகைப்படுத்திக் கொண்டனர் என்கின்றார் "ஹென்றி கிளாரி" மேற்கூறிய art, craft எனும் வகையில் பிரிப்பதென்பது மேலைத்தேய பண்பாட்டினை முன்வைத்துச் செய்யப்பட்ட ஒன்றாகும் என்று ஹென்றி கிளாரி கருதுகின்றார். உலகந் தழுவி பல பண்பாடுகளில் கலை கைவினை என்ற பாகுபாடோ இல்லை என்று கூறுகின்றார்.

இவ்வாறுபட்ட விவாதங்கள் எழுந்துள்ள நிலையில் "ஜேம்ஸ் டீட்ஸ்" குறிப்பிடுவது போல் புழங்கு பொருட்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன? எவ்வாறு எதற்காக பயன்படுத்தப்படுகின்றன என்ற நிலையை புரிந்து கொண்டால் பகுத்து நோக்கலாம்.

இங்கு பயன்பாட்டுப் பொருட்கள் என்ற வரிசையில் விளக்கு பானை, சட்டி, செம்பு, அகப்பை, வட்டி. சேர்வக்கால், படிக்கம், கிடாரம், அரிக்கம், வட்டா, பாக்குவெட்டி, முட்டி, தாம்பாளம் போன்ற பொருட்களைக் குறிப்பிடலாம். இவை மக்களின் வாழ்வியலில் கூடுதலாக வீட்டுப்பாவனைக்கு பயன்படும் பொருளாக கொள்ள முடியும்.

***சடங்குப் பொருட்கள்*** - சடங்கு மக்களின் வாழ்வியலோடு நம்பிக்கையின் அடித்தளமாய் அமைவது. சடங்கில் பல கூறுகள் ஒன்றிணைகின்றன. இவ்வொன்றிணைதல் சடங்கினை உயிர்பிக்கும் இதில் சடங்குப்பொருட்கள் முக்கியமானவை கூடுதலாக வெண்கலப் பொருட்களே அதிகம் பயன்படுத்தப்படும். இப் பொருட்களை சடங்கில் பொருட்களாக பார்ப்பதை விட அவை நம்பிக்கையோடு இணைந்த குறியீடுகளை பெற்று நிற்கின்றது.

இவ்வாறு பல பொருட்கள் சடங்கில் பயன்படுகின்றன. அவை பயன்படுத்தும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப குறியீடுகளை பெற்றுக் கொள்கின்றது. சடங்கில் பயன்படுத்தும் பொருட்களாக தீபம், விளக்கு, மணி, செம்பு, பானை, வட்டா, தாம்பாளம், கொடிஸ்தம்பம், கலசம், திருவாசி, சிலம்பு, அம்மானக்காய் என பலவற்றை குறிப்பிடலாம்.

***கலைப்பொருட்கள்*** - கலைசார் செயற்பாடுகளுக்கு கலைநயத்துடன் செய்யும் வெண்கல பொருட்களை குறித்து நிற்கின்றது “பிரான்சிஸ்கோ நகரில் உள்ள ஆசியக் கலை அருங்காட்சியத்தில் இருக்கும் 18000 இற்கும் மேற்பட்ட கலைப் பொருட்கள் 6000 ஆண்டுகள் பழமையான ஆரியக் கலாசாரத்தை விளக்கும் கலைப் பொருட்களாகும்.

ஆசிய நாட்டுக் கலைப்பொருட்கள் எனும் போது அவற்றில் இலங்கை இந்திய நாடுகளின் கலைப் பாரம்பரியம் தொன்மையானதாக காணப்படுகின்றது குறிப்பாக தமிழர்கள் மத்தியில் காணப்பட்ட கலைகள் பண்பாட்டுடன் பேணப்பட்டு கடத்தப்பட்டவை. “இந்தியாவில் இருந்து அமெரிக்க அரசால் கடத்திச் செல்லப்பட்ட அறுநூற்றி ஐம்பது கோடி ரூபாய் மதிக்கத்தக்க பழங்கால கலைப் பொருட்கள் கடந்த இரண்டாயிரத்தி பதினாறாம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியினால் இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் கையளிக்கப்பட்டது” (www.maalaimalar.com, 7-6-2016).

இவற்றில் அதிகமானவை தமிழ் நாட்டில் இருந்து கொள்ளையடிக்கப்பட்டவையாகவும் தமிழர் பண்பாட்டு கலைப் பொருட்களாகவும் குறிப்பிடப்பட்டது.

கலைகளை ஆற்றுகை செய்வதற்காக கலைப் பொருட்களை உருவாக்கி அதனை பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இவை கலையோடு இணைந்தவையாக காணப்படுகின்றன குறிப்பாக வாள், கத்தி, வில், கேடயம், சதங்கை, சல்லரி, பறை, கொம்பு போன்ற பல பொருட்கள் காணப்படுகின்றன. அத்துடன் வீடுகள் கோயில்கள் அரண்மனைகள் என பல இடங்களில் பயன்படுத்தப்பட்ட அழகு சாதனப் பொருட்களும் இதற்குள் அடங்கும்.

உலோக வார்ப்பானது மெழுகினால் வடிவம் அமைத்து அதன் மூலம் தேவையான பொருட்களை செய்து எடுக்கப்படும். மெழுகில் அனைத்து வடிவங்களையும் இலகுவாக செய்து கொள்ள முடியும். அத்துடன் உருகும் திண்மமாக உள்ளமையினால் இவை பயன்படுத்தப்படுகின்றன. “மெழுகுடன் குங்குலியம் தேங்காய் எண்ணை சிறிதளவு சேர்த்து உறுட்டும் போது உரிய வகையில் உருவங்களை பெறலாம்.” மெழுகினை மெழுகு தட்டி அல்லது தட்டுக்கட்டை என்ற கருவியினால் சமதளமான வெட்டிய மரத்தின் மேற்பகுதியில் உறுட்டி எடுக்க முடியும்.

தேன் மெழுக்கு முறையின் மூலம் செப்பு திருமேனிகள் உருவாக்கப்பட்டன எந்த உருவை செய்ய வேண்டுமோ அவ்வுருவை முதலில் தேன் மெழுகினால் செய்வர் மெழுகினால் ஆன உருவின் மேல் புற்றுமண் பூசி நிழலிலே உலர வைப்பர். இதன் பின் புறத்தே தலையிலும் இடையிலும் அடியிலும் துளைகள் இருக்கும் இது நன்கு உலர்ந்த பின்னர் தீயிலே இடுவர் மண்ணின் உள்ளே மெழுகிருந்த பகுதி அச்சாக நிற்கும். அதில் தேவையான உலோகத்தை உருக்கி எடுத்து ஊற்றப்படும்.

திருவுருவங்கள் செய்கின்ற போது பெரும் பகுதி செம்பும் மிகச்சிறியளவில் பித்தளை, தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகியவற்றை கலந்து செய்வர். இதனை பஞ்சலோகம் என்பர். கடவுளர் திருவுருவங்கள் செய்யும் போது பஞ்ச உலோகங்கள் சேர்த்தல் அவசியம். பஞ்சலோகம் பஞ்ச பூதங்களை குறிக்கும் இப் பஞ்ச பூதங்களால்தான் உலகம் உருவாக்கப்பட்டுள்ளது என்பர். இவ்வாறு குணவதனன் (வார்ப்புக்கலைஞர்- ஏறாவூர்) கூறுகின்றார். கருக்கட்டிய மெழுகு மற்றும் புற்று மண்ணினால் செய்யப்பட்ட உருவத்தில் தலையிலும் அடியிலும் உள்ள துளைகளின் வளியாக உள்ளே விடும் உலோகக் குழம்பு வெளியில் தெரியும். இதன் மூலம் அச்சு முழுவதும் உலோகம் பரவி விட்டது என்று அறிவர் பின்னர் இதை குளிர வைப்பர் ஊற்றிய உலோகம் கட்டியாகும். பின் அச்சை உடைத்து வார்ப்பை வெளியில் எடுப்பர். ‘‘சோழர் காலத்தில் மெழுகாலான உருவிலேயே நுண்ணிய வேலைப்பாடுகள் அனைத்தும் செய்து முடிக்கப்படும் உருவம் வார்த்த பின்னர் செதுக்கும் வேலை அதிகம் இருக்காது’’ (பெர்னாட்ஷா, முத்துகமரன், 2011:334).

உலோகத்தை வார்த்த பிறகு நுண்ணிய வேலைப்பாடுகள் இருக்கும் இதனை வார்ப்புக் கலைஞர்கள் உளி, அரம், சீவிளி கொண்டு செதுக்கி அதன் வடிவத்தை எடுப்பர் ‘‘அதன் அழகினை மெருகூட்ட தேசிப்புளியினால் தேய்த்து விடுவதன் மூலம் இன்னும் பள பளப்பு அதிகரிக்கும்’’

செப்புத் திருமேனிகள் செய்யும் முறையினை இந்திய கலை வரலாறு நூல் கீழ் வருமாறு கூறுகின்றது ‘‘இத்தகு செப்புத் திருமேனிகள் தயாரிப்பு முறைக்கு ஒரே ஒரு மாறுதல்கள்தான் தேவை முதலில் மண்ணை பிடித்து அதன் மேல் மெழுகால் உருவை அமைத்து அதன் மேல் மண் பூச வேண்டும் இதை தீயிட்டால் உள்ளேயும் வெளியேயும் மண் உருவம் இருக்க இடையிலுள்ள மெழுகு மட்டும் உருகி விடும் இவ்வச்சில் உலோகத்தை உருக்கி ஊற்ற வேண்டியதுதான்’’

இம்முறையில் செய்யும் போது புற்று மண் மூலம் உருவம் ஆக்கி பின்னர் மெழுகினால் அதன் மேல் வடிவத்திற்கு அமைவாக உருவங்களை செய்து புற்று மண்ணை அரித்து அதனை குழைத்து மெழுகின் மேல் பூசுவர். அவை பூசப்படுவதன் நோக்கம் மெழுகில் செய்யப்படும் வெட்டுக்கள், சிறிய வளைவுகளுக்குள் அரித்து எடுத்த புற்று மண் களி இலகுவாகச் செல்லும் என்பதற்காக பின்னர் அதனை காய வைத்து மீண்டும் சாதாரண களி பூசுவர்.

இவ் உருக்கு வேலைப்பாட்டில் செய்கின்ற மண்ணாலான அச்சை உடைத்து விடுவதால் மற்றுமொரு உருவம் அதே அச்சிலிருந்து செய்ய முடியாது ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாகவே செய்து கொள்ள வேண்டும்.

செம்பினால் தெய்வ உருவங்களை செய்யும் போது ‘‘இவை பற்றி தமிழகத்து நூல்களில் சிறந்த குறிப்பு உள்ளது ஓர் ஊரில் தெய்வ உருவை செம்பினால் செய்ய விளையும் போது மெழுகினால் செய்த உருவை அலங்கரித்து ஊர் முழுவதும் வலமாக எடுத்துச் செல்வர். பின் ஊரார் ஒப்புதல் பெற்ற பின்னரே மண்ணிட்டு அச்சு செய்வர்’’ இவ்வாறு நம்பிக்கையுடனும் ஊர் மக்களின் கூட்டுணர்வின் ஒப்புதலிலும் செய்யப்படுகின்றது.

உலோக வார்ப்பின் உருவான நடராசா வடிவத்தினை ‘‘பிரெஞ்சு சிற்பி அகஸ்த் ராடின் இதன் சிறப்பை சொல்லும் போது இதுவரையிலான உலக கலை வடிவங்களில் நடராசர் சிற்பம் போன்று அதி வேக மனித இயக்கத்தினை இவ்வளவு அளவிற்கு வெளிப்படுத்தும் வகையில் கருத்தாக்கம் செய்யப்படவில்லை என்கிறார்.’’

தேவையான உலோக வடிவத்தை உருக்கி எடுத்த பின்னர் அவை கடமரம் கருவி மூலம் தீட்டப்படும். தற்போது போரதீவினை சேர்ந்த சோமசுந்தரம் இந்த கருவி மூலம் வெண்கல பொருட்களை வடிவமைக்கின்றார். கடமரம் என்பது மரத்தினால் செய்யப்பட்டவையாகும் வண்டிச் சில் ஒன்றும் இதனோடு பொருத்தப்படும்.

இவ்வாறு வெண்கல உலோக உருவாக்கம் செய்யப்படுகின்ற போதும் தற்கால சூழலில் அவை நவீன இயந்திரங்கள் மூலம் உருக்கப்படுகின்றன. உலோகத்தினால் ஆன அச்சுக்களில் வார்க்கப்படும் பின்னர் சேர்த்து ஒட்டப்படுகின்றது உள்ளூர் தொழில் நுட்பத்துடன் உருவாகும் பொருட்களைப் போன்று நவீன மின் இயந்திரங்களில் உருவாக்கப்பெறும் வெண்கலப் பொருட்கள் காணப்படுவதில்லை.

மட்டக்களப்பில் வெண்கல வார்ப்பினை முன்னெடுத்துக் கொண்டிருப்பவர்களாக ஏறாவூரினைச் சேர்ந்த குணவதனன், நாவற்குடாவினைச் சேர்ந்த யோகேந்திரன், போரதீவினைச் சேர்ந்த சோமசுந்தரம் மட்டக்களப்பு நகரத்தில் சிங்கள இனத்தவரான பத்மலால் போன்றோர்கள் மேற்கொள்கின்ற போதும் முன்னைய காலங்களில் பாண்டிருப்பு, கல்லாறு, ஓந்தாச்சிமடம், முனைத்தீவு போரதீவு, ஏறாவூர் போன்ற பல இடங்களில் செய்யப்பட்டு இருக்கின்றது.

**வெண்கல வார்ப்பு தொழில்முனைவு எதிர் கொள்ளும் சவால்கள்**

சமூக மக்களின் வாழ்வியலின் வாழ்வாதாரத்தை ஈட்டித்தரும் பொருளாதார மூலதனமாகவும் காணப்படும் வெண்கல வார்ப்பு தொழில்முனைவு தற்காலத்தில் பல்வேறு சவால்களை எதிர் கொண்டுள்ளது. ஆரம்பகாலங்களில் அதிகமானோர் இதனை முன்னெடுத்தனர் அவை இன்று மாறி உருவாக்கம் குறைவடைந்து அல்லது முற்றாக இல்லாது போவதற்கான சாத்தியம் உருவாகியுள்ளன. ஏற்கனவே உருவாக்கப்பட்ட வெண்கல பொருட்களை பாதுகாப்பதில் சமூகம் வலுவாக காணப்படுகின்ற போதிலும் அவற்றிலும் பல சவால்கள் இருக்கன்றன. இந்நிலையில் சதங்கை உருவாக்கம் எதிர்கொள்ளும் சவால்களைபின்வருமாறு ஆராயலாம்.

***மூலப் பொருட்களை பெறுவதில் சிக்கல் -***

இவ்வுலோகத்தினை நாகம், வெள்ளீயம் என்பவற்றைக் கலந்து பெறவேண்டும் நாகம் ஒரு மடங்கும், வெள்ளீயம் இரு மடங்கும் சேர்த்து உருக்கினால் இவை சுத்தமான வெண்கலமாக வரும் இவற்றை பெறுவதில் சிக்கல் ஏற்படுகின்றன. விலைவாசி அதிகமாக இருப்பதனாலும் இலகுவில் பெற முடியாமையினாலும் உருவாக்குனர்கள் பெரும் சவாலை எதிர் கொள்கின்றனர்.

***உற்பத்திச் செலவைவிட விற்பனை விலை குறைவு -***

வார்ப்பு கலையினை முன்னெடுக்கும் கலைஞர்கள் நீண்ட நாட்கள் செலவளிப்பர் மனித வலு அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன. ஓரிரு நாட்களில் உருவாக்கி விட முடியாது மாதங்கள் செல்லும். எனவே மனித வலுவிற்கான ஊதியம் மூலப் பொருட்களுக்கான செலவு என்பவற்றை விட விற்பனை விலை குறைவாகவுள்ளது. முன்னைய காலங்களில் எவ்வாறு உற்பத்திச் செலவும் விற்பனைச் செலவும் அமைந்தது முன்னோர்கள் எவ்வாறு இதனை ஈடுசெய்தனர் எனும் புரிதலில், முன்னைய காலங்களில் வாழ்கைச் செலவு குறைவு என்பதனாலும் தன்னிறைவான உற்பத்திச் சமூகமாக இருந்தமையினாலும் விலைவாசிகள் குறைவாக காணப்பட்டதாலும், தங்களுக்கானதை தாங்களே உருவாக்கியிருக்கின்றனர்.ஆனால் தற்கால சூழலில் வாழ்க்கைச் செலவு அதிகரித்தும், மூலப் பொருட்களின் விலை அதிகமாக காணப்படுகின்றமையினாலும், இவற்றை ஈடுசெய்ய முடியாத நிலை உருவாகியுள்ளன.

***நவீன இயந்திரங்களின் வருகை***

வார்ப்புக் கலைகள் உள்ளூர் அறிவுத் தொழிநுட்பத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறு செய்யும் பொருட்களின் தரமும் பாவனையும் அதிகம்.

தற்கால சூழலில் வார்ப்புக்கலை என்பது நவீன இயந்திர சாதனங்களுக்குட் உள்வாங்கப்பட்டுள்ளன. வெண்கலம் உருக்குவதற்காக மின்சாரத்தில் இயங்கும் இயந்திரங்கள் பயன்படுத்துகின்றன. அத்தோடு லேத்து எனும் இயந்திரம் வடிவங்களை உருவாக்க பயன்படுகின்றது. அச்சுக்கள் இறக்குமதியாகி பொருட்களை உடனே உருக்கலாம். ஓரிரு நாட்களில் பொருட்களை உருவாக்கமுடியும் என்ற நிலைக்கு மாறிவிட்டது.

இந்நிலையில் இதன் மூலம் பெறுகின்ற முடிவுப்பொருட்கள் தரமானவையா? நீண்ட நாட்கள் பயன்படுத்தக் கூடியவையா? என்ற வினாக்களை எழுகின்றபோது ‘‘தற்போது விற்பனைக்கு வரும் வெண்கலப் பொருட்கள் நல்லவையில்லை பாரம் குறைந்தது ஒருதடவை விழுந்தால் உடைந்து போகும் அதனை ஒட்ட முடியாதநிலையும் உள்ளது முன்னமே வரும் வெண்கலப் பொருட்கள் சரியான பாரம் நூறு நூற்றியம்பது வருடம் பாவிக்கும்’’எனும் வார்ப்பு கலைஞர்களின் கருத்து முக்கியமானது.

இயந்திரங்களினால் உருவாக்கப்படும் பொருட்கள் மிக குறைந்த விலையில் விற்கப்படுவதனால் பாரம்பரியமாக உள்ளூர் தொழிநுட்பத்தில் இத் தொழிலை மேற்கொள்ளும் முயற்சியாளர்கள் சவால்களை எதிர் கொள்கின்றனர். இதனால் இவர்கள் உற்பத்தி செய்வதில் பின் நிற்கின்றனர்.

***புதிய தலைமுறையினர் முன்வராமை***

பாரம்பரியம் என்பது அறாத் தொடர்ச்சியாய் வருவது இவற்றில் அனைத்தும் உள்ளடங்கும். முன்னோர்கள் சமூக தேவைகருதி தங்களது அறிவு, திறன் முறைமைகளை வாய்மொழியூடாகவும், செயல்வடிவ இயங்கியல் பொறிமுறையூடாகவும் தலைமுறையாக கையளிக்கப்பட்டு வந்தவை ஓரிடத்தில் ‘‘கடத்தப்படாமலும் பயன்படுத்தாமலும் இருக்குமாயின் அவை நிரந்தரமாக இல்லாது போய் விடும்’’ ஆகவே நீடித்து நிலைத்து நிற்பதற்கு அறாத் தொடர்ச்சி அவசியமாகின்றது.

இன்றைய சூழ்நிலையில் உலகமயமாக்கம், நவீனம் போன்ற கொள்கைகள் புதிய தலைமுறையினரை காலனியத்தின் தரகர்களாக ஆக்கிவிட்டது. இதனால் பாரம்பரியம் நவீனம் என்ற கொள்கை போக்கில் பாரம்பரியங்கள் என்பது தாழ்வானது எனும்மனநிலையை உருவாக்கி உள்ளூர் அறிவை இல்லாது செய்தலில் தமது நோக்கங்களை பிரகடனப்படுத்தியுள்ளன. இதனையே நவீன கல்விக் கொள்கைகளும் புகட்டுகின்றது.

இப்பின்னணியில் பாரம்பரிய உள்ளூர்அறிவாகக் காணப்படும் வார்ப்புக் கலைகளை கையாள்வதற்கும், அறிவதற்கும் புதிய தலைமுறையினர் முன்வராமையினால் இல்லாது போகின்றவையாக மாறிவிட்டன. ‘‘எனது பரம்பரை செய்து வந்த வேலை என்னோடு போகின்றது’’ எனும் வார்ப்புக் கலைஞர் வேதவனத்தின் கருத்து ஆழமாக பார்க்கபட வேண்டியவை.

அவருடைய மனக்குமறல்கள் தனது பரம்பரையை மட்டுமல்ல சமூகத்தையும் சாடினதாகவே அமைந்தது. பாரம்பரியமாக உள்ளூர் அறிவுடன் கொண்டுவரப்பட்ட முன்னோர் அறிவினை பேணுவதற்கு சமூகத்தில் ஒருவர் கூட முன்வரவில்லை என்பதாகும்.

***உருவாக்கும் கலைஞர்களுக்கு ஊக்குவிப்பின்மை***

வார்ப்புக் கைவினை கலைத் தொழிலை செய்வதற்கு அரசோ, அரசசார்பற்ற நிறுவனங்களோ உதவவில்லை என்பது இதனை முன்னெடுத்து தற்போது செய்யாது இருக்கும் கலைஞர்களின் பலரிடம் இருந்து வெளிப்படுத்தப்பட்ட கருத்தாகும். ‘‘பண்டாரநாயக்கா ஆட்சிக்காலத்தில் மூன்று பவுண் தங்கம் குறைஞ்ச விலைக்கு வார்ப்புத் தொழில் செய்யும் கலைஞர்களுக்கு வழங்குவார்கள்’’ (தவராசா, வார்ப்புக்கலைஞர் போரதீவு). ஆனால் ஏனைய ஆட்சிக்காலங்களில் இன் நடைமுறை பின்பற்றப்படவில்லை என்பதாகும்.

தனியார் துறைகளை முன்கொண்டு செல்லும் திட்டங்களை அரசு வகுத்திருக்கின்ற போதிலும் கைவினைப் பொருட்களை செய்கின்ற கலைஞர்களுக்கு வங்கியில் கடனுதவி பெறுவதற்கு கூட உரிய நடைமுறை காணப்படாமை. மேலும் அரசினால் ஊக்குவிக்கும் எந்தவித உதவிச் செயற்றிட்டங்களும்இக்கலைப்பொருட்களை உருவாக்கும் முயற்சியாளர்களுக்கு இன்மையால் இக் கைவினையாளர்கள் அதிலிருந்து விடுபட ஆரம்பிக்கின்றனர்.

*யுத்தம்*

இலங்கையில் மூன்று தசாப்தகாலமாக இடம் பெற்ற யுத்தம் மனிதர்களது உயிர், உடமைகள், சொத்துக்கள் போன்றவற்றை மட்டுமல்லாது உள்ளூர் அறிவு, திறன்,தொழிநுட்பம், மொழி, பண்பாடு, கல்வி, கலை, கலாசாரம், வாழ்வியல் என பலவற்றை இல்லாது செய்துள்ளது. இதற்குள் வெண்கல உருவாக்கமும் அடங்கும் இன முரண்பாடு என்ற போர்வையில் திட்டமிட்டு பல அறிவியல் சார் செயற்பாடுகள் அழிக்கப்பட்டு இருக்கின்றன.

யுத்தம் சிறுபாண்மை மற்றும் பெரும்பாண்மை மக்களின் உரிமைசார் விடயங்களின் கைவினை கலைப் பொருட்கள் உருவாக்குவதில் சிக்கலை ஏற்படுத்தியிக்கின்றது. முன்னெடுக்கும் கலைஞர்கள் கூறிய கருத்தின்படி வார்ப்பு செய்வதற்கு மூலப்பொருட்கள் கொள்வனவு செய்ய வேண்டிய தேவை ஏற்படும்.இதற்கு நவச்சாரம், சோற்றர்ஈயம், மெழுகு என்பன வாங்கி வருகின்ற போது பாதுகாப்பு படையினர் கன்னி வெடி செய்வதற்கு கொண்டு செல்கின்றதாக கூறி கைது செய்திருக்கின்றனர். ஈயம் வார்ப்பு வேலையில் உருவாக்கும் பொருளில் சிறு துவாரம் ஏற்பட்டால் ஒட்டுவதற்கு பயன்படுத்துவதாகும். இதனை வெடி செய்வதற்கும், வயர் ஒட்டுவதற்கு பயன்படுத்துவதாக கூறுகின்றனர்.

மெழுகென்பது வார்ப்பு வேலையில் கருக்கட்டுவதற்கு தேவைப்படும் பொருளாகும். இதனை கன்னி வெடி மறைப்பதற்கு பயன்படுத்துவதாக காரணம் கூறி தடை செய்யப்பட்டது.(கேசவன் ,போரதீவு)யுத்தத்தின் விளைவால் அடிக்கடி ஏற்படும் இடப் பெயர்வுகளின் மூலமும் வார்ப்பினைமுன்னெடுக்கும் உபகரணம் மற்றும் உலைமுகம் என்பன அழிக்கப்பட்டமையினாலும் வெண்கல உருக்கு சவால்களை எதிர் கொண்டது.இதனால் சதங்கை உருவாக்குனர்கள் விடுபட்டுச் சென்றனர்.

*பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனை அதிகரித்தமை -*

சமூக மக்களிடையே மிக எளிமையாக கிடைக்க கூடியதும் எல்லாவற்றிக்கும் பயன்படுத்தக் கூடியதும் கொள்வனவு விலை குறைந்ததுமான பொருட்களாக இவற்றை பார்க்கலாம். பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையினால் வெண்கல, பித்தளை பொருட்களின் பாவனை குறைவடைய ஆரம்பித்தது மட்பாண்ட, வெண்கலப்பொருட்கள் புழங்கு பொருட்கள் என்ற நிலையில் மாறி உயர் வர்க்கத்தினரின் வீடுகளில், அரச நிறுவனங்களின் அலுவலகங்களில் தனியார் விடுதிகளின் சொகுசு உணவகங்களின் காட்சிப் பொருளாக மாறின. ஆகவே பயன்படா பொருட்கள் என்ற நிலைக்கு தள்ளப்பட்டன.

இப்பின்னணியில் பலவகை சவால்களை எதிர்கொண்டு படிப்படியாக அதன் உற்பத்தி குறைவடைய ஆரம்பிக்கின்றன.

காலனியம் தாண்டி உலக வர்த்தக போக்கு மற்றும் புதிய கண்டு பிடிப்புக்கள் செம்பு, பித்தளை, வெண்கலப் பொருட்பாவனையை குறைத்தது. இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கை வெளிநாடுகளின் பயன்பாட்டிற்கு சுலபமான புதிய கண்டு பிடிப்புக்களை சந்தைப்படுத்தலுக்கான களமாக இலங்கையினை மாற்றியது. காலனிய உருவாக்கத்திற்கு

பின் கைவினை கலைகள் கனரக தொழில்கள் பெருகிய நிலையில் வேறு தளத்திற்கு நகரத் தொடங்கி விட்டன.

**முடிவும் முன்வைப்பும்**

இலங்கையின் மிக முக்கியமான உள்ளூர் கைவினை கலையாக்கமாக வார்ப்புக் கலைகள் உள்ளன இவை இன்று வழக்கொழிந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில் பாரம்பரிய அறிவை பாதுகாக்க எந்த மாற்று முறைமையும் இல்லை என்பதை கருத்தில் கொள்ளுதல் வேண்டும். சமூக உரிமைகள், வழமைச் சட்டம் என்பவற்றுக்கு கீழ் பாரம்பரிய அறிவை பாதுகாக்கலாம் என்ற கருத்தை சிலர் கொண்டுள்ளனர் எழுதப்படாத வழமைச்சட்டத்தால் அதிக சந்தர்ப்பங்களில் வெற்றிகரமாக செயற்பட முடிவதில்லை

வார்ப்புக்கலை தற்கால நவீன கல்விக் கொள்கைகளுக்குள் புகுத்தப்பட்டு மாணவர் செயற்பாட்டுடன் கற்றலுக்கு ஊக்குவிப்பது அவசியமாகின்றன. பதிமூன்று வருட பாடசாலைக் கல்வி குறிப்பிட்டவர்களை மட்டும் வடித்தெடுத்து அதிகமானோரை வெளியில் அனுப்புகின்றது. எனவே மாணவர்களை அறிவுக்காகவும், தொழிலுக்காகவும், நாட்டுக்காகவும் கற்பித்தல் இதன் நோக்கமாக அமைய வேண்டும்.

பல்கலைக்கழகங்கள், உயர் தொழிநுட்ப கல்லூரிகள் உள்ளூர் அறிவினை பேணவும் பாதுகாக்கவும் செயன்முறையாக பயிலவும் முன்வந்து அதன் கல்விக்கொள்கையில் கொணர்தல் அவசியமாகின்றன. அத்துடன் இதனை பாதுகாத்தலும் அடுத்த தலைமுறையினருக்கு கையளித்தலும் ஒவ்வொருவருடைய தேவையுமாகவுள்ளது.

வார்ப்புக்கலை பல்வேறு சவால்களை எதிர் நோக்கியுள்ள நிலையில் அதற்கான தீர்வுகளை இவ்வாறான ஆய்வு முறைகளுடாக இனங்கண்டு, பாதுகாத்தலிற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு சமூக மக்கள் மத்தியில் பரவலாக்கம் செய்வதும்,ஈடுபடும் தொழில் முனைவோர் (உற்பத்தி, பாதுகாத்தல்) ஊக்குவித்தல், வெண்கல வார்ப்பு கலைஞர்களின் கூட்டுறவு சங்கங்களை மாவட்ட ரீதியாக உருவாக்குதல், பிளாஸ்ரிக் பொருட்களின் இறக்குமதியை தடைசெய்தல், பொது வெளியில் மக்கள் கூடும் இடங்களில் வார்ப்புக் கலைஞர்களின் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வற்கான கடைகள், காட்சிக் கூடங்களை ஏற்பாடு செய்தல், வார்ப்புக் கலைஞர்களுக்கான ஓய்வூதியம் வழங்குதல், தொழில்முறை கல்வியில் வார்ப்புக் கலையை உள்வாங்குதல் என்பனபற்றிய கண்டுபிடிப்பு மற்றும் முன்வைப்பு சார்ந்து வசதி செய்தல் அரசு மற்றும் கல்விசார் நிறுவனங்களின் கடமையாக உள்ளன. மேலும் நாட்டின் பொருளாதார வளரச்சியில் பங்காற்றும் வகையில் ஒவ்வொரு தளங்களிலும் எவ்வாறு கொண்டுவருவதென்பது தொடர் ஆய்வுக்குரியது.

**உசாத்துணைகள்**


இலியனாச்சி, கே, எச். (1964). *உலோக வேலை.*

கமினா, கு. (2018). சர்வதேச ஆய்வுமாநாடு. *IC SVIAS.*

பாரதி, ப. (2015). *தமிழர் மானிடவியல்.* திருச்சி அடையாளம்.

பெர்னாட்சா, ச., முத்துகமரன், பி. (2016). *இந்திய கலை வரலாறு.* சாமிநாதர் நூல்நிலையம்.

முத்துமோகன். ந. (2014). *பின்னை நவீனத்துவமும் மார்க்சியமும்.* செஞ்சுரி வுக்கவுஸ்.

யகேன், யோ, (2018), "விட்டுச் சென்ற வார்ப்புலோக பொருள்களுடன் கூடிய பண்பாட்டு மரபுரிமைகளை ஞாபகமூட்டல்". *IC SVIAS.*

# குழந்தை ம. சண்முகலிங்கத்தின் கல்வியியல் அரங்கச் செயற்பாடுகளும் அதன் முக்கியத்துவமும் - ஓர் ஆய்வு

**கு. ரவிச்சந்திரன், புவனேந்திரன் ரதிகலா**
நுண்கலைத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை,
ravichandrank@esn.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

ஈழத்தில் 1980களில் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களினால் தோற்றுவிக்கப்பட்ட அரங்க முறைகளுள் ஒன்றே கல்வியியல் அரங்காகும். இவ்வரங்கானது பிரயோகநிலை சார்ந்த செயற்பாடுகளில் மிகக் காத்திரமான எதிர் விளைவுகளை ஏற்படுத்துகின்ற அரங்க முறைமை எனும் வகையில் முதன்மை பெறுகின்றது. இன்றைய கல்வி முறைச்சூழல் பாடப் புத்தகங்களோடு மட்டும் மட்டுப்படுத்தி நிற்கும் மாணவர்களை உருவாக்கி விடுவதுடன், கல்வி என்பது பாடப் புத்தகத்தில் இருப்பதை பாடமாக்கி ஒப்புவித்தலோடு முடிவடைகிறது. இந்தவகையில், கல்வியியல் அரங்கானது அதற்கு மாறாக 'செய்து கற்றல்' என்பதையே வலியுறுத்தி நிற்கின்றது. சுருங்கக் கூறின் "செய்வதினூடாகக் கற்றல்" கல்வியியல் அரங்கின் சாராம்சமாகும். அறிவூட்டி மகிழ்வைத் தருதல் கல்வியின் பணி, மகிழ்வூட்டி அறிவைத் தருதல் அரங்கின் பணி. கல்விக்கும் அரங்கிற்கும் இடையே காணப்படும் ஒற்றுமையும் வேற்றுமையும் இதுவே ஆகும். இதன் காரணமாகவே கல்விச் செயற்பாடுகளில் அரங்கச் செயற்பாடுகளின் அவசியம் பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. செய்து கற்றல், செய்து பிழை விட்டுத் திரும்பச் செய்து கற்றல், கூடிக் கற்றல், கலந்துரையாடிக் கற்றல், சவால்களை எதிர்கொண்டு பிரச்சினைகளை விடுவிக்கவும் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டுக் கொள்ளவும் கற்றல், தலைமைக்குப் பணியக் கற்றுத் தலைமை தாங்கக் கற்றுக் கொள்ளல், பொது நலனுக்காகக்கூடி உழைக்கும் போது சுயநலத்தை முன்னிறுத்தாதிருக்கக் கற்றுக் கொள்ளல் என்பன கல்வியினதும், அரங்கச் செய்வினைகளதும் விளைபயன்களாகும். மாணவர்களாக இருந்து கல்வியைப் பெறும் வாய்ப்பு உலகில் பெரும்பாலானவர்களுக்குக் கிடைப்பது உண்டு. ஆசிரியராக இருந்து கல்வியை ஊட்டி அறிவினைப் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்புச் சிலருக்கு மட்டுமே கிடைக்கும். ஆசிரியராகவும் இருந்து கொண்டு நாடகச் செயற்பாடுகளிலும் ஈடுபடும் வாய்ப்பு ஒரு சிலருக்கு மட்டுமே கிடைக்கும். அவர்கள் தாம் வாழ்ந்த காலத்துக் கல்வி மற்றும் நாடக அரங்கு பற்றிய எண்ணக் கருக்களுக்கும் கோட்பாடுகளுக்கும் ஏற்ப கல்விக் கூடங்களில் நாடக அரங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளனர். அதன் பெறுபேறாகக் "கல்வியியல் அரங்கு" என்ற சிந்தனை எம்மத்தியில் முகிழ்க்கத் தொடங்கியது. இன்றைய நவீன கல்வி முறையானது போதனை முறைக் கல்வியாகக் காணப்படுகின்றது. இதனால் மாணவர்கள் அனைவரும் போட்டி மனப்பாங்குடனும், பரீட்சை மையப்படுத்தப்பட்டும், சான்றிதழை இலக்காகக் கொண்ட மையக் கற்கையாகவும் தங்களுடைய கற்றலை மேற்கொண்டு வருகின்றார்கள். இதனால் மாணவர்கள் தங்களுடைய திறன்களை வெளிப்படுத்தாமல் போதனைமுறைக் கல்விக்குள் முடங்கிப்போயுள்ளனர். இதனால் மாணவர்கள் குழு நிலையில் பங்குபற்றி விளையாட்டாகவும் கற்றலாகவும் ஈடுபடும் செயற்பாடுகள் மூலமாகத் தங்களது கற்பனைகளை, கருத்துக்களை, உணர்வுகளை வெளிப்படுத்துவது, ஆற்றல்களைக் கண்டுபிடிப்பது, கொண்டாடுவது என்பதனூடாக சுயமான படைப்பாக்கத்திறன், சிந்தனைத்திறன், விமர்சனநோக்கு, செயற்பாட்டுத்திறன் என்பவற்றை வளர்த்துக்கொள்ளும் செயல்மையக் கற்றல் முறைமை மூலம் மாணவர்களுடைய திறன்களை வெளிப்படுத்துவதற்கு கல்வியியல் அரங்கு துணைபுரிகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *அறிவூட்டல், ஆளுமை விருத்தி, கல்வியியல் அரங்கமுறைமை, மாணவர் மையக்கல்வி*

**ஆய்வு அறிமுகம்**

கல்வியியல் அரங்கானது அண்மைக்காலமாகப் பிரபல்யம் அடைந்து வருகின்றது. இக் கல்வியியல் அரங்கினுடைய முன்னோடிகளை ஆராய்கின்ற பொழுது குழந்தை ம.சண்முகலிங்கத்தின் கல்வியியல் அரங்கானது ஏனையோரினுடைய கல்வியியல் அரங்கிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது. அக்கல்வியியல் அரங்கினுடைய மகத்துவமும் முக்கியத்துவமும் உலகறியச் செய்யப்பட வேண்டும் என்ற நோக்கை அடிப்படையாகக் கொண்டு குழந்தை ம.சண்முகலிங்கத்தினுடைய கல்வியியல் அரங்கும் அதன் செயற்பாடுகளும் முக்கியத்துவமும் இங்கு ஆய்வு செய்யப்பட்டு அதன் பரிந்துரைகளும் முன்வைக்கப்படுகின்றது. இதனடிப்படையில் குழந்தை ம.சண்முகலிங்கத்திற்கென்று ஒரு தனித்துவமான கல்வியியல் அரங்கப் போக்கொன்று உருவாக்கப்பட்டு இருப்பதும் அது கல்வி நடவடிக்கைகளுக்காக முன்னெடுக்கப்படுகின்ற மிக முக்கியமான வழிகளாகவும் அதுசார்ந்த கல்வியியல் அரங்கினுடைய முழு வடிவத்தையும் பெற்றிருக்கின்றது. அத்தோடு கூடிக்கற்றல், மகிழ்ந்து கற்றல், செய்து கற்றல், செய்து பிழை விட்டுத் திரும்பச் செய்து கற்றல், கலந்துரையாடிக் கற்றல், சவால்களை எதிர்கொண்டு பிரச்சினைகளை விடுவிக்கவும் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டுக் கொள்ளவும் கற்றல், தலைமைக்குப் பணியக் கற்றுத் தலைமை தாங்கக் கற்றுக் கொள்ளல், பொது நலனுக்காகக் கூடி உழைக்கும் போது சுயநலத்தை முன்னிறுத்தாதிருக்கக் கற்றுக் கொள்ளல் என்பனவும் இவரது கல்வியியல் அரங்கினுடைய முக்கியத்துவங்களாகவும் காணப்படுகின்றது. மேலும் உலகலாவிய ரீதியில் பார்க்கப்படுகின்ற கல்வியியல் அரங்கச் செயற்பாடுகளுடன் இவருடைய கல்வியியல் அரங்கை ஒப்பிடுகின்ற பொழுது ஏனைய கல்வியியல் அரங்கில் காணப்படுகின்ற நுட்பங்களுக்குள் இல்லாத புதிய நுட்பங்கள் இங்கிருப்பதாகவும் உணரப்படுகின்றது. மாணவர்களை மகிழ்வளிப்புக்கூடான கற்றல் செயற்பாட்டிற்கு ஒரு ஊக்கியாகவும் இவரது கல்வியியல் அரங்கச் செயற்பாடு அமைகின்றது. இக்கல்வியியல் அரங்கச் செயற்பாடுகளை பகுப்பாய்வு செய்து ஆராய்கின்ற பொழுது பல கல்வியியல் செயற்பாடோடு சம்பந்தப்பட்ட உளவியல் ரீதியாக பல திருத்தி மாணவர்களினுடைய கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு வாய்ப்பை வழங்குகின்றது என்பதை அறிமுகப்படுத்துவதாகவும் இவ் ஆய்வு அமைகின்றது.

**ஆய்வு நோக்கம்**

மாணவர்களின் பல்துறை ஆற்றல், அறிவு, திறன் வெளிப்பாடுகளுக்கான களத்தை உருவாக்குதல்.

மாணவர்களினுடைய பல்துறை சார்ந்த திறன்களை அவர்களே புரிந்து கொள்வதற்கும், அவர்கள் சார்ந்த சமூகத்தினருக்கும் வெளிப்படுத்துவதற்குமான செயற்பாட்டை மேற்கொள்ளுதல்.

பல்வகைப்பட்ட மதிப்பீட்டு முறைமைகளுக்கூடாக வித்தியாசமான ஆற்றலுள்ள, ஆளுமையுள்ள மனிதர்களை வளர்த்தெடுத்தல்.

சமநிலை ஆளுமை கொண்ட ஆக்கபூர்வமான எதிர்காலத் தலைமுறையினரை உருவாக்குதல்.

**ஆய்வுப் பிரச்சினை**

எமது கல்வித்திட்டத்தில் இன்றைய கல்வி முறைமையானது போட்டி மனப்பாங்குடனும், சான்றிதழ் மையக் கற்கையாகவும் காணப்படுகின்றது. ஆனால் கல்வியியல் அரங்கானது அறிவூட்டலுடன் கூடிய மகிழ்வூட்டலுடன் அவர்களைப் பல்துறை ஆளுமையாளர்களாக மாற்றுவதற்கான உத்தி முறைமைகளைக் கையாளுகின்றது. எனவே கல்வியியல் அரங்கினூடாக எமது கல்விச் செயற்திட்டத்தை மாற்றியமைத்தல் என்பவற்றுடன் மாணவர் மையக்கல்வியை ஊக்கப்படுத்துதலும் வழிப்படுத்தலும் இவ் ஆய்வினூடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**ஆய்வுக் கருதுகோள்**

இன்றைய போதனைமுறைக் கல்விச்செயற்பாடுகளில் இருந்து மாற்றீடான ஒரு கல்விச் செயற்பாடாகக் கல்வியியல் அரங்கு செயற்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**
பண்புசார் முறையியலைப் பின்பற்றி விபரண முறை ஆய்வாக அமைகின்றது.

**தரவு சேகரித்தல் முறை**

ஆய்வுக்கான தரவு சேகரித்தல் முறையானது இரு வகைகளைக் கொண்டதாக அமைகின்றது. அதில் முதலாம் நிலைத் தரவுகளாக கல்வியியல் அரங்கு சம்பந்தமான முன்மொழிவுகள், அனுபவப் பகிர்வுகள் என்பவற்றுடன் இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆய்வின் கருத்தை மையமாகக் கொண்டு செல்வாக்குச் செலுத்தும் கல்வியியல் அரங்கு தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள், கல்வியியல் அரங்கு சம்பந்தமாக பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட நாடக அரங்கச் செயயற்பாடுகள் என்பவற்றுடன் இணையத்தளம் என்றவற்றில் இருந்தும், இதன் செயற்பாட்டாளர்களுடனான உரையாடல்கள் மூலமும் தரவுகள் பெறப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

குழந்தை ம.சண்முகலிங்கத்தின் ''நாடகவழக்கு'' எனும் நூலிலே கல்வியியல் அரங்கு பற்றியும், பாடசாலைகளில் மாணவர்களுக்கு எவ்வாறு ஆசிரியர்கள் கல்வியைப் போதிக்க வேண்டும் என்பதுடன், மாணவர் மையக்கல்வியுடன் கலந்துரையாடல் அரங்கு பற்றிய தகவல்களும் உள்ளடங்கியுள்ளது. இவ் ஆய்வினை முன்னெடுத்துச் செல்வதற்குப் பெரிதும் துணைபுரிகின்றது.

பேராசிரியர் சி.ஜெயசங்கரின் ''சண்ணரது கல்வியியல் அரங்கு'' எனும் நூலில் எமது கல்வி முறைமை பரீட்சை மையப்பட்டதாகவும், சான்றிதழ் கணிப்பிற்கு இலக்குடையதாகவும் இருந்து வருகின்றது. இக்கல்வி முறைமை பற்றிய விவாதங்களையும், விமர்சனங்களையும் வெகுசனப்படுத்துவதில் ஈழத் தமிழரது நவீன அரங்கில் கல்வியியல் அரங்கு முக்கிய பகுதியாக இருக்கின்றது. அத்தோடு கல்வி முறைமை பற்றிச் சிந்திக்கவும் வைக்கின்றது. பாடசாலைகளிலே போதனைமுறைக் கல்வி அல்லாமல் களப்பயிற்சிகளுக்கூடாக பிரயோக

கல்வி முறைமை தொடர்பாகவும், செய்து கற்றல், செய்து பிழை விட்டுக் கற்றல், கூடிக் கற்றல், கலந்துரையாடிக் கற்றல், சவால்களை எதிர் கொண்டு பிரச்சினைகளிலிருந்து விடுபட கற்றல் போன்ற கற்றல் முறை தொடர்பாகவும், கல்வியியல் அரங்கு பற்றிய பல விடயங்கள் இந் நூலிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களின் ‘‘அரங்கியல்’’ எனும் நூலில் சிறுவர்களை (மாணவர்களை) மகிழ்ச்சியுடன் ஈடுபட வைத்து அவர்களது அழகியல் திறன்களை வெளிப்படுத்துவதுடன் அவதானம், நிதானம், கற்பனையாற்றல், கூட்டாகச் சேர்ந்து கொள்ளும் பக்குவம் என்பன விருத்தியடைவதாக இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அம்மன்கிளி முருகதாஸ் அவர்களினுடைய ‘‘ஈழத்துத் தமிழ் நாடக அரங்கப் பாரம்பரியம்’’ எனும் நூலில் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் ‘‘கற்கை நெறியாக அரங்கு’’ எனும் தலைப்பில் நாடகமும் அரங்கியலும் கற்கைநெறியுடன் மாணவர்களின் கல்வித் தேவை பற்றியும் நிகழ்த்திக் காட்டல் மூலம் அதற்கு வேண்டிய சூழலை உண்டாக்குவதன் மூலமும் மாணவர்களின் படைப்பாற்றலை வளர்க்கும் கலை முயற்சியாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

திருமதி கு.ஞானவள்ளி அவர்கள் ஜீவநதியில் ‘‘சண்ணரது கல்வியியல் அரங்கும் பிரயோகமும்’’ எனும் கட்டுரையில் கல்வியியல் அரங்கினுடைய விளக்கமும் அதனுடைய செயற்பாடுகளை விளையாட்டு, புதிதளித்தல், வினோதங்களை நிகழ்த்துதல், கதை சொல்லல், அசைவும் ஆட்டங்களும், பாடல்களைப் பயிற்றுவித்தல், பேச்சுக்களும் பாராட்டுக்களும், போலச்செய்தல் என்பவற்றின் மூலம் முன்னெடுப்பது தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். குறித்த பாடநூலுக்குத் துணையாய் அமையும் ஒரு சாதனமாக ஆசிரியர் வழிகாட்டி அமையும். அறிவுப் பொருளாதார யுகத்தில் தொடர்பாடல் திறன், ஆளுமைத் திறன், கூட்டுணர்வுசார் நடத்தைகள், தெளிவான பேச்சு போன்றவற்றை விருத்தியுறச் செய்வதற்கு நாடகம் மிகவும் தாக்கவன்மையான சாதனமாகும். ஆகவேதான் தரம் 6-13 வரை நாடகமும் அரங்கியலும் ஒரு விளைதிறன் மிக்க பாடமாக முன்னிறுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர் வழிகாட்டியில் தேர்ச்சி, தேர்ச்சி மட்டம், ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சி என்பவை பற்றியும் குறிப்பிடுவதுடன் மாணவர் மையக்கல்வி முறையையும், கல்வியியல் அரங்கினுடைய நுட்பமுறைகளையும் பற்றி ‘‘ஆசிரியர் வழிகாட்டி’’ குறிப்பிடுகின்றது. இவ்வாய்வினை முன்னெடுத்துச் செல்வதற்கு துணைபுரிகின்றது.

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். குறித்த பாடநூலுக்குத் துணையாய் அமையும் ஒரு சாதனமாக ஆசிரியர் வழிகாட்டி அமையும். அறிவுப் பொருளாதார யுகத்தில் தொடர்பாடல் திறன், ஆளுமைத் திறன், கூட்டுணர்வுசார் நடத்தைகள், தெளிவான பேச்சு போன்றவற்றை விருத்தியுறச் செய்வதற்கு நாடகம் மிகவும் தாக்கவன்மையான சாதனமாகும். ஆகவேதான் தரம் 6-13 வரை நாடகமும் அரங்கியலும் ஒரு விளைதிறன் மிக்க பாடமாக முன்னிறுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர் வழிகாட்டியில் தேர்ச்சி, தேர்ச்சி மட்டம், ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சி என்பவை பற்றியும் குறிப்பிடுவதுடன் மாணவர்

மையக்கல்வி முறையையும், கல்வியியல் அரங்கினுடைய நுட்பமுறைகளையும் பற்றி "ஆசிரியர் வழிகாட்டி" குறிப்பிடுகின்றது. இவ்வாய்வினை முன்னெடுத்துச் செல்வதற்கு துணைபுரிகின்றது.

**கல்வியியல் அரங்கும் அதன் அறிமுகமும்**

Theatre in Education (TIE) 1965 ஆம் ஆண்டு பிரிட்டனில் (Britain) ஆரம்பமாகி இன்றுவரை அனைத்து நாடுகளிலும் இயங்கிக்கொண்டு வருகின்றது. TIE என்பது பாடசாலைக் கல்வி முறைமையில் அரங்க ஆற்றுகை ரீதியாக தொடர்பை ஏற்படுத்தி குறிப்பிட்ட கருத்தாக்கங்களை மாணவர்களுக்கு வழங்கும் செயற்திறன் ஆகும். இக்கற்கையானது பாடசாலைகளில் மாணவர்களுக்கு மிகவும் முக்கியம் வாய்ந்த ஒரு கற்கை நெறியாகக் காணப்படுகின்றது.

போதனைமுறைக் கல்வியானது மாணவர்கள் மத்தியில் ஆக்கபூர்வமான ஆளுமைகளை வெளிப்படுத்தவில்லை. இந்த கல்வி முறைமைக்கு மாறாகவே Theatre in Education (TIE) கொண்டு வரப்படுகின்றது. இக்கல்வி முறைமையில் மாணவர்களினுடைய பங்களிப்பானது அதிகளவாகக் காணப்படுகின்றது. அத்தோடு வாத விவாதங்கள், பங்களிப்புக்கள் மற்றும் செயல்திறன் மூலம் படைப்பாற்றல் உள்ளிட்ட பல்வேறுபட்ட அணுகுமுறையையும், ஆளுமைகளையும் மாணவர்கள் மத்தியில் வழங்குகின்றது.

பிரிட்டனில் ஆரம்பமாகிய Theatre in Education (TIE) ஆனது இலங்கையில் கல்வியியல் அரங்காக (EIT) பரிணாம வளர்ச்சியைப் பெற்றுள்ளமை சிறப்பம்சமாகும். ஈழத்தில் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களே கல்வியியல் அரங்கின் (EIT) மூலகர்த்தா ஆவார். அதனடிப்படையில் கல்வியியல் அரங்கு என்பது ஒரு இலக்குக்குழுவை வைத்துக் கொண்டு அவர்களோடு வேலை செய்து அவர்களுக்கூடாக ஒரு நாடகத்தை உருவாக்கியெடுப்பது ஆகும். உதாரணம் குழந்தை ம.சண்முகலிங்கத்தினால் ஆரோடு நோகேன் எனும் நாடகம் எழுதப்பட்டாலும் மாணவர்களுக்கு களப்பயிற்சி முறைமைகளை மேற்கொண்டு ஆடி, பாடி அவர்களிடமுள்ள திறமைகளை இனங்கண்டு, அவர்களுடைய உளத்தடைகளை நீக்கி கலந்துரையாடி சமூகத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகளையும், குடும்பங்களில் உள்ள பிரச்சினைகளையும் கலந்துரையாடி அவர்களினூடாகவே கதை உருவாக்கப்படுகின்றது. அவர்களினுடைய சிந்தனைகள், ஆற்றல்கள், கலந்துரையாடல்கள் என்பவற்றின் மூலமே இந்நாடகமானது உருவாக்கம் பெற்றள்ளமை குறிப்பிடத்தக்கது.

கற்றல் இடர்பாடுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களுடைய கல்வித் தேவைகளை நிவர்த்தியாக்குவது ஆசிரியர்களின் கடமையாக உள்ளது. காரணம் மாணவர்களிடம் யாதாயினும் ஒரு திறமையாவது ஒளிந்து கொண்டிருக்கும். அந்த திறமை பல்வேறு காரணிகளால் மறைக்கப்பட்டிருக்கலாம், மழுங்கடிக்கப்பட்டிருக்கலாம், சிலவேளை மாணவர்கள் அதை மறந்தும் இருக்கலாம். அல்லது அவர்களுக்கே தெரியாமலும் இருக்கலாம். இந்நிலையில் ஆசிரியர்கள் மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் அதனை வெளிக்கொணர்ந்து

சிறுக சிறுக அதனை ஊக்கப்படுத்தும் போது மாணவர்களும் தங்களைத் தாங்கள் உணர்வதோடு தங்களிடமுள்ள திறமைகளை வெளிப்படுத்த முயற்சி செய்வார்கள். இப்பணி கல்வியியல் அரங்காலே சாத்தியப்படுத்தப்படுகின்றது.

அரங்க ஆற்றுகைகளில் பங்கு கொள்ளும் மாணவர்களில் பெரிய அளவில் மாற்றங்கள் ஏற்படுவதை அவதானிக்க முடிந்தது. கூச்ச சுபாவமுள்ளவர்கள் அதிலிருந்து விடுபட்டனர், முன்வந்து கதைப்பதற்குத் தயங்கிப் பின்நின்றவர்கள் சரளமாக முன்வந்து கதைத்தனர், ஆடிப் பாடுவதற்கு அஞ்சியவர்கள் ஆடினார்கள், பாடினார்கள், எல்லாவற்றிலுமே தன்னையே முன்னிலைப்படுத்தி நின்றவர்கள் ஏனையோருக்கு விட்டுக்கொடுக்கும் மனநிலைக்கும் வந்தனர். ஆக்கத்திறனில் பின்தங்கியிருந்த, தங்களின் மீது நம்பிக்கை இல்லாமல் இருந்த மாணவர்களும் நாடக அளிக்கைகளில் பங்குகொண்டதன் பின்னர் படிப்பிலும், ஏனைய சகல துறைகளிலும் உற்சாகமாகப் பங்கு கொண்டு தமது ஆளுமைகளை வளர்த்துக் கொள்ளவும் வழிவகை செய்துள்ளது.

கல்வியியல் அரங்கில் ஈடுபட்டு வந்த மாணவர்கள், இதற்கு முன்னர் தமது படிப்பை இடைநிறுத்திவிட்டு இருந்த மாணவர்களில் பலர் அரங்க நடவடிக்கைகளில் ஈடுபட்ட பின்னர் தன்னம்பிக்கை பெற்று நாடக அரங்கக் கல்வியைப் பெறுவதில் ஆர்வம் கொண்டு பல்கலைக்கழகத்திற்குச் சென்று நாடகமும் அரங்கியலும் துறையில் பட்டம் பெற்று ஆசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும் இருப்பதோடு அரங்கச் செயற்பாடுகளில் முனைப்புடன் ஈடுபட்டும் வருகின்றனர் (ஜெயசங்கர், 2006).

அரங்க ஆற்றுகைகளில் கலந்து கொண்ட மாணவர்கள் முன்பை விட கல்வியிலும், பாடசாலையின் ஏனைய கருமங்களிலும் கூடியளவு ஆர்வத்தோடு ஈடுபட ஆரம்பித்தார்கள். முன்னர் படிப்பிலும், பாடசாலை நிகழ்வுகளிலும் ஆர்வம் காட்டாதிருந்த மாணவர்கள் இரண்டிலுமே ஆர்வம் கொள்ளத் தொடங்கியதை பாடசாலை ஆசிரியர்களும், அதிபர்களும் அவதானித்தனர். இதற்கு அரங்க அனுபவம் அவர்களுக்கு ஆர்வத்தை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### Theatre in Education (TIE), Drama in Education

Theatre in Education (TIE) என்பது பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த நடிகர் - ஆசிரியர்களைக் கொண்ட ஒரு தொழில்முறைக் குழு ஆகும். இக்குழுவானது பாடசாலைக் கல்வித்திட்டங்களைத் தயாரிக்கும் குழுவாகக் காணப்படுகின்றது. கல்வி நோக்கங்களுக்காக நாடகம் மற்றும் கற்பித்தல் நுட்பங்களையும் வழங்குகின்றது.

Drama in Education என்பது பாடசாலைகளில் மாணவர்கள் கற்பதற்கான ஒரு பாடமாகக் காணப்படுகின்றது. இது பல்வேறுபட்ட அரங்கக் கூறுகளைப் பயன்படுத்துவதுடன் ஒரு செயல்மையக் கற்கையாகவும் காணப்படுகின்றது. சுருங்கக்கூறின் பாடசாலைகளில் பாடத்திட்டமாகக் காணப்படுகின்றது. இதனால் மாணவர்கள் தன்னம்பிக்கை, கற்பனை செய்தல், ஒத்துழைப்பு, ஒற்றுமை, கூட்டுணர்வு, தொடர்பாடல், விட்டுக்கொடுப்பு, உடல் ஆரோக்கியம் எனப் பல்வேறு நன்மைகளைப் பெற்றுக்கொள்கின்றார்கள்.

**கல்வியியல் அரங்கின் முக்கியத்துவம்**

காலனித்துவத்தினுடைய வருகையால் இன்றைய கல்வி முறையானது பரீட்சை மையப்பட்டதாகவும், புள்ளிகளை நோக்கியதாகவும், சான்றிதழ் இலக்குடையதாகவும் காணப்படுகின்றது. இதனை மாற்றியமைப்பதற்குக் கல்வியியல் அரங்கு முக்கிய பங்காற்றுகின்றது.

கல்வியியல் அரங்கானது கல்வி முறைமை பற்றிய உரையாடல்களை நிகழ்த்தும் களங்களாக இருப்பதுடன், பல்வேறு திறமைகள் கொண்ட அரங்கவியலாளர்களையும் உருவாக்கும் தளங்களாகவும் காணப்படுவதுடன் ஏனைய துறைகளிலும் ஆளுமையுள்ளவர்களாக மாற்றியமைப்பதற்கும் துணைபுரிகின்றது.

ஒவ்வொரு மாணவர்களினுடைய ஆளுமைகளையும், திறன்களையும் வெளிக்கொண்டு வருவதற்கும், எவ்விதமான கட்டுப்பாடுகளும் இல்லாமல் அவர்களைச் சுதந்திரமாக இயங்க வைப்பதற்கும், சமூகத்தில் அவர்களை முன்நிறுத்துவதற்கும் துணைபுரிகின்றது.

இலங்கையின் கல்வி நிலையில் காணப்படும் தீவிர போட்டி நிலைகளும், பரீட்சைகளும் மாணவர்களதும், ஆசிரியர்களதும் தனித்துவங்களை இழக்கச் செய்யும் நடைமுறைகளும் மாணவர்களை ஒப்பு நோக்கலும் ஆசிரியரையும், மாணவரையும் மன அழுத்தங்களிற்குத் தள்ளி விடுகின்றன. இவ்வாறான அழுத்தங்களுக்குத் தீர்வாக கல்வியியல் அரங்கு காணப்படுகின்றது.

**கல்வியியல் அரங்கின் செயற்பாடுகள்**

பங்குபற்றல் பண்பையும், சேர்ந்தியங்கும் திறனையும், விமர்சன நோக்கையும், படைப்பாக்கத் திறனையும், மதிப்பீட்டுத் திறனையும், பயில் முறையினூடாகப் பெற்றுக் கொள்ளும் வகையிலான செயற்பாடாகக் கல்வியியல் அரங்கச் செயற்பாடுகள் அமைகின்றது.

ஈழத்தில் நிலவிய உள்நாட்டு யுத்தம் காரணமாக பாடசாலையை மையப்படுத்திய அரங்கச் செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற போது கல்விச் சூழலின் பிரச்சினைகள் பேசுபொருளாகியதுடன், முகாம்களில் தங்கியிருந்த மாணவர்கள், இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைப்பதற்கான வாய்ப்பைக் கல்வியியல் அரங்கச் செயற்பாடுகள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றமையையும் அறிய முடிகின்றது.

இக்கல்வியியல் அரங்கச் செயற்பாடுகள் அதன் வரலாற்றில் குறிப்பிடத்தக்க சாதகமான விளைவுகளை ஈழத்து தமிழ் அரங்கில் ஏற்படுத்தியுள்ளமை கவனத்திற்குரியது. கல்வியியல் அரங்கச் செயற்பாடுகளினால் ஈழத்தில் ஆக்கபூர்வமான கலைஞர்கள், அரங்கவியலாளர்கள் உருவாகியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**மாற்றுக் கல்வியாக கல்வியியல் அரங்கு**

கல்வியானது பாடசாலைகளில் பரீட்சை மையப்பட்டதும், சான்றிதழை இலக்காகக் கொண்ட மையக் கற்கையாகவும், புள்ளிகள், பெறுபேறுகள் எனும் அடிப்படையில் பிழையான திசைக் கோட்படுத்தலை நோக்கி நகர்த்தப்படும் விடயமாகவே காணப்படுகின்றது. அத்தோடு

பாடத்திட்டம், பாடத்திட்டத்திற்கு உட்பட்டு கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுதல் என நடைமுறைக் கல்வியில் கல்வியின் எல்லை சுருக்கி விடப்பட்டுள்ளது. காலனித்துவத்தினுடைய வருகையுடன் காலனிய கல்வி நடைமுறைகளைப் பேணுவதுடன், கல்விச் சமூகத்தை மாற்றிக் கொண்டிருக்கின்றது. இத்தகையப் பிரச்சினைகளுக்குத் தீர்வாகவும், மாற்றுக்கல்வி முறையாகவும் கல்வியியல் அரங்கு செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கல்வியியல் அரங்கு என்ற சிந்தனை ஈழத்துத் தமிழர்கள் மத்தியில் கல்வி எதைச் செய்ய வேண்டுமோ அதனை அரங்கின் ஊடாகவும் செய்து இருப்பதனையும், கல்வியியல் அரங்கினூடாகப் பயிற்சி பெற்றவர்கள் பின்னாளில் கற்பித்தல் செயற்பாடுகளில் மாற்றங்களை முன்மொழிந்தமையையும் அவதானிக்க முடிகின்றது.

கல்வியியல் அரங்கானது, கல்வி பற்றிய விவாதங்களை, விமர்சனங்களை முன்னெடுப்பதுடன் மாற்றுக் கல்விமுறைமை பற்றிச் சிந்திக்கவும் தேடவும் வைக்கின்றது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக கல்வியியல் அரங்கே மாற்றுக் கல்வி முறையாகவும் தொழிற்படுகின்றது. கல்வி முறைமை பற்றிய உரையாடல்களை நிகழ்த்தும் களங்களாக கல்வியியல் அரங்கு இருப்பதுடன், அரங்கியலாளர்களை உருவாக்கும் தளங்களாகவும் காணப்படுகின்றது (ஜெயசங்கர், 2006).

பாடத்திட்டம் மாத்திரம் கல்வி அல்ல என்பதையும், சமூகம் சார்ந்து செயற்படுகின்ற தன்மையினையும், எல்லோருக்கும் சம சந்தர்ப்பங்களை வழங்குகின்ற நிலையையும் கல்வியியல் அரங்கு சாத்தியப்படுத்தி நிற்கின்றது. எழுத்துப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீடுகளில் நிலவும் சமமின்மைகள் களையப்பட்டு, கல்வி முறையில் மாற்றங்களைக் கொண்டுவந்துள்ள தளமாகவும், மாற்றுக்கல்வி முறையாகவும் கல்வியியல் அரங்கு விளங்குகின்றது. கல்வியியல் அரங்கானது இரண்டு கட்டங்களைக் கொண்டமைந்துள்ளது.

முதற்கட்டம் : முதற்படியாக நடைமுறையிலுள்ள பாடசாலை அரங்கச் செயற்பாடுகள். போட்டி, போட்டியில் வெற்றி, வெற்றிப்பரிசு என்று பல மாணவர்களைக் கஷ்டப்படுத்தி, அதில் சில மாணவர்களை மகிழ்விக்கும் சூழலுக்குள் இருந்து விடுவிக்க வேண்டியிருப்பது ஆகும்.

இரண்டாவது கட்டம் : அனைத்து மாணவர்களையும் உள்வாங்கி கலந்து கொள்ளும் விழாவாகப் பரிணமிக்கச் செய்வது ஆகும்

இரண்டாவது கட்டமானது “அனைத்து மாணவர்களையும் உள்வாங்கி கலந்து கொள்ளும் விழாவாகப் பரிணமிக்கச் செய்தல்” என்பவற்றில் நின்று கொண்டே கல்வியியல் அரங்கு பற்றிய புரிதல்களுடன், அரங்கை, மாற்றுக் கல்விமுறையாக பாடசாலைக் கல்விப் பரப்புக்குள் கொண்டு வருவது சாத்தியமாகும் (ஜெயசங்கர், 2006).

கல்வியியல் அரங்கு கல்விப் பரப்பில் நிலவுகின்ற பல்வேறு பிரச்சினைகளை அரங்கினூடாகப் பேசியதோடு மட்டுமல்லாமல் அதற்கான (நாடகத்திற்கான) கருவினைத் தெரிவு செய்து கொள்ளல் ஆகிய செயற்பாடுகளில் மாணவர்களின் பங்குபற்றலை இன்றியமையாததாக மாற்றியுள்ளது. கல்வியுலகில் நிலவுகின்ற பல்வேறு சிக்கல்களைப் பேசுகின்ற வகையில் மாற்றுக்கல்வி முறையாகவும் விளங்குகின்றது.

மனப்பாடமாக்கி ஒப்புவித்தலோடு கூடிய போட்டிமயமான கல்விச் சூழலில் வெற்றிப் பெற்றவர்கள் கொண்டாட்டத்திற்கு உரியவர்களாகவும், தோல்வியடைந்தவர்கள் பழிச்சொல்லுக்கு உரியவர்களாகவும் கட்டமைக்கப்படுவதுடன், திறன்களை விருத்தி செய்வதற்கான வித்தியாசங்களைக் கொண்டாடுவதற்கான தடையாகவும் நடைமுறைக் கல்வி அமைந்துவிடுகின்றது. இந்நிலையில் கல்வியியல் அரங்கு இதற்கு மாறாக வித்தியாசங்களைக் கொண்டாடுவதற்கான, திறன் விருத்திக்கான, சிந்தனை விருத்திக்கான, சமூக எதிர்வினையாற்றக் கூடிய சமூக உருவாக்கத்திற்கானத் தளமாக விளங்குவதனூடாக மாற்றுக்கல்வி முறையாகவும் விளங்குகின்றது.

கல்வியியல் சார்ந்த பிரச்சினைகளை கலந்துரையாடலுக்கு உட்படுத்துவதன் ஊடாகவே தீர்வுகளை எட்ட முடியும். இந்தவகையில் கல்வியியல் அரங்கானது அதற்கான வாய்ப்புக்களையும், சமமான பங்குபற்றல் வாய்ப்புக்களையும், தமது சுயதிறமைகளை வெளிப்படுத்துவதற்கான, வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக்களையும் மாணவர்களுக்கு வழங்குகிறது என்ற வகையில் கல்விச் சூழலில் நிலவுகின்ற பிரச்சினைகளுக்கானத் தீர்வாக இருப்பதுடன் எல்லோரையும் ஈர்க்கின்ற மாற்றுக் கல்வி முறையாகவும் அமைகின்றது.

கல்வியியல் அரங்கானது இன்றைய சூழலில் மாணவர்கள் எதிர்நோக்கும் தடைகள், கட்டிறுக்கங்களை விலக்கி மாணவர்களை சுதந்திரமான செயற்பாடுகளீடுபட்டு வாழ்க்கைக்குத் தேவையான விடயங்களையிட்டு ஆர்வத்துடன் அவர்களைக் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட வைக்கும் மாற்றுக் கல்வி முறையாகவும் இருந்து வருகின்றது.

கல்வியியல் அரங்கின் பிரயோக முறைகளால் மாணவர்களின் திறன் விருத்தியில் நிலவிய வேறுபாடுகள் நீக்கமடைந்து சம ஆற்றல்களுடன் முன்னோக்கிச் செல்வதற்கான வாய்ப்புகள் கிடைத்துள்ளன. இத்தகைய செயற்பாட்டிற்குக் களப்பயிற்சி முறைமை, அரங்க விளையாட்டுக்கள், புதிதளித்தல் முறைமை, கலந்துரையாடல்கள் முதலிய அரங்க நுட்பங்களும் கையாளப்பட்டடுள்ளன.

இவ்வாறான அரங்கியல் நுட்பங்களை முன்னெடுக்கும் போது பொதுவாக மாணவர்களின் சுறுசுறுப்பாக செயற்படும் திறனை விருத்தி செய்தல், கூடிக்கற்றல், குழுவாக இயங்கும் திறனை விருத்தி செய்தல், முன்வைக்கும் திறனை விருத்தி செய்தல், ஞாபகப்படுத்தும் ஆற்றலை விருத்தி செய்தல், மனதை ஒருநிலைப்படுத்தி அவதானிக்கும் திறனை விருத்தி செய்தல், மகிழ்வோடும் இறுக்கமற்ற தளர்வு நிலையில் நின்று செயற்படும் ஆற்றலை விருத்தி செய்தல், பாடசாலையில் ஏனைய நிகழ்வுகளில் பங்கு கொள்ளும் ஆற்றலை விருத்தி செய்தல் என மாணவர்களின் ஒட்டுமொத்த கற்றல் தேவைப்பாடுகளும் நிறைவு செய்யப்படுகின்றன.

அந்தவகையில் களப்பயிற்சிகள், அரங்க விளையாட்டுக்கள், புதிதளித்தல், கலந்துரையாடல் என்பன மாணவர்களுக்குச் சுதந்திரமான உணர்வினை வழங்கி அவர்களை ஆக்கபூர்வமாகச் செயற்படுவதற்கு உந்து சக்தியைக் கொடுத்துள்ளது. இவ் அரங்க உத்திகளே மாணவர்களை வளப்படுத்தும் கல்வியியல் அரங்கின் அடிப்படை அம்சங்களாக இருந்துள்ளமையைத் தெளிவாக விளங்கிக்கொள்ள முடிகின்றது.

**களப்பயிற்சி முறைமை**

அரங்கியல் கலைகளில் முக்கிய பங்கு வகிக்கும் நாடக அரங்கியல் துறை வளர்ச்சியில் அரங்கக் களப்பயிற்சி முக்கியமானதொன்றாகும். அரங்கக் களப்பயிற்சி என்பது பங்குபற்றுபவர்களின் பங்களிப்புடனும், வெளிப்பாட்டுடனும் செய்வதனூடாகக் கூடிக்கற்றலுக்கான சிறந்த கற்கைச் சூழலாக அமைவதாகும். பட்டறிவு மூலம் கற்றலையே களப்பயிற்சி முறைமை நிறைவு செய்கின்றது. நாடகமும் அரங்கியலும் துறை வளர்ச்சியில் பல்வேறு விதமான அரங்கக் களப்பயிற்சிகள் இடம்பெறுகின்றன. அவை நடிப்புப் பயிற்சி, நாடகம் எழுதுதல் பயிற்சி, உடல், குரல், உளம் போன்றவற்றிற்கான பயிற்சி, ஒளியமைப்பிற்கான பயிற்சி, இசையமைப்பிற்கான பயிற்சி, காட்சி விதானிப்பிற்கான பயிற்சி, சிறுவர் அரங்கு, யதார்த்த அரங்கு, மோடி அரங்கப் பயிற்சிகள் என்பனவாகும்.

அரங்கக் கலை வளர்ச்சியில் களப்பயிற்சியானது அரங்கக் கலையின் பயில்வையும், திறமையையும், அனுபவத்தையும் பயிற்சியில் பங்கு கொள்வோர் பெற்றுக் கொள்வதற்கான சூழலையும், வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இவை களப்பயிற்சியின் வெளிப்படை நோக்கமாகவும் காணப்படுகின்றது. களப்பயிற்சிகளில் ஈடுபடுவதனால் கற்பனைவளம், அவதானம், புலனுணர்வு, மனவெழுச்சிகள், கருத்தூன்றல், சுதந்திர சிந்தனை, அழகியல் இன்பம், சமூக உணர்வு போன்ற பல அனுபவங்களும் ஏற்படுகின்றன. களப்பயிற்சியினால் அனைவரும் கூட்டாக இணைந்து எவ்வித கட்டுப்பாடுகளின்றியும் தன்னெழுச்சியாகப் பங்குகொள்ளும் சுதந்திரமான சூழலாகவும் அரங்கு மாறுகின்றது.

மனதை ஒருநிலைப்படுத்தும் பயிற்சி, கற்பனையாற்றலைத் தூண்டும் பயிற்சி, விளையாட்டுக்கள், கூட்டுச்செய்கைகள், நெகிழ்ச்சியான எல்லாவற்றிற்கும் இசைந்து கொடுக்கும் உடல், கற்பனை வளம் நிறைந்த மனம், குரல் ஆகியவற்றுக்கான பயிற்சிகள் மேற்கொள்வதன் மூலம் போலச்செய்தல் எனும் நடிப்பினுடைய ஒரு கூறு துணை செய்கின்றது. இப்போலச்செய்தலுக்கு அடிப்படைக் காரணமாக அரங்கக் களப்பயிற்சியே விளங்குகின்றது.

கல்வியியல் அரங்க எண்ணக்கருவுடன் பாடசாலைக் களவெளியில் களப்பயிற்சி முறைமையூடாகவே இடைநிலை வகுப்பு மாணவர்களுடன் செயன்முறை ரீதியாக ஈடுபட்டு அவர்களுடன் செயற்பட்டு அவர்களுக்குள் உள்ள ஆளுமைகளைக் கண்டறிந்து செயற்பட முடியும்.

**அரங்க விளையாட்டுக்கள்**

விளையாட்டுக்கள் மாணவர்களின் உளவியல், உடலியல் ரீதியில் ஆளுமையை விருத்தி செய்வதுடன், தலைமைத்துவத்தை வளரச் செய்து அதிகளவான சந்தோசத்தைக் கொடுக்கக் கூடியது ஆகும். இதனால் மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல் தூண்டப்பட்டு, இறுக்கம் களைக்கப்பட்டு, சுதந்திரமான மனநிலை தோற்றுவிக்கப்படுகின்றது. இவ் விளையாட்டுக்களில் முக்கியமானதொன்றாக அரங்க விளையாட்டுக்கள் காணப்படுகின்றன.

மாணவர்களை அவர்களது உளநெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கவும் அவர்களது பலம், பலவீனங்களை அவர்களே கண்டறிந்து அதற்கேற்ப தம்மைத் தயார்ப்படுத்தவும், வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது சுறுசுறுப்பாகவும், உற்சாகமாகவும் செயற்படவும், கற்பனைவளம், தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், அவதானம், கருத்தூண்டல், கிரகித்தல், விட்டுக்கொடுப்பு, பொறுமை போன்ற நற்செயற்பாடுகளை மாணவர்களிடம் வளர்த்தெடுக்க அரங்கவியலாளர்களும், கல்வியலாளர்களும் பயன்படுத்துகின்ற ஒரு சாதனம் அரங்கவிளையாட்டுக்கள் ஆகும். மேலும் உடலைத் தளர்நிலையில் வைத்திருக்கவும், உளச்சமநிலையைப் பேணவும், தொடர்பாடல் திறனை வளர்த்தெடுக்கவும், நாடகப் பயிற்சிகளை வினைத்திறன் உள்ளதாக மேற்கொள்ளவும் அரங்க விளையாட்டுக்கள் துணைபுரிகின்றன (சிவகுமார், 2009).

மாணவர்களிடையே இறுக்கமான நிலையைக் களைவதற்கும் இலகுவான அல்லது இலேசானதும், சுதந்திரமானதுமான மனநிலையை ஏற்படுத்துவதற்கும் அரங்க விளையாட்டுக்கள் உதவுகின்றன. இவ்விளையாட்டுக்கள் மாணவர்களின் தேர்ச்சியினை அதிகரிக்கக் கூடிய தயார்நிலையை மாணவர்களுக்கு ஏற்படுத்த உதவுகின்றது எனலாம். அதுமட்டுமல்லாது உடனடியான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கக்கூடிய செயற்திறனையும் மாணவர்களிடையே பிணைப்பையும், நற்பண்புகளையும், முதிர்ச்சியையும் ஏற்படுத்துகின்றது. அத்தோடு ஒன்றிணைந்து செயற்படுவதற்கும், அழகியல் ஆற்றல்களை வளர்த்தெடுப்பதற்கும், எல்லாவற்றிற்கும் மேலாக பிள்ளைகளை, பிள்ளைகள் போல் செயற்பட வைப்பதற்கும் ஆசிரியர்களுக்கு உதவுகின்றது.

**புதிதளித்தல்**

புதிதளித்தல் என்பது ஒரு செயலை, நிகழ்வை, சூழமைவை, பாத்திரமொன்றை, பொருள்களை எவ்வித முன்னாயத்தமுமின்றி உடனடியாகச் செய்து காட்டுவது ஆகும். பல்வகைமைப் படைப்பாக்கங்களைச் செய்வதற்கானத் தயார்ப்படுத்தலைத் திறன்படச் செய்ய புதிதளித்தல் அவசியமாகின்றது. இதனைத் தனியாகவும், கூட்டாகவும் வெளிக்கொணர முடியும். இந்த நுட்பமுறை மாணவர்கள் மத்தியிலும் பிரயோகிக்கப்பட்டது (சந்திரகுமார், 2017).

இவற்றுள் புத்தாக்கம், படைப்பாக்கத்திறன், கற்பனை என பல அம்சங்கள் காணப்படுகின்றன. எந்தவொரு நிலையிலும் எந்தவிதமான தயார்ப்படுத்தலுமின்றி உடனடியாக வித்தியாசமாகச் செய்து காட்டல் இதன் சிறப்பம்சமாகும்.

**கலந்துரையாடல்**

கல்வியியல் அரங்கின் முக்கிய அம்சமாகக் காணப்படுவது கலந்துரையாடல் ஆகும். உடல் ரீதியான, உள ரீதியான, ஆளுமை ரீதியான ஆற்றுப்படுத்தல் போன்ற செயற்பாடுகளுக்குக் கலந்துரையாடல் அவசியமானதாகும்.

களப்பயிற்சி முறைமையூடாக அரங்கப் பயிற்சிப் பட்டறையின் போது மேற்கொள்ளப்பட்ட அரங்க விளையாட்டுக்கள், புதிதளித்தல்கள், ஆக்கச் செயற்பாடுகள், நாடக ஒத்திகைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படும். மாணவர்கள் தமது

கருத்துக்களைச் சுதந்திரமாகத் தெரிவிப்பதற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படும். மாணவர்களும் எவ்விதமான தடைகளும், கட்டிறுக்கமில்லாத நிலையில் சுதந்திரமாகக் கலந்துரையாடலை மேற்கொண்டார்கள்.

கலந்துரையாடல்களின் மூலம் மாணவர்களினுடைய பிரச்சினைகள் என்பவற்றுடன் அவர்களினுடைய கருத்துக்களையும் கேட்டறிந்து கொள்ள முடிந்தது. இவற்றின் மூலம் ஆய்வாளருக்கும், மாணவர்களுக்கும் இடையிலான இடைவெளியினைக் குறைத்து அவர்களுடன் இணைந்து செயற்பட முடிந்தது.

**முடிவுரை**

கல்வியியல் அரங்க உத்திகளான களப்பயிற்சி முறைமைகளுக்கூடாக மாணவர்களைச் செயற்படுத்தி அவர்களுக்கூடாகவே நாடகப் பனுவல்களை உருவாக்கி, அப்பனுவல்களை வைத்துக் கொண்டு எல்லா மாணவர்களும் பங்கு கொள்ளக்கூடிய வகையில் பயிற்றுவிப்பதும், நாடகங்கள் பயிற்றுவிக்கப்பட்டதன் பின்னர் அவற்றைப் பொதுவெளியில் ஒரு அரங்கேற்றமாகச் செய்வதும், அதிலே பங்கு பற்றுகின்ற மாணவர்களை வாழ்த்துவதும், பாராட்டுவதும், பரிசுப் பொருட்கள் கொடுப்பதும், ஊக்குவிப்புக்கள் செய்வதும் அவசியமானதாகும். இவ் அரங்கச் செயற்பாடுகளினால் நல்ல சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

அந்தவகையில் கல்வியியல் அரங்கு சமூக எதிர்வினையாற்றக் கூடிய கல்விச் சமூக உருவாக்கத்திற்கான காத்திரமான அடித்தளத்தை வழங்குவதனூடாக மாற்றுக் கல்வி முறையாகவும் செயற்படுகின்றது. கல்விச் சூழலின் சமமின்மைகளைக் களைந்து, சமத்துவமான வாய்ப்புகளை வழங்குவதனூடாக மாணவர்களினுடைய தனிப்பட்ட திறமைகளை அடையாளங்காணவும், அதனை வளர்த்துக் கொள்ளவுமான வாய்ப்பையும் வழங்குகின்றது.

நல்ல சமுதாயத்தையும், நல்ல மனிதர்களையும், அறிவாளிகளையும், புத்திஜீவிகளையும் உருவாக்கும் செயற்பாடாகக் கட்டியெழுப்ப முடியும். அந்தவகையில் சமூக எதிர்வினையாற்றக்கூடிய கல்விச் சமூக உருவாக்கத்திற்குக் காத்திரமான அடித்தளத்தை வழங்குவதுடன் மாற்றுக்கல்வி முறையாகவும் செயற்படுவதுடன் கல்விச் சூழலில் சமமின்மைகளைக் களைந்து சமத்துவமான வாய்ப்புக்களை வழங்குவதுடன் மாணவர்களினுடைய தனிப்பட்ட திறமைகளை அடையாளங்காணவும் அதனை வளர்த்துக் கொள்ளவும் வாய்ப்பை வழங்குகின்றது. போதனைமுறைக் கல்வியிலிருந்து விலகி மகிழ்வூட்டலுடன் கூடிய அறிவூட்டல் செயற்பாடுகளுக்கூடாக மாணவர்களுக்கு உடனடிப் பயிற்சியளிப்பதுடன் உடனடியாக எதிர்வினைகளைக் கண்டறிந்து அவர்களிடம் அதைப் பரீட்சித்துப் பார்த்து அவர்களிடமிருந்து அதை ஒப்புவித்துப் பார்த்து அவர்களுடைய நோக்கத்தை அடைந்து இருக்கின்றார்களா? அல்லது அடையவில்லையா? என்பதை இனங்கண்டு அதற்கூடாக ஒரு முடிவிற்கு வருவதுடன் மாணவ சமுதாயத்தை ஒரு சீரான நல்ல வழிப்படுத்துவதுடன், ஒரு நல்ல சமுதாய உருவாக்கத்தினையும் புத்திஜீவியாக மாற்றுவதற்கும் இக்கல்வியியல் அரங்கச் செயற்பாடு நடைமுறையில் உள்ளதெனவும் இதற்காக பல கல்வியியல் அரங்கச் செயற்பாட்டு உத்திமுறைகள் இங்கு எம்மால் இனங்காணப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கல்வியியல் அரங்கினுடைய ஆரம்பம் இந்தியாவாகக் காணப்பட்டாலும் அதனைத் தொடர்ந்து குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் இலங்கையில் கல்வியியல் அரங்கை அறிமுகப்படுத்தினார். அதன்பிற்பாடே கல்வியியல் அரங்கானது கல்வி நோக்கத்திற்காக கையாளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கூடி விளையாடி மகிழ்ந்து கற்கின்ற கற்றல் செயற்பாடுகளையும் அதுசார்ந்த கூட்டு முயற்சிகளையும் மாணவர்கள் மத்தியில் இருக்கின்ற தடைகளை அகற்றுவதுமான ஒரு கற்பித்தல் முறைமையை கல்வியியல் அரங்கிற்கூடாக கொண்டு வருவதே கல்வியியல் அரங்கினுடைய நோக்கமாகவும் காணப்படுகின்றது. அத்தோடு குழந்தை ம.சண்முகலிங்கத்தினுடைய நாடகப் பனுவல்களும் அவர் கல்வியியல் அரங்கிற்கூடாக தயாரித்த நாடகப்பனுவல்களும் அவ்நோக்கங்களை நிறைவு செய்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அதில் கூடிக்கற்றல், மகிழ்ந்துகற்றல், விளையாடிக்கற்றல், பிழைவிட்டுக்கற்றல் என்பனவும் இனங்காணப்படுகின்றது. அவை மாணவர்களுக்கு கல்வி ஊக்கமளிப்பு வழியாகவும் அவர்கள் கற்றல் செயற்பாடுகளில் தாமாகவே ஈடுபடுவதற்கான உத்திமுறைகளாகவும் மாணவர்களை இடைவிலகலில் இருந்து தவிர்த்துக் கொள்வதற்கான வழிமுறையாகவும் அவர்களின் சுயதேடலுக்கும், சுய கற்றலுக்குமான வழிமுறையாகவும் கல்வியியல் அரங்கு அமைகின்றமை இவ்ஆய்வினூடாக கண்டுகொள்ளப்படுகின்றது.

**உசாத்துணைகள்**


கௌரீஸ்வரன், து. (2019). கல்வியியல் அரங்கச் செயற்பாடுகளும் இணைந்த கலைகளின் வகிபங்கும் - ஓர் ஆய்வு.

சண்முகநாதன், கு. (2015). *கல்வி மெய்யியல்.* ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம். குரு பிறிண்டேர்ஸ்..

சிவகுமார், கு. (2009). *சிறுவர் அரங்கு.* குமரன் புத்தக இல்லம்.

ஞானவள்ளி, கு. (2019). சண்ணரது கல்வியியல் அரங்கும் பிரயோகமும். *கலை இலக்கிய மாத சஞ்சிகை. ஜீவநதி.*

ஜெயசங்கர், சி. (2006). சண்ணரது கல்வியியல் அரங்கு. மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு.

Brainstorm Productions. (2020, February 4). *Benefits of Theatre in Education*. Brainstorm Productions. Retrieved from https://www.brainstormproductions.edu.au/theatre-in-education/

*Theatre-in-Education (TiE)*. (n.d.). Belgrade Theatre. Retrieved January 14, 2024, from https://www.belgrade.co.uk/theatre-in-education-tie

# Education and Society

# தரம் ஐந்து புலமைப்பரிசில் மாணவர்களின் கற்றல் அடைவில் பெற்றோர்களின் சமூக - பொருளாதார காரணிகளின் செல்வாக்கு (போரதீவுப்பற்றுக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

**சுஜானா சிவசுதன்**

Sujauthyakumar@mail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வானது போரதீவுப்பற்றுக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இப்பிரதேசப் பாடசாலைகளிலே புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் பெறுகின்ற அடைவானது மிகவும் தாழ்நிலையில் காணப்படுகின்றது. இதனடிப்படையிலேயே தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களின் கற்றல் அடைவுகளில் பெற்றோர்களின் சமூக பொருளாதார காரணிகளின் செல்வாக்கினைக் கண்டறிதல் எனும் ஆய்வு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்விற்காக ஆய்வு மாதிரிகளாக அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். இவ்வாய்விற்கென தெரிவுசெய்யப்பட்ட 10 பாடசாலைகள் வசதி மாதிரித் தெரிவின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டமைக்கு அமைவாக அதிபர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் நோக்கமாதிரி அடிப்படையிலும், மாணவர்கள் விகிதாசாரத்தின் அடிப்படையிலும், இலகு எழுமாற்று மாதிரித் தெரிவின் அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்டனர். ஆய்விற்கான தரவுசேகரித்தல் கருவிகளாக வினாக்கொத்து, நேர்காணல், ஆவணங்கள் ஆகியன பயன்படுத்தப்பட்டன. இவற்றின் மூலமாகப் பெறப்பட்ட தரவுகள் அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகள் பொருத்தமான மென்பொருள் முறைகளினூடாக பகுப்பாய்வு, வியாக்கியானம், கலந்துரையாடல் போன்ற செயற்பாடுகளுக்குள் உள்வாங்கப்படுகின்றன. பகுப்பாய்வு மூலம் பல்வேறு முடிவுகளைக் கண்டறிய முடிகின்றது. போரதீவுப்பற்றுக் கல்விக்கோட்டத்திலே பெற்றோரின் பொருளாதார காரணி மாணவர்களின் கற்றலில் பல்வேறுபட்ட தாக்கத்தினைச் செலுத்துகின்றது. இத்தாக்கமானது பாடசாலைகளின் கற்றல் அடைவிலும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. அதாவது இப்பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியில், பரீட்சைகளின் அடைவுமட்டங்கள் குறைதல், இணைப்பாட விதானச் செயற்பாடுகளின் சாதனை மட்டங்களில் தொய்வு நிலை, மாணவர் இடைவிலகல், மாணவர் தினவரவு குறைவடைதல், கற்றலில் விருப்பமின்மை, இணைபாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடாமை, மேலதிக வகுப்பிற்குச் செல்ல முடியாமை, கற்றல் சூழல் பாதிப்படைதல், மாணவர் விருப்பமான பாடத்தை தெரிவு செய்து கற்க முடியாமை, பாடசாலைகள் குறித்த இலக்கினை அடையமுடியாமை போன்ற பல்வேறு வழிகளில் பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றது எனக் கண்டறியப்பட்டதோடு, இது தொடர்பில் பல பிரச்சினைகளும் இனங்காணப்பட்டு, இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான விதப்புரைகளும் இவ்வாய்வினூடாக முன்வைக்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *அடைவுமட்டம், கற்றல், குடும்பம்சார் காரணிகள், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை*

## அறிமுகம்

இன்றைய நவீனகாலத்திலே அனைத்துத் துறைகளும் விரைவாக வளர்ச்சியடைந்து வருவதைக் காணலாம். அந்த வகையிலே கல்வித் துறையும் வளர்ச்சியடைந்து கொண்டு வருகின்ற வேளையிலே கல்வி தொடர்பான பல பிரச்சினைகளும் ஊற்றெடுத்த வண்ணமே உள்ளன. அந்தவகையிலே போரதீவுப்பற்றுக் கல்விக்கோட்டத்திலே நீண்ட காலமாக தீர்க்கப்படாத பிரச்சினையாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை அடைவானது மிகப் பின்தங்கிய நிலையிலே காணப்படுகின்றது. இதற்கான முக்கிய காரணியாக பெற்றோர்களின் சமூக பொருளாதாரம் காணப்படுகின்றது. இதன் காரணமாக வினைத்திறனான மாணவர்கள் காணப்படுகின்ற போதிலும் விளைதிறனைப் பெற்றுக் கொள்வதில் பாரிய சவால்களை

எதிர்நோக்க வேண்டியுள்ளது. அதனால் அப்பிரதேசங்கள் கல்வி அபிவிருத்தியில் பின்தங்கிய நிலையே காணப்படுகின்றது.

கல்வி என்பது ஒவ்வொரு பிள்ளையினதும் முதன்மையான மற்றும் அடிப்படை உரிமையாகும். அனைத்து மாணவர்களும் ஆரம்பக்கல்வியின் அணுகலை உறுதி செய்வது அரசாங்கத்தின் கடமை மட்டுமல்ல பெற்றோரினதும் கடமையுமாகும். முன்பள்ளிப் பருவத்திலிருந்து புதிய சூழலுடன் போட்டியிடுவதற்கு ஆரம்பக்கல்வி அடித்தளமாய் அமைகின்றது. மாணவரின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கான முதன்மைத் தேவையாகவும், கல்வி கற்ற இளம் சமுதாயத்தினரை வெளிக்கொணரும் முதல் முயற்சியாகவும் இது அமைகின்றது.

இலங்கையில் ஆரம்பக் கல்வி நிலை தரம் 1-5 வகுப்புக்களைக் கொண்டதாக அமைகின்றது. 5-10 வயது வரையிலான பருவத்தினர் இக்கல்வியைக் கற்கின்றனர். ஐந்து ஆண்டுகளைக் கொண்ட ஆரம்பக்கல்விப்புலம் கலைத்திட்ட விருத்தியினதும், ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளினதும் வசதி கருதி முதன்மை நிலை 1 (தரங்கள் 1,2), முதன்மை நிலை 2 (தரங்கள் 3,4), முதன்மை நிலை 3 (தரம் 5) என முன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு இன்று அனைவராலும் எதிர்பார்க்கப்படும் ஒன்றாகும். தேசிய பரீட்சைகளுள் ஒன்றான இப்பரீட்சைக்குக் கல்விச் சமூகம் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றது. பின்தங்கிய வலயங்களைப் பார்க்கின்ற போது பெற்றோரின் செல்வாக்கானது மிகக் குறைந்தளவிலே காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

கல்வி ஒரு நீடித்த செயன்முறை மேலும் கல்வி வாய்ப்புக்களைப் பெறுவதில் ஆரம்பக் கல்வியின் செயல்திறன் முக்கிய பங்கு வகிக்கின்றது. எனவே ஆய்வின் முக்கிய நோக்கம் ஆரம்ப நிலையில் குழந்தைகளின் கல்வி அடைவினை குடும்ப சமூக பொருளாதர பின்னணி எவ்வாறு பாதிக்கின்றது என்பதை ஆராய்வது ஆகும். நகர்புற மாணவர்களுடன் ஒப்பிடுகையில் கிராமப்புற மாணவர்களின் கற்றல் அடைவுகள் அவர்களின் குடும்பங்களின் சமூகப் பொருளாதார நிலையில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதையும் அவதானிக்கலாம்.

**ஆய்வுப் பின்னணி**

“இன்றைய சிறுவர்கள் நாட்டின் எதிர்கால தலைவர்கள்” என்ற கூற்றிற்கிணங்க பாடசாலையில் மிக முக்கிய பங்கு வகிப்பவர்கள் ஆரம்பப்பிரிவு மாணவர்கள். இவர்களுக்கு இடப்படும் அடித்தளமானது வலிமையுடையதாக இருந்தால் தான் எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளை உருவாக்க முடியும். ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களின் கற்றல் அடைவானது மிகவும் பின்தங்கிய நிலையிலே காணப்படுகின்றது. இவற்றிற்கு அடிப்படைக் காரணியாக அமைவது பெற்றோரின் சமூக பொருளாதாரம் ஆகும். அதாவது குடும்ப வருமானம், வேலை வாய்ப்பு, போக்குவரத்து, போசாக்கான உணவுகள், மருத்துவ வசதிகள், சீருடைகள், தேவையான பாடசாலை உபகரணங்கள், பரீட்சைக் கட்டணங்கள், பிரத்தியேக வகுப்பிற்கான செலவுகள் போன்றனவும் சமூகக் காரணிகளாக பாடசாலை அமைவிடம், ஆசிரியர் வேறுபாடுகள், பாரபட்சம் காட்டல், போதைப்பொருள் பாவனை, சமூக விழுமியங்கள், சமூக பழக்கவழக்கங்கள், சாதி

வேறுபாடுகள், சகபாடிகள், பொழுதுபோக்கு சாதனங்கள், சமூக மூடநம்பிக்கைகள் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

பிள்ளைகளின் தேவைகள் நிறைவேற்றப்படும் முதன்மையான இடமாக குடும்பச் சூழல் அமைகின்றது. இச் சூழல் மகிழ்ச்சிகரமாக அமையப் பெற்றால் மாத்திரமே பிள்ளையினால் கற்றலில் மகிழ்ச்சிகரமான சூழலை ஏற்படுத்த முடியும். பெற்றோரின் கல்விமட்டம் மிகவும் குறைவாகக் காணப்படுவதனால் அவர்களுக்கு கல்வியின் முக்கியத்துவம் பற்றி எவ்வித அறிவும் இல்லை. இதனால் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் வீட்டில் கற்பதற்குரிய பொருத்தமான கல்விச் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதில் அக்கறை காட்டாத நிலையினை அவதானிக்க முடிகின்றது. மேலும் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகவும், வருமானம் குறைவாகக் காணப்படுவதனாலும், குடும்பத் தலைவரின் குடிப்பழக்கம் காரணமாகவும், குடும்பத்தில் ஏற்படுகின்ற சண்டை, சச்சரவு காரணமாகவும், கற்றலுக்குரிய சாதகமான வீட்டுச் சூழல் அமையப் பெறாமையினாலும், பெற்றோர்கள் வெளிநாடு செல்வதனாலும், சிறுவர் தொழிலாளர்கள் உருவாகுவதனாலும் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களின் கற்றல் அடைவானது மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளதனை அவதானிக்க முடிகின்றது.

**ஆய்வுக்கான நியாயம்**

பிள்ளைகளின் வெற்றியில் பெற்றோரின் பங்களிப்பு மிக அவசியமாகும். மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்கு கல்வி அவசியமாகும். ஒரு பிள்ளை கற்றுக் கொள்வதற்கான முதன்மையான இடமாக குடும்பம் விளங்குகின்றது. பிள்ளையின் அறிவு விருத்தியில் முதல்நிலை ஆசான்களாக பெற்றோர்களே இருக்கின்றார்கள். பிள்ளை குடும்பச் சூழலிலிருந்தே கற்றலுக்கான ஆரம்ப அறிவினைப் பெற்றுக் கொள்கின்றது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் மிகக் குறைந்தளவிலான புள்ளிகளையே பெறுகின்றனர். வெட்டுப்புள்ளியுடன் ஒப்பிடுகின்ற போது சாதாரண சித்தியான 70 புள்ளிகளைக்கூட பெறமுடியாத மாணவர்களே கிராமப்புற பாடசாலைகளில் காணப்படுகின்றனர். இவற்றிற்கான காரணங்களைத் தெளிவாக அறிந்து அவர்களின் முன்னேற்றத்திற்கான போதிய வாய்ப்புக்களை நல்கும் வழிவகை இனங்கண்டு அவற்றைப் படுவான்கரைப் பாடசாலைகளிலே தோற்றுவிக்கும் வகையிலான வசதி வாய்ப்புக்களை இயலச் செய்வதற்கும், சிறப்பான மாணவர் சமூதயாயத்தை உருவாக்குவதற்கும், எதிர்காலத்தில் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை சிறப்பான முறையில் திட்டமிட்டு கொண்டு செல்லவும் பெற்றோர், மாணவர் சார்பான பிரச்சினைகளை அபிவிருத்தி செய்யவும் இவ்வாய்வு ஒரு அவசியமானதாகும்.

**ஆய்வுப் பிரச்சினைகள்**

குடும்பங்களின் அதிகரித்த வறுமை, கற்றலுக்கான சூழலின்மை, குடும்ப மாதாந்த வருமானம் போதாமை, பெற்றோர் வெளிநாடு செல்லுதல், பிரத்தியேக வகுப்புச் செலவுகள், பரீட்சைக் கட்டணங்கள், கற்றல் உபகரணங்கள், வேலைவாய்ப்பு, போக்குவரத்து, பணத்தேவைகளுக்காக பிள்ளைகளை மாலை வேளையில் வேலைக்கு அனுப்புதல், போசாக்கான உணவு உட்கொள்ளாமை போன்ற காரணிகளினால் பிள்ளைகள் வீட்டிலும்

பாடசாலைகளிலும் வினைத்திறன் கொண்ட செயற்பாடுகளை கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி கொள்வதில் பின்னடைவைக் காட்டுகின்றனர். தரம் 5 மாணவர்கள் பலர் எழுத்துக்களை இனங்காண, வாசிக்க, சொற்களை விளங்கிக்கொள்ள, வசனங்களை அமைக்க, வாக்கியங்களைப் புரிந்து கொள்ள, அடிப்படைக் கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் செய்முறைகளை செய்ய முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர். பெற்றோர், குடும்ப அங்கத்தவரிடையே அதிகரித்துச் செல்லும் மதுப்பாவனை மற்றும் போதைப் பொருள் காரணமாக குடும்ப வன்முறைகள் அதிகரிப்பதுடன் மாணவர்களின் மன உழைச்சலுக்கு ஆளாவதுடன் கற்றல் செயற்பாடுகளும் பாதிப்படைகின்றது. பெண்கள் தொழில் நிமிர்த்தம் வெளிநாடு செல்கின்றனர். இந்நிலையில் தங்களது பிள்ளைகளை தமது உறவினர்களுடன் விட்டுச் செல்கின்றனர். உறவினர்கள் கற்றலில் எவ்வித அக்கறையும் காட்டாமை, பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துதல், போன்ற காரணிகளால் இம்மாணவர்கள் கற்றல் அடைவில் பின்தங்கிக் காணப்படுவதுடன் காலப்போக்கில் இடைவிலகலுக்கும் வழிவகுக்கின்றது. சிறுவர் தொழிலாளர் உருவாகும் தன்மையைக் காணக்கூடியதாக உள்ளது. தந்தையுடன் மீன் பிடி, விவசாயம், கட்டடவேலைகள், தோட்ட வேலைகளுக்குச் செல்வதனால் மாணவர்கள் வீட்டில் கற்பதற்கும், பாடசாலை வேலைகளைச் செய்வதற்கும் குடும்பத்திலுள்ள பொருளாதாரம் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

**ஆய்வு நோக்கங்கள்**

***பொது நோக்கம்***

தரம் ஐந்து புலமைப்பரிசில் மாணவர்களின் கற்றல் அடைவில் பெற்றோர்களின் சமூக பொருளாதார காரணிகளின் செல்வாக்கினைக் கண்டறிதல்.

***சிறப்பு நோக்கங்கள்***

1. தரம் ஐந்து மாணவர்களின் குடும்ப பொருளாதார நிலைமைகளை இனங்காணல்.
2. பெற்றோரின் சமூக பொருளாதார காரணிகள் மாணவர்களின் கற்றலில் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புக்களைக் கண்டறிதல்.
3. மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் பெற்றோரின் ஈடுபாடு, ஒத்துழைப்பு எத்தகையன என்பதனைக் கண்டறிதல்.
4. மாணவர்களின் கற்றல் அடைவுகளை மேம்படுத்துவதற்குரிய ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் முன்மொழிதல்.

**ஆய்வு வினாக்கள்**

1. தரம் ஐந்து மாணவர்களின் குடும்ப பொருளாதார நிலைமைகள் யாவை?
2. பெற்றோரின் சமூக பொருளாதார காரணிகள் மாணவர்களின் கற்றலில் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புக்களைக் யாவை?
3. மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் பெற்றோரின் ஈடுபாடு, ஒத்துழைப்பு எத்தகையன?
4. மாணவர்களின் கற்றல் அடைவுகளை மேம்படுத்துவதற்குரிய ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் எவை?

### இலக்கிய மீளாய்வு

Lee, (2019) மேற்கொண்ட ஆய்வு முடிவில் வறுமை, பெற்றோரின் குறைவான பங்களிப்பு, பெற்றோரின் அக்கறையின்மை, பெற்றோரின் பிரிவு, குடும்பப் பருமன், குறைவான சமூகப் பொருளாதாரநிலை போன்ற வீட்டுச்சூழல் காரணிகள் மாணவர்களின் கற்றல் அடைவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

kamuti (2018) மேற்கொண்ட ஆய்வு முடிவில் ஆரம்ப, இடைநிலை மாணவர்களின் வீட்டு வேலைகள், பிள்ளைகளின் நடத்தைகள் மற்றும் கல்வி அடைவுகள் என்பவற்றில் பெற்றோர் பங்களிப்புக்கள் அவசியமானது. வீட்டு வேலைகளில் பெற்றோரின் கட்டுப்பாடுகள் மற்றும் ஒத்துழைப்பு என்பன மாணவர் அடைவில் பாரிய செல்வாக்குச் செலுத்துகின்றன எனக் கூறியுள்ளார்.

Vasudevan (2017) மேற்கொண்ட ஆய்வு முடிவில் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் பெற்றோரின் கல்வி மீதான அக்கறையின்மை, குடும்ப வருமானம், பெற்றோரின் தொழில், பெற்றோரின் குறைந்த கல்வி மட்டம், பெற்றோர் பிரிவு, பெற்றோரின் மறுமணம், வீட்டில் இடவசதி காணப்படாமை, குடும்பப் பருமன், ஊட்டச்சத்துள்ள உணவு இன்மை போன்ற வீட்டுச் சூழல் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன எனக் குறிப்பிட்டுள்ளார்.

Latif, (2015) மேற்கொண்ட ஆய்வு முடிவில் பிள்ளைகள் கல்வியை விட்டு இடைவிலக பொருளாதாரநிலை காரணமாகும். உலகிலுள்ள பிள்ளைகளில் 130 மில்லியன் பிள்ளைகள் கல்வியை விட்டு இடைவிலகுகின்றனர். அதற்கு பொருளாதார நிலை ஒரு காரணமாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

Kainuwa & Yusuf, (2013) மேற்கொண்ட ஆய்வு முடிவில் சமூக பொருளாதார காரணிகள் கற்றலில் ஆரம்ப பாடசாலை மாணவர்களின் இடைவிலகலில் அதிகமான தாக்கத்தை விளைவிக்கின்றது. கிராமப்புற மற்றும் நகர்ப்புற உயர்ந்த படிப்பறிவு உள்ள பெற்றோர்கள் தங்களின் பிள்ளை தொடர்பான கண்காணிப்பில் அதிக அக்கறையுடன் செயல்படுகின்றார்கள். மாறாக கல்வி அறிவற்ற பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளின் கல்வி தொடர்பாக அக்கறை காட்டாமையினால் ஆரம்ப பாடசாலைக் கல்வியில் பிள்ளையின் ஊக்கமும் குறைவடைய காரணமாக அமைகின்றது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

### ஆய்வுமுறையியல்

#### *ஆய்வு வடிவமைப்பு*

விபரண ஆய்வு முறைகளில் ஒன்றான அளவை நிலை ஆய்வுமுறை இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரச்சினைக்குரிய தீர்வைக்காண, ஆய்வு நோக்கங்களை உருவாக்க, ஆய்வு தொடர்பான முன்னய அறிவு அவசியமாகும். இதற்காகவே இலக்கிய மீளாய்வு வலுச் சேர்க்கப்பட்டுள்ளது. ஆய்வு முறையியலும் இவ்வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், ஆய்வு தொடர்பாக சேகரிக்கப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வும்

அமைந்துள்ளது. தரவுகளைச் சேகரிப்பதற்காக ஆய்வுக்கருவிகள் தயாரிக்கப்பட்டன. இதற்காக வினாக்கொத்துக்கள் தயாரிக்கப்பட்டு மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஆகியோரிடம் கொடுத்துத் தரவுகள் பெறப்பட்டு அவை தொடர்பான முடிவுகள் தொகுக்கப்பட்டன. உண்மையைக் கண்டறிவதற்கும், தரவுகளைத் தொகுத்து விமர்சிப்பதற்கும் அளவைநிலை ஆய்வுகள் (Survey Research) அவசியமாகின்றன. அதற்கிணங்கவே தரம் ஐந்து புலமைப்பரிசில் மாணவர்களின் கற்றல் அடைவில் செல்வாக்குச் செலுத்தும் குடும்பக் காரணிகள் தொடர்பான அறிவு, தகவல் என்பன தொகுக்கப்பட்டு அவற்றினைக் கொண்டு ஆய்வு தொடர்பாக விமர்சிக்கப்பட்டுள்ளதால் அளவைநிலை ஆய்வுமுறை இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆய்வின் பொருட்டு 1C பாடசாலைகள் 05 உம், வகை II பாடசாலைகள் 02 உம், வகை III பாடசாலைகள் 03 உம் வசதி மாதிரி அடிப்படையில் 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அதிபர்கள் எவ்வித மாதிரி தெரிவுமின்றி நேரடியாகப் 10 பாடசாலையின் 10 அதிபர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆசிரியர்களின் மாதிரித் தெரிவானது தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளிலுமுள்ள ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களே மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டனர். மொத்தம் 64 ஆசிரியர்களில் எவ்வித மாதிரித் தெரிவுமின்றி நேரடியாக நோக்கமாதிரி அடிப்படையில் 64 ஆசிரியர்களும், தரம் 05 கல்வி பயிலும் 218 மாணவர்களும் விகிதாசாரத்தின் அடிப்படையிலும், இலகு எழுமாற்று மாதிரி மூலமும் தெரிவு செய்யப்பட்டு மாதிரிகளாக்கப்பட்டனர். மாணவர்கள் 4:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 55 மாணவர்களும் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 55 மாணவர்களின் பெற்றோர்களும் நோக்க மாதிரியின் மூலமும் தெரிவு செய்யப்பட்டு ஆய்வு நிகழ்த்தப்பட்டது. இதனை மையமாகக் கொண்டு ஆய்வு நோக்கத்தின் அடிப்படையிலும், இலகு எழுமாற்று மாதிரி அடிப்படையிலும் மாதிரி அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுத்தரவுகள் பெறப்பட்டன. அங்குள்ள அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என்பவர்களிடம் இருந்து வினாக்கொத்துமுறை, நேர்காணல்முறை போன்ற ஆய்வுக்கருவிகள் துணைகொண்டு தரவுகள் பெறப்பட்டு ஆய்வு நிகழ்த்தப்பட்டது.

**பட்டிருப்பு கல்வி வலயப் பாடசாலைகள் பற்றிய விபரம் (வலயக்கல்வி அலுவலகம் - பட்டிருப்பு – 2023)**

| வலயப் பிரிவுகள் | பாடசாலை வகை | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | I AB | IC | TypeII | Type III | |
| போரதீவுப்பற்று | 02 | 09 | 09 | 13 | 33 |
| தென்னெருவில்பற்று | 07 | 06 | 07 | 17 | 37 |

அட்டவணை 2.1 (வலயக்கல்வி அலுவலகம் - பட்டிருப்பு - 2023)

**குறிப்பு:** மேற்படி இவ்வாய்வுக்கு இணங்க தரம் ஐந்து புலமைப்பரிசில் மாணவர்களின் கற்றல் அடைவில் பெற்றோரின் சமூக பொருளாதார செல்வாக்கு மிகையாகக் காணப்பட்டதால் போரதீவுப்பற்று பிரதேசம் தெரிவு செய்யப்பட்டது. இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற 33 பாடசாலைகளில் இருந்து தரம் ஐந்து வகுப்பு காணப்படும் IC, TYPE II மற்றும் TYPE III பாடசாலைகளில் வசதி மாதிரி அடிப்படையில் 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொரு வகைப் பாடசாலைகளிலும் இருந்து மாதிரிகள் பெறப்பட்டன.

**இறுதி மாதிரித்தெரிவு அட்டவணையும் மாதிரிப் பருமனின் விளக்கமும்**

*இறுதி மாதிரித்தெரிவுமுறை*

| தொ .இ | பாடசாலையின் பெயர் | வகை | அதிபர்களின்மாதிரி தெரிவு | ஆசிரியர்களின்எண்ணிக் கை | ஆசிரியர்களின் மாதிரி | மாணவர்களின்எண்ணிக் கை | | பெற்றோர்களின் மாதிரி தெரிவு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | A | 1C | 01 | 07 | 07 | 16 | 04 | 04 |
| 02 | B | 1C | 01 | 09 | 09 | 36 | 09 | 09 |
| 03 | C | 1C | 01 | 09 | 09 | 42 | 11 | 11 |
| 04 | D | 1C | 01 | 03 | 03 | 15 | 04 | 04 |
| 05 | E | 1C | 01 | 06 | 06 | 31 | 08 | 08 |
| 06 | F | II | 01 | 06 | 06 | 22 | 05 | 05 |
| 07 | G | II | 01 | 08 | 08 | 37 | 09 | 09 |
| 08 | H | III | 01 | 03 | 03 | 07 | 02 | 02 |
| 09 | I | III | 01 | 04 | 04 | 07 | 02 | 02 |
| 10 | J | III | 01 | 09 | 09 | 05 | 01 | 01 |
| மொத்தம் | | | 10 | 64 | 64 | 218 | 55 | 55 |

அட்டவணை 2.2 (ஆய்வாளரினால் தயாரிக்கப்பட்டது)

**குறிப்பு:** ஆய்வு நோக்கத்தின் பொருட்டு 1C பாடசாலைகள் 05 உம், வகை II பாடசாலைகள் 02 உம் , வகை III பாடசாலைகள் 03 உம் வசதி மாதிரி அடிப்படையில் 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டமைக்கு அமைவாக அவற்றின் அதிபர்களும், 64 ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களும் நோக்கமாதிரி

அடிப்படையிலும், தரம் 05 கல்வி பயிலும் 218 மாணவர்கள் இலகு எழுமாற்று மாதிரி மூலம் 4 : 1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 55 மாணவர்களும், அவர்களின் பெற்றோர்கள் நோக்க மாதிரி அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்டு ஆய்வு நிகழ்த்தப்பட்டது.

***ஆய்வு கருவிகள் தயாரித்தல்***

ஓர் ஆய்வின் வெற்றியானது சேகரிக்கப்படும் தரவுகளின் தரத்திலேயே தங்கியுள்ளது. தரவுகளின் நம்பகம், தகுதி, இயல்புகள் தாழ்வாக அமையும் பட்சத்தில் எவ்வித உயர்நுட்ப பகுப்பாய்வுகளை மேற்கொண்டாலும் ஆய்வுப் பெறுபேறுகள் திறமையாகவும், பொருத்தமாகவும் அமையாது. எனவே பொருத்தமான ஆய்வு கருவிகளை தரவு சேகரிப்பின்பால் தெரிவு செய்தலும் அவற்றினை பயன்படுத்தலும் ஆய்வுச் செயற்பாட்டில் முக்கிய படிநிலையாகும்.

இவ்வாய்விற்கான முதன்மைத் தரவுகளைச் சேகரிக்கும் பொருட்டு வினாக்கொத்து, நேர்காணல் முதலிய ஆய்வுக் கருவிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஆவணச் சான்றுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவை ஆய்வில் பிரயோகிக்கப்படுவதனால் ஆய்வானது நம்பகமும் தகுதியும் கொண்டதாக அமைகின்றது.

இவ்வாய்விற்குரிய தரவுகளைச் சேகரிக்கும் பொருட்டு வடிவமைக்கப்பட்ட வினாக்கொத்தானது தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் போன்றோருக்குத் தனித்தனியாக வழங்கப்பட்டது. பேட்டிகாணல் செயன்முறையானது தெரிவு செய்யப்பட்ட பத்து பாடசாலைகளின் அதிபர்களிடம் இடம்பெற்றன. இதில் பேட்டிகாணல் வினாக்கொத்து படிவம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆவணச்சான்றாக ஐந்து வருட புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் பற்றிய தரவுகள், மாணவர் வரவு இடாப்பு போன்றவனவற்றின் மூலம் தகவல்கள் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**தரவுப்பகுப்பாய்வும் வியாக்கியானமும்**

தரவு சேகரித்த பின்னர் நம்பகம், தகுதி அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இவ்வாய்வின் தரவுப் பகுப்பாய்வு முறைகளாக அளவறிசார் முறையும், பண்பறிசார் முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது அதிபர்கள், ஆசிரியர்கள், தரம் 5 மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள் ஆகியோரின் விபரங்களைக் கொண்டமைவதால் இம்முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வின் தரவு வடிவங்களைத் தீர்மானித்து பின்னர் தரவுகளைச் சேகரித்து அத்தரவுகளைப் பகுப்பாக்கம் செய்து Microsoft Excel மென்பொருளைப் பயன்படுத்தி சலாகை வரைபுகள் மூலம் குறித்துக் காட்டப்பட்டு விபரிக்கப்பட்டு வியாக்கியானம் செய்யப்பட்டுள்ளன.

***தரவுப்பகுப்பாய்வு முடிவுகள்***

*தரம் ஐந்து மாணவர்களின் குடும்ப சமூக பொருளாதார நிலைமைகளைக் கண்டறிதல்.*

*வீட்டில் கற்பதற்கான கல்விச்சூழல் காணப்படுதல்.*




உரு 3.1

குறிப்பு: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது.

பிள்ளைகள் கற்பதற்குப் பொருத்தமான வீட்டுச்சூழல் காணப்படுகின்றதா? என கேட்கப்பட்ட வினாவிற்கு ஆசிரியர்களில் குறைவானது என 71.87 வீதமானோரும், மிகக்குறைவானது என 18.75 வீதமானோரும் ஓரளவானது என 9.37 வீதமானோரும், மாணவர்களில் குறைவானது என 50.90 வீதமானோரும், மிகக்குறைவானது என 21.87 வீதமானோரும் ஓரளவானது என 27.27 வீதமானோரும், பெற்றோர்களில் குறைவானது என 41.81 வீதமானோரும் மிகக்குறைவானது என 36.36 வீதமானோரும், ஓரளவானது என 21.81 வீதமானோரும் கருத்துத் தெரிவித்திருந்தனர். இதிலிருந்து பிள்ளை கற்பதற்குப் பொருத்தமான வீட்டுச்சூழல் காணப்படவில்லை என்பது புலப்படுத்தப்படுகின்றது.

Fabio (2007) மேற்கொண்ட ஆய்வில் வீட்டு வசதியில்லாத பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி தொடர்பான விடயங்களிலும் பாடசாலை வேலைகளிலும் ஈடுபடமுடியாத நிலையிலுள்ளனர். இவர்களது வருமானமும் அடைவுமட்டத்தில் செல்வாக்குச் செலுத்துகிறது என கூறியுள்ளார். எனவே இரு ஆய்வின் முடிவுகளும் ஒத்துக் காணப்படுகின்றன.

***பெற்றோரின் சமூக பொருளாதார காரணிகள் மாணவர்களின் கற்றலில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள்.***

*தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை அடைவு மட்டத்தின் வீழ்ச்சி.*




உரு 3.2

குறிப்பு: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை அடைவு மட்டத்தின் நிலை எவ்வாறுள்ளது? எனக் கேட்கப்பட்ட வினாவிற்கு, அதிபர்களில் குறைவானது என 50 வீதமானோரும், மிகக்குறைவானது என 50 வீதமானோரும், ஆசிரியர்களில் குறைவானது என 50 வீதமானோரும், மிகக்குறைவானது என 50 வீதமானோரும் பதிளித்திருந்தனர். எனவே அடைவுமட்ட வீழ்ச்சியானது இக்கருத்துக்களின் மூலம் உறுதிப்படுத்துகின்றது.

Epstein (2018) பாடசாலை மற்றும் குடும்பத்தின் பங்களிப்பு எனும் தலைப்பில் மேற்கொண்ட ஆய்வு முடிவில் மாணவர்களின் வீட்டுச் சூழல் பொருத்தமற்றதாகக் காணப்படுகின்ற போது அவர்களின் அடைவுமட்டம் குறைவடைகின்றது. மாணவர்கள் பரீட்சைகளின் போது வெளிப்படுத்துகின்ற அடைவுமட்டங்கள் பூச்சிய நிலையிலேயே காணப்படுகின்றது எனக் கூறியுள்ளார். எனவே இரு ஆய்வின் முடிவுகளும் ஒத்துக் காணப்படுகின்றன.

**மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் பெற்றோரின் ஈடுபாடு, ஒத்துழைப்பு எத்தகையன என்பதனைக் கண்டறிதல்.**

*தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முக்கியத்துவம் தொடர்பாக பெற்றோர்களின் அக்கறை.*




உரு 3.3

குறிப்பு: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் முக்கியத்துவம் தொடர்பாக பெற்றோர்கள் அக்கறை கொண்டுள்ளனரா? எனும் வினா தொடர்பாக பதிலளிக்கையில் அதிபர்களில் ஓரளவானது என 30 வீதமானோரும், குறைவானது என 70 வீதமானோரும், ஆசிரியர்களில் ஓரளவானது என 28.12 வீதமானோரும், குறைவானது என 71.87 வீதமானோரும் கருத்துத் தெரிவித்திருந்தனர். எனவே பெற்றோரின் அக்கறை குறைவானது என உறுதியாகின்றது.

Jeynes (2017) பெற்றோரின் ஈடுபாட்டிற்கும் மாணவர்களின் சாதனைகளுக்குமிடையிலான உறவு எனும் தலைப்பில் மேற்கொண்ட ஆய்வில் பெற்றோர்களின் பங்களிப்பானது மாணவர்களின்அடைவில் பாரிய தாக்கம் செலுத்துகின்றது. பிள்ளையின் பயிற்சிக் கொப்பிகளை தினமும் பார்வையிடல் பெற்றோரின் பங்களிப்புக்கள், பிள்ளைகளின் வாசிப்பிற்கு உதவுதல், பிள்ளைகளின் வீட்டு வேலைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் பெற்றோர்கள் பாடசாலை ஆசிரியர்களுடன் தொடர்பைப் பேணுதல் என்பன மாணவர்களின் அடைவில் செல்வாக்குச் செலுத்துகின்றன எனும் ஆய்வு முடிவுகளுடன் ஒத்துக் காணப்படுகின்றன.

***மாணவர்களின் கற்றல் அடைவுகளை மேம்படுத்துவதற்குரிய ஆலோசனைகளும், வழிகாட்டல்களும்.***

*பரிகாரக்கற்பித்தல் நடைபெறல்*




உரு 3.4

குறிப்பு: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது.

உங்களது பாடசாலையில் பரிகாரக் கற்பித்தல் இடம்பெறுகின்றதா? என வினாவப்பட்ட வினாவிற்கு அதிபர்களில் ஓரளவு என 40 வீதமானோரும், குறைவானது என 70 வீதமானோரும், பெற்றோர்களில் ஓரளவு என 28.12 வீதமானோரும், குறைவானது என 71.87 வீதமானோரும் கருத்துத் தெரிவித்திருந்தனர். இதிலிருந்து பரிகாரக் கற்பித்தல் குறைவாகவே நடைபெறுவதனை அறியக் கூடியதாக உள்ளது.

Jarrar (2018) மேற்கொண்ட ஆய்வில் கற்றலில் இடர்படும் மாணவர்களுக்கு பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்வதனால் அவர்கள் தவறவிட்ட கருத்துக்கள், திறன்கள் மற்றும் மறுசீரமைப்பு உத்திகள், சுய சிந்தனை மற்றும் மாணவர்களின் குறிப்பிட்ட திறன்களில் முன்னேற்றமடைய வாய்ப்பு உள்ளது எனும் ஆய்வு முடிவுகளுடன் ஒத்துக் காணப்படுகின்றன.

**தீர்வுகளும், ஆலோசனைகளும்**

***தரம் ஐந்து மாணவர்களின் குடும்ப சமூக பொருளாதார நிலைமைகள்.***

*முடிவுகள்*

1. பெற்றோரின் பொருளாதார மட்டம் 71.87 சதவீதம் தாழ்நிலையில் காணப்படுவதனால் பிள்ளைகளின் கற்றலுக்குத் தேவையான வசதி வாய்ப்புக்களை வழங்கமுடியாதிருத்தல்.
2. பிள்ளைகள் கற்பதற்கு வீட்டுச்சூழல் பொருத்தமற்றதாகக் காணப்படுதல்.

*விதப்புரைகள்*

1. கிராமசேவகர், சமூக நலன்புரி அமைப்புக்கள், பாடசாலைகள் என்பன மாணவர்களின் கற்றலுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.
2. பெற்றோர் பிள்ளைகள் கற்பதற்குரிய பொருத்தமான வீட்டுச்சூழலினை அமைத்துக் கொடுத்தல் வேண்டும்.

***பெற்றோரின் சமூக பொருளாதார காரணிகள் மாணவர்களின் கற்றலில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள்.***

*முடிவுகள்*

1. 50 சதவீதம் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை அடைவுமட்டம் மிகக்குறைவான நிலையிலேயே காணப்படுகின்றது.
2. மாணவர்களின் வரவு திருப்திகரமானதாக இல்லை.

*விதப்புரைகள்*

1. ஆசிரியர்கள், மாணவர்களுக்குக் காலத்திற்குக் காலம் மதிப்பீட்டுப் பரீட்சைகளை நடாத்தி, அவர்களின் குறை, நிறைகளை இனங்கண்டு, குறைகளை நிவர்த்தி செய்யவும், நிறைகளை விருத்தி செய்யவும் வழிப்படுத்த வேண்டும். அத்துடன் பின்னூட்டல்களையும், மீளவலியுறுத்தல்களையும் வழங்குவதோடு மாணவர்களின் நிலைமை குறித்துப் பெற்றோர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இதன்மூலம் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் நிலையினை அறிந்து அவர்களுக்கு உரிய முறையில் உதவி, ஊக்குவிப்பு, வழிகாட்டல்களை மேற்கொள்ள முடியும்.
2. கட்டாய வரவுக் குழு வரவு குறைவான மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று பெற்றோரை சந்தித்து அவர்களுக்கு கல்வியின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

***மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் பெற்றோரின் ஈடுபாடு, ஒத்துழைப்பு எத்தகையன என்பதனைக் கண்டறிதல்.***

*முடிவுகள்*

1. 71.87 சதவீதம் பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்விக்கு வழங்குகின்ற ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பு குறைவானதாக காணப்படுகின்றது.

2. பெற்றோர் பிள்ளைகளின் கற்றலில் அக்கறை அற்றிருத்தல்.

*விதப்புரைகள்*

1. பெற்றோர்கள் பாடசாலைகளுக்கு வரவழைக்கப்பட்டு மாணவரின் கற்றலின் முக்கியத்துவம், பெற்றோரின் பங்களிப்புகள் எவ்வாறு நன்மைகளைப் பெற்றுத்தரும் என்பதை அதிபர் எடுத்துக் கூறுபவராக காணப்பட வேண்டும்.
2. பாடசாலையில் பெற்றோர் சந்திப்புக்களை மாதத்திற்கு ஒரு தடவை உத்தேசிக்க வேண்டும். மேலும் பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளில் அக்கறை காட்டும் பெற்றோர்களுக்கு தனிப்பட்ட முறையில் கௌரவிப்புகளை வழங்கல் வேண்டும். இதன் மூலம் பெற்றோர் கற்றலுக்கான பங்களிப்பானது அதிகரிக்கும்.

***மாணவர்களின் கற்றல் அடைவுகளை மேம்படுத்துவதற்குரிய ஆலோசனைகளும், வழிகாட்டல்களும்.***

*முடிவுகள்*

1. 70 சதவீதம் பாடசாலைகளில் பரிகாரக் கற்பித்தல் இடம்பெறாமை.
2. மாணவர்களின் கற்றலில் பெற்றோருக்கு அக்கறையை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகள் ஓரளவு இடம்பெறுகின்றன.

*விதப்புரைகள்*

1. பரிகாரக் கற்பித்தல் மேற்கொள்ள வேண்டிய மாணவர்களுக்கு மாலைநேர, இரவுநேர வகுப்புக்களை நடத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்வதுடன் ஆரம்ப வகுப்புக்களில் பின்னடைவாகக் காணப்படும் மாணவர்களை ஆரம்பத்திலேயே இனங்கண்டு அவர்களுக்கான பரிகாரச் செயற்பாடுகளை வகுப்பாசிரியர் வழங்க வேண்டும்.
2. பெற்றோருக்கு வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**உசாத்துணைகள்**

Boonk,G., Ritzen,A., & Brand Grume,R. (2018). The cost of child poverty for individuals and society.

Epstein, J. L.(2018). School and Family Partnerships. In M. Alkin. *Encyclopaedia of Educational Research*. MacMillan.

Fabio, A., & Egbule et al. (2010). An Analysis of Factors Affecting Pupils' Science Achievement in Italy.

Jarrar, K. (2018). The Early Home-Environment and Its Influence on Standard Fourand Standard Ten School Performance. *South African Journal of Education*, 135-140.

Jeynes,W.H. (2017). The Relationship between Parental Involevement and urban Secondary school Students Academic Acheivement: A Meta – analysis.UrbanEducation, 42 -110.

Kainuw, & Yusuf. (2013). Infulence of Socio – Economic and Educational background of parents on their children’s Education in Nigeria. *International journal of Scientific and research publication*, 3(10), 1-8

Kamuti, J. M. (2018). *Influence of Home Environment on Academic Performance of Students in Public Secondary Schools in Kitui West Sub Country*. Kitui Country, Easten Kenya University.

Latif, A. (2015). Economic effects of students dropouts: A comparative study of the causes of students dropouts. Pakistan.

Lee, A. (2019). Leveling the Home Advantage: assessing the effectiveness of Parental involvement in school. *Sociology of Education*,78-249.

Vasudevan, A. (2017). Slow Learners – Causes, problems and educational Programmes, *International Journal of Applied Research*,.3(12), 308-313.

# கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டை மேம்படுத்துவதில் பாடசாலையின் வளப்பற்றாக்குறை ஏற்படுத்தும் தாக்கம் (பட்டிருப்பு வலய மண்முனை தென் எருவில் பற்றுக் கோட்டப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவை நிலை ஆய்வு)

**யோ. அகல்யா**
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
yrahalya@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையைப் பொறுத்தவரையில் மாணவர்களின் வளர்ச்சியில் விளையாட்டுக்கள் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளன. சமூகத்திற்கு பொருத்தமான திறமை கொண்ட மாணவர்களை உருவாக்குவதில் விளையாட்டுச் செயற்பாடு முக்கிய பங்கினைக் கொண்டுள்ளது. இருப்பினும் மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டை மேம்படுத்துவதில் பாடசாலைகளின் வளப்பற்றாக்குறை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. இவ் அளவை நிலை ஆய்வானது மண்முனை தென் எருவில் பற்றுக்கோட்டத்தில் பட்டிருப்பு வலயத்தில் கனிஸ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டினை மேம்படுத்துவதில் பாடசாலைகளின் வளப்பற்றாக்குறை ஏற்படுத்தும் தாக்கத்தினை கண்டறிந்து அதனை, தீர்ப்பதற்கான தீர்வுகளையும் ஆலோசனைகளையும் முன்வைப்பதனை நோக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கோட்டத்தில் பட்டிருப்பு வலயத்தில் உள்ள 37 பாடசாலைகளில் இருந்து வசதி மாதிரி எடுப்பின் மூலம் 06 பாடசாலைகள் தேர்வுசெய்யப்பட்டன. இவற்றில் 1AB - 2, 1C - 2, வகை 2 பாடசாலைகள் 2 உள்ளடங்கப்படுகின்றன. நோக்கமாதிரியின் அடிப்படையில் 06 அதிபர்களும் 204 மாணவர்களும் படையாக்கப்பட்டு இலகு எழுமாற்று மாதிரி மூலமும் அம்மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு 3:1 எனும் விகிதத்தில் 68 பெற்றோர்களும் 3:1 எனும் விகிதத்தில் 71 ஆசிரியர்களும் தெரிவுசெய்யப்பட்டு அவர்களிடமிருந்து வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் போன்ற ஆய்வுக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. இவற்றின் மூலம் தரவுகள், தகவல்கள் பெறப்பட்டு அவை பண்பு ரீதியான மற்றும் அளவு ரீதியாக Microsoft excel படிமுறையின் ஊடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு வியாக்கியானமும் கலந்துரையாடலும் இடம்பெறுகின்றன. தரவுப் பகுப்பாய்வின் மூலம் கண்டறியப்பட்ட முடிவுகளாக மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டில் வளப்பற்றாக்குறை பாதிப்பை ஏற்படுத்துகின்றமை, விளையாட்டில் மாணவர்களின் பங்கு பற்றல் குறைதல், திறமைகள் வெளிப்படுத்தாமல் மழுங்கடிக்கப்படல் போன்ற பாதிப்புகள் காணப்படுவதுடன் கற்றலுக்கு வழங்கும் முக்கியத்துவம் போன்று விளையாட்டுச் செயற்பாட்டிற்கும் முக்கியத்துவம் வழங்குதல், விழிப்புணர்வூட்டுதல், வளங்களைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுத்தல் முதலிய விதந்துரைப்புக்களும் இவ்வாய்வில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்கள், விளையாட்டுச் செயற்பாடு, வளப்பற்றாக்குறை, தாக்கம்*

## ஆய்வு அறிமுகம்

புதிய மாற்றங்களை உள்வாங்குகின்ற இவ்வுலகில் மாணவர்கள் அறிவை உற்பத்தி செய்பவர்களாக மட்டுமின்றி விளையாட்டுச்செயற்பாடுகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். இது மனித ஆளுமையமைப்பில் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக காணப்படுகின்றது. மாணவர்களின் உள்ளார்ந்த திறன் விருத்தியில் செயல்திறன் மிக்கவர்களாக மாணவர்கள் உருவாகுவதற்கு நூல்களிடமிருந்து கற்பதை விடவும் தனது அனுபவங்களின் ஊடாக கற்பதனாலே ஊக்கமடைகின்றார்கள் (Francis, 2005).

இந்நிலையில் தற்போதைய மண்முனை தென் எருவில் பற்றுக்கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கனிஸ்ட இடைநிலைப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பாடம் சார்ந்த பயிற்சிகளுக்கு ஏற்ற வகையில் கற்றல் கற்பித்தலுடன் கூடிய அறிகை சார்ந்த விடயங்களுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் கல்வியின் நோக்கத்தினை முழுமையாக அடையச் செய்யக்கூடிய விளையாட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்குவதற்கு பொருத்தமான வளங்கள் போதாத நிலை காணப்படுகின்றன. இதனால் கனிஸ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்கள் இடையே பொதிந்துள்ள ஆற்றல்கள், திறன்கள், உணர்வுகள் அவர்களுக்கே உரிய நடத்தைகளை உணர்ந்து அவர்களுக்கு உரிய விளையாட்டுச்செயற்பாடுகளில் முழுமையாக அர்ப்பணித்து பங்கு பற்றுவதற்கும் பொருத்தமான வாய்ப்புகள், பௌதீக வள வசதிகள் பொருத்தமான நடைமுறையில் கிடைக்காத நிலை காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் விளையாட்டுச்செயற்பாடுகளில் பங்கு கொள்ளாத இக்கோட்டப் பாடசாலை மாணவர்களின் பல்வேறு ஆரோக்கியம் சார்ந்த சமநிலை ஆளுமை, ஒழுக்கம் சார்ந்த குறுங்கால நீண்டகால பாதிப்புக்கள் மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தக்கூடிய நிலைகள் இனங்காணப்பட்டு உள்ளன. தற்போதைய நிலையில் தொழில்நுட்ப சாதனப் பயன்பாட்டின் செல்வாக்குக் காரணமாக உடல் இயக்கம் சார்ந்த செயற்பாடுகளில் முன்னைய காலம் போல் அல்லாது மாணவர்கள் விளையாட்டு செயற்பாடுகளை தவிர்த்து வருவதற்கான காரணமாகவும் பொதுக் கல்விக்கு தேவையான பல்வேறு ஆரோக்கிய ஆளுமை சார்ந்த குறைபாடு உடையவர்களாகவும் இருப்பதனால் குடும்பத்திலும் பாடசாலையிலும் பல்வேறு சமூகத்திலும் எதிர்மறையான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

உடல், உள, சமூக ரீதியான பல்வேறு நன்மைகள் விளையாட்டுப் பங்கு பெற்றல்களூடாக மாணவர் அடைந்து கொள்ளக்கூடிய ஏது நிலைகள் உள்ளதுடன் தனிநபர் மற்றும் குழு சார்ந்த வலுவளிப்பு என்பன விளையாட்டுப் பங்குபற்றலால் ஏற்படும் (Ferris, 2008). விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுகொள்ளாத மாணவர் மத்தியில் பல்வேறு ஆளுமைக் குறைபாடுகள் இனங்ககாணப்படுகின்றன. (Burton, 2001). பாடசாலை மாணவர்கள் இப்பருவத்திற்குரிய உடலியக்க முதிர்ச்சி காரணமாக பல்வேறு விளையாட்டுச் செயற்பாடுகளில் குழுவாக பங்கெடுத்து விளையாடி தமது உடல் பலத்தை வெளிக்காட்டுவதில் ஆர்வம் காட்டவர் எனக் கூறப்பட்ட நிலையில் கனிஸ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாடுகளின் தாழ்நிலைக்கு பாடசாலையின் பௌதீக வளப் பற்றாக்குறை மற்றும் மாணவர்களிடத்திலுள்ள பிற காரணிகள் செல்வாக்கு காரணமாக அமையலாம் என்ற அடிப்படையில் பாடசாலைகளில் மாணவர்கள் பொருத்தமான விளையாட்டுச் செயற்பாடுகளில் பங்குபெற்றக் கூடிய வகையிலும் விளையாட்டுச் செயற்பாடுகளை முன்னெடுக்க பாடசாலைகளை எதிர்காலத்தில் தூண்டும் நோக்கோடு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் பொருத்தமான தீர்வு கிடைக்கும் என்கின்ற அடிப்படையில் எதிர்காலத்தில் நேர்த்தன்மையுடன் மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாடுகளை மேம்படுத்திக் கொள்ள முடியும் என்பது ஆய்வாளரது நம்பிக்கையாகும்.

**ஆய்வு பிரச்சினை**

தற்காலத்தில் பாடசாலைக் கல்வியின் நோக்கம் மாணவர்களிடத்தில் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றில் நிரந்தர நடத்தை மாற்றத்தை உண்டு பண்ணுவதாகும். இவற்றினை ஏற்படுத்துவதும் வினைத்திறனான வழிகாட்டலும் களமும் பாடசாலையே. பாடசாலையில் பௌதீக வளங்கள் குறையாக காணப்படும்போது மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டை மேம்படுத்த முடியாத நிலை ஏற்படுகின்றது (Aggraval, 2000). இதன் காரணமாக மாணவர்கள் விளையாட்டுச்செயற்பாடுகளில் பங்குபெறும் நிலை குறைவாகவும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளாகவும் விளையாட்டுச் செயற்பாடுகள் காணப்படுவதற்கு பாடசாலையின் வளப் பற்றாக்குறை ஆய்விற்கான முக்கிய பிரச்சினையாக காணப்படுகின்றது.

ஒரு நிறுவனத்தின் வெற்றிக்கு தரமான உள்ளீடுகள் வினைத்திறனான செயற்பாடுகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதில் தரமான உள்ளீடுகள் காணப்படும் போதே வெளியீடுகள் தரமானதாக காணப்படும். அதேபோல் வெளியீடுகள் தரமானதாக காணப்படும். ஆனால் பாடசாலை மட்டத்தில் தரமான பௌதீக வளங்கள் உள்ளீடு செய்யப்படுவது அரிதாகக் காணப்படுவது முக்கிய பிரச்சினையாக உள்ளது (Sherina, 2009).

நிதிமுகாமைத்துவம், பௌதீக வளமுகாமைத்துவம், ஆளணி முகாமைத்துவம், நிறுவன வளமுகாமைத்துவம், விளையாட்டுத் துறையில் தேர்ச்சி பெற்ற பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இன்மை அல்லது நியமிக்கப்படாமை போன்ற காரணங்களால் மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டை மேம்படுத்துவதில் பிரச்சனையாக காணப்படுகின்றது (Sariboon, 2007).

பாடசாலைகளுக்கு இடையே மாணவர்களின் தொகைக்கு ஏற்ற வகையில் வளங்கள் பங்கிடாமை, கல்வி விளையாட்டு பணிப்பாளர், அபிவிருத்திக்கு பொறுப்பான பிரதிக் கல்வி பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி பணிப்பாளர்கள், கணக்காளர் போன்றவர்கள் நடுநிலையாக செயற்பட்டு பாடசாலையின் பருமன், தேவையின் அடிப்படையில் வளங்கள் பங்கீடு செய்யப்படாமை, அதிகமாக வழங்கப்பட்ட வளங்கள் மீளப் பெறப்பட்டு தேவையான பாடசாலைகளுக்கு வழங்குவதில் அக்கறை செலுத்தாமை, பௌதிக வளங்களுள் கட்டிடம், விளையாட்டு மைதானம், விளையாட்டு உள்ளக அரங்கு, விளையாட்டு உபகரணங்கள் போன்றன பற்றாக்குறையாக காணப்படுகின்றமையும் நிதியானது பாடசாலையின் மாணவர்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் பயன்படுத்தாமையும் பிரச்சனையாக காணப்படுகின்றன (Mansoor, 2008). ஆகவே பாடசாலையின் வளப்பற்றாக்குறை மாணவர்களின் விளையாட்டு செயற்பாட்டை மேம்படுத்துவதில் முக்கிய பிரச்சினையாக அமைகின்றது.

**ஆய்வுப் பிரச்சினைக் கூற்று**

மண்முனை தென் எருவில் பற்றுக்கோட்டத்தில் கனிஸ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டை மேம்படுத்துவதில் பாடசாலையின் வளப்பற்றாக் குறையானது மாணவர்களின் விளையாட்டுச்செயற்பாட்டை மேம்படுத்துவதில் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது.

**ஆய்வின் பொது நோக்கம்**

மண்முனை தென் எருவில் பற்றுக் கோட்டத்தில் கனிஸ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டினை மேம்படுத்துவதில் பாடசாலையின் வளப்பற்றாக்குறை ஏற்படுத்தும் தாக்கத்தினை கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளையும் தீர்வாலோசனைகளையும் முன் வைத்தல்.

**ஆய்வின் சிறப்பு நோக்கங்கள்**

1. கனிஸ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டின் தற்போதைய நிலையினை இனங்காணல்.
2. கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டினை மேம்படுத்துவதில் உள்ள பிரச்சினைகளை கண்டறிதல்.
3. கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டினை மேம்படுத்துவதில் வளப்பற்றாக்குறையானது ஏற்படுத்தும் தாக்கத்தினை பகுப்பாய்வு செய்தல்.
4. கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டின் வளப்பற்றாக்குறையினை தீர்ப்பதற்கான ஆலோசனைகளையும் வழிமுறைகளையும் முன் வைத்தல்.

**இலக்கிய மீளாய்வு**

விளையாட்டு என்பது மனித ஆரோக்கியத்தினை நிலைநிறுத்த உதவுவதுடன் தன்னம்பிக்கை வளர்க்கும் மற்றும் உடல் ஒருங்கிணைப்பு செயற்பாடு ஆகும். உடல் பருமன் பதட்டம் மனச்சோர்வு மாரடைப்பு நீரிழிவு போன்ற நாட்பட்ட நோய்களிலிருந்து பாதுகாப்பினை விளையாட்டுக்கள் வழங்குகின்றன (Richard,2010).

விளையாட்டுப் பங்கு பற்றல் மூலம் மாணவர் கல்வி அடைவுகளில் நேர் மாற்றங்கள் ஏற்படும். விளையாட்டு பங்கு பற்றல் மூலம் பல்வேறு கல்வியுடன் தொடர்புபட்ட விருத்தி ஏற்படும் தனிப்பட்ட கல்வியடைவு, சமூக ஒற்றுமைகள் சமூகங்களுக்கு இடையிலான தொடர்புகள் ஏற்படும். விளையாட்டின் மூலமாக ஒருவரின் நன்னடத்தையும் கட்டுப்பாடான ஒழுக்க பண்புகளையும் வளர்க்க முடியும் (Maloney, 2001).

ஒருவர் தனது மனவெழுச்சி தொடர்பான விடயங்களை ஆற்றுப்படுத்த கற்றுக்கொள்ள சிறந்த இடம் விளையாட்டுக் களமாகும். விளையாட்டில் ஈடுபடும்போது நடுவர்கள் வழங்கும் தீர்ப்பு மற்றும் சமூக நிறுவனங்களின் தீர்ப்பை ஏற்கும் மனப்பான்மையும் உருவாகும். விளையாட்டு ஒழுங்கு விதிகளை ஏற்றுக் கட்டுப்பாட்டுக்குள் விளையாடப் பழகுவது வாழ்க்கையின் சட்ட திட்டங்களை ஏற்கும் மனநிலைக்கு இட்டுச் செல்லும் (Tonte,2009).

விளையாட்டு பாதணி, உடைகள் மற்றும் ஏனைய விளையாட்டு உபகரணங்கள் தொடர்பான பிரச்சனைகள் காரணமாக தனி மற்றும் சில குழு விளையாட்டுக்களில் மாணவர்கள் பங்குபற்றுவதற்கான வாய்ப்புகள் குறைவடைகின்றன (Physical activity council report, 2017).

பாடசாலைக்கான வளங்கள், சாதனங்கள், உபகரணங்கள், முதலியவற்றிலே ஏற்றத்தாழ்வுகள் காணப்படும் பொழுது புதிய சீர்திருத்தங்களினால் வளங்கள் குன்றிய பாடசாலைகள் பெருமளவு பாதிப்புக்குள்ளாகின்றன (Jackie fort, 2006).

**ஆய்வு முறையியல்**

ஆய்வு முறையியல் சிறப்பாக அமையும் பட்சத்தில் தீர்வுகள் நம்பகத்தன்மையாக அமையும். இவ்வாய்வில் எண், அளவு ரீதியான முறையியல்களும் பண்பு ரீதியான முறையியல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எண்ரீதியான முறையியல்களுள் எண்கள், அட்டவணைகள், மாணவர் தொகை என்பன உள்ளடங்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக புறவயத்தன்மையாக ஆய்வு கொண்டு செல்லப்படுகின்றது.

ஆய்வு தொடர்பான கோட்பாட்டு ரீதியான உறுதிப்படுத்தல்களுடன் தொடர்பு கொண்டதாக பண்பு ரீதியான முறையியல் காணப்படுகின்றது. இத்துடன் சம்பந்தப்பட்ட பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களிடத்தில் வினாக்கொத்து மூலமாகவும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நேரடி அவதானம் மூலமாகவும் பெற்றோர்கள், அதிபர்களிடம் நேர்காணல் மூலமாகவும் பெறப்பட்ட தகவல்கள், அபிப்பிராயங்கள், எண்ணங்கள், வெளிப்பாடுகள் போன்ற அகவயமான உணர்வுகளும் ஆய்வில் கவனத்திற்கொள்ளப்பட்டன. இதன்படி அளவு ரீதியான, பண்பு ரீதியான விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு இவ்வாய்வு அமைவதால் இவ்வாய்வில் கலப்பு ஆய்வு பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் மூலம் பெறப்பட்ட தகவல்களை அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்து அதன் மூலமாக முடிவுகளை கண்டறிவதாக இவ்வாய்வானது அமைவதால் இது ஒரு அளவை நிலை ஆய்வாக காணப்படுகின்றது.

***மாதிரித் தெரிவு***

"கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டை மேம்படுத்துவதில் பாடசாலையின் வளப்பற்றாக்குறை ஏற்படுத்தும் தாக்கம்." எனும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வை மேற்கொள்வதற்கு ஆய்வாளரினால் நோக்க மாதிரி, படையாக்க மாதிரி, வசதி மாதிரி எடுப்பு முறைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. அதன்படி இவ்வாய்வின் பிரதேசமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டிருப்பு வலய, மண்முனை தென் எருவில் பற்றுக் கோட்டத்தில் 37 பாடசாலைகள் காணப்படுகின்றன. எனினும் பாடசாலைக்கு இடையேயான தூரம், அதிக குடித்தொகை, செலவு முதலிய வசதிகளை கருத்தில் கொண்டு 37 பாடசாலைகளில் ஆய்வாளரின் வசதிக்கு ஏற்ப, வசதி மாதிரி முறை மூலம் 2 1AB பாடசாலைகளும் 2 1C பாடசாலைகளும் 2 வகை 2 பாடசாலைகளுமாக 06 தமிழ் கலவன் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன.

இதனடிப்படையில் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட 06 பாடசாலைகளில் கனிஸ்ட இடைநிலைப் பிரிவில் 1229 மாணவர்கள் காணப்படுகிறார்கள். இம் மாணவர்களை ஆண்கள், பெண்கள் என படையாக்க மாதிரி முறையின் அடிப்படையில் 204 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மாணவர்களை அடிப்படையாகக்கொண்டு இலகு எழுமாறாக 3:1 எனும் விகிதத்தில் 68 பெற்றோரும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 215 மொத்த

ஆசிரியர்களிலிருந்து 3:1 எனும் விகிதத்தில் 71 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஆய்வின் நோக்கம் கருதி 06 பாடசாலைகளின் அதிபர்களிடம் தகவல் பெற்றுக்கொள்ளும் வகையில், நோக்க மாதிரியில் 06 பாடசாலைகளின் அதிபர்கள் 06 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு மொத்தமாக 349 பேர் மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

### தரவுப்பகுப்பாய்வு

#### *விளையாட்டுப்போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றுவதற்கான விருப்பம்*

பாடசாலையில் விளையாட்டுப்போட்டிகளில் மாணவர்கள் பங்கு பற்றுவதில் விருப்பம் தொடர்பாக ஆசிரியர்களிடம் வினவப்பட்டபோது 36 ஆசிரியர்கள் மிகக்கூடுதல் பதிலை கூறினர். இது 50.7 சதவீதமாகக் காணப்படுகின்றது. 25 ஆசிரியர்கள் கூடுதல் கூறினர். இது 36.7 சதவீதமாகக் காணப்படுகின்றது. ஓரளவு எனும் பதிலை 06 ஆசிரியர்கள் கூறினர். இது 8.8 சதவீதமாகக் காணப்படுகின்றது. குறைவு என்ற பதிலை 04 ஆசிரியர்கள் கூறினர். இது 5.6 சதவீதமாகக் காணப்படுகின்றது. மிகக் குறைவு பதிலை எவரும் முன்வைக்கவில்லை.

அவ்வாறே மாணவர்களிடம் வினவியபோது 98 மாணவர்கள் மிகக்கூடுதல் விருப்பத்தினையும் 59 மாணவர்கள் கூடுதல் விருப்பத்தினையும் 20 மாணவர்கள் ஓரளவு விருப்பத்தினையும் 15 மாணவர்கள் குறைவு விருப்பத்தினையும் 12 மாணவர்கள் மிகக்குறைவு விருப்பத்தினையும் தெரிவித்தனர். இதனை பின்வரும் உரு 4.1 காட்டுகின்றது.




**உரு 4.1 விளையாட்டுப்போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றுவதற்கான விருப்பம**

எனவே Agnes (2016) பாடசாலையின் சகல மாணவர்களுக்கும் தனியாள் வேறுபாட்டிற்கு ஏற்பவும் விருப்பிற்கு ஏற்பவும் விளையாட்டுச் செயற்பாடுகளில் பங்கு கொள்வதற்கான சந்தர்பங்களை வழங்க வேண்டும் எனக்கூறுகின்றார். இம்முடிவானது ஆய்வாளரின் முடிவுடன் நெருங்கிச் செல்கின்றது.

**விளையாட்டுச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான தடைகள்**

பாடசாலையின் விளையாட்டுச்செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு தடையாக உள்ள காரணிகளை முன்னுரிமை அடிப்படையில் குறிப்பிடுக என மாணவர்களிடம் வினவியபோது 104 மாணவர்கள் வளப்பற்றாக்குறையினை முதலாவதாகக் கூறினர். இது 50.9% ஆகும். பெற்றோரின் ஒத்துழைப்பின்மையினை இரண்டாவதாகக் கூறினர். இது 28.9% ஆகும். மூன்றாவதாக ஆர்வம் இன்மையினை 28 மாணவர்கள் கூறினர். இது 13.7% ஆகும். நான்காவதாக தனியார் வகுப்புக்கள் என 7 மாணவர்கள் கூறினர். இது 3.4% ஆகும். ஐந்தாவதாக 6 மாணவர்கள் வறுமை எனக் கூறினர். இது 2.9% ஆகும்.

இதேபோன்று ஆசிரியர்களிடம் வினவியபோது 41 பேர் வளப்பற்றாக்குறையினை முதலாவதாகக் கூறினர். இது 57.7% ஆகும். பெற்றோரின் ஒத்துழைப்பின்மையினை 19 பேர் இரண்டாவதாகக் கூறினர். இது 26.7% ஆகும். மூன்றாவதாக ஆர்வம் இன்மையினை 6 பேர் கூறினர். இது 8.4% ஆகும். நான்காவதாக தனியார் வகுப்புக்கள் என 3 பேர் தனியார் வகுப்புக்கள் எனக் கூறினர். இது 4.4% ஆகும். ஐந்தாவதாக 2 பேர் வறுமை எனக் கூறினர். இது 2.8% ஆகும்.

அத்துடன் அதிபர்களிடம் வினவியபோது 3 பேர் வளப்பற்றாக்குறையினை முதலாவதாகக் கூறினர். இது 57.1% ஆகும். பெற்றோரின் ஒத்துழைப்பின்மையினை 2 பேர் இரண்டாவதாகக் கூறினர். இது 33.3% ஆகும். மூன்றாவதாக ஆர்வம் இன்மையினை ஒருவர் கூறினார். இது 16.6% ஆகும். தனியார் வகுப்புக்கள், வறுமை என்பதனை எவரும் முன்வைக்கவில்லை. இதனை பின்வரும் உரு காட்டுகின்றது.

இதேபோன்று பெற்றோரிடம் வினவியபோது 30 பேர் வளப்பற்றாக்குறையினை முதலாவதாகக் கூறினர். இது 44.1% ஆகும். மாணவர் ஆர்வமின்மையினை 16 பேர் இரண்டாவதாகக் கூறினர். இது 23.5% ஆகும். மூன்றாவதாக வறுமையினை 11 பேர் கூறினார். இது 16.1% ஆகும். நான்காவதாக 9 பேர் பெற்றோரின் ஒத்துழைப்பின்மையினைக் கூறினர். இது 13.2% ஆகும். ஐந்தாவதாக 2 பேர் தனியார் வகுப்புக்கள் எனக்கூறினர். இது 2.9% ஆகும்.இத்தரவுகளின் அடிப்படையில் பார்க்கும்போது பாடசாலையின் வளப்பற்றாக்குறையானது மாணவர்களின் முன்னேற்றத்திற்கு தடையாக உள்ளமையினை அறியலாம். இதனை பின்வரும் உரு காட்டுகின்றது.




உரு 4.2 விளையாட்டுச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான தடைகள்

**மாணவர்களுக்கு விளையாடுவதற்கு உபகரணங்கள் வழங்குதல்**

பாடசாலையில் உமக்கு தனிப்பட்ட முறையில் விளையாடுவதற்கு பயிற்சிகள் பெறுவதற்கும் விளையாட்டு உபகரணங்கள் தருவதுண்டா? என ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களிடம் வினவியபோது 204 மாணவர்களில் ஆம் என 63 மாணவர்கள் கூறினர். இது 30.8 சதவீதமாகும். 141 மாணவர்கள் இல்லை எனக்கூறினர். இது 69.1 சதவீதமாகும்.

அவ்வாறே பாடசாலையில் தனிப்பட்ட முறையில் விளையாடுவதற்கு பயிற்சிகள் பெறுவதற்கும் மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதுண்டா? என 71 ஆசிரியர்களிடம் வினவியபோது 19 ஆசிரியர்கள் ஆம் எனக்கூறினர். இது 26.7 சதவீதமாகும். 52 ஆசிரியர்கள் இல்லை எனக்கூறினர். இது 73.2 சதவீதமாகும். அவ்வாறே 68 பெற்றோர்களிடம் வினவியபோது 17 பெற்றோர்கள் ஆம் எனக்கூறினர். இது 27 சதவீதமாகும். 20 பெற்றோர்கள் இல்லை எனக்கூறினர். இது 26 சதவீதமாகும். 51 பெற்றோர்கள் ஓரளவு எனக்கூறினர். இது 75 சதவீதமாகும்.

இத்தரவுகளின் அடிப்படையில் பார்க்கும்போது ஆய்வுக்குட்படுத்திய பிரதேசங்களில் விளையாட்டுச்செயற்பாடுகளில் மாணவர்கள் பங்கு கொள்வதற்கு போதுமான வளங்கள் காணப்படவில்லை. இதன் அடிப்படையில் நோக்கும்போது வளப்பற்றாக்குறை நிலவுகின்றமையினை இனங்காணக்கூடியதாக உள்ளது. இதனை பின்வரும் உரு 4.3 காட்டுகின்றது.




உரு 4.3 மெல்லக்கற்கும் மாணவர்களுக்கு பெற்றோர் தண்டனை வழங்குதல்

***பாடசாலைகளில் விளையாட்டுச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகள்***

இன்றைய கால கட்டத்தில் கல்விச் செயற்பாட்டுடன் விளையாட்டுச்செயற்பாட்டை எதிர்காலத்தின் தேவைக்கு ஏற்ப வினைத்திறனாக்குவது இன்றியமையாததாகும். ஆகையால் மாணவர் சமூகத்திற்கு விளையாட்டுச் செயற்பாடுகளில் மேம்பாடு முக்கியமானதொன்றாகும். அந்தவகையில் பாடசாலையில் விளையாட்டுச்செயற்பாடுகளை மேம்படுத்த வளப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதனை ஏற்றுக்கொள்கின்றீரா? என மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்களிடம் வினவப்பட்டது.

அந்தவகையில் பாடசாலையில் விளையாட்டுச்செயற்பாடுகளை மேம்படுத்த வளப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதனை ஏற்றுக்கொள்கின்றீரா? என மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட 68 மொத்த பெற்றோர்களிடம் வினவியபோது 55 பெற்றோர்கள் பூரணமாக ஏற்றுக்கொள்கின்றேன் எனக்கூறினர். இது 88.8 சதவீதமாகக் காணப்படுகின்றது. 13 பெற்றோர்கள் ஏற்றுக்கொள்கின்றேன் எனக்கூறினர். இது 19.1 சதவீதமாகக் காணப்படுகின்றது. பூரணமாக ஏற்றுக்கொள்ளவில்லை என எவரும் குறிப்பிடவில்லை. அவ்வாறே மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட 204 மாணவர்களிடம் வினவியபோது 155 மாணவர்கள் பூரணமாக ஏற்றுக்கொள்கின்றேன் எனக் கூறினர். இது 78.9 சதவீதமாகக் காணப்படுகின்றது. ஏற்றுக்கொள்கின்றேன் என 49 மாணவர்கள் கூறினர். இது 32 சதவீதமாகும். பூரணமாக ஏற்கவில்லை என எவரும் குறிப்பிடவில்லை.

அவ்வாறே மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட 71 ஆசிரியர்களிடம் வினவியபோது 57 ஆசிரியர்கள் பூரணமாக ஏற்றுக்கொள்கின்றேன் எனக்கூறினர். இது 80.2 சதவீதமாகக் காணப்படுகின்றது. ஏற்றுக்கொள்கின்றேன் என 14 மாணவர்கள் கூறினர். இது 19.7 சதவீதமாகும். பூரணமாக ஏற்கவில்லை என எவரும் குறிப்பிடவில்லை.

இதேபோன்று மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட 06 அதிபர்களிடம் வினவியபோது 06 அதிபர்களும் பூரணமாக ஏற்றுக்கொள்கின்றேன் எனக்கூறினர். இது 100 சதவீதமாகக் காணப்படுகின்றது. அதன்படி மாணவர்களின் விளையாட்டுச்செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு பாடசாலையின் வளரீதியான மேம்பாடு அவசியம் என்பதனை அதிகமானோர் பூரணமாக ஏற்றுக்கொண்டுள்ளனர். இவற்றை பின்வரும் உரு 4.4 காட்டுகின்றது.




**உரு 4.4 மெல்லக்கற்கும் மாணவர்களுக்கான பரிகாரக் கற்பித்தலை வழங்குதல்**

**முடிவுகளும் விதந்துரைப்புகளும்**

***மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டின் தற்போதைய நிலையினை இனங்காணல்.***

*முடிவுகள்*

1. விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்வதற்கான மாணவர்களுக்கான விருப்பம் மிகக் கூடுதலாக காணப்படுவதனை 70% ஆன மாணவர்களும் 76% ஆன ஆசிரியர்களும் 80% ஆன அதிபர்களும் கூறிய தகவல்களிலிருந்து அறிய முடிகின்றது.
2. பாடசாலைகளில் அதிகமான விளையாட்டுகள் நடைமுறைப்படுத்தப்படாமல் காணப்படுகின்றமையை 75% ஆன மாணவர்களதும் 71% ஆன ஆசிரியர்களதும் 71% ஆன பெற்றோர்களதும் கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன.
3. குறிப்பிட்ட சில மாணவர்கள் மாத்திரமே உயர் போட்டிகளில் வெற்றி பெறுகின்றார்கள் என்பதை 80% ஆன பெற்றோர்களும் 85% ஆசிரியர்களும் 60% ஆன அதிபர்களும் கூறிய கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன.

*விதந்துரைப்புகள்*

1. மாணவர்கள் அனைவரும் அதிகம் விளையாட்டை விரும்பும் பொருட்டு அவர்களுக்கு விருப்பமான மற்றும் இயலுமான விளையாட்டுகளில் ஈடுபடச் செய்தல் வேண்டும். அத்தோடு அடிப்படைப் பயிற்சிகளை முறையாகவும் தொடர்ச்சியாகவும் வழங்குவதனை உறுதிப்படுத்த வேண்டும்.
2. பொருத்தமான விளையாட்டுகளையும் வளங்களையும் உபகரணங்களையும் மாணவர்களுக்கு வழங்கி, திறமைகளை வெளிக்காட்டும் அனைவருக்கும் அதிபர் களம் அமைத்துக் கொடுப்பதோடு அனைத்துப் போட்டிகளிலும் ஈடுபட்டு வெற்றிகளை அதிகரிப்பதற்கு மாணவர்களை மாணவர்களை விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈர்க்க செய்ய வேண்டும்.
3. மாணவர்களுக்கு பாடசாலைகளினாலும் வீட்டுச் சூழலினாலும் காலையிலும் மாலையிலும் விளையாட்டு பயிற்சிகளை பெறுவதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்.
4. மாணவர்களது தனியாள் வேறுபாடுகளுக்கும் உடற்தகமைக்கும் இயலுமைக்கும் பொருத்தமான விளையாட்டுச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்.

***விளையாட்டுச் செயற்பாட்டினை மேம்படுத்துவதில் உள்ள பிரச்சினைகளை கண்டறிதல்.***

*முடிவுகள்*

1. பாடசாலைகளில் நிலவும் வளப்பற்றாக்குறையே விளையாட்டுச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு தடையாக உள்ளன என்பதனை 80% ஆன மாணவர்களும் 75% ஆன ஆசிரியர்களும் 69% ஆன பெற்றோர்களும் 90% ஆன அதிபர்களும் கூறிய கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன.
2. விளையாட்டுப் பயிற்சிகள் சீராக இடம் பெறுவதில்லை என்பதனை 80% ஆன மாணவர்களும் 75% ஆன ஆசிரியர்களும் 70% ஆன பெற்றோர்களும் கூறிய கருத்துக்கள் மூலம் அறியலாம்.

3. மாணவர்களின் தொகைக்கு ஏற்ற வகையில் விளையாட்டு உபகரணங்கள் போதாமையாக காணப்படுவதனை 65% ஆன மாணவர்களும் 72% ஆன பெற்றோர்களும் 80% ஆன அதிபர்களும் 74% ஆன ஆசிரியர்களும் கூறிய கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றது.
4. மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டினை மேம்படுத்துவதற்கு பெற்றோர், ஆசிரியர்களின் ஒத்துழைப்பின்மையினை 80% ஆன மாணவர்களதும் 78% ஆன அதிபர்களதும் கருத்துக்கள் மூலம் அறியமுடிகின்றது.

***விதந்துரைப்புகள்***

1. பாடசாலையில் கிடைக்கின்ற விளையாட்டு உபகரணங்களை வினைத்திறனாக பயன்படுத்த வேண்டும்.
2. பாடசாலையின் உள்ளீடுகள், நிதிகளை பயன்படுத்தி அழியும், அழியா உபகரணங்களை கொள்வனவு செய்தல். வளப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு கோட்டக்கல்வி பணிப்பாளரின் ஊடாக வலையக்கல்வி பணிப்பாளருக்கு தேவையான தரவுகளையும் வழங்கி வளங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
3. இல்ல விளையாட்டுப் போட்டிகளில் மாத்திரம் விளையாட்டுச் செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுத்துவதன்றி நேர சூசிகளை பயன்படுத்தி விளையாட்டுச் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்த வேண்டும்.
4. வளப்பற்றாக்குறை நிலவுகின்ற வேளையிலும் சுழட்சி முறையில் அனைத்து மாணவர்களுக்கும் விளையாடுவதற்கான வாய்ப்புகளை வழங்க வேண்டும்.
5. விளையாட்டின் முக்கியத்துவத்தினை ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் கூறுதல்.

***மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டினை மேம்படுத்துவதில் வளப்பற்றாக்குறையானது ஏற்படுத்தும் தாக்கத்தினை பகுப்பாய்வு செய்தல்.***

*முடிவுகள்*

1. பாடசாலைகளில் விளையாட்டுச் செற்பாடுகளில் மாணவர்கள் பங்கு கொள்வதற்கு போதுமான வளங்கள் காணப்படவில்லை என்பதனை 80% ஆன ஆசிரியர்களும் 75% ஆன மாணவர்களும் 60% ஆன அதிபர்களும் கூறிய கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன.
2. விளையாட்டுச் செயற்பாட்டுக்கான உள்ளக அரங்கு காணப்படவில்லை என்பதனை 81% ஆன அதிபர்களும் 84% ஆன ஆசிரியர்களும் 80% ஆன மாணவர்களும் கூறிய கருத்துக்கள் மூலம் அறிய முடிகிறது.
3. பாடசாலைக்கான மைதானம் பாடசாலையை விட்டு தூரமாக காணப்படுகின்றமையை 46% ஆன மாணவர்களும் 40% ஆன ஆசிரியர்களும் கூறிய தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.
4. மைதானப் பராமரிப்புகள் பாடசாலைகளில் முறையாக இடம்பெறுவதில்லை என்பதை 78% ஆன ஆசிரியர்களும் 82% ஆன மாணவர்களும் கூறியதன் மூலம் அறியலாம்.

5. மாணவர்களுக்கு தனிப்பட்ட முறையில் பாவிப்பதற்கும் பயிற்சிகளை பெறுவதற்கும் உபகரணங்கள் வழங்கப்படுவதில்லை என்பதனை 72% ஆன மாணவர்களதும் 76% ஆன ஆசிரியர்களதும் கருத்துக்கள் உறுதி செய்கின்றன.
6. சட்ட வேலி, ஓட்ட உபகரணங்கள், கோலூன்றிப் பாய்தல் கோல், பாதுகாப்பு மெத்தை போன்றன இல்லை என்பதனை 98% ஆன ஆசிரியர்களும் 90% ஆன மாணவர்களது கருத்துக்கள் உறுதி செய்கின்றன.

***விதந்துரைப்புக்கள்***

1. ஒவ்வொரு தனியார் வேறுபாட்டிற்கு ஏற்ப விளையாட்டு பாதணி, சீருடை, உபகரணங்களும் மாணவர்கள் பாவனைக்கு உட்படுத்தும் வகையில் தேவையான பொருட்களையும் பெற்றுக் கொடுப்பதற்கு பழைய மாணவர்கள் சங்கம், நலன்புரி அமைப்புக்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் துறையினர், செல்வந்தர்கள், வெளிநாடுகளில் பணிபுரிவோர், அரசியல்வாதிகள், உயர்தொழில் புரிவோர், சமய, சமூக நிறுவனம் போன்றவர்களை நாடி வளங்களை பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல்.
2. பாடசாலைக்கு சட்ட வேலி, ஓட்ட உபகரணத்தையும் கோலூன்றிப் பாய்தல் கோல் பாதுகாப்பு மெத்தை போன்ற பாடசாலியில் இல்லாத உபகரணங்களை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல்
3. பாடசாலையில் காணப்படும் சிறிய மைதானங்களை பிரதேச சபைகளின் உதவியையும் ஏனைய அமைப்புக்களின் ஆதரவையும் பெற்று புனைரமைப்பதற்கு மைதான பராமரிப்பாளர்களும் ஆசிரியர்களும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களும் இணைந்து செயற்படல்.
4. பழைய மாணவர் சங்கம் ஏனைய சமூகத்தினர் மூலம் நிதியை பெற்று உள்ளக விளையாட்டு அரங்குகளை அமைக்க நடவடிக்கை எடுத்தல்.
5. வளப்பற்றாக்குறைக்கு தீர்வு காணப்பட பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும் நபர்களிடமும் வளங்களையும் உதவிகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை 88% ஆன மாணவர்களும் 80% ஆன ஆசிரியர்களும் 90% ஆன அதிபர்களும் கூறிய கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன.

***மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாட்டின் வளப்பற்றாக்குறையினை தீர்ப்பதற்கான ஆலோசனைகளையும் வழிமுறைகளையும் முன் வைத்தல்.***

*முடிவுகள்*

1. மாணவர்களின் பெற்றோர்களுக்கும் சமூகத்தினருக்கும் விளையாட்டுக்கள் தொடர்பான விழிப்புணர்வுகளை வழங்குதல் வேண்டும் என்பதனை 90% ஆசிரியர்களும் 88% ஆன மாணவர்களும் 80% ஆன அதிபர்களும் கூறிய கருத்துக்கள் மூலம் அறிய முடிகின்றது.
2. பாடசாலையில் உள்ள விளையாட்டு வகைகளை அதிகரித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும் என்பதை 75% ஆன ஆசிரியர்களும் 70% ஆன மாணவர்களும் கூறிய கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன.

*விதந்துரைப்புக்கள்*

1. பாடசாலையின் விளையாட்டு மேம்பாட்டிற்கு தடையாக உள்ள அனைத்து வளங்களையும் நலன்புரி அமைப்புகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் துறையினர், பழைய மாணவர் சங்கத்தினர், செல்வந்தர்கள், வளவாளர்கள், வெளிநாடுகளில் பணிபுரிவோர், அரசியல்வாதிகள், உயர்தொழில் புரிவோர், பாடசாலை சமூகத்தினர், பாடசாலைக்காக உதவி கோரச் செல்லும் அமைப்புக்கள் சுமுகமானதும் நேர்மையானதுமான தொடர்பாடல் உறவுகளை வலுப்படுத்தி, உண்மை நிலைகளை தெளிவாகவும் துல்லியமாகவும் எடுத்துரைப்பதன் மூலம் வளங்களையும் உதவிகளையும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
2. பாடசாலையில் காணப்படாத விளையாட்டுகளை இனங்கண்டு அதிபரானவர் வலயக்கல்வி, கோட்டக்கல்வி, மாகாணக்கல்வித்திணைக்களத்தின் மூலம் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படாத விளையாட்டுக்களையும் அதற்கான போதிய வளங்களையும் பெற்று மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளுக்கு ஏற்றவாறு விளையாட்டுக்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.
3. பாடசாலையில் காணப்படும் விளையாட்டு உபகரணங்கள் மைதானங்கள் முதலியவற்றை முழுமையாக பயன்படுத்துவதுடன் அவற்றை முறையாக பராமரித்து பாதுகாக்க வேண்டும்.

**உசாத்துணைகள்**


அதிரதன், எஸ்., (2011). *இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளும் மாணவர் பங்குபற்றலும்.* அகவிழி வெளியீடு.

அருள்மொழி, செ., (2017). *கற்பித்தலுக்கான உளவியல்.* துர்க்கா அச்சகம்.

Boyed,HW.,(2001). Important of sports & games in School. *International journals of social*, 6.

Christine, P., (2011). *Sports Students: their psychology & educational programs*. Ronald press,8.

Goode & Hatte. (2000). Athletics, aspirations, & attainments. *Sociology of Education.*

Hartini,A., (2017). Learning & playing for Students learners using the project-based learning model in school. *Journals Pendikan Inklusi,1.*

Hughes, R.and Coakly, J., (2003). Positive deviance among athletes: The implications of over conformity to the sports ethics. *Journal of primary care and community heath*,12.

Jakie fort,M., (2006). Role of teachers & parents in honing their hidden talent of sports & children. *International journal of advanced Research in Education & Technology*, 5.

Richard, (2010). Sports as an educational tool. School sports & Education. *International journals of Advanced research in education,*5.

Vidya,S., (2014). A study of parent child relationship Among Students learners in higher secondary schools in Tiruchirapali city. *journal of social science*,4.

# இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி க.பொ.த. உ/த மாணவர்களின் கற்றலில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் (பிலியந்தல கல்வி வலய தமிழ் மொழிமூலப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

**வனஜா லோகபிரசாத்**
மே/மா/பிலி/தெகிவளை தமிழ் மகா வித்தியாலயம்
vanajah3@gmail.com

**சபாரட்ணம் அதிரதன்**
கல்விப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம், கொழும்பு.
Sabaaathi@sse.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

பன்மைத்துவச் சமூகங்களைக் கொண்ட ஒரு சிறிய நாடான இலங்கை பொருளாதார நெருக்கடியின் மோசமான காலப்பகுதியை 2022ஆம் ஆண்டளவில் சந்தித்தது. இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியானது ஏனைய துறைகளைப் போலவே கற்றல் மற்றும் பாடசாலை நடவடிக்கைகளிலும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. இவ்வகையில் கொழும்பின் புறநகர்ப் பகுதியான பிலியந்தல கல்வி வலய தமிழ் மொழிமூல பாடசாலைகளில் கற்கும் க.பொ.த உ/த மாணவர்களில் ஏற்படுத்திய கற்றல் பாதிப்புக்களை கண்டறிவதனை நோக்கமாகக்கொண்டு விபரண அளவீட்டு ஆய்வு வடிவத்தைப் பயன்படுத்தி கலப்புமுறை ஆய்வாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிலியந்தல கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் (தமிழ் மொழிமூலம்) கல்வி கற்கும் க.பொ.த உ/த மாணவர்களை ஆய்வுக் குடித்தொகையாகவும் படைமுறை எழுமாற்று நுட்ப முறைமூலம் தெரிவு செய்யப்பட்ட 114 மாணவர்களை ஆய்வு மாதிரியாகவும் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது. வினாக்கொத்து, நேர்காணல் ஆகிய கருவிகளைப் பயன்படுத்தி மாணவர்கள் (114) பெற்றோர்கள் (41) ஆசிரியர்கள் (34) மற்றும் அதிபர்களிடமிருந்து (05) தரவுகள் பெறப்பட்டதுடன் அவை விபரணப் புள்ளியியல் முறையில் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு தகவல்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. பெருமளவான (85%) மாணவர்கள் வறுமைக் கோட்டுக்கும் கீழான வருமானத்தையுடைய குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர். 80.5% மாணவர்களது பெற்றோரின் வேலை வாய்ப்பு மற்றும் வருமானம் என்பன பொருளாதார நெருக்கடியால் பாதிப்படைந்துள்ளது. குடும்ப வருமானத்தை அதிகரிப்பதற்காக 48.25% மாணவர்கள் சிலவேளையிலாவது பங்களிக்கின்ற நிலைமை காணப்படுகின்றது. சப்பாத்து மற்றும் புத்தகப்பைகளைப் பெறுவதில் 80.7%, பாடப்புத்தகங்களைப் பெறுவதில் 82.45%, எழுதுகருவிகளைப் பெறுவதில் 72.81%, போட்டோ பிரதிகளைப் பெறுவதில் 81.58%, திறன்பேசிகளைப் பெறுவதில் 64.92%, இணைய வசதிகளைப் பெறுவதில் 74.56% ஆனவர்களும் இந்த பொருளாதார நெருக்கடியால் பாதிப்பை எதிர்நோக்குகின்றார்கள். அத்துடன் இவற்றை பெறுவதற்கு பொருளாதார நிலை தடையாக அமைவதற்கும் குடும்ப வருமானம் குறைந்து செல்வதற்குமிடையே இணைவுத் தொடர்பு ($p<0.01$) காணப்படுகின்றது. பாடசாலைக்கும் வீட்டுக்கும் இடையிலான தூரத்துக்கும் பயன்படுத்தும் போக்குவரத்துச் சாதனம் தடையாக அமைவதற்கும் இடையில் புள்ளிவிபரவியல் ரீதியாக தொடர்பில்லை ($p>0.05$). பாடசாலையிலிருந்து வீட்டிற்கான தூரத்துக்கும் பாடசாலைக்குத் தாமதமாக வரவேண்டி ஏற்படுவதற்கும் இடையில் எதிரான இணைவுத் தொடர்பு ($p<0.01$) காணப்படுகின்றது. பொருளாதார நெருக்கடியிலும் பெரும்பாலான மாணவர்கள் (80.7%) தனியார் வகுப்புக்களில் பங்குபற்றுகின்றனர். இவை இந்த ஆய்வின் முடிவுகளாக முன்னிறுத்தப்படுகின்றன.

***திறவுச் சொற்கள்:*** *இலங்கை, க.பொ.த உ/த, கற்றல், பொருளாதார நெருக்கடி, மாணவர்கள்*

**ஆய்வு அறிமுகம்**

இலங்கையில் பிலியந்தல கல்வி வலயமானது பன்மைத்துவ சமூகங்களையும் புறநகர் மற்றும் கிராமப்புற பாடசாலைகளையும் உள்ளடக்கிய வலயமாகும். நகர்ப்புறங்களை விட புறநகர் மற்றும் கிராமப்புறங்களில் வளப் பற்றாக்குறைகள் அதிகமாக இருப்பதுண்டு. இலங்கையில் நகரங்களை விட புறநகர் மற்றும் கிராமப்புறங்கள் அதிகமாக இருப்பதால், பிலியந்தல கல்வி வலயத்தில் செய்யப்படும் ஆய்வு முடிவுகளை வைத்து ஏனைய பல வலயங்களுக்கும் ஆய்வு முடிவை எதிர்வு கூறக்கூடியதாக இருக்கும். அந்தவகையில் தற்போதைய பொருளாதார நெருக்கடி பிலியந்தல கல்வி வலய தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் கற்கும் க.பொ.த உ/த மாணவர்களின் கற்றலில் எவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படுகின்றது என்பதை இவ்வாய்வு ஆராய்கின்றது.

க.பொ.த உ/த என்பது, இலங்கையின் கல்விக் கட்டமைப்பில் 12ஆம் மற்றும் 13ஆம் தரங்களைக் குறிக்கின்றது. இலங்கையில் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் குறிப்பாகக் க.பொ.த உ/த மாணவர்கள் எவ்வகையில் பாதிக்கப்படுகின்றனர் என்பது தொடர்பான ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படாமையால் இவ்வாய்வானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஆய்வாகக் காணப்படுகின்றது.

இலங்கை முன்னெப்போதும் இல்லாதவாறு 2022 ஆம் ஆண்டளவில் பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்தது. இப் பொருளாதார நெருக்கடி க.பொ.த உ/த மாணவர்களின் கற்றலில் பல பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக விலையேற்றமானது நிலையான வருமானத்தையுடைய குடும்பங்களின் கொள்வனவு சக்தியைக் குறைவடையச் செய்துள்ளது. மேலும் கல்வி மீதான செலவுகளை ஈடு செய்ய முடியாதுள்ளதுடன் மாணவர்களின் குடும்ப பொருளாதார நிலமை, கற்றலுடன் தொடர்பான போக்குவரத்து, கற்றலுக்கான உள்ளீடுகள் மற்றும் உபகரணங்களினைப் பெறமுடியாதிருத்தல் போன்ற வழிகளில் க.பொ.த உ/த மாணவர்களின் கற்றலில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாய்வின் நோக்கமானது இலங்கையின் பொருளாதார நெருக்கடி பிலியந்தல கல்வி வலய தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் கற்கும் க.பொ.த உ/த மாணவர்களின் கற்றலில் ஏற்படுத்தும் பாதிப்புக்களைக் கண்டறிதல் ஆகும்.

இவ்வாய்வின் குறிக்கோள்கள்:

1. பொருளாதார நெருக்கடி க.பொ.த உ/த மாணவர்களின் குடும்ப பொருளாதார நிலைமைகளில் ஏற்படுத்தும் பாதிப்புக்களை இனங்காணல்.
2. பொருளாதார நெருக்கடி க.பொ.த உ/த மாணவர்களின் வீடுகளில் கற்றலுக்கான சூழலில் ஏற்படுத்தும் பாதிப்புகளைக் கண்டறிதல்.
3. பொருளாதார நெருக்கடியானது க.பொ.த உ/த மாணவர்களது பாடசாலைக் கற்றல் செயற்பாடுகளில் ஏற்படுத்தும் பாதிப்புக்களைக் கண்டறிதல்.

மேற்படி குறிக்கோள்களை அடைவதற்குப் பொருத்தமான ஆய்வு வினாக்களை அறிந்துகொள்வதன் மூலமே குறித்த ஆய்வின் இலக்கை அடையமுடியும். அந்தவகையில் பின்வருவன இவ்வாய்வின் ஆய்வு வினாக்களாகும்.

1. பொருளாதார நெருக்கடி க.பொ.த உ/த மாணவர்களின் குடும்ப பொருளாதார நிலைமைகளில் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது?
2. பொருளாதார நெருக்கடி க.பொ.த உ/த மாணவர்களின் வீடுகளில் கற்றலுக்கான சூழலில் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது?
3. பொருளாதார நெருக்கடியானது க.பொ.த உ/த மாணவர்களின் பாடசாலைக் கற்றல் செயற்பாடுகளில் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது?

**இலக்கிய மீளாய்வு**

இலங்கை மத்திய வங்கியின் 2021ஆம் ஆண்டு அறிக்கையின்படி அமெரிக்க டொலர் கையிருப்பு குறைவடைந்தமை, டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி, வெளிநாட்டு கடன்களை செலுத்துவதில் சிக்கல் நிலைமை, பொருட்கள் சேவைகளின் தொடர்ச்சியான விலை உயர்வு, மின்சார தடை, சமூக மற்றும் அரசியல் குழப்பங்கள் என்பவற்றால் 2021ஆம் ஆண்டிலேயே இலங்கை நெருக்கடியைச் சந்தித்து இருந்தது (Central Bank of Sri Lanka, 2022). இந் நிலைமை மேலும் அதிகரித்து 2022ஆம் ஆண்டில் மிகவும் மோசமான நிலையை அடைந்திருந்தது. விலைகளின் அதிகரிப்பானது தேசிய நுகர்வோர் விலை சுட்டியின் படி 2022ஆம் ஆண்டு மே மாதம் 45.3% இலிருந்து ஜூன் மாதம் 58.9% ஆக அதிகரித்திருந்தது. உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பானது தேசிய நுகர்வோர் விலை சுட்டியின் படி 2022ஆம் ஆண்டு மே மாதம் 58% இலிருந்து ஜூன் மாதம் 75.8% ஆகவும் உணவு அல்லாத பொருட்களின் விலை அதிகரிப்பானது தேசிய நுகர்வோர் விலை சுட்டியின்படி 2022ஆம் ஆண்டு மே மாதம் 34.2% இலிருந்து ஜூன் மாதம் 43.6% ஆகவும் அதிகரித்திருந்தது (Statistics Department of Sri Lanka, 2022). இதனால் உணவு பொருட்கள் உட்பட அனைத்து பொருட்களின் விலையும் அதிகளவு அதிகரித்துச் சென்றது. அத்துடன் 2022ஆம் ஆண்டு ஆவணி மாதம் 10ஆம் திகதி முதல் மாதாந்த மின்சாரக் கட்டணங்களை சராசரியாக 75%ஆல் அதிகரிப்பதற்கான இலங்கை மின்சார சபையின் முன்மொழிவுக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு (PUCSL) அங்கீகாரம் வழங்கியிருந்தது (Ceylon Electricity Board, 2022).

இலங்கையினுடைய அமெரிக்க டொலரின் கையிருப்பானது 2022ஆம் ஆண்டு மே மாத தரவின்படி 1.9 பில்லியன்களாகக் குறைந்திருந்தது (Economic Research Department, 2022). பெற்றோலிய பொருட்கள், மருந்து வகைகள், கடதாசிப் பொருட்கள், சமையல் எரிவாயு, உணவுப் பொருட்கள் உட்பட அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வது சிரமமாக இருந்தது. இதனால் அப்பொருட்களுக்கான தட்டுப்பாடு நிலவியது. பொதுவாகவே அனைத்து வகையான போக்குவரத்தும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. மோசமான எரிபொருள் தட்டுப்பாட்டிற்கு மத்தியில் இலங்கை கடந்த வருடம் (2022) ஆனி மாதம் இறுதியிலிருந்து

ஆடி மாதம் 24ஆம் திகதிவரை அண்ணளவாக ஒரு மாத காலப்பகுதிக்கு பாடசாலைகளை மூடி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

யுனிசெப் அமைப்பின் 2021ஆம் ஆண்டுக்குரிய இலங்கை வரவு செலவு திட்டத்தின் அறிக்கையின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கல்விக்குரிய பங்கு 2.3%ஆக குறைக்கப்பட்டுள்ளது (UNICEF, 2022). இது ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது ஒப்பீட்டளவில் குறைவானதாகும். இந்த பின்னணியில் இலங்கையின் பொருளாதார நெருக்கடி மாணவர்களின் கல்வியிலும் கணிசமான அளவு பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. இலங்கையின் Save the Children திட்டப் பணிப்பாளரின் கருத்துக்கிணங்க சமீபத்திய தேவைகள் மதிப்பீட்டின்படி, 50% குடும்பங்கள் தங்கள் குழந்தைகளின் கல்வியை தொடர்ந்து வழங்குவதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர் என்றும் மேலும் சில குழந்தைகள் பாடசாலையை விட்டு வெளியேறி வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது (Save the Children, 2022).

பெற்றோரின் வேலைவாய்ப்பு இழப்பு, பிள்ளைகள் உயர்கல்வியை தொடர்வதில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது (Coelli, 2011). நைஜீரியா நாட்டின் பொருளாதார நெருக்கடியிலும் மாணவர்கள் பல பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளமை ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. அவ்வாய்வில் 82%ஆன பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் பொருளாதார சிக்கலினால் தங்களது கொள்வனவு சக்தி குறைந்துள்ளதாகவும் புத்தகங்கள் மற்றும் கல்வி உபகரணங்களை பெறுவதில் பாதிப்பை எதிர்கொள்ளுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது (Bamigboye et al., 2016). வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்களது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில் கவனத்தில் கொள்ளுகின்றபோது பாடசாலைக்கான தூரம் முக்கிய பங்கு வகிக்கின்றது (Heath & Jeyachandran, 2017). உலக வங்கியினால் 2022ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் கணிப்பிடப்பட்ட இலங்கையின் பொருளாதார பகுப்பாய்வின் அடிப்படையில், அதிக அளவிலான கடன் மற்றும் கடன் சேவையை நிவர்த்தி செய்வதற்கும், நிதிப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கும், ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்கள் மீதான பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்கும் அவசரக் கொள்கை நடவடிக்கைகள் தேவை என்பதை உலக வங்கி முன்மொழிந்திருந்தது (World Bank, 2022). அந்தவகையில் கற்றலில் ஏற்படும் பாதிப்புக்களைக் கண்டறிவதற்கு இவ்வாய்வுகள் மிக முக்கியமானதாகும்.

**ஆய்வு முறையியல்**

இது ஒரு விபரண அளவீட்டு ஆய்வாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகளைப் பயன்படுத்தும் கலப்பு முறை ஆய்வாக இது முன்னெடுக்கப்பட்டது. பிலியந்தல கல்வி வலயத்துக்குட்டபட்ட பாடசாலைகளில் (தமிழ் மொழிமூலம்) கல்வி கற்கும் க.பொ.த உ/த மாணவர்களை ஆய்வுக் குடித்தொகையாகவும் படைமுறை எழுமாற்று நுட்ப முறை மூலம் தெரிவு செய்யப்பட்ட 114 மாணவர்களை ஆய்வு மாதிரியாகவும் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது. வினாக்கொத்து, நேர்காணல் ஆகிய கருவிகளைப் பயன்படுத்தி மாணவர்கள் (114) பெற்றோர்கள் (41) ஆசிரியர்கள் (34)

மற்றும் அதிபர்களிடமிருந்து (05) தரவுகள் பெறப்பட்டதுடன் அவை விபரணப் புள்ளியியல் முறையில் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு தகவல்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

## ஆய்வின் முடிவுகளும் கலந்துரையாடல்களும்

### *மாணவர்களின் குடும்ப பொருளாதார நிலைமைகளில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள்*

இங்கு 57.89% ஆன மாணவர்களின் குடும்ப வருமானம் ரூ.39999 இற்கும் கீழாக உள்ளதுடன் பெரும்பாலான மாணவர்களின் (ஆகக்குறைந்தது 85%) குடும்பம் வறுமைக்கோட்டின் கீழேயே உள்ளது. இதனைப் பின்வரும் அட்டவணை 1 தெளிவாகக் காட்டுகின்றது.

**அட்டவணை 1: மாணவர்களின் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் மாதாந்த குடும்ப வருமானம் பற்றிய வறுமைக்கோட்டுடனான பகுப்பாய்வு**

| Crosstabulation | | | | | | | | | No of family members X Poverty line |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Monthly Family Income | | | | | | Total | |
| | | 0 - 19999 | 20000 - 39999 | 40000-59999 | 60000-79999 | 80000-99999 | 100000< | | |
| No of Family Members | 2 | 1 | **2*** | 0 | 0 | 0 | 0 | 3 | 29718 |
| | 3 | 7 | 6 | **1*** | **1*** | 0 | 0 | 15 | 44577 |
| | 4 | 7 | 12 | 11 | **6*** | 0 | **1*** | 37 | 59436 |
| | 5 | 6 | 14 | 12 | **1*** | **1*** | **2*** | 36 | 74295 |
| | 6 | 4 | 2 | 3 | 2 | **1*** | **1*** | 13 | 89154 |
| | 7 | 2 | 2 | 3 | 0 | 0 | 0 | 7 | 104013 |
| | 8 | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | 2 | 118872 |
| | 13 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 1 | 193167 |
| Total | | 28 | 38 | 32 | 10 | 2 | 4 | 114 | |
| Below Poverty line | | **28** | **36** | **31** | **2** | **0** | **0** | **97** | |

**(மூலம்: ஆய்வாளரினால் தயாரிக்கப்பட்டது, 2023)**

* வறுமைக் கோட்டிற்கு மேல் என எதிர்பார்க்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை

(2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதத்திற்கான கொழும்பு மாவட்டத்தின் வறுமைக்கோடு ரூ. 14 859 ஆகும். - Department of Census & Statistics, 2022)

மேலும் பெரும்பாலானவர்களின் (80.5%) குடும்பம் பொருளாதார நெருக்கடியினால் வறுமை நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இலங்கையில் இலவசக் கல்வி நடைமுறையில் இருந்தாலும் போக்குவரத்து, கற்றல் உபகரணங்கள், இணையப்பாவனை போன்றவற்றை மாணவர்கள் தங்களது சுய செலவில் செய்யவேண்டியுள்ளது. மாணவரது கல்விக்கு செலவழிக்கும் தொகைக்கும் குடும்ப வருமானத்துக்கும் இடையில் நேரான இணைவுத் தொடர்பு உள்ளதாக இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. (Pearson correlation coefficient $(r) = 0.262$, $p < 0.01$). அதாவது குடும்ப வருமானம் குறையும் போது கல்விக்குச் செலவழிக்கும் தொகை குறைவடையும் தன்மை குறைகின்றது. இதனைப் பின்வரும் அட்டவணை 2 தெளிவாகக் காட்டுகின்றது.

**அட்டவணை 2: மாணவர்களின் மாதாந்த குடும்ப வருமானம் மற்றும் கல்விக்கு செலவிடும் தொகைக்கும் இடையிலான தொடர்பு**

| | | Expenditure on Education | | | | Total | Significance |
|---|---|---|---|---|---|---|---|
| | | < Rs.5000 | Rs.5000 - Rs.9999 | Rs.10000 - Rs.14999 | Rs.15000 < | | |
| Monthly Family Income | < Rs. 20000 | 21 | 4 | 1 | 2 | 28 | Pearson Chi -Square<br>$X^2$ =34.860<br>df =15<br>p= 0.003 (< 0.01)<br>Pearson's correlation coefficient (r) = 0.262<br>Approx. Significance 0.005 (<0.01) |
| | Rs. 20000 - Rs. 39999 | 13 | 14 | 6 | 5 | 38 | |
| | Rs. 40000 - Rs. 59999 | 14 | 9 | 5 | 4 | 32 | |
| | Rs. 60000 - Rs. 79999 | 3 | 1 | 6 | 0 | 10 | |
| | Rs. 80000 - Rs. 99999 | 1 | 1 | 0 | 0 | 2 | |
| | Rs. 100000 < | 1 | 0 | 1 | 2 | 4 | |
| Total | | 53 | 29 | 19 | 13 | 114 | |

**(மூலம்: ஆய்வாளரினால் தயாரிக்கப்பட்டது, 2023)**

பெரும்பாலான (ஆகக்குறைந்தது 85%) மாணவர்களின் குடும்பம் வறுமைக்கோட்டின் கீழேயே உள்ளதால் கல்விக்கு செலவழிக்கும் தொகையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. 53%ஆன மாணவர்கள் தங்களது கல்விக்காக மாதாந்தம் ரூ.5000இற்கும் அதிகமாக செலவு செய்வதாகக் குறிப்பிட்டுள்ளனர். தற்போதைய பொருளாதார நெருக்கடியில் மாணவர்களின் குடும்பத்துக்கு இது அதிக சுமையாகக் காணப்படுகின்றது.

குறிப்பிட்டளவு (48.25%) க.பொ.த உ/த மாணவர்கள் குடும்ப வருமானத்தை அதிகரிப்பதில் பங்குகொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக 8.77%ஆன மாணவர்கள் வழமையாகவே குடும்ப வருமானதை அதிகரிப்பதற்கு பங்களிக்கின்றனர். இது அம் மாணவர்களின் கற்றலில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இவ் ஆய்வில் 34.1%ஆன பெற்றோர்கள் இந்த பொருளாதார சிக்கலினால் வேலைவாய்ப்பை இழந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. எனவே Coelli (2011) என்பவரின் ஆய்வு முடிவுகளுக்கேற்ப இப் பெற்றோரின் வேலைவாய்ப்பு இழப்பு, அவர்களின் பிள்ளைகள் உயர்கல்வியை தொடர்வதில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

**அட்டவணை 3: மாணவர்களின் குடும்ப வருமானம் மற்றும் தனியார் வகுப்பில் பங்குபற்றுவதற்கும் இடையிலான தொடர்பு**

| Monthly Family Income X Private Tuition Crosstabulation | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | Private Tuition | | | | |
| | | Yes | Cumulative Frequency of "Yes" | No | Total | Cumulative Frequency of Total |
| Monthly Family Income | <20000 | 20 | 20 | 8 | 28 | 28 (24.56%) |
| | 20000 – 39999 | 33 | 53 | 5 | 38 | 66 (57.89%) |
| | 40000 – 59999 | 27 | 80 | 5 | 32 | 98 (85.96%) |
| | 60000 – 79999 | 10 | 90 | 0 | 10 | 108 (94.74%) |
| | 80000 – 99999 | 0 | 0 | 2 | 2 | 110 (96.49%) |
| | 100000< | 2 | 92 | 2 | 4 | 114 (100%) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Total** | 92 | | 22 | 114 | |

**(மூலம்: ஆய்வாளரினால் தயாரிக்கப்பட்டது, 2023)**

மேற்படி அட்டவணை 3இன்படி பெரும்பாலான மாணவர்கள் (80.7%) தனியார் வகுப்புக்களில் பங்குவற்றுவதுடன், மாதாந்த குடும்ப வருமானம் ரூ60000இலும் குறைவான (ரூ59999 வரையான) 98 மாணவர்களுள் 80 மாணவர்கள் (81.63%, out of 98) தனியார் வகுப்பில் பங்குபற்றுவதுடன் ரூ 60000 அல்லது அதனிலும் அதிகமான மாதாந்த குடும்ப வருமானத்தைக் கொண்ட 16 மாணவர்களுள் 12 மாணவர்கள் (75%, out of 16) தனியார் வகுப்பில் பங்குபற்றுவது அவதானிக்கக்கூடியதாக உள்ளது. மாணவர்களின் மாதாந்த குடும்ப வருமானம் மற்றும் தனியார் வகுப்பிற்கு செலவிடும் தொகைக்குமிடையிலான பொருண்மை மட்டமானது $p = 0.089$ (>0.05) ஆகக் காணப்படுவதனால் $\alpha = 0.05$ இணைவு பொருண்மை மட்டத்தில் பொருண்மையான வேறுபாடு அற்றதாகக் காணப்படுகின்றது. இதிலிருந்து மாதாந்த குடும்ப வருமானத்திற்கும் தனியார் வகுப்பிற்கு செலவிடும் தொகைக்கும் இடையிலே புள்ளிவிபரவியல் ரீதியான தொடர்பு இல்லாமல் காணப்படுகின்றது. அதாவது குடும்ப வருமானம் குறைந்தவர்களும், கூடியவர்களும் தனியார் கல்விக்கு செலவழிப்பதில் ஒரே மாதிரியான முக்கியத்துவம் அளிக்கின்றார்கள்.

பன்மைத்துவ சமூக நாடான இலங்கையில் இன, மத வேறுபாடின்றி உயர்தரக் கல்வியில் தனியார் கல்விக்கு மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் வழக்கமாக முக்கியத்துவம் கொடுப்பது பொதுவான விடயமாக உள்ளது. அதனை நிரூபிக்கும் விதமாக அண்ணளவாக 81%ஆன மாணவர்கள் தனியார் கல்வியில் ஈடுபடுகின்றனர். நான்கில் ஒரு பங்கு மாணவர்கள் (25%) தனியார் கல்வியோடு பிரத்தியேக வகுப்புகளிலும் பங்குபற்றுகின்றார்கள். தனியார் வகுப்புகளில் கலந்துகொள்ளும் மாணவர்கள் சராசரியாக ரூ5423.91ஐத் தனியார் கல்விக்காக மாதாந்தம் செலவு செய்கின்றார்கள். பெரும்பாலான குடும்பங்கள் வறுமைக்கோட்டின் கீழ் இருக்கும் போது மாதாந்தம் இந்தளவு தொகையை (ரூ.5423.91) தனியார் கல்விக்குச் செலவு செய்வது குடும்பத்தின் பொருளாதார சுமையை மேலும் அதிகரிப்பதாகவே அமையும். தனியார் கல்விக்குச் செல்லாத மாணவர்களில் அண்ணளவாக மூன்றில் ஒரு பங்கினர் தனியார் கல்வி நிலையத்துக்கான தூரத்தினால் செல்லாமல் உள்ளனர். தனியார் கல்விக்குச் செல்லாத மாணவர்களில் மூன்றில் ஒரு பங்கிலும் சற்றுக்குறைவான மாணவர்கள் பணப் பற்றாக்குறையால் தனியார் கல்விக்குச் செல்லாமல் உள்ளனர்.

**மாணவர்களின் வீடுகளில் கற்றலுக்கான சூழலில் ஏற்படுத்தும் பாதிப்புகள்**

எமது ஆய்வில் சப்பாத்து, புத்தகப்பை போன்றவற்றைப் பெறுவதில் 80.7%, பாடப் புத்தகங்களைப் பெறுவதில் 82.45%, எழுதுகருவிகளைப் பெறுவதில் 72.81%, போட்டோ பிரதிகளைப் பெறுவதில் 81.58%, திறன்பேசிகளைப் பெறுவதில் 64.92%, இணைய வசதிகளைப் பெறுவதில் 74.56%ஆனவர்களும் இந்த பொருளாதார சிக்கலால் பாதிப்பை எதிர்நோக்குகின்றார்கள். விலைவாசி அதிகரிப்பு, போதிய வருமானம் இல்லாமை போன்றவற்றால் குடும்பங்களின் கொள்வனவு சக்தி குறைந்துள்ளதை அவதானிக்கக்

கூடியதாகவுள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடியினால் குடும்பத்தின் கொள்வனவு சக்தி குறைவடைந்தமையானது கற்றல் கையேடுகள், கடந்த கால வினாப்பத்திரங்கள், பாடக் குறிப்புக்கள் போன்றவற்றை பிரதி எடுப்பதில் கணிசமானளவு(42.1%) மாணவர்கள் சிக்கலை எதிர்கொள்ளுகின்றனர். கடந்த கால வினாத்தாள்கள், பாடக்குறிப்புகள் மற்றும் கற்றல் கையேடுகள் என்பன உயர்தர மாணவர்களின் கல்விக்கு முக்கியமானவையாகும். பாடசாலைகளில் அவற்றை இலவசமாக வழங்கும் நடைமுறை இலங்கையில் இல்லை. கணிசமானளவு மாணவர்கள் அவற்றைப் பெற்றுக்கொள்ளுவதில் சிக்கலை எதிர்நோக்குவதால் அவர்களது கற்றல் சூழல் பாதிக்கப்படுகின்றது. மேலும் குறைந்தளவான மாணவர்களே(25.4%) கொள்வனவு சக்தி குறைந்தமையால் எந்தவிதமான பாதிப்புக்களையும் எதிர்நோக்கவில்லை. ஏனையோர் கற்பதற்கான பாடசாலைப் பொருட்களைப் பெற முடியாமை(32.46%) போஷணையான உணவைப் பெற முடியாமை(22.8%), கற்றலுக்குத் தேவையான பொருட்களை உரிய நேரத்தில் பெற முடியாமை(11.4%) இணையக் கற்றலுக்குத் தேவையான சாதனங்களை மற்றும் இணைய வசதிகளைப் பெற முடியாமை(9.65%) எனப் பல்வேறு விதங்களில் கொள்வனவு சக்தி குறைந்தமையால் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். இவை மேற்குறிப்பிட்ட நைஜீரியா நாட்டில் நடத்தப்பட்ட ஆய்வோடு ஒத்துப்போகின்றது.

**அட்டவணை 4: பொருளாதார நிலை தடையாக அமையும் மாறிகளிற்கும் குடும்ப வருமானம் குறைந்து செல்வதற்கும் இடையேயான இணைவுத் தொடர்பு**

| பொருளாதார நிலை தடையாக அமையும் மாறிகள் | ஸ்பியர்மனின் இணைவுக் குணகம் | பொருண்மை (Significance) |
|---|---|---|
| சப்பாத்து, புத்தகப்பை போன்ற பாடசாலை உபகரணங்களைப் பெறுவது | 0.327 | 0.000(< 0.01) |
| பாடப் புத்தகங்களைப் பெறுவது | 0.321 | 0.001(< 0.01) |
| எழுதுகருவிகளைப் பெறுவது | 0.314 | 0.001(< 0.01) |
| பிரதிகளைப் பெறுவது | 0.363 | 0.000(< 0.01) |
| திறன்பேசிகளைப் பெறுவது | 0.280 | 0.003(< 0.01) |
| இணையவசதிகளைப் பெறுவது | 0.443 | 0.000(< 0.01) |

**(மூலம்: ஆய்வாளரினால் தயாரிக்கப்பட்டது, 2023)**

மேற்படி அட்டவணை 4இன் படி சப்பாத்து, புத்தக்கப்பை போன்ற பாடசாலை உபகரணங்களைப் பெறுவதில், பாடப் புத்தகங்களைப் பெறுவதில், எழுதுகருவிகளைப் பெறுவதில், போட்டோபிரதிகளைப் பெறுவதில், திறன்பேசிகளைப் பெறுவதில், இணைய வசதிகளைப் பெறுவதில் பொருளாதார நிலை தடையாக அமைவதற்கும் குடும்ப வருமானம் குறைந்து செல்வதற்கும் இடையே இணைவுத் தொடர்பு ($p < 0.01$) காணப்படுகின்றது. அதாவது குடும்ப வருமானம் குறையும் போது பாதிக்கப்படும் தன்மையும் அதிகமாகின்றது.

மின்சாரத்தடையினால் 78.95% மாணவர்களின் கற்றல்நேரம் மற்றும் 83.33% மாணவர்களின் நிகழ்நிலைக் கற்றல் என்பன பாதிப்படைந்துள்ளது. மேலும் மின்சாரக் கட்டண

விலையுயர்வினால் பெரும்பாலான (69.3%) மாணவர்களின் கல்வி கற்கும் நேரம் பாதிப்படைந்துள்ளது. வீட்டில் மின்சாரத்தடை ஏற்படும் போது மாணவர்களின் கற்றலிற்காக வெளிச்சத்தை பெறுவதற்கு மின்சூள் (35.96%), மின்சேமிப்பு விளக்கு (Charger light) (23.68%), மெழுகுவர்த்தி (16.67%), மண்ணெண்ணை விளக்கு (14.04%), தொலைபேசியின் வெளிச்சம் (11.4%) போன்றவற்றை மாணவர்கள் பயன்படுத்துவதுடன், 29.82% ஆன மாணவர்கள் மின்சாரம் வரும்வரை காத்திருக்கின்றார்கள். பொருளாதார நெருக்கடியால் பகுதி நேர தொழிலில் ஈடுபடுகின்ற மாணவர்களிற்கு, உடல் களைப்படைவதால் படிப்பதில் ஆர்வமில்லாமலிருக்கின்றது (14.91%), வீட்டுவேலைகள் (Home works) மற்றும் ஒப்படைகளை உரிய நேரத்திற்கு செய்ய முடிவதில்லை (10.53%), கற்றலில் ஈடுபடும் நேரம் குறைவடைந்துள்ளது (9.65%). இவை அம் மாணவர்களின் சுய கற்றல் நேரத்தைப் பாதிக்கின்றது. அத்துடன் 4.39%ஆன மாணவர்களிற்கு மட்டுமே கற்றலில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

**மாணவர்களது பாடசாலைக் கற்றல் செயற்பாடுகளில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள்**

பெரும்பாலான மாணவர்கள் பொதுப் போக்குவரத்தினைப் (43.86%) பயன்படுத்தியும், நடந்தும் (41.23%) வருகின்றனர். மேலும் சில மாணவர்கள் மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி, துவிச்சக்கர வண்டி, கார் போன்றவற்றைப் பயன்படுத்தி பாடசாலைக்கு வருவதுடன் எந்தவொரு மாணவரும் பாடசாலைக்கு வானில்(Van) வருவதில்லை என்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. பாடசாலை வருகைக்கு போக்குவரத்து சாதனம் பெரும்பாலான மாணவர்களுக்கு (59.65%) தடையாக இருக்கவில்லை.




**உரு 1: மாணவர்களின் பாடசாலைக்கும் வீட்டிற்கும் இடைப்பட்ட தூரம்**

இங்கு பெரும்பாலான (40.35%) மாணவர்கள் 2km இற்கும் குறைவான தூரத்தில் இருந்து பாடசாலைக்கு வருகின்றதுடன் 12.3%ஆன மாணவர்கள் மட்டுமே 8km அல்லது அதற்கும் மேற்பட்ட தூரத்தில் இருந்து பாடசாலைக்கு வருகின்றமை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

பாடசாலைக்கும் வீட்டுக்கும் இடையிலான தூரத்துக்கும் பயன்படுத்தும் போக்குவரத்துச் சாதனம் தடையாக அமைவதற்கும் இடையில் புள்ளிவிபரவியல் ரீதியாக தொடர்பில்லை ($X^2$= 9.288, df=4, p>0.05). அதிகளவான மாணவர்கள் நடந்து வருவது அதற்கு காரணமாக இருக்கின்றது. பாடசாலையில் இருந்து வீட்டிற்கான தூரத்துக்கும் பாடசாலைக்குத் தாமதமாக வரவேண்டி ஏற்படுவதற்கும் இடையில் எதிரான இணைவுத் தொடர்பு (Spearman correlation (r) = -0.452, p < 0.01) காணப்படுகின்றது. எனவே வீட்டிலிருந்து பாடசாலை அருகில் இருக்கும்

போது பாடசாலைக்குத் தாமதமாக வரும் தன்மை குறைவடைகின்றது. ஆனால் பெரும்பாலான மாணவர்கள் (55.26%) போக்குவரத்துச் சாதனத்தால் மற்றும் இந்த பொருளாதார சிக்கலால் பாடசாலைக்கு தாமதமாக வருகிறார்கள். 25.44% ஆன மாணவர்கள் கற்றலுக்குரிய போக்குவரத்துக்காக ரூ.5000இலும் அதிகமாக செலவழிக்கிறார்கள். தூர பிரதேச மாணவர்கள் போக்குவரத்திற்கு அதிக பணம் தேவைப்படுவதால் அதை ஈடுசெய்ய முடியாமல் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். ஆகவே பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்ட போக்குவரத்துச் செலவு அதிகரிப்பு, மாணவர்கள் பாடசாலைக் கற்றல் செயற்பாடுகளில் பங்கு கொள்வதில் கணிசமான அளவு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

**அட்டவணை 5: நிகழ்நிலை கற்றலில் மாணவர்களின் பங்குபற்றுதல் வீதம்**

| | Frequency | Percent | Cumulative Percent |
|---|---|---|---|
| **Very Good** | 2 | 5.9 | 5.9 |
| **Good** | 15 | 44.1 | 50.0 |
| **Bad** | 12 | 35.3 | 85.3 |
| **Very Bad** | 5 | 14.7 | 100.0 |
| **Total** | **34** | **100.0** | |

**(மூலம்: ஆய்வாளரினால் தயாரிக்கப்பட்டது, 2023)**

அட்டவணை 5இன்படி 50% ஆன ஆசிரியர்களின் நிகழ்நிலைக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் போது மட்டுமே மாணவர்களின் பங்குபற்றுதல் வீதம் நன்றாகக் காணப்பட்டுள்ளது. ஆனால் பொருளாதார நெருக்கடியினால் பாடசாலை மூடியிருந்த காலப்பகுதியில் நிகழ்நிலை மூலமே பாடசாலை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெற்றன. இதிலிருந்து பாடசாலைகளின் நிகழ்நிலைக் கற்றல் செயற்பாடுகளும் அனைத்து மாணவர்களையும் சென்றடையவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆய்வானது உயர்தர வகுப்பு மாணவர்களிடம் மட்டுமே நடத்தப்பட்டுள்ளது. பிலியந்தல கல்வி வலயத்தில் உள்ள தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் மாத்திரமே நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் பொருளாதார நெருக்கடியால் மாணவர்களின் கல்வி கற்றலில் உள்ள தாக்கங்களே ஆராயப்பட்டுள்ளது. அதிகளவு மாதிரிகளைத் தெரிவு செய்கின்ற போதுதான் செம்மையான முடிவுகளைப் பெற முடியும் என்பதனால் அதிக மாதிரிகளைத் தெரிவு செய்வதற்காக ஆய்வுப்பரப்பினை பரந்ததாக எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. எனினும் போக்குவரத்து பிரச்சினை அனுமதி பெற முடியாமை போன்ற காரணங்களால் அதிக மாதிரிகளைத் தெரிவு செய்ய முடியாத நிலை காணப்பட்டது. தடைகள் இல்லாவிடின் பொருளாதார நெருக்கடியினால் பிலியந்தல கல்வி வலய மாணவர்களின் கற்றல் பாதிப்புக்களினை இனங்காணும் ஆய்வினை மேற்கொள்வதோடு பொருளாதார நெருக்கடியினால் மாணவர்களின் போஷாக்கு மற்றும் ஆரோக்கியத்தில் ஏற்பட்ட பாதிப்புக்களினையும் இனங்காணலாம். இவ்வாறு இவ்வாய்வை அடிப்படையாகக்கொண்டு இவ்

விடயப்பரப்பு தொடர்பாக பல தரப்பட்ட நோக்கம் குறிக்கோள் அடிப்படையில் எதிர்காலத்தில் ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

**முடிவுரை**

தற்போதைய பொருளாதார நெருக்கடி க.பொ.த உ/த மாணவர்களின் குடும்ப பொருளாதார நிலைமைகளில், வீடுகளில் கற்றலுக்கான சூழலில், பாடசாலைக் கற்றல் செயற்பாடுகளில் ஏற்படுத்தும் பல்வேறு விதமான பாதிப்புகளையும் அதனுடன் தொடர்புபட்ட காரணிகளையும் கண்டறியும் வகையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இந்த பொருளாதார நெருக்கடி பெரும்பாலான மாணவர்களின் கற்றலில் பல்வேறு விதமான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இதில் குடும்ப வருமானம் முக்கிய காரணியாக தொடர்புபட்டுள்ளது. இலங்கையின் உயர்கல்வியில் பொருளாதார நெருக்கடியிலும் தனியார்கல்விக்கு மாணவர்கள் முக்கியத்துவம் அளிக்கின்றனர். அனைவருக்கும் சமமான கல்வி வாய்ப்புக்களை வழங்குவதன் ஊடாகவே கல்வி மூலம் கிடைக்கும் அனைத்து நன்மைகளையும் அனைவரும் சமமாக அனுபவிக்க முடியும். பன்மைத்துவச் சமூகங்களைக் கொண்ட இலங்கையில் கல்வியினூடாக சமத்துவம், ஒப்புரவு, சமூக நீதி என்பவற்றை நிலைநாட்டுவதற்கு மாணவர்களின் கற்றலில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை நிவர்த்தி செய்தல் வேண்டும். இதற்கு அரசாங்கம் பல்வேறு மட்டங்களில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பெற்றோர்களது மற்றும் குடும்ப வருமானத்தை அதிகரிக்க உதவுவது கற்றலில் ஏற்படும் பாதிப்புகளை குறைக்க உதவி செய்யும். வீட்டிற்கு அருகிலுள்ள பாடசாலைகளில் மாணவர்கள் கல்வி கற்றலை ஊக்குவிப்பது பொருளாதார நெருக்கடியில் போக்குவரத்தில் ஏற்படும் பாதிப்பை குறைக்க உதவி செய்யும். கற்றலுக்குரிய உள்ளீடுகள், கற்றல் கையேடுகள், கடந்த கால வினாப்பத்திரங்கள், பாடக் குறிப்புக்கள், சப்பாத்து, புத்தகப்பை போன்ற பாடசாலை உபகரணங்களினைப் பெறுவதற்கு அரசு அல்லது அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் உதவிகளை செய்வது மாணவர்களுக்கு தற்காலிக உதவியாக அமையும்.

**உசாத்துணைகள்**

Bamigboye, G., Ede, A., & Adeyemi, G. (2016). Impact of economic crisis on education: case study of southwest Nigeria. *In Proceedings of INTED2016 Conference*. Retrieved October 09, 2022, from https://www.researchgate.net/publication/305962955_IMPACT_OF_ECONOMIC_CRISIS_ON_EDUCATION_CASE_STUDY_OF_SOUTHWEST_NIGERIA

Cazan, D. & Cucos, A.F., (2013). *The Economic Crisis-Meanings and Significations Causes and Solutions*, (pp. 21 – 24) Romania: Dunarea de Jos University of Galati. Retrieved from https://doaj.org/article/24b05a46eac94cf99ca2f2f6d2fe7cca

Central Bank of Sri Lanka. (2022). Economic, price and financial system stability, outlook, and policies. In: *Annual Report 2021 Sri Lanka*. Retrieved from https://www.cbsl.gov.lk/en/publications/economic-and-financial-reports/annual-reports

Ceylon Electricity Board. (2022, August). *Electricity tariff revision 2022*. Retrieved from: https://ceb.lk/front_img/1660193120Electricity-Tariff_Revision-2022.pdf

Coelli, M. B. (2011). Parental job loss and the education enrollment of youth. *Labour Economics*, 18(1), 25-35. Retrieved from: https://www.sciencedirect.com/science/article/pii/S0927537110000606

Department of Census and Statistics. (2022, November). *Official Poverty line by District: November 2022*. Sri Lanka. Retrieved December 14, 2022, from http://www.statistics.gov.lk/povertyLine/2022_new

Economic Research Department, Central Bank of Sri Lanka. (2022, July 11). *External sector performance May 2022*. Press Release. Retrieved from: https://www.cbsl.gov.lk/en/press/press-releases/external-sector-performance

Heath, R., & Jeyachandran, S. (2017). The causes and consequences of increased female educational and labor force participation in developing countries. *National Bureau of Economic Research Working paper series*, Working paper 22766, Cambridge, Massachusetts.

OCHA. (2022, December 16). *Sri Lanka Multi-Dimensional Crisis Situation Report No. 10*. Retrieved December 23, 2022, from https://reliefweb.int/attachments/a851ae31-f21e-4244-aa12-bc3671c61aa6/SriLanka_HNP_Sitrep10_20221216.pdf

Robinson, L. (1996). *School students and part-time work*. Longitudinal Surveys of Australian Youth Research Report No. 2. Australian Council for Educational Research.

Save the Children. (2022, June 21). Sri Lanka Closes Schools for Fourth Time this Year Amid Worsening Fuel Shortage. Save the Children. Retrieved October,19 2022, from https://www.savethechildren.org/us/about-us/media-and-news/2022-press-releases/sri-lanka-closes-schools-fourth-time-2022-fuel-shortage-worse

Statistics Department, Central Bank of Sri Lanka. (2022, July 21). Press release - *NCPI based headline inflation recorded at 58.9% on year-on-year basis in June 2022*. Retrieved October 18, 2022, from https://www.cbsl.gov.lk/en/press/press-releases/inflation

UNICEF Sri Lanka. (2022, June). *Budget brief: Education sector, Sri Lanka 2021*. Retrieved November 10, 2022, from https://www.unicef.org/srilanka/reports/budget-brief-education-sector

World Bank. (2022, April 22). *Macro poverty outlook, Sri Lanka: Economic Analysis*. Retrieved November 03, 2022, from https://thedocs.worldbank.org/en/doc/5d1783db09a0e09d15bbcea8ef0cec0b-0500052021/related/mpo-lka.pdf

# பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டமும் அதனை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சவால்களும் (ஏறாவூர்ப்பற்று மேற்கு கோட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

**சுப்பிரமணியம் பாலகிருஸ்ணன்**
மட்/மமே/தளவாய் சுவாமி அஜராத்மானந்தாஜீ வித்தியாலயம்.
தளவாய், பங்குடாவெளி.
brabanjaan@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

எதிர்காலத்திற்கு பொருத்தமான அறிவாற்றலும் ஆளுமையும்மிக்க சந்ததியினரை உருவாக்க பங்களிக்கும் ஆசிரியர்கள் தங்களது வாண்மைத்திறனையும் விருத்தியாக்க வேண்டியது அவசியமாகும். அந்தவகையில் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கான ஒரு வரப்பிரசாதமாகும். ஆனபோதிலும் பாடசாலை மட்டத்தில் திட்டமிடப்படும் ஆசிரியர்களிற்கான வாண்மை விருத்திச் செயற்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாத நிலையினை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதனால் பாடசாலை செயற்பாடுகளில் ஆசிரியர்கள், அதிபர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். இவ்வாய்வின் முக்கிய நோக்கம் பா.ம.ஆ.அபிவிருத்தி வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது எதிர் நோக்கப்படும் சவால்களைக் கண்டறிந்து அதனை நீக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கூறுவதாகும். அந்தவகையில் இதேபோன்ற பிரச்சினைக்குட்பட்ட பாடசாலைகளிற்கு நல்லதொரு முடிவுகளை எடுத்துக் கூறக் கூடியதாகவும் இவ்வாய்வு அமைகின்றது. இவ்வாய்வானது 1C, வகை-II வகை-III பாடசாலைகளைக் கொண்டமைந்த ஏறாவூர்பற்று மேற்கு கோட்டத்திலிருந்து நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட அளவைநிலை ஆய்வாகும். மொத்தமான 14 பாடசாலைகளிலிருந்து அனைத்து வகை பாடசாலைகளும் உள்ளடங்கும் விதமாக படையாக்கப்பட்ட மாதிரி எடுப்பு மூலம் 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. அத்துடன் பால் அடிப்படையில் படையாக்கப்பட்டு எளிய எழுமாற்று மூலம் 50 ஆசிரியர்களும், 10 அதிபர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாய்வானது பா.ம.ஆ. அபிவிருத்தியினை நடைமுறைப்படுத்தலிலுள்ள சவால்களை அறியும் வகையில் முன்னெடுக்கப்பட்டது. கருதுகோள்களை வாய்ப்புப்பார்ப்பதற்கு தேவையான தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கான வினாக்கொத்துக்கள், ஆவணங்கள் பெறுவதற்கான பட்டியல் என்பன தயாரிக்கப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் லைக்கேட்டின் அளவீட்டிற்கமைய பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் Chi square Test மூலம் கருதுகோள் வாய்ப்புப் பார்க்கப்பட்டு அதன் அடிப்படையில் முடிவுகள் விபரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அளவு சாரா விடயங்கள் பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டதன் மூலம் பல்வேறு முடிவுகளும் கண்டறியப்பட்டுள்ளன. இதன்படி இவ்வாய்வில் அளவு மற்றும் பண்பு ரீதியிலமைந்த கலப்பு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுப்பாய்வுக்காக SPSS மென்பொருள் பயன்படுத்தப்பட்டது. அதன் மூலம் அட்டவணைகளும், உருக்களும் பயன்படுத்தப்பட்டன. ஆய்வின் முடிவுகளாக ஆசிரியர்கள் பா.ம.ஆ.அ தொடர்பாக நேரான மனப்பாங்கை கொண்டிருக்கவில்லை, அது தொடர்பான அறிவும் விளக்கமும் கொண்டிருக்கவில்லை, அதிபர்கள் பா.ம.ஆ.அ தொடர்பாக பூரண விளக்கமும், பயிற்சியும் பெற்றிருக்கவில்லை, அதனை நடைமுறைப்படுத்தலுக்காக அதிபர்கள் உரிய வகிபங்கை வகிக்கவில்லை, ஐந்தாண்டு திட்டமிடலில் உள்ளடக்கப்படும் பா.ம.ஆ.அ செயற்றிட்டங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை ஆகிய முடிவுகள் காணப்படுகின்றன. ஆய்வின் முடிவில் அதற்கான விதப்புரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *பாடசாலை அபிவிருத்திக் குழு, பாடசாலை முகாமைத்துவ அணி. பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி, பாடசாலை மேம்பாட்டுத்திட்டம்*

**அறிமுகம்**

மாற்றமுறும் உலகிற்கு பொருத்தமான புத்தாக்கத்திறன்களும் சமநிலை ஆளுமையும்மிக்க எதிர்கால சமுகத்தை உருவாக்குவதே கல்வியின் பிரதான நோக்கமாகும். இந்த நூற்றாண்டுச் சமூகம் ''அறிவுசார் சமூகம்'' என அழைக்கப்படுகின்றது. அறிவைப் பெறக்கற்றல், பெற்ற அறிவினைக் காலத்திற்கு காலம் புதுப்பித்துக்கொள்ளல், பொருத்தமாகக் கையளித்தல் என்பன இந்த நூற்றாண்டின் கல்வி தொடர்பான முக்கிய விடயங்களாகும். இவற்றினை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களை சார்ந்ததாகும். அந்த வகையில் ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்காக தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விடயம் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி ஆகும். பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி (பா.ம.ஆ.அபிவிருத்தி) என்பது (School Based Teacher Development-SBTD) மாணவரின் அடைவு மட்ட உயர்வு மற்றும் ஆளுமை விருத்திக்கு வழிகாட்டக்கூடிய பொறுப்பு மிக்க ஆசிரியர்களை உருவாக்குவதற்காக பாடசாலைமட்ட ஆசிரியர் அபிவிருத்தி தேவையை இனங்காணல், திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளை கொண்ட தொடரச்சியான வேலைத்திட்டமாகும்.

வகுப்பறையில் மாணவர்களின் ஆக்கத்திறனுக்கும், ஆர்வத்திற்கும் ஈடுகொடுக்கக்கூடிய ஆசிரியர்கள் மட்டுமே இப்பணியில் நிலைத்துச் செயலாற்ற முடியும். இதனடிப்படையில் இன்று பாடசாலைகளில் ஆசிரியர்கள் கற்பித்தலில் கல்வியில் புதியநுட்பங்களை பிரயோகிக்க வேண்டிய தேவை அதிகமாகக் காணப்பட்டாலும் அதனைப் பிரயோகிப்பது குறைவாகக் காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம் ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படாமையே ஆகும்.

மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள இக் கோட்டமானது நீண்ட காலத்திற்கு ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாக சேவையாற்றும் பெருமளவான ஆசிரியர்களைக் கொண்டு காணப்படுகின்றமை பல்வேறு பிரச்சினைகளிற்கு காரணமாய் அமைகின்றது. இது ஆசிரியர்களிடையே ஒரு சலிப்புத் தன்மையை ஏற்படுத்துவதினால் அவர்கள் வாண்மை விருத்தி தொடர்பாக ஆர்வமின்றி காணப்படுகின்றனர். அனேக பாடசாலைகளில் பொருத்தமற்ற ஆசிரியர் பரம்பல் கொண்ட பாடசாலைக் கட்டமைப்பு காணப்படுகிறது. அதாவது ஆரம்பக்கல்வி ஆசிரியர் இடைநிலை பாடசாலையிலும் இடைநிலைப் பாட ஆசிரியர் ஆரம்ப பாடசாலையிலும் காணப்படுதல் முகாமைத்துவத்தினையும், நிர்வாகத்தினையும் சிறப்பாக செயற்படுத்த முடியாமல் பல குழப்பங்களையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்துகின்ற நிலமையும் இப்பிரச்சினைக்கான கரணமாக அமைகின்றது.

இதைவிட பாடசாலையில் கற்பித்தலில் ஈடுபடுகின்ற ஆசிரியர்களுக்கு தங்களின் நியமன வகை பாடங்களுக்கேற்ப பாடங்கள் வழங்கப்பட வேண்டியது முக்கியமானதாகும். ஆனால் இதை விடுத்து அவர்கள் ஒவ்வொருவரும் தங்களின் வகுதிப் பாடங்கள் தவிர்ந்த பாடங்களை கற்பிப்பதினால் அல்லது கற்பிக்க நிர்பந்திக்கப்படுவதனால் அவர்கள் தங்களது

நியமனப் பாடம் தொடர்பான வாண்மைத்துவத்தினை பெறமுடியாதுள்ளது. இது ஆசிரியர்கள், அதிபர் இடையே முரண்பாடுகள் ஏற்பட காரணமாகின்றன. இதில் அதிபரின் வகிபாகமானது ஆசிரியரின் வாண்மையை விருத்தி செய்வதில் பங்களிப்பு செய்வதற்கு முரணாக பல விடயங்கள் இக்கோட்டத்தில் காணப்படுகின்றன இவ்வாறான விடயங்கள் ஆய்விற்கான பின்னணியாக அமைந்துள்ளன.

தற்போது பாடசாலைகளினால் தயாரிக்கப்படும் ஐந்தாண்டுத்திட்டத்தில் ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டத்தினை வருடாந்த திட்டமிடலில் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதில் எவ்வாறான சவால்கள் காணப்படுகின்றன என்பதனை அறிய வேண்டியுள்ளது, பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்பாட்டிற்காக அமைச்சு, மாகாணம், வலயமட்டம் என்பவற்றிலிருந்து நிதி ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்படுகின்றமையினால் கட்டாயம் செயற்படுத்த வேண்டியுள்ளளமையினாலும், பாடசாலைப் பண்புத்தர மதிப்பீட்டில் ஆசிரியர் விருத்திச் செயற்பாடுகளை மதிப்பிடுவதற்கான சுட்டி காணப்படவில்லை. இதனால் பா.ம.ஆ.அபிவிருத்தி யின் நோக்கத்தை அடைய முடியாதுள்ளது. எனவே இவ்வாய்வின் மூலம் மதிப்பீட்டின் அவசியத்தை உணர இவ்வாய்வு அவசியமாகவுள்ளதாலும், பா.ம.ஆ.அபிவிருத்தி தொடர்பான தெளிவை அதிபர் ஆசிரியர்களிடையே ஏற்படுத்தல் இன்றியமையாததாலும், பா.ம.ஆ.அபிவிருத்தியினை பாடசாலையில் செயற்படுத்தும் போது பல்வேறு சவால்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. இச் சவால்களை எதிர் கொண்டு பா.ம.ஆ.அபிவிருத்தியை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தல் அவசியமானதாலும், தற்காலத்தில் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபங்கள், பிரமாணங்கள் என்பவற்றிக்கு அமைய பா.ம.ஆ.அபிவிருத்தியை கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டிய ஒன்றாக காணப்படுகின்றது. எனவே இது தொடர்பாக பரந்த அறிவையும், தெளிவையும் பெற்றுக் கொள்வதற்கும், ஆசிரியர் அபிவிருத்தி தொடர்பான தேவையுடையவர்களிற்கும் பயனுடையதாக அமையும் என்பதாலும் இவ் ஆய்வு கட்டாயம் செய்யப்பட வேண்டும். இப்பிரதேசத்தில் பா.ம.ஆ.அபிவிருத்தி தொடர்பாக இதுவரை எவ்வித ஆய்வுகளும் செய்யப்படவில்லை. எனவே பா.ம.ஆ.அபிவிருத்தி பற்றிய ஆய்வு இப் பிரதேசத்தில் இனிவரும் காலங்களில் பா.ம.ஆ.அபிவிருத்தியினை செயற்படுத்துவதற்கு ஒரு மாதிரியாக காணப்படுவதனால் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படவேண்டிய நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய கைநூல்கள் அனைத்து பாடசாலைகளிற்கும் வலயக்கல்வி அலுவலகம் ஊடாக அனுப்பிவைத்தல்,அதனை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக வளவாளர்களினால் பாடசாலை அதிபர்கள் அனைவருக்கும் செயலமர்வுகள் நடத்தப்படும். ஆனபோதிலும் அதுபற்றி அனைத்து ஆசிரியர்களும் சில பாடசாலையில் அதிபர்களும் பா.ம.ஆ.அபிவிருத்தி பற்றிய கைநூல்கள், சுற்றுநிருபங்கள் என்பவற்றை வாசித்து அறிந்து கொள்வதில் நாட்டம் செலுத்துவதில்லை இதன் காரணமாக இச் செயற்றிட்டம் பற்றிய பூரண விளக்கமின்மை இருப்பதனாலும், போதிய தெளிவின்மை காணப்படுகின்றமையினாலும் இச் செயற்றிட்டங்களை முழுமையாக திட்டமிட்டு நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது. அதிபரானவர் பிறரால் திட்டமிடப்பட்ட பாரம்பரிய கல்விச் செயற்பாடுகளை விட பாடசாலையினால் இனங்காணப்பட்ட தமது தேவைகளிற்கு பொருத்தமான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறைவாகவுள்ளது. எனவே

அதிபர் தமது பாடசாலை ஆசிரியர்களிற்கு அவசியமான செயற்பாடுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் தெரிவு செய்யாமல் தனது விருப்பத்திற்கு ஏற்ப ஆசிரியர்களிற்கு பொருத்தமற்றதும் சரியாக இனங்காணப்படாததுமான செயற்பாடுகளை திட்டமிடுதல் காரணமாக சரியான இலக்கினை அடையமுடியாதுள்ளது. பாடசாலையின் ஐந்தாண்டுத்திட்டத்தில், பாடசாலையின் ஓராண்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்படாமல் இருத்தல், பாடசாலை முகாமைத்துவக் குழுவினருக்கு திட்டமிடல் செயற்பாடு, நடைமுறைப்படுத்தல் என்பவற்றில் போதியவு திறன்கள் காணப்படாதிருக்கின்றமை, அப்படி இருந்த போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்ற நிலையும் காணப்படுகின்றது. உரிய பாடமல்லாத ஆசிரியர் அப்பாடத்தினை கற்பிக்க நிர்பந்திக்கப்படல் காரணமாக ஆசிரியர்களின் ஒத்துழைப்பு கிடைக்காமை, நீண்ட காலம் ஒரே பாடசாலையில் கற்பிப்பதனால் சுய கற்றலில் ஆசிரியர்களின் விருப்பமின்மை, திட்டமிடலில் நிறுவனம்சார் ஒழுங்கமைப்பு காணப்படாமை போன்ற இன்னும் பல பிரச்சினைகளைக் குறிப்பிடலாம்.

பாடசாலைமட்ட ஆசிரியர் அபிவிருத்தி செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பாடசாலைகள் எதிர்நோக்கும் சவால்களை இனங்கண்டு அதனை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான வழிவகைகளையும் அதற்கான தீர்வுகளையும் முன்வைத்தல்.

1. ஆசிரியர்கள் பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டம் தொடர்பாக நேரான மனப்பாங்கினை கொண்டிருக்கவில்லை
2. அதிபர்கள் பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டத்தை செயற்படுத்துவதற்கு அது தொடர்பாக பூரண விளக்கமும், பயிற்சியும் கொண்டிருக்கவில்லை
3. பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் அதிபர்கள் உரிய வகிபங்கை வகிக்கவில்லை

**இலக்கிய மீளாய்வு**

இலங்கையின் கல்வி வரலாற்றிலே 1950இற்கு பிறகு பல்கலைக்கழக அளவில் ஆசிரியர் சேவை முன்பயிற்சி முறை தொடங்கியது. 1985இல் கல்விக்கல்லூரிகள் ஆசிரியர் முன்சேவைப் பயிற்சி டிப்ளோமா மட்டத்தில் வழங்குவதற்காக நிறுவப்பட்டது. பின்னர் கல்வி அமைச்சு, தேசியகல்வி நிறுவகம் மற்றும் பல்கலைக்கழக மட்டத்தில் பயிற்சி பெறாத, பயற்சி பெற்ற, மற்றும் பட்டதாரி ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் நோக்கோடு பல பயிற்சி நெறிகள் நடைபெற்று வருகின்றன.

Yin Cheong Cheng Allan Walker, (1997), குறிப்பிடும் போது மாற்றமுறும் கல்விச் சூழலில் தொடரச்சியானதும், பாடசாலை விருத்திக்கான பாடசாலை மட்ட ஆசிரியர் கல்வியும் வினைத்திறனான தரமான தன்னம்பிக்கையை கட்டி எழுப்பவும் ஆசிரியர் கல்வி அவசியம். பாடசாலை மட்ட ஆசிரியர் கல்வியானது பாடசாலையினை பல்வேறு துறைகளில் மேம்பாடடைய உதவுகின்றது என்கின்றார்.

Agustinus Bandur, (2012), பாடசாலை மட்ட முகாமைத்துவ அணுகுமுறையில் அதிபர்கள் புதிய மாற்றமுறும் வகிபங்குகளையும், அதிகாரத்தையும் கொண்டுள்ளனர். பாடசாலை கழக உறுப்பினர்களுக்காக தொடர்ந்தும் ஊக்குவிப்பு பயிற்சிகள், செயலமர்வுகள்

என்பவற்றை மேற்கொள்ள வேண்டும். முறையான பாடசாலைக் கல்வியில் சரிநிகரான தன்மையினை கொண்டு வரவும், தரமான அடைவு மட்ட செயற்பாட்டை குவியப்படுத்தவும் இது துணை செய்கின்றது.

George Odhiambo, (2005), குறிப்பிடும் போது ஆசிரியர் செயலாற்றுகை ஆசிரியர்களுடைய கல்வி விருத்தியிலும் தரத்திலும் விருத்தியை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்றது. தரமான கல்வியை உருவாக்குவதற்கும், வினைத்திறனான கற்பித்தலுக்கும் ஆசிரியர் செயலாற்றுகை தரம் கணிப்பீடு சிறந்தது, எந்த இடத்தில் பலம், பலவீனம் காணப்படுகின்றதென்பதனை அறிய உதவுதல், ஆசிரியர்களின் உயர்வான மனநிலையினை ஊக்கப்படுத்துகின்றது.

**ஆய்வு முறையியல்**

அளவை நிலை ஆய்வுமுறை இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தரவுகளைச் சேகரிப்பதற்காக ஆய்வுக் கருவிகள் தயாரிக்கப்பட்டன. இதற்காக வினாக்கொத்துக்கள் தயாரிக்கப்பட்டு மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், ஆகியோரிடம் கொடுத்துத் தரவுகள் பெறப்பட்டு அவை தொடர்பான முடிவுகள் தொகுக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வினை மேற்கொள்வதற்குத் தயாரிக்கப்பட்ட ஆய்வுக் கருவிகளாக வினாக்கொத்து, ஆவணங்கள் என்பன அமைகின்றன. இதன்படி இவ்வாய்வில் அளவு மற்றும் பண்பு ரீதியிலமைந்த கலப்பு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலமாக புறவயத்தன்மையாக ஆய்வு கொண்டு செல்லப்படுகின்றது.

இவ் ஆய்வில் குறிப்பிட்ட ஆய்வுப் பிரதேசத்தைத் தெரிவு செய்து இதில் சனத்தொகையை இனங்காணல், மாதிரி முறையையும் அளவையும் தெரிவு செய்தல், ஆய்வின் வடிவத்தைத் தெரிவு செய்தல், ஆய்வுக் கருவிகளை வடிவமைத்தல், ஒழுக்க நெறிகளைக் கவனத்திலெடுத்தல் என்பனவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதுடன் இங்கு தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளைக் கொண்டு ஆய்விற்கான தரவுகள் சேகரிக்கப்பட்டு முழு அங்கத்துவத்திற்கும் பொதுமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் தரவுகளினதும் தகவல்களினதும் நம்பகத்தையும், தகுதியையும் உறுதிப்படுத்தும் வகையில் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

**மாதிரித் தெரிவு**

ஏறாவூர் பற்று மேற்கு வலயம் அமைந்துள்ள ஏறாவூர் பற்று மேற்கு கோட்டத்தில் 14 பாடசாலைகளிலிருந்து மாதிரி தெரிவு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வுக்காக நோக்கமாதிரிக்கு அமைய அக்கோட்டதிலுள்ள 14 பாடசாலைகளிலிருந்து மாதிரி தெரிவு மேற்கொள்ளப்பட்டது. இங்கு 1C, Type II , Type III வகையான பாடசாலைகள் காணப்படுகின்றன. இவ் ஒவ்வொரு வகை பாடசாலையும் ஆய்வு மாதிரியில் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதனை உறுதி செய்வதற்காக இப் பாடசாலைகள் வகைகள் என்ற அடிப்படையில் படையாக்கப்பட்டு பின்னர் படையாக்கப்பட்ட மாதிரி எடுப்பு மூலம் 1Cபாடசாலைகள் 02 உம், Type II பாடசாலைகள் 03 உம், Type III 05 உம் தெரிவு செய்யப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர்கள் பால் ரீதியாக பல்லினத் தன்மை கொண்டவர்களாக காணப்படுவதால் ஒவ்வொருவரையும் ஆய்வு மாதிரியில் பிரதிநிதித்துவம் செய்வதனை உறுதிப்படுத்துவதற்காக பட்டியல்படுத்தப்பட்டு படையாக்கப்பட்ட மாதிரி எடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டனர். அதன் அடிப்படையில் ஆண் ஆசிரியர்கள் 20 பேரும், பெண் ஆசிரியர்கள் 30 பேருமாக மொத்தமாக 50 பேர் படையாக்கப்பட்ட எளிய எழுமாற்று மாதிரி எடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டார்கள்.

மேலும் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பாடசாலையும் பல்லினத்தன்மை கொண்டதாக காணப்படுவதால் ஒவ்வொரு வகை பாடசாலை அதிபரும் ஆய்வு மாதிரியில் இடம் பெறுவது அவசியமாகவுள்ளது என்பதனை கருத்திற் கொண்டு நோக்க மாதிரி எடுப்பின் மூலம்10 அதிபர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**தரவுப் பகுப்பாய்வு**

ஆய்வுக்கான மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு அம்மாதிரிகள் மூலம் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அவை ஒவ்வொரு சிறப்பு நோக்கங்களை ஈடு செய்யக்கூடிய விடயங்கள் வரக்கூடியவாறு தொகுக்கப்பட்டன. அவ் வினாக்களின் மூலம் பெறப்பட்ட தகவல்களில் மூடிய வினாக்கள் மூலம் தரவுகள் பெறப்பட்டு லைக்கேற் (Likert) முறையில் புள்ளிகள் இடப்பட்டு அளவு ரீதியான புள்ளி விபரங்கள் பெறப்பட்டன. இவ் விடயங்களின் உண்மைத்தன்மை வாய்ப்பு பார்க்கப்பட்து. திறந்த வினாக்கள் மூலம் பெறப்பட்ட தகவல்கள், ஆவணச்சான்றுகள் பொருத்தமான தலைப்புகளின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டு பண்பு ரீதியான தரவுகள் வியாக்கியானம் செய்வதற்கு ஏற்றவாறு ஒழுங்குபடுத்தப்பட்டது. அவை எண்சார் தகவல்களாக மாற்றப்பட்டும் அட்டவணையாக்கம், இருபரிமாண வரைபடம், முப்பரிமாண வரைபடம், சலாகை வரைபுகள், வட்ட வரைபுகள் மூலமாக புள்ளி விபரமாக்கப்பட்டும் விளக்கப்படுகின்றது. இவ்வாய்வின் தரவு SPSS மென்பொருள் மூலம் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படவுள்ளதால் அளவு ரீதியான ஆய்வாகவும் அதேவேளை திறந்த வினாக்களினூடாக பண்பு சார் ரீதியிலான தகவல்கள் பெறப்படுவதால் இப் பகுப்பாய்வு முறையில் இவ் இரு முறைகளையும் கலந்த கலப்பு முறை (Mixed Method) பயன்படுத்தப்பட்டது.

**கலந்துரையாடலும் முடிவுகளும்**

***ஆசிரியர்கள் பா.ம.ஆ.அபிவிருத்தி தொடர்பாக கொண்டுள்ள மனநிலையினை அறிதல்***

பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி செயற்றிட்டத்தை விடுமுறை தினங்களில் நடத்துவது ஆசிரியர்களின் பங்குபற்றும் வீதத்தினை அதிகரிக்கும் என்பது வினவப்பட்ட போது பெறப்பட்ட தகவல்கள் மூலம் பின்வரும் உரு 3.1 இல் காட்டப்பட்டுள்ளது.




**உரு 3-1: விடுமுறை தினங்களில் பா.ம.ஆ.அபிவிருத்தியில் ஆசிரியர்களின் பங்குபற்றல்**

இத்தரவுகளிலிருந்து பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி செயற்றிட்டத்தினை விடுமுறை தினங்களில் நடத்துவதனை விரும்பவில்லை என்ற மனநிலை காணப்படுகின்றது. எனினும் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி செயற்றிட்டமானது பாடசாலை தவிர்ந்த நேரங்களிலே செய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்படுகின்றது இதன் மூலம் ஆசிரியர்கள் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி செயற்றிட்டம் தொடர்பாக நேரான மனப்பாங்கினை கொண்டிருக்கவில்லை என்ற கருத்து அளிக்கப்பட்ட விடைகள் மூலம் தெளிவாகின்றது.

மேலும் பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டத்தின் போது ஆசிரியர்கள் முழுமையாக பங்குபற்றுகின்றனர் என்பதனை அறிந்து கொள்வதற்காக அவர்களிடம் பெற்றுக் கொண்ட தரவுகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்திய போது பெறப்பட்டவை உரு 3.2இல் காட்டப்படுகின்றது.




**உரு 3-2: பா.ம.ஆ.அபிவிருத்தி தொடர்பான பயிற்சியில் ஆசிரியர்களின் பங்குபற்றல்**

இதிலிருந்து ஆசிரியர்கள் பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டம் தொடர்பாக தாங்கள் போதிய பயிற்சி, அறிவு பெற்றுள்ளோம் என்ற மனநிலை, அதிபரின் கட்டாயத்தின் பேரில் விருப்பமின்றி செயலமர்வுகளில் ஆசிரியர்கள் கலந்து கொள்ளுதல், தகுதியற்ற வளவாளர்களைக் கொண்டு செயலமர்வுகள் நடத்தப்படல், செயலமர்வுகளில் பொருத்தமற்ற விடயங்கள் பற்றிய கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல் போன்றன முடிவாகப் பெறப்பட்டுள்ளன.

பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டம் மூலம் ஆசிரியர்களின் நேரம் வினைத்திறனாக பயன்படுத்தப்படுகின்றது என்பது தொடர்பாக வினவப்பட்டது. இதன் போது பெறப்பட்ட தகவல்களை கீழேயுள்ள உரு.3.3 மூலம் அறியலாம்.




**உரு3.3-3: பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டம் மூலம் ஆசிரியர்களின் நேரம் வினைத்திறனாக பயன்படுத்தப்படுகின்றது.**

உரு3.3 மூலம் பெறப்பட்ட கருத்துக்கள் பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டம் மூலம் ஆசிரியர்களின் நேரம் வினைத்திறனாக பயன்படுத்தப்படவில்லை. என்பதனை ஏற்றுக் கொள்கின்றனர். பா.ம.ஆ.அபிவிருத்தி செயலமர்வுகள் பற்றி அதிபர் கவனம் செலுத்துவதுடன் அதனை மதிப்பீடு செய்து அதன் வினையாற்றலையும் அறிந்து உரியவாறு செயற்படுவதால் ஆசிரியர்களின் விமர்சனங்களை தவிர்க்க முடியும். மேற்குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டம் மூலம் ஆசிரியர்களின் நேரம் வினைத்திறனாக பயன்படுத்தப்படவில்லை என்பதனை ஏற்றுக் கொள்கின்றதனால் ஆசிரியர்களின் மனநிலையானது பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டம் மூலம் நேரமானது வினைத்திறனாக பயன்படுத்தப்படவில்லை என்ற நிலை அளிக்கப்பட்ட விடைகள் மூலம் தெளிவாக விளங்குகின்றது எனலாம்.

புள்ளிகளின் அடிப்படையில் கருதுகோள் வாய்ப்புப் பார்க்கப்பட்டபோது கணிக்கப்பட்ட Chi square Test ( $x^2$ ) பெறுமதியானது 0.71 ஆகவும், அட்டவணை பெறுமதியானது $x^2$ = 3.84 ஆகவும் காணப்படுகின்றது. இங்கு மாதிரிகளிலிருந்து கணித்த $x^2$ பெறுமதி (0.71) அட்டவணை $x^2$ இன் மதிப்பை (3.84) விட குறைவாக இருப்பதால் சூனியக் கருதுகோளானது ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ஆசிரியர்களின் வகைக்கும் பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டம் செயற்படுத்துவது தொடர்பாக நேரான மனப்பாங்கிற்குமிடையே பொருண்மிய இடைத் தொடர்பு உண்டு என்ற முடிவு பெறப்படுகின்றது. அதாவது 0.05, 0.01 ஆகிய இரு பொருண்மை மட்டங்களிலும் சூனியக்கருதுகோள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எனவே பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வின்படி ஆசிரியர்கள் பா.ம.ஆ.அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக நேரான மனப்பாங்கை கொண்டிருக்கவில்லை என்ற முடிவுக்கு வரலாம்.

***அதிபர்கள் பா.ம.ஆ.அபிவிருத்தி தொடர்பாக கொண்டுள்ள பயிற்சி, விளக்கம் என்பவற்றின் நிலை***

அதிபர்கள் பா.ம.ஆ.அபிவிருத்தி தொடர்பான போதியளவு விளக்கத்தினை கொண்டிருத்தல் தொடர்பாக அறிந்து கொள்வதற்காக ஆவணங்கள் மூலம் பெற்றுக் கொண்ட தரவுகளை பகுப்பாய்வுக்குட்படுத்திய போது பெறப்பட்ட விடயங்கள் உரு 3.4இல் காட்டப்பட்டுள்ளது.




**உரு 3-4: அதிபர்கள் பா.ம.ஆ.அபிவிருத்தி தொடர்பாக கொண்டுள்ள பயிற்சி, விளக்கம் என்பவற்றின் நிலை**

பா.ம.ஆ.அபிவிருத்தியினை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக பயிற்சிகளின் தேவை தற்போது அவசியமாகும். என்ற வினாவிற்கு அதிபர்களினால் அளிக்கப்பட்ட விடைகளின் பிரகாரம் தரவுகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தியபோது பெறப்பட்ட தரவுகள் உரு 3.5 இல் காட்டப்பட்டுள்ளது.




**உரு3-5: பா.ம.ஆ.அபிவிருத்தியினை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக பயிற்சிகளின் தேவை தற்போது அவசியமாகும்.**

இதன்படி வலயமட்டத்தில் உரிய காலத்தில் பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டம் தொடர்பாக தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்படுவதில்லை, சமூகங்களின் பங்களிப்பானது பாடசாலை செயற்பாடுகளில் குறைவாக காணப்படுதல், பொருத்தமான வளவாளர்கள் இல்லாத நிலை காணப்படுதல், பொருத்தமற்ற காலத்தில் நடைபெறுவதனால் பயிற்சிகளில் கலந்து கொள்ளாத நிலை காணப்படுதல், போதிய பயிற்சி பெற்றுள்ளதாக அதிபர்கள் நினைத்தல் போன்றன முடிவாகப் பெறப்பட்டுள்ளன.

பா.ம.ஆ.அபிவிருத்தி தொடர்பாக அதிபர்கள் பூரண அறிவும் விளக்கமும் பெற்றுள்ளனரா? அதன் நிலை எவ்வாறு காணப்படுகின்றது என்பதனை அறியும் நோக்கில் ஆசிரியர்களிடம் வினவப்பட்ட வினாவினை பகுப்பாய்வுக்குட்படுத்திய போது பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டங்கள் ஆசிரியர்களின் பங்களிப்புடன் தயாரிக்கப்படுகின்றன என்பதனை அவர்களது கருத்துக்களை பின்வரும் உரு3.6 மூலம் அறிந்து கொள்ளலாம்.




**உரு 3.6: பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டங்கள் ஆசிரியர்களின் பங்களிப்புடன் தயாரிக்கப்படல்**

உரு 3.6 மூலம் இவற்றினை தொகுத்துப் பார்கின்ற போது பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டங்கள் வருடாந்தம் ஆசிரியர்களின் பங்களிப்புடன் தயாரிக்கப்படுகின்றன என்பதனை ஏற்றுக் கொள்ளாத நிலைகாணப்படுகின்றது. இதன்மூலம் பா.ம.ஆ.அபிவிருத்தி தொடர்பான அறிவும் விளக்கமும் அதிபரிடம் போதியளவு காணப்படாத நிலையினை அறியக் கூடியதாய் உள்ளது.

புள்ளிகளின் அடிப்படையில் கருதுகோள் வாய்ப்புப் பார்க்கப்பட்டபோது கணிக்கப்பட்ட Chisquare Test ( $x^2$ ) பெறுமதியானது 1.48 ஆகவும், அட்டவணை பெறுமதியானது $x^2$ = 3.84 ஆகவும் காணப்படுகின்றது. இங்கு மாதிரிகளிலிருந்து கணித்த $x^2$ பெறுமதி (1.48) அட்டவணை $x^2$ இன் மதிப்பை (3.84) விட குறைவாக இருப்பதால் சூனியக் கருதுகோளானது ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. அதிபர்களின் வகைக்கும் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி தொடர்பாக கொண்டுள்ள விளக்கத்திற்கும், பயிற்சிக்குமிடையே பொருண்மிய இடைத் தொடர்பு உண்டு என்ற முடிவு பெறப்படுகின்றது. அதாவது 0.05, 0.01 ஆகிய இரு பொருண்மை மட்டங்களிலும் சூனியக்கருதுகோள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எனவே பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வின்படி அதிபர்கள் பா.ம.ஆ.அபிவிருத்தி தொடர்பாக பூரண விளக்கமும் பயிற்சியும் பெற்றிருக்கவில்லை என்ற முடிவுக்கு வரலாம்.

***பா.ம.ஆ.அபிவிருத்தியினை நடைமுறைப்படுத்துவதில் அதிபர்கள் உரிய வகிபங்கை வகிக்கவில்லை***

பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டங்களை தற்காலத்தில் நடைமுறைப்படுத்த வேண்டியது கட்டாயமாக விளங்குகின்றது. அதிபரின் வகிபங்கு அதில் எந்த அளவிற்கு வகிக்கப்படுகிறது என்பதனை அறிந்து கொள்வதற்காக பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டங்களில் பங்குபற்றிய

பாடசாலையின் ஆசிரியர்களின் எண்ணிக்கை தொடர்பாக வினவப்பட்டபோது பெறப்பட்ட தரவுகள் உரு 3.7இல் காட்டப்பட்டுள்ளது.




**உரு 3-7: பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டங்களில் பங்குபற்றிய பாடசாலையின் ஆசிரியர்களின் எண்ணிக்கை**

இதிலிருந்து சமூகங்களுடன் பாடசாலையின் நலிவான தொடர்பு, ஆசிரியர்களின் ஒத்துழைப்பு குறைவு, வலயம் ஆசிரியர்களிற்கு எதிரான நடவடிக்கை எடுக்காத நிலை, போன்றன முடிவாகப் பெறப்பட்டுள்ளது.

அதிபர்கள் பா.ம.ஆ.அபிவிருத்தியினை நடைமுறைப்படுத்த பல்வேறு வகிபாகங்களை வகிக்க வேண்டியது அவசியமாகும். அதில் வளங்களை இனங்காண்பதுடன் அதனை பயன்படுத்தலும் அவசியமாகும்.

அந்த வகையில் பா.ம.ஆ.அபிவிருத்தியினை நடைமுறைப்படுத்துவதற்கு போதியளவு வளங்கள் காணப்படுகின்றன என்பதனை அறிந்து கொள்வதற்காக அவர்களிடம் பெற்றுக் கொண்ட தரவுகளை பகுப்பாய்வுக்கு உட்படுத்திய போது அவர்களது கருத்துக்களை பின்வரும் உரு 3.8 மூலம் அறிந்து கொள்ளலாம்..




**உரு 3:8: பா.ம.ஆ.அபிவிருத்தியினை நடைமுறைப்படுத்துவதற்கு போதியளவு வளங்கள் காணப்படுகின்றன**

உரு 3.8 மூலம் அதிபர்கள் கூறிய கருத்துக்களின் ஊடாக இவற்றினை தொகுத்துப் பார்க்கின்ற போது பா.ம.ஆ.அபிவிருத்தியினை நடைமுறைப்படுத்துவதற்கு போதியளவு வளங்கள் காணப்படுகின்றன என்பதனை ஏற்றுக் கொண்டுள்ளனர். பாடசாலையுடன் தொடர்புடைய பெற்றோர், பிரதிநிதிகள், மாணவர்கள் மற்றும் வேறு நிறுவனங்களிலிருந்து உதவிகளைப் பெறவேண்டும் என கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட பாடசாலை

காரியாலய முகாமைத்துவம் எனும் வழிகாட்டி,(2014) குறிப்பிடுகின்றது. எனவே இவற்றினைக் கொண்டு பார்க்கின்ற போது பா.ம.ஆ.அபிவிருத்தியினை நடைமுறைப்படுத்துவதற்கு போதியளவு வளங்கள் காணப்படுகின்றன என்பதற்கு பா.ம.ஆ.அபிவிருத்தியினை நடைமுறைப்படுத்துவதில் அதிபர் பொருத்தமானவாறு வகிபங்கினை வகிக்கின்றார் எனக் கூறமுடியாதுள்ளது.

அதிபர்கள் பா.ம.ஆ.அபிவிருத்தியினை நடைமுறைப்படுத்த அனைவரையும் ஒன்றிணைத்து பங்குபெறவைத்தல் முக்கியமானதாகும். அதனை ஏற்படுத்தும் வகையில் அதிபர் தனது வகிபாகங்களை மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகும். அந்த வகையில் பா.ம.ஆ.அபிவிருத்தியினை நடைமுறைப்படுத்துவதற்கு உதவக்கூடிய நிறுவனங்களின் உதவி பெறப்படுகின்றது என்பதனை அறிந்து கொள்வதற்காக அவர்களிடம் பெற்றுக் கொண்ட தரவுகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்திய போது அவர்களது கருத்துக்களை பின்வரும் உரு 3.9 மூலம் அறிந்து கொள்ளலாம்.




**உரு3:9 பா.ம.ஆ.அபிவிருத்தியினை நடைமுறைப்படுத்துவதற்கு உதவக்கூடிய நிறுவனங்களின் உதவி பெறப்படுகின்றது**

உரு 3.9 மூலம் அதிபர்கள் கூறிய கருத்துக்களின் ஊடாக இவற்றினை தொகுத்துப் பார்க்கின்ற போது அதிபர் பாடசாலை பங்குதாரர்களுடனான தொடர்பு நலிவடைந்து காணப்படுவதனை அறியலாம். வெளியுலகிற்கும், கல்விக்கும் இடையிலான பொருத்தப்பாடின்மை மேலும் அதிகரித்துள்ளது. ஒரு சில பாடசாலைகளே வெளிநிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த முயற்ச்சிக்கின்றன என பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டம் வழிகாட்டல் கைநூல்,(2014) குறிப்பிடுகின்றது. இதன் பிரகாரம் பா.ம.ஆ.அபிவிருத்தியினை நடைமுறைப்படுத்துவதற்கு உதவக்கூடிய நிறுவனங்களின் உதவி பெறப்படுகின்ற நிலை குறைவாகவுள்ளது. இந்நிலையானது பா.ம.ஆ.அபிவிருத்தியினை நடைமுறைப்படுத்துவதில் அதிபர்களது வகிபங்கு முழுமைபெறவில்லை என்பதனைக் காட்டுகிறது எனக் கூறலாம்.

புள்ளிகளின் அடிப்படையில் கருதுகோள் வாய்ப்புப் பார்க்கப்பட்டபோது கணிக்கப்பட்ட Chi square Test ( $x^2$ ) பெறுமதியானது 0.11 ஆகவும், அட்டவணை பெறுமதியானது $x^2$ = 3.84 ஆகவும் காணப்படுகின்றது. இங்கு மாதிரிகளிலிருந்து கணித்த $x^2$ பெறுமதி (0.11) அட்டவணை $x^2$ இன் மதிப்பை (3.84) விட குறைவாக இருப்பதால் சூனியக் கருது கோளானது ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. அதிபர்களின் வகைக்கும் பாடசாலை மட்ட

ஆசிரியர் அபிவிருத்தியை நடைமுறைப்படுத்த அவர்கள் வகிக்கும் வகிபாகத்திற்குமிடையே பொருண்மிய இடைத் தொடர்பு உண்டு என்ற முடிவு பெறப்படுகின்றது. அதாவது 0.05, 0.01 ஆகிய இரு பொருண்மை மட்டங்களிலும் சூனியக்கருதுகோள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எனவே பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வின்படி பாடசாலைமட்டஆசிரியர் அபிவிருத்தியை நடைமுறைப்படுத்துவதில் அதிபர்கள் உரிய வகிபங்கை வகிக்கவில்லை என்ற முடிவுக்கு வரலாம்.

**முடிவுகள்**

***பா.ம.ஆ.அபிவிருத்தி தொடர்பாக ஆசிரியர்களிடம் நேரான மனப்பாங்கை ஏற்படுத்துவதற்கான விதப்புரைகள்***

அறிவானது ஒவ்வொரு நாளும் பெருகிக் கொண்டு செல்கின்றது. எனவே ஆசிரியர்களும் தங்கள் வாண்மை விருத்தியை அதிகரிக்க வேண்டியது கட்டாயமானதாகும், அதிபர்கள் யாராவது ஒருவரை செயலமர்விற்கு அனுப்பினால் போதும் என்ற மனநிலையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும், பொருத்தமான விடயங்களிற்கு பொருத்தமானவர்களை செயற்றிட்டங்களில் பங்குபெற்ற செய்ய வேண்டும், செயற்றிட்டங்களை நடத்தும் வளவாளர்கள் பொருத்தமான கல்வி, தொழில்தகைமைகளைக் கொண்டவராகவும் குறித்த துறையில் வாண்மைத்துவம் பெற்றவர்களாக இருப்பர்களை தெரிவு செய்தல் வேண்டும், கல்வி அமைச்சினால் பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டங்களிற்கு வளவாளர்களாக பெயர்குறிப்பிடப்பட்டவர்களை கட்டாயமாக தெரிவு செய்தல், செயலமர்வுகளில் வளவாளர்கள் பொருத்தமற்ற விடயங்களை கலந்துரையாடுவதை தவிர்க்க வேண்டியது அவசியமாகும் என்பவை கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

***அதிபர்கள் பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டம் தொடர்பாக பூரண விளக்கமும் பயிற்சியும் பெற்றுக் கொள்வதற்கான விதப்புரைகள்***

காலத்திற்கு காலம் கோட்டமட்டம், வலய மட்டம் என்பவற்றினால் பா.ம.ஆ.அபிவிருத்தி தொடர்பாக மேற்பார்வை செய்தல், பாடசாலையின் விருத்திக்கு சமூகத்தின் பங்களிப்பினை பெற்றுக் கொள்ளுதல், பா.ம.ஆ.அபிவிருத்தி தொடர்பாக சரியான விளக்கத்தினை பெறவைத்தல், கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட வளவாளர்களை தெரிவு செய்தல், முதலாம், இரண்டாம் தவணைகளிற்குள் பா.ம.ஆ.அபிவிருத்தி தொடர்பான பயிற்சிகளை திட்டமிட்டு வலயம் நடத்துதல் என்பவற்றுடன் அடிக்கடி புதிய விடயங்களை நிர்வாக செயற்பாட்டில் உட்புகுத்த வேண்டியுள்ளதால் அதிபர்கள் தொடர்ச்சியாக புதிய விடயங்களை கற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

***பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் அதிபர்கள் உரிய வகிபங்கை வகிப்பதற்கான விதப்புரைகள்***

பாடசாலையுடனான சமூகத்தின் தொடர்புகளை அதிபர் அதிகரிப்பதற்கான உத்திகளை கையாளுதல், ஆசிரியர்களிற்கு எதிர்பாராத பிரச்சினைகள் எழும் போது அதற்கேற்றவாறு நெகிழ்ச்சியான தன்மையை அதிபர் கடைப்பிடித்தல், பா.ம.ஆ.அபிவிருத்தி செயற்றிட்டங்களில் பங்குபற்றாத ஆசிரியர்கள் தொடர்பான ஆற்றுகைபற்றி மதிப்பீடுகளை மேற்கொண்டு

பின்னூட்டல்களை வழங்குதல், ஆசிரியர்களின் குறைபாடுகளை நீக்கும் வழிகளை இனங்காணுதல், ஆசிரியர்களின் சிறந்த விளைவுகளை பாராட்டுதல் என்பவற்றைக் கூறலாம்.

## References


Avalos, B. (2011). Teacher professional development in teaching and teacher education over ten years. *Teaching and teacher education*, *27*(1), 10-20. https://doi.org/10.1016/j.tate.2010.08.007

Bandur, A. (2012). School-based management developments: challenges andimpacts. *Journal of educational administration*, *50*(6), 845-873. https://doi.org/10.1108/09578231211264711

Cheong Cheng, Y., & Walker, A. (1997). Multi-functions of school-based teacher education. *International Journal of Educational Management*, *11*(2), 80-88. https://doi.org/10.1108/09513549710163970

Cheong Cheng, Y. (1996). Total teacher effectiveness: new conception and improvement. *International journal of educational management*, 10(6), 7-17. https://doi.org/10.1108/09513549610151659

Jones, M., Adams, D., Hwee Joo, M. T., Muniandy, V., Perera, C. J., & Harris, A. (2015). Contemporary challenges and changes: principals' leadership practices in Malaysia. *Asia Pacific Journal of Education*, *35*(3), 353-365. https://doi.org/10.1080/02188791.2015.1056591

Odhiambo, G. O. (2005). Teacher appraisal: the experiences of Kenyan secondary school teachers. *Journal of Educational administration*, 43(4), 402-416. https://doi.org/10.1108/09578230510605441

Tonich, T. (2021). The role of principals' leadership abilities in improving school performance through the school culture. *Journal of Social Studies Education Research*, *12*(1), 47-75. https://www.learntechlib.org/p/219412/.

Wieczorek, D., & Manard, C. (2018). Instructional Leadership Challenges and Practices of Novice Principals in Rural Schools. *Journal of Research in Rural Education*, *34*(2). https://jrre.psu.edu/sites/default/files/2019-06/34-2_0.pdf

# க.பொ.த உயர்தர கலைத்துறை மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்குறைவும் சமூகப்பொருளாதாரக் காரணிகளின் தாக்கமும்: மூதூர் கல்வி வலய ஈச்சிலம்பற்றுக் கல்விக் கோட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**ச. ஜீவதரன்**
தி/மூ/இலங்கைத்துறைமுகத்துவாரம் இந்துக்கல்லூரி (தேசியபாடசாலை)
வெருகல்,
Ss.jeesee@gmail.com

**ஆ. நித்திலவர்ணன்**
கல்வியியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
anithlavarnan@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

க.பொ.த உயர்தர கலைப்பிரிவு மாணவர்கள் கல்வியைக்கற்று அடைவில் முன்னேற்றம் காண்பதும் பல்கலைக்கழகம் செல்வதும் பின்தங்கிய கிராமங்களில் சவாலாகவே அமைகின்றன. ஈச்சிலம்பற்று வெருகல் பிரதேசத்தில் பல்கலைக்கழக அனுமதிக்குறைவு காணப்படுவதற்கு சமூக, பொருளாதாரம் காரணமாக அமைகின்றன. இவ்வாய்வின் முக்கிய நோக்கம் க.பொ.த உயர்தர கலைத்துறை மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்குறைவில் தாக்கம் செலுத்தும் சமூகப்பொருளாதாரக் காரணிகளைக் கண்டறிந்து மேம்படுத்துவதற்கான விதப்புரைகளையும் ஆலோசனைகளையும் முன்மொழிதலாகும். நான்கு சிறப்பு நோக்கங்களைக் கொண்டு ஆய்வின் நோக்கம் அடையப்படுகின்றது. இந்த ஆய்வு குறுக்குவெட்டு ஆய்வு முறையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. மூதூர் கல்விவலயத்திற்குட்பட்ட ஈச்சிலம்பற்று கல்விக்கோட்டத்தில் உள்ள 1AB ஒன்றும், 1C வகை பாடசாலை இரண்டும் (02) பாடசாலைகளின் அதிபர் மூன்று பேரும், ஆசிரியர்கள் 65 பேரும் மாணவர்களில் 248 பேரும் நோக்குடை மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டனர். பெற்றோர்களில் 124 பேரும் எளிய எழுமாற்று மாதிரி மூலமும் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். வினாக்கொத்து, நேர்முகம் மூலமாக பல தரவுகள் சேகரிக்கப்பட்டு எண் சதவீத அளவீட்டு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. உயர்தர மாணவர்களின் பரீட்சை அடைவை ஆராய்ந்து கண்டறிந்து, அடைவில் தாக்கம் செலுத்தும் சமூகப்பொருளாதாரக் காரணிகள், கற்றலை மேம்படுத்துவதற்கான உத்திகள் போன்ற ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் பண்பு ரீதியாகவும், அளவுரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டு இதற்காக Ms office (Excel) முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வு முடிவுகளிலிருந்து குறிப்பாக ஆண் மாணவர்கள் பாடசாலை செல்லும் வீதம் குறைவாகவே உள்ளது. இதனால் பல்கலைக்கழக அனுமதியும் பரீட்சை அடைவு மட்டமும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. அதேவேளை ஆசிரியரது போதனையை ஏற்கும் மன நிலை குறைவாகக் காணப்படுகின்றது. பெற்றோர்களின் கல்வி நிலை 8ஆம் தரத்திற்கு குறைவாகவே உள்ளது. அத்தோடு குடும்ப வருமானம் மிகவும் குறைவான நிலையிலே காணப்படுவதால் குடும்பத் தொழிலில் மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். இதனால் மாணவர்களிடையே பல்கலைக்கழகம் செல்வதற்கான சாதகமானநிலை குறைவாக உள்ளது. மாணவர்களுக்கான வழிகாட்டல் ஆலோசனைகள் முறையாக இடம்பெறவில்லை. ஆகவேதான் பாடசாலைகளிலே இதற்கான விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்.

***திறவுச் சொற்கள்:*** *கல்விப் பொதுத் தராதர தகைமை (க.பொ.த உயர்தரப் பரீட்சை) அடைவு மட்டம், சமூகக் காரணிகள், பொருளாதாரக் காரணிகள்*

**ஆய்வின் அறிமுகம்**

மாணவர்களின் வாழ்வைத் தீர்மானிக்கும் முதற் கட்டமாக உயர்தரப் பரீட்சைகள் அமைகின்றன. இப்பரீட்சைகளில் மாணவர்கள் முறையாக சித்தி எய்தினால் கல்கலைக்கழகம் சென்றும் மூன்று பாடச்சித்தியுடனும் தமது உயர்கல்வி படிப்பினை மேற்கொள்ள முடிகின்றது. எதிர்பார்க்கப்படும் சித்திகளைப் பெறாவிடின் அம் மாணவன் கல்வியை விட்டு வேறு திசை நோக்கி நகரக் கூடிய நிலையும் இன்றைய நிலையில் காணப்படுகின்றது. எனவே மாணவர்களின் எதிர்கால வாழ்விற்கு அத்திவாரமாய் அமைவது க.பொ.த உயர் தரம் ஆகும்.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு க.பொ.த உயர்தர கலைத்துறை மாணவர்களின் கற்றல் நிலை எவ்வாறு உள்ளது, அவர்களது குடும்ப சூழல், பெற்றோரின் கல்வியறிவு, மாணவர்களின் மனோநிலை, சமூக வழக்காறு மரபுகள் எனப் பல சமூகக் காரணங்கள் எவ்வாறு தடையாக அமைகின்றது என்பதோடு மாணவர்களது குடும்ப வறுமை, குடும்பம் செய்யும் தொழில் என்பன எவ்வாறு மாணவர்களின் பரீட்சை அடைவினைத் தீர்மானிக்கின்றன என்பதனையும் கருத்தில் கொண்டு நேர்காணல், வினாக்கொத்து, ஆவணங்கள் மூலமாக தரவுகள் திரட்டப்பட்டு பொருத்தமான முறையினில் மாதிரியினைத் தெரிவு செய்து மூதுர் வலையம் ஈச்சிலம் பற்றுக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் க.பொ.த உயர்தரப் பரீட்சை அடைவு மட்டத்தில் சமூகப் பொருளாதார காரணிகள் தாக்கம் செலுத்துகின்றதா? என்பது பற்றி ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இத்தகைய சமூக,மற்றும் பொருளதாரக் காரணியானது மாணவர்கள் தமது கற்றல் திறனை மேம்படுத்துவதற்கு பெரிதும் துணை புரிய வேண்டிய தேவை இப் பின்தங்கிய பிரதேசங்களில் அதிகம் காணப்படுகின்றன. இச்சமூகம் தமது தரமான பங்களிப்பினை பாடசாலைக்கு வழங்காத வேளையினில் அவை பாடசாலைச் சமூகத்ததின் வினைத்திறனைப் பாதிக்கக் கூடிய நிலை ஏற்படுகின்றன. அத்தோடு பொருளாதாரக் காரணிகளும் தாக்கம் புரிவதாகவே அமைகின்றது.

**பிரச்சினைக் கூற்று**

“ஈச்சிலம் பற்றுக்கோட்ட பாடசாலைகளில் க.பொ.த.உயர்தர கலைத்துறை மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிகள் ஏனைய கோட்டங்களோடு ஒப்பிடுகிறபோது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. பல்கலைக்கழக அனுமதிக்குறைவில் பல்வேறுபட்ட சமூகக்காரணிகளும், பொருளாதாரத்தினை நிர்ணயிக்கின்ற பல காரணிகளும் குறிப்பிட்ட பிரதேசத்தில் காணப்படுகின்ற தொழில்களும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன’’

**ஆய்வின் நோக்கம்**

***பொது நோக்கம்***

“க.பொ.த உயர்தர கலைத்துறை மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்குறைவில் தாக்கம் செலுத்தும் சமூகப்பொருளாதாரக் காரணிகளைக் கண்டறிந்து ஆலோசனைகளையும், தீர்வினையும் முன்மொழிதல்’’

***விசேட நோக்கம்***

1. க.பொ.த.உயர்தர கலைத்துறை மாணவர்களின் பரீட்சை அடைவு மட்டம் பற்றிக் கண்டறிதல்.
2. க.பொ.த உயர்தர கலைத்துறை மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்குறைவில் தாக்கம் செலுத்தும் சமூகக் காரணிகளின் தொடர்புகளை இனங்கண்டு விளக்கல்.
3. க.பொ.த உயர்தர கலைத்துறை மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்குறைவில் தாக்கம் செலுத்தும் பொருளாதாரக் காரணிகள் கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றி ஆராய்தல்.
4. க.பொ.த உயர்தர கலைத்துறை மாணவர்களின் கற்றலை மோம்படுத்தும் திட்டங்களையும், ஆலோசனையையும் தீர்வையும் முன்மொழிதல்.

**இலக்கிய மீளாய்வு**

***கற்றலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்***

கற்றல் என்பது மனிதனிடத்தேயுள்ள திறனாகும். கற்றலின் விளைவாக உடல் திறனிலும் மனப்பாங்கிலும் மாற்றம் ஏற்படுகின்றது. கற்றல் என்பது உள்ளார்ந்த செயன்முறை ஆகும். அச்செயன்முறையில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இச் காரணிகளே கற்றலின் வெற்றிக்கு ஆதாரமாகவும் அமைகின்றன. அவையான, கவர்ச்சி, கவனம், புலக்காட்சி, கற்பனையும் சிந்தித்தலும், ஆய்வுத் திறன், நினைவாற்றலும் மறத்தலும், பயிற்சியும் பழக்கமும், ஒத்துணர்வு, பின்பற்றல், கருத்தேற்றம்,விளையாட்டு, களைப்பும், சலிப்பும் என்பனவாகும்.

***கற்றலினைப் பாதிக்கும் காரணிகள்***

மனித வாழ்க்கையில் மிக அவசியமானதாகக் கொள்ளும் கற்றலானது மிக சிக்கலானது என உணரப்பட்டுள்ளது. அத்துடன் அதனைக் கட்டுப்படுத்தும் காரணிகளும் பலவாகும். அவையாவன, குடும்பம், பாடசாலை, சகபாடிக் குழுக்கள், சமூகம், பொருளாதாரம், கலாசாரம், உள்ளீடுகள், ஊடகங்கள், எதிர்பாராத நிகழ்வுகள், உளவியல் அம்சங்கள் என்பனவாகும் (லோகேஸ்வரன்,2008).

*குடும்பம்:* கோல்மன் அறிக்கை ஐக்கிய அமெரிக்காவில் கறுப்பு இன மக்களின் குழந்தைகள் வெள்ளை இன மக்களின் குழந்தைகளை விட கல்வித் தரத்தில் ஓரளவு கீழ் நிலையில் இருக்கக் காரணம் பிள்ளைகளின் குடும்ப சூழ்நிலையின் தரம் குன்றிக் காணப்படுவதேயாகும். என்பதை தமது ஆய்வின் மூலம் நிரூபித்துள்ளது. இவற்றினை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது ஒரு பிள்ளையின் கற்றலில் மிக வலுவான செல்வாக்கினைக் குடும்பமே பெற்றுள்ளது என்பதை மறுக்க முடியாது (லோகேஸ்வரன், 2008). இதனை மேலும் விளக்கும் வகையில் சின்னத்தம்பி அவர்கள் பிள்ளைகளின் கண்ணுக்குப் பலனாகும் கடவுளர் பெற்றோர்களே. குடும்பங்கள் சமூகத்தை உருவாக்குகின்றன. சமூக குழந்தைகளைப் பெற்று சமூகத்திற்கான மனித வளமாக வரலாறு முழுவதும் வழங்கி வருகின்றன (சின்னத்தம்பி, 2008).

*சமூகம்:* பெதுவான கலாசாரத்தினால் பிணைந்து, பொது நோக்கங்களை மையமாகக் கொண்டு குறித்த தனித்தன்மைகளைக் கொண்ட மக்கள் கூட்டத்தை நாம் சமூகம் என்கின்றோம். மொழி, பழக்கவழக்கம், ஒழுங்கு முறை, கருவிகளின் பயன்பாடு என்பவற்றினைப் பிள்ளை சமூகத்தில் இருந்தே கற்றுக்கொள்கின்றது. இதனால் பிள்ளையின் கற்றலில் சமூகம் பல் வகையிலும் தாக்கம் புரிகின்றது. ஆயினும் பல சந்தர்ப்பங்களில் பிள்ளைக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பு பிள்ளையின் கற்றலுக்கு தடையாகக் கூட அமைந்து விடுகின்றது. இதில் பிள்ளையின் வீடு அமைந்திருக்கும் சூழல் (சனநெரிசலான சூழல்), அயலவர்களது பிழையான நடத்தை, சமூகப்பாகுபாடு, சமூகத்தினில் ஒதுக்கப்படல், பாதுகாப்பின்மை, இராணுவ நடவடிக்கைகள், சமூக வன் செயல்கள், சமூகத்தின் கல்வி பற்றிய எதிர் மனப்பான்மை, சமூக மூட நம்பிக்கைகள் போன்றன பிள்ளையின் கற்றலைப் பாதிக்கச் செய்கின்றன.

*பொருளாதாரம்:* பொருளாதார விருத்திக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக கல்வி காணப்படுகின்றது. அதே வேளை கல்வி விருத்திக்கு பொருளாதாரம் பின்னணியாக அமைகின்றது. மேற்படி கல்வி விருத்திக்கு பின்னணியாக அமையும் பொருளாதாரம் சில சந்தர்ப்பங்களில் பிள்ளைகளின் கற்றலுக்கு தடையை ஏற்படுத்தி விடுகின்றது. அந்த வகையினில் குடும்பத்தில் நிலவும் பொருளாதார நெருக்கடிகள் (பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகளை குடும்பத்தால் நிறைவேற்றப்படாமை), பிள்ளைகளின் பாடசாலைத் தேவை நிறைவேற்றப்படாமை. (உடை,காலணி, பயிற்சிப் புத்தகம்), வகுப்பறையில் காணப்படும் பொருளாதார ரீதியான ஏற்றத் தாழ்வுகள் அதை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் புறக்கணிக்கப்படுதல் போன்றன பிள்ளைகளிடம் உள ரீதியான பாதிப்பை ஏற்படுத்தி இறுதியில் அவர்களது கற்றலுக்கு தடையாக அமைந்து விடுகின்றன.

***மாணவர்கள் கற்றலில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்***

சமூக-பொருளாதார காரணிகளின் விளைவாக மாணவர்களின் கற்றல் பாதிக்கப்படுவதுடன் அடைவு மட்டத்திலும் வீழ்ச்சி அடைகின்ற நிலை தோன்றுகின்றன. இவற்றுடன் மாணவர்கள் பல்வேறு நடத்தைகளையும் வெளிப்படுத்துகின்றனர். இதனூடாக பல பிரச்சினைகளைக் கற்றலில் எதிர்கொள்கின்றனர்.

*கல்விசார் பிரச்சினைகள்:* சிலர்,கணிதம், மொழி போன்ற குறிப்பிட்ட பாடங்களில் மட்டும் குறைவாகக் காணப்படுவர். மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வராமை, வகுப்புக்குக் காலந்தாழ்த்தி வருதல், பரீட்சை நாட்களில் வராது விடுதல், ஒப்படைகள் செயற்றிட்டங்களை குறிப்பிட்ட கால எல்லைக்குள் சமர்ப்பிக்காமை ஆகிய பிரச்சினைகளும் பொதுவாகக் காணப்படலாம்.இதனூடாக மாணவர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அவையாவன, குடும்ப சூழ்நிலை- வறுமையான குடும்பத்தில் எழுகின்ற சிறு பிரசசினைகள் மாணவர்களது அடைவு மட்டத்தை பாதிப்பதாக அமைகின்றது. மற்றும் சமூகத்தில் ஒதுக்கப்பட்ட நிலையில் வாழும் குடும்பங்களின் நிலைமை காரணமாக பிள்ளைகள் கற்றல் செயற்பாட்டினை முன்னெடுக்க முடியாமல் போதல். அத்தோடு பாடசாலைகளில்

அமுலாக்கப்படும் கலைத்திட்டம் பொதுவாக சாதாரண மாணவர்களை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள போதும் அது அனைவருக்கும் பொருத்தமானதாக அமைவதில்லை (மகேசன், 2010).

***கல்வி அடைவு மட்டம்***

இன்று பாடசாலைகளில் மாணவர்கள் அடைவு மட்டத்தினைக் கருத்தில் கொண்டே அறிவு, திறன், மனப்பாங்கு ஆகிய மூன்று கல்வி இலக்குகளின் அடிப்படையினில் பயிற்றுவிக்கப்படுகின்றனர் (முருகேசப்பிள்ளை.2000). கல்வி அடைவு மட்டம் பற்றிய பல கல்வியியல், உளவியல் ஆய்வாளர்களின கருத்துக்கள் இதனை ஒரு விரிந்த பொருள் கொண்ட ஒரு செயற்பாடாக விவரிக்கின்றன. பிள்ளை வாழ் சமூகத்தின் சமூக பொருளாதார, கலாசாரப் பின்னணி, குடும்பத்தின் பொருளாதாரம், குடும்ப உறவு, மற்றும் கல்வி கலாசாரப் பின்னணி, பிள்ளை கற்கும் பாடசாலை சூழல், மற்றும் பௌதீக வள காரணிகள். கற்றல் செயற்பாட்டின் போது ஆசிரியர்களின் மனப்பாங்கு, கல்வி மற்றும் தொழில் தகைமைகள், அதிபரின் முன்மாதிரியான தலைமைத்துவமும், வழிகாட்டலும் என்பனவாகும். நடைமுறையினில் பிள்ளைகளுக்கான புறச்சூழல் அனேகமான சந்தர்ப்பங்களில் வாய்ப்பாக அமைந்து விடுவதில்லை. அது கல்வியின் இலக்கினை அடைவதிலும் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதிலும் பல அழுத்தங்களை அல்லது பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றது. இது கற்றல் செயற்பாட்டினில் பின்னடைவினை ஏற்படுத்துகின்றது (கமலினி,2007 சிவயோகன்,2007). நித்யா (2011) என்பவரினால் மேற்கொள்ளப்பட்ட கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் வரவுக்குறைவும் கற்றலடைவும் என்ற தலைப்பிலான ஆய்வானது கல்முனை தமிழ் பிரதேசத்திற்குட்பட்ட IC பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வில் பல கண்டறிதல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.அடைவு என்பது “தொடர்புடைய பகுதிகளைப் பாடசாலையில் கற்பிப்பதன் மூலம் மாணவர்கள் அடையும் மட்டம்” என வரையரை செய்கின்றார் (கருணாநிதி,2013).

**கல்வியும் சமூக நிலையும்**

சமூகத்துக்கும் கல்விக்குமிடையேயுள்ள நெருங்கிய தொடர்பினைக் ‘கல்விச் - சமூக இணைக்கொள்கை (Educational and social parallelism) என்னும் கோட்பாடு தெளிவாக விளக்குகின்றது. கல்வி முறை சமூக அமைப்பினைப் பிரதிபலிக்கும் (Reflection of the social order) கண்ணாடியாக விளங்குகின்றது. கல்வி அமைப்பு, கற்பிக்கப்படும் பாடங்கள், கற்பித்தல் முறைகள், கல்வியின் இறுதியான நோக்கங்கள் யாவும் கல்விக்கூடங்கள் இயங்கி வரும் சமூகத்தின் அமைப்பு, குறிக்கோள்கள், நோக்கங்கள் ஆகியவற்றுடன் இணைந்தனவாம். சமூக அமைப்பினில் ஏதேனும் மாறுதல் தோன்றினால் கல்வி அமைப்பிலும் இது எதிரொலிக்கின்றது (சந்தானம்,2007).

***பெற்றோரின் கல்வித் தகைமை***

வாஜித ̇(2013) என்பவர் வீட்டிலும் விசேடமாக தாய்மார்களின் கல்வித் தகைமை பிள்ளையின் அடைவு மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகும் எனக்குறிப்பிட்டுள்ளார். தாய்மார்களின் உயர் கல்வித் தகைமை பிள்ளையின் பாடசாலை நடவடிக்கைகளில் கூடிய

பங்கேற்கக் கூடியது. அத்தோடு ஆசிரியர்களுடன் அதிக தொடர்பு கொள்வதற்கும் பாடசாலை உயர் அடைவு மட்டத்தினை எய்துவதற்கும் உதவக் கூடியது. பிள்ளைகள் வீட்டில் அதிகமாக வாசித்தல் அவர்களுக்கு பரீட்சையில் உயர் அடைவு மட்டத்தினை அடைவதற்கும் உதவும் என்ற கருத்தையும் முன்வைத்துள்ளார். வர்ணகுலசூரிய என்பவர் நிகவெரட்டிய கல்விப் பிரதேசத்தில் மேற்கொண்ட ஆய்வின் முடிவாக மாணவர்களின் அடைவுமட்டம் சமூகப் பொருளாதார அந்தஸ்திலும் கல்விப் பரப்பில் பெற்றோர் எவ்வளவு அக்கறை காட்டுகிறார்கள் என்பதிலும் தங்கியுள்ளது. அத்துடன் பெற்றோரின் கல்வித்தரமும் மாணவரின் அடைவுமட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும். படித்த பெற்றோரின் பிள்ளைகள் உயர்ந்த அடைவுமட்டத்தையும் படிக்காத பெற்றோரின் பிள்ளைகள் தாழ்ந்த அடைவுமட்டத்தையும் அடைந்துள்ளனர் என்று குறிப்பிடுகிறார் (வாஜித், 2010).

***பிள்ளையின் அடைவினைத் தீரமானிக்கும் வீட்டுச் சூழலின் பங்கு***

கல்வித்துறையில் பெற்றோர்களின் அதிகாரம் பிள்ளைகளின் நடத்தையை பெற்றோர் கண்காணிப்பது மிக முக்கியமானது. பிள்ளைகள் எங்கே செல்கிறார்கள், யாருடன் பேசுகிறார்கள் என்பவற்றைக் கண்காணித்து மேற்பார்வை செய்யவேண்டியது அவசியமாகும். மாணவர் கற்றலில் ஈடுபடும்போது பெற்றோர்கள் வேண்டும். அப்போதுதான் மாணவர் தமது கல்வியை சிறப்பாக முன்னெடுப்பர். பெற்றோர் தமது பிள்ளைகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்புதல் வேண்டும். அவர்களுக்கு தேவையான பாடசாலைப் பொருட்களை உரிய தருணத்தில் வாங்கிக் கொடுக்க வேண்டும். அவ்வாறு கற்றலுக்குத் தேவையான பொருட்கள் கிடைக்கப்பெறும்போது பிள்ளை மகிழ்வடைந்து கல்வியை சிறப்பாகக் கற்க முன்வருவான் (சிவநடேஸ், 2015). மறுபுறத்தில் மாணவர்களின் கல்வி எதிர்பார்ப்புக்கள் விரிவடைந்துள்ளன. மாணவர் மத்தியில் ஏற்படும் போட்டிகள் கற்றல் நடவடிக்கையில் திறன்பட ஈடுபட வேண்டும் என்ற உந்துதல்களைக் கொடுக்கின்றன. இவை பாட நூல்களுக்கப்பால் புதிய விடயங்களைத் தேடியறியும் தேவையை உருவாக்கியுள்ளன. அவற்றுக்கு வகுப்பறையினால் ஆசிரியரினால் வழங்கப்படும் உதவியும் வழிகாட்டல்களும் போதாது. வீட்டில் தாய், தந்தை, சகோதரர், சகோதரிகள், நண்பர்கள் மற்றும் அயலவரின் உதவியும் தேவை. இவற்றின் தேவை தனியாள் அடிப்படைக் கற்றலுடன் கூட்டுக்கற்றலுக்கும் வழிகோலுகின்றன. பெற்றோர் பிள்ளைகளுக்கு உதவும் ஆற்றலை விருத்தி செய்வதினால் பிள்ளைகளின் வினையாற்றல் அதிகரிப்பதுடன், கற்றலில் இரு சாராரது மனப்பாங்குகள் மாறவும் வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. என ஸ்ரீவனஸ் (Stevens 1984) குறிப்பிட்டுள்ளார் (கருணாநிதி,2013). தற்போதைய பாடசாலை மாணவர்கள் கற்றலில் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு பின்வரும் வீட்டுச் சூழல் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆவை, பெற்றோரின் அன்பும் பாதுகாப்பும் குறைவடைதல் அல்லது அற்றுப் போதல், போசனையும் ஆரோக்கியமும் சீர்குலைதல், கணிப்பு, மதிப்பு, பொறுப்பேற்றல் போன்றவை அற்றுப் போதல், ஆர்வமூட்டக் கூடிய கற்றல் சூழல் காணப்படாமை, கடுமையான சட்டதிட்டங்கள், கட்டுப்பாடுகள், வலுக்கட்டாயப்படுத்தலுக்கு கட்டுப்பட்டு இருக்க வேண்டியேற்படல், வீட்டில் அத்தியாவசிய அடிப்படைத் தேவைகள் இன்மை, பெற்றார் தவிர, இரக்கம் காட்டத்தக்க வேறு எவரும் இல்லாமை, மகிழ்ச்சியுடனும் களிப்புடனும் இருக்க குடும்பத்தில் வாய்ப்பு இன்மை என்பனவாகும் என ‘‘கல்வி உளவியல் கைந்நூல்’’ (ஆசிரிய பயிற்சிப் பாடநெறிகளுக்கானது,

2010) இல் கூறப்பட்டுள்ளது. மாணவர்களின் கல்விப்பணியை மேற்கொள்வது பெற்றோரது பொறுப்பாகும். கல்வி வழங்கும் பணியைச் செய்வது மட்டுமல்லாது கற்றலுக்கு ஏற்ற சூழலினையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்புள்ளதாகவும் உள்ளது. அப்பொழுதுதான் உயர் பிரதிபலிப்பினை பிள்ளைகள் வெளிப்படுத்துவர். நவீன சமூகம் சார் சவால்களையும், சூழ்நிலைகளையும் வெற்றி கொள்ளும் இயலுமையையும், அறிவினையும் பெற்றுக் கொள்பவர்களாகம் இருப்பர். இப்போதிருக்கும் கல்விச் செயற்பாடுகளைப் பொறுத்தவரை மாணவர்கள்தான் கருப்பொருள். அவர்களின் மனநிலைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற வகையிலே கற்றல்-கற்பித்தல் ஒழுங்கமைப்புக்கள் இருக்க வேண்டும். என்ற கருத்தியல் நிலை பெறத் தொடங்கியிருக்கின்றது. மாணவர்களின் கற்றலுக்கான முறைசார்ந்த நிறுவனமாக பாடசாலைகள் இருந்த போதிலும், பாடசாலைக்கு முன்பும் பாடசாலைக்கு அப்பாலும் குடும்பம் அல்லது வீட்டுச் சூழலே கற்றலுக்கான அதிக வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வல்லமையுள்ள சூழலாகின்றது (சுமதி,2013).

**பொருளாதார நிலையும் கல்வியும்**

மோர்கன் மற்றும் ஏனையோரும் (2009) தாழ்ந்த சமூக பொருளாதார காரணிகளை உடையவர்கள் உயர்ந்த சமூக பொருளாதார அந்தஸ்துடையவர்களை விட குறைவாகவே கல்வியடைவுத் திறன்களை கொண்டுள்ளனர் என சுட்டிக்காட்டியுள்ளனர்.அ வறிய தொழிலாளர் வகுப்பானது தேர்ச்சி பெறாத தொழிலாளர்களையும், சேவைப்பணியாளர்களையும், குறைந்த வேதனம் பெறுவோரையும் உள்ளடக்கும். இவர்கள் வறுமைக் கோட்டுக்குச் சற்று மேலான வருமானத்தைப் பெறுபவர்கள். இவர்களுடைய கல்வி அடைவு மட்டம் குறைவாகவே இருக்கும் (கருணாநிதி,2013). இலங்கையில் சில பிரதேசங்களின் கல்விப் பின்னடைவுக்கு காரணமாக குடும்பத் தொழில் காரணமாய் அமைகின்றன. மீன்பிடித் தொழில், விவசாயத் தொழில் என்பன பரம்பரைத் தொழிலாக அமைகின்றன. இங்கு மாணவர்கள் பாடசாலை செல்வதில் அக்கறை காட்டாமல் தொழில்களுக்குச் செல்வதிலேயே அதிக அக்கறை காட்டுகின்றனர். இங்கு் பாடசாலை நாட்கள் குறைக்கப்படுகின்றன. எனவே பரீட்சை அடைவில் வீழ்ச்சி காண்கின்றனர் (சோபா, 2013). வேளாண்மை தொழில் செய்யும் பெற்றோர்கள் நெல் விதைக்கும் காலம் தொட்டு அறுவடை செய்யும் காலம் வரை தமது தொழிலிலேயே முன்னுரிமைப்படுத்திச் செயற்படுவர். இதனால் அறுவடைக் காலங்களில் கிராமங்களை விட்டு வெளியேறுகின்றனர். பிள்ளைகளும் இவர்களுடன் கதிர் சேகரிக்கவும் அறுவடை செய்யவும் செல்வதனால பாடசாலை வரவு குறைகின்றது. அவர்களது கற்றல் பாதிக்கப்பட்டு அடைவினில் வீழ்ச்சி காண்கின்றனர். (சோபா,2013). ''ஒருவர் ஒரு ஒழுங்கான, செம்மையான, செறிவான வாழ்க்கையைக் கொண்டு நடாத்த முடியாத நிலை இருத்தலே வறுமை'' என 1990 களில் வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டது. போதியளவு உணவு, பாதுகாப்பான குடி நீர், பொருத்தமான வீட்டு வசதி, நிறையுணவு, சிறப்பான வாழ்க்கைத்தரம், ஆரோக்கியமான மக்களின் வசதிகள் போன்றவை தேவைக்கேற்பக் கிடைக்காத போது அல்லது தேவையில் குறைவாகக் கிடைக்கின்ற போது அம்மக்கள் வறுமையால் பீடிக்கப்பட்டவர்கள் என அழைக்கப்படுகின்றனர் (இலங்கை மத்தியவங்கி,2004). முஜீசும் ஏனையோரும் (Mujis et al,2009) தாழ்ந்த சமூக பொருளாதார

நிலைகளைக் கொண்ட சமூகங்களிலுள்ள பாடசாலைகள் உயர்தரமான தொழில்களைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் இப்பாடசாலைகளிலிருந்து உயர்தரத்திலான ஆசிரியர்கள் இடம்பெயர்வதுடன் குறைந்த கல்வி அடைவுமட்டமும் பெறப்படுகிறது என குறிப்பிடுகின்றனர்.

**கல்வியும் சமூக நிலையும்**

வாஜித்(2013) என்பவர் வீட்டிலும் விசேடமாக தாய்மார்களின் கல்வித் தகைமை பிள்ளையின் அடைவு மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகும் எனக்குறிப்பிட்டுள்ளார். தாய்மார்களின் உயர் கல்வித் தகைமை பிள்ளையின் பாடசாலை நடவடிக்கைகளில் கூடிய பங்கேற்கக் கூடியது. அத்தோடு ஆசிரியர்களுடன் அதிக தொடர்பு கொள்வதற்கும் பாடசாலை உயர் அடைவு மட்டத்தினை எய்துவதற்கும் உதவக் கூடியது. பிள்ளைகள் வீட்டில் அதிகமாக வாசித்தல் அவர்களுக்கு பரீட்சையில் உயர் அடைவு மட்டத்தினை அடைவதற்கும் உதவும் என்ற கருத்தையும் முன்வைத்துள்ளார். குடும்பங்களின் பண்பாடும் கற்பித்தல் நடையும் (பாடசாலை மேம்பாட்டு வேலைத்திட்டக் கைநூல், 2014).

**ஆய்வு முறையியல்**

ஆய்வாளர் தெரிவுசெய்த ஆய்வுப் பிரதேசமான ஈச்சிலம்பற்றுக் கோட்டமானது 18 பாடசாலைகளைக் கொண்டு காணப்படுவதுடன், இவற்றில் 03 பாடசாலைகள் க.பொ.த. உயர்தர வகுப்புக்களைக் கொண்டும் காணப்படுகின்றன. க.பொ.த உயர்தர கலைத்துறை வகுப்புக்களில் கற்கின்ற மாணவர்களின் பரீட்சை பெறுபேறு மற்றும் பல்கலைக்கழக அனுமதியானது வலயத்தில் உள்ள ஏனைய கோட்டத்துடன் ஒப்பிடும்போது மிகத்தாழ்ந்த மட்டத்தில் உள்ளது. க.பொ.த.உயர்தரப்பரீட்சையில் மாணவர்கள் பெற்றுக் கொள்கின்ற பெறுபேறானது அவர்களது எதிர்கால வாழ்வில் உயர் கற்கை நெறிகள், வேலைவாய்ப்புக்கள் போன்றவற்றை பெறுவதற்குத் தேவையான அடிப்படைத் தகைமையாக உள்ள நிலையில் இம்மாணவர்கள், குறைவான பெறுபேறுகளால் குறைவான பல்கலைகழக அனுமதியினைப் பெறுவது முக்கிய பிரச்சினையாக அமைந்துள்ளது.

***ஆய்வு வினா***

1. க.பொ.த உயர்தர கலைத்துறை மாணவர்களின் பரீட்சை அடைவு மட்டம் எவ்வாறு உள்ளது?
2. க.பொ.த உயர்தர கலைத்துறை மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்குறைவில் தாக்கம் செலுத்தும் சமூகக் காரணிகளின் தொடர்புகள் எவ்வாறு உள்ளது?
3. க.பொ.த கலைத்துறை உயர்தர மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்குறைவில் தாக்கம் செலுத்தும் பொருளாதாரக் காரணிகள் கற்றலில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது?
4. க.பொ.த உயர்தர கலைத்துறை மாணவர்களின் கற்றலை மோம்படுத்தும் திட்டங்கள், ஆலோசனை தீர்வுகள் யாது?

***மாதிரித் தெரிவும் மாதிரி நுட்பங்களும்***

18 பாடசாலைகளில் 03 பாடசாலைகள் நோக்குடை மாதிரி எடுப்பு முறை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டன. 03 பாடசாலைகளின் அதிபர்கள் 03 பேரும் நோக்குடை மாதிரி எடுப்பு முறை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். 65 அசிரியர்களுள் 65 அசிரியர்கள் நோக்குடை மாதிரி எடுப்பு முறையடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர்.248 மாணவர்களில் 248 மாணவர்கள் நோக்குடை மாதிரி எடுப்பு முறையடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். 248 மாணவர்களின் பெற்றோர்களில் படிமுறை எளிய எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் பெற்றொர்கள் 124 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

***இறுதிமாதிரித் தெரிவும், பருமனும்***

இறுதிமாதிரி தெரிவாக 03 அதிபர்களும் 65 ஆசிரியர்களும் 248 மாணவர்களும் 124 பெற்றோரும் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். 1AB பாடசாலை ஒன்றும், 1C பாடசாலைகள் இரண்டும், 03 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன.

அட்டவணை : இறுதிமாதிரித் தெரிவு விபரம்

| | **பாடசாலையின் பெயர்கள்** | **மாதிரியாகத் தெரிவானோர் எண்ணிக்கை** | | | |
|---|---|---|---|---|---|
| | | **அதிபர்கள்** | **ஆசிரியர்கள்** | **மாணவர்கள்** | **பெற்றோர்கள்** |
| 01 | தி/மூ/இலங்கைத்துறைமுகத்து வாரம் இந்துக்கல்லூரி. | 01 | 25 | 145 | 72 |
| 02 | தி/மூ/ஸ்ரீசன்பகா மகாவித்தியாலயம் | 01 | 22 | 69 | 35 |
| 03 | தி/மூ/வெருகலம்பதி இந்துமகா வித்தியாலயம் | 01 | 18 | 34 | 17 |
| **மொத்தம்** | | 03 | 65 | 248 | 124 |

மூலம்: ஆய்வாளரினால் தயாரிக்கப்பட்டது

**ஆய்வுக் கருவிகளும் தரவுகளைச் சேகரித்தலும்**

***வினாக்கொத்து:***ஆய்வுக்குத் தேவையான தரவுகளைப் பெறும் நோக்கில் ஆசிரியர், மாணவர்கள் ஆகியோருக்கு வினாக்கொத்து முறை வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. ஆய்வினது நோக்கம் கருதியே வினாக்கள் வடிவமைக்கப்பட்டன. இவர்களுக்கு வழங்கப்பட்ட வினாக் கொத்து பகுதி 01, பகுதி 02 என இரு பிரிவுகளைக் கொண்டது. பகுதி 01 இல் வினா கேட்கப்படுவோரின் சுய விபரமும் பகுதி 02 இல் ஆய்வு நோக்கம் தழுவிய வினாக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

***நேர்காணல்:*** ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களிடையேயும் பெற்றோர்களிடேயும் நேர்காணல் இடம்பெற்றது. இந் நேர்காணலின் போது நான்கு நோக்கங்களை மையமாகக் கொண்டு அதிபர், பெற்றோரிடம் நேர்காணல் இடம்பெற்றது.

***ஆவணங்கள்:*** ஆய்விற்குத் தேவையான தரவுகளைத் திரட்டும் வகையில் ஆவணங்கள் அமைகின்றன. இங்கு க.பொ.த (உ/த) கலைப்பிரிவு மாணவர்களின் கடந்த மூன்றாண்டிற்கான பரீட்சை விபரங்கள் பார்வையிடப்பட்டன. இவற்றுள் பரீட்சைக்குத் தோற்றியோர், சித்தியடைந்தோர், சித்தித் தரங்கள் என்பன ஆவணங்களில் பார்வையிடப்பட்டன.

இவ்வாறான வினாக்கொத்து முறை, ஆவணங்கள், நேர்முகம் காணல் என்பவற்றின் மூலமாக தரவுகள் பெறப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டன. ஆசிரியர்கள், மாணவர்களுக்கென வழங்கப்பட்ட வினாக்கள் அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. அளவு ரீதியான பகுப்பாய்வில் தகவல்கள் தரவுகளாக மாற்றப்பட்டு பகுப்பு செய்யப்பட்டு அட்டவணையாக்கம், சலாகை வரைபுகள் மூலமாக விளக்கப்படுகின்றது. அத்தோடு அதிபரிடமும் பெற்றோரிடமும் நேர்காணல் வினாக்கள் மூலம் தகவல்கள் பெறப்பட்டு அவை ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் தொகுக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆய்வின் தரவுப் பகுப்பாய்வுக்காக அளவு சார், பண்பு சார் முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அட்டவணையாக்கம், வரைபுகள் ஊடாக புள்ளி விபரம் விளக்கப்பட்டுள்ளது. பகுப்பாய்விற்காக Excel முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**தரவுகளின் பகுப்பாய்வும் வியாக்கியானமும், கலந்துரையாடலும்**

***க.பொ.த உயர்தர கலைப்பிரிவு மாணவர்களின் கல்வி அடைவு மட்டம்***

மாணவர்கள் பாடசாலை விடுமுறை எடுக்கும் நாட்களின் எண்ணிக்கை எத்தகையது? எனும் வினாவிற்கு மாணவர்களின், ஆசிரியர்களின், அதிபர்களின், பெற்றோர்களின் பதில்களின் அடிப்படையி மாணவர்களின் பாடசாலை விடுமுறை எடுக்கும் நாட்களின் எண்ணிக்கை கூடியளவில் காணப்படுகின்றதை அறியலாம். இங்கு மாணவர்களை விட ஆசிரியர்கள் கூறிய பதிலின் மூலமாக மாணவர்கள் அதிக விடுமுறை எடுப்பது. புலப்படுகின்றது. அதிலும் குறிப்பாக ஆண்மாணவர்களின் வரவு குறைவாகவே காணப்படுகின்றது. அதிபரிடம் மேற்கொண்ட நேர்காணலின் போது மாணவர்களின் பாடசாலை நாட்களின் எண்ணிக்கை பற்றி பின்வருமாறு பதிலளிக்கப்பட்டன. க.பொ.த (உயர்/த) மாணவர்களின் வரவு என்பது ஓரளவு காணப்படுகின்றது. குறிப்பாக ஆண் மாணவர்களின் பாடசாலை வருகை வீதம் மிகக் குறைவான நிலையிலேயே காணப்படுகின்றது. வாரத்தில் இரு முறை குறைந்த பட்சம் விடுமுறை எடுக்கின்றனர். எனப் பதிலளித்தார். கீழே உருவில் காட்டப்பட்டுள்ளது.




உரு 4.1 மாணவர்கள் பாடசாலை விடுமுறை எடுக்கும் நாட்களின் எண்ணிக்கை

மாணவர்களின் பாடசாலை வரவு குறைவதற்கான காரணங்கள் எவை? எனும் வினாவிற்கு மாணவர்களின், ஆசிரியர்களின், அதிபர்களின், பெற்றோர்களின் பதில்களின் அடிப்படையி மாணவர்களின் உளப்பிரச்சினைகளுக்கு அடிப்படையான வறுமை நிலை முக்கிய காரணம். என்றனர். அத்துடன் வறுமையின் தாக்கத்தினால் தொழிலில் ஈடுபடுவதினாலும் பாடசாலை நாட்கள் குறைவதுடன் ஊடகங்களின் அதிக பாவனையின் மூலமும் சமூகத்தில் ஏற்படும் நிகழ்வுகளில் பங்கேற்பதனாலும் பெண் பிள்ளைகள் குடும்ப சுமைகளைத் தாங்க வேண்டிய கடமையின் பிரகாரமும் அதிகளவு விடுமுறை எடுக்கின்றனர். எனப் பதிலளித்தனர். எனவே குடும்பத்திலுள்ள சிக்கல், தொழில் நிலைமைகள் என்பனவும் வறுமையும் சகபாடிகளின் நெருக்கமும் மாணவர்களின் வரவின்மைக்குக் காரணமாய் அமைந்து மாணவர்களின் கற்றலைப்பாதிக்கின்றன. இதனால் மாணவர்கள் தமது பரீட்சைகளில் தாழ் அடைவினை எதிர் கொள்கின்றனர். என்பதே ஆய்வாளர் கருத்தாகும்.

மாணவர்கள் கல்விச் செயற்பாட்டின் போது தாழ் அடைவுமட்டம் காரணமாக பல்கலைக்கழக அனுமதி குறைந்து காணப்படுகின்றதா? எனும் வினாவிற்கு மாணவர்களின், ஆசிரியர்களின், அதிபர்களின், பெற்றோர்களின் பதில்களின் அடிப்படையி மாணவர்களின் கல்வி பின்னடைவில் உள்ளமை தெளிவாகின்றது. ஆசிரியர்களின் பதில்களின் அடிப்படையில் மாணவர்களின் அடைவு மட்டம் தாழ் நிலையில் உள்ளமையால் பல்கலைக்கழக அனுமதியும் செல்வோர் வீதமும் குறைந்து காணப்பவது இதன் மூலமாகப் புலப்படுகின்றது. இப் பாடசாலைகளில் அடைவு மட்டம் தாழ் நிலையில் காணப்படுகின்றமையை மற்றும் கடந்த மூன்று பல்கலைக்கழக சென்றோர்களையும் ஆவணங்களின் மூலமாகப் பார்வையிட்ட போது அவை. விளங்குகின்றது.



நீர் ஆசிரியரது போதனையை ஏற்கும் நிலை நிலை எத்தகையது? எனும் வினாவிற்கு மாணவர்களின், ஆசிரியர்களின், அதிபர்களின், பெற்றோர்களின் பதில்களின் அடிப்படையி மாணவர்களில் பலர் ஆசிரியர்களது போதனையை ஏற்று முறையாகக் கற்றலில் ஈடுபடுவதில்லை என்பது புலனாகின்றது. மாணவர்களிடம் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக வகுப்பறையினில் ஆசிரியரது போதனையை ஏற்பதில் இடர் கொள்கின்றனர். ஆசிரியர் மாணவர்களுக்குரிய முறையில் போதனையில் ஈடுபடும் வேளையினிலும் மாணவர்களை கற்றல் சூழலுக்கள் கொண்டு வருவதனில் சிரமம் கொள்கின்றனர். மாணவர்களிடம் உள்ள கற்றல் நாட்டமின்மையினால் போதனையை முழுமையாக ஏற்க முன்வருவதில்லை. என்றனர்.மாணவர்கள் ஆசிரியர்களது போதனையை ஏற்று முறையாகக் கற்றலில் ஈடுபடுவதில்லை. அதனால் பரீட்சை அடைவு மட்டங்களில் வீழ்ச்சியடைவதால் பல்கலைக்கழக அனுமதியினை பெறுவதில்லை என்பது ஆய்வாளர் கருத்தாகும்.

***க.பொ.த (உயர்/தர) கலைப்பிரிவு மாணவர்களின் பரீட்சை அடைவு மட்டத்தில் தாக்கம் செலுத்தும் சமூகக்காரணிகள்***

பெற்றோரின் கல்வித் தகைமை எத்தகையது? எனும் வினாவிற்கு மாணவர்களின், ஆசிரியர்களின், அதிபர்களின், பெற்றோர்களின் பதில்களின் அடிப்படையி அதிகமான பெற்றோர்கள் தரம் 06 இற்குக் கீழ் கல்வி கற்றோராவர். என்பதன் மூலம் இது புலனாகின்றது. எனவே மாணவர்களின் பெற்றோர்கள் கல்வியில் பின்தங்கிய நிலையில் காணப்படும் வேளையினில் அவர்களது கல்வியும் வீழ்ச்சி நிலைக்குத் தள்ளப்படுகின்றன. என்பது ஆய்வாளர் கருத்தாகும்.

மாணவர்களின் கற்றலுக்குப் பெற்றோர் வழிகாட்டுகின்றனரா? எனும் வினா ஆசிரிய, மாணவர்களிடம் கேட்ட போது பதில்களின் அடிப்படையி மாணவர்களின் கற்றலுக்கு பெற்றொர் வழங்கும் வழிகாட்டல் பூரணமானதாக அமையவில்லை எனும் முடிவுக்கு வர முடிகின்றது.

கல்விச் செயற்பாடுகளில் பெற்றொர் காட்டும் ஆர்வம் எத்தகையது? எனும் வினா ஆசிரிய, மாணவர்களிடம் கேட்ட போது பதில்களின் அடிப்படையி பெற்றோர் பிள்ளைகளின் கற்றலில் குறைவான நாட்டத்தினையே செலுத்தகின்றனர். இதன் காரணமாகவும் பிள்ளைகள் கற்றல் இடர்பட்டு பரீட்சைகளில் குறைவான புள்ளிகளைப் பெறுகின்றனர்.

பெற்றோர் கல்வியில் அக்கறை காட்டாவிடின் அதற்கான காரணங்கள் எவை? எனும் வினாவிற்கு மாணவர்களின், ஆசிரியர்களின், அதிபர்களின், பெற்றோர்களின் பதில்களின் அடிப்படையி பெற்றொர்கள் பிள்ளைகளின் கல்வியில் அக்கறையின்றி செயற்படுகின்றனர். எனலாம். பெற்றோரின் கல்வி, வறுமை, குடும்ப முரண்பாடு, மாணவர்களின் கற்றல் நிலை பற்றி அறியாமை, குடும்பத்தில் வேலைப்பளு, உளச்சிக்கல் எனப் பல காரணங்களினால் அக்கறையின்றிச் செயற்படுகின்றனர்.

கற்பிக்கும் பாடசாலை அமைந்துள்ள சமூகம் கல்வியில் எந்நிலையில் உள்ளது? என ஆசிரியர்களிடம் கேட்ட போது மாணவர்களின், ஆசிரியர்களின், அதிபர்களின் பதில்களின்

அடிப்படையி சமூகத்தில் பெரும்பாலான மக்கள் கல்வியில் பின்தங்கியே காணப்படுகின்றனர். மக்கள் கல்வியில் காட்டும் நாட்டம் குறைவாகும். பாடசாலையுடன் அதிகமான பெற்றோர் தொடர்பின்றியே காணப்படுகின்றனர். இதற்கு முழுக்காரணம் மக்களது வாழ்க்கை முறையாகும். மக்களில் அதிகமானோர் ஆரம்ப பிரிவு வரை கல்வி கற்றோராகவே காணப்படுகின்றனர். என்றனர்.

### *க.பொ.த உயர்தர கலைப்பிரிவு மாணவர்களின் பரீட்சை அடைவு மட்டத்தில் தாக்கம் செலுத்தும் பொருளாதாரம்*

குடும்பம் எவ்வழியில் வருமானம் பெறுகின்றது? எனும் வினாவிற்கு மாணவர்களின், ஆசிரியர்களின், அதிபர்களின், பெற்றோர்களின் பதில்களின் அடிப்படையி தினமும் கூடிய வருமானம் கிடைக்கும் எனக் கூறமுடியாது. சில வேளைகளில் வருமானம் கிடைக்காமலும் போய்விடுவதுண்டு. காரணம் கூலிக்கு மீன் பிடிப்பதனால் ஆகும். இத்தகைய சந்தர்ப்பங்களில் வாழ்க்கைந் செலவைக் கொண்டு செல்தெில் சிரமம் ஏற்படுகின்னது. அச்சிரமத்திலும் பிள்ளைகளின் கல்விக்கு செலவு செய்வது என்பது பெரும்பாலும் இயலாத ஒரு விடயமாகவே அமைகின்றது. என்றனர். குடும்ப வருமானம் குறையும் போது கல்விக்குத் உதவ முடியாத நிலையில் குடும்பங்கள் பெரும்பாலும் காணப்படுகின்றன. அதனால் மாணவர்கள் தமது கல்விக்கரிய முறையான செயற்பாட்டினைச் செய்ய முடியாது கற்றலில் இடர்பட்டு தமது பரீட்சை அடைவுகளிலும் வீழ்ச்சி காண்கின்றனர். என்பது ஆய்வாளரின் கருத்தாகும்.

மாணவர்களின் குடும்ப வருமான நிலை கற்றலில் தாக்கம் செலுத்துகின்றதா? எனும் வினாவிற்கு மாணவர்களின், ஆசிரியர்களின், அதிபர்களின், பெற்றோர்களின் பதில்களின் அடிப்படையி அதிகூடியளவு ஆசிரியர்கள் குடும்ப வருமானம் மாணவர்களின் கற்றலில் தாக்கம் செலுத்தவதாக் கூறியுள்ளனர். எனவே மாணவர்கள் தமது கற்றலில் பின்னடைவதற்கு காரணமாய் அமைவது அவர்களின் வருமானமும் ஆகும். எனலாம். அதனாலேயே மாணவர்களில் அதிகமானோர் கற்றலில் பின்னடைகின்றனர். என்பது ஆய்வாளர் கருத்தாகும்.

பெற்றோர்கள் வறுமை நிலையில் வாழ்பவரா? எனும் வினாவிற்கு மாணவர்களின், ஆசிரியர்களின், அதிபர்களின், பெற்றோர்களின் பதில்களின் அடிப்படையி மாணவர்களில் அதிகமானோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றமை இதனூடாகப் புலப்படுகின்றது.

வறுமை நிலை கற்றலுக்குத் தடையாக அமைகின்றது. என்பதனை நீர் ஏற்கின்றீரா? எனும் வினாவிற்கு மாணவர்களின், ஆசிரியர்களின், அதிபர்களின், பெற்றோர்களின் பதில்களின் அடிப்படையி மாணவர்கள் கற்றலில் பின்னடைந்து வீழ்ச்சி நோக்கிச் செல்கின்றனர். எனலாம். அதனாலேயேதான் மாணவர்கள் தமது பரீட்சைகளில் தாழ் அடைவினை எதிர்கொள்கின்றனர். எனக் கூறமுடியும்.

பெற்றோர் செய்யும் தொழிலில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கு பற்றியதுண்டா? எனும் வினாவிற்கு மாணவர்களின், ஆசிரியர்களின், அதிபர்களின், பெற்றோர்களின் பதில்களின் அடிப்படையி மாணவர்களது தமது வறுமை நிலையினால் பாடசாலைக்கு

விடுமுறை எடுத்து தமது பெற்றோரின் தொழில்களில் ஈபடுகின்றனர். இதனால் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் முறையாக பங்கு கொள்ளாது கற்றலில் பின்னடைகின்றனர். இதனாலேயே தமது பரீட்சை அடைவுகளை உயர் நிலைப்படுத்த முடியாது தாழ் அடைவுகளை எதிர் கொள்கின்றனர். என்பது ஆய்வாளரது கருத்தாகும்.

***க.பொ.த உயர்தர கலைப்பிரிவு மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும் திட்டங்கள், ஆலோசனை, தீர்வுகள்***

பாடசாலையில் இடம்பெறும் முன்னோடிப் பரீட்சையில் பங்கு கொள்கின்றனரா? எனும் வினாவிற்கு மாணவர்களின், ஆசிரியர்களின், அதிபர்களின், பெற்றோர்களின் பதில்களின் அடிப்படையி பரீட்சைகளில் மாணவர்களின் பங்கு பற்றுதல் அதிகமானதாகவே காணப்படுகின்றது. எனினும் ஒரு சில மாணவர்கள் மாத்திரம் பரீட்சைகளுக்குத் தோற்றுவது இல்லை என்பது தெளிவு. இம் மாணவர்களே கற்றலில் பின்தங்கியோராகக் காணப்படுகின்றனர்.

மாணவர்கள் தவணைப் பரீட்சைகளில் முறையாகப் பங்கு பற்றியுள்ளனரா? எனும் வினாவிற்கு மாணவர்களின், ஆசிரியர்களின், அதிபர்களின், பெற்றோர்களின் பதில்களின் அடிப்படையி தமது பிள்ளைகள் தவனைப் பரீட்சைகளுக்கு முறையாக சமூகமளிக்கின்றனர். இருப்பினும் பரீட்சைக்கட்டணம் செலுத்த தவறும் பட்சத்தில் பரீட்சைக்குச் சில வேளைகளில் செல்வது குறைவு. அத்தோடு பிள்ளைகளுக்கு கடினமான பாடப் பரீட்சை இடம்பெறும் போதும் பரீட்சைக்குச் சமூகமளிப்பது குறைவாகும். என்றனர். இதன் மூலமாக நோக்கின் மாணவர்கள் பரீட்சைக்குச் சமூகமளிப்பினும் அவை முழுததிருப்தி ளிெப்பதாக அமையவில்லை என்றே கூற முடியும். இவ்வாறு சமூகமளிக்காமையினால் மாணவர்கள் பரீட்சைகளில் சித்தி பெறாது தாழ் அடைவினையே எதிர்கொள்கின்றனர். என்பதே ஆய்வாளரின் கருத்தாகும்.

மாணவர்கள் பாடசாலையில் அவர்கள் விரும்பிய பாடங்களை தெரிவுசெய்ய முடியுமா? எனும் வினாவிற்கு மாணவர்களின், ஆசிரியர்களின், அதிபர்களின், பெற்றோர்களின் பதில்களின் அடிப்படையி மாணவர்கள் பாடசாலையில் அவர்கள் விரும்பிய பாடங்களை தெரிவுசெய்யக் கூடிய நிலை ஓரளவு காணப்படுகின்றதனையே அறியமுடிகின்றது. 60 மாணவர்கள் விரும்பிள வாறு ஏனைய துறைகளையும், கலைத்துறையில் விரும்பிய பாடத்தினையும் தெரிவு செய்வதில் பல இடர்பாடுகள் உள்ளது என்பது ஆய்வாளனின் கருத்தாகும். இதனால் பல்கலைகழகங்களுக்கு செல்வதற்கான முழுமையான ஆர்வமும். ஈடுபாடும் குறைவாகவே காணப்படுகின்றது.

உங்களுடைய பல்கலைக்கழகம் செல்வதற்கான இலச்சியத்தில் ஏதும் தடைகள் உள்ளது என கருதுகின்றீரா? எனும் வினா மாணவர்களிடமும் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு தடையாக உள்ள காரணிகளை குறிப்பிடுக? எனும் வினா ஆசிரியர்களிமும் கேட்ட போது வினாவிற்கு மாணவர்களின், ஆசிரியர்களின், அதிபர்களின், பெற்றோர்களின் பதில்களின் அடிப்படையி பல்கலைக்கழகம் செல்வதற்கான இலச்சியத்தில் தடைகள் ஓரளவு உள்ளது புலனாகின்றது.

உங்களது உளவியல் பிரச்சினைக்கு இடையிடையே ஆலோசனைகள் கூறவேண்டும் என நினைகின்றீர்களா? எனும் வினா மாணவர்களிடமும் உங்களது மாணவர்களின் உளவியல் பிரச்சினைக்கு இடையிடையே எவ்வாறான ஆலோசனைகள் கூறவேண்டும் என நினைகின்றீர்கள்? எனும் வினா ஆசிரியர்களிமும் கேட்ட போது மாணவர்களின், ஆசிரியர்களின், அதிபர்களின், பெற்றோர்களின் பதில்களின் அடிப்படையி கற்றல் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கவேண்டும் எனும் நம்பிக்கையின் தன்மை ஓரளவு உள்ளது புலனாகின்றது.

**முடிவுகளும் விதப்புரைப்புகளும் :**

***க.பொ.த உயர்தர கலைப்பிரிவு மாணவர்களின் கல்வி அடைவு மட்டம் பற்றிய பிரச்சினைகள்***

*முடிவுகள்*

க.பொ.த உயர்தர கலைப்பிரிவு மாணவர்கள் குறிப்பாக ஆண் மாணவர்கள் பாடசாலை செல்லும் வீதம் குறைவாகவே காணப்படுகின்றது. குறிப்பாக ஆண் மாணவர்கள் வாரத்தில் ஒரு முறை விடுமுறை எடுப்பார்கள். குறிப்பாக வார இறுதி நாளில் விடுமுறை எடுப்பது வழமையாக காணப்பகின்றது என்றனர். க.பொ.த உயர்தரத்தில் பல்கலைக்கழக அனுமதியும் பரீட்சை அடைவு மட்டமும் மிகக் குறைவாகவே காணப்பகின்றது, ஆசிரியரது போதனையை ஏற்கும் மன நிலையை குறைவாகக் காணப்படுகின்றது.

*விதப்புரைகள்*

மாணவர்களின் பாடசாலை நாட்களை அதிகரிக்கும் முயற்சிகளை மேற்கொள்ளல், மாணவர்களின் பாடசாலை நாட்களிலே ஒவ்வொரு மாதத்திலும் பாசாலைக்கு வருகைதந்த நாட்களை கணித்து தெரியப்படுத்தலும் பாராட்டு, பரிசில்கள் வழங்குதலும், மாணவர்களின் பாடசாலை நாட்கள் பற்றியும் அவற்றின் விளைவுகள் பற்றியும் அடிக்கடி மாணவர்களுக்குத் தெரியப்படுத்தல், வரவு குறைவாக உள்ள மாணவர்களுக்கு வகுப்பறையில் முக்கிய பொறுப்புக்களை வழங்குதல், அடைவு மட்டத்தில் விருத்தியை ஏற்படுத்தல், மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் பரீட்சைகளின் முக்கியத்துவம் பற்றிக் கூறல். பல்கலைக்கழக கற்றலின் முக்கியம் பற்றிக் கூறுதல், மாணவர்களின் கற்றல் நாட்டத்தை அதிகரித்தல், ஆசிரியரது போதனையை ஏற்கும் மன நிலையை அதிகரித்தல்

***க.பொ.த உயர்தர கலைப்பிரிவு மாணவர்களின் அடைவில் தாக்கம் செலுத்தும் சமூகம்சார் பிரச்சினைகள்***

*முடிவுகள்*

குடும்ப அங்கத்தவர்களின் கல்வி நிலை 8ஆம் தரத்திற்கு குறைவாகவே உள்ளது, கல்வியில் பெற்றோரின் ஆர்வம் குறைவாகவே உள்ளது,

*விதப்புரைகள்*

கல்வியில் பெற்றோரின் ஆர்வத்தை அதிகரித்தல், பெற்றோர், ஆசிரியர் தொடர்பை அதிகரித்தல். பெற்றோரை கிழமைக்கு ஒரு தடவை பிள்ளைகளின் கல்வி நிலை

தொடர்பாகக் கலந்துரையாடலுக்கு உட்படுத்தல். வகுப்பறைக் கூட்டங்களை நடாத்துதல், மற்றும் பாட தரவட்டக் குழுக்களை அமைத்து அதில் பெற்றோர்களின் பங்களிப்புக்களையும் அவர்களை பங்குதாரர்களாகவும் முன்னிலைப்படுத்தல், பாடசாலையில் இடம்பெறும் ஒவ்வொரு நிகழ்வுக்கும் பெற்றோர் தமது ஒத்துழைப்பை வழங்குவதற்கு ஆலோசனை வழங்கி கல்விச் செயற்பாட்டில் பங்கு பெறச்செய்தல், குடும்பத்தில் உள்ள சிக்கல் தன்மையை நீக்குதல், மாணவர்களின் தாய் வெளிநாடு செல்வதனைத் தடுத்தல், தாய்மாருக்கு சுய தொழில் ஊக்குவிப்புக்களை வழங்குதல். இதற்காக சமூக நிறுவனங்களின் உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல், பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு முறையான பாதுகாவலர்களை ஏற்பாடு செய்தல். இதன் மூலமாக மாணவர்களின் வேலைப்பளு குறைந்து கற்றலில் நாட்டம் காட்டுவர். மாணவர்களின் தந்தைமாரை அழைத்து மதுபாவனையின் தீங்குகள் பற்றிக் கருத்தரங்குகளை நடாத்துதல். இத்துடன் சுவரொட்டிகள், வீதி நாடகங்களை நடாத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

## *க.பொ.த உயர்தர கலைப்பிரிவு மாணவர்களின் அடைவில் தாக்கம் செலுத்தும் பொருளாதாரப் பிரச்சினைகள்*

*முடிவுகள்*

குடும்ப வருமானம் மிவும் குறைவான நிலையிலே காணப்படுகின்றது.குடும்பம் வருமானம் பெறும் வழிமுறையாக கூடியளவான மாணவர்கள் விவசாயம் எனப் 58.53% பதில் வழங்கியதுடன் மீன்பிடி என ஓரளவு கூடிய மாணவர்கள் 36.58%, பதில் வழங்கியுள்ளனர். க.பொ.த உயர்தர கற்கும் மாணவர்களிலே 170 மாணவர்கள் வறுமை நிலையில் உள்ளனர். இவ்வாறான ஆதாரங்களின் அடிப்படையில் முடிவு எடுக்கப்பட்டது. குடும்பத் தொழிலில் க.பொ.த உயர்தர மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றார்கள்

*விதப்புரைகள்*

குடும்ப வருமானத்தை அதிகரிக்கும் வகையில் ஊக்குவித்தல், பெற்றோருக்கு சுய தொழில் ஊக்குவிப்புக்களை வழங்குதல், பெற்றோரைத் தமது பிரதான தொழில்களில் மட்டுமல்லாது ஏனைய தொழில்களின் மூலமும் வருமானம் பெற வழிகாட்டுதல், வருமானத்தை அதிகரிக்க சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல், குடும்பத் தொழிலில் மாணவர்கள் ஈடுபடுவதனைத் தடுத்தல், பெற்றோரை அழைத்து மாணவர்களை தொழிலில் ஈடுபடுத்துவதால் ஏற்படும் பாதகமான விளைவுகள் பற்றித் தெளிவுபடுத்தி அறிவுரை கூறல், அதிக வருமானம் கிடைக்கும் காலங்களில் மாணவர்களின் பாடசாலை வருகையினைக் கட்டாயமாக்கல், தொழிலில் ஈடுபடும் மாணவர்கள், தொழிலில் ஈடுபடுத்தும் பெற்றோருக்கு எதிராகப் பாடசாலை நிருவாகம் சட்ட நடவடிக்கைகளை எடுத்தல், வறுமையின் தாக்கத்தினை இல்லாது ஒழித்தல், வறுமையான மாணவர்களுக்கு இலவசமான வகுப்புக்களை நடாத்துதல், வறுமை நிலை எனும் எண்ணத்தைப் போக்கி மாணவர்களின் உளப் பிரச்சினையைத் தடுக்க ஆலோசனை வழிகாட்டல்களைச் செய்தல், வறுமை நிலையிலுள்ள குடும்பங்களுக்கும் சமூக நிறுவனங்களின் உதவிகளைப் பெற்றுக் கொடுத்து ஊக்குவித்தல்.

***க.பொ.த உயர்தர கலைப்பிரிவு மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும் திட்டங்கள், ஆலோசனை, முன்மொழிவுகள்***

*முடிவுகள்*

மாணவர்களிடையே பல்கலைக்கழகம் செல்வதற்கான விருப்பு காணப்படுகின்றது. மாணவர்களிடையே பல்கலைக்கழகம் செல்வதற்கான சாதகமானநிலை குறைவாக, மாணவர்களுக்கான வழிகாட்டல் ஆலோசனைகள் முறையாக இம்பெறவில்லை, பரீட்சைகளில் மாணவர்களின் பங்குபற்றுதல் குறைந்து கொண்டே செல்கிறது.

*விதப்புரைகள்*

மாணவர்களிடையே பல்கலைக்கழகம் செல்வதற்கான சாதகமான மனவிருப்பினை ஏற்படுத்தல், பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களை அழைத்து அம்மாணவர்களின் அனுபவங்களை பகிர்வதற்கு வழிசெய்தல். இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு சுற்றுலா பயணங்களை மேற்கொண்டு பல்கலைக்கழகங்களை பார்வையிடுவது, பல்கலைக்கழகம் செல்லும் விருப்பினை ஏற்படுத்துவது. மற்றும் ஆசிரியர்கள் மாணவர்களுடன் தொடர்புகளைப் பேனும் போது ஆசிரியர்கள் மாணவர்களுடன் உரையாடும் போது அன்பான வார்த்தைகளைப் பயன்படுத்தல், தங்களுயை வாழ்க்கையை அழகாக வாழ்வதற்கான அறிவுதீர்வமான சிந்தனையை வழங்குதல், தனிமையில் உள்ள மாணவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொள்ளல், வகுப்பறையில் குழுச் செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் வழங்கல், மாணவர்களின் காதல் பிரச்சினைக்கு உரியமாணவரை தொடர்புகொண்டு கல்வியில் விருப்பு ஏற்படக்கூடிய வகையிலே மறைமுகமாக திசைமுகப்படுத்தல், மாணவர்களுக்கான வழிகாட்டல் ஆலோசனைகளின் சேவைகளை அதிகரித்தல், பாடசாலைகளிலே வழிகாட்டல் ஆலோசனை சேவைக்கான அமைப்பினை அதிர்பர்கள் அதிகாரிகள் நிறுவி அதற்கு தகுந்த ஆசிரியர்களை நியமித்து மாணவர்கயோடு தொடர்புடைய அனைத்து பிரச்சினைகளையும் சேகரித்து அதற்கான ஆலோசனைகளை பாடசாலைகளிலே மேற்கொள்ளல், மாணவர்கள் தங்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சைகளை தாமாகவே முன்வந்து கூறக்குடிய மானநிலையினை ஏற்படுத்தல்,பரீட்சைகளில் மாணவர்களின் பங்குபற்றுதலை அதிகரித்தல் அலகுப் பரீட்சை, தவணைப் பரீட்சை, முன்னோடிப் பரீட்சைகளில் மாணவர்களின் பங்குபற்றுதலினைக் கட்டாயமாக்குதல், ஒவ்வொரு பாட அலகும் நிறைவு செய்ததும் அலகுப் பரீட்சைகளை நடாத்துதல், பரீட்சைப் புள்ளிகளை உடனுக்குடன் தெரியப்படுத்தி அவர்களின் துலங்கல்களை அறிந்து அதற்கேற்ப செயற்படல்,கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினுள் மாணவர்களை உள்ளீர்த்தல், காட்சிப்படுத்திக் கற்பித்தல். படங்கள், அட்டவணைகள், காணொளிகள் போன்ற முறைகளைப் பயன்படுத்தல், மாணவர்களுக்கு செயற்பாட்டு ரீதியான கற்பித்தலை மேற்கொள்ளல். குழுச் செயற்பாடு, கலந்துரையாடல் முறை போன்றன, தினமும் காலை நேர, மாலை நேர வகுப்புக்களை நடாத்துதல்., மேலதிக தனியார் வகுப்புக்களில் ஈடுபடும் மாணவர்களை குழப்பமின்றி கற்பதற்கான வழிகளை மேற்கொள்ளல், மாணவர்களிடையே கற்பதற்கான சாதகமான மனவெழுச்சிகளை ஏற்படுத்தல், வகுப்பறையினைக் காற்றோட்டம் உள்ளதாக மாற்றியமைத்தல், நல்ல மனவெழுச்சிகளைத் தரும் படங்களை வகுப்பறையினில் காட்சிப்படுத்தல், மாணவர்களைப் பூந்தோட்டம் அமைப்பதில் ஈடுபடுத்தல், ஆசிரியர்கள்

மாணவர்களுடன் உரையாடும் போது அன்பான வார்த்தைகளைப் பயன்படுத்தல்., தனிமையில் உள்ள மாணவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொள்ளல், வகுப்பறையில் குழுச் செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் வழங்கல்.

**உசாத்துணைகள்**


உவைஸ், எஸ்.எம். (2015). *கல்முனை வலயத்தில் க.பொ.த உயர்தர புவியியல் பாட அடைவுமட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றிய ஆய்வு.* தேசிய கல்வி நிறுவகம.

கருணாநிதி.மா. (2013). *கற்றல் -கற்பித்தல் மேம்பாட்டுக்கான் வழிமுறைகள்.* சேமமடு பதிப்பகம்.

சந்தானம், எஸ். (2007). *கல்வியும் சமூகமும்.* உதயம் ஆப்செட்.

சுமதி, ம. (2013). *கல்வியியல் கட்டுரைகள்.* சஜ்ஜூ வெளியீட்டகம்.

மகேசன், ஏ. (2010). விசேட கல்வியும் ஆலோசனை வழங்கலும். ஹிரா அச்சகம்.

முத்துலிங்கம், ச. (2002). *கல்வியும் உளவியலும்.* லங்கா புத்தக சாலை.

முரளிதரன்,மா. (2011). கல்முனை கல்வி வலய தமிழ் பிரிவிற்குட்பட்ட IC பாடசாலைகளில் சிரேஸ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்கள் கற்றலில் எதிர்நோக்கும் சவால்கள் பற்றிய ஆய்வு, கல்வி பிள்ளை நலத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.

லோகேஸ்வரன், ஆர். (2008). பிள்ளைகள் பற்றிய அறிவும் ஆசிரியரும். *அகவிழி.* மார்ச் 2008.

வரதராசா, நா. (2008). *ஆசிரியத் தொழில். பருத்தித்துறை.* சிவன் அச்சகம்..

வாஜித், எம். எல். ஏ. (2013). *வெளிநாட்டு வேலைவாய்ப்பும் மாணவர் கல்வியும்.* இஸ்லாஹிய்யா வெளியீட்டு மையம்.

ஜெயராசா, சபா. (2007). மாணவர்களின் அடைவுகள் பற்றிய மீளாய்வு. அகவிழி, மார்ச்.2007..

Mujis et al . (2009). *SES and Education.* University of Birmingham.

Morgan,H. et al. (2009). *Ses & Science Education*. University of Birmingham. Royal Society. London.

New collegate Dictionary, (2006). Through Scientific method and concerned with the physical word, Retrieved from www.Science made simple.com

Olayiwola, O.M. et al. (2011). On statistical analysis of impact of socio economic factors on students academic performance. *IIRRAS* 8 ( 3 ).395-398 .

Patel, N. (2006). Perceptions of student ability, effect on parent involvement in middle school. Doctoral thesis,Dissertation Abstracts Interational: The Humanities and Social Sciences , 67 ,03 .

# Cultural Diversity and Inclusion

# இந்து பௌத்த மக்களின் வாழ்வியல் சடங்குகளுக்கிடையிலான பரஸ்பரத் தொடர்புகள்: கேகாலை மாவட்டத்து தெஹியோவிட்டப் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

**சிதிரிசேன துஷாந்தி, வ. குணபாலசிங்கம்**
இந்து நாகரிகத்துறை,
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
ilayathusha18@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மனித வாழ்வானது வளம்பெற வேண்டும் என்று கட்டமைக்கப்பட்ட ஒழுக்க நெறியாகவே பண்பாட்டுக் கூறுகளும் சடங்கு சம்பிரதாயங்களும் காணப்படுகிறன. காட்டுமிராண்டித் தனத்திலிருந்து மனிதனை ஒரு சமூகமான நடைமுறை வாழ்வை வாழ வைப்பதற்குச் சடங்குகள் மிக அவசியம். மனிதன் பிறந்தது முதல் இறந்த பிறகும் ஆன்மாவின் நன்மை கருதி செய்யப்படுபவை எல்லாம் வாழ்வியல் சடங்குகள் ஆகும். இவ்வாறாக மனிதன் பிறந்தது முதல் செய்யப்படுபவை பூர்வாங்கக் கிரியை என்றும், மனிதன் இறந்தப் பிறகு செய்யப்படுபவை அபரக்கிரியை என்றும் அழைக்கப்படுகிறன. அந்த வகையில், இலங்கை நாடானது பல்லின சமூக மக்களைக் கொண்ட நாடாகும். இப்பல்லின மக்களுள் சமூகத்தில் பௌத்தர்களும் இந்துக்களுமே அதிகமாக வாழ்கின்றனர். இதில் கேகாலை மாவட்டம் தெறியோட்ட பிரதேசத்தில் இந்து, பௌத்த மக்களின் வாழ்வியலில் காணப்படும் பரஸ்பரத் தொடர்பினை ஆராய்வதே இவ்வாய்வாகும். பௌத்தர்களும் இந்துக்களும் அதிகளவாக வாழும் பிரதேசத்தை கண்டறிந்து அவர்களால் ஆற்றப்படும் சடங்குகளை இனங்காணுதல், இவ்விரு மதத்தவரினால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் பொதுவான சம்பிரதாயங்களை இனங்காணுதல், இதில் இவர்களுக்கே உரித்தான சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்களை அடையாளப்படுத்துதல், இவ்விரு மதத்தினரால் செய்யப்படும் சடங்குகளில் பங்கு கொள்பவர்களின் முக்கியத்துவம், காலம் காலமாக இவர்கள் மத்தியில் செய்யப்பட்டு வரும் சம்பிரதாயங்கள் மீதான நம்பிக்கை, பாரம்பரியமான சம்பிரதாயங்களை கைவிடாமல் இன்று வரை தமது சந்ததிக்கு தெரிவிக்கும் முகமாக செய்யும் சடங்குகள் போன்றவற்றினை தெளிவுபடுத்துவதாகவே இவ்வாய்வு அமைகின்றது. இவ்வாய்வானது இலங்கையில் பௌத்த மதத் தோற்றம் மற்றும் தொன்மையான இந்து மதத்தின் வளர்ச்சிப்போக்கு, இன்றைய காலக்கட்டத்தில் இவ்விரு மதங்களின் பரஸ்பரத் தொடர்பு போன்றவற்றினை இலக்கியங்கள், ஆய்வுகள், நேர்காணல் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு விளக்குவதாக அமைந்துள்ளது. இவ்விரு மதத்தினரும் எந்தவொரு உள்நோக்கங்களோ, உடன்படிக்கையோ இல்லாமல் காலம் காலமாக ஒன்றுபட்ட வாழ்வியல் சடங்கு முறைகளை நடாத்தி வருகின்றனர். இதனை தெளிவுப்படுத்தி எமது சமூகத்தில் சமூக நல்லிணக்கத்தை பேண வைப்பதாக இவ்வாய்வானது அமைந்துள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *பௌத்தம், இந்து மதம், சடங்கு, வாழ்வியல், சம்பிரதாயம், சமூக நல்லிணக்கம்*

## அறிமுகம்

இந்து சமயமானது மிக நீண்ட வரலாற்றினைக் கொண்டு இன்று வரையிலும் நிலைந்து நிற்கக் கூடிய ஒரு சமயமாகும். இது வெறுமனே சமயக் கருத்துக்களை மட்டும் கொண்டிராமல், ஒரு மனிதன் எவ்வாறான வாழ்க்கை வாழ வேண்டும் என்பதை எடுத்துரைப்பதாக உள்ளது. இச்சமயமானது வெறுமனே உலகியல் வாழ்க்கை முறையினை மட்டும் கூறாமல், ஒருவர் இறந்த பின்பு அடைய வேண்டிய பேரின்ப நிலையான முக்தி நிலையையும், வாழ்க்கையின் இலட்சியத்தையும் விளக்குவதாக அமைந்துள்ளது. அந்த வகையில் இந்து சமயமானது வேதங்களை பிரமாணங்களாக ஏற்று அதன் படி ஒழுகும் ஒரு சமய நெறியாகும். இந்து

சமயமானது ஆரம்பத்தில் வைதிக சமயநெறி என்றே அழைக்கப்பட்டது. இது சிந்து நதிக்கரையில் தோன்றியதால் அறிஞர்கள் இதனை பொதுவாக இந்து சமயம் என்றனர்.

அந்த வகையில், வேதங்களை ஏற்ற சமயம் வைதிக சமயம் என்றும், வேதங்களை ஏற்காத சமயம் அவைதிக சமயம் எற்றும் அழைக்கப்பட்டது. அவைதிக சமயங்கள் பௌத்தம், சமணம், உலகாயுதம் என்பவையாகும். பௌத்த சமயமானது தோற்றம் பெற்று 2500 ஆண்டுகள் கடந்து விட்டன என்பது வரலாற்று ஆய்வாளர்களின் நிலைப்பாடாகும். இனம், நிறம், மொழி என்ற வேறுபாட்டைக் கலைத்து மக்கள் நலம் பெற வேண்டும் என்ற தருமநெறியினைக் கொண்டது பௌத்த தத்துவம்.

மேலும், அரசனான சுத்தோதனிற்கும் மாயா தேவிக்கும் மகனாக கபிலவஸ்து எனுமிடத்தில் கௌத்தம புத்தர் பிறந்தார். இவரது வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் இவருக்கு எழுந்த வினாக்கள் என்பவற்றின் விளைவாக பௌத்த சமயம் தோற்றம் பெற்றது. இது வெறும் சமயமாக மட்டும் இல்லாமல், உயிர்கள் வேதனைப்படுவதற்கு எது காரணம், அதிலிருந்து எவ்வாறு விடுபடலாம் என்பதற்கான வழிக்காட்டியாகவும் அமைந்துள்ளது. அந்த வகையில் இந்தியாவில் தோற்றம் பெற்ற பௌத்த தத்துவம் கலைகள், பண்பாடு, அரசியல் வாயிலாக பல நாடுகளுக்கு பரவத் தொடங்கியது. அதன் மூலம் பல நாடுகளுக்கு பௌத்த சமய தத்துவம் பரவியது. அடுத்ததாக, இலங்கை ஒரு சிறிய தீபகற்பமாக இருந்தாலும் பௌத்தம், இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமயங்களைக் கொண்டுள்ள ஒரு நாடாகும். எனினும் இலங்கையில் சனத்தொகையில் பெரும்பாலானோர் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர்.

இலங்கையில் தேவநம்பிய தீசனுடைய ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது இந்தியாவில் ஆட்சி செய்த அசோக மன்னன் மகிந்த தேரர் தலைமையிலான ஒரு பௌத்த தூதுக் குழுவை இலங்கைக்கு அனுப்பியிருந்தான். மகிந்த தேரரை அசோகனின் மகனாகவும் வரலாற்று ஆய்வாளர்கள் சிலர் கூறுகின்றனர்.

இலங்கையில் பௌத்தர்கள் புத்தருக்கு அடுத்தபடியாக மகிந்ததேரரை மதிக்கின்றனர். மிசாக பர்வதம் என அழைக்கப்படும் மிகிந்தலையில் மகிந்த தேரருக்கும் தேவநம்பிய தீசனுக்கும் இடையோன வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு இடம்பெற்றதாக வரலாறு கூறுகின்றது. மகிந்ததேரர் தீசனுடன் உரையாடிய போது அவனின் அறிவையும் பக்குவத்தையும் அறிந்து கொண்டார்.

ஆகவே பௌத்த தர்மத்தின் ஒரு பகுதியை தீசனுக்கு அவர் போதித்தார். இதன் வாயிலாக பௌத்தத்தின் சில அடிப்படை கோட்பாடுகளை தீசனும் அறிந்து கொண்டான். பின் அவன் அம்மதத்தை தழுவினான். மன்னன் எவ்வழியோ மக்களும் அவ்வழியே என்பதற்கிணங்க பௌத்தம் இலங்கையில் பரவி பெருவளர்ச்சிக் கண்டு, இன்று இலங்கை பௌத்த நாடாகவே திகழ்கிறது. இன்று அரச சமயமாக பௌத்த மதமே விளங்கி முதன்மை பெற்றுள்ளது.

அந்த வகையில், இலங்கையில் 25 மாவட்டங்களில் கேகாலை மாவட்டமும் ஒன்றாகும். இது சப்ரகமுவ மாகாணத்தில் அமைந்துள்ளது. இவ்மாவட்டம் பதினொரு பிரதேச செயலகம் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதில் தெஹியோவிட்ட பிரதேச செயலாளர் பிரிவும் ஒன்றாகும். இங்கு சிங்களம், தமிழ், முஸ்லிம் ஆகிய மூவின மக்களும் ஒன்றாகக் கூடி

வாழ்கின்றனர். இங்கு பல்லின மக்களும் வாழ்ந்து வருகின்ற போதிலும், இந்து பௌத்த மக்கள் மிக அதிகமாக வாழ்கின்றனர்.

அந்த வகையில், இந்து, பௌத்த மக்களிடையே காலம் காலமாக அவர்களுடைய வாழ்க்கை முறையில் வேறுபட்ட கொள்கைகள் நம்பிக்கைகளை கடைப்பிடித்து வருகின்றனர். பண்பாடு என்பது ஒரே மாதிரியாக இருப்பதில்லை, மாறுபடக் கூடியது. அதில் பண்பாட்டுக் கலப்பு என்பது இடம்பெறும். ஒரு மதத்தில் இருக்கும் பண்பாடு இன்னொரு மதத்திற்குச் செல்வது பண்பாட்டுக் கலப்பாகும். அதனை ஒவ்வொருவரும் தெரிந்தோ தெரியாமலோ உள்வாங்கிக் கொள்வார்கள். அந்த வகையில் கேகாலை மாவட்டத்தில் பல இடங்களில் இந்து சமயத்தின் பண்பாடும் பௌத்த சமயத்தின் பண்பாடும் ஒன்றுபட்டுக் காணப்படுகிறது. ஏனைய சமயங்களை விடவும் இவ்விரண்டு சமயங்களில் பரஸ்பரத் தொடர்பானது அதிகமாகக் காணப்படுகின்றது. பௌத்த சமயமானது இந்து சமயத்தில் இருந்து கிளையாக பிரிந்து பின்னர் தனிக் கோட்பாடாக வளர்ந்தமை இதற்கு முக்கிய காரணமெனக் கூறலாம். இத்தொடர்புகள் ஆய்வுப் பிரதேசமான கேகாலை மாவட்டத்திலும் ஆழமாகக் காணப்படுகின்றது.

**இலக்கிய மீளாய்வு**

இலங்கையில் கற்புடைமாதர் வழிபாடு (2005) எனும் நூல் குமாரசாமி,க.இ., அவர்ளால் எழுதப்பட்டது. இந்நூல் இந்துமரபிலும் பௌத்தமரபிலும் வழிபடப்படும் பெண்தெய்வங்கள் பற்றிய தகவல்களைத் தருகின்றது. பெண்தெய்வ வழிபாடுகள் சிறுதெய்வ நெறிக்குரியனவாக இந்துமத்திலும் பெருந்தெய்வ வழிபாட்டுக்குரியனவாக பௌத்த மதத்திலும் இடம்பெற்றிருப்பதனை இந்நூல் விபரிக்கின்றது. அத்தோடு சில பௌத்த பெண்தெய்வங்கள் இந்துமத பெண் தெய்வங்களாக மாற்றமடைந்தமை, இவ்விரு மதத்திலும் சிறப்புற வழிபடப்படும் பத்தினித் தெய்வம் (கண்ணகியம்மன்) பற்றிய செய்திகள் என்பன இவ்விலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன.

இலங்கையில் அம்பாறை மாவட்டத்தில் இந்து-பௌத்த சமயங்களுக்கிடையிலான பண்பாட்டு இடைவினைகள் என்கின்ற முதுதத்துவமாணி ஆய்வு ஏட்டில் ந. சுபராஜ் (2017). அவர்கள் இந்து-பௌத்த சமயங்களுக்கிடையிலான தொடர்பினை எழுதியுள்ளார். இவர் வாழ்வியல் சடங்கு, சமயச் சடங்கு இவற்றுக்கிடையிலான தொடர்பினை விளக்கிக் கூறியுள்ளார். இருப்பினும் அம்பாறை மாவட்ட மையப்படுத்தி ஆய்வாகவே இது இருந்துள்ளது. அந்தவகையில் அவர் கேகாலை மாவட்டத்தை கூறவில்லை.

பௌத்தமும் தமிழும் (2002) எனும் நூல் மயிலை சீனி வேங்கடசாமியினால் எழுதப்பட்டது. பௌத்தத்தின் தோற்றம், அம்மதம் தமிழ்நாடு வந்தமை, பௌத்தமத ஆலயங்கள், பௌத்த தத்துவம், பௌத்த ஒழுக்கவியல் என்பவற்றோடு முக்கியமாக பௌத்தத்திற்கும் இந்துமதத்திற்கும் உள்ள தொடர்புகள் போன்ற விடயங்களைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார் ஆசிரியர். பிற நூல்களில் இல்லாத புதுமையான ஆதாரங்கள் இந்நூலில் காணக்கிடக்கின்றன.

சிற்றம்பலம்,சி.க., அவர்களால் எழுதப்பட்ட ஈழத்து இந்து சமய வரலாறு (1996) ஈழத்தில் பண்டைய காலத்து இந்துசமய வளர்ச்சியைக் குறிப்பிடுவதோடு பௌத்த சமயத்தின்

வளர்ச்சியுடன் அதனை இணைத்துக் கூறியுள்ளார். இலங்கையில் பௌத்தமதம் பரவுவதற்கு முன் இந்துசமயம் நிலைபெற்றிருந்தது என்பதற்கு பல ஆதாரங்களை இந்நூலில் காணலாம்.

சண்முகலிங்கன்,என்., பக்தவத்சலபாரதி ஆகியோரால் எழுதப்பட்ட இலங்கை - இந்திய பண்பாட்டு மானிடவியல் (2004) எனும் நூல் இலங்கையில் இந்து, பௌத்தமத பண்பாட்டுத் தொடர்புகளைக் வெளிப்படுத்துகின்றது. கதிர்காமம் பற்றி எழுதப்பட்ட கட்டுரை இந்து, பௌத்த பண்பாட்டு இடைவினைகளின் கூறுகளைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. கண்ணகி தொடர்பாக இடம் பெறும் கட்டுரை இந்துக்களினதும் பௌத்தர்களினதும் கடவுளாக கண்ணகி வழிபடப்படுகின்றமையை வெளிப்படுத்துகின்றது.

தம்மிக்க ஜயசிங்கவால் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ‘‘இந்துசமயமமும் அவைதிகநெறிகளும்’’ எனும் தலைப்பிலான ஆய்வரங்கு நூலில் (2013) ‘‘சிங்கள தூதுக் காவியங்களில் இந்துசமயம்’’ எனும் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இக்கட்டுரை இந்துசமய ஆலயங்கள், இந்துசமய வழிபாடுகள் என்பன சிங்கள தூதுக்காவியங்களில் எங்ஙனம் செல்வாக்கப் பெற்றிருக்கின்றது என்பதனை வெளிப்படுத்துகின்றது. இருப்பினும் இது இவ்விடயம் தொடர்பாக ஆரம்ப புரிதலையே வெளிப்படுத்துகின்றது.

நாடகம் அரங்கியல் பழையதும் - புதியதும் (1996) எனும் நூல் மௌனகுரு,சி., அவர்களால் எழதப்பட்டது. இந்நூலில் இந்து பௌத்த மதங்களின் கலையம்சத் தொடர்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பலியிடல், செய்வினை செய்தல் (சூன்யம் வைத்தல்) போன்ற வழிபாட்டு அம்சங்களையும் இந்நூல் கலையாகவே நோக்குகின்றது. இவற்றை நாடகப்பாணியில் இது விபரிக்கின்றது. இந்து, பௌத்த மதங்களுக்கிடையிலான அறியப்படாத ஆழமான தொடர்புகள் இதில் இடம் பெற்றுள்ள போதிலும் அழகியல் நோக்கில் இது ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடக்கூடியதொரு அம்சமாகும்.

அரங்க.இராமலிங்கம் எழுதிய பௌத்தம் போற்றிய பெண் தெய்வங்கள் (1992) எனும் நூல் பௌத்தமத பெண் தெய்வங்கள் பற்றிய செய்திகளைத் தருகின்றது. பெண் தெய்வ வழிபாடு இந்துசமயத்தில் இருந்து பௌத்தத்திற்குச் சென்றது. பௌத்தத்தில் காவல் தெய்வங்களாக பல பெண் தெய்வங்கள் வழிபடப்படுகின்றனர். அத்தெய்வங்களுக்கும் இந்துமத தெய்வங்களுக்கும் இடையேயுள்ள தொடர்புகளை இந்நூலில் அறியக்கூடியதாக இருக்கின்றது. மயிலை சீனி வேங்கடசாமியின் பௌத்தமும் தமிழும் எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள பல செய்திகளை இதில் காணக்கூடியதாகயிருப்பினும் பல புதிய பௌத்த பெண் தெய்வங்கள் பற்றி இந்நூலில் காணக்கிடக்கின்றது.

இந்திரபாலா,கா., என்பவரால் எழுதப்பட்ட ஆதி இலங்கையில் இந்துமதம் (1978) எனும் நூல் ஆதிகாலத்தில் இலங்கையில் இந்துசமயத்தின் வளர்ச்சியை பௌத்தமத வளர்ச்சியோடு இணைத்துக் கூறியுள்ளார். இந்து, பௌத்தமத பண்பாட்டு இணைப்புக்களை இந்நூலில் அறியமுடிகின்றது.

சாமிநாதையர்,உ.வே., அவர்களின் புத்தசரித்திரம், பௌத்ததர்மம், பௌத்தசங்கம் (1945) எனும் நூல் இந்துமதத்தில் இருந்துதான் பௌத்தமதம் உருவாகியது என்பதற்கான பல ஆதாரங்களை வெளிப்படுத்துகின்றது. மேலும், பௌத்தமதத்தின் மூலநூல்கள், பௌத்தத்தின் வளர்ச்சிப் போக்குகள், பௌத்த தர்மம் முதலியனவற்றையும் இந்நூலில்

காணலாம். குறிப்பாக பௌத்தத்தின் அடிப்படைச் சிந்தனைகள் உபநிடதங்களில் இருந்துதான் தோன்றின எனும் பிரதான கருத்தியலை இந்நூல் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கோவிந்தசாமி,கா.ச., அவர்களால் பதிப்பிக்கப்பட்ட வீரசோழியம் எனும் நூல் இந்து சிந்தனைமரபில் மூலப்பரம்பொருளைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற பல்வேறு இலக்கணங்கள் புத்தருக்குரியதாக எடுத்துரைக்கின்றது. இதனை கல்வெட்டு ஆதாரங்கொண்டு இவ்விலக்கியம் நிறுவுகின்றது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வெளியீடான ''இந்துசமயமும் அவைதிக நெறிகளும்'' (2013) எனும் நூலில் பத்மநாதன்,சி., அவர்களால் எழுதப்பட்ட தென்னிலங்கையில் இந்து சமயம் எனும் கட்டுரையில் இலங்கையில் இந்து மதத்திற்கும் பௌத்த மதத்திற்கும் இடையேயுள்ள பரஸ்பர தொடர்புகளை வரலாற்று அடிப்படையில் ஒரு உபதலைப்பிலே விளக்கியுள்ளார்.

தட்சிணாமூர்த்தி,அ., அவர்களின் தமிழர் நாகரிகமும் பண்பாடும் (2005) எனும் நூல் இந்துசமயம் மலர்ச்சி பெற்ற காலத்தில் புத்தரை திருமாலின் அவதாரம் என்று ஏற்றுக்கொண்ட இந்துக்கள் அமராவதியிலிருந்த புத்தர் கோயிலில் இந்து மரபுப்படி வழிபாடு செய்யத் தொடங்கியமை, இதனால் பல பௌத்த கோயில்கள் இந்துக் கோயில்களாக மாறியமை போன்ற செய்திகளை ஆதாரங்களுடன் விளக்குகின்றது.

இராமலிங்கம்,அ., அவர்களின் பௌத்தம் போற்றிய பெண் தெய்வங்கள் (2003) எனும் நூல் இந்துசமயத்தின் புராதன வழிபாடுகளுள் ஒன்றாகிய தாய்த் தெய்வ வழிபாட்டிலிருந்தே பெண் தெய்வ வணக்கம் பௌத்திற்குச் சென்றது என்பதற்கான பல ஆதாரங்களை வெளிப்படுத்தியுள்ளது. கலைமகளை சிந்தாதேவியாக பௌத்தம் ஏற்றுக்கொண்டமை மற்றும் கண்ணகி, சீதா, திரௌபதை முதலிய இந்து தெய்வங்கள் பௌத்த பெண் தெய்வங்களின் மாற்று வடிவங்கள் எனும் செய்திகளையும் இந்நூலின் மூலம் அறியலாம்.

பத்மநாதன்,சி.,அவர்களின் இலங்கையில் இந்து சமயம் (2005) எனும் நூலில் இலங்கையில் பௌத்த சமயம் தர்மசோகனுடைய ஆட்சியிலே, கி.பி.3ஆம் நூற்றாண்டிலே பரப்பப்படுவதற்கு முன்னரே சைவசமயம் இலங்கையிலே காணப்பட்டது. அனுராதபுர நகரத்தை அமைத்த பொழுது பாண்டுகாபயன் என்னும் அரசன் பல வழிபாட்டு நிலையங்களை அமைத்தான். ''சிவிகசாலை'', ''சொத்திசாலை'' என்னும் நிலையங்களை அவன் ஸ்தாபித்தான் என்று மகாவம்சம் கூறுகின்றது. அவற்றுள், சிவிகசாலை என்பது சிவலிங்கத்தைத் தாபித்து வழிப்படும் கோட்டம் என்று அதன் உரை நூலான வம்ஸத்தப்பகாஸினி விளக்குகின்றது.

சொத்திசாலை என்பது பிராமணர் வேதம் ஓதுவதற்கென்று அமைக்கப்பட்டசாலை என்று அறிஞர் கருதுவர். மிகப் பழமையான பிராமிச் சாசனங்களிற் ''சிவ'' என்னும் பெயர் கொண்ட பலரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. பௌத்த சமயம் அரசரின் ஆதரவோடு பெருஞ் செல்வாக்கு பெற்றபோதும், இலங்கையிலே சைவ சமயமும் இந்துகலாசார மரபுகளும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொண்டிருந்தன. பௌத்தர்களுக்கும் சைவர்களுக்கும் இடையிற் பொதுவான நெருங்கிய உறவுகள் ஏற்பட்டிருந்தன.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு ஒப்பிட்டு ஆய்வு முறை, விபரண ஆய்வு முறை, பகுப்பாய்வு முறைகளைப் பிரதானமாகக் கொள்கின்றது. இந்துக்களினதும் பௌத்தர்களினதும் சம்பிரதாயங்களைத்

தனித்தனியே ஆய்வு செய்து பின்பு ஒப்பிட்டு ஆராய்வதனால் இவ்வாய்வு ஒப்பிட்டாய்வை பிரதான ஆய்வு முறையியலாகப் பயன்படுத்துகின்றது.

இவ்வாய்வானது இந்து பௌத்த சமயங்களுக்கிடையிலான விழுமியங்கள், நம்பிக்கைகள் தொடர்பாக இருப்பதால் இது பண்பு ரீதியான ஆய்வு முறையாக (qualitative research) அமைகின்றது. மேலும், இவ்வாய்வு மாதிரி முறையில் தரவுகளைச் சேகரித்து பகுப்பாய்வுக்குட்படுத்துகிறது. கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிட்ட பிரதேசத்தில் உள்ள 39 கிராம சேவகர் பிரிவுகளில் இந்துக்களும் பௌத்தர்களும் அதிகமாக ஒன்றிணைந்து வாழும் 10 கிராம சேவகர் பிரிவுகள் ஆய்வு மாதிரிகளாக (Sample) எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**பெறுபேறும் கலந்துரையாடலும்**

இந்து பௌத்த சமயங்களுக்கிடையில் பூர்வாங்கக் கிரியை மற்றும் அபரக் கிரியைகள் பின்பற்றப்படும் விதம் என்பவற்றினை விளக்குவதாக அமைந்துள்ளது. ஒரு மனிதனுடைய வாழ்வியல் கூறானது முதலாவது இயற்கையுடனே ஆரம்பமானது. இயற்கையுடன் இணைந்து வாழ்ந்த மனிதன் இயற்கையினையே கடவுளாக வழிப்பட்டான். இயற்கை சீற்றங்களிலிருந்து தன்னைப் பாதுகாத்து கொள்ள வேண்டி அவற்றினை வழிப்பட ஆரம்பித்தான். இவ்வாறு இயற்கையைக் கடவுளாகக் கருதி வழிபட பல்வேறு முறைகளையும் வகுத்துக் கொண்டான். இவையே காலப்போக்கில் சடங்குகளாக மாறத் தொடங்கியது. அதாவது, மனிதன் இவ்வுலகில் வாழும் வாழ்க்கையிலிருந்தும், இறந்த பின்பு கிடைக்கும் நிலையிலிருந்தும் தன்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே சடங்கினையும், வழிப்பாட்டினையும் வாழ்வியலுடன் இணைத்தான். மனித வாழ்வானது பிறப்பு - இறப்பு - பிறப்பு என்ற சுழற்சி தன்மைக் கொண்டதாகும்.

மனித வாழ்வில் இன்று சடங்குகள் என்பது ஒரு முக்கிய அங்கமாகவே மாறிவிட்டது எனலாம். மனிதனுடைய வாழ்வில் பிறந்தது முதல் இறப்பு வரையும் பின்பு ஆன்மாவானது மோட்ச நிலையினை அடையும் வரை இச்சடங்குகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. சடங்கு என்பது மக்களால் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டது. இதனை வாழ்வினை நெறிப்படுத்த நாம் மேற்கொண்ட ஒழுக்க நெறியாகவும் அமைந்துள்ளது எனலாம். இவ்வாறாக மனிதனின் தேவைக் கருதி செய்யப்படும் சடங்குகளாவன, வாழ்வியல் சடங்கு, வழிபாட்டு சடங்கு, வளமைச் சடங்கு, மந்திர சடங்கு வகைப்படுத்தப்படும். இன்றைய நவீன சமூகங்கள் காலத்துக்கு காலம் சமூக வளர்ச்சியில் மாற்றங்களைப் பெற்று வளர்ச்சி அடைந்து வந்தாலும் சமூக நிலை கொண்ட சடங்குகள் பல உயிர்ப்பான அம்சங்களை உள்ளடக்கிய வடிவங்களாகத் தொழில்படுகின்றன. இது பாரம்பரியமான விடயங்களை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் நிகழ்வாகும்.

இந்து மதத்தவர் கிரியை மற்றும் வழிபாடுகள், சாஸ்திர சம்பிரதாயர்களில் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர். கடவுள், ஆன்மா, உலகம், கன்ம மறுப்பிறப்பு போன்றவற்றில் அசையாத நம்பிக்கை கொண்டவர்களாக உள்ளனர். இறைவனின் திருவடியினை அடைதலே இவர்களின் பேரவா எனக் கூறப்படுகிறது. இதனை. திருமூலர் திருமந்திரத்தில் கூறியுள்ளார்.

இந்துக்களின் வாழ்வானது எப்படிப்பட்டது, நாம் எங்கிருந்து வந்தோம்,எம்முடைய இலட்சியம் தடைப்படக் காரணம். நம்முடைய் இலட்சியத்தினை விளக்கும் கருத்துக்களாக அமைந்துள்ளது. அதாவது இந்து சமயமானது நாம் இப்பிறவியில் செய்யும், நன்மை தீமை என்பவையே மறுப்பிறவயிலும் கிடைக்கும். முக்தியினை பெற முடியும் எனக் கூறப்படுகின்றது. ஒருவருடைய வாழ்வில் கடமைகளை முதலில் சரிவரச் செய்ய வேண்டும் என்கிறது. ஆரம்பத்தில் கடமைகளாகக் கூறப்பட்ட விடயமானது நாம் கண்டிப்பாகச் செய்யப்பட வேண்டிய சடங்கு சம்பிரதாயரங்களாக மாற்றமடைந்தது எனலாம்.

அந்தவகையில், வேதத்தினை பிரமாண நூலாக ஏற்காத அவைதீக நெறி மதமாக பௌத்தம் காணப்படுகின்றது. இது கௌத்தம புத்தரால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு கோட்பாடே பௌத்தமதமாகும். இது கடவுள், உலகம், மறுப்பிறப்பு, முக்தி என்பவற்றனை மறுக்கும் ஒரு நெறியாகும். இம்மதமானது ஆன்மா மட்டுமே உண்மைப் பொருள். ஆன்மா துன்பப்படுவதற்கு காரணம் ஆசையே ஆகும். ஆசையில் இருந்து விடுப்பட்டால் எத்துன்பமும் ஏற்படாது. ஞானம் கிடைக்கிறது என்கிறது. ஆசையில் இருந்து விடுப்படுவதற்கு பஞ்சீலக் கொள்கையானது கடைப்பபிடிக்கப்பட வேண்டும் என்றார். இவ்வாறாக பௌத்த மதமானது அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்டு காணப்பட்ட போதிலும், இதில் கடவுள், புண்ணியம், பாவம், மோட்சம், என்பன பிறகு இணையத் தொடங்கியது. பிறகு இவற்றினை அடிப்படையாகக் கொண்டே அவர்களுடைய வாழ்வியல் நெறி சடங்குகள் சம்பிரதாயங்கள் என்பவை வடிமைக்கப்பட்டது எனலாம்.

அந்த வகையில் இந்து, பௌத்த மதத்தவர்களின் வாழ்வியலில் செய்யப்படும் கிரியைகள் இரண்டு வகைப்படும். பூர்வாங்கக் கிரியைகள், அபரக் கிரியைகள் ஆகும். பூர்வாங்கக் கிரியையானது ஒருவர் வாழும் காலத்தில் மேற்கொள்ளப்படுபவை ஆகும். இது எம்முடைய வாழ்வானது  வளம் பெற வேண்டும்  என்ற நோக்குடனே செய்யப்படுகின்றது எனலாம். அதாவது. ஒரு உயிர் தாயின் கருவறையில் உருவானது முதல் இறக்கும் வரை எம்மால் நிகழ்த்தப்படும் சடங்குகள் அனைத்தும் பூர்வாங்கக் கிரியையில் அடக்கும்.

அந்த வகையில் கேகாலை மாவட்டம் தெறியோவிட்ட பரதேசத்தில் உள்ளவர்களினால் ஒரு உயிரானது தாயின் கவைறையில் உருவாகி ஐந்து வயது வரை மேற்கொள்ளப்படும் சடங்குகளில் இந்து பௌத்த மதத்தவர் மத்தியில் மேற்கொள்ளப்படும் பொதுவான சம்பிரதாயங்கள். சேனை தொடுதல் - (ரன்கிரி கட கேம), பெயர் சூட்டுதல் மொட்டை அடித்தல், காது குத்துதல், சோறூட்டல், ஏடு தொடக்குதல் ஆகியவற்றினை அடையாளங் காணமுடிகிறது.

இதுபோல் இந்துக்களால் மாத்திரமே மேற்கொள்ளப்படும் சடங்குகளாக சீமந்தம், தொட்டிலில் இடல், கொளுக்கட்டை சொரிதல் (பல் முளைத்ததும் செய்யும் சடங்குகள்) என்பனவாகும். பௌத்தர்கள் மாத்திரம் செய்யும் சடங்குகளாக தொரட வெடும, கிரியம்ம தானம் என்ற சடங்குகளை அடையாளம் காண முடிகிறது. இவ்வாறான சடங்கானது ஆண், பெண் இரண்டு குழந்தைகளுக்கும் செய்யப்படும் ஒரு பொதுவான சடங்காகும்.

அடுத்ததாக ஒரு பெண் குழந்தை பிறந்து அடுத்த பருவத்தில் காலடி எழுத்து வைக்கும் ஒரு நிகழ்வாக பெண் பருவமடைதல் விளங்குகின்றது. இதனை பூப்புனித நீராட்டு விழா எனவும் அழைப்பர். இச்சடங்கினை பாரம்பரிய ரீதியாக தற்காலம் வரையிலும் இவ்விரு மதத்தவரும் கடைப்பிடித்து வருகின்றனர். ஆரம்பக் காலம் முதல் தற்காலம் வரையிலும் இச்சம்பிரதாயத்தின் மரபானது மாற்றமடையாமல் உள்ளது. சமூகத்தில் எந்த அந்தஸ்த்தில் உள்ளவராக இருந்தாலும் அதனை பாரம்பரிய முறைப்படியே செய்கின்றனர். ஒரு பெண் பருவமடைந்த பிறகு அவள் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பலவீனம் அடைந்தவளாக உள்ளார். புற உலக தாக்கங்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக, இச்சடங்கினை செய்யும் படி கூறி சிறிது நாட்கள் அப்பெண்ணைப் பராமரிக்கின்றனர்.

இந்துக்களின் பூப்புனித நீராட்டு விழாவினை இப்பிரதேச மக்கள் இரண்டும் விதமாக செய்து வருகின்றனர். அதாவது, ஆகம் முறைப்படி, ஆகமம் சாரா முறைபடி என்ற வகையில் ஆகும். ஆகம் முறைப்படி என்றால் குருக்களிடம் சென்று பெண் ருதுவானதைக் கூறி நல்ல நேரம் கணிக்கப்படும். பிறகு பெண்ணை அத்தை, தாய், உறவினர்கள் கையால் மஞ்சள் இட்டு நீராட்டப்பட்டு தாய் மாமனால் அமைத்த குடிசையில் அமர வைப்பர். குருக்கள் குறித்துக் கொடுத்த நாட்களின் படி ஒன்பது அல்லது பதினொரு நாட்கள் பெண்னை மறைவாகவும். தீய சக்திகளிலிருந்து பாதுகாத்து சத்தான உணவுகளைக் கொடுத்து பராமரிக்கப்படுகிறாள். பிறகு தோஷங்கள் ஏதேனும் காணப்பட்டால் வீட்டினைத் தூய்மைப்படுத்தி குருக்களால் தொடக்கு கழிக்கும் நிகழ்வானது மேற்கொள்ளப்படும். இதை ஆகமம் சார்ந்த முறையில் இப்பிரதேசத்தில் நடைபெறும் சில சம்பிரதாயங்களாகும்.

ஆகமம் சாரா முறைபடி செய்வதாக இருந்தால் ஒன்பது அல்லது பதினோராம் நாள் தாய்மாமனால். அமைக்கப்பட்ட குடிசையானது கழட்டப்படும். அன்றைய தினம் டோவி அம்மா (சலவை தொழில் செய்யும் சாதியினை சேர்ந்த வண்ணார் என்ற பெண்) வீட்டிற்கு வரவழைத்து வண்ணாச் சடங்கு என்ற ஒரு சம்பிரதாய மரபானது மேற்கொள்ளப்படுகிறது. அன்றைய தினம் பெண்ணுக்கு பாரம்பரிய முறைப்படி தோஷம் நீக்குவர். பிறகு சீண்டிக் கொடி தாண்டுதல் என்ற சடங்கானது செய்யப்படும். அதாவது இக்கொடி மூலிகை நார்களினால் ஆனக் கொடியாகும்.

அன்றைய தினம் குடிசையையும். குடிசையில் பாவிக்கப்பட்ட பொருட்கள் அனைத்தையும் தீயிட்டு எறிப்பர். இது அதிகாலையில் இடம்பெறும் நிகழ்வாகும். இவ்வாறு அன்றைய தினம் சடங்குகள் அனைத்தும் நிறைவுற்றப் பிறகு டோவி அம்மா மனமகிழ்வு அடையும் படி சில பொருட்களையும், பணம் என்பவற்றை தானமாக வழங்குவர். இம்முறையானது இப்பிரதேசத்தில் காலம் காலமாக நடைப்பெற்று வரும் ஒரு நடைமுறையாகும்.

பௌத்த மதத்தினரை எடுத்துக் கொண்டால், இவர்கள் சடங்கினை பெண் ருதுவானதற்கு நல்ல நேரம், தினம் என்பவற்றை கணிப்பதற்காகவே ஜோதிடரிடம் செல்வர். அவர்கள் பிக்குகளை வரவழைத்து எதுவும் செய்வதில்லை. அவர்கள் ரெதிநெந்தா என்ற வண்ணார் சமூகத்தை சேர்ந்த பெண்ணை வரவழைத்து சடங்கானது செய்யப்படுகிறது. இதனை பௌத்தர்கள் மல்வர சாத்திர என்று அழைப்பர். ரெதி நெந்தாவின் தலைமையிலே

அனைத்து சம்பிரதாயங்களும் நடைபெறுகிறது. இவர்களும் பெண்ணுக்கு தோஷம் கழிப்பதற்காகவும், தீய சக்திகளிலிருந்து பெண்ணைப் பாதுகாப்பதற்காகவும் இவ்வறான சடங்கினைச் செய்து வருகின்றனர். இவர்கள் ரெதிநெந்தாவின் மன மகிழ்விற்காய் பல்வேறு பொருட்கள் தானமாக வழங்கப்படுகின்றது.

அந்தவகையில் இப்பிரதேசத்தில் பூப்புனித நீராட்டு விழாவில் சில ஒற்றுமையுடன் கூடிய சடங்குகளும் செய்யப்படுகின்றது. அதாவது, ஒரு பெண் ருதுவான உடன் ஜோதிடரை சந்திப்பது, நல்ல நேரம் பார்ப்பது, மறைவான இடத்தில் வைப்பது, டோவி அம்மா அல்லது ரெதி நெந்தா என்ற வண்ணார் சாதியை சேர்ந்த பெண்ணை வரவழைப்பது, வண்ணார் பெண்ணுக்கு தானம் வழங்குதல், பெண்ணை பாதுகாப்பாக பராமரிப்பது என்பனவாகும். இவ்வாறான ஒற்றுமைகள் இவர்களிடம் காணப்பட்டாலும் சில இவர்களுக்கு மாத்திரமே உரிய சடங்குகளும் உள்ளன. இந்துக்கள் மாத்திரம் மேற்கொள்ளும் சடங்குகளாவன தாய்மாமனால் குடிசை அமைத்தல், அத்தையினால் நீராட்டுதல், வண்ணார் சடங்கு - சீண்டிக் கொடி தாண்டுதல், குடிசை கட்டுதல்,எறித்தல், குருக்களை வரவழைத்து ஆகம முறைப்படி தோஷம் நீக்குதல் என்பவையாகும். பௌத்தர்கள் மாத்திரம் மேற்கொள்ளும் சடங்குகளாவன மூலிகை கலந்த நீர் ஊற்றுதல், பச்சை மரத்தினை கொத்துதல், தேங்காய் உடைத்தல், ரெதி நெந்தாவினால் தோஷம் கழித்தல் என்பனவாகும். இவ்வாறாக பூப்புனித நீராட்டுச் சடங்கில் இவ்விரு மதத்தவரிடையும் சில ஒற்றுமையான சடங்குகளும், தங்களுக்கே உரிய சில தனித்துவமான சடங்கு முறையினையும் காணக்கூடியதாக உள்ளது.

ஒரு குழந்தை பிறந்து இதுவரை காலமும் பெற்றோரின் அரவணைப்பில் வளர்ந்தவர்கள் வாழ்வின் அடுத்த நிலைக்கு கொண்டு செல்லும் நிகழ்வாகத் திருமணம் காணப்படுகின்றது. திருமணமானது, இப்பூலோகத்தில் தீர்மானிக்கப்பட்டது அல்ல. நாம் பிறக்கும் பொழுதே திருமணமானது தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரு குழந்தை பிறந்து இருபது இருபத்தைந்து வயது வரை பெற்றோருடைய அரவனைப்பிலேயே வாழ்ந்து வந்தனர். ஆனால் இனி எம் உயிர் இருக்கும் வரையில் எம் வாழ்வை அழகாக்குவது எம் வாழ்க்கை துணையில் மாத்திரமே. இவ்வாறான எம் வாழ்க்கைத் துணையை தேர்த்தெடுக்கும் நிகழ்வாகத் திருமணம் அமைகின்றது. அந்த வாழ்வில் கணவன், மனைவி இருவரும் இணைந்து அன்பும், அறத்தையும் பேண வேண்டும். இத்திருமணமானது மேன்மையான தெய்வீகம் வாய்ந்து இணைதல் எனப்பொருள்படும். அதாவது இரு இதயங்கள் இணைதல் எனவும் கூறலாம். இவ்வாறாக இவ்விரு மதத்தவரிடமும் திருமணச் சடங்கானது மூன்று பிரிவில் அடங்கும். திருமணத்திற்கு முன் நிகழ்த்தப்படும் சடங்கு, திருமணத்தன்று நிகழ்த்தப்படும் சடங்கு, திருமணத்திற்கு பின் நிகழ்த்தப்படும் சடங்கு என்பவையாகும்.

அந்தவகையில். திருமணத்திற்கு முன் நிகழ்த்தப்படும் சடங்கில் இவ்விரு மதங்களுக்கிடையில் சில ஒற்றுமையானதும், சில தங்களுக்கே உரிய வேறுபட்ட சடங்குகளும் காணப்படுகின்றது எனலாம். இவற்றில் இவர்களுக்கிடையிலான பொதுவான சம்பிரதாயத்தை பார்ப்போமானால். பெண்பார்த்தல், நிட்சயதார்த்தம் என்பவையாகும். இந்துக்கள் மாத்திரம் செய்யும் சம்பிரதாயங்களாக பொன்னுருக்குதல், முகூர்த்தக்கால், பெண்மாப்பிள்ளைக்கு நலுக்கு வைத்தல், பரிசம் போடுதல் என்பனவாகும். பௌத்தர்களுக்கே

உரித்தான சம்பிரதாயங்களாக விருந்து, மங்கல போருவ (தெப்பம்) அமைத்தல், சுபதாள் எழுதுதல் என்பனவாகும்.

திருமண நாளில் இவ்விரு மதத்தவரும் செய்யும் ஒன்றுமையான சம்பிரதாயங்களாக, மாப்பிள்ளை அழைப்பு, தாலிக் கட்டுதல், இனிப்புக் கொடுத்தல், ஆசிர்வாதம் பெறல், திருஷ்டிக் கழித்தல் என்பனவாகும். இந்துக்கள் மாத்திரம் செய்யும் சம்பிரதாயங்களாக, தலைப்பாகை வைத்தல், அங்குரார்ப்பணம், காப்புக் கட்டுதல், பெற்றோருக்கு பாத பூஜை செய்தல், கன்னிகாதானம், மாலை மாற்றுதல், கை பிடித்தல், ஏழடி நடத்தல், அம்மி மிதித்தல், மோதிரம் எடுத்தல், அருந்ததி பார்த்தல், பொரியிடுதல் என்பனவாகும்.

பௌத்தர்களுக்கே உரிய சம்பிரதாயங்களாக மங்கலப் போருவைக்கு செல்லல், மணமகன் மணமகளுக்கு வெள்ளைத் துணி கட்டுதல், ஏழு கை வெற்றிலை மாற்றுதல், சுண்டு விரலில் பிரித்நூல் கட்டுவர், பாற்கடன் செலுத்துதல், நன்றிக் கடன் செலுத்துதல், என்பவையாகும். இவ்விரு மதங்களும் தங்களுடைய வாழ்வியலில் ஒரு அங்கமாக விளங்கும் பூர்வாங்கக் கிரியையில் சில சடங்குகள் ஒன்றுப்பட்டு சில சம்பிரதாயங்கள் தங்களுக்கே உரிய முறையில் அதன் பண்பாட்டு கூறுகளை இன்று வரையிலும் செய்து வருகின்றனர் எனலாம். இவ்வாறான சடங்குகளை எவ்வித உடன்படிக்கையோ உள்நோக்கங்களோ இல்லாமல் தம்மையறியாமல் செய்து வருகின்றனர்.

அடுத்ததாக இந்து பௌத்த சமயங்களின் அபரக் கிரியைகளுக்கிடையிலான தொடர்பு காணப்படும் விதம் என்பதாகும். அபரம் என்பது பிந்தியது எனப் பொருள்படும். அதாவது உடலில் இருந்து உயிர் பிரிந்த பின்பு செய்யும் கிரியை ஆதலால் அபரக்கிரியை என்றுப் பொருள்படும். ஒருவர் இறந்த பின்பு ஆத்மா இறைவனடி சேர வேண்டி செய்யப்படுபவை ஆகும்.

இந்துக்களைப் பொறுத்தவரையில் பிதிர்கடன் செலுத்துதல் முக்கிய கடமையாகும். இதனை வள்ளுவர் புத்திரனால் செய்யப்படும் கடமையினை கடன் எனக்கூறி, கடமைத் தவறினாலும் பெற்றக் கடனை திருப்பிச் செய்யவேண்டும் என வலியுறுத்துகிறார். அதாவது பெற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமையை விளக்கியுள்ளார். இந்து சமயமானது அந்தியேட்டிக் கிரியை என்று செய்து வருகின்றது.

அந்தவகையில் இலங்கையில் இந்து, பௌத்த சமயமானது மிகுந்த பரஸ்பரத் தொடர்பினைக கொண்டு காணப்படுகிறது. பௌத்த மதமானது ஆரம்பத்தில் கடவுள், பாவ புண்ணியம், மோட்சம் போன்ற விடயங்களை இந்து மதத்திலிருந்து உள்வாங்கி தங்களுடைய சடங்குகளைச் செய்து வருகின்றது. கேகாலை மாவட்டம் தெறியோவிட்ட பிரதேசத்தில் இந்துக்களினதும் பௌத்தர்களினதும் இறப்பு தொடர்பான சடங்குகளில் இரு சமூகத்தினரும் - மேற்கொள்ளும் பொதுவான சம்பிரதாயங்களாக மரணம் நிகழ்ந்ததை தெரியப்படுத்தல், இறந்தவர்களுக்கு அணிவிக்கப்படும் ஆடை, அணிகலன்கள் (பொதுவாக இருப்பினும் அணியப்படும் ஆடைகளில் வேறுபாடுள்ளது), இறந்தவரின் தலைப் பகுதியை வைக்கும் திசைக்கு முக்கியத்துவம், உடலை வெள்ளை சீலையால் மூடி வைத்தல், பிரேதம் வைக்கும் இடத்தின் மேல் வெள்ளைக் கட்டுதல், உடலின் தலைமாட்டில் குத்துவிளக்கேற்றல்,

வாசகங்கள் ஓதல் (இந்துக்கள் - திருமுறைகள், வைகுந்த அம்மானை பௌத்தர்கள் மரண காவியம் (மழபெத), குறிப்பிட்ட தினங்களில் அடக்கம் செய்யக் கூடாது என்ற நம்பிக்கை இந்துக்கள் புதன், சனி போன்ற தினங்களிலும், பௌத்தர்கள் செவ்வாய், வெள்ளி போன்ற தினங்களில் அடக்கம் செய்யமாட்டார்கள், பிரேதத்துடன் கோழி அல்லது முட்டை வைத்தல் பிரேதம் எடுத்து செல்லும் வழியில் அரிசி, தேங்காய் வண்டுகள், மஞ்சற் கலவை, நெற்பொறி என்பன எடுத்துச் செல்லப்படுதல், இறந்தவரின் பிரேதத்திற்கு அருகில் யானைத்தந்தம் வைத்தல் (இது பௌத்தர்களிடம் இருந்து இந்து சமயத்திற்கு வந்தது). பிரேதம் எரிக்கப்படுதல் அல்லது புதைக்கப்படுதல் ஆகியனவற்றை அடையாளங் காணமுடிகின்றது.

இவற்றைப் போல் இந்துக்களால் மாத்திரம் மேற்கொள்ளப்படும் இறப்புச் சடங்குகளாக கொல்லிக்குடம் வைத்தல் - மல நீக்கம் செய்வதன் பொருட்டும், இறந்தவரிடத்தில் இருக்கும் ஆசைகள் அனைத்தும் நீக்கம் பெறும் பொருட்டும் செய்யப்படுகின்றது, பிரேதத்திற்கு எண்ணெய் தோய்த்து நீராட்டுதல். வாய்க்கரிசிபோடுதல் - இந்துக்களை பொறுத்த வரையில் இறந்தவர் பசி தாகத்துடன் செல்ல கூடாது என்பதற்காகவும் இதுவரை காலம் உணவுதந்தவருக்கு வாய் நிறைய அரிசி போட வேண்டும் என்பதற்காகவும் இது நிகழ்த்தப்படுகின்றது. இறப்பு நடைபெற்று மூன்றாம் நாள் அன்று இந்துக்கள் மயானத்திற்கு சென்று பிரேதமேடைக்குச் பாலூற்றுவர், எட்டு வைத்தல், பதினாறாம் நாள் காரியம் செய்தல் என்பனவற்றை காணலாம்.

பிரேதம் மூன்று நாட்கள் வீட்டில் இருத்தல், வீட்டில் பிரேதம் இருக்கும் போது சமையல் அடுப்பினை எரிக்கக் கூடாது, மதகுருமாரின் ஹாத்தா சடங்கு பௌத்தர்கள் மூன்றாம் நாள் அன்று பிக்குமார்களுக்கு தானம் அளிப்பர், அத்தவச தானம், தும்மாச தானம் என்பவை செய்யப்படுகிறது. இவை பௌத்தர்களால் மாத்திரம் மேற்கொள்ளப்படும் இறப்புச் சடங்குகளாக உள்ளன. இவ்வாறாக இவ்விரு மதத்தவர் மத்தியிலும் காணப்படும் பரஸ்பரத் தொடர்பினை நோக்கக் கூடியதாக உள்ளது.

**முடிவுரை**

வாழ்வியல் சடங்குகள் அனைத்தும் மனித வாழ்வை நெறிப்படுத்துவதற்காகவே உருவாக்கப்பட்டவையாகும். இந்து மதமானது ஒரு உயிர் உருவானது முதல் இறக்கும் வரை செய்யும் அனைத்து சம்பிரதாயங்கள் அனைத்துமே ஆன்மாவின் நன்மைக் கருதியே. இவை காலம் காலமாக எம்மூதாதையர்களிடம் இருந்து நாம் கடைப்பிடித்து வந்தவையாகும். ஆனால் பௌத்த மதமானது ஆரம்பத்தில் இவற்றினை மறுத்தாலும் காலப்போக்கில் அவர்களை அறியாமல் வாழ்வியல் நெறிமுறையினை உள்வாங்கிக் கொண்டனர். கேகாலை மாவட்டம் தெஹியோவிட்ட பிரதேசத்தினைப் பொறுத்த வரையில் இந்து பௌத்த மதங்களின் வாழ்வியல் நெறியில் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளனர். இவ்வாறு தங்களை அறியாமல் பரஸ்பரத் தொடர்பினைக் கொண்டுள்ளனர்.

**உசாத்துணைகள்**

அருள்மொழி, செ. (2008). *கல்வி ஆய்வு முறையியல்.* எவக்கிறின் அச்சகம்.

கணபதிப்பிள்ளை, க. (1956). *இலங்கை வாழ் தமிழர் வரலாறு.* சுதந்திரன் வெளியீட்டகம்.

கிருஷ்ணராஜா, செ. (1999). *இலங்கை வரலாறு – பாகம் 1*, பிறைநிலா வெளியீடு.

குமாரசாமி, வி.(n.d). *பௌத்தம்: ஒரு சமயம்.*மலேசியா.

மௌனகுரு, சி. (1992). *நாடக அரங்கில் பழையதும் புதியதும்.* விபுலம் வெளியீடு.

ராமஸ்வாமி, ப. (1956). *பௌத்த தருமம்.* ஹிலால் பதிப்பகம்.

லஷ்மணன், கி. (2000). *இந்திய தத்துவ ஞானம்.* பழனியப்பா பிரதர்ஸ்..

வேங்கடசாமி, சீ. (1940. *பௌத்தமும் தமிழும்.* மயிலாப்பூர்.

ஜெகநாதன், சோ. (2021). *பௌத்தம் ஒரு மெய்யியல் பார்வை.* குமரன் புத்தக இல்லம..

ஹிரியண்ணா, எம்.(n.d). *இந்திய தத்துவ ஞானம்.* தமிழ் வெளியீட்டுக் கழகம்.

# ஐ.எல்.எம். அப்துல் அஸீஸின் சமய, சமூகப் பணிகள் - ஒரு பன்முகப் பார்வை

**ஏ. ஜ.ஃ.பர் ஹுஸைன்**
இஸ்லாமிய கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
hussainaj@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சியில் இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கிய சவால்களை அடையாளம் கண்டு அவற்றிக்கு பரிகாரம் தேடிக் கொடுத்த இலங்கை முஸ்லிம் தலைவர்களுள் ஒருவராக போற்றப்படும் ஐதுரூஸ் லெப்பை மரிக்கார் அப்துல் அஸீஸ் அவர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். இவ்வகையில் இவ்வறிஞர் மேற்கொண்ட கல்வி, எழுத்துப்பணி, சமய, சமூகப் பணிகள் ஆகியவைகளை வெளிக்கொணர்தல் இவ்வாய்வின் நோக்கமாகும். பண்புரீதியில் அமைந்த இவ்வரலாற்றாய்வு இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகும். மேலும் இவர் தொடர்பாக வெளியிடப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் வரலாற்று ஆவணங்கள் என்பன மீளாய்வு செய்யப்பட்டன. தந்தையின் ஊடாக கிடைக்கப்பெற்ற அறிவும் அவரது சமகாலத்தில் வாழ்ந்த சமூக எழுச்சிக்குப் பங்காற்றிய தலைவர்களின் நட்பும் முஸ்லிம்களின் பின்னடைவுக்குக் காரணமான விடயங்களைத் துல்லியமாகக் கண்டறிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தன. ஆங்கிலக் கல்விக் கொள்கையை முஸ்லிம்கள் எதிர்த்ததன் விளைவாக அதுசார்ந்த பலன்களை இழந்திருந்த சூழ்நிலையில் அறிஞர் எம்.சி. சித்திலெப்பையுடன் இணைந்து சமயச் சூழலில் ஆங்கிலக் கல்வியை வழங்க பாடுபட்டு வெற்றிகண்டார். அத்தோடு முஸ்லிம்கள் கல்வியில் முன்னேற்றங்காண கொழும்பு ஸாஹிராக் கல்லூரியை உருவாக்கியதோடு, அச்சூழலில் ஏற்பட்ட துருக்கித் தொப்பிப் விவகாரத்தை முறையாகக் கையாண்டு தீர்வு பெற்று முஸ்லிம்களின் தனித்துவத்தை நிலை நாட்டப் பாடுபட்டார். தனது பத்திரிகைகள், உரைகள் மூலமும் சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்துதல், இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றைத் தெளிவுபடுத்தல் ஆகியவற்றில் அப்துல் அஸீஸ் ஆற்றிய சேவைகள் என்றும் நிலைத்து நிற்கக் கூடியவைகளாகும். எனவே, முஸ்லிம்களுக்கு வழிகாட்டுவதற்கான தனிமனித ஆளுமைகளின் அவசியம் வலியுறுத்தப்படுவதோடு, அதற்கான முன்னெடுப்புக்கள், வழிகாட்டல்கள் பற்றிய முன்மொழிவுகளைத் தருவதாகவும், எதிர்காலத்தில் இவ்விடயத்தில் ஆய்வை மேற்கொள்வோருக்கு உதவுவதாகவும் இவ்வாய்வு அமைகிறது.

***திறவுச் சொற்கள்:*** *ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ், இலங்கை முஸ்லிம்கள், பணிகள்*

## ஆய்வுப் பின்னணி

இலங்கையை ஆட்சி செய்த வெளிநாட்டவர்களில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்கள் கி.பி. 1505 – 1948ஆம் ஆண்டு வரை இலங்கையில் தமது ஆட்சியை நிலைநாட்டியிருந்தார்கள். இவர்களின் ஆட்சியில் கிறிஸ்தவ சமயம் மற்றும் அவர்களின் கல்வி முறைமை (ஆங்கிலம்) என்பனவற்றை விஸ்தரிப்பதில் பெரிதும் ஈடுபட்டதால் இவை முஸ்லிம்களின் வாழ்வொழுங்கில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. இத்தகைய ஆட்சியாளர்களின் கொடுமைகளால் இலங்கை முஸ்லிம்களின் கல்வி நிலையங்கள் பாதிக்கப்பட்டதால் சமய, கலாசார முன்னேற்றம் தடைப்பட்டு முஸ்லிம் சமூகத்தின் வளர்ச்சி குன்றியது. அத்தோடு, ஐரோப்பியரின் இலங்கை வருகை முதல் இலங்கைக்கும் அரேபியாவுக்குமிடையில் இருந்த நெருக்கமான தொடர்பு வெகுவாகக் குறைந்தமையானது முஸ்லிம்கள் மேலும் சமய வழிகாட்டல் இன்றி சமய விடயங்களில் பின்னடைவதற்கு வழிகோலியது (அமீன், 2009).

இதனால் இஸ்லாத்துக்கு மாற்றமான சடங்குகள், சம்பிரதாயங்களை இஸ்லாமாகக் கருதி பின்பற்றும் சூழ்நிலையும் உருவாகியது. மார்க்க அறிவின்மையால் சமயக் கடமைகளை நிறைவேற்றுவதில் கூட பித்அத்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். மார்க்க வழிகாட்டல்கள் உரிய முறையில் கிடைக்காததால் ஆன்மீகத் துறையைப் புறக்கணித்து, லௌகீகத் துறையை இலட்சியமாகக் கொண்டு வாழும் நிலையும் தோன்றியது.

இத்தகைய பின்னணியில் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேற்குறிப்பிடப்பட்டவர்களின் தாக்கத்திலிருந்து முஸ்லிம்களையும் இஸ்லாமிய சமயத்தையும் பாதுகாப்பதற்கு வேண்டிய சூழ்நிலைக்கு சுதேச முஸ்லிம் தலைவர்கள் தள்ளப்பட்டார்கள். முஸ்லிம்களை சன்மார்க்க ரீதியாக நெறிப்படுத்துவதையும், அவர்களுக்கு சன்மார்க்க வழிகாட்டல்களை வழங்கி, அதனூடாக அவர்களின் சமய, கலாசார, கல்வி மேம்பாட்டுக்கு உதவுவதையும் நோக்கங்களாகக் கொண்டு செயற்பட்டார்கள். இக்கால கட்டத்தில் இலங்கையில் இஸ்லாமிய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு அயல்நாடான இந்தியாவில் வாழ்ந்த இஸ்லாமிய அறிஞர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும்.

19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பல்துறைகளிலும் வீழ்ச்சியுற்றிருந்த இலங்கை முஸ்லிம் சமுதாயத்தை உயர்வு நிலைக்கு கொண்டு செல்வதில் அறிஞர் சித்திலெப்பையோடு இணைந்து உழைத்தவராக ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் அவர்கள் காணப்படுகிறார்கள். கொழும்பைச் சேர்ந்த புகழ் பெற்ற சோனகக் குடும்பமொன்றில் 1867 ஒக்டோபர் 27 ஆம் திகதி பிறந்த அப்துல் அஸீஸ் அவர்கள் இலங்கை முஸ்லிம்களின் உயர்வுக்காக மேற்கொண்ட சேவைகளை மதிப்பிடுவதாக இவ்வாய்வு அமையவல்லது.

இவ்வாறு ஒரு சிறந்த பத்திரிகையாளராகவும், சிந்தனையாளராகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும் விளங்கிய ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் 1915 ஆம் ஆண்டு செப்டெம்பர் 11ஆம் திகதி தமது 48வது வயதில் காலமாகும் வரை தமது வாழ்நாள் முழுவதையும் இந்நாட்டு முஸ்லிம் சமுதாயத்தின் உயர்ச்சிக்காக அர்ப்பணித்த ஒரு பெருமகனாகத் திகழ்கிறார்.

**ஆய்வுப் பிரச்சினை**

முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் அவர்கள் உழைத்ததன் காரணமாக பல்துறை வெற்றிகளை முஸ்லிம் சமூகம் அடைய வழியேற்பட்ட அதேவேளை இன்றைய சூழ்நிலையில் இவர் போன்ற தனிமனித ஆளுமைகளின் பன்முக சேவைகள் சமூகத்திற்கு ஆய்வு ரீதியாக வெளிப்படுத்தப்படாத சூழ்நிலை காணப்படுதல்.

**ஆய்வின் நோக்கம்**

- ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் அவர்களின் பன்முக சேவையை மதிப்பிடுதல்.

**ஆய்வு முறையியல்**

இது ஒரு பண்பு ரீதியான ஆய்வாகும். இரண்டாம் நிலைத் தரவுகளான ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் அவர்களின் சேவைகளை வெளிக்காட்டும் நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் இணையதள ஆவணங்கள் பல ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

எம்.ஐ.எம். அமீனினால் எழுதப்பட்ட 'இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட முன்னோடிகள்' எனும் தலைப்பிலான நூல் க.பொ.த. (உ/த) இஸ்லாமிய நாகரிக பாடத்தைத் தழுவி எழுதப்பட்டதாகும். இந்நூலில் ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் அவர்களின் சமய, சமூகப் பணிகள் பற்றி ஒரு தனித் தலைப்பில் ஆராயப்பட்டுள்ள போதிலும் குறிப்பிட்ட பாடத்திட்டத்துக்குப் போதுமானளவு தகவல்களை மாத்திரமே இக்கட்டுரை உள்ளடக்கியுள்ளது. எனவே இவ்வாய்விலிருந்து எமது ஆய்வு வேறுபட்டு நிற்கின்றது.

ஸக்கியா ஸித்தீக் என்பவரினால் எழுதப்பட்ட 'ஸாஹிராவை உருவாக்கிய உத்தமர்கள்' எனும் நூல் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியை உருவாக்குவதில் எம் முன்னோர்கள் ஆற்றிய பங்களிப்பு குறித்தே ஆராய்வதால் நூலின் தலைப்புக்கு ஏற்ற விதத்தில் ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் அவர்களின் குறிப்பிட்ட இத்துறை சார்ந்த பணிக்கே அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

இதே நூலாசிரியரால் எழுதப்பட்ட 'நமது வரலாற்று ஆளுமைகள்' எனும் நூலில் 'ஸாஹிராவின் நெம்புகோல் ஐ. எல்.எம். அப்துல் அஸீஸ்' எனும் தலைப்பில் 'ஸாஹிராவின் உருவாக்கப் பணியில் இவரது பங்கு பற்றி சுருக்கமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**ஆய்வின் கண்டறிதல்கள்**

***கல்விப் மற்றும் எழுத்துப் பணிகள்***

ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் அவர்கள் தனது தந்தையான ஐதுரூஸ் லெப்பை மரிக்காரிடம் குர்ஆனையும், தமிழையும் கற்றுக் கொண்டதன் விளைவாக அவர் இளம் பராயத்திலிருந்தே சமூக சேவை, வரலாற்றாய்வு, பத்திரிகைத்துறை போன்றவற்றில் ஈடுபட வாய்ப்பு ஏற்பட்டது. தந்தையினூடாகக் கிடைத்த இத்தகைய கல்விப் பின்புலத்தை ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் அவர்களிலும் கண்டு கொள்ள முடிகின்றது. இதனால் தனது ஆங்கிலக் கல்வியைப் புறக்கோட்டை அரசினர் ஆங்கிலப் பாடசாலையில் பெற்றுக் கொண்டதோடு, ஆறாம் வகுப்புடன் தனது கல்வியை நிறுத்திக் கொண்ட போதிலும் உயர் கல்வி இல்லாமலேயே பேரறிஞனாகவும், சிந்தனையாளராகவும், சமூக சேவை செயல் வீரனாகவும் திகழ்ந்துள்ளார் என்பதைக் கண்டறிய முடிந்தது.

முஸ்லிம்கள் ஆங்கிலக் கல்வியை எதிர்த்த போதிலும் அறிஞர் ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் அவர்கள் அன்றைய காலத்தில் அக்கல்வியை விரும்பிப் படித்தமை பிற்பட்ட காலங்களில் அக்கல்வி ரீதியாக முஸ்லிம்களை முன்னேற்ற வாய்ப்பு ஏற்பட்டது.

1891இல் நிறுவப்பட்ட கொழும்பு கல்விச் சங்கத்தின் செயலாளராக அப்துல் அஸீஸ் அவர்கள் தெரிவு செய்யப்பட்டமை முஸ்லிம்களை கல்வி ரீதியாக எழுச்சியடையச் செய்வதற்கு வித்திட்டிருப்பதை காணமுடிகின்றது. இக்கல்விச் சங்கமே மருதானை முஹம்மதிய ஆண்கள் ஆங்கிலப் பாடசாலையை நிறுவியது. அதுவே அல் மத்ரஸதுஸ் ஸாஹிராவாக வளர்ந்து கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இந்நாட்டு முஸ்லிம்களின் கல்வி நிலையமாக விளங்கி வரும் கொழும்பு ஸாஹிராவாகப் பரிணமிக்க காரணமாக அமைந்தமை இவரின் கல்விக்கான பணியை எடுத்துக்காட்டுகின்றது (ஸித்தீக் ஸக்கியா, 2022).

இவரால் எழுதப்பட்ட ‘முஸ்லிம் பாதுகாவலன்’ எனும் சஞ்சிகையில் முஸ்லிம் சமூகத்தின் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தல், சமூகத்தில் புரையோடிப் போயிருந்த இஸ்லாத்திற்கு முரணான செயற்பாடுகளைக் கண்டறிந்து அவற்றைக் களைவதற்கு முயற்சித்தல், சமகால முஸ்லிம் உலகின் நிகழ்வுகள் பற்றி சமூகத்திற்கு அறிவூட்டல், முஸ்லிம்கள் உலகளாவிய இஸ்லாமிய உம்மத்தோடு சார்ந்தவர்கள் என்ற உணர்வை அவர்களில் தோற்றுவித்தல் ஆகிய நோக்கங்களை கொண்டிருந்தது.

அப்துல் அஸீஸின் முஸ்லிம் பாதுகாவலன் எந்தளவு பிரபல்யமடைந்ததெனில், அதன் சில ஆங்கில கட்டுரைகள் பிரபல ஆங்கிலத் தினசரிகளில் மறுபிரசுரம் செய்யப்பட்டன. முஸ்லிம் அல்லாதோர் மத்தியில் இஸ்லாத்தை அறிமுகப்படுத்தும் பான்மையில் அவர் ஆங்கில மொழிமூலம் ஆற்றிய உரையொன்றும் அதன் தமிழ் மொழிபெயர்ப்பும் முஸ்லிம் பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலுமான கட்டுரைகளை உள்ளடக்கி ‘அல் முஸ்லிம்’ எனும் பெயரில் சஞ்சிகை ஒன்றையும் 1909 பெப்ரவரி 15 ஆம் திகதி அவா் வெளியிட்டார். மாதமிருமுறை வெளிவந்த இச்சஞ்சிகை ஓா் இலவச வெளியீடாகும். இச்சஞ்சிகை முஸ்லிம் சமூகத்தின் கல்விப் பிரச்சினைகளைத் தெளிவாகச் சுட்டிக்காட்ட முயற்சித்துள்ளது. இலங்கை முஸ்லிம் கல்வி வரலாறு, கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் தோற்றம், வளர்ச்சி, அது எதிர்நோக்கும் பிரச்சினைகள், ஆங்கிலக் கல்வியைப் புறக்கணித்ததால் முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்ட பின்னடைவு, முஸ்லிம் கல்வி மாநாடு, அரேபியா் வரலாறு, இலங்கை முஸ்லிம்களும் அரபுக் கல்வியும் முதலான தலைப்புகளில் இச்சஞ்சிகையில் கட்டுரைகள் எழுதப்பட்டன.

அப்துல் அஸீஸ் குர்ஆன் போதனையிலும் அதனைப் பிரபல்யப்படுத்துவதிலும் மிக ஆர்வத்துடன் செயற்பட்டார். குர்ஆனைப் போதிப்பதற்கான முறைமைகள் பற்றி முஸ்லிம் பாதுகாவலனில் தொடர்ச்சியாகப் பல கட்டுரைகள் எழுதினார். இலங்கை முஸ்லிம்கள் குர்ஆனை ஓதுவதுடன் மட்டும் நிறுத்திக்கொள்ளாது, அதன் தமிழ் மொழிபெயர்ப்பையும் கற்றல் வேண்டும் என வலியுறுத்தினார்.

1912 இல் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த போது அங்கு அரபு மொழியில் மாத்திரம் ஜும்ஆப் பிரசங்கம் நிகழ்த்தப்பட்டதை அவதானித்துவிட்டு, தொழுகைக்குப் பின்னர் ஒரு சொற்பொழிவாற்றினார். அவ்வுரை அறபு, தமிழ் ஆகிய இரண்டின் அவசியத்தை வெளிப்படுத்துவதாக அமைந்தது. யாழ்ப்பாண முஸ்லிம்கள், கதீப்மார்களைக் கொண்டு

ஜும்ஆப் பிரசங்கங்களைத் தமிழில் மொழிபெயர்க்கச் செய்ய வேண்டுமென்று அவர் வேண்டினார். அதன் பின்னர் அரபு மொழியில் மாத்திரம் "குத்பா" ஓதும் வழக்கம் நின்று விட்டது.

சித்திலெப்வை வெளியிட்ட 'முஸ்லிம் நேசன்' பத்திரிகைக்கு 1889 இல் அப்துல் அஸீஸ் ஆசிரியரானார். ஆறு மாதங்கள் அதன் ஆசிரியராகச் செயற்பட்ட பின் 'அஸ் ஸவாப்' எனும் அறபுத் தமிழ்ப் பத்திரிகையை ஆரம்பித்தார். அது கல்லச்சில் வெளி வந்தது. பின்னர் இப்பத்திரிகையை நிறுத்தி விட்டு 1901 ஆம் ஆண்டில் "முஸ்லிம் பாதுகாவலன்" எனும் ஒரு தமிழ்ப் பத்திரிகையை அவர் ஆரம்பித்தார்.

அரசாங்கமும், ஆங்கிலம் தெரிந்தோரும் முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தெரிந்து கொள்வதற்காக இப்பத்திரிகையின் சில பக்கங்கள் 'முஸ்லிம் கார்டியன்' என ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டன.

அவர் தனது பத்திரிகையில் பின்வருமாறு கூறுகிறார். கல்வியையும், கல்வியுடையாரையும் அவர்களின் பரோபகாரமான முயற்சியையும் மதிக்காதிருக்கும் குணம் கனவான்களில் மாத்திரமல்ல, இலங்கை முஸ்லிம்களில் பெரும்பாலானோரில் காணப்படுவதால் அவர்களது சீர்திருத்தத்தையும் அறிவை அல்லது அறிவீனத்தையும் பொதுவாய் கவனிக்கப் புகுந்தோம்.... கொஞ்சம் கொஞ்சமாவது அதற்குத் தக நூல்களையும், பத்திரிகைகளையும் வாசிக்க வேண்டும். இது அவர்களின் கடமையே......தேசத்தின் சொற்ப கல்வி கற்ற பல முஸ்லிம் வாலிபர்கள் தங்கள் வறுமை காரணமாக தொழில் செய்யக்கூடிய அளவிற்கு தம் கல்வியை அதிகப்படுத்திக் கொள்வதற்குக் கூடாதவர்களாய் இருக்கிறார்கள். இவர்கள் உயர்தரமான கல்வி கற்றுக்கொள்ள உதவியாய் இருக்கும் பொருட்டு ஸ்கொலர்ஷிப்களைத் தனவந்தர்கள் உருவாக்க வேண்டும்". இவ்வாறான எழுத்துப்பணி ஊடாக முஸ்லிம்களின் கல்வி உயர்வுக்கு வித்திட்டதை வெளிப்படுத்தி நிற்கின்றது.

அறிஞர் சித்திலெப்வை ஆரம்பித்த 'முஸ்லிம் நேசன்' எனும் பத்திரிகையின் பதிப்பாசிரியர் பதவியை 1889ல் அவர் ஏற்றுக் கொண்டார். ஏ.எம். வாப்பிச்சி மரைக்கார் அவர்கள் ஆரம்பித்த கல்வி இயக்கத்துக்கு அப்துல் அஸீஸ் அவர்கள் தமது முழு ஆதரவையும் வழங்கினார். இந்த இயக்கம் கொழும்பில் முஸ்லிம் கல்விக் கழகத்தை ஸ்தாபித்து ஸாஹிராக் கல்லூரியை நிறுவியது. இக்கழகத்தின் செயலாளராக அப்துல் அஸீஸ் அவரகள் விளங்கினார்.

***ஆங்கிலம் கற்பதன் அவசியத்தை வலியுறுத்தல்***

ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் காலத்தில் முஸ்லிம் சிறார்கள் ஆங்கிலக் கல்வியூட்டும் பாடசாலைகளுக்கு அனுப்பப்படாமைக்கான காரணம் மதம் மாற்றும் அச்சமேயாகும். இவ்வச்சத்தைப் போக்காதவரை ஆங்கிலக் கல்வியைப் பெற முஸ்லிம் மாணவர்களை ஊக்குவிப்பது சாத்தியம் இல்லை என்பதை அவர் நன்குணர்ந்திருந்தார். ஆதலால், ஆங்கிலம் கற்பது பற்றிய முஸ்லிம் சமூகத்தின் சிந்தனையை மாற்றியமைக்க முயற்சித்தார்.

ஆங்கில மொழியில் கிறிஸ்தவ வேத நூல்கள் இருப்பதற்காக ஆங்கிலத்தைக் கற்பதைத் தவிர்ப்பது அறியாமை என்றும், தற்போது பைபில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அதற்காகத் தமிழையோ, கிறிஸ்தவம் பற்றிய நூல்கள் அரபு மொழியில் இருப்பதால் அரபையோ படியாதிருப்பதில்லை என்றும் எடுத்துக் காட்டி, மத மாற்றத்திற்குப் பயந்து ஆங்கிலத்தைக் கற்காதிருப்பது தவறு என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

பின்வரும் காரணங்களால் ஆங்கிலம் கற்பது அவசியம் என எடுத்துக் காட்டியுள்ளார்.

1. நீண்ட காலமாக முஸ்லிம் சமூகம் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்துள்ளபோதிலும், தற்போதுள்ள அரசியல், வர்த்தக சூழல் காரணமாக இலாபம் தரத்தக்கதான வர்த்தகத்தை தொடர்ந்து மேற்கொள்வதற்கு ஆங்கில மொழி அவசியமாகும்.

2. இந்நாட்டின் சட்டங்கள் ஆங்கில மொழியில் இயற்றப்படுகின்றன. அவற்றால் ஏற்படும் நலன்களை அறிந்து கொள்ளவும், அவற்றால் சமூகத்திற்கு தீமைகள் ஏற்படின் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் ஆங்கில அறிவு அவசியமானதாகும்.

3. நவீன விஞ்ஞான, மருத்துவ, பொறியியல், வரைபடவியல் சார்ந்த கலைகள் ஆங்கில மொழியிலேயே போதிக்கப்படுகின்றன. இவை, மனிதனின் உலகியல் நலன்களுக்கு மிக அவசியமான கலைகளாகும். அவற்றைக் கற்க ஆங்கில அறிவு அவசியமாகிறது.

4. அரச உத்தியோகங்கள் ஆங்கில மொழியறிவுடையோருக்கே வழங்கப்படுகின்றன. சம்பளம் பெறும் உத்தியோகங்கள் மட்டுமன்றி, கண்ணியத்திற்குரிய பதவிகளும் ஆங்கில மொழியறிவுடையோருக்கே வழங்கப்படுகின்றன.

ஆங்கில மொழியறிவின் அவசியத்தைப் பற்றி எடுத்துக்காட்டியதுடன் திருப்தியடையாது, அம்மொழியைப் புறக்கணித்த மக்கள் சமய மொழியாகிய அரபு மொழியையாவது கற்பதில் ஆர்வம் காட்டவில்லை என்பதையும் கவலையுடன் எடுத்துக் காட்டினார் (அப்துல் அஸீஸ், 1909).

***சமூகப் பணிகள்***

ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் தனது ஆரம்ப கால சமூகப் பணிகளை எம்.சி.சித்திலெப்பையுடன் இணைந்தே மேற்கொண்டுள்ளார். எம்.சி.சித்திலெப்பை தனது சமூகப் பணிகளைத் தனியாக நின்று மேற்கொள்வது சாத்தியமில்லை என உணர்ந்து 'ஜம்இய்யதுல் இஸ்லாமிய்யா' எனும் இயக்கத்தை 1886இல் கொழும்பில் தோற்றுவித்தார். இவ்வியக்கத்தின் செயலாளர் பொறுப்பு அஸீஸிடம் ஒப்படைக்கப்பட்டது. இவ்வியக்கத்தின் ஊடாக பின்வரும் பணிகளை நிறைவேற்ற அதன் தலைவர் சித்திலெப்பையுடன் இணைந்து உழைத்தார்.

கொழும்பு அரசாங்க வைத்தியசாலையில் மரணித்த, உரிமை கோரப்படாத முஸ்லிம்களின் ஜனாஸாக்களை இலங்கை அரசு, இஸ்லாமியக் கடமைகளை நிறைவேற்றாது அடக்கம் செய்தமையானது முஸ்லிம்களின் உள்ளத்தைப் புண்படுத்தியது, இவ்விடயம்

தொடர்பாக அரசுடன் தொடர்பு கொண்டு அந்த ஜனாஸாக்களை மருதானைப் பள்ளியூடாக அடக்கம் செய்வதற்கு 'ஜம்இய்யதுல் இஸ்லாமிய்யா' ஊடாக ஏற்பாடு செய்தார் (அமீன், 2010).

கொழும்பில் 1886இல் அம்மை நோய் ஏற்படுத்திய தாக்கத்தின் காரணமாக முஸ்லிம் இளம் பெண்கள், ஆண்களுடன் ஒன்றாகத் தடுத்து நிறுத்தப்பட்டனர். முஸ்லிம் பெண்களை ஆண்களுடன் பொது அறையில் தங்க வைப்பது மார்க்கத்துக்கு முரணானது என்பதை அரசுக்கு எடுத்துக் காட்டி மாற்று வழியைக் கையாளுமாறு 'ஜம்இய்யதுல் இஸ்லாமிய்யா' ஊடாக வற்புறுத்தினார் (அமீன், 2010).

அதேபோன்று கீழ்வரும் சேவைகளையும் 'ஜம்இய்யதுல் இஸ்லாமிய்யா' சங்கத்தினூடாக மேற்கொள்ள முயற்சி எடுத்து வெற்றி கண்டார். ஆவையாவன (அமீன், 2010).

தண்ணீர் வரியினால் கொழும்பு மக்கள் அவதிக்குள்ளாவது பற்றிக் கலந்துரையாடி அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

- வாரந்தோறும் ஹதீஸ் மஜ்லிஸ்களை மஸ்ஜித்களில் நடாத்தி, பொது மக்களின் மார்க்க அறிவை வளர்க்க நடவடிக்கை எடுத்தார்.
- வாரந்தோறும் நிகழ்த்தப்பட்ட பிரசங்கங்களைத் தொகுத்து முஸ்லிம் நேசனில் வெளியிட்டார்.
- மையித்து வீடுகளில் ஸலாம் சொல்வதற்கு நாற்பது தினங்களுக்கு முஸ்லிம் பெண்கள் செல்லும் வழக்கம் இருந்தது. இது மார்க்கத்துக்கு முரணானது என்பதால் 1888.11.26ஆம் திகதி கூடிய கூட்டத்தில் மூன்று நாளைக்கு அதிகமாக மையித்து வீடுகளில் ஸலாம் சொல்லக் கூடாது எனும் தீர்மானத்தை எடுத்து நடைமுறைப்படுத்தினார்.
- மார்க்க விதிமுறைகளை மீறி நடப்பவர்களை விசாரித்து தீர்ப்புகளை வழங்கி, மஸ்ஜித் நிருவாகத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தினார்.

மேலும் 1903இல் மருதானைப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினராக ஐந்து வருடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அதேவேளை இக்கால முடிவில் மேலும் ஐந்து வருடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

***இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றைத் தெளிவுபடுத்தல்***

சட்டவாக்க சபையில் தமிழ் பேசும் மக்களை ஒரு தமிழ் உறுப்பினர் பிரதிநிதித்துவம் செய்தார். 1880களில் சட்டவாக்க சபையில் சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படக் கூடிய சாத்தியக் கூறுகள் தென்பட்டபோது முஸ்லிம்கள் சட்டவாக்க சபையில் தாங்கள் முஸ்லிம் பிரதிநிதி ஒருவரால் பிரதிநிதித்துவம் செய்யப்படல் வேண்டும் என அடிக்கடி வேண்டுகோள் விடுத்தனர்.

இந்நிலையில் 1879இல் தமிழர்களை சட்டவாக்க சபையில் பிரதிநிதித்துவப்படுத்திய சேர் பொன்னம்பலம் இராமநாதன் முஸ்லிம்களின் பூர்வீகம், தென்னிந்தியா என்றும் அவர்கள் உண்மையில் தமிழ் பேசும் மக்களெனவும் அவர்கள் தமிழினத்திலிருந்து இஸ்லாத்துக்கு மதம் மாற்றப்பட்ட திராவிடர்கள் எனவும் கூறி, அதனை எதிர்த்தார். அத்துடன், இலங்கைவாழ் ஆய்வறிஞர்களின் கழகமான அரச ஆசியக் கழகத்தின் (Royal Asiatical Society) இலங்கைக் கிளையில் 'இலங்கைச் சோனகர் இன வரலாறு' ("The Ethnology of the 'Moor' of Ceylon") எனும் ஓர் ஆய்வுக் கட்டுரையையும் வாசித்தார். அதிலே முஸ்லிம்கள் தமிழரின் பரம்பரையினர் எனும் தனது வாதத்தை நிரூபிக்க முயன்றார்.

அப்துல் அஸீஸ் அவர்கள் சோனகர் சங்கத்தின் ஆதரவின் கீழ் இராமநாதனது இந்த ஆய்வுக் கட்டுரைக்கான திறனாய்வொன்றை வெளியிட்டார். அந்த நூலிலே அவர், இலங்கைச் சோனகர் ஒரு புறம்பான இனம் என்றும், அவர்கள் இலங்கையில் குடியேறிய அரேபியரின் சந்ததியினர் என்றும் நிரூபித்தார். இந்நூல் சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தால் தமிழில் வெளியிடப்பட்டுள்ளது.

***துருக்கித் தொப்பிப் போராட்டம்***

முதல் முஸ்லிம் அட்வகேட்டான அப்துல் காதர் அவர்கள் 1905 மே 02 ஆம் திகதி துருக்கித் தொப்பியணிந்து உயர் நீதிமன்றம் சென்ற போது நீதிமன்றத்துக்கு மரியாதை செலுத்துமுகமாக தொப்பியைக் கழற்றுமாறு உத்தரவிடப்பட்டார். இதனைச் செய்ய மறுத்த போது நீதிமன்றத்துக்குள் செல்ல அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் அப்துல் அஸீஸ் உட்பட முஸ்லிம்களின் தூதுக் கோஷ்டியொன்று பிரதம நீதியரசர் சேர் சார்ள்ஸ் லேயார்டை அவரது இல்லத்தில் சந்தித்து தங்களது முறையீட்டைச் சமர்ப்பித்தனர். ஆனால், உயர் நீதிமன்றம் அதன் முடிவில் எத்தகைய மாற்றத்தையும் செய்ய மறுத்தது. இதன் விளைவாக துருக்கித் தொப்பி விவகாரம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளவென ஒரு குழு நியமிக்கப்பட்டது.

இக்குழுவின் செயலாளராக ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் தெரிவு செய்யப்பட்டார். கொழும்பில் நடைபெறவுள்ள முஸ்லிம்களின் பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்துவதற்கு பம்பாய் நீதிமன்றத்தில் புகழ்பெற்ற வழக்கறிஞரான பரிஸ்டர் ரபிஉத்தீனை அழைப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. பம்பாய் நீதிமன்றத்தில் அவரது வாதத் திறமை காரணமாக "பம்பாய் நீதிமன்றத்தின் சிங்கம்" என அவர் புகழப்பட்டார்.

நாடளாவிய ரீதியில் சுமார் முப்பது பூர்வாங்கக் கூட்டங்கள் நடைபெற்றதன் பின்னர் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலுமிருந்தும் சுமார் 30,000 முஸ்லிம்கள் கலந்து கொண்ட ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் 1905 டிசெம்பர் 31 ஆம் திகதி மருதானைப் பள்ளிவாயல் மைதானத்தில் நடைபெற்றது. சட்டவாக்க சபை உறுப்பினர் டப்ளியூ.எம். அப்துர் ரஹ்மான் இக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் பரிஸ்டர் ரபிஉத்தீன் உரையாற்றும் போது, தாம் இந்திய உயர் நீதிமன்றத்தில், எப்பொழுதும் தலையணி அணிந்தே ஆஜரானதாகவும், அது பற்றி தான் ஒருபோதும் கேட்கப்படவில்லை என்றும், விக்டோரியா

மகாராணியின் முன் அவரது வீட்டுக் கோயிலில் துருக்கித் தொப்பியணிந்து தோன்றியதாகவும் கூறி, அவ்வாறிருக்க துருக்கித் தொப்பியணிந்து நீதிமன்றத்தில் ஆஜராவது எப்படி நீதிமன்றத்தை அவமதிப்பதாக நீதியரசர் சார்ள்ஸ் லேயார்ட் கருத முடியும் என்று தனக்கு விளங்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இத்தகு முயற்சிகள் முஸ்லிம்களின் குரலை இங்கிலாந்து வரை எட்டச் செய்தன. இந்நடவடிக்கையின் விளைவாக துருக்கித் தொப்பியணிந்து நீதி மன்றத்துக்குச் செல்லலாமென 1906 மார்ச் 16 இல் உயர் நீதிமன்றம் அனுமதித்தது. இப்போராட்டத்தை அட்வகேட் எம்.சி. அப்துல் காதர் ஆரம்பித்து வைத்த போதும், அதனை மக்கள் பிரச்சினையாகப் பரிணமிக்கச் செய்து அப்போராட்டத்தில் வெற்றி காண அயராதுழைத்தவர் ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸே ஆவார்.

**முடிவுரை**

19ஆம் நூற்றாண்டில் இலங்கை முஸ்லிம்கள் எதிர்கொண்ட சவால்களை அடையாளம் கண்டு அவற்றை திட்டமிடப்பட்ட அடிப்படையில் தீர்த்து வைத்ததில் அறிஞர் ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் அவர்களின் பங்களிப்புக்கள் அளப்பரியதாகும். இதற்கு அவர் எடுத்த முயற்சிகள், பிற அறிஞர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகள் இவற்றை இலகுவாகச் செய்து முடிக்க அவருக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தன. இதனால் முஸ்லிம்கள் பல்துறையிலும் முன்னேற்றங்காண வழிகோலியது. இன்றைய காலகட்டத்தில் இவர் போன்று பெயர் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு தனிமனித ஆளுமைகள் காணப்படவில்லை. பன்மைத்துவ சமூகத்தில் சமூகம்சார் பணிகளை மேற்கொள்ளும் தனிமனித ஆளுமைகள் மற்றும் நிறுவனங்களுக்கு ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் அவர்களின் இத்துறைசார்ந்த செயற்பாடுகள் பெரிதும் வழிகாட்டியாக அமையும் என்பதை இவ்வாய்வின் கண்டறிதல்கள் வெளிப்படுத்தியுள்ளன.

**உசாத்துணை நூல்கள்**


அப்துல் அஸீஸ், ஐ.எல்.எம். (1907). *திரு. இராமநாதனது இலங்கைச் சோனகர் இன வரலாறு எனும் ஆராய்ச்சிக் கட்டுரைக்கான ஒரு திறனாய்வு.* சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்.

அமீன், எம்.ஐ.எம். (1997). *இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் அறிஞர் சித்தி லெப்பை.* அல் ஹஸ்ஸனாத் பதிப்பகம்.

அமீன், எம்.ஐ.எம். (2010). *இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட முன்னோடிகள்.* அல் ஹஸ்ஸனாத் பதிப்பகம்.

சுக்ரி, எம்.ஏ.எம். (2010). *தொன்மைக்கான வரலாற்றுப் பாதை.* நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்.

மரிக்கார், ஏ.ஐ.எம்., ளாபிர், ஏ.எல்.எம்., மாக்கன் மாக்கர், ஏ.எச், (1981). ஸாஹிர், எம்.ஸீ.எம்.,(மொழி பெயர்ப்பு). சோனக இஸ்லாமிய கலாசார நிலையம்.

ஸித்தீக், ஸக்கியா. (2004). *ஸாஹிராவை உருவாக்கிய உத்தமர்கள்.* தமிழ் விழா ஏற்பாட்டுக் குழு

ஸித்தீக், ஸக்கியா. (2022). *நமது வரலாற்று ஆளுமைகள்.* றஹ்மதுல்லாஹ் பதிப்பகம்.

# இலங்கையின் மத்தியஸ்த சபைகள் எதிர்நோக்குகின்ற சவால்களும் அதற்கான தீர்வுகளும்: ஏறாவூர் மத்தியஸ்த சபையினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**தாஜுதீன் முஹம்மது முபாஸ்**
சமூக விஞ்ஞானங்கள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
mufasnmohamed@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதர்களுக்கிடையே இயல்பாகவே பிணக்குகள் ஏற்படுவது வழக்கமானதாகும் அவை சுமுகமான முறையில் தீர்க்கப்பட வேண்டியது அவசியமானது. இந்த வகையில் உலகளாவிய ரீதியில் இவ்வாறு மனிதர்களுக்கிடையே ஏற்படுகினற பிணக்குகளை தீர்ப்பதற்காக பல நிறுவனங்களை உருவாக்கி அதனை பல வழிமுறைகளை கையாண்டு தீர்த்துக் கொள்கின்றனர். அவற்றில் மிகப் பிரதானமானது மத்தியஸ்த செயற்பாடாகும். அதாவது இச்செயற்பாட்டின் மூலமாக இரு நபர்கள் அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையில் ஏற்படுகின்ற பிணக்குகளை தீர்த்துக் கொள்வதற்காக மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் செயற்படுத்தப்படுகின்றது. உலக நாடுகளில் குறிப்பாக சீனா (ஹொங்கொங்கில் பிரதான மத்தியஸ்த நிலையம்), இந்தியா (1996), சிங்கப்பூர் (1997), இலங்கை (1990), துபாய் போன்ற நாடுகளிலும், ஐரோப்பிய கண்டத்தில் பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி (1993), ஸ்வீடன் (1999), நோர்வே, பெல்ஜியம், நியூசிலாந்து நாடுகளிலும் அமெரிக்க கண்டத்தில் கனடா, அர்ஜென்டினா (2010), நெதர்லாந்து, கொரியா, ஹங்கேரியா, சவுதி அரேபியா போன்ற இன்னும் பல நாடுகளிலும் மத்தியஸ்த சபை இயங்கிக் கொண்டு வருகின்றன. அந்த வகையில் இலங்கையிலும் மத்தியஸ்த சபையின் பெறுமதி உணரப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாறு சமூகங்களுக்கிடையே ஏற்படுகின்ற பிணக்குகளை தீர்ப்பதனை நோக்காகக் கொண்டு 1988ஆம் ஆண்டின் 72ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நமது நாட்டில் மத்தியஸ்த சபை அறிமுகப்படுத்தப்பட்டது. இருப்பினும், மத்தியஸ்த சபைகள் பிணக்குகளைத் தீர்ப்பதில் பாரிய பங்களிப்பினை வழங்கினாலும் அவற்றின் செயற்திறனான செயற்பாட்டிற்கு பல காரணிகள் சவாலாகக் காணப்படுவதனை ஏறாவூர் பிரதேச மத்தியஸ்த சபையினை அடிப்படையாகக் கொண்டு கண்டறியப்பட்டுள்ளதுடன் அச்சவால்களை நிவர்த்தி செய்வதற்கான பரிந்துரைகளும் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் மத்தியஸ்த சபை மூன்றாம் நிலை மத்தியஸ்தராக இருந்து சமூகத்தில் ஏற்படும் பிணக்குகளை தீர்த்து சமாதானத்தினை ஏற்படுத்துவதற்கான, அல்லது கட்டியெழுப்புவதற்கான செயற்பாடுகளை முழுமையாக இச்சபையால் செய்ய முடியாதுள்ளது ஆகவே இவற்றினை வெளிக்கொண்டு வருவதற்காக இங்கு முதலாம் நிலைத் தரவுகளாக நேரடி அவதானம், நேர்காணல் மற்றும் குழு கலந்துரையாடல் மூலமாகவும் அதேபோன்று இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளம் என்பவற்றினூடாகவும் பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *மத்தியஸ்த சபை, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம், பிணக்குகள், மத்தியஸ்தம்*

## ஆய்வு அறிமுகம்

மனிதர்களுக்கிடையே இயல்பாகவே பிணக்குகள் ஏற்படுவது வழக்கமானதாகும். அவை சுமுகமான முறையில் தீர்க்கப்பட வேண்டியது அவசியமானது. இல்லையேனில் காலவோட்டத்தில் இப்பிணக்கானது மனிதர்களுக்கிடையில் பாரிய வன்முறையினை உருவாக்கி பல்வேறு வகையிலான இழப்புகளை ஏற்படுத்தக் கூடியது. ஆகவே ஏற்படுகின்ற பிணக்குகளை ஆரம்ப கட்டத்திலையே இனங்கண்டு தீர்க்க முயற்சிக்க வேண்டும். இந்த வகையில் உலகளாவிய ரீதியில் இவ்வாறு மனிதர்களுக்கிடையே ஏற்படுகின்ற பிணக்குகளை

தீர்ப்பதற்காக பல நிறுவனங்களை உருவாக்கி அதனை பல வழிமுறைகளைக் கையாண்டு தீர்த்துக் கொள்கின்றனர். அவற்றில் மிகப் பிரதானமானது மத்தியஸ்த செயற்பாடாகும். அதாவது இச்செயற்பாட்டின் மூலமாக இரு நபர்கள் அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையில் ஏற்படுகின்ற பிணக்குகளை தீர்த்துக் கொள்வதற்காக மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் செயற்படுத்தப்படுகின்றது. பொதுவாக விவகாரம் ஒன்றில், நடுவர் மூலம் பிணக்குகளை தீர்த்தல், வழக்காடும் முறை மற்றும் பேச்சுவார்த்தை செயற்பாட்டின் மூலம் சமரசம் செய்தல் ஆகிய பல வகையான செயற்பாடுகளில் திருப்தியற்ற நிலையை உணர்ந்த பின் உலக நாடுகள் மத்தியஸ்தம் எனும் செயற்பாட்டினை நோக்கி நகர்ந்ததாக மத்தியஸ்தம் தொடர்பான வரலாறுகள் குறிப்பிடுகின்றன. ஆசிய கண்டத்தில் சீனா (ஹொங்கொங்கில் பிரதான மத்தியஸ்த நிலையம்), இந்தியா (1996), சிங்கப்பூர் (1997), இலங்கை (1990), டுபாய் போன்ற நாடுகளிலும், ஐரோப்பிய கண்டத்தில் பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி (1993), ஸ்வீடன் (1999), நோர்வே, பெல்ஜியம், நியூசிலாந்து நாடுகளிலும் அமெரிக்க கண்டத்தில் கனடா, ஆர்ஜென்டினா (2010), நெதர்லாந்து, கொரியா, ஹங்கேரியா, சவுதி அரேபியா போன்ற இன்னும் பல நாடுகளிலும் மத்தியஸ்த சபை இயங்கிக் கொண்டு வருகின்றன (ஹஸ்மத் பஹீமா & மின்னதுல் சுஹிறா, 2021). அந்த வகையில் இலங்கையிலும் மத்தியஸ்த சபையின் பெறுமதி உணரப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த சபையின் மூலமாக இலங்கையில் ஒரு பல்லினமக்களைக் கொண்ட நாடு என்ற வகையில் ஒவ்வொரு சமூகத்தினை பொறுத்து பிணக்குகளும் வேறுபட்ட கோணத்தில் வெளிப்படுத்தப்படுகின்றது. இவ்வாறு சமூகங்களுக்கிடையே ஏற்படுகின்ற பிணக்குகளை தீர்ப்பதனை நோக்காகக் கொண்டு 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நமது நாட்டில் மத்தியஸ்த சபை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி நாட்டின் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் ஒரு மத்தியஸ்த சபை நிறுவப்பட்டுள்ளது. மத்தியஸ்த சபைக்குத் தலைவர் ஒருவர் நியமிக்கப்படுவார், மேலும் அவருக்கு கீழ் பல மத்தியஸ்த உறுப்பினர்கள் இருப்பார்கள். ஒரு சர்ச்சையைத் தீர்க்க மூன்று மத்தியஸ்தர்கள் அடங்கிய குழு நியமிக்கப்படும். இங்கு மத்தியஸ்த சபையின் பங்கு என்னவென்றால், இரு தரப்பினரையும் வரவழைத்து அவர்களின் சர்ச்சைக்கான காரணங்கள் குறித்து ஆலோசனை செய்தல் மற்றும் சர்ச்சைக்குத் தீர்வு காண தேவையான உதவிகளை வழங்குதல் என்பவையாகும் (உதேனி பெரேரா, 2021). இவ்வாறு இலங்கையில் உருவாக்கப்பட்ட மத்தியஸ்த சபை மூலமாக நீதிமன்றச் செயற்பாட்டை எளிதாக்கும் நோக்கத்துடன் பிணக்குளைத் தீர்க்கும் பிறிதோரு வழிமுறையொன்றாக நீதிமன்றங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற பிணக்குகளில் சிறு பிணக்குளைத் தீர்ப்பதற்காகத் தயார் செய்யப்பட்ட ஓர் நிறுவன ரீதியான அமைப்பாக அறிமுகம் செய்யப்பட்டது. அந்த அடிப்படையில் இன்றுவரையில் இலங்கை முழுவதிலும் 329 பிரதேச செயலாளர் பிரிவுகளில் தாபிக்கப்பட்டுள்ள மத்தியஸ்தர்கள் குழாம்களில் சுமார் 8266 மத்தியஸ்தர்கள் சுயேச்சையுடன் பணி புரிகின்றனர் (நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, n.d).

இவ்வாறு காணப்படுகின்ற மத்தியஸ்த சபைகளை நிர்வகிப்பது மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவாகும். இவ்ஆணைக்குழு 05 உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுடன் அவர்கள் அதிமேதகு ஜனாதிபதியால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம்

நியமிக்கப்படுகின்றனர் (நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, n.d). இவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் மூலமாகவே மத்தியஸ்த சபைகளின் அங்கத்தவர்கள் நியமிக்கப்படுதல் முதல் பணிநீக்கம் வரையான நடவடிக்கைகளை செயற்படுத்தும் அதிகாரம் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் ஒரு மத்தியஸ்த சபையானது சம்பந்தப்பட்ட தரப்புக்களின் சார்பாக முடிவுகளை எடுக்கவோ அல்லது தவறான தரப்பிற்குச் எதிராக தீர்ப்பளிக்கவோ அல்லது ஒரு தரப்பு தவறு என்று நிரூபிக்கவோ செயற்படுவதில்லை. மாறாக இரு தரப்பினருக்கும் இடையிலான சமநிலையை ஏற்படுத்தி, அந்த இரு தரப்பினரும் ஒரு உடன்படிக்கைக்கு வருவதற்கு உதவுவதே அதன் பணியாகும் (உதேனி பெரேரா, 2021). இப்பணியினை மேற்கொள்வதற்காக மத்தியஸ்த சபைகள் அனைத்திற்கும் பிணக்குகள் பொதுமக்கள் மூலமாக (சுயவிருப்புடன் தாமாகவும்), பொலிஸ் நிலையங்களில், நீதிமன்றங்களிலிருந்து (வழக்கு தாக்கல் செய்யும் அல்லது முறைப்பாடு செய்யும் பிரதேச எல்லைக்குட்பட்ட மத்தியஸ்த சபைகளிற்கும்) வங்கிகள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்கள் ஆகிய மேற்கூறிய நான்கு வழிமுறைகளின் ஊடாக மத்திய சபையை நோக்கி பிணக்குகள் கொண்டுவரப்படுகின்றன. மேலும் இங்கு நிதி தொடர்பான, கடன் தொடர்பான பிரச்சினைகள், காணிப் பிரச்சினைகள், வன்முறை தொடர்பானவை, தாக்குதல், அவதூறு போன்றவைகளும் இன்னும் சில சிறிய பிரச்சினைகள், திருமண கொடுக்கல் வாங்கலுடனான பிரச்சினைகள், அபகரிப்பு செய்தல், உரிமை மீறல்கள் தொடர்பான பிரச்சினைகள் என பல வகையான சமூக பிரச்சினைகள் சபைக்கு ஆற்றுப்படுத்துவதற்கு கொண்டு வரப்படுகின்றன (ஹஸ்மத் பஹீமா & மின்னதுல் சுஹிறா, 2021). இவைகளை சமாதானப்படுத்தும் செயற்பாடுகளையே மத்தியஸ்த சபை மேற்கொள்கின்றது.

அண்மைக்காலங்களில் மத்தியஸ்த சபைகளிடம் ஆற்றுப்படுத்தப்படுகின்ற பிணக்குகளின் அதிகரிப்பானது சமுதாயம் தமது பிணக்குகளைத் தீர்த்துக்கொள்வதற்கு இலகுவான மற்றும் குறைந்த செலவுப் பொறிமுறையொன்றாக மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளமையை சான்றுபடுத்தப்படுகின்றது. இருப்பினும் மத்தியஸ்த சபையானது சமூகத்தில் காணப்படுகின்ற பிணக்குகளை தீர்க்கின்ற செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இச்சபையானது பல சவால்களை எதிர்கொள்கின்றது. குறிப்பாக மத்தியஸ்தர்களின் கல்வித் தகைமையில் குறைபாடு காணப்படுகின்றமை, இடவசதிகளின் பற்றாக்குறை, மத்தியஸ்தர்கள் போதாமை மற்றும் அவர்களின் இடைவிலகளும், பெண் மத்தியஸ்தர்களின் குறைபாடு, இரண்டாம் தரப்பினை அழைப்பதிலுள்ள குறைபாடு, மத்தியஸ்தர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி போதாமை, மத்தியஸ்த செயற்பாடுகளின் போது பாதுகாப்பு ஏற்பாடு இன்மை முதலிய சவால்களை மத்தியஸ்த சபைகள் எதிர்கொள்கின்றன என்பதனை ஏறாவூர் மத்தியஸ்த சபையினை மையப்படுத்திய வகையில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு மேற்கூறப்பட்ட சவால்கள் வெளிக்கெண்டுவரப்பட்டதுடன் அதற்கான பரிந்துரைகளும் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

**ஆய்வு இடைவெளி**

முன்னைய காலங்களில் ஆய்வு தலைப்புடன் தொடர்புடைய ஆய்வுகள் சிலதே செய்யப்பட்டுள்ளது. அவற்றில் ஏறாவூரின் மத்தியஸ்த சபையினை அடிப்படையாகக் கொண்டு எந்தவோரு ஆய்வுகளும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் இலங்கையின் மத்தியஸத்த சபை தொடர்பாக தமிழ் மொழி மூலமான ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. ஆகவே இவ்வாறான இடைவெளியினை பூரணப்படுத்தும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

சமூகத்தில் மோதல் இயல்பாகவே ஏற்படுகின்றன. அதற்கு பல காரணங்கள் செல்வாக்கு செலுத்துகின்றது. அவ்வாறான காரணங்கள் அதிகமாக மோதலை ஏற்படுத்துவதுடன் இதனால் சமூகத்தில் பாரிய இழப்புகள் ஏற்படுகின்றது. இவ்வாறான நிலையினை பாரிய இழப்புகள் ஏற்படாமல் சமாதானத்தை ஏற்படுத்த மத்தியஸ்த சபைகள் பாரிய பங்களிப்பினை ஆற்றினாலும் அவற்றின் செயற்திறனான செயற்பாட்டிற்கு பல காரணிகள் சவாலாக காணப்படுகின்றன. குறிப்பாக மத்தியஸ்தர்களின் கல்வித் தகைமையில் குறைபாடு காணப்படுகின்றமை, இடவசதிகளின் பற்றாக்குறை, மத்தியஸ்தர்கள் போதாமை மற்றும் அவர்களின் இடைவிலகளும், பெண் மத்தியஸ்தர்களின் குறைபாடு, இரண்டாம் தரப்பினை அழைப்பதிலுள்ள குறைபாடு, மத்தியஸ்தர்களுக்கு வழங்கப்படும் பயிற்ச்சி போதாமை, மத்தியஸ்த செயற்பாடுகளின் போது பாதுகாப்பு ஏற்பாடியின்மை முதலிய சவால்களை மத்தியஸ்த சபைகள் எதிர்கொள்கின்றன இந்நிலையில் மத்தியஸ்த சபை மூன்றாம் நிலை மத்தியஸ்தராக இருந்து சமூகத்தில் ஏற்படும் பிணக்குகளை தீர்த்து சமாதானத்தினை ஏற்படுத்துவதற்கான அல்லது கட்டியெழுப்புவதற்கான செயற்பாடுகளை முழுமையாக இச்சபையால் செய்ய முடியாமலுள்ளது என்பதை ஆய்வு பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு வினாக்கள்**

1. மோதல் தீர்வு மற்றும் சமாதானத்தினை கட்டியெழுப்புவதில் மத்தியஸ்த சபைகளின் வகிபாகம் எத்தகையவை?
2. மத்தியஸ்தர்களின் தகைமை மற்றும் பயிற்சி என்பவற்றில் உள்ள குறைபாடுகள் எவை?
3. மத்தியஸ்தர்கள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராக இருந்து எதிர்நோக்கும் சவால்கள் எவை?

**ஆய்வின் நோக்கங்கள்**

1. மோதல் தீர்வு மற்றும் சமாதானத்தினை கட்டியெழுப்புவதில் மத்தியஸ்த சபைகளின் வகிபாகத்தினை இனங்காணுதல்.
2. மத்தியஸ்தர்களின் தகைமை மற்றும் பயிற்சி என்பவற்றில் உள்ள குறைபாடுகள் மதிப்பிடுதல்.
3. மத்தியஸ்தர்கள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராக இருந்து எதிர்நோக்கும் சவால்களை வெளிக்கொண்டு வருதல்.

**ஆய்வுப் பிரதேசம்**

இலங்கையில் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டமானது பல்லின மக்கள் சமூக அமைப்பினைக் கொண்டதாகும். அதாவது இங்கு தமிழர், முஸ்லிம், சிங்களவர் முதலிய பிரதானமான இனக்குழுக்கள் காணப்படுகின்றனர். இம்மாவட்டத்தில் உள்ள பிரதேசமே ஏறாவூர். இந்த பிரதேசத்தினுடைய புவியியல் எல்லைகளானது வடக்கே வங்கக் கடலினையும், கிழக்கிலே ஆறுமுகத்தான் குடியிருப்பினையும், மேற்கே செங்கலடி பிரதேசத்தினையும், தெற்கே வாவிக்கரையினையும் (ஏரி) நாற்த் திசை பூர்வீக எல்லைகளாகக் கொண்ட முக்கியத்துமிக்க பிரதேசம் ஏறாவூராகும் (E-Eravur, 2023). இங்கு நிர்வாக அலகாக ஏறாவூர் பிரதேச செயலகமும் அதில் மொத்தமாக 15 கிராமசேவகர்பிரிவினைக் கொண்டு அமையப்பெற்றுள்ளது.

**ஆய்வு முறையியல்**

ஒரு ஆய்வினை மேற்கொள்வதற்கு ஆய்வு முறையில் மிக முக்கியமானதாகும். அந்த வகையில் இவ்வாய்வானது பண்புசார் ஆய்வு முறையினை அடிப்படையாகக் கொண்டது. முதலாம் நிலை தரவுகள், நேரடி அவதானிப்பு, நேர்காணல், குழுக்கலந்துரையாடல், இலங்கையின் அரசியல் திட்டம் மூலமாக பெறப்பட்டது. இங்கு நேர்காணலானது மத்தியஸ்த சபையின் பயிற்சியாளர், ஏறாவூர் மத்தியஸ்த சபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் மத்தியஸ்த சேவைக்காக வருகை தந்த தரப்பினர்களுக்கிடையிலும் இச்சமூகம் சார்ந்த முக்கிய அமைப்புக்கள் மற்றும் பிரதேச முக்கியஸ்தர்கள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலை தரவுகளாக புத்தகங்கள், ஆய்வு கட்டுரைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் இணையதளங்கள் அத்தோடு மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு வெளியிட்ட ஆவணங்கள் மூலமாகவும் தரவுகள் பெறப்பட்டுள்ளது. ஆகவே முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகளினூடாக பெற்ற தரவுகள் இங்கு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

**கண்டுபிடிப்புக்களும் கலந்துரையாடலும்**

தற்போது ஏறாவூர் பிரதேச மத்தியஸ்த சபையானது பிணக்குகளைத் தீர்ப்பதில் பல சவால்களை எதிர்நோக்குகின்றது என்பதனை கண்டுபிடிப்பதற்காக இவ்ஆய்வானது நேரடி அவதானம், நேர்காணல் மற்றும் குழு கலந்துரையாடல் மூலமாகவும் அதேபோன்று இதனோடு தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளம் என்பவற்றினூடாக பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட விடயங்களை பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

***மத்தியஸ்தர்களின் கல்வித் தகைமையில் குறைபாடு காணப்படுகின்றமை***

எந்தவோரு நிறுவன அமைப்பாயினும் அதற்கான ஊழியர்களை தெரிவு செய்வதற்கான கல்வித்தகைமை காணப்படுகின்றது. அந்த வகையில் மத்தியஸ்தரின் தெரிவுக்கான தகைமையாக இங்கு கா.போ.த சாதாரண தரத்தினை மட்டும் கருத்திற் கொள்வதனால்

அண்மைக்காலங்களில் அவர்களின் தகைமையிலும் விமர்சனப்போக்கு காணப்படுகின்றது. இத்தகைமை இருப்பதனால் அவர்களினால் சில சட்டவிளக்கங்கள், மத்தியஸ்த செயற்பாட்டுக்கான நுட்பமுறைகளைக் கையால்வதில் சிக்கல் நிலையினை அவதானிக்கலாம் அதிலும் பட்டப்படிப்பினை முடித்தவர்களும் இதில் தடுமாறுவதுமுண்டு. மேலும் சிலர் பிணக்காளிகளுடன் அணுகுகின்ற முறையினை பார்க்கின்ற போது கல்வித்தகைமையில் உள்ள குறைபாட்டினை எடுத்துக்காட்டுகின்றது. இங்கு ஆவணங்கள் கையாளப்படுகின்றது இதனால் எல்லோரும் எழுதவேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்படுகின்றனர். கல்வித்தகைமையில் குறைந்தவர்கள் மற்றும் வயது முதிந்தவர்களால் சரியாக எழுத முடியாதவர்களாக இன்னும் காணப்படுகின்றனர். இதனால் நாங்கள் எல்லாம் சரிபார்த்துத்தான் அனுப்புவோம் (நேர்காணல், 2023). ஆகவே கல்வித்தகைமையின் குறைபாடு காரணமாக மத்தியஸ்தர்களுக்கிடையே பல விமர்சனங்கள் எழுந்துள்ளது.

***இடவசதிகளின் பற்றாக்குறை***

மத்தியஸ்த சபை செயற்பாடுகளை மேற்கொள்ள உத்தியோகபூர்வ கட்டிடவசதிகளின்மை பிரதான பிரச்சனையாகும். எந்தவொரு அமைப்பினது செயற்பாடுகளை மேற்கொள்ள இடவசதிகள் மிக முக்கியமான ஒன்றாகும். அந்த வகையில் மத்தியஸ்த சபையின் செயற்பாடுகளை மேற்கொள்ள இடவசதியின்மையால் மத்தியஸ்தர்களும், பிணக்காளிகளும் அசோகரியங்களை எதிர்கொள்கின்றனர். ஏறாவூர் மத்தியஸ்த சபையானது நகர சபைக்கு சொந்தமான கலாசார மண்டபத்தின் மேல் தளத்திளேயே தற்போது செயற்பட்டு வருகின்றது. இதற்கு முன்னர் பாடசாலை ஒன்றில் நடைபெற்றது (நேர்காணல், 2023). பொதுவாக மத்தியஸ்த சபையானது ஏதாவது அரச சொத்துக்களிலே நடைபெறுகின்றது (பாடசாலைகள், சமயஸ்தலங்கள்) இவற்றில் நடைபெறுகின்ற போதும் இச்சபையானது சவால்களை எதிர்கொள்கின்றது. முன்னர் பாடசாலையின் மண்டபத்தினை தந்தார்கள். வசதிகள் இல்லாமையினால் பல சிக்கல் ஏற்பட்டது குறிப்பாக தங்களுக்கான போதியளவு மேசை, கதிரைகள் இல்லாமையினால் கஷ்டப்பட்டோம். அத்தோடு அங்கு வருகின்ற பிணக்காளிகள் அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்வதும் இப்பாடசாலையினை மத்தியஸ்த நடவடிக்கைக்கு தொடரமுடியாமல் போய்விட்டது அவ்வாறே தற்போது கலாசார மண்டபத்திலும் வயதானவர்கள் வருகின்ற போது கீழ்தளத்திற்கு வந்தே பிணக்குகளை கவனிக்க முடிகின்றது (நேர்காணல், 2023). மேலும் ஆவணங்களை பாதுகாப்பாக வைக்கக்கூடிய நிலையான இடவசதியின்மையால் தவிசாளரே ஆவணங்களை கொண்டு செல்லும் நிலை காணப்படுகின்றது. ஆகவே அரச சொத்துக்களையே மத்தியஸ்த சபையின் செயற்பாட்டுக்காக உபயோகிப்பதானது அந்த குறித்த அரச நிறுவனத்தின் நடவடிக்கைள், விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு அவர்களின் விருப்பு - வெறுப்புகளை அறிந்து செயலாற்றவேண்டி இருப்பதையும் அறிய முடிகின்றது. அதன் காணமாக மத்தியஸ்த நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்ள முடியாதுள்ளதாக கூறப்படுகின்றது.

***மத்தியஸ்தர்கள் எண்ணிக்கை போதாமை மற்றும் அவர்களின் இடைவிலகளும்***

அண்மைக்காலத்தில் மத்தியஸ்த சபையினை நோக்கி அதிகமான பிணக்குகள் வருவதனால் அதனை குறுகிய காலத்தில் தீர்ப்பதற்கான ஆளணிகளின் பற்றாக்குறை காணப்படுகின்றமை

பிணக்குகளை சமாதானப்படுத்துவதற்கான காலம் நீண்டு செல்லுகின்ற போக்கு காணப்படுகின்றது ஆகவே மத்தியஸ்தர்களின் தேவைகளுக்கு ஏற்ப ஆளணியினர் உள்ளீர்ப்பு செய்யப்பட வேண்டும். மேலும் இவ்வாறு மத்தியஸ்தராக தெரிவு செய்யப்பட்ட எல்லோரும் வருகைதருவதில்லை என்று கூறப்படுகின்றது. அதிலும் மத்தியஸ்த நடவடிக்கைகளில் பங்கேற்பதில் போடுபோக்குத்தன்மை காணப்படுவதாகவும் தொடராக மூன்று அமர்வுகளுக்கு வருகைதாறாவிடின் அவர் பதவி இழக்கப்படுகின்ற நடைமுறை காணப்படுகின்றது இருப்பினும் இது அவர்களுக்கு மிகப் பெரிய பாதிப்பை செலுத்துவதில்லை (நேர்காணல், 2023). காலவோட்டத்தில் பலர் இயல்பாகவே மத்தியஸ்தர் பதவியிலிருந்து இடைவிலகுகின்ற போக்கு அதிகமாக காணப்படுகின்றது. ஏறாவூர் மத்தியஸ்த சபைக்கு 2022ஆம் ஆண்டு 31 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அதில் இன்று 23 பேர் மாத்திரமே வருகை தருகின்றனர். சிலர் வெளிநாடு சென்றுவிட்டனர், வேலைச் சுமை எனக்கூறியும் விலகிவிட்டனர் (நேர்காணல், 2023). அதன் காரணமாக குறித்த ஒரு நாளில் பல பிணக்குகள் வருகின்ற போது அதனை சமாளிக்க முடியாத நிலைக்கு தள்ளப்படுகின்றனர். பொதுவாக இன்று இடைவிலகள் வருடத்திற்கு அண்ணளவாக 3 பேர் இடைவிலகிச் செல்கின்றனர். இது மத்தியஸ்த சபைக்குறிய பாரிய இழப்பு என்றுதான் குறிப்பட வேண்டும் (நேர்காணல், 2023). ஆகவே இடைவிலகள் மூலமாக மத்தியஸ்த சபையின் செயற்றிறனான சேவைக்கு பாதகமாகவுள்ளதனை அவதானிக்க முடிகின்றது.

***பெண் மத்தியஸ்தர்களின் குறைபாடு***

தற்காலத்தில் உலகளவில் பெண்களின் சமத்துவ நிலை அதிகமாக பேசப்படுவதுடன் பெரும்பாலான துறைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் போதாமை பாரிய சவாலாக நோக்கப்படுகின்றது. அதிலும் தெற்காசிய நாடுகளில் பெண்களுடைய பிரதிநிதித்துவமானது பல துறைகளில் போதாத நிலை காணப்படுகின்றது அந்த வகையில் மத்தியஸ்த சபையிலும் பெண்களுடைய பங்கேற்பு மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலையே காணப்படுவதாக கூறப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் 8 பெண்களே பங்கேற்கின்றனர். பெண்கள் குறைவாக இருப்பதனால் பெண்கள் சார்பான பிணக்குகளை முழுமையாக தீர்ப்பதில் சிரமங்களை சந்திக்கின்றோம் (நேர்காணல், 2023). எனக் கூறப்பட்டது. பெண்கள் சார்பான பிணக்குகள் அதிகம் வருகின்றது. சில விடயங்களில் ஆண்களால் கதைக்கமுடியாதுள்ளது. மத்தியஸ்தர்களாக இருக்கின்ற பெண்களும் வேலைச்சுமை, வீட்டுச் சூழல் என்பன அவர்களின் வருகையில் தாக்கம் செலுத்துகின்றது (நேர்காணல், 2023). ஆகவே, பெண்களின் தேவைப்பாடானது கட்டாயமானதாக உணரப்படுகின்றது. குறிப்பாக 33% க்கு மேல் மத்தியஸ்த சபையில் பெண்கள் இருக்கவேண்டும் என்ற முன்மொழிவினை அமைச்சிடம் சமர்ப்பித்துள்ளோம். ஆயினும் அதற்கான ஏற்பாடுகள் வரவில்லை ஆகவே பெரும்பாலான சபைகளில் பெண்களின் பங்குபற்றுதல் குறைவாக உள்ளது (நேர்காணல், 2023). இங்கு பெண்களின் தேவை உணரப்படுவதனால் பெண்கள் மத்தியஸ்தராக வருவதற்கு பலமான ஊக்குவிப்புக்கள், விழிப்புணர்வுகள் வழங்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

***அதிகமான பிணக்குகள் நிலுவையில் உள்ளமை***

தற்போதய நீதித்துறையின் சுமையும், பல ஆண்டுகளாக தொடரும் வழக்குகளின் பெரும் தேக்கமும் நீதித்துறையின் நற்பெயரைக் கடுமையாகக் கெடுத்து வருகிறது. எனவே, உள்ளூர் மோதல்களுக்கு சமூக மத்தியஸ்தம் மிகவும் நம்பகமான தீர்வாக கருதப்படுகின்றது. இலங்கை அரசாங்கம் நாடு முழுவதிலும் சமூக மத்தியஸ்த சபை முறையை அறிமுகப்படுத்தியுள்ளதுடன், சர்ச்சைகளை திறம்பட தீர்ப்பது, நீதிமன்ற அமைப்பில் வழக்கு பின்னடைவுகளை குறைத்தல், சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்துதல் (Abdul Jabbar & Manivasagar, 2012). முதலியவற்றினை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது இருப்பினும் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் நீதிமன்றங்களிலும் அதிகமான வழக்குகள் நிலுவையிலுள்ளது. மத்தியஸ்த சபையினை நோக்கும் போது பல பிணக்குகள் இன்னும் நிலுவையில் உள்ளதனை அவதானிக்க முடிகின்றது. அதற்கு பிரதானமாக காரணங்களாக குறிப்பிடுவது ஆரம்ப காலங்களில் மத்தியஸ்த சபையானது மாதம் ஒன்றிற்கு நான்கு தடவைகள் கூடியது ஆனால் இப்பொருளாதார நெருக்கடியின் பின்னரான காலப்பகுதியில் மாதம் ஒன்னிற்கு இரண்டு தடைவைகளே கூடுகின்றமையானது (நேர்காணல், 2023). இயல்பாகவே பிணக்குகளின் நிலுவையினை அதிகரிக்க காரணமாகவுள்ளதுடன் அதனை தீர்ப்பதற்கான காலம் நீண்டதாகவும் காணப்படுவது பாரியதோரு சவாலாக எடுத்துரைக்கப்பட்டது.

***இரண்டாம் தரப்பினை அழைப்பதிலுள்ள குறைபாடு***

அதாவது இரண்டாம் தரப்பினை குறித்த பிணக்கு தொடர்பாக விசாரணை செய்ய அழைக்கும் வழிமுறையிலுள்ள சிக்கல் நிலை ஆகவே முதலாம் தரப்பினால் பிணக்கினை கொண்டு வருகின்ற போது இரண்டாம் தரப்புக்கு தெரியப்படுத்தியும் அவர்களால் குறித்த பிணக்கு சார்ந்து வருகை தருவதில் அசமந்தப் போக்கு காணப்படுகின்றது. அதிலும் நேரடியாக வரும்படி ஆணை கிராம சேவகரின் ஊடாக மத்தியஸ்த சபையினால் அனுப்புவோம் (நேர்காணல், 2023). இவ்வாறு முயற்சித்தும் வரவில்லையாயின் இந்த பிணக்கினை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு மத்தியஸ்த சபைக்கு அதிகாரமுள்ளதே தவிர இரண்டாம் தரப்பினரை கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் எதுவுமில்லை என்பதை அறிய முடிகின்றது. இந்த சமாதான பொறிமுறையானது தற்காலிகமானது. ஆதலால் இரண்டாம் தரப்பினை அழைக்கின்றபோது 65% மானவர்கள் அழைப்பினை ஏற்றுக்கொண்டு வருகை தருகின்றனர் அதனால் 90% தமான பிணக்குகளை எங்களால் தீர்த்துக் கொள்ள முடிகின்றது. 35% மானவர்களிடமிருந்து எந்தவிதமான பதில்களும் இல்லையென்பது கவலைதருகின்றது (நேர்காணல், 2023) எனக் கூறுகின்றனர். இதனை நோக்கும் போது மத்தியஸ்த சபைக்கு வருகின்ற பெரும்பாண்மையான பிணக்குகள் தீர்க்கப்பட்டுள்ளமை உறுதியாகின்றது. ஆயினும் இரண்டாம் தரப்பின் வருகையில் அசம்மந்தப்போக்கு காணப்படுவதுடன் அவர்கள் வருகைதராதவிடத்து விசாரணைக்கு அழைப்பதற்கான ஏற்பாடுகள் மத்தியஸ்த சபைச்சட்டத்தில் இல்லாமை பாரிய குறைபாடாக நோக்கப்படுகின்றது. அத்துடன் நீதிமன்றத்தால் வருகின்ற பிணக்குகள் பெயரைக் குறிப்பிட்டு வருகின்றது ஆனால் விலாசத்தினை குறிப்பிட்டு வருவதில்லை, அல்லது சிலதில் பிணக்கினை குறிப்பிடாமலும்

வருகின்றது. இதனால் அடையாளப்படுத்துவது மற்றும் அழைப்பாணை அனுப்புவது கடினம். ஆதலால் அதனை திருப்பி நீதிமன்றத்துக்கே அனுப்புதல் இதனால் காலதாமதம் ஏற்படுகின்றது (நேர்காணல், 2023). இவ்வாறான செயற்பாடுகளினால் பிணக்குகளைத் தீர்ப்பதிலும் இரண்டாம் தரப்பினை அடையாளப்படுத்தி அழைப்பாணை அனுப்பவதிலும் மத்தியஸ்த சபைக்கு சிக்கல் தோன்றுகின்றது.

*மத்தியஸ்தர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி போதாமை*

மத்தியஸ்த சபையினை பொருத்தமட்டில் மத்தியஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர்களுக்கு மத்தியஸ்த நடவடிக்கைகள் தொடர்பாக 5 நாட்கள் மாத்திரமே தொடர்ச்சியான பயிற்சி வழங்கப்படுகின்றது. புதிதாக தெரிவானவர்களுக்கு 5 நாட்கள் வதிவிடப் பயிற்சியே வழங்குகின்றோம். அதற்கு பின்னர் அவர்களுக்கு பயிற்சி தேவைப்படுகின்றது ஆயினும் அதனை நடத்துவதற்கான சட்ட ஏற்பாடுகளும் நிதி வசதிகளும் இன்மையினால் பயிற்சிப் பட்டறைகளை ஏற்பாடு செய்ய முடியாதுள்ளது (நேர்காணல், 2023). குறித்த பயிற்சியின் பின்னரான காலப்பகுதியில் மத்தியஸ்தர்கள் பல சவால்களை நடைமுறையில் எதிர்கொள்கின்றனர். அவ்வாறான சவால்களை வெளிக்கொண்டு வருவதுடன் மத்தியஸ்தத்தின் போது எழுகின்ற சந்தேகங்கள் மற்றும் அனுபவங்களை மற்றய மத்தியஸ்தர்களுடன் பகிர்ந்து அப்பிணக்கு போன்று எதிர்காலத்தில் வருகின்ற போது அதனை இலகுவாக தீர்க்கக்கூடிய திறனை பயிற்சி பட்டறைகள் மத்தியஸ்தர்களுக்கு வழங்கும் மேலும், மத்தியஸ்தர்களுக்கு தொடராக பயிற்சிகளை மேற்கொள்வதற்கான பயிற்சியாளர்கள் போதாதுள்ளது. இலங்கை முழுவதும் 22 மத்தியஸ்த பயிற்சியாளர்களே உள்ளனர் இதில் 4 பேர் மட்டுமே தமிழ் மொழி மூலமானவர்களாக காணப்படுகின்றனர் இவர்களுக்கு இரண்டு மாவட்டங்கள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளமையினால் அவர்களால் தொடர்பயிற்சி வழங்குவதில் பாரிய சிரமம் காணப்படுகின்றது (நேர்காணல், 2023).

*மத்தியஸ்த செயற்பாடுகளின் போது பாதுகாப்பு ஏற்பாடுகளின்மை*

மத்தியஸ்த சபையின் நடவடிக்கையின் போது குறித்த பிணக்குகள் தீர்க்கப்படும் பிரதேச எல்லைக்குள் எந்தவிதமான பதுகாப்பு ஏற்பாடும் காணப்படுவதில்லை, சில சந்தர்ப்பங்களில் பிணக்குகள் வாய்தக்கமாகி மத்தியஸ்தர்களுக்கு வருகின்ற அச்சுறுத்தல்களுக்கும், பிணக்காளிகளுக்குள் வருகின்ற முரண்பாடுகளையும் அவ்விடத்தல் பாரிய இழப்புகளாக மாறுவதனை தடுப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் காணப்படுவதில்லை குறித்த ஒரு பிணக்கினை தீர்ப்பதற்காக இருதரப்பினையும் அழைத்து பேசும் போது வாய்தக்கம் அதிகரித்து ஒரு தரப்பு மற்றைய தரப்பிற்கு கதிரையை கொண்டு அடித்தார் (நேர்காணல், 2023). இவ்வாறான நிலையின் போது என்ன செய்வது என்று புரியாத நிலை ஒரு மத்தியஸ்தின் போது ஏற்பட்டது என்பதை பகிர்ந்து கொண்டார். இதன் போது பொலிஸ் உத்தியோகத்தர்களை சிவில் உடையில் மத்தியஸ்த செயற்பாடு நடைபெறும் பிரதேசத்திற்கு வெளியே நிறுத்தி வைக்கமுடியும் (நேர்காணல், 2023) என்பதனை குறிப்பிட்டுக்காட்டுகின்றனர். இதனால் சிறிய நிலையில் உள்ள பிணக்குகள் பெரிய வன்முறையாக மாறுவதனை குறைக்க முடியும்.

**பரிந்துரைகள்**

- மத்தியஸ்த சபை மற்றும் மத்தியஸ்த செயல்முறை பற்றிய அறிவை வழங்குவதும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவதும் முக்கியமானது. அதனை பாடசாலை, பல்கலைக்கழக பாடத்திட்டங்களில் உள்வாங்குவதுடன் இந்நிறுவனங்களில் மாதிரி அமைப்புக்களை உருவாக்கி நடைமுறைப்படுத்த முடியும். இது அதிக நன்மையை ஏற்படுத்தும்.
- மத்தியஸ்தர்களின் தெரிவுக்கான கல்வித் தகைமையின் நிலையில் உரியமாற்றங்களை கொண்ருவருதல்.
- மத்தியஸ்தர்கள் எண்ணிக்கை குறித்த மத்தியஸ்த சபையின் சனத்தொகைக்கு ஏற்ப தெரிவு செய்யப்பட வேண்டும். மேலும் மத்தியஸ்தர்களின் இடைவிலகளை குறைப்பதற்கான நிபந்தனைகளை வரையறுத்தல்.
- பெண் மத்தியஸ்தர்களின் தேவையினை கருத்திற்கொண்டு ஒரு மத்தியஸ்த சபைக்கு 50 வீதமான பெண் உறுப்பினர்கள் தெரிவாகுவதை கட்டாயமான செயன்முறையாக கொண்டுவருதல் வேண்டும்.
- நிலுவையில் காணப்படுகின்ற பிணக்குகளை குறைப்பதற்காக மீண்டும் மாதத்திற்கு 4 முறை கூடும் செயன்முறையை கொண்டு வருதல் வேண்டும்.
- மத்தியஸ்த சபை செயற்பாடுகளை மேற்கொள்ள உத்தியோகபூர்வ கட்டிட, இடவசதியினை நிர்மாணித்துக் கொடுத்தல் அல்லது மத்தியஸ்த சபைக்காக அரச கட்டிடங்களை பயன்படுத்துவதற்கான அனுமதியினை தெரிவு செய்து அவற்றினை சுற்றறிக்கை மூலம் அரசாங்கம் வெளியிடுதல் வேண்டும்.
- இரண்டாம் தரப்பின் வருகையின் அவசியம் தொடர்பாக விழிப்புணர்வூட்டுதலும் அழைப்பதிலுள்ள குறைபாடுகளை நீக்குவதற்கான இறுக்கமான நடவடிக்கைகளை கொண்டுவருதலும்.
- மத்தியஸ்தர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி 6 மாதங்களுக்கு ஒருதடவையாவது மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், இதனை நடாத்துவதற்காக அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியினை நாடுகின்ற போது நிதி தொடர்பான சிக்கல்நிலை குறைவடையும்.
- ஒரு மத்தியஸ்த சபை இன்னுமொரு மத்தியஸ்த சபையின் செயற்பாடுகளை கண்காணிக்க கள ஆய்வு செய்யப்பட வேண்டும். இதனால் பிணக்குகள் தீர்க்கும் திறன்களை அறிந்கொள்வதுடன் அது தொடர்பான அனுபவமும் மத்தியஸ்தர்களுக்கு ஏற்படும்.
- மத்தியஸ்த சபைகளின் பயிற்சிவிப்பாளர்கள் பற்றாக்குறையினையும் நிவர்த்தி செய்ய வேண்டும் அதிலும் குறிப்பாக தமிழ் பேசும் பயிற்சிவிப்பாளர்கள் அவசியம் புதிதாக நியமிக்கப்பட வேண்டும்.
- மத்தியஸ்த செயற்பாடுகளின் போது பாதுகாப்பு ஏற்பாடுகளாக பொலிஸ் அதிகாரிகள் இருவரினை மத்தியஸ்த நடவடிக்கை மேற்கொள்ளும் பிரதேச எல்லைக்கு வெளியே சிவில் உடையில் அமர்த்துதல் வேண்டும்.

**முடிவுரை**

இலங்கையில் மத்தியஸ்த சபையானது கிராமப்புற அளவில் பிணக்குகளை தீர்ப்பதற்கான சிறந்த அமைப்பாக நோக்கப்படுகின்றது. இந்த அமைப்பானது நமது நாட்டில் அனைத்து பகுதிகளிலும் நிறுவப்பட்டுள்ளது. அதனடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வானது ஏறாவூர் மத்தியஸ்த சபையை மையமாகக் கொண்டு அது எதிர்நோக்குகின்ற சவால்களையும் அதற்கான தீர்வுகளையும் மதிப்பிட முயற்சிக்கின்றது. இப்பிரதேச மத்தியஸ்த சபையானது அம்மக்களின் தகராறுகளைத் தீர்ப்பதற்கும் தணிப்பதற்கும் செயற்பட்டு வருகின்ற போதிலும் பல காரணங்களால் இன்றைய நிலையில் பல்வேறு சவாலுக்கு உள்ளாகியுள்ளதாக ஆய்வின் மூலம் கண்டுபிடிப்புக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இப்பிரதேசத்தில் பல சாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளதனையும் அவதானிக்கலாம். குறிப்பாக இப்பிராந்திய மக்களிடையே சமூக நல்லுறவினை கட்டியெழுப்புவதில் பங்காற்றுகின்றது, நீதிமன்றத்திற்குச் செல்வதை விட விரைவாகத் தீர்வு காண முடியும், மக்கள் குறைந்த செலவு மற்றும் நேரங்களில் தங்களின் தகராறுகளை தீர்க்க உதவுகின்றது, நீதித்துறையின் நேரடியான ஈடுபாடு இல்லாமல், பிரதேச மக்கள் தங்கள் சொந்த சமூகங்களுக்குள்ளேயே தகராறுகளைத் தீர்த்துக்கொள்ளுதல் அத்துடன் நீதியினை பெற்றுக்கொள்ளும் உயரிய நோக்கில் பலரின் மத்தியஸ்த்த சபையினை நோக்கி வருகின்ற போதிலும் தற்போது மத்தியஸத்த சபை சில சவால்களை எதிர்கொள்ளவே செய்கின்றது. குறிப்பாக மத்தியஸ்தர்களின் கல்வித் தகைமையில் குறைபாடு காணப்படுகின்றமை, இடவசதிகளின் பற்றாக்குறை, மத்தியஸ்தர்கள் போதாமை மற்றும் அவர்களின் இடைவிலகளும், பெண் மத்தியஸ்தர்களின் குறைபாடு, இரண்டாம் தரப்பினை அழைப்பதிலுள்ள குறைபாடு, மத்தியஸ்தர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி போதாமை, மத்தியஸ்த செயற்பாடுகளின் போது பாதுகாப்பு ஏற்பாடியின்மை, மத்தியஸ்தரின் தன்னிச்சையான தன்மை மற்றும் இப்பிரதேச மக்களிடையே மத்தியஸ்த சபை தொடர்பான விழிப்புணர்வு இன்மை என்பதனால் ஏறாவூர் மத்தியஸ்த சபையின் பிணக்குகளை தீர்த்து சமாதானப்படுத்தும் முறைமையில் சற்று செயற்றிறன் குறைந்தே காணப்படுகின்றது. மேற்கூறப்பட்ட சவால்களை நிவர்த்தி செயற்படுத்துவதுடன் குறிப்பிட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் போது இப்பிரதேச மத்தியஸ்த சபை சிறப்பாக இயங்கும். அத்துடன் தற்போதய சூழ்நிலையில் தங்களிடம் இருக்கின்ற வளங்களை வைத்துக்கொண்டு பொறுப்புக்களை சிறப்பாக செய்ய முயற்சிக்கின்றனர்.

**உசாத்துணைகள்**


Abdul Jabbar, M. & Manivasagar,A.V. (2012). The Effectiveness Of Community Mediating Role At Rural Level Disputes: A Study Of Addalaichenai Mediation Board Coastal Area in Ampara District In Sri Lanka. *Research Submitted To 2nd International Symposium Of South Eastern University of Sri Lanka* (Page 280-281)

Cyrene Sriwardhana. (2011). Evaluation of the Community Mediation Boards Programe in Sri Lanka 2011 January - Ministry Of Justice, Sri Lanka. Retrieved June 18, 2023, from : http://mediation.gov.lk/static/media/publications/en/Evaluation_Community_Mediation.pdf

Hewawasam H. P. K. N. (2022). The Role of Mediation Board in Solving Minor Disputes. *Vidyodaya Journal of Humanities and Social Sciences VJHSS*,07 (02), 180-191. Retrieved from : The Role of Mediation Board in Solving Minor Disputes | Vidyodaya Journal of Humanities and Social Sciences (sjp.ac.lk)

Panchali R. & Dhanushka S. (2023). A Study on the Implications of Social Factors on Community Mediation in Sri Lanka Piyumani. Retrieved June 14, 2023, from : https://www.researchgate.net/publication/366878717_A_Study_on_the_Implications_of_Social_Factors_on_Community_Mediation_in_Sri_Lanka

உதேனி பெரேரா (2021, February 26). மத்தியஸ்தசபை. Retrieved June 16, 2023, From https://tamil.journo.lk/%E0%AE%AE%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B8%E0%AF%8D%E0%AE%A4-%E0%AE%9A%E0%AE%AA%E0%AF%88/

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு. (n.d). மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு. Retrieved June 16, 2023, From https://www.moj.gov.lk/index.php?option=com_content&view=article&id=30&Itemid=178&lang=ta#

மத்தியஸ்த்த சபை ஆணைக்குழு. (n.d). ஆணைக்குழுவின் அதிகாரங்களும் செயற்பாடுகளும். Retrieved June 22, 2023, From http://mediation.gov.lk/powers

முஹம்மட் அஸ்லம் அ.ஜ., முஹம்மது நைறூஸ் மு.ஹ, சௌஜான் இ., (2022). முரண்பாடுகளை தீர்ப்பதில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தின் வகிபங்கும், தெரிவு செய்யப்பட்ட நாடுகளில் அதன் நடைமுறையும்: ஓர் இஸ்லாமிய சட்டவியல் நோக்கு. *Proceedings of the Annual Research Session-2022 (ARS-2022) Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.* Retrieved from : https://drive.google.com/file/d/1ZGeHwsAe1p-y5jgnr0Q6Hc650u3VXWXa/view

ஹஸ்மத் பஹீமா எம்.எப்., & மின்னதுல் சுஹிறா எம்.வை. (2021). அம்பாறை மாவட்ட மத்தியஸ்தசபைகளும் சமூகப் பிரச்சினைகளின் கையாள்கையும். *Promoting Faith Based Social Cohesion through Islamic and Arabic Studies Proceedings of 8th International Symposium. FIA. SEUSL* (Page 915-928). Retrieved from : http://ir.lib.seu.ac.lk/bitstream/123456789/5739/1/Finalized%20Proceedings%202021%20-%2010.8.2021%20-%20Page%20915-928%20%281%29.pdf

E- Eravur, ஏறாவூரைப்பற்றி, ஏறாவூரின் வரலாற்றுப் பின்னணி. (07.Sept.2023). Retrieved June 26, 2023, From http://play.google.com/store/apps/details?id=com.app.eeravur

# இலங்கையில் கிறிஸ்தவக் கல்வி ஊடாக மாணவர்களிடையே சமூக ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புதல்

**யே. ஹேரோசினி**
herosinijesurasa@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கை பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், கத்தோலிக்கம் ஆகிய சமயங்களைக் கொண்டுள்ள ஒரு பன்மைத்துவ நாடாகும். சமகால சமுதாயமானது சமய, இன பேதங்களால் வன்முறை பாகுபாடு, பொருளாதார ஏற்றத்தாழ்வு போன்றவற்றால் கட்டப்பட்டு ஒருமைப்பாடு என்ற அடித்தளத்தை விட்டு விலகிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. ஒருமைப்பாடு என்ற எண்ணக்கரு பாடசாலைகளில் விதைக்கப்பட்டால் இலங்கையின் எதிர்காலம் வளர்ச்சிமிக்கதாக அமையும். கிறிஸ்தவக் கல்வி ஊடாக ஒருமைப்பாடு என்ற பண்பு விருத்தியடைவதானால் மாணவர்களிடையே ஒற்றுமை வளர்கின்றது. எனவே இலங்கை போன்ற பல்லின சமூகத்தவர்களைக் கொண்ட நாட்டில் மாணவர்களிடையே ஆழமான அன்பின் ஒருமைப்பாட்டினைக் கட்டியெழுப்புவது சமகாலத்தில் இன்றியமையாத தேவையாக உள்ளது. மாணவர்கள் மத்தியில் வேற்றுமையும் வெறுப்பும் இல்லாத ஒரு அன்பான சமூகத்தினை உருவாக்க கிறிஸ்தவ கல்வி உறுதுணையாய் அமைந்துள்ளது. மனிதருடைய வாழ்வில் கல்விக்கு மாபெரும் முக்கியத்துவம் உள்ளது. திரு அவை நிறைவாழ்வின் இறைத்திட்டத்தை அனைத்து மக்களுக்கும் அறிவிக்கவும், அனைத்தையும் கிறிஸ்துவுக்குள் ஒன்று சேர்க்கவும் தன்னை நிறுவிய கடவுளிடமிருந்து கட்டளை பெற்றுள்ளது. இக்கட்டளையினை நிறைவேற்றுவதற்கு மனிதரின் வாழ்க்கை முழுவதிலும் கவனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. திரு அவை ஒவ்வொருவருடைய கல்வி வளர்ச்சியிலும், விரிவாக்கத்திலும் தனிப்பட்டதொரு பொறுப்பினைக் கொண்டுள்ளது. ஒருமைப்பாடு என்பது பன்மைச் சமூகம் கொண்ட இலங்கை நாட்டில் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்படுவதை குறித்து நிற்கின்றது. ஒருமைப்பாடு தொடர்பான அறிவினையும் ஆற்றலையும் கிறிஸ்தவக் கல்வி ஊடாக மாணவர்கள் கற்றுக் கொள்கின்றார்கள். கற்றுக் கொண்ட விடயத்தினை தங்களது அன்றாட சூழலில் செயற்படுத்த முன்வருகின்றார்கள். மனிதரின் மண்ணுலக வாழ்வு விண்ணுலக அழைப்போடு தொடர்பு கொண்டுள்ளதால் இம்மண்ணுலக வாழ்க்கையிலும் கூட கிறிஸ்து நிறுவிய திரு அவை கிறிஸ்தவக் கல்வியில் அதிக கவனம் செலுத்துவது அவசியம். பன்மைத்துவ சமூகத்தில் கிறிஸ்தவக் கல்வி பல நலன்களைக் கொண்டு வருகின்றது. ஒவ்வொரு மாணவர்களின் உடல், உள வளர்ச்சிக்கும், அறநெறி வாழ்வுக்கும் உதவும் வகையில் கிறிஸ்தவக் கல்வி அமைதல். கிறிஸ்தவக் கல்வி மாணவர்களைச் சமூக வாழ்வில் பங்கெடுக்க தயாரிக்கிறது. ஒழுக்க நெறியின் மதிப்புக்களை மனச்சான்றின் ஒளியில் ஆராய்ந்து வாழ்வில் கடைப்பிடிக்க வழிகாட்டுகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *ஒருமைப்பாடு, கிறிஸ்தவம், கல்வி, பல்லின சமூகம், இலங்கை, மாணவர்கள், திரு அவை*

## ஆய்வு அறிமுகம்

இலங்கை பல்லின மற்றும் பன்மைத்துவ கலாசாரங்களைக் கொண்ட நாடாகத் திகழ்கின்றது. பாடசாலைகளில் நிலவுகின்ற இனம், சமயம், கலாசாரம் போன்ற வேறுபாடுகளின் மத்தியில் மாணவர்கள் கல்வியினைக் கற்றுக் கொள்கின்றார்கள். இவ்வாறான பின்னணியில் முரண்பாடுகள், வேற்றுமைகள், வாக்குவாதங்கள் போன்றன இடம்பெறுகின்றன.எனவே இச்சிந்தனைகளில் மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு கிறிஸ்தவக் கல்வியானது உதவிபுரிகின்றது. கிறிஸ்தவக் கல்வி மூலமாக மாணவர்களிடையே பரஸ்பர புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, சமத்துவம், ஒற்றுமை, அன்பு போன்ற பண்புகள் விருத்தியடைகின்றது. ஆகவே கிறிஸ்தவக் கல்வியின் மூலமாக மாணவர்களிடையே

ஒருமைப்பாடானது கட்டியெழுப்பப்படுகின்றது. கிறிஸ்தவக் கல்வியினைக் கட்டியெழுப்புவதில் முக்கிய பொறுப்பினையும் கடமைகளையும் கொண்டவர்கள் யார்? அவர்களது பணியின் பிரதிபலிப்பு, மாணவர்களிடையே எவ்வாறான செயற்பாடுகள் ஊடாக ஒருமைப்பாடு கட்டியெழுப்பப்படுகின்றது போன்ற விடயங்களை மையப்படுத்தியதாக இவ் ஆய்வானது அமைந்துள்ளது.

**ஆய்வின் நோக்கங்கள்**

பன்மைச் சமூகத்தினைக் கொண்ட நாடான இலங்கையில் கிறிஸ்தவக் கல்வியானது ஒருமைப்பாட்டினை வளர்க்கின்றதா என்பதனை அடையாளம் காண்பதாக அமைந்துள்ளது. அவ்வாறு ஒருமைப்பாட்டினை வளர்ப்பதற்கு எவ்வாறான நுட்பங்களை கையாள்கின்றது என்பதனை அறிதல்.

**ஆய்வின் இலக்குகள்**

ஒருமைப்பாட்டினை மாணவர்களிடையே வளர்ப்பதில் கிறிஸ்தவக் கல்வி முக்கிய தூணாக உள்ளது.

- ஒருமைப்பாட்டின் வெளிப்பாடு இலங்கை நாட்டில் பல்வேறு நன்மைகளை விளைவிக்கும்.
- ஒருமைப்பாடு வேற்றுமையை தடுத்து ஒற்றுமையை மேலோங்கச் செய்யும்.

**ஆய்வின் கருதுகோள்கள்**

இவ் ஆய்வில் இரண்டு கருதுகோள்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவக் கல்வி ஊடாக மாணவர்களிடையே ஒருமைப்பாடு கட்டியெழுப்பப்படுகின்றது. மாணவர்களிடையே ஒருமைப்பாடு தொடர்பான சிந்தனை ஆழப்படுத்தப்படுவதன் மூலமாக அதன் பிரதிபலிப்பினை பன்மைச் சமூகத்தின் மத்தியில் இனங்காணலாம்.

**ஆய்வு முறையியல்கள்**

இவ் ஆய்விற்காக விபரண, உய்த்தறிவு மற்றும் தொகுத்தறிவு முறையியல் கையாளப்பட்டுள்ளன.

ஒருமைப்பாடு தொடர்பான தரவுகள் திருவிவிலியத்தின் பின்னணியிலும் கிறிஸ்தவக் கல்வி தொடர்பான தரவுகள் திரு அவையின் படிப்பினைகள் பின்னணியில் எடுத்தாளப்பட்டுள்ளன.

**ஆய்வுப் பிரச்சினைகள்**

சமகாலத்தில் மாணவர்களிடையே ஒருமைப்பாடு தொடர்பான சிந்தனை ஆழப்படுத்தப்படுகின்ற நிலையானது குறைவடைந்து வருகின்றது. கிறிஸ்தவப் பாடத்திட்டத்தில் ஒருமைப்பாடு தொடர்பான சிந்தனைகள் குறைவாக உள்ளது. இதனால் மாணவர்களிடையே முரண்பாடு, வேற்றுமைச் சிந்தனைகள் வளர்ந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது.

**ஆய்வு வினாக்கள்**

1. கிறிஸ்தவ பாடப்புத்தகங்களில் ஒருமைப்பாடு தொடர்பான சிந்தனைகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளதா?
2. இலங்கை போன்ற பன்மைத்துவ நாட்டில் ஒருமைப்பாட்டினை வளர்த்தெடுக்க கிறிஸ்தவக் கல்வி உறுதுணை புரிகின்றதா?
3. இலங்கையில் கிறிஸ்தவக் கல்வி ஊடாக ஒருமைப்பாட்டினை கட்டியெழுப்ப செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றதா?
4. பன்மைச் சமூகங்களைக் கொண்ட நாட்டில் கிறிஸ்தவக் கல்வி ஊடாக விருத்தியடையச் செய்வது முக்கியமானதா?

**தரவுகளை சேகரித்தல்**

இவ் ஆய்விற்காக திருவிவிலியம், திரு அவை சட்டத்தொகுப்பு, இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள், விவிலியக் களஞ்சியம் மற்றும் கிறிஸ்தவக் கல்வி தொடர்பான நூல்கள், ஆவணங்களில் இருந்து தரவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

எரோணிமுசு என்பவரின் தலைமையில் தொகுக்கப்பட்டுள்ள 2ம் வத்திக்கான் சங்க ஏட்டில் கிறிஸ்தவக் கல்வி என்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயமானது இலக்கிய மீளாய்வு உட்படுத்தப்பட்டுள்ளது. “கிறிஸ்தவக் கல்வி உண்மையான ஒற்றுமையையும், அமைதியையும் வளர்க்கும் வண்ணம் சகோதர உறவு கொள்ள வழிவகுப்பதாகவும் இருத்தல் வேண்டும் என எடுத்துரைக்கப்பட்டுள்ளது.”

கோட்டாறு ஆயர் பேரவையின் தலைமையில் 2005ம் ஆண்டு வெளியிடப்பட்ட திரு அவை சட்டத்தொகுப்பில் கிறிஸ்தவக் கல்வி என்ற பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயமானது இலக்கிய மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. “சிறுவர்களும் இளைஞர்களும் அவர்களின் உடல், அறநெறி மற்றும் அறிவு சார்ந்த திறமைகளை ஒருங்கிணைந்த வகையில் வளர்க்குமாறு உருவாக்கப்பட வேண்டும்.”

**இலங்கையில் கிறிஸ்தவக் கல்வி ஊடாக மாணவர்களிடையே ஒருமைப்பாடு கட்டியெழுப்பப்படுதல்**

பல்வேறு கலாசாரப் பண்புகளைக் கொண்ட சமூகமே பல்பண்பாட்டுச் சமூகம் எனப்படும். அவ்வாறான சமூகத்தில் அனைத்து இனத்தவரும் சமூகத்தவரும் அனைத்து மொழி பேசுபவரும் ஒற்றுமையாக செயற்படுவது அவசியம். அதன் மூலமாக முரண்பாடுகள் குறைவடையும். ஒற்றுமை மேலோங்கும். இலங்கை நாட்டில் நிலையான சமாதானம் உருவாகும். அத்தோடு நாடு அபிவிருத்தி நோக்கி நகரக் கூடியதாக அமையும். இவ்வாறான மாற்றத்தினை ஏற்படுத்துகின்ற தூண்களில் கிறிஸ்தவக் கல்வியும் ஒன்றாகும். சமகால சகல சமூகங்களும் பல்பண்பாட்டுச் சமூகங்கள் என்பதால் அச்சமூகங்களில் வாழும் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய குணவியல்புகள் பல உள்ளன. கிறிஸ்தவக் கல்வியானது பின்வரும் குணவியல்புகளை கற்றுக்கொடுக்கின்றது. அனைத்து இன மக்களுக்கும் மதிப்பளித்தல்,

அனைத்து இன மக்களினதும் உரிமைகளைப் பாதுகாத்தல், எந்தவொரு இனத்தையும், சமயத்தையும் தாழ்வாக கருதாத நிலை, பண்பாட்டு உரிமைகளைப் பாதுகாத்தலும், மதிப்பளித்தலையும் கற்றுக் கொடுத்தல், தமது கடமைகளை சரிவர நிறைவேற்ற வழிகாட்டுதல் ஆகியனவாகும். திரு அவை ஒவ்வொருவருடைய கல்வி வளர்ச்சியிலும், விரிவாக்கத்திலும் தனிப்பட்டதொரு பொறுப்பினைக் கொண்டுள்ளது. இயேசு சீடர்களை அனுப்பியபோது ‘‘நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள்’’ எனக்கூறி அனுப்பினார். எனவே இதன் மூலம் திரு அவையானது ஆரம்பத்திலிருந்து கிறிஸ்தவ கல்வியில் ஆர்வம் காட்டி வந்துள்ளது. திருத்தந்தை புனித கிளமென்ற் கி.பி. 96 இல் கொரிந்திய கிறிஸ்தவர்களுக்கு எழுதிய கடிதத்தில் கிறிஸ்தவ கல்வி பற்றிக் கூறியிருக்கிறார்.

மனிதர்களின் சிறந்த வாழ்க்கைக்கு மிக அத்தியாவசியமான ஒன்றாகக் கல்வி காணப்படுகின்றது. எனவே இக்கல்வி பற்றியும் கல்வியின் முக்கியத்துவம் பற்றியும், உலகின் பல்வேறு பிரதேசங்களிலும் உள்ள அறிஞர்கள் காலத்துக்குக் காலம் பல சிந்தனைக் கருத்துக்களைக் கூறியுள்ளனர். இக்கல்வியின் முக்கியத்துவத்தினை உணர்ந்து உலகிலுள்ள நாடுகள் இதற்கு முன்னுரிமை கொடுத்து வருகின்றன. பிளேட்டோ ‘‘உண்மை, நன்மை, அழகு இம் மூன்றினையும் உணர்த்துவது கல்வி’’ ஆகும் எனவும் ஜோன் டூயி “பிள்ளைகளுக்குரிய சூழலையும், அங்கு வாழ்வதற்கு உதவும் அனுபவங்களையும் பெற்றுக் கொடுத்தல் கல்வியாகும்” எனவும் ஜின் ஜாக்ஸ் ரூசோ ‘‘கல்வி இயற்கைக்கேற்ப விருத்தியடையும் செயற்பாடு’’ எனவும் பெஸ்டலாசி “கல்வி என்பது மனிதனது எல்லாத் திறன்களும் வன்மைகளும் இயல்பாகவும், படிப்படியாகவும் இசைந்து வளர்ச்சி பெறுவதே ஆகும்” எனவும் பிராபெல் “குழந்தையின் இயல்பான செயல்களிலிருந்து தொடங்கும் கல்வியே அதன் நல்லொழுக்கத்தின் உண்மை வளர்ச்சிக்கு வழிசெய்யும் எனவும் கூறியுள்ளனர்.” கற்றல் என்பது, அறிவு, திறன் மனப்பான்மையினூடாக நடத்தையில் ஏற்படும் நிரந்தர மாற்றமே ஆகும். எனவே கல்வி என்பது ஒருவன் தன்னையும், தான் வாழும் சூழலையும் அறிந்து கொள்ள துணை நிற்கின்றது. தான் வாழும் சமூகத்தையும், பாரம்பரியத்தையும், நாகரிகத்தையும், பண்பாட்டையும் ஆராய்ந்து உணரவும், அவற்றைப் பேணிப் பாதுகாக்கவும் உதவுகிறது. சுருங்கக் கூறின், சமுதாயம் காண விளைகின்ற சான்றோனை உருவாக்கிச் சிறந்த ஒரு குடிமகனை நாட்டுக்கு அளிக்க உதவுவதே கல்வியின் பயனாகும் (சந்திரசேகரம், 2015). ஜோன் டூபியின் கல்விச் சிந்தனைகள். 20.) கிரேக்க மெய்யியலாளரான பிளேட்டோ என்பவர் கல்வியில் கிடைக்கப் பெறும் நன்மை யாதெனில் நல்ல மனிதர்களை உருவாக்குவது மட்டுமல்லாமல், அவர்களை நல்ல முறையில் செயலாற்றவும் பழக்குவதாகும். இவ்வாறு செயலாற்றுவதற்கு உறுதுணையாக பாடசாலைகளில் கிறிஸ்தவக் கல்வி உறுதுணையாய் அமைந்துள்ளது.

### திருவிவிலியத்தில் கிறிஸ்தவக் கல்வி

புனித பவுல் கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கு மிகப் பெரிய தூணாக இருந்தவர். அவர் கல்வியறிவு பெற்றவராகவும் அறிவு நிறைந்தவராகவும் இருந்தார். கமாலியேலின் காலடியில்

அமர்ந்து நம் தந்தையின் திருச்சட்டங்களில் நுட்பமாகப் பயிற்சி பெற்றவர் (திருத்தூதர்பணிகள் 22:3) தானியேல் வியப்பூட்டும் வாழ்க்கை வாழ்ந்தவர். கடவுள் இந்த நான்கு இளைஞர்களுக்கும் அறிவையும் அனைத்து இலக்கியத்தில் தேர்ச்சியையும் ஞானத்தையும் அருளினார். தானியேல் எல்லாக் காட்சிகளையும் கனவுகளையும் உய்த்துணரும் ஆற்றல் பெற்றிருந்தார். (தானியேல் 1:17) மோசே எகிப்து நாட்டின் கலைகள் அனைத்தையும் பயின்று சொல்லிலும் செயலிலும் வல்லவராய்த் திகழ்ந்தார். (திருத்தூதர்பணிகள் 7:22) அனைத்திற்கும் மேலாக இயேசுவும் ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்தார் என்பதனையும் திருவிவிலியம் சுட்டிக்காட்டியுள்ளது.

கிறிஸ்தவக் கல்வியானது மாணவர்களிடையே ஒருமைப்பாட்டினை விசுவாசத்தின் மூலமாக கட்டியெழுப்புகின்றது. இதனால் பல்லின சமூகத்தினைக் கொண்ட மாணவர்களில் அச்சிந்தனை பிரதிபலிக்கக் கூடியதாக அமைகின்றது. கிறிஸ்தவ மாணவர்களிடையே எவ்வாறான ஒருமைப்பாடு கிறிஸ்தவக் கல்வியால் வளம் பெறுகின்றது என்பதனை பின்வருமாறு அடையாளம் காண முடிகின்றது.

**மாணவர்களிடையே தூய ஆவியின் ஒருமைப்பாட்டினை உருவாக்கின்றது.**

(எபேசியர் 4:2-3) “முழுமனத் தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரையொருவர் அன்புடன் தாங்கி அமைதியுடன் இணைந்து வாழ்ந்து தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ள முழு முயற்சி செய்யுங்கள்.” பல்லின சமூகத்தவர்களின் மத்தியில் வாழ்கின்ற மாணவர்களுக்கு கிறிஸ்தவக் கல்வியானது திரித்துவத்தில் வெளிப்படுகின்ற ஒருமைப்பாட்டினை வாழ வழிவகைகளை ஏற்படுத்துகின்றது. தந்தை, மகன், தூய ஆவி எவ்வாறு பிளவுபடாமல் ஒன்றித்து இருக்கின்றார்களோ அவ்வாறு பல்லின சமூகத்தவர்கள் மத்தியில் வேறுபாடு காட்டாது ஒற்றுமையுடன் வாழ கிறிஸ்தவக் கல்வியானது பயிற்சி அளிக்கின்றது.

**தன்னலமற்ற ஒருமைப்பாட்டினை வளர்ச்சியடையச் செய்கின்றது.**

(பிலிப்பியர் 2:3) “கட்சி மனப்பான்மைக்கும் வீண் பெருமைக்கும் இடம் தர வேண்டாம். மனத்தாழ்மையோடு மற்றவர்களை உங்களிலும் உயர்ந்தவர்களாக் கருதுங்கள். நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல. பிறரைச் சார்ந்தவற்றிலேயே அக்கறை கொள்ளுதல். கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலை உங்களிலும் இருக்கட்டும்.” மாணவர்களிடையே உதயமாகின்ற கட்சி மனப்பான்மையானது கிறிஸ்தவக் கல்வி ஊடாக தகர்த்தெறியப்படுகின்றது. தங்களுடைய சமயம் மட்டும் உயர்ந்தது என்ற வீண் பெருமையை விட்டொழிக்க அழைப்புவிடுக்கின்றது. பல்லின சமயத்தவர்களையும் ஏற்றுகொள்ளும் மனப்பான்மை விருத்தியடையச் செய்கின்றது. இவற்றை மாணவர்களின் மத்தியில் வளர்ச்சியடையச் செய்வது கிறிஸ்தவக் கல்வி என்றால் அது மிகையாகாது. இயேசு எவ்வாறு ஏற்றத்தாழ்வுகளைப் பார்க்கவில்லையோ அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றும் கிறிஸ்தவர்களும் பார்க்கக் கூடாது என்ற விழிப்புணர்வினை மாணவர்களிடையே கிறிஸ்தவக் கல்வியானது ஏற்படுத்துகின்றது.

**விசுவாசத்தில் ஒருமைப்பாட்டை ஆழப்படுத்துதல்**

(எபேசியர் 4:13) "அதனால் நாம் எல்லாரும் இறை மக்களைப் பற்றிய அறிவிலும் நம்பிக்கையிலும் ஒருமைப்பாட்டை அடைவோம். கிறிஸ்துவிடம் காணப்பட்ட நிறைவைப் பெருமளவிற்கு நாம் முதிர்ச்சியடைவோம்." கிறிஸ்தவக் கல்வியானது மாணவர்களிடையே விசுவாசத்தினைக் கட்டியெழுப்புகின்றது. பல்லின சமயத்தவருடன் வாழ்கின்ற சூழலில் விசுவாச நிலையானது தளம்பல் அடையாது உறுதியாகத் திகழ கிறிஸ்தவக் கல்வி உறுதுணையாய் அமைகின்றது.

**அன்பில் ஒருமைப்பாட்டினை விருத்தியடையச் செய்தல்**

(உரோமையர் 12:10) "உடன்பிறப்புக்கள் போன்று ஒருவருக்கொருவர் உளங்கனிந்த அன்பு காட்டுங்கள். பிறர் உங்களை விட மதிப்புக்கு உரியவரென எண்ணுங்கள்." (1 பேதுரு 1:22) "உண்மைக்குக் கீழ்ப்படிந்து உங்கள் ஆன்மா தூய்மை அடைந்துள்ளதால் நீங்கள் வெளிவேடமற்ற முறையில் சகோதர அன்பு காட்ட முடியும். எனவே நீங்கள் தூய உள்ளத்தோடு ஒருவருக்கொருவர் ஆழ்ந்த அன்பு காட்டுங்கள்." கிறிஸ்தவத்தின் அடித்தளம் அன்பு ஆகும். இதனால் இயேசு இரண்டு அன்பின் கட்டளையை அளித்தார். பல்லின சமூகத்தவர்களின் மத்தியில் வாழ்கின்ற சூழலில் அவர்களை அன்பு செலுத்துவது இன்றியமையாதது. பாரபட்சம் இல்லாத அன்பு செலுத்த கிறிஸ்தவக் கல்வி அழைப்புவிடுக்கின்றது. இதன் ஊடாக ஒருமைப்பாடு உதயமாகின்றது.

**சாட்சிய வாழ்வில் ஒருமைப்பாட்டினை வெளிப்படுத்துதல்**

"நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர்." (யோவான் 13:35) பன்மைச் சமூகத்தவர்கள் மத்தியில் வாழ்கின்ற வாழ்வானது சாட்சிய வாழ்வாக அமைய வேண்டும் என கிறிஸ்தவக் கல்வி வலியுறுத்துகின்றது. (திருப்பாடல்கள் 133:1) ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று. எத்துணை இனியது. (யோவான் 17:21) எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக. (1 கொரிந்தியர் 1:10) நீங்கள் ஒத்தக் கருத்துடையவர்களாய் இருங்கள். உங்களிடையே பிளவுகள் வேண்டாம். ஒரே மனமும் ஒரே நோக்கமும் கொண்டிருங்கள்.

**கிறிஸ்தவக் கல்வியின் அடித்தளம் ஆண்டவர் மேல் கொள்ளும் அச்சம்**

ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம் என நீதிமொழிகள் எடுத்துரைத்துள்ளது. கிறிஸ்தவக் கல்வியின் முதல் சுவடு இறைவனைப் பற்றிய அறிவிலும் அவர் மீதான அச்சத்திலும் உருவாக வேண்டும். அந்த ஞானமே ஒவ்வொரு மாணவர்களிடையே உள்ள ஆன்மீக இருளை அகற்றும் ஒளிக்கீற்றாக விளங்கும். இவ்வாறான அச்சம் பன்மைத்துவ சமூகங்களின் மத்தியில் வாழும் மாணவர்களுக்கு மகுடமாகத் திகழும். (இணைச்சட்டம் 11:18) நீங்கள் அவற்றை உங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுங்கள். பொன்னை விட ஞானத்தைப் பெறுவதே மேல். வெள்ளியை விட உணர்வைப் பெறுவதே மேல். (நீதிமொழிகள் 16:16) (நீதிமொழிகள் 2:3) நீ உணர்வுக்காக வேண்டுதல் செய்து மெய்யறிவுக்காக உரக்க மன்றாடு. செல்வத்தை நாடுவது போல் ஞானத்தை நாடி

புதையலுக்காகத் தோண்டும் ஆர்வத்தோடு அதைத் தேடு. கடவுளைப் பற்றி அறியக் கூடியதெல்லாம் அவர்களுக்குத் தெளிவாக விளங்கிற்று என உரோமையரில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. (2 பேதுரு 1) நீங்கள் உங்கள் நம்பிக்கையோடு நற்பண்பும், நற்பண்போடு அறிவும், அறிவோடு தன்னடக்கமும், தன்னடக்கத்தோடு மன உறுதியும், மன உறுதியோடு இறைப்பற்றும், இறைப்பற்றோடு சகோதர நேயமும், சகோதர நேயத்தோடு அன்பும் கொண்டு விளங்குங்கள்.

### திரு அவை சட்டத்தொகுப்பில் கிறிஸ்தவ கல்வியின் முக்கியத்துவங்கள்

(திரு அவை சட்டம் 794) கல்வி கற்பிக்கும் கடமையும், உரிமையும் தனிப்பட்ட விதத்தில் திரு அவைக்கு உரியது. கிறிஸ்தவ வாழ்வின் முழுமையை மனிதர்கள் அடைய உதவும் பணி இறைவனால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அனைத்து விசுவாசிகளும் கத்தோலிக்கக் கல்வியால் பயனடையுமாறு அனைத்து ஏற்பாடுகளையும் செய்வது ஆன்ம மேய்ப்பர்களின் கடமை ஆகும். (திரு அவை சட்டம் 795) கல்வி மனித ஆளுமையின் முழுமையான உருவாக்கத்திற்கு முயற்சி செய்தல் என்பதாகும். (இருதயராஜ் ம., (1983). திருச்சபை சட்டத்தொகுப்பு. திருச்சிராப்பள்ளி; புனித பவுல் இறையியல் கல்லூரி. 203) எனவே சிறுவர்களும், இளைஞர்களும் அவர்களின் உடல், அறநெறி மற்றும் அறிவு சார்ந்த திறமைகளை ஒருங்கிணைந்த வகையில் வளர்க்குமாறு உருவாக்கப்படுதல். இவ்வாறு மாணவர்கள் உருவாக்கப்படுவதன் மூலமாக ஏனைய மாணவர்களுடன் ஒருமைப்பாட்டினை பேணும் நிலை உதயமாகின்றது. இவ்வாறான சிந்தனையை கிறிஸ்தவக் கல்வியானது உருவாக்குின்றது.

### அனைவருக்கும் கல்வி கற்பதற்கான உரிமை

எந்த இனத்தையும் நிலையினையும் வயதினையும் சார்ந்த அனைத்து மனிதரும் மனித ஆளுக்குரிய மாண்புடையவர்கள். எனவே கல்வி பெற விட்டுக் கொடுக்க முடியாத ஓர் உரிமையினைக் கொண்டு திகழ்கின்றார்கள். இக்கிறிஸ்தவக் கல்வியானது அவர்களது வாழ்க்கை இலக்கிற்குப் பொருந்தியதாக இருத்தல் அவசியமானது. அத்தோடு கிறிஸ்தவக் கல்வி அவர்களது நாட்டின் பண்பாட்டிற்கும் மரபுகளுக்கும் ஒத்ததாக இருத்தல் இன்றியமையாதது. இக்கல்வி உலகில் உண்மையான ஒற்றுமையையும் அமைதியையும் வளர்க்கும் வகையில் மக்கள் பிற நாட்டவரோடு சகோதர உறவு கொள்ள வழி வகுப்பதாகவும் அமைகின்றது. அது மனிதரின் இறுதிக் குறிக்கோளைக் கண்முன் கொண்டு அவர்களை உருவாக்குகின்றது. அத்தோடு எந்தச் சமூகங்களில் அவர்கள் உறுப்பினராக உள்ளார்களோ வயது வந்தபின் எந்தச் சமூகங்களில் அவர்கள் பணிப் பொறுப்புக்களை ஏற்க இருக்கின்றார்களோ அச்சமூகங்களின் நலனையும் கண்முன் கொண்டு மனிதரை கிறிஸ்தவக் கல்வியானது உருவாக்குகின்றது. இக்கல்வியானது ஒப்புரவு, சமத்துவம், பகிர்வு, சமூக நீதி போன்ற இறையாட்சிப் பண்புகளை கற்றுக் கொடுத்து பல்லின சமூகங்களிடையே செயல்படுத்த வழிகாட்டுகின்றது. இதன் ஊடாக பல்லின சமூகத்தவர்களைக் கொண்ட மாணவர்களிடையே ஒருமைப்பாடு விருத்தியடைகின்றது.

கிறிஸ்தவ கல்வியானது உளவியல் கல்வி முறை இயல், செயல் முறைப் போதனை இயல் ஆகியவற்றின் முன்னேற்றத்தினை கருத்தில் கொண்டுள்ளது. சிறுவர்களும், இளைஞர்களும் தங்கள் உடல், ஒழுக்க அறிவுப் பண்புகளுக்கு பொருத்தமான முறையில் வளர்க்க கிறிஸ்தவக் கல்வி உதவிபுரிகின்றது. அத்தோடு துணிச்சலுடனும் விடாமுயற்சியுடனும் தடைகளைத் தகர்த்து தொடர்ந்து முயற்சி செய்து தங்களது வாழ்வை உரிய முறையில் மேம்படுத்த வழிகாட்டுகின்றது. உண்மைச் சுதந்திரத்தை நாடவும் தேவையான முதிர்ந்த பொறுப்புணர்வைப் படிப்படியாக பெறத் துணைபுரிகின்றது. (எரோணிமுசு கு., (1967). 2ஆம் வத்திக்கான் சங்க ஏடுகள். திருச்சிராப்பள்ளி; தூய பவுல் இறையியல் கல்லூரி. 359.)

பொருத்தமான வழிவகைகளில் முறையாகப் பயிற்சி பெற்று சமுதாய வாழ்வின் பல்வேறு துறைகளில் செயல்முறைகளில் ஈடுபட துணைபுரிகின்றது. பல்லின சமூகத்தவரோடு ஒன்றித்து உறவாடவும் திறந்த மனங்கொண்டவர்களாக வாழவும் பயிற்சியளிக்கின்றது. பொதுநல வளர்ச்சிக்காக விருப்புடன் செயலாற்றவும் ஊக்குவிக்கின்றது. சிறுவர்களும், இளைஞரும் ஒழுக்க மதிப்பு நலன்களை நேரிய மனச்சான்றோடு சீர்த்தூக்கி பார்க்கவும் உள்ளார்ந்த விதத்தில் அவற்றை பற்றுறுதியுடன் தழுவவும் கற்பிக்கின்றது. ஒவ்வொருவரும் கடவுளை ஆழ்ந்து அறிந்து அன்பு செய்யவும் தூண்டப் பெறுவதற்கு உரிமை பெற்றுள்ளார்கள். கிறிஸ்தவக் கல்வி பயிற்சியிலிருந்து பல நல்ல விளைவுகளான பகிர்வு, சமத்துவம், சமூக நீதி போன்ற பண்புகள் உதயமாகின்றன.

தண்ணீராலும் தூய ஆவியாலும் மறுபிறப்புப் பெற்றதனால் புதிய படைப்பாகி கடவுளின் பிள்ளைகள் என்று அழைக்கப்படுகின்றோம். திருமுழுக்குப் பெற்றோர் நிறைவாழ்வின் இறைதிட்டம் பற்றிய அறிவிற்குப் படிப்படியாக அறிமுகப்படுத்தப்படும் பொழுது தாம் பெற்ற நம்பிக்கை என்னும் கொடையை நாளுக்கு நாள் அதிகமாக உணர்ந்து கொள்ள கிறிஸ்தவ கல்வியானது வழிகாட்டுகின்றது. உண்மையாய் வழிபடுவோர் இறைத்தந்தையை அவரது உண்மை இயல்புக்கேற்ப உள்ளத்தில் வழிபடக் கற்றுக் கொடுக்கின்றது. (யோவான் 4:23) இறைத்தந்தையை சிறப்பாகத் திருவழிபாட்டுக் கொண்டாட்டத்தின் வழியாக ஆராதிக்கக் கற்றுக்கொண்டு கடவுளது சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பிற்கேற்ப உண்மையான நீதியும் தூய்மையும் வெளிப்படும் (எபேசியர் 4:22-24) வகையில் தங்களது வாழ்வை அமைக்க கிறிஸ்தவக் கல்வியானது பயிற்சி வழங்குகின்றது. இதன் பிரதிபலிப்பானது பிறரில் வெளிப்படுத்தப்படுகின்றது. (எரோணிமுசு கு., (1967). 2ம் வத்திக்கான் சங்க ஏடுகள். திருச்சிராப்பள்ளி; தூய பவுல் இறையியல் கல்லூரி. 360.)

**கிறிஸ்தவக் கல்வி அளிக்கப் பொறுப்புள்ளவர்கள்**

பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு உயிர் அளித்திருக்கிறார்கள் என்பதால் குழந்தைகளுக்கு கற்பிக்க வேண்டியது அவர்களது தலையாய கடமை ஆகும். பெற்றோர்கள் குழந்தைகளின் முதன்மையான ஆசிரியர்கள் ஆவார்கள். பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகள் முழுமையானதொரு கல்வியை அதாவது தனி மனித மற்றும் சமூகக் கல்வியை அடைந்திட சாதகமான குடும்பச் சூழ்நிலையை உருவாக்கிக் கொடுப்பது இன்றியமையாதது.

இச்சூழ்நிலையானது கடவுள் மட்டிலும் மனிதர் மட்டிலும் காட்டப்பட வேண்டிய அன்பு, சமூக நீதி, இரக்கம், பகிர்வு, ஒப்புரவு போன்றவற்றால் உயிரூட்டம் பெற்றதாக அமைதல் அவசியமானது. இவை தாங்கள் வாழ்கின்ற பன்மைச் சமூகத்தில் பிரதிபலிப்பதற்கு ஒருமைப்பாடு என்ற சிந்தனை இன்றியமையாதது. இதனை மாணவர்களிடையே விருத்தியடையச் செய்வதில் கிறிஸ்தவக் கல்வி முதன்மையிடம் பெற்றுள்ளது.

**திருவிவிலியப் பின்னணியில் கிறிஸ்தவக் கல்வி ஊடாக ஒருமைப்பாட்டினை வளர்ப்பதில் பெற்றோரின் வகிபாகம்**

(இணைச்சட்டம் 6:5) உன் முழு இதயத்தோடும் உன் முழு உள்ளத்தோடும் உன் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக. இன்று நான் உனக்குக் கட்டளையிடும் இவ்வார்த்தைகள் உன் உள்ளத்தில் இருக்கட்டும். நீ அவற்றை உன் பிள்ளைகளின் உள்ளத்தில் பதியுமாறு சொல். உன் வீட்டில் இருக்கும் போது உன் வழிப்பயணத்தின் போது நீ படுக்கும் போதும் எழும் போதும் அவற்றைப் பற்றிப்பேசு. அவற்றைக் கட்டிக்கொள். உன் கண்களிடையே அடையாளப்பட்டமாக அவை இருக்கட்டும். உன் வீட்டின் கதவு நிலைகளிலும் நுழைவாயில்களிலும் அவற்றை எழுது. புனித பவுல் பெற்றோருக்கு குழந்தைகளை வளர்க்க அறிவுறுத்தியுள்ளார். (எபேசியர் 6:4) தந்தையரே உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டாதீர்கள். மாறாக அவர்களை ஆண்டவருக்கேற்ற முறையில் கண்டித்துத் திருத்தி, அறிவு புகட்டி வளர்த்து வாருங்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். (நீதிமொழிகள் 22:6) நல்வழியில் நடக்கப் பிள்ளையைப் பழக்கு. முதுமையிலும் அவர் அந்தப் பழக்கத்தை விட்டு விடமாட்டார்.

ஒரு மனிதனின் அடிப்படைத் தேவை கல்வி. கல்வியில் வளர்கின்ற சமூகத்தவர்கள் ஆன்மீகம், பொருளாதாரம், ஒருமைப்பாடு, சமத்துவம் நீதிக்கு சார்பாக குரல் கொடுத்தல் போன்றவற்றில் தங்களை முற்றிலும் அர்ப்பணித்து வாழ்வார்கள். கிறிஸ்தவக் கல்வியானது மாணவர்களிடையே ஒருமைப்பாட்டினை கட்டியெழுப்புகின்றது. தன்னம்பிக்கையினை ஊட்டுகிறது.

**குடும்ப கிறிஸ்தவக் கல்வி ஊடாக ஒருமைப்பாடு**

குடும்பமானது ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தேவையான சமூக நற்பண்புகளின் முதல் பாடசாலை ஆகும். திருமணம் என்ற அருளடையாளம் தரும் அருளாலும் பொறுப்பாலும் வளம் பெற்றது கிறிஸ்தவ குடும்பம். இக்குடும்பத்தில் குழந்தைகள் திருமுழுக்கில் அவர்கள் பெற்ற நம்பிக்கைக்கு ஏற்ப கடவுளைக் கண்டுணரவும் அவரை வழிபடவும் தம்மை அடுத்திருப்போருக்கு அன்பு காட்டவும் குழந்தை பருவத்திலிருந்தே மிகச் சிறப்பான விதத்தில் கற்பித்தல் அவசியம். குடும்பத்தில் குழந்தைகள் நல்லதொரு மனித சமூகத்தைப் பற்றியும் திரு அவைப் பற்றியும் முதன் முதலாக அனுபவ முறையில் அறிந்து கொள்கின்றார்கள். குடும்பத்தின் ஊடாக குழந்தைகள் மனிதரின் சமூகக் கூட்டு வாழ்விற்கும் மக்கள் குழுவிற்கும் படிப்படியாக இட்டுச் செல்லப்படுகின்றார்கள். எனவே மக்களின் வாழ்விற்கும்

முன்னேற்றத்திற்கும் உண்மையான கிறிஸ்தவக் குடும்பம் எத்துணை முக்கியமானது என்பது புலனாகின்றது.

கல்வியினை கற்பிக்கின்ற கடமை தனிப்பட்டதொரு முறையில் திரு அவையைச் சார்ந்ததாகும். ஏனெனில் திரு அவை கற்பிக்கும் திறன் வாய்ந்தது. அத்தோடு மக்களுக்கு நிறைவாழ்வின் வழியை அறிக்கையிடும் பொறுப்பையும் நம்பிக்கை கொண்டோருக்குக் கிறிஸ்துவின் வாழ்வை வழங்கிடும் பொறுப்பையும் இவ்வாழ்வின் முழுமையை அவர்கள் அடைய முயலும் வண்ணம் இடையறாத அக்கறையோடு உதவிடும் பொறுப்பையும் கொண்டுள்ளது. தனது குழந்தைகளான இவர்களுக்கு திரு அவை ஒரு தாயைப் போல முழு வாழ்வையும் கிறிஸ்துவின் ஆவியால் நிரப்பிடக் கூடிய கல்வியை அளிக்க என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறது. மேலும் மனிதரின் முழு நிறைவினை ஊக்குவிக்கவும் அதிக மனிதத் தன்மை வாய்ந்த உலகை உருவாக்கவும் திரு அவை அனைத்து மக்களுக்கும் உதவிபுரிகின்றது.

**கிறிஸ்தவக் கல்வி ஊடாக ஒருமைப்பாட்டினை வாழ்வாக்குவதற்கான முறைகள்**

திரு அவை தனது கல்விப் பொறுப்பினை நிறைவேற்றுவதில் பொருத்தமான அனைத்து வழிவகைகளையும் பயன்படுத்தி உள்ளது. இவற்றில் முதன்மையானது மறைக்கல்விப் போதனை ஆகும். மறைக்கல்வி போதனை மூலமாக நம்பிக்கையை ஒளிர்வித்து உறுதிப்படுத்துகிறது. வாழ்வினை கிறிஸ்துவின் மனநிலைக்கு உகந்தவிதத்தில் வளர்க்கின்றது. திருவழிபாட்டு மறைநிகழ்ச்சிகளில் உள்ளார்ந்த விதத்திலும் செயல் முறையிலும் பங்கேற்க இட்டுச் சென்றுள்ளது. திருத்தூதுப் பணியில் அயராது ஈடுபட தூண்டியுள்ளது. திரு அவை மனிதரின் பொது மரபுக் கருவூலத்தைச் சார்ந்த வேறுபல வழிகளாகிய சமூகத் தொடர்புக் கருவிகள், உடற்பயிற்சிக் கழகங்கள், பண்பாட்டு வளர்ச்சிக் குழுக்கள், இளைஞர் மன்றங்கள் சிறப்பாகக் கல்விக் கூடங்கள் ஆகியவற்றையும் உள்ளங்களைப் பண்படுத்தவும், மனிதரை உருவாக்கவும் மிகவும் உதவுகின்ற பிற வழிகளையும் பெரிதும் மதித்து தனது மனநிலையை அவற்றுள் செலுத்தி அவற்றை மேம்படுத்த முனைகின்றது.

**பாடசாலைகள் ஒருமைப்பாட்டினை கற்றுக்கொடுக்கும் தளம்**

கல்விப் பயிற்சிக்கான அனைத்து வழிமுறைகளுக்குள்ளும் தனிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்தது பாடசாலை ஆகும். அறிவு ஆற்றல்களை அயராத அக்கறையோடு பேணி வளர்ப்பது இதனுடைய பணிப்பொறுப்பு. மாணவர்கள் மதிப்பு நலன்களை உணரும் திறத்தை வளர்க்கின்றது. பல்வேறு பண்புகள் கொண்டவர்களும் பல்வேறு நிலைமைகளில் இருக்கின்ற மாணவர்கள் மத்தியில் நட்புறவை உருவாக்கி, ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் மனப்பான்மையை வளர்த்துள்ளது.

**பாடசாலைகளில் அளிக்க வேண்டிய ஒழுக்க மற்றும் சமயப் பயிற்சி**

திரு அவை தனது குழந்தைகள் அனைவரின் ஒழுக்க மற்றும் சமயக் கல்வியைத் தளரா ஊக்கத்துடன் கவனித்து வருகின்றது. இது தனது பொறுப்பு என தெளிவாக உணர்ந்து

கொண்டுள்ளது. ஆசிரியர்கள், மாணவர்களுக்கு தங்களது வாழ்வினால் சான்று பகர்தல். மாணவர்களின் வயதிற்கும், சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில் நிறைவாழ்வுப் போதனையை கால, இடச், சூழலுக்கேற்ப கற்பித்து வருகின்றது.

**முடிவுரை**

எனவே கிறிஸ்தவப் பாடத்திட்டத்தில் ஒருமைப்பாடு தொடர்பான விடயங்கள் உள்வாங்குவதன் மூலமாக மாணவர்களிடையே உள்ள வேற்றுமை மற்றும் தாழ்வு மனப்பான்மை படிப்படியாக குறைவடையும் வாய்ப்பு உள்ளது. மாணவர்களுக்கு ஒருமைப்பாடு தொடர்பான விழிப்புணர்வு கிறிஸ்தவக் கல்வி ஊடாக வழங்கப்பட்டாலும் அதனை தாம் வாழ்கின்ற சமூகத்தில் பிரயோகப் படுத்திப் பார்ப்பதற்கு மாணவர்கள் முன்வராத நிலை அதிகரித்துச் செல்கின்றது. எனவே இதனை தடுக்கும் விதமாக இவ்வாய்வு சில ஆலோசனைகளை முன்வைத்துள்ளது.

**உசாத்துணை நூல்கள்**


இம்மானுவேல், வி. (1966). *திருச்சபையின் கல்விப்பணி.* கிறிஸ்தவ இறையியல் இலக்கிய மன்றம்.

இருதயராஜ், ம. (1983). *திருச்சபை சட்டத்தொகுப்பு.* புனித பவுல் இறையியல் கல்லூரி.

இளங்கோ,அ. (2005). *அறமே வாழ்வாக.* புனித இருதய குருத்துவக் கல்லூரி.

எரோணிமுசு, கு. (1967). *2ம் வத்திக்கான் சங்க ஏடுகள்.* தூய பவுல் இறையியல் கல்லூரி.

கோட்டாறு ஆயர் பேரவை. (2005). *திரு அவை சட்டத்தொகுப்பு.* புனித பவுல் இறையியல் கல்லூரி.

சேவியர் ச., (1996). *கசடற.* வீரமாமுனிவர் கழகம்.

சூசைமாணிக்கம், யே. (2016). *திருவிவிலியம்.* தமிழ் நாடு ஆயர் மன்றம்.

தமிழக இலத்தீன் ஆயர்பேரவை.(2004). *கத்தோலிக்க திரு அவை மறைக்கல்வி ஏடு.* தமிழக முப்பணி நிலையம்.

தியாகு. (1998). *விவிலியக் களஞ்சியம்.* தியான ஆச்சிரமம்.

பெர்னாண்டோ, தா. (1980). *திருச்சபை கிறிஸ்துவின் மறையுடல்.* தமிழ்நாடு விவிலிய மறைக்கல்வி திருவழிபாடு நடுநிலையம்.

ரெய்மண்ட், இ. (2011). *பவுல் சிந்தனைக் களஞ்சியம்.* புனித பவுல் இறையியல் கல்லூரி.

ரொசய்ரோ, பீ. (2010). *மனித சமூக மேம்பாடும் கிறிஸ்தவ பங்களிப்பும்.* அ.ம.தி. இல்லம்.

ஜானக்க, பி. (2015). *கத்தோலிக்க மறையாசிரியர் சான்றிதழ் தேர்வு கைநூல்.* தேசிய மறைக்கல்வி நடுநிலையம்.

Joseph Cardinal Ratzinger. (1994). *Catechism of the Catholic Church*. Washington; St. Paul Books and Media publish.

# Gender and Equality

# மலையக லயன் குடியிருப்புகளில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் சமூகப் பாதுகாப்புப் பிரச்சினைகள்: பம்பரகலை தோட்டத்தை மையமாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு

**சுப்பையா ரிஷாந்தி, குணநாயகம் விக்னேஸ்வரன்**
சமூக விஞ்ஞானங்கள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
rishanthikr7316@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

ஒரு மனிதனுக்கு சமூகப்பாதுகாப்பு என்பது ஒரு தேசத்தினால் வழங்கப்படும் உறுதியளிக்கப்பட்ட ஒரு திட்டமாகும். அதன்படி இலங்கையில் பல்வேறுபட்ட சமூக பாதுகாப்பு திட்டங்கள் நடைமுறையில் இருந்தாலும் இலங்கையின் மலையகம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களுக்கு சென்றடையும் சமூக பாதுகாப்பு திட்டங்களும், செயல் ஒழுங்குகளும் மலையகத்தில் லயன் குடியிருப்பில் வாழும் மக்களுக்கு சென்றடைவதில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவற்றில் அவர்களுடைய லயன் குடியிருப்பு முறை, பொருளாதாரம், வறுமை, அத்துடன் மிக முக்கியமாக தோட்ட நிர்வாகத்திடம் முழு மக்களினுடைய அதிகாரங்களும், உரிமைகளும் முடக்கப்பட்டுள்ளமை, அவர்களுடைய பிரதேச பாங்கு, அரசியல் முறைமை என்பன இதற்கு வழிகோலுகின்றன. அந்தவகையில், சமூகப்பாதுகாப்பினுள் காணப்படும் திட்டங்கள் மலையகத்தில் லயன் குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கு முழுமையான முறையில் சென்றடைவதில்லை. பல இன்னல்களின் மத்தியில் இம்மலையக மக்களுக்கான திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டாலும் அதனை உரிய ஒழுங்கு முறையில் அவர்களுக்கு கொண்டு சேர்ப்பது கடினமாகவே உள்ளது. பிரித்தானியரின் காலனித்துவ காலத்தில் இருந்தது போன்ற பரிதாப நிலையிலேயே இன்றும் வாழ்ந்து வருகின்றனர். காரணம் ஒரு தேசத்தின் ஒரு குடிமகன் அரசாங்கத்தினால் வழங்கப்படும் திட்டங்களினுள் காணப்பட வேண்டும் என்பது அம்மனிதனின் குடியுரிமையை வலியுறுத்துவதாக காணப்படுகின்றது. அதனடிப்படையில் சமூகப் பாதுகாப்பு என்பது மலையக மக்களுக்கு இதுவரையில் முழுமையாக எட்டாக்கனியாகவே உள்ளது. இலங்கையில் வாழும் ஏனைய பிரதேச மக்களுடன் ஒப்பிடும் போது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. அதற்கு அவர்களினுடைய ஈடுபாடு குறைவு மட்டுமன்றி சமூகக் கட்டமைப்பு, அரசியல், பொருளாதாரம், கல்வியறிவு, தலைமைத்துவமற்ற நிர்வாகம் என்பன காரணமாகின்றன. மலையக மக்களின் வாழ்வில் காணப்படும் எழுத்து ரீதியிலான சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் செயன்முறை ரீதியில் மலையக தோட்டப்புறங்களில் வசிக்கும் லயன் குடியிருப்புகளில் வாழும் மக்களுக்கு சென்றடையாமைக்கான காரணங்கள், அதற்கு காரண காரிய நிலைமைகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து அதற்கான தீர்வுகளையும் பரிந்துரைகளையும் முன்வைப்பதாக இவ்வாய்வு அமைகின்றது. இவ்வாய்வுக்கான தரவுகள் எளிய எழுமாற்று மாதிரியைப் பயன்படுத்தி வினாக்கொத்து, கலந்துரையாடல், பங்குபற்றல் அவதானம், செவ்வி காணல் எனும் முறைமையியலுக்கு ஊடாக தரவுகள் சேகரிக்கப்பட்டது. சேகரிக்கப்பட்ட தரவுகள் எண் மற்றும் பண்பு ரீதியான முறைகளின் ஊடாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இங்கு சமூக பாதுகாப்பானது லயன் குடியிருப்பில் வாழும் மக்களுக்கு சென்றடைவதில் ஏற்பட்டுள்ள தடைகள் தரவு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு ஆய்வு தொடர்பான உண்மை இனங்காணப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *சமூகப் பாதுகாப்பு, லயன் குடியிருப்பு, பெருந்தோட்டத்துறை, தோட்டத் தொழிலாளர்கள், தோட்டம்*

**ஆய்வு அறிமுகம்**

இலங்கையில் தற்கால சூழ்நிலையில் கிராமிய ரீதியான வறுமை அதிகரித்துள்ளமை அவதானிக்க கூடியதாக காணப்படுகின்றது. இதற்கு பல்வேறு காரணிகள் வழிவகுக்கின்றது. அவ்வாறான காரணிகளில் மிக முக்கியமானது “சமூகப்பாதுகாப்பு” பிரச்சினையாகும். சமூகமானது அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும், கல்வி ரீதியிலும் துறைசார்ந்த அபிவிருத்தியை எட்ட வேண்டும் எனில் சமூகப்பாதுகாப்பு என்பது சமுதாயத்தில் உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றாக காணப்படவேண்டும். அதன்படி இலங்கை பெருந்தோட்ட துறை மக்கள் சமூக பாதுகாப்பு என்பதனை எந்த வகையில் பெறுகின்றனர் அதனுடனான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை அவர்கள் பெறுவதில் எவ்வாறான சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பதனை ஆராயும் அடிப்படையில் இவ்வாய்வு நகர்ந்து செல்கின்றது.

உலகில் காணப்படும் அனைத்து சமூகங்களிலும் இயங்கும் ஒரு சமூக கொள்கையாக காணப்படுவதே “சமூக பாதுகாப்பு” என்ற அம்சமாகும். அதன் மூலமே சமூகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும் பல்வேறு உதவி செயன்முறைகளுடன் கூடிய நிதி உதவி, பொருளாதார மேம்பாடு என்பனவற்றினைப் பெற்றுக்கொள்கின்றான். இதனூடாகவே மக்களுடைய தேவைகளை அறிந்து செயற்படக்கூடியதாக உள்ளது. அதன்படி சமூக பாதுகாப்பு என்பது மக்களின் வாழ்வாதார செயற்பாடாக செயற்படுவதனை காணலாம். உலகப் பார்வையில் சமூகப் பாதுகாப்பு என்றம்சம் ஒரு நாட்டில் வாழும் அனைத்து தரப்பு மக்களின் பொருளாதார பாதுகாப்பை உறுதிபடுத்தும் ஒரு முன் நிபந்தனையாக உள்ளது. காரணம் ஒரு பிரஜை சமூகத்தில் தமது தேவைகளை பூர்த்தி செய்வதற்கான முதல் படிமுறை அவனுடைய பொருளாதார மேம்பாடாகும். அவ்வாறு பொருளாதார சிக்கல் ஏற்படாமல் இருக்கவும் பொருளாதார மந்த நிலையில் உள்ள மக்களுக்கான ஒரு மேம்பாட்டு சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் வழங்கப்படுகின்றன. இதற்கான வரம்பும் அர்த்தமும் நாட்டுக்கு நாடு வேறுபடும்.

அதன்படி சோசலிச நாடுகளைப் பொருத்தமட்டில் “நாட்டினுடைய ஒவ்வொரு குடிமகனுக்கும் தொட்டில் முதல் கல்லறை வரை முழுமையான பாதுகாப்பு கிடைப்பதனையே சமூகப் பாதுகாப்பு என்பர்” முதலாளித்துவ நாடுகளை பொறுத்தமட்டில் “சமூகப் பாதுகாப்பு என்பது குடிமக்களுக்கு சமூக மற்றும் பொருளாதார நீதிக்கான அபிவிருத்தி கருவியாக கருதப்படுகிறது.” அதன்படி ஒவ்வொரு குடிமகனும் தனது ஆயுட்காலத்தில் பாரிய நோயினால் பாதிக்கப்படல், விபத்து, வேலையின்மை, முதுமை, கைகால் ஊனம், என பல பிரச்சினைகளால் கைவிடப்பட்டவர்களாகவும், வறுமை கோட்டின் கீழ் வாழுபவர்களாகவும், பெரும் நோயினால் பீடிக்கப்பட்டவர்களாகவும் தனது வாழ்க்கையினை ஒரு போராட்டமான எதிர்கொள்பவர்களாக உள்ளனர். இவற்றினை ஒருமித்த வகையில் கூறுவதானால் இவையே சமூகத்திலுள்ளவர்கள் எதிர் கொள்ளும் சமூக பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளாக உள்ளன.

இன்றைய சூழ்நிலையில் சமூகப் பாதுகாப்பு என்பது மனித உயிரினை மையப்படுத்தியதாக உள்ளது. மனித உயிர்கள் பாதுகாக்கப்படும்போது இயல்பாகவே சமூகப் பாதுகாப்பு பேணப்படும். இவ்வடிப்படையில் இவ்வெண்ணக்கருவினை அடிப்படை

உரிமையாகவும் கருதலாம். அத்துடன் ஒவ்வொரு நாட்டிற்குமுரிய அரசியலமைப்பிலும் இது மையப்படுத்தப்பட்டே காணப்படும். மேலும் இதனுள் ஒரு மனிதனுடைய இத்தனை மணிநேர வேலை இவர்களுடைய ஓய்வூதியம் சமுர்த்தி தேவைகள், தனிகுடும்ப பாதுகாப்பு என அனைத்தும் தனி மனித உரிமைகளுக்கான முன் நிபந்தனைகள் என்றப் பெயரில் சமூகப் பாதுகாப்பு என்பதனுள்ளேயே உள்ளடக்கப்படுகின்றது. இலங்கையினை பொறுத்தமட்டில் சமூகப் பாதுகாப்பு என்பது பரிபூரணமாக தேசத்தை சூழ்ந்துள்ளதாக பேசப்படுகின்றது. இன்றைய சூழலில் இக்கூற்றினை ஏற்காதப் போதிலும் முன்வந்த பல அரசியல் வாதிகளாலும் முன்வக்கப்பட்டுள்ளது.

இதற்கு பெருமளவிலான சாட்சியங்களை இனங்கண்டுக் கொள்ள முடியும். குடும்ப அலகுகளை அடிப்படையாக கொண்ட சமூக கட்டமைப்பு, முன்னேற்றமடைந்த நீர்பாசன முறை, விவசாயம், சமயப் பாதுகாப்பு திட்டம், சுதந்திர கல்விமுறைமை, சுய உற்பத்தி, பொருளாதார வாழ்க்கை முறை, வேலை நேரம் ஊதியம் அது தொடர்பான மேன்முறையீடுகள் என சமூகத்தில் சமூகப் பாதுகாப்பு என்ற விடயம் விரவி காணப்படுவதனை காணலாம்.

இலங்கையினை போர்த்துகேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர், தனது ஆட்சியினுள் வைத்திருந்த வேளையில் எமது சுய உற்பத்தி வாழ்க்கை முறை வீழ்ச்சியடைந்து சமூகப் பாதுகாப்பு என்ற விடயத்திற்கு மக்கள் முன்னுரிமை வழங்கினர். அதன்படி சமூகப் பாதுகாப்பின் முதற் படிமுறை 1944ஆம் ஆண்டின் ஜீலை மாதம் 10ஆம் திகதி பிரித்தானிய ஆட்சியின் போது நியமிக்கப்பட்ட Sir Ivor Jennings ஆணைக்குழுவின் இரண்டாவது அமர்வில் பேசப்பட்டது இதில் இலங்கையின் சமூக பாதுகாப்பிற்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டது.

பின்னர் 1989ஆம் ஆண்டில் சமூகப் பாதுகாப்பு சபை உருவாக்கப்பட்டு ஓய்வூதியம், சமூகப் பாதுகாப்பு உத்தேச திட்டம் என்பன விரிவுப்படுத்தப்பட்டது. இவ்வாறு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ‘‘நவீன சமூகப் பாதுகாப்பு தேவைகள்’’ ஆராயப்பட்டு அவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படடது. இவ்வாறான பல அடிப்படை சட்டங்களின் துணையுடன் சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் மக்களுக்கென கையளிக்கப்பட்டாலும் இலங்கையில் ஏனைய பிரதேச மக்கள் பெற்றுக்கொள்ளும் சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் இலங்கையில தமிழ் மக்கள் விரவிக் காணப்படும் ஒரு பிரதேசமாக காணப்படும் மலையக மக்களுக்கு குறையளவிலேயே சென்றடைகின்றது. இங்கு பிரதானமாக மக்கள் லயன் குடியிருப்புகளிலேயே தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடாத்துகின்றனர். இந்நிலைப்பாட்டினை கொண்டு நுவரெலியா மாவட்டத்தில் ரஹன்வத்தை 475 U கிராம சேவகர் பிரிவிற்கு உட்பட்ட பம்பரகலை தோட்ட லயன் குடியிருப்புகளில் வாழும் மக்கள் பல சமூகப் பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர. இந்நிலைமையை இலங்கையில் வாழும் சாதாரண மக்களுடன் ஒப்பிடும் போது இவர்கள் பல சிக்கல்களை எதிர் கொள்ளுகின்றனர்.

அதன்படி இங்கு வாழும் மக்களினுடைய சமூகப் பாதுகாப்பு தொர்பான விடயங்களுக்கு மக்களின் உள்நுழைவு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. அதிலும் இலங்கையில் ஏனைய பிரதேசங்களில் காணப்படும் முதியோர் ஓய்வு ஊதியம், சமூர்த்தி திட்டம், ஜனசவிய திட்டம், ஆரஸ்ஸாவ மற்றும் சுரக்கும போன்ற மக்களின் நலன் காக்கும்

சமூகப்பாதுகாப்பு திட்டங்கள் மலையத்தில் வறுமையில் வாழும் அத்திட்டங்களை பெற்றுக் கொள்வதற்கான தகுதிகளைக் கொண்ட லயன் குடியிருப்பில் வாழும் மக்களுக்கு சென்றடையாமைக்கு வழிகோலும் காரணங்களை கண்டறிதல்.

அத்துடன் ஓய்வூதியம் ஒழுங்கான முறையில் கிடைக்கப் பெறாமை போன்றவற்றினால் அம்மக்களின் வாழ்வில் முழுமையான சமூக, பொருளாதார, வாழ்வியல் சார், பிரச்சினைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அத்துடன் தொழிலாளிகளுக்கான ஊதியம், ஓய்வு நேரம் என்பவற்றின் நிச்சயமற்றத் தன்மை என சமூப் பாதுகாப்பு சார்ந்த பல பிரச்சினைகளுக்கு ஆய்வுப் பிரதேச மக்கள் முகங்கொடுக்கின்றனர். இவ்வாறாக இவ்வாய்வானது சமூகவியல் நோக்கில் லயன் குடியிருப்புகளில் வாழும் தோட்ட தொழிலாளர்கள் அவர்களின் அடிப்படை சமூகப் பாதுகாப்பினை உணராத நிலையையும் அவர்களுக்கு அதன்பாற்பட்ட திட்டங்கள், விழிப்புணர்வுகளை வழங்கும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் செயற்பாடுகளையும் சார்ந்து சமூகப் பாதுகாப்பு அதிகாரங்கள் மக்களுக்கு கிடைக்கப் பெறாத நிலையையும் காணக்கூடியதாக உள்ளது. அதனால் மலையகத்தில் வயன் குடியிருப்புக்களில் வாழும் மக்கள் எதிர் நோக்கும் வாழ்வியல்சார் பிரச்சினைகளையும் அதற்கான முன்மொழிவினையும் இவ்வாய்வு கட்டுரையில் வழங்கியுள்ளேன்.

**ஆய்வு முறைமையியல்**

இவ்வாயிற்கு பண்பு ரீதியான மற்றும் எண் ரீதியான முறைமையியல் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதன்படி பண்பு ரீதியான தரவுகள் எனும்போது பம்பரகலை தோட்ட லயன்குடியிருப்பில் வாழும் மக்களுடைய சமூகப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை மக்களிடம் கேட்டறிதல், அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள், அதனில் ஏற்படும் சமூக பிரச்சினைகள் அதனால் அவர்களின் மனநிலை என்பனவற்றை பண்புசார் தரவுகளாகவும் ஆய்வு பிரதேசத்தின் சனத்தொகை விபரம், தொழிலாளர்களின் விபரம், அவர்களுடைய வருமானம் இதனை அடிப்படையாக கொண்ட அட்டவணைகள், எண்ணிக்கைகள், என்பன எண் ரீதியான தரவுகளாகவும் சேகரிக்கப்பட்டுள்ளன

***தரவு சேகரித்தல் முறைகள்***

லயன்குடியிருப்பில் வாழும் மக்களுடைய சமூகப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை கண்டறியவும் அது தொடர்பான தரவுகளை சேகரிக்கவும் **முதன் நிலை தரவுகள்** பயன்படுத்தப்பட்டுள்ளது.. அதனுள் லயன் குடியிருப்பில் வாழும் மக்களின் வாழ்வியல் சார் விடயங்களை வினாக்கொத்து, நேர்காணல், கலந்துரையாடல் மற்றும் அவதானம் போன்றவற்றை பயன்படுத்தி தரவுகள் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மக்களிடம் கேட்டறிந்த விடயங்களை கொண்டு இவ்வாய்வினை முன்னெடுத்துள்ளேன். அதிலும் நேர்காணலினைப் பொறுத்த வரையில் அவர்களினுடைய வரலாறு,அவர்களின் சமூகப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை கேட்டறிந்து தரவுகளை சேகரித்ததுடன் தெரிவுசெய்யப்பட்ட மக்களின் குழுச் சார்ந்த கலந்துயைாடல்களும் மேற்கொள்ளபட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. அதனைப் போலவே படித்த பல்கலைகழக

மாணவர்கள்.ஆசிரியர்கள் மற்றும் படித்த சமுதாயம் சார்பாக வினாக்கொத்து வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. இவை முதன் நிலை தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டாம் நிலை தரவுகளாக பிரதேச செயலக உறுப்பினர்கள், சமூகப் பாதுகாப்பு சபை உறுப்பினர்கள் என்ற வகையில் அரசாங்க திணைக்களங்களில் இருந்து பெறப்பட்டன. மற்றும் தோட்ட கம்பனிகளின் பிரதான அலுவலகங்கள் வாயிலாகவும் தரவுகள் பெறப்பட்டுள்ளன. இன்னொரு வகையிலும் தரவுகள் திரட்டப்படும். துணைநிலைத் தரவுகள் எனும் போது மலையக லயன் குடியிருப்புக்களில் வாழும் மக்களின் சமூகப் பாதுகாப்பு தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வு கட்டுரைகள், கிராம சேவகர்பிரிவு அறிக்கைகள் இணையத்தளங்கள் மூலமும் தரவுகள் பெறப்பட்டுள்ளன.

*மாதிரி*

இவ்வாய்விற்கு எளிய எழுமாற்று மாதிரி எடுப்பு முறையை பயன்படுத்தி தரவுகள் சேகரிக்க தீர்மானிக்கப்பட்டது. அதன்படி பம்பரகலை தோட்டத்திலுள்ள லயன் குடியிருப்புக்களில் வாழும் மக்களில் சமூகப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை எதிர் நோக்கும் மக்களின் தரவுகளை பெற்றுக்கொள்ள இம்மாதிரி எடுப்பு முறையே உகந்தது. ஆய்விற்காக பம்பரகலை தோட்டம், அப்பர்கிரண்லி தோட்டம்,டெல் தோட்டம், ரஹன்வத்தை தோட்டம், குயின்வூட் தோட்டங்களிலிருந்து லயன்குடியிருப்புக்களில் வசிக்கும் 100 எண்ணிக்கையிலான மக்கட் தொகையினை மாதிரியாக கொண்டு இவ்வாய்வினை முன்னெடுத்துள்ளேன். குடும்பங்களின் எண்ணிக்கையினை மொத்த சனத்தொகையினால் பிரித்து அதனை 100 வீதத்திற்கு பார்த்தல்.

**அட்டவணை 1. 1 ஆய்வின் எளிய எழுமாற்று மாதிரி எடுப்பு சட்டகம்**

| **தோட்டங்களின் பெயர்** | **மொத்த சனத்தொகை** | **குடும்பங்களின் எண்ணிக்கை** | **மாதிரி தெரிவுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| பம்பரகலை | 1602 | 472 | 472/1164*100 = 40 |
| அப்பர்கிரண்லி | 887 | 243 | 243/1164*100 =20 |
| டெல் | 347 | 78 | 78/1164*100 = 09 |
| ரஹன்வத்தை | 778 | 227 | 227/1164*100 =19 |
| குயின்வூட் | 520 | 144 | 144/1164*100 =12 |
| மொத்தம் | 4134 | 1164 | **100** |

**கலந்துரையாடலும் பெறுபேறுகளும்**

மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 475 U கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள பம்பரகலை தோட்டத்தை மையமாக கொண்டு “மலையக லயன் குடியிருப்பில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் சமூக பாதுகாப்பு

தொடர்பான பிரச்சினைகள் ஒரு சமூகவியலாய்வு - 2023'' என்ற தலைப்பின் கீழ் தரவுகள் பல சேகரிக்கப்பட்டன. அவ்வாறு ஆய்வுப் பிரதேசத்தில் சேகரிக்கப்பட்ட தரவுகள் இங்கு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அந்தடிப்படையில் மலையக மக்கள் எதிர் நோக்கும் சமூக பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுவற்கு பிரதான காரணமாக ''இலங்கையில் வாழும் ஏனைய சமூகங்களை மலையக சமூகத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது சமூக, பொருளாதார, அரசியல், பண்பாடு என பல்வேறு நிலைகளில் வேறுபாடு காணப்படுகின்றது'' தரவுகள் சேகரிக்கப்பட்டு அதற்கான பெறுபேறுகளும் கலந்துரையாடப்பட்டன. இந்தடிப்படையிலேயே அதற்கான காரணங்களாக கிடைக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையில் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாடு காரணங்களின் கீழ் பிரச்சினைகள் ஆராயப்பட்டன.

***சமூக ரீதியான பிரச்சினைகள்***

சமூகப் பாதுகாப்பு தொடர்பான திட்டங்கள் மட்டுமன்றி ஏனைய அரசின் நலத்திட்டங்கள் சமூக நலத்திட்டங்கள் என்பனவற்றை கொண்டு சேர்ப்பதில் மிகப் பெரும் பிரச்சினையாக காணப்படுகின்றது. இதனுள் குறித்த திட்டம் தொடர்பில் ஆய்வு பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கான தெளிவோ விழிப்புணர்வோ சென்றடைவதில்லை. ஆய்வுப் பிரதேசத்தில் சமூக பாதுகாப்பு திட்டங்களை பெற்றுக்கொள்வதில் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் ஆய்வுக்குட்படுத்தி அவர்களிடம் சமூக பாதுகாப்பு திட்டங்கள் பெற்றுக் கொள்வதில் உள்ள சவால்கள் பற்றி கேட்டபோது மக்கள் தொடர்ச்சியான பதில்களாக பெரும்பாலும் இத்திட்டம் பற்றிய விழிப்புணர்வோ அல்லது செயல் ஒழுங்குகளோ எங்களுக்கு கிடைக்கப் பெறவில்லை.

ஆய்வுப் பிரதேசத்தில் சமூக பாதுகாப்பு திட்டங்களில் உள்ளடங்கும் முதியோர் ஓய்வு ஊதியம், சமூர்த்தி திட்டம், ஜனசவிய திட்டம், ஆரஸ்ஸாவ மற்றும் சுரக்கும திட்டங்களுக்கு பொறுப்பாக உள்ள கிராமசேவகர், சமூர்த்தி அதிகாரி, பலநோக்கு கூட்டுறவு சங்க அதிகாரி, போன்ற அரசு சார் பணியில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் பெரும்பாலும் இப்பகுதிகளுக்கு சிங்களவர்களே நியமிக்கிறனர். அடிப்படையில் ஆய்வு பிரதேசத்திலுள்ள மக்கள் தமக்கான தேவைகளையும் நிபந்தனைகளையும் இதுபோன்ற சமூகப் பாதுகாப்பு திட்டங்களையும் அறிந்துகொள்வதற்காக அல்லது அது தொடர்பாக உரையாடுவதற்கும் இங்கு மொழி ஒரு பிரச்சினையாக காணப்படுகின்றது. அது மட்டுமன்றி அரசாங்கத்திடமிருந்து இத்திட்டங்கள் தொடர்பாகவும் இத்திட்டங்களில் இணைவதற்கான படிவங்களும் சிங்கள மொழி சார்ந்தும் ஆங்கில மொழி சார்ந்தும் காணப்படுவதனால் கல்வியறிவில் குறைந்து காணப்படும். மற்றும் தொழிலுக்கான மக்கள் இடப்பெயர்வும் சமூகசார் பிரச்சினைகளாக இனங்கானப்பட்டன.

***பொருளாதாரப் பிரச்சினை***

ஆய்வுப் பிரதேசத்தில் ஆய்வுக்குட்படுத்திய மக்களிடம் சமூக பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளை தாங்கள் பெற்றுக் கொள்வதில் உள்ள சவால்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது. தோட்ட நிர்வாகத்தின் வேலை நேரப் பிரச்சினை இது அடிப்படையில் 7:30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை தேயிலைத் தோட்ட வேலை செய்வது அத்தியாவசியமான வேலை நேரம் ஆகும். அப்போதே ஒரு தினத்திற்கான முழு

ஊதியத்தினைப் பெறமுடியும். என்றும் இதனையே தேயிலைத் தொழிற்சாலைக்கு வேலைக்கு செல்பவர்கள் 6:30 மணி தொடக்கம் பகல் நேர உணவு வேலை தொடர்ந்து இரவு நேரம் 10.30 மணி மட்டும் தங்களுடைய வேலை நேரம் அத்தியாவசியபடுத்தப்பட்டுள்ளது.அதனைப் போலவேபோக்குவரத்திற்கு உத்தியோகத்தவர்களுக்கு தேவைப்படும் பணம் இன்மை என்பதுவும் சரியான முறையில் இத்திட்டங்கள் மக்களை சென்றடையாமைக்கு பொருளாதார பிரச்சினைகளாக முன்வைக்கப்பட்டது.

*நிர்வாகப் பிரச்சினைகள்*

ஆய்வுப் பிரதேச மக்கள் சமூக பாதுகாப்பு திட்டங்களை பெற்றுக் கொள்வதில் நிர்வாக ரீதியாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என தரவு பகுப்பாய்வு மூலம் கண்டறியப்பட்டன. திட்டங்களை தோட்டபுறங்களுக்கு கொண்டு சேர்க்கும் அதிகாரிகள் அதனை மக்களுக்கு வழங்குவதில் பாரபட்சம் காட்டுதல், போதுமான அரச உத்தியோகஸ்தர்கள் காணப்படாமை, தோட்ட நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் அரசு உதவித் தொகைகள் இயங்குதல், சமூகநல உத்தியோகஸ்தர்கள் பல வி'யங்களை மேற்கொள்ளாமை, நிர்வாகிகள் முறையான தரவுத்தளத்தை வைத்திருக்காமை போன்ற நிர்வாக ரீதியான பிரச்சனைகள் இங்கு மக்களால் கூறப்பட்டது.

*அரசியல்சார் பிரச்சினைகள்*

ஆய்வு பிரதேசத்தில் சமூக பாதுகாப்பு திட்டங்களை பெற்றுக் கொள்வதில் பல்வேறு விதமான அரசியல் ரீதியான சவால்களை எதிர்கொள்கின்றனர். சமூக பாதுகாப்பு திட்டங்களை தொழிற்சங்க ரீதியாக வழங்குதல், அரசியல் தலைவர்களின் பக்கச்சார்பான செயற்பாடுகளின் ஊடாக ஏற்படும் அதிகாரப் போட்டி, தொழிற்சங்கத்தின் சந்தா பணம் செலுத்தும் மக்களுக்கு மட்டும் உதவிகளை வழங்குதல், போன்றவை இதனுள் அடங்குகின்றன.

*சட்டம் சார்பான பிரச்சினைகள்*

சமூக பாதுகாப்பு திட்டங்களை தோட்ட நிர்வாகத்துடன் இணைந்து அரச சேவைகளும் மேற்கொள்கின்றனர். அபிவிருத்தி உத்தியோகஸ்தர், கிராம அதிகாரி, தோட்ட அதிகாரி, சேகரித்த தரவுகளை கொண்டு ஆய்வுப் பிரதேசத்தில் மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் வழங்கப்பட வேண்டியுள்ளது இத்திட்டங்களை பெறுவதில் தனியார் கம்பெனிகளின் சட்டதிட்டங்களை ஏற்று செயற்பட வேண்டிய பொறுப்பு மக்களுக்கு காணப்படுகின்றது. அனைத்து அதிகாரமும் சட்டப்படி பெருந்தோட்ட கம்பெனிகளிடம் காணப்படுகின்றமைனால் சமூக பாதுகாப்பு திட்டங்களை பெருந் தோட்ட மக்கள் தோட்ட நிர்வாகத்தின் கீழ் பெறுகின்றனர். இவ்வாறான சட்ட ரீதியான பிரச்சினைகள் காணப்படுகின்றன என தரவு பகுப்பாய்வு மூலம் கண்டறியப்பட்டது.

**முடிவுரை**

‘‘இலங்கையின் முதுகெலும்பு என கூறப்படும் மலையகத் தமிழர்களும் அவர்களின் உழைப்பும் எவருக்கும் தெரியாமலே மறைந்து போகின்ற சூழ்நிலையே இன்றைய நிலையில்

காணப்படுகின்றது'' அந்த அடிப்படையில் அவர்களை பொருளாதார ரீதியில் முன்னெடுப்பதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் சமூக பாதுகாப்பு திட்டங்கள் அவர்களை தவிர்த்து இலங்கையின் ஏனைய பிரதேச மக்களுக்கு சென்றடைவதனை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. ஆனால் மலையக மக்களை பொறுத்தமட்டில் இத்திட்டங்கள் சீரான முறையில் சென்றடைவதில்லை.

அவ்வாறான செயற்பாடுகள் ஏன் இடம்பெறுகின்றன அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கு இடையூறாக காணப்படும் விடயங்களை சமூக, பொருளாதார, உட்கட்டமைப்பு, சார்ந்த பிரச்சினைகள் என்ற அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளது. இவ்வாறு காணப்படும் பிரச்சினைகளை மாற்றியமைப்பதற்கான வழிவகைகளை கண்டறிவதனை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வின் முடிவாக லயன் குடியிருப்பில் வாழும் மக்களுக்கான சமூகப் பாதுகாப்பு சார்ந்த ஏற்பாடுகளை ஏனைய மக்கள் வாழும் சமுதாய கட்டமைப்பு ரீதியான வாழ்க்கையாக மாற்றி அமைப்பதுடன் தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதன் மூலம் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை பிரச்சினையின்றி அவர்கள் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் சமூகப்பாதுகாப்பு என்பது அங்கு உறுதிப்படுத்த ஒன்றாக காணப்படும் என்பதே ஆய்வின் முடிவாக அமைகின்றது.

அந்த அடிப்படையில் பம்பரகலை தோட்ட மக்கள் இங்கு பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும், சமூக ரீதியிலும் பல்வேறுபட்ட பின்னடைவை அடைந்துள்ளனர் என்பதனை ஆய்வு பிரதேசத்தின் உடைய நிலைமைகள் ,ஆய்வு பிரதேசத்தில் இருந்து பெற்றுக்கொண்ட தரவுகளின் அடிப்படையில் காணலாம். இதனை கல்வி நிலைமை, வருமான நிலைமை, பொருளாதாரம், அரசியல், நிர்வாகம், தோட்ட நிர்வாகம் போன்றவற்றில் இருந்து அறிய முடிகின்றது. இதனூடாக சமூக பாதுகாப்பு திட்டங்களையும் சமூகப்பாதுகாப்பு செயலொழுங்குகளையும் அம்மக்கள் எவ்வாறு பெற்றுக் கொள்கின்றார்கள் என்பதனையும் அதனூடான எதிர்வினைகள் எவ்வாறு அமைகின்றன என்பதையும் இப்பிரதேசத்தினுடைய பிரச்சினையை மையப்படுத்திய தரவுகள் ஊடாக எம்மால் உறுதி செய்ய முடிகின்றது. இவ்வாறான விடயங்களைக் கொண்டு மேலே முன்மொழியப்பட்ட பரிந்துரைகளை அரச சார்பான மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும், சமூக சேவையினை மையமாக கொண்ட தொண்டு நிறுவனங்களும் மேற்கொள்வதன் ஊடாக சமூகப் பாதுகாப்பு என்பதனை மலையக தோட்டப்புறங்களில் உறுதிபடுத்தப்படலாம். தற்போதைய நிலையில் மலையகத்தில் கல்வி வீதமானது அதிகரித்து வருகின்றதை மலையகம் சார்ந்த சமூகப் பிரச்சினைகளுக்கு ஒரு முன் நிபந்தனையாக காணப்படுகின்றது. மேலே முன்வைக்கப்பட்ட தரவுகளின்படி இதனை ஆதாரம் காட்டலாம்.

சமூகப் பாதுகாப்பு செயற்றிட்டங்களை தோட்டப்புறங்களுக்கு கொண்டு சேர்க்கவும் அதனை ஏற்று தோட்டப்புறங்களில் உள்ள மக்கள் இணைந்து செயற்படுத்தவும் தற்போதைய சூழலில் கல்வி மிக பெரும் இடத்தினை வகிக்கின்றது எனக் கூறலாம். வறுமைகோட்டின் கீழ் வாழும் மக்களின் பொருளாதார, சமூக, வாழ்வாதாரத்தினை உயர்த்தும் வகையில் வழங்கப்படும் சமூகப் பாதுகாப்பு திட்டங்களை கொண்டு சேர்க்கும் பணியினை கல்விக் கற்ற

தலைமுறையினர் அடுத்த நிலைக்கு கொண்டு சென்றால் இந்நிலைமையில் மாற்றமொன்று ஏற்படலாம். ஒட்டுமொத்தமாக நோக்கும்போது சமூகத்தின் பாதுகாப்பு என்பது சமுதாயங்கள் தேவைகளின் அடிப்படையில் மட்டுமன்றி தேசிய ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் இணைவதனைக் குறிக்கின்றது. அதற்கு ஒவ்வொரு தனி மனிதனுடைய சமூகப் பாதுகாப்பும் உறுதிபடுத்த வேண்டும். அதனடிப்படையில் மலையக மக்களின் வாழ்க்கையும் சமுதாயம் என்றடிப்படையில் மேலெழும் போது எதிர்காலத்தில் நிச்சயமாக சமூகப் பாதுகாப்பு என்பதும் உறுதிப்படுத்தப்படும்

**உசாத்துணைகள்**


அந்தனி ஜீவா. (1988). மலையக மேம்பாட்டு செயற்றிட்டம். *கொழுந்து இதழ்,*

இராஜேஸ்கண்ணன், இ. (2013). *கிராமியம் - கல்வி–மேம்பாடு சமூகவியல் பார்வைகள்.* சாத்வீக சுருதி.

கணேசமூர்த்தி, எம். (2010). *மலையக மக்களின் சமூக பொருளாதாரம்: ஒரு வரலாற்று பார்வை.* சிவலிங்கம் ஞாபகார்த்த பதிப்பகம்.

கிருசாயிதன். ம. (2017, January 09). *அபிருத்தி பற்றிய கோட்பாடுகளும் தற்கால நடைமுறையின் பொருத்தப்பாடும்.* http://www.battinews.com/2017/01/blog-post_136.html?m=1

கிருஸ்ணமோகன்,த. (2008). *இலங்கைப் பெருந்தோட்ட தொழிற்சங்க இயக்கங்கள்.* குமரன் புத்தக இல்லம்.

கீத பொன்கலன்,ச. (2004). *இருபத்தோராம் நூற்றாண்டில் மலையகத்தமிழர் எதிர்நோக்கும் சவால்கள்.* லியோ மார்கா ஆஸ்ரம் பண்டாரவளை.

சடகோபன்,இரா.(2014). *கண்டிச் சீமையிலே.* எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ்.

சண்முகம், எம். (2022, June 10). மலையக மரபில் இன்றும் மாறாத பெருந்தோட்டத்துறையினர் . *தினகரன்.* 2022, ஜுன் 10ம் திகதி http://www.thinakaran,lk

சமுர்த்தி அதிகாரசபை சேவைகள். (2020, July 21). *சமுர்த்தி அதிகார சபையின் சேவைகள்.* http://www.samurthi.gov.lk

சாரல் நாடன், (1990). *மலையகத்தமிழர்.* சாரல் வெளியீட்டகம்

சாரல் நாடன், (1997). *மலையகம் வளர்த்த தமிழ்.* சாரல் வெளியீட்டகம்.

சாரல் நாடன், (2003). *மலையகத்தமிழர் வரலாறு.* சாரல் வெளியீட்டகம் .

சிவலிங்கம் இர. (2000 Febraury 20). மலையக சமூக எழுச்சி *மலையக பரிசுக் கட்டுரைகள்*

தெளிவத்தை ஜோசப், (2015 தயரெயசல 17). மலையக அரசியலும் அபிவிருத்தியும். *அகிலம் கலை இலக்கிய ரசிகர் மன்றம்.*

சொர்ணவல்லி, பத்ம நாம ஐயர். (1984). *இலங்கையில் தோட்டப்புற பள்ளிக்கூடங்களின் கல்வி அமைப்பும் பிரச்சினைகளும்* .தமிழியல் பதிப்பகம்.

பாலகிருஸ்ணன் (1984).மலையக வரலாற்றில். *மழைச்சாரல் இதழ்.*

மலையக சமூக ஆய்வு மையம் .(2013, May 12). பெருந்தோட்ட தொழிலாளர்களின் உழைப்பு (களம் -2). *மலையக சமூக ஆய்வு மையம்*

மலையக சமூக ஆய்வு மையம். (2014, July 18). கூட்டு ஒப்பந்தமும் மலையக சமூகமும் .(களம் -3) *மலையக சமூக ஆய்வு மையம்*

மூக்கையாஇ மா.செ. (1991). *இன்றைய மலையகம்.* பீ.ஆர்.வித்தோகிராபர்ஸ்.

மொஹம்மத் மஹீஸ், (2020). *அபிவிருத்தி சமூகவியல் ஓர் அறிமுகம்.* எக்ஸலன்ட் பப்ளிகேசன்.

வசந்தகுமாரி, சி. (2015). பெருந்தோட்டத் துறையின் மக்கள் பாதுகாப்பு. *சிகரம்*

விஜயகுமார், ப.(2013, September 12). *மலையக மக்களின் சமூகப் பாதுகாப்பும் அரசியல் தலைமைத்துவமும்* .யாழ் அன்பு https://www.yarl.com

ரெஜீனா, ஆர். (2022, January 16).மலையக மாணவர்களின் கல்வி நிலையில் எதிர்நோக்கும் சவால்கள். *வீரகேசரி*. http://www.virakesari.lk

Annual report 2020/Central Bank of Sri Lanka.(2020,November 20). கொடுப்பனவு மற்றும் தீரப்பனவு முறைகள் https://www.cbsl.gov.lk

Ellis. F. (2001). *Rural livelihoods and diversity in developing countries*. Oxford University Press.

Franklin.D.Roosevelt . (1935). *Privatization of the social security system*.Oxford University

Industrial Development Board.(2012, March 22). பிராந்திய அபிவிருத்தியும் உட்கட்டமைப்பும் https://www.idb.gov.lk

Jayabalan.N.(2022). *Rural sociology*. Atlanic Publishers and Distributors.

Marcus Power. (2007). *Community energy and sustainable energy*. Oxford University

Povertyportal. (2010, August 10). *community restoration and development* . http://www.povertyportyportal.lk

Rajendra k. Sharma. *Rural sociology*. Atlanic Publishers and Distributors.

Silkimra,S. (2019, July 08). social security; meaning, definition, characteristics, objectives, and functions. http://www.businessmanageentideas.com

Social Security Board, (2021, May of 21). *சுரக்கும மற்றும் ஆரஸ்ஸாவ திட்டங்களும் அதன் நன்மைகளும்.* http://www.ssb.gov.lk

Social Security Board. (2021, September 20). *சமூக பாதுகாப்பு சபை சட்டஏற்பாடு.* http://citizenslanka.org

*Social security power* (2022, June25). *janasaviye* http://www.vliz.be/imisdocs/publications/74377

Social security Board , (2021 April 20). social security board activities. https://www.gic.gov.lk

Social security board.(2022,June 28). *social security replacement and statement* http://www.ssa.gov

# விவாகரத்தான பெண்களின் வாழ்வில் ஏற்படுத்தப்படும் உளவியல் தாக்கங்கள்: ஏறாவூர்பற்று பிரதேச செயலகப்பிரிவை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**அரியரெத்தினம் அணேஜா**
முதுதத்துவமாணி ஆய்வாளர்
தத்துவவியல் துறை,
கலை கலாசார பீடம்,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
*anejaariyarethnam@mail.com*

## ஆய்வுச் சுருக்கம்

இன்றைய உலகில் அனைத்து நாடுகளிலும் விவாகரத்து எனும் பிரச்சினையானது பொதுவானதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் இப்பிரச்சினை தவிர்க்க முடியாத ஒன்றாகவும் காணப்படுகின்றது. திருமணபந்தத்தில் இணைகின்ற அனைவரது எதிர்பார்ப்பும் இறுதிவரை தம் துணையோடு இணைந்து சிறப்பான வாழ்க்கையினை வாழவேண்டும் என்பதே ஆகும். இருப்பினும்கூட திருமணபந்தத்தில் இணைந்த நபர்கள் தங்களின் திருமண உறவை சட்டரீதியாக முடித்துக்கொள்ளும் இறுதிக் கட்டமான விவாகரத்திற்கு செல்லும் நிலையும் சிலரது வாழ்வில் தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிடுகின்றது. கணவன் மனைவியரிடையே ஏற்படுகின்ற கருத்து முரண்பாடுகள், புரிந்துணர்வின்மை, கடமைகளிலிருந்து விலகிக்கொள்ளுதல், விழுமியங்களில் நம்பிக்கையின்மை என்பது ஒருவர்மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றபோது திருமண வரையறைகளையும், அவற்றுக்கான கடப்பாடுகளிலும் இருந்து விடுபடுகின்ற எண்ணம் தலைதூக்குகின்றது. இதுவே விவாகரத்துக்குரிய அடிப்படைகளாக அமைகின்றன. விவாகரத்தின் மூலம் பெண்கள், ஆண்கள், விவாகரத்தான பெற்றோரின் பிள்ளைகள், அவர்களது குடும்பம் எனப் பலரும் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றார்கள். அதிலும் குறிப்பாக விவாகரத்தான பெண்கள் தம் வாழ்வில் பல்வேறுவகையான சவால்களை எதிர்கொண்டு வருகின்றார்கள். அதில் உளவியல் ரீதியான பிரச்சினைகள், சமூக ரீதியான பிரச்சினைகள், பொருளாதார ரீதியான பிரச்சினைகள் மற்றும் ஒழுக்கவிழுமிய ரீதியான பிரச்சினைகள் எனப் பல அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இதன்பொருட்டு இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கே உள்ள ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவில் விவாகரத்தானவர்களின் எண்ணிக்கையானது அதிகரித்துச் செல்வதனைக் ஆய்வுப்பிரச்சினையாகக்கொண்டு இவ்வாய்வானது வடிவமைக்கப்பட்டுள்ளது. விவாகரத்தான பெண்கள் உளவியல் ரீதியாக எதிர்கொள்ளும் சவால்கள் எவை? எனக் கண்டறிந்து அதற்கான தீர்வினை எய்திக்கொள்வதனை பிரதான நோக்காக்கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இங்கே முதலாம் நிலைத் தரவு மூலங்களாக வினாக்கொத்து, நேர்காணல் போன்றனவும் இரண்டாம் நிலைத் தரவுகளாக புள்ளிவிபரத்திரட்டு, இணையத்தளம் மற்றும் ஆய்வுக்கட்டுரைகளும் வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டு பண்புசார் மற்றும் அளவுசார் ஆய்வு முறையியலும் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவில் விவாகரத்தான பெண்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான காரணங்கள் யாவை? விவாகரத்தான பெண்கள் எதிர்கொள்ளும் உளவியல் தாக்கங்கள் எவை? விவாகரத்தான பெண்களின் வாழ்வில் ஏற்படும் உளவியல் தாக்கங்களிற்கான தீர்வினை எவ்வாறு அடைந்துகொள்வது? என்பவற்றினை ஆய்வு வினாக்களாகக்கொண்டு இவ்வாய்வு முன்நகர்த்தப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *விவாகரத்து, பெண்கள், உளவியல் தாக்கம், திருமண விடுப்பு*

## ஆய்வு அறிமுகம்

குடும்பம் என்பது ஒரு சமூக நிறுவனமாகும். இத்தகைய குடும்பவிருத்திச் செயற்பாட்டில் திருமணம் என்பது முக்கியமான ஒரு அலகாகும். திருமணம் என்பது வெறுமனே இருவரை இணைத்து விடுதல் என்ற ஒப்பந்தத்தோடு நின்றுவிடாமல் இரு மனங்களையும், இரு குடும்பங்களையும் இணைக்கின்ற தார்ப்பரியமாக அமைகின்றது. திருமணத்தின்

இறுக்கத்தன்மைக்கான தீர்வே விவாகரத்து ஆகும். விவாகரத்து தொடர்பாக பல்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. ஸ்கொட் (W.P.Scott) என்பவர் விவாகரத்து தொடர்பாகக் கூறுகையில் ''திருமண உறவினை முறிப்பதற்காக ஒழுங்கமைக்கப்பட்டதும் நிறுவனமயமாக்கப்பட்டதும் இருபாலாரும் மறுமணம் மேற்கொள்வதற்காக உரிமை வழங்குவதும் விவாகரத்து ஆகும்'' என கூறுகின்றார். வலஸ் வலஸ் (Wallace and Wallace) என்பவர் ''எப்போது திருமணம் வாழ்க்கையின் அடித்தளத்தைக் கொண்டிருக்காது போகின்றதோ அது விவாகரத்தில் முடிகின்றது'' என கூறுகின்றார் (Shankar Rao, 2004:334).

பொதுவாக சமூகத்தில் விவாகரத்து அதிகரிப்பதற்கான பல காரணங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் வன்முறைகள், சந்தோசமின்மை, கருத்து முரண்பாடுகள், தொடர்ச்சியான சண்டை சச்சரவுகள், குழந்தையின்மை, திருமணத்தின் பின்னரான சோரம்[1] (Adultery Life), போதைப்பொருளுக்கு அடிமையாதல், பாலியல் தொந்தரவு, சந்தேகம் போன்ற அடிப்படைகளில் ஏற்படுகின்றது. திருமணமுறிவுகள் சமூகத்தில் பிரிந்து வாழுதல், கைவிடுதல், ஒற்றுமையில்லாமல் ஒரேவீட்டில் வாழுதல், விவாகரத்து போன்ற பல வடிவங்களில் காணப்படுகின்றது. இதில் இவ் ஆய்வானது சட்டரீதியாக விவாகரத்தான பெண்களை மையப்படுத்தியதாக அமைகின்றது. குறிப்பாக அப் பெண்களின் வாழ்வில் அவர்கள் எதிர்கொள்ளும் உளவியல் தாக்கங்களை மையப்படுத்தியதாக இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

விவாகரத்தினால் ஏற்படும் பின்விளைவுகள் விவாகரத்தான பெண்களை உளவியல் ரீதியாகப் பாதிக்கின்றது என்பது ஆய்வுப் பிரச்சினையாக அமைந்துள்ளது. ஆய்வுப் பிரச்சினையினை அடையாளம் காணும்முகமாக மேற்கு மாகாண சமூக சேவைகள் இயக்குனர் அனுஷா கோகுல பெர்னான்டோ அவர்களின் பிரச்சினைக்கூற்று இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது. அதாவது அவர் விவாகரத்து தொடர்பாக குறிப்பிடும்போது ''இலங்கையில் விவாகரத்து செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையானது நாளொன்றுக்கு 400 ஆக அதிகரித்து செல்வதாக குறிப்பிட்டுள்ளார். திருமணமான ஒரு வருடத்துக்குள் பதிவு செய்யப்பட்ட விவாகரத்து வழக்குகளின் எண்ணிக்கையானது சமகாலத்தில் உயர்ந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு விவாகரத்தானவர்களில் பதினெட்டு வயதுக்குட்பட்ட 3890 பேர் உள்ளதாகவும் விவாகரத்து ஒரு தீவிரமான சமூகப் பிரச்சினையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்'' (அனுஷா கோகுல பெர்னான்டோ, 2016).

**ஆய்வு வினாக்கள்**

ஆய்வுப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு, அதிலிருந்து ஆய்வுக்குட்படுத்தப்படும் ஆய்வு வினாக்கள் வருமாறு காணப்படுகின்றன.

---

[1] திருமணத்தின் பின்னரான சோரம்- திருமணத்தின் பின் கணவன் அல்லது மனைவி வேறு ஒரு நபருடன் தொடர்ந்து தாம்பத்திய வாழ்க்கையை நடாத்துதல்.

***பிரதான வினா***

- ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள விவாகரத்தான பெண்கள் உளவியல் தாக்கங்களிற்கு உள்ளாகின்றார்களா?

***துணை வினாக்கள்***

- ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவில் விவாகரத்தான பெண்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான காரணங்கள் யாவை?
- ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள விவாகரத்தான பெண்கள் எதிர்கொள்ளும் உளவியல் தாக்கங்கள் எவை?
- ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள விவாகரத்தான பெண்களின் வாழ்வில் ஏற்படும் உளவியல் தாக்கங்களிற்கான தீர்வினை எவ்வாறு அடைந்துகொள்வது?.

**ஆய்வு நோக்கங்கள்**

***பிரதான நோக்கம்***

- ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள விவாகரத்தான பெண்கள் உளவியல் தாக்கங்களிற்கு உள்ளாகின்றார்களா? என்பதைக் கண்டறிதல்.

***துணை நோக்கங்கள்***

- ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவில் விவாகரத்தான பெண்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான காரணங்களை கண்டறிதல்.
- ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள விவாகரத்தான பெண்கள் எதிர்கொள்ளும் உளவியல் தாக்கங்களைக் கண்டறிதல்.
- ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள விவாகரத்தான பெண்களின் வாழ்வில் ஏற்படும் உளவியல் தாக்கங்களிற்கான தீர்வுகளைக் கண்டறிதல்.

**ஆய்வுக் கருதுகோள்**

‘‘ஏறாவூர்பற்று பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட விவாகரத்தான பெண்கள் உளவியல் ரீதியாக பல்வேறு தாக்கங்களிற்கு உள்ளாகின்றார்கள்.’’

**ஆய்வு முறையியல்**

ஆய்வுப் பிரதேசத்தைச் சேர்ந்த விவாகரத்தான பெண்களுடன் கலந்துரையாடல்கள், நேர்காணல்கள், வினாக்கொத்து முறைமை என்பவற்றின் அடிப்படையில் முதலாம் நிலைத் தரவுகளும் ஆய்வுடன் சம்பந்தப்பட்ட தகவல்களை உள்ளடக்கிய நூல்கள், சஞ்சிகைகள், அறிக்கைகள், பத்திரிகைகள் மற்றும் ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவிலிருந்து பெறப்பட்ட புள்ளிவிபரவியல் திரட்டுக்கள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகளும்

பயன்படுத்தப்பட்டு இவ்வாய்வானது அளவுசார், பண்புசார் ஆய்வு முறையியல்களைக் கையாண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதாவது இணைந்த முறைமை (Mixed Method Research) பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வுப்பிரதேசத்திலுள்ள 39 கிராமசேவகர் பிரிவிலும் இருந்து எளிய எழுமாற்று மாதிரி முறை (Simple Random Sampling) மூலம் விவாகரத்தாகிய 100 பெண்கள் மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் Excel தரவுத்தளத்தினை பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

"Patrick F. Fagan and Aaron Churchill" ஆகியோர் இணைந்து 2012ஆம் ஆண்டு "The Effects of Divorce on Children" எனும் தலைப்பில் அமெரிக்காவினை மையப்படுத்தி ஆய்வொன்று வெளியிடப்பட்டுள்ளது. இதில் விவாகம் என்றால் என்ன? விவாகரத்து என்றால் என்ன? இளம் சிறுவர்கள் மத்தியில் எவ்வாறாக உள்ளது என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதில் பெற்றோருக்கும் சிறுவர்களுக்கும் இடையில் விவாகரத்து எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது என்பது குறித்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதிலிருந்து ஆய்வுக்கு தேவையான விவாகம் மற்றும் விவாகரத்து தொடர்பான தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

"Marsha Kline Pruett, Tamra Y. Williams, Glendessa Insabella, and Todd D. Little" ஆகியோர் இணைந்து 2003ஆம் ஆண்டு "Family and Legal Indicators of Child Adjustment to Divorce Among Families With Young Children" எனும் தலைப்பில் ஆய்வொன்று வெளியிடப் பட்டுள்ளது. பெற்றோர்களின் விவாகரத்தானது வயதுவந்த சிறுவர்கள் மத்தியில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது என உளவியல் ரீதியான ஆராய்வதாக இது உள்ளது. அந்த அடிப்படையில் விவாகரத்தினால் ஏற்படும் உளவியல் தாக்கங்கள் தொடர்பாக இவ் ஆய்விலிருந்து தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

"Psychological Aspects of Widowhood and Divorce" எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் விவாகரத்து என்றால் என்ன? என்பது குறித்தும், இந்தியாவில் விவாகரத்து குறித்த பார்வை நிலை, விவாகரத்தான பெண்கள் அடைந்துகொள்ளும் உளவியல் தாக்கங்கள், உளவியல் சிகிச்சைமுறை போன்றன குறித்தும் பேசப்பட்டுள்ளது. இத் தரவுகள் ஆய்வினை வடிவமைக்க பயன்படுத்தப்பட்டுள்ளன (Trivedi et al., 2009: 37-49).

"The Impact of Divorce on Children" எனும் தலைப்பிலான ஆய்வில் பெற்றோர் விவாகரத்தும் மற்றும் சிறுவர்களின் நல்வாழ்வும் பற்றியும், அது எத்தனை விதமாக அதிகரித்து வந்தது என்பது குறித்தும் கோட்பாட்டு விளக்கமும், விவாகரத்து குறித்து பெற்றோரினுடைய பார்வை, பொருளாதாரரீதியாக விவாகரத்து எவ்வாறு பார்க்கப்படுகின்றது என்பவை ஆராயப்படுகின்றது. சிறுவர்கள் மத்தியில் பெற்றோரின் விவாகரத்து உளவியல் ரீதியாக, பொருளாதார ரீதியாக, சமூக ரீதியாக எத்தகைய பாதிப்பினை ஏற்படுத்துகின்றது என்பனவும் இவ் ஆய்வில் ஆராயப்படுகின்றது. இத் தரவுகள் ஆய்வினை வடிவமைக்க பயன்படுத்தப்பட்டுள்ளன (David Demo & Alan Acock, 1988:1-48).

"Effects of Parental Separation and Divorce on Very Young Children" எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் பெற்ரோரின் விவாகரத்து இளம்பராய சிறுவர்கள் மத்தியில் ஏற்படுத்தப்படும் தாக்கங்கள் விளக்கப்பட்டுள்ளது. பெற்றோர்களின் விவாகரத்து தொடர்பாகவும், அதனால் விவாகரத்தானவர்களும் அக்குடும்பங்களைச்சேர்ந்த சிறுவர்களும் எதிர்கொள்கின்ற தாக்கங்கள் குறித்தும் பேசப்படுகின்றது. இதில் பெண் சிறுவர்கள் மற்றும் ஆண் சிறுவர்களை ஆய்விற்குள் உட்படுத்தியிருக்கின்றார்கள். இந்த ஆய்வின் முடிவில் ஒரு குடும்பம் சிறுவர்களுக்கு எந்தளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது கண்டறியப்பட்டிருக்கிறது. பெற்றோர்களின் மணப் பிரிவானது சிறுவர்கள் தனித்துவிடப்படுவதற்கு காரணமாக அமைந்திருக்கின்றமை கண்டறியப்பட்டிருக்கிறது. இத் தரவுகள் ஆய்வினை வடிவமைக்க பயன்படுத்தப்பட்டுள்ளன (Alison Clarke et al., 2000:304-326).

**விவாகரத்து ஓர் அறிமுகம்**

இன்று விவாகரத்து என்பது உலகளாவிய ரீதியில் தடையின்றி அதிகரித்துச் செல்லும் விடயமாகும். விவாகரத்து என்பது சட்டரீதியான சொற்பதமாகும். அதாவது திருமணத்திலிருந்து சட்டரீதியாக விடுபட்டு தனியாக வாழ்வதற்கு நீதிமன்றத் தீர்ப்பு கூறப்பட்டு அதன்படி பிரிந்து வாழ்வதே விவாகரத்து எனப்படும். விவாகரத்து என்பது ஆங்கில மொழியில் 'Divorce' என்று பயன்படுத்தப்படுகின்றது. இச்சொல்லானது 'Divorhum' என்ற இலத்தீன் மொழிச்சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இதில; 'Dis' என்பது தனியாக என்றும், 'Vertere' என்பது திரும்புதல் என்ற கருத்தினையும் கொண்டது. எனவே திருமணத்தின் முடிவு நிலையை கருதுவதாக விவாகரத்து என்பது காணப்படுகின்றது. விவாகரத்து என்பது திருமணத்தை முடிவுக்கு கொண்டுவரும் நிறுவன மயப்படுத்தப்பட்ட ஒரு வழிமுறையாகும். நிரந்தரமற்ற முறையில் திருமணங்களை முடிவுக்குக் கொண்டுவரும் செயல்முறையில் பின்பற்றப்படும் விவாகரத்து என்பது கைவிடுதல், பிரிந்து வாழுதல், ஒற்றுமை இல்லாமல் ஒரே வீட்டில் வாழுதல் போன்ற திருமண முறிவு வடிவங்களில் இருந்து வேறுபட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது.

பிரிந்து வாழுதல் என்பது விவாகரத்திற்கு முந்திய நிலையாகும். தம்பதியினர் தனித்தனியே பிரிந்து வாழ்வரே தவிர அவர்களின் திருமணம் தொடர்ந்திருக்கும். பொதுவாக கணவன் அல்லது மனைவியின் உடல்நிலை, உளநிலை, பாதுகாப்பு, இன்பம் என்பன பாதிக்கப்படுவதால் கணவனும் மனைவியும் பிரிந்து வாழுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. பிரிந்து வாழ்பவர்கள் மறுமணம் செய்து கொள்ள முடியாது. விவாகரத்துப் பெற்றவர்கள் அல்லது கணவன் அல்லது மனைவியை இழந்தவர்கள் மறுமணம்செய்ய முடியும்.

கைவிடுதல் என்பது கணவனோ அல்லது மனைவியோ ஒருவர் கூட்டுறவு இன்றி ஒருவர் எவ்வித ஒப்புதலோ காரணமோ இன்றிப் பிரிதல் 'கைவிடுதல்' எனக் கருதப்படும். இது கோபம் அல்லது ஒத்த காரணங்களினால் கணவனோ மனைவியோ தற்காலிகமாக ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்திருத்தல் ஆகும். இதில் தம்பதியினரில் ஒரு துணைவர் குடும்பத்திலிருந்து விலகி இருத்தலே அதிகம் காணப்படுகின்றது. திருமணத்தில் இருந்து விடுபட்டு தனியாக வாழ்வதற்கு நீதிமன்றம் தீர்ப்பளிக்கும்வரை இந்நிலை தொடர்ந்து இருக்கும். உண்மையான

கைவிடுதல் நிலையை காண்பது அரிதாகும். இன்று கைவிடுதலும், தனியாக வாழ்தலும் ஆகிய இரண்டும் சேர்ந்த நிலையே இன்றைய காலகட்டத்தில் காணப்படுகின்றது.

ஒரே வீட்டினுள் ஒற்றுமையின்றி வாழுதல் என்பது ஒரே கூரையின் கீழ் தம்பதியர் ஒற்றுமை இன்றி ஒருவரோடு ஒருவர் கதைக்காமலும், ஒருவர் மீது ஒருவர் விருப்பமில்லாதவர்களாகவும் வாழுதலைக் குறிக்கும். அன்பு என்பது தம்பதியினரிடையே காணப்படமாட்டாது. இது சந்தோசமற்ற திருமணத்தினுள் தம்பதியினர் தொடர்ந்து வாழ்தலைக் கருதுகின்றது. இந்த நிலையானது பிள்ளைகளின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும் பொருளாதாரக் காரணங்களுக்காகவும் காணப்படும்.

விவாகரத்து என்பது திருமண பந்தத்தில் இணைந்த ஒரு ஆணும், ஒரு பெண்ணும் தமது திருமண வாழ்க்கை உறவை முடிவுறுத்துகின்ற ஒரு செயற்பாடாகும். அதாவது விவாகரத்தின் மூலம் இவர்கள் இருவருக்குமிடையில் இடம்பெறும் திருமணத்தை நீதிமன்றம் முடிவுறுத்தும். விவாகரத்தினை எடுத்தவர்கள் நீதிமன்ற உத்தரவின்படி தனியாளாக வந்ததன் பின்னர் சுதந்திரமாகத் தம் விருப்பத்தின் பேரில் மறுமணம் செய்துகொள்ளலாம். இருப்பினும் விவாகரத்து கோரியுள்ள பெண்கள் அவர்களுடைய திருமணத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கு முன்னர் கணவனிடமிருந்து சட்டரீதியான பிரிவுகளை மேற்கொண்டிருக்க வேண்டும் (லேணா தமிழ்வாணன், 1984:48).

**இலங்கையில் காணப்படும் விவாகரத்து தொடர்பான சட்டங்கள்**

சட்டம் என்பது ஒரு நிறுவன அமைப்பு முறையால் அந்நிறுவன ஆளுகை எல்லைக்குள் வாழும் அனைவரையும் ஒழுங்குபடுத்தும் விதிகள், நெறிமுறைகள் என்பவற்றைக் குறிக்கும். சட்டத்தின் முன் அனைவரும் சமமாகக் கருதப்படுவர். ஒரு குறிப்பிட்ட செயல் அல்லது செயல் குறிப்பு[2] குறித்த தண்டனையை வழங்கும் அதிகாரத்தை கொண்டிருப்பது சட்டத்தின் தனித்தன்மை ஆகும். கிரேக்க நாட்டு தத்துவவியலாளரான அரிஸ்ரோட்டில் ‘‘தனிமனிதர்களின் ஆட்சியைவிட சட்டத்தின் ஆட்சி மேலானது’’ எனக் கூறினார்.

இலங்கையிலுள்ள விவாகரத்து தொடர்பான சட்டங்களாக பின்வருவன காணப்படுகின்றன.

- 1907ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க பொதுத் திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டம்.
- 1952ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க கண்டிய திருமணம் மற்றும் விவாகரத்து கட்டளைச் சட்டம்.
- 1951ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க இஸ்லாமிய திருமணம் மற்றும் விவாகரத்துக் கட்டளைச் சட்டம்.

[2] செயல் குறிப்பு – ஒருவர் செய்த செயல்களின் ஆதாரம்

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

ஆய்வானது ஏறாவூர்பற்று பிரதேச செயலகப்பிரிவை மையப்படுத்தியதால் இங்கு காணப்படுகின்ற பல கிராமசேவகர் பிரிவிலும் இருந்து எளிய எழுமாற்று முறையில் மாதிரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் ஆய்வுப்பிரதேசத்தில் 2022ம் ஆண்டிற்குரிய புள்ளிவிபரவியல் கையேட்டில் உள்ளபடி விவாகரத்தாகிய பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கையில் மொத்தமாக 324 பெண்கள் காணப்படுகின்றனர். இதில் 100 பெண்கள் மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டு எளிய எழுமாற்று மாதிரி மூலம் தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது.

***வயது அடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட விவாகரத்தான பெண்கள் பற்றிய விபரம்***

ஆய்வுப் பிரதேசத்தில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட விவாகரத்தான பெண்களின் வயதுப்பிரிவு குறித்து நோக்கும்போது (21-30) வயதுப்பிரிவினையுடையவர்களில் 25 விவாகரத்தான பெண்களும் (31-40) வயதுப்பிரிவினையுடையவர்களில் 53 விவாகரத்தான பெண்களும் (41-50) வயதுப்பிரிவினையுடையவர்களில் 19 பெண்களும் (51-60) வயதுப்பிரிவினையுடையவர்களில் 03 பெண்கள் பயனாளிகளாக தெரிவுசெய்யப்பட்டனர். இதில் அதிகளவு விவாகரத்தானவர்களில் (31-40) வரையான வயதினை உடையவர்களாவர்.

***வயது அடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட விவாகரத்தான பெண்கள் பற்றிய விபரம்***




**வரைபடம் 1**
மூலம்: கள ஆய்வுத் தகவல் 2023

***மதத்தின் அடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட விவாகரத்தான பெண்கள் பற்றிய விபரம்***

ஆய்வுப் பிரதேசத்தில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 பயனாளிகளினுடைய மதம் அல்லது சமயத்தினை நோக்கும்போது 05 பயனாளிகள் முஸ்லிம்களாகவும், 27 பயனாளிகள் கிறிஸ்தவர்களாகவும், 68 பயனாளிகள் இந்துக்களாகவும் காணப்படுகின்றனர். ஆய்வுப் பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் இங்கு அதிகமாக இந்துக்களே விவாகரத்துப் பெற்றவர்களாக காணப்படுகின்றனர்.

*மதத்தின் அடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட விவாகரத்தான பெண்கள் பற்றிய விபரம்*




**வரைபடம் 2:** மூலம்: கள ஆய்வுத் தகவல் 2023

## *விவாகரத்திற்கான காரணங்களைக் கண்டறிதல்*

ஏறாவூர்பற்று பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட விவாகரத்தான பெண்களிடம் இருந்து வினாக்கொத்து மற்றும் நேர்காணலின் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டு விவாகரத்திற்கான காரணங்கள் கண்டறியப்பட்டது.

*கணவன் மனைவியிடையே புரிந்துணர்வு காணப்பட்டது*

இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 பயனாளிகளில் 05 பயனாளிகள் முழுமையாக ஏற்கின்றேன் என்றும், 06 பயனாளிகள் ஓரளவு ஏற்கின்றேன் என்றும் 89 பயனாளிகள் ஏற்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். இதன் அடிப்படையில் அதிகம் விவாகரத்தானவர்கள் மத்தியில் புரிந்துணர்வு காணப்படவில்லை என்பது தெளிவாகின்றது.

*கணவன் மனைவியிடையே அடிக்கடி சண்டை ஏற்படும்நிலை காணப்பட்டது*

இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 பயனாளிகளில் 73 பயனாளிகள் முழுமையாக ஏற்கின்றேன் என்றும், 16 பயனாளிகள் ஓரளவு ஏற்கின்றேன் என்றும் 11 பயனாளிகள் ஏற்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். இதன் அடிப்படையில் விவாகரத்தானவர்கள் மத்தியில் அடிக்கடி சண்டை ஏற்படும் நிலமை காணப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

*கணவன் மனைவியிடையே பேச்சுவார்த்தை குறைவாக காணப்பட்டது*

இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 பயனாளிகளில் 53 பயனாளிகள் முழுமையாக ஏற்கின்றேன் என்றும், 18 பயனாளிகள் ஓரளவு ஏற்கின்றேன் என்றும் 29 பயனாளிகள் ஏற்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். இதன் அடிப்படையில் விவாகரத்தானவர்கள் மத்தியில் கருத்துக்களை பரிமாறிக்கொள்ளும் தன்மை குறைவாக காணப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

*கணவருக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது*

இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 பயனாளிகளில் 68 பயனாளிகள் முழுமையாக ஏற்கின்றேன் என்றும், 19 பயனாளிகள் ஓரளவு ஏற்கின்றேன் என்றும் 13 பயனாளிகள் ஏற்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். இதன் அடிப்படையில் அதிகம் விவாகரத்தான பெண்களின் கணவர் மத்தியில் மது அருந்தும் பழக்கம் காணப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

*கணவருக்கு வேறு ஒரு நபருடன் தொடர்பு காணப்பட்டது*

இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 பயனாளிகளில் 14 பயனாளிகள் முழுமையாக ஏற்கின்றேன் என்றும், 33 பயனாளிகள் ஓரளவு ஏற்கின்றேன் என்றும் 53 பயனாளிகள் ஏற்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். இதன் அடிப்படையில் அதிகம் விவாகரத்தானவர்கள் மத்தியில் சோரவாழ்வோ அல்லது வேறு ஒருவருடன் தொடர்பு நிலையோ காணப்படவில்லை என்பது தெளிவாகின்றது. இருப்பினும் 14 பேர் தங்களுடைய விவாகரத்திற்கு சோரவாழ்வும் காரணம் என்பதை தெரிவித்துள்ளனர். அதில் 33 பயனாளிகள் அதனை ஓரளவு ஏற்கின்றேன் என்று கூறியிருப்பதும் சோரவாழ்வானது ஆய்வுப்பிரதேசத்தில் விவாகரத்திற்கு காரணமாகியிருப்பதனை அறிய முடிகின்றது.

*பாலியல் தொந்தரவு காணப்பட்டது*

இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 பயனாளிகளில் 27 பயனாளிகள் முழுமையாக ஏற்கின்றேன் என்றும், 44 பயனாளிகள் ஓரளவு ஏற்கின்றேன் என்றும் 29 பயனாளிகள் ஏற்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். இதன் அடிப்படையில் அதிகம் விவாகரத்தானவர்கள் மத்தியில் முழுமையான பாலியல் தொந்தரவு காணப்படாவிட்டாலும் அவர்களிடையே குறிப்பிட்டளவு பாலியல் ரீதியான தொந்தரவு காணப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் விவாகரத்து அதிகரிப்பதற்கு இதுவும் காரணமாக அமைந்துள்ளது.

*வேறு காரணங்களைக் கண்டறிதல்*

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 பயனாளிகளிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் சிலர் தாங்கள் எதிர் கொள்ளும் பொருளாதார பிரச்சினைகளை குறிப்பிட்டனர். தங்களின் பிள்ளைகள் தங்களது குடும்பங்களை வலுப்படுத்துவதற்காக வேலைக்குச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அதனால் பாடசாலையில் இருந்து இடைவிலகியதாகவும் தெரிவித்துள்ளனர். சில பெண்கள் தாங்கள் சுயதொழில் செய்வதற்கான எந்தவித உதவியும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து கிடைக்கப்பெறவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

X எனும் பெற்றோர் தன்னுடைய பிள்ளை (16 வயது) மது அருந்துதல் மற்றும் புகைப்பிடித்தல் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். X எனும் நபர் தன்னுடைய கணவர் தன் 12 வயதுடைய மகளை பாலியல் ரீதியான துஸ்பிரயோகம் செய்ததாகவும் அதனால் அவர் விவாகரத்து கோரியதாகவும் குறிப்பிட்டார். தந்தை இவ்வாறு நடந்தகொண்டதைத் தொடர்ந்து மகள் மிகவும் பாதிக்கப்பட்டார் எனவும் குறிப்பிட்டார். மேலும்

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஒரு பெண் தனக்கு நீரிழிவு நோய் இருப்பதாகவும், அதனால் தன்னால் தாம்பத்திய வாழ்வில் ஈடுபட முடியாது என்பதனால் தன்னுடைய கணவர் விவாககரத்துக் கோரியதாகவும் அவர் தன் பூரண சம்மதத்துடன் விவாகரத்து வழங்கியதாகவும் கூறினார். அவர்கள் காதலித்து திருமணம் செய்துகொண்டார்கள் எனவும் அதனால் கணவன் தன்னிடம் விவாகரத்து கோரியதும் தான் உடனே விவாகரத்திற்கு சம்மதித்ததாகவும் கூறினார். தற்போது கணவன் மறுமணம் செய்துவிட்டதாகவும் கூறினார்.

இந்த அடிப்படையில் பார்க்கும் போது அனேகமான ஆய்வுப் பிரதேசத்தில் பெண்களும், ஆண்களும் விவாகரத்து பெறுவதற்கான காரணங்களாக வன்முறைகள், சந்தோசமின்மை, கருத்து முரண்பாடுகள், தொடர்ச்சியான சண்டை சச்சரவுகள், குழந்தையின்மை, திருமணத்தின் பின்னான சோரம், போதைப்பொருள் பாவனை, சந்தேக குணம், அக்கறை இன்மை, புரிந்துணர்வு இன்மை, பாலியல் தொந்தரவு, சமூகவலைத்தளங்களுக்கு அடிமையாதல், தாம்பத்திய உறவில் திருப்தியின்மை, பாரிய நோய் நிலமைகள் போன்றவற்றை குறிப்பிடமுடியும்.

***விவாகரத்தின் பின் பெண்கள் எதிர்கொள்ளும் உளவியல் தாக்கங்களைக் கண்டறிதல்***

ஏறாவூர்பற்று பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட விவாகரத்தான பெண்களிடம் இருந்து வினாக்கொத்து மற்றும் நேர்காணலின் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டு விவாகரத்தின் பின் பெண்கள் எதிர்கொள்ளும் உளவியல் தாக்கங்கள் கண்டறியப்பட்டது.

*விவாகரத்து பெற்றதன் பின்னர் சந்தோசமாக இருக்கின்றேன்*

இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 பயனாளிகளில் 21 பயனாளிகள் முழுமையாக ஏற்கின்றேன் என்றும், 34 பயனாளிகள் ஓரளவு ஏற்கின்றேன் என்றும் 45 பயனாளிகள் ஏற்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். இதன் அடிப்படையில் விவாகரத்தானவர்களில் அதிகமானோர் சந்தோசமாக இல்லை என்பது இவ் ஆய்வில் தெளிவாகின்றது.

*சமூகம் என்னை புறந்தள்ளுவதாக உணர்கின்றேன்*

இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 பயனாளிகளில் 77 பயனாளிகள் முழுமையாக ஏற்கின்றேன் என்றும், 17 பயனாளிகள் ஓரளவு ஏற்கின்றேன் என்றும் 06 பயனாளிகள் ஏற்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். இதன் அடிப்படையில் விவாகரத்தானவர்களில் அதிகமானோர் சமூகம் விவாகரத்தினை இன்னும் முழுமையாக ஏற்கவில்லை என்னும் மனநிலையில் உள்ளனர். அத்தோடு சமூகம் அவர்களை புறந்தள்ளுவதாகவும் உணர்கின்றனர் என்பது இவ் ஆய்வில் தெளிவாகின்றது.

*எதிர்கால வாழ்வு குறித்து அதிகம் கவலைப் படுகின்றேன்*

இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 பயனாளிகளில் 92 பயனாளிகள் முழுமையாக ஏற்கின்றேன் என்றும், 08 பயனாளிகள் ஓரளவு ஏற்கின்றேன் என்றும் தெரிவித்துள்ளனர். இதன் அடிப்படையில் விவாகரத்தானவர்களில் அதிகமானோர் தங்களது எதிர்கால வாழ்வு குறித்து அதிகம் கவலைப்படுகின்றார்கள் என்பது இவ் ஆய்வின் மூலம் தெளிவாகின்றது.

*அடிக்கடி கோபமடைதல் அல்லது அதிதீவிர கோபமடையும் தன்மை உண்டு*

இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 பயனாளிகளில் 19 பயனாளிகள் முழுமையாக ஏற்கின்றேன் என்றும், 42 பயனாளிகள் ஓரளவு ஏற்கின்றேன் என்றும் 39 பயனாளிகள் ஏற்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். இதன் அடிப்படையில் விவாகரத்தான பெண்கள் அதிதீவிர கோபமடைதல் அல்லது அடிக்கடி கோபமடையும் தன்மையினை பூரணமாக கொண்டிருக்கவில்லை ஆயினும் ஓரளவு கொண்டிருக்கின்றனர். இருப்பினும் 19 பெண்கள் அதிதீவிர கோபமடைதல் அல்லது அடிக்கடி கோபமடையும் தன்மையினை பூரணமாக ஏற்றுக்கொண்டுள்ளனர். இது விவாகரத்தானது பெண்களின் அதிதீவிர கோபமடைதல் அல்லது அடிக்கடி கோபமடையும் தன்மையில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது அதாவது அவர்களை உளரீதியான பலவீனத்திற்குள் கொண்டுசென்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

*அதிக அச்சம் கொள்ளுதல், விரைவில் பயப்படுதல்*

இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 பயனாளிகளில் 27 பயனாளிகள் முழுமையாக ஏற்கின்றேன் என்றும், 16 பயனாளிகள் ஓரளவு ஏற்கின்றேன் என்றும் 57 பயனாளிகள் ஏற்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். இதன் அடிப்படையில் விவாகரத்தினால் பெண்கள் அதிக அச்சம் கொள்ளுதல், விரைவில் பயப்படுதல் நிலையினை கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகின்றது. இருப்பினும் மொத்தமாக 43 பேர் இந்நிலையினால் பாதிக்கபட்டிருப்பதனையும் நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

*கணவன் குறித்த ஏக்கம் உள்ளது*

இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 பயனாளிகளில் 78 பயனாளிகள் முழுமையாக ஏற்கின்றேன் என்றும், 13 பயனாளிகள் ஓரளவு ஏற்கின்றேன் என்றும் 09 பயனாளிகள் ஏற்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். இதன் அடிப்படையில் விவாகரத்தினால் பெண்கள் தம் கணவன் குறித்த ஏக்கம் கொண்டவர்களாக உள்ளனர். இது விவாகரத்தான பெண்களை உளரீதியான பலவீனத்திற்குள் கொண்டுசென்றுள்ளது என்பதனை உறுதிப்படுத்துகின்றது.

*தனித்திருக்க விரும்புதல்*

இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 பயனாளிகளில் 08 பயனாளிகள் முழுமையாக ஏற்கின்றேன் என்றும், 14 பயனாளிகள் ஓரளவு ஏற்கின்றேன் என்றும் 78 பயனாளிகள் ஏற்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். இதன் அடிப்படையில் விவாகரத்தான பெண்கள் தனித்திருத்தல் எனும் தன்மையினைக் கொண்டவர்களாகக் காணப்படவில்லை. இருப்பினும் மொத்தமாக 22 பெண்கள் தனித்திருத்தல் எனும் பண்பினை ஏற்றுக் கொண்டுள்ளனர். இதனால் விவாகரத்தானது அப் பெண்களை சமூக ரீதியான விலகல் தன்மைக்கு கொண்டு சென்று உளவியல் ரீதியாக தாழ்வு மனப்பாங்கு ஏற்பட வழியேற்படுத்தியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

*ஏனையோருடன் உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள விரும்பாமை*

இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 பயனாளிகளில் 44 பயனாளிகள் முழுமையாக ஏற்கின்றேன் என்றும், 39 பயனாளிகள் ஓரளவு ஏற்கின்றேன் என்றும் 17 பயனாளிகள்

ஏற்கவில்லை என்றும் தெரிவித்துள்ளனர். இதன் அடிப்படையில் விவாகரத்தினால் அனேகமான பெண்கள் மத்தியில் குறைந்தது ஒருவருடனாவது நல் உறவினை ஏற்படுத்திக்கொள்ளல் எனும் பண்பில் அதிகளவில் மாற்றம் ஏற்படவில்லை என்பது தெளிவாகின்றது. எனினும் 17 பெண்கள் தங்களுக்கு ஒரு உண்மையான நட்புறவுகூட இல்லை என்றும் தெரிவித்துள்ளனர். எனவே விவாகரத்தானது பெண்கள் மத்தியல் சமூகரீதியான விலகலை தோற்றுவித்து உறவுகள் மீதான வெறுப்புணர்வினை ஏற்படுத்தி அவர்களை உளவியல் ரீதியாக பாதித்துள்ளது என்பது இவ் விடயத்தைப் பொறுத்தவரையில் அவதானிக்க முடிகின்றது.

*அடிக்கடி குடும்பத்தாருடன் சண்டையிடுதல்*

இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 பயனாளிகளில் 10 பயனாளிகள் முழுமையாக ஏற்கின்றேன் என்றும், 58 பயனாளிகள் ஓரளவு ஏற்கின்றேன் என்றும் 32 பயனாளிகள் ஏற்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். இதன் அடிப்படையில் அனேகமான பெண்கள் அடிக்கடி குடும்பத்தாருடன் சண்டையிடுவதாக தெரிவித்துள்ளனர். மொத்தமாக 68 பெண்கள் அவ் இயல்பு உண்டு என்று தெரிவித்துள்ளனர். இவ் விடயத்தில் விவாகரத்தானது பெண்கள் மத்தியில் உளவியல் பலவீன நிலைக்கு கொண்டுசென்றுள்ளது அதாவது சண்டையிடும் இயல்பை வளர்த்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

விவாகரத்தினால் ஆய்வுப் பிரதேசத்திற்குட்பட்ட பெண்கள் எதிர்கொள்ளும் உளவியல் தாக்கங்களாக மன அழுத்தம், தாழ்வு மனப்பாண்மை, அதிக கவலை, எதிர்மறை சிந்தனைப்போக்கு, விரக்திநிலை, அச்சம், அதிக கோபம், எல்லோருடனும் சகஜமாக பழக முடியாமை, வெறுப்பு, சண்டையிடும் மனப்பான்மை, இலகுவில் கண்ணீர் விடுதல் போன்ற உளவியல் பலவீனங்களிற்கு தொடர்ச்சியாக அவர்கள் உட்பட்டுவருவது கண்டறியப்பட்டுள்ளது.

**பரிந்துரைகள்**

விவவாகரத்து என்பது தனிநபருக்கு இடையே இடம் பெற்றாலும் இப் பிரச்சினை சமூக கட்டமைப்பிலும் பாரிய பிரச்சனையை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும். ஆகவே இப்பிரச்சினையை தடுப்பதற்கான நடவடிக்கைகளை தெரிவிப்பது அவசியமாகும்.

அவ்வகையில் கணவனும் மனைவியும் தங்களுடைய பொறுப்புக்களையும், கடமைகயையும் உணர வேண்டும். அத்தோடு அவர்களின் பொறுப்புக்களையும், கடமைகளையும் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தக்கூடிய வல்லமையுள்ளவர்களாக மாற வேண்டும். தாம் சமூகத்தில் உயர்ந்த நிலையை அடைவதற்கு ஒருவருக்கொருவர் துணைபுரிதலே தனது தலையாய கடமையும், பொறுப்பும் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். கணவன், மனைவி ஆகிய இருவருக்குமிடையில் சிறந்த உறவைப் பேண வேண்டும். ஒருவரை ஒருவர் மதிக்கக்கூடிய அளவு அவர்களின் செயற்பாடுகள் காணப்பட வேண்டும். ஒருவரோடு ஒருவர் உரையாடுதல், அவர்களுடைய ஆசா பாசங்களைக் கேட்டறிதல், அவர்களின் உணர்வுகளுக்கும் விருப்பங்களுக்கும் முக்கியத்துவம் அளித்தல், அவர்களின் நிலைமைகளையும் அறிந்துக்கொள்ளக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். இருவருக்குமிடையில் நட்புணர்வுடன் கூடியதான உறவு காணப்பட வேண்டும். தங்களால்

இயன்றளவு ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தவேண்டும், அவர்களின் வெற்றிகளில் அவர்களை உற்சாகப்படுத்தி, தட்டிக்கொடுத்து, ஊக்கப்படுத்த வேண்டும். தோல்விகளில் அவர்களுடன் துணைநின்று வெற்றிக்கான வழியைக் காட்டுதல் வேண்டும். சிறிய தவறுகள்விடும் சந்தர்ப்பத்தில் அத்தவறுகளுக்குரிய பின்னணியை ஆராய்ந்து அவற்றை நிவர்த்தி செய்ய முற்பட வேண்டும். அவர்கள் விடுகின்ற தவறுகளின் விளைவுகளை அவர்களுக்கு எடுத்துக்கூற வேண்டும். அதைவிடுத்து அவர்களுக்கு வெறும் தண்டனையை மட்டும் வழங்குவதைத் தவிர்த்தல் வேண்டும். இவ்வாறு இருக்கும்போது விவாகரத்து என்பதனை நோக்கி தம்பதியினர் செல்லும் நிலை குறைவடைந்து விவாகரத்தினால் ஏற்படும் பின்விளைவுகளும் தாக்கங்களும் குறைவடையும் என்பது போன்ற பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன.

அதேபோன்று ஒரு பெண் இக்கட்டான நிலையில் விவாகரத்து பெற்றுக்கொண்ட பின் அவருக்கு சினேகமான சூழலை அமைத்துக்கொடுப்பது ஒரு சமூகத்தின் பாரிய பொறுப்பாகும். அவ்வாறான பொறுப்புக்களிலிருந்து விலகி, அவர்களை ஒதுக்கி வைத்தல், அவர்கள் மீது பழிசுமத்துதல், அவர்களுடன் சேராது இருத்தல் போன்றவாறான செயற்பாடுகள் மேலும் அவர்களைப் பாதிக்கின்ற செயல்களாக அமையுமே தவிர சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்பக் கூடியவர்களாக உருவாக்காது. சமூகத்திலுள்ளவர்கள் பெண்களையும் ஓர் சமூக அந்தஸ்த்தினராக நினைத்துப் பெண்களுக்கு ஆண்களைப் போன்று மதிப்பும், கௌரவமும் செலுத்த வேண்டும். அவர்களை சமூகம், பல அறிவாற்றல் நிகழ்ச்சிகளை நடாத்தி ஊக்கப்படுத்தல் வேண்டும். அவர்களுக்கு தொழில் வாய்ப்பை அவர்களது கல்வித் தகைமைகளுக்கேற்ப பெற்றுக் கொள்ளும் முன்னேற்ற நடவடிக்கைகளை அவர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.

அத்துடன் சமூகத்திலுள்ள ஒவ்வொரு பெண்ணும் ஏனைய பெண்களை மதித்து, ஆதரித்து அரவணைக்க வேண்டும். மணப் பெண்ணின் சம்மதத்தை மறுத்து பெற்றொரின் கட்டாயத்தின் பேரில் செய்யும் திருமணங்களை இல்லாதொழிக்க வேண்டும். ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள விவாகரத்தான குடும்பங்கள் குறித்த முழுத்தகவலையும் பிரதேச செயலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியாமல் போனது. அனேகமாக பிரதேச செயலத்திலும் சரி, கிராமசேவகரிடமும் சரி கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் குறித்த தரவுகளே பெரும்பாலும் பேணப்படுகின்றன. அவற்றிலும் முழுமையான தரவுகள் பேண்படவில்லை. எனவே விவாகரத்து என்பது சமூகத்தில் அதிகரித்துவரும் நடைமுறையில் உள்ள பிரச்சினை என்பதால் அது தொடர்பான தரவுகளை செவ்வனே சேகரித்தலும் அதில் ஆண்களையும் தரவுகளுக்குள் உட்படுத்துவதும் அவசியம் என்பதனையும் அறிந்து அரச நிறுவனங்கள் செயற்பட வேண்டும். விவாகரத்தான பெண்களுக்கான சுயதொழில் மற்றும் சிறுகுடிசைக் கைத்தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்கள் முன்வரல் வேண்டும். எழுத்தறிவற்ற, வேலையிழந்த, வேலையற்ற பெண்களுக்கு முதியோர் கல்வி, செய்முறைக் கல்வி, செயல்திறன் வளர்ச்சித் திட்டங்களை அதிகரிப்பதன் மூலமாக கூடுதலான முன்னேற்றங்களை பெண்கள் மத்தியில் ஏற்படுத்தி பெண்களின் தங்கி வாழும் நிலமையிலிருந்து மீட்டெடுத்தல்.

நாட்டின் சகலரதும் திருமணத்திற்கான வயதெல்லையை (18) பொதுவான வயதெல்லையாக ஆக்குவதோடு, சமத்துவமான ஆள்சார் சட்டங்களை அறிமுகப்படுத்தல் வேண்டும். பெண்கள் சட்டரீதியற்ற திருமணத்தால் எதிர்கொள்ளும் பாதிப்புக்கள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பெண்களை அடக்கி வைக்கும் பழைமை வாய்ந்த நாடோடிச் சட்டங்களை மாற்றியமைத்து சர்வதேச விழுமியங்களும் விதிமுறைகளுக்கும் ஒத்துப் போகக்கூடிய சட்டவாக்கம் கொண்டுவரப்படல் வேண்டும். இலங்கையில் திருமணம் மணமுறிவு தொடர்பான ஏனைய சிறப்புச்சட்டங்களில் உள்ளது போன்று முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்திலும் பலதாரமாணம் என்ற சட்டத்தை இல்லாதொழிக்க முஸ்லிம் சட்ட வரைவாளர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில் திருமணம், விவாகரத்து, பாராமரிப்பு, சொத்து தொடர்பாக பெண்களுக்கு காட்டப்பட்டுள்ள பாரபட்சத்தை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பெண்களும் மனிதர்கள் என்ற வகையில் திருமணத்திற்கான சம்மதமும் திருமணப்பதிவில் சம்மதத்திற்கான கையொப்பமும் பெண்களிடம் இருந்து பெறப்படுவதற்கான சட்டத்தை முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் எழுத்துருப்படுத்துவதற்கு முஸ்லிம் சட்ட வரைவாளர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பெண்கள் தம்முடைய சட்டரீதியான உரிமைகள், இருப்பு பற்றி அறிந்துகொள்ளவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சட்ட அறிவூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துதல் வேண்டும். இலங்கையின் பல்கலைக்கழகங்கள், திறந்தபல்கலைக்கழகங்கள் என்பவற்றின் மூலமும், சட்ட ஆலோசனைகள், சட்ட உதவிகள் என்பவற்றிற்கான திட்டங்களை அறிமுகப்படுத்திச் செயற்படுத்துதல் வேண்டும். பெண்கள் மீதான குடும்ப வன்முறைகளுக்கு எதிராகச் சட்டங்களை உறுதிப்படுத்தும் படி அரசுக்கு அழுத்தம் கொடுத்தல் வேண்டும். இவை போன்ற பரிந்துரைகள் விவாகரத்தானது அதிகரித்துச் செல்வதனைத் தடுக்கவும் விவாகரத்தான பெண்களை உளவியல் ரீதியாக பலப்படுத்தவும், பெண்கள் தங்களை ஊக்கப்படுத்திக்கொள்ளவும், திறன்களை வளர்த்துக்கொள்ளவும், உளவியல் எதிர்மறைத் தாக்கங்களிலிருந்து விடுபட்டு நேர்நிலை சிந்தனையுடையவர்களாக மாற்றவும், சவால்களை எதிர்கொள்ளக்கூடிய ஆற்றல் கொண்டவர்களாக மாற்றவும் அவசியம் துணைநிற்கும்.

**முடிவுரை**

விவாகரத்தினால் பெண்களின் வாழ்வில் ஏற்படுத்தப்படும் உளவியல் தாக்கங்களை பகுப்பாய்வு செய்வதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. இவ்வாய்வின் முடிவு ஆய்வு நோக்கத்தை நிறைவேற்றியுள்ளது எனலாம். அந்தவகையில், இப்பிரதேசத்தில் உள்ள பெண்கள் பல்வேறுவகையான உளத்தாக்கங்களிற்கு உள்ளாகியுள்ளமையும் அதற்கான காரணங்களும் மற்றும் அவற்றிற்கான பரிந்துரைகளும் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாய்வுக்காக எதிர்வுகூறப்பட்டிருந்த கருதுகோள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ள விடயங்கள் மூலம் வாய்ப்புப்பார்க்கப்பட்டுள்ளது. அந்தவகையில், “ஏறாவூர்பற்று பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட விவாகரத்தான பெண்கள் உளவியல் ரீதியாக தாக்கங்களை எதிர்கொள்கின்றனர்.” என்ற கருதுகோள் வாய்ப்புப்பார்க்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதாவது இப்பிரதேசத்தில் விவாகரத்தினால் பெண்கள் எதிர்கொள்கின்ற பல்வேறு

வகைப்பட்ட உளவியல் பிரச்சினைகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், விவாகரத்தான பெண்களின் நலன் சமூகத்தினால் உணரப்பட வேண்டும் என்பதும் அடையப்பட்டுள்ளது.

இன்றைய சமூகத்தில் மகிழ்ச்சியான குடும்பங்களைக் காணமுடிவதில்லை. எல்லாக் குடும்பங்களிலும் பிரச்சினைகளும் சிக்கல்களும் நிறைந்தே உள்ளன. சமூகத்தின் அடிப்படை அங்கமாக விளங்குவது குடும்பம் எனும் சமூக நிறுவனமாகும். சிறந்ததொரு குடும்பத்தை உருவாக்குவது நல்ல மணவாழ்க்கையாகும். மணவாழ்க்கை சிறப்பில்லாதவகையில் அமைந்துவிட்டால் குடும்பத்தின் செயற்பாடு, கட்டமைப்பு என்பன சிதைந்தும் சீர்குலைந்தும் போய்விடும். திருமணம் குடும்ப வாழ்வில் கணவன், மனைவி என்னும் பந்தத்தை ஏற்படுத்துவதுடன் இருவருக்குமிடையில் அழகான புரிந்துணர்வையும் அன்பினையும் வளரச் செய்வதாக இருக்க வேண்டும். வாழ்வியல் பற்றிய அடிப்படையான கோட்பாடுகளையும் தெளிவான அறிவினையும் பெற்றுள்ளவர்களே தமது வாழ்க்கையினை வெற்றியுடையதாக அமைத்துக் கொள்கின்றனர்.

எந்தவொரு குடும்பத்தில் மகிழ்ச்சி இல்லையோ, எந்த குடும்பத்தில் அடிக்கடி சண்டை நிலமை காணப்படுகின்றதோ, கணவன் மனைவியிடையே புரிந்துணர்வு இல்லையோ, கணவன், மனைவியிடையே ஒழுக்கப் பிறழ்வான நடத்தைகள் வெளிப்படுகின்றதோ அப்போதே குடும்பத்தின் பலம் குன்றி அது பலவீனமடைந்து விடுகின்றது. இந்நிலமை மாற அனைவரும் ஒன்றிணைந்து சிறந்த ஆரோக்கியமான குடும்பத்தை உருவாக்க முயற்ச்சிக்க வேண்டும். அப்போதுதான் நாம் வாழும் சமூகம் ஆரோக்கியமானதாகவும் ஒழுக்கவிழுமியங்களைப் பேணுவதாகவும் மாறும். ஒரு சமூகத்தின் மாற்றம் முழு வீட்டையும் மாற்றி முழு நாட்டையும் மாற்றும். அதற்கான முயற்சியினை நாம் ஒவ்வொருவரும் முன்னெடுக்க வேண்டும்.

**உசாத்துணை**

Abbey, C., & Dallos, R. (2004). The Experience of the Impact of Divorce on Sibling Relationships: A Qualitative Study. *Clinical Child Psychology and Psychiatry, 9(2), 241*-259. DOI: 10.1177/1359104504041921

Amber, J.O., & Kalmijn, M. (2010). The Impact of Parental Divorce on the Intimate Relationships of Adult Offspring: A Review of the Literature. *Graduate Journal of Councelling Psychology,* 2, 1-17.

Anusha Gokula Fernando. (2016,March 1). *Daily News*. Retrieved from www.dailynews.lk

Alison Clarke, Kathleen McCartney, & Deborah L. Vandell, Cathryn Booth and Margaret T. Owen. (2000). Effects of Parental Separation and Divorce on Very Young Children. *Journal of Family Psychology*, 14, 304-326. DOI: 10.1O37//0893-3200.14.2.3O4

Fagan, P.F., & Churchill, A. (2012). The Effects of Divorce on Children. *Marri research,* 1-48.

Government of Ceylon Legislative Enactmentenon. *Muslim Marriage and Divorce Act*.

Pruett, M.K., Williams, T.Y., Insabella, G., & Little, T.D. (2003). Family and Legal Indicators of Child Adjustment to Divorce Among Families With Young Children. *Journal of Family Psychology, 17,* 169-180. DOI: 10.1037/0893-3200.17.2.169 · Source: PubMed

Trivedi J.K., Sareen H., Dhyani M., (2009). Psychological Aspects of Widowhood and Divorce. In: *Some Issues in Women.s Studies and Other Essays (A.R. Singh and S.A. Singheds.),* MSM, **7**, Jan - Dec 2009, p37-49.

செல்வி திருச்சந்திரன். (1998). *பெண்களுக்கான சட்டவியல் விளக்கம்.* பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்.

லேணா தமிழ்வாணன். (1984). *திருமணச்சட்டமும் விவாகரத்துச் சட்டமும்.* மணிமேகலைப் பிரசுரம்.

ஸமீம் மர்சூப். 2020. *இலங்கை விவாக சட்டத்தின் பார்வையில் ஒரு நாடு ஒரு சட்டம் - மீள்பார்வை.* Retrieved August 08, 2023, from http://meelparvai.net/?p=23724

# பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் வேலைக்குச் செல்லும் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள்: செங்கலடி 01 கிராம சேவகர் பிரிவினை மையமாகக் கொண்ட ஆய்வு

**வரதராஜன் சித்தாரா, இரத்தினசபாபதி பிரேம்குமார்**
தத்துவவியல் மற்றும் விழுமிய கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
siththarav1997@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தற்காலத்தில் பெண்கள் தாம் வாழும் ஆண்மைய வாத முதலாளித்துவ சமூகத்தில் தம் வாழ்வை சீரான வகையில் நடத்திச் செல்ல பல்வேறு காரணிகள் இடையூறு விளைவிக்கும் வகையிலாக காணப்படுவது நாம் அறிந்ததே. அதிலும் ஆண் துணையற்று வாழும் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களினை சேர்ந்த வேலைக்குச் செல்லும் பெண்கள் தம் வாழ்வில் எண்ணிலடங்காத சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றனர். அவர்களின் முன்னேற்றத்தையும், வாழ்க்கையையும் மேலும் கொண்டு செல்ல இத்தகையதான காரணிகள் தடுக்கும் வகையில் அமைகின்றன. அதன்படி அத்தகைய பெண்தலைமைத்துவ குடும்பத்தைச் சார்ந்த பெண்களின் வாழ்வில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களாக உளவியல் சார்ந்த பிரச்சினைகள், சமூகம் சார்ந்த பிரச்சினைகள், பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகள், குடும்பம் சார்ந்த பிரச்சினைகள், கலாசாரம் சார்ந்த பிரச்சினைகள், மற்றும் பாலியல் சார்ந்த பிரச்சினைகள் என்பன காணப்படுகின்றன. இவ்வாறான வகையில் ஏறாவூர் பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட செங்கலடி 01 கிராம சேவகப் பிரிவில் காணப்படத்தக்க பெண் தலைமை தாங்கும் குடும்பத்தைச் சேர்ந்த வேலைக்கு செல்லும் பெண்கள் எதிர்கொள்ளும் உளவியல், சமூகம், பொருளாதாரம், கலாசாரம், பாலியல் மற்றும் குடும்பம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பிலாக ஆராயும் ஆய்வாகவே எனது ஆய்வானது காணப்படுகின்றது. அதன்படி இவ்வாய்வின் நோக்கமாக பெண் தலைமை தாங்கும் குடும்பங்களில் வேலைக்குச் செல்லும் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ன என அறிதல். எனும் விடயமானது காணப்படுகின்றது. இவ்வாய்வானது பண்புசார் ஆய்வாக காணப்படுவதன் காரணமாக சௌகரிக மற்றும் நோக்க மாதிரி பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வின் பொருட்டு தரவு திரட்டப்பட்ட முறைகளாக: வினாக்கொத்து, நேர்காணல், நேரடி அவதானம் என்பன காணப்படுகின்றன. அந்த வகையில் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களை சேர்ந்த வேலைக்குச் செல்லும் பெண்களின் சமூக, பொருளாதார, கலாசார, குடும்ப, உளவியல் மற்றும் பால்நிலை சார்ந்த சவால்களைக் கண்டறிந்து அத்தகைய சவால்களின் போது அதனை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் எனவும் அதற்குரிய தீர்வுகளை குறிப்பிட்ட பெண்களுக்கு வழங்கும் வகையிலும் முடிவுரை மற்றும் பரிந்துரைகள் குறித்ததான விடயங்களையும் கொண்டமைந்தவகையிலும் இவ்வாய்வானது பெண்ணிய மெய்யியல் நோக்கிலாக செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

***திறவு சொற்கள்:*** *பெண் தலைமைத்துவ குடும்பங்கள், வேலைக்குச் செல்லும் பெண்கள், குடும்பம், கலாசாரம், உளவியல், சமூகம், பொருளாதாரம்.*

## ஆய்வு அறிமுகம்

இன்றைய உலகினில் குடும்பம் என்ற சமூக நிறுவனத்தை வழிநடத்திச் செல்பவர்களாக பெண்களும் காணப்படுவது குறிப்பிடத்தக்க விடயமாகும். அதன்படியாக பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் எனும் பட்சத்தில் ஆண் துணையில்லாமல் குடும்பத்தினை பெண்கள் பொருளாதார மற்றும் ஏனைய விடயங்களையும் தாமே ஏற்று நடாத்துவதாக காணப்படுகின்றது. ஆனால் இத்தகைய நிலைகளின் போது அவர்கள் பாதுகாப்புடனும், சுதந்திரமாகவும் தம் பணிகளை கொண்டு செல்ல சமூகம், குடும்பம், கலாசாரம்,

பொருளாதாரம் மற்றும் பாலியல் சார்ந்த காரணிகள் பெரும் தடையாகவே காணப்படுகின்றன. இதன் காரணமாக பெண்கள் குறிப்பாக பெண்தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் தம் சுயத்தை இழந்து நிர்க்கதியாக விடப்படும் சூழலிற்குள் தள்ளப்படுகின்றனர். இவ்வாறாக மேற்குறிப்பிட்ட காரணங்களினடிப்படையில் இடர்பாடுகளுக்குள்ளாகும் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் அறிந்து அதனை முற்றாக ஒழிக்க முடியாவிட்டாலும் அப்பிரச்சினைகளை குறைப்பதற்கும், அப்பிரச்சினைகளுக்கான மாற்று தீர்வுகளையும் சிறந்த வகையில் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் “பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் வேலைக்குச் செல்லும் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் - செங்கலடி 01 கிராம சேவகர் பிரிவினை மையமாகக் கொண்ட ஒரு பெண்ணிய மெய்யியல் நோக்கு” எனும் ஆய்வானது மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்வின் பிரதான நோக்கம் பெண் தலைமைத்துவ குடும்பங்களில் வேலைக்குச் செல்லும் பெண்கள் எதிர் நோக்கும் சவால்கள் என்ன என்பதை அறிதலாகும். பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என்றால் என்ன என்பதை அறிதல், பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் வேலைக்குச் செல்லும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கண்டறிதல், அப்பிரச்சினைகளுக்கான உரிய தீர்வுகளை கண்டறிதல் என்பன ஆய்வின் துணை நோக்கங்களாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தம், சுனாமி, கொரோனா போன்ற காரணங்களினால் பல்வேறுபட்ட பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது மிகவும் வருத்தத்திற்குரிய விடயமாகினும் அதுவே உண்மையுமாகும். அதன்படி இத்தகைய பெண் தலைமைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் தம் ஜீவனோபாயத்தின் பொருட்டு சுயமாகவோ அல்லது அரசு சார்ந்தோ, அரசு சாரா நிறுவனங்களிலோ வேலைக்குச் செல்கின்றனர். அங்கு வேலைக்குச் செல்லும் பட்சத்தில் அவர்கள் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அத்தகைய பிரச்சினைகள் அவர்களை மனதளவிலும் பாதிப்புறச் செய்கின்றது. அதனடிப்படையில் “பெண் தலைமைத்துவக் குடும்பங்களிலிருந்து வேலைக்குச் செல்லும் பெண்கள் ஏன் சமூக, பொருளாதார, கலாசார, பாலியல், உளவியல் மற்றும் குடும்ப ரீதியில் சவால்களை எதிர்கொள்கின்றார்கள்?” என்பதே எனது ஆய்வுக்குரிய பிரச்சினையாகும். இவ்வாய்வின் கருதுகோளாக “பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் வேலைக்குச் செல்லும் பெண்கள் பெருமளவிலான சவால்களை எதிர்நோக்குகின்றனர்.” என்பது காணப்படுகின்றது.

**ஆய்வு நோக்கங்கள்**

***பிரதான நோக்கம்***

- பெண் தலைமைத்துவ குடும்பங்களில் வேலைக்குச் செல்லும் பெண்கள் எதிர் நோக்கும் சவால்கள் என்ன என்பதை அறிதல்.

***துணை நோக்கங்கள்***

- பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் என்றால் என்ன என்பதை அறிதல்.

- பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் வேலைக்குச் செல்லும் பெண்கள் எதிர்நோக்கும் உளவியல், சமூகம், பொருளாதாரம், குடும்பம், பாலியல், கலாசாரம் சார் பிரச்சினைகள் தொடர்பில் கண்டறிதல்.
- பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் வேலைக்குச் செல்லும் பெண்கள் எதிர்நோக்கும் உளவியல், சமூகம், பொருளாதாரம், குடும்பம், பாலியல், கலாசாரம் சார் பிரச்சினைகளுக்கான உரிய தீர்வுகள் தொடர்பில் கண்டறிதல்.

**ஆய்வுப் பிரச்சினை**

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தம், சுனாமி, கொரோனா போன்ற காரணங்களினால் பல்வேறுபட்ட பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது மிகவும் வருத்தத்திற்குரிய விடயமாகினும் அதுவே உண்மையுமாகும். அதன்படி இத்தகைய பெண் தலைமைக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் தம் ஜீவனோபாயத்தின் பொருட்டு சுயமாகவோ அல்லது அரசு சார்ந்தோ, அரசு சாரா நிறுவனங்களிலோ வேலைக்குச் செல்கின்றனர். அங்கு வேலைக்குச் செல்லும் பட்சத்தில் அவர்கள் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அத்தகைய பிரச்சினைகள் அவர்களை மனதளவிலும் பாதிக்க வைக்கின்றமையைக் காணலாம். அதனடிப்படையில் ‘‘பெண் தலைமைத்துவக் குடும்பங்களிலிருந்து வேலைக்குச் செல்லும் பெண்கள் ஏன் சமூக, பொருளாதார, கலாசார, பாலியல், உளவியல் மற்றும் குடும்ப ரீதியில் சவால்களை எதிர்கொள்கின்றார்கள்?’’ என்பதே எனது ஆய்வுக்குரிய பிரச்சினையாகும்.

**ஆய்வுக் கருதுகோள்**

இவ்வாய்வின் கருதுகோளாக ‘‘பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் வேலைக்குச் செல்லும் பெண்கள் பெருமளவிலான சவால்களை எதிர்நோக்குகின்றனர்.’’ என்பது காணப்படுகின்றது.

**ஆய்வு முக்கியத்துவம்**

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும் 29500 பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் காணப்படுவதாகக் கணக்கெடுப்புக்கள் கூறுகின்றன. அதற்கான காரணம் யுத்தத்தின் பொருட்டு காணாமலாக்கப்பட்டோர், உயிரிழந்தோர், விவாகரத்தானவர்கள் மற்றும் விதவைகள் என பலர் காணப்படுவதாகும். இவ்வாறு காணப்படும் பெண்கள் தம் குடும்பத்தை நடாத்தும் பொருட்டு தொழிலுக்குச் செல்ல எத்தனிக்கின்றனர். அதனடிப்படையில் அரசு மற்றும் தனியார் துறைகள் என அவர்கள் வேலைக்குச் செல்லும் இடத்தில் பல்வேறு வகையான சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர். அதாவது சமூக, பொருளாதார, கலாசார, குடும்ப, பாலியல் மற்றும் உளவியல் சார்ந்ததான சவால்களைக் கண்டறிந்து அத்தகைய சவால்களின் போது அதனை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும். எனவும் அதற்குரிய தீர்வுகளை குறிப்பிட்ட பெண்களுக்கு வழங்கும் வகையிலும் இவ்வாய்வானது காணப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

ஆய்வின் முறையியல் என்பது மிகவும் முக்கியம் வாய்ந்த விடயமாக கருதப்படுகின்றது. அதன்படி இவ்வாய்வு பிரதானமாக பண்பாட்டு கற்கைநெறி சார்ந்த ஆய்வாக அமைந்ததன் காரணமாக இவ்வாய்வுப்பிரச்சினை தொடர்பாக வெளிவந்துள்ள ஆய்வுக்கட்டுரைகள், புத்தகங்கள், ஆய்வு மாநாட்டு கட்டுரைகள் போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் இவ்வாய்வானது அளவு சார்ந்த ஆய்வாகவும் காணப்படுகின்றது. அந்த வகையில் வினாக்கொத்து முறை, நேர்காணல், கள ஆய்வு, அவதானம் ஆகிய முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பண்பு சார் ஆய்வில் பயன்படுத்தத்தக்க மாதிரிகளாக நோக்கமாதிரி, வசதி மாதிரி போன்றவையும் இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி 50 பெண்தலைமைத்துவக்குடும்பங்களைச் சேர்ந்த பெண்களை மாதிரிகளாகத் தெரிவு செய்து அவர்களினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்தோடு இணையத்தள மூலங்களும் ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

இலக்கிய மீளாய்வு எனும் போது நான் எனது ஆய்வின் பொருட்டு நூல்கள், ஆய்வறிக்கைகள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளங்கள் என்பவற்றிலிருந்து பெற்றுக் கொண்ட தகவல்களைப் பயன்படுத்தியிருந்தேன். ஆவையாவன:

சித்திரலேகா மௌனகுரு,(1993) “பெண்நிலைச் சிந்தனைகள்”, பெண்கள் கல்வி ஆய்வு நிலையம், கொழும்பு. இந்நூலானது பாலடிப்படையில் அமைந்த தொழிற்பாகுபாடு, பெண்கள் அபிவிருத்தி, இலங்கையில் இனத்துவமும் பெண்கள் தொடர்பிலான பல்வேறு விடயங்கள் குறித்து விளக்குவதாகக் காணப்படுகின்றது.

சிவஞானம். பொ,(2017) “பெண்களின் பொருளாதார வலுவூட்டல்”, இனத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையம். எனும் நூலிலே பெண்களுக்கான பொருளாதார வளர்ச்சி மற்றும் பொருளாதார வாய்ப்புக்கள் தொடர்பிலான விடயங்களை ஆராய்கின்றது.

செல்வி திருச்சந்திரன், “பெண் விடுதலை வாதத்தின் பிரச்சினை மையம்: அது ஒரு மேலைத்தேய கோட்பாடா?”, பெண் கல்வி நிலைய வெளியீடு. எனும் நூலினூடாகக் கூறப்படுவது பெண்விடுதலை தொடர்பான விடயங்களும் மேலும் அத்தகைய பெண் விடுதலை சார் விடயங்களில் காணப்படத்தக்கதான பிரச்சினைகள் குறித்தும் விளக்குவதாகவுள்ளது.

முத்துச்சிதம்பரம்.ச, (2003) “பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்”, தமிழ் புத்தகாலயம், சென்னை. இந்நூலானது பெண்ணியத்தின் தோற்றம் மற்றும் அதன்பின்னரான அதன் வளர்ச்சி தொடர்பிலாக விளக்கும் வகையில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

வாசுகி.ஜெ, (2009) “பெண்ணியச் சுவடுகள்”, அறிவுப் பதிப்பகம். எனும் நூலில் பெண்ணியம் தொடர்பிலான கருத்துக்கள் விளக்கமாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், ‘‘பெண்’’ எனும் சஞ்சிகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் தொடர்பிலான விபரங்கள் மற்றும் அரசியல் செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்பு தொடர்பிலான விடயங்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளது.

சித்திரலேகா.மௌ மற்றும் சரளா.இ, சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், ‘‘பேரழிவுகளுக்குப் பெண்கள் முகம் கொடுத்தல் தென்னாசிய அனுபவங்களும் சவால்களும்’’ எனும் நூலில் சுனாமி எனும் அனர்த்த நிலையின் பிற்பாடாக யதார்த்தத்திற்கு முகம்கொடுக்கும் வகையிலாக தென்னாசியாவில் பிரதேச ரீதியான பெண்நிலை வலையமைப்புக்களை உருவாக்குதல் தொடர்பான விடயங்கள் காணப்படுகின்றது.

சித்திரலேகா மௌனகுரு என்பவரால் எழுதப்பட்ட ‘‘மட்டக்களப்பில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்’’ எனும் ஆய்வறிக்கையில் கிழக்கு மாகாணத்தில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிக்க இன முரண்பாடும் சுனாமியுமே காரணம் எனக்கருதுகின்றார்.

கொற்றவை, ‘‘பெண்ணியம் ஒரு உரையாடலுக்கான தொடக்கம்’’, இதனூடாக பெண்ணியம் குறித்தான சிந்தனைகளை, அதற்கான அவசியத்தை, அதன் பயன்பாட்டை, பெண்ணியம் முன்வைக்கும் சமூக மாற்றத்தை புரிந்துக் கொள்வதில் குழப்பங்கள் என்பன தொடர்பிலான விளக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன.

சந்திரலேகா கிங்ஸி, ‘‘பெண் தலைமைத்துவ சவால்கள்’’, பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் சால்கள் மற்றும் அவர்களது வாழ்வில் சந்திக்கின்ற பிரச்சினைகள் தொடர்பிலாக விரிவாக எடுத்துக் கூறுகின்றது.

சந்திரலேகா கிங்ஸி, ‘‘வேலை உலகில் பெண்களும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களும்’’, பொதுவாக வேலைக்குச் செல்லும் பெண்கள் தாம் வேலை செய்யும் இடங்களில் எதிர்நோக்கக்கூடியதான பிரச்சினைகள் பற்றியும் அதனை தடுக்க மேற்கொள்ளக் கூடியதான வழிமுறைகளை விளக்குகின்றது.

தேவகௌரி. எம். எஸ், ‘‘பெண் தலைமைத்துவக் குடும்பம் என்றால் என்ன?’’ பெண் தலைமைத்துவக் குடும்பம் என்றால் என்ன என்பது தொடர்பிலான விளக்கங்களை முன்வைக்கின்றது.

**தரவுப்பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**

***பெண் தலைமைதாங்கும் குடும்பப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்***

இலங்கை நாட்டினைப் பொறுத்த வரையிலாக 24.3 சதவீதமான குடும்பங்கள் பெண் தலைமைத்துவக்குடும்பங்கள் காணப்படுகின்றன (புள்ளிவிபரவியல் திணைக்களம் 2012 தொகை மதிப்பு அறிக்கை). அதிகளவான பெண் தலைமைத்துவ குடும்பங்களை கொண்ட மாவட்டமாக கண்டியும், அதற்கடுத்த இடத்தில் மட்டக்களப்பும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையை பொறுத்த வரையில் அரசினால் குறிப்பிட்டளவு சலுகைகள் வழங்கப்படுகின்ற போதிலும் ஒப்பீட்டளவில் கணிசமான அளவு உயர் நன்மைகளை இக்குடும்பங்கள் பெறுவதில்லை. இன்றைய காலப்பகுதியில் இத்தகைய குடும்பங்களுக்கு வாழ்வாதார தொழில் முதலீடுகள் என அனைத்துமே பெரும் சவாலாக மாறியுள்ளது. இந்நிலையில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் நிலை தொடர்பாக சிந்திக்க வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. அத்துடன் இவற்றிற்கான தீர்வுகள் பலவும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வலுவூட்டலாக அமைதலிலும் பார்க்க அதிகமாக வாழ்வியலுக்கான உதவிகளாகவே அமைகின்றது. இவ்வாறாக எனது ஆய்வுப்பிரதேசமாகக் காணப்படும் செங்கலடி 01 கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட கிராமங்களில் காணப்படும் பெண்தலைமைத்துவக்குடும்பங்கள் குறித்துப் பார்க்குமிடத்து அவர்கள் இவ்வாறு பெண்தலைமைதாங்கும் குடும்ப வகைக்குள் உள்ளாக்கப்பட்டமைக்கான காரணங்களாக: கணவனின் இயற்கையான மரணம், தற்கொலை, விபத்து, திருமணம் செய்யாமை, விவாகரத்து, கணவனைப் பிரிந்து வாழ்வோர், யுத்தத்தினால் காணாமலாக்கப்பட்டமை மற்றும் கொல்லப்பட்டமை, என்பன காணப்படுகின்றன.

அதன்படி இத்தகைய பெண்தலைமைதாங்கும் குடும்பப் பெண்கள் எதிர்நோக்கத்தக்கதான சவால்களாக:

1. உளவியல் சார்ந்த சவால்கள்
2. சமூகம் சார்ந்த சவால்கள்
3. பொருளாதாரம் சார்ந்த சவால்கள்
4. பாலியல் சார்ந்த சவால்கள்
5. கலாசாரம் சார்ந்த சவால்கள்
6. குடும்பம் சார்ந்த சவால்கள்

*உளவியல் சார்ந்த பிரச்சினைகள்*




இவ்வாறாக காணப்படும் பிரச்சினைகளின் அடிப்படையில் பெண்தலைமைத்துவக் குடும்பப் பெண்கள் பெருமளவில் உளவியல் ரீதியில் தாக்கத்திற்குள்ளாகுவதை கள ஆய்வினூடாகப் பெற்றுக் கொண்ட தரவுகள் ஊடாகக் கண்டறிய முடிந்தது. இவ்வாறான பிரச்சினைகளால் மனமுடைந்து எவரோடும் பேசாது தனிமையில் இருத்தல், ஒதுங்கி வாழுதல் போன்ற நடத்தைகளைக் கொண்டு காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

(கள ஆய்வுகளினடிப்படையில் பெற்றுக் கொண்ட தகவல்கள் 2023)

*சமூகம் சார்ந்த பிரச்சினைகள்*




சமூகம் சார்ந்த பிரச்சினைகளில் அதிகளவில் ஆண்துணையற்ற நிலையில் வாழும் போது மதிப்பு, கௌரம் கிடைக்காது ஒதுக்கி வைக்கப்படுகின்றமை அதிகளவில் காணப்படுவதை அறியக் கூடியதாகவுள்ளது. அதற்கடுத்து ஆண்துணையற்ற வகையில் வாழும் போது துன்புறுத்தல்களுக்கு உள்ளாகுவதை பெறப்பட்ட தரவுகளினூடாக அறிய முடிகின்றது.

*பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகள்*




பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளில் மாத வருமானம் குறைவாகக் காணப்படல் என்பது அதிகளவில் இத்தகைய பெண்கள் எதிர் நோக்குவதையும் மேலும் சம அளவிலாக பொருளாதார ரீதியிலாக முன்னேற்றங்கள் எதுவும் அடையப் பெறாமை. மற்றும் பொருளாதார ரீதியில் பிறரில் தங்கியிருத்தல் என்பன காணப்படுகின்றன.

எடுத்துக்காட்டாகச் சொல்லப்போனால், நுண் நிதி நிறுவனங்கள் மற்றும் வட்டிக்கு பணம் பெறுதல். நுண்நிதி நிறுவனங்கள் எனும் போது: BERENDINA Micro Invesment Company, LOLC, COMMERCIAL LEASING




*பாலியல் சார்ந்த பிரச்சினைகள்*

பாலியல் சார்ந்த பிரச்சினைகள் எனும் போது வெளியிடங்களில் தவறான அணுகல்களுக்குள்ளாகுதலே அதிகளவில் காணப்படுகின்றது. அதனையடுத்து வேலைக்குச் செல்லும் இடத்தில் பாலியல் சார் பிரச்சினைகளுக்கு உள்ளாகும் நிலை

காணப்படுகின்றது. இதனை கள ஆய்வுகளினடிப்படையில் பெற்ற தரவுகளைக் கொண்டு கண்டறிய முடிந்தது.

*கலாசாரம் சார்ந்த பிரச்சினைகள்*

கலாசாரம் சார்ந்த பிரச்சினைகள் எனும் போது ஆண்துணையற்ற வகையில் கலாசார ரீதியில் இப்பெண்கள் துன்பத்திற்குள்ளாக்கப்படுவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.




அதன்படி மங்கள நிகழ்வுகளில் கலந்து கொள்ள விடாமை, விதவை என்ற பெயரை வழங்கி குங்குமம் வைத்துக் கொள்ளவோ, பூ வைத்துக் கொள்ளவோ அனுமதிக்காமை, அபசகுணமாகக் கருதுதல். என்பனவற்றைக் கலாசார ரீதியில் சடங்குகளாகவே கருதி பெண்தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த குறிப்பாக கணவனை இழந்த மற்றும் விட்டுப்பிரிந்த பெண்களை இவ்வாறாக ஒதுக்கி வைத்து துன்புறுத்துவதை ஆய்வினூடாக அவர்களிடம் பெற்ற தரவுகளின் அடிப்படையில் அறிய முடிந்தது.

*குடும்பம் சார்ந்த பிரச்சினைகள்*




குடும்பம் சார்ந்த பிரச்சினைகளில் முதன்மை வகிப்பது வேலைக்குச் செல்வதை குடும்பத்தில் ஏற்காமை ஆகும். இதற்கு முக்கிய காரணம் சமூகம் தம்மை தவறாக எண்ணி விடும் என்ற பயத்தின் அடிப்படையில் குடும்பத்தவர்கள் இப்பெண்களின் சுதந்திரத்தை தடுத்து வைக்கின்றனர்.

மேலும் தனியாக வாழ்வதை ஏற்காமை எனும் பிரச்சினையை எடுத்துக்கொண்டால் இங்கு பெண்கள் தாம் விரும்பியபடி தனித்து வாழ விடாது தடுக்கப்படுகின்றனர். காரணம் பெண்ணால் தனித்து வாழ இயலாது என்ற எண்ணமாகும். இவ்வாறான குடும்பம் சார் பிரச்சினைகள்

காரணமாக இப்பெண்கள் தம் சுயத்தை இழந்து நடைபிணமாய் வாழ்வதை அவர்களது கருத்துக்களினூடாக அறிய முடிந்தது.

**முடிவுரை**

"பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் வேலைக்குச் செல்லும் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள் - செங்கலடி பிரதேசத்தினை மையமாகக் கொண்ட ஒரு பெண்ணிய மெய்யியல் நோக்கு" என்ற ஆய்வானது செங்கலடி கிராசேவகர் பிரிவிற்குட்பட்ட கிராமங்களான: செங்கலடி, ரமேஸ்புரம், அம்மன்புரம், குமாரவேலியார் கிராமம், பழைய ஊர் போன்ற கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி இப்பிரதேசங்களில் காணப்படும் வேலைக்குச் பெண்தலைமை தாங்கும் குடும்பப் பெண்கள் எதிர்நோக்கி வரும் உளவியல், சமூக, பொருளாதார, பாலியல், குடும்ப மற்றும் கலாசாரம் சார்ந்த பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்வதாகக் காணப்படுகின்றது. பொதுவாக ஆண் தலைமைத்துவ குடும்பத்தை காட்டிலும் பெண்தலைமைத்துவம் என்பது தற்காலத்தைப் பொறுத்த வரையில் அதிகரித்துக் கொண்டு வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது. அதன்படி பெண்தலைமைதாங்கும் குடும்பத்தில் ஒரு பெண் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை எண்ணிலடங்காதவையாகும். இவர்கள் பல்வேறு சவால்களையும், பிரச்சினைகளையும் எதிர்நோக்கியுள்ளனர். அந்த வகையில் பெண்தலைமைதாங்கும் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் வேலைக்குச் செல்லும் வகையில் காணப்படும் போது பல்வேறு வகையான சவால்களையும், பிரச்சினைகளையும் எதிர்நோக்கி வருகின்றனர். உளவியல், பொருளாதாரம், சமூகம், கலாசாரம், பாலியல், குடும்பம் என பல்வேறு மட்டங்களில் பெண்தலைமைத்துவக்குடும்பப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதிகமாகவே காணப்படுகின்றன. ஆகவே இவ்வாறு பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் எதிர்நோக்கும் மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளினை சாதாரணமான விடயமாக எடுத்துக்கொள்ளாது அதற்குரிய தக்க நடவடிக்கைகளை எடுத்து அவர்களை முன்னேற்றகரமான பாதைக்கு இட்டுச்செல்ல வேண்டியது எல்லோரினதும் கடமையாகும்.

**பரிந்துரைகள்**

***உளவியல் சார்ந்த பிரச்சினைகளுக்கான பரிந்துரைகளாக***

- உளவியல் சார் பிரச்சினைகளுக்கு காரணமான விடயங்களை தவிர்ப்பது மற்றும் அதிலிருந்து மீள்வதற்கான வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வுகளை அவர்களுக்கு வழங்குதல்.
- பாதிக்கப்பட்ட பெண்களுக்கான உரிய உள நல ஆற்றுப்படுத்தல்களை மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பொருளாதார ரீதியில் பிறரில் தங்கியிருக்கும் பட்சத்திலாக ஏற்படும் உளவியல் சார் தாக்கங்களுக்கான (மனமுடைந்து தற்கொலை செய்து கொள்ளல்.) சிறந்த தீர்வாக நுண்நிதி போன்ற விடங்களை தவிர்த்து எவ்வாறு பணத்தைச் சேமிப்பது என்பது

தொடர்பிலும் மற்றும் அரசாங்கத்தினூடாகவோ, அல்லது பெண்கள் சார் அமைப்பினூடாகவோ வட்டியில்லா கடனுதவிகளையும் வழங்குதல்.

*பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளுக்கான பரிந்துரைகளாக*

- பொருளாதார ரீதியில் பிறரில் தங்கியிருக்கும் பட்சத்திலாக ஏற்படும் உளவியல் சார் தாக்கங்களுக்கான சிறந்த தீர்வாக நுண்நிதி போன்ற விடங்களை தவிர்த்து எவ்வாறு பணத்தைச் சேமிப்பது என்பது தொடர்பிலும் மற்றும் அரசாங்கத்தினூடாகவோ, அல்லது பெண்கள் சார் அமைப்பினூடாகவோ வட்டியில்லா கடனுதவிகளையும் வழங்குதல்.
- Thiriya Mangpethta எனும் உதவியானது 2019-2022 வரையில் பிரதேச செயலகத்தினால் இவ்வாறு பெண்தலைமை தாங்கும் குடும்பத்தை நடாத்தும் பெண்களுக்கு வழங்கப்பட்டது. ஆயினும் தற்போது அது நடைமுறையில் இல்லை. இவ்வுதவியூடாக மானியமாகவோ அல்லது 50% வீதம் மானியமாகவும் 50% கடனாகவும் பணம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதில் வட்டியில்லா வகையிலாக பெற்ற பணத்தில் பாதியை மாத்திரம் செலுத்தினால் போதுமானது என்ற வகையில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆகவே இவ்வாறான உதவிகளை மீண்டும் பிரதேச செயலகங்கள் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
- வீட்டிலே குறைந்த மூலதனத்தைக் கொண்டு செய்யத்தக்கதான வீட்டுத்தோட்டச் செய்கை என்பனவற்றினூடாக வருமானம் பெறக்கூடியதான வழிகளை அமைத்ததுக்கொள்ளல் மூலமாக வருமானத்தை இரட்டிப்பாக மாற்றிக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும்.
- புத்தாக்கத் திட்டங்களை தயாரித்து அவற்றை அன்றாடம் அவதானித்து முன்னேற்ற அறிக்கை மூலம் பகுப்பாய்வு செய்து வீழ்ச்சியை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கும் நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

*சமூகம் சார்ந்த பிரச்சினைகளுக்கான பரிந்துரைகளாக*

- விழிப்புணர்வு சார்ந்த நிகழ்ச்சிகளை பிரதேச செயலகம் மற்றும் பெண்கள் சார்ந்த அமைப்புக்கள் மேற்கொள்ள முன்வர வேண்டும்.
- சமூகத்தில் பெண்தலைமைத்துவ குடும்பப் பெண்கள் தொடர்பிலாக இருக்கின்ற தவறான மனப்பான்மையை மாற்றும் வகையிலான விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்துதல்.

*பாலியல் சார்ந்த பிரச்சினைகளுக்கான பரிந்துரைகளாக*

- பெண்கள் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு மையங்களை அமைப்பதன் மூலமாக இத்தகைய பிரச்சினைகள் குறித்து பெண்கள் தெரிவித்து அதனை சீர்செய்து கொள்ளவும் முடியுமாகக் காணப்படும்.

*குடும்பம் சார்ந்த பிரச்சினைகளுக்கான பரிந்துரைகளாக*

- பெண் தலைமைத்துவக் குடும்ப பெண்களின் குழந்தைகளுக்கான பாதுகாப்பு, தேவைகள் மற்றும் கல்வி, போசாக்கு சார்ந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தல் சிறந்ததாகும்.

- பெண் தலைமைத்துவக் குடும்ப பெண்கள் வேலைக்குச் செல்வதை விரும்பாத குடும்ப அங்கத்தவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி பெண்களின் முன்னேற்றத்திற்கும் அவர்களின் எதிர்கால வாழ்விற்கும் அவர்களுக்கென ஒரு தொழில் அது சுயதொழிலோ, அரசாங்கத் தொழிலோ அல்லது அரச சார்பற்ற தொழில் வகைகளோ முக்கியம் என்பதனை எடுத்துக்கூறுதல் வேண்டும்.

**உசாத்துணைகள்**


உதயராசா.ச., பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர்நோக்கும் சமூக, பொருளாதார பிரச்சினைகள் - முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு, யாழ்ப்பாண பல்கலைக்கழகம். யாழ்ப்பாணம்.

காவ்யா.ச.(2007). *பெண்ணியமும் பிரதிகளும்.* காவியா வெளியீடு.

சந்திரலேகாகிங்ஸி., பெண் தலைமைத்துவ சவால்கள். Retrieved April 20, 2023, from https://www.oodaru.com/?p=7073

சந்திரலேகாகிங்ஸி, வேலை உலகில் பெண்களும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களும். Retrieved April 20, 2023, from https://www.oodaru.com/?p=15649

சித்திரலேகா.மௌ. (1993). *பெண்நிலைச் சிந்தனைகள்.* பெண்கள் கல்வி ஆய்வு நிலையம.

சித்திரலேகா.மௌ., மட்டக்களப்பில் பெண் தலைமைத்துவக்குடும்பங்கள். செலக்சன் ஒப்செட்.

கொற்றவை., பெண்ணியம் ஒரு உரையாடலுக்கான தொடக்கம். Retrieved April 20, 2023, from http://saavinudhadugal.blogspot.com/2011/07/1.html,

சிவஞானம். பொ. (2017). *பெண்களின் பொருளாதார வலுவூட்டல்.* இனத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையம்.

செல்வி.தி. (1993). *பெண்ணடிமையின் பரிணாமங்களும் பெண்ணுரிமையின் விளக்கமும்.* பெண்கள் கல்வி நிறுவனம்.

ஞானகுமாரன்.நா. (2012). *மெய்யியல்.* சேமமடு பதிப்பகம.

தேவகௌரி. எம். எஸ்., பெண் தலைமைத்துவக் குடும்பம் என்றால் என்ன?: Retrieved April 20, 2023, from https://fhhsrilanka.wordpress.com/

பக்தவத்சல பாரதி. (2005). *மானிடவியல் கோட்பாடுகள்.* மெய்யப்பன் பதிப்பகம்.

பிறேமா.இரா. (2001). *பெண் மரபிலும் இலக்கியத்திலும்.* தமிழ் புத்தகாலயம.

முத்துச்சிதம்பரம்.ச. (2003). *பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்.* தமிழ் புத்தகாலயம.

வாசுகி.(1998) பெண் சஞ்சிகை தொகுதி 22, சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம். பக்கம்(9-14).

விக்னராஜா.பொ.(n.d) பெண்கள் வறுமை கடன் வாய்ப்பு, ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகம்: தென்னாசிய இயலுருத் தோற்றங்கள் திட்டம்.

# Environment and Social Justice

# மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பயன்பாட்டு மாற்றம் (2002 – 2022)

**அஞ்சாநிலை சந்திரமோகன்**
புவியியல் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*chandrumohan291@gamil.com*

**ஆய்வுச் சுருக்கம்**

நிலப்பயன்பாடு என்பது நில மேற்பரப்பில் மேற்கொள்ளப்படும் மனிதனது செயற்பாடுகளையும், நிலப் போர்வைகளையும் குறிக்கின்றது. அந்தவகையில் "மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பயன்பாட்டு மாற்றம் (2002–2022)" எனும் இவ்வாய்வானது இரு ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலப்பகுதிகளில் நிலப்பயன்பாட்டில் ஏற்பட்ட கால ரீதியான மாற்றத்தை புவியியல் தகவல் முறைக்கூடாக கண்டறிவதை நோக்கமாகக் கொண்டது. அந்தவகையில் குறிப்பிடப்பட்ட ஆய்வின் பொருட்டு முதலாம் நிலைத் தரவாக நேரடி அவதானிப்பு முறையும், இரண்டாம் நிலைத் தரவாக 2002 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான Landsat 7, Landsat 9 ஆகிய செய்மதிப் படங்கள், மெததும்பர பிரதேச செயலக மூலவளத் திரட்டு (2021), மாவட்ட புள்ளிவிபரவியல் அறிக்கைகள், ஆய்வுகளுடன் தொடர்புடைய சஞ்சிகைகள் ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன. குறித்த நிலப்பயன்பாடு மற்றும் நிலப்பயன்பாட்டு மாற்றம் என்பவற்றினை புவியியல் தகவல் முறைக்கூடாக ArcGIS 10.7.1 மென்பொருளைப் பயன்படுத்திக் கால ரீதியான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு 2002, 2022 ஆம் ஆண்டுகளுக்கான நிலப்பயன்பாட்டுப் படங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. Google Earth மூலம் குறித்த ஆய்வுப் பிரதேசத்தின் நிலப்பயன்பாட்டு மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் Supervised Classification முறையைப் பயன்படுத்தி பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. படங்களின் தரம் மற்றும் துல்லியத்தன்மை என்பவற்றை வெளிப்படுத்த உண்மை மதிப்பீடானது Change Error Matrix முறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வு முடிவுகளின்படி 20 வருடகால இடைவெளியில் தேயிலை நிலங்கள் 6 சதவீதமாகவும், காடுகள் 4 சதவீதமாகவும் குறைவடைந்துள்ளதுடன் கட்டமைக்கப்பட்ட பகுதி 10 சதவீதமாகவும், வயல் நிலங்கள் 2 சதவீதமாகவும், நீர்நிலைகள் 1 சதவீதமாகவும் அதிகரித்துள்ளன. இக்காலப்பகுதியிலான நிலப்பயன்பாட்டு மாற்றம் பல்வேறு பௌதீக, சமூக, பொருளாதார தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. எனவே இயற்கை வளங்களை பாதுகாத்தல், மீள் காடாக்கல், நிலப்பயன்பாட்டு கொள்கைகள் மற்றும் திட்டமிடல்களை மேற்கொள்ளல் போன்ற விடயங்கள் பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *நிலப்பயன்பாடு, நிலப்பயன்பாட்டு மாற்றம், மெததும்பர, செய்மதிப் படங்கள்*

## அறிமுகம்

நிலமானது இயற்கை வளங்களில் பெறுமதி வாய்ந்த அசையாச் சொத்துகளில் ஒன்றாகவே விளங்குகின்றது. ஏனெனில் இன்று மனிதன் பல்வேறு தேவைகளுக்காகவும் மூலவளமாக நிலத்தை பயன்படுத்தி வருகின்றமையினால் நிலமானது பல்வேறு காலகட்டங்களில் பல்வேறுபட்ட மாற்றங்களுக்குள்ளாகி வருகின்றன. அதாவது மனித தேவைகள் பலவற்றை நிறைவு செய்கின்ற களமாக நிலமானது தொழிற்படுகின்றது. மனிதன் தனது பல்வேறு தேவைகளுக்காக நிலத்தை பயன்படுத்தும் வழிமுறைகளை குறிப்பதே நிலப்பயன்பாடாகும். அதாவது பல்வேறு தேவைகளுக்காக நிலத்தை மனிதன் மாற்றுதல், பேணுதல், பயன்படுத்தல் போன்றவற்றிற்கான வழிமுறைகளையும், ஒழுங்குமுறைகளையுமே நிலப்பயன்பாடு என்பர். இதற்குள் விவசாயம், கட்டிடங்கள், வீதிகள் போன்ற மனிதனால்

உருவாக்கப்பட்ட பண்பாட்டம்சங்கள் அனைத்தும் உள்ளடங்கும். ஒரு நாட்டின் அல்லது ஒரு பிரதேசத்தின் அபிவிருத்திக்கு நிலப்பயன்பாடானது மிகவும் அவசியமானதாக உள்ளன. (Gautan, 1999).

நிலப்பயன்பாட்டு மாற்றம் என்பது ஒரு குறித்த காலகட்டத்தில் ஒரு குறித்த பகுதியில் உள்ள நிலப்பயன்பாடானது அதற்கு பின் வந்த காலகட்டங்களில் மாற்றத்திற்கு உட்பட்டிருக்கும் தன்மையைக் குறிக்கும். அதாவது குறித்த ஒரு நிலப்பயன்பாட்டின் பரப்பு ரீதியாக ஏற்படுகின்ற மாற்றங்களை குறிக்கும். அதாவது மனிதனுக்கும், சூழலுக்கும் இடையிலான இடைத்தொடர்பின் வெளியீடே நிலப்பயன்பாட்டு மாற்றமாகும். இன்று சனத்தொகை அதிகரிப்பு மற்றும் விரைவான நகர வளர்ச்சி போன்றவற்றினால் நிலப்பயன்பாட்டில் காலத்திற்கு காலம் இடத்திற்கு இடம் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. இம்மாற்றம் சமூக, பொருளாதார, அரசியல் அடிப்படையில் சில சந்தர்ப்பங்களில் துரிதமாகவும் சில சந்தர்ப்பங்களில் மெதுவாகவும் இடம்பெறலாம். நிலப்பயன்பாட்டு மாற்றமானது கடந்த காலங்களை விட இன்று மிக வேகமாக இடம்பெறும் செயன்முறையாகவே காணப்படுகின்றது. அந்தவகையில் அம்மாற்றங்கள் நிகழ்வதற்கான காரணிகளை இயற்கை காரணிகள், மானிட காரணிகள் என இரண்டாக பிரித்து நோக்கலாம்.

நிலப்பயன்பாட்டை நிர்ணயிக்கும் இயற்கையான செயற்பாடுகள் காரணமாக நிலப்பயன்பாட்டில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இயற்கை காரணிகளில் காலநிலை மற்றும் வானிலை மாற்றங்கள், அகவிசை செயற்பாடுகள், சூழலியல் மாற்றங்கள், காட்டுத்தீ, இயற்கை அனர்த்தங்கள் முதலியன செல்வாக்குச் செலுத்துகின்றன. எனினும் இயற்கை காரணிகளை விட மானிட காரணிகளே நிலப்பயன்பாட்டு மாற்றத்தில் அதிக தாக்கம் செலுத்துகின்றது. குறிப்பாக சனத்தொகை பெருக்கம், குடியிருப்பு பாங்குகள், கைத்தொழில் நடவடிக்கைகள், வீதிப் போக்குவரத்து வலையமைப்புக்கள், நிர்மாணப் பணிகள், அபிவிருத்தி நடவடிக்கைகள், காடழிப்பு, நவீன விவசாய முறைகள், நகரங்களின் விரிவாக்கம் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக நிலப்பரப்பானது மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. இலங்கையை பொறுத்தவரையில் அண்மைக்காலங்களில் நிலப்பயன்பாட்டு மாற்றங்கள் வேகமாக நிகழ்ந்து கொண்டு வருகின்றது. சனத்தொகை செறிவு, குடியிருப்புகளின் அதிகரிப்பு, நகரமயமாக்கல் செயன்முறை, உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய அனைத்து பொதுச்சேவைகளினது உருவாக்கம் என இலங்கையின் நிலப்பயன்பாடு மனித தொழிற்பாட்டுக் காரணிகளால் மாற்றியமைக்கப்பட்டு பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபட்ட நிலப்பயன்பாட்டை கொண்டு காணப்படுகின்றன (Uduporuwa, 2020).

கண்டி மாவட்டத்தில் அமைவிட ரீதியாக முக்கியத்துவம் பெற்றுள்ள மெததும்பர பிரதேச செயலகமானது 2002 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக நிலப்பயன்பாட்டு மாற்றங்களை உள்வாங்கிய பிரதேசமாக காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெற்று வந்ததாலும் இப்பிரதேசத்தின் முக்கிய நிலப்பயன்பாடாக பெருந்தோட்ட பயிர்ச்செய்கையும், விவசாயமும் காணப்படுகின்றது. இவ்வாய்வுப் பிரதேசத்தின் பெரும்பகுதி இயற்கை வளங்களான காடுகளால் நிறைந்துள்ளது. எனினும் இன்று அதிகரித்துவரும் சனத்தொகை காரணமாகவும், அபிவிருத்தி செயற்பாடுகள் காரணமாகவும்,

நகரமயமாக்கல் செயற்பாடுகள் காரணமாகவும் காடுகள் அழிக்கப்பட்டு குடியிருப்பு நிலங்களாக மாறிவருவதுடன், பயிர்ச்செய்கை நிலங்களின் அளவும் குறைவடைந்துள்ளது. இப்பிரதேசத்தில் இடம்பெறுகின்ற அபிவிருத்தி செயற்பாடுகளினால் இயற்கை வளங்கள் மீதான அழுத்தம் அதிகரிப்பதுடன், நிலப்பயன்பாட்டு மாற்றத்தின் விளைவாக பல்வேறுபட்ட சூழல் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படுகின்றன. நிலப்பயன்பாட்டு மாற்றத்தின் இத்தகைய பிரச்சினைகளை மையப்படுத்தி இவ்வாய்வு அமைந்துள்ளது. மேலும் இன்று இப்பிரதேசத்தில் நிலத்திற்கான பெறுமதி அதிகரித்துள்ளது எனவே நிலப்பயன்பாட்டு மாற்றம் மற்றும் அதனால் ஏற்பட்ட விளைவுகளை ஆய்வு செய்ய வேண்டியது மிகவும் அவசியமானதாக உள்ளது. அந்தவகையில் 2002 முதல் 2022 வரையான காலப்பகுதியில் ஏற்பட்டுள்ள கால ரீதியான நிலப்பயன்பாட்டு மாற்றங்களை ஆராய்வதனை நோக்காகக் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

***ஆய்வுப் பிரதேசம்***

கண்டி மாவட்டமானது நிர்வாக அடிப்படையில் 20 பிரதேச செயலாளர் பிரிவுகளையும், 1188 கிராம சேவகர் பிரிவுகளையும் கொண்டுள்ளது. அந்தவகையில் ஆய்வு பிரதேசமான மெததும்பர பிரதேச செயலகமானது கண்டியின் கிழக்கு திசையில் கண்டி நகரில் இருந்து கண்டி – மஹியங்கனை பிரதான வீதியில் சுமார் 22 Km தொலைவிலும், கொழும்பு தலைநகரில் இருந்து 156.8 Km தொலைவிலும், தெல்தெனிய நகரின் மத்தியில் அமைந்துள்ளது. இது கடல் மட்டத்தில் இருந்து 1400 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இதன் புவியியல் அமைவிடமாக $7^0$ 10’ தொடக்கம் $7^0$ 25’ வரையான வட அகலக்கோட்டிற்கும், $80^0$ 45’ தொடக்கம் $80^0$ 57’ வரையான கிழக்கு நெடுங்கோட்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்து காணப்படுகின்றது. ஆய்வு பிரதேசமான மெததும்பர பிரதேச செயலகப் பிரிவானது வடக்கே பன்வில பிரதேச செயலக பிரிவையும், கிழக்கே உடுதும்பர பிரதேச செயலக பிரிவையும், தெற்கே வலப்பனை பிரதேச செயலகப் பிரிவையும், மேற்கே குண்டசாலை பிரதேச செயலக பிரிவையும் எல்லைகளாக கொண்டுள்ளது.




படம் 1 மெததும்பர பிரதேச செயலகப்பிரிவு

மெததும்பர பிரதேச செயலகமானது இயற்கை மலைகள், ஆறுகள், ஈர நிலங்கள் மற்றும் எண்ணற்ற இயற்கை வளங்கள் நிறைந்த 93 கிராம சேவகர் பிரிவுகளை கொண்டு காணப்படுகின்து. மெததும்பர பிரதேச செயலகப் பிரிவு 196.01 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளது மற்றும் 93 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 262 கிராமங்களைக் கொண்டுள்ளது. புவியியல் ரீதியாக மெததும்பர பிரதேச செயலாளர் பிரிவு சமவெளி பிரதேசங்கள் இன்றி 4 பக்கமும் மலைத்தொடர்களால் அமைந்துள்ளதுடன் மீதமுள்ள பகுதிகளில் காடுகளைக் காணலாம். இங்கு உலக பிரசித்தி பெற்ற நக்கிள்ஸ் மலைத்தொடர் மெததும்பர பிரதேசத்தின் கிழக்குப் பக்க எல்லையாக அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும். இப்பிரதேசமானது உயரமான மலைத் தொடர்களாலும், உயர்நிலத் தொடர்களாலும், பாறைகள் மற்றும் இயற்கை தாவரப் போர்வைகளினாலும், நீர்நிலைகளினாலும் அமையப் பெற்றுள்ளது (Resource profile, 2021).

## *தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு*

முதலாம் நிலை தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் மெததும்பர பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசங்களுக்குச் சென்று நேரடி அவதானிப்பு முறையினூடாக தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் தற்போதைய நிலப்பயன்பாட்டு தன்மைகளையும், நிலப்பயன்பாட்டு மாற்றங்களை கண்டறிவதற்காகவும், பிரதேசத்தின் நிலப்பயன்பாட்டினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் தெளிவாக அறியும் பொருட்டு பல கிராமசேவகர் பிரிவுகளிற்கு நேரடியாகச் சென்று நிலப்பயன்பாட்டு மாற்றம் தொடர்பிலான பல தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. அந்தவகையில் மெததும்பர பிரதேச செயலகப்பிரிவின் நிலப்பயன்பாட்டு மாற்றம் அதன் விளைவுகள், பிரச்சினைகள் தொடர்பில் தெளிவாக அறியும் பொருட்டு, பல கிராமசேவகர் பிரிவிற்கு நேரடியாகச் சென்று அவதானிப்புகள் மூலம் தேவையான விவரங்கள் பெற்றுகொள்ளப்பட்டுள்ளதுடன், நிலப்பயன்பாட்டு மாற்றம்

தொடர்பிலான பல புகைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளதுடன் அவதானிப்பின் போது பெறப்பட்ட பல தரவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இரண்டாம் நிலை தரவு சேகரிப்பினை பொறுத்தவரையில் கண்டி மாவட்ட செயலக புள்ளிவிபரவியல் அறிக்கைகள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அறிக்கைகள், இடவிளக்கவியல் படங்கள், ஆய்வுடன் தொடர்புடைய நூல்கள், சஞ்சிகைகள், பிரதேச செயலகத்தின் மூலவளத் திரட்டு அறிக்கைகள், ஆய்வுடன் தொடர்படைய இலக்கிய மீளாய்வுகள், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் அறிக்கைகள் போன்றவற்றில் இருந்து தரவுகள் பெறப்பட்டுள்ளன.

ஆய்வின் போது பெறப்பட்டுள்ள புள்ளிவிபர தரவுகள், சனத்தொகை தரவுகள், காலநிலை தரவுகள் அனைத்தும் MS Excel 2019 மென்பொருளில் சேமிக்கப்பட்டு அளவு ரீதியான பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு தேவையான அட்டவணைகளாகவும், பை மற்றும் பார் வரைபடங்களாகவும், கோட்டு வரைபடங்களாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வானது புவியியல் தகவல் முறைமை GIS தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வாக இருப்பதனால் இடரீதியான பகுப்பாய்வினை மேற்கொள்ளுவதற்கு Earth Explorer, US Geological Survey இருந்து 2002 ஆம் ஆண்டிற்கான செய்மதிப்படமானது Landsat 7 ETM மூலமும் 2022 ஆம் ஆண்டிற்கான செய்மதிப்படமானது Landsat 9 இல் இருந்து பதிவிறக்கப்பட்டது. இறுதியாக பதிவிறக்கம் செய்யப்பட்ட செய்மதிப்படமானது ArcGIS 10.7.1 என்னும் மென்பொருளில் உட்செலுத்தப்பட்டு Composite செய்யப்பட்டு ஒரு படமாக தொகுத்து எடுக்கப்பட்ட பின்னர் மெததும்பர பிரதேச செயலகப்பிரிவானது Clip Tool மூலமாக தனியாக பிரித்தெடுக்கப்பட்டது. அவ்வாறு பிரித்தெடுக்கப்பட்ட எல்லை, Composite செய்யப்பட்ட செய்மதிப்படம் Extraction தெரிவினுள் காணப்படும் Extract by mask செய்யப்பட்டு மாதிரி தெரிவில் சரியான நிலைப்படுத்தல்களை மேற்கொள்ளும் பொருட்டு Feature To Point எனும் தெரிவினை பயன்படுத்தி நிலப்பயன்பாட்டு மாதிரிகளின் நிறங்கள் (Colour Bands) வேறுப்படுத்தப்பட்டது. மேலும் ஆய்வு பிரதேசத்தின் நிலப்பயன்பாடுகளை தெளிவாக கண்டறியவும் ஆய்வில் துல்லியத் தன்மையை மேம்படுத்தும் நோக்கில் Google Earth மூலம் குறித்த ஆய்வு பிரதேசத்தின் குறித்த ஆய்வு பிரதேசத்தின் நிலப்பயன்பாட்டு மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து நிலப்பயன்பாடுகளை Classification செய்வதற்காக Image Classification னுள் Trainning Sample Manager மூலமாக மாதிரிகள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் ஞரிநசளைைநன ஊடயளளகைஉயவழை முறையைப் பயன்படுத்தி மாதிரிகள் Shape file, Signature file களாகவும் சேமிக்கப்பட்டு Maximum Likelihood Classification ஊடாகப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பின்னர் Spatial Analyst Tool இல் உள்ள Generalization இல் காணப்படும் Majoroty Filter, Boundary Clean, Region Group, Set Null, Nibble போன்ற கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் இறுதியாக Conversion Tool

இனுள் Raster to Polygon என்பதை பயன்படுத்தி நிலப்பயன்பாட்டுப் படமானது தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் Geoprocessing (Clip) தெரிவின் ஊடாக வேறுபடுத்தப்பட்டு Open Attributes Table இல் தனித்தனியான நிலப்பயன்பாட்டிற்கான பரப்பானது கண்டறியப்பட்ட பின்னர் Layout View ஆக மாற்றப்பட்டு 1:75,000 எனும் அளவுத் திட்டத்தில் ஒவ்வொரு ஆண்டுக்குரிய நிலப்பயன்பாட்டுக்குரிய படங்களாகவும், தனித்தனியே நிலப்பயன்பாட்டைப் பிரதிபலிக்கும் படங்களாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. இறுதியாகப் பெறப்பட்ட நிலப்பயன்பாட்டுப் படங்களின் தரம் மற்றும் துல்லிய தன்மையை வெளிப்படுத்த உண்மை மதிப்பீடு (Accuracy Assessment) செய்வது அவசியமாகும். இதனடிப்படையில் Overall Accuracy, Kappa Statistics போன்ற முறைகளைப் பயன்படுத்தி உண்மை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ஆரம்பத்தில் மாதிரித் தெரிவின் போது உட்செலுத்தப்பட்ட Place mark இன் Open Attributes Table இல் FID, Name, Shape என்பவற்றுடன் Producer எனும் Filed உட்செலுத்தப்பட்டு Field Calculator மூலம் குறித்த நிரலுக்கான தரவுகள் சேகரிக்கப்பட்டு பின் Raster value, Frequency, Pivot Table ஆகியவற்றின் மூலம் பெறுமானங்கள் கண்டறியப்பட்டு Ms Excel இல் உட்செலுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு இறுதியாக Kappa குணகத்தின் மூலம் முடிவுகள் நோக்கப்பட்டு அவற்றின் துல்லியத் தன்மை மற்றும் மாதிரிகளின் உண்மைத் தன்மை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

***மெதகும்பர பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பயன்பாடு 2002 மற்றும் 2022***

மெதகும்பர பிரதேச செயலகப் பிரிவின் 20 ஆண்டு கால நிலப்பயன்பாட்டு மாற்றத்தினை கண்டறிந்துள்ள இவ்வாய்வின் ஆரம்ப ஆண்டாக 2002 அமைகின்றது. அந்தவகையில் 2002 காலப்பகுதியில் மெதகும்பர பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பயன்பாடுகள் பின்வருமாறு காணப்படுகின்றது.




**படம் 3.1.1 மெதகும்பர பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பயன்பாடு 2002**

மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் 2002 ஆம் ஆண்டிற்கான நிலப்பயன்பாட்டு வகை மற்றும் மொத்தப் பரப்புக்கள் தொடர்பான விபரங்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.1: மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் 2002 ஆம் ஆண்டிற்கான நிலப்பயன்பாட்டு வகை மற்றும் மொத்த பரப்புக்கள்**

| இல | நிலப்பயன்பாட்டு வகைகள் | மொத்தப் பரப்பு – 2002 (ஹெக்டயர்) |
|---|---|---|
| 1 | கட்டமைக்கப்பட்ட பகுதி | 3425.23 |
| 2 | தேயிலை | 3620.72 |
| 3 | நீர்நிலைகள் | 1594.08 |
| 4 | காடுகள் | 6378.17 |
| 5 | வயல் | 1330.39 |
| 6 | ஏனையவை | 3251.53 |
| | மொத்தம் | 19600.12 |

மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் மொத்த நிலப்பரப்பானது 19600.12 ஹெக்டயர்களாகக் காணப்படுகின்றது. அந்தவகையில் இந்நிலப்பயன்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்ற போது 2002 ஆம் ஆண்டில் காடுகளே அதிகமாக காணப்படுகின்றது. இது மொத்த நிலப்பயன்பாட்டில் 33 சதவீதமாகும். மெததும்பர பிரதேச செயலகப் பிரிவில் காடுகள் எனும் போது அடர்ந்த காடுகள், திறந்த காடுகள், புதர் காடுகள் என்பன உள்ளடக்கப்படுகின்றன. இங்கு ஹக்மன, ஹாதியல்வெல, மாங்கொட, ரஜகல, தங்கப்புவ, கொட்டகங்க ஆகிய பகுதிகளில் இலங்கையின் இரண்டாவது பெரிய காடுகளான நக்கிள்ஸ் காடுகள் பரம்பிக் காணப்படுகின்றன. இவை இப்பிரதேசத்தின் சூழலியல் சார்ந்த வளப்பெருமையை எடுத்தியம்புவதுடன் உயிர் பல்வகைமை மற்றும் தாவரப் போர்வை செறிந்த உலக மரபுரிமை வாய்ந்ததாகவும் காட்சியளிக்கின்றது.

ஆய்வுப் பிரதேசத்தின் அடுத்த முக்கிய நிலப்பயன்பாடாக தேயிலைப் பயிர்ச்செய்கை விளங்குகின்றது. மொத்த நிலப்பரப்பில் 3620.72 ஹெக்டயர் தேயிலைப் பயிர்ச்செய்கையாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இது 18 சதவீதமாகக் காணப்படுகின்றது. தேயிலைப் பயிர்ச்செய்கையானது ரங்கல, டக்வாரிய, பேர்ன்சைட், ஹாத்தியல்வெல போன்ற இடங்களில் பரம்பி காணப்படுகின்றது. அடுத்த நிலப்பயன்பாடாக கட்டமைக்கப்பட்ட பகுதி காணப்படுகின்றது. கட்டமைக்கப்பட்ட பகுதி என்ற வகைக்குள் குடியிருப்புக்கள், பிரதான வீதிகள், உள்ளூர் வீதிகள், கடைத்தொகுதிகள், வைத்தியசாலைகள், சேவை நிலையங்கள், பாலங்கள் என மனிதனின் தேவைக்காக நிலத்தில் கட்டமைக்கப்பட்ட அம்சங்கள் யாவும் இதற்குள் உள்ளடங்கப்படுகின்றது. மொத்த நிலப்பரப்பில் கட்டமைக்கப்பட்ட பகுதியானது 3425.23 ஹெக்டயராகக் காணப்படுகின்றது. இது 17 சதவீதமாகும். அதற்கடுத்தப்படியாக புல் நிலங்கள், பாறைகள், சதுப்பு நிலங்கள், தரிசு நிலங்கள் என்பன ஏனையவை என்ற

வகைப்பாட்டினுள் உள்ளடங்கப்படுகின்றன. இது ஆய்வுப் பிரதேசத்தின் மொத்த நிலப்பயன்பாட்டில் 3251.53 ஹெக்டயராக உள்ளது. இது 17 சதவீதமாகக் காணப்படுகின்றது.

இவற்றைத் தொடர்ந்து நீர்நிலைகள் காணப்படுகின்றது. இது மொத்த நிலப்பரப்பில் 1594.08 ஹெக்டயர் பரம்பியுள்ளது. இங்கு விக்டோரியா நீர்த்தேக்கமும் இவ்வாய்வு பிரதேசத்திலேயே அமைந்து காணப்படுவதனால் சிறந்த நீர்வளத்தினைக் கொண்டுள்ள பகுதியாக விளங்குகின்றது. இறுதியாக ஆய்வு பிரதேசத்தின் நிலப்பயன்பாடாக வயல் காணப்படுகின்றது. இது மொத்த நிலப்பரப்பில் 1330.39 ஹெக்டயர் பரப்பளவாகக் காணப்படுகின்றது. அத்துடன் 8 சதவீதமாக அமைந்துள்ளது. இவ்வாறான நிலைகளில் மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் கடந்தகால (2002) நிலப்பயன்பாட்டு அம்சங்கள் காணப்படுகின்றன.

மெததும்பர பிரதேச செயலகப் பிரிவினை 2002 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் நிலப்பயன்பாடானது பல மாற்றங்களைக் கொண்டதாகவே காணப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டின் மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பயன்பாடுகள் பின்வருமாறு காணப்படுகின்றது.




**படம் 3.1.2 மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பயன்பாடு 2022**

மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் 2022 ஆம் ஆண்டுக்கான நிலப்பயன்பாட்டு வகை மற்றும் மொத்த பரப்புக்கள் என்பன கீழே அட்டவணையினூடாகக் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.1.2 மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் 2002 ஆம் ஆண்டிற்கான நிலப்பயன்பாட்டு வகை மற்றும் மொத்த பரப்புக்கள்**

| இல | நிலப்பயன்பாட்டு வகைகள் | மொத்தப் பரப்பு – 2022 (ஹெக்டயர்) |
|---|---|---|
| 1 | கட்டமைக்கப்பட்ட பகுதி | 5291.17 |
| 2 | தேயிலை | 2429.28 |
| 3 | நீர்நிலைகள் | 1769.15 |
| 4 | காடுகள் | 5736.36 |
| 5 | வயல் | 1723.24 |
| 6 | ஏனையவை | 2650.92 |
| | மொத்தம் | 19600.12 |

மேலே தரப்பட்டுள்ள அட்டவணை 4.2 ஐ அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது 2022 ஆம் ஆண்டிலும் காடுகளின் பரப்பே அதிகமாகக் காணப்படுகின்றது. இது மொத்த நிலப்பரப்பில் 29 சதவீதமாகக் காணப்படுகின்றது. இதனை 2002 ஆம் ஆண்டு நிலப்பயன்பாட்டுடன் ஒப்பிட்டு நோக்கும் போது காடுகளின் பரப்பானது குறைவாகக் காணப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டு ஆய்வுப் பிரதேசத்தில் காடுகளுக்கு அடுத்ததாக கூடுதலான பரப்பை கட்டமைக்கப்பட்ட பகுதி கொண்டுள்ளது. இது மொத்த நிலப்பரப்பில் 27 சதவீதத்தினைக் கொண்டுள்ளது. 2002 ஆம் ஆண்டு நிலப்பயன்பாட்டுடன் ஒப்பிடுகையில் மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் தெல்தெனிய, மெதமாநுவர ஆகிய நகரங்களில் கட்டமைக்கப்பட்ட நிலங்களில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. குறிப்பாக கண்டி, மஹியங்கனை A26 வீதி இப்பிரதேசத்தினை ஊடறுத்துச் செல்வதனால் வீதிகளின் இருமருங்கிலும் ஒருசில பகுதிகளில் கட்டமைக்கப்பட்ட நிலங்களின் பரப்பு அதிகரித்துள்ளமை நோக்கத்தக்கது.

கட்டமைக்கப்பட்ட பகுதியை அடுத்து பரப்பளவின் அடிப்படையில் புல் நிலங்கள், பாறைகள், சதுப்பு நிலங்கள், தரிசு நிலங்கள், வீட்டுத்தோட்டங்கள், தென்னை என்பன ஏனையவை என்ற நிலப்பயன்பாட்டு வகையினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது மொத்த நிலப்பரப்பில் 14 சதவீதமாகவும், 2650.92 ஹெக்டயராகவும் உயர்வடைந்து காணப்படுகின்றது. இதற்கடுத்தபடியாக தேயிலைப் பயிர்ச்செய்கை நிலமே அதிகமாகக் காணப்படுகின்றது. இது மொத்த நிலப்பரப்பில் 2429.28 ஹெக்டயராகவும், 12 சதவீதமாகவும் காணப்படுகின்றது. தேயிலை நிலங்களின் நிலப்பயன்பாடானது 2022 ஆம் ஆண்டு மனிதனின் பல்வேறு தேவைகளுக்காக அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையினால் 2002 ஆம் ஆண்டு நிலப்பயன்பாட்டுடன் ஒப்பிடுகையில் இவற்றின் அளவு குறைவடைந்துள்ளமை நோக்கத்தக்கது. மேலும் ஆய்வுப் பிரதேசத்தின் நிலப்பயன்பாட்டில் 9 சதவீதம் நீர்நிலைகள் காணப்படுவது போன்றே வயல் நிலங்களும் 9 சதவீதமாகக் காணப்படுகின்றது. நீர்நிலைகளைப் பொறுத்தமட்டில் மெததும்பர பிரதேசத்தில் இலங்கையின் முக்கிய நீர்த்தேக்கமான விக்டோரியா நீர்த்தேக்கமானது இலங்கையின் மின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் முக்கிய நிலப்பயன்பாடாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறான நிலைகளில் மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் 2022 ஆம் ஆண்டிற்கான நிலப்பயன்பாட்டு அம்சங்கள் காணப்படுகின்றன.

***மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பயன்பாட்டு மாற்றம்***

ஒரு பிரதேசத்தில் காணப்படும் நிலப்பயன்பாடானது அங்குள்ள வளங்கள் மற்றும் காலநிலைகளின் அடிப்படையில் செறிவாகவும் ஐதாகவும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. அதற்கேற்ப சனத்தொகை அடர்த்தியும் அதிகரித்துள்ளதனால் மனிதனின் தேவைகளும் வளப்பயன்பாடுகளும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இதனடிப்படையில் மனிதனால் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு முயற்சிகளும் நிலப்பயன்பாடுகளில் மாற்றத்தினை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பயன்பாடானது 2002 ஆம் ஆண்டு நிலப்பயன்பாட்டில் இருந்து 2022 ஆம் ஆண்டு வரை நிலப்பயன்பாட்டில் மாற்றங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. 20 வருட காலத்தினுள் பற்பல மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. அதாவது கட்டமைக்கப்பட்ட நிலப்பகுதி, நெற்பயிர்ச்செய்கை துரிதமாக அதிகரித்தும், காடுகள், தேயிலை நிலங்கள் குறைவடைந்து காணப்படுவதுடன், நீர்ப்பரம்பலும் அதிகரித்து மாற்றத்திற்குட்பட்டுள்ளதை இங்கு அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இப்பிரதேசத்தில் இடம்பெற்ற சனத்தொகை அதிகரிப்பு, அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக காடுகள், தேயிலை நிலங்கள் என்பன குறைவடைந்துள்ளதுடன் கட்டியெழுப்பப்பட்ட பகுதிகள் அதிகரித்துக் காணப்படுகின்றது. அத்தோடு தொழில் ரீதியான இடப்பெயர்வு காரணமாக தேயிலை நிலங்கள் கைவிடப்பட்டு காணப்படுகின்றது. எவ்வாறு இருப்பினும் நீண்ட கால அடிப்படையில் நிலப்பயன்பாடுகளில் மாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.




| | கட்டமைக் கப்பட்ட பகுதி | தேயிலை | நீர்நிலைகள் | காடு | வயல் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| நிலப்பயன்பாடு 2002 | 3425.23 | 3620.72 | 1594.08 | 6378.17 | 1330.39 | 3251.53 |
| நிலப்பயன்பாடு 2022 | 5291.17 | 2429.28 | 1769.15 | 5736.36 | 1723.24 | 2650.92 |

**வரைபு 3.1 2002 - 2022 இற்கான நிலப்பயன்பாட்டு மாற்றம் ஒப்பீடு**

**அட்டவணை 3.3: மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பயன்பாட்டு மாற்ற வீதம்**

| நிலப்பயன்பாட்டு வகைகள் | நிலப்பயன்பாடு 2002 | | நிலப்பயன்பாடு 2022 | | நிலப்பயன்பாட்டு மாற்ற அளவு (2002 – 2022) |
|---|---|---|---|---|---|
| | மொத்தப் பரப்பு (ஹெக்டேயர்) | (%) | மொத்தப் பரப்பு (ஹெக்டேயர்) | % | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கட்டமைக்கப்பட்ட பகுதி | 3425.23 | 17 | 5291.17 | 27% | 1865.94 |
| தேயிலை | 3620.72 | 18 | 2429.28 | 12% | -1191.44 |
| நீர்நிலைகள் | 1594.08 | 8 | 1769.15 | 9% | 175.07 |
| காடுகள் | 6378.17 | 33 | 5736.36 | 29% | -641.81 |
| வயல் | 1330.39 | 7 | 1723.24 | 9% | 392.85 |
| ஏனையவை | 3251.53 | 17 | 2650.92 | 14% | -600.61 |
| மொத்தம் | 19600.12 | 100 | 19600.12 | 100% | |

மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் 2002 – 2022 காலத்திற்கு இடைப்பட்ட நிலப்பயன்பாட்டு மாற்ற வீதம் தொடர்பில் அவதானிக்கும் போது கட்டமைக்கப்பட்ட பகுதிகளில் ஆண்டுக்கான மாற்றம் பெருவாரியாக அதிகரித்துக் காணப்பட தேயிலை நிலங்கள் மற்றும் காடுகளிலான மாற்றம் பெருவாரியாகக் குறைவடைந்து செல்வதனை அவதானிக்கத்தக்கது. இவ்வாறாக இப்பிரதேசத்தில் இடம்பெற்ற நிலப்பயன்பாட்டு மாற்றங்களைப் பின்வருமாறு நோக்க முடியும்.




**வரைபு 3.2 2002 - 2022 இற்கான நிலப்பயன்பாட்டு மாற்ற அளவு**

*கட்டமைக்கப்பட்ட பகுதிகளில் ஏற்பட்டுள்ள மாற்றம்*

| 2002 | 2022 |
|---|---|
|  |  |

**படம் 3.3 மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் கட்டமைக்கப்பட்ட பகுதி 2002 மற்றும் 2022**

மெததும்பர பிரதேச செயலகப் பிரிவில் சனத்தொகை அதிகரிப்பு மற்றும் தேவைகளின் அதிகரிப்பு, நகரங்களின் விருத்தி என்பவற்றினால் 20 வருட காலப்பகுதியில் நிலப்பயன்பாட்டு மாற்றத்தில் பாரியளவிலான அதிகரிப்பை காட்டிநிற்கும் நிலப்பயன்பாடாகக் கட்டமைக்கப்பட்ட பகுதி விளங்குகின்றன. 2002 இல் 3425.23 ஹெக்டயர் பரப்பிலும், 2022 இல் 5291.17 ஹெக்டயர் பரப்பிலும் இது பரம்பிக் காணப்படுகின்றது. இதனை விகிதாசார அடிப்படையில் நோக்கும் போது இவை முறையே 17 மற்றும் 27 சதவீதமாக காணப்படுகின்றது. மெததும்பர பிரதேசத்தில் கட்டமைக்கப்பட்ட பகுதிகள் தெல்தெனிய, கரல்லியந்த, மெதமாநுவர போன்ற இடங்களில் செறிவாகக் காணப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தின் சனத்தொகை அதிகரிப்பு நகர்ப் பிரதேசங்களில் குடியிருப்பு நிலங்களின் பெறுமதியை அதிகரிக்கச் செய்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

*தேயிலைப் பயிர்ச் செய்கை நிலங்களில் ஏற்பட்டுள்ள மாற்றம்*

ஆய்வுப் பிரதேசத்தில் தேயிலைப் பயிர்ச்செய்கை நிலமானது குறைவடைந்து செல்லும் போக்கில் காணப்படுகின்றது. 2002 ஆம் ஆண்டு 3620.72 ஹெக்டயர் ஆகக் காணப்படுவதுடன் 18 சதவீதமாகவும் காணப்படுகின்றது. மேலும் 2022 ஆம் ஆண்டு தேயிலை நிலமானது 2429.28 ஹெக்டயர் ஆகக் காணப்படுவதுடன் 12 சதவீதமாகவும் காணப்படுகின்றது. இதனடிப்படையில் தேயிலை நிலங்கள் குறிப்பிட்ட இக்காலப்பகுதியில் குறைவடைந்து வந்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. 2002 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட தேயிலைப் பயிர்செய்கை நிலத்தின் பரப்பானது ஹக்மன, ஹாதியல்வெல போன்ற இடங்களில் ஆரம்பத்தில் தேயிலை நிலங்கள் அதிகமாகக் காணப்பட்டு இன்று அதன் அளவு குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆரம்ப காலங்களில் காணப்பட்ட தேயிலைப் பயிர்ச்செய்கையானது சிறந்த பராமரிப்பு காரணமாக உயர்வடைந்த நிலையில் இருந்துள்ளது. ஆனால் தற்போதைய காலங்களில் பராமரிப்பு குறைவு, தேயிலைத் தொழிலாளர்களின் இடம்பெயர்வு என்பவற்றினால் தேயிலை பயிர்ச் செய்கை நிலங்களின் அளவு

குறைவடைந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. மேலும் இப்பகுதிகளில் தேயிலை நிலங்களானது குடியிருப்புக்களை அமைப்பதற்காகவும், வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைகளுக்காகவும் முறையற்ற வகையில் அழிக்கப்பட்டு வருகின்றது. மெததும்பர பிரதேசத்தில் மெதுவாகக் குறைவடைந்து வரும் நிலப்பயன்பாடாக தேயிலை நிலங்கள் காணப்படுகின்றது.

| 2002 | 2022 |
| --- | --- |
|  |  |

**படம் 3.4 மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் தேயிலை நிலங்கள் 2002 மற்றும் 2022**

*நீர்நிலைகளில் ஏற்பட்டுள்ள மாற்றம்*

மெததும்பர பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள பிரதான நீர்நிலையாகக் காணப்படுவது இப்பகுதியின் தென்மேற்கில் அமைந்துள்ள விக்டோரியா நீர்த்தேக்கமாகும். இலங்கையின் பிரதான மின் உற்பத்தியில் இரண்டாவது பாரிய மின் உற்பத்தி இடமாக இந்நீர்த்தேக்கம் விளங்குகின்றன. தொடர்ச்சியாக 2002 மற்றும் 2022 ஆம் வருடங்களின் நிலப்பயன்பாட்டு விகிதாசாரங்களை எடுத்து நோக்கும் போது குறித்த நீர்நிலையானது 2002 ஆம் ஆண்டில் மொத்த நிலப்பயன்பாட்டில் 8 சதவீதமாகவும், 2022 ஆம் ஆண்டு 9 சதவீதமாகவும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்நீர்த்தேக்கமானது சிறந்த பாதுகாப்பு ஆகியவற்றின் ஊடாக மனித தலையீடுகள் குறைவாகக் காணப்படும் இடமாகத் திகழ்வதனால் நீர்நிலைகளில் பெரிய அளவிலான மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. இப்பிரதேசத்தில் தரைத்தோற்ற ரீதியாக அமைந்துள்ள மலைகள், நக்கிள்ஸ் காடுகள் மற்றும் காலநிலைக் காரணிகளில் செல்வாக்கு என்பவற்றின் காரணமாக நீர்த்தேக்கத்தின் அளவு சார்ந்து பருவ ரீதியாக மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன.

| 2002 | 2022 |
|---|---|
|  |  |

**படம் 3.5 மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் நீர்நிலைகள் 2002 மற்றும் 2022**

*காடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றம்*

மெததும்பர பிரதேச செயலக பிரிவில் காடுகளானது குறைவடைந்து செல்லும் போக்கினை காணக்கூடியதாக உள்ளது. 2002 ஆம் ஆண்டு 6378.17 ஹெக்டயர் பரப்பில் பரம்பி காணப்பட்டதுடன் இது மொத்த நிலப்பரப்பில் 33 சதவீதம் ஆகும். அத்துடன் 2022 ஆம் ஆண்டு காடுகளானது 5736.36 ஹெக்டயராகவும், மொத்த நிலப்பரப்பில் 29 சதவீதமாகவும் காணப்படுகின்றது. இதன் அடிப்படையில் நோக்கும் போது காடுகளானது குறைவடைந்துள்ள தன்மையை அவதானிக்கலாம். மெததும்பர பிரதேசத்தில் தொடர்ச்சியாக குடியிருப்புகளின் அதிகரிப்பு மற்றும் நகரங்களின் விரிவாக்கம், பயிர்ச்செய்கை நடவடிக்கைகளின் அதிகரிப்பு என்பன காடுகளின் இழப்புக்கு காரணமாக அமைகின்றன குறிப்பாக வீட்டுத்தோட்டம், நெற்செய்கை, குடியிருப்புக்கள், அபிவிருத்திச் செயற்பாடுகள் ஆகியவற்றிற்காக அதிகளவில் காடுகள் அழிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசங்களில் பொருளாதார இலாபத்தினை ஈட்டிக் கொள்ளும் பொருட்டு சில கும்பல்களால் சட்டவிரோதமான முறையில் மரங்கள் வெட்டப்பட்டு, காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இச்செயற்பாடுகள் காரணமாக ஆய்வுப் பிரதேசத்தில் சூழல் ரீதியான பிரச்சினைகளாக காலநிலை மாற்றம், உயிர்ப்பல்வகைமை பாதிப்படைதல், மண் தரமிழப்பு, நிலச்சரிவு என்பன ஏற்பட்டுள்ளன.




**படம் 3.6 மெதகும்பர பிரதேச செயலகப் பிரிவின் காடுகள் 2002 மற்றும் 2022**

*வயல் நிலங்களில் ஏற்பட்டுள்ள மாற்றம்*

| 2002 | 2022 |
| --- | --- |




**படம் 3.7 மெதகும்பர பிரதேச செயலகப் பிரிவின் வயல் நிலங்கள் 2002 மற்றும் 2022**

மெதகும்பர பிரதேச செயலகப் பிரிவானது சமவெளியாகக் காணப்படாவிடினும் அதன் தரைத்தோற்ற அமைப்பிற்கு ஏற்ற வகையில் திட்டமிடப்பட்டு நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு அதிகளவிலான நீரேந்து பிரதேசங்களைக் கொண்டுள்ளமையினால் அதிகளவிலான நெற்செய்கை நிலங்கள் உருவாகியுள்ளன. ஆய்வுப் பகுதியிலுள்ள பெருமளவிலான பிரதேசங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்தவகையில் 2002 ஆம் ஆண்டு 1330.39 ஹெக்டயராகவும், மொத்த நிலப்பயன்பாட்டில் 7 சதவீதமாகவும் காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டு நெற்செய்கை நிலப்பயன்பாடானது 1723.24 ஹெக்டயராகவும், மொத்த நிலப்பயன்பாட்டில் 9 சதவீதமாகவும் காணப்படுகின்றது.

*ஏனைய நிலப்பயன்பாட்டு அம்சங்களில் ஏற்பட்டுள்ள மாற்றம்*

ஏனைய நிலப்பயன்பாட்டு அம்சங்களிற்குள் காடுகள், கட்டமைக்கப்பட்ட நிலப்பகுதி, விவசாயம், நீர்ப்பரம்பல் தவிர்ந்த ஏனைய அம்சங்களான வீட்டுத்தோட்டம், தரிசு நிலங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ள நிலங்கள், தென்னை வளர்ப்பு, கற்பாறைகள், சதுப்பு நிலங்கள் போன்றன உள்ளடக்கப்படுகின்றன. ஏனெனில் இவை ஆய்வுப் பிரதேசத்தில் சொற்பளவிலேயே காணப்படுவதனால் இவை அனைத்தையும் ஒன்றிணைத்து பொதுவான வகைப்பாட்டினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் ஏனைய அம்சங்களிலும் குறிப்பிட்டளவு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளது. மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் 2002 ஆம் ஆண்டு 3251.53 ஹெக்டயராகவும் மொத்த பரப்பில் 17 சதவீதமாகவும் காணப்பட்ட ஏனைய அம்சங்கள் 2022 ஆம் ஆண்டில் 2650.92 ஹெக்டயராகவும் மொத்த பரப்பில் 14 சதவீதமாகவும் மாற்றமடைந்து காணப்படுகின்றது. 2002 – 2022 ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலங்களில் ஏனைய அம்சங்களானது மொத்த நிலப்பரப்பில் 600.61 ஹெக்டயர் குறைவடைந்து காணப்படுகின்றமையினை அவதானிக்கலாம். ஏனெனில் 2002 இல் பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டு இருந்த நிலங்கள் இன்று மக்களின் பாவனைக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

| 2002 | 2022 |
|---|---|
|  |  |

படம் 3.8 மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் ஏனைய நிலப்பயன்பாட்டு அம்சங்கள் 2002 மற்றும் 2022

**மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் 2002 மற்றும் 2022 ஆம் ஆண்டு நிலப்பயன்பாடு மாற்றப் பகுப்பாய்வு தொடர்பான உண்மை மதிப்பீடு**

பகுப்பாய்வினூடாகப் பெறப்பட்ட நிலப்பயன்பாடுகளை உண்மை மதிப்பீடு செய்வதானது ஆய்வின் உண்மைத் தன்மையினையும் மாதிரி எடுப்பின் துல்லிய தன்மையினையும் வெளிப்படுத்துகின்றதொரு முறையாகும். அந்தவகையில் பகுப்பாய்வுக்கென 2002 மற்றும் 2022 ஆம் ஆண்டிற்கான Landsat 7 ETM, Landsat 9 படங்களுக்கு Accuracy total, Overall Accuracy, Kappa Statistic போன்ற படிமுறைகளை பயன்படுத்தி Change Error Matrix முறை மூலம் உண்மை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.4 மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் 2002 ஆம் ஆண்டு நிலப்பயன்பாடு மாற்றப் பகுப்பாய்வு தொடர்பான உண்மை மதிப்பீடு**

| நிலப்பயன்பாட்டு வகைகள் | கட்டமைக்கப்பட்ட பகுதி | தேயிலை | நீர்நிலைகள் | காடுகள் | வயல் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| கட்டமைக்கப்பட்ட பகுதி | 60 | 0 | 0 | 0 | 0 | 0 |
| தேயிலை | 0 | 50 | 10 | 0 | 0 | 0 |
| நீர்நிலைகள் | 0 | 0 | 80 | 0 | 0 | 0 |
| காடுகள் | 0 | 0 | 0 | 60 | 0 | 0 |
| வயல் | 0 | 10 | 20 | 0 | 30 | 0 |
| ஏனையவை | 0 | 10 | 10 | 0 | 20 | 20 |
| மொத்த வகைப்பாட்டின் உண்மைத் தன்மை வீதாசாரம் (Overall) | | | | | | 78.94% |
| மொத்த கப்பா பெறுமானம் (Kappa) | | | | | | 0.7449% |

**அட்டவணை 3.5 மெதகும்பர பிரதேச செயலகப் பிரிவின் 2022 ஆம் ஆண்டு நிலப்பயன்பாடு மாற்றப் பகுப்பாய்வு தொடர்பான உண்மை மதிப்பீடு**

| நிலப்பயன்பாட்டு வகைகள் | கட்டமைக்கப்பட்ட பகுதி | தேயிலை | நீர்நிலைகள் | காடுகள் | வயல் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|
| கட்டமைக்கப்பட்ட பகுதி | 60 | 0 | 0 | 0 | 0 | 0 |
| தேயிலை | 0 | 60 | 10 | 0 | 0 | 0 |
| நீர்நிலைகள் | 0 | 0 | 80 | 0 | 0 | 0 |
| காடுகள் | 0 | 0 | 0 | 60 | 0 | 0 |
| வயல் | 0 | 10 | 20 | 0 | 30 | 0 |
| ஏனையவை | 0 | 0 | 10 | 0 | 20 | 20 |
| மொத்த வகைப்பாட்டின் உண்மைத் தன்மை வீதாசாரம் (Overall) | | | | | | 81.57% |
| மொத்த கப்பா பெறுமானம் (Kappa) | | | | | | 0.7768% |

**மெதகும்பர பிரதேச செயலகப் பிரிவில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு அடிப்படையாக அமைந்த காரணிகள்**

ஆய்வுப் பிரதேசத்தின் குறிப்பிட்ட காலப்பகுதியில் நிலப்பயன்பாட்டு மாற்றத்தை ஏற்படுத்திய காரணிகளாக இயற்கை மற்றும் மானிடக் காரணிகள் விளங்குகின்றன. இக்காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுப் பிரதேசத்தில் நிலப்பயன்பாட்டு மாற்றமானது சமூக, பொருளாதார, சூழலியல் ரீதியில் வேறுபட்ட தாக்கங்களையும், பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளது. அந்தவகையில் ஆய்வுப் பிரதேசமான மெதகும்பர பிரதேச செயலகப் பிரிவினை எடுத்து நோக்குகின்ற போது இங்கு நிலப்பயன்பாட்டைத் தோற்றுவித்ததில் மானிடக் காரணிகளின் செல்வாக்கே அதிகமாகும். அவற்றுள் பின்வருவன குறிப்பிடத்தக்கன.

*குடித்தொகை வளர்ச்சி*

ஒரு பிரதேசத்தின் நிலப்பயன்பாட்டை தீர்மானிப்பதில் குடித்தொகை அளவுகள், மாற்றங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மெதகும்பர பிரதேச செயலகப் பிரிவில் 2002 – 2022 வரையிலான காலப்பகுதியில் குடித்தொகையில் ஏற்பட்ட மாற்றம் நிலப்பயன்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. 2002 ஆம் ஆண்டில் 56730 மக்களும், 2012 ஆம் ஆண்டில் 63370 மக்களும், 2022 ஆம் ஆண்டில் 71126 மக்கள் தொகையினரும் காணப்படுகின்றனர் இவ்வாறு ஆய்வுப் பிரதேசத்தில் சனத்தொகை அளவுகளில் தொடர்ச்சியான அதிகரிப்பை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறு குடித்தொகை அதிகரிக்கும் போது மக்களின் தேவைகளும் அதிகரித்து வருகின்றமையினால் இப்பிரதேச நிலப்பயன்பாடானது தொடர்ச்சியாக மாற்றியமைக்கப்பட்டு வருகின்றது. இதனால் சனத்தொகை வளர்ச்சிக்கேற்ப நிலத்தின் தேவைகளும் அதிகரித்தமையினால் நிலப்பயன்பாடுகளில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது.

*அபிவிருத்தி செயற்பாடுகளும் நிலப்பயன்பாட்டு மாற்றமும்*

ஆய்வுப் பிரதேசமானது காலரீதியாக பல்வேறு அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு உட்பட்டு வருகின்றது. குறிப்பாக 2002 ஆம் ஆண்டிற்கு பிறகு இப்பகுதிகளில் துரித அபிவிருத்தி செயற்பாடுகள் இடம்பெற்று வருவதனால் நிலப்பயன்பாடுகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இப்பகுதி அதிகளவிலான இயற்கை தாவரப் போர்வைகளை கொண்டுள்ள பகுதியாக விளங்குகின்றமையினால் அபிவிருத்தி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அதிக அளவிலான இயற்கை தாவரப்போர்வைகள் அழிக்கப்படுகின்றன. உதாரணமாக 2002 ஆம் ஆண்டிற்கு பிறகு அதிகளவிலான வீதி அபிவிருத்திகள் இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக 2012 ஆம் ஆண்டு கண்டி - அம்பாறை பிரதான வீதி A 26 வீதி விஸ்தரிக்கப்பட்டிருந்தன. பிரதான வீதிகள் இவ்வாய்வு பகுதியை ஊடறுத்து செல்வதனால் பல வீதி அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பங்களில் பல்வேறுபட்ட இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன. குறிப்பாக வேகலை, மொரகாமுள்ள போன்ற பகுதிகளில் வீதி அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுகின்றபோது அதிக அளவிலான மலைச்சாய்வுகள், பாறைகள் என்பன அழிக்கப்பட்டிருந்தன. எனவே இவ்வாய்வு பகுதியின் வீதி அபிவிருத்திகள் நிலப்பயன்பாட்டு மாற்றத்தில் தாக்கத்தை செலுத்தியுள்ளன. இவ்வாறு பல்வேறு அபிவிருத்தி செயற்பாடுகள் இடம்பெற்று வருவதுடன் இவை பிரதேச நிலப்பயன்பாட்டிலும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றது.

*காடழிப்பு*

ஆய்வுப் பகுதியில் காடழிப்புச் செயற்பாடானது நிலப்பயன்பாட்டு மாற்றத்திற்கான மிக முக்கிய காரணியாக விளங்குகின்றன. காடுகளானது பொருளாதார செயற்பாடுகளுக்காகவும், அபிவிருத்தி செயற்பாடுகளுக்காகவும், குடியேற்றங்கள் அமைப்பதற்கும் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளது. மேலும் மக்களின் பல்வேறு தேவைகளுக்காகவும் வெட்டப்பட்டு வருவதனால் காடழிப்பானது தடுக்க முடியாததொன்றாகக் காணப்படுகின்றது. ஆய்வுப் பகுதியில் தொடர்ச்சியாக சட்டவிரோதமான முறையில் மரங்கள் வெட்டப்பட்டு காடழிப்பு

செயன்முறை நடந்தேறிக்கொண்டே இருக்கின்றது. 2012 ஆம் ஆண்டில் குடித்தொகை அதிகரித்தமையினால் பொருளாதார தேவையின் நிமித்தம் காடுகளை வெட்டி பயிர்ச்செய்கை நிலங்களாக மாற்றப்பட்டுள்ளது.

***நகராக்கம்***

நகராக்கம் காரணமாக மெததும்பர பிரதேச செயலகப் பிரிவில் நிலப்பயன்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தெல்தெனிய, கரலியத்த, மெதமாநுவர போன்ற நகரங்கள் தற்போது அபிவிருத்தியடைந்து வருகின்றன. ஆய்வுப் பகுதியானது அதிகளவிலான காட்டுவளத்தினைக் கொண்டுள்ள பகுதியாக விளங்குகின்றமையினால் நகராக்கம் உட்பட அபிவிருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற போது அதிகளவிலான காடுகளை அழிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவை நிலப்பயன்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. இப்பகுதி பல்வேறு பொருட்கள், சேவைகளை நுகரும் பொருட்டு ஏராளமான மக்கள் நகர்ப்புறங்களை நோக்கி வருகை தருகின்றனர். குறிப்பாக வைத்திய சேவைகள், கல்வி நிறுவனங்கள், சேவை நிலையங்கள் என்பனவற்றை நாடி கிராமப் புறங்களில் உள்ள மக்கள் நகர்ப்புறங்களுக்கு வருகை தருகின்றனர். எனவே இத்தகைய போக்கானது நகர சனத்தொகையில் சுற்றோட்ட அளவை அதிகரித்தது மட்டுமன்றி மக்களின் கேள்வி தழுவிய பிரத்தியேக இடங்களை நிறுவுவதன் பொருட்டான நகராக்க ரீதியில் நிலப்பயன்பாட்டு மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றன.

***விவசாயம்***

மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பயன்பாட்டு மாற்றத்தில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்திய காரணியாக விவசாய நடவடிக்கைகள் காணப்படுகின்றது. 2002 – 2022 வரையிலான காலப்பகுதியில் விவசாய நடவடிக்கைகள் காரணமாக நிலப்பயன்பாட்டுப் பாங்கில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்கலாம். குறிப்பாக 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிகமாக இருந்த தேயிலை நிலங்கள் இன்று குறைவடைந்தும் நெற்செய்கை நிலங்கள் அதிகரித்தும் காணப்படுகின்றன. 2002 ஆம் ஆண்டில் 3620.72 ஹெக்டயராகக் காணப்பட்ட தேயிலை நிலங்கள் தற்போது குறைவடைந்து 2022 இல் 2429.28 ஹெக்டயராகக் குறைவடைந்துள்ளது. ஆனால் 2002 ஆம் ஆண்டு 1330.39 ஆகக் காணப்பட்ட வயல் நிலங்கள் தற்போது அதிகரித்து 1723.24 ஹெக்டயராக அதிகரித்துள்ளது. விவசாயச் செயற்பாடுகளுக்காக தேயிலை மற்றும் காடுகள் பாரியளவில் அழிக்கப்பட்டு இருக்கின்றன. இது ஆய்வுப் பிரதேசத்தின் நிலப்பயன்பாட்டில் அதிகளவில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

**மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பயன்பாட்டு மாற்றங்களால் ஏற்பட்ட விளைவுகள்**

மெததும்பர பிரதேச செயலகப் பிரிவில் நிலப்பயன்பாட்டு மாற்றங்களினால் பல்வேறுபட்ட சூழல், மானிடவியல் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இங்கு காடுகள் அழிக்கப்பட்டு கட்டமைக்கப்பட்ட பகுதியாகவும், விவசாய நிலமாகவும் மாற்றமடைந்துள்ளன. இதனால் பல்வேறுபட்ட சாதக, பாதகமான விளைவுகள் ஏற்பட்டுள்ளன.

***சூழலியல் தாக்கங்கள்***

ஆய்வுப் பகுதியில் அதிகமான பரப்புகளில் காணப்பட்ட காட்டு வளமானது மனித செயற்பாடுகள் காரணமாக அழிக்கப்பட்டதனால் இங்கு தாவரங்கள் விலங்குகளும் அதிக அளவில் பாதிப்படைந்துள்ளன. குறிப்பாக காடுகள் அழிக்கப்படுகின்ற பொழுது உயிர்பல்வகைமை பாதிப்புக்குள்ளாகும். அத்தோடு மக்கள் தமது சுயலாபத்திற்காகவும் மற்றும் பொருளாதார இலாபத்திற்காகவும் காட்டிலுள்ள பெறுமதி வாய்ந்த மரங்களை அழித்துள்ளனர். மெததும்பர பிரதேச செயலகப் பிரிவை சூழ்ந்துள்ள பகுதிகள் அனைத்தும் மலைகள், காடுகளால் நிறைந்துள்ள பகுதியாக விளங்குகின்றமையினால் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இங்கு மேற்கொள்ளப்படுகின்ற மானிட செயற்பாடுகளானது சூழல் சமநிலையில் தாக்கம் செலுத்தி வருகின்றது. குறிப்பாக காடுகள் அழிக்கப்பட்டதன் காரணத்தினால் மழைவீழ்ச்சி குறைவடைந்து வெப்பநிலை அதிகரித்துள்ளது. மேலும் ஆவியாக்கத்தின் வேகமும் உயர்வடைந்து சூழல் சமநிலையை பாதிக்கின்றது.

***பிரதேச அபிவிருத்தி ஏற்படல்***

மெததும்பர பிரதேச செயலகப் பிரிவானது சிறந்த இயற்கை வளங்களைக் கொண்ட வளமான பகுதியாக காணப்படுவதனால் அதனூடாக அபிவிருத்திச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. நிலப்பயன்பாட்டு மாற்றத்தின் விளைவால் அதிகளவிலான கட்டமைக்கப்பட்ட பகுதி அதிகரித்திருக்கின்ற தன்மையினை இங்கு காணலாம். குறிப்பாக நகரக் கட்டிடத் தொகுதிகள், தனியார் கட்டிடங்கள், கைத்தொழில் நிலையங்கள், சேவை மையங்கள் என பல அபிவிருத்திச் செயற்பாடுகள் நிலப்பயன்பாட்டு மாற்றத்தினால் ஏற்பட்டுள்ளன. இப்பகுதி இயற்கை வளங்களையும், நக்கிள்ஸ் முதலான காடுகளையும் கொண்டமைந்திருந்தமையினால் சுற்றுலா விருத்திக்கு சாதகமாக உள்ளது. சுற்றுலாத் துறையின் அடிப்படையில் அந்நிய செலாவணியை ஈட்டித் தருவதாக ஆய்வுப் பிரதேசம் காணப்படுகின்றது. ஆய்வுப் பகுதியில் திகன நகரிலிருந்து 8km தொலைவில் அமைந்துள்ள சுமார் 209 ஹெக்டயர் பரப்பில் அமைந்துள்ள Victoria Golf ஆனது அதிகளவிலான அந்நிய செலாவணியைப் பெற்றுத் தருவதாகக் காணப்படுவதுடன், இப்பிரதேச மக்களுக்கு சுற்றுலாத் துறை சார்ந்த தொழில் வாய்ப்புக்களும் இதனால் ஏற்பட்டுள்ளது. நிலப்பயன்பாட்டு மாற்றம் காரணமாக கால மாற்றத்திற்கு ஏற்ப மக்களின் வாழ்க்கை முறைமையும் முன்னேற்றமடைந்துள்ளது.

***நிலத்தின் பெறுமதி அதிகரித்தல்***

மெததும்பர பிரதேச செயலகப் பிரிவில் கடந்த இரு தசாப்தங்களில் ஏற்பட்ட நிலப்பயன்பாட்டு மாற்றத்தினால் நிலத்திற்கான பெறுமதி வெகுவாக அதிகரித்துள்ளது. அதிகளவிலான கட்டமைக்கப்பட்ட பகுதிகள் உருவாகியமையினால் அது சார்ந்த சேவை நிலையங்களின் அதிகரிப்பு, இதனடிப்படையில் ஏற்பட்ட முன்னேற்றமானது நிலத்தினுடைய பெறுமதியினை அதிகரிக்கச் செய்துள்ளது. குறிப்பாக இடத்திற்கிடம் வேறுபட்ட நிலப்பெறுமதிகளைக் கொண்டு காணப்படுகின்றது. எனவே இப்பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெற்றுள்ள நிலப்பயன்பாட்டு மாற்றங்களை பொருத்து நிலத்தின் பெறுமதியும் இடத்திற்கிடம் அதிகரித்து காணப்படுகின்றன.

*பெருந்தோட்டத்துறை பாதிப்பு*

ஆய்வுப் பிரதேசமானது பெருந்தோட்டப் பயிரான தேயிலைச் செய்கையை முக்கிய பொருளாதாரமாகக் கொண்டு காணப்பட்டு இன்று நிலப்பயன்பாட்டு மாற்றத்தினால் தேயிலை பயிர்நிலம் குறைவடைந்துள்ளதால் பெருந்தோட்டத் துறை சார்ந்த மக்கள் பாதிப்படைந்துள்ளனர். காலப்போக்கில் தேயிலை நிலங்கள் முறையான பராமரிப்பின்றி பல தேயிலை நிலங்கள் கைவிடப்பட்டுள்ளன. இதனால் உற்பத்தி செய்யப்படும் தேயிலையின் அளவு குறைவடைந்து வந்தமையினால் இதனை நம்பிய மக்களின் வாழ்வாதாரம் பாதிப்படைந்துள்ளது. வறுமை காரணமாக வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கு மக்கள் நகர்ப்புறங்களினை நோக்கியும், வெளிநாடுகளுக்கும் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். அவ்வாறிருப்பினும் தேயிலைச் செய்கையின் அடிப்படையில் சிக்கியிருந்த மக்கள் அதனைவிட்டு வெளியேறி தமக்கானதொரு புதிய ஆரம்பத்தினை ஏற்படுத்தவும் நிலப்பயன்பாட்டு மாற்றங்கள் காரணமாக அமைந்தன.

**முடிவுரை**

மெததும்பர பிரதேச செயலகப் பிரிவின் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற நிலப்பயன்பாட்டு மாற்றம் பற்றியும், மாற்றத்திற்கான காரணிகள் மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகள் தொடர்பான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தவகையில் மெததும்பர பிரதேச செயலகப் பிரிவில் 2002, 2022 ஆகிய ஆண்டுகளுக்கிடையில் கட்டமைக்கப்பட்ட பகுதி, தேயிலை, நீர்நிலைகள், காடுகள், வயல், ஏனையவை போன்ற நிலப்பயன்பாட்டில் இவ்விரு காலங்களுக்கிடையில் குறிப்பிடத்தக்களவு மாற்றம் ஏற்பட்டுள்ளது. மெததும்பர பிரதேச செயலகப் பிரிவில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான நிலப்பயன்பாட்டு மாற்றத்தில் கட்டமைக்கப்பட்ட பகுதி 10 சதவீதமாகவும், வயல் நிலங்கள் 2 சதவீதமாகவும், நீர்நிலைகள் 1 சதவீதமாகவும் அதிகரித்துள்ளதுடன், தேயிலை நிலங்கள் 6 சதவீதமாகவும், காடுகள் 4 சதவீதமாகவும், ஏனையவை 3 சதவீதமாகவும் குறைவடைந்து அதிகமான மாற்றத்தினைக் கொண்டு காணப்படுகின்றன. இத்தகைய நிலப்பயன்பாட்டு மாற்றத்தை தோற்றுவித்த பிரதான காரணிகள் குடித்தொகை அதிகரிப்பு, நகரமயமாக்கல் செயற்பாடுகள், அபிவிருத்திச் செயற்பாடுகள், காடழிப்பு, விவசாய செயற்பாடுகள் என்பன விளங்குகின்றன. இத்தகைய நிலப்பயன்பாட்டு மாற்றமானது குறித்த பிரதேசத்தில் சாதகமான மற்றும் பாதகமான பல விளைவுகளுக்கு இட்டுச் சென்றுள்ளது. அந்தவகையில் பிரதேச அபிவிருத்தி ஏற்படல், பெருந்தோட்டத் தொழிற்துறை பாதிப்பு, நிலப்பெறுமதி அதிகரித்தல், சூழலியல் தாக்கங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். ஆய்வுப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள நிலப்பயன்பாட்டு மாற்றமானது பல்வேறுபட்ட சாதகமான மற்றும் பாதகமான தாக்கங்களைத் தோற்றுவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசத்தில் அழிவடைந்து வரும் காடுகளைப் பாதுகாக்கும் பொருட்டு புதிய மரக்கன்றுகளை நடுதல், மீள் காடாக்கல், காடு வளர்ப்புத் திட்டங்கள் போன்ற செயற்பாடுகளைச் செயற்படுத்த வேண்டும். ஆகவே இங்குள்ள மக்களுக்கு சூழல் நேயம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஊடாக காட்டுவளம்,

உயிர்ப்பல்வகைமை என்பவற்றைப் பாதுகாப்பதுடன் சூழல் சார்ந்த பிரச்சினைகளைத் தடுக்கக் கூடியதாக இருக்கும்.

**உசாத்துணைகள்**

Abebe, G., Getachew, D., & Ewunetu, A. (2022). Analysing land use/land cover changes and its dynamics using remote sensing and GIS in Gubalafito district, Northeastern Ethiopia. *SN Applied Sciences*, 4(1), 30.

Baig, M. F., Mustafa, M. R. U., Baig, I., Takaijudin, H. B., & Zeshan, M. T. (2022). Assessment of land use land cover changes and future predictions using CA-ANN simulation for selangor, Malaysia. *Water*, 14(3), 402

Fatima, N., & Javed, A. (2021). Assessment of Land Use Land Cover Change Detection Using Geospatial Techniques in Southeast Rajasthan. *Journal of Geoscience and Environment Protection*, 9(12), 299-319.

Kaleel, M. I. M., & Zahir, I. L. M. (2008). Land use changes in Kalmunai municipal council (mc) area-Sri Lanka.

Mathanraj, S., Ratnayake, R. M. K., & Rajendram, K. (2019). Temporal Changes of Land Use Pattern in Batticaloa Municipal Council, Sri Lanka.

Ratnayake, R. M. K., & Ranaweera, D. K. D. A. (2017). Urban Landuse Changes in Sri Lanka with Special Reference to Kaduwela Town from 1975 to 2016.

Reis, S. (2008). Analyzing land use/land cover changes using remote sensing and GIS in Rize, North-East Turkey. *Sensors*, 8(10), 6188-6202.

Uduporuwa, R. J. M. (2020). Spatial and temporal dynamics of land use/land cover in Kandy City, Sri Lanka: An analytical investigation with geospatial techniques. *Am. Sci. Res. J. Eng. Technol. Sci*, 69, 149-166.

Withanage, W. K. N. C. (2017). Monitoring of Land Use Changes Using Remote Sensing and GIS, A Case Study in Kandy Divisional Secretariat.

மெதகும்பர பிரதேச செயலகம்.(2019 - 2021) மூலவளத்திரட்டு, மெதகும்பர பிரதேச செயலகம்

வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு. (2019) வருடாந்த செயலாற்றுகை அறிக்கை.

இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை, (2015).

# நுவரெலியப் பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பயன்பாட்டு மாற்றங்கள்

**பிச்சமுத்து காயத்திரி**
புவியியல் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
pitchamuthugayathri@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

நிலப்பயன்பாட்டு மாற்றம் என்பது ஆகக்குறைந்தது இரண்டு வேறுபட்ட காலப்பகுதிகளில் புவி மேற்பரப்பில் காணப்படும் பல்வேறு நிலப்பயன்பாடுகளின் வேறுபாடுகளை குறிக்கின்றது. இவ்வாய்வானது நுவரெலியா பிரதேச செயலக பிரிவின் 2002-2022 ஆண்டுகளில் குறித்தப் பகுதியில் நிலப்பயன்பாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆராய்வதை நோக்காக கொண்டது. ஆய்விற்கு முழுமையாக இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நிலப்பயன்பாட்டில் ஏற்பட்டு வந்துள்ள மாற்றங்களை ஆதாரப்படுத்துவதற்காக (2002–2022 வரையான ஆண்டுகளுக்கிடையில்) Arc GIS 10.4 மென்பொருளினை அடிப்படையாகக்கொண்டு படமாக்கல் செய்யப்பட்டு அப்படங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. செய்மதி விம்பங்கள் (2002,2022), Earth Explorer இலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு நிலப்பயன்பாட்டு படங்கள் (2002,2022) உருவாக்கப்பட்டுள்ளன. மேற்படி பெறப்பட்ட செய்மதி விம்பங்கள் மற்றும் நிலப்பயன்பாட்டுப் படம் புவியியல் தகவல் முறைமை ஊடாக பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு தேசிய நிலப்பயன்பாட்டு வகுப்புக்களுக்கு அமைவாக கட்டிட நிலங்கள், தேயிலை நிலங்கள், காடுகள், வீட்டுத்தோட்டம், நீர்நிலைகள் என ஐந்து வகையான நிலப்பயன்பாட்டு வகைகள் அடையாளப்படுத்தப்பட்டு Google Earth தொழில்நுட்ப அவதானத்தின் அடிப்படையில் நிலப்பயன்பாடுகள் கட்புல, எண்ணியல் ரீதியாக விளக்கமளிக்கப்பட்டு படமாக்கப்பட்டுள்ளது. நிலப்பயன்பாட்டு படங்கள் supervised classification method அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் செய்மதி விம்பங்களிலிருந்து நிலப்பயன்பாடு நிலப்போர்வை வகைகளை படமாக்குவதற்கு pixel-based image classification methods, hybrid objective- based Method போன்ற உயர் தெளிவுத்திறன் வாய்ந்த துல்லியமான நுட்ப முறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகளையும் உருவாக்கப்பட்ட GIS படங்களையும் ஒப்பிடுதல், புள்ளிவிபரவியல் அடிப்படையில் கணிப்பிடல், இடம்சார் தரவுகளையும் அட்டவணைகளையும் இணைத்தல், தனித்த நிலப்பயன்பாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை கணித்தல் என வரையறை செய்துள்ளது. பகுப்பாய்வுகளின் அடிப்படையில் 2002களில் 17833.23ha ஆக காணப்பட்ட வனப்போர்வை 1430.29ha ஆகவும் தேயிலை நிலமானது 2002 இல் 20908.26ha ஆகவும் 2022களில் 13051.98ha ஆகவும் குறைவடைந்துள்ளது. 2002 இல் 3756.09ha ஆக காணப்பட்ட வீட்டுத்தோட்டம் 2022 களில் 13217ha ஆகவும் குடியிருப்பு பாங்குகள் 2002 ஆம் ஆண்டில் 5675.49ha ஆகவும் 2022 ஆம் ஆண்டு 7600.37ha ஆகவும் அதிகரித்துள்ளது. சனத்தொகை பெருக்கம், மானிட செயற்பாடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன நிலப்பயன்பாட்டு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதுடன் இவ்வாறான நிலப்பயன்பாட்டு மாற்றங்களை சரியான முறையில் திட்டமிட்டு ஏற்படுத்துவதன் மூலம் பூகோள பிராந்திய ரீதியில் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை ஏற்படுத்தலாம்.

***திறவுச் சொற்கள்:*** *நிலப்பயன்பாடு, நிலப்போர்வை, மாற்றங்கள், புவியியல் தகவல் தொழில்நுட்பம், தேயிலை*

## அறிமுகம்

நிலமானது பல்லாயிரக்கணக்கான உயிரினங்களின் வாழ்விடங்களை உறுதிப்படுத்துவதும் அவைகளின் இயக்கத்தினை தீர்மானிக்கும் இயங்குத்தன்மை கொண்டதுமானதொரு இடமாக காணப்படுகின்றது. நிலப்பயன்பாட்டு மாற்றம் என்பது ஆகக் குறைந்தது இரண்டு வேறுபட்ட காலப்பகுதிகளில் புவிமேற்பரப்பில் காணப்படும் பல்வேறு நிலப்பயன்பாடுகளின் வேறுபாடுகளை

குறிக்கின்றது (Samsonov, 2023). நிலப்பயன்பாட்டு மாற்றங்கள் குறித்த பகுதியின் இயற்கை மற்றும் மானிட அம்சங்களை மாற்றியமைக்கக்கூடிய ஒன்றாக காணப்படுகின்றது. நிலப்பயன்பாடுகள் உட்கட்டமைப்பு வசதிகள் விவசாய நடவடிக்கைகள், கைத்தொழில் நடவடிக்கைகள், அபிவிருத்தி செயற்பாடுகள் போன்றவற்றிற்காக காலத்திற்கு காலம் இடத்திற்கு இடம் மாறிக்கொண்டே செல்வதனால் நிலத்திற்கான கேள்வி அதிகரித்து செல்வதுடன் குறைந்த அளவான நிலம் அதிகரித்த தேவைக்காக பயன்படுத்தப்பட்டு மாற்றியமைக்கப்படுகின்றது (Zhang et.al, 2020). நிலம் செறிவாக பயன்படுத்தப்படும்போது சமூக, பொருளாதார, சூழலியல் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படுவது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது (Rajeshree et al, 2023). இதனால் நிலப்பயன்பாட்டு மாற்றங்கள் பற்றிய தரவுகளை அறிந்து அதன் பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதும் நிலப்பயன்பாட்டு கொள்கைகளை விருத்தி செய்யவும் நிலப்பயன்பாட்டினுடைய சிறப்புத் தன்மையை மதிப்பிடவும் அவசியமானதாக இருக்கின்றது. நிலப்பயன்பாட்டு மாற்றங்களை விபரிப்பதற்கு புவியியல் தகவல் முறை மற்றும் செய்மதி தொழில்நுட்பம் சிறந்த தொழில்நுட்பங்களாக எல்லோராலும் பயன்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் நிலப்பயன்பாட்டு மாற்றங்கள் அதிகளவில் அபிவிருத்தி செயற்பாடுகளால் ஏற்படும் ஒரு விளைவாக காணப்படுகின்றது. நுவரெலியா மாவட்டத்தில் கடந்த காலங்களில் நிலப்பயன்பாடுகள் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றது (Simwanda, 2019). இவ் அதிகரிப்பிற்கான பிரதான காரணங்களாக சமூக மற்றும் பொருளாதார காரணிகளே பிரதானமானதாக காணப்படுகின்றது (Ranagalage, 2002). ஆய்வுப் பிரதேசமான நுவரெலியா பிரதேச செயலக பிரிவின் நிலப்பயன்பாட்டு மாற்றங்கள் பற்றிய ஆய்வில் இப்பிரதேசமானது பெருமளவிலான பெருந்தோட்டப்பயிரான தேயிலைப் பயிர்ச்செய்கை நிலங்களையும் ஈரம் நிறைந்த என்றும் பசுமையான காடுகளையும் கொண்டு காணப்படுகின்றது.

தேயிலைப்பயிர்நிலமானது அதிகளவில் குடியிருப்புகளுக்காகவும், மரக்கறி பயிர்ச்செய்கைகளுக்காகவும் அழிக்கப்பட்டு வருகின்றது. இதனால் தேயிலை நிலங்கள் குறைவடைவதனால் அதனை நம்பி தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிப்படைகின்றது. காடுகள் குடியிருப்புகளுக்காகவும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காகவும் அழிக்கப்பட்டு வருவதனால் நிலப்பயன்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. (Tokmechi et.al, 2011) அந்தவகையில் இவ் ஆய்வானது 2002 களிலிருந்து 2022 வரையான காலப்பகுதிகளில் நுவரெலியா பிரதேச செயலக பிரிவின் நிலப்பயன்பாட்டு மாற்றங்களில் ஏற்பட்டு வந்த இடம்சார் வேறுபாடுகளையும், போக்குகளையும் அளவுசார் மற்றும் பண்புசார் ரீதியில் பகுப்பாய்வு செய்வதனை நோக்காக கொண்டது.

***ஆய்வுப்பிரதேசம்***




மூலம்: ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது(2023)

**ஆய்வு முறையியல்**

***தரவு மற்றும் தரவுசேகரிப்பு***

ஆய்வுக்காக சேகரிக்கப்பட்ட பண்புசார் மற்றும் அளவைசார் தரவுகளைப் பயன்படுத்தி ஆய்வு நோக்கத்தினையும் முடிவினையும் சிறந்த முறையில் பெற்றுக்கொள்வதற்காக ஆய்வுத் தலைப்பைச் சார்ந்த புள்ளிவிபரவியல் அறிக்கைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்களில் வெளிவந்த கட்டுரைகள், ஆவணக் காணொளிகள், இணையத்தளங்கள், என்பவற்றிலிருந்து பெறப்பட்டது. நிலப்பயன்பாட்டு மாற்றங்களை அறிவதற்காக 2002 மற்றும் 2022 இற்கான நிலப்பயன்பாட்டு படங்கள் மற்றும் செய்மதி மூலங்களில் இருந்தும் ஆய்வுக்குத் தேவையான தரவுகள் பெறப்பட்டுள்ளன.

***தரவு பகுப்பாய்வு முறை***

ஆய்வுக்காக சேகரிக்கப்பட்ட பண்புசார் மற்றும் அளவைசார் தரவுகளைப் பயன்படுத்தி ஆய்வு நோக்கத்தினையும் முடிவினையும் சிறந்த முறையில் பெற்றுக்கொள்வதற்காக எளிய முறையான Word, Excel மென்பொருள்களை பயன்படுத்தியும் புள்ளிவிபரவியல் பொறிகளை பயன்படுத்தியும் தரவுப்பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிலப்பயன்பாட்டில் ஏற்பட்டு வந்துள்ள மாற்றங்களை ஆதாரப்படுத்துவதற்காக (2002–2022 வரையான ஆண்டுகளுக்கிடையில்) Arc GIS 10.4 மென்பொருள் மூலம் படங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. செய்மதி விம்பங்கள் (2002,2022), Earth Explorer இலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு நிலப்பயன்பாட்டு படங்கள் (2002,2022) உருவாக்கப்பட்டுள்ளது. மேற்படி பெறப்பட்ட செய்மதி விம்பங்கள் மற்றும் நிலப்பயன்பாட்டுப்படம் புவியியல் தகவல் முறைமை ஊடாக பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு தேசிய நிலப்பயன்பாட்டு வகுப்புக்களுக்கு அமைவாக கட்டிட

நிலங்கள், தேயிலை நிலங்கள், காடுகள், வீட்டுத்தோட்டம், நீர்நிலைகள் என ஐந்து வகையான நிலப்பயன்பாட்டு வகைகள் அடையாளப்படுத்தப்பட்டு Google Earth தொழில்நுட்ப அவதானத்தின் அடிப்படையில் மேற்கூறிய ஐந்து வகையான நிலப்பயன்பாடுகளும் கட்புல, எண்ணியல் ரீதியாக விளக்கமளிக்கப்பட்டு படமாக்கப்பட்டுள்ளன. நிலப்பயன்பாட்டு படங்கள் supervised classification method அடிப்படையில் 30*30 என்ற Pixel அளவுகளில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் செய்மதி விம்பங்களிலிருந்து நிலப்பயன்பாடு நிலப்போர்வை வகைகளை படமாக்குவதற்கு pixel-based image classification methods, hybrid objective-based Method போன்ற உயர் தெளிவுத்திறன் வாய்ந்த துல்லியமான நுட்ப முறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ் நிலப்பயன்பாட்டுப் படங்களுக்கூடாக ஒவ்வொரு காலப்பகுதிகளிலும் ஏற்பட்டு வந்த மாற்றங்களைக் அறியக்கூடியதாக காணப்படுகின்றது. நிலப்பயன்பாட்டு மாற்றங்களை அட்டவணைகளாக்கப்பட்டு excel பொறிமுறையில் வரைபடங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. நிலப்பயன்பாடுகளில் அளவுசார், பண்புசார் ரீதியாக ஏற்பட்டு வருகின்ற மாற்றங்களை அளவைசார் பகுப்பாய்வு முறைகள் மூலம் அறியப்பட்டன. 2002,2022 ஆகிய காலப்பகுதிகளுக்கிடையிலான நிலப்பயன்பாட்டு வகைகளுக்கிடையிலான மாற்ற அளவுகளை மாற்ற அட்டவணை பகுப்பாய்வினூடாக அறிய முடியும். ஒவ்வொரு நிலப்பயன்பாட்டு வகையிலும் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பில் துல்லியமான முடிவுகளைப் பெறக்கூடியதாக இருந்தது. நிலப்பயன்பாட்டு மாற்றப்பகுப்பாய்வினூடாக நிலப்பயன்பாட்டு வகைகளில் ஏற்படுகின்ற அளவைசார் மாற்றங்கள், நிலப்பயன்பாட்டு வகைகளில் ஏற்படும் அதிகரிப்பு மற்றும் இழப்பு ஒவ்வொரு நிலப்பயன்பாட்டு வகையினதும் தனித்த நிலப்பயன்பாட்டு மாற்றங்கள், மொத்த நிலப்பயன்பாட்டில் வருடாந்த மாற்ற அளவு வீதங்கள் தொடர்பாகவும் மதிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் தனித்த நிலப்பயன்பாட்டு வகையினது இயக்க அளவு மாற்றவீதமானது சமன்பாடு 1 இன் மூலம் காட்டப்பட்டுள்ளது.

$$\boldsymbol{K}=\frac{(\boldsymbol{U_a}-\boldsymbol{U_b})}{\boldsymbol{Ua}*\boldsymbol{T}}*\mathbf{100\%}\text{.................சமன்பாடு 01}$$

K = தனித்த நிலப்பயன்பாட்டு வகையினது இயக்க அளவு மாற்ற வீதம்

Ua =ஆரம்ப ஆண்டு நிலப்பயன்பாட்டு வகையினது அளவு

Ub = இறுதி ஆண்டு நிலப்பயன்பாட்டு வகையினது அளவு

T = ஆய்வுக்காலப்பகுதி

**ஆய்வுப்பெறுபேறும் கலந்துரையாடலும்**

***ஆய்வுப்பிரதேசத்தின் 2002 ஆம் ஆண்டின் நிலப்பயன்பாட்டு பாங்கு***

ஆய்வுப்பிரதேசத்தின் 2002ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிலப்பயன்பாடுகளில் வனப்போர்வைகள் மற்றும் தேயிலை நிலங்கள் அதிகம் காணப்படுவதால் செழிப்பான பகுதியாக காணப்படுகின்றது. அதேநேரம் குடியிருப்பு பாங்குகள் மற்றும் வீட்டுத்தோட்டங்கள் மிகக் குறைவாக காணப்படும் பகுதியாக காணப்படுகின்றது.

**படம்:1 நுவரெலியா பிரதேச செயலக பிரிவின் நிலப்பயன்பாடு (2002)**




மூலம்: ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது.(2023)

2002ஆம் ஆண்டுக்கான மொத்த நிலப்பரப்பில் (48246.79 ஹெக்டேயர்) அடையாளப்படுத்தப்பட்ட நிலப்பயன்பாடுகளாக காடுகள், வீட்டுத்தோட்டம், கட்டிடங்கள், தேயிலை, நீர்நிலைகள், போன்றன காணப்படுகின்றது. இதில் காடுகள் 17833.23ha ஆகவும் வீட்டுத்தோட்டம் 3756.09ha ஆகவும் கட்டிடங்கள் 5675.49ha ஆகவும் தேயிலை 20908.26ha ஆகவும் நீர்நிலைகள் 73.72ha ஆகவும் நிலமானது பயன்படுத்தப்பட்டு காணப்படுகின்றது. இதில் அதிகளவான நிலமானது வனப்பகுதிகளாகவும் தேயிலை நிலங்களாகவும் காணப்படுகின்றது. அதேபோன்று குறைவான நிலப்பகுதிகளில் நீர்நிலைகள் காணப்படுவதுடன் கட்டிடங்கள் மற்றும் வீட்டுத்தோட்டங்கள் ஒப்பிட்டளவில் குறைவாக காணப்படுவதினை பின்வரும் வரைபடம் சுட்டிக்காட்டுகின்றது.

**வரைபடம் 1: 2002 நிலப்பயன்பாட்டு மாற்றத்தை காட்டும் வரைபடம்**




மூலம்: ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது.(2023)

***ஆய்வுப்பிரதேசத்தின் 2022 ஆம் ஆண்டின் நிலப்பயன்பாட்டு பாங்கு***

ஆய்வுப்பிரதேசத்தின் 2022ஆம் ஆண்டு நிலப்பயன்பாட்டு பாங்குகனை நோக்குகின்றபோது 2002 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து பாரியளவிலான மாற்றங்கள் ஒவ்வொரு நிலப்பயன்பாட்டிலும் ஏற்பட்டு வந்துள்ளதை அவதானிக்கலாம்.

**படம்:2 நுவரெலியா பிரதேச செயலக பிரிவின் நிலப்பயன்பாடு (2022)**




மூலம்: ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது.(2023)

ஆய்வுப்பிரதேசமான நுவரெலியா பிரசேசபைக்குற்பட்ட பகுதியின் 2022 ஆம் ஆண்டுக்கான மொத்த நிலப்பரப்பில் (48246.79 ஹெக்டேயர்) காடுகள் 14307.21ha ஆகவும் வீட்டுத்தோட்டம் 13217.4ha ஆகவும் கட்டிடங்கள் 7600.37ha ஆகவும் தேயிலை 13051.98ha ஆகவும் நீர்நிலைகள் 69.75ha ஆகவும் காணப்படுகின்றது. நிலப்பயன்பாட்டு பாங்குகளை பின்வரும் வரைபடம் சுட்டிக்காட்டுகின்றது.

**வரைபடம் 2: 2022 நிலப்பயன்பாட்டு மாற்றத்தை காட்டும் வரைபடம்**




மூலம்: ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது.(2023)

***2002-2022ஆம் ஆண்டுகளுக்கு இடையிலான நிலப்பயன்பாட்டு பாங்கு***

ஆய்வுப்பிரதேசத்தில் 2002-2022 காலப்பகுதியில் சுமார் 20 வருடகால இடைவெளியில் நிலப்பயன்பாட்டு மாற்றங்கள் பல்வேறுபட்ட இயற்கை மற்றும் மானிட செயற்பாடுகளின் காரணமாக மாற்றமடைந்துள்ளது.

**படம்: 3 நுவரெலியா பிரதேச செயலக பிரிவின் நிலப்பயன்பாடு மாற்றம் (2002-2022)**







மூலம்: ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது. (2023).

2002-2022 ஆண்டுகளுக்கிடையில் சுமார் 20 வருடக்காலப்பகுதியில் நுவரெலியா பிரதேச செயலகத்திற்குற்பட்ட பகுதியில் நிலப்பயன்பாட்டு மாற்றங்கள் தொடர்பில் குறிப்பிடுகின்றபோது 2002களில் 17833.23ha ஆக காணப்பட்ட வனப்போர்வை 2022 இல் 14307.21ha ஆக இழக்கப்பட்டுள்ளதோடு குறிப்பாக 3526.02ha வன நிலம் மாற்றமடைந்துள்ளது, வனப்போர்வைகள் குடியிருப்புகள், நகர அபிவிருத்தி, வீட்டுத்தோட்டம் போன்ற செயற்பாட்டிற்காக அழிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் 2002 இல் 20908.26ாய தேயிலை நிலமானது 2022 இல் 13051.98ha ஆக மாற்றம் அடைந்துள்ளது. குறிப்பாக 7856.2ாய தேயிலை நிலம் வேறு நிலப்பயன்பாடுகளாக மாற்றமடைந்துள்ளது. தேயிலை நிலங்கள் குடியிருப்பு மற்றும் தோட்டச்செய்கைக்காக அழிக்கப்பட்டுள்ளதுடன் அப்பகுதியில் சனத்தொகை அதிகரித்தமையும் தேயிலைச் செய்கையின் வீழ்ச்சியின் காரணமாக மரக்கறி பயிர்ச்செய்கையில் மக்கள் ஈடுபடுகின்ற நிலையுமே காரணமாகும். வீட்டுத்தோட்டம் 2002 ஆம் ஆண்டில் 3756.09ha காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டு 13217.4ha ஆக அதிகரித்துள்ளது. இவ் அதிகரிப்பு 9461.31ha ஆகும். அதனைப்போன்று 2002ha இல் குடியிருப்புகள் அல்லது கட்டிடங்கள் 5675.49ha காணப்பட்டது. 2022 இல் 7600.37ha ஆக அதிகரித்துள்ளது. இவ் அதிகரிப்பு 1924.88ha ஆகும். இவ்வாறு நிலப்பயன்பாடுகளின் மாற்றத்தை தீர்மானித்த பிரதான காரணிகளில் மானிட செயற்பாடுகள் முன்னிலை வகிக்கின்றது.

**வரைபடம் 3: 2002-2022 நிலப்பயன்பாட்டு மாற்றத்தை காட்டும் வரைபடம்**




மூலம்: ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது.(2023)

***வனப்போர்வையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் (2002-2022)***

2002-2022 வரையான காலப்பகுதிகளில் ஏற்பட்டு வந்த மாற்றங்களை அவதானிக்கின்றபோது, ஆய்வுப் பகுதியில் நகரை அண்டிய பகுதிகளில் காணப்படுகின்ற வனப்போர்வையானது 2002 களிலிருந்து 2022 காலம் வரை குறைவடைந்து வந்துள்ளன. குறிப்பாக 2002 இல்

17833.23ha ஆக காணப்பட்ட வனப்பகுதிகளின் அளவு குடியிருப்புக்களுக்காகவும், நகர அபிவிருத்தி செயற்பாடுகளுக்காகவும் அழிக்கப்பட்டு 2022 இல் முறையே 14307.21ha ஆக குறைவடைந்துள்ளது. வனப்போர்வைகளின் குறைவானது அதிகரித்த நகராக்கம் மற்றும் வீட்டுத்தோட்டங்களை அமைப்பதற்காக காடுகளை அழித்து அந்நிலங்களை வேறு பயன்பாடுகளுக்கு உட்படுத்துகின்றனர்.

**படம்:4 நுவரெலியா பிரதேச செயலக பிரிவின் வனப்போர்வை மாற்றம் (2002-2022)**




மூலம்: ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது. (2023)

### *தேயிலை நிலங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் (2002-2022)*

2002 இல் ஆய்வுப்பிரதேசத்தின் மேற்கு,மத்திய, வடமேற்கு பகுதிகளில் தேயிலை நிலங்கள் பரம்பல் அதிகமாக காணப்படுகின்றது. குறிப்பாக மொத்த நிலப்பரப்பில் 20908.26ha ஆக காணப்பட்டது. சுமார் 20 வருட கால இடைவெளியில் குறித்த தேயிலை நிலம் 13051.98ha ஆக குறைவடைந்துடள்ளது. சுமார் 7856.26ha தேயிலை நிலம் இழக்கப்பட்டு இந்நிலம் கட்டிடங்கள் மற்றும் வீட்டுத்தோட்டங்கள் அமைத்தல் போன்ற காரணங்களால் தேயிலை நிலமானது மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

**படம்:5 நுவரெலியா பிரதேச செயலக பிரிவின் தேயிலை நில மாற்றம் (2002-2022)**

### *வீட்டுத்தோட்டங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் (2002-2022)*

ஆய்வுப்பிரதேசத்தின் வீட்டுத்தோட்டமானது 2002ஆம் ஆண்டு 3756.09ha ஆக காணப்பட்டது. 20 வருடகால இடைவெளியில் 13217.4ha ஆக அதிகரித்துள்ளது. இவ் அதிகரிப்பு 9461.31ha ஆக காணப்படுகின்றது. ஆய்வுப்பிரதேசத்தில் இன்று விவசாய சார் செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றது. பெருந்தோட்டத்துறையில் போதியளவு வருமானம் பெற்றுக்கொள்ள

முடியாததன் காரணமாக அதிகளவு மக்கள் விவசாயம் நோக்கி நகர்வதே முக்கிய காரணமாகும். குறிப்பாக வீட்டுத்தோட்டம் வடமேற்கு மூலையில் செறிவாக காணப்படுவதுடன் ஏனைய பகுதிகளில் 2002 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகின்றபோது அதிகரித்தே காணப்படுகின்றது. இவ் அதிகரிப்பினை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது.

**படம்:6 நுவரெலியா பிரதேச செயலக பிரிவின் வீட்டுத்தோட்ட நிலப்பயன்பாட்டு மாற்றம் (2002-2022)**




மூலம்: ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது. (2023)

***கட்டிடப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் (2002-2022)***

2002 ஆம் ஆண்டு ஆய்வுப்பிரதேசத்தில் கட்டிடங்கள் 5679.49ha ஆகும் 2022 ஆம் ஆண்டு




மூலம்: ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது. (2023

7600.37ha ஆகும். 20 வருட கால இடைவெளியில் சனத்தொகை அதிகரிப்பு கட்டிடங்களின் பெருக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அது சுமார் 1924.88ha ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நகரத்தை அண்மித்த வடமேற்கு பகுதியில் கட்டிடங்களின் அதிகரிப்பு தீவிரமானதாக காணப்படுகின்றது. அதனை பின்வரும் படம் மூலம் காட்டலாம்.

**படம்:7 நுவரெலியா பிரதேச செயலக பிரிவின் குடியிருப்பு நிலப்பயன்பாடு மாற்றம் (2002-2022)**







மூலம்: ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது. (2023)

**நிலப்பயன்பாட்டு வகைகளின் அளவைசார் மாற்றம் 2002-2022**

வெவ்வேறு காலப்பகுதியிலும் பெறப்பட்ட நிலப்பயன்பாட்டு வகைகளின் பரப்பு ரீதியாக ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் ஒவ்வொரு நிலப்பயன்பாட்டு வகைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் இழப்பு என்பன அட்டவணை 1இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 1 நிலப்பயன்பாட்டு மாற்றப்போக்கு (2002 - 2022)**

| நிலப்பயன்பாட்டு வகைகள் | பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு / இழப்பு (ஹெக்டேயர்) | | | |
|---|---|---|---|---|
| | 2002 | 2022 | அதிகரிப்பு | இழப்பு |
| காடுகள் | 17833.23 | 14307.21 | | -3526.02 |
| நீர்நிலைகள் | 73.72 | 69.75 | ு3.97 | |
| தேயிலை | 20908.26 | 13051.98 | | -7856.28 |
| வீட்டுத்தோட்டம் | 3756.09 | 13217.4 | ு9461.31 | |
| கட்டிடம் | 5675.49 | 7600.37 | ு1924.88 | |
| மொத்தம் | 48246.79 | 48246.79 | ு11390.16 | -11382.23 |

மூலம்: ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது.(2023)

**அட்டவணை 2 ஒவ்வொரு நிலப்பயன்பாட்டு வகையினதும் இயக்க அளவு மாற்ற வீதம்**

| நிலப்பயன்பாட்டு வகைகள் | இயக்க அளவு மாற்று வீதம் 2002 - 2022 |
|---|---|
| காடுகள் | -0.98 |
| நீர் நிலைகள் | 0.26 |
| தேயிலை நிலங்கள் | -1.87 |
| வீட்டுத்தோட்டம் | 12.59 |
| கட்டிடங்கள் | 1.69 |




மூலம்: ஆய்வுக்காக தயாரிக்கப்பட்டது.(2023)

ஆய்விற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட இரண்டு காலப்பகுதிகளிலும் தனித்த நிலப்பயன்பாட்டு வகையினது இயக்க அளவு மாற்ற வீதமானது சமன்பாடு 1 இன் அடிப்படையில் கணிக்கப்பட்டு அட்டவணை 2இல் காட்டப்பட்டுள்ளது. இதனடிப்படையில் 2002-2022 ஆகிய காலப்பகுதிகளுக்கிடையில் காடுகள், தேயிலை நிலங்கள் என்பன முறையே -0.98%, -1.87% ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. கட்டிட நிலங்கள், வீட்டுத்தோட்டம், நீர்நிலைகள், என்பன முறையே 1.69%, 12.59%, 0.26% ஆக அதிகரித்துள்ளது.

**முடிவுரை**

2002, 2022ஆகிய காலப்பகுதிகளுக்குரிய நிலப்பயன்பாட்டு படங்கள் தயாரிக்கப்பட்டு பிரதான நிலப்பயன்பாட்டு வகையில் இட மற்றும் காலரீதியாக ஏற்பட்ட மாற்றங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இப்பகுப்பாய்வானது நிலப்பயன்பாட்டு படங்களை ஒப்பிடுதல், புள்ளிவிபர முறைகளில் கணிப்பிடுதல், இடம்சார் தரவுகளையும், அட்டவணைத் தரவுகளையும் இணைத்தல், தனித்த நிலப்பயன்பாட்டு வகையில் ஏற்பட்ட இயக்க அளவு மாற்ற வீதம் கணிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் 2002களில் வனப்போர்வைகள் 17833.23 ஹெக்டெயராகவும் மற்றும் தேயிலை நிலங்கள் 20908.26 ஹெக்டெயர்களாக அதிகரித்தும் கட்டிடநிலங்கள் 5675.49 ஹெக்டெயராகவும், வீட்டுத்தோட்டம் 3756.09 ஹெக்டெயராகவும் குறைவடைந்து காணப்படுகின்றது. அதனை தொடர்ந்து வந்த காலப்பகுதிகளான 2022 இல் வனப்போர்வை 14307.21 ஹெக்டெயராகவும், தேயிலை நிலங்கள் 13051.98 ஹெக்டெயராகவும் மனிதனின் பல்வேறு தேவைகளுக்காக நிலமானது இழக்கப்பட்டு வந்துள்ளன மனிதர்களின் அதிகரித்த தேவை காரணமாக கட்டிடங்கள் மற்றும் வீட்டுத்தோட்டங்கள் குறிப்பாக விவசாய நிலங்களாக மாற்றமடைந்து வந்துள்ளன. நிலப்பயன்பாட்டு மாற்றங்களை சரியான முறையில் திட்டமிட்டு ஏற்படுத்துவதன் மூலம் பூகோள, பிராந்திய மற்றும் உள்ளூர் ரீதியாக ஏற்படும் தாக்கங்களை குறைப்பதனால் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடியதாக இருப்பதோடு இயற்கை சூழலையும் பாதுகாத்து பொருளாதார ரீதியில் நன்மையை பெறக்கூடியதாக அமையும்.

**REFERENCE**


Rajeshree, M. (2023). Spatial Analysis for Change Detection Of Geographical Entities Using Object Based Modeling Approach. Retrieved from https://shodhgangotri.inflibnet.ac.in/bitstream/20.500.14146/12671/1/phd%20synopsis_rajshree%20(2).pdf

Ranagalage, M., Wang, R., Gunarathna, M. H. J. P., Dissanayake, D. M. S. L. B., Murayama, Y., & Simwanda, M. (2019). Spatial forecasting of the landscape in rapidly urbanizing hill stations of South Asia: A case study of Nuwara Eliya, Sri Lanka (1996–2037). *Remote Sensing*, *11*(15), 1743.

Samsonov, T. (2023). SPATIAL ANALYSIS AND MODELLING. *The Routledge Handbook of Geospatial Technologies and Society*.

Tokmechi, Z. (2011). Land Slide: A Key Problem in Uma Uya Project Risk Controlling. *World Applied Sciences Journal*, *12*(9), 1512-1516.

Zhang, R., Tang, X., You, S., Duan, K., Xiang, H., & Luo, H. (2020). A novel feature-level fusion framework using optical and SAR remote sensing images for land use/land cover (LULC) classification in cloudy mountainous area. *Applied Sciences*, *10*(8), 2928.

# இலங்கையின் பொருளாதார நெருக்கடியினால் மீனவ சமுதாயம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்: ஒலுவில் பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**தாஜுதீன் முஹம்மது முபாஸ்**
சமூக விஞ்ஞானங்கள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
mufasnmohamed@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் முக்கியமான தொழிலாக மீன்பிடித் தொழில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அம்பாறை மாவட்டத்தில் கரையோர பகுதிகளில் ஒன்றாக ஒலுவில் கிராமம் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள மக்கள் மரபு ரீதியாக விவசாயம், மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இக்கிராமத்தில் 2000 மீனவர் குடும்பங்கள் வாழ்கின்றனர் அவற்றுள் 2150 நபர்கள் மீனவர்களாக தமது வாழ்வாதாரத்தை தேடுகின்றனர். மீனவ சமுதாயமானது காலத்திற்குக் காலம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றது. குறிப்பாக கடல் அரிப்பு, துறைமுகம் வருகையினால் காணி இழப்பு, மண் அகழ்வு என பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றது. ஆயினும் தற்போது இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் தற்சமயம் இன்னும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இவற்றினை வெளிக்கொண்டுவருவதற்காக முதலாம் நிலைத் தரவுகளான நேரடி அவதானம், நேர்காணல் போன்ற முறைகளையும் இரண்டாம் நிலைத் தரவுகளாக பொருத்தமான ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளம் என்பனவற்றின் மூலம் பெறப்பட்ட தரவுகள் பயன்படுத்தப்பட்டு இங்கு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலமாக ஒலுவில் பிரதேச மீனவச் சமுதாயத்தின் முக்கிய பிரச்சினைகளாக அதிகமான வறுமை நிலை, அதிக கடன் சுமை, வெளிநாடு செல்லுதல், தங்க ஆபரணப் பொருட்கள் விற்பனையும் அடகு வைத்தலும், தொழிலை மேற்கொள்வதற்கான மூலப் பொருட்களின் விலை ஏற்றம் முதலிய காரணங்களினால் தங்களின் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாமல் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இவற்றினை வெளிக்கொண்டு வருவதுடன் இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பொருத்தமான பரிந்துரைகளும் இனங்காணப்பட்டு முன்வைக்கப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

***திறவுச் சொற்கள்:*** *மீன்பிடித் தொழில், மீனவச் சமுதாயம், பொருளாதார நெருக்கடி*

## ஆய்வு அறிமுகம்

அம்பாறை மாவட்டத்தில் கரையோர பகுதிகளில் ஒன்றான ஒலுவில கிராமத்தில் மீன்பிடித் தொழிலிலை அடிப்படையாகக் கொண்ட மீனவச் சமுதாய மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இக்கிராமத்தில் 2000 மீனவர் குடும்பங்கள் வாழ்கின்றனர். அவற்றுள் 2150 நபர்கள் மீனவர்களாக தமது வாழ்வாதாரத்தில் தங்கியுள்ளனர். இவ்வாறு காணப்படுகின்ற மீனவர்கள் பல்வேறு குழுக்களாக பிரிந்து தங்களின் மீன்பிடித் தொழிலை மேற்கொள்கின்றனர். அந்த வகையில் இவர்கள் மயில் தத்தி, ஹம்பர் தத்தி, மைனர் தத்தி, 4000 தத்தி, பென்ஸ் வத்த தத்தி, ஏலங்கா தத்தி, பழைய தத்தி, சாக்கன் தத்தி, நட்டம் தத்தி, ராணி தத்தி, ஹிஜ்ரா தத்தி, வல்லரச தத்தி, புதுத் தத்தி என 13 கரைவலைகள் மூலம் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டனர். ஒவ்வொரு கரைவலையிலும் சுமார் 100 க்கும் 150 க்கும் இடைப்பட்ட தொழிலாளர்கள் தொழில் பெற்று தமது வாழ்வை அமைத்துக் கொண்டனர் (Nawas, 2018). இம்மீனவர்கள் அப்பிரதேச கரையோரத்தினை குடாத்துறை, நடுத்துறை, லைட் ஹவுஸ் துறை,

பின்னங்குடாத் துறை என நான்கு துறைகளிலும் 42 தோணிகளும் 205 இயந்திரப் படகுகளும் மாயவலை, ஆடுகயிறு, இழுவவலை, எறிகயிறு, சுருக்கு வலை, சில்லி வலை, பண்ணை என பல்வேறு அமைப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவற்றில் ஒரு தோணியில் 7 ஊழியர்களாகவும் படகில் 5 ஊழியர்களாகவும் தொழிலைப் பெற்று தமது குடும்ப பொருளாதாரத்தை செப்பனிட்டுக் கொள்கின்றனர் (Nawas, 2018).

மீன்பிடிச் சமுதாயமானது காலத்திற்குக் காலம் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டு வந்துள்ளது. அதிலும் குறிப்பாக கடல் அரிப்பு, துறைமுகம் வருகையினால் காணி இழப்பு, மண் அகழ்வு என பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றது. அதாவது ஒலுவில் பிரதேசத்தில் துறைமுகம் அமைக்கப்படும் வரையான காலப்பகுதியில் ஒலுவில் பிரதேசத்தில் உள்ள பெருமளவு குடும்பங்கள் மீன்பிடித் தொழில் மூலமாக கிடைத்த வருமானத்தில் தமது வாழ்வை சிறப்பாக நடாத்தி வந்தனர். மீன்பிடியுடன் இணைந்ததாக உப்புக்கருவாடு பதனிடல் போன்ற தொழில் முயற்சிகளும் இடம்பெற்றன. இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் இச்சமுதாயமானது பல பிரச்சனையினை எதிர்கொண்டு வருகின்றனர். இத்தொழில் சம்பந்தமான பல்வேறு விமர்சனங்களும் கண்டனங்கள் மற்றும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் ஒலுவில் பிரதேசத்தில் காணப்படுகின்ற மீனவச் சமுதாயமானது கடலரிப்புப் பிரச்சினை, அதிகமான வறுமை நிலை, அதிக கடன் சுமை, வெளிநாடு செல்லுதல், தங்க ஆபரணங்கள் விற்பனையும் அடகுவைத்தலும், மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கான மூலப் பொருட்களின் விலை ஏற்றம் என்பவற்றால் இத்தொழிலை மேற்கொள்ள முடியாமல் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இப்பிரச்சினைகளை மையப்படுத்திய வகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் பல்வேறுபட்ட தரப்பினர் பாதிக்கப்பட்டனர். அவர்களில் முக்கியமாக பேசப்படுபவர்களில் மீனவச் சமுதாயமும் உள்ளடங்கப்படுகின்றது. குறிப்பாக இப்பொருளாதார நெருக்கடி மீனவ சமுதாயத்தின் வாழ்வாதாரத்தினை மிக மோசமாகப் பாதிக்கின்றது என்பது தொடர்பாக பல சர்ச்சைகள் மேலேலுந்துள்ளது. அந்தவகையில் ஒலுவில் பிரதேசத்திலுள்ள மீனவச் சமுதாயமானது கடலரிப்புப் பிரச்சினை, அதிக வறுமை நிலை, அதிகமான கடன் சுமைகள், மீனவர்கள் கடற்றொழிலிலிருந்து வெளியேறுதல், மீனவர்கள் இத்தொழிலை கைவிட்டு வெளிநாடு செல்லுதல், தங்க ஆபரணங்கள் விற்பனையும் அடகுவைத்தலும், மின் மற்றும் குடிநீர் கட்டணங்கள் அதிகரிப்பினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு, மீனவத் தொழிலுக்காக கொள்வனவு செய்யப்படுகின்ற மூலப் பொருட்களின் விலை அதிகரித்தமை முதலிய அடிப்படையான பிரச்சினைகளை இப்பிரதேச மீனவச் சமுதாயம் எதிர்கொள்ளுகின்றது என்பதனை முக்கிய பிரச்சினைகளாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு நோக்கம்**

1. ஒலுவில் பிரதேச மீனவச் சமுதாயம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டறிதல்.
2. இப்பிரதேசத்தில் மீனவர்கள் எதிர் கொள்ளும் தொழில் ரீதியான சவால்களை அடையாளப்படுத்துதல்.
3. இப்பிரச்சினைகளை தீர்க்கும் வகையிலான பரிந்துரைகளை முன்வைத்தல்.

**ஆய்வுப் பிரதேசம்**

இலங்கையின் தென்கிழக்குப் பிராந்தியத்தில் அட்டாளச்சேனை பிரதேச செயலகத்திற்குள் அமைந்துள்ள ஒலுவில் பிரதேசமானது இயற்கை சூழமைவினைக் கொண்டுள்ளதுடன் அதன் பிரதான எல்லைகளாக மேற்கே வயல்நிலத்தையும் வடக்கே தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினையும், கிழக்கே வங்காள விரிகுடா கடலையும் தெற்கே கப்பற்த் துறைமுகத்தையும் எல்லைகளாக கொண்ட பிரதேசமாகும். இங்கு மொத்தமாக 7 கிராம சேவகர் பிரிவுகளிலும் 10,545 மக்கள் வாழ்கின்றனா். அதில் ஆண்கள் 5,251 பெண்கள் 5,294 காணப்படுகின்றனர் (பிரதேச செயலக அறிக்கை, 2020). அந்த அடிப்படையில் ஆய்வுப் பிரதேசத்தில் மொத்தமாக 2000 மீனவர் குடும்பங்கள் வாழ்கின்றன அவற்றுள் 2150 நபர்கள் மீனவர்களாக தமது வாழ்வாதாரத்தை தேடுகின்றனா் (Nawas, 2018). இப்பிரதேசத்தில் இவ்வாறு வாழ்வாதாரத்தைத் தேடுகின்ற மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

**ஆய்வு இடைவெளி**

ஒலுவில் பிரதேச மீனவச் சமுதாயம் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக சில ஆய்வுகள் செய்யப்பட்டிருந்தாலும் இலங்கையில் ஏற்பட்ட பாரிய பொருளாதார நெருக்கடியின் பின்னர் இப்பிரதேச மீனவச் சமுதாயம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வுகள் இதுவரையில் செய்யப்படவில்லை என்ற அடிப்படையில் இவ்இடைவெளியினை பூர்த்தி செய்யும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வானது முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. முதல் நிலைத்தரவுகள் நேரடி அவதானம், நேர்காணல் மற்றும் குழு கலந்துரையாடல் மூலமாகவும் தரவுகள் திரட்டப்பட்டுள்ளது. இங்கு நேர்காணலானது துறைசார் நிபுணர்கள், மீனவர் அமைப்புக்கள், கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள், மீனவச் சமுதாயத்தில் உள்ள இல்லத்தரசிகள் ஆகியவர்களிடமிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலைத் தரவுகளாக பொருத்தமான ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளம் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு

மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த வகையில் இது ஒரு விவரண ரீதியானதும், பண்பு ரீதியானதுமான ஆய்வாக அமைகின்றது.

**பெறுபேறுகளும் முடிவுகளும்**

இலங்கையின் பொருளாதார நெருக்கடியினால் மீனவச் சமுதாயம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கண்டறியும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது நேரடி அவதானம், நேர்காணல் மற்றும் குழு கலந்துரையாடல் மூலமாகவும் அதேபோன்று இதனோடு தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தளம் என்பவற்றினூடாக பெறப்பட்ட தகவல்களைக் அடிப்படையாகக் கொண்டு பெறப்பட்ட விடயங்களை பின்வருமாறு தொகுத்து நோக்க முடியும்.

***கடலரிப்புப் பிரச்சினை***

கிழக்கு மாகாண கரையோரத்தினை பொறுத்தவரையில் மிகவும் அதிகமாக பேசப்படுகின்ற பிரதானமான பிரச்சினையாகவே இக்கடலரிப்புப் பிரச்சினை காணப்படுகின்றது. குறிப்பாக கடலரிப்பு பிரச்சினையானது ஒலுவில் துறைமுகம் வந்ததன் பின்னரே அதிகமான தாக்கத்தினை கரையோர பிரதேசங்களில் ஏற்படுத்துகின்றது (நேர்காணல், 2023). ஆகவே ஆரம்பகாலங்களில் பருவகாலங்களில் மட்டுமே சாதாரணமான கடலரிப்பு இப்பிரதேச கடல்பரப்பில் ஏற்பட்டுள்ளது. துறைமுகம் மற்றும் பொருளாதார நெருக்கடியின் பின்னர் கடலரிப்பினை உயர் அதிகாரிகள் கண்டுகொள்ளாமையினால் இன்று கடலரிப்பு பாரியளவில் உக்கிமடைந்துள்ளது (நேர்காணல், 2023). அதுமட்டுமில்லாது அதன் தாக்கமானது இப்பிரதேசத்திற்கு அண்மித்த கரையோர பிதேசங்களிலும் (அட்டப்பளம், நிந்தவூர் மற்றும் சாய்ந்தமருது) பாதிப்பினை ஏற்படுத்தி வருகின்றதனை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக இந்த கடலரிப்பினால் ஒலுவில் மீனவர்கள் தங்களில் நாளாந்த வாழ்வாதாரத்தினை தேடிக் கொள்வதில் அதிக சவால்களை எதிர் கொள்கின்றனர். தங்களின் படகுகளை நகர்த்த முடியாமலும் அதனை உரிய இடத்தில் நிறுத்திவைக்க முடியாமலும் நாளுக்கு நாள் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதாக கூறுகின்றனர் (நேர்காணல், 2023). இந்த சவால் காரணமாக ஒலுவிலை அண்மித்த ஏனைய பிரதேச கரையோரங்களிலும் கடலரிப்பினால் மீனவர்கள் பல்வேறு வாழ்வாதார பிரச்சினைகளுக்குள் அகப்பட்டுள்ளதனை அறிய முடிகின்றது.

***அதிக வறுமை நிலை***

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது பல்வேறு மட்டங்களில் வறுமை நிலையினை ஏற்படுத்தியுள்ளதுடன் அதன் தாக்கம் தொடர்ச்சியாக பல மட்டங்களில் காணப்படுகின்றது. அந்த வகையிலேயே கடந்த காலங்களை விடவும் இப்பொருளாதார நெருக்கடியின் மூலமாக மீனவச் சமுதாயமானது அதிக வறுமை நிலைக்கு உட்பட்டு பசி, பட்டினியில் தனது நாளாந்த வாழ்வினை கடத்திவருகின்றனர். இந்த நெருக்கடியின் பின்னரான காலப்பகுதியில் ஒருவேளைக்கான சாப்பாட்டுக்கே அதிகமாக கஷ்ரப்பட்டோம், பெரும்பாலான நாட்கள் மீன் கறியினையே மாத்திரம் சமைத்து உண்டோம் இதர பொருட்கள் வாங்க

முடியவில்லை, மண்ணெண்ணையின் விலையேற்றத்தினால் கடலுக்கு தொடராக செல்லமுடியாத நிலை அதனால் பல நாட்கள் குடும்பமே பட்டினியாக இருந்தோம், சில வேலைகளில் இந்த பசி, பட்டினியினால் பிள்ளைகள் படும் கஷ்டத்தினை கண்களால் பார்க்க முடியாமல் அசாதாரண காலநிலையிலும் கூட உயிரினைப் பணையம் வைத்து கடலுக்கு சென்ற சரித்திரமும் உண்டு எனக் குறிப்பிட்டனர் (நேர்காணல், 2023). இவ்வாறு மீனவச் சமுதாயமானது இந்நெருக்கடி காலங்களில் அதிகமான வறுமையினால் அல்லோலப்பட்டுள்ளனர் என்பது புலனாகின்றது.

***அதிகமான கடன் சுமைகள்***

மீனவச் சமுதாயமானது இயல்பாகவே தங்களின் குடும்ப வாழ்க்கையினை சமநிலைப்படுத்தி கொண்டு செல்ல வேண்டுமாயின் பணம் உள்ளவர்களிடம் கடன்களைப்பெற்றும், கடைகளில் தமக்குத்தேவையான பொருட்களை கடன்களுக்கு கொள்வனவு செய்பவர்களாகவே பெரும்பாலான மீனவச் சமுதாயத்தினர் காணப்படுகின்றனர். பொருளாதார நெருக்கடியின் பின்னர் அதிகமான கடன் சுமை சுவிகரித்துக்கொண்டது. அதனை மீளச் செலுத்த முடியாமல் அவதிப்பட்டோம் இப்போதும் படுகின்றோம் உதவி செய்ய யாருமே இல்லை (நேர்காணல், 2023). இந்த நெருக்கடியின் பின்னர் முன்பிருந்த கடன் சுமையினைவிட அதிக கடன் சுமையினை ஏற்கவேண்டி ஏற்பட்டுள்ளதனை அறியமுடிகின்றது. கடைகளில் கடனுக்காக பொருட்களை கொள்வனவு செய்து பின்னர் நாங்கள் மீன்களை அதிகமாக பிடித்து அதிக வருமானம் கிடைகின்ற போது கடன்களை மீளச் செலுத்துவதுண்டு ஆயினும் இந்நெருக்கடிகாலத்தில் அதிகமாக வருமானம் வருகின்ற காலம் வரவே இல்லை எனவும் அதிலும் எங்களுக்கு வருகின்ற வருவாயினை விட செலவுகளே அதிகமாக இருந்தமை எமக்கு பாரிய இழப்பாகவும் இது அதிக கடன் சுமைக்கும் காரணமாகவும் இருந்தது என்கின்றனர் (நேர்காணல், 2023). இவ்வாறு இருக்கையில் ஒரு இல்லத்தரசி குறிப்பிடும் போது அன்றைய சூழ்நிலையில் கடன்களை நாங்கள் வாங்காமலிருந்திருந்தால் இன்று நாங்கள் உயிருடன் இருக்கமுடியாமல் போயிருக்கும் (நேர்காணல், 2023) எனக் குறிப்பிட்டார். ஆகவே இச்சமுதாயத்தினர் அதிகமாக கடன் சுமையினை கொண்டவர்களாக உள்ளதுடன் நாங்கள் இந்நெருக்கடியில் உயிர் வாழ வேண்டுமாயின் கட்டாயம் கடன் வாங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டமையே இக்கடன் சுமைக்கு காரணம் என்பதனை எடுத்துரைக்கின்றனர். இம்மீனவச் சமுதாயம் குறிப்பாக கடைகளில் வாழ்வாதாரம் சார்ந்தோ அல்லது தங்களின் தொழில் சார்ந்தோ கொள்வனவு செய்கின்ற அநேகமான பொருட்கள் கடனுக்கே கொள்வனவு செய்யப்படுதாக அறிந்துகொள்ள முடிந்தது.

***மீனவர்கள் கடற்றொழிலிலிருந்து வெளியேறுதல்***

மீன்பிடித் தொழிலானது ஒரு பரம்பரைத் தொழிலாகக் காணப்படுகின்றது. மீனவ சமூகத்தினர் இத்தொழிலினை பரம்பரை பரம்பரை பரம்பரையாக மேற்கொண்டு வருகின்றனர். ஆயினும் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினால் பலர் இத்தொழிலை கைவிட்டு வேறு தொழில்களை நாடிச்செல்லுகின்ற போக்கு அதிகரித்துள்ளது. குறிப்பாக

மீன்பிடித் தொழிலை மேற்கொண்ட பலர் கடைகளில் வேலைகளுக்கும், மேசன் வேலைக்கும், கொழும்புக்கு வேலைக்காக செல்வதாகவும் கூறுகின்றனர். எனவே இப்பிரதேச மக்கள் இப்பொருளாதார நெருக்கடியின் காரணமாக அதிகமாக மீன்பிடித் தொழிலிலிருந்து வெளியேறும் போக்கு காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

***கடற்றொழில் சார் பொருட்களின் விலையேற்றமும் அதிக செலவும்***

மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு பிரதானமாக பல்வேறு மூலப்பொருட்கள் தேவையாக உள்ளன அந்த வகையில் மிக முக்கியமாக மண்ணெண்னை, மீன்பிடி வலைகள், மோட்டர் முதலியவற்றிற்கு கடந்த காலங்களை விட தற்போது மூன்றுமடங்காக விலையேற்றப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் மண்ணென்னை 3 லீட்டர் 70 ரூபாய்க்கு வாங்கினோம். ஆனால் பொருளாதார நெருக்கடியின் போது 430க்கு மேல் அதிகரித்தது. இன்றைக்கு 231 ரூபாயாக உள்ளது. அதைவிட மோட்டர் பழுதானால் பாரிய செலவை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இருப்பினும் மீனுக்கான விலை குறைவாகத் தான் இருக்கின்றது (நேர்காணல், 2023). இதிலும் கடந்த வருடமெல்லாம் மண்ணென்னையினை கொள்வனவு செய்ய கடுமையாக இடர்களினை மீனவச் சமுதாயம் எதிர்கொண்டது. குறிப்பாக வரிசை முறையில் காத்திருத்தல், மண்ணென்னையினை கொள்வனவு செய்யும் அளவு வரையறுக்கப்பட்டமை, மண்ணென்னையின் கொள்வனவு செய்ய காலதாமதம், மண்ணென்னையின் விலை சடுதியாக அதிகரித்தமையினால் இத் தொழிலை மேற்கொள்வதில் மீனவர்கள் பல சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இவர்கள் இத்தொழிலை மேற்கொள்வதற்காக செய்கின்ற செலவுகளை மீன் விற்பனையின் போது பெற்றுக்கொள்ள முடியவில்லை என்பதோடு சமகாலத்தில் மீன்களின் விற்பனை விலையிலும் பாரிய வீழ்ச்சி நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டுகின்றனர் (நேர்காணல், 2023). இன்று இவ்வாறான சிரமங்கள் சற்று குறைந்தாலும் பொருளாதார நெருக்கடியின் தாக்கம் இன்னும் மீனவச் சமதாயத்தினை விட்டுச்செல்லவில்லை.

***மீனவர்கள் இத்தொழிலை கைவிட்டு வெளிநாடு செல்லுதல்***

இன்றைய சூழ்நிலையில் பல்வேறு தொழில் துறைசார்ந்து தொழிலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். அதற்காக கூறப்படுகின்ற பிரதானமான காரணம் இலங்கையில் காணப்படும் பொருளாதார நெருக்கடியாகும். அவ்வாறான நிலையினை அடிப்படையாகக் கொண்டு கடல் தொழிலை மேற்கொள்கின்ற பலர் இப்பொருளாதார நெருக்கடியினால் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பினை பெற்றுக் கொள்ள சென்றுவிட்டனர். அதிலும் குறிப்பாக இளைஞர்கள் பலர் வெளிநாடுகளுக்கு தொழில்களை தேடி சென்றுவிட்டனர். இவர்களில் மீன்பிடித் தொழிலை புதிதாக கற்றுக் கொண்டவர்களே அதிகம் (நேர்காணல், 2023). இந்த அடிப்படையில் நோக்கும் போது இளம் வயதினர், மீன்பிடித் தொழிலை கைவிட்டு கஷ்டப்பட்டாலும் பிரச்சினையில்லை எனக்கூறிவிட்டு வெளிநாடு செல்வதானது இத்தொழில்த் துறையின் வீழ்ச்சிக்கு காரணமாக உள்ளது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட முடிகின்றது. இத்தொழிலினை சரியாகச் மேற்கொள்ள முடியவில்லை என்பதனால் மீனவர்கள் தங்களின்

படகுகள், வாகனங்கள் என்பவற்றினை விற்றுவிட்டும் கைமாற்றாக கடன்களை வாங்கிவிட்டு விலைவாசி அதிகம் என்பதால் வெளிநாடு சென்றுவிட்டனர் அதில் 30 - 40 வரையான வயதினரே அதிகமாக இருப்பர்'' (நேர்காணல், 2023) எனவும் குறிப்பிட்டனர். தற்போதைய நிலையை அவதானிக்கும் போது பெண்கள் வெளிநாட்டிற்கு தொழில் நிமித்தம் செல்லுதல், வெளிநாடுகளுக்குச் சென்ற ஆண்கள் தொழில் தெரியாமையினாலும், அங்குள்ள சூழலுக்கு தம்மை ஈடுபடுத்திக் கொள்ள முடியாமலும் இடையில் நாடு திரும்பி கடனாளிகளாக மாறியுள்ளனர் (Nawas, 2018). இவ்வாறு வெளிநாடு செல்ல பல செலவுகளை செய்து வெளிநாட்டுக்கு அனுப்புவோம் என்று உறுதியளித்த இடைத்தரகர்களும் இவர்களை ஏமாற்றிய சந்தர்பங்களையும் அறிந்துகொள்ள முடிந்தது.

***மின், குடிநீர் கட்டணங்கள் அதிகரிப்பினால் ஏற்பட்டுள்ள பாதிப்பு***

அண்மையில் மின், குடிநீருக்கான கட்டணங்களானது பல்மடங்கால் அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக இப்பிரதேச மீனவச் சமூகமானது பாரிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர் என்பது புலனாகின்றது. குறிப்பாக இப்பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான குடும்பத்தினர் மின் இணைப்பினையும் குடிநீர் வசதியினையும் கட்டணம் செலுத்தியே பெற்றுக்கொள்கின்றனர் ஆதலால் தற்போதய சூழ்நிலையில் மாதம் தோறும் முன்னரை விடவும் பல்மடங்காக இக்கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதனால் இதனை உரிய காலத்தில் செலுத்த முடியாமல் அவதிப்படுகின்றனர். அதிலும் ஒரு சிலர் இக்கட்டணங்களை உரிய நேரத்தில் செலுத்த முடியாமையினால் குறித்த இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டு இன்று வரையில் சில மீனவக் குடும்பங்கள் இதனை மீளப் பெற்றுக்கொள்ள முடியாமல் சிரமத்தனை எதிர் நோக்குவதனையும் அவதானிக்க முடிகின்றது.

***தங்க ஆபரணங்கள் விற்பனையும் அடகுவைத்தலும்***

இப்பொருளாதார நெருக்கடியின் பின்னர் கடுமையாக கஷ்டப்பட்டு சேர்த்து வைத்த நகைகள் அடகுவைப்பதனை விடவும் தற்காலத்தில் பண நெருக்கடியினால் விற்பனை செய்கின்ற போக்கு காணப்படுகின்றது. அதிலும் பிள்ளைகளின் திருமணத்திற்காகவும், அவர்கள் அணிவதற்காகவும் வைத்துள்ள தங்க ஆபரணங்களை பொருளாதார கஷ்டத்தினால் விற்றுவிட்டோம் என்கின்றனர் (நேர்காணல், 2023). பெண்கள் வருமானப்பணத்தில் செலவு போக ஏனையதை மீதம் பிடித்து வாங்கிய அல்லது வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட ஆபரணங்களாகவே இவைகள் உள்ளதனை நேர்காணலின் போது அறிய கிடைத்தது. இன்று அந்த ஆபரணங்கள் இல்லாமையினால் எங்களுடைய பெண் பிள்ளைகளின் நிலையினை நினைக்கும் போது கவலையாக இருக்கின்றது (நேர்காணல், 2023) எனச் சுட்டிக்காட்டுகின்றனர். அவ்வாறே இன்னும் சில மீனவக் குடும்பங்கள் தங்க ஆபரணங்களை வங்கிகளில் அடகுவைக்கின்ற சூழ்நிலைக்கு இப்பொருளாதார நெருக்கடி தள்ளியுள்ளமையானது பாரிய பிரச்சினையாகவுள்ளதுடன் இதனை வைக்கப்பட்ட அடகினை மீளமுடியாத துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கவிடயமாகும்.

***மீனவச் சமூகத்திலுள்ள பிள்ளைகளின் கல்விசார் பாதிப்பு***

பொதுவாகவே இலங்கையில் ஏற்பட்ட இப்பொருளாதார நெருக்கடியானது கல்வித்துறையில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ள நிலையில் இப்பிரதேச மீனவச்சமுதாயத்தில் காணப்படுகின்ற கல்விகற்கக்கூடிய மாணவர்களின் கல்வி செயற்பாடுகளிலும் தாக்கம் செலுத்துகின்றது. அதிலும் பிள்ளைகள் தானியார் பாடங்களுக்கான கட்டணங்கள், பாடசாலை உபகரணங்கள் என பல செலவீனங்களை மேற்கொள்வதில் நெருக்கடியினை மீனவச் சமுதாயத்தினர் எதிர் கொள்ளவேண்டி ஏற்பட்டுள்ளது. சில வேளைகளில் கட்டணங்கள் செலுத்துவதில் காலதாமதம் ஏற்படுமிடத்து பிள்ளைகள் குறித்த வகுப்புகளுக்குச் செல்வதில் பின்வாங்குகின்ற நிலையினை (நேர்காணல், 2023) பெற்றோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

**பரிந்துரைகள்**

- கடலரிப்புப் பிரச்சினை இழிவளவாக்குவதற்காக முறையான வேலைத்திட்டத்தினை கடற்றொழில் அமைச்சு, கரையோர பாதுகாப்பு திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளுதல் வேண்டும்.

- மீனவச் சமுதாயத்தினருக்கு அரச, அரசு சார்பற்ற நிறுவனங்களின் மூலமாக வாழ்வாதார உதவிகள் வழங்குதல்.

- மின், குடிநீர் கட்டணங்கள் மற்றும் தங்க ஆபரணங்களை அடகுவைத்தல் முதலியவற்றுக்கான பணத்தினை மீள்செலுத்தல் தவணைக்காலங்களை நீடித்தல்.

- தொழிலை மேற்கொள்வதற்கான மூலப் பொருட்களின் விலைஏற்றத்தினை கட்டுப்பத்துவதுடன் அப்பொருட்களுக்கு நியாய விலையையும் அரசாங்கம் நிர்ணயம் செய்தல் வேண்டும்.

- தொழிலை மேற்கொள்வதற்கான மூலப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு ஏற்ற வகையில் மீன்களின் கொள்வனவு விலையினை நிர்ணயம் செய்வதோடு விற்பனை செய்வதற்கான நிலையான சந்தை வாய்ப்புக்களையும் அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

**முடிவுரை**

ஒலுவில் பிரதேசமானது ஆரம்ப காலத்தினை விடவும் கப்பல் துறைமுகம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் மீன்பிடிச் சமுதாயமானது பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்ற இச்சூழலில் அண்மைக்காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார நெருக்கடியானது இன்னும் இப்பிரச்சினைகளை பல்மடங்காக மாற்றியுள்ளதோடு மீனவச் சமுதாயம் மீன்பிடித் தொழிலை சிறப்பாக மேற்கொள்ள முடியாமல் கடலரிப்பு, அதிக

வறுமை நிலை, அதிகாமான கடன் பிரச்சினைகள், வெளிநாடு செல்லுதல், தங்க ஆபரணங்கள் விற்பனையும் அடகுவைத்தலும், மீனவத் தொழிலுக்கான கொள்வனவுப் பொருட்களின் விலை அதிகரித்தமை முதலிய அடிப்படையான பிரச்சினைகளை எதிர்கொள்ளச் செய்துள்ளமையை அறிய முடிகின்றது. ஆகவே இவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொண்டிருப்பதன் காரணமாக இத்தொழில் சம்பந்தமாக பாரிய விமர்சனங்கள் இம்மீனவச் சமுதாயத்திடையே ஏற்பட்டுள்ளது. இப்பிரச்சனையினை தீர்ப்பதற்காக அரசாங்கம் பாரிய வேலைத்திட்டங்களையும், உதவித் தொகைகள் மற்றும் மானியங்கள் வழங்க முன்வர வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். ஆகவே அரசாங்கம் இவர்களின் தேவைகளை கருத்திற் கொண்டு அதனை தீர்த்துக் கொள்ளும் போதே நாட்டினது பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு பாரிய பங்கினை இச்சமுதாயத்தினால் வழங்க முடியும் என்பதுடன் இப்பிரச்சினைகளிலிருந்து மீனவ சமுதாயமும் மீள முடியும்

.

**உசாத்துணைகள்**


Auditor General's Department. (2015). ஒலுவில் துறைமுக நிர்மாணத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் தாக்கங்கள். http://www.auditorgeneral.gov.lk/web/images/audit-reports/upload/2015/peformence_report_2015/OluvilReportT.pdf

அமீர்தீன் ர, ஹில்மியாஸ். ஸ.(2017). ஒலுவில் துறைமுக அபிவிருத்தியும் அதனால் ஏற்பட்ட சமூக, பொருளாதார தாக்கங்களும். *KALAM - International Research Journal*,10 (1), 25-33.

BBC NEWS. (2018, August 9). இலங்கை ஒலுவில் துறைமுகம்: மக்களும் மீனவர்களும் எதிரும் புதிருமாக போராட்டம். *BBC NEWS தமிழ்*. Retrieved July 27, 2023, from https://www.bbc.com/tamil/sri-lanka-45801729

Fowzul Ameer ML. (2015). Physical Impacts Of Oluvil Harbour**.** *5th International Symposium 2015 – IntSym 2015, SEUSL* (p 450-461).

Rafeeka Ameerdeen. S & Hilmiyas. S. (2021). கல்முனை கடற்றொழில் மாவட்டத்தின் கரைவலை மீன்பிடித்தொழில் பற்றிய ஆய்வு. *KALAM – International Journal*,14(1).

Nawas A.N.M & Habeebullah M.T. (2018). ஒலுவில் துறைமுகமும் சூழல், சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளும். *Proceedings of 8th International Symposium-2018, SEUSL*,264-272).

Saujan. I. & Nawas A.N.M. (2018). துறைமுகமும் மீனவ சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளும்: ஒலுவில் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு, https://www.researchgate.net/profile/Iqbal-Saujan/publication/335684594_PORT_AND_CHALLENGES_FACED_BY_FISHERIES_THE_STUDY_BASED_ON_OLUVIL_REGION/links/5d749b09a6fdcc9961b

7811b/PORT-AND-CHALLENGES-FACED-BY-FISHERIES-THE-STUDY-BASED-ON-OLUVIL-REGION.pdf

பிரதேச செயலக அறிக்கை, 2020

மப்றூக் யூ.எல். (12 ஜனவரி 2020). இலங்கையில் கடலரிப்பால் மறையும் நிலங்கள்: தவிக்கும் கடலோர மக்கள். Retrieved Oct 23, 2023 from, https://www.bbc.com/tamil/sri-lanka-51078058

ஸமட் எம்.எம்.ஏ, (2018). ஒலுவில் துறைமுக விவகாரம்: நிரந்தரத் தீர்வு எப்போது? Retrieved July 23, 2023, from https://www.madawalaenews.com/2018/10/oluvl.html3

றிப்தி அலி. (24 FEB 2022). கப்பல் ஒன்றுகூட நுழையாத ஒலுவில் துறைமுகம். *Virakesari*. Retrieved July 27, 2023, from https://www.virakesari.lk/article/123036

# முதியோர்கள் எதிர்கொள்ளும் சுகாதாரப் பிரச்சினைகள்: நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பெருந்தோட்டங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு மருத்துவ சமூகவியல் ஆய்வு

**பா.திலான், ப.நிரோஷா, சி.சிவகாந்தன்**
சமூகவியல் துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
thilansmart@gmail.com

### ஆய்வுச் சுருக்கம்

உலகில் அதிகரித்துச் செல்லும் முதியோர் சனத்தொகையைக் கொண்ட நாடாக இலங்கை காணப்படுகின்றது. அதிகரித்துச் செல்லும் முதியோர் சனத்தொகையானது சுகாதாரம், சமூக நலன்புரி மற்றும் குடும்ப ஆதரவு என்பனவற்றில் எதிர்மறை விளைவுகளைத் தோற்றுவிக்கின்றது. முதியோர்கள் எதிர்கொள்ளும் சுகாதாரப் பிரச்சினைகளை மதிப்பிடுதலே ஆய்வின் பிரதான நோக்கமாகும். நுவரெலியா பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பெருந்தோட்டங்களை அடிப்படையாக கொண்ட இந்த ஆய்வில் கலப்பு முறை ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டது. வினாக்கொத்து, விடய ஆய்வு, நேர்காணல் மற்றும் இலக்குக் குழுக்கலந்துரையாடல் மூலம் முதலாம் நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. அடுக்கமைக்கப்பட்ட எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 60 மற்றும் 60 வயதுக்கு மேற்பட்ட 427 முதியோர்கள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டனர். ஆய்வின் அனைத்துச் செயன் முறைகளிலும் ஆய்வு நெறிமுறைகள் பின்பற்றப்பட்டன. பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்விற்கும் கணியம்சார் தரவுகள் SPSS (version23) உதவியுடன் விபரணப் புள்ளிவிபரவியல் பகுப்பாவிற்கும் உட்படுத்தப்பட்டதுடன் மாறிகளுக்கிடையிலான தொடர்பினை விபரிப்பதற்கு கைவர்க்கச் சோதனையும் (Chi-square test) பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வு முடிவுகளின்படி 88.1% முதியோர்கள் இன்றும் லயன் குடியிருப்புகளில் வாழ்வதுடன் 74.2% மானவர்கள் தற்போது தொழில்புரிகின்றனர். அனைத்து முதியோர்களும் உடல் ஆரோக்கியப் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். இவர்களில் 95.6% மானவர்கள் கால்வலியாலும் 13.3% மானோர் இருதய நோய்களாலும் பாதிக்கப்பபட்டுள்ளனர். இவர்களில் 87.1% மானோர் உளவியல் ரீதியான பிரச்சினைகளினை எதிர்கொண்டுள்ளனர். இவற்றில் மறதி, மன அழுத்தம், தனிமை உணர்வு, சோர்வு, கோபம், தற்கொலை தொடர்பான எண்ணங்கள் (8.4%) முக்கிய பிரச்சினைகளாகும். மேலும், உளவியல் சார்ந்த பிரச்சினைகளை எதிர்நோக்குபவர்களில் 2.6% மானவர்கள் மாத்திரமே உளவியல் ஆலோசனைகளைப் பெற்றுள்ளனர். மேலும், 97.2% முதியோர்கள் தங்கள் தோட்டப்பகுதிகளில் மருத்துவ வசதி காணப்படவில்லை எனக் குறிப்பிட்டனர். மேலும், முதியோர்களில் 89.5% மானவர்கள் போதைப்பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். ஆய்வு முடிவுகளின்படி முதியோர்கள் அதிகளவு சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கின்றனர். முதியோர்களுக்கான விசேடமான மருத்துவப் பாராமரிப்பு சேவைகளைப் பெருந்தோட்ட வைத்தியசாலைகளில் கிடைப்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள முதியோர்கள் எதிர்நோக்குகின்ற சுகாதாரப் பிரச்சினைகளைக் குறைக்க முடியும்.

***திறவுச் சொற்கள்:*** *இருதய நோய், உடல் ஆரோக்கியப்பாதிப்பு, உளவியல் பாதிப்பு, போதைப்பொருள், தொற்றாநோய்கள்*

### ஆய்வு அறிமுகம்

உலகில் உள்ள ஒவ்வொரு நாடும் மக்கள் தொகையில் முதியோர்களின் அளவு மற்றும் விகிதாசாரத்தில் வளர்ச்சியைச் சந்தித்து வருகிறது. இலங்கையின் சனத்தொகையில் 12.3% முதியோர்களாவர். பிரதானமாக கருத்தரிப்பு மற்றும் இறப்பு வீதத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி

காரணமாக தென்னாசியாவிலேயே மிக விரைவான முதுமையாதல் வீதத்தைக்கொண்ட நாடாக இலங்கை மாற்றமடைந்துள்ளது(தொகை மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம்,2022). வேகமாக அதிகரித்துச் செல்லும் முதியோர் சனத்தொகையானது நோய்க்கான இடர் காரணிகள் அதிகரித்தல், உடல் நலம் மற்றும் நீண்டகாலப் பராமரிப்புக்கான செலவு அதிகரிப்பு மற்றும் முதியோர் வருமானத்தைப் பெற்றுக்கொள்வதில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

**ஆய்வு வினாக்கள்**

1. நுவரெலிய பிரதேச செயலகத்திற்குட்பட்ட பெருந்தோட்டங்களில் முதியோர்கள் சனத்தொகையானது வேகமாக அதிகரித்துச் செல்கின்ற போதிலும் முதியோர்களுக்கான விசேடமான மருத்துவ சேவைகள் கிடைக்காதது ஏன்?

2. பெருந்தோட்டங்களில் வசிக்கும் முதியோர்கள் எத்தகைய உடல் மற்றும் உள ஆரோக்கியப் பிரச்சினைகளை எதிர்க்கொள்கின்றார்கள்?

3. பெருந்தோட்டங்களில் வசிக்கும் முதியோர்கள் உள ஆரோக்கியப் பிரச்சினைகளால் பாதிக்கப்படுகின்ற போதிலும் உளவள ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளாமைக்கான காரணங்கள் எவை?

4. பெருந்தோட்டங்களில் முதியோர்களுக்கான சுகாதாரப் பராமரிப்பு சேவைகளின் கிடைப்பனவு மற்றும் சேவைகளை அணுகுதலின் போது ஏற்படும் பிரச்சினைகள் எவை?

**ஆய்வுப் பிரச்சினை**

பெருந்தோட்டங்களில் வசிக்கும் முதியோர்கள் பல்வேறு சமூக மற்றும் சுகாதாரப்பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். முதியோர்களுக்குத் தேவையான போசாக்கான உணவுகளைப் பெற்றுக் கொள்வதற்கான உதவித்திட்டங்கள் வழங்கப்படாமை, சுகாதாரப் பணியாளர்களின் பற்றாக்குறை, முதியோர் மருத்துவத்திற்கான விசேட வைத்திய நிபுணர்கள் இல்லாமை, நீண்டகால நோய்களுக்கான மருந்துப் பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் வினைத்திறனற்ற சுகாதாரக்கொள்கைகள் காரணமாக முதியோர்கள் பல்வேறு சுகாதாரப்பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். போதைப்பொருள் பாவனை, குறைவான ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தை, குறைவான கல்வியறிவு, பண்பாட்டு நம்பிக்கைகள், உளநல மருத்துவ ஆலோசனைகளைப் பின்பற்றாமை, வறுமை, சமூகப் பாதிப்புறு நிலைகள், நிதிப் பற்றாக்குறை, முதியோர்களுக்கான போதியளவு பாராமரிப்பின்மை மற்றும் முதியோர்களின் தனிநபர் காரணிகளும் முதியோர்களின் சுகாதாரப்பிரச்சினைகளுக்கு வழிகோலுகின்றன.

**ஆய்வின் நோக்கங்கள்**

***பொது நோக்கம்***

நுவரெலிய பிரதேச செயலகத்திற்குட்பட்ட பெருந்தோட்டங்களிலுள்ள முதியோர்கள் எதிர்கொள்ளும் சுகாதாரப் பிரச்சினைகளை மதிப்பீடுதல்.

***சிறப்பு நோக்கங்கள்***

- பெருந்தோட்டங்களிலுள்ள முதியோர்கள் எதிர்க்கொள்ளும் உடல் ஆரோக்கியப் பிரச்சினைகளை மதிப்பீடுதல்.
- பெருந்தோட்டங்களிலுள்ள முதியோர்கள் எதிர்க்கொள்ளும் உள ஆரோக்கியப் பிரச்சினைகளை மதிப்பீடுதல்.
- பெருந்தோட்டங்களிலுள்ள முதியோர்களின் ஆரோக்கிய வாழ்க்கைப்பாணியை மதிப்பீடல்.
- பெருந்தோட்டங்களிலுள்ள முதியோர்களின் சுகாதாரப் பிரச்சினைகளுக்கும் சமூகக் குடித்தொகைக் காரணிகளுக்குமான இணைவினை விபரித்தல்.

**ஆய்வு முறையியல்**

***ஆய்வுப் பிரதேசம், ஆய்வு வடிவம் மற்றும் தரவு சேகரிப்புக் கருவிகள்***

நுவரெலியா மாவட்டத்தின் நுவரெலியா பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட பெருந்தோட்டங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வில் கலப்புமுறை ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. நேர்காணலை அடிப்படையாகக் கொண்ட வினாக்கொத்து, நேர்காணல்கள், விடய ஆய்வு மற்றும் குவிமையக் குழுக்கலந்துரையாடல் மூலம் ஆய்வுக்கான முதலாம்நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டன. கொத்மலை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பெருந்தோட்டங்களில் வசிக்கும் 60 மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட 20 முதியோர்களிடம் வினாக்கொத்துக்கான முற்சோதனை (pretest) மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஆய்வுக்கட்டுரைகள், ஆய்வறிக்கைகள், சஞ்சிகைகள், உலக சுகாதார ஸ்தாபன அறிக்கை(2022), உலக வங்கி அறிக்கை(2021) மற்றும் நுவரெலியா பிரதேச செயலக புள்ளிவிபரவியல் கையேடு(2022) போன்றவற்றிலிருந்து இரண்டாம் நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டன.

***ஆய்வுக் குடித்தொகையும் மாதிரியும்***

நுவரெலியா பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட பெருந்தோட்டங்களைச் சேர்ந்த 4231 முதியோர்களில் அடுக்கமைக்கப்பட்ட எழுமாற்று மாதிரியை பயன்படுத்தி 60 மற்றும் 60 வயதிற்கு மேற்பட்ட 427 முதியோர்கள் மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

***ஆய்வில் உள்வாங்கப்படுதல் மற்றும் ஆய்விலிருந்து விலக்கப்படுவதற்கான அளவுகோல்கள்***

நுவரெலியா பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட பெருந்தோட்டங்களில் ஒரு வருடத்திற்கு மேலாக வசித்து வருகின்ற 60 மற்றும் 60வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள் ஆய்வில் உள்வாங்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரே நேரத்தில் வாய் பேச மற்றும் கேட்டல் திறன் குறைவாக உள்ள மற்றும் தொடர்பாடல் பிரச்சினைகளை எதிர்கொள்ளுபவர்கள், தீவிரமான உளநோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் படுக்கையில் உள்ள நோயாளர்கள் ஆய்வில் இருந்து விலக்கப்பட்டனர்.

***மாதிரித் தெரிவும் மாதிரியின் பருமனும்***

குறிப்பிட்ட ஆய்வில் அடுக்கமைக்கப்பட்ட எழுமாற்று மாதிரி எடுப்பு முறை பயன்படுத்தப்பட்டது.

N=ZxP(100)/d

N=Total number of subjects to be studied

Z=1.96(Type 1 error=0.05)

P=Prevelance is 5%

N=1.96x1.96x50(100-50)/5

But non-responsive sample=10%

Sample size=384.16x100/90

426.84 =427

427 முதியோர்கள் ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

***ஆய்வு நெறிமுறைகள்***

ஆய்வின் அனைத்துச் செயன்முறைகளிலும் ஆய்வு நெறிமுறைகள் முழுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அறிந்தளிக்கப்பட்ட எழுத்து மூலமான ஒப்புதல் பெறப்பட்ட பின்பே தரவுகள் சேகரிக்கப்பட்டன. ஆய்வுக்கு உட்படுத்தப்படுபவர்களின் பங்குபற்றல் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டது. ஆய்வில் சேகரிக்கப்பட்ட தரவுகள் ஆய்வினைத் தவிர்த்து ஏனைய செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படமாட்டாது என்பது உறுதி செய்யப்பட்டது. ஆய்வில் பங்குபற்றியவர்களால் தரப்பட்ட தரவுகளின் இரகசியத்தன்மை பேணப்பட்டது. ஆய்வின் இலத்திரனியல் தரவுகள் முறையான கடவுச்சொற்கள் (Password) இடப்பட்டுப் பாதுகாக்கப்பட்டது.

*தரவுப்பகுப்பாய்வு*

வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட கணியம்சார் தரவுகள் சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரவியல் மென்பொதி (SPSS verson23) உதவியுடன் விபரணப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டது. மேலும் மாறிகளுக்கு இடையிலான தொடர்பினை விபரிப்பதற்காக கைவர்க்கச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டது.

**முடிவுகள்**

***முதியோர்களின் சமூகக்குடித்தொகைக் காரணிகள்***

அட்டவணை 6.1 முதியோர்களின் வயது, பால்நிலை, சமயம், கல்வி நிலை போன்ற சமூகக்குடித்தொகை அம்சங்களை விளக்குகின்றது.

**அட்டவணை 6.1: சமூகக் குடித்தொகைக் காரணிகள்**

| சமூகக் குடித்தொகைக் காரணிகள் | விடயம் | எண்ணிக்கை | வீதம் (%) |
|---|---|---|---|
| வயது(வருடங்களில்) | 60-65 | 199 | 46.6 |
| | 66-70 | 171 | 40 |
| | 71-75 | 27 | 6.4 |
| | 76-80 | 30 | 7 |
| | **மொத்தம்** | **427** | **100** |
| பால்நிலை | ஆண் | 252 | 59 |
| | பெண் | 175 | 41 |
| | **மொத்தம்** | **427** | **100** |
| சமயம் | இந்து | 302 | 70.7 |
| | கிறிஸ்தவம் | 113 | 26.5 |
| | முஸ்லிம் | 12 | 2.8 |
| | **மொத்தம்** | **427** | **100** |
| கல்வி நிலை | பாடசாலை | 119 | 27.9 |
| | செல்லவில்லை | 247 | 57.8 |
| | ஆரம்பக்கல்வி | 61 | 14.3 |
| | இடைநிலைக்கல்வி | | |
| | **மொத்தம்** | **427** | **100** |

(மூலம்:கள ஆய்வு, வினாக்கொத்து 2023)

ஆய்வில் பெரும்பான்மையாக 79% ஆண்கள் இருப்பதுடன் 70.7% இந்து மதத்தைப் பின்பற்றுகின்றனர். அத்துடன் 60-65 வயதுடைய 46.6% முதியோர்கள் காணப்படுகின்றனர். மேலும் 27.9% ஆனோர் பாடசாலைக் கல்வியைப் பெற்றிருக்கவில்லை.

***சுகாதார நிலைதொடர்பான விபரம்***

முதியோரின் சுகாதாரப் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் 427 முதியோர்களும் உடல் ஆரோக்கியம் சார்ந்த பாதிப்புகள் இருப்பதாக ஆய்வு முடிவுகள் விபரிக்கின்றன. வயதானவர்களின் பொது ஆரோக்கியத்தில் வாய்வழி ஆரோக்கியம் ஒரு முக்கியமானதாகுமென குறிப்பிட்டுள்ளனர் (Yang,L and et al., 2023).

**அட்டவணை 6.3 : உடல் ஆரோக்கியப் பாதிப்பு தொடர்பான விபரம்**

| உடல் ஆரோக்கியப் பாதிப்பு | விடயம் | எண்ணிக்கை | வீதம் (%) |
|---|---|---|---|
| கேட்டல் திறன் குறைபாடு | ஆம் | 319 | 74.7 |
| | இல்லை | 108 | 25.3 |
| | **மொத்தம்** | **427** | **100** |
| ஞாபகமறதி | ஆம் | 265 | 62.1 |
| | இல்லை | 162 | 37.9 |
| | **மொத்தம்** | **427** | **100** |
| இருதய நோய் | ஆம் | 57 | 12.3 |
| | இல்லை | 370 | 86.7 |
| | **மொத்தம்** | **427** | **100** |
| பக்கவாதம் | ஆம் | 55 | 12.9 |
| | இல்லை | 372 | 87.1 |
| | **மொத்தம்** | **427** | **100** |
| நீரிழிவு | ஆம் | 97 | 22.7 |
| | இல்லை | 330 | 77.3 |
| | **மொத்தம்** | **427** | **100** |
| ஆஸ்துமா | ஆம் | 55 | 12.9 |
| | இல்லை | 372 | 87.1 |
| | **மொத்தம்** | **427** | **100** |
| மூட்டு வலி | ஆம் | 337 | 78.9 |
| | இல்லை | 90 | 21.1 |
| | **மொத்தம்** | **427** | **100** |
| உயர் குருதி அழுத்தம் | ஆம் | 208 | 48.7 |
| | இல்லை | 219 | 51.3 |
| | **மொத்தம்** | **427** | **100** |
| பார்வை குறைபாடு | ஆம் | 357 | 83.6 |
| | இல்லை | 70 | 16.4 |
| | **மொத்தம்** | **427** | **100** |
| நித்திரைப்பிரச்சினை | ஆம் | 387 | 90.6 |
| | இல்லை | 40 | 9.4 |

| | | | |
|---|---|---|---|
| | **மொத்தம்** | **427** | **100** |
| கால் வலி | ஆம் | 408 | 95.6 |
| | இல்லை | 19 | 4.4 |
| | **மொத்தம்** | **427** | **100** |

(மூலம்:கள ஆய்வு, வினாக்கொத்து 2023)

அட்டவணை 6.2 இன்படி முதியோர்கள் எதிர்கொள்ளும் மிக முக்கிய பிரச்சினைகளில் அதிகளவாக கால் வலி (95.6%), நித்திரைப் பிரச்சினை (90.6%) , பார்வைக் குறைபாடு (83.6%) ஆகவும் இருப்பதுடன் மிகக் குறைந்தளவாக இருதயநோய் (13.3%) நீரிழிவு (22.7%), புற்றுநோய்(12.9%), ஆஸ்துமா (12.9%) மற்றும் 48.7% ஆன முதியோர்கள் உயர் குருதி அழுத்தத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முதியோர்களிடையே தொற்றா நோய்கள் மற்றும் குறைபாடுகள் அதிகமாகவே உள்ளன அவர்கள் தினசரி வாழ்வின் செயற்பாட்டுக்காக பராமரிப்பாளர்களை அதிகம் சார்ந்துள்ளனர் (Maduwage, 2020). நீண்டகால நோய்களையுடைய முதியவர்களை பாராமரித்தலானது குடும்ப அங்கத்தவர்களுக்கு சுமையாகக் காணப்படுக்கிறது. மேலும் குடும்ப பராமரிப்பாளர்களின் தேவைகள் குறைவாகவே புரிந்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதிகளவில் சுகாதார பராமரிப்பு சேவைகளால் இன்னும் குறைந்தளவில் அங்கிகரிக்கப்பட்டுள்ளனர் (Jika et al., 2021).

Samaraweera மற்றும் Maduwage (2016)இல் மேற்கொண்ட ஆய்வில் முதியோர் தொகை அதிகரிப்பால் ஏற்படும் பிரச்சினைகளை குறைப்பதற்கான பரிந்துரைகளாக சுகாதார அமைப்புகளை வலுவூட்டல், மறு சீரமைப்பு செய்தல் மற்றும் முதியோர் மருத்துவம் விருத்தி செய்தல் போன்றவற்றைக் குறிப்பிட்டுள்ளது.

மேற்குறித்த கணியம்சார் தரவுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் பின்வரும் பண்புசார் தரவுகள் அமைகின்றன.

***உடம்புலயும் பிரச்சினை மனசுலையும் பிரச்சினை***

*"இப்போ பிரஷர் கூடனு டாக்டர் சொன்னாரு தொடர்ந்து போய் செக் பண்ணி பார்க்க எனக்கு வசதி இல்லை. அவர் சொன்ன மாதிரி வில்லை குடிச்சிட்டு இருக்கேன் "(விடய ஆய்வு–01).*

*"எனக்கு உடம்புலயும் பிரச்சினை இருக்கு மனசுலையும் பிரச்சினை இருக்கு. கால் வலிக்கும் அப்படியே காலெல்லாம் புடிச்சு விறுவிறுன்னு இழுக்கும். எனக்கு மூச்சு எடுக்க கொஞ்சம் கஷ்டமா இருக்கும், தூங்குறதுக்கும் கஷ்டமா இருக்கும்"(விடய ஆய்வு–02).*

*"எனக்கு யாரும் எது சொல்றது கொஞ்சம் கேட்க மாட்டேங்குது. தூங்குனா தூக்கம் வர மாட்டேங்குது"(விடய ஆய்வு – 03).*

*''கண்ணும் சரியா தெரியுது இல்ல, காதும் ஒழுங்கா கேட்கமாட்டிங்குது. என்னதான் செய்யறது, நடக்கவும் முடியல" (விடய ஆய்வு 08).*

*''கால் வலி தலைவலி என்று சொல்லி எந்த நாளு எதாவது மருந்து குடிச்சுகிட்டு தான் இருக்கேன்''(விடய ஆய்வு – 10).*

மேற்குறிப்பிட்ட பண்புசார் தரவு பகுப்பாய்வினடிப்படையில் நோக்கும்போது முதியோர்கள் நீண்டகால தொற்றா நோய்களால் அதிகளவில் பாதிக்கப்பட்டதுடன் அவற்றுக்கான சிகிச்சைகளைப் சுகாதார நிறுவனங்களிடமிருந்து சேவைகளை அணுகலில் சவால்களை எதிர்கொள்கிறனர்.

**அட்டவணை 6.3 : உள ஆரேக்கியம்**

| உள ரீதியான பாதிப்பு | எண்ணிக்கை | வீதம் (%) |
|---|---|---|
| ஆம் | 372 | 87.1 |
| இல்லை | 55 | 12.9 |
| **மொத்தம்** | **427** | **100** |

(மூலம்:கள ஆய்வு, வினாக்கொத்து 2023)

அட்டவணை 6.3 இன்படி, 87.1% முதியோர்கள் உளரீதியான பாதிப்புகளைக் எதிர் நோக்குகின்றனர். (Ariyawansa et al., 2021) இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி அதிகளவு பதட்டம், தனிமை, அதீத கோபம், மனச்சோர்வு, நினைவாற்றல் குறைவடைதல் போன்றன முதியோர்கள் எதிர்கொள்ளும் உளவியல் பாதிப்புக்களாக குறிப்பிடப்பட்டது.

***உள ரீதியான பாதிப்புக்கள்***

ஆய்வு முடிவுகளின்படி 87.1 வீதமான முதியோர்கள் உள ரீதியான பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

**அட்டவணை 6.4: உள ஆரோக்கிப் பிரச்சினைகள்**

| உளவியல் பிரச்சினைகள் | விடயம் | எண்ணிக்கை | வீதம் (%) |
|---|---|---|---|
| அதிர்ச்சி | ஆம் | 154 | 41.3 |
| | இல்லை | 218 | 58.7 |
| | **மொத்தம்** | **372** | **100** |
| பாதுகாப்பற்ற உணர்வு | ஆம் | 36 | 9.6 |
| | இல்லை | 336 | 90.4 |
| | **மொத்தம்** | **372** | **100** |
| கவலை | ஆம் | 207 | 55.6 |
| | இல்லை | 165 | 44.4 |
| | **மொத்தம்** | **372** | **100** |
| பயம் | ஆம் | 150 | 40.3 |

| | | | |
|---|---|---|---|
| | இல்லை | 222 | 59.7 |
| | **மொத்தம்** | **372** | **100** |
| கோபம் | ஆம் | 320 | 86 |
| | இல்லை | 52 | 14 |
| | **மொத்தம்** | **372** | **100** |
| மன அழுத்தம் | ஆம் | 309 | 83 |
| | இல்லை | 63 | 17 |
| | **மொத்தம்** | **372** | **100** |
| மறதி | ஆம் | 355 | 95.4 |
| | இல்லை | 17 | 4.6 |
| | **மொத்தம்** | **372** | **100** |
| தற்கொலை எண்ணம் | ஆம் | 36 | 9.6 |
| | இல்லை | 336 | 90.4 |
| | **மொத்தம்** | **372** | **100** |
| தனிமை உணர்வு | ஆம் | 80 | 21.5 |
| | இல்லை | 292 | 78.5 |
| | **மொத்தம்** | **372** | **100** |
| பதட்டம் | ஆம் | 103 | 27.6 |
| | இல்லை | 269 | 72.4 |
| | **மொத்தம்** | **372** | **100** |
| மன விரக்தி | ஆம் | 97 | 26 |
| | இல்லை | 275 | 74 |
| | **மொத்தம்** | **372** | **100** |
| அழுதல் | ஆம் | 113 | 30.3 |
| | இல்லை | 259 | 69.7 |
| | **மொத்தம்** | **372** | **100** |
| சோர்வு | ஆம் | 361 | 97 |
| | இல்லை | 11 | 3 |
| | **மொத்தம்** | **372** | **100** |

(மூலம்:கள ஆய்வு, வினாக்கொத்து 2023)

முதியோர்கள் எதிர்கொள்ளும் உளவியல் பிரச்சினைகளில் அதிகளவானோர் சோர்வு (97%), மறதி (95.4%), கோபம் (86%) போன்ற உள ஆரோக்கியப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். மேலும் மிகக்குறைந்தளவில் முதியோர்கள் 9.6% தற்கொலை எண்ணங்களையும் பாதுகாப்பற்ற உணர்வையும் கொண்டிருந்தனர்.

இலங்கையின் வயோதிபர்கள் இடையே மனச்சோர்வு அறிகுறிகளின் பரவல் பெரும்பாலும் ஆசிய நாடுகளில் பதிவாவதை விட அதிகமாக உள்ளதென குறிப்பிட்டுள்ளது (Angelique, et al., 2010). ஆய்வின்படி 2050 ல் ஐரோப்பாவில் டிமென்சியா 19 சதவீதம்

அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளதுடன் ஆய்வில் இலங்கையில் குடும்பங்களின் தலைமுறை மாற்றங்கள் இடம் பெற்றுவருவதால் சராசரியான இளைஞர்கள் மற்றைய சமூகத்தை விட குறைந்த அளவான நல்வாழ்வை கொண்டுள்ளனர் (Garcia-Vivar et al., 2023). மேலும் இது தலைமுறை குடும்பங்களை விட கரு குடும்பங்களாலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளது. மன அழுத்தம் என்பது வயதானோரிடையே அடிக்கடி ஏற்படுவதாகும் (Y Xue and et al., 2021).

மேற்குறித்த கணியம்சார் தரவுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் பின்வரும் பண்புசார் தரவுகள் அமைகின்றன.

***மறதியும் தனிமையும்***

*"நா வைக்கிற சாமானை எங்க வச்சேனே மறந்துவிடுவேன். சரியா ஞாபகம் இருக்க மாட்டேங்குது மறந்துவிடுவேன் "(விடய ஆய்வு–02).*

*"வீட்ல தனியா இருக்கும்போது கவலையா இருக்கும், பசி வர மாட்டேங்குது சாப்பிடவும் முடியல"(விடய ஆய்வு – 03).*

*"எனக்கு மனசு கஷ்டமா இருக்கும் பயமா இருக்கும் யாரும் வந்தா புலம்பிக்கிட்டு கிடப்பே யாரு இல்லனா சரியான கஷ்டமா இருக்கு மனசுக்கு"(விடய ஆய்வு – 04).*

*"அவர்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத பட்சத்தில் அவர்கள் மனச்சோர்வு மற்றும் மன அழுத்தம், பதட்டம், பயம், கோபம் போன்ற உளவியல் ரீதியான பாதிப்புகளை எதிர்நோக்குகின்றனர் "(நேர்காணல் -03).*

மேற்குறித்த பண்புசார் மற்றும் கணியம்சார் தரவுப் பகுப்பாய்வினடிப்படையில் நோக்குகின்றபோது முதியவர்கள் அதிகளவில் ஞாபக மறதி, கவலை, தனிமை, மனச்சோர்வு, மன அழுத்தம், பதட்டம், பயம் மற்றும் கோபம் முதலான உள ஆரோக்கியப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர்.

***உளவள ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுதல்***

**அட்டவணை 6.5 : உளவள ஆலோசனை பெற்றுக்கொள்ளுதல்**

| உளவள ஆலோசனை | எண்ணிக்கை | வீதம் % |
|---|---|---|
| ஆம் | 11 | 3.0 |
| இல்லை | 361 | 97.0 |
| **மொத்தம்** | **372** | **100** |

(மூலம்:கள ஆய்வு, வினாக்கொத்து 2023)

அட்டவணை 6.5 இன்படி முதியோர்களில் மிகப்பெரும்பான்மையானோர் (97%) உள ஆரோக்கியப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள போதிலும் உளவள ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவில்லை. இதற்கு முக்கிய காரணம் உளவள ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களும் வளங்களின் கிடைப்பனவும் மிகக்குறைவாக உள்ளன.

***கிளினிக் செல்வது தொடர்பான விபரம்***

**அட்டவணை 6.6 : கிளினிக் செல்வது தொடர்பான விபரம்**

| | | எண்ணிக்கை | வீதம் % |
|---|---|---|---|
| கிளினிக் செல்லல் | ஆம் | 102 | 23.9 |
| | இல்லை | 325 | 76.1 |
| | **மொத்தம்** | **427** | **100** |
| நோய்கள் வகை | கண் பார்வைக் குறைபாடு | 38 | 37.3 |
| | நீரிழிவு | 10 | 9.8 |
| | தைரொய்டு | 26 | 25.5 |
| | உயர் குருதி அழுத்தம் | 28 | 27.5 |
| | **மொத்தம்** | **102** | **100** |

(மூலம்:கள ஆய்வு, வினாக்கொத்து 2023)

அட்டவணை 6.6 இன்படி முதியோர்கள் சிகிச்சை நிலையங்களுக்குச் செல்வதனை விபரிப்பதாக அமைகின்றது. இதில் 76.1 % முதியோர்கள் கிளினிக் செல்வதில்லை என்றும் 23.9 சதவீதமான முதியோர்கள் தொடர்ந்து கிளினிக் செல்வதனையும் ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. இவ்வாறு தொடர்ந்து கிளினிக் செல்பவர்களில் அதிகமான முதியோர்கள் கண் பார்வைக் குறைபாடு, உயர் குருதி அழுத்தம் முதலான நோய்களுக்கான சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதற்கு தொடர்ந்து கிளினிக் செல்கிறார்கள். மேற்குறித்த கணியம் சார் தரவுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் பின்வரும் பண்புசார் தரவுகள் அமைகின்றன.

***கிளினிக் போய்க்கிட்டு இருந்தாங்க ஆனா இப்போ போறதில்ல***

*"மாசம் மாசம் கால் வருத்தத்துக்கு கிளினிக் போட்டு இருக்காங்க. அதோட கண்ணுலயும் பிரச்சினை இருக்கு. அதனால அதுக்கும் கிளினிக் இருக்கு. மாசத்துல ரெண்டு நாள் கிளினிக் போகணும்" (விடய ஆய்வு - 01).*

*"இந்த தலை வருத்ததுக்கு கிளினிக் போட்டு இருந்தாங்க. ஆனா அப்புறம் நான் கிளினிக் போறது இல்ல"(விடய ஆய்வு–02).*

*"எனக்கு இந்த சுகருக்கும் பிரசருக்கும் தான் கிளினிக் போட்டு இருந்தாங்க. ஆனா நான் இப்ப போறதில்ல"(விடய ஆய்வு – 04).*

பண்புசார் தரவுப்பகுப்பாய்வினடிப்படையில் முதியோர்கள் கிளினிக்குக்கு செல்லாத நிலை இருப்பதனால் தொற்றாநோய்களின் பாதிப்புக்களைக் கவனத்திலெடுக்காத அலட்சியப் போக்கு பெருந்தோட்டங்களிலுள்ள முதியோர்கள் மத்தியில் காணப்படுகின்றது.

**6.7. சுகாதார சேவைகளின் கிடைப்பனவு**

| **சுகாதார சேவை** | **எண்ணிக்கை** | **வீதம் (%)** |
|---|---|---|
| ஆம் | 12 | 2.8 |
| இல்லை | 415 | 97.2 |
| **மொத்தம்** | **427** | **100** |

(மூலம்:கள ஆய்வு, வினாக்கொத்து 2023)

அட்டவணை 6.7 இன்படி 97.2% முதியோர்கள் தோட்டப்பகுதிகளில் சுகாதார சேவை காணப்படவில்லை எனவும் 2.8 சதவீதமான முதியோர்கள் வசிக்கும் தோட்டப்பகுதிகளில் ஏதேனும் குறிப்பிட்ட சில சுகாதார சேவை வசதிகள் கிடைக்கின்றதாக ஆய்வு முடிவுகள் மூலம் அறியமுடிகின்றது.

**அட்டவணை 6.8 : சுகாதார சேவைகள் தொடர்பான விபரம்**

| **சுகாதார சேவை நிலை** | **எண்ணிக்கை** | **வீதம் (%)** |
|---|---|---|
| தோட்ட சுகாதார நிலையம் இன்மை | 83 | 5.7 |
| வைத்தியரின்மை | 136 | 9.3 |
| மருந்துகள் பற்றாக்குறை | 415 | 28.4 |
| சுகாதார பணியாளர்கள் பற்றாக்குறை | 415 | 28.4 |
| மருத்துவ அவசர நோயாளர் காவு வண்டியின்மை | 412 | 28.2 |
| **மொத்தம்** | **1461** | **100** |

(மூலம்:கள ஆய்வு, வினாக்கொத்து 2023)

அட்டவணை 6.8 இன்படி முதியோர்கள் வசிக்கும் தோட்டப்பகுதிகளில் சுகாதார சேவை நிலை மிக முக்கிய குறைபாடாக உள்ளது. மருந்துகளின் பற்றாக்குறை(28.4%), சுகாதாரப் பணியாளர்களின் பற்றாக்குறை(28.4%), மருத்துவ அவசர நோயாளர் காவு வண்டியின்மை(28.2%) அடையாளப்பட்டுள்ளமையை அறிய முடிகின்றது. மேற்குறித்த கணியம்சார் தரவுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் பின்வரும் பண்புசார் தரவுகள் அமைகின்றன.

***சுகாதாரப் பராமரிப்பு கிடைப்பனவின் பற்றாக்குறையும் தீவிரமான சேவைகளை அணுகுதல் பிரச்சினைகளும்***

*"ஒரு அம்புலன்ஸ் இருந்துச்சி. அது கொஞ்ச காலம் தான், அப்பரம் ஒன்னு இல்ல. ஸ்டேட்ல வேற ஏதாவது ஒரு வாகனம் கொடுப்பாங்க. ஆனா இப்ப அது ஒண்ணுமே இல்ல.*

*எல்லாம் அவுங்க அவுங்க சொந்த காசைப் போட்டுத்தான் எது அவசரம்னா ஆஸ்பத்திரி போறது'' (விடய ஆய்வு – 03).*

*''ஆஸ்பத்திரியில முன்ன நல்லா சோதிச்சு நல்ல மருந்து கொடுப்பாங்க. ஆனா இப்ப போனா டாக்டர் இருக்கவே மாட்டிக்கிறாங்க. மருந்து ஒழுங்கா இல்ல. போனா ஒரு சும்மா துண்டுல எழுதி பாமசில மருந்து எடுத்துக்கோங்கனு சொல்லுராங்க''(விடய ஆய்வு – 05).*

*''முன்ன எங்க ஊர்ல ஸ்டேட் ஆஸ்பத்திரில நல்ல வசதி இருந்துச்சு. ஆனா இப்போ தோட்ட நிர்வாகம் அதெல்லாம் சரியா பாத்துக்கிறது இல்ல. எல்லா மருந்துமே முன்ன இருந்துச்சு டாக்டர் தனியாக அதுக்குன்னு இருந்தாரு. இப்போலாம் டாக்டர் கொஞ்ச நேரம் ஆஸ்பத்திரி பக்கம் வந்துட்டுப் போறாரு'' (விடய ஆய்வு- 01).*

*''ஆரம்ப காலத்தில் வைத்தியசாலையில் குறிப்பிட்ட பிரதேசத்தில் ஒரு நோயாளி காவு வண்டி அல்லது தோட்டப்புறத்தில் உள்ள வாகனம் ஒன்றின் மூலம் நோயாளிகள் வைத்தியசாலைகளுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். ஆனால் இன்றைய காலப்பகுதியில் பொதுவாக எல்லா தோட்டப் பகுதிகளிலும் இவ்வசதி மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.'' (நேர்காணல் 02).*

பண்புசார் தரவுப்பகுப்பாய்வினடிப்படையில் அவசர நிலைமைகளில் நோயாளர் காவு வண்டிகளின் கிடைப்பனவு பெருநதோட்டங்களில் மிகக் குறைவாக காணப்பட்டுள்ளது.

**6.9. போதைப்பொருள் பாவனை**

| போதைப்பொருள் பாவனை | எண்ணிக்கை | வீதம் % |
|---|---|---|
| ஆம் | 382 | 89.5% |
| இல்லை | 45 | 10.5% |
| **மொத்தம்** | 427 | 100% |

(மூலம்:கள ஆய்வு, வினாக்கொத்து 2023)

அட்டவணை 6.9 இன்படி முதியோர்கள் போதைப்பொருளைப் பயன்படுத்துவது தொடர்பான விபரங்களை விவரிப்பதாக அமைகின்றது. அவ்வகையில் 89.5% மானோர் போதைப் பொருளை பயன்படுத்துகின்றனர்.

**அட்டவணை 6.10 : பயன்படுத்தப்படும் போதைப்பொருட்களின் வகைகள்**

| போதைப்பொருள் வகை | விடயம் | எண்ணிக்கை | வீதம் (%) |
|---|---|---|---|
| மதுபானம் | ஆம் | 328 | 56 |
| | இல்லை | 54 | 44 |
| | **மொத்தம்** | **382** | **100** |
| புகைத்தல் | ஆம் | 119 | 27.9 |
| | இல்லை | 263 | 72.1 |

| | | | |
|---|---|---|---|
| | **மொத்தம்** | **382** | **100** |
| வெற்றிலை, பாக்கு, புகையிலை | ஆம் | 324 | 75.9 |
| | இல்லை | 58 | 24.1 |
| | **மொத்தம்** | **382** | **100** |

(மூலம்:கள ஆய்வு, வினாக்கொத்து 2023)

அட்டவணை 6.10 இன்படி முதியோர்கள் போதைப்பொருளை பயன்படுத்துவதாக கூறியவர்களில் மதுபானம் அருந்துபவர்களாக 56%மானவர்களும் 75.9%மானவர்கள் வெற்றிலை, பாக்கு, புகையிலை பயன்படுத்துபவர்களாகவும் 27.9% புகைத்தலில் ஈடுபடுவதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

இன்னொரு ஆய்வில் ஆண்களே அதிக நோய்த்தொற்றுக்களுக்கு உள்ளாகுவதுடன் புகையிலை பயன்பாடு மற்றும் இதய நோய் ஆண்களுக்கே அதிகம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது (Thakur et al., 2013).

மேற்குறித்த கணியம்சார் தரவுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் பின்வரும் பண்புசார் தரவுகள் அமைகின்றன.

***போதைப்பொருள் பாவனை தொடர்பான வாழ்க்கை அனுபவங்கள்***

*‘‘அந்தி பட்டா உடம்பு கால் கை எல்லாம் வலிக்கும். கள்ளு ஒரு போத்தல் வாங்கிக் குடிச்சா கொஞ்சம் நல்லா இருக்கும்’’(விடய ஆய்வு–06).*

*‘‘நான் முன்ன நல்லா சாராயம் குடிப்பேன். இப்போ குறைவுனுதா சொல்லனும்’’(விடய ஆய்வு–10).*

*‘‘முன்னம் வெத்திலை, பாக்கு, போயிலை எல்லாம் போடுவேன். இப்போ ஆஸ்பத்திரி போறதுல இருந்து எல்லாம் குறைச்சிட்டேன்’’(விடய ஆய்வு–03).*

பண்புசார் தரவுப்பகுப்பாய்வினடிப்படையில் முதுமையடைந்தவுடன் போதைப்பொருள் பாவனையின் அளவு குறைவடைந்துள்ளதனையும் அவதானிக்க முடிகின்றது.

*சமூகக் குடித்தொகைக் காரணிக்கும் உடல் ஆரோக்கியப் பிரச்சினைகளுக்குமான தொடர்பு*

**அட்டவணை 6.11 : வயதுக்கும் உடல் ஆரோக்கியப் பிரச்சினைகளுக்குமான தொடர்பு**

| சார்ந்த மாறிகள் | சாராத மாறி | பெறுமானம் | தொடர்பு |
|---|---|---|---|
| கேட்டல் திறன் குறைபாடு | வயது | P=0.000<0.16 | பலமான இணைவு |
| உயர் குருதி அழுத்தம் | வயது | P=0.000<0.01 | பலமான இணைவு |
| நித்திரைப்பிரச்சினை | வயது | (P<0.000<0.05) | பலமான இணைவு |

(மூலம்:கள ஆய்வு, வினாக்கொத்து 2023)

அட்டவணை 6.11 இன்படி சமூக குடித்தொகை காரணியான வயதுக்கும் உடல் ஆரோக்கியப் பிரச்சினைகளுக்கும் இடையிலான தொடர்பினைக் காட்டுகின்றது. இங்கு பொருண்மைப் பெறுமானம் (P=0.000<0.16)ஆக காணப்படுவதால் இங்கு வயதுக்கும் கேட்டல் திறன் குறைபாடுக்கும் இடையிலான தொடர்பு(P=0.000<0.16) காணப்படுகின்றது. வயதுக்கும் உயர் குருதி அழுத்தம் இடையிலான தொடர்பினைக் காட்டுகின்றது. இங்கு பொருண்மைப் பெறுமானம் (P=0.000<0.01)ஆக காணப்படுவதால் இங்கு வயதுக்கும் உயர் குருதி அழுத்தம் இடையிலான தொடர்பு(P=0.000<0.01) காணப்படுகின்றது. வயதிற்கும் நித்திரைப் பிரச்சினைக்கும் இடையிலான தொடர்பினைக்காட்டும் பொருண்மைப் பெறுமானம் (P<0.000<0.05) ஆகக் காணப்படுவதால் வயதிற்கும் நித்திரைப்பிரச்சினைக்கும் இடையில் பலமான இணைவு காணப்படுகின்றது.

**முடிவுரை**

குறிப்பிட்ட ஆய்வின் அடிப்படையில் அனைத்து முதியோர்களும் உடல் ஆரோக்கியம் குறித்த சுகாதாரப்பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர். மேலும் முதியோர்களில் பெரும்பாலானோர் தங்களது தொற்றா நோய்களுக்கான சிகிச்சைகளைப் பெறுவதற்கு கிளினிக் செல்வதில்லை. தோட்டப்பகுதிகளில் போதியளவு சுகாதார சேவைகள் காணப்படாதது முக்கியமான பிரச்சினையாகும். முதியோர்களில் அதிகமானோர் மதுபானம் அருந்துபவர்களாகவும் வெற்றிலை, பாக்கு, புகையிலை பயன்படுத்துபவர்களாகவும் உள்ளதால் அதிகளவு இடர் நடத்தையையும் கொண்டுள்ளனர். மேலும் முதியவர்கள் பல்வேறு உள ஆரோக்கியப் பிரச்சினைகளையும் எதிர்கொண்டுள்ளனர். உள ஆரோக்கியப் பிரச்சினைகளை எதிர்நோக்கும் முதியோர்களில் மிகப்பெரும்பான்மையானோர் உளவள ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதில்லை. முதியோர்களுடைய ஆரோக்கியமான வாழ்க்கைப்பாணியை மேம்படுத்த முதியோர்களுக்கான விசேடமான மருத்துவப் பாராமரிப்பு சேவைகளைப் பெருந்தோட்ட வைத்தியசாலைகளில் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும், முதியோர்கள் மத்தியிலான இடர் நடத்தைகளைக் குறைப்பதற்கு சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். போசாக்கான உணவுகளை எடுத்துக்கொள்ளல், முதியோர்கள் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் துஷ்பிரயோகத்திற்கு உட்படுவதைத் தடுத்தல் வேண்டும் முதலான செயற்பாடுகளை இந்த ஆய்வு வலுவாகப் பரிந்துரைக்கின்றது.

**உசாத்துணைகள்**


Abdul Manaf, M. R., Mustafa, M., Abdul Rahman, M. R., Yusof, K. H., & Abd Aziz, N. A. (2016). Factors influencing the prevalence of mental health problems among Malay elderly residing in a rural community: a cross-sectional study. *PloS one*, *11*(6), e0156937.

Ariyawansa, R. G., Rasanjalee Perera, M. A. N., & Priyanka, H. E. S. (2023) Suitable Home Environment for Elderly People in Colombo, Sri Lanka. *Journal of Aging and Environment,* 37:1, 85-99, DOI: 10.1080/26892618.2021.2001708.

Culley, M. R., & Angelique, H. (2011). Participation, power, and the role of community psychology in environmental disputes: A tale of two nuclear cities. *American Journal of Community Psychology*, *47*, 410-426.

Fernando, S., Uluwattage, W., Sirisena, B., & Rathish, D. (2021). Non-communicable diseases, medication adherence and social support among elderly medical clinic attendees of the Teaching Hospital, Karapitiya, Sri Lanka. *Journal of the College of Community Physicians of Sri Lanka*, *27*(3).

García-Vivar, C., Konradsen, H., Kolbrun Svavarsdóttir, E., Brødsgaard, A., Dieperink, K. B., Luttik, M. L., ... & Imhof, L. (2023). Healthcare interventions for older people with dementia and family caregivers in Europe: A scoping review. *International journal of nursing practice*, e13172.

Goldman, A. S., Abbott, K. M., Huang, L., Naylor, M. D., & Hirschman, K. B. (2023). Changes in Tangible Social Support Over Time Among Older Adults Receiving Long-Term Services and Supports. *Journal of Applied Gerontology*, 07334648221150966.

Jika, B. M., Khan, H. T. A., & Lawal, M. (2021). Exploring experiences of family caregivers for older adults with chronic illness: A scoping review. *Geriatric nursing (New York, N.Y.)*, *42*(6), 1525–1532. https://doi.org/10.1016/j.gerinurse.2021.10.010.

Maduwage, S. (2020). Situational overview of elder abuse in Sri Lanka. *International handbook of elder abuse and mistreatment*, 427-437.

Marsh, C., Agius, P. A., Jayakody, G., Shajehan, R., Abeywickrema, C., Durrant, K., & Holmes, W. (2018). Factors associated with social participation amongst elders in rural Sri Lanka: A cross-sectional mixed methods analysis. *BMC Public Health*, *18*(1), 1-14.

Matthews, N. R., Porter, G. J., Varghese, M., Sapkota, N., Khan, M. M., Lukose, A., &

Walker, R. (2023). Health and socioeconomic resource provision for older people in South Asian countries: Bangladesh, India, Nepal, Pakistan and Sri Lanka evidence from NEESAMA. *Global Health Action*, *16*(1), 2110198.

Rahman, M. A., Islam, S. M. S., Tungpunkom, P., Sultana, F., Alif, S. M., Banik, B.,& Cross, W. M. (2021). COVID-19: Factors associated with psychological distress, fear, and coping strategies among community members across 17 countries. *Globalization and health*, *17*, 1-19.

Samaraweera, D., & Maduwage, S. (2016). Meeting the current and future health-care needs of Sri Lanka's ageing population. *WHO South-East Asia Journal of Public Health*, *5*(2), 96-101.

Thakur, R. P., Banerjee, A., & Nikumb, V. B. (2013). Health problems among the elderly: a cross. Sectional study. *Annals of medical and health sciences research*, *3*(1), 19-25.

Wickramasinghe, A., Gamage, M., Torabi, M. R., & Perera, B. (2022). Impact of perceived social support and physical fitness on quality of life of institutionalized and non-institutionalized older adults in Sri Lanka. *Dialogues in Health*, *1*, 100079.

Wickramasinghe, N. D., Ratnayake, H. E., Perera, R. A., & Agampodi, S. B. (2023). Quality of life among community-dwelling older adults: evidence from a large population-based study in rural Sri Lanka. *Quality of Life Research*, *32*(1), 93-103.

Xue, Y., Lu, J., Zheng, X., Zhang, J., Lin, H., Qin, Z., & Zhang, C. (2021). The relationship between socioeconomic status and depression among the older adults: the mediating role of health promoting lifestyle. *Journal of Affective Disorders*, *285*, 22-28.

Yang, L., Guo, D., Zheng, J., Guo, Y., & Li, Z. (2023). Association between Social Participation and Remaining Teeth and Urban–Rural Difference among Older Adults in China. *International Journal of Environmental Research and Public Health, 20(2), 1283.*

# உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளும் விளைவுகளும்: நுவரெலியா மாவட்டத்தின் லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவினை அடிப்படையாகக்கொண்ட ஒரு மருத்துவ சமூகவியல் ஆய்வு

**எலோமி ஜெனிட்டா, சி.சிவகாந்தன்**
சமூகவியல் துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
alomijenita@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

உயர்குருதி அமுக்கமானது முக்கியமான தொற்றாநோய்களுள் ஒன்றாகக் காணப்படுவதுடன் மக்களின் நல்வாழ்விலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. குறித்த ஆய்வானது உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தைகளில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளையும் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தைக்கும் சமூகக் குடித்தொகைக் காரணிகளுக்கும் இடையிலான தொடர்பினையும் நிர்ணயிப்பதை நோக்கமாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டது. சமுதாயத்தை அடிப்படையாகக்கொண்ட இந்த ஆய்வில் கலப்புமுறை வடிவம் பயன்படுத்தப்பட்டது. அடுக்கமைக்கப்பட்ட எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்ட 292 நோயாளிகளை மாதிரிப் பருமனாகக்கொண்டு நுவரெலியா மாவட்டத்தின் லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வினாக்கொத்து, நேர்காணல், விடய ஆய்வுகள் மூலம் முதலாம்நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. கணியம்சார் தரவுகள் SPSS உதவியுடன் விபரணப்புள்ளிவிபரவியல் பகுப்பாய்விற்கும் பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்விற்கும் உட்படுத்தப்பட்டன. ஆய்வின் முடிவுகளின்படி 68% பெண்களாகவும் 62% மானோர் 56-65 வயதிற்கிடைப்பட்டவர்களாகவும் இருந்தனர். மேலும், உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் 80.5% மானோர் தமது நோய்க்கான மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக்கொண்டனர். மேலும், 57.2% மானோர் உயர்குருதி அமுக்கம் சாதாரணமானது எனவும் 42.8% மானோர் தீவிரமானதெனவும் குறிப்பிட்டனர். ஆண்களில் 33.9% மானோர் மதுப்பழக்கம் உடையவர்களாவர். இவர்களில் 4.1% மானோர் மட்டுமே உயர்குருதியமுக்க சிகிச்சைக்குப் பின்னர் மதுப்பழக்கத்தைக் குறைத்துள்ளனர். மேலும், ஆண்களில் நோய்நிலையை அறிந்ததன் பின்னரும் புகைப்பழக்கத்தை தொடர்ந்தவர்களாக 3.7% மானோர் காணப்படுகின்றனர். மேலும், பிரதேச வைத்தியசாலையின் மருத்துவ சேவைகள் தொடர்பில் 80.1% மானோர் பூரண அதிருப்தி (41.1%) மற்றும் அதிருப்தியினையும் (39%) வெளிப்படுத்தியிருந்தனர். சமூகக் குடித்தொகைக் காரணிகளான பால்நிலை ($P=0.000<0.05$), வருமானம் ($P=0.000<0.05$), கல்விநிலை ($P=0.000<0.05$) என்பன உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் புள்ளிவிபரவியல் ரீதியாக மிகநெருங்கிய இடைத்தொடர்பைக் கொண்டிருந்தன. உயர்குருதியமுக்கத்திலிருந்து விடுபட மருந்துகள் அனைத்தும் அரசாங்க வைத்தியசாலையில் கொடுக்கப்பட வேண்டுமென்பதே நோயாளிகளின் பிரதான எதிர்ப்பார்ப்பாக இருந்தது. உயர்குருதி அமுக்கத்தினைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முறையான சிகிச்சையினைப் பெற்றுக்கொள்வதுடன் ஆரோக்கியமான வாழ்க்கைப்பாணியைப் பின்பற்றவேண்டுமெனவும் ஆய்வு பரிந்துரை செய்கிறது.

***திறவுச் சொற்கள்:*** *சுகாதாரப் பராமரிப்பு, சுகாதார வசதியின் கிடைப்பனவு, நோயின் தீவிரத்தன்மை, பால்நிலை, வாழ்க்கைப்பாணி மாற்றங்கள்*

**ஆய்வு அறிமுகம்**

தொற்றா நோய்களில் ஒன்றான உயர்குருதி அமுக்கமானது (Hypertension) பிரதான சுகாதாரப்பிரச்சினையாகவும் சமூகப்பிரச்சினையாகவும் அடையாளப்படுத்தப்படுகின்றது. தங்களுக்கு உடல்நலப்பிரச்சினை இருப்பதாக உணரும் நபர்களால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலும் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தை எனப்படுகிறது. இது நல்ல ஆரோக்கியத்தைப் பேணுவதற்கும் உடல்நலக்குறைவை தடுப்பதற்கும் ஆரோக்கிய நிலையிலிருந்து விலகுவதை கையாள்வதற்கும் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ளுத (World Health Organization, 2021). உலகளாவிய ரீதியில் 30-79 வயதுடைய 1.28 பில்லியன் மக்கள் உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். உயர்குருதி அமுக்கம் உள்ளவர்களில் 43% தங்களுக்கு குறித்த நோய்நிலை இருப்பதாக அறிந்திருக்கவில்லை.மேலும் 42% மானோரே இனம்காணப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகின்றனர (World Health Organization, 2021).அத்துடன் 2023 உலக உயர்குருதி அமுக்க தினமானது மே17 கொண்டாடப்பட்டது. மேலும் இந்த ஆண்டுக்கான கருப்பொருள் Masseur Your Blood Pressure Accurately And Control It For And Longer Life என்பதாகும். இலங்கையில் 25% மான மக்கள் உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மொத்த சனத்தொகையில் நான்கில் ஒருவருக்கு உயர்குருதியமுக்கம் ஏற்படுகின்றது. மூவரில் ஒருவருக்கு உயர்குருதி அமுக்கத்திற்கான சிகிச்சை தேவைப்படுகின்றது (Sri Lanka Health and Aging Study 2021).

**ஆய்வு வினாக்கள்**

- உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் எவ்வாறான காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன?
- உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவ சிகிச்சையைப் பெறுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?
- சமூகநிர்ணயக்காரணிகள் உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடைக்கக்கூடிய சிகிச்சைமுறையில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன?
- உயர்குருதி அமுக்கத்திற்கான பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சைகள் காணப்படுகின்ற போதிலும் ஏன் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் பிரச்சனைகள் ஏற்படுகின்றன?

**ஆய்வு நோக்கங்கள்**

***பொதுநோக்கம்***

உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தைகளில் செல்வாக்குச்செலுத்தும் காரணிகளையும் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும்

நடத்தைக்கும் சமூகக்குடித்தொகைக்காரணிகளுக்கும் இடையிலான தொடர்பினையும் நிர்ணயித்தல்.

***சிறப்பு நோக்கங்கள்***

- உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் செல்வாக்குச்செலுத்தும் காரணிகளை இனங்கானல்.
- உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சைமுறையில் செல்வாக்குச்செலுத்தும் காரணிகளை மதிப்பிடல்.
- உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடைக்கக்கூடிய மருத்துவ பராமரிப்பின் மீதான திருப்திமட்டத்தை மதிப்பிடல்.
- உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தைக்கும் சமூகக்குடித்தொகைக்காரணிகளுக்கும் இடையிலான தொடர்பினை நிர்ணயித்தல்.

**ஆய்வு முறையியல்**

***ஆய்வுப்பிரதேசம்***

நுவரெலியா மாவட்டத்தின் லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் (MOH) மேற்கொள்ளப்பட்ட குறித்த ஆய்வில் கலப்பு முறை (mixed method) ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டது.

***தரவுசேகரிப்புக்கருவிகள்***

நேர்காணலை அடிப்படையாகக்கொண்ட வினாக்கொத்து, பிரதான தகவல்வழங்குனருடனான நேர்காணல், விடய ஆய்வுகள் என்பனவும் முதலாம் நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டன. இரண்டாம் நிலைத்தரவுகளாக சுகாதார வைத்திய அதிகாரப்பிரிவு தரவுகள், பிரதேச வைத்தியசாலைத்தரவுகள், பிரதேச செயலக தரவுகள், கிராம சேவகர்களின் தரவுகள், ஆய்வு கட்டுரைகள் என்பனவும் திரட்டப்பட்டன. வினாக்கொத்துக்கான முற்சோதனை(சநவநளவ) நுவரெலியா மாவட்டத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட தோட்டப்பகுதிகளில் 25 உயர்குருதி அமுக்க நோயாளிகளிடம் செய்யப்பட்டது.

***மாதிரித்தெரிவும் மாதிரிப்பருமனும்***

அடுக்கமைக்கப்பட்ட எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 292 உயர்குருதி அமுக்க நோயாளிகள் மாதிரிப்பருமனாக தெரிவுசெய்யப்பட்டனர்.

### *ஆய்வில் உள்வாங்கப்படுவதற்கான மற்றும் ஆய்விலிருந்து விலக்கப்படுவதற்கான தகுதி விதிகள்*

லிந்துலை வைத்திய சுகாதார அதிகாரப்பிரிவிற்குட்பட்ட 18 வயதுக்கு மேற்பட்ட உயர்குருதி அமுக்க நோயாளிகள் ஆய்வில் உள்வாங்கப்பட்டதோடு உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் தீவிர உளநோயால் பாதிக்கப்பட்டவர்களும் படுக்கை நிலையில் இருந்தோரும் செவிப்புலனற்றோரும் ஆய்விலிருந்து விலக்கப்பட்டனர்.

### *ஆய்வு நெறிமுறைகள்*

ஆய்வுச்செயன்முறையின் அனைத்து கட்டங்களிலும் ஆய்வு நெறிமுறைகள் பின்பற்றப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தரவுகளின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்பட்டது. தகவல் தருநருக்கும் ஆய்வாளருக்குமிடையில் நம்பகத்தன்மை பேணப்பட்டது. தகவல் வழங்குனரிடமிருந்து அறிந்தளிக்கப்பட்ட எழுத்து மூலமான ஒப்புதல் பெறப்பட்டதன் பின்னரே தரவுகள் சேகரிக்கப்பட்டன. தகவல் தருனருடைய பங்குபற்றுதல் தற்காலிகமானது. எந்தச்சந்தர்ப்பத்திலும் ஆய்விலிருந்து விலகிக்கொள்வதற்கான பூரண அனுமதி வழங்கப்பட்டது. பெறப்பட்ட தரவுகள் குறிப்பிட்ட ஆய்வுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. ஆய்வுக்காக வினாக்கொத்துகள் மூலம் பெறப்பட்ட தரவுகள் சமூகவியல் துறையில் கையளிக்கப்பட்டன. இலத்திரனியல் தரவுகள் கடவுச்சொற்கள் மூலம் பாதுகாக்கப்பட்டன.

### *தரவுப்பகுப்பாய்வு*

கணியம்சார்தரவுகள் சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரவியல் மென்பொதியின்(SPSS version 22) மூலம் விபரணப்புள்ளிவிபரவியல் மற்றும் அனுமானப்புள்ளிவிபரவியல் முறைகளில் தரவுப்பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. மாறிகளுக்கிடையிலான தொடர்பினை விபரிக்க கைவர்க்கச்சோதனை(Chi-square) மேற்கொள்ளப்பட்டது. பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

### ஆய்வின் பெறுபேறுகளும் கலந்தாராய்தலும்

**அட்டவணை 4.1: சமூகக்குடித்தொகைக்காரணிகள்**

| **சமூகக்குடித்தொகை காரணிகள்** | **வுகை** | **எண்ணிக்கை** | **வீதம் %** |
|---|---|---|---|
| வயது (வருடங்கள்) | 35-45 | 15 | 5.1% |
| | 46-55 | 59 | 20.2% |
| | 56-65 | 181 | 62.0% |
| | 66-75 | 37 | 12.7% |
| | **மொத்தம்** | 292 | 100.0% |
| பால்நிலை | ஆண் | 111 | 38% |
| | பெண் | 181 | 62% |
| | **மொத்தம்** | 292 | 100% |

| | | | |
|---|---|---|---|
| சமயம் | இந்து | 217 | 74.3% |
| | கிறிஸ்தவம் | 69 | 23.6% |
| | இஸ்லாம் | 6 | 2.1% |
| | **மொத்தம்** | 292 | 100% |
| கல்விநிலை | பாடசாலை செல்லவில்லை | 22 | 7.5% |
| | ஆரம்பக்கல்வி | 86 | 29.5% |
| | இடைநிலைக்கல்வி | 153 | 52.4% |
| | உயர்தரம் | 28 | 9.6% |
| | பட்டப்படிப்பு | 2 | 0.7% |
| | மேற்படிப்பு | 1 | 0.3% |
| | **மொத்தம்** | 292 | 100% |
| குடியியல் அந்தஸ்து | திருமணமானவர் | 245 | 83.9% |
| | திருமணமாகாதவர் | 11 | 3.8% |
| | விதவை | 23 | 7.9% |
| | தபுதாரன் | 10 | 3.4% |
| | பிரிந்து வாழ்தல் | 3 | 1% |
| | **மொத்தம்** | 292 | 100 |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து 2023)

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட உயர்குருதி அமுக்க நோயாளிகளில் 56-65 இற்கு இடைப்பட்ட வயதினை உடையோரே 62%மாக பதிவாகியுள்ளதோடு 35 – 45 வயதுக்குட்பட்டவர்களில் 5.1% வீதமானோரே காணப்பட்டனர். வயது என்பது ஆரோக்கியத்துடன் தொடர்புடைய ஒரு காரணியாக பார்க்கப்படுகின்றது. ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள், முதியவர்கள், இளைஞர்கள், பதின்ம வயதுடையவர்களின் வயதுக்கேற்ப அவர்களது ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன (Andrews 2011).

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மக்களில் 74.3% இந்துக்களும் 23.6% கிறிஸ்தவர்களும் 2.1% முஸ்லிம்களும் காணப்பட்டனர். மேலும் 83.9%மானவர்கள் திருமணமானவர்களாகவும் 12.3% மானவர்கள் வாழ்க்கைத்துணையற்றவர்களாகவும் காணப்பட்டனர்.

இதன்படி ஆய்வுபிரதேசத்தில் உயர்குருதிஅமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் வயது, மதம், பால்நிலை, குடியியல் அந்தஸ்து, வருமானம், தொழில்நிலை என்பன செல்வாக்குச்செலுத்தியிருந்தன.

**அட்டவணை 4.2: உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் பால்நிலையின் வகிபங்கு**

| பால்நிலை | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| ஆண் | 111 | 38% |
| பெண் | 181 | 62% |
| **மொத்தம்** | **292** | **100%** |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து 2023)

ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களிடையே பெண்களைவிட ஆண்களுக்கு ஆரோக்கியத்தை நாடிச்செல்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றபோதிலும் பெண்களது ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையே அதிகமாகும். இதனை மேலும் வலுப்படுத்தும் வகையில் பண்புசார் தரவுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. *ஆண்களைவிட பெண்கள் தம் உடல் ஆரோக்கியத்திலும் அதிக கவனம் எடுத்துக்கொள்கின்றனர். உயர்குருதி அமுக்கத்திற்கான வைத்திய ஆலோசனையைப் பெற அதிகளவில் வருபவர்கள் பெண்களாகவே காணப்படுகின்றனர்* (நேர்காணல் 03).

பால்நிலையானது பொதுவாக ஆண்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் அதிக பாதிப்பை ஏற்படுத்தி இருப்பதுடன் பெண்களது தங்கியிருத்தல் நிலையானது வெகுவாக அவர்களின் ஆரோக்கியத்தில் பாதிப்பினை ஏற்படுத்துகிறது. குறித்த ஆய்வில் ஆண்களைவிட பெண்களிடமே அதிகளவான ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையினை இனங்கான முடிந்துத்துடன் ஆண்கள் அவர்களுடைய பால்நிலை வார்பெண்ணங்களினுடைய தாக்கத்தின் காரணமாக ஆரோக்கியத்தை நாடிச்செல்வதில் தாமதத்தை கொண்டிருந்தனர்(Morris et al., 2011). இதற்கு குறித்த சமூகத்தின் ஆண்களுடைய சமூகமயமாக்கல் செயன்முறையே பிரதான காரணம். குறித்த சமூகமொன்றினது சமூகமயமாக்கல் செயன்முறையானது சுகாதாரப்பிரச்சினைகளிலும் மக்களது நலவாழ்விலும் செல்வாக்குச்செலுத்தி இருப்பதைக் காணலாம்.

உயர்குருதி அமுக்கத்தை உடையவர்களில் இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதநம்பிக்கை கொண்டோரிடையே ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் பண்பாட்டு நம்பிக்கைகளின் தாக்கங்கள் காணப்பட்டன. இதன்படி 26%மானோர் குணமளிக்கும் வழிபாடுகள் நடத்தப்படுவதாக தெரிவித்துள்ளனர். 23.6% மானவர்கள் இவ்வழிபாடுகளில் கலந்து கொண்டுள்ளதாக குறிப்பிட்டனர். மேலும் 20.9% மானவர்கள் வழிபாட்டின்பின் நோய்நிலை கட்டுப்பாட்டிற்குள் உள்ளதாகவும் உணர்ந்தனர். மக்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தைகளை பாதிக்கும் பண்பாட்டு அம்சங்களாக நோயின் உணரப்பட்ட தன்மை, வீட்டு பராமரிப்பு கண்காணிப்பு, மருந்து உள்ளெடுத்தல், சமூக வலைப்பின்னல் என்பவற்றுடன் கலாச்சார அம்சங்கள் விதிமுறைகளின் ஒன்றிணைந்த தன்மை என்பவற்றை விவரிப்பதாக காணப்படுகிறது. மிகவும் பாரம்பரியமான கலாச்சார பின்னணியை கொண்ட குடும்பங்களின் ஆயுர்வேதம் மீதான நம்பிக்கைகள், வீட்டு வைத்தியம் என்பன வைத்தியசாலையை நோக்கிய அவர்களது பார்வையை திசைத்திருப்புகின்றது (Olenja. 2003). இதனை வலுச்சேர்க்கும் வகையில் பண்புசார் தரவுகள் அமைகின்றன. *“அந்தோனியாருக்கு மால கட்டி போட்ட அடுத்த ரெண்டு கிழமையில டாக்டர் டிக்கெட் வெட்டி அனுப்பிட்டாரு. மனசுலையே விசுவாச பிரமாணமும் மூணு மங்கள வார்த்தை ஜெபமும் சொன்னா தல சுத்து எல்லாம் இடம் தெரியாம போயிரும். என் கழுத்துல எப்பயும் இந்த செபமாலைய போட்டுட்டுத்தான் இருப்பேன்” (விடய ஆய்வு 03).*

*“கடவுள் புண்ணியத்துல பெருசா ஒண்ணும் வரல”(விடய ஆய்வு 04).*

ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் 73.3%மானவர்கள் தொழில் புரிபவர்கள். இவர்களில் 55.1%மானவர்கள் பொருந்தோட்டத்தொழிலையே செய்தனர். ஏனைய தொழில் செய்பவர்களுக்கும் பொருந்தோட்டத்தொழிலாளர்களுக்கும் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் வேறுபாடு காணப்பட்டது. பொருளாதாரம், கல்விநிலை, உயர்தொழில் செய்பவர்களைவிட அந்தஸ்து, கல்விநிலை, பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களிடையே ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் பின்னடைவே காணப்பட்டது. பொருளாதாரமானது பல்பரிமாணநிலையில் தாக்கம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. என்பவர்களது ஆய்வின்படி ஆரோக்கியத்தை நாடி செல்லும் நடத்தைகளை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாக வருமானம் காணப்படுகின்றது உடல்நலம் தேடும் நடத்தை மட்டுமின்றி உடல்நல விளைவுகளுடன் தொடர்புடைய காரணிகளையும் தீர்மானிக்க வருமானம் முக்கிய குறிகாட்டியாக அமைகிறது (Colin, et al., 2014). பண்புசார் தரவுகள் இதனை மேலும் வலுப்படுத்தியிருந்தன. பண்புசார் தரவுகள் இதனை மேலும் வலுப்படுத்தியிருந்தன.

*“காலையில மலைக்கு வேலைக்குப்போக எந்திரிச்சா அப்படியே தள்ளும். மலையும் எங்க நமக்கு உடம்புக்கு முடியலன்னு வருத்தம்னு வேலைய கொறைச்சிற போறாங்களா? அதே கணக்கு கொழுந்து இல்லன்னா சம்பளமும் இல்ல. பாடாபட்டேன் கொஞ்ச நாளு”(விடய ஆய்வு 1).*

*“பீல்ட் ஒபீசர்க்கும் கங்காணிமாருக்கும் தொரைக்கும் பெரிய தொரைக்கும் மட்டும்தான் ஸ்டீமரரிசி. வேல நேரத்தில சாப்பாட்டுல ஒழுங்கு இல்லாததோ என்னமோ தெரியல பிரசர் வந்துருச்சு”(விடய ஆய்வு 02).*

உயர்குருதி அமுக்க நோயாளிகளில் அரைவாசிக்கும் அதிகமானோர் குறைந்த வருமானம் பெறுபவர்களாகவே காணப்படுகின்றனர். வாழ்க்கைத்துணையை இழந்தவர்கள் குடும்பத்தின் குறைந்த வருமானத்தை எண்ணி மருத்துவ செலவுகளை தவிர்க்கின்றனர். அடிப்படை தேவைகளையே பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையில் ஆரோக்கியத்துக்கான செலவுகள் புறக்கணிக்கப்படுகின்றன.

**அட்டவணை 4.3: உயர்குருதி அமுக்க சிகிச்சைக்குப் பின்னரான மதுப்பழக்கம்**

| மதுப்பழக்கம் | எண்ணிக்கை | வீதம்% |
|---|---|---|
| ஆம் | 99 | 33.9 |
| இல்லை | 193 | 66.1 |
| **மொத்தம்** | **292** | **100.0** |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து 2023)

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 38% மான ஆண்களில் 33.9%மானோர் மதுப்பழக்கம் கொண்டவர்கள். இவர்களுள் 4.1% மானோரே உயர்குருதியமுக்க சிகிச்சைக்குப்பின்னர் மதுபாவனையைக்குறைத்துள்ளனர். நட்புவட்டாரம், தொழில்நிலை, குடியியல் அந்தஸ்து என்பன ஆண்களது வாழ்க்கைப்பாணியில் தாக்கம் செலுத்தியிருந்தன. மேலும் குறித்த ஆண்களுடைய நடத்தையினை புரிந்துகொள்வதற்காக Theory of Planed Behavior இன் நடத்தை மீதான அணுகுமுறைகள், அகநிலை விதிமுறைகள், உணரப்பட்ட நடத்தை என்பன மிகப்பொருத்தமானதாக அமையும். இதற்குப் பண்புசார் தரவுகளும் வலுசேர்த்தன.

*“45 வயசு வரைக்குமே பயலுங்க செட்டோட சேந்து கெழமையில நாலு நாள் சாராயம் குடிப்போம். பீடியும் அடிப்பேன். எனக்கு 72 வயசு ஆகியும் இந்த குடிய விட முடியல”(விடய ஆய்வு 02).*

*“மலையில வேலை செய்றப்போ பயலுங்க செட்டோட சேர்ந்து பீடி சாராயம் கஞ்சா எல்லாம் எடுத்து பழகிட்டேன். இந்த கருமத்தினால போகப்போக எனக்கு இவ்வளவு பிரச்சனை வரும்னு நினைக்கல” (விடய ஆய்வு 07).*

*“ நல்லா ஜாலியா தான் இருந்துச்சு போக போகத்தான் எல்லாம் வர தொடங்குச்சு” (விடய ஆய்வு 08).*

உயர்குருதி அமுக்க சிகிச்சைக்குப் பின்னரும் மதுப்பழக்கத்தை விடமுடியாமைக்கு பழகிவிட்டது, விடமுடியவில்லை மற்றும் உடல்களைப்பு போன்ற காரணங்கள் பண்புசார் தரவுகளிலிருந்து பெறப்பட்டன. எனவே ஆண்களிடம் போதைப்பொருள் பயன்பாட்டினை குறைப்பதற்கு சுகாதாரக்கல்வியை மேம்படுத்துவதுடன் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பிலும் கவனம் செலுத்துவது அவசியமாகிறது.

**அட்டவணை 4.4: உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சுகாதாரப்பணியாளர்களுக்கும் இடையிலான உறவுமுறை**

| விடயங்கள் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| மோழி | 291 | 19.8% |
| பால்நிலை | 285 | 19.4% |
| மருத்துவ தொழில்வாண்மை | 287 | 19.6% |
| கல்வி | 290 | 19.8% |
| அந்தஸ்து | 285 | 19.5% |
| ஏனையவை | 28 | 1.9% |
| **மொத்தம்** | **1466** | **100.0%** |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து 2023)

உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் சுகாதாரப்பணியாளர்களுக்கும் நோயாளிகளுக்கும் இடையிலான உறவின்

செல்வாக்கை காணலாம். இதில் மொழி(19.8%), கல்வி (19.8%), பால்நிலை (19.4%), தொழில்வாண்மை(19.8%), அந்தஸ்து(19.5%), என்பன தாக்கம் செலுத்தியிருந்தன. இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் பண்புசார் தரவுகள் பின்வருமாறு அமைந்திருந்தன.

*"நல்லா சல்லிகாரங்க கிளினிக் வந்தா அவங்களுக்குத்தான் முதல் மரியாத. எங்களை மாதிரி எஸ்டேட் ஆளுங்க வேலவிட்டுட்டு அதே கூடயோட, இல்லனா அம்மாமாருங்க எல்லாம் மலைக்கு போயிட்டு அதே உடுப்போட வருவாங்க அவுங்களுக்கு மருந்து குடுக்குறதுக்கு இந்த மிசிமாருக்கலாம் கசக்கும் போல"*(விடய ஆய்வு 02).

*"கிளினிக்குக்கு வாரவங்கள மனுசன நடத்துற மாதிரி நடத்த மாட்டானுங்க. மரியாத தெரியாதவங்க இப்ப மிசி மாறுங்கல்லாம்"* (விடய ஆய்வு 05).

*"டாக்டர் ஆம்பள ஆளுத்தனே. நா எல்லாம் மிசிமாரோட முடிச்சுக்குவேன்"* (விடய ஆய்வு 08).

சுகாதாரப்பணியாளர்கள் சுகாதார அமைப்புக்களில் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்துகிறார்கள். சுகாதாரப் பணியாளர்களின் கிடைப்பனவு, அணுகுமுறைகள், குறைவான அக்கறை என்பவை நோயாளர்கள் வைத்தியசாலையை நாடிச்செல்வதை தீர்மானித்தன. Owing BO, (2010) என்பவரின் ஆய்வின்படி சுகாதாரப்பணியாளர்களின் அணுகுமுறையில் குறைவான அக்கறை காணப்படுமானால் அவர்களை நோயாளிகள் நாடிச்செல்வதில்லை. நோயாளிகளுக்கும் வைத்திருக்கும் இடையிலான இடைவினையில் பாதிப்பை ஏற்படுத்துவதாக பால்நிலை, மொழி, தொழில்வாண்மை, கல்வி, அந்தஸ்து போன்ற பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன.

**அட்டவணை 4.5: உயர்குருதி அமுக்கத்தின் தீவிரத்தன்மை தொடர்பான சுயமதிப்பீடு**

| சுயமதிப்பீடு | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| தீவிரத்தன்மை கொண்டது | 125 | 42.8 |
| சாதாரணமானது | 167 | 57.2 |
| **மொத்தம்** | **292** | **100.0** |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து 2023)

உயர்குருதி அமுக்கம் தொடர்பான கருத்துக்களில் 42.8%மானவர்கள் உயர்குருதி அமுக்கம் தீவிரத்தன்மை கொண்டது எனவும் 37.2%மானவர்கள் உயர்குருதி அமுக்கம் சாதாரணமானவை எனவும் குறிப்பிட்டுள்ளனர். சாதாரணமானது எனக்குறிப்பிட்டவர்களில் பெரும்பான்மையானோர் ஆண்களாவர். உயர்குருதி அமுக்கத்தின் தீவிரத்தன்மை தொடர்பான சுயமதிப்பீட்டில் குடும்பப்பின்னணி, பால்நிலை, குடியியல் அந்தஸ்து, கல்வியறிவு என்பன செல்வாக்கு செலுத்தியுள்ளன.

Ghezelbash, et al.,(2012) என்பவர்களது ஆய்வின்படி யாருக்கு உயர்குருதி அமுக்கம் உள்ளதென ஊகிக்க முடியாது. உடற்பருமன், அதிக உப்பு, கொழுப்பு, ஆல்கஹால்,

உடற்பயிற்சி இல்லாமை என்பன மாற்றியமைக்கப்படும்போது உயர்குருதி அமுக்கத்திற்கான தாக்கம் குறைவடையும். குறித்த ஆய்வு பிரதேசத்திலும் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாதிரிகளின் life style modification உயர்குருதி அமுக்கத்திற்கு முன்னரான மற்றும் பின்னரான காலப்பகுதியில் தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது. உயர்குருதி அமுக்கத்தினுடைய தீவிரத்தன்மை தொடர்பில் மாறுபட்ட கருத்துகள் கொண்டிருப்பதற்கு அவர்களது வாழ்க்கைமுறை மாற்றங்களே பிரதான காரணமாகின்றன.

**அட்டவணை 4.6: ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள் உயர்குருதி அமுக்கத்திற்கு ஏற்ற சிகிச்சைமுறை எனக்கருதும் செயற்பாடுகள்**

| சிகிச்சை முறை | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| வைத்தியரின் பரிந்துரைக்கேற்ப மருந்துகளை உள்ளெடுத்தல் | 214 | 73.3 |
| வைத்தியரின் பரிந்துரைக்கு மாறான செயற்பாடுகள் | 78 | 26.7 |
| **மொத்தம்** | **292** | **100.0** |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து 2023)

அட்டவணை 4.6 இன்படி 73.3%மானவர்கள் வைத்திய பரிந்துரைக்கேற்ப மருந்துகளை உள்ளெடுத்தலையும் 26.7%மானவர்கள் வைத்திய பரிந்துரையற்ற செயற்பாடுகளே போதுமானதெனவும் குறிப்பிட்டனர். பொருளாதார நெருக்கடியினால் வைத்தியரின் பரிந்துரையின்றிய செயற்பாடுகளில் நோயாளிகள் கவனம் செலுத்தி வருகின்றனர். வைத்தியப்பரிந்துரைக்கேற்ப கிரமமாக மருந்துகளை உள்ளெடுப்பதற்கான ஆர்வம் அதிகமானோரிடம் இல்லை. வைத்தியப்பரிந்துரைக்கேற்ற சிகிச்சைமுறை பொருத்தமானதென உணர்ந்தாலும் அதை நடைமுறைப்படுத்துவதில் மருந்துகளின் சுவை பிடிக்காமை, பக்கவிளைவுகள் பற்றிய பயம், மருந்துக்கு அடிமையாகுவோம் என்ற எண்ணம் போன்றன செல்வாக்குச்செலுத்தியிருந்தன. Diaye, et al., (2009) என்பவருடைய ஆய்வின்படி இந்தியாவில் பெண்களின் கல்வியறிவு வீதம் குறைவாக உள்ளது. குறிப்பாக கிராமப்புறங்களில் கல்வியறிவு உயிர்வாழ்வோடு தொடர்புடைய மிகமுக்கிய காரணியாக கண்டறியப்பட்டுள்ளது. குறைந்த அளவில் கல்வியறிவு, அதிக மருத்துவமனையில் சேர்க்கும் விகிதங்கள் அதிக ஊட்டச்சத்து குறைபாடுகள் தோல் நோய்கள் என்பவற்றின் குறியாட்டியாகப்பட்டுள்ளது. குறித்த ஆய்வில் நோய்நிலை பற்றிய புரிதலில் குறித்த மக்களின் கல்விநிலை செல்வாக்கச்செலுத்தி இருப்பதைக்காணலாம்.

உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் வாழ்க்கைபாணி(8.8%), பொருளாதார நெருக்கடி(8.7%), பால்நிலை(8.4%), சமூகமயமாக்கல்(8.4%), சமூக மூலதனம்(8.4%), பண்பாடு(8.3%), அலட்சியம்(8.3%), சமூக அநீதி(7.6%), தொடர்பாடல் வலையமைப்புகளின்மை(7.8%) ஆகிய சமூகக்காரணிகள் செல்வாக்குச்செலுத்தியிருந்தன. நோயாளிகள் தங்கள் உயர்குருதி அமுக்கத்திற்கான பல்வேறு

வழிகளை நாடிச்செல்கின்றனர். உயர்குருதி அமுக்கத்திற்கான எதிர்ப்பு மருந்துகளை பரிந்துரைத்தோ இல்லாமலோ மூலிகை மருந்துகள் மூலமாகவோ அணுகுகின்றனர். உயர்குருதி அமுக்கத்தால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையை பாதிக்கும் காரணிகள் சுகாதார அமைப்புக்கள் மற்றும் நோயாளியின் சமூகப்பொருளாதார கட்டமைப்பு, சூழல் ஆகியவற்றுடன் தொடர்புடையவையாகின்றது. சுகாதாரப்பணியாளர்களின் இருப்பு, அணுகுமுறை, பொருட்கள் மருந்துகளின், பற்றாக்குறை ஆகியவற்றுடன் தொடர்புடையவையாகும். நோயாளியின் தனிப்பட்ட காரணிகள், விழிப்புணர்வு, உணரப்பட்ட தீவிரம், சிகிச்சையின் உணர்திறன், பாதகமான விளைவுகள் மற்றும் வாழ்நாள் முழுவதும் மருந்துகளை சார்ந்திருப்பதற்கான அச்சம் என்பவற்றுடன் தொடர்புடையது (Musinuzi, et al., 2018).

ஆய்வுப்பிரதேசத்தில் பிரதேச வைத்தியசாலைகள் காணப்படுகின்றபோதிலும் நோயாளர்கள் வைத்தியசாலைக்கு சென்றுவருவதற்கான போக்குவரத்துபாதைகள் புணரமைக்கப்படாமல் சிதைவடைந்த நிலையிலேயே இருந்தன. குறிப்பாக மழைக்காலங்களில் குறித்த நோயாளர்கள் கிளினிக்நாட்களில் பெரிதும் இடர்படுகின்றனர். இதனால் போக்குவரத்துக்கென அதிகம் செலவிடத்தயங்குகின்ற நிலையில் இவர்களது ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதற்கு வலுசேர்க்கும் வகையில் பண்புசார் தரவுகள் பின்வருமாறு அமைந்திருந்தன.

*“தூர எடத்துல இருந்து சந்திரிகாமம் மேகமலைல இருந்து வார ஆளுங்க தான் பாவம்”(விடய ஆய்வு 05).*

*“கிளினிக்குக்கு ஆட்டோ புடிச்சுத்தான் போகணும். மாசம்மாசம் ஆட்டோ புடிச்சு போக நாம என்ன ராசாகணக்காவா வாழுறோம்? ஆஸ்பத்திரி போயிட்டு வாறத்துக்கே ஆயிரக்கணக்குல சல்லியை இறைக்க ஏலுமா? நம்ம என்ன லச்சாதிபதியா? ”(விடய ஆய்வு 06).*

*“சந்திரகாமத்தில இருந்து ஆஸ்பத்திரிக்கு எவளோ தூரம்னு கேட்டு பாருங்க. கிளினிக் அன்னைக்கு போகலன்னா மருந்து கெடைக்காது அடுத்தநாள் போனா மருந்து முடிஞ்சிடும் அதுக்கே போயிருவேன்”(விடய ஆய்வு 07).*

இதன்படி நீண்ட காத்திருப்பு நேரம் ஆரோக்கியத்தினை நாடிச்செல்லும் நடத்தையுடன் தொடர்புபடுகின்றது. கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதியினர் உடல்நிலை சரியில்லாமல் இருக்கும்போது எந்த மருத்துவ உதவியையும் நாடவில்லை என்பதற்கான சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன (Jian, et al., 2007)

**அட்டவணை 4.7: உயர்குருதி அமுக்கத்திற்காக பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை எடுத்துக்கொள்ளாமைக்கான காரணங்கள்**

| காரணங்கள் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| மருந்து சுவை பிடிக்கவில்லை | 6 | 1.7% |

| | | |
|---|---|---|
| பக்கவிளைவு பற்றிய பயம் | 69 | 20.1% |
| செலவு | 73 | 21.3% |
| அலட்சியம் | 70 | 20.4% |
| வைத்தியசாலையில் மருந்து தட்டுப்பாடு | 10 | 2.9% |
| ஆயுர்வேதம் மீதான நம்பிக்கை | 16 | 4.7% |
| ஓய்வெடுக்க வேண்டும் என்பதால் | 15 | 4.4% |
| முறதி | 42 | 12.2% |
| ஏனையவை | 42 | 12.3% |
| **மொத்தம்** | **343** | **100.0%** |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து 2023)

ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் 20.8%மானோர் பக்கவிளைவு பற்றி பயப்படுவதாகவும் 20.4%மானவர்கள் அலட்சியத்தினையும் 24.3%மானவர்கள் செலவினையும் தெரிவுசெய்துள்ளனர். 1.7%மானவர்கள் மருந்தின் சுவை பிடிக்கவில்லை எனவும் 12. 2%மானோர் மறந்துவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளனர். ஆயர்வேத் மீதான நம்பிக்கை 4.7%மானோர் குறிப்பிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதற்கு வலுசேர்க்கும் வகையில் பண்புசார் தரவுகள் பின்வருமாறு அமைந்திருந்தன.

“*எனக்கு சின்ன வயசுல இருந்தே மருந்து குடிக்கிறதுனா விருப்பம் இல்லைங்க தொடவே மாட்டேன்*”(விடய ஆய்வு 1).

“*மூணு வேற வேற கலர் மறந்துங்க குடிக்க குடுத்தாங்க அதுல ஒரு மருந்து குடிச்சா பேசாம படுக்கத்தான் சொல்லும்*”(விடய ஆய்வு 2).

“*அந்த மருந்து குடிச்சா ஒரு வேலையும் செய்ய ஏலாதுங்க அதனால மருந்து ரெண்டு மாசத்திலேயே நிப்பாட்டிட்டேன்*”விடய ஆய்வு 4).

“*டாக்டர் ஒவ்வொரு முறை கிளினிக் போறப்பையும் கத்துவது குடிச்சாதான் வேலை செய்ய ஏலாதேனு நான் என்ன சொன்னாலும் மருந்தே குடிக்கிறது இல்லைங்க*”(விடய ஆய்வு 5).

“*எனக்கு தெரிஞ்சி நான் குடுத்த மருந்து ஒழுங்கா குடிக்கவே இல்ல பாதிநேரம் வேலையில மறந்திடுவேன்*”(விடய ஆய்வு 8).

கிடைக்கப்பெற்ற பண்புசார் தரவுகளின்படி தொழிலுக்கும் மருந்து நுகர்தலுக்குமான தொடர்புள்ளது. பெருந்தோட்டத்துறையில் 20கிலோ கொழுந்து எடுத்தால் மட்டுமே 1000 ரூபா என்ற நிலையில் ஆய்வுப்பிரதேசத்து மக்கள் ஆரோக்கியத்தைவிட வருமானத்திலேயே அதிக நாட்டம் கொண்டவர்களாக இருப்பது வெளிப்படையாகிறது.

**அட்டணை 4.8: மருத்துவபராமரிப்பின் தரம் தொடர்பாக உயர்குருதி அமுக்க நோயாளிகளின் திருப்திநிலை**

| திருப்திமட்டம் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| பூரண அதிருப்தி | 120 | 41.1 |
| அதிருப்தி | 114 | 39.0 |
| திருப்தியுமில்லை அதிருப்தியுமில்லை | 58 | 19.9 |
| **மொத்தம்** | **292** | **100.0** |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து 2023)

ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களில் அனைத்து மாதிரிகளுமே பிரதேச வைத்தியசாலையின் மருத்துவபராமரிப்பின் தரம் தொடர்பாக பூரண அதிருப்தி (41.1%), அதிருப்தி (39%), திருப்தியும் அதிருப்தியுமற்ற நிலை (19.9%) இனையே வெளிப்படுத்தியிருந்தனர். பண்புசார் தரவுகளின் வழியாக இதனை விளங்கிக்கொள்ள முடியும்.

*“இங்க தமிழ் புள்ளைங்களே தமிழாளுங்கள கணக்கெடுக்காதுங்க. இதுல சிங்கள டாக்டர் பாப்பதா? ”(விடய ஆய்வு 02).*

*“இப்ப உள்ளதெல்லாம் நாய நடத்துற மாதிரி தான் நடத்துவாளுங்க”(விடய ஆய்வு 03).*

*“இப்பயும் இருக்குதுங்களே மருந்தெடுக்க ஆளுங்க நிப்போம். அப்பத்தான் அங்க சிரிக்கும் இங்க சிரிக்கும் சாப்புட போவாங்க”(விடய ஆய்வு 04).*

*“ஒரு ஆளுக்கு மருந்து கொடுப்பாங்க அங்க சிரிச்சு கதைச்சு கும்மாளம் போட்டுக்கிட்டு இருந்துட்டு அடுத்த ஆளுக்கு மருந்து. நாம மருந்து எடுக்க போறோமா? இதுங்க கும்மாளத்தை பார்க்க போறோமா? ”(விடய ஆய்வு 05).*

*“சனம் அண்டாத ஆளு. பக்கத்துல கூட வரமாட்டுது. என்ன ஏதுன்னு கேக்க மாட்டுது. கிளினிக்குக்கு ஆளுங்க வருவாங்க. ஆனா இங்க மனுசன நடத்துற மாதிரி நடத்த மாட்டானுங்க மிசிமாரும்சரி டாக்டரும்சரி லிந்துல ஆஸ்பத்திரில கூட பரவால்லங்க”(விடய ஆய்வு 05).*

*“போவோம் டிக்கெட் எடுப்போம் ஒவ்வொரு ஆளா கூப்பிடுவாங்க மிசிமாருதான் பார்ப்பாங்க”(விடய ஆய்வு 06).*

*“உள்ள டாக்டர் எல்லாம் கடப்புலிகாரனுங்க மாதிரி தான் எடுவ”(விடய ஆய்வு 07).*

மருத்துவப்பராமரிப்பின் தரத்தில் அதிருப்தியடைகின்ற போதிலும் குறித்த மக்கள் தொடர்ந்தும் பிரதேசவைத்தியசாலைகளையே தங்கள் சுகாதார நடவடிக்கைக்காக பயன்படுத்தக்காரணம் குறித்த பிரதேசத்தில் நிலவுகின்ற வறுமையே ஆகும்.

**அட்டவணை 4.9: உயர்குருதி அமுக்க நோயாளிகளின் சுகாதார வசதிகளுக்கான அணுகல் தொடர்பான பிரச்சினைகள்**

| **சுகாதார அணுகல் தொடர்பான பிரச்சினைகள்** | **எண்ணிக்கை** | **வீதம்** |
|---|---|---|
| குறுகிய நேரத்தில் மருத்துவ சேவையைப்பெற முடியாமை | 290 | 35.0% |
| நோயின் தீவிரத்தன்மையின்போது மருத்துவ சேவையைப்பெற முடியாமை | 91 | 11.0% |
| நோயின் ஆரம்பகட்டத்தில் மருத்துவ சேவையைப்பெற முடியாமை | 251 | 30.3% |
| நோயாளர் எண்ணிக்கை அதிகமாக உள்ளபோது பெறமுடியாமை | 189 | 22.7% |
| ஏனையவை | 8 | 1.0% |
| **மொத்தம்** | **829** | **100.0%** |

(மூலம்: கள ஆய்வு, வினாக்கொத்து 2023)

உயர்குருதி அமுக்க நோயாளிகள் சுகாதார வசதிகளுக்கான அணுகல் தொடர்பாக எதிர்கொள்ளும் பிரச்சனைகளாக 35%மானவர்கள் குறுகிய நேரத்தில் மருத்துவ சேவையை பெறமுடியவில்லை எனவும், 30.3%மானவர் நோயின் ஆரம்ப கட்டத்தில் மருத்துவ பரிசோதனையை பெறமுடியவில்லை எனவும், 22.7%மானாவர்கள் நோயாளர் எண்ணிக்கை அதிகமாக உள்ளபோது பெறமுடியவில்லை எனவும் 11%மானோர் நோயின் தீவிரத்தன்மையின்போது மருத்துவ சேவையை பெறமுடியவில்லை எனவும் குறிப்பிட்டனர்.

சுகாதாரவசதிகள் வெகு தொலைவில் அமைந்துள்ளன ஏழைகள் அங்கு செல்ல போக்குவரத்துவசதி இல்லை. ஒரு வைத்தியசாலைக்கு செல்ல எடுக்கும் நேரம் பெரும்பாலும் புவியியல், உடல், அணுகல் அடிப்படையில் விவாதிக்கப்படுகின்றது. தூரம் அதிகரிக்கும் போது குறிப்பாக வளரும் நாடுகளில் ஆரோக்கியம் தேடுபவர்கள் மருத்துவ சேவையை நாட தயக்கம் காட்டுகின்றனர் (Ranton Gzirishvili, 2010)

*“பெரியாஸ்பத்திரியில வருத்தம் வந்து சாகக்கெடந்தாலும் டக்டர்மாரு மருந்து குடுக்க நெனய்க்கிற நேரத்துக்குத்தா மருந்து. ஒரே ஒரு டக்டருத்தான் இருக்கது. பிரசர் கிளினிக் நாளுல நெறைய பேரு வந்துட்டா ஆஸ்பத்திரியில சமாளிக்க ஏலாது”* (விடய ஆய்வு 07).

*“கிளினிக்கு மணிக்கணக்கா நிக்கணும் 7,8 மணிக்கு எல்லாம் வர சொல்லுவாளுங்க. ஆனா டாக்டரே 10 மணகிக்கத்தான் வருவது. போயிட்டு வீட்டுக்கு திரும்புறதுக்கு 2 மணி ஆயிரும். எரிச்சலா இருக்கும். எனக்கும் இந்த கிளினிக்குக்கு நாயா காத்துக்கெடக்க விருப்பம் இல்லைங்க”*(விடய ஆய்வு 02).

இத்தரவுகளின்படி தூரம் அதிகரிக்கின்றபோது நோயாளர்களிடையே சுகாதாரவசதிகளை அணுகுவதில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இருப்பினும் குறித்த ஆய்வில் காத்திருப்பு நேர அதிகரிப்பே பிரதான பிரச்சினையாக அமைந்திருந்தது. எனவே இவ்வாறான தோட்டப்புறங்களுக்கு வைத்தியர்களை நியமிக்கும்போது மக்கள் தொகையையும் அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அனைத்து மாதிரிகளுமே பொருளாதார நெருக்கடி தம் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் தாக்கம் செலுத்தியுள்ளதாக குறிப்பிட்டனர். 16.6%மானவர்கள் முறையே வைத்தியசாலையில் மருந்து தட்டுபாட்டினையும் மருந்தகங்களில் மருந்து விலை அதிகரிப்பையும் பதிவிட்டனர். 16.5%மானவர்கள் போக்குவரத்துசெலவு அதிகரிப்பையும் உணவு பொருட்களின் விலை அதிகரிப்பையும் பதிவிட்டனர். ஆரோக்கியமான உணவு பொருட்களை பெறமுடியவில்லையென 16.4%மானவர்கள் பதிவிட்டுள்ளதோடு 16.1%த்தினர் வைத்திய பரிசோதனைக்கான கட்டண அதிகரிப்பையும் குறிப்பிட்டனர்.

*“விலவாசி ஏறுனதோடத்தான் எல்லா பிரச்சனையும். சாப்பாட்டு சாமான், மருந்து வெல, பிரைவேட் ஆஸ்பத்திரியில காசு எல்லாம் ஏத்திட்டாங்க. பெரியாஸ்பத்திரியில குடுக்குற மருந்துல ரெண்டோ மூனோதான் இருக்குதாம்”*(விடயஆய்வு 07).

*“சாப்புடவே வழி இல்ல. இதுல மருந்துக்குனு செலவழிக்க முடியுமா? ”*(விடய ஆய்வு 08).

சிபானி, (2009) என்பவரது ஆய்வின்படி மலையகப் பெருந்தோட்டங்களில் வறுமைக்கான காரணிகளாக சமூக மூலதனத்தினுடைய குறைபாடு பின்தங்கிய கல்விநிலை, குறைவான தொழில் வாய்ப்புக்கள், வேலையின்மை, சமூகப்பிரச்சினைகள், பண்பாட்டு ரீதியிலான வறுமை என்பவை காரணமாக இருந்தன. மனித பொருளாதார அடிப்படையிலான மூலதனத்தின் குறைபாடு வறுமையை ஊக்குவிக்கின்றது. குறித்த ஆய்விலும் பொருளாதாரப்பிரச்சினைக்கு மேற்குறிப்பிட்ட காரணங்களே பிரானமாக அமைந்திருந்தன. இது குறித்த சமூகத்தின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையை பாதிப்பதாக அமைகிறது.

கைவர்க்கச் சோதனையின்படி பால்நிலைக்கும் உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் காலஅளவு($P=0.000<0.05$), மதுபாவனை($P=0.000<0.05$) என்பவற்றுக்கிடையில் மிக நெருங்கிய இடைத்தொடர்பு காணப்பட்டது. இதனை வெளிப்படுத்தும் வகையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 38%மான ஆண்களில் 33.9%மானோர் மதுப்பழக்கம் கொண்டவர்கள் இவர்களுள் 4.1%மானோரே உயர்குருதி அமுக்க சிகிச்சைக்கு பின்னர் மதுப்பழக்கத்தை குறைத்திருந்தனர். உடற்பருமன், ஆல்கஹோல், உடற்பயிற்சி இல்லாமை என்பன உயர்குருதி அமுக்கத்திற்கான இடர்காரணிகளாக அமைகின்றன.

மாதாந்த மொத்த வருமானத்திற்கும் வைத்திய பரிந்துரைக்கேற்ப உணவினை பெற்றுக்கொள்ளல் ($P=0.000<0.05$), மருந்து நுகர்தல் ($P=0.000<0.05$) என்பவற்றுக்கிடையே மிக

நெருங்கிய இடைதொடர்பு காணப்பட்டது. இதனை வெளிப்படுத்தும் வகையில் 21%மானோர் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை எடுத்துக்கொள்ளாமைக்கான காரணமாக அதிக செலவினை குறிப்பிட்டிருந்தனர். பொதுவாக மலேரியா, நிமோனியா, வயிற்றுப்போக்கு, காசநோய், உயர்குருதி அமுக்கம் போன்ற நோய்களுக்கு சிகிச்சையளிக்க மருந்துகளின் பற்றாக்குறை பெரும்பாலான அரசசுகாதார நிலையங்களில் நிலவுகிறது. இது நோயாளிகளின் சுகாதாரத்தின்மீது தீவிரமான விளைவை ஏற்படுத்துவதாகக் காணப்படுகிறது.

கல்விநிலைக்கும் உயர்குருதி அமுக்கத்திற்காக தெரிவுசெய்யும் சிகிச்சைமுறைக்குமிடையில் மிகநெருங்கிய இடைதொடர்பு காணப்பட்டது(P=0.000<0.05). பெண்களது உடல்நலம், தகுந்த சுகாதாரசேவைகளுக்கான அணுகலை கல்விநிலை பாதிக்கிறது. கல்வித்தடைகள் ஆண்களுடன் ஒப்பிடும்போது பெண்களின் வாழ்க்கைத்தரத்தை பாதிக்கின்றது. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெண்களின் கல்விக்கான தடைகளாக குடும்பக்கட்டமைப்பு, குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை, பெண்களின் இரட்டைசுமை என்பன இனங்காணப்பட்டன.

கருப்பொருள் பகுப்பாய்வின்படி உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் வாழ்க்கைப்பாணியும், சுகாதாரப்பராமரிப்பு தொடர்பான காரணிகளுமே செல்வாக்கு செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது

**முடிவுரை**

உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் உயர்குருதி அமுக்கத்தின் தீவிரத்தன்மை, நோய்குறித்த அறிவு, புலக்காட்சி, நோய்குறித்த சுயமதிப்பீடு, சுகாதார நம்பிக்கைகள், நோய்க்காண மருத்துவ சிகிச்சைகளின் கிடைப்பனவு மற்றும் பயன்பாடு, மருத்துவ சேவைகளினை அணுகுதல், இடர் நடத்தை, ஆரோக்கியமான வாழ்க்கைப்பாணி மற்றும் சமூக குடித்தொகைக்காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. ஆய்வு முடிவுகளின்படி உயர்குருதி அமுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தையில் சமூகக்குடித்தொகை காரணிகளைவிட சுகாதார பராமரிப்பு தொடர்பான காரணிகளே கூடுதல் செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்தமை தெளிவாகிறது. உயர்குருதி அமுக்கத்தை கட்டுப்படுததுவதற்கான போதியளவு சுகாதார மருத்துவ வசதிகள் பெருந்தோட்டங்களில் வழங்கப்படவேண்டும். மேலும் தொற்றாநோய்களினை தடுத்தல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பில் தொடர்ச்சியான சுகாதார கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சுகாதார விழிப்புணர்வுகளை தோட்டத்தொழிலாளர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்று இந்த ஆய்வு பரிந்துரைக்கின்றது.

**உசாத்துணைகள்**

Andrews,J.R.,Vaidya,k.,Saha,S.,Yousafzai,M.T.,hemlock,C.,longly,a.,&Qmer,F.(2020). healthcare utilization pattern for acute febrilie illness in bangaladesh,Nepal and Pakistan:results from the survelience for entric fever in asia project clinical infection diseases,71(3),48-56. https:scholor.google.com

Anwar, M., Green, J., & Norris, P. (2012). Health-seeking behaviour in Pakistan: A narrative review of the existing literature. *Public health*, *126*(6), 507-517

Colin, M. F., Van der Vennet, J., Luboya, N. O., Vanlerberghe, V., Mapatano, M. A., & Criel, B. (2014). Health-seeking behaviour in the city of Lubumbashi, Democratic Republic of the Congo: results from a cross-sectional household survey. *BMC health services research*, *14*, 1-12. https:scholor.google.com

Ghezelbash, S., & Ghorbani, A. (2012). Lifestyle modification and hypertension prevention. *ARYA Atherosclerosis journal*, *8*(Special Issue in National Hypertension Treatment). https:scholor.google.com

Gilbert, L., El-Bassel, N., Terlikbayeva, A., Rozental, Y., Chang, M., Brisson, A., ... & Bakpayev, M. (2010). Couple-based HIV prevention for injecting drug users in Kazakhstan: a pilot intervention study. *Journal of prevention & intervention in the community*, *38*(2), 162-176.

Hussain, R., Rashidian, A., Hafeez, A., & Mirzaee, N., Owing, BO., (2019). Factors influencing healthcare seeking behaviour at primary healthcare level, in Pakistan. *Journal of Ayub Medical College Abbottabad*, *31*(2), 201-206.

Jahng, J., Jain, H., & Ramamurthy, K. (2007). Effects of interaction richness on consumer attitudes and behavioral intentions in e-commerce: Some experimental results. *European Journal of Information Systems*, *16*(3), 254-269.

Morris, C., James, K.,Laws, H., & Eldemire-Shearer, D. (2011). Health status and health-seeking behaviour of Jamaican men fifty-five years and over. *West Indian Medical Journal*, *60*(3). https:scholor.google.com

Musinguzi, G., Anthierens, S., Nuwaha, F., Van Geertruyden, J. P., Wanyenze, R. K., & Bastiaens, H. (2018). Factors influencing compliance and health seeking behaviour for hypertension in Mukono and Buikwe in Uganda: a qualitative study. *International journal of hypertension*.https:scholor.google.com

Olenja, J. (2003). Editorial Health seeking behaviour in context. *East African medical journal*, *80*(2), 61-62. https:scholor.google.com

# தேயிலைத் தோட்டப் பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைகள்: அம்பகமுவப் பிரதேச செயலகப் பிரிவை அடிப்படையாகக் கொண்ட ஒரு மருத்துவ சமூகவியல் ஆய்வு

**பா. ரோஹினி, சி. சிவகாந்தன்**
சமூகவியல்துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
rohinisharitha@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைகளை அதிகம் எதிர்கொள்ளும் குழுக்களாக இன்று தேயிலைத் தோட்டப் பெண் தொழிலாளர்கள் காணப்படுகின்றனர். தேயிலைத் தோட்டப் பெண் தொழிலாளர்களின் தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைகளை மதிப்பிடுவதே குறித்த ஆய்வின் நோக்கமாகும். சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆய்வானது கலப்பு முறை ஆய்வு வடிவத்தினைப் பயன்படுத்தி அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட தேயிலைத் தோட்டங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அடுக்கமைக்கப்பட்ட எழுமாற்று மாதிரி நுட்பத்தின் அடிப்படையில் 300 தேயிலைத் தோட்டப் பெண் தொழிலாளர்கள் இந்த ஆய்வுக்குத் தெரிவுசெய்யப்பட்டனர். ஆய்வின் அனைத்துக் கட்டங்களிலும் ஆய்வு நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டன. வினாக்கொத்து, விடய ஆய்வு மற்றும் நேர்காணல் மூலம் முதலாம்நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டன. கணியம்சார் தரவுகள் SPSS (version 23) உதவியுடன் விபரணப்புள்ளிவிபரவியல் பகுப்பாய்விற்கும் உட்படுத்தப்பட்டது. ஆய்வு முடிவுகளின்படி பெரும்பாலானோர் (55.4%) 31-50 வயதுக்குட்பட்டவர்கள். பெரும்பாலான தொழிலாளர்கள் (56.4%) ஆரம்பக்கல்வியைக் கூடப் பெற்றிருக்கவில்லை. பெரும்பான்மையான (88%) தொழிலாளர்களின் மாத வருமானம் 10000-20000 ரூபாவாகும். மேலும், 48.3% ஆனோர் 16-20 வருடங்கள் பணி அனுபவம் கொண்ட தோட்டத் தொழிலாளர்களாக விளங்குகின்றனர். ஆய்வு முடிவுகளின்படி தசைக்கூட்டுக் கோளாறுகள் (78.7%) தோட்டத் துறையில் பெண் தொழிலாளர்களிடம் அதிகளவில் காணப்படுவதாகவும் அதனைத் தொடர்ந்து கழுத்து வலி (15.3%), முதுகுவலி (31.4%), தோள்பட்டை மற்றும் மூட்டு வலி (32.1%) ஆகியவை பொதுவான தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன. இவர்களில் (43.7%) ஆனோர் மருத்துவ சுகாதார சேவைகள் கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ளனர். சமூகக் குடித்தொகைக் காரணியான வயதுடன் ($P=0.000<0.02$), தோள்பட்டை வலியானது குறிப்பிடத்தக்க தொடர்பைக் காட்டுகின்றது. பெரும்பாலான (62.7%) தேயிலைத் தோட்டப் பெண் தொழிலாளர்களிடையே ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தை நன்றாக இல்லை என ஆய்வு முடிவுகள் வெளிபடுத்துகின்றன. மேலும், இவர்களுக்குத் தனியாள் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டபோதிலும், அதனைப் பயன்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு (33.3%) குறைவாகவே உள்ளது. தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைகளைத் தடுத்தல் தொடர்பான சுகாதாரக் கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதை இந்த ஆய்வு பரிந்துரைக்கின்றது.

***திறவுச் சொற்கள்:*** *கொழுந்து பறித்தல்,தனியாள் பாதுகாப்புக் கருவிகள்,தசைக்கூட்டு நோய்கள் ,தொழிற் சூழல், நீண்ட நேர வேலை*

## ஆய்வுப் பின்புலம்

தேயிலைத்தோட்டத் தொழிலாளர்கள் இலங்கை சமூகத்தில் முக்கிய சமூகக் குழுக்களாகவும் நாட்டிற்கு பொருளாதாரத்தை ஈட்டித்தரும் தொழிலாளர்களாகவும் காணப்படுகின்றனர். அவ்வகையில் தேயிலைத்தோட்டத் தொழிலாளர்கள் 19ம் நூற்றாண்டில் பெருந்தோட்டத்துறை அறிமுகப்படுத்தப்பட்ட போது தென்னிந்தியாவில் இருந்து தற்காலிகமாக இலங்கைக்கு

வரவழைக்கப்பட்ட கூலித் தொழிலாளர்களே பெருந்தோட்ட ஊழியர்கள் ஆவர்(கணேசமுர்த்தி, 2009). இன்று தேயிலைத்தோட்டத் துறையில் பணிபுரிபவர்களே அதிகரித்த பணியிட ஆபத்துக்களையும், தொழில்சார் ஆபத்துக்களையும் எதிர்கொண்டு வருகின்றனர். தொழில்சார் ஆரோக்கியப் பாதிப்புக்கள் என்பவை தொழிலிடத்தில் ஏற்படும் நோய்கள் அல்லது விபத்துக்களின் அபாயங்கள் ஆகும் (சர்வதேச தொழிலாளர் சம்மேளனம்,2008). ஒவ்வொரு ஆண்டும் 35500 அபாயகரமான விபத்துக்கள் இடம்பெறுகின்றன. அவை பாதிக்கும் மேற்பட்டவை பெருந்தோட்ட தொழிலாளர்கள் மத்தியிலேயே நிகழ்கின்றன (சர்வதேச தொழிலாளர் அமைப்பு, 2002).இலங்கையை பொருத்தமட்டில் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை கைச்சாத்திடப்படும் தொழிற்சங்க சம்மேளனங்களும் இலங்கை மலையக மக்களின் தொழில் சலுகைகள்,தொழில் உரிமை பற்றிய கரிசணை கொண்டிருந்தாலும் அவை தொடர் தோல்விக்குள்ளேயே தள்ளப்படுகின்றது (2018 பாராளுமன்ற ஒப்பந்த அறிக்கை). மேலும் Occupational safety and health in the plantation sector in Sri Lanka ,1996-1997 ஆய்வானது சர்வதேச ரீதியாக ஆய்வு மேற்கொண்ட போதிலும் தேயிலைத்தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை ஆராயப்படவில்லை (வாமதேவன் 2014). இதன் விளைவாகவே பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இன்று வரை பாதுகாப்பற்ற தொழில் சூழல், மறுக்கப்பட்ட நலன்களுடன் போராடிக் கொண்டிருக்கின்றனர்(International Labour Organization, 2001). எனவே இத்தகைய பிரச்சினைகளானது இன்று அதிகரித்த ஒன்றாக இருப்பதோடு இலங்கை சுகாதார அறிக்கையின் வாயிலாக இன்று தொழிலாளர் மத்தியில் அதிக தசைக்கூட்டு நோய்கள் இனங்கானப்பட்டு வருகின்றனர். இதனை அடிப்படையாகக் கொண்டு தேயிலைத்தோட்டப் பெண் தொழிலாளர்களின் தொழில்சார் சுகாதாரப் பிரச்சினைகள் என்ற ஆய்வானது அம்பகமுவ பிரதேச செயலகத்திற்குட்பட்ட தேயிலைத்தோட்டப் பெண் தொழிலாளர்களினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு வினாக்கள்**

1. தேயிலைத் தோட்ட பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைகள் எவை?
2. தேயிலைத் தோட்ட பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைகளுக்கான காரணங்கள் எவை?
3. தேயிலைத் தோட்டத்துறையில் காணப்படும் மருத்துவ மற்றும் சுகாதார சேவைகள் எவை?
4. தேயிலைத் தோட்ட பெண் தொழிலாளர்கள் தனியாள் பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்தாமைக்கான காரணங்கள் எவை?

**ஆய்வுப்பிரச்சினை**

இன்று தேயிலைத் தோட்டத்தொழில் உலகில் வளர்ந்து வரும் தொழில்களில் ஒன்றாகக் காணப்படுவதுடன் அதிக வருவாயை ஈட்டி தரும் ஒன்றாகவும் விளங்ககிறது.குறிப்பாக தேயிலை தென்னாசியாவின் அதிக நாடுகளில் ஏற்றுமதி துறையாகவும் மாறி வருகின்றது.அவ்வகையில் இன்று தேயிலைத் தொழிலானது இலங்கையின் அடிதளங்களில் ஒன்றாக காணப்பட்டாலும் தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் சமூக ரீதியாக சுரண்டலுக்குட்பட்டு வரும் அதே வேளையில் அதிகளவான தொழிற்சார் சுகாதாரப் பாதிப்புக்களையும் கொண்டதாகக் காணப்படுகின்றனர். தேயிலைத்தோட்ட பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்கின்ற தொழில்நிலை சார்ந்த சுகாதார பிரச்சினைகளானது சமூகரீதியாக எதிர்கொள்ளும் பிரச்சினைககள்,தொழில்சார் காரணிகள், சுகாதார ரீதியாக எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் உள ரீதியாக எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்ற அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

அவ்வகையில் பருவகால மாற்றம் காரணமாக அதிக வெப்பம், அதிக குளிர், அதிக மழை மற்றும் மண்சரிவு, வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தம் காரணமாகவும் தொழில்சார் மற்றும் சுகாதார ரீதியான சேவைகளை அணுகுவதிலும் பாரிய பிரச்சினையை எதிர்கொண்டு வருகின்றனர்.மேலும் இரசாயன பயன்பாடு மூலம்,பாதுகாப்பற்ற வேளைத்தளம்,அதிக பாரம் தூக்குதல், உடல் சார்ந்த சோர்வுகள் மற்றும் மயக்கம், நீண்டநேர வேலை, பாதுகாப்பற்ற இயந்திரப்பாவனை,பொருத்தமற்ற கைகருவிகளை பயன்படுத்துதல் போன்றவற்றுடன் விலங்குகளின் தாக்கதல்களையும் எதிர்கொள்கின்றனர். உணவுப்பாதுகாப்பின்மை, குறைவான ஓய்வெடுத்தல், பாதுகாப்பற்ற தொழில் நடத்தை, பாதுகாப்புக் கவசங்கள் வழங்காமை, தோல் சார்ந்த பாதிப்புகளாக தோல் அலர்ஜி, கைகால் வெடிப்புகள், தோள்ப்பட்டை வலி ஏற்படல், தலைவலி, முதுகு வலி, கை கால்களிற்கு இடையிலான வீக்கம், கைகால் விறைப்பு போன்ற உடல் சார்ந்த மற்றும் சுகாதார ரீதியான பாதிப்புகளை எதிர்கொள்வதோடு மருத்தவ சேவைகளின் கிடைப்பனவு பற்றாக்குறையும் நிலவுகின்றது. இவ்வாறான பாதிப்புகளுக்குத் தொழில் தளங்களில் உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படாமை பிரதானமான காரணமாகக் காணப்படுகின்றது.

**ஆய்வின் பொது நோக்கம்**

தேயிலைத்தோட்ட பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் தொழில்சார் ஆரோக்கிய பிரச்சினைகள் மற்றும் தோட்டத்துறையில் இருக்கும் சுகாதார சேவைகள் அதனுடன் தொடர்புடைய சமூகக் குடித்தொகை காரணிகளை விபரித்தல்

**சிறப்பு நோக்கங்கள்**

- தேயிலைத்தோட்டப் பெண் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் தொழில்சார் ஆரோக்கிய பிரச்சினைகளை இனங்காணல்.

- தேயிலைத்தோட்டப் பெண் தொழிலாளர்களின் தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கான தனியாள் சுகாதார முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை இனங்காணல்.
- தேயிலைத்தோட்டப் பெண் தொழிலாளர்களின் தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைகளுக்கும் சமூகக்குடித்தொகைக் காரணிகளுக்குமிடையிலான தொடர்பை விபரித்தல்.

**ஆய்வு முறையியல்**

அம்பகமுவ பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 20 கிராம சேவகர் பிரிவுகளில் 5642 தேயிலைத்தோட்ட பெண் தொழிலாளர்கள் இருக்கின்றனர்(Population Distribution By Occupation, Ambagamuwa 2022). கலப்புமுறை ஆய்வு வடிவம் பயன்படுத்தி அடுக்கமைக்கப்பட்ட எழுமாற்று மாதிரி நுட்பத்தின் அடிப்படையில் 300 தேயிலைத்தோட்டப் பெண் தொழிலாளர்கள் ஆய்வு மாதிரியாக தெரிவுச் செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வினாக்கொத்து, விடய ஆய்வு, மற்றும் நேர்காணல், குவிமையக் குழுக்கலந்துரையாடல் மூலமாக முதலாம்நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. அம்பகமுவ பிரதேச செயலகப்பிரிவு அறிக்கை(2022), இலங்கை தொழில் திணைக்கள அறிக்கை, ஆய்வுக்கட்டுரைகள்,சஞ்சிகைகள், நூல்கள் மற்றும் இணையத்தள அறிக்கைகள் போன்றவற்றின் மூலமாகவும் இரண்டாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

***ஆய்வு நெறிமுறைகள்***

ஆய்வுச் செயன்முறையின் அனைத்து கட்டங்களிலும் ஆய்வு நெறிமுறைகள் முழுமையாகப் பின்பற்றப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வில் பங்குபற்றியவர்களின் தனிப்பட்ட அடையாளங்கள் வெளிப்படுத்தப்படவில்லை. தரவுகளின் இரகசியத்தன்மையானது ஆய்வின் அனைத்துக்கட்டங்களிலும் உறுதிப்படுத்தப்பட்டது. ஆய்வில் பங்குபற்றியவர்களின் சுதந்திரம் முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டது. ஆய்வில் பங்குப்பற்றியவர்களிடமிருந்து அறிந்தளிக்கப்பட்ட ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள் ஆய்வுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. வினாக்கொத்துக்கள் மூலம் சேகரிக்கபடபட்ட தரவுகள் சமூகவியல் துறையில் கையளிக்கப்பட்டது. ஆய்வில் பயன்படுத்தப்பட்ட இலத்திரனியல் மென் தரவுகள் கடவுச்சொற்கள் இடப்பட்டுப் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**ஆய்வு மட்டுப்பாடுகள்**

ஆய்வில் பங்குபற்றியவர்களிடமிருந்து முழுமையான தரவுகளைப்பெற அதிக காலம் எடுத்தது. ஆய்வு குடித்தொகை அதிகமாக இருப்பதால் ஆய்வு மாதிரிகளைத் தெரிவு செய்வதில் சிரமங்கள் ஏற்பட்டமை ஆய்வின் மட்டுபாடுகளாக அமைந்தன.

**ஆய்வு பெறுபேறுகளும் கலந்தாராய்தலும்**

ஆய்விற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட கணியம்சார் தரவுகள் SPSS (version 23) இன் உதவியுடன் விபரணப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்விற்கு உடபடுத்தப்பட்டதுடன் மாறிகளுக்கிடையிலான இணைவிணை விபரிப்பதற்காக கைவர்க்கச் சோதனையும் (Chi-square test) மேற்கொள்ளப்பட்டது. விடய ஆய்வு,நேர்காணல் மற்றும் குவிமையக் குழுக்கலந்துரையாடல் மூலமாக பெறப்பட்ட பண்புசார் தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டன.

***சமூகக் குடித்தொகை குணவியல்புகள்***

தேயிலைத் தோட்டப் பெண் தொழிலாளர்களின் தொழில்சார் சுகாதார பிரச்சினைகள் மற்றும் ஆய்வில் பங்கு பற்றிய அம்பகமுவ பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட தேயிலைத் தோட்ட பெண் தொழிலாளர்களின் சமூக மற்றும் குடித்தொகைக் காரணிகள் அட்டவணை 4.1 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 4.1 இன் அடிப்படையில் அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் தேயிலைத்தோட்டப் பெண் தொழிலாளர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 46.7% ஆனோரின் மாத வருமானம் 10001-15000 ரூபாவாகக் காணப்படுகின்றது.

**அட்டவணை 4.1 : சமூகக்குடித்தொகைக் காரணிகள்**

| **சமூகக்குடித்தொகைக் காரணிகள்(n=300)** | | **எண்ணிக்கை** | **வீதம்(%)** |
|---|---|---|---|
| **வயது(வருடங்களில்)** | 21-30 | 31 | 10.3 |
| | 31-40 | 71 | 23.7 |
| | 41-50 | 95 | **31.7** |
| | 51-60 | 73 | **24.3** |
| | 61-70 | 30 | 10 |
| | **மொத்தம்** | **300** | **100** |
| **குடியியல் அந்தஸ்து** | திருமணமானவர் | 220 | 73.4 |
| | திருமணமாகாதவர் | 16 | 5.3 |
| | பிரிந்து வாழ்பவர்கள் | 24 | 8 |
| | விதவை | 40 | 13.3 |
| | **மொத்தம்** | **300** | **100** |
| **மதம்** | இந்து | 173 | 57.7 |
| | கிறிஸ்தவம் | 112 | 37.3 |
| | இஸ்லாம் | 15 | 5 |
| | **மொத்தம்** | **300** | **100** |
| **கல்வி நிலை** | பாடசாலை செல்லவில்லை | 169 | 56.4 |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பக்கல்வி | 82 | 27.3 |
| | இடைநிலைக்கல்வி | 34 | 11.3 |
| | க.பொ.த.உயர்தரம் | 15 | 5 |
| | **மொத்தம்** | **300** | **100** |
| **வருமான நிலை** | மாத சம்பளம் | 4 | 1.3 |
| | நாள் சம்பளம் | 296 | 98.7 |
| | **மொத்தம்** | **300** | **100** |
| **மாத ஊழிய வருமானம்(SLR)** | ≤ 5000 | 11 | 3.7 |
| | 5001-10000 | 124 | 41.3 |
| | 10001-20000 | 140 | 46.7 |
| | 15001-20000 | 25 | 8.3 |
| | **மொத்தம்** | 300 | 100 |
| **தொழில் புரியும் வருடம்** | 1-5 | 19 | 6.3 |
| | 6-10 | 4 | 2.0 |
| | 11-15 | 36 | 11.4 |
| | 16-20 | 145 | 48.3 |
| | 21-25 | 55 | 18.3 |
| | 25 வருடங்களுக்கு மேல் | 41 | 13.7 |
| | **மொத்தம்** | 300 | **100** |

(மூலம்:களஆய்வு,வினாக்கொத்து,2023)

ஆய்வு முடிவுகள் அடிப்படையில் பார்க்கின்ற போது, கல்வித் தகைமை ஆனது பாடசாலைக்குச் செல்லாத பெண்களே அதிகளவில் (56.3%) தேயிலைத் தோட்டத் தொழிலில் அதிகளவு பணி புரிபவர்களாகக் காணப்படுகின்றனர். மேலும் (56 % ) ஆனோர் 41-60 வயதிற்குட்பட்டோரே அதிகளவு தொழில் புரிகின்றனர். மேலும் இங்கு 57.7%(173) ஆனோர் இந்து மதத்தை சேர்ந்தவர்களாகவும் 37.3%(112) ஆனோர் கிறிஸ்தவ சமயத்தவர்களாகக் காணப்படுகின்றனர். மேலும் இவர்களில் 73.4%(220) ஆனோர் திருமணமானவர்களாகவும் 13.3%(40) ஆனோர் விதவைகளாகவும் உள்ளனர். மேலும் (48.3%) மானோர் 16-20 வருடங்களாக தேயிலைத்தோட்டங்களில் தொழில்புரிகின்றதுடன் (32%) மானோர் 20 வருடங்களுக்கு மேலாக தேயிலைத்தோட்டங்களில் தொழில்புரிகின்றனர். மேலும் பெரும்பான்மையானோர் 98.7% (296) ஆனோர் நாள் சம்பளத்திற்கு வேலைசெய்கின்றனர்.

வேறு ஆய்வாளர்களின் ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் ஒப்பிட்டு நோக்குகையில் இந்தியாவின் Sylet மாவட்டத்தில் உள்ள ஆய்வு மாதிரியானது பெண் தொழிலாளர்களை கொண்டதாகும். மத ரீதியாக (90%) ஆனோர் இந்துக்களாக உள்ளனர். இங்கு (45%) ஆனோர் 46 வயதிற்கு மேற்பட்ட தொழிலாளர்களாக இருப்பதோடு 45%(80) தொழிலாளர்கள் படிப்பறிவு இல்லாதவர்களாகவும், இவர்களுள் (15%) மாத்திரமே ஆரம்பக்கல்வியை முடித்துள்ளனர். இங்கு எந்தவொரு தொழிலாளியும் உயர்ந்த கல்வியை பெறாமை ஆய்வு முடிவுகளினூடாக அறிய முடிகிறது. (60%) ஆனோர் 30 வருட கால வேலை அனுபவம்

பெற்றவர்களாகவும் 65% ஆனோர் மாத சம்பளமாக 5000-6000(ரூபா) வரை பெறுகின்றனர்(Abdhul et al., 2018).

**அட்டவணை 4.2 : தேயிலைத்தோட்ட தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைகள்(ஒன்றுக்கு மேற்பட்ட தெரிவு)**

| ஆரோக்கிய பிரச்சினைகள் | எண்ணிக்கை | சதவீதம்(%) |
|---|---|---|
| உடலியல் ரீதியானவை | 300 | 25.1 |
| உயிரியல் பிரச்சினை | 281 | 23.5 |
| இரசாயன ரீதியானவை | 273 | 22.9 |
| இயந்திரப்பாவனை பிரச்சினை | 218 | 18.3 |
| பணியிட சூழல் | 122 | 10.2 |
| **மொத்தம்** | **1194** | **100.0** |

(மூலம்:கள ஆய்வு,வினாக்கொத்து,2023)

அட்டவணை 4.2 இன் படி ஆய்வின் முழுமொத்த குடித்தொகையும் தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைகளை சந்தித்துள்ளமை ஆய்வின் முடிவுகளின் வழி அறியப்பட்டுள்ளது. குறிப்பாக பெரும்பான்மையாக உடலியல் ரீதியான ஆபத்துக்களை 25.1%ஆனோர் எதிர்நோக்கியுள்ளமையோடு மிகக் குறைவாக சூழலியல் சார் ஆபத்துக்களை 10.2%ஆனோர் எதிர்கொண்டுள்ளனர். இதன்படி உயிரியல் ரீதியாக 23.5%ஆனவர்களும் இரசாயன ரீதியாக 22.9%ஆனவர்கள் எதிர்கொண்டுள்ளமையோடு இயந்திரப்பாவனை மூலம் 18.3% ஆனவர்களும் பாதிக்கப்டுகின்றனர்.எனவே ஆய்வு முடிவுகளில் வழி ஆய்வுக்குட்படுத்திய முழு குடித்தொகையும் உடலியல்சார் ஆபத்துக்களை எதிர்நோக்குகின்றமை தெரியவந்துள்ளது. மேலும் இவை விடய ஆய்வுகளின் வழியும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

*"கொழுந்து எடுக்கும் போது கை விரல்ல வெடிப்பு வரும். மழைக்கு இன்னும் வெடிச்சு வலி ரொம்ப இருக்கும். அதோட கால் வெடிச்ச இடத்துலயே அட்டயும் கடிச்சி ரத்தம் போய்கிட்டே இருக்கும். நிண்டுகிட்டே இருக்கிறனால கை, கால் வலி அதிகமாக இருக்கும். மழை வெயில் காலங்கள்ல ரொம்பவே மலையில ஏறி வேலை செய்ய கஷ்டப்படுவோம்"*(விடய ஆய்வு 01).

"*கொழுந்து கவ்வாத்து வெட்ட மட்டத்துக்கத்தி பாவிப்போம்.சில நேரத்துல கைல வெட்டி கிழிச்சிக்கிட்டு பொய்ரும்*" (விடய ஆய்வு 03).

*"நாங்க மாட்டுற கூடை வேற ரொம்பவே பாரம். தோள்பட்டைல கூடைல இருக்குற பட்டி மாட்டி தோள்பட்டை வலியால உயிர் போகும்"* (விடய ஆய்வு 04).

**அட்டவணை 4.3 : தசைக்கூட்டு நோய்கள் (ஒன்றுக்கு மேற்பட்ட தெரிவு)**

| தசைக்கூட்டு நோய்கள் | எண்ணிக்கை | சதவீதம்(%) |
|---|---|---|
| தோள்பட்டை வலி | 359 | 32.1 |
| முதுகு வலி | 351 | 31.4 |
| கழுத்து வலி | 170 | 15.3 |
| இடுப்பு வலி | 166 | 15.2 |
| நரம்பியல் பிரச்சினை | 67 | 6.0 |
| **மொத்தம்** | **1113** | **100** |

(மூலம்:கள ஆய்வு,வினாக்கொத்து,2023)

அட்டவணை 4.3 இன் படி ஆய்வு முடிவுகளுடாக பெரும்பான்மையாக (32.1%) தோள்பட்டை வலி ஏற்படுவதாகவும்,குறைவான எண்ணிக்கையினர் 6% (67) நரம்பியல் பிரச்சினை இருப்பதாகவும் தெரிவித்துள்ளதோடு 15.2% இடுப்பு வலியையும் எதிர்கொள்கின்றனர். மேலும் 15.3% கழுத்து வலி 31.4% மற்றும் முதுகு வலியை எதிர்கொள்கின்றனர். இதன் வாயிலாக பெரும்பாலானோருக்கு தசைக் கூட்டு நோய் இருப்பதாக தெரிய வந்துள்ளது.

ஆய்வு முடிவுகளின்படி ஒப்பிட்டு நோக்கும்போது, இலங்கையின் பலாங்கொடை பிரதேச செயலகப் பிரிவில் மத்தேகந்த தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் தசைக்கூட்டு நோய்களானது 68.5% ஆனோர் தசைக்கூட்டு நோய்க்கு உட்பட்டுள்ளனர். ஆய்வின்படி 43.4 % ஆனோர் முதுகு வலியையும் 20.2% ஆனவர்கள் கழுத்து வலியையும் எதிர்கொள்வதோடு தசைக்கூட்டு வலிக்கு உட்பட்டவர்களுள் 48.3% ஆனோர்கள் 20 ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்தவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலும் 98.4% ஆனவர்கள் தங்களின் வேலைத்தளங்களில் அட்டைக்கடிக்குட்பட்டுள்ளனர் (Harshani et al.,2020).

ஆய்வானது, அசாமில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் அனுபவிக்கும் எண்ணற்ற தொழில்சார் சுகாதார ஆபத்துகளையும், அவர்கள் பின்பற்றும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளையும் ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தேயிலைத் தோட்ட ஊழியர்களின் பணியிடத்தில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கு ஏற்படக்கூடிய ஆபத்துகள் தொழில்சார் அபாயங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன. நீண்ட வேலை நேரம், போதுமான ஓய்வு இடைவெளி மற்றும் பிற காரணிகள் ஊழியர்களின் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும். உடல், இயந்திர, இரசாயன, உயிரியல் மற்றும் சமூக-உளவியல் காரணங்களால் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பணியிடத்தில் பல்வேறு ஆபத்துகளுக்கு ஆளாகின்றனர்(Kalyani & Sumathi,2021).

இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் பின்வரும் பண்புசார் தரவுகள் காணப்படுகின்றன.

*“பாரம் போடப்போட தல தூக்க முடியாது. கழுத்து உடையிற மாதிரி இருக்கும்.தலையில தொப்பியோட இருக்கிறனால தலை பின்னுக்கு என்ன இழுக்குற மாதிரி இருக்கும். இந்த கூடை வேணான்னு எத்தனையோ தடவை துரை கிட்ட சொல்லி இருக்கோம். ஆனாலும் மாத்த மாட்டேங்குறாங்க. இதனால நிறைய பேருக்கு தலைவருத்தம் கழுத்து வருத்தம் வந்து இருக்கு”* (விடய ஆய்வு 01).

*“கொழுந்து பாரத்தை விட கூடை பாரம் தான் எங்களுக்கு ரொம்பவே கஷ்டம்.கூடைய மாட்டும்போது தல ரொம்ப வலிக்கும். முதுகு கழுத்து உடையிற மாதிரி இருக்கும். இடுப்பு வேற வலிக்கும்”*(விடய ஆய்வு 02).

*“கைல கொழுந்து எடுத்து கைவிரல் வெடிச்சி ரத்தம் வந்துட்டே இருக்கும்.கைல மணிக்கட்டுப் பிரச்சினை வேற இருக்குனு சொல்லிட்டாங்க” (*விடய ஆய்வு 05).

*“பாரம் தூக்குறதே ஒரு பெரிய பிரச்சின.வேல செய்யுற இடம் தூரத்துல இருந்தாலும் கொழுந்துக் கூடைய மடுவம் வரைக்கும் தூக்கிகிட்டு தான் போகனும்.அதுனாலயே எனக்கு இடுப்பு வருத்தம் வந்துருச்சி” (*விடய ஆய்வு 06).

**அட்டவணை4.4:தோட்டத்துறையில் இருக்கும் சுகாதார சேவைகள்(ஒன்றுக்கு மேற்பட்ட தெரிவு)**

| | **மருத்துவ சேவைகள்** | **எண்ணிக்கை** | **சதவீதம்(%)** |
|---|---|---|---|
| **மருத்துவ சேவை கிடைத்தல்** | ஆம் | 169 | 56.3 |
| | இல்லை | 131 | 43.7 |
| | **மொத்தம்** | **300** | **100** |
| **மருத்துவ சேவைகள்** | | | |
| | சுகாதார ஆலோசனை | 160 | 53.9 |
| | மருத்துவமனை | 101 | 34.1 |
| | அவசர சேவை | 36 | 12 |
| | **மொத்தம்** | **297** | **100.0** |
| **மருத்துவ சேவை பற்றிய திருப்தி மட்டம்** | திருப்தி | 70 | 23.3 |
| | திருப்தியுமில்லை அதிருப்தியுமில்லை | 81 | 27.0 |
| | அதிருப்தி | 135 | 45 |
| | பூரண அதிருப்தி | 14 | 4.7 |
| | **மொத்தம்** | **300** | **100.0** |

(மூலம்:கள ஆய்வு,வினாக்கொத்து,2023)

இலங்கையின் வோல்டன் தோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளுடன் ஒப்பிட்டு நோக்கும் போது 14 தோட்ட பெண் தொழிலாளர்களை அடிப்படையாகக்கொண்ட மேற்கொள்ளபட்ட ஆய்வில் 98% ஆனோர் முறையான மருத்துவ சேவைகளை பெறாத நிலையிலும், 75% ஆனோர் உடல் ரீதயான பிரச்சினைக்கு உள்ளாக்கப்படுவதாகவும் ஆய்வு

முடிவு கூறுகிறது. மேலும் மருத்துவ சேவைகள் தொடர்பான அதிருப்தியையும் வெளிப்படுத்தியுள்ளனர்(Shanmuganathan et al., 2021).

ஆனால் தற்போதைய ஆய்வில் 43.1% ஆனோர் மருத்துவ சேவைகளைப் பெறமுடியாத நிலையில் உள்ளமையோடு 45% ஆனோர் மருத்துவ சேவை தொடர்பான அதிருப்தியை எதிர்கொள்கின்றனர். இவை சுகாதார சேவையாளர்களின் மீதான அதிருப்தியாகவும் பண்புசார் தரவுகளினூடாக காண முடிகிறது.

*"ஊர்ல மருந்து பிரச்சனை வேற இருக்கு. எதுவும் பெரிய காயம், மயக்கம் இப்படி எல்லாம் இருந்தாலும் எம்புலன்ஸ் வராது. டாக்டர் மாறும் வர மாட்டாங்க.நாங்க ஆட்டோ ஏதாச்சும் அயர் பண்ணிக்கிட்டு போகணும்"* (விடய அய்வு 01).

*"எதும் வருத்தம்னா பெரிய ஹாஸ்பிடல் தான் போகணும். அதுவும் மிச்ச தூரம் இருக்கு.முன்ன நுவரெலியா ஹாஸ்பிடல் போனோம். இப்ப கிளங்கன்ல ஹாஸ்பிட்டல் புதுசா கட்டி இருக்காங்க. அதுக்கு தான் போகணும். இல்லாட்டி பக்கத்து ஊர்ல இருக்க தோட்ட மருந்தகம் போவோம் அங்க காசு கொடுத்து தான் மருந்து எடுப்போம்.ரொம்பவே கஷ்டப்படுவோம்"(*விடய ஆய்வு 04).

**அட்டவணை 4.5 : தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைக்கு சுகாதாரத்தை நாடிச்செல்லும் நடத்தை**

| **சுகாதாரத்தை நாடும் முறைகள்** | **எண்ணிக்கை** | **சதவீதம்** |
|---|---|---|
| சுய சிகிச்சையில் ஈடுபடல் | 70 | 25.4 |
| மருத்துவமனை | 45 | 16.3 |
| ஆயள்வேதம் | 100 | 36.2 |
| மருந்தகம் | 61 | 22.1 |
| **மொத்தம்** | **276** | **100%** |

(மூலம்:கள ஆய்வு,வினாக்கொத்து,2023)

அட்டவணை 4.5 இன் படி மொத்த மாதிரியில் (276) தொழிலாளர்கள் சுகாதாரத்தை நாடுபவர்களாக இருப்பதோடு ஏனையோர் எவ்வித காரணங்களுக்காகவும் சுகாதாரத்தை நாடவில்லை என ஆய்வு முடிவு கூறுகின்றது. அவ்வகையில் பெரும்பான்மையாக 36.2%(100)ஆனோர் தங்களது மருத்துவ தேவையை நிறைவேற்றுவதற்காக ஆயுர்வேதத்தை நாடுவதாகவும் குறைவான 16.3(45) மாணவர்கள் மருந்து கடைக்குச் சென்று தங்களது சிகிச்சைக்கான மருந்துகளை பெறுவதாகவும் கூறியுள்ளமையோடு 25.3%(70) ஆனோர் தமக்குத் தாமே சுயமான சிகிச்சை முறையில் ஈடுபடுவதாகவும் 22.1(61) மாணவர்கள் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெறுவதாகவும் ஆய்வின் பெறுபேற்றின் மூலம் எடுத்துக்காட்டுகின்றது.

இதனை சுகாதார நம்பிக்கை மாதிரி (Health Belief Model) என்ற கோட்பாட்டு அடிப்படையில் பார்த்தால், உணரப்பட்ட தடைகள் என்பது சுகாதார செயலைச் செய்வதற்குத் தடைகளாகும். நம்பிக்கைகள், சுய-செயல்திறன் மற்றும் பதில் திறன் ஆகியவை அச்சுறுத்தல்களின் சாத்தியத்துடன் தொடர்புடையவை. முதலாளி வர்க்கங்களின் அச்சுறுத்தல்கள், குறித்த நபரின் உணர்வுகளைக் குறிக்கிறது. ஒரு நபரின் தடைகள் அல்லது தடைகள் பற்றிய உணர்வுகளில் அதிகளவான மாறுபாடு உள்ளது, இத்தகைய உணர்வு, மருத்துவத்திற்கான செலவு அல்லது அதனால் அடையும் பயனுக்கு காரணமாகின்றது. தேயிலைத் தோட்ட பெண் தொழிலாளர்களின் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தைகளானவை விலை உயர்ந்தவை, வருமானத்தை வீணடிக்கும்,ஆபத்தானவை, விரும்பத்தகாதவை,மருந்துகளின் மீதான பயம், நேரம் செலவாகும் அல்லது சிரமமானதாக இருக்கலாம் என்ற கருத்துக்களை நினைத்துக்கொண்டு அதற்கு எதிரான செயல்களில் தங்களின் செயல்திறனை மேற்கொள்கிறார்கள். அதாவது குறித்த ஆய்வினூடாக ஒப்பிடும்போது தொழில்சார் ஆரோக்கிய பாதிப்புக்கு உள்ளாகும் தேயிலைத்தோட்ட தொழிலாளர்கள் மருந்துகளின் விலை, அதற்கான செலவு,குடும்ப சூழல்,போக்குவரத்து செலவு என்பவற்றால் ஆரோக்கியத்தை நாடிச்செல்லும் நடத்தை குறைவாகவுள்ளது. எனவே தமக்குத் தாமே சுயமான சிகிச்சையில் ஈடுபடுவதோடு கை மருந்துகளையும் பாவிக்கின்றனர். இதனால் இவை பக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

*“நா நெறயவே ஆயர்வேத hospital தா போவே. ஏனு கேட்டா அங்க போனாதான் எந்த பிரச்சனயும் வராது.அதோட எனக்கு மருந்து அலஜிக் இருக்கு.மருந்து குடிச்சா சரி வராது.அதுதா ரொம்ப பயம்.ஆயர்வேதமே பொய்ருவே”*(விடய ஆய்வு 07).

**அட்டவணை 4.6 :தனியாள் பாதுகாப்பு கருவி பயன்படுத்தல்(ஒன்றுக்கு மேற்பட்ட தெரிவு)**

| | | எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| **தனியாள் பாதுகாப்பு கருவிகள் வழங்குதல்** | கையுறை | 132 | 23.2 |
| | பாதுகாப்புக்காலணி | 74 | 13 |
| | பாதுகாப்பு சீறுடை | 262 | 46 |
| | தலைக்கவசம் | 33 | 5.8 |
| | முகக்கவசம் | 69 | 12 |
| | **மொத்தம்** | 570 | 100 |
| **அணிந்துவேலை செய்தல்** | ஆம் | 170 | 56.7 |
| | இல்லை | 130 | 43.3 |
| | **மொத்தம்** | 300 | 100 |
| **அணியாமைக்காண காரணம்** | அணிவது அசௌகரியமாக இருத்தல் | 90 | 47.3 |
| | அலட்சியப் போக்கு | 100 | 52.7 |
| | **மொத்தம்** | 190 | 100 |

(மூலம்:கள ஆய்வு,வினாக்கொத்து,2023)

அட்டவணை 4.6 இன்படி தனியாள் பாதுகாப்புக் கருவிகள் பாவனை தொடர்பாகப் பாரக்கின்ற போது (Parijiat,2013).எனும் ஆய்வாளரின் ஆய்வு முடிவுகளின் படி ஒப்பிட்டு நோக்கும் போது இந்தியாவின் அசாம் பகுதியில் உள்ள தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் மத்தியில் செவி திறன் குறைபாடு, வெட்டுக்காயம், உராய்வு, தசைக்கூட்டு நோய், உடல் வருத்தம் போன்றன அதிகமாக உள்ளது.அதற்கு காரணம் பாதுகாப்பு உபகரணங்கள் முறையாக அவர்களுக்கு வழங்காமை,தொழில் உபகரணம் பாவிப்பது தொடர்பான பயிற்சி வழங்காமை போன்றன காரணமாக அமைவதோடு வேலை தொடர்பான அதிருப்தியையும் எதிர்கொண்டு வருகின்றனர்.அம்பகமுவ பிரதேச செயலகப்பிரிவின் தேயிலைத் தோட்ட பெண் தொழிலாளர்கள் எதிர்க்கொள்ளும் தொழில் சார் பிரச்சினைகள் என்ற ஆய்விலும் தொழிலாளர்கள் முறையாக பாதுகாப்பு கவசங்களை அணியாமையும் அது தொடர்பான போதிய பயிற்சி இன்மை,தனியாள் பாதுகாப்பு கவசங்கள் கிடைக்கப்பெற்றும் அதனை அணியாமை போன்ற விடயங்களோடு உடன்படுகின்ற தன்மை காணப்படுகின்றது. இதனை பண்புசார் தரவுகளும் உறுதிப்படுத்துகின்றன.

"*பாதுகாப்பான கூடை கொடுக்கிறார்கள். பாதுகாப்பான உடை குடுக்குறாங்க. தலையில போடுற பேக் கொடுக்கிறாங்க. அது மட்டும் இல்லாம ஜேக்கின் இது எல்லாம் கொடுக்குறாங்க.ஆனா சில சமான்கள நாங்க பாவிச்சதே இல்ல. சொல்ல போனா கைக்குலோஸ் போட்டுட்டு வேல செய்ய கஸ்டம்*" (குவிமையக் குழுக்கலந்துரையாடல் 01).

"*பாதுகாப்பு உடைகளையும் கவசங்களையும் தொழிலாளர்களுக்கு விநியோகித்தல் மற்றும் தொழில் சார் உடல் ரீதியான ஆபத்துக்களை எதிர்கொள்ளும் போது உடனடி முதலுதவிகளை வழங்கியமையோடு அவர்களுக்கான அவசர முதலுதவி மருத்துவ சேவைகளை வேலைத்தளங்களிலேயே விநியோகிப்பதற்கான வாய்ப்பையும் வழங்கியுள்ளேன்*" (நேர்காணல் 01).

"*மழை காலத்துல ஜேக்கின கொண்டு போகாட்டி மத்த ஆளுககிட்ட கேட்டு வாங்கி போடுவம். கடவுளேனு எந்த வருத்தமும் வந்தது இல்ல*" (விடய ஆய்வு 05).

ஆய்வு முடிவுகளின்படி தேயிலைத் தோட்டப் பெண் தொழிலாளர்கள் மத்தியில் தனியாள் பாதுகாப்புக் கருவிகள் பயன்படுத்துவதில் விரும்பத்தகாத நிலையைக் காண முடிந்தது. காரணம் தனியாள் பாதுகாப்புக் கருவிகள் கிடைக்கப்பெற்றும் 43.3%(130) ஆனோர் அவற்றினை அணியாமல் வேலை செய்கின்றனர். இவர்களில் 52.7%(100) ஆனோர் அலட்சியம் காரணமாக தனியாள் பாதுகாப்புக் கருவிகள் அணியாமல் உள்ளமை இவர்களின் சுய கவனிப்பின் அதிருப்தியாக உள்ளது. எனவே தேயிலைத்தோட்டங்களில் வேலையின் போது தனியாள் பாதுகாப்பு உபகரணங்களைப் பயன்படுத்தி தொழில்சார் ஆரோக்கிய பாதிப்புக்களைத் தடுத்தல் தொடர்பான பயிற்சி மற்றும் சுகாதார விழிப்புணர்வு அவசியமாக வழங்கப்பட வேண்டும்.

**அட்டவணை 4.7: சமூகக் குடித்தொகைக் காரணிகளுக்கும் தோள்பட்டை வலிக்கும் இடையிலான தொடர்பு (கைவர்க்க சோதனை)**

| **சமூகக் குடித்தொகை காரணி** | Chi-square P value |
|---|---|
| **வயது** | **P=0.000<0.02** |
| **வருமான நிலை(நாள்,மாதம்)** | **P=0.001<0.01** |
| **தொழில் நிலை** | **P=0.000<0.01** |
| **தொழில் புரியும் வருடம்** | **P=0.000<0.05** |

(மூலம்:கள ஆய்வு,வினாக்கொத்து,2023)

அட்டவணை 4.7 இன் படி தேயிலைத் தோட்ட பெண் தொழிலாளர்களின் தசைக்கூட்டு நோயான தோள்பட்டை வலிக்கும் வயதிற்கும் இடையிலும் **(P=0.000<0.02),** வருமான நிலை (**P=0.001<0.01)** இடையில் பலமான இணைவு காணப்படுகின்றது.

**முடிவுரை**

ஆய்வு முடிவுகளின்படி தேயிலைத் தோட்டப் பெண் தொழிலாளர்கள் மத்தியிலான தொழிற்சார் ஆரோக்கியப் பிரச்சினைகளுக்கான காரணியாக அவர்களின் தொழில் தளமும்,தொழிலின் தன்மையுமே அதிக காரணமாக உள்ளது. மேலும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் தனியாள் பாதுகாப்புக் கருவிகளின் பயன்படுத்தல் குறைவாகக் காணப்டுகின்றது. தொழில்சார் ஆபத்துக்கள் பற்றிய விழிப்புணர்வுகள், தனியாள் பாதுகாப்புக் கருவிகளின் பயன்பாடு பற்றிய சுகாதார விழிப்புணர்வுத் திட்டங்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைவாகவே கிடைக்கின்றன. மேலும் தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைக்கு வைத்தியரை நாடுவது குறைவாகக் காணப்படுகின்றது. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை தொழில்சார் ஆரோக்கியப் பிரச்சினைகளிலிருந்து தடுப்பதற்கான சுகாதார கல்வி நிகழ்ச்சித்திட்டங்களும் பொருத்தமான பொறிமுறைகளும் அமுல்படுத்தப்படவேண்டும் என்று இந்த ஆய்வு பரிந்துரை செய்கின்றது.

**உசாத்துணை**


Abdul,A.,& Chowthry,M.(2018).Health and hygiene condition of female tea workers:A study in three tea gardens of Sylhet district, *Asian journal of Agricultural extension economics and sociology*,26(1),1-9. https://www.researchgate.net

Chandraboss.A.(2015). Outgoing labour and its impact on the tea plantation sector in Sri Lanka, *international symposium*,5(13),301-305. https://www.seu.ac.lk

Chandrasekara, U. H. S., Warnakulasuriya, S. S. P., & Kisokanth, G. (2020). Prevalence of

musculoskeletal pain and environmental health hazards among tea pluckers of Maddekanda tea estate in Balangoda Pradeshiya Saba Division, Sri Lanka. *Journal of public health research*, *9*(4), 1796. https://doi.org/10.4081/jphr.2020.1796.

Chester.G.,Gurunathan.G,,jones.N&Woolen.B.(1993).occupational exposure of Sri Lankan tea plantations workers to paraguat:bull world health organ,71(5),625-632. https://pubmed.ncbi..nlm.nih.gov

David, D.&Nisha,A.(2005).Tea labour situation on Sri Lanka tea estates. Institute of Policy Studies,13(3),5-73. Retrived from ISBN955-9122-55-x

Ganeshamoorthy,M.(2011).Srilankan economy critical analysis of the past and present. Department of economic,(pp 1-10).

Gunathilaka., R.,& Smart.J., & Fleming,.,C.(2018). The impact of climate change on labour demand in the plantation sector: the case of tea production in Sri Lanka. *Australian Journal of Agricultural and Resource Economics*, *62*(3), 480-500

Harshami Shiromali.U.,Sudath Shirely.P. & Kishokanth.G.,(2020).prevalence of musculoskeletal pain and environmental health hazards among tea plukers of maddekanda tea estate in balangoda predeshiya saba division,srilanka. *Journal of public health research*,9(17),404-409. https://pumed.ncbi.nim.nih.gov

Kalyani, D., & Sumathi, D. Occupational Attributes and Its Impact on Health Among Tea Plucking Women Workers Of Assam. *Angrau*, 106. The J. Res. Angrau, (2), Pp. 1-160, April - June, 2023 Https://Www.Researchgate.Net/Publication/373049546.

Senthilkumar.,V. (2020). A study on tea plantation workers health safety and welfare measures of tea estates with reference to Nilagiris district Tamilnadu. *International journal of advanced science andtechnology*, 29(55),2160-2168. https://sersc.org/journals/index.php/I/JAST/artical/view/21324

Shanmuganathan.H., & Helaranjani.S. (2021). Health Affliction and medical service of tea plantation women workers in Sri Lanka: an anthropological study based on alton estate. *International journal of multidisciplinary applied business and education research*,3(01),40-50. http://dx.doi.org/10.11594.

# Inclusive Education Policy and Practice

# தரம் 06 மாணவர்களின் எழுத்துத்திறன் விருத்தி கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்

**அஸீஸ் பாத்திமா ஹாழிறா, ராஜேந்திரன் தக்ஷாயினி**
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
halira19961116@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

“தரம் 6 மாணவர்களின் எழுத்துத்திறன் விருத்தி கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்” என்ற தலைப்பில் அமைந்த இவ்வாய்வானது எழுத்துத்திறன் விருத்தி பின்னடைவாக உள்ள போது அது கற்றலில் ஏற்படுத்தும் தாக்கங்களைக் கண்டறிவதனை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் ஏறாவூர்க் கல்விக் கோட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை மையப்படுத்திய ஓர் அளவை நிலை ஆய்வாகும். ஏறாவூர் கல்விக் கோட்டமானது 1 AB பாடசாலைகள் நான்கையும் 1C பாடசாலை ஒன்றையும் வகை II பாடசாலைகள் ஐந்தையும் வகை III பாடசாலைகள் எட்டினையும் (18 பாடசாலைகள்) கொண்டு காணப்படுகின்றது. இப்பாடசாலைகளில் இருந்து தரம் 6 வகுப்பினைக் கொண்ட 10 பாடசாலைகளும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டன. 10 பாடசாலைகளில் இருந்தும் 12 அதிபர்கள் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் தரம் 6 இற்குக் கற்பிக்கும் 82 ஆசிரியர்கள் ஆண், பெண் என்றரீதியில் படையாக்கப்பட்டு பின் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 2:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 41 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், தரம் 6 வகுப்பினைச் சேர்ந்த 648 மாணவர்கள் ஆண், பெண் என்றரீதியில் படையாக்கப்பட்டு பின் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 5:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 125 மாணவர்கள் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 5:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 25 பேர் மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டனர். ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள், ஆசிரியர்களிடமிருந்து வினாக்கொத்து மூலமாகவும் அதிபர்கள், பெற்றோர்களிடமிருந்து நேர்காணல் மூலமாகவும் அளவு மற்றும் பண்பு ரீதியாகத் தரவுகள் பெறப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் Excel மென்பொருளினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைகள், வரைபுகள் மூலம் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. அதிலிருந்து பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன. எழுத்துத்திறன் பின்னடைந்த மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் பின்தங்கிய நிலையில் காணப்படுவதுடன் இந்நிலைமையானது ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாடுகளிலும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. அந்தவகையில், மாணவர்களின் எழுத்துத்திறன் விருத்தியினை மேம்படுத்துவதற்கான பொருத்தமான விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *மாணவர்கள், எழுத்துத்திறன் விருத்தி, கற்றல், தாக்கம்*

## ஆய்வு அறிமுகம்

பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் பல்வேறு விதமான செயற்பாடுகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடே பிரதான வகிபங்கை வகிக்கின்றது. இந்த வகையில் வரையறுக்கப்பட்ட இலக்குகளையும், நோக்கங்களையும் கலைத்திட்ட அமுலாக்ககத்தினூடாக மாணவர்களிடத்தில் உருவாக்கும் வகையில் பாடசாலைச் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இவற்றைத் திருப்தியாக முன்னெடுப்பதற்கு மாணவர்களின் கற்றல் செயற்பாடு உயர்வானதாக இருக்க வேண்டும். ஆனால் எமது சமூகத்திலுள்ள பாடசாலை மாணவர்களிடையே எழுத்துத்திறன் விருத்திக் குறைபாடுடைய மாணவர்கள் பலர் காணப்படுவதோடு, கற்றல் செயற்பாடுகளும் மிகவும் மந்தமாகவும், பின்னடைந்த நிலையிலும் காணப்படுகின்றது.

மேலும் எழுத்துத்திறன் ஒவ்வொருவரிடமும் உயர்வான நிலையில் காணப்படும்போது கற்றல் சிறப்பாக அமையும். அதாவது கற்றல் கற்பித்தல் செயற்பாடு சிறப்பானதாக அமைவதற்கு எழுத்துத்திறன் விருத்தி அவசியமாகின்றது. ஆனால் ஒருசில மாணவர்கள் இவ்வெழுத்துத்திறன் குறைபாடு காரணமாக கற்றலில் பின்தங்குவதோடு சுய எழுத்தாற்றல், புதியவிடயங்களை உள்வாங்கிக்கொள்ள முடியாதவர்களாகவும் புதிய விடயங்களை அறியும் ஆர்வம் அற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்வாறு எழுத்துத் திறனில் பின்னடைந்த மாணவர்களின் ஈடுபாடற்ற கற்றல் முயற்சிகளினால் வகுப்பாசிரியர்கள், பாட ஆசிரியர்கள் சிரமப்படுவதுடன் அலகு முன்னேற்றம், முறையான கலைத்திட்ட அமுலாக்கம், வினைத்திறனான வகுப்பறைச் செயற்பாடுகளை திருப்திகரமாக மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது.

கல்வி மற்றும் தொழில்முறை சமூகங்களில் எழுதும் திறன் மிகவும் அவசியமானது. இது ஒரு முக்கியமான தகவல்தொடர்பு வழிமுறையாகும், இதன் மூலம் எழுத்தாளர் உணர்வுகள், யோசனைகள் மற்றும் வாதங்களை வெளிப்படுத்துகிறார். மொழியைக் கற்கும் விடயத்தில், ஒருவருக்குத் தெரியாத ஒரு மொழியில் எழுதுவது கடினமான பணியாகும். உண்மையில், எழுத்து எந்த மொழியையும் கற்றுக்கொள்வதற்கான ஒரு முக்கியமான திறனைக் குறிக்கிறது.

அந்த வகையில் கனிஸ்ட இடைநிலைப் பிரிவிலுள்ள தரம் 6 மாணவர்களின் எழுத்துத் திறன் விருத்தி கற்றலில் எவ்வாறான சவால்களை ஏற்படுத்துகின்றது, இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு எவ்வாறான விடயங்கள் காரணிகளாக அமைகின்றன, இதனை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் போன்றவற்றை ஆராய்ந்து இம்மாணவர்கள் எதிர்நோக்கும் எழுத்துத் திறன் தொடர்பான சவால்களினை நிவர்த்தி செய்வதற்கான விதப்புரைகளை ஆய்வு நோக்கில் தெளிவுபடுத்துவதுடன், இம்மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை துரிதப்படுத்தி கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபட உதவும் வகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

கல்வி தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகள் மாணவர்களுக்கு மட்டுமல்லாது மாணவர்களைச் சார்ந்து நிற்கும் சமுதாயத்தையும் பாதிக்கின்றது. இவ்வாறன பிரச்சினையே ஆய்வுக்குரிய பொருளாகின்றது. இவ்வகையில் கல்வியை பிரதானமாக வழங்கக் கூடிய பாடசாலைகளில் பல்வேறு பிரிவுகள் சார்ந்தும் பிரச்சினைகள் காணப்படுகின்ற போதிலும் குறிப்பாக கனிஸ்ட இடைநிலை வகுப்பினைச் சேர்ந்த தரம் 06 மாணவர்கள் எழுத்துத் திறன் குறைபாடு உடையவர்களாகக் காணப்படுவது முக்கியமான ஆய்வுப் பிரச்சினைகளில் ஒன்றாகும்.

அதனடிப்படையில் தரம் 06 மாணவர்களின் எழுத்துத் திறன் விருத்தி கற்றலில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது என்ற பிரச்சினையை மையமாகக் கொண்டதாக இவ்வாய்வு அமைகின்றது. அந்த வகையில் தமிழ் மொழியானது தாய் மொழியாகவும் ஏனைய பாடங்களைக் கற்பதற்கான ஊடகமாகவும் காணப்படுகின்றது. இதில் மாணவர்களின் எழுத்துத்திறன் பாதிப்படையுமானால் அது அவர்களின் கற்றலில் பல்வேறு சவால்களை ஏற்படுத்தும்.

முன்பள்ளி தொடக்கம் பல்கலைக்கழகம் வரையிலான கற்றல் செயற்பாடுகள் தாய் மொழியில் அமைவதால் தாய் மொழியில் எழுத்து தேர்ச்சி முக்கியத்துவம் பெறுகின்றது. எழுத்தில் மாணவர்கள் தவறு விடும் பொழுது அது அவர்களது பரீட்சைப் பின்னடைவுகளுக்குக் காரணமாகி விடுகின்றது (Rosariyo,2019). இதனால் மாணவர்கள் எழுத்துத் துறையில் சிறப்பான முறையில் தங்களது தூண்டலை வெளிப்படுத்தல் அவசியமாகும்.

அதே போல தரம் 6 வகுப்புக்களில் மாணவர்களின் எழுத்துத்திறன் விருத்தி குறைவதனால் அவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், இணைப்பாடவிதான செயற்பாடுகளின் முன்னேற்றத்திற்கு அது பெரும் தடையாகக் காணப்படுவதுடன் பாரிய பிரச்சினையாகவும் உருவெடுத்துள்ளது. அவ்வகையில் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து எனும் இந்த நான்கு அடிப்படைத் திறன்களும் மாணவரிடம் குறைவடையும் போது மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றது. இதனால் இடைவிலகல் அதிகரித்தல், மெல்லக்கற்போர் தொகை அதிகரித்தல், கற்றலில் ஆர்வமின்மை மற்றும் கற்றல் செயற்பாடுகளில் பின்தங்குகின்ற நிலையும் ஏற்படுகின்றது. அந்த வகையில் 6ஆம் வகுப்பு மாணவர்களின் எழுத்துத் திறன் விருத்தியில் பல காரணிகள் தாக்கம் செலுத்துவதனால் மாணவர்கள் உளரீதியாகவும் சோர்வுற்று சுயமாகக் கற்பதில் நாட்டம் குறைந்து செல்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

அத்துடன் மாணவர்கள் கற்றுக்கொண்ட விடயங்களை பூரணமாக விளங்கி இருந்தும் அவற்றை வெளிப்படுத்தும் பொழுது எழுத்துத் திறன் விருத்திக் குறைபாடு காரணமாக தெளிவற்ற நிலையிலும் விளங்காத வகையிலும் எழுத்துக்கள் அமைவதனால் பரீட்சைகளில் சித்தியடையத் தவறவிடுகின்றனர். அல்லது குறைவான புள்ளிகளைப் பெறுகின்றனர். இது மாணவர்களின் மொழிப்பாடத்திற்கும் ஏனைய பாடங்களுக்கும் பொதுவானதாகவே காணப்படுகின்றது.

அதனடிப்படையில் ஆய்வுக்குரிய பிரதேசத்தில் ஆய்வாளனால் இனங்காணப்பட்ட முக்கிய ஆய்வுப் பிரச்சினையாக இது காணப்பட்டது. இதன் பின்னணியிலேயேதான் மாணவர்களின் எழுத்துத்திறன் விருத்தி தொடர்பாக கற்றலில் எதிர்நோக்கும் சவால்களை இனங்கான வேண்டிய முக்கிய தேவை ஏற்படுகின்றது. அதனடிப்படையில் தரம் 6 மாணவர்களின் எழுத்துத் திறன் விருத்தி கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம் என்பது முழுமையான கற்றல் பிரச்சினையாகும்.

**ஆய்வுப் பிரச்சினைக் கூற்று.**

ஏறாவூர் கோட்ட 1 AB, 1 C, வகை II பாடசாலைகளிலுள்ள தரம் 6 மாணவர்களின் எழுத்துத்திறன் விருத்தி கற்றல் செயற்பாட்டின் போது பல தாக்கங்களை ஏற்படுத்துவதால் கற்றலில் சிறந்த நிலையினைப் பெறுவதில் அது பல சவால்களை ஏற்படுத்துகின்றது.

**ஆய்வின் நோக்கம் - பொது நோக்கம்**

எழுத்துத்திறன் விருத்தி குறைவடையும் பொழுது கற்றல் செயன் முறையில் எவ்வாறான தாக்கங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்பதைக் கண்டறிந்து அவைகளுக்கான சிபார்சுகளை முன்வைத்தல்.

**சிறப்பு நோக்கங்கள்**

1. தரம் 6 மாணவர்களின் எழுத்துத் திறன் விருத்தியின் தற்போதைய நிலையினை இனங்காணுதல்.
2. தரம் 6 மாணவர்களின் எழுத்துத் திறன் விருத்தியின் முக்கியத்துவத்தைக் கண்டறிதல்.
3. தரம் 6 மாணவர்களின் எழுத்துத் திறன் விருத்தி பின்னடைவால் கற்றலில் எதிர் கொள்ளும் சவால்களை ஆய்வு செய்தல்.
4. தரம் 6 மாணவர்களின் எழுத்துத் திறன் விருத்திக்கான பரிகாரச் செயற்பாடுகளையும் ஆலோசனைகளையும் முன்வைத்தல்.

**இலக்கிய மீளாய்வு**

Westwood என்பவர் (2004) இல் What teachers need to know about Reading and writing Difficulties எனும் தலைப்பில் மேற்கொண்ட ஆய்வில் எழுதுவது பேசுவது போல் எளிதானது அல்ல. விபரங்கள் தவறாக இருந்தால் அதனைப் பெறுபவர் தவறாகப் புரிந்துகொண்டு தவறாக நடந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும் எனக் குறிப்பிடுகின்றார்.

Richchart (2008) என்பவர் மொழிக் கற்பித்தல் முறைகள் எனும் தலைப்பில் மேற்கொண்ட ஆய்வில் ஒரு வகுப்பறையில் எழுதுதல் செயற்பாடு முக்கியமான நான்கு படிகளைக் கொண்டுள்ளது. திட்டமிடல், எழுதுதல், மதிப்பீடு, மீள எழுதுதல் என்பவைகளே அவையாகும். இவை ஒரு ஆசிரியரால் சிறப்பாக நடாத்தப்படுகின்ற போது மாணவர்களின் எழுத்துத் திறன் விருத்தியடையக் கூடிய நிலை ஏற்படும் எனக் குறிப்பிட்டார்.

Fitri என்பவர் (2013) இல் மாணவர்களின் எழுத்துத் திறன் பகுப்பாய்வு எனும் தலைப்பின் கீழ் மேற்கொண்ட ஆய்வில் எழுத்துத் திறனானது தகவல் தொடர்புகளில் முக்கிய பங்கு வகிக்கிறது, எழுத்தின் மூலம் எல்லோராலும் உணர்வு மற்றும் யோசனைகளை வெளிப்படுத்தவும், மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளவும் முடியும் என்றார்.

இஸ்மாயில் (2014) என்பவர் தனது ஆய்வின் படி எழுத்து எப்போதும் ஒரு முக்கியமான திறமையாகக் காணப்படுகின்றது. இது இலக்கணக் கட்டமைப்பு, சொற்களஞ்சியத்தை வலுப்படுத்துவதால் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. இதனால் ஆசிரியர்கள் மூலம் எழுத்துத் திறன் போதுமானளவு மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டும். இவ்வாறு கற்பிக்கும் மாணர்களின் திறன்கள விருத்தியடையக் கூடிய நிலை ஏற்படும். இதனால் மாணவர்கள் சிறந்து விளங்குவார்கள் எனக் குறிப்பிட்டார்.

Shiham fowzer (2021) என்பவர் மொழிக் கற்றலுக்கு அனைத்துத் திறன்களும் முக்கியமானவை என்றாலும், கல்வி மற்றும் தொழில்முறை சமூகங்களில் எழுதும் திறன் மிகவும் அவசியமானது. இது ஒரு முக்கியமான தகவல்தொடர்பு வழிமுறையாகும், இதன் மூலம் எழுத்தாளர் உணர்வுகள், யோசனைகள் மற்றும் வாதங்களை வெளிப்படுத்துகிறார். மொழியைக் கற்கும் விடயத்தில், ஒருவருக்குத் தெரியாத ஒரு மொழியில் எழுதுவது கடினமான பணியாகும். உண்மையில், எழுத்து எந்த மொழியையும் கற்றுக்கொள்வதற்கான ஒரு முக்கியமான திறனைக் குறிக்கிறது என தனது ஆய்வில் குறிப்பிடுகின்றார்.

Mohd sharif என்பவரும் ஏனையோரும் (2021) ஆம் ஆண்டில் தொழில் முறை அடையாளத்தின் கருத்துக்கள் எனும் தலைப்பில் தாம் மேற்கொண்ட ஆய்வில் குடும்பத்தில் பெற்றோர் பிள்ளைகளுக்கு அதிகம் மனமகிழ்வு ஏற்படுத்தக் கூடிய விடயங்களை ஏற்படுத்தும் போது அது அவர்களின் எழுத்துத் திறன் விருத்தி அடைவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தும் எனக் குறிப்பிடுகின்றனர்.

**ஆய்வு முறையியல்.**

ஆய்வு முறையியல் சிறப்பானதாகக் காணப்படும் பட்சத்திலேயே தீர்வுகள் நம்பகத் தன்மையாக அமையும். அந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு என்ற மூன்று மாவட்டங்கள் அமையப் பெற்றுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம், சிங்களவர் எனப் பல சமூகம் வாழ்கின்றனர்.

14 பிரதேச செயலகப் பிரிவுகளை கொண்ட இம்மட்டக்களப்பு பிரதேசத்தில் 348 கிராம சேவகர் பிரிவுகளும் அடங்கப் பெற்றுள்ளது. அதிகளவு தமிழ் மக்களை கொண்ட இம்மாவட்டம் பட்டிருப்பு கல்வி வலயம், மட்டக்களப்பு கல்வி வலயம், மட்டக்களப்பு மத்தி வலயம், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம், கல்குடா கல்வி வலயம் ஆகிய ஐந்து கல்வி வலயங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்திற்கும் கோட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் இவ்வாய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட பிரதேசம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் ஏறாவூர் கல்விக் கோட்டமாகும்.

இவ்வாய்வில் எண், அளவு ரீதியான முறையியல்களும், பண்பு ரீதியான முறையியல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. எண் ரீதியான முறையியலினுள் எண்கள், அட்டவணைகள், வரைபடங்கள், மாணவர் தொகை, விகிதாசாரங்கள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆய்வு தொடர்பான கோட்பாடு ரீதியான உறுதிப்படுத்தலுடன் தொடர்பு கொண்டதாக பண்பு ரீதியான முறையியல் காணப்படுகின்றது. இங்கு சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்களிடத்தில் வினாக்கொத்து மூலமாகவும், அதிபர்கள், மாணவர்களின் பெற்றோர்களிடத்தில் நேர்காணல் மூலமாகவும் தரவுகள் பெறப்பட்டது.

இதன்படி அளவு ரீதியான, பண்பு ரீதியான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு அமைவதால் இவ்வாய்வில் கலப்பு ஆய்வு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு வினாக்கொத்து மற்றும் நேர்காணல் மூலம் பெறப்பட்ட தரவுகளை அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்து அதன் மூலம் முடிவுகளைக் கண்டறிவதாக இவ்வாய்வானது அமைவதால் இது ஒரு அளவை நிலை ஆய்வாக அமைந்துள்ளது.

***மாதிரித் தெரிவு***

ஆய்வாளனினால் பாடசாலைகளையும் பாடசாலை மனித வளங்களையும் அடிப்படையாகக்கொண்டு மாதிரித்தெரிவு இடம்பெற்றுள்ளது. அவ்வகையில் மாதிரித் தெரிவானது ஆய்விற்காக தரவுகளைத் திரட்டும்போது முழுத்தொகையினையும் ஆய்வுக்குட்படுத்த முடியாமையின் காரணமாக இவ்வாய்வினை மேற்கொள்வதற்கு படையாக்கப்பட்ட மாதிரியும் இலகு எழுமாற்று மாதிரியும், நோக்க மாதிரியும் தரவு சேகரிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாய்விற்காக தரவுகளை திரட்டும் வகையில் பாடசாலைகளும், அதிபர்கள் ஆசிரியர்கள். மாணவர்கள் மற்றும் பெற்றோர் போன்றோரும் மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தரம் 6 மாணவர்கள் இதனுள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

ஏறாவூர் கல்விக் கோட்டத்தில் 18 பாடசாலைகள் காணப்படுகின்றன. அதாவது 1AB பாடசாலைகள் 4 உம் 1C பாடசாலை 1 உம் வகை II பாடசாலைகள் 5 உம் வகை III பாடசாலைகள் 8 உம் என மொத்தமாக 18 பாடசாலைகளைக் கொண்டு காணப்படுகின்றன. இவற்றில் இவ் ஆய்வுக்குரிய மாதிரிப் பாடசாலைகளாக 1AB பாடசாலைகள் 4 உம் 1C பாடசாலை ஒன்றும் வகை II பாடசாலைகள் 5 உம் என மொத்தமாக 10 பாடசாலைகள் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளின் 12 அதிபர்களில் இருந்து 12 அதிபர்களும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 10 பாடசாலைகளில் இருந்தும் தரம் 6 வகுப்புக்குக் கற்பிக்கும் 82 ஆசிரியர்களில் இருந்து 2:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 41 ஆசிரியர்களும் ஆண், பெண் என படையாக்கப்பட்டதன் பின்னர் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பெற்றோர்களின் மாதிரித் தெரிவானது ஆய்வு மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 125 மாணவர்களின் பெற்றோர்களில் இருந்து 5:1 எனும் விகிதத்தில் 25 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறாக இவ்வாய்வுக்காக ஆய்வாளனால் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டு உள்ளனர்.

இவ்வாய்வில் இடம்பெற்றுள்ள ஆய்வுக்கருவிகளாக வினாக்கொத்து, நேர்காணல் என்பன அமையப்பெற்றன. இவ்வினாக்கொத்தானது மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட

ஆசிரியர்கள், மாணவர்கள் போன்றோருக்கு வழங்கப்பட்டது. இவ்வினாக்கொத்தில் மூடிய மற்றும் திறந்த வினாக்கள் இடம்பெற்றுள்ளது. வினாக்கள் முறையான தொடர் ஒழுங்கில் காணப்பட்டதுடன் ஆசிரியர்கள், மாணவர்கள் போன்றோரால் இலகுவில் வாசித்து விளங்கக் கூடியதாக அமைக்கப்பட்டது.

அந்தவகையில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், மற்றும் மாணவர்களின் பெற்றோர்களிடமும் ஆய்வாளனால் நேர்காணலானது இடம்பெற்றது. அதனடிப்படையில் இந்நேர்காணலானது நேருக்கு நேரான கலந்துரையாடல் மூலம் ஆய்வுக்குத் தேவையான பொருத்தமான ஆய்வுடன் தொடர்புடைய தகவல்களை பெற்றுக் கொள்ளும் ஒரு வழியாகவே பயன்படுத்தப்பட்டது.

## தரவுப் பகுப்பாய்வுகள்

***தரம் 6 மாணவர்களின் எழுத்துத்திறனின் தற்போதய நிலை.***

தரம் 6 மாணவர்கள் எழுத்துத்திறன் செயற்பாட்டில் எவ்வாறான நிலைகளில் உள்ளனர்? எனும் வினாவினை ஆசிரியர்களிடம் வினவியபோது 42% ஆன ஆசிரியர்கள் குறைவு என விடையளித்தனர்.




உரு 4.1 எழுத்துத் திறனில் மாணவர்கள் குறைவாக இருப்பதற்கான காரணங்களாக ஆசிரியர்கள் குறிப்பிட்டவை.

உரு 4.1 இன்படி அதற்கான காரணத்தை வினவியபோது கிடைக்கப்பெற்ற பதில்களுக்கிணங்க மாணவர்கள் வீட்டில் எழுத்துப் பயிற்சியில் ஈடுபடாமை எனும் காரணியே அதிகமாக (61%) கிடைக்கப்பெற்றுள்ளது. அதே போல பெற்றோர் எழுதுவதற்கு ஊக்கம் அளிக்காமை, மாணவர்களிடம் எழுவதற்கான ஆர்வம் குறைவாக உள்ளமை போன்ற காரணிகளால் எழுத்துத் திறன் விருத்தியில் பின்னடைவான நிலையில் காணப்படுகின்றனர் என்பதையும் அறியலாம். அந்த வகையில் மாணவர்கள் வீட்டில் எழுத்துப் பயிற்சியில் ஈடுபடாமை எனும் காரணியே அதிகமான எழுத்துத்திறன் பின்னடைவுக்குக் காரணமாகியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

***எழுத்துத்திறன் விருத்தியின் முக்கியத்துவம்***

தரம் 6 மாணவர்களின் கற்றலுக்கு எழுத்துத்திறன் விருத்தி முக்கியமானதா? என்பதனை அறிவதற்கான வினாவானது ஆசிரியர்கள், மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இது தொடர்பாக 125 மாணவர்களிடம் கேட்டறிந்த போது இதற்கு 125 மாணவர்களும் ஆம் என விடையளித்தனர். இது 100% ஆக அமைகிறது. இவ்வினாவானது தரம் 6 வகுப்பு கற்பிக்கின்ற ஆசிரியரிடம் வினவப்பட்ட போது 41 ஆசிரியர்களும் இதற்கு ஆம் என விடையளித்தனர். இது 100% ஆகும்.




உரு 4.2 கற்றலுக்கு எழுத்துத்திறன் விருத்தியின் முக்கியத்துவம்.

அதே போன்று இவ்வினாவினை 12 அதிபர்களிடமும் 25 பெற்றோர்களிடமும் நேர்காணலின் மூலம் கேட்டறிந்த போது அவர்கள் அனைவரும் கற்றலுக்கு எழுத்துத்திறன் விருத்தி முக்கியத்துவம் வாய்ந்நததாகும் என்ற கருத்தினைத் தெரிவித்தனர். அதனடிப்படையில் நோக்கும் போது கற்றலின் பிரதான அச்சாணியாக விளங்குவது எழுத்துத்திறன் ஆகும் என்பது புலப்படுகின்றது.

இதனையே Shiham fowzer (2021) என்பவர் இலக்கியத்தின் ஊடான எழுத்துத்திறன் விருத்தி எனும் தலைப்பில் மேற்கொண்ட ஆய்வின் முடிவின் படி மொழிக் கற்றலுக்கு அனைத்துத் திறன்களும் முக்கியமானவை என்றாலும், கல்வி மற்றும் தொழில்முறை சமூகங்களில் எழுதும் திறன் மிகவும் அவசியமானது. இது ஒரு முக்கியமான தகவல்தொடர்பு வழிமுறையாகும், இதன் மூலம் எழுத்தாளர் உணர்வுகள், யோசனைகள் மற்றும் வாதங்களை வெளிப்படுத்துகிறார். மொழியைக் கற்கும் விடயத்தில், ஒருவருக்குத் தெரியாத ஒரு மொழியில் எழுதுவது கடினமான பணியாகும். உண்மையில், எழுத்து எந்த மொழியையும் கற்றுக்கொள்வதற்கான ஒரு முக்கியமான திறனைக் குறிக்கிறது எனக் குறிப்பிடுகின்றார். இது ஒருவரவின் கற்றலுக்கு எழுத்துத்திறன் விருத்தி முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்னும் ஆய்வாளனின் முடிவுக்கு சான்றாக அமைகின்றது.

***எழுத்துத் திறன் பின்னடைவினால் கற்றலில் எதிர்கொள்ளும் சவால்கள்***

மாணவர்களின் ஆளுமைத் திறனில் எழுத்துத்திறன் விருத்தியானது சவாலினை ஏற்படுத்துகின்றதா என்ற வினாவினை 41 ஆசிரியர்களிடமும் கேட்டறிந்த போது அவர்கள்

அனைவரும் ஆம் என பதிலளித்திருந்தனர். இது 100% ஆகக் காணப்படுகின்றது. இவ்வாறு எழுத்துத்திறன் விருத்தி குறைந்த மாணவர்கள் எவ்வாறான சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர் எனக் கேட்டறிந்த போது அதற்கு ஆசிரியரின் விடைகள் பின்வருமாறு காணப்பட்டது.




உரு 4.3 மாணவர்களின் ஆளுமைத் திறனில் எழுத்துத்திறன் பின்னடைவு ஏற்படுத்தும் சவால்கள்

Ungan (2007) என்பவர் எழுத்துத் திறனின் முக்கியத்துவமும் அபிவிருத்தியும் எனும் தலைப்பில் மேற்கொண்ட ஆய்வு முடிவின்படி எழுதும் திறனை மேம்படுத்துவதால், மாணவர்களின் அறிவைப் பரப்ப முடியும். இதன் மூலம் சிறந்த முறையில் அவர்களின் எண்ணங்களை மிகவும் திறமையாக மறுபரிசீலனை செய்யவும், அவர்களின் திறனை வளர்க்கவும் இது வாய்ப்பாக அமைகின்றது எனக் குறிப்பிட்டார். இக்கருத்தின் அடிப்படையில் நோக்கும் போது ஆய்வாளனின் கருத்தானது மாணவர்களின் ஆளுமைத் திறனில் எழுத்துத்திறன் விருத்தி நேரடியாகத் தாக்கம் செலுத்துகின்றது என்னும் முடிவோடு இணைந்து செல்வதாய் உள்ளது.

### *எழுத்துத்திறன் விருத்திக்கான பரிகாரச் செயற்பாடுகளும் வழிமுறைகளும்*

உங்களது எழுத்துத்திறன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏதேனும் பரிகாரச் செயற்பாடுகள் பாடசாலையில் மேற்கொள்கின்றார்களா? எனும் வினாவை மாணவர்களிடம் வினவிய போது 68% ஆன மாணவர்கள் ஆம் என பதிலளித்திருந்தனர். இது தொடர்பாக 32% ஆன மாணவர்கள் இல்லை என பதிலளித்திருந்தனர். மேலும் ஆசிரியர்களிடம் புதிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்திக் கற்பிக்காமைக்கான காரணங்கள் பற்றி வினவிய போது அதற்கு பின்வருமாறு பதிலளித்திருந்தனர். இதனை உரு 4.4 காட்டுகின்றது.




உரு 4.4 புதிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்திக் கற்பிக்காமைக்கான காரணங்கள் தொடர்பாக ஆசிரியர்கள் குறிப்பிட்டவை.

மேற்காட்டப்பட்ட உரு 4.4 இன்படி புதிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்திக் கற்பிக்காமைக்கான காரணங்களில் நவீன துணைச்சாதனங்களின் பற்றாக்குறையே அதிகம் எனத் தெரிவித்தனர். இக்காரணியில் பாடசாலையில் போதிய கணினிகள் காணப்படாமை, கணினி தொடர்பான வாண்மைத்துவப் பயிற்சிகளை பாடசாலை வழங்காமை, 40 நிமிடத்தில் கணினியைப் பயன்படுத்தி கற்பிப்பதில் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டுக்கள் போன்றன இக்காரணியில் செல்வாக்குச் செலுத்துவதாகக் குறிப்பிட்டனர்.

**முடிவுகளும் விதப்புரைகளும்**

***தரம் 6 மாணவர்களின் எழுத்துத்திறனின் தற்போதய நிலை***

*முடிவுகள்*

1. 44 சதவீதமான மாணவர்களினதும் 42 சதவீதமான ஆசிரியர்களினதும் பதில்களுக்கிணங்க மாணவர்கள் எழுத்துத்திறன் விருத்தியில் சாதாரணநிலையிலே உள்ளனர்.
2. 52 சதவீதமான மாணவர்களினதும் 39 சதவீதமான ஆசிரியர்களினதும் பதில்களுக்கிணங்க கற்ற விடயங்களை மாணவர்கள் குறித்த நேரத்தில் எழுதி முடிப்பதில் சிரமப்படுகின்றனர்.

*விதப்புரைகள்*

1. எழுத்துத்திறனில் சாதாரணமாக உள்ள மாணவர்களை மேலும் விருத்தியாக்கக் கூடிய வகையில் ஆசிரியர்கள் வாரத்தில் மூன்று நாட்கள் ஏதேனும் சிறியளவிலான கட்டுரைகள், கதைகள் போன்றனவற்றை செய்யக் கூடிய பயிற்சிகளை வழங்கல்.
2. மாணவர்களை கவரக் கூடிய விதத்தில் நவீன உபகரணங்களைப் பயன்படுத்தி எழுத்துக்களை இனங்காட்டி அதனை முறையாக கற்றுக் கொள்வதற்கான பயிற்சிகளை வழங்கல்.

***எழுத்துத்திறன் விருத்தியின் முக்கியத்துவம்***

*முடிவுகள்*

1. 56 சதவீதமான மாணவர்களதும் 63 சதவீதமான ஆசிரியர்களதும் கருத்துக்கேற்ப வீடுகளில் கற்பதற்கான போதிய வசதிகள் காணப்படாததால் மாணவர்கள் எழுத்துத்திறனில் பின்னடைவாக உள்ளனர்.
2. 66 சதவீதமான மாணவர்களதும் 76 சதவீதமான ஆசிரியர்களதும் பதில்களுக்கிணங்க வகுப்பறைச் சூழல் பொருத்தமில்லாமல் காணப்படுவது மாணவர்களின் எழுத்துத்திறன் பின்னடைவில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

*விதப்புரைகள்*

1. பிள்ளைகள் கற்பதற்குரிய உளரீதியான, பௌதீகரீதியான வீட்டுச் சூழலை உருவாக்கி கொடுப்பதுடன், வீட்டில் உள்ள படித்தவர்கள் மாணவர்களின் கற்றலுக்கு உதவி செய்ய வேண்டும்.
2. அதிபர் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்குத் தேவையான வளங்களையும் வசதிகளையும் உரிய முறையில் பெற்றுக் கொடுத்து எழுத்துத்திறனில் இடர்படும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு முறையான பயிற்சிகளை வழங்குதல்.

***எழுத்துத் திறன் பின்னடைவினால் கற்றலில் எதிர் கொள்ளும் சவால்கள்***

*முடிவுகள்*

1. 51 சதவீதமான மாணவர்களதும் 66 சதவீதமான ஆசிரியர்களதும் கருத்துக்கிணங்க மாணவர்கள் எழுதுவதில் அதிகம் இடர்படுகின்றனர்.
2. 100 சதவீதமான ஆசிரியர்களின் பதில்களுக்கிணங்க மாணவர்களின் எழுத்துத்திறன் பின்னடைவால் ஆசிரியர்கள் கற்பித்தலில் சவால்களை எதிர் கொள்கின்றனர்.

*விதப்புரைகள்*

1. எழுத்துத் திறனில் பின்னடைவாக உள்ள மாணவர்கள் ஒவ்வொரு நாளும் எழுத்துக்களை திறம்பட எழுதுவதற்கு சொல்வதெழுதுதல், இடைவெளி நிரப்புதல், சிறிய கட்டுரைகளை எழுதுதல் போன்ற பயிற்சிகளை ஆசிரியர், பெற்றோர்கள் போன்றோர் மாணவர்களுக்கு வழங்கி இவ்விடர்பாடுகளை நீக்குவதற்கு உதவ வேண்டும்.
2. எழுத்துக்களை தவறாக எழுதுவதன் விளைவுகளை காணொளிகள், கதைகள் மூலம் விளக்குதல்.
3. ஆசிரியர்களும் இவ்வெழுத்துத்திறன் பின்னடைவான மாணவர்களுக்கு விசேடமாக எவ்வகையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதை வாண்மை ரீதியான பயிற்சிகளைச் செய்து மேற்கொள்ளல்.

## *எழுத்துத்திறன் விருத்திக்கான பரிகாரச் செயற்பாடுகளும் வழிமுறைகளும்*

*முடிவுகள்*

1. அனைத்து ஆசிரியர்களினாலும் பரிகாரச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு 68 சதவீதமான மாணவர்களின் கருத்தினையும் 78 சதவீதமான ஆசிரியர்களின் கருத்தினையும் ஆதாரமாகக் கொள்ள முடியும்.
2. புதிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி கற்பித்தல் செயற்பாடானது இல்லாத நிலையில் உள்ளது. இதற்கு 84 சதவீதமான மாணவர்களின் கருத்தினையும் 76 சதவீதமான ஆசிரியர்களின் கருத்தினையும் சுட்டிக் காட்டலாம்.
3. ஆசிரியர்களினால் முன்னேற்றமடைந்து வரும் மாணவர்களை ஊக்குவிக்கின்ற நிலையானது குறைவாகவே உள்ளது. இதற்கு 52 சதவீதமான மாணவர்களின் கருத்துக்களும் 66 சதவீதமான ஆசிரியர்களின் கருத்துக்களும் ஆதாரமாக அமைகின்றன.
4. பாடசாலையில் எழுத்துத்திறனை வளர்ப்பதற்கான தனியான குழு காணப்பட்ட போதிலும் நடைமுறையில் செயற்படுவதும், விசேட பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுவது குறைவாகவே உள்ளது. இதற்கு 72 சதவீதமான மாணவர்களது கருத்துக்களையும் 70 சதவீதமான ஆசிரியர்களது கருத்துக்களையும் ஆதாரமாகக் கொள்ள முடியும்.

*விதப்புரைகள்*

1. மாணவர்களின் தனியாள் வேறுபாட்டை அறிந்து கொண்டு அதற்கேற்ப சிறு சிறு குழுக்களாக்கி கற்பித்தல்களை மேற்கொள்ளல்.
2. தேர்ச்சி பெற்றவர்களின் வழிகாட்டல்களை மாணவர்களுக்கு பாடசாலை வழிகாட்டல் சேவையினால் பெற்றுக்கொடுக்க வேண்டும்.
3. பல்தர, பல்மட்ட கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிபர் ஆசிரியர்களின் நேரசூசியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொடுத்தல்.
4. நவீன கற்பித்தல் சாதனங்களின் போன்றவற்றினூடாக கற்பித்தல்.
5. மாலைநேர வகுப்புக்கள், கற்றல் அணுகுமுறைகள் என்பன சிறப்பாக அமைய வேண்டும். இதற்கு அதிபர், ஆசிரியர், பாடசாலைச் சமூகத்தினர் போன்றோர் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும்.
6. மாணவர்கள் விரும்பக்கூடிய கற்றல் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதோடு செயற்பாடுகளின் போது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பரிசு, பாராட்டுக்கள் என்பன வழங்க வேண்டும்.
7. எழுத்துத்திறன் தேர்ச்சியுடைய ஆசிரியர்களைக் கொண்டு பாடசாலையில் மாணவர்களின் எழுத்துத்திறனை வளர்ப்பதற்கான குழு அமைக்கப்பட்டு அதனை அதிபர் வழிநடத்துவதோடு ஊக்கப்படுத்த வேண்டும்.
8. பாடசாலை ஆலோசனை குழுவினர் எழுத்துத்திறன் பின்னடைவில் இருந்து மாணவர்களை மீட்டெடுக்க தனியான பயிற்சி வகுப்புக்களை ஒழுங்குபடுத்தி செயற்படுவதோடு அதனைத் தொடராக கண்காணிக்க பெற்றோர், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள் போன்றோரை நியமிக்க வேண்டும்.

**உசாத்துணைகள்.**


அருள்மொழி,செ. (2008). *கல்வி ஆய்வு முறைகள்.* துர்க்கா அச்சகம்.

கருணாநிதி,மா. (2005). *வகுப்பறைச் செயற்பாட்டில் மொழித்தேர்ச்சியும் திறனும்.* அகவிழி அச்சகம்.

சந்தானம்,எஸ்., கணபதி,வி. (2003). *கல்வி சார் அறைகூவல்கள்.* சாந்தா பப்ளிஷர்ஸ்.

சந்திரசேகரம்,சோ. (2008). *சமகாலக் கல்வி முறையின் சில பரிமாணங்கள்.* சேமமடு பதிப்பகம்.

சிவத்தம்பி,கா. (2006). *தமிழ் கற்பித்தல்.* குமரன் புத்கசாலை..

பெனடிக்கபாலன்,யோ. (2005). *கல்வி உளவியல் அடிப்படைகள்.* பூபாலசிங்கம் புத்தகசாலை.

Arafat Hamouda, (2013). An Inversting of Listerning Comprehension Problems Encounterd By Saudi Students In The EL Listening Class Room. *Journal of International English Language*, 1.

Charles Perfetti, Joseph Stafura, (2014). Word Knowledge in a Theory of Reading Comprehension. *Journal of the society for the scientific study of reading*, 5(3).

Fitri, (2013). An analysis on students ability and problems in writing recount texts at grade VIII at SMPN 29 Padang. *Journal of English language teaching*, 2 (1 ).

Ghodbane Nacira, (2019). Creative writing through literary texts and sample approach. *Journal of Algerian scientific journal platform,* 6 (1)..

Rosariyo,P. (2019). The Impact of three types of writing intervention on students writing quality. Kyoto university. Japan.

Siham Bouzer, (2021). EFL Writing Skills Devel opment Thorough Literature. Algeria.

# கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் வாசிப்புத்திறன் பின்னடைவு கற்றல் செயற்பாடுகளில் ஏற்படுத்தும் சவால்கள்

**முஹம்மட் ஜமால்தீன் பாத்திமா ஸஜீதா, ராஜேந்திரன் தக்ஷாயினி**
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
sajeethajamaldeen1997@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

வாசிப்புத் திறன் பின்னடைவால் கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். அத்தகைய இடங்களைக் கண்டறிந்து அதற்கான சிபார்சுகளை முன்வைத்தல் என்ற நோக்கத்தில் அமைந்த இவ்வாய்வானது, ஏறாவூர் கல்வி கோட்டப் பாடசாலைகளில் உள்ள கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களை உள்ளடக்கிய பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவை நிலை ஆய்வாகும். கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டமையினால் ஏறாவூர் கல்விக் கோட்டத்திலுள்ள 18 பாடசாலைகளிலிருந்து கனிஸ்ட இடைநிலை வகுப்புக்களைக் கொண்ட 10 பாடசாலைகளும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன. 10 பாடசாலைகளிலும் உள்ள அதிபர் தரத்தை உடைய 12 அதிபர்கள் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டதுடன் கனிஸ்ட இடைநிலை வகுப்புக் கற்பிக்கும் 108 ஆசிரியர்களிலிருந்து ஆண், பெண் என்ற ரீதியில் படையாக்கப்பட்டு பின் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 2:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 54 ஆசிரியர்களும் தெரிவுசெய்யப்பட்டதுடன் 10 பாடசாலைகளின் அறிக்கைகளில் இருந்தும் பெறப்பட்ட வாசிப்புத்திறன் பின்னடைந்த 228 மாணவர்களிலிருந்து ஆண், பெண் என்ற ரீதியில் படையாக்கப்பட்டு பின் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 2:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 105 மாணவர்களும் ஆய்வு மாதிரியாக தெரிவு செய்யப்பட்டனர். மேலும் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 105 மாணவர்களின் 5:1 விகிதத்தில் 20 பெற்றோர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகளிடமிருந்து வினாக்கொத்து, நேர்காணல், அவதானம், ஆவணச்சான்றுகள் போன்ற ஆய்வுக்கருவிகள் மூலம் தரவுகள் பெறப்பட்டன. பண்புரீதியாகவும், அளவுரீதியாகவும் பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் Excel மென்பொருளினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைகள், வரைபுகள் மூலம் குறித்துக்காட்டப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து முடிவுகள் பெறப்பட்டன. வாசிப்புத்திறன் பின்னடைவால் கற்றல் செயற்பாட்டில் சுயமாக வாசிக்க முடியாமை, பரீட்சை வினாக்கள் மற்றும் பயிற்சிக் கொப்பிகளிலுள்ள வினாக்களை வாசித்து விளங்கி விடையளிக்க முடியாமை, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் கலந்துகொள்ள முடியாமை, தமிழ்த்தினப் போட்டி நிகழ்வின் போது போட்டிகளில் கலந்து கொள்ள முன்வராமை, போன்ற பல்வேறு சவால்கள் ஏற்படுகின்றன. எனவே, இம்மாணவர்களின் வாசிப்புத்திறனை விருத்தி செய்யும் வகையில் பாடசாலையில் பரிகார செயற்பாடுகள் மேற்கொள்ளல், ஊக்கப்படுத்தல் செயற்பாடுகள், வாசிப்பு பயிற்சியின் போது புதிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தல், பாடசாலையில் வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கான தனியான குழு அமைத்தல், வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கான விசேட பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படல் போன்ற தீர்வுகளை முன்வைக்கக் கூடிய வகையில் அதற்கான விதப்புரைகளும் முன்மொழியப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *வாசிப்புத் திறன், வாசிப்புத்திறன் பின்னடைவு, கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்கள், கற்றல்*

**ஆய்வு அறிமுகம்**

இன்று உலகில் உள்ள பல்வேறு பாகங்களிலும், பல்வேறு துறைகளிலும் பல பரிமாணங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதிய அறிவைக் கண்டறிவதற்கும், கல்வித் துறையில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் கண்டு அதனை முன்னேற்றகரமான பாதையில் இட்டுச் செல்வதற்கும் ஆய்வானது அவசியமானதாகக் காணப்படுகின்றது. இந்த வகையில் கற்றல் தொழிற்பாடானது மேம்பட்ட வகையில் இடம்பெறுவதற்கு ஆய்வானது பெரிதும் வேண்டப்படும் ஒரு தேவையாக உள்ளது

கற்றல் கற்பித்தல் செயற்பாடு சிறப்பானதாக அமைவதற்கு வாசிப்புத்திறன் விருத்தி அவசியமாகின்றது. ஆனால் ஒரு சில மாணவர்கள் இவ்வாசிப்புத்திறன் பின்னடைவு காரணமாக கற்றலில் பின்தங்குவதோடு சுய எழுத்தாற்றல், புதியவிடயங்களை உள்வாங்கிக்கொள்ள முடியாதவர்களாகவும் புதிய விடயங்களை அறியும் ஆர்வம் அற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்வாறு வாசிப்புத்திறன் பின்னடைந்த மாணவர்களின் ஈடுபாடற்ற கற்றல் முயற்சிகளினால் வகுப்பாசிரியர்கள், பாட ஆசிரியர்கள் சிரமப்படுவதுடன் அலகு முன்னேற்றம், முறையான கலைத்திட்டம் அமுலாக்கம், வினைத்திறனான வகுப்பறைச் செயற்பாடுகளை திருப்திகரமாக மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இவ்வாறான சூழலில் ''கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் வாசிப்புத்திறன் பின்னடைவு கற்றல் செயற்பாடுகளில் ஏற்படுத்தும் சவால்கள்'' எனும் தலைப்பில் ஏறாவூர் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட 10 பாடசாலைகளில் உள்ள கனிஸ்ட இடைநிலை வகுப்பில் கல்வி கற்கும் (தரம் 06- தரம் 09) மாணவர்களில் வாசிப்புத்திறன் பின்னடைந்த மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு வாசிப்புத்திறனானது அவசியமானதொன்றாகக் காணப்படுகின்றது. கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்கள் வாசிப்புத் திறன் பின்னடைவால் கற்றலில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இம்மாணவர்களின் வாசிப்புத் திறன் பின்னடைவால் அவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிப்படைவதோடு பல்வேறு சிக்கல்களையும், இடர்பாடுகளையும் எதிர்கொள்கின்றனர். இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு வீட்டுச் சூழல், பாடசாலைச் சூழல், மாணவர்களின் தனிப்பட்ட காரணங்கள் போன்றன எவ்வாறு காரணிகளாக அமைகின்றன. இவற்றுக்கு வழிகாட்டும் வகையில் எவ்வாறான சிபார்சுகளையும் பரிகாரக் கற்பித்தல் செயற்பாடுகளையும் மேற்கொள்ளலாம், மேலும் அதனை சிறப்பாகச் செயற்படுத்த எவ்வாறான உத்திகளை கையாள வேண்டும். போன்றவற்றை ஆராய்ந்து இம்மாணவர்கள் எதிர்நோக்கும் வாசிப்புத் திறன் பின்னடைவை நிவர்த்தி செய்வதற்கான விதப்புரைகளை ஆய்வு நோக்கில் தெளிவுபடுத்துவதுடன், இம்மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை துரிதப்படுத்தி கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபட உதவும் வகையில் தேவையான ஆலோசனைகளையும் தீர்வுகளையும் முன்வைக்க இத் தலைப்பை தெரிவு செய்து ஆய்வை மேற்கொள்ள தீர்மானித்துள்ளேன்.

இதன்படி ஏறாவூர் கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கனிஸ்ட இடைநிலை வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்கள் வாசிப்புத்திறன் பின்னடைந்த நிலையில் காணப்படுகின்றனர். அந்தவகையில் இங்கு 228 மாணவர்கள் வாசிப்புத்திறனில் பின்னடைந்த நிலையில் காணப்படுகின்றனர். அதனால் அம்மாணவர்கள் கற்றல் செயற்பாட்டின் போது சவால்களை எதிர்கொள்வதுடன் ஆசிரியர்களும் கற்றல் செயற்பாட்டின் போது இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். இதன்படி இது ஒரு முக்கிய பிரச்சினையாக இப்பிரதேசத்தில் காணப்படுகின்றது. (ஏறாவூர் கல்விக் கோட்ட பாடசாலைகளின் அறிக்கை)

**ஆய்வுப் பிரச்சினைக் கூற்று**

“ஏறாவூர் கல்விக் கோட்ட பாடசாலைகளின் கனிஸ்ட இடைநிலை மாணவர்கள் வாசிப்புத்திறன் பின்னடைவால் கற்றல் செயற்பாடுகளில் இடர்பாடுகளை எதிர்நோக்குவதால் கற்றலில் சிறந்த நிலையினைப் பெறுவதில் பல சவால்களை ஏற்படுத்துகின்றது’’.

அட்டவணை 1:1 வாசிப்புத்திறன் பின்னடைந்தோர் விபரம்

| இல | பாடசாலையின் பெயர் | பாடசலையின் வகை | தரம் 6 | வாசிப்புத்திறன் பின்னடைந்தோர் | தரம் 7 | வாசிப்புத்திறன் பின்னடைந்தோர் | தரம் 8 | வாசிப்புத்திறன் பின்னடைந்தோர் | தரம் 9 | வாசிப்புத்திறன் பின்னடைந்தோர் | மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | வாசிப்புத்திறன் பின்னடைந்தோர் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | **A** | 1AB | 45 | 5 | 44 | 5 | 43 | 4 | 49 | 6 | 181 | **20** |
| 2 | **B** | 1AB | 43 | 5 | 46 | 5 | 44 | 6 | 46 | 5 | 179 | **21** |
| 3 | **C** | 1AB | 40 | 6 | 42 | 4 | 41 | 6 | 45 | 6 | 168 | **22** |
| 4 | **D** | 1AB | 128 | 10 | 99 | 6 | 94 | 4 | 109 | 9 | 430 | **29** |
| 5 | **E** | 1C | 94 | 5 | 99 | 7 | 99 | 7 | 97 | 6 | 389 | **25** |
| 6 | **F** | Type l l | 118 | 6 | 97 | 7 | 103 | 6 | 94 | 8 | 412 | **27** |
| 7 | **G** | Type l l | 105 | 4 | 105 | 8 | 104 | 7 | 88 | 5 | 402 | **24** |
| 8 | **H** | Type l l | 55 | 9 | 51 | 6 | 58 | 7 | 61 | 4 | 225 | **26** |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **9** | **I** | Type l l | 15 | 4 | 15 | 4 | 20 | 5 | 15 | 4 | 65 | **13** |
| **10** | **J** | Type l l | 12 | 4 | 31 | 5 | 16 | 4 | 16 | 4 | 75 | **17** |
| **மொத்தம்** | | | **655** | **58** | **629** | **57** | **622** | **56** | **620** | **57** | **2526** | **228** |

(மூலம்: ஏறாவூர் கல்விக் கோட்ட பாடசாலைகளின் அறிக்கை)

இத்தரவின் படி ஏறாவூர் கல்விக் கோட்டத்தில் உள்ள கனிஸ்ட இடைநிலை வகுப்புக்களைக் கொண்ட 10 பாடசாலைகளிலும் கனிஸ்ட இடைநிலை வகுப்பில் கல்வி கற்கும் 2526 மாணவர்களில் 228 மாணவர்கள் வாசிப்புத்திறன் பின்னடைந்த நிலையில் காணப்படுகின்றனர். எனவே மாணவர்களின் வாசிப்புத்திறன் பின்னடைவிற்கான காரணங்களுடன் அவ்வாறான வாசிப்புத்திறன் பின்னடைவான மாணவர்கள் கற்றலில் எதிர்கொள்ளும் சவால்களையும் இனங்காண்பதற்காக ஆய்வாளனால் குறித்த பிரதேசத்தில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

***பொது நோக்கம்***

வாசிப்புத் திறன் பின்னடைவால் கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். இவ்வாறு கற்றல் செயன்முறையில் எவ்வாறான சவால்களை எதிர்நோக்குகின்றனர் என்பதைக் கண்டறிந்து அதற்கான சிபாரிசுகளை முன்வைத்தல்.

***சிறப்பு நோக்கங்கள்***

1. கனிஸ்ட இடைநிலை வகுப்பில் வாசிப்புத்திறன் பின்னடைவுள்ள மாணவர்களின் தற்போதைய நிலையை அறிதல்.
2. கனிஸ்ட இடைநிலை மாணவர்களின் வாசிப்புத் திறனின் பின்னடைவுக்கான காரணங்களை இனங்காணல்.
3. கனிஸ்ட இடைநிலை மாணவர்கள் வாசிப்புத் திறனின் பின்னடைவு நிலையினால் கற்றல் செயற்பாடுகளில் ஏற்படுத்துகின்ற சவால்களைப் பகுப்பாய்வு செய்தல்.
4. கனிஸ்ட இடைநிலை மாணவர்களின் வாசிப்புத் திறன் பின்னடைவினை நிவர்த்தி செய்வதற்குரிய ஆலோசனைகளை முன்வைத்தல்.

**இலக்கிய மீளாய்வு**

Hadi, S.Haryanto (2022) ஆகியோர் செய்த Classroom Assessment Tool using Learning Management System-based Computerized Adaptive Test in Vocational High Schools என்ற ஆய்வில் பொதுமக்களின் முன் பேசும் மற்றும் முன்வைக்கும் திறன்கள் உலகளாவிய ரீதியில் மாணவர்களிடம் இருக்க வேண்டிய சிறப்புத் திறன்களாகும். இன்று பாடசாலைகளில் வாசிக்கும் திறன் கொண்ட பல மாணவர்கள் குறைவாக இருப்பதாகக் கருதப்படுகிறது.

Monique Senechi (2009) என்பவர் செய்த Literacy language and emotional development என்ற கனடாவில் மேற்கொண்ட ஆய்வு முடிவில் பிள்ளையின் வாசிப்புத்திறனில் காணப்படும் பலவீனம் அவர்களின் சுய கருத்துக்கள், வாசிக்கும் ஆற்றல், பிள்ளை விருத்தியைப் பாதிக்கின்றது. இதனால் பிள்ளையிடம் சிறந்த அறிவையும் திறனையும் ஆரம்ப காலத்திலேயே கற்றுக்கொடுக்க வேண்டும் என கூறியுள்ளார்.

அப்துல் லத்தீப் (2007) கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து போன்ற நான்கு அடிப்படைத்திறன்களைப் பற்றியும், வாசிப்பினூடாகவே மாணவன் இன்னோரன்ன விடயங்களையும் சுயமாக இயங்கும் ஆற்றலையும் பெற்றுக்கொள்கின்றான் எனக் கூறியுள்ளார்.

கிறிஸ்ரின் டிலானி (2014) என்பவர் செய்த இடைநிலை மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் என்ற ஆய்வில் இடைநிலை வகுப்பு மாணவர்கள் என்பதால் சுயமாக வாசிக்க ஆர்வமுடையவராகக் காணப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்ற வேளையில் தாமே சுயமாக முன்வந்து வாசிக்க வெட்கப்படுகின்றனர். தம்மைக் குறித்து தாழ்வு மனப்பாங்கு காணப்படுகின்றமையும் என்னால் வாசிக்க முடியாது என்றும், திக்கு நிலையும், எல்லோருக்கும் முன்னால் உரத்து சத்தமிட்டு வாசிக்க முடியாது என்ற நிலையும் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஒருவருக்கு வாசிப்பின் முக்கியத்துவம் எடுத்துக்காட்டுவதுடன் அது வாழ்க்கையில் காலம் முழுவதும் தொடர்ந்து இடம்பெற வேண்டும் என்பதையும் வலியுறுத்தல் வேண்டும். பாடசாலைக் காலத்தில் இத்தகைய பழக்கத்தினை விதைக்கும் பொறுப்பு ஆசிரியரையே சார்கின்றது (கருணாநிதி, 2005).

ஆரம்பபிரிவு மாணவர்களின் வாசிப்புதிறன் என்பது பல்வேறு விடயங்களை கற்பதற்கு மிகவும் தேவையானது. வாசிப்புப் பழக்கமானது பாடசாலை செல்லும் காலத்திலிருந்தே விருத்தி செய்யப்படாத பிள்ளை பிற்காலத்தில் அதனை விருத்தி செய்ய முடியாத நிலையே காணப்படுவதுடன் அதற்கான சந்தர்ப்பங்களும் கிடைப்பது அரிதாகும் (கலாமணி, 2005).

தக்ஷாயினி (2020) என்பவர் செய்த கனிஸ்ட இடைநிலை மாணவர்களின் மொழித்திறன் விருத்தி ஆசிரியரின் வினைத்திறனான கற்பித்தலில் ஏற்படுத்தும் செல்வாக்கு என்ற ஆய்வு முடிவின் படி மொழித்திறனில் இடர்பாடுடைய மாணவர்களுக்கு பரிகாரச் செயற்பாடுகளும் வழிமுறைகளும் மேற்கொள்வது தொடர்பாகக் குறிப்பிடும் போது மாலை நேர வகுப்புக்கள் கற்றல் அணுகுமுறைகள் என்பன சிறப்பாக அமைய வேண்டும் ஆசிரியர்கள் மாணவர் விரும்பக் கூடிய கற்கும் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் பரிகாரச் செயற்பாடுகளின் போது மாணவர்களை பரிசு, பாராட்டுக்கள் வழங்கி ஊக்கப்படுத்துவதுடன் ஆசிரியர் மாணவரின் விருப்பு வெறுப்பிற்கேற்பவும் அவர்களின் ஆர்வத்தை தூண்டும் வகையிலும் மொழிப்பாடத்தைக் கற்பிப்பதுடன் மாணவர்களை புத்தகம், பத்திரிகை வாசித்தல், நற்சிந்தனை கூறச் செய்தல் போன்ற செயற்பாடுகளில் ஊக்குவிக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

Almutairi (2018) என்பவர் செய்த Effective Reading Strategies for Increasing the Reading Comprehension Level of Third-Grade Students with Learning Disabilities என்ற ஆய்வில் வாசிக்கும் திறனை ஏற்படுத்த வாசிக்கும் போது வாசகரை உற்சாகப்படுத்துவதும் அவசியம். ஏனெனில் இது ஒரு மன நடவடிக்கை அல்லது செயல்முறையாகும். இது எழுதுதல், பேசுதல், கேட்டல் போன்ற திறன்களுடன் இணைக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

Abdelhalt (2017) என்பவர் செய்த Develop EFL students' reading comprehension and reading engagement Effects of a proposed instructional tagy Theory and Practice in Language studies என்ற ஆய்வில் வாசிப்பு திறனை மேம்படுத்துவதற்கு சமூகச் சூழல், இலக்கிய வட்டங்கள், குழு விவாதங்கள், வாசிப்பு பயிற்சி, புத்தகக் கழகங்கள் மற்றும் ஆசிரியர் பகுப்பாய்வு போன்றன உதவுகின்றன. ஆகவே பரிகார கற்பித்தல் செயற்பாடு மேற்கொள்வது அவசியமாகும் எனக் கூறியுள்ளார்.

**ஆய்வு முறையியல்**

ஆய்வு முறையியல் சிறப்பானதாகக் காணப்படும் பட்சத்திலேயே தீர்வுகள் நம்பகத் தன்மையாக அமையும். இவ்வாய்வில் அளவு ரீதியான முறையியல்களும், பண்பு ரீதியான முறையியல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அளவு ரீதியான முறையியலினுள் எண்கள், அட்டவணைகள், வரைபடங்கள், மாணவர் தொகை, விகிதாரங்கள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் புறவயத்தன்மையாக ஆய்வு கொண்டு செல்லப்படுகிறது. ஆய்வு தொடர்பான கோட்பாடு ரீதியான உறுதிப்படுத்தலுடன் தொடர்பு கொண்டதாக பண்பு ரீதியான முறையியல் காணப்படுகின்றது.

இங்கு சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களிடத்தில் வினாக்கொத்து மூலமாகவும், பெற்றோர்களிடத்தில் நேர்காணல் மூலமாகவும், மாணவர்களுக்கான அவதானிப்புப் படிவத்தின் மூலமாகவும் பெறப்பட்ட தகவல்கள், அபிப்பிராயங்கள், எண்ணங்கள், வெளிப்பாடுகள் போன்றன அகவயமான உணர்வுகளும் ஆய்வில் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

இதன்படி அளவு ரீதியான, பண்பு ரீதியான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு அமைவதால் இவ்வாய்வில் கலப்பு ஆய்வு அணுகுமுறை வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு வினாக்கொத்து, நேர்காணல் மற்றும் அவதானம் மூலம் பெறப்பட்ட தரவுகளை அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்து அதன் மூலம் முடிவுகளைக் கண்டறிவதாக இவ்வாய்வானது அமைவதால் இது ஒரு அளவை நிலை ஆய்வாக அமைந்துள்ளது.

அளவைநிலை ஆய்வு தற்போது நடைமுறையில் உள்ள சவால்களைக் கண்டறிதலுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

***மாதிரித் தெரிவு***

அந்தவகையில் ஆய்வாளனால் ஏறாவூர் கல்விக் கோட்டமானது 4 1AB பாடசாலைகளும் ஒரு 1C பாடசாலையும் 5 வகை ll பாடசாலைகளும் 8 வகை lll பாடசாலைகளும் என மொத்தமாக 18 பாடசாலைகள் காணப்படுகின்றன. 18 பாடசாலைகளில் இருந்து ஆய்வின் நோக்கம் கருதி கனிஸ்ட இடைநிலை வகுப்புக்களைக் கொண்ட 4 1AB பாடசாலைகளும் 1 1C பாடசாலையும் 5 வகை ll பாடசாலைகளும் என 10 பாடசாலைகள் ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் 10 பாடசாலைகளில் இருந்து அதிபர் தரத்தையுடைய 12 அதிபர்கள் நோக்க மாதிரியில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 10 பாடசாலைகளிலிருந்தும் கனிஸ்ட இடைநிலை வகுப்புக் கற்பிக்கும் 108 ஆசிரியர்களிலிருந்து 2:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 54 ஆசிரியர்களும் படையாக்கப்பட்டு பின் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

10 பாடசாலைகளில் இருந்தும் கனிஸ்ட இடைநிலை வகுப்பில் கல்வி கற்கும் வாசிப்புத் திறன் பின்னடைந்த 228 மாணவர்களில் இருந்து ஆண், பெண் என்ற ரீதியில் படையாக்கப்பட்டு பின் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 2:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 105 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பெற்றோர்களின் மாதிரித் தெரிவானது ஆய்வு மாதிரியாக தெரிவு செய்யப்பட்ட 105 மாணவர்களில் 5:1 விகிதத்தில் 20 பெற்றோர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறாக இவ்வாய்வுக்காக ஆய்வாளனால் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டு உள்ளனர்.

**தரவுப் பகுப்பாய்வுகள்**

***வாசிப்புத்திறன் தொடர்பாக மாணவர்களிடமுள்ள ஆற்றல்களின் நிலை***

மாணவர்களிடம் வாசிப்பு திறனானது எந்நிலையில் காணப்படுகின்றது? என்பது பற்றி ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களிடம் வினாக்கொத்து எனும் ஆய்வுக்கருவி மூலம் வினவப்பட்ட போது 77.78% ஆன ஆசிரியர்களும் 58.33% ஆன அதிபர்களும் மாணவர்களிடம் வாசிப்புத்திறன் குறைவாகவே காணப்படுவதாக பதிலளித்தனர்.




உரு 4.1 மாணவர்களின் வாசிப்புதிறனின் நிலை தொடர்பாக ஆசிரியர்கள், அதிபர்களின் கருத்துக்கள்

உரு 4.1 இன்படி வாசிப்புத்திறன் குறைவாக இருப்பதற்கான காரணங்கள் யாதாக இருக்கலாம் என ஆசிரியரிடமும் அதிபர்களிடமும் வினவிய போது மாணவர்கள் வீட்டில் வாசிப்பதில் அதிக அக்கறை செலுத்துவதில்லை, பெற்றோர்கள் வீட்டில் வாசிப்பதில் அதிக அக்கறை செலுத்துவதில்லை, வகுப்பில் வாசிப்பதற்கு ஆர்வம் காட்டாமை, விளையாட்டு மற்றும் தொடரப் சாதனங்களை பயன்படுத்துவதிலேயே அதிக நேரத்தை மாணவர்கள் கழிக்கின்றனர் போன்ற காரணங்களைக் குறிப்பிட்டிருந்தனர்.

***வாசிப்புத் திறனின் பின்னடைவுக்கான காரணங்கள்***

பெற்றோர்களால் வீட்டில் வாசிப்புப் பயிற்சி கொடுக்கும் நிலை எவ்வாறுள்ளது? என்பது பற்றி ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களிடம் வினாக்கொத்து எனும் ஆய்வுக்கருவி மூலம் வினாவப்பட்ட போது 85.19% ஆன ஆசிரியர்களும் 66.67% ஆன அதிபர்களும் பெற்றோர் வீட்டில் வாசிப்பு பயிற்சி வழங்கும் நிலை குறைவாக உள்ளதாக பதிலளித்தனர்.




உரு 4.2 : வீட்டில் வாசிப்புப் பயிற்சி வழங்குவது தெடர்பாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் கருத்துக்கள்

உரு 4.2 : இன்படி 85.19% ஆன ஆசிரியர்களும் 66.67% ஆன அதிபர்களும் பெற்றோர் வீட்டில் வாசிப்பு பயிற்சி வழங்கும் நிலை குறைவாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளதன் படி வீட்டில் வாசிப்பு பயிற்சி வழங்குதல் குறைவான நிலையில் உள்ளதை வெளிப்படுத்துகின்றது.

மேலும் மாணவர்களின் வாசிப்புத்திறன் பின்னடைவிற்கான வேறு காரணங்களாக முன்பாடசாலைக் கல்வி முறையாகப் பெற்றுக்கொள்ளாமை, ஆரம்ப வகுப்புக்களின் கற்றல் செயற்பாடு முறையாக இடம்பெறாமை, மாணவர்களது வரவு ஒழுங்கீனம், வீடுகளில் அதிக நேர திறன்பேசி மற்றும் சமூக ஊடகங்களின் பாவனையால் வாசிப்பு மீது அக்கரையின்மை போன்றவற்றைக் குறிப்பிட்டுள்ளதுடன் 87.04% ஆன ஆசிரியர்களும் 75% ஆன அதிபர்களும் வாசிப்புத்திறன் பின்னடைவில் உடலியல் சார் காரணிகள் தாக்கம் செலுத்துவதாகவும், 90.74% ஆன ஆசிரியர்களும் 83.33% ஆன அதிபர்களும் வாசிப்புத்திறன் பின்னடைவில் உளவியல் சார் காரணிகள் தாக்கம் செலுத்துவதாகவும் குறிப்பிட்டனர்.

***வாசிப்புத்திறன் பின்னடைவால் ஏற்படும் சவால்கள்***

வாசிப்புத் திறன் பின்னடைவால் பயிற்சிக் கொப்பிகளில் வழங்கப்படும் வினாக்களுக்கு விளங்கி சரியாக விடையளிக்கும் நிலை எவ்வாறுள்ளது? என்பது பற்றி ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களிடம் வினாக்கொத்து எனும் ஆய்வுக்கருவி மூலம் வினாவப்பட்ட போது 96.30% ஆன ஆசிரியர்களும் 91.67% ஆன அதிபர்களும் குறைவு என விடையளித்தனர்.




உரு 4.3 பயிற்சிக் கொப்பிகளில் வழங்கப்படும் வினாக்களுக்கு விளங்கி சரியாக விடையளிக்கும் நிலை தொடர்பாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் கூறிய கருத்துக்கள்

உரு 4.3 : இன்படி வாசிப்புத் திறன் பின்னடைவால் பயிற்சிக் கொப்பிகளில் வழங்கப்படும் வினாக்களுக்கு விளங்கி சரியாக விடையளிக்கும் நிலை குறைவாக இருப்பதற்கான காரணங்கள் யாதாக இருக்கலாம் என ஆசிரியர்களிடமும் அதிபர்களிடமும் வினவிய போது, வினாக்களை பிழையாக வாசித்து விளங்குதல், விடையளிப்பதற்கான அறிவுறுத்தல்களை பிழையாக வாசித்து விளங்குதல், வாசித்து கற்றுக் கொண்ட விடயங்களை ஞாபகப்படுத்தி எழுத முடியாமை போன்ற காரணங்களைக் குறிப்பிட்டிருந்தனர்.

மேலும் பரீட்சைக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்தல், சுய கற்றல், மாணவர்களின் ஆளுமைத் திறன் விருத்தி, இணைப்பாட விதான செயற்பாடுகளில் முன்வந்து கலந்து கொள்ளும் நிலை, கற்பித்தலை இடர்பாடின்றி மேற்கொள்ளும் நிலை போன்றவற்றிற்கு சவாலாகக் காணப்படுவதாகவும் ஆசிரியர்களும் அதிபர்களும் குறிப்பிட்டிருந்தனர்.

***வாசிப்புத் திறன் விருத்திக்கான ஆலோசனைகளும் பரிகார செயற்பாடுகளும்***

மாணவர்களின் வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கான விசேட பயிற்சி வகுப்புக்கள் பாடசாலையில் வழங்கப்படும் நிலை எவ்வாறுள்ளது? என்பது பற்றி ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களிடம் வினாக்கொத்து எனும் ஆய்வுக்கருவி மூலம் வினவப்பட்ட போது 68.52% ஆன ஆசிரியர்களும் 58.33% ஆன அதிபர்களும் குறைவாக உள்ளதாக பதிலளித்தனர்.




உரு 4.4 வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கான விசேட பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படுவது தொடர்பாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் கூறிய கருத்துக்கள்

உரு 4.4 இன்படி மாணவர்களின் வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கான விசேட பயிற்சி வகுப்புக்கள் பாடசாலையில் வழங்கப்படும் நிலை குறைவாக இருப்பதற்கான காரணங்கள் யாதாக இருக்கலாமென ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களிடம் வினவிய போது நவீன துணைச்சாதனங்களின் பற்றாக்குறை, தொழிநுட்ப வசதிகள் குறைவு, நேரவளம் குறைவு, கணனி தொடர்பான வாண்மைத்துவப் பயிற்சிகளை பாடசாலை வழங்காமை, 40 நிமிடத்தில் கணனியைப் பயன்படுத்தி கற்பிப்பதில் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டுக்கள் போன்ற காரணங்களைக் குறிப்பிட்டிருந்தனர்.

மேலும் 81.48% ஆன ஆசிரியர்களும் 66.67% ஆன அதிபர்களும் பரிகாரச் செயற்பாடுகளில் மாணவர்களின் துலங்கல்கள் குறைவாக இருப்பதாகவும், 74.07% ஆன ஆசிரியர்களும் 66.67% ஆன அதிபர்களும் பரிகாரச் செயற்பாடுகளின் போது வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கு புதிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தும் நிலை குறைவாக இருப்பதாகவும், 72.22% ஆன ஆசிரியர்களும் 66.67% ஆன அதிபர்களும் பாடசாலையில் வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கான தனியான குழு காணப்படல் குறைவாக இருப்பதாகவும் பதிலளித்தனர்.

**முடிவுகளும் விதப்புரைகளும்**

***வாசிப்புத்திறன் தொடர்பாக மாணவர்களிடமுள்ள ஆற்றல்களின் நிலை***

*முடிவுகள்.*

1. 77.78% ஆன ஆசிரியர்களும் 58.33% ஆன அதிபர்களும் உறுதிப்படுத்தியதற்கு அமைவாக கனிஸ்ட இடைநிலை மாணவர்களிடத்தில் வாசிப்புத்திறன் குறைவாகவே காணப்பட்டது.

2. மாணவர்கள் வகுப்பறையில் ஆர்வமாக முன்வந்து வாசிக்கும் மனநிலை குறைவாகவே காணப்படுகின்றது.

3. வாசிக்கும் விடயங்களை கிரகித்து விளங்கிக் கொள்ளும் நிலை மாணவர்களிடம் குறைவாகவே காணப்படுகின்றது.

4. ஒலி உச்சரிப்புச் சொற்களின் வேறுபாடுகளுக்கு அமைய வாசிக்கும் நிலை குறைவாகவே காணப்பட்டதுடன் குறில், நெடில்களை வேறுபிரித்து வாசிக்க முடியாமை நிலை காணப்பட்டது.

*விதப்புரைகள்*

1. வாசிப்புத்திறனின் முக்கியத்துவம் தொடர்பாகவும் கற்றலுக்கு வாசிப்புத்திறனின் அவசியம் தொடர்பாகவும் மாணவர்களுக்கு ஆலோசனைகளை வழங்க பாடசாலையும் வலயக்கல்வி நிறுவனமும் இணைந்து கருத்தரங்குகள் நிகழ்வுகளை ஏற்பாடு செய்யலாம்.
2. வாசிப்புச் செயற்பாட்டிற்காக மாணவர்களைக் கவரக் கூடிய நவீன கற்றல் கற்பித்தல் உபகரணங்களை உபயோகித்தல்.
3. விடயங்களை ஞாபகப்படுத்தும் வகையில் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயற்பாடுகளை பிள்ளையின் செவிமெடுத்தல் திறனை விருத்தியாக்கும் வகையில் மாணவர்களுக்கு சொற்கள் பந்திகளைக் கொடுத்து வாசித்து கிரகிக்க வைத்தல் வேண்டும்.
4. மாணவர்கள் வாசிப்புக்கு அடிப்படையாக அமையும் எழுத்துக்களையும் ஒலி வேறுபாடுகளையும் இனங்கண்டு வாசிப்பதற்கான பயிற்சியில் தினமும் ஈடுபட வேண்டும.

***வாசிப்புத் திறனின் பின்னடைவுக்கான காரணங்கள்***

*முடிவுகள்.*

1. வகுப்பறைச் சூழல் கற்றலை முன்னெடுத்துச் செல்வதற்கு பொருத்தப்பாடு குறைவாகவே காணப்படுவதுடன் வகுப்பறையில் போதிய இட வசதிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது. மேலும் நவீன கற்பித்தல் துணைச்சாதனங்கள் இல்லாத நிலையிலும் வகுப்பறைகள் காணப்பட்டன.

2. பெற்றோர்களால் வீட்டில் வாசிப்புப் பயிற்சி கொடுக்கும் நிலை குறைவாகவே காணப்படுவதுடன் வாசிப்புத் திறனை விருத்தி செய்வது தொடர்பாக அதிபர், ஆசிரியர்களினால் கூறப்படும் ஆலோசனைகளை பெற்றோர்கள் செயற்படுத்தும் நிலை குறைவாகவுமுள்ளது.
3. மாணவர்களின் உடலியல் குறைபாடு வாசிப்புத்திறன் பின்னடைவை ஏற்படுத்துகின்றது. 47.62% மான மாணவர்கள் உடற்குறைபாடு காரணமாக வாசிப்பதில் பின்னடைகின்றனர்.
4. மாணவர்களின் உளவியல் குறைபாடு வாசிப்புத்திறன் பின்னடைவை ஏற்படுத்துகின்றது.
5. முன்பாடசாலைக் கல்வி முறையாகப் பெற்றுக் கொள்ளப்படவில்லை
6. ஆரம்ப வகுப்புக்களின் கற்றல் செயற்பாடு முறையாக இடம்பெறவில்லை
7. மாணவர்களது வரவு ஒழுங்கீனம் காணப்படுகின்றது.

*விதப்புரைகள்*

1. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு தேவையான வளங்களையும் வசதிகளும் போதுமானளவு பெற்றுக் கொள்ள அரசாங்கத்துடனும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உரிய முறையில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தல்.
2. வீட்டில் பொருத்தமான வாசிகசாலை வசதிகளை ஏற்படுததிக் கொடுப்பதுடன் பொது வாசிகசாலைக்கு பிள்ளைகளை அழைத்துச் செல்லுவதுடன் பிள்ளைகள் கற்பதற்குரிய உளரீதியான, பௌதீக ரீதியான வீட்டுச் சூழலை உருவாக்கி கொடுப்பதுடன், வீட்டில் உள்ள படித்தவர்கள் மாணவர்களின் கற்றலுக்கு உதவி செய்ய வேண்டும்.
3. தெளிவாக பார்த்து வாசிக்க முடியாத பிள்ளகைளுக்கும் கேட்டல் குறைபாடுடைய மாணவர்களை முறையாக இணங்கண்டு மருத்துவ ஆலோசனைகளை மேற்கொள்ள பெற்றோருடன் இணைந்து பாடசாலை செயற்பட வேண்டும்.
4. ஏனைய மாணவர்களைப் போன்று வாசிப்பில் பின்டைவான மாணவர்களுக்கும் தன்னாலும் வாசிக்க முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த ஆரம்பத்தில் சிறிய சிறிய சொற்களைக் கொடுத்து படிப்படியாக வாசிக்க வைத்தல்
5. ஆரம்பத்தில் படங்களோடு கூடிய சொற்களை வாசிப்பதற்கான செயற்பாடுகளை திட்டமிட்டு கொள்ளல்.
6. சொல்லட்டைகள் போன்ற கற்றல் துணைகளை முன்னரே தயாரித்து வழங்குவதற்கான ஏற்பாடுகளை திட்டமிட்டுக் கொள்ளலாம்.
7. வரவு குறைவாகவுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களின் பெற்றோர்களை அழைத்து ஆலோசனை வழங்குவதுடன் அவ்வாறான மாணவர்களை பாடசாலையில் அதிபர் மற்றும் வழிகாட்டல் ஆலோசனை சேவை மூலமும் மாணவர்களை அழைத்து அவர்களுக்கு வழிகாட்டல்களை வழங்குதல்

***வாசிப்புத்திறன் பின்னடைவால் ஏற்படும் சவால்கள்***

*முடிவுகள்.*

1. சுயமாக வாசித்து கற்பதில் சவால்களை எதிர்கொள்கின்றனர்.
2. வாசிப்புத்திறன் பின்னடைவினால் மாணவர்கள் பரீட்சையை வெற்றிகரமான முறையில் முகங்கொடுப்பதில் சவாலை எதிர்கொள்ளுகின்றனர்.
3. மாணவர்கள் பயிற்சிக் கொப்பிகளில் வழங்கப்படும் வினாக்களுக்கு விளங்கி சரியாக விடையளிக்கும் நிலை குறைவாகவே காணப்பட்டது.
4. ஆளுமைத்திறன் விருத்திக்கு வாசிப்புத்திறன் பின்னடைவு சவாலாகக் காணப்படுகின்றது.
5. வாசிப்புத்திறன் பின்னடைவு காரணமாக மாணவர்கள் இணைப்பாட விதான செயற்பாடுகளில் முன்வந்து கலந்து கொள்ளும் நிலை குறைவாக உள்ளது.
6. வாசிப்புத்திறன் பின்னடைவுள்ள மாணவர்கள் வகுப்பறையில் காணப்படும் போது கற்பித்தலை இடர்பாடின்றி மேற்கொள்ளும் நிலை குறைவாகவே காணப்படுகின்றது. 94.44% ஆன ஆசிரியர்களும் 83.33% ஆன அதிபர்களும் வாசிப்புத்திறன் பின்னடைவுள்ள மாணவர்கள் வகுப்பறையில் காணப்படும் போது கற்பித்தலை மேற்கொள்வதில் இடர்படுவதாக கூறினர்.

*விதப்புரைகள்*

1. சொற்களை உச்சரித்து வாசிக்கும் திறனை விருத்தி செய்ய சுயமாக உச்சரிப்பு பயிற்சியில் ஈடுபட வைத்தல்.
2. பரீட்சைகள் தொடர்பாக சிறந்த முறையில் வாசித்து கிரகித்து விடையளிக்க பயிற்சி அளித்தல்
3. பயிற்சிக் கொப்பிகளில் வினாக்களை வழங்கிவிட்டு மாணவர்களை வகுப்பறையில் அதனை வாசிக்க வைத்தல்
4. வகுப்பறையில் முன்வந்து வாசிக்க வைக்க கவர்ச்சியான கற்பித்தல் வழிமுறைகளைப் பயன்படுத்த வேண்டும்
5. தமிழ்த்தினப் போட்டி, தேசிய வாசிப்பு மாதமான ஒக்டோபர் மாதத்தில் வாசிப்புடன் தொடர்புடைய சிறுகதைப் போட்டிகள், கட்டுரை, கவிதை, வாசித்தல் போன்ற போட்டிகளை பாடசாலையில் ஏற்பாடு செய்து அனைத்து மாணவர்களையும் அதில் கலந்து கொள்ள தூண்டுதல் வேண்டும்.
6. வகுப்பறையில் வாசிப்புத்திறன் பின்னடைவாக உள்ள மாணவர்கள் இருக்கும் போது அவர்களுக்கு கற்றல் செயற்பாட்டில் மற்றைய மாணவர்களைப் போன்று ஈடுபட சந்தர்ப்பமளிப்பதுடன் அந்த மாணவர்களுக்கும் விளங்கக் கூடிய வகையில் அவர்களுக்கு கற்பித்தல் முறைகள் கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும்.

***வாசிப்புத் திறன் விருத்திக்கான ஆலோசனைகளும் பரிகார செயற்பாடுகளும்***

*முடிவுகள்*

1. மாணவர்களின் வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கு மேற்கொண்ட செயற்பாடுகளினால் வாசிப்புத்திறனின் முன்னேற்ற நிலை குறைவாகவே காணப்படுகின்றது. 81.48% ஆன ஆசிரியர்களும் 66.67% ஆன அதிபர்களும் மாணவர்களின் வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கு மேற்கொண்ட செயற்பாடுகளினால் வாசிப்புத்திறனின் முன்னேற்ற நிலை குறைவு என்றனர்.
2. பரிகாரச் செயற்பாடுகளின் போது வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கு புதிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தும் நிலை குறைவாகவே காணப்படுகின்றது.
3. வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கான தனியான குழு காணப்படுவது குறைவு
4. மாணவர்களின் வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கான விசேட பயிற்சி வகுப்புக்கள் பாடசாலையில் வழங்கப்படும் நிலை குறைவாகவே காணப்படுகின்றது.

*விதப்புரைகள்*

1. வாசிப்பு சார்பான போட்டி நிகழ்வுகள், அதற்கான பரிசளிப்புகள் மற்றும் ஏனைய ஊக்குவிப்புக்கள், அன்றாடம் பத்திரிகைகளில் வரும் செய்திகளை வாசிக்கச் செய்தல், அவற்றை மறுநாள் வகுப்பறையில் கேட்டல் போன்றவற்றை செய்ய வேண்டும்.
2. பல்தர, பல்மட்ட கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிபர் ஆசிரியர்களின் நேரசூசியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் திறன்பேசிகளைப் பயன்படுத்தியும் ஏனைய இணையத்தள வசதிகள் மூலமாகவும் எண்ணிமப்படுத்திய ஆவணங்களை வாசிப்பது தொடர்பாக வழிகாட்டலும் பயிற்சியுமளித்தல்.
3. மொழித்திறனில் தேர்ச்சியுடைய ஆசிரியர்களைக் கொண்டு பாடசாலையில் மாணவர்களின் வாசிப்புத்திறனை வளர்ப்பதற்குரிய குழு அமைக்கப்பட்டு அதனை அதிபர் வழிநடத்துவதோடு ஊக்கப்படுத்த வேண்டும்.
4. வாசிப்பு பயிற்சிக்கான மாலைநேர வகுப்புக்கள், கற்றல் அணுகுமுறைகள் என்பன சிறப்பாக அமைய வேண்டும். இதற்கு அதிபர், ஆசிரியர், பாடசாலைச் சமூகத்தினர் போன்றோர் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும்.
5. மாணவர்களுக்கு ஆரம்பத்திலேயே வாசிப்புத்திறன் விருத்திக்கான பிரத்தியோக செயற்றிட்டங்களுடனான பரிகார கற்பித்தல் செயற்பாடுகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த நடவடிக்கையெடுத்தல்.

**உசாத்துணைகள்**

அப்துல் லத்தீப்,எம்.ஜ. (2007). *பரிகார வாசிப்புக் கற்பித்தல் நுட்பங்கள்.* சுதைஸ் அன் பிரதர்ஸ். பாலமுனை.

அருள்மொழி,செ. (2008). *கல்வி ஆய்வு முறைகள்.* எவகிறீன் அச்சகம்.

கருணாநிதி,மா. (2008). *கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள்.* சேமமடு பொத்தகசாலை.

கிறிஸ்ரின் டிலானி,யே. (2014). *இடைநிலை மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்.* யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தக்ஷாயினி,ரா. 2020. *கனிஷ்ட இடைநிலை மாணவர்களின் மொழித்திறன் விருத்தி ஆசிரியரின் வினைத்திறனான கற்பித்தலில் ஏற்படுத்தும் செல்வாக்கு.* கிழக்குப் பல்கலைக்கழகம். தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ்.

Abdelhalt,M. (2017). *Develop EFL students' reading comprehension and reading engagement Effects of a proposed instructional tagy Theory and Practice in Language studies***.** Faculty of Education. Helwan University. https://doi.org/10.17507/tpls.0701.05

Almutairi,N.R. (2018). *Effective Reading Strategies for Increasing the Reading Comprehension Level of Third-Grade Students with Learning Disabilities.* Dissertations. 3247. Western Michigan Unuversity. https://scholarworks.wmich.edu/dissertations/3247

Garfield,D. (2007). A reading strategy for a UK university: Reviewing the literature on reading, literacy and libraries, with particular regard to the HE sector. *Journal of Information Literacy*, 2(2), 18–31. UK university https://doi.org/10.11645/2.2.60

Hadi, S.Haryanto,H., & AM, M.A. (2022). Classroom Assessment Tool using Learning Management System-based Computerized Adaptive Test in Vocational High Schools. *Journal of Educational Research and Evaluation,* 6(1), 143–155. https://doi.org/10.23887/jere.v6i1.35630

Monique seneschal (2009). *Literacy language and emotional development*. Carlenton university. Canada. https://www.child-encyclopedia.com/language-development-and-literacy/according-experts/literacy-language-and-emotional-development

# சிரேஷ்ட இடைநிலை வகுப்பு (தரம் 11) மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் திறன்வகுப்பறையின் செல்வாக்கு (மண்முனை வடக்கு கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவைநிலை ஆய்வு)

**சத்தியராசா பிரியசகி, ராஜேந்திரன் தக்ஷாயினி**
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
sagipriya2028s@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

“சிரேஷ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் திறன்வகுப்பறையின் செல்வாக்கு” எனும் தலைப்பில் மட்டக்களப்பு கல்வி வலயத்தில் உள்ள மூன்று கோட்டங்களில் ஒன்றான மண்முனை வடக்கு கல்விக் கோட்டதை அடிப்படையாகக் கொண்டு இவ்வளவைநிலை ஆய்வானது இடம்பெற்றுள்ளது. திறன் வகுப்பறைகள் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களின் கற்றல் - கற்பித்தலில் ஏற்படுத்தும் செல்வாக்கினை அறிந்து திறன் வகுப்பறையினை ஆசிரியர்கள் மாணவர்களின் கற்றல் - கற்பித்தலில் பயன்படுத்தாமைக்கான காரணங்களை ஆராய்வதூடாக கல்விச் சமூகத்திற்கான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் விதமாக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. ஆய்வினை மேற்கொள்வதற்காக மண்முனை வடக்கு கல்விக் கோட்டத்தில் உள்ள திறன் வகுப்பறைகள் கொண்ட 9 பாடசாலைகளும் 9 அதிபர்களும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும், க.பொ.த. சாதாரண தரம் கற்பிக்கும் 311 ஆசிரியர்களினை படையாக்க மாதிரியினை பயன்படுத்தி ஆண், பெண் என வகைப்படுத்தியதன் அடிப்படையில் 109 ஆசிரியர்கள் 3:1 எனும் விகிதத்திற்கமைவாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் தரம் 11 கற்கும் 1300 மாணவர்களினை வகுப்புரீதியாக ஆண், பெண்ணாக படையாக்கம் செய்து அதில் இருந்து 10 சதவீதமான 130 மாணவர்களைத் தெரிவுசெய்து வினாக்கொத்து, நேர்காணல், அவதானிப்பு மூலமாக அளவு மற்றும் பண்பு ரீதியான தரவுகள் பெறப்பட்டு ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் பண்பு, அளவு ரீதியாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் திறன் வகுப்பறையைப் பயன்படுத்தாமைக்கான காரணங்களாக முறையான பயிற்சிகள் வழங்கப்படாமை, தொழில்நுட்பத்தை மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் ஒன்றிணைக்க முடியாமை, நேரம் போதாமை போன்ற பிரதான காரணங்கள் கண்டறியப்பட்டு பெறப்பட்ட முடிவுகளுக்கு அமைய இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வுகளாக TNA, TIP போன்ற முறைகளும் விதப்புரைகளாக வழங்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *சிரேஷ்ட இடைநிலை, கற்றல், கற்பித்தல், திறன்வகுப்பறை*

## ஆய்வு அறிமுகம்

இன்றைய நவீன சமூகத்தில் நவீன கல்வித்தொழில்நுட்பம் தொடர்பான அறிவு என்பது மிகவும் முக்கியமானதொரு அறிவுப் புலமாகும். சமூகத்தின் வேகமான தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் தகவல்களின் பயன்பாடு காரணமாக உலகம் மாறிக்கொண்டுள்ளது. தற்போதைய மாணவர்கள் எதிர்காலத்தில் தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் உலகத்தில் வாழ்வார்கள் என்று கூறப்படுகின்றது (Preston,2015).

சூழலின் தேவை உணரப்பட்டதற்கமைய உருவாக்கப்பட்டதே திறன் வகுப்பறைகள் ஆகும். இதனடிப்படையில் Harsha De Silva, 2017 ஆம் ஆண்டு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆண்கள் பாடசாலையில் அனைத்து தொழில்நுட்பங்களும் உள்ளடங்கிய

திறன்வகுப்பறையினை கல்வி அமைச்சால் 2017.06.21 அன்று வெளியிடப்பட்ட 21/2017/II சுற்று நிருபத்திற்கமைய இலங்கையில் முதன்முதலாக அறிமுகப்படுத்தினார் (Sunday Observer,2017).

திறன் வகுப்பறைகள் எனும் போது ஓரிரு சாதனங்கள் மாத்திரம் கொண்டதாக அமையப் பெறவில்லை மாறாக Tab, Pc, Smart Board, Virtual Reality Kit, Audio Devices போன்றன உள்ளடங்குகின்றது. மாணவர்களின் கற்றலை விருத்தி செய்வதற்காக அனைத்து புலன்களும் தொழிற்படத்தக்க வகையில் பல கல்வித் தொழிநுட்பக்கருவிகள் மற்றும் சாதனங்கள் கற்றலில் பயன்படுத்தப்பட வேண்டும். இதற்கமைய உருவாக்கப்பட்ட திறன் வகுப்பறைகள் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் பாரிய செல்வாக்கு செலுத்துகின்றது எனலாம். ஆனால் ஆய்வுப்பிரதேசமான மண்முனை வடக்கில் உள்ள அதிகளவு ஆசிரியர்கள் திறன் வகுப்பறைகளை கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போது பயன்படுத்துவதில் இடர்படுகின்றனர். அந்தவகையில் திறன் வகுப்பறையை பயன்படுத்தும் ஆசிரியர்களை விடவும் பயன்படுத்தாத ஆசிரியர்களே அதிகம் காணப்படுகின்றனர்.

**ஆய்வுப் பிரச்சினை**

ஆய்வுப் பிரதேசமான மட்டக்களப்பு கல்வி வலயத்தில் ஒரு கோட்டமாக அமைந்துள்ள மண்முனை வடக்கில் வளங்கள் ஓரளவு முறையாகப் பகிரப்பட்ட போதும் கற்றலை மாணவர்களிடம் ஏற்படுத்துவதற்குரிய திறன் வகுப்பறைகளின் பயன்படுத்துகை போதுமானளவும், நவீன காலத்திற்கு ஏற்ற அளவிலும் கல்வியில் முழுமையாகவும் உள்நுழைக்கப்படவில்லை.

பாரம்பரிய வகுப்பறையில் பாடப்புத்தகங்கள், குறிப்பேடுகள், பேனாக்கள், கரும்பலகைகள் போன்றவை கற்பிக்கும் கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாவது காலகட்டத்திற்குரிய நவீன வகுப்பறையில் White Board, Audio –Visual-Display, Digital Board , High Level Projrctor உள்ளன (Basilaia , Kvavadze, 2020). மூன்றாவது கால கட்டத்தில், பல்வேறு தொலைதூர இடங்களில் இருந்து கற்க உதவும் வகையில் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களை (ICTS) பயன்படுத்தி நிகழ்நிலை கல்வி மேற்கொள்ளப்படும் திறன் வகுப்பறை தற்போது கல்வியில் உள்நுழைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இணைய அணுகலுடன் வெவ்வேறு மென்பொருளைப் பயன்படுத்தி ஒலிக்கோப்பு, காட்சிகோப்பு மற்றும் உரைத் தொடர்பு ஆகியவை இதில் உள்ளடங்குகின்றது (Basilaia & Kvavadze, 2020). இவ்வாறான நவீன மாற்றத்திற்குள்ளான நவீன யுகத்தில் இன்றளவும் முறையாக ஒரு தொழில்நுட்ப கற்றலை வழங்கமுடியாத ஆசிரியர் சமூகம் உருவாக்கப்பட்டமையானது பலவீனமான கல்விச் சமூகத்தின் எடுத்துக்காட்டே ஆகும்.

தற்போதைய ஆசிரியர்கள் தனிப்பட்ட கணினி மற்றும் இணையம் போன்ற தொழில்நுட்பங்களை அணுகாமல் வளர்ந்துள்ளனர். ஆனால் மாணவர்கள் இன்று கணினி தொழில்நுட்பத்தால் நிறைவுற்ற சூழலில் வளர்க்கப்படுகிறார்கள். இந்த ‘‘டிஜிட்டல் சொந்தக்காரர்கள்” (மாணவர்கள்) ஆசிரியர்களை, குறிப்பாக தொழில்நுட்ப அனுபவம்

குறைவாக உள்ள ஆசிரியர்களை மிரட்ட நேரிடும் (Johnson et al., 2016). இவ்வாறான சூழலில் புதிய நவீனத்துவத்தை கல்விச் சமூகத்திடம் அறிமுகப்படுத்தும் போது அதற்கான பயிற்சிகள் வழங்கப்படாமையானது நவீனத்துவத்தை கற்றலில் உள்நுழைப்பதில் தடையை ஏற்படுத்துகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை கூற்று**

மண்முனை வடக்கு கல்விக்கோட்டத்திற்குட்பட்ட சிரேஷ்ட இடைநிலை பிரிவு மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் திறன் வகுப்பறையின் முக்கியத்துவம் உணரப்படாமையால் பயன்பாடு குறைவாகக் காணப்படுகின்றது.

ஆய்வுப்பிரச்சினைக்கான ஆதாரங்களாக,

- ✓ Prof S.Kugamoorthy இன் 2021 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட "Teachers Perspectives On Transforming Current Teaching Learning Environment To Smart Classroom" ஆய்வில் ஆசிரியர்கள் திறன் வகுப்பறையை பயன்படுத்துவது குறைவாக உள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.
- ✓ Edmer, 2012 மேற்கொண்ட ஆய்வில் கற்றலில் ஆசிரியர்கள் தொழில்நுட்பத்தை இணைப்பது மிகக்குறைவாகக் காணப்படுகின்றது என்று குறிப்பிடப்படுகின்றது.

- கல்குடா கல்வி வலயத்துடன் ஒப்பிட்ட வகையில் மண்முனை வடக்கு கல்விக் கோட்டத்தில் உள்ள 9 திறன் வகுப்பறைகளுக்கும் முறையான வளப்பகிர்வு இடம்பெற்றுள்ளது. கல்குடா வலயக் கல்வி அலுவலகத்தின் தரவுகளின் படி 84 பாடசாலைகள் காணப்படுகின்ற இவ்வலயத்திற்கு 11 திறன் பலகைகளும், 31 திறன் தொலைக்காட்சிகளுமே வழங்கப்பட்டுள்ள வேளை மட்டக்களப்பு கல்வி வலயத்தின் ஒரு கோட்டமான மண்முனைவடக்கில் உள்ள 9 திறன் வகுப்பறைகள் கொண்ட பாடசாலைகளுக்கு 19 திறன் பலகைகளும் 15 திறன் தொலைக்காட்சிகளும் வழங்கப்பட்டுள்ளன. இவை மண்முனை வடக்கின் வள உள்ளடக்கத்திற்கான ஆதாரமாக அமைகின்றது
- 9 பாடசாலைகளிலும் பெறப்பட்ட தரவுகளுக்கு அமைய திறன் வகுப்பறைகளின் பயன்பாடு மாணவர்களின் கற்றல்-கற்பித்தல் செயன்முறையில் இணைக்கும் ஆசிரியர்களின் வீதம் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. இதற்கு ஆதாரமாக பின்வரும் வரைபு அமையப் பெறுகின்றது.




உரு 1.1

**மண்முனை வடக்கில் திறன் வகுப்பறைகள் பயன்படுத்தும் ஆசிரியர்கள் பற்றிய தரவு**

**ஆய்வின் பிரதான நோக்கம்**

மண்முனைவடக்கு கல்விக்கோட்டத்திற்குட்பட்ட திறன் வகுப்பறை வினைத்திறனான கற்றலில் ஏற்படுத்தும் செல்வாக்கினை அறிந்து ஆசிரியர்கள் திறன் வகுப்பறையை பயன்படுத்தாமைக்கான காரணங்களை ஆராய்வதினூடாக ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் முன்வைத்தல்

**சிறப்பு குறிக்கோள்கள்**

1. திறன் வகுப்பறையில் இடம்பெறும் சிரேஷ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை இனங்காணல்
2. சிரேஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் கற்றல்-கற்பித்தலினை திறன் வகுப்பறை ஊடாக மேற்கொள்ளும் போது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கிடைக்கும் நன்மைகளை கண்டறிதல்
3. சிரேஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் கற்றல்-கற்பித்தல் செயன்முறையில் திறன் வகுப்பறையை ஆசிரியர்கள் பயன்படுத்தாமைக்கான காரணங்களை ஆராய்தல்.
4. சிரேஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் கற்றல் - கற்பித்தலில் திறன் வகுப்பறையின் பயன்பாட்டினை அதிகரிக்கச் செய்வதற்கான ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் முன்வைத்தல்.

**ஆய்வு வினாக்கள்**

1. திறன் வகுப்பறையில் இடம்பெறும் சிரேஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் யாவை?
2. சிரேஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் கற்றல்-கற்பித்தலினை திறன் வகுப்பறை ஊடாக மேற்கொள்ளும் போது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கிடைக்கும் நன்மைகள் யாவை?
3. சிரேஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் கற்றல்-கற்பித்தல் செயற்முறையில் திறன் வகுப்பறையை ஆசிரியர்கள் பயன்படுத்தாமைக்கான காரணங்களை யாவை?
4. சிரேஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் கற்றல் - கற்பித்தலில் திறன் வகுப்பறையின் பயன்பாட்டினை அதிகரிக்கச் செய்வதற்கான ஆலோசனைகளும் பரிந்துரைகளும் யாவை?

**இலக்கிய மீளாய்வு**

“S.M.A.R.T" வகுப்பறை என்பது காண்பிக்கக்கூடியதும், நிர்வகிக்கக்கூடியதும், அணுகக்கூடியதும், நிகழ்நேர ஊடாடுதலை கொண்டதுமான வகுப்பறைச் சூழலைக் குறிக்கிறது (Huang, 2019). மேலும் கவனமாகக் கட்டமைக்கப்பட்ட டிஜிட்டல் கருவிகள் மற்றும் வளங்களைக் கொண்ட அமைப்பைக் குறிக்கிறது. பல்வேறு சமூக நிலைகளில் மாணவர் தொடர்பை ஊக்குவித்தல், நிகழ்நேரத்தில் நேருக்கு நேர் தொடர்புகளை மேம்படுத்துதல் மற்றும் முழு வகுப்பினரின் கூட்டு அறிவைப் பதிவு செய்தல் போன்ற செயற்பாட்டிற்கான ஓர் உயிர்ப்பான இடமாக திறன் வகுப்பறை கருதப்படுகின்றது (Lui & Slotta, 2014). திறன் வகுப்பறையானது பல உயர்தர தொழில்நுட்பங்களின் கலவையாக வரையறுக்கப்படுவதுடன் கல்வியாளர்கள் மற்றும் மாணவர்களின் ஒட்டுமொத்த அனுபவத்தை மேம்படுத்த உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது (Micrea, 2021).

திறன் வகுப்பறையில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் போது தேவையான திறன்கள் ஆசிரியர்களுக்கு காணப்படவில்லை. இதனடிப்படையில் இன்றைய ஆசிரியர்கள் திறன் வகுப்பறையை மிகக் குறைவாகப் பயன்படுத்துகின்றார்கள் (Hughes, 2005; Rakes & Casey, 2002).

**திறன் வகுப்பறை தொடர்பாக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பற்றிய விபரம்**

| பெயர் | ஆண்டு | ஆய்வு பிரதேசம் | தலைப்பு | மாதிரி |
|---|---|---|---|---|
| Thivanka Mailewa Et Al | 2020 | 13 Smart Class Room Schools in Sri Lanka | The Impact Of Smart Class Room on The Academic Success of Sri Lankan Government Schools | 13 Schools, 200 Students |
| S.Kugamoorthy | 2021 | Colombo Disrict | Teachers Perspectives On Transforming Current Teaching Learning Environment to Smart Classroom | 85 Teachers |

திறன் வகுப்பறைகளின் செயல்திறனைத் தீர்மானிப்பதில் ஆசிரியர்களின் மனப்பான்மை மற்றும் நம்பிக்கைகள் முக்கியமான காரணிகளாகும். பொதுவாக கல்வித் தொழில்நுட்பம் மற்றும் கற்பித்தல் இரண்டையும் பற்றிய மனப்பான்மையும் நம்பிக்கையும் இறுதியில் ஆசிரியர்கள் தொழில்நுட்பத்தை எவ்வாறு செயற்படுத்துகிறார்கள் என்பதைப் பாதிக்கின்றது (Ertmer et al, 2012).

திறன் வகுப்பறையில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் போது தேவையான திறன்கள் ஆசிரியர்களுக்கு காணப்படவில்லை. இதனடிப்படையில் இன்றைய ஆசிரியர்கள் திறன் வகுப்பறையை மிகக் குறைவாகப் பயன்படுத்துகின்றார்கள் (Hughes, 2005; Rakes & Casey, 2002). National Education Association கொள்கை பரிந்துரைகளில் ஒன்றாக தொழில்நுட்பத்தில் தொழில்முறை மேம்பாட்டை விரிவுபடுத்துவது முக்கியப்படுத்தப்பட்டுள்ளது (NEA,2008).

**ஆய்வு முறையியல்**

திறன்வகுப்பறையின் கையாள்கையை அதிகரிக்க வேண்டும் அதன் முக்கியத்துவம் கல்விச் சமூகத்திற்கு உணர்த்தப்பட வேண்டும் எனும் பிரச்சினைக் கூற்றின் அடிப்படையில் இவ்வாய்வு அமையப் பெற்றுள்ளது.

ஆசிரியர்களிற்கும், மாணவர்களிற்கும் வினாக்கொத்து வழங்கப்பட்டதுடன் அதிபர்களிற்கு நேர்காணல் மேற்கொள்ளப்பட்டு ஆய்வாளனின் ஆய்விற்கு தேவையான பல தரவுகள் பெறப்பட்டன. மேலும் மாணவர்களை அவதானிப்பதன் மூலம் பண்பு ரீதியான தரவுகள் பெறப்பட்டன.

அளவு ரீதியான தரவுகள் வினாக்கொத்து, நேர்காணல் மூலமாகவும் பண்பு ரீதியான தரவுகள் அவதானிப்பு மூலமும் பெறப்பட்டதற்கமைய அளவு, ரீதியான பண்பு ரீதியான தரவுகள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு பகுப்பாய்வு இடம் பெற்றது. பெறப்பட்ட தரவுகள் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டு அட்டவணைகள், வரைபுகள் மூலம் தெளிவாக காட்சிப்படுத்தப்பட்டன.

***மாதிரித்தெரிவு***

ஆய்வாளனின் ஆய்விற்கமைய ஆசிரியர்கள், மாணவர்கள், அதிபர்கள் ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்டனர். திறன் வகுப்பறைகள் கொண்ட பாடசாலைகள் 9 நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டன. தரம் 11 கற்பிக்கும் 331 ஆசிரியர்களினை ஆண், பெண்ணாக படையாக்கம் செய்து 109 ஆசிரியர்கள் 3:1 எனும் விகிதத்திற்கு அமைய ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்டனர். மாணவர்களை பொறுத்தமட்டில் ஆய்வுப்பிரதேசத்தில் 1300 மாணவர்கள் தரம் 11 கற்கும் நிலையில் இம்மொத்த மாணவர்களினையும் ஆய்விற்காக உட்படுத்த முடியாததால் படையாக்க முறை பயன்படுத்தப்பட்டது. அத்துடன் அனைத்து மாணவர்களையும் ஆண், பெண்ணாக படையாக்கம் செய்ய முடியாத நிலை காணப்பட்டது. காரணம் ஒரு பாடசாலை மாத்திரமே கலவன் பாடசாலையாகையால் வகுப்படிப்படையில் படையாக்கம் செய்யப்பட்டு ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் 10 சதவீதமான 130 மணவர்கள்

தெரிவு செய்யப்பட்டனர். மேலும் அதிபர்கள் நோக்க மாதிரியின் அடிப்படையில் 9 பாடசாலை அதிபர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் திறன் வகுப்பறை தொடர்பான பல முக்கிய தரவுகளை சேகரிக்க ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வினாக்கொத்து வழங்கப்பட்டதுடன் திறன் வகுப்பறை மற்றும் சாதாரண வகுப்பறை கற்றல் செயற்பாடுகள் எவ்வாறு காணப்படுகின்றது என்பதனை அறியும் விதமாக அவதானிப்பு படிவமும் பயன்படுத்தப்பட்டது. அத்துடன் முகாமைத்துவத்தின் திறன் வகுப்பறை தொடர்பான செயற்பாட்டு ஒழுங்கமைப்பு எவ்வாறு காணப்படுகின்றது என்பதனை அறியும் விதமாக அதிபர்கள் நேர்காணலிற்கு உட்படுத்தப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. இங்கு தரவுப் பகுப்பாய்வு முறை பண்பு ரீதியாகவும், அளவு ரீதியானதுமான கலப்பு முறை சார்ந்ததாக அமைகின்றது. வினாக்கொத்தின் மூலம் பெறப்படும் தகவல்கள் விகிதாசார மற்றும் பண்பறி முறையின் மூலம் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்படுகின்றன.

## தரவுப்பகுப்பாய்வு

***திறன் வகுப்பறையில் சிரேஸ்ட இடைநிலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள்***

திறன் வகுப்பறையிலும் சாதாரண வகுப்பறையிலும் இடம்பெறும் கற்றல் ஆசிரியர் சார்பானதா? அல்லது மாணவர் சார்பானதா? என்பதை அறியும் விதமாக வழங்கப்பட்ட வினாவிற்கு ஆசிரியர்கள் சார்பாகவும் மாணவர்கள் சார்பாகவும் பெறப்பட்ட தரவு அட்டவணை 4.1 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.1: திறன் வகுப்பறை மற்றும் சாதாரண வகுப்பறையில் இடம்பெறும் கற்றல் அணுகுமுறை பற்றிய விபரம்**

| கற்றல் அணுகுமுறை | திறன் வகுப்பறை | | | | சாதாரண வகுப்பறை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆசிரியர் | | மாணவர் | | ஆசிரியர் | | மாணவர் | |
| | எ.கை | % | எ.கை | % | எ.கை | % | எ.கை | % |
| ஆசிரியர் மையக் கற்றல் | 2 | 2% | 7 | 5% | 71 | 65% | 91 | 61% |
| மாணவர் மையக் கற்றல் | 107 | 98% | 123 | 95% | 38 | 35% | 39 | 39% |

98 சதவீத ஆசிரியர்கள் திறன்வகுப்பறையில் மாணவர்மையக்கற்றலும் சாதாரண வகுப்பறையில் 65 சதவீத ஆசிரியர்களால் ஆசிரியர் மையக்கற்றல் இடம்பெறுவதாக குறிப்பிட்டுள்னர். இதனையடுத்து 2 சதவீதமான ஆசிரியர்கள் திறன்வகுப்பறையில் ஆசிரியர் மையக்கற்றல் இடம்பெறுவதாகவும் 35 சதவீதமான ஆசிரியர்கள் சாதாரண வகுப்பறையில் மாணவர் மையக்கற்றல் இடம்பெறுவதாகவும் தரவு வழங்கியுள்ளனர்.

மாணவர்கள் சார்பாக பெறப்பட்ட தரவுகளை அடுத்து, 95 சதவீத மாணவர்கள் திறன்வகுப்பறையில் மாணவர்மையக்கற்றலும் சாதாரண வகுப்பறையில் 70 சதவீத மாணவர்கள் ஆசிரியர் மையக்கற்றல் இடம்பெறுவதாக குறிப்பிட்டுள்ளனர். இதனையடுத்து 5 சதவீதமான மாணவர்கள் திறன்வகுப்பறையில் ஆசிரியர் மையக்கற்றல் இடம்பெறுவதாகவும் 30 சதவீதமான மாணவர்கள் சாதாரண வகுப்பறையில் மாணவர் மையக்கற்றல் இடம்பெறுவதாகவும் தரவு வழங்கியுள்ளனர்.

## சிரோஸ் இடைநிலை மாணவர்களின் கற்றல்-கற்பித்தலினை திறன் வகுப்பறை ஊடாக மேற்கொள்ளும் போது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கிடைக்கும் நன்மைகள்

**அட்டவணை 4.2: கபொ.த சாதாரணதர மாணவர்களின் கற்றல்-கற்பித்தலினை திறன் வகுப்பறை ஊடாக மேற்கொள்ளும் போது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கிடைக்கும் நன்மைகள்**

| மாணவர்கள் அடையும் நன்மைகள் | ஆசிரியர்கள் | மாணவர்கள் | ஆசிரியர்கள் அடையும் நன்மைகள் | ஆசிரியர்கள் |
|---|---|---|---|---|
| ஈடுபாட்டுடனான கற்றலுக்கு வழியமைக்கின்றது | 99% | 98% | கற்பித்தலில் இலகு தன்மை | 95% |
| | 108 பேர் | 127 பேர் | | 104 பேர் |
| கற்கும் விடயத்தில் புரிதலை அதிகப்படுத்துகின்றது | 90% | 85% | நேர முகாமைத்துவம் மிக்க கற்பித்தலுக்கு வழிவகுக்கின்றது | 94% |
| | 98 பேர் | 117 பேர் | | 103 பேர் |
| கற்ற விடயங்களை நினைவுபடுத்தும் ஆற்றல் வளர்ச்சியடைகின்றது | 95% | 91% | கற்பித்தலில் தொழில்நுட்பம் பயன்படுத்துவதை ஊக்குவிக்கின்றது | 100% |
| | 104 பேர் | 118 பேர் | | 109பேர் |
| எதிர்கால வேலையுலகிற்கு தேவையான மென் திறன் வளர்ச்சியடைகின்றது | 88% | 88% | கற்பித்தலில் பயன்படுத்தக் கூடிய புதிய மென்பொருள் தொடர்பான அறிவு கிடைக்கப்பெறுதல் | 90% |
| | 96 பேர் | 114 பேர் | | 98 பேர் |
| ஒப்பீட்டளவில் மாணவர்களின் கற்றல் அடைவு உயர்வடைகின்றது | 90% | 90% | இற்றைப்படுத்தப்பட்ட தரவு, தகவல்களை ஆசிரியர்களால் வழங்க முடிதல் | 95% |
| | 98 பேர் | 117 பேர் | | 104 பேர் |

### ஆசிரியர்கள் அடையும் நன்மைகள்

திறன் வகுப்பறையில் கற்பிக்கும் போது ஆசிரியர்களுக்கு கிடைக்கும் நன்மைகளில் ஒன்றான கற்பித்தலில் இலகு தன்மை ஏற்படல் எனும் கருத்தினை 95 சதவீதமான ஆசிரியர்களும் நேர முகாமைத்துவம் மிக்க கற்பித்தலுக்கு வழிவகுக்கின்றது என 94 சதவீதமான ஆசிரியர்களும் குறிப்பிட்டுள்ள அதே நேரம் கற்பித்தலில் தொழில்நுட்பம் பயன்படுத்துவதை ஊக்குவிக்கின்றது என 100 சதவீத ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் திறன் வகுப்பறையின் மூலம் ஆசிரியர்கள் பெறும் நன்மைகளில் முக்கியமானதாக கருதப்படும்

கற்பித்தலில் பயன்படுத்தக் கூடிய புதிய மென்பொருள் தொடர்பான அறிவு கிடைக்கப்பெறுகின்றது என்பதனை 98 சதவீதமான ஆசிரியர்களும், இறுதியாக புதிய தரவு, தகவல்களை கற்பித்தலில் இணைத்துக் கொள்வதன் மூலம் இற்றைப்படுத்தப்பட்ட கற்பித்தலை ஆசிரியர்களால் வழங்க முடிகின்றது எனும் நன்மையினை 95 சதவீதமான ஆசிரியர்களும் குறிப்பிடுகின்றனர்.

***மாணவர்கள் அடையும் நன்மைகள்***

ஈடுபாட்டுடனான கற்றலுக்கு வழியமைக்கின்றது என்பதனை 99 சதவீத ஆசிரியர்களும் 98 சதவீத மாணவர்களும் குறிப்பிட்டுள்ளனர். மேலும் கற்கும் விடயத்தில் புரிதலை அதிகப்படுத்துகின்றது எனும் எனும் நன்மையினை 90 சதவீத ஆசிரியர்களும் 85 சதவீத மாணவர்களும் அடையாளப்படுத்துகின்றனர். திறன் வகுப்பறையில் கிடைக்கும் நன்மைகளில் ஒன்றான கற்ற விடயங்களை நினைவுபடுத்தும் ஆற்றல் வளர்ச்சியடைகின்றது என்பதனை 95 சதவீத ஆசிரியர்களும் 91 சதவீத மாணவர்களும் குறிப்பிடுகின்றனர். அத்துடன் எதிர்கால வேலையுலகிற்கு தேவையான மென் திறன் வகுப்பறையில் கற்றலை மேற்கொள்ளும் போது வளர்ச்சியடைகின்றது என்பதற்கு 88 சதவீத ஆசிரியர்களும் மாணவர்களும் தெரிவித்துள்ளனர். ஒப்பீட்டளவில் மாணவர்களின் கற்றல் அடைவு உயர்வடைகின்றது என்பதனை ஆசிரியர் மற்றும் மாணவர்கள் பெருமளவு ஏற்றுக்கொண்டுள்ளனர். இது 90 சதவீத ஆசிரிய மற்றும் மாணவ கருத்தாக அமையப்படுகின்றது.

***ஆசிரியர்கள் திறன் வகுப்பறையை பயன்படுத்தாமைக்கான காரணங்கள்***

ஆசிரியர்கள் திறன் வகுப்பறையை பயன்படுத்தாமைக்கான காரணங்களினை அறியும் பொருட்டு திறன் வகுப்பறை பயன்படுத்தும் ஆசிரியர்களிடமும் பயன்படுத்தாத ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் பெறப்பட்ட தரவுகளுக்கு அமைவாக 40 சதவீதமான ஆசிரியர்களும்

35 சதவீதமான மாணவர்களும் போதிய பயிற்சியின்மை எனும் காரணத்தை தெரிவிக்கின்றனர். திறன் வகுப்பறை பயன்படுத்துவதற்குரிய நேர அட்டவணை முறையாக ஒதுக்கப்படவில்லை என 5 சதவீதமான ஆசிரியர்களும் மாணவர்களும் குறிப்பிடுகின்றனர். மேலும் 12 சதவீதமான ஆசிரியர்களும் 38 சதவீத மாணவர்களும் திறன் வகுப்பறையினை பயன்படுத்துவதில் பய உணர்வு என்றும் அதிகரித்த மாணவர் தொகை என்பதால் திறன் வகுப்பறையில் மாணவர்களின் கற்றலை மேற்கொள்ள முடியாதுள்ளது எனவும் குறிப்பிடுகின்றனர். அத்துடன் 10 சதவீத ஆசிரியர்களாலும் 22 சதவீத மாணவர்களாலும் தொழில்நுட்ப கருவிகளை பயன்படுத்துவதில் ஆசிரியர்கள் இடர்படுகின்றர் எனும் காரணம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 33 சதவீத ஆசிரியர்கள் 40 நிமிடங்கள் போதாமை, திறன் வகுப்பறை பயன்படுத்துவதில் நம்பிக்கை இன்மை, சாதாரண வகுப்பறையில் கற்றலை மேற்கொள்வது இலகுவாக உள்ளது போன்ற காரணங்களை தெரிவிக்கின்றனர்.

**அட்டவணை 4.3: திறன் வகுப்பறையை ஆசிரியர்கள் மாணவர்களின் கற்றலில் பயன்படுத்தாமைக்கான காரணங்கள் பற்றிய விபரம்**

| திறன் வகுப்பறையை பயன்படுத்தாமைக்கான காரணங்கள் | ஆசிரியர்கள் | | மாணவர்கள் | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் |
| போதிய பயிற்சி இன்மை | 44 | 40% | 46 | 35% |
| திறன் வகுப்பறையை பயன்படுத்துவதற்கான நேர அட்டவணை முறையாக ஒதுக்கப்படாமை | 5 | 5% | 6 | 5% |
| பயன்படுத்துவதில் பய உணர்வு | 4 | 4% | 20 | 15% |
| அதிகரித்த மாணவர் தொகை | 9 | 8% | 29 | 23% |
| 40 நிமிடங்கள் போதாமை | 3 | 3% | 0 | 0% |
| திறன் வகுப்பறை பயன்படுத்துவதில் நம்பிக்கை இன்மை | 25 | 23% | 0 | 0% |
| சாதாரண வகுப்பறையில் கற்றலை மேற்கொள்வது இலகுவாக உள்ளது | 8 | 7% | 0 | 0% |
| தற்கால தொழிநுட்பங்களை கையாள்வது சிரமம் | 11 | 10% | 29 | 22% |

**முடிவுகள்**

1. 75 சதவீதமான ஆசிரியர்களதும் 100 சதவீதமான மாணவர்களதும் விருப்பிற்குரிய வகுப்பறைச் சூழல் திறன்வகுப்பறை ஆகும். அந்தவகையில் அனுபவம் மூலமான கற்றல் இடம்பெறல், நவீன சாதனங்கள் பயன்படுத்துவதற்கான பொருத்தமான இடமாக காணப்படல் போன்ற காரணங்களால் பெரும்பான்மை ஆசிரியர்களும் மாணவர்களும் திறன் வகுப்பறையை விரும்புகின்றனர்.
2. 95 சதவீத ஆசிரியர்களினதும் 98 சதவீத மாணவர்களினதும் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு திறன் வகுப்பறையில் மாணவர் மையக் கற்றல் இடம்பெறுவதை அறிய முடிவதுடன் சாதாரண வகுப்பறையில் ஆசிரியர் மையக் கற்றல் இடம்பெறுகின்றது என்பதற்கு 65 சதவீதமான ஆசிரியர்களினதும் 70 சதவீதமான மாணவர்களினதும் கருத்துக்கள் ஆதாரமாக அமைகின்றது.
3. 78 சதவீதமான மாணவர்கள் மாணவர் மையக்கற்றலையும் 22 சதவீதமான மாணவர்கள் ஆசிரியர் மையக்கற்றலையும் விரும்புகின்றனர்.

**விதப்புரைகள்**

1. திறன் வகுப்பறையில் மாணவர்களின் கற்றலில் பயன்படுத்தும் சாதனங்களை விட பல புதிய சாதனங்கள், கருவிகள் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றை

மாணவர்களின் கற்றலில் பயன்படுத்தும் போது மேலும் வினைத்திறனான கற்றலை உருவாக்க முடியும். உ-ம் Feedback Assessment Tools

2. பாடசாலைகளில் திறன் வகுப்பறையின் கற்றல் செயற்பாடுகளை மேற்பார்வை செய்ய தனி முகாமைத்துவக்குழு ஒன்றினை அமைத்தல். இதற்கு பொறுப்பாக உயர்தரத்தில் Technology Stream இல் கல்வி கற்று பல்கலைக்கழம் சென்ற பட்டதாரிகளை உரிய தகுதியுடன் நியமிக்கலாம். இதன் மூலம் திறன் வகுப்பறையின் கற்றல் செயற்பாடு மேலும் வினைத்திறனுடையதாக மாற்றமடையும்.

**முடிவுகள்**

***ஆசிரியர்கள் பெறுகின்ற நன்மைகள்***

1. திறன் வகுப்பறையில் கற்பித்தலை மேற்கொள்ளும் போது 95 சதவீதம் கற்பித்தல் இலகுவாக உள்ளது.
2. திறன் வகுப்பறையின் மூலம் கிடைக்கும் நன்மைகளில் மிக முக்கியமானது நேரமுகாமைத்துவமிக்க கற்பித்தலுக்கு வழிவகுக்கின்றது என்பதாகும். இதற்கு 94 சதவீதமான ஆசிரியர்களின் கருத்து ஆதாரமாகவுள்ளது.
3. திறன் வகுப்பறையானது கற்பித்தலில் தொழில்நுட்பம் பயன்படுத்துவதை ஊக்குவிக்கின்றது. இதற்கு திறன் வகுப்பறையில் கற்பிக்கும் 100 சதவீதமான ஆசிரியர்களின் கருத்து எடுத்துக்காட்டாக அமைகின்றது.

**விதப்புரைகள்**

1. ஆசிரியர்கள் திறன் வகுப்றையின் மூலம் பெறும் நன்மைகளை அதிகரிக்க EMIS மென்பொருளின் பயன்பாட்டை கற்பித்தலில் பயன்படுத்தல் சிறந்ததாக அமையும். இதன் மூலம் சிறந்த திட்டமிடலுடனான வகுப்பறைக்கற்பித்தலுக்கு வழிவகுக்க முடியும். இடைநிலைக்கல்வியில் EMIS சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தும் போது சிறந்த கல்விச் செயன்முறை சார் விளைவை ஏற்படுத்தக் கூடியதாக காணப்படும் என Kasmiri et al., 2021 இல் குறிப்பிடுகின்றார்.
2. திறன் வகுப்பறையில் ஜப்பான் நாட்டின் வகுப்பறையில் உள்ள Lesson Study Method இனை அறிமுகப்படுத்துவதன் மூலம் ஆசிரியர்கள் தம்முடைய கற்பித்தலை மேலும் செம்மைப்படுத்துவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்படும். ஆசிரியர்கள் தமக்குள் கலந்துரையாடி கற்பித்தலை மேற்கொள்ளும் போது பல புதிய விடயங்கள் கற்பித்தலில் இணைக்கப்படும்.
3. திறன் வகுப்பறை பயன்படுத்துவது தொடர்பான ஆசிரியர் வழிகாட்டி வழங்க வேண்டும். உதாரணமாக Louisiana Tech பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு "CIT Center For Instructional Technology" ஆல் "Smart Class Room Training Manual" எனும் புத்தகம் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்றது. இதில் எவ்வாறு தொழில்நுட்ப சாதனங்களை பயன்படுத்த வேண்டும் என்பது தொடர்பான பூரண விளக்கம் வழங்கபட்டுள்ளன (www.latech.edu).

***மாணவர்கள் கற்றலில் பெறுகின்ற நன்மைகள்***

1. 98 சதவீதமான மாணவர்கள் ஈடுபாட்டுடன் கற்றலை மேற்கொள்கின்றனர்
2. 85 சதவீதமான மாணவர்கள் சிறந்த புரிதலுடன் கற்கின்றனர்
3. 88 சதவீதம் எதிர்காலத்திற்கு தேவையான மென்திறன் வளர்ச்சி இடம்பெறுகின்றது.

**விதப்புரைகள்**

1. "Deloitte Access Economics" ஆல் நடத்தப்பட்ட ஒரு ஆய்வு, 2030 ஆம் ஆண்டுக்குள் அனைத்து வேலைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு மென் திறன்கள் தீவிரமான தொழில்களுக்குக் காரணமாக இருக்கும் என்று கணித்துள்ளது (Johny, 2019). இதனடிப்படையில் திறன் வகுப்பறையின் மூலமான நன்மைகளில் ஒன்றான மாணவர்களின் மென்திறன் அதிகப்படுத்தப்படுகின்றது என்பதற்கமைய அதனை மேலும் வலுப்படுத்தும் செயன்முறைகள் மூலம் சிறந்த விளைவினை மாணவ சமூகத்திடம் இருந்து பெறமுடியும். அந்தவகையில் திறன் வகுப்பறையில் பின்வரும் செயற்பாடுகள் மூலம் இத்திறன் சார் விருத்தியை ஏற்படுத்த முடியும்
   - பரிசோதனை ரீதியான கற்றலை மாணவர்களுக்கு தொழில்நுட்ப உதவியுடன் வழங்கல்.
   - Audios இனை கிரகிக்க செய்து அதன் பின் வழங்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்கும் படி செய்தல்.

1. புதிய வகை கற்றல் சார் மென்பொருள்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் மேலும் மாணவர்களின் கற்றல் ஈடுபாடு அதிகரிக்கச் செய்யப்படும் உ-ம்
   - Bloges- வலைப்பதிவு என்பது தனிப்பயனாக்கப்பட்ட சூழலில் முறைசாரா கற்றலை மேம்படுத்துவதற்கான சாதகமான தொழில்நுட்ப அடிப்படையிலான கருவியாக விளங்குகின்றது (Jimoyiannis 2012). வலைப்பதிவுகள் மூலம் கற்றலை மேம்படுத்த முடிவதுடன், நட்பையும் வளர்த்துக்கொள்ள முடிகின்றது (Marin, 2020).
   - Digital Badges - தேர்ச்சியை நிரூபிக்கவும் அல்லது ஒரு குறிப்பிட்ட செயல்திறன் அளவுகோலை அடையவும் டிஜிட்டல் பேட்ஜ் என்பது நிறைவுக்கான குறியீடாக உள்ளது (Gibson, 2015; Newby, 2020).

2. சுய கற்றலை மேற்கொள்வதற்கான வழிவகைகளை அமைத்துக்கொடுத்தல்

   உ-ம் கற்றலுக்குத் தேவையான தகவல்களை இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்குரிய வலைத்தளங்களை மாணவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவதன் மூலம் மாணவர்களின் சுயகற்றலிற்கு வழிகாட்ட முடிதல்.

   விஞ்ஞானம் சார்ந்த தகவல்களை
   - www.nature.com
   - www.scientist.com

   போன்ற வலைத்தளங்களில் இருந்து பெறமுடியும் என வழிகாட்டல். மேலும் நுலக வலைத்தளங்களை மாணவர்களுக்கு வழங்கி எவ்வாறு தேவையான புத்தகங்களை

பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை வழிப்படுத்துவதன் மூலம் மாணவர்கள் தமக்கு தேவையான நூலக வலைப்பக்கங்களில் ஊடுருவி தமக்கு தேவையான தகவலை பெற்றுக்கொள்வர். நூலக வலைப்பக்கங்களாக

- www.noolagam.com
- www.diglib.natlib.lk
- www.tamildigital.library.lk
- www.openlibrary.org

இதன் மூலம் ஆசிரியர் இல்லாவிட்டாலும் கற்றலை சுயமாக கற்பதற்குரிய ஊக்கலை மாணவர்கள் பெறக்கூடியதாகவிருக்கும்

1. 40 சதவீதமான ஆசிரியர்களுக்கு போதிய பயிற்சி இல்லை
2. 10 சதவீத ஆசிரியர்களால் தற்கால தொழில்நுட்பங்களை கையாள முடியவில்லை
3. 7 சதவீதமான ஆசிரியர்களிற்கு 40 நிமிட பாடவேளையினுள் திறன் வகுப்பறையில் கற்பிக்க முடியாமல் உள்ளது.

**விதப்புரைகள்**

1. தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு குறித்த ஆசிரியர்களின் பார்வைகள் தங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டவை அல்ல. மாணவர்கள் வகுப்பறையில் தொழில்நுட்பத்தை கையாளுதலை ஊக்குவிப்பதில் ஆசிரியர் பயிற்சி முக்கியமானது (merkly & Schmidt,2001). இதனடிப்படையில்
   - பாடசாலை மட்டத்தில் தேர்ச்சி பெற்ற தொழில்நுட்ப குழுவினால் திறன் வகுப்பறையின் தொழில்நுட்ப கையாள்கையை பற்றிய பயிற்சியை வழங்கல்.
   - online course மூலமும் ஆசிரியர் குறித்த பயிற்சிகளை பெற முடியும்.
2. “Chellenge Of Effective Technology Integration Into Teaching And Learning” எனும் ஆய்வில் Mz.Romorola அவர்களால் 2013 ஆம் ஆண்டு பின்வரும் விதப்புரைகள் வழங்கப்படுகின்றன அவை, தொழில்நுட்ப ஒருங்கிணைப்புக்கான புதிய அணுகுமுறையான TIP மாதிரியை பரிந்துரைக்கின்றார்
   - T-Test
   - I-Improve
   - P-Promote

இதன்படி ஆசிரியர்கள் தங்கள் பாடங்களில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முயற்சிக்கும் முன் அதற்கேற்ப திட்டமிட வேண்டும்.

3. TNA பகுப்பாய்வு மூலம் ஆசிரியர்களின் தொழில்நுட்பம் சார் தேவை என்ன? என்பதை அறிந்து அதக்கேற்றவகையிலான பயிற்சிகளை முகாமைத்துவம் வழங்க வேண்டும். Swist,

2002 இல் பின்வரும் காரணங்களின் அடிப்படையில் TNA பகுப்பாய்வு இடம்பெறுகின்றது என்று குறிப்பிடுகின்றார்.

1. குறித்த பணியிற்கு என்ன பயிற்சி தேவை என்பதை தீர்மானிப்பதற்கு,
2. செயல்திறனை அதிகரிக்க
3. இதன் படி TNA பகுப்பாய்வு மேற்கொள்வதற்கான

ஆசிரியர்களுக்கு தேவையான பயிற்சிகளையும், வழிகாட்டுதலையும் பின்வரும் வகையில் ஆசிரியர்களால் பெற்றுக்கொள்ள முடியும்

- தொழில்வாண்மை விருத்திச் செயற்பாடுகள் மூலமான செயற்றிட்டங்களின் மூலமான வழிப்படுப்படுத்தல் ஊடாக ஆசிரியர்களின் தொழில்நுட்பம் சார் அறிவை விருத்திசெய்யக்கூடிய பயிற்சிகளை பெற்றுக் கொள்வர்.
- பயிற்சிகள் பெறக்கூடிய இணைத்தள முகவரிகள் மூலமான ஊடுருவல்
  - www.mentoring.org
  - www.teachingchannel.org

(SBPTD வழிகாட்டி, 2019)

- பாடசாலையில் உள்ள தொழில்நுட்ப குழுக்கள் மூலமாக பயிற்சி மற்றும் வழிகாட்டலை பெறமுடியும்.
- தொழில்நுட்ப கருவிகளை வழங்கும் தனியார் அமைப்புக்களின் செயலமர்வு மூலம் பெறலாம்.
- பயிற்சிபெற்ற கல்வி அமைப்புக்கள் மூலம் பெறலாம்.

கற்பித்தல் செயன்முறையில் திறன்வகுப்பறையின் பயன்பாடு: சிரேஸ்ட இடைநிலை வகுப்புகள் பற்றிய அவதானிப்பு எனும் ஆய்வாளனின் ஆய்வில் திறன்வகுப்பறைகள் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட போதும் அதன் பயன்படுத்துகை மாணவர்களின் கற்றல் கற்பித்தலில் எவ்வாறு காணப்படுகின்றது என்பதை மையமாகக் கொண்ட வகையில் அமையப்பெற்றுள்ளது. சாதாரண வகுப்பறையுடன் ஒப்பிட்ட வகையில் திறன் வகுப்பறையில் கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளும் போது மாணவர்களால் சிறந்த கற்றல்-கற்பித்தலை உருவாக்க முடியும் எனும் இறுதி முடிவினை பெறும் வகையில் ஆய்வாளனின் ஆய்வு அமையப்பெற்றது. இதற்கமைய திறன் வகுப்பறையினை மேலும் சிறந்த முறையில் மாணவர்களின் கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தும் போது மாணாக்களின் கற்றல்-கற்பித்தலில் பாரிய மாற்றத்தையும் மேற்கொள்வதற்கான விதப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**உசாத்துணைகள்**


Al Faqi, A. I. (2011). *Blended Learning: EducationalDesign, Multi-media,Creative Thinking.* Dar Athaqafa for publishing and distribution.

Bas, G. & Beyhan, O. (2019). Revisiting the effect of teaching of learning strategies on academic achievement: A meta-analysis of the findings. *International Journal of Research in Education and Science (IJRES),* 5(1), 70-87 Retrieved https://files.eric.ed.gov/fulltext/EJ1198049.pdf

Edwards, M. (2012). *Our Digital Conversion.* Education Digest, 78(1), 4-9. Effects On Occupational Well-Being. Teaching And Teacher Education, IAJER Publish

Gibson (2015); D.Newby. (2020), *Digital Badges In Education.* Education And Information Technologies. Sage Published https://www.researchgate.net/journal/International-Journal- of-Scientific-Technology-Research-2277-8616?_tp=eyJjb250ZXh0Ijp7ImZpcnN0UGFnZSI6InByb2ZpbGUiLCJwYWdlIjoicHVib GljYXRpb24ifX0

Huang, R., (2019). *The Concept And Characters Of Smart Classroom.* Open Education Research. Stylus Publishing, 18(2), 22–27

Johnson,s. Matthew,A., Russel S. (2016). *Challenges And Solution When Using Technologies In The Classroom,*Arizona State University.

Kugamoorthy,s. (2021). *Teachers Perspectives On Transforming Current Teaching Learning Environment To Smart Classroom.*

Martin,.D (2020). *Enhancing Student Motivation And Engagement: The Effects Of A Multidimensional Intervention.* Contemporary Educational Psychology, IAJER Publish

Micrea,F (2021). *Design Of Smart Class Room Syste Based On Internet Of The Technology And Smart Class Room*. publish Dalian Neusoft University

National Education Association. (2008), *The Ongoing Challenge Of Access.* pulished by JISRT: NEA Policy And Practice Department. Retrieved From Http://www.Nea.Org/ Assets/Docs/Pb19_Technology08.Pdf.

Preston, J. P., Wiebe, S., Gabriel, M., Mcauley, A., Campbell, B., & Macdonald, R. (2015). *Benefits And Challenges Of Technology In High Schools: A Voice From Educational.* Retrieved http://hdl.handle.net/11599/3302

Thivanka,M.,Sajeevkanth,K. (2020). The Impact Of Smart Classroom On The Academic Success of SrI Lankan Government School Students. *International Journal of Scientific & Technology Research*, 9 (12), 323-331

# INCLUSIVE EDUCATION IN THE BATTICALOA DISTRICT: ANALYZING PRACTICES, STRENGTHS, AND CHALLENGES

**K. Ketheeswaran**
Department of Special Needs Education,
Faculty of Education,
The Open University of Sri Lanka.
Email: kketh@ou.ac.lk

**F. M. Nawastheen**
Department of Secondary & Tertiary Education,
Faculty of Education,
The Open University of Sri Lanka.
Email: fmnaw@ou.ac.lk

## Abstract

This study explored the strengths and challenges of implementing inclusive education (IE) in government schools in the Batticaloa district of Sri Lanka. A qualitative approach involved multiple case studies of five government schools. Participants included five Assistant Directors of Special Education/In-Service Advisors of Special Education (ADs/ISAsSE), five principals, five class teachers, ten subject teachers, and five parents of students with special educational needs (SENs). Data were collected through interviews, focus group discussions, and observations. Positive perceptions were expressed about IE practices, including information provision, student interactions, principal and teacher competencies, connections with health services and parents, teaching methods, curriculum, assessment, and student achievements. Additionally, collaborative efforts with stakeholders, peer and teacher-student interactions, principal and teacher competencies, teaching methods, curriculum adaptation, assessment, and student accomplishments strengthened IE practices. However, challenges were also identified, such as the absence of school-level IE policies, safe and accessible physical infrastructure, implementation of Individualized Educational Plans (IEPs), and resource allocation. These challenges contributed to negative perceptions of IE practices among stakeholders. The study recommends that school-level IE policies be developed to facilitate IE practices, enhance school accessibility for children with SENs, and improve resource allocation for IE practices in government schools in the Batticaloa district.

***Key Words:*** *Inclusive Education, Special Educational Needs, Regular Classroom, Individualized Educational Plans, Inclusive Education*

## Introduction

Inclusive education (IE) is the world's most popular approach to education. It aims to educate all children, including those with Special Educational Needs (SENs). IE is a child's right, not a privilege (Mag et al. 2017). Countries with advanced education systems have developed IE systems, but developing nations like Sri Lanka are still in the process of establishing them (UNICEF, 2013). Children with SENs can succeed academically, socially, and emotionally in

inclusive classrooms. They can interact with other children without SENs and receive education in government schools. However, there are gaps in the IE practice and facilities for children with disabilities in the Sri Lankan education system. Therefore, it is significant to investigate the strengths and challenges of IE practices in government schools.

Moreover, Batticaloa district in Sri Lanka was affected by a 30-year civil war and natural disasters such as tsunamis, cyclones, and floods. These factors have resulted in high poverty and malnutrition rates, and many children with SENs live in the district. Even though government schools in the Batticaloa district practice IE, research findings and the researcher's experience suggest that students with SENs still face challenges in getting a proper education. Therefore, this study investigates the strengths and challenges of IE practices in government schools in the Batticaloa district.

IE is a global movement that aims to provide education for all children, regardless of their abilities or disabilities. IE is especially important in Sri Lanka, where 8.7% of the population has a disability. Sri Lanka has a long history of promoting IE. In 1943, the government introduced universal compulsory education for all students, including those with special educational needs. Since then, the government has implemented several policies and programs to support IE. Despite these efforts, there are still challenges to implementing IE in Sri Lanka. One challenge is the need for more resources. Many schools do not have the necessary infrastructure or support staff to meet the needs of students with disabilities. Another challenge is the negative attitudes of some parents and teachers towards IE. Despite the challenges, there are some successful IE programs in Sri Lanka. These programs have shown that students with disabilities can thrive in mainstream classrooms with the necessary support.

**Challenges of Inclusive Education in Sri Lanka**

Despite significant educational achievements, such as universal primary education and a high literacy rate, Sri Lanka faces many challenges in implementing IE. Inadequate teacher training and support, Limited resources, Negative attitudes towards IE and Lack of opportunity for Children with disabilities in rural areas are some of the challenges in the country. The most significant challenge to IE in Sri Lanka is the need for an appropriate IE model. These challenges could disrupt the practice of IE in the country and prevent children with special educational needs (SEN) from receiving the quality education they deserve.

## Aim, Objectives, and Research Questions of the Study

### *Aim of the Study*

The study aims to investigate the strengths and challenges of implementing Inclusive Education (IE) in government schools in the Batticaloa district.

### *Objectives of the Study*

The following objectives are established to achieve the aim of the study.

- To identify the strengths of IE practices in government schools in the Batticaloa district
- To find out challenges are faced in implementing IE practices in government schools in the Batticaloa district

### *Research Questions of the Study*

The following research questions are established to achieve the purpose of the study.

- What are the strengths of IE practices in government schools in the Batticaloa district?
- What challenges are faced in implementing IE practices in government schools in the Batticaloa district?

## Methodology

The study employed multiple case study research design with a qualitative approach. The participants were purposefully selected, including five government schools. The participant groups consisted of five Assistant Directors of Special Education/In-Service Advisors of Special Education (ADs/ISAsSE), five principals, five class teachers, ten subject teachers, and five parents of students with SENs. The study utilized ten themes and categories which is shown in the Table1, proposed by Raw'o (2010) to structure the analysis. Data collection was conducted through interviews and observation, and a narrative analysis technique was employed for data analysis. To enhance the trustworthiness of this study, the researcher implemented several measures to ensure the data's accuracy, credibility, and dependability. In addition to ensuring methodological rigour, the researcher of this study upheld ethical principles. In pursuing ethical research, informed consent was obtained from all participants, and their identities were protected through pseudonymization.

**Table 1. Themes and Categories Considered Regarding the IE Practices**

| Themes | Categories |
|---|---|
| The provision of information for IE practices | • Communication between the school and stakeholders for IE practices<br>• The collaboration with stakeholders for IE practices |
| Physical features for IE practices, | • Safe environment for students with SENs<br>• Accessible environments for Students with SENs |
| Policies for IE practices | • Policies for IE Practices |
| The individualised education plan | • IEP of students with SENs<br>• IEP team for practicing IEP |
| Student interactions in IE practices | • Peer Interaction in IE Practices<br>• Student-teacher interaction in IE practices |
| Staffing and personnel (competencies) for IE practices | • Principals in IE practices<br>• Teachers in IE practices |
| External links for IE practices | • Links for funding and Resources in IE practices<br>• Links with Health Services in IE Practices<br>• Links for Support Services for IE Practices<br>• Link with parents IE Practices |
| Assessment of achievement in IE practices | • Academic achievement of students with SENs<br>• Social development of students with SENs |
| The curriculum in IE practices | • Curricular adaptations for students with SENs |
| Teaching strategies in IE practices. | • Strategies in teaching-learning for students with SENs |

Source: (Winter and Raw'O, 2010)

**Findings of the study**

According to the analysis of data, the findings are discussed under each research question below:

***RQ1: What are the strengths of IE practices in government schools in the Batticaloa district?***

Analysis of data revealed the following strengths related to the IE practices in the government schools in the district:

- The practices of communication and collaboration with stakeholders
- The peer interaction and teacher-student interaction
- Staffing and Personnel (competencies) for IE Practices:
- Links for the Health Services in IE Practices
- Link with Parents in IE Practices
- Assessment of Achievement in IE Practices
- Provisions for Teaching Strategies in IE Practices

**The practices of communication and collaboration with stakeholders**: All five schools in the Batticaloa district demonstrate effective communication and collaboration practices among stakeholders for inclusive education (IE). For example, Arul (ISA SE) in case A highlighted the presence of an administrative structure supporting communication for IE practices.

*"...I have an administrative structure for IE, and it supports communicate for IE practices…"*

Likewise, Janu (class teacher) from school case C described conducting meetings with subject teachers and collaborating with various stakeholders, including the principal, teachers, peers, and parents, to enhance IE.

*"...conducts meetings with the subject teachers…" "...I work with the principal, teachers, peers, parents, etc. for IE…"* Similarly, Valli (subject teacher) in school case E emphasized the importance of collaborative efforts in supporting IE practices. *"…collaborative works support to the IE practices…".*

Additionally, observation data from school case B revealed that teachers actively engage with stakeholders, particularly in the case of Balu, as they are well-informed about his SENs and take steps to include him. Teachers communicate with the stakeholders about Balu because they are aware of the SENs of Balu and take measures to include him. This aligns with the Adams et al. (2018) study, emphasizing the significance of communicative and collaborative stakeholder interactions for successful, inclusive classrooms.

**Peer interaction and teacher-student interaction**: All five selected schools in the Batticaloa district actively practice peer interaction and teacher-student interaction in their IE approaches, underscoring their commitment to fostering student interaction. For example, Kumari (ISA SE) in case C emphasized the role of peer interaction in improving the academic achievement of students with SENs. Kumar (principal) from school case B stressed the significance of teacher-student interaction within IE practices. Shaanthi (class teacher) in the same (case B) school described integrating Balu (student) with regular students to enhance peer interaction. In contrast, Valli (subject teacher) from school case E highlighted Amal's (student) abilities to support peer interaction.

Moreover, observations from school case A revealed that students without SEN actively support Balu in the classroom and the school environment, engaging in social activities and providing assistance when needed. This collective effort by students without SENs underscores the inclusive nature of these schools. Studies by Efthymiou and Kington (2017) and Rasmitadila and Boeriswati (2017) further affirm the positive impact of teacher and peer interactions on the educational and social outcomes of students with special educational needs. These findings align closely with the results of this study, highlighting the potential of such student interaction practices in enhancing the implementation of IE in government schools in the Batticaloa district.

**Staffing and Personnel (competencies) for IE Practices**: Inclusive school principals, class teachers, and subject teachers in inclusive classes demonstrate competencies related to students with SEN. For example, Abdullah (ISA SE) from case D organizes teacher workshops focused on IE practices in their educational zone. Kamalan (principal) in school case E actively works to enhance teachers' competencies in teaching students with SEN. Janu (class teacher) in school case C expressed her readiness to teach students with SEN after learning about IE. From school case E, Kala (subject teacher) derives personal satisfaction from Amal's development.

Observation data analysis in school case C revealed a notably positive teacher attitude toward Kokila. Kusuma and Ramadevi (2013) pointed out that confident and skilled teachers positively impact community awareness in IE programs. Similarly, Black and Simon (2014) emphasized that inclusive practice should be seen as a collective effort requiring leadership and alignment of developmental supports to sustain organizational learning and commitment to inclusive education. These studies highlight the critical role of principal and teacher

competencies in enhancing the impact of IE practices on students with SENs. The findings of this study support and align with these existing insights, offering potential support for IE practices in government schools in the Batticaloa district.

**Links for the Health Services in IE Practices:** Figure 1 depicts the measures taken by stakeholders in all five (5) cases regarding external links for health services in IE practices. According to Figure 1, feedback was collected from all stakeholders, including five ADs/ISAs SE, five inclusive school principals, four inclusive class teachers, eight subject teachers in inclusive classes, and four parents of students with SENs, regarding measures taken for IE practices through health service links in their classrooms and schools. Notably, one inclusive class teacher, two subject teachers from inclusive classes, and a parent of a student with SENs responded negatively to the effectiveness of these health service links.




Figure 1: Links for the Health Services in IE Practices

For instance, in case E, Paarvathi (ISA SE) mentioned the provision of health services for students with SEN at the district level by the Teaching Hospital of Batticaloa. In contrast, Badurudeen (principal) in school case D confirmed that students with SEN receive health services from the same hospital.

Observation data analysis in school case A revealed that Maala's parents maintain contact with the school and possess a diagnosis report for Maala. The Teaching Hospital of Batticaloa has implemented various initiatives to provide health services for students with SENs, thus enhancing the links for health services in IE practices within government schools in the Batticaloa district. A study by Ioannidi and Gogaki (2020) highlighted how collaboration with health service providers could support the learning of students with SENs in IE practices. These findings align with the present study's findings, suggesting that these health service links contribute to improved learning outcomes for students with SENs in government schools in the Batticaloa district.

**Link with Parents in IE Practices:** Figure 2 shows the measures of stakeholders in all five (5) cases under the category of external links with parents of students with SENs in IE practices.




Figure 2: Link with Parents in IE Practices

The interview with four school principals, four class teachers, eight subject teachers in inclusive classrooms, and four parents of students with SENs found that most parents of students with SENs have a link with the school community to educate their children. One principal, Kumar, supported it, said, *"...parents are working with us to improve the IE practices in this school…"*. Research has shown that parental involvement significantly correlates with the academic achievement of students with SENs in IE. The findings of this study support this research, highlighting the importance of parental involvement as a valuable metric for evaluating the efficacy of IE practices in government schools in the Batticaloa District. However, there is one school principal, one class teacher, two subject teachers of the inclusive classes, and one parent of a student with SENs who negatively responded about the links with parents of students with SENs in the IE practices.

**Assessment of Achievement in IE Practices:** Figure 3 shows stakeholders' responses in cases of A-E under the theme of Assessment of Achievement in IE Practices.




Figure 3: Responses of Stakeholders on Assessment of Achievement in IE Practices

Analysis of information obtained from interviews with the participants found that most parents of students with SENs have a link with the school community to educate their children. One principal, Kumar, supported it, said, *"...parents are working with us to improve the IE practices in this school…"*. Research has shown that parental involvement significantly correlates with the academic achievement of students with SENs in IE. The findings of this study support this research, highlighting the importance of parental involvement as a valuable metric for evaluating the efficacy of IE practices in government schools in the Batticaloa District. However, there is one school principal, one class teacher, two subject teachers of the inclusive classes, and one parent of a student with SENs who negatively responded about the links with parents of students with SENs in the IE practices.

**Provisions for Teaching Strategies in IE Practices:** Figure 4 illustrates stakeholders' positive and negative responses in cases of A to E under the theme of teaching strategies in IE Practices.




Figure 4: Provisions for Teaching Strategies in IE Practices

All five ADs/ISAs SE, all five school principals, all five class teachers, eight of the subject teachers in inclusive classes, and four parents of students with SENs provided positive responses regarding the measures implemented to enhance teaching strategies for students with SENs in the IE schools. They provided examples of teaching-learning strategies, such as conducting workshops for teachers teaching learning strategies, using various strategies to improve teaching-learning, making groups and motivating peers to support students with SENs, and going closer to students with SENs and speaking loudly in the classroom. These findings suggest a commitment to providing effective teaching-learning strategies for students with SENs in the IE schools of the Batticaloa district. However, there are some concerns about the teaching strategies used. Research has shown that effective teaching-learning strategies for students with SENs in IE schools are characterized by the efficient use of time, fostering positive relationships with students, delivering constructive feedback, achieving a high student success rate, and offering support for all students.

***RQ2: What challenges are faced in implementing IE practices in government schools in the Batticaloa district?***

Analysis of data revealed the following strengths related to the IE practices in the government schools in the districts:

- Physical Features for IE Practices
- Policies for Inclusive Education Practices
- Individual Education Plan
- External Links for IE Practices

**Physical Features for IE Practices:** The lack of a safe and accessible environment for students with SENs hinders the implementation of IE practices in government schools in the

Batticaloa District. This finding is supported by previous research, which has shown that most "inclusive schools" have subpar physical environments that are not accessible to students with physical and other sensory-motor disabilities. This challenge can be addressed by giving adequate attention to the accessibility of school environments and ensuring that all students have access to a safe and supportive learning environment. The following statements support this finding:

- *"…there are challenges in developing a safe environment for students with SEN…" (*Kumari, ISA SE from case C)
- *"…students with SEN face challenges in getting access here…*" (Kamalan, principal from school case E),
- *"…there are not any physical arrangements for students with SEN in this school…"* (Janu, class teacher school case C)
- *"…lack of accessible environment for students with SEN in the school…".* (Anula, a parent from

**Policies for Inclusive Education Practices:** One of the obstacles to improving IE practices in government schools in the Batticaloa District is the absence of an inclusive school policy for students with special education needs. For example, in case D, Abdullah (ISA SE) stated, *"...We do not have a specific inclusive policy, and it hinders IE in schools..."* The principal in school case B mentioned, *"...the lack of IE policies for IE practices hinders IE practices,"* and Sarasvathi (class teacher) in school case E stated, *"...the absence of IE policies for IE practices hampers IE practices."* Similar findings suggest a potential correlation between these obstacles and insufficient policy procedures concerning implementing IE in Kenyan schools (Ireri et al., 2020). According to Ahmad and May (2018), IE must grapple with policy implementation issues, creating an unfavourable climate for practice. The results of this study align with the points mentioned above, indicating that the lack of inclusive policies may impede the use of IE in government schools in the Batticaloa district.

**Individual Education Plan (IEP):** The absence of IEPs for students with SENs and the lack of an IEP team for their preparation can impede progress in IE within government schools in Batticaloa. For example, Arul (ISA SE) in case A emphasized how the absence of IEPs might hinder students' progress. Kamalan (principal), in school case E, noted that the IEP team is not functioning for students with SEN. In contrast, Shaanthi (class teacher) from case B

mentioned that absence of IEP of Balu hampers his inclusive education. Komathi (parent), in case A, expressed her unfamiliarity with the IEP team.

Additionally, observations in school case A revealed the unavailability of Maala's IEP in the school and a lack of evidence of the IEP team's presence within the schools and the educational zone. A study by Timothy and Agbenyega (2018) underscored the significance of stakeholders, IEPs, and continuous professional learning for successful IEP implementation in Australian schools.

**External Links for IE Practices:** Figure 5 illustrates stakeholders' positive and negative responses in cases of A-E under the theme of External Links for IE practices.




Figure - 5: Responses of Stakeholders on External Links for IE practices

According to Figure 5, all participants, including ADs/ISAs SE, school principals, class teachers, subject teachers in inclusive classes, and parents of students with SENs, expressed negative views about the availability of funding, resources, and support services in the context of Inclusive Education practices. Additionally, three ADs/ISAs SE had negative views concerning connections with parents for IE practices involving students with SEN in their respective educational zones. For instance, an AD in case A highlighted the lack of funding and resources for IE practices, while Babu in case B mentioned that although NGOs support students with SEN, it is not a long-term solution, and Social Service Officers' support does not cover all students with SEN in the zone. In the case of D, Abdullah mentioned that community beliefs and myths hinder the IE of students with SEN. The absence of adequate funding, resources, and support services poses significant challenges to enhancing Inclusive Education practices. For example, Komathi, a parent from case A, stated that they do not receive financial assistance or resources for their child Maala's IE practices.

In contrast, Rathai, a parent from case B, mentioned that the lack of support services hinders Balu's education. A study by Ahmad and May (2018) highlighted the various issues, such as resource shortages, fund allocation, support services, and related services, that act as obstacles to IE practices in India. The absence of external links for funding, resources, and support services can hinder the implementation of IE practices in government schools in the Batticaloa District. Moreover, ADs/ISAs SE have noted a lack of connections between parents and the school community in the context of IE practices. It is essential to acknowledge that parental involvement has been linked to positive outcomes for learners with exceptional needs in inclusive settings, as evidenced by Afolabi, Mukhopadhyay, and Nenty's (2013) findings. The disparities between the present study's findings and the research mentioned above pose a fundamental challenge to the outcomes of IE practices in government schools in the Batticaloa District. Nevertheless, two ADs/ISAs SE have expressed the importance of establishing connections with parents of students with SEN to enhance IE practices. This perspective can promote collaboration between educational administration and parents regarding IE practices for students with SENs.

**Conclusion**

The study highlighted strengths and challenges in implementing Inclusive Education practices in government schools in the Batticaloa District. Notably, effective communication and collaboration practices, the competence of key stakeholders, support from the Teaching Hospital of Batticaloa, and active parental involvement were identified as strengths that contribute to improving IE practices. Additionally, curriculum practices and teaching strategies played a crucial role in advancing IE practices within the schools. However, challenges such as the absence of an inclusive school policy, the lack of a safe and accessible environment for students with SENs, the unavailability of IEPs and IEP teams, and the inadequate provision of funding, resources, and support services hindered the enhancement of IE practices. The limited connection between parents and ADs/ISAs SE presented another obstacle to the success of IE practices. To address these challenges, the study offers a set of recommendations at both the planning and stakeholder levels. These recommendations include the development of a national IE policy, the implementation of Universal Design for safe environments, the establishment of district-level IEP teams, professional development, and awareness programs, as well as funding allocation and support services. Stakeholders, particularly inclusive school principals and teachers, are encouraged to create a clear vision and mission, develop school-level policies, and foster community and parental involvement.

Adopting Universal Design for Teaching is also recommended to ensure that teaching strategies are inclusive and accessible to all students. The study underscores the importance of addressing these challenges and implementing these recommendations to improve the quality of Inclusive Education practices in government schools throughout the Batticaloa District, ultimately fostering a more inclusive and equitable educational environment for students with SENs.

## Recommendations

Based on the analysis of information from the participants of the study, the researchers propose the following recommendations:

***Recommendations for Planning*:**

- Develop National-Level IE Policy: The Ministry of Education should formulate a comprehensive IE policy at the national level. This policy should provide clear guidelines regarding the responsibilities of stakeholders, professional development, and the allocation of funding for government schools across the country.
- Universal Design for Safe Environment: The Provincial/Zonal Education Department should implement Universal Design principles to create safe and accessible environments in inclusive schools throughout the Batticaloa District. It will help ensure that all students, including those with SENs, can fully participate in their educational experiences.
- Establish District-Level IEP Teams: To address the absence of IEPs for students with SENs, the Provincial/Zonal Education Department should establish district-level IEP teams responsible for developing tailored plans for students in need.
- Professional Development and Awareness Programs: The Provincial/Zonal Education Department should organize professional development programs for ADs/ISAs SE, principals, and teachers to enhance their knowledge and skills in IE practices. Additionally, community-level awareness programs should be conducted to educate community members about the importance of IE.
- Funding Allocation and Support Services: The Provincial/Zonal Education Department must establish a transparent mechanism for allocating funds and resources for IE practices in government schools. It is also crucial to ensure the availability of support services for students with SENs within the context of IE practices.

***Recommendations for Stakeholders*:**

- School Vision and Mission: Inclusive school principals should develop clear vision and mission statements that prioritize and promote IE practices within their schools. These statements can guide the school's approach to inclusion.
- School-Level IE Policy: Inclusive school principals should create a school-level policy that enhances IE practices within their institutions. This policy should outline specific strategies and initiatives to support inclusion.
- School Enrolment Policy and Code of Behavior: Inclusive school principals should establish a comprehensive school enrolment policy and codes of behaviour that consider the unique needs of students with SENs, ensuring that they receive the support and accommodations necessary to reach their full potential.
- Community and Parental Involvement: Inclusive school principals should actively work to improve community and parental involvement in IE practices. Building a strong connection between the school and parents and engaging the community is crucial for developing an inclusive school culture.
- Universal Design for Teaching: Inclusive class teachers and subject teachers in inclusive classrooms should adopt Universal Design for Teaching principles. This approach ensures that their teaching methods are accessible and effective for all students, including those with SENs.
- Alignment with Best Practices: The statutes of Inclusive Education practices in all five schools in the Batticaloa District should be reviewed and modified to align fully with best practices in Inclusive Education, particularly focusing on the ten themes explored in this study.

**References**

Adams, D., Harris, A., & Jones, M. S. (2018). Teacher-parent collaboration for an inclusive classroom: Success for every child. *MOJES: Malaysian Online Journal of Educational Sciences*, *4*(3), 58-72.

Afolabi, O., Mukhopadhyay, S., & Nenty, H. J. (2013). Implementation of inclusive education: Do parents really matter? *Specijalna edukacija i rehabilitacija*, *12*(3).

Ahmad, N. A., & May, Y. S. (2018). Challenges in preparing teachers for inclusive. education and its impact to students with learning abilities. *DEVELOPMENT*, *7*(3).

Black, W. R., & Simon, M. D. (2014). Leadership for all students: Planning for more

inclusive school practices. *International Journal of Educational Leadership Preparation*, *9*(2), 153-172.

Efthymiou, E., & Kington, A. (2017). The development of inclusive learning relationships in mainstream settings: A multimodal perspective. *Cogent Education*, *4*(1), 1304015.

Ioannidi, V., & Gogaki, I. (2020). Inclusive education and health care: collaborative educational activities. *European Journal of Public Health Studies*, *2*(2).

Ireri, B. R., King'endo, M., Wangila, E., & Thuranira, S. (2020). Policy Strategies for Effective Implementation of Inclusive Education in Kenya. *International Journal of Educational Administration and Policy Studies*, *12*(1), 28-42.

Kusuma, A., & Ramadevi, K. (2013). Inclusive education-teacher competencies. *Shanlax International Journal of Education 3*(1), 24-40.

Mag, A. G., Sinfield, S., & Burns, T. (2017). The benefits of inclusive education: new challenges for university teachers. In *MATEC Web of Conferences* (Vol. 121, p. 12011). EDP Sciences.

Rasmitadila, R., Samsudin, A., & Prasetyo, T. (2019). Teacher-Students' instructional interactions analysis (tsiia): a case study in inclusive English classrooms in Indonesia. *The International Journal of Interdisciplinary Educational Studies*.

Timothy, S., & Agbenyega, J. S. (2018). Inclusive School Leaders' Perceptions on the Implementation of Individual Education Plans. *International Journal of Whole Schooling*, *14*(1), 1-30.

UNICEF. (2013). Out-of-school children in Sri Lanka: Country study. *Colombo: UNICEF*.

United Nations in Sri Lanka. (2017). United Nations Sustainable Development Framework 2018 – 2022; *publication of the United Nations System in Sri Lanka. United Nations Office of the UN Resident Coordinator 202-204, Bauddhaloka Mawatha, Colombo 7, Sri Lanka.*

Winter, E., & O'Raw, P. (2010). Literature review of the principles and practices relating to inclusive education for children with special educational needs. *National Council for Special Education. Trim, Northern Ireland*.

# Virtual Education and Equity

# நிகழ்நிலைக் கல்வி மலையக பாடசாலைகளில் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களில் ஏற்படுத்தியுள்ள ஒழுக்கவியல் ரீதியான தாக்கங்கள்: கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிட்டப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**ராஜா பிரியதர்ஷனி, முனியாண்டி ரவி**
தத்துவவியல் மற்றும் விழுமிய கற்கைகள் துறை,
கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*priyadarsani432@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்**

இன்றைய நவீன யுகத்தில் ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு உலகில் ஏற்பட்ட தொழிநுட்பப் புரட்சியும் மிக முக்கிய காரணமாகவுள்ளது. இன்று எம்மால் மேற்கொள்ளப்படுகின்ற அனேகமான செயற்பாடுகளில் தொழிநுட்ப சாதனங்களின் பங்களிப்பு இன்றியமையாததாக காணப்படுகின்றது. இதனடிப்படையில் சமீபகாலங்களில் உலகையே ஆட்டிப்படைத்த covid-19 பெருந்தொற்றினால் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்நிலைக் கல்வியின் மாணவர்கள் தங்களது கற்றல் செயற்பாடுகளை தொலைத்தொடர்பு சாதனங்களின் வாயிலாக முன்னெடுத்துச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் விளைவினால் மாணவர்கள் நாகரிகம் எனும் அநாகரிக மாயைக்குள் தெரிந்தும் தெரியாமலும் விழுந்து, ஒழுக்க விழுமியங்களை புறந்தள்ளிவிடுவதனால் பல்வேறு வகையிலும் ஒழுக்க ரீதியான சவால்களை எதிர்நோக்கியுள்ளனர். அந்தவகையில் நிகழ்நிலைக் கல்வியினூடாக மாணவர்களிடத்தில் அதிகரித்த சமூக வலைத்தளப் பாவனை அவர்களை எவ்வாறான ஒழுக்க மீறுகைகளுக்கு ஆளாக்கியுள்ளது என்பதை கண்டறிவதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது ஆய்வு பிரதேசமாக கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிட்ட கல்வி வலயத்திற்குட்பட்ட தெஹியோவிட்ட கோட்டத்திலுள்ள 9 தமிழ் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. நோக்க மாதிரியைக் கொண்டு சிரேஷ்ட இடைநிலை பிரிவு மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாய்விற்காக கவனக் குழு நேர்காணல், வினாக்கொத்து மற்றம் அவதானம் ஆகிய ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டன. அந்தவகையில் ஆய்வு முடிவுகளிலிருந்து, அதிகமான மாணவர்கள் நிகழ்நிலைக் கல்வியினூடாக அதிகரித்த சமூக வலைத்தளங்களின் பாவனையால் பல்வேறு ஒழுக்க மீறுகைகளுக்கு உள்ளாகி வருகின்றனர். இதனால் பாதிப்படையும் கற்றலையும் எதிர்காலத்தையும் வளப்படுத்த சமூக வலைத்தளங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் பிள்ளை மீது கொண்டிருக்க வேண்டிய இடைத்தொடர்புகள் போன்றவற்றுக்கான சிபார்சுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *நிகழ்நிலைக் கல்வி, சமூக வலைத்தளங்கள், ஒழுக்க மீறுகை, கொவிட்-19*

## ஆய்வு அறிமுகம்

நிகழ்நிலைக் கல்வி மலையக பாடசாலை மாணவர்களில் ஏற்படுத்தியுள்ள ஒழுக்கவியல் ரீதியான தாக்கங்கள் எனும் தலைப்பினை அடிப்படையாகக் கொண்டதாக இவ்வாய்வு அமைகின்றது. அந்த வகையில் மெய்யியலின் ஒரு விரிவான ஒழுக்கவியலானது மனிதனின் ஒழுக்கம் தொடர்பான விடயங்களை ஏனைய துறைகளுடன் ஒன்றித்து நோக்கத்தக்கதாக காணப்படுகின்றது. அதாவது மனிதன் எவ்வாறு வாழ வேண்டும்? எத்தகைய செயற்பாடுகளை செய்ய வேண்டும்? எத்தகைய செயற்பாடுகளை செய்யக்கூடாது? போன்ற மனித நடத்தை தொடர்பான தீர்ப்புக்களை முன்வைக்கும் துறையாக இருப்பதுடன் அவற்றுக்கான அடிப்படைகளையும் வழங்கி வருகின்றது (பிரேம்குமார், 2020).

இத்தகைய ஒழுக்கவியலானது "நான் என்ன செய்ய வேண்டும்" என்ற வினாவுக்கு விடை தருகின்ற ஒன்றாக காணப்படுகின்றது. குறிப்பாக மனித முயற்சிகளில் சரியான, தவறான செயல்கள் மற்றும் அவை ஏன் என்ற ஒழுக்கக் கண்ணோட்டத்தில் ஆராய்கின்றது. அந்தவகையில் ஒழுக்கவியலானது ஆங்கிலத்தில் "Ethics" என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. "Ethics" என்ற இவ் ஆங்கிலச் சொல் 'Ethos' என்ற கிரேக்க சொல்லில் இருந்து தோன்றியதாகும். இச்சொல்லின் நேரடி அர்த்தம் வழக்கம், மரபு, பழகிப்போன நடத்தை எனக் குறிக்கப்படுகிறது. பின்னர் இது சீலம் என்பதாக அர்த்தம் கொண்டது. இது போன்று ஒழுக்கவியலுடன் மிகவும் தொடர்புடைய இன்னுமொரு சொல்லாகிய 'Moral' என்ற ஆங்கிலச் சொல் இலத்தீன் மொழியில் உள்ள 'Mores' என்ற சொல்லில் இருந்து தோன்றியதாகும் (ஜமாஹீர், 2012:02-03).

இதன் அடிப்படையில் கல்வி என்பது மனிதனுக்கு விலை மதிப்பிட்டுக் கூற முடியாத சொத்தாக காணப்படுகின்றது. ஒரு மனிதன் ஒழுக்க விழுமியங்களை கடைப்பிடிப்பதற்கு கல்வி இன்றி அமையாததொன்றாகவும் காணப்படுகின்றது. எனினும் சமீப காலங்களில் நாம் எதிர் நோக்கிய பாரிய சவாலாக உலகையே ஆட்டிப்படைத்த கொரோனா வைரஸ் உலக அளவில் பல விடயங்களில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையை பொருத்தவரையில் கற்றல், கற்பித்தல் என்பது ஒரு பெரிய சவாலான விடயமாகவே இருந்தது. அதாவது கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்தும் முகமாக அமுல்படுத்தப்பட்ட பொதுமுடக்கங்களின் விளைவாக பாடசாலைகளில் வகுப்பறையில் நடைபெறும் நேரடி கற்றல், கற்பித்தல் முறைக்கு மாற்றீடாக நிகழ்நிலை கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

நிகழ்நிலைக் கற்றல் என்பது நாம் கற்பிக்கும் முறையிலும் கற்றுக் கொள்ளும் முறையிலும் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியதொன்றாக கருதப்படுகின்றது. இத்தகைய நிகழ்நிலை கல்வி முறையினூடாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் கொவிட்-19 பெரும்தொற்று காலப்பகுதியில் ஏற்புடையதாக காணப்பட்டாலும் கூட மலையக பாடசாலைகளைப் பொறுத்தமட்டில் அது பாரிய சவாலாகவே காணப்பட்டது (இராஜேஸ்கண்ணன், 2021). மலையகத்தை பொறுத்தவரையில் இங்கு பெரும்பாலும் கல்வி, பொருளாதாரம் போன்ற அடிப்படை வசதிகள் குறைவானதான வாழ்க்கை முறையை வாழும் மக்கள் சமூகத்தினரே காணப்படுகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் நிகழ்நிலைக் கல்வியானது சாதாரண கற்றல் முறையில் இருந்து வேறுபட்ட வழியிலோ அல்லது வகையிலோ கற்கும் திறனை வரையறுத்து நோக்கக் கூடியதாக காணப்பட்டது. அதாவது இக்கற்றல் செயற்பாட்டிற்காக மாணவர்கள் பெரும்பாலும் கையடக்கத்தொலைபேசிகளையே பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கவிடயமாகும். இத்தகைய கையடக்கத் தொலைபேசிகளானது தற்காலத்தில் உலகையே உள்ளங்கைக்குள் அடக்ககூடிய ஆற்றல் கொண்டதாக காணப்படுகின்றது (முனீஸ்மூர்த்தி, 2000). எனவே இத்தகைய கல்வி மாற்றம் மலையக பாடசாலை மாணவர்களை சவால்களுக்கு முகங்கொடுக்கச் செய்துள்ளது. குறிப்பாக ஒழுக்கவியல் ரீதியான தாக்கங்களுக்கும் ஆளாக கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக கா.பொ.த சாதாரண பரீட்சை என்பது மாணவர்கள் உயர்கல்வியை நோக்கி செல்லும் பாதையில் முதல் படிக்கல்லாகும். எனவே மாணவர்கள் அதிக முக்கியத்துவம் செலுத்தக்கூடிய காலப்பகுதியாக தரம் 10 மற்றும் 11 வகுப்புகள் காணப்படுகின்றன. தரம் 10 மற்றும் 11 வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்கள் இத்தகைய நிகழ்நிலைக் கல்வியினால் அதிகரித்த சமூகவலைத்தள பாவனையால் எவ்வாறான ஒழுக்க ரீதியான தாக்கங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்பதனை இனங்காண்பதை அடிப்படையாகக் கொண்டதாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இதற்கு அமைவாக மலையகத்தை மையப்படுத்தும் வகையில் கேகாலை மாவட்டத்தில் தெஹியோவிட்ட என்ற பிரதேசத்தில் உள்ள ஒன்பது பாடசாலைகளை அடிப்படையாக கொண்டதாக இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது.

**ஆய்வு நோக்கம்**

***பிரதான நோக்கம்***

இடர் காலங்களில் கற்றல் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்நிலைக் கல்வி முறையினால் அதிகரித்த சமூகவலைத்தள பாவனை மலையக பாடசாலை சிரேஷ்ட இடைநிலை மாணவர்களில் எவ்வாறான ஒழுக்க ரீதியான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளது என்பதை இனங்கண்டு அதற்கான சிபார்சினை முன்வைத்தல்.

**ஆய்வுப் பிரச்சினை**

சமீப காலங்களில் உலகளாவிய அளவில் ஏற்பட்ட கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் விளைவாக அறிமுகப்படுத்தப்பட்ட பெரும் முடக்கத்தினால் பாடசாலைகளில் நடைபெறும் நேரடி கற்பித்தல் செயல்பாடுகளை மேற்கொள்ள முடியாத நிலையில் அதற்கு மாற்றீடாக முன்னெடுக்கப்பட்ட நிகழ்நிலைக் கல்வி முறையின் வாயிலாக மலையகப் பாடசாலைகளில் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களில் ஏற்பட்டுள்ள ஒழுக்கவியல் ரீதியான தாக்கங்கள் என்ற இவ்வாய்வின் ஆய்வுப் பிரச்சினைகளாக நிகழ்நிலைக் கல்விக்காக பயன்படுத்திக் கொள்கின்ற தொலைத் தொடர்புச் சாதனங்களை முறையாக கையாளத் தெரியாமை, கல்வி நடவடிக்கைகளை விட பொழுதுப் போக்கு விடயங்களுக்காக சமூக வலைத்தளங்களை பயன்படுத்துதல், சமூக வலைத்தளப் பாவனை மாணவர்களிடத்தில் எத்தகையான ஒழுக்கவியல் ரீதியான நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துகின்றது போன்ற விடயங்களை ஆய்வு பிரச்சினைகளாக குறிப்பிடலாம்.

**ஆய்வு கருதுகோள்**

நிகழ்நிலைக் கல்வி முறையினால் அதிகரித்த சமூகவலைத்தள பாவனை மலையக பாடசாலை மாணவர்களுக்கு பல்வேறு வகையான ஒழுக்கவியல் ரீதியான தாக்கங்கள் ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைந்துள்து என்பதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

**ஆய்வின் முக்கியத்துவம்**

ஒழுக்கவியல் எனும் போது அதன் இறுதி நோக்கமாக அமைவது நன்மையாகும். பொதுவாக மனிதன் எவ்வாறான வாழ்க்கையை வாழ வேண்டும்? எத்தகைய செயல்பாடுகளை செய்ய வேண்டும் மற்றும் செய்யக்கூடாது? எது சரியானது? எது பிழையானது? நன்மை - தீமை போன்ற பல்வேறு விடயங்களை ஆராயும் ஓர் துறையாக இது காணப்படுகின்றது. எனினும் இத்தகைய ஒழுக்க விழுமியங்களை நாம் கடைபிடிக்கின்றோமா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது (பிரேம்குமார், 2020). இதற்குப் பிரதான காரணமாக அமைவது தற்காலத்தில் உள்ள தொலைத்தொடர்பு சாதனங்கள் எனக் குறிப்பிடலாம்.

இதற்கமைவாக கொவிட்-19 பெருந்தொற்றின் விளைவாக மாணவர்களின் கல்வி செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட ஒரு கல்விச் செயல்பாடாக நிகழ்நிலை கல்விமுறை அமைகின்றது. எனினும் இக்கல்விச் செயல்முறை தொலைத்தொடர்பு சாதங்களை அடிப்படையாக கொண்டமைந்துள்ளமையினால் மாணவர்கள் சமூக வலைத்தளங்களை பயன்படுத்துவதற்கு அதிக வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. இது பல்வேறு வகையான ஒழுக்க ரீதியான தாக்கங்களுக்கு ஏதுவாக காணப்பட்டுள்ளது. அதாவது கல்வி என்பது ஒரு மனிதனை சீர்படுத்துவதாக இருக்கும் சந்தர்ப்பத்தில் இத்தகைய கல்வி செயற்பாடுகளினால் மாணவர்களின் ஒழுக்க ரீதியான தாக்கங்களுக்கும் காரணாக அமைகின்றது என்பதை இவ்வாய்வு எடுத்துரைக்கின்றது. இவற்றையே ஆய்வின் முக்கியத்துவமாகவும் கொண்டு செயற்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

ஓர் ஆய்வில் சரியான முடிவினைப் பெற வேண்டும் எனின் முறையான முறையியலை பின்பற்றுவது என்பது இன்றியமையாததாகும். அதாவது முறையியல் என்பது ஒரு ஆய்வினை வழிநடத்தி செல்லுகின்ற ஒரு வழிகாட்டியாகவும், நுட்பமாகவும் உள்ளது. இதனடிப்படையில், இந்த ஆய்வினை மேற்கொள்வதற்கான தகவல் சேகரிப்பு, மாதிரித்தெரிவு, தரவு சேகரிக்க எவ்வாறான கருவிகள் பயன்படுத்தப்பட்டன, ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்கள், தரவுப் பகுப்பாய்வு முறைமைகள் என்பன தொடர்பான விடயங்கள் இவ்வாய்வு முறைமையில் உள்வாங்கப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் இவ்வாய்வுக்கான தரவுகள் நூல்கள், பத்திகைகள், ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைககள், அறிக்கைகள், இணையம் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகள் மூலமும் மேலும் மாணவர்கள், ஆசிரியர்கள், பொற்றோர்களிடம் வினாக்கொத்து, கவனக் குழு நேர்காணல் (focus group) மற்றும் அவதானம் மூலமாகவும் தரவுகளை சேகரிக்கப்பட்டது.

**ஆய்வு வரையறை**

இவ்வாய்வின் வரையறையானது நிகழ்நிலைக் கல்வி செயல்முறைகளின் பின்னர் பல்வேறு பிரச்சினைகள் காணப்பட்டன. எனினும் இவ்வாய்வானது கேகாலை மாவட்டத்தில் உள்ள தெஹியோவிட்ட பிரதேசத்தினை மையப்படுத்தியதாக அமைந்துள்ளது. ஆய்வின் பொருட்டு இப்பிரதேசத்திற்கு உட்பட்ட ஒன்பது பாடசாலைகளை தெரிவு செய்துள்ளேன்.

**இலக்கிய மீளாய்வு**

இலக்கிய மீளாய்வு என்பது ஒரு ஆய்வுப்பிரச்சினையை செயல்முறையில் முன்வைப்பதற்கு துணைப் புரிகின்றது. அதாவது ஏனைய ஆய்வுகளில் இருந்து குறித்த ஆய்வு எவ்வகையில் வேறுப்பட்டு தனித்துவமாக அமைந்துள்ளது என்பதை எடுத்துரைக்கின்றது. இதனடிப்படையில் இவ்வாய்வு தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், ஆய்வுக் கட்டுரைகள், அறிக்கைகள் என்பவற்றினை வாசித்து அவற்றினை ஆய்வு செய்வது மிக முக்கியமாகும். எனவே "நிகழ்நிலைக் கல்வி மலையக பாடசாலைகளில் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களில் ஏற்படுத்தி உள்ள ஒழுக்கவியல் ரீதியான தாக்கங்கள்." எனும் தலைப்பிலான இவ்வாய்வினை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்ட ஆவணங்கள் சில இங்கு நோக்கப்படுகின்றது.

முனீஸ் மூர்த்தி. மு, (2000) "ஊடகவியல்" எனும் நூலினூடாக மரபுவழி ஊடகங்கள், அச்சு ஊடகங்கள், என்பன தொடர்பான விடயங்களையும் வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம், முகநூல் என்பவற்றின் ஒழுக்க மீறுகைகள் தொடர்பான கருத்துக்கள் விபரிக்கப்பட்டுள்ளது.

குரு அரவிந்தன். (2018) "தாய்வீடு" எனும் சஞ்சிகையில் "செல்பி எடுக்க போகிறீர்களா?" எனும் கட்டுரையில் இருந்து கையடக்கத்தொலைபேசினால் ஏற்படும் ஒழுக்கப்பிரச்சினைகள் மற்றும் சமகால இளைஞர் சமூகம் கையடக்கத்தொலைப்பேசிக்கு வழங்குகின்ற முக்கியத்துவம் தொடர்பாக விபரிக்கப்பட்டுள்ளது.

நுஸ்கியா,ஏ.எல்.எப். (2020) "covid-19 தொற்றும், நிகழ்நிலை கல்வியினால் மாணவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளும் அவற்றை எதிர்கொள்வதற்கான வழிமுறைகளும்" எனும் தலைப்பில் வெளியிட்ட ஆய்வுக் கட்டுரையில் இருந்து கொவிட்-19 தொற்று காலங்களில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்து அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்நிலைக் கல்வி தொடர்பாககவும், அதன் சாதக, பாதகங்ளையும் விபரிப்பதோடு, கொவிட்-19 தொற்று தொடர்பான தகவல்களும் காணப்படுகின்றது.

ஸ்மட்,எம்.எம்.ஏ. (2015) "இணையத்தளம் மற்றும் கையடக்கத் தொலைபேசி பாவனைப் பிரச்சினைகளும் ஒழுக்கம் பேணப்படுமா?" எனும் தலைப்பில் வெளியிட்ட ஆய்வுக்கட்டுரையிலிருந்து கையடக்கத் தொலைபேசியின் பாவனையினால் ஏற்படும் ஒழுக்க பிரச்சினைகள் தொடர்பான விடயங்கள் விபரிக்கப்பட்டுள்ளது.

Divajini, (2015) புதிய தொழிநுட்பங்கள் இன்று பாடசாலை மாணவர்களின் மையப் புள்ளியாக விளங்குகின்றது. அவர்களின் அன்றாட வாழ்வியல் அம்சங்களில் பண்பாடு, விழுமியம், நெறிமுறைகள், காலாச்சார அம்சங்கள், உணவுப் பழக்கவழக்கங்கள், உறவுமுறைகள் என அனைத்து அம்சங்களிலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

Flannery,J. "Social Media and its effects on youth" எனும் தலைப்பில் சமூக ஊடகங்கள் என்றால் என்ன? அவை எவ்வாறு இளைஞர்களில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது என்பது தொடர்பாகவும், அது எவ்வாறு அவர்களின் நடத்தையில் உளவியலில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பது தொடர்பாகவும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

**பெறுபேறும் கலந்துரையாடலும்**

இவ்வாய்வினை மேற்கொள்வதற்குத் தயாரிக்கப்பட்ட ஆய்வுக் கருவிகளாக வினாக்கொத்து, நேர்முகங்காணல், அவதானம் என்பன அமைந்தன. இவ்வாய்வில் அளவு மற்றும் பண்பு ரீதியில் அமைந்த கலப்பு முறையியல் (Mixed Method) பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அடிப்படையில் ஆசிரியர்களிடமிருந்து வினாக்கொத்தினூடாகவும், எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடம் கவனக் குழு நேர்காணல் மூலமும் தரவுகள் பெற்றுக்கொள்ளபபட்டது.

இதனடிப்படையில் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட தெஹியோவிட்ட பிரதேசத்தை அடிப்படையாக கொண்டு தெஹியோவிட்ட கோட்டத்திலுள்ள தமிழ் பாடசாலைகள் (1AB-1,1C-4,TYPE-II-4) ஒன்பதினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. நோக்க மாதிரியைக் கொண்டு சிரேஷ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மொத்த மாணவ மாதிரிகளில் 1.10 என்ற விகிதத்தில் 90 மாணவர்களும் (எழுமாற்று மாதிரியின் அடிப்படையில்) ஒரு பாடசாலையிலிருந்து 4 ஆசிரியர்கள் வீதம் 1:4 என்ற விகிதத்தில் 36 ஆசிரியர்களும் ஒரு பாடசாலைக்கு 2 பெற்றோர்கள் வீதம் 1:2 என்ற விகிதத்தில் 18 பெற்றோர்களும் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் வினாக்களின் வாக்கிய அமைப்பு, வினாவின் நீளம் என்பவற்றிலும் மற்றும் விடையளிப்பவரின் உடல், உள நிலைப்பாடுகளிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

எனது ஆய்வின் அடிப்படையில் கொவிட்-19 தொற்றின் போது ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் விளைவால் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்நிலைக்கல்வியினால் மாணவர்களிடத்தில் அதிகரித்த சமூக வலைத்தளங்கள் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்களின் பாவனையும் அவர்களை ஒழுக்க மீறுகைகளுக்கு உட்படுத்தியுள்ளமையை விபரிப்பதாகவே காணப்படுகின்றது. இதனை வரைபடம் 01 விபரிக்கின்றது.

**வரைபடம்: 01**

***நிகழ்நிலைக் கல்வியின் பின்னர் மாணவர்களில் சமூக வலைத்தளங்களின் செல்வாக்கு***




**மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது.**

நிகழ்நிலை கல்வி பெரும்பாலான மாணவர்களுக்கு தொலைதொடர்பு சாதனங்களை பயன்படுத்துவதற்கு வாய்ப்பாக அமைந்தது. அந்த வகையில் மாணவர்களின் அதிக அளவில் பயன்படுத்துகின்ற சமூக வலைத்தளங்கள் எவை என நீர் கருதுகின்றீர்? என ஆசிரியர்களிடம் கேட்கப்பட்ட போது 36 ஆசிரியர்களில் WhatsApp யினை 36 ஆசிரியர்களும் Facebook யினை 30 ஆசிரியர்களும் Imo யினை 15 ஆசிரியர்களும் Tik Tok யினை 31 ஆசிரியர்களும் Snapchat யினை 27 ஆசிரியர்களும் Instragram யினை 13 ஆசிரியர்களும் Twitter யினை 06 ஆசிரியர்களும் Viber யினை 02 ஆசிரியர்களும் தெரிவு செய்திருந்தனர்.

***நிகழ்நிலை கற்பித்தல் தொடர்பாக ஆசிரியர்களின் திருப்தி நிலை மட்டம்***

இதன் அடிப்படையில் அறியுமிடத்து 89% ஆசிரியர்கள் "இல்லை" என்றும் 11% ஆசிரியர்கள் "ஆம்" என்றும் குறிப்பிட்டுள்ளனர். தொடர்ந்து ஆம் மற்றும் இல்லை என்பதற்கான காரணங்களை தொடர்பாக கேட்கப்பட்ட போது ஆம் என்பதற்கான காரணங்களாக நேரடியாக கற்பித்தல் செயல்பாடுகளில் செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் நிகழ்நிலைக் கல்வி பயனுடையதாக அமைகின்றது. வேண்டிய நேரத்தில் கற்பிக்க முறைமை கவர்ச்சிகரமாக இருத்தல், அதிக நேரம் கற்பிக்கக் கூடியதாக இருத்தல் முதலான காரணங்களை முன்வைத்திருந்தனர். அதேபோன்று இல்லை என்று கூறும் ஆசிரியர்கள் அதற்கான காரணங்களாக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான இடைத்தொடர்பை பேண முடியாமை, இணையச்சாதனங்களை கற்றல் தவிர்ந்து தவறான விடயங்களுக்கு உபயோகிக்கக்கூடிய வாய்ப்பு அதிகம், சமூக வலைத்தளங்களின் பாவனையினால் மாணவர்கள் அதிகமாக பாதிக்கப்படுகின்றார்கள். கற்றலில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்கு பொருத்தமற்ற ஒன்றாக காணப்படுகின்றது, ஆசிரியர்களால் மாணவர்கள் கற்றலில் ஈடுபடுகின்றார்களா என்பதை அவதானிக்க முடியாமை முதலான காரணங்கள் முன்வைக்கப்பட்டிருந்தது. இதனை வரைபடம் 02 தெளிவுபடுத்துகின்றது.

**வரைபடம் - 02**

***நிகழ்நிலை கற்பித்தல் தொடர்பாக ஆசிரியர்களின் திருப்தி நிலை மட்டம்***




**மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது.**

## *மாணவர்களின் கற்றல் செயல்பாடு தொடர்பாக பெற்றோரின் பங்களிப்பு*

அந்தவகையில் 75% ஆசிரியர்கள் "இல்லை" எனவும் 25% ஆசிரியர்கள் "ஆம்" என்றும் குறிப்பிட்டுள்ளனர். இல்லை எனின் அதற்கான காரணம் தொடர்பாக கேட்கப்பட்ட போது அநேகமான ஆசிரியர்கள் தொலைதொடர்பு சாதனங்கள் தொடர்பான பூரணமான அறிவின்மை என்ற பதிலையும் மேலும் அக்கறையின்மை, பிள்ளைகளின் மீதான நம்பிக்கை, பெரும்பாலான பெற்றோர் கல்வி அறிவு இல்லாதவர்களாக காணப்படுகின்றமை முதலான விடயங்களை குறிப்பிட்டிருந்தனர். இதனை வரைபடம் 03 தெளிவுபடுத்துகின்றது.

**வரைபடம் - 03**

***மாணவர்களின் கற்றல் செயற்பாடு தொடர்பாக பெற்றோரின் பங்களிப்பு***




**மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது.**

## *நிகழ்நிலைக் கல்வி வினைத்திறனான கற்பித்தலாக விளங்குவது தொடர்பாக ஆசிரியர்களின் நிலைப்பாடு*

அந்தவகையில் "இல்லை" என 61% ஆசியர்களும் "ஆம்" என 39% ஆசிரியர்களும் குறிப்பிட்டனர். அதற்கான காரணங்கள் கேட்கப்பட்டபோது கூறப்பட்ட காரணங்களாக வலையமைப்பு சீரற்ற தன்மை, மாணவர்கள் கற்றலில் கவனம் செலுத்தாமல் குறிப்பாக வீடுகளில் இருந்து கற்றலை மேற்கொண்டமையினால் வீட்டு வேலைகளில் ஈடுபடுகின்றமை,

கற்றலுக்கு பொருத்தமற்ற சூழல், தேர்ச்சி மட்டத்தை முழுமையாக அடைய முடியாமை, நேரடி கற்பித்தலை போன்று தெளிவாகவும் விளக்கமாகவும் கற்பிக்க முடியாமை, சிறந்த பெறுப்பேரினை அடைய முடியாமை முதலான விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனை வரைபடம் 04 தெளிவுபடுத்துகின்றது.

**வரைபடம்: 04**

***நிகழ்நிலைக் கல்வி வினைத்திறனான கற்பித்தலாக விளங்குவது தொடர்பாக ஆசிரியர்களின் நிலைப்பாடு***




**மூலம்: ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது.**

நிகழ்நிலைக் கல்வியானது இடர்க்காலங்களின் போது மாணவர்களின் கல்வி செயல்பாடுகளை முன்னெடுத்து செல்வதற்கான ஒரு தளமாக காணப்பட்டது. எனினும் இந்நிகழ்நிலைக் கல்வியானது பல்வேறு ஒழுக்க மீறல்களுக்கு மாணவர்களை உட்படுத்துவதற்கும் காரணமாக அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் ஆய்வுக்காக சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பின்வரும் ஒழுக்க மீறுகைகளை அடையாளப்படுத்தலாம்.

- சமூக வலைத்தளங்களுக்கு அடிமையாதல்.
- கலாசார மற்றும் பண்பாட்டு ரீதியான சீர்குலைவு.
- போதைப்பொருளுக்கு அடிமையாதல்.
- முதியோருக்கு மதிப்பளிக்காமை.
- துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகுதல்.
- வன்முறைகளுக்கு தூண்டப்படுதல்.
- ஆபாச சினிமாக்கள் மற்றும் வீடியோக்களை பகிருதல் பார்வையிடுதல்.
- எதிர்பாலாருடனான தொடர்பு அதிகரித்தல்.
- தகவல் திருட்டு
- அதீதமான கோபம்
- கற்றல் செயற்பாட்டில் பின்னடைவு.
- சுய மரியாதையை இழத்தல்.

**முடிவுரை**

இன்றைய நவீன உலகமானது நாளுக்கு நாள் புதிய புதிய மாற்றங்களை உள்ளடக்கிய வகையில் அதிவேகமாக வளர்ச்சி அடைந்து வருகின்றமையினை அவதானிக்கதக்கதாக உள்ளது. அந்த வகையில் இத்தகைய தொழில்நுட்ப வளர்ச்சியின் உச்ச நிலை Covid -19 பெருந்தொற்று காலத்தில் பாரியளவில் காணக்கூடியதாகயிருந்தது. அதாவது இக்காலத்தில் பெரும்பாலான செயல்பாடுகள் தொலைத்தொடர்பு சாதனங்களை அடிப்படையாகக் கொண்டதாகவே காணப்பட்டது. இதனடிப்படையில் மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளை முன்னெடுத்து செல்லும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்நிலைக் கல்வி முறையானது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். அந்த வகையில் இந்த நிகழ்நிலைக் கல்வியினால் குறிப்பாக மலையக பாடசாலைகளில் சிரேஷ்ட இடைநிலை மாணவர்களிடத்தில் அதிகரித்த சமூக வலைத்தளப் பாவனை எத்தகைய ஒழுக்க ரீதியான தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளது? எனும் தேடலுக்கு விடை காண முற்படுவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது (Yumna, 2020).

COVID-19 பெருந்தொற்று காரணமாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் முன்னெடுக்கப்பட்ட ஊரடங்கு முடக்கங்களினால் நேரடி கற்றலுக்கு பதிலாக நிகழ்நிலை மூலமாக மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்து சென்றமையினை தொடர்ந்து மாணவர்களிடத்தில் சமூக வலைத்தளங்களின் பாவனையானது பாரியளவில் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்துள்ளதோடு ஒழுக்க ரீதியான தாக்கங்களையும் ஏற்படுத்துவதற்கும் காரணமாக அமைந்துள்ளது. அதாவது நிகழ்நிலை கற்றலின் வாயிலாக மாணவர்கள் சமூக வலைத்தளங்களை எதிர்மறையான விடயங்களுக்கு அதிகளவாக உபயோகிக்கக்கூடிய ஒரு நிலையே இத்தகைய ஒழுக்க மீறுகைகளுக்கு காரணமாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதற்கு அமைவாக சமூக வலைத்தளங்களானது பல்வேறு நன்மைகளைக் கொண்டிருப்பினும் கூட தற்காலத்தை பொறுத்தவரையில் அது ஒரு எதிர்மறையான விளைவுகளையே தருகின்றது என்பது பலரது கருத்தாக காணப்படுகின்றது. எனவே இச்சமூக வலைத்தள பாவனையானது நன்மையாகவும், தீமையாகவும் மாறுவது அதன் பயனாளர்களின் செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது என்பது எடுத்துரைக்கதக்க ஒன்றாகும்.

**பரிந்துரைகள்**

சமூக வலைத்தள பாவனையானது இன்று மாணவர்கள் மத்தியில் தவிர்க்க முடியாத விடயமாக மாறியுள்ளது. இத்தகையதொரு நிலைக்கு பிரதான காரணமாக நிகழ்நிலைக் கல்வி முறைமையினை குறிப்பிடலாம். அதாவது இடர் காலங்களில் மாணவர்கள் கல்வி செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நிகழ்நிலைக் கல்வி உதவியாக இருந்திருப்பினும் கூட அவற்றினால் ஏற்பட்ட இணைய சாதனங்களின் பயன்பாடானது அவர்களை ஒழுக்க ரீதியான மீறுகைகளுக்கு ஆளாக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இதன்படி நிகழ்நிலைக் கல்வியினால் மாணவர்கள் உட்படுகின்ற ஒழுக்க மீறுகைகளை குறைத்துக்

கொள்வதற்கு அல்லது அத்தகையதொரு நிலையில் இருந்து விடுபடுவதற்கு ஆய்வாளன் என்ற வகையில் சில சிபாரிசுகள் முன்வைக்கப்படுகின்றன.

***நிகழ்நிலைக் கற்றலின் போது மாணவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்***

- கற்றலுக்கு தேவையான சமூக வலைத்தளங்களை மாத்திரம் தரவிறக்கிக் கொள்ளுதல்.
- சமூக வலைத்தளங்களில் தனிப்பட்ட கணக்கினை உருவாக்கிக் கொள்வதனை தவிர்த்துக் கொள்ளுதல்.
- கற்றல் தவிர்ந்த ஏனைய நேரங்களில் அதிகளவு தொலைத்தொடர்பு சாதனங்களை பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளுதல்.
- தொலைத்தொடர்பு சாதனங்களில் அதிகளவு நேரத்தை செலவிடுவதற்கு பதிலாக இணைபாடவிதான செயல்பாடுகளில் ஆர்வம் காட்டுதல்.
  உதாரணம்:- ஓவியம் வரைதல், கை பணிகளை செய்தல், பூந்தோட்டங்கள் அமைத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.
- அறிமுகமற்ற நபர்களுடன் சமூக வலைத்தளங்களின் ஊடாக நட்பு கொள்ளும்போது தனது பிரச்சினைகளையும், அந்தரங்க விடயங்களையும் பகிர்ந்து கொள்வதை தவிர்த்தல்.
- சமூக வலைத்தளங்களில் ஆபாச புகைப்படங்களோ அல்லது காணொளிகளோ வருமிடத்து அவ்வூடகத்தின் அமைப்பின் (Setting) ஊடாக அதனை தடுத்தல்.
  உதாரணமாக: YouTube இல் வரும் ஆபாச வீடியோக்களை அதன் அமைப்பில் காணப்படுகின்ற "not interested" எனும் தெரிவினை கொடுப்பதன் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம்.
- Snapchat போன்ற வலைதளங்களினால் எடுக்கப்படும் புகைப்படங்கள் ஒரு போலியான முகத்தோற்றத்தினை வழங்குகின்றது. இத்தகைய போலியான தோற்றப்பாடுகளுக்கு கவரப்படுவதை தவிர்த்துக் கொள்ளுதல்.
- தனது புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் "profile" இடும் போது குறிப்பாக பெண்கள் "my contacts" எனும் பிரிவினை அணுகுதல்.
- இணைய விளையாட்டுகளுக்கு பதிலாக உடல் சக்தி தரும் விளையாட்டுகளில் ஆர்வம் காட்டுதல் வேண்டும்.

***நிகழ்நிலை கற்றலின் போது பெற்றோர் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்***

- பெற்றோர்கள் பிள்ளைகளின் நிகழ்நிலைக் கல்வி செயற்பாடுகள் தொடர்பில் அவதானமாக செயல்பட வேண்டும்.
- சமூக வலைத்தள பாவனையினால் ஏற்படக்கூடிய நடைமுறை பிரச்சனைகளை பிள்ளைகளுக்கு எடுத்துக் கூற வேண்டும்.
- பிள்ளைகளின் நடத்தை மாற்றம் தொடர்பில் கவனம் செலுத்துதல்.

- அதிக நேரம் தொலைத்தொடர்பு சாதனங்களை பயன்படுத்துவதிலிருந்து பிள்ளைகளை கட்டுப்படுத்துதல்.
- பிள்ளைகளின் கல்வி செயற்பாடுகள் தொடர்பாக ஆசிரியர்களுடன் கலந்துரையாடுதல்.
- தேவையற்ற WhatsApp குழுமங்களில் பிள்ளைகள் இருப்பதை தடுத்தல்.
- கற்றல் தவிர்ந்த ஏனைய நேரங்களில் தொலைத்தொடர்பு சாதனங்களை பயன்படுத்துவதை கட்டுப்படுத்துதல்.
- கற்றல் செயல்பாடுகளுக்கு மாத்திரம் பயன்படுத்தும் “e-Learning package” ஐ மாத்திரம் செயற்பாட்டில் வைத்திருத்தல்.
- தனது சுய கௌரவத்திற்காக விலை உயர்ந்த கணினி கையடக்க தொலைபேசி முதலியவற்றை வாங்கிக் கொடுப்பதை தவித்தல்.
- பிள்ளைகள் தொலைதொடர்பு சாதனங்களில் என்ன செய்கின்றார்கள் எதை பார்க்கின்றார்கள் என்பது தொடர்பில் விழிப்புணர்வாக இருத்தல்.

***நிகழ்நிலை கற்றலின் போது ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்***

- நிகழ்நிலை கற்பித்தலின் போது மாணவர்கள் கற்றலில் கவனம் செலுத்துகின்றாரா என்பதில் அவதானமாக இருத்தல்.
- WhatsApp குழுமங்களில் மாணவர்களை இணைக்கும் போது group admin மாத்திரம் மாணவர்களின் தொலைபேசி இலக்கங்களை பார்வையிடக் கூடியதான அமைப்பினை செயல்படுத்துதல்.
- சமூக வலைத்தளங்களின் நன்மை தீமைகளை நடைமுறையோடு தொடர்புப்பட்ட வகையில் மாணவர்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- தொலைத்தொடர்பு சாதனங்கள் தொடர்பான பூரண அறிவற்ற பெற்றோர்களுடன் கலந்துரையாடி அது தொடர்பான விழிப்புணர்வினை வழங்குதல்.
- மாணவர்களை கவரக்கூடிய வகையிலும், ஆர்வத்துடன் கற்றலை மேற்கொள்ள் கூடிய வகையிலும் கற்பித்தலை மேற்கொள்ளுதல்.

**உசாத்துணை**


அபிராமி,கு. (2000). *மல்டிமீடியா கற்றுக்கொள்ளுங்கள்.* தமிழ் புத்தகாலயம்.

அனஸ்,எம்.எஸ்.எம். (2006). *மெய்யியல் கிரேக்கம் முதல் தற்காலம் வரை.* குமரன் புத்தக இல்லம்.

ஆன்டோ பீட்டர், மா., ராஜ்மோகன், ரூ. (1990). *இன்டர்நெட் கையேடு.* வீக்காஸ் பப்ளிஷிங் ஹவுஸ்.

இராமச்சந்திரம்,கே.என். (2001). *இணையத்தில் இணைவோம்.* கங்கை புத்தக நிலையம்.

இராமலிங்கம், அ. (2003).*ஒழுக்கம்.* மோனாரிக் கிரா∴பிக்ஸ்..

இராஜேஸ்கண்ணன், இ. (2021). *கோவிட் - 19 பேரிடகாலத்தில் இளையோரின் கல்வி சவால்களும் சாத்தியங்களும்*: ஆறுதல் வெளியீடு.

குணரத்தினம், வே. (2009). கணணி விளையாட்டுகளும் வன்முறையும். *கிழக்கொளி*. 50வது சிறப்பு மலர். ஊழியர் சங்க வெளியீடு. கிழக்குப் பல்கலைக்கழகம்.

கேசவன்,க. (1998). *மெய்யியல் - முதற்கலைத்தேர்வு மாணவர்கட்கானது*. பதிப்பு 1. கோபிகா பதிப்பகம் நியூட் குறப்.

சமூகவலைத்தளங்களின் பாவனையும் அதிகரித்து வரும் கலாச்சார சீர்கேடுகளும். Retrieved June 06, 2023, from https://newsplus.lk/feature/3621/

சமூக வலைத்தளங்களும் அதன் பயன்பாடுகளும். Retrieved June 25, 2023, from http://upscmainsintamil.blogspot.com

சரண்யா,வ. (2013, September13). சமூகவலைத்தளங்களில் அதிக நேரத்தை செலவிடும் இளவயதினருக்கு மனநல பாதிப்பு. *வீரகேசரி*.

சாகித்தியா,அ. (2001). *இன்டெர்நெட் உலகில் சற்றிங் கம்பியூட்டர் வேல்ட்*. மிலேனியம் பிரிண்டர்ஸ்.

சிவானந்தமூர்த்தி,க. (1998). *ஒழுக்க நியமங்கம் அதன் நடைமுறைகளும்*. லங்கா புத்தகசாலை.

சுந்தரராஜன்,கே. (2010). *இன்டர்நெட் கையேடு*. கண்ணதாசன் பதிப்பகம்.

ஞானகுமாரன்,நா. (2012). *மெய்யியல்*. சேமமடு பதிப்பகம.

பிரதாபன்,கா. (2015. May 16). உலக தொடர்பாடல் தினம். *வீரகேசரி வார வெளியீடு*.

பிரேம்குமார், இ. (2020). *கலை இலக்கிய மெய்யியல் கொள்கைகள்*: குமரன் புத்தக இல்லம்.

புறோட்,சி.பு. (1968). *ஐவகை ஒழுக்கவியல் கொள்கைகள்*. கல்வி வெளியீட்டுத் திணைக்களம். இலங்கை அரசாங்கம்.

மனித வாழ்வில் சமூகவலைத்தளங்கள். Retrieved June 25, 2023, from https://www.eaglevix.com

முனீஸ்மூர்த்தி,மு. (2000). *ஊடகவியல்: தொலைநிலைக்கல்வி நிலையம்*. பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

ராம்குமார். (2000). *இன்டர்நெட் இணையம்*. மாணிக்க வாசகர் நூலகம். ஸ்டெர்பார்ஸ் பிரஸ்.

ஜமாஹிர்,பீ.எம். (2012). *ஒழுக்கவியல் ஓர் அறிமுகம்*: எம்.ஜே.எம் அச்சகம்.

Divajini. (2015). மாணவர்கள் மீது வெகுஜன ஊகங்களின் தாக்கம்: கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

Yumna, A.S.F. (2020). *சமூக வலைத்தளங்களின் அதிகரித்த பாவனையும் பாடசாலை மாணவர்களின் விழுமியப் பாதிப்பும்*: கிழக்கு பல்கலைக்கழகம்.

ஜீனியஸ். (2018, July 16). இணையத்திற்கு அடிமையாகும் சிறுவர்கள். *ஜீனியஸ் வெளியீடு*.

The social and ethical issues of online learning during the pandemic and beyond. Retrieved June 25, 2023, from https://link.springer.com/artivle

# விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் வகிபாகம்

**ந. கோவேந்தன், ராஜேந்திரன் தக்ஷாயினி**
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
koventhannadarasa@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வானது விசேட தேவையுடைய மாணவர்கள் கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காண்பதுடன் அவர்களது கற்றலில் ஆசிரியர்களின் வகிபங்கினை ஆராய்தல் எனும் நோக்கத்தின் அடிப்படையில் மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் உள்ள விசேட கல்வி அலகுகளை அடிப்படையாகக் கொண்ட அளவை நிலை ஆய்வாக அமைந்தது. இவ்வலயங்களில் உள்ள விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விசேட அலகுகளைக் கொண்ட 09 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. 09 பாடசாலைகளிலும் இருந்து 09 அதிபர்களும், விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் 20 ஆசிரியர்களும், இவ்விரண்டு வலயங்களிலும் உள்ள விசேட கல்விக்கு பொறுப்பான 02 சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களும், விசேட தேவையுடைய 90 மாணவர்களும், இம்மாணவர்களின் பெற்றோர்கள் 90 பேரும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து, அவதானம், நேர்முகங்காணல் போன்ற ஆய்வு கருவிகள் மூலம் தரவுகள் பெறப்பட்டு அவை ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் பண்பு ரீதியானதும், அளவு ரீதியானதுமான கலப்பு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு தரவுகள் MS EXCEL மூலம் உருக்கள், அட்டவணைகளாக வகை குறித்துக்காட்டப்பட்டுள்ளன. அதன் இந்த கலப்பு முறை பகுப்பாய்வின் அடிப்படையில் விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் வகிபாகம் குறைவதற்கான காரணங்களாக போதிய பயிற்சி குறைவு, வளங்கள் குறைவாக காணப்படுகின்றமை, ஆசிரியர்கள் வாண்மைத்துவத்தை விருத்தி செய்யாமை, இம்மாணவர்களின் பெற்றோர் ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தலுக்கு போதிய பங்களிப்பு வழங்காமை, ஆசிரியர்கள் தூர பிரதேசங்களில் இருந்து பணிக்கு வருகின்றமை, பெற்றோர் பிள்ளைகளை தொடர்ச்சியாக பாடசாலைக்கு அனுப்பாமை, ஆசிரியர் மாணவர் விகிதம் முறையாக பின்பற்றப்படாமை போன்ற பல காரணங்களால் இம்மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் வகிபாகம் குறைகின்றமை பிரச்சினைகளாக பெறப்பட்டுள்ளன. இதற்கான தீர்வுகளாக அதிபர்கள் ஆசிரியர்களுக்கு தகுந்த ஆலோசனைகள் வழங்குதல், ஆசிரியர்கள் விசேட கல்வி தொடர்பான கற்கை நெறிகளை தொடர்வதற்கு அதிபர் ஒத்துழைப்பு வழங்குதல், விசேட தேவைக் கல்வியுடன் தொடர்புபட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்களை அழைத்து ஆசிரியர்களுக்கு செயலமர்வுகள் நடாத்துதல், கல்வி அமைச்சு வலய மட்டத்தில் இவ்ஆசிரியர்களுக்கு பயிற்சி நெறிகளை வழங்குதல், அதிபர் இம்மாணவர்களின் கற்றல், கற்பித்தல் தொடர்பில் பெற்றோருக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கி ஆசிரியர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட வைத்தல், விசேட தேவை அலகுகளில் கல்விசாரா ஊழியர்களை நியமித்தல், இவ்ஆசிரியர்களுக்கு உதவி ஆசிரியர்களை நியமித்தல், கல்வி அமைச்சின் 37/2020 சுற்றறிக்கையின் படி விசேட அலகுகளில் ஆசிரியர் மாணவர் விகிதாசாரம் 1:5 என கணக்கிட்டு தேவையான மீதி ஆசிரியர்களை வழங்க வேண்டும். மற்றும் மாணவர்களின் வீட்டிற்கு செல்லும் ஆசிரியர்களின் பொருத்தமான எண்ணிக்கையை கணக்கிடும்போது ஆசிரியர் மாணவர் விகிதம் 1:3 ஆக இருத்தல் வேண்டும், அதிபர் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்து வளங்களை பெற்றுக்கொடுத்தல், ஆசிரிய ஆலோசகர் மேற்பார்வை செய்தல் போன்ற செயற்பாடுகள் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *விசேட தேவைக் கல்வி, கற்றல், கற்பித்தல், வகிபாகம், ஆசிரியர்*

**அறிமுகம்**

''விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் வகிபாகம்'' என்ற தலைப்பில் மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொதுவாக சாதாரண மாணவர்களுக்கு தேவைப்படாத விசேட கவனம் மற்றும் குறிப்பிட்ட தேவைகள் அவசியமாக இருக்கும் மாணவர்களை விசேட தேவையுடைய மாணவர்கள் என்பர் (Ebony Howard, 2021). விசேட கல்வித் தேவைகள் என்பது சட்டபூர்வ வரையறை மற்றும் கற்றல் சிக்கல்கள் அல்லது குறைபாடுகள் உள்ள பிள்ளைகளைக் குறிக்கின்றது.

பிள்ளைகள் ஒரே தன்மையான ஆற்றல், அறிவுடையவர்களாக இருப்பதில்லை. ஒவ்வொரு மாணவரும் பல்வேறுபட்ட கற்றல் தேவையுடையவர்களாக காணப்படுவார்கள். இவர்கள் அனைவரையும் சீரான வழியில் நெறிப்படுத்துவது ஆசிரியரின் பொறுப்பாகும். வகுப்பறையில் மீத்திறன் உடைய மாணவர்கள், மெல்லக் கற்கும் மாணவர்கள், கற்றல் இடர்பாடுடைய மாணவர்கள் வலது குறைந்தோர் எனப் பல வகையான மாணவர்கள் காணப்படுவார்கள். இவர்களின் கற்றல் பாங்கு, ஆற்றல், திறன் போன்றன ஒவ்வொருவருக்கும் வித்தியாசமானதாகும். இவர்கள் கற்றுக் கொள்வதில் வித்தியாசமான கற்றல் தேவையுடையவர்களாக காணப்படுவார்கள் (Anas and Nawastheen, 2019).

மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அலகுகளில் செவிப்புல குறைபாடுடைய பிள்ளைகள், கற்றல் இயலாமையுடைய பிள்ளைகள், மொழி பேச்சுக் குறைபாடுடைய பிள்ளைகள், உடல் குறைபாடுடைய பிள்ளைகள் எனப் பல விசேட தேவையுடைய மாணவர்கள் காணப்படுகின்றனர்.

கற்றல் என்பது அறிவு, சிந்தனைத்திறன் மற்றும் நடத்தைகளில் ஏற்படுகின்ற மாற்றத்தினைக் குறிக்கின்றது. சமூக அறிகைவாதிகளின் கருத்தின் படி கற்றலுக்கான அடிப்படையாக நடத்தையில் ஏற்படுகின்ற மாற்றத்தினைக் குறிப்பிடலாம். விசேட தேவையுடைய மாணவர்கள் கற்றலில் ஈடுபடுகின்ற போது பல பிரச்சினைகளைத் எதிர்கொள்கின்றனர். இப்பிரச்சினைகளை தீர்த்து இம்மாணவர்களுக்கும் கல்வியில் சமவாய்ப்பை ஏற்படுத்த ஆசிரியர்களின் பங்கு மிக முக்கியம் பெறுகின்றது.

மேற்கூறிய கற்பித்தல் முறைகளை இம்மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளுக்கு ஏற்ப கற்பித்ததன் பின்னர் இம்மாணவர்கள் பயன் பெற்றுள்ளனரா? என்பதை ஆசிரியர் மதிப்பீடு செய்தல் வேண்டும். இக்கற்பித்தல் முறைகள் மூலம் மாணவர்கள் பயன்பெறாமல் யாராவது விடுபட்டிருப்பின் அவர்களை இனங்கண்டு பரிகார கற்பித்தல் முறைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறன கற்பித்தல் முறைகளையும், பரிகார கற்பித்தல் முறைகளையும் மேற்கொள்வதற்கு ஆசிரியர் போதிய பயிற்சிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியரின் வகிபாகமே மிக அதிகமாக காணப்பட வேண்டும். மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களை அடிப்படையாகக் கொண்டு விசேட தேவையுடைய அலகுகளில் உள்ள மாணவர்கள் தமது

கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காண்பதுடன் அவர்களது கற்றலில் ஆரியர்களின் வகிபங்கினை ஆராய்தல் எனும் நோக்கத்தின் அடிப்படையில் இவ்வாய்வு இடம்பெற்றது.

**ஆய்விற்கான பின்னணி / நியாயத்துவம்**

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வி வாய்ப்பினை வழங்குவதில் பிரதானமாக விளங்குபவர்கள் ஆசிரியர்களாவர். மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய காரணிகளில் உள்ள இடர்களை நீக்கி கற்றலை விரைவுபடுத்துவதில் ஆசிரியர்களின் பங்கு இன்றியமையாதது. என்பதை வாட்சன், மாக்ரட்மீட் போன்ற சூழ்நிலைவாதிகளின் ஆய்வு முடிவுகள் எடுத்துக்கூறுகின்றன.

Mohaned Ghazi Abed என்பவர் 2018 இல் விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வியில் ஆசிரியர்களின் பணி என்னும் தலைப்பில் சவுதி அரேபியாவில் செய்த ஆய்வில் பாடத்திட்ட வழிகாட்டி, பயிற்சிப் பொருட்கள் மற்றும் பாடசாலை வசதிகள் சிறப்பாக இல்லாத காரணத்தினால் அம்மாணவர்கள் கல்வியை தொடர்வதில் சிரமப்படுகின்றனர் என குறிப்பிடுகிறார்.

மேற்கூறிய ஆய்வு முடிவுகள் ஆய்வாளனின் ஆய்வுப்பிரதேசங்களான மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் விசேட தேவையுடைய அலகுகளில் உள்ள மாணவர்களின் கற்றலுக்கு ஆசிரியர்களின் கற்பித்தல் செயன்முறை வலுச்சேர்க்கின்றதா? என்பதை அறிவதற்காக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் உள்ள ஆசிரியர்களிடம் விசேட தேவையுடைய மாணவர்கள் பற்றிய விளக்கம் இருந்த போதும் அம்மாணவர்களுக்கான பரிகார நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளாத நிலையை அவதானிக்க முடிகிறது. அத்துடன் பாடசாலைகளில் சகல செயற்பாடுகளிலும் இவ்வகை மாணவர்களுக்குரிய இடம் வழங்கப்படுகிறதா? என்பதும் ஆய்வுக்குரிய விடயமாகவே உள்ளது. ஒவ்வொரு மாணவரதும் அடிப்படை கல்வி உரிமையை உறுதிப்படுத்துவது அனைவரதும் கடமையாகும்.

இன்றைய நிலையில் மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அலகுகளை உள்ளடக்கிய பாடசாலைகளும், உள்ளடங்கல் கல்வி என்ற அடிப்படையில் சாதாரண வகுப்பறைகளில் எல்லா மாணவர்களுடனும் இணைத்து கற்றல், கற்பித்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் விசேட தேவையுடைய அலகுகளில் உள்ள மாணவர்களுக்கான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் திருப்திகரமானதாக இல்லாத ஒரு நிலையை அவதானிக்கலாம். இதற்கு மிக முக்கிய காரணம் ஆசிரியர்களது வகிபங்கானது மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகிறது. இவ்வாறான காரணங்களின் அடிப்படையிலேயே விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் வகிபங்கை அறிவதற்காக மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் உள்ள

தெரிவு செய்யப்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அலகுகளைக் கொண்ட 09 பாடசாலைகள் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.

**ஆய்வுப் பிரச்சினை**

கல்வித்துறையில் கருத்தியல் மற்றும் செயற்பாட்டு அடிப்படையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களினாலும் கல்வி ஓர் அடிப்படை உரிமை என்ற வகையில் அதில் ஆழமான பார்வையும், நோக்கும் இடம்பெற்று வருகின்றன. அந்த வகையில் விசேட தேவைகள் சார் எண்ணக்கரு இன்று முதன்மை பெறும் ஓர் அம்சமாக வளர்ச்சி அடைந்துள்ளது. கல்வி ஓர் அடிப்படை உரிமையாகையால் எக்காரணம் கொண்டும் ஒருவரது கல்வி உரிமையை மறுதலிக்க முடியாது. உடல், உள ரீதியில் இயலாமை கொண்டவர்களாக காணப்பட்டாலும் அவர்களும் கல்வியை பெறுவதற்கான உரிமையுடையவர்கள் என்ற எண்ணக்கருவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இந்த விடயம் பற்றி ஆய்வாளனின் ஆய்வு பிரதேசத்தில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களில் ஒரு சிலர் விசேட தேவைகள் கல்வி தொடர்பான கற்கை நெறிகளை தொடராதவர்களாக உள்ளனர். இதனால் இம்மாணவர்களுக்கு சிறப்பாக கற்றல், கற்பித்தல் செயற்பாட்டினை மேற்கொள்வது குறைவாகவே உள்ளது.

மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் விசேட தேவையுடைய மாணவர்கள் கற்பதற்கான விசேட அலகுகள் 09 உருவாக்கப்பட்டுள்ள போதிலும் இம்மாணவர்களுக்கான விசேட தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களும் மிக குறைவாகவே காணப்படுகின்றனர். இது இம்மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையை கேள்விக் குறியாக்கும் ஒரு விடயமாகும்.

இவ்வகை மாணவர்கள் கற்றலை தொடர்ச்சியாக மேற்கொள்வதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இதில் பெற்றோரின் ஈடுபாடு குறைவு, இம்மாணவர்களுக்கு பொருத்தமான கற்றல் உபகரணங்கள் இல்லாமை, சமூகம் இவ்வாறான மாணவர்களை ஏற்றுக்கொள்வது குறைவாக உள்ளமை மிக முக்கியமான பிரச்சினைகளாகும்.

ஆசிரியர்கள் குறைவாக உள்ளமையினால் குறித்த பாடசாலைகளில் தனியாள் வேறுபாடுகளுக்கேற்ப கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுப்பதில் சிக்கல் நிலை உள்ளது. இன்றைய நிலையில் விசேட தேவையுடைய மாணவர்களின் சிறந்த வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு வகுப்பறை முகாமைத்துவம் சரியானதாக இல்லை. இம் மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒரு சிலர் விசேட தேவைக் கல்வி தொடர்பான கற்கை நெறிகளை கற்காமலே கற்பிக்கின்றனர். இதனால் விசேட தேவையுடைய மாணவர்களை எவ்வாறு கையாள்வது என்பது பற்றிய விளக்கம் இன்மையால் சாதாரண மாணவர்களுக்கு கற்பிப்பது போன்றே கற்பிக்கின்றனர். இதனால் இம் மாணவர்கள் கற்றலில் முன்னேறுவது குறைவாக உள்ளது.

மேலும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் உள்ள 4 விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அலகுகளுக்கும் விசேட தேவையுடைய கற்கைநெறிகளை பூர்த்தி செய்த நிரந்தர நியமணம் பெற்ற 4 ஆசிரியர்களே உள்ளனர். ஒரு விசேட தேவையுடைய

அலகுக்கு ஓர் ஆசிரியர் என்பதன்படி நியமிக்கப்பட்டுள்ளதால் குறித்த ஆசிரியர் பாடசாலைக்கு வருகை தராவிட்டால் வேறு ஆசிரியர்கள் கற்பிப்பது அல்லது இம்மாணவர்கள் பாடசாலை நேரம் முடிய மட்டும் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டின் பயன்களை அனுபவிக்காமலே வீடு செல்கின்றனர்.

இந்த வகையில் மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் விசேட தேவைகள் சார் அலகுகள் ஊடாக கல்வியை வழங்கும் பாடசாலைகளில் இம்மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களின் கற்றல் தொடர்பாக என்ன நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார்கள் என்பதை அறிந்து பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்வது முக்கியமானதாகும்.

**ஆய்வுப் பிரச்சினைக் கூற்று**

மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் விசேட தேவையுடைய அலகுகளில் உள்ள மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயன்முறைகளுக்கு போதுமான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் குறைவாக உள்ளமையினால் இம்மாணவர்கள் பொருத்தமான கல்வியைப் பெறுவதில் சிரமப்படுகின்றனர்.

**ஆய்வினது முக்கியத்துவம்**

இவ்வாய்வானது விசேட தேவைகளையுடைய அலகுகளைக் கொண்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் உள்ள மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யப்படுகின்றதால் பாடசாலை மட்டத்தில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்வியை வழங்குவதில் ஆசிரியர்கள் சரியான முறையில் வகிபங்குகளை நிறைவேற்றுகின்றனரா? என்பது பற்றிய ஒரு மதிப்பீட்டை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆசிரியர்களினது வகுப்பறை கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளின் போது விசேட தேவையுடைய மாணவர்கள் மீதும் அதிக அக்கறை செலுத்த தூண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் இவ்வாய்வு முக்கியமாக இடம் பெறவேண்டிய ஒன்றாகும்.

ஒரு பாடசாலையின் முழுமையான வெற்றி என்பது சகல மாணவர்களிடத்திலும் அடிப்படை தேர்ச்சியை ஏற்படுத்துவதாகும். எனவே விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் வீழ்ச்சியடையும் போது அது பாடசாலையில் மொத்த அடைவில் தாக்கம் செலுத்தும் என்பதை உணர்ந்து செயற்பட வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கல்வி உரிமை ஒவ்வொருவரினதும் அடிப்படை உரிமை. எனவே அதனை முழுமையாக நிறைவேற்ற பாடசாலை மட்டத்தில் முழுமையான செயற்பாடுகள் அமைய வேண்டும். என்பதை பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் உணர்ந்து செயற்பட இவ்வாய்வு முக்கியம்.

விசேட தேவையுடைய மாணவர்களது பெற்றோர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தங்கள் பிள்ளைகள் மீது அதிக கவனம் செலுத்தவும், பாடசாலையுடனும், தமது பிள்ளைகளுக்கு கற்பிக்கும் ஆசிரியரிடமும் சுமுகமான உறவை ஏற்படுத்தவும், ஆசிரியர்கள் மூலம் பெற்றோர்களுக்கு அறிவூட்டவும் இவ்வாய்வு துணை நிற்கும் என்பதற்காக மேற்கொள்ளப்படுகிறது.

மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் விசேட தேவையுடைய அலகுகளில் உள்ள மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயன்முறைகளுக்கு போதுமான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் குறைவாக உள்ளமையினால் இம்மாணவர்கள் பொருத்தமான கல்வியை பெறுவதில் சிரமப்படுகின்றனர். எனவே ஆசிரியர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், எதிர்காலத்தில் இந்த ஆய்வுப்பரப்போடு தொடர்புபட்ட ஆய்வுகளை மேற்கொள்பவர்களுக்கு ஆய்வின் நோக்கத்தை பூரணப்படுத்துவதற்கும், தரவுப் பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்கும் உதவும் என்பதற்காக இவ்வாய்வு இடம்பெற்றது.

**இலக்கிய மீளாய்வு**

பொதுவாக சாதாரண மாணவர்களுக்கு தேவைப்படாத விசேட கவனம் மற்றும் குறிப்பிட்ட தேவைகள் அவசியமாக இருக்கும் மாணவர்களை விசேட தேவையுடைய மாணவர்கள் என்பர் (Ebony Howard, 2021).

மேகன் வால் என்பவர் 2018 ஆண்டு விசேட தேவைகள் உள்ள மாணவர்களை பொதுப் பிரிவில் சேர்த்தல் எனும் தலைப்பில் கலிபோர்னியாவின் டொமினிகன் பல்கலைக்கழகத்தில் செய்த ஆய்வில் ஆசிரியர்கள் மாணவர்களை சிறப்புடன் அமைக்க அவர்கள் பல்வேறு கற்பித்தல் உத்திகளை அறிந்திருந்தால் வெற்றி பெற முடியும்.

பிள்ளைகள் ஒரே தன்மையான ஆற்றல், அறிவுடையவர்களாக இருப்பதில்லை. ஒவ்வொரு மாணவரும் பல்வேறுபட்ட கற்றல் தேவையுடையவர்களாக காணப்படுவார்கள். இவர்கள் அனைவரையும் சீரான வழியில் நெறிப்படுத்துவது ஆசிரியரின் பொறுப்பாகும். வகுப்பறையில் மீத்திறன் உடைய மாணவர்கள், மெல்லக் கற்கும் மாணவர்கள், கற்றல் இடர்பாடுடைய மாணவர்கள் வலது குறைந்தோர் எனப் பல வகையான மாணவர்கள் காணப்படுவார்கள். இவர்களின் கற்றல் பாங்கு, ஆற்றல், திறன் போன்றன ஒவ்வொருவருக்கும் வித்தியாசமானதாகும். இவர்கள் கற்றுக் கொள்வதில் வித்தியாசமான கற்றல் தேவையுடையவர்களாக காணப்படுவார்கள் (Anas & Nawastheen, 2019).

ஈவா எஸ். பெக்கர் என்பவர் 2019 ஆண்டு விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் கற்பித்தலை மேம்படுத்துதல் எனும் தலைப்பில் சுவிற்சர்லாந்தில் செய்த ஆய்வில் விசேட தேவையுடைய குழந்தைகளுக்கான கல்வி வாய்ப்புகள் உலகளவில் மேம்பட்டிருந்தாலும், இந்த மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களைத் தயார்படுத்துவது தொடர்பில் குறைபாடுகள் உள்ளன. அதாவது பயிற்சி குறைவான ஆசிரியர்கள், கற்பித்தலுக்கு போதிய வளங்கள் இல்லாமை, போதிய ஆசிரியர்கள் இல்லாமை காரணமாக இம்மாணவர்களுக்கான கற்றல், கற்பித்தலில் சிரமங்கள் ஏற்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

ஆய்வு முறையியலானது ஆய்வின் பொது நோக்கத்தையும், சிறப்பு நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு, ஆய்வு வினாக்கள் தயாரிக்கப்பட்டு அவற்றுக்கு விடை காண்பதன் அடிப்படையில் இப்பகுதி வடிவமைக்கப்பட்டுள்ளது. மற்றும் ஆய்வு பிரதேசம், மாதிரித் தெரிவுப் தரவுப் பகுப்பாய்வு முறை போன்ற பல முக்கிய விடயங்களை கொண்டதாக

அமைகிறது. ஆய்வுப்பிரதேச குடித்தொகையின் அடிப்படையில் நோக்கமாதிரி தெரிவுகள் இதில் இடம்பெறுகின்றன. ஆய்வு வினாக்களுக்கான விடைகளை தேடி அறிவதன் மூலம் பல்வேறு பிரச்சினைகள் கண்டுபிடிக்கப்பட்டு ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன.

**பொது நோக்கம்**

விசேட தேவையுடைய மாணவர்கள் கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காண்பதுடன் அவர்களது கற்றலில் ஆசிரியர்களின் வகிபங்கினை ஆராய்வதாகும்.

**விசேட நோக்கங்கள்**

1. விசேட தேவையுடைய மாணவர்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ள கற்பித்தல் முறைகளை அறிதல்.
2. விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்பித்தல் முறைகளில் ஆசிரியர்களின் வகிபாகம் எவ்வாறு உள்ளது என்பதை இனங்காணல்.
3. விசேட தேவையுடைய மாணவர்களின் குறைபாடுகளுக்கும், ஆசிரியர்களின் கற்பித்தல் வகிபாகத்திற்கும் இடையிலான தொடர்பினை கண்டறிதல்.
4. விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பரிகார கற்பித்தலை மேற்கொள்வதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கண்டறிதல்.
5. விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியரின் வகிபங்கை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளையும், ஆலோசனைகளையும் பரிந்துரைத்தல்.

**ஆய்வு பிரதேசம்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 5 கல்வி வலயங்களிலும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அலகுகள் காணப்படுகின்றது. இதில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் மற்றும் கல்குடா கல்வி வலயம் ஆகிய இரு வலயங்களிலும் உள்ள விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அலகுகளைக் கொண்ட பாடசாலைகள் ஆய்வாளனின் ஆய்வுப் பிரதேசமாகும்.

**அட்டவணை 3.2.1 மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 5 வலயங்களில் காணப்படும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அலகுகளைக் கொண்ட பாடசாலைகள் பற்றிய விபரம்.**

| கல்வி வலயம் | பாடசாலைகளின் எண்ணிக்கை | | | | ஆசிரியர்களின் எண்ணிக்கை | வி.தே.அலகிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1AB | 1C | வகைII | வகைIII | | **ஆண்** | **பெண்** |
| மட்டக்களப்பு | 00 | 05 | 00 | 00 | 10 | 12 | 18 |
| மட்டக்களப்பு | 01 | 02 | 00 | 00 | 06 | 05 | 08 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மத்தி | | | | | | | |
| மட்டக்களப்பு மேற்கு | 01 | 01 | 01 | 01 | 11 | 23 | 33 |
| பட்டிருப்பு | 01 | 04 | 00 | 00 | 10 | 04 | 08 |
| கல்குடா | 03 | 01 | 01 | 00 | 10 | 13 | 21 |
| மொத்தம் | **22** | | | | **47** | **145** | |

**மூலம் : வலயக் கல்வி அலுவலகம் மட்டக்களப்பு மேற்கு, கல்குடா 2021**

**ஆய்வின் மாதிரித் தெரிவு**

ஆய்வு முறையிலே மாதிரி மிக முக்கியமான முழுக் குடித்தொகை இடமும் ஆய்வினை மேற்கொள்வது இயலாத ஒன்றாகும். அச்சந்தர்ப்பத்திலேயே மாதிரி ஒன்றை தெரிவு செய்யவேண்டும். குடித்தொகையை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் ஒரு குடித்தொகையில் இருந்து குறிப்பிட்ட உறுப்பினர்கள் ஆய்வில் ஈடுபடுவர். மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் விசேட தேவையுடைய அலகுகளைக் கொண்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு விசேட தேவையுடைய மாணவர்களும், அவர்களது பெற்றோர்களும், இம்மாணவர்ளுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களும், அதிபர்களும் மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆய்விற்காக தரவுகள் சேகரிக்கும் பொருட்டு அடிப்படையாக அமைவது மாதிரி முறையாகும். இங்கு ஆய்வுத் தலைப்புக்கு ஏற்ப தரவுகளை பெறும் பொருட்டு மாதிரி தெரிவு முறை ஒன்றான நோக்க மாதிரிகளின் அடிப்படையில் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டுட்டு தரவுகள் பெறப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.3.1 ஆய்வுக்காக தெரிவு செய்யப்படவுள்ள விசேட வேையுடைய மாணவர்களுக்கான அலகுகளைக் கொண்ட பாடசாலைகள் விபரம்**

| இல | மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலயங்களில் விசேட தேவையுடைய அலகுகளை கொண்ட பாடசாலைகள் | வகை | அதிபர் | ஆசிரியர்கள் | | வி.தே.மாண-வர்கள் | | பெற்றோர்கள் | | சே.கா. ஆசிரிய ஆலோ சகர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | மொத்தம் | தெரிவு | மொத்தம் | தெரிவு | மொத்தம் | தெரிவு | |
| 01 | A | II | 01 | 2 | 2 | 15 | 15 | 15 | 15 | 01 |
| 02 | B | 1AB | 01 | 3 | 3 | 17 | 17 | 17 | 17 | |
| 03 | C | 1C | 01 | 3 | 3 | 12 | 12 | 12 | 12 | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 04 | D | III | 01 | 2 | 2 | 12 | 12 | 12 | 12 | |
| 05 | E | 1AB | 01 | 2 | 2 | 8 | 8 | 8 | 8 | 01 |
| 06 | F | 1C | 01 | 2 | 2 | 7 | 7 | 7 | 7 | |
| 07 | G | II | 01 | 2 | 2 | 9 | 9 | 9 | 9 | |
| 08 | H | 1AB | 01 | 2 | 2 | 6 | 6 | 6 | 6 | |
| 09 | I | 1AB | 01 | 2 | 2 | 4 | 4 | 4 | 4 | |
| | மொத்த மாதிரிகளின் எண்ணிக்கை | 09 | 09 | 20 | 20 | 90 | 90 | 90 | 90 | 02 |

**மூலம் : மட்டக்களப்பு மேற்கு மற்றும் கல்குடா கல்வி வலய திட்டமிடல் பிரிவு 2020.**

ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட 09 விசேட தேவையுடைய அலகுகளைக் கொண்ட பாடசாலைகளில் உள்ள 09 அதிபர்களும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். இவ் 09 பாடசாலைகளில் உள்ள விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் 20 ஆசிரியர்களும், 02 சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களும், இவ் 09 பாடசாலைகளில் இனங்காணப்பட்ட விசேட தேவையுடைய மாணவர்கள் 90 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். இவ் 09 பாடசாலைகளில் நோக்க மாதிரியில் இனங்காணப்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களது 90 பெற்றோர்கள் நோக்க மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர்.

**தரவுப்பகுப்பாய்வும் வியாக்கியானமும், கலந்துரையாடலும்**

தகவல்கள் அனைத்தும் அட்டவணைகள், வரைபடங்களை பயன்படுத்தி அளவு சார்ந்த மற்றும் பண்பு சார்ந்த கலப்பு அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆசிரியர்களிடம் இருந்து வினாக்கொத்துக்கள் மூலம் பெறப்பட்ட தரவுகளே பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. ஆய்வு வினாக்களுக்கு விடை காணும் வகையில் 20 ஆசிரியர்களும், 09 அதிபர்களும், 02 ஆசிரிய ஆலோசகர்களும், 90 பெற்றோர்களும், 90 மாணவர்களும் மாதிரிகளாக குறித்த விசேட அலகுகளைக் கொண்ட பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டனர். இப்பகுதியானது ஆய்வு பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் பெறப்பட்ட தரவுகள் விரிவாக வியாக்கியானம் மற்றும் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

***விசேட தேவையுடைய மாணவர்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ள கற்பித்தல் முறைகளை இனங்காணல்.***

உரு 01 விசேட தேவையுடைய மாணவர்களின் வகைப்பாடுகள்




விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அலகுகளில் காணப்படும் மாணவர்களின் வகைப்பாடுகளாக மன வளர்ச்சிக் குறைபாடுடைய மாணவர்கள் 40% ஆகவும், உடல்சார் குறைபாடுடைய மாணவர்கள் 20% ஆகவும், செவிப்புலக் குறைபாடுடைய மாணவர்கள் 15% ஆகவும், பேச்சுத் திறன் குறைபாடு மாணவர்கள் 15% ஆகவும், கற்றல் குறைபாடுடைய மாணவர்கள் 10% ஆகவும் காணப்படுகின்றனர். எனவே பகுப்பாய்வின்படி இந்த விசேட அலகுகளில் மனவளர்ச்சிக் குறைபாடுடைய மாணவர்களே அதிகமாக காணப்படுகின்றனர்.

பொதுவாக சாதாரண மாணவர்களுக்கு தேவைப்படாத விசேட கவனம் மற்றும் குறிப்பிட்ட தேவைகள் அவசியமாக இருக்கும் மாணவர்களை விசேட தேவையுடைய மாணவர்கள் என்பர் (Ebony Howard, 2021).

பிள்ளைகள் ஒரே தன்மையான ஆற்றல், அறிவுடையவர்களாக இருப்பதில்லை. ஒவ்வொரு மாணவரும் பல்வேறுபட்ட கற்றல் தேவையுடையவர்களாக காணப்படுவார்கள். இவர்கள் அனைவரையும் சீரான வழியில் நெறிப்படுத்துவது ஆசிரியரின் பொறுப்பாகும். வகுப்பறையில், கற்றல் இடர்பாடுடைய மாணவர்கள், வலது குறைந்தோர் எனப் பல வகையான மாணவர்கள் காணப்படுவார்கள். இவர்களின் கற்றல் பாங்கு, ஆற்றல், திறன் போன்றன ஒவ்வொருவருக்கும் வித்தியாசமானதாகும். இவர்கள் கற்றுக் கொள்வதில் வித்தியாசமான கற்றல் தேவையுடையவர்களாக காணப்படுவார்கள் (Anas & Nawastheen, 2019). எனவே மாணவர்களின் விசேட தேவைகளை கண்டறிய வேண்டும். அதன் பின்னர் ஒவ்வொரு விசேட தேவைக்கும் ஏற்ப கற்பித்தல் முறையை மாற்றியமைக்க வேண்டும்.

***விசேட தேவையுடைய மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளுக்கு ஆசிரியர்கள் பயன்படுத்தும் கற்பித்தல் முறைகளின் பொருத்தப்பாடு***




உரு 02 தனியாள் வேறுபாடுகளும் கற்பித்தல் முறைகளும்.

விசேட தேவையுடைய மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளுக்கு ஆசிரியர்கள் பயன்படுத்தும் கற்பித்தல் முறைகளின் பொருத்தப்பாடு தொடர்பாக பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு அடிப்படையில் செவிப்புல குறைபாட்டுக்கு தனியாள் முறை பொருத்தம் என 20% ஆன ஆசிரியர்களும், சைகை முறை பொருத்தம் என 20% ஆன ஆசிரியர்களும், விளையாட்டு முறை பொருத்தம் என 30% ஆன ஆசிரியர்களும், குழு முறை பொருத்தம் என 10% ஆன ஆசிரியர்களும், செயற்பாட்டு முறை பொருத்தம் என 20% ஆன ஆசிரியர்களும் பதில்களை வழங்கியுள்ளனர்.

மன வளர்ச்சி குறைபாட்டுக்கு தனியாள் முறை பொருத்தம் என 30% ஆன ஆசிரியர்களும், விளையாட்டு முறை பொருத்தம் என 20% ஆன ஆசிரியர்களும், குழு முறை பொருத்தம் என 20% ஆன ஆசிரியர்களும், செயற்பாட்டு முறை பொருத்தம் என 20% ஆசிரியர்களும், பாத்திரம் ஏற்று நடித்தல் முறை பொருத்தம் என 10% ஆன ஆசிரியர்களும் பதில்களை வழங்கியுள்ளனர்.

Uzunboylu,H. & Özcan,D. என்பவர்கள் 2019 ஆண்டு விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்பித்தல் முறைகளின் பகுப்பாய்வு எனும் தலைப்பில் துருக்கியில் செய்த ஆய்வில் விசேட கல்வியில் கற்பித்தல் முறைகள் தொடர்பாக ஆசிரியர்கள் ஒரு வழிகாட்டுதலை வழங்க வேண்டும். இதில் ஆசிரியர் முதலில் மாணவர்களின் குறைபாடுகளை கண்டறிய வேண்டும். அதன் பின்னர் குறைபாடுகளுக்கு ஏற்ப கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

மேற்கூறிய ஆய்வு முடிவுடன் ஒப்பிடும் போது விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியரின் கற்பித்தல் முறைகள் பற்றி பெறப்பட்ட முடிவுகள் ஆய்வாளன் இந்த ஆய்வு முடிவை உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

***விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்பித்தல் முறைகளில் ஆசிரியர்களின் வகிபாகம் எவ்வாறு உள்ளது என்பதை அறிதல்.***

உரு 03 ஆசிரியரின் வினைத்திறனான வகிபாகங்கள்




**உரு 4.3 ஆசிரியரின் வினைத்திறனான வகிபாகங்கள்**

கருத்துக்கள்

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் போது ஆசிரியரின் வினைத்திறனான வகிபாகங்கள் தொடர்பாக வினாவப்பட்ட போது கிடைக்கப்பெற்ற பதில்களின் பகுப்பாய்வின் படி ஆசிரியர் - பெற்றோர் தொடர்பு 20% ஆன ஆசிரியர்கள் மிகநன்று என்றும், 10% ஆன ஆசிரியர்கள் நன்று என்றும், சுமார் 10% ஆன ஆசிரியர்கள் சராசரி என்றும், 60% ஆன ஆசிரியர்கள் குறைவு என்றும் பதிலளித்தனர். எனவே பகுப்பாய்வின் படி ஆசிரியர் - பெற்றோர் தொடர்பு குறைவாகவே உள்ளது. பொதுவாக மாணவர்களின் கற்றல், கற்பித்தலில் ஆசிரியர் - பெற்றோர் தொடர்பு மிக முக்கியமான ஒன்றாகும். அதிலும் விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியர் - பெற்றோர் தொடர்பு மிக முக்கியமான ஒன்றாகும். பிள்ளையின் முழுமையான முன்னேற்றத்திற்கு ஆசிரியரும் பெற்றோரும் இணைந்து செயற்பட வேண்டும். ஆசிரியர் பெற்றோர் ஊடாக பிள்ளையின் இயல்புகளை விளங்கிக்கொண்டால் தான் கற்றல், கற்பித்தலை சிறப்பாக மேற்கொள்ள முடியும்.

கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய நான்கு மொழி திறன்களும் வீட்டில் இருந்தே ஆரம்பமாவதால் பிள்ளைகளின் மொழித்திறன் விருத்தியில் பெற்றோரின் வகிபங்கு அளப்பெரியது பிள்ளைகளது கற்றலுக்கான ஆர்வத்தையும் நாட்டத்தையும் உருவாக்குவதும் பேணுவதும் பெற்றோரினதும், ஆசிரியர்களினதும் முக்கிய கடமையாகின்றன.

மேற்கூறிய ஆய்வு முடிவுடன் விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர் பிள்ளைகளின் கற்றல் குறைபாடுகளை விளங்கிக்கொள்தல் என்னும் விடயத்தில் காணப்பட்ட முடிவுகள் ஆய்வாளன் இந்த ஆய்வை மேலும் முன்னகர்த்தி செல்வதற்கும், ஆய்வாளன் ஆய்வு முடிவை குறிப்பிடலாம்.

***விசேட தேவையுடைய மாணவர்களின் செயற்பாடுகளுக்கும் ஆசிரியரின் கற்பித்தல் வகிபாகத்திற்கும் இடையிலான தொடர்புகள்***




உரு 04 மாணவர்களின் செயற்பாடுகள் மற்றும் ஆசிரியரின் வகிபாகம்

விசேட தேவையுடைய மாணவர்களின் செயற்பாடுகளில் சுய கற்றல் தொடர்பாக ஆசிரியர்களிடம் கேட்கப்பட்ட வினாவுக்கு 10% ஆன ஆசிரியர்கள் மிகநன்று என்றும், 10% ஆன ஆசிரியர்கள் நன்று என்றும், சுமார் 10% ஆன ஆசிரியர்கள் சராசரி என்றும், 70% ஆன ஆசிரியர்கள் குறைவு என்றும் பதிலளித்தனர்.

இதனால் கூடுதலாக விசேட தேவையுடைய மாணவர்கள் தானாகவே சுய கற்றலில் ஈடுபடுவது குறைவு. இவர்கள் இன்னொருவரின் தூண்டுதலினாலே கற்க ஆரம்பிக்கின்றனர் என்ற முடிவுக்கு வர முடியும். குறைவு, மிகக்குறைவு என பதிலளித்தவர்கள் கூறிய காரணங்களாக, இவர்களுக்கு ஆசிரியரின் உதவி தேவை, அடிப்படை எழுத்தறிவு தெரியாது, அவர்களுக்கான அன்பு, காப்புத் தேவைகள் அதிகம் தேவை எனக்கூறினர். எனவே ஒரு ஆசிரியர் அல்லது பெற்றோர் இவர்களை வழிப்படுத்தினால் இவர்களின் கற்றலை மேம்படுத்த முடியும்.

ஆனால் உபுள் இந்திக்க, 2011 ஆண்டு செய்த ஆய்வின் முடிவுகளில் விசேட தேவையுடைய மாணவர்கள் தாழ்வு மனப்பாங்குடையவர்கள், சுயமாக செயற்பட முடியாதவர்கள் எனக் கூறுகிறது. மேற்கூறிய ஆய்விலும் விசேட தேவையுடைய மாணவர்கள்

சுயமாக கற்றலில் ஈடுபட முடியாதவர்கள் என கூறப்பட்டுள்ளது. இதன்படி ஆய்வாளனின் ஆய்வுடன் இந்த ஆய்வு முடிவுகள் ஒத்துப் போகின்றது.

மாணவர்களது வாழ்க்கையில் சகபாடிகளின் பங்களிப்பு பலமான விடயமாக அமைகின்றது தம்மை ஒத்த வயது குழுவினருடன் சேர்த்து நட்பு கொள்வதன் ஊடாக மகிழ்ச்சியும் சுதந்திர உணர்வும் அதிகரிக்கின்றது வகுப்பறையில் சகபாடிகள் உடன் இணைந்து கற்கவும் சகபாடிகள் மூலம் கற்றுக் கொள்ளவும் வாய்ப்பு அதிகரிக்கும் போது கற்றல் பலமடைகின்றது. இம்மாணவர்களை அவதானித்த போது கூடுதலான மாணவர்கள் சகபாடிக்குழுக்களோடு இணைந்தே தமது செயற்பாடுகளை செய்கின்றனர்.

***விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பரிகார கற்பித்தலை மேற்கொள்வதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கண்டறிதல்***




கருத்துக்கள்

உரு 05 விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல், கற்பித்தலுக்கான போதிய வளங்கள்

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல், கற்பித்தலுக்கான போதிய வளங்கள் உள்ளனவா? என்பது தொடர்பாக கேட்கப்பட்ட போது கிடைக்கப்பெற்ற பதில்களின் பகுப்பாய்வின் படி 10% ஆன ஆசிரியர்கள் அதிகம் என்றும், 10% ஆன ஆசிரியர்கள் ஓரளவு என்றும், சுமார் 20% ஆன ஆசிரியர்கள் மிகக் குறைவு என்றும், 60% ஆன ஆசிரியர்கள் குறைவு என்றும் பதிலளித்தனர். பகுப்பாய்வின் படி விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல், கற்பித்தலுக்கான போதிய வளங்கள் குறைவாகவே உள்ளது. எனவே இம்மாணவர்களுக்கு கற்பிப்பதற்கான போதிய வளங்கள் காணப்பட வேண்டும். இதன் அடிப்படையில் அதிபர்களுடன் இது தொடர்பாக கலந்துரையாடியதன் பிரகாரம் 50% ஆன அதிபர்கள் எதிர்காலத்தில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மிகப் பொருத்தமான வகுப்பறைச் சூழலை உருவாக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

ஆனால் பக்கீர் ஜ.ஃ.பர், என்பவர்கள் 2004 ஆண்டு மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான வகுப்பறைச் சூழல் சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்பதை குறிப்பிட்டுள்ளார். அந்த ஆய்விலும் வகுப்பறைச்

சூழல், பௌதீக சூழல், உளவியல் சூழல் என்பன சிறப்பாக அமையும் போதுதான் விசேட தேவையுடைய மாணவர்கள் சிறப்பாக கற்றலை மேற்கொள்வார்கள் என கூறப்பட்டுள்ளது.

***விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் வகிபங்கை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளையும், ஆலோசனைகளையும் பரிந்துரைத்தல்.***




உரு 06 அதிபரின் பங்களிப்பு

விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல், கற்பித்தலில் ஆசிரியரின் வகிபங்கை அதிகரிப்பதற்கு அதிபரின் செயற்பாடு தொடர்பாக வினவப்பட்ட போது கிடைக்கப்பெற்ற பதில்களின் பகுப்பாய்வின் படி 20% ஆன ஆசிரியர்கள் மிக அதிகமாக என்றும், 10% ஆன ஆசிரியர்கள் அதிகம் என்றும், 10% ஆன ஆசிரியர்கள் ஓரளவு என்றும், சுமார் 20% ஆன ஆசிரியர்கள் மிகக் குறைவு என்றும், 40% ஆன ஆசிரியர்கள் குறைவு என்றும் பதிலளித்தனர்.

பாடசாலைகளின் இயக்கத்திற்கும் சமூக எதிர்பார்ப்பிற்கும் ஏற்ப மாணவர்களை உருவாக்குவதில் பாடசாலை சார் அதிபரின் முகாமைத்துவம் பணி மிகவும் இன்றியமையாதது விசேட தேவைகொண்டவர்களது கற்றல் மேம்பாட்டிற்கு அதிபரின் ஒத்துழைப்பு அவசியம். பௌதீக வளங்கள், செயற்பாட்டு அறைகள், நவீன கட்புல செவிப்புல சாதனங்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகள், மேலதிக கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளைத் திட்டமிட்டு வழங்கி விசேட தேவை கொண்ட மாணவர்களது அடிப்படைத் தேர்ச்சி மட்டத்தை உயர்த்துவதற்கு அதிபர்களது முகாமைத்துவத் திறன் அவசியமானதொன்று.

ஆகவே மேற்கூறிய ஆய்வு முடிவுடன் வகுப்பறை கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் மேற்பார்வை அவசியம் என்பதை காட்டுகிறது. இதனால் இவ்வாய்வை முன்னகர்த்திச் செல்வதற்கு உறுதுணையாக அமைகிறது.

**முடிவுகளும், விதப்புரைகளும்**

***விசேட தேவையுடைய மாணவர்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ள கற்பித்தல் முறைகள்***

1. ஆய்வுக்குட்படுத்திய விசேட அலகுகளில் 40% ஆன மனவளர்ச்சி குறைபாடுடைய மாணவர்களும், 20% ஆன உடல்சார் குறைபாடுடைய மாணவர்களும், 15% ஆன

செவிப்புலக் குறைபாடுடைய மாணவர்களும், 15% ஆன பேச்சுத் திறன் குறைபாடுடைய மாணவர்களும், 10% ஆன கற்றல் குறைபாடுடைய மாணவர்களும் காணப்படுகின்றனர்.

2. குறித்த விசேட அலகுகளில் நவீன தொழினுட்ப சாதனங்கள் குறைவாக காணப்படுகின்றமையால் 80% ஆன ஆசிரியர்கள் நவீன தொழினுட்பத்தை பயன்படுத்தி கற்பிப்பது குறைவாக உள்ளது.

3. ஆய்வுக்குட்படுத்திய விசேட அலகுகளில் பாத்திரம் ஏற்று நடித்தல் கற்பித்தல் முறை நடாத்தப்படுவது குறைவாக காணப்படுகிறது.

**விதப்புரைகள்**

1. விசேட தேவையுடைய மாணவர்களது தேவைகளுக்கு ஏற்ப கற்பித்தல் முறைகளை பயன்படுத்த வேண்டும். இதற்கு முதலில் ஆசிரியர் மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளை கண்டு பிடிக்க வேண்டும்.

2. சைகை முறைக் கற்பித்தல், விளையாட்டு முறைக் கற்பித்தல், செயற்பாட்டு முறைக் கற்பித்தல், தனியாள் முறைக் கற்பித்தல், நவீன தொழினுட்ப பயன்பன்பாட்டின் ஊடான கற்பித்தல், முறைக் கற்பித்தல், குழு முறைக் கற்பித்தல், IEP முறைக் கற்பித்தல் போன்ற கற்பித்தல் முறைகளை ஒவ்வொரு விசேட தேவையுடைய மாணவர்களின் விசேட தன்மைக்கு ஏற்ப கற்பிக்க வேண்டும்.

***விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்பித்தல் முறைகளில் ஆசிரியர்களின் வகிபாகம் எவ்வாறு உள்ளது என்பதை அறிதல்.***

1. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் பல்வேறு வகையான விசேட தேவையுடைய மாணவர்கள் காணப்படுகின்றமையால் ஆசிரியர்களுக்கு இம்மாணவர்களது கற்றல், கற்பித்தலை சிறப்பாக மேற்கொள்வது சவால்மிக்கதாக காணப்படுகிறது.

2. ஆசிரியர்கள் கதை கூறல், சைகைமொழி, நடித்துக்காட்டுதல் போன்ற பல முறைகள் மூலம் இம்மாணவர்களுக்கு தகவல்களை கடத்த முயன்றாலும் அதிகபடியான மாணவர்கள் பயனடைவது குறைவாக உள்ளது.

3. பல்வேறு வகையான விசேட தேவையுடைய மாணவர்கள் காணப்படுதல், மாணவர்கள் செயற்பாடு இன்றி செவிமடுப்பவர்களாகவே காணப்படுகின்றனர். இவ்வாறான காரணங்களால் இம்மாணவர்களுக்கு கற்பிக்கும் போது ஆசிரியர்கள் கடத்தல் வகிபாகத்தை நிறைவேற்றுவது குறைகின்றது.

**விதப்புரைகள்**

1. விசேட தேவையுடைய மாணவர்களின் பல்வகைமைக்கு ஏற்ப ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தல் வகிபாகங்களை மாற்றியமைக்க வேண்டும். அதாவது பாட விடயங்களை கதைகளாக கூறுதல் மூலமும், சில வீடியோ காட்சிகள் மூலமும், ஓடியோ காட்சிகள் மூலம் இம்மாணவர்களுக்கு இலகுவான மொழிநடையில் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

2. மாணவர்களிடம் ஆசிரியர்கள் சிறப்பான தொடர்பாடலை ஏற்படுத்த வேண்டும். அதாவது செவிப்புலக் குறைபாடுடைய மாணவர்களுக்கு ஆசிரியர் சைகை மொழி ஊடாக தகவல்களை வழங்கலாம். இதில் ஆசிரியர்களின் உதட்டசைவுகளை பார்த்து மாணவர்கள் விளங்கிக்கொள்ளக்கூடிய முறையில் தகவல்களை கடத்த வேண்டும்.

3. இம்மாணவர்களுடன் ஆசிரியர்கள் கலந்துரையாட வேண்டும். மேலும் பாட உள்ளடக்கத்தை கட்டி எழுப்பும் போது எளியவற்றில் இருந்து சிக்கலானவற்றிற்கும், அறிந்தவற்றில் இருந்து அறியாதவற்றிற்கும் மாணவர்களை கொண்டு செல்ல வேண்டும்.

***விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பரிகார கற்பித்தலை மேற்கொள்வதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கண்டறிதல்***

**மாணவர்களுக்கு கற்றல், கற்பித்தலுக்கான போதிய வளங்கள்**

**முடிவுகள்**

1. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் 80% ஆன விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல், கற்பித்தலுக்கான போதிய வளங்கள் குறைவாகவே உள்ளது.

2. வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தளபாட வசதிகள் குறைவாக உள்ளதுடன் கூடிய உயரமுடைய மாணவர்களுக்கும், குறைந்த உயரமுடைய மாணவர்களுக்கும் ஏற்ப கதிரை, மேசையின் ஒழுங்கமைப்பு குறைவாக காணப்படுகின்றது.

3. இப்பாடசாலைகள் கஸ்ட, அதிகஸ்ட பாடசாலைகளாக அமைந்துள்ளமையால் போதிய வளங்களை பெறுவதும் சிரமமானதாக காணப்படுகின்றது.

**விதப்புரைகள்**

1. விசேட தேவையுடைய மாணவர்களுக்கு ஏற்ப வகுப்பறைச் சூழல் பொருத்தமான வளங்களை கொண்டதாக மாற்றியமைக்க வேண்டும். அதற்கு பாடசாலையின் உதவியுடன் பெற்றோர், கல்வி அதிகாரிகளின் உதவிகளைப்பெற வழிவகுத்தல்

அவசியம் ஆகும். இம்மாணவர்கள் கற்கக்கூடிய அளவுக்கு வகுப்பறைகளை ஒழுங்கமைத்துக் கொடுப்பதற்கு பாடசாலை நிர்வாகத்தினரும், பெற்றோரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்.

2. வகுப்பறையின் பருமனுக்கு ஏற்ப மாணவர்களின் எண்ணிக்கையை பேணுவதுடன் தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்தப்படுத்தல் பொருத்தமான தளபாட வசதிகளை ஏற்படுத்தி அவர்களது தேவைக்கு ஏற்ப அமைத்தல். இதற்கு பெற்றோர் அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவியைப் பெறலாம்.

3. 2006,10,17 மற்றும் 1467/15 இலக்கத்தை கொண்ட குறைபாடுகள் உள்ளவர்களின் உரிமை பாதுகாக்கப்படும் சட்டத்தின் கீழ் சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2006/01 ஆம் இலக்கம் கொண்ட குறைபாடுகள் உள்ளவர்கள் தொடர்பான கட்டளைகளை அமுல்படுத்துவதற்காக கல்விச் செயலாளரினால் வெளியிடப்பட்ட இலக்கம் 7006/09 மற்றும் 2007.05.14 ஆம் திகதி சுற்றறிக்கையின் பிரகாரம் சகல பாடசாலைகளுக்கும் பிரவேச வழிகள், நூலகம், விளையாட்டு மைதானம், ஆய்வுக்கூடங்கள், சுகாதாரமையங்கள் போன்ற இடங்களுக்கான பிரவேச வழிகளை ஏற்படுத்துவது பாடசாலையின் கட்டிட பொறியியலாளர், அதிபர், கல்வி அதிகாரிகளின் பொறுப்பாகும்.

***மாணவர்களின் கற்றல், கற்பித்தலில் ஆசிரியர்களின் வகிபங்கை அதிகரிப்பதற்கு அதிபரின் செயற்பாடு***

**முடிவுகள்**

1. விசேட கல்வி அலகுகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுடன் பெற்றோர் ஒத்துழைத்து செயற்படுவது குறைவாக உள்ளமையால் அதிபர்களுக்கு ஆசிரியர்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்வது சவால்மிக்கதாக உள்ளது.

2. ஆசிரியர் பற்றாக்குறை உள்ளதால் ஆசிரியர்கள் சுதந்திரமாக கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுவது குறைவாக உள்ளதுடன் அதிபர்களுக்கு போதிய பயிற்சி பெற்ற ஆசிரியர்களை பெற்றுக்கொள்வது சவால்மிக்கதாக உள்ளது.

**விதப்புரைகள்**

1. ஒவ்வொரு பாடசாலை அதிபர்களது பங்களிப்பு அப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. எனவே விசேட தேவையுடைய மாணவர்களின் செயற்பாடுகளுக்கு அவர்களது பங்களிப்பை கட்டாயமாக்க வேண்டும். விசேட தேவையுடைய மாணவர்களுக்கு பல்வேறு தேவைப்பாடுகள் இருக்கும் அவற்றை அதிபர் பூர்த்தி செய்தல் வேண்டும். தேவைப்படும் வளங்களை பாடசாலை, குடும்பம், சமூகம், அமைப்புக்கள், நிறுவனங்கள் மற்றும் ஆலயங்கள் ஊடாக பெற்று பயன்படுத்த வழியமைத்தல் வேண்டும். இதில் அதிபரின் பங்களிப்பே பிரதானமானதாகும்.

2. கல்விச் செயலாளரின் இலக்கம் 17/2014 மற்றும் 2014.05.23 ஆம் திகதி சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட கல்வி அலகுகளில் முழுநேர சேவையில் ஈடுபட்டுள்ள விசேட கல்வி ஆசிரியர்களுக்கு 10% ஆன கொடுப்பனவு பற்றி தெளிவுபடுத்தல்

3. சகல விசேட கல்வி அலகிலும் ஆசிரியர்கள் வகுப்பறையில் மாணவர்களுக்கு உதவிகளை வழங்கவும், கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள், பயண ஆசிரியர்களின் செயற்பாடுகள் உள்ளக மற்றும் வெளியக மேற்பார்வைக்கு உள்ளாக்கப்பட வேண்டும். அதற்கு மேலதிகமாக விசேட கல்வி அலகினுள் பின்வரும் அத்தியாவசிய ஆவணங்கள் இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படல் வேண்டும். அந்த கோவைகள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகள் அதிபரினால் மேற்பார்வை செய்து வசதிகள் வழங்கப்பட்டு விசேட கல்வி அலகில் பாடசாலைக் கட்டமைப்புக்குரிய அலகாக பேணப்பட வேண்டும்.

**உசாத்துணைகள்**


அருள்மொழி, செ. (2016). *கல்வி ஆய்வு முறை.* எவகிறீன் அச்சகம் மட்டக்களப்பு.

சிவகுமார், த. (2009). *விசேட கல்வி அறிமுகமும் பிரயோகங்களும்.* குரு பிறிண்டர்ஸ்.

ஜ.ஃ.பர் ப. (2004). *வெற்றிகரமான கற்பித்தல் வகுப்பறை முகாமைத்துவம்.* செலெக்சன் ஒப்செட் அக்கரைப்பற்று.

Anas, P. L., Nawastheen, F. M. (2019). Teachers' perception towards in fulfilling diverse learners needs in the classroom teaching-learning process. *South Eastern University International Arts Research Symposium*. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/4170

Desforges, C., & Abouchaar, A. (2003). The impact of parental involvement, parental support and family education on pupil achievemet, (No. 433). Nottingham, England: DfES. http://relationalschools.org/2017/08/12.

Mohaned Ghazi Abed. (2018). Teachers' Perspectives Surrounding ICT Use amongst SEN Students in the Mainstream Educational Settin. *World Journal of Education*. http://wje.sciedupress.com.

Megan Walsh, (2018). The Inclusion of Students with Special Needs in the General Education Classroom. Dominican University of California. https://doi.org/10.33015/dominican.edu/2018.EDU.ST.01

Shazny, S. H. M. (2021). Challenges faced by students with special needs and learning opportunities for them. *Muallim Journal of Social Sciences and Humanities*, *5(*1), 74-83. https://doi.org/10.33306/mjssh/113.

Uzunboylu, H., Özcan, D. (2019). Teaching methods used in special education: A content analysis study. *International Journal of Cognitive Research in Science, Engineering and Education (IJCRSEE)*, 7(2), 99-107.

# கற்றல்-கற்பித்தல் செயன்முறையில் இணையவழிச் சாதனங்களின் பயன்பாடு: சிரேஷ்ட இடைநிலை வகுப்புகள் பற்றிய ஓர் ஆய்வு

**இராசசிங்கம் நாகேந்திரன்**
மட்/மட்/ பாலமீன்மடு விக்னேஸ்வரா வித்தியாலயம்,
பாலமீன்மடு, மட்டக்களப்பு.
nagendran18pa@gmail.com

**தேவராசா முகுந்தன்**
முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை,
கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
நாவல, நுகேகொட.
tmuku@ou.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

வகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் செயன்முறைகளில் இணையவழிக் கற்றல் சாதனங்களின் பயன்பாட்டினைக் கண்டறிந்து அவற்றை மேலும் வலுப்படுத்துவதற்கான ஆலோசனைகளை முன்வைக்கும் நோக்குடன் இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டது. இவ்வாய்விற்காக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களில் இருந்து கல்குடா, கல்வி வலயம் நோக்க மாதிரியாக தெரிவு செய்யப்பட்டன. இவ்வலயத்திலுள்ள கோட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ள 86 பாடசாலைகளிலிருந்து பாடசாலை வகைகள் என்ற அடிப்படையில் படையாக்கம் செய்யப்பட்டு ஒவ்வொரு வகைப் பாடசாலைகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் ஐம்பது (50%) சதவீதமான பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. அந்தவகையில் 1AB பாடசாலைகள் - மூன்றும் (3) 1C பாடசாலைகள் - நான்கும் (4) வகை-II பாடசாலைகள் - பதின்னொன்றுமாக (11) மொத்தம் -18 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. இங்கு சிரேஸ்ட இடைநிலைப் பிரிவில் கற்கும் மாணவர்கள் மாத்திரம் ஆண், பெண் பத்துக்கு ஒருவர் (10:1) என்ற விகிதத்தில் குலுக்கல் அடிப்படையில் ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் இலகு எழுமாற்று மாதிரி மூலம் தெரிவு செய்யப்பட்டனர். ஆசிரியர்கள் ஒருபாடசாலையில் இரண்டுபேர் வீதம் -36 பேர் தெரிவு செய்யப்பட்டனர். ஆய்வுக்காக வினாக்கொத்து, அவதானிப்பு, ஆவணங்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஆய்வுக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. ஆய்வு நோக்கங்களுக்கேற்ப ஆய்வு வினாக்கள் தயாரிக்கப்பட்டு அளவுசார், பண்புசார் தரவுகள் இலத்திரனியல் விரிதாள் (Excel), சமூக விஞ்ஞான புள்ளி விபரவியல் பொதி (SPSS, Version-25) போன்ற மென்பொருள்களைப் பயன்படுத்தி பகுப்பாய்வு, வியாக்கியானம், கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டன. ஆய்வு முடிவுகளாக இணையவழிக் கற்பித்தல் சாதனங்களை அதன் பங்குதாரர்களான மாணவர்கள், ஆசிரியர்கள் பயன்படுத்துவதில் ஆர்வத்தினை கொண்டிருந்தாலும் பயன்பாட்டின்போது பல பிரச்சினைகளை எதிர்கொள்பவர்களாகவே காணப்பட்டனர். அந்தவகையில் இணையவழிச் சாதனங்கள் போதியளவு இல்லாமை, இணையசாதனம் பற்றிய அறிவு போதாமை, தொழிநுட்ப ரீதியான பிரச்சினைகளை கையாளும் திறன் இன்மை, பயிற்சிகள் போதாமை, தெளிவான சமிக்ஞை இன்மை போன்ற பிரச்சினைகளுடன் தொடர்புபட்டுக் காணப்பட்டது. அடுத்து கற்றல்-கற்பித்தல் பிரச்சினைகளாக மாணவர்கள், ஆசிரியர்களின் எண்ம (Digital) அறிவு போதாமை, உரியநேரத்தில் பங்குபற்ற முடியாமை, இணையவழியிலான வளங்கள் பாடசாலையில் போதாமை கற்பவர்களின் ஊக்கமின்மை ஆகியவற்றுடன் தொடர்புடையதாக காணப்பட்டது. எனவே, இவற்றை நிவர்த்தி செய்வதற்காக அரசு, கல்வி நிறுவனம் அதுதொடர்பான அதிகாரிகள் வளங்களைப் பெற்றுக்கொடுத்தல், பயிற்சிகளை வழங்குதல், அவை தொடர்பில் வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்குதல், பாடசாலை உட்கட்டமைப்பு தொழிநுட்ப வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல் போன்ற செயற்பாடுகளூடாக நிவர்த்திக்க முடியும் என்ற விதந்துரைப்புக்களும் முன்வைக்கப்படுகின்றன.

***திறவுச் சொற்கள்:*** *தொழினுட்பம், இணையவழிக்கற்றல், இணையவழிச்சாதனங்கள், வினைத்திறனான பயன்பாடு*

**அறிமுகம்**

உலகில் இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டில் ஏற்பட்ட கொரோனா (COVID-19) தொற்று நோய் பரவல் இலங்கையையும் வெகுவாகப் பாதித்தது. இதனால் அரசு சகல பாடசாலைகளையும் மூடச்செய்ததுடன் சமூக இடைவெளி வலியுறுத்தப்பட்டதனால் பாடசாலைகளை திறப்பதில் தடையையும் ஏற்படுத்தியது. இதனால் ஒன்றரை வருடங்களாக மாணவர்கள் நேரடியான வகுப்பறை கற்றல் கற்பித்தல் இன்றி வீட்டிலேயே முடங்கினர். இக்காலப்பகுதிக்கு பொருத்தமான கற்பித்தல் முறையாக ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞான கலாசார அமைப்பு (யுனஸ்கோ, 2020), இணையவழிக்கல்வி (Online Education) கல்வி வழங்கல் முறைகளையும் முன்மொழிந்திருந்தது. அதற்கமைய இணையவழி முறையில் கற்பித்தலை மேற்கொள்வதற்காக கல்வி அமைச்சானது இணையவழிக் கல்வி வழிகாட்டல் கோவை ஒன்றை வெளியிட்டது. அதில் ஆசிரியர்களால் இணையவழியில் கற்பிப்பதற்குரிய கற்றல் துணைக்கருவிகளைக் குறிப்பிட்டு வெளியிடப்பட்டது. அக்கோவையில் புலனம்(WhatsApp), வாய்புறம்(Viber)), சூம்(Zoom), சிஸ்கோ வேப்எக்ஸ்(CiscoWebex), மைக்ரோசொ.ஃப்ட் ரீம்ஸ்(Microsoft Teems), இணையம்(Internet), கூகுள் மீட்(Google Meet), டிஸ்கோட்(Discord) போன்ற கருவிகளைப் குறிப்பிட்டு இவற்றினைப் பயன்படுத்தி கற்பித்தலினை மேற்கொள்ள கல்வி அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்டது (ICT Branch MOE, 2021).

இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட இணையவழிக் கற்பித்தலானது அனைத்து வகுப்புக்களிலும் கல்வி பயின்ற மாணவர்களை முழுமையாக பங்குபற்றச் செய்யவில்லை என்பது பாட உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் அறிக்கைகள், தரவுத்தளங்களில் பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை, வலயக்கல்வி அலுவலகங்களின் அறிக்கைகள், மாகாணக்கல்வித் திணைக்கள ஆண்டறிக்கைகள் போன்ற தரவுகளில் இருந்து பெறப்பட்டுள்ளது. இவ்வாறு பெறப்பட்ட தகவலானது ஆய்வுப் பிரதேச பாடசாலையில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது இணைவழிக் கற்றலில் பங்குபற்றியோர் 54 சதவீதமாகவே காணப்பட்டது (கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள ஆண்டறிக்கை, 2021). எனவே மீதமாகவுள்ள 46 சதவீதமான மாணவர்கள் ஏன் இணையவழிக்கல்வி சாதனங்களைப் பயன்படுத்தவில்லை என்பதே பிரச்சினையாக உள்ளது. அவ்வாறு பயன்படுத்தப்படாமைக்கான காரணங்களைக் கண்டறிந்து ஆலோசனைகளை முன்வைக்கும் நோக்குடன் ஆய்வு முன்னெடுக்கபட்டது.

**ஆய்வுப் பிரச்சினை**

Ismaili, (2021) கொவிட் -19 தொற்று உலகெங்கிலும் உள்ள உயர்கல்வி நிறுவனங்களை பாரம்பரிய வகுப்புக்களில் இருந்து நிகழ்நிலை வகுப்புகளுக்கு இடமாற்றம் செய்ய தூண்டியுள்ளது. இவ்வாறான இணையவழிச்சாதனங்கள் மற்றும் புதிய தளங்களைப் பயன்படுத்துவதில் மாணவர்கள் பெற்றுள்ள ஆரம்ப அனுபவம், அவற்றை வினைத்திறனாக பயன்படுத்துவதிலுள்ள ஆற்றல், பயிற்சி என்பன கற்றலில் திருப்தியான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது எனக் குறிப்பிடுகின்றார். அவ்வாறிருக்க கல்குடா கல்வி வலயத்தில்

சிரேஸ்ட இடைநிலை வகுப்புக்களில் இணையவழிக் கற்றல்-கற்பித்தலில் பங்குகெடுத்த 54 சதவீதமான மாணவர்களே காணப்பட்டனர் (கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள ஆண்டறிக்கை, 2021). மீதமாகவுள்ள 46 சதவீதமான மாணவர்கள் இணையவழி சாதனங்களைப் பயன்படுத்தவில்லை என்பதே ஆய்வுப்பிரச்சினையாக காணப்படுகின்றது.

**ஆய்விற்கான நியாயம்**

***பங்குதாரர்களின் நன்மைக்காக***

அறிவை மூலதனமாக பயன்படுத்தி உற்பத்தி நடைபெறும்போது அறிவை உள்வாங்குதல், சமூகம், கிராமம் எங்கும் அறிவு பரவுதல், அறிவை மக்கள் மயப்படுத்தல், இதன் விளைவாக விஞ்ஞான அறிவு, கணிணி அறிவு, தொழினுட்ப அறிவு என்பன அறிவு பெருகுவதாக அறிவுப்பொருளாதார அமைப்பு காணப்படுகிறது. இன்றைய காலத்தில் அறிவுப்பெருக்கின் வேகம் அதிகரிப்பதற்கு இணையவழிக் கற்பித்தல் முறை தொழினுட்ப சாதனங்களின் பயன்பாடானது இன்றியமையாதாக உள்ளது. இதனால் கற்றல்-கற்பித்தல் பங்குதாரர்களான மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் நன்மைகளை வழங்கக்கூடியதாக உள்ளது. இதனால் இவ்வாய்வு செய்யவேண்டியள்ளது.

***ஆய்வறிவுக்கு பங்களிப்புச் செய்வதற்கு***

கற்றல் சூழலை மேம்படுத்த கல்வியில் நவீன கற்பித்தல் முறைச் சாதனங்களை புரட்டப்பட்ட வகுப்பறைக்கு எவ்வாறு பயன்படுத்த முடியும். கல்வியின் தேசிய நோக்கங்களை வகுப்பறை நோக்கங்களாக மாற்றும் செயற்பாடுகளில் ஆசிரியருக்கு கல்வித்தொழினுட்ப அறிவு முக்கியம் பெறுகின்றது. பொதுவாக விளைதிறன் மிக்க கற்றல் செயற்பாடுகளுக்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க கூடியவராகவும், அதனை ஒழுங்குபடுத்தி முகாமைப்படுத்தும் முகாமையாளராகவும் ஆசிரியா் தன்னை வளப்படுத்திக் கொள்வதற்கு இணையவழி கற்பித்தல் சாதனங்கள் உறுதுணையாக அமைகின்றது.

***ஆய்வுக்கருவிகளின் விருத்திக்கு***

அரசாங்க மாற்றம், கல்விச் சிந்தனைகள் மாற்றம் காலத்துக்குக் காலம் அரசாங்கம் மாறும்போது புதிய புதிய வடிவம் பெறுகின்றன. இதனால் காலத்தின் தேவைக்கேற்ப ஆசிரியரின் நடிபங்கு, கல்வித் தொழினுட்பம் மற்றும், கற்பித்தல் முறைகள் என பல மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. எனவே ஆசிரியரும் இம்மாற்றத்தில் உட்பட்டு தானும் செயற்பட்டு மாறவேண்டும். இவ்வாறான மாற்றமானது மாணவா் மையக் கற்பித்தலிலும், கற்பித்தல் தொழினுட்ப சாதனங்களின் பயன்பாட்டிலும் மாணவர் அடைவிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றதா? என்பதனை கண்டறிய வேண்டிய தேவையெழுந்துள்ளது இதனால் இவ்வாய்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

***கல்விசார் கருத்துக்களையும் அதன் எண்ணக்கருக்களையும் விளங்கிக்கொள்ளல்***

பூகோளரீதியாக அணிதிரட்டப்படும் கல்வி எனக் கருதப்படுவது உலகெங்கும் கல்வி வாய்ப்புக்களை வழங்குவதற்காக தொழிநுட்பத்தையும் எண்மான வளங்களையும்

பயன்படுத்தும் போக்கு அதிகரித்தல் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு வளங்களை வழங்குதல் என்பதையே குறித்து நிற்கிறது. இது நிகழ்நிலை பாடநெறிகள், மெய்நிகர் வகுப்பறைகள் மற்றும் எங்கிருந்தேனும் கல்வி பெறும் இணைய இணைப்புடைய எந்தவொரு உபகரணத்தையும் பயன்படுத்தலை உள்ளடக்கலாம். பூகோளரீதியாக அணிதிரட்டப்படும் கல்வியானது மரபுரீதியாக கல்வியைப் பெறமுடியாதுள்ள தனியாட்கள் தமது இடைவெளியை குறைத்துக்கொள்ளவும் அநேகமானோர் கல்வியைப் பெற்றுக்கொள்ளச் செய்தலையும் சமசந்தர்ப்பம் மற்றும் உட்படுத்தல் கல்வி முறை என்பவற்றை சாத்தியமாக்குதலையும் நோக்காகக் கொண்டது. தொழிநுட்ப எழுச்சியுடன் பூகோளரீதியாக அணிதிரட்டப்பட்ட கல்வியானது உலகில் விசாலமான எண்ணிக்கையானோர் கற்கவும், திறன்களை விருத்திசெய்து கொள்ளவும் புதிய வாய்ப்புக்களையும் வழங்கும் ஆற்றலையும் கொண்டுள்ளது யுனெஸ்கோ (2019) அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆய்வின் பொது நோக்கம்**

சிரேஸ்ட இடைநிலை வகுப்புக்களின் கற்றல்-கற்பித்தல் செயன்முறைகளில் பயன்படுத்தப்படும் இணையவழிச் சாதனங்களின் பயன்பாட்டிலுள்ள இடர்பாடுகளைக் கண்டறிந்து அவற்றை இழிவளவாக்குவதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல்

**சிறப்பு நோக்கங்கள்**

1. பாடசாலை செயற்பாடுகளில் நடைபெற்ற இணையவழிக் கற்றல்-கற்பித்தலின் நிலைமையினைக் கண்டறிதல்
2. இணையவழிக் கற்றல் - கற்பித்தலின்போது மாணவர்கள், ஆசிரியர்கள் தெரிவு செய்த சாதனங்ளையும் பயன்படுத்திய அளவினையும் இனங்காணல்
3. இணையவழிச் சாதனங்களைப் பயன்படுத்துவதிலுள்ள பிரச்சினைகளை மதிப்பிடல்
4. இணையவழிச் சாதனங்களை பயன்படுத்துவதிலுள்ள இடர்பாடுகளைக் களைவதற்குத் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் முன்வைத்தல்.

**ஆய்வு வினாக்கள்**

1. பாடசாலை செயற்பாடுகளில் நடைபெற்ற இணையவழிக் கற்றல்-கற்பித்தலின் நிலைமை எந்தளவு காணப்படுகிறது?
2. இணையவழிக் கற்றல்-கற்பித்தலின்போது மாணவர்கள், ஆசிரியர்கள் தெரிவு செய்து பயன்படுத்திய சாதனங்களின் பயன்பாட்டின் அளவுகள் எவ்வளவு?
3. இணையவழிச் சாதனங்களைப் பயன்படுத்துவதிலுள்ள பிரச்சினைகள் யாவை?

**இலக்கிய மீளாய்வு**

இணையவழியில் கற்றல் என்பது கணினிகள், மடிக்கணினிகள், தத்தல் கணினிகள் மற்றும் திறன்பேசிகள் ஆகியவற்றை ஒத்திசைவான மற்றும் ஒத்திசைவற்ற சூழல்களில் இணைய அணுகலுடன் சேர்த்துப் பயன்படுத்தும் ஒரு மாற்றுக் கற்றல் முறையாகக் கருதப்படுகிறது. இந்த கற்றல் முறைகள் மற்றும் சூழல்கள் மூலம் மாணவர்கள் கற்றலில் சுதந்திரம்

பெறுகிறார்கள் மற்றும் அவர்கள் பௌதிக இடைவெளிகளின் பிரச்சினைகளின் தாக்கம் இல்லாமல் தங்கள் ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு கற்றலை மேற்கொள்கிறார்கள் என Singh and Thurman (2019) ஆகியோர் குறிப்பிடுகின்றனர்.

அதேவேளையில் Algahtani, (2011) என்பவர் இணையவழிக் கற்றலில் இரண்டு முறைகள் உள்ளன. அவை ஒத்திசைவான, ஒத்திசைவற்ற முறைகளாகும் எனக் குறிப்பிடுகின்றார். அவற்றினை வீடியோ மாநாடு போன்ற கருவிகளில் வகுப்பின்போது விரிவுரையாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே நேரடியான தொடர்புகளை வழங்குவது ஒத்திசைவு முறையாகும் எனவும் நூல், விவாதம், மின்னஞ்சல்கள் என்பவற்றின் மூலம் விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோரின் இணையவழி வகுப்பிற்கு முனனர் அல்லது பின்னர் ஒருவரையொருவர் தொடர்பு கொள்வதற்கான வாய்ப்பை வழங்குவது ஒத்திசைவற்ற முறையாகும் என இரண்டாக வகுக்கின்றார்.

Ebner (2015) திறன்பேசிகள் மற்றும் தத்தல் கணினிகள் போன்றவை எண்ம-சாதனங்கள், தொலைதூர மற்றும் நேருக்கு நேர் பல்கலைக்கழக கற்கைகளில் பாடங்களை பயில்வதற்கு உகந்த பயனுள்ள உபகரணங்களாக காணப்படுகின்றன. ஆனால் Dwidienawati, Abdinagoro என்ற ஆராய்ச்சியாளர்கள் தொலைக் கல்வி முறையில் திறன்பேசிகளை ஒரு கருவியாகப் பயன்படுத்துவது வெற்றிகரமாக அமையவில்லை என்று குறிப்பிடுகின்றனர்.

அதேபோல் Clough et al., (2007) கற்றல் அனுபவத்தைத் மேம்படுத்தும் கருவிகளாக திறன்பேசிச்சாதனங்களை ஏற்றுக்கொண்டுள்ளனர். Singh and Awasthi, (2020) ஆகியோர் அண்மைக்காலங்களில் காணொளி ஒன்று கூடல் மாநாடுகளின் (video confrance) பயன்பாடுகள் வேலை செய்பவர்களுக்கு மட்டுமல்ல, இணையவழி நேர்காணலுக்கும் தினசரி தேவையாகி வருகின்றது. இவை திடீர் பயன்பாடுகளுக்கான தேவை அதிகரிப்பு, அதன் தீமைகள் மற்றும் நன்மைகள் இரண்டையும் கொண்டுள்ளது. இப்போதெல்லாம் பல பிரபலமான காணொளி ஒன்று கூடல் ஒளிப்பதிவு காட்சி தளங்களின் பாதுகாப்பு மற்றும் தனியுரிமையில் பல ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகிறது. எனவே, இந்தக் கூகுள் மீட், ஜூம், மைக்ரோசா∴ப்ட் டீம்கள், சிஸ்கோ வெப்எக்ஸ் டீம்கள் மற்றும் கோருட் மீட்டிங் ஆகியவற்றில் முக்கியமாக கவனம் செலுத்தும் பல்வேறு படஒளிப்பதிவு தளங்களின் ஒப்பீட்டளவில் அனுகூலமாக அமைகின்றன என குறிப்பிடுகின்றனர்.

## ஆய்வு முறையியல்

### *ஆய்வு அணுகுமுறை*

இவ்வாய்வானது சிரேஸ்ட இடைநிலை வகுப்புக்களின் கற்றல்-கற்பித்தல் செயன்முறைகளில் பயன்படுத்தப்படும் இணையவழிச் சாதனங்களின் பயன்பாட்டிலுள்ள இடர்பாடுகளைக் கண்டறிந்து அவற்றை இழிவளவாக்குவதற்கான ஆலோசனைகளை முன்வைக்கும் நோக்குடன் ஓர் அளவைநிலை ஆய்வாக முன்னெடுக்கப்பட்டுள்ளது இங்கு பண்புரீதியானதும் எண்ரீதியானதும் தரவு மற்றும் தகவல்களையும் கொண்ட ஒரு கலப்பு நிலை அணுகுமுறையைக் கொண்டமைந்துள்ளது.

***ஆய்வு வடிவமைப்பு***

பிரச்சினையின் நோக்கம், குறிக்கோள்கள் என்பவற்றின் அடிப்படையில் ஆய்வு வினாக்கள் உருவாக்கப்பட்டு, அதனூடாக ஆய்வுக்கருவிகளான வினாக்கொத்து, அவதானிப்பு பத்திரம், ஆவணச்சான்று என்பன உருவாக்கப்பட்டுள்ளன. அவ்வாறு உருவாக்கப்பட்ட தரவுசேகரித்தல் கருவிகள் தெரிவு செய்யப்பட்ட அனைத்து பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்கள், வழங்கப்பட்டு தரவுகள் திரட்டப்பட்டது. இவ்வாறு ஆய்வுக்கருவிகளின் மூலம் பெறப்பட்ட அளவு ரீதியான தரவுகள் அளவுரீதியாகவும் பண்புரீதியான தரவுகள் அளவுரீதியாக மாற்றப்பட்டு ஆய்வின் சிறப்பு நோக்கங்களின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சிறப்பு நோக்கமும் உள்ளடங்குமாறு உபதலைப்புக்கள் உருவாக்கப்பட்டு, அவை (Coding) குறியீட்டாக்கம் செய்யப்பட்டது. பின்னர் குறியீட்டாக்கம் செய்யப்பட்ட தரவுகள் சமூக விஞ்ஞான புள்ளி விபரவியல் பொதி (SPSS) மென்பொருளில் உட்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்கள் சராசரி இடை, நியமவிலகல் போன்ற மையநாட்ட அளவீடுகள் அடிப்படையிலான தரவுகள், அட்டவணைகள், வரைபுகள் என்பவற்றைப் பயன்படுத்தி வியாக்கியானம் செய்வதற்கு ஆய்வு வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.

***குடித்தொகை***

ஆய்வாளனால் ஆய்வுக்குத் தெரிவு செய்யப்பட்ட ஆய்வுக் குடித்தொகையானது மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள கல்குடா கல்வி வலயத்தை அடிப்படையாகக்கொண்டது. இவ்வலயத்தில் மூன்று கோட்டக்கல்விப் பிரிவுகளை உள்ளடக்கிய கல்குடா கல்வி வலயத்தில் அமைந்துள்ள வகை-III பாடசாலை தவிர்ந்த ஏழு (7) 1AB வகைப் பாடசாலைகளும், ஒன்பது (9) 1C பாடசாலைகளும் 22 வகை -II பாடசாலைகளுமாக மொத்தம் 38 பாடசாலைகள் காணப்படுகின்றன. இங்கு 6108 ஆண்களும் 6784 பெண்களுமாக மொத்தம் 12892 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். அதேபோல் ஆசிரியர்களில் 140 ஆண்களும் 572 பெண்களுமாக மொத்தம் 712 பேர் கற்பிக்கின்றனர்.

***மாதிரித் தெரிவும் நுட்பமும்***

மாதிரித் தெரிவாக கல்குடா கல்வி வலயத்திலுள்ள மூன்று கோட்டங்களில் இருந்தும் ஐம்பது (50%) சதவீதமான இடைநிலை பிரிவு காணப்படும் பாடசாலைகளான 1AB பாடசாலைகள் மூன்றும் (3) 1C பாடசாலைகள் நான்கும் (4) வகை II பாடசாலைகள் பதினொன்றும் (11) தெரிவு செய்யப்பட்டுள்ளன. சிரேஸ்ட இடைநிலை பிரிவிலுள்ள வகுப்புக்களான தரம் - 10, தரம் - 11 இவற்றில் உள்ள ஆண், பெண் மாணவர்களின் எண்ணிக்கையின் பத்துக்கு ஒருவர் என்ற விகிதத்தின் அடிப்படையில் இலகு எழுமாற்றுத் மாதிரித்தெரிவு மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதன்படி கல்குடா வலயத்திலிருந்து ஆண் - 84 பேரும் பெண்கள் - 103 பேருமாக மொத்தம் - 187 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அதேபோல் தெரிவு செய்த 18 பாடசாலைகளில் ஓர் பாடசாலையில் இருவர் வீதம் -36 ஆசிரியர்கள்

தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாறு மாதிரித் தெரிவு நுட்பமுறை கீழே அட்டவணை -2 இல் விபரமாக காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை : 3.1 பாடசாலைகள், மாணவர்கள், ஆசிரியர்கள் மாதிரித் தெரிவு நுட்பமுறை**

| பாடசாலை வகை | பாடசாலைகளின் எண்ணிக்கை | ஐம்பது சதவீதமான பாடசாலைகள் | மாணவர்கள் 10:1 குலுக்கல் முறை | | ஆசிரியர்கள் ஒரு பாடசாலை இருவர் வீதம் |
|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | |
| 1AB | 07 | 03 | 25 | 29 | 6 |
| 1C | 09 | 04 | 12 | 13 | 8 |
| Type -II | 22 | 11 | 47 | 61 | 22 |
| **மொத்த எண்ணிக்கை** | | **18** | **187** | | **36** |

### *தரவு சேகரித்தல் கருவிகளும் நுட்பங்களும்*

1 வினாக்கொத்து
2 அவதானிப்பு பத்திரம்
3 ஆவணச்சான்று

### *ஆய்வின் வரையறைகள்*

கல்குடா கல்வி வலயத்தினை மாத்திரம் மாதிரியாகக் கொண்டு இவ்வாய்வு செய்யப்படுவதால் அதன் முடிவுகள் நாட்டின் எல்லாப் பாடசாலைக்கும் பொதுமைப்படுத்த முடியாது, ஆனபடியால் இனிவரும் ஆய்வாளர்கள் இதனை முன்னுதாரணமாகக் கொண்டு இனிவரும் ஆய்வுகளை மேற்கொள்ள முடியும்.

### *தரவுப் பகுப்பாய்வு*

ஆய்வின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு சிறப்பு நோக்கமும் உள்ளடங்குமாறு உபதலைப்புக்கள் உருவாக்கப்பட்டு, அவை (Coding) குறியீட்டாக்கம் செய்யப்பட்டது. பின்னர் குறியீட்டாக்கம் செய்யப்பட்ட தரவுகள் சமூக விஞ்ஞான புள்ளி விபரவியல் பொதி (SPSS) மென்பொருளில் உட்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது.

### தரவுப்பகுப்பாய்வு, வியாக்கியானமும் கலந்துரையாடலும்

பொது நோக்கத்திற்கு ஏற்ப உருவாக்கப்பட்டுள்ள சிறப்பு நோக்கத்திற்கு அமைவாக கல்குடா கல்வி வலயத்தில் சிரேஸ்ட இடைநிலைப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களின் கற்றல் கற்பித்தலில் இணையவழி சாதனங்கள் பயன்பாட்டினை கண்டறியும் நோக்குடன் பெறப்பட்ட பல்வேறு தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு இடை, நியமவிலகல் அளவீடுகளை உள்ளடக்கிய புள்ளிவிபரத் தரவுகளாகவும் பயன்பாடுகள் உருக்கள், வரைபுகளாகவும் பயன்படுத்தப்பட்டு வியாக்கியானம் செய்யப்பட்டுள்ளது.

***பாடசாலையில் இணையவழிக் கற்றல்-கற்பித்தலின் நிலைமையினைக் கண்டறிதல்***

கொவிட் -19 தொற்று காலங்களில் இணையவழியில் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்ட ஆசிரியர்கள், மாணவர்களிடம் சேகரிக்கப்பட்ட தகவலினை அடிப்படையாக கொண்டு இடை, நியமவிலகல் என்பன கணித்தறியப்பட்டது.

**அட்டவணை:4.1மாணவர், ஆசிரியர்கள் இணையவழி கற்றல் -கற்பித்தல் செயற்பாடுகள்**

| பாவனை அளவு | பங்குதாரர்கள் | |
|---|---|---|
| | மாணவர்கள் | ஆசிரியர்கள் |
| இணையவழிக் கற்றலில் கலந்துகொண்டோர் (ஆம்) | 187 | 40 |
| இடை | 3.55 | 3.57 |
| நியமவிலகல் | 0.767 | 0.808 |

**(மூலம் - ஆய்வாளனால் சேகரிக்கப்பட்ட தகவல்கள் SPSS)**

மேலே அட்டவணை 3 இன்படி இணையவழி கற்றல்-கறிபித்தலில் கலந்துகொண்ட மாணவர்களின் கணித்தறியப்பட்ட இடையானது 3.55 ஆகவும் நியம விலகலானது இடையிலிருந்து 0.767 ஆகவும் விலகி காணப்பட்டது. அதேவேளை ஆசிரியர்கள் கணித்தறியப்பட்ட இடையானது 3.57 ஆகவும் நியமவிலகலானது இடையிலிருந்து 0.808 ஆகவும் விலகி காணப்பட்டது. இதிலிருந்து நோக்கும்போது மாணவர்கள், ஆசிரியர்களின் இணையவழிக் கற்றல்-கற்பித்தல் நிலைமையானது சாதாரண அளவிற்குமேல் ஈடுபட்டுள்ளார்கள் என்பதனைக் காட்டுகின்றது.

அந்தவகையில் Talbert, Hofkens and Wang (2019) ஆகியோர், மாணவர்களது ஈடுபாட்டை மேம்படுத்த மாணவர்களை மையமாகக் கொண்ட கற்றல் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதுடன் கொவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக இணையவழிக் கற்றலில் நெகிழ்வுத்தன்மை இருத்தல் வேண்டுமென்று குறிப்பிடுவதுடன் சந்தேகத்திற்கு இடமின்றி, எதிர்காலத்தில் கல்வி இன்று இருப்பதைப் போன்று இருக்காது என்றும் ஆசிரியர்கள் செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ள தளங்களை பகிர்ந்து கொள்ளவதற்குத் தேவையான எண்ம திறன்கள் மற்றும் எண்மத் தளங்களில் கற்பித்தல் செயற்பாடுகனை முன்னெடுத்துச் செல்லும் வகையில் செயற்கை நுண்ணறிவுடன் (Artificial intelligence) கலப்பின கற்பித்தல் முறைகளையும் (Hybrid Teaching Methodologies) பின்பற்ற வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளார்கள். அந்தவகையில் இவ்வாய்வு முடிவானது இணையவழிக் கற்றல் கற்பித்தலின் தேவை இன்றைய காலங்களில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இன்றியமையாதது என்பதனை சுட்டிக்காட்டியுள்ளது.

***மாணவர், ஆசிரியர்களின் இணையவழிச் சாதனங்களின் தெரிவும் பயன்பாட்டின் அளவும்***

இணையவழிக் கற்பித்தலுக்காக மாணவர்கள், ஆசிரியர்கள் தெரிவு செய்த சாதனங்களும் அவற்றினுடைய பயன்பாட்டு அளவும் கண்டறியப்பட்டது.

*சூம் சாதனம் தெரிவு செய்தோர் பயன்படுத்திய அளவு*

இணையவழிச் சாதனமான சூமைப் பயன்படுத்திய அளவானது பகுப்பாய்வு செய்யப்பட்டது.




***உரு : 4.1 சூம் சாதனத்தினை தெரிவு செய்தோர் பயன்படுத்திய அளவு***

மேலே உரு 4.1 இல் குறிப்பிட்டதன்படி எல்லா மாணவர்களும் சூம் சாதனத்தை தெரிவு செய்து கற்றாலும் அதனை முழுமையாக 90.2 சதவீதமானவர்கள் மட்டுமே சாதாரண அளவுக்கு மேல் பயன்படுத்தி கற்றுள்ளனர். மிகுதி 8.8 சதவீதமானோர் சூம் சாதனத்தை முழுமையாக பயன்படுத்தி கற்கவில்லை என்பதும் முடிவாக பெறப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் சூம் சாதனத்தை முழுமையாக தெரிவு செய்து கற்றாலும் 90.5 சதவீதமானோர் மட்டுமே சாதாரண அளவுக்கு மேல் பயன்படுத்தி கற்பித்துள்ளனர் என்பது முடிவாக பெறப்பட்டுள்ளது. மிகுதி 9.5 சதவீதமான சூம் சாதனத்தை முழுமையாக பயன்படுத்தி கற்கவில்லை . மாணவர்கள், ஆசிரியர்கள் ஒட்டுமொத்தமாக நோக்கும்போது 91 சதவீதமானோர் வினைத்திறனாக பயன்படுத்தியள்ளமை ஆய்வில் கண்டறியப்பட்டது

*புலனம் (WhatsApp)*

இணையவழிக் கற்பித்தலுக்காக மாணவர்கள், ஆசிரியர்கள் தெரிவு செய்த புலனம் சாதனத்தை பயன்படுத்திய அளவானது பகுப்பாய்வு செய்யப்பட்டது




***உரு: 4.2 மாணவர்கள், ஆசிரியர்கள புலனம் சாதனத்தின் தெரிவும் அதன் பயன்பாட்டு அளவும்***

மாணவர்களை நோக்கும்போது 88.1 சதவீதமான புலனத்தை சாதாரண அளவுக்கு மேல் பயன்படுத்தி கற்றுள்ளனர் என்பது பெறப்பட்ட முடிவாகும். ஆசிரியர்களை நோக்கும்போது 88.8 சதவீதமானனோர் புலனத்தை சாதாரண அளவுக்கு மேல் பயன்படுத்திக் கற்றுள்ளனர். மொத்தம் சாதாரண அளவிற்குமேல் 89.2 சதவீதமானோர் வினைத்திறனாக பயன்படுத்தியள்ளமை ஆய்வில் கண்டறியப்பட்டது. மிகுதி 11.3 சதவீதம் புலனத்தினை

தெரிவு செய்தாலும் வினைத்திறனாக முழுமையாக பயன்படுத்தி கற்கவில்லை என்பது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது.

*வாய்புறம் (Viber)*

இணையவழிக் கற்பித்தலுக்காக மாணவர்கள், ஆசிரியர்கள் தெரிவு செய்த வாய்புறம் சாதனத்தை பயன்படுத்திய அளவானது பகுப்பாய்வு செய்யப்பட்டது




***உரு: 4.3 வாய்புறம் சாதனத்தினை தெரிவு செய்தோர் பயன்படுத்திய அளவு***

மேலே உரு 4.3இன்படி மாணவர்களை நோக்கும்போது 2.6 சதவீதமான 10 பேர் மட்டுமே வாய்புறத்தினை சாதாரண அளவுக்கு மேல் பயன்படுத்தக் கற்றுள்ளனர். ஆசிரியர்களை நோக்கும்போது 63.6 சதவீதமான வாய்புறத்தினை சாதாரண அளவுக்கு மேல் பயன்படுத்திக் கற்றுள்ளனர். ஒட்டுமொத்தமாக நோக்கும்போது 50 சதவீதமானோர் வாய்புறத்தினை வினைத்திறனாக பயன்படுத்தியள்ளமை ஆய்வில் கண்டறியப்பட்டது. எனவே மிகுதி 50 சதவீதம் வாய்புறத்தினை தெரிவு செய்திருந்தாலும் வினைத்திறனாக முழுமையாக பயன்படுத்தி கற்கவில்லை என்பது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது.

*மைக்ரோசொ.ஃப்ட் ரீம்ஸ் தெரிவும் அதன் பயன்பாட்டின் அளவும்*

இணையவழிக் கற்பித்தலுக்காக மாணவர்கள், ஆசிரியர்கள் தெரிவு செய்த மைக்ரோசொ.ஃப்ட் ரீம்ஸ் சாதனத்தை பயன்படுத்திய அளவானது பகுப்பாய்வு செய்யப்பட்டது




***உரு: 4.4 மைக்ரோசொ.ஃப்ட் ரீம்ஸ் தெரிவு செய்தோர், பயன்படுத்திய அளவு***

மேலே உரு 4.4 இன்படி மாணவர்களை நோக்கும்போது 65.2 சதவீதமான மைக்ரோசொ.ஃப்ட் ரீம்ஸ் சாதனத்தை சாதாரண அளவுக்கு மேல் பயன்படுத்த கற்றுள்ளனர். ஆசிரியர்களை நோக்கும்போது 66.7 சதவீதமான மைக்ரோசொ.ஃப்ட் ரீம்ஸ் சாதனத்தை சாதாரண அளவுக்கு

மேல் பயன்படுத்திக் கற்றுள்ளனர். ஒட்டுமொத்தமாக சாதாரண அளவிற்குமேல் 65 சதவீதமானோர் வினைத்திறனாக பயன்படுத்தியள்ளமை ஆய்வில் கண்டறியப்பட்டது. எனவே மிகுதி 35 சதவீதம் வினைத்திறனாக மைக்ரோசொ.ஃப்ட் ரீம்ஸ் சாதனத்தை முழுமையாக பயன்படுத்தி கற்கவில்லை என்பது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

*கூகுள் மீட் தெரிவும் அதன் பயன்பாட்டின் அளவும்*

இணையவழிக் கற்பித்தலுக்காக மாணவர்கள், ஆசிரியர்கள் தெரிவு செய்த கூகுள் மீட் சாதனத்தை பயன்படுத்திய அளவானது பகுப்பாய்வு செய்யப்பட்டது.




***உரு: 4.5 கூகுள் மீட் தெரிவு செய்தோர், அதனை பயன்படுத்திய அளவு***

மேலே உரு4.5 இன்படி கூகுள் மீட் சாதனத்தினை எந்தவொரு மாணவர்களும் 100 சதவீதம் பயன்படுத்தவில்லை. ஆசிரியர்கள் 62.5 சதவீதமான 37.5 சாதாரணமாகவும் கற்பித்தலுக்காக பயன்படுத்தியுள்ளனர். ஒட்டுமொத்தமாக சாதாரண அளவிற்குமேல் 37.5 சதவீதமானோர் வினைத்திறனாக பயன்படுத்தியுள்ளமை ஆய்வில் கண்டறியப்பட்டது. எனவே மிகுதி 62.5 சதவீதம் வினைத்திறனாக கூகுள் மீட் சாதனத்தை முழுமையாக பயன்படுத்தி கற்கவில்லை என்பது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

*வேப்எக்ஸ் (Cisco WebEx) தெரிவும் பயன்பாட்டின் அளவும்*

மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் வேப்எக்ஸ் (Cisco WebEx) சாதனத்தை கற்றலுக்காக தெரிவு செய்யவில்லை. பயன்பாட்டின் அளவும் பூச்சியமாக காணப்படுகிறது.

*டீஸ்கோர்ட் தெரிவும் பயன்பாட்டின் அளவும்*

மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் டீஸ்கோர்ட் சாதனத்தை கற்றலுக்காக எவரும் தெரிவு செய்யவில்லை என குறிப்பிட்டுள்ளனர். அதனால் பயன்பாட்டின் அளவும் பூச்சியமாக காணப்படுகிறது.

***இணையவழி சாதனங்களை பயன்படுத்தாமைக்கான காரணங்களை அறிதல்***

இணையவழிக் கற்றல் கற்பித்தலின்போது அதன் பங்குதாரர்களான மாணவர்கள், ஆசிரியர்கள், இணையவழிச் சாதனங்களை பயன்படுத்தும்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக தெரிவித்த அளவுகள் கீழ்வரும் உரு 4.6 இல் காட்டப்பட்டுள்ளது




***உரு: 4.6* இணையவழி சாதனங்களை பயன்படுத்தாமைக்கான காரணங்கள்**

உரு 4.6 குறிப்பிட்டதனடிப்படையில் சாதனங்களை பயன்படுத்தும்போது எதிர்கொண்ட பிரச்சினைகளாவன இணையசாதனங்கள் போதியளவு இல்லாமை -35 சதவீதமாகவும் அறிமுகம் இல்லாத சாதனங்கள் - 46 சதவீதமாகவும் தெழினுட்ப அறிவு போதாமை -47 சதவீதமாகவும் எண்ம அறிவு கையாளும் திறன் போதாமை -42 சதவீதமாகவும் தெளிவான சமிக்ஞை இன்மை -61 சதவீதமாகவும் பொருளாதார பின்தங்கியமை -54 சதவீதமாகவும் போதியளவு வளங்கள் இன்மை -60 சதவீதமாகவும் பொருளாதார ரீதியான வசதியின்மை -66 சதவீதத்தினையும் எதிர்கொண்டுள்ளனர்.

**முடிவுகள்**

***பாடசாலையில் இணையவழிக் கற்றல்-கற்பித்தலின் நிலைமை***

கொவிட் -19 தொற்று காலங்களில் கற்றல் கற்பித்தலானது இணையவழியில் சராசரியாக நடைபெற்றுள்ளது கண்டறியப்பட்டது.

***கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் இணையவழிச் சாதனங்களின் பயன்பாட்டு அளவு***

இணையவழிச்சாதனங்களின் பயன்பாட்டு அளவுகளின் முடிவுகள் கீழே அட்டவணையிலுள்ளது

| **சாதனம்** | **தெரிவு(சதவீதம்)** | **பயன்பாடு (சதவீதம்)** |
|---|---|---|
| சூம் | 95% | 91% |
| புலனம் | 78% | 89.2% |
| வாய்புறம் | 11%, | 50% |
| மைக்ரோசொ.்.ப்ட் ரீம்ஸ் | 16% | 65% |
| கூகுள் மீட் | 1.7%, | 37.5% |
| வேப்எக்ஸ் | 0% | 0% |
| டீஸ்கோர்ட் | 0% | 0% |

பிரதேசத்தில் எந்தவொரு இணையவழிச்சாதனமும் 100 சதவீதம் எவராலும் கற்றல்-கற்பித்தலுக்காக தெரிவு செய்யப்படவுமில்லை. அதேவேளை அனைத்து சாதனங்களும் 100 சதவீதம் வினைத்திறனாகப் பயன்படுத்தப்படவுமில்லை. எனவே வலயத்திலுள்ள பங்குதாரர்களுக்கு இணையவழி சாதனங்களில் கற்பதற்கான மற்றும் கற்பிப்பதற்கான ஆலோசனைகள், பயிற்சிகள், வழிகாட்டல்களை ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியமாகும். அத்துடன் இணையசாதனங்களின் செயலிகள் மற்றும் அதனை கையாள்வதற்கான பயிற்சிகளை ஏற்படுத்திக்கொடுத்தல். அதேவேளை மிக குறைந்தளவாக பயன்படுத்தப்படும் மற்றும் முற்றுமுழுதாக பயன்படுத்தப்படாத இணைவழி சாதனங்களை அறிமுகப்படுத்துவதுடன் அவற்றை பயன்படுத்தி கற்றல் கற்பித்தலை மேற்கொள்வதற்கான பயிற்சிகளை வழங்குவதுடன் அவற்றை வினைத்திறனாக பயன்படுத்தி கற்பிப்பதற்கு தேவையான ஆலோசனை வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அத்துடன் பழக்கப்படாத, இதுவரை பயன்படுத்தப்படாத இணையவழிச் சாதனங்களான மைக்ரோசொ.ஃப்ட் ரீம்ஸ், கூகுள் மீட், வேப்எக்ஸ், டீஸ்கோர்ட் போன்ற சாதனங்களையும் பயன்படுத்துவதற்கான பயிற்சிகள் மற்றும் அதற்கான ஆலோசனை வழிகாட்டல்களை திணைக்கள அதிகாரிகள், நிறுவனங்கள் முன்னெடுக்க வேண்டும்.

### ***இணையவழி கற்றல் கற்பித்தல் சாதனங்களில் மாணவர்கள், ஆசிரியர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள்***

தொழிநுட்ப ரீதியான சவால்களை வெற்றிகொள்வதற்காக தொழிநுட்ப பயிற்சிகளை பெற்றுக்கொள்ள பாடசாலை மட்டம், பிரதேச, வலயமட்டத்தின் அடிப்படையில் வழிப்புனர்வு அதனுடன் பயிற்சிகள் கருத்தரங்குகளை நடாத்துதல். ஆசிரியர்களை தொழிற்பயிற்சி நிறுவனங்கள், திறந்த பல்கலைக்கழகங்களில் கணணி தொடர்பான பயிற்சிநெறிக் கற்கைகளை கற்றுக்கொள்ள ஊக்கப்படுத்தல். வலயரீதியில் தொழிநுட்பத்தில் நிபுணத்துவமுடைய ஆசிரியர்ளூடாக ஏனைய ஆசிரியர்களை பயிற்றுவித்தல், அத்துடன் பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மைத்துவ பயிற்சிகளையும் வழிகாட்டல் ஆலோசனைகளையும் ஏற்பாடு செய்தல். மின்சார வசதிகளை தொடர்சியாக ஏற்படுத்த சூரியப்படல் போன்ற மாற்றுச் சக்தி வளங்களை பெற்று தடைப்படும் மின்சார வசதியினை சீர்செய்தல், பொதுவான இணைய சமிஞையினை ஏற்படுத்தவதற்கு எல்லா இடங்களிலும் சமிக்ஞை கிடைக்கக்கூடிய கோபுரங்களை அரசு ஊடாக முன்னெடுத்தல். பொருளாதார ரீதியில் பின்னடைவானோருக்கு அரசு, அரசசார்பற்ற மற்றும் தனவந்தர்களின் உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

### ***எதிர்காலத்தில் மேற்கொள்ளக்கூடிய ஆய்வுகள்***

.இணையவழிச் சாதனப் பயன்பாட்டில் ஆசிரியரின் வினைத்திறனை அதிகரிப்பதற்கான வழிமுறைகள்

1. இணையவழிச்சாதன பயன்பாடு விளைதிறனான கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்
2. முறையான வளப்பங்கீடு இன்மை, கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்.
3. அதிகஸ்ட பாடசாலைகளின் கற்பித்தல் வளங்களும் இணையவழிச் சாதனங்களின்

பொருத்தப்பாடும்.

**உசாத்துணைகள்**

இலக்குமணன், எம், எஸ். (1977). *அறிவியல் அறிமுகம்.* மீனாட்சி புத்தக நிலையம்.

கல்விஅமைச்சு. (2021). தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பிரிவு இணையவழிக் கல்விவழிகாட்டல் கோவை. கல்வி அமைச்சு.

Ashraf, A. H., Imran, M., Qahtani, A. M., Alsufyani, A., Almutiry, O., Mahmood, A., & Habib, M. (2021). Weapons Detection for Security and Video Surveillance Using CNN and YOLO-V5s

Aji, W. K., Ardin, H., & Arifin, M. A. (2020). Blended learning during pandemic corona virus: Teachers' and students' perceptions. *IDEAS: Journal on English Language Teaching and Learning, Linguistics and Literature*, *8*(2), 632-646.

Archibald, M. M., Ambagtsheer, R. C., Casey, M. G., & Lawless, M. (2019). Using zoom videoconferencing for qualitative data collection: perceptions and experiences of researchers and participants. *International journal of qualitative methods*, *18*, 1609406919874596.

Basilaia, G., & Kvavadze, D. (2020). Transition to online education in schools during a SARS-CoV-2 coronavirus (COVID-19) pandemic in Georgia. *Pedagogical Research*, *5*(4).

Basilaia, G., & Kvavadze, D. (2020). Transition to online education in schools during a SARS-CoV-2 coronavirus (COVID-19) pandemic in Georgia. *Pedagogical Research*, *5*(4)

Cahoy, E., 2017. *Library guides: Empirical research in education and the behavioral/ social sciences: What is empirical research.* Retrieved from http://guides.libraries.psu.edu/emp

Ebner, M. (2015). Mobile applications for math education – how should they be done. *Mobile learning and mathematics.Foundations, design,and case studies*,20-32.

Ismaili, Y. (2021). Evaluation of students' attitude toward distance learning during the pandemic (Covid-19): a case study of ELTE university. *On the Horizon*.

Ketheeswaran, K., & Mukunthan, T. (2016). Usage of the smart phones for learning purposes by students who follows 'diploma in commonwealth youth development programmes' in the Colombo and Batticaloa centres of the open university of Sri Lanka. *IOSR Journal of Humanities and Social Science (IOSR-JHSS)*, *21*(5),75-78.

Kawulich, B. B., 2005, May. Participant observation as a data collection method. *In* Forum qualitative sozialforschung/forum: Qualitative social research .

Lankshear, C., & Knobel, M. (2011). *New Literacies: Everyda y Practices and classroom Learning*, 3rd ed. London: Open University Press.

Maul, June, Ronald Berman, and Cathrine Ames."Exploring psychological benefits of using an emerging video technology to coach and retain doctoral learners." *International Journal of Doctoral Studies* 13 (2018)

Muthuprasad, T., Aiswarya, S., Aditya, K. S., & Jha, G.K.(2021).Students' perception and preference for online education in India during COVID-19 pandemic. *Social Sciences & Humanities Open*, *3*(1), 100101.

Mahyoob, M. (2020). Challenges of e - Learning during the COVID – 19 Pandemic Experienced by EFL Learners. *Arab World English Journal (AWEJ)*, *11*(4).

Prensky, M. (2001),"Digital Natives, Digital Immigrants Part 2:Do They Really Think Differently?",*On the Horizon*,*9*(6),pp. 1-6. https://doi.org/10.1108/10748120110424843

Talbert, E., Hofkens, T., & Wang, M. T. (2019). Does student – centered instruction engage students differently? The moderation effect of student ethnicity. *TheJournal of Educational Research*, *112* (3), 327-341.

UNESCO (2019). Futures Learning UNESCO Education 2030, UNESCO Publishing. UNESCO-2020. COVID-19 Educational disruption and response**.** https://en.unesco.org/themes/educationemergencies/coronavirus-school-closures

World Bank (2021). *Digital Technologies in Education*, https://www.worldbank.org/en/topic/edutech#

# FACTORS AFFECTING SRI LANKAN CHILDREN'S CONCEPTION OF CONSERVATION AND SPACE

**T. Mukunthan ,D.D.I.Deepthinee Dediwala**
Department of Early Childhood and Primary Education
The Open University of Sri Lanka, Nawala, Nugegoda
tmuku@ou.ac.lk

## Abstract

Conservation and Space are very important concepts for children's life. These concepts are helping the children learn mathematics and science subjects later. Jean Piaget also given more priority to these concepts in his study. The students' performance in mathematics and science are very low in Sri Lanka. Therefore, this study identified factors affected to Children conception of Conservation and Space. The researchers selected 87 children for this study as sample from three different sectors (urban, rural and estates). The ultimate sampling units of the study selected were 75 primary school children between the ages of 5-10 years. They represented the age ranges: 5-6, 6-7, 7-8, 8-9 and 9-10 years. The clinical methods used to identify their conception about Conservation and Space. Then, interview with parents and observation of children' home environment were used to identify the factors affect children's conception of conservation and space. From the data collected on child's home and school environment the following nine variables were tested against the total score children had obtained for conservation and spatial tasks. Kruskal-Wallis non-parametric Analysis of Variance test used to identify the factors. 'Child has siblings', 'Mother's education level' and 'Family type' (extended or nuclear) have an effect upon the development of conservation abilities in Sri Lankan children. 'Child has siblings' 'Mother's education level', 'Family type' (extended or nuclear) and 'Teachers' experience' have an effect upon the development of spatial abilities in Sri Lankan children.

***Key Words:*** *Space, Conservation, Children, Performance, Students*

## Introduction

Many researchers highlighted that, number of factors influenced on children's conception of basic logical concepts like conservation and space. The pioneering developmental psychologist Jean Piaget (1952) eloquently described, Cognitive development consists of a progressive reorganization of mental processes as a result of biological maturation and environmental experience.These concepts are helping the children learn mathematics and science subjects later. Jean Piaget also given more priority to these concepts in his study. The students' performance in mathematics and science are very low in Sri Lanka. Therefore, this study identified factors affected to Children conception of Conservation and Space.

## Child's Conception of Conservation and Space

### *Conservation*

Conservation is defined by Piaget as the recognition that a physical property remains untransformed despite evidence (Piaget 1962). Continuous quantity, volume weight, number and length are the physical properties. Price-Williams (1961), noted that, in the book titled '*The Child's Conception of Number'* Jean Piaget traced through the principles involved in the conception of number from early beginnings regarding the conservation of quantities, through the cardinal and ordinal correspondence, to additive and multiplicative compositions. The present study focuses on the following:

1. Conservation of quantities and invariance of wholes
2. The cardinal and ordinal correspondence

Piaget used the following technique for the experiment on Conservation of quantities and Invariance. The child is first given two cylindrical containers of the same size containing a quantity of liquid. The contents of one are then poured into two smaller containers of the same size and the child is asked whether the quantity of liquid poured from one big container into two smaller containers is still equal to that in the other big container.

After his experiments on Conservation of quantities and Invariance of the whole, Piaget noted that, the child begins and makes no further progress during the first stage (Sensory Motor Stage) and there is progress in the second stage (Pre-Operational Stage). The stage (Concrete Operational Stage) is characterized by the construction of extensive qualities through the equating of intensive differences. That is conservation in the first stage is absent in the child intermediary reactions on conservation in the second stage and necessary conservation at the third stage (Cook, 2005).

Piaget used sets of beads, for instance of liquid in the experiment of conservation of quantities and invariance of whole used for the experiment on Conservation of discontinuous quantities. After the experiment of Conservation of discontinuous quantities, Piaget noted that, during the sensory motor stage there is no conservation of the sets of beads, just as there was no conservation of liquid. The child not only thinks that the total quantity changes when a set of beads is poured from one container into another of different sets and during the concrete operation stage the child has the idea about conservation. Piaget published his findings as two books. Thereafter, many researchers replicated his experiments all over the world and reported their findings. Some of these findings on 'conservation' that agreed with Piaget's findings and some of them disagree with his findings.

In the early 1960s, Elikind (1961) conducted a study on 'A systematic replication of Piaget's investigations of ages' with 175 children (25 from each age group ranging from 5-11years). He found that 19% of the five-year children, 51% six year children, 70% of seven year children, 72% of eight years, 86% of nine year children, 94% of ten year children and 92% of eleven year children have shown the conception of quantity of weight and volume. He found that the results were in close agreement with Piaget's findings of a regular age-related order of discoveries of the conservation of quantity, weight and volume.

Lovell and Ogilivie (1960) conducted a study with 322 children and noted that the three stages of development, as hypothesized by Piaget, were confirmed, but the evidence did not prove or disprove the assumption that the child arrives at the concept of conservation because he is able to argue logically in concrete situations. Uzgiris, (1964) conducted a study with Grade 1 to grade 6 children (each grade 20 children) and noted that in general the results supported Piaget's theory. Conservation of quantity, weight and volume is attained in that order. There are situational differences and inconsistencies across materials which may be due to past individual experiences.

There are only a few studies conducted in conservation of number. According to Piaget (1952) children should be able to reason logically about quantity in order to understand number. However Nune and Bryant (2007) opine that children may know that two quantities are the same and still not make the inference that the number of objects in one is the same as the number of objects in the other. Winer (1974) explored whether children will have a higher ability to conserve number with small quantities rather than large quantities. Despite the evidence found of conservation, he found that young children cannot perform or be tested on ability to conserve. Agger (2007), replicated Winer's study and noted that, children of ages 3 and 5 do not have the ability to conserve number in any manner.

*Child's Conception of space*

> "The study of the concept of space, or rather, of the innumerable ideas involved in the concept of space, is for much reason an indispensable part of child psychology" (Piaget, 1956, p. vii)

Piaget's research has shown that spatial skills develop progressively beginning from the sensory motor stage; where only egocentric and static representations are present (Rynhart, 2012) . Piaget and Inhelder (1967) believed that children in the preoperational stage locate objects in the environment in relation to themselves and they understand limited

topological spatial relationships such as separation, proximity and open closed (Yilmaz, 2009). During the concrete operational stage children understand more complex topological relations using an external frame of reference such as order and enclosure and they begin to develop projective relations. In the formal operational stage they develop Euclidean spatial relations such as estimating straight- line relative distances and proportional reduction of scale (Yilmaz, 2009). In contrast to Piaget's theory there is an argument that spatial concepts begin with projective and Euclidean geometry. Topology appears only at the highest level (Thorp, 1995). There are many studies conducted to prove or disapprove which comes first.

According to Piaget there are six essentials in the child's development of space. These six essentials are as follows (Moore, 1976).

1. The representation of space is preceded by the representation of the object what is called object concept and object permanence.
2. The representation of space arises from the coordination and internalization of actions
3. The representation of space follows from the internalization of the prior sensorimotor group of spatial displacements.
4. The genesis of the image of the space arises from the internalization of deferred imitations of actions in space.
5. There are four general levels or structures of spatial knowing.
6. There are sequential classes of spatial relations which are constructed topologically.

According to Piaget, children's understanding of spatial concepts becomes apparent through their drawings. He believed that geometry is founded on the practice of drawing (Rynhart, 2012) and showed that children as early as three years of age were capable of making scribbles that could be differentiated as open or closed forms. For instance, a circle was represented as a closed curve. However since they are still incapable of distinguishing between straight and curved figures, their drawings of squares and triangles also resembled closed curves.

## Research Problem

Conservation and Space are important concepts. These concepts are the foundation for mathematics and science subjects too. But the pre-school teachers, primary school teachers and parents did not understand the importance of these concepts. The Sri Lankan students' performance in Mathematics is poor in the GCE OL (40%). Especially their performance in

geometry is very poor. Geometry is directly linked with Space concept. Similarly students' performance in Science also low compare to other subjects. The conservation idea is directly connect with the conservation concept.

### Research Objectives

***Main objective***

To identify the factors affecting children's conceptions on Pre-mathematical concepts

***Specific objectives***

To identify the Factors affecting Sri Lankan children's conception of Conservation

To identify the Factors affecting Sri Lankan children's conception of Space

### Research Questions

What are the factors affecting Sri Lankan children's conception of Conservation?

What are the factors affecting Sri Lankan children's conception of Space?

## Literature review

The literature review revealed that Piaget has suggested i) biological factors, ii) equilibration factors, iii) general social factors and iv) factors of educative and cultural transmission which includes social pressures and language patterns as factors that affect children's cognitive development ( Kothalawala 1980 , Carlson, 1973: 3). According to Kotelawala (1980 p97) the first factor is universal while the third factors mentioned above according to Piaget is common to all societies.

Literature also revealed that experiences related to cognitive tasks are found to be affecting the development of conservation and spatial abilities. Schooling, training, familiarity with cognitive operations (Mishra et al 2004) ) and opportunities provided by the environment support children's concept formation. This notion was supported by Piaget himself in a conversation with Biringuier (1977) as mentioned in the literature review (Section 2.5) A study conducted by Price-Wlliams in 1969,showed children of potters conserve quantity earlier than children of non-pottery making families due to experience (Brown and Desforges, 2006, p.81) ).. On the other hand Piaget believed that children learn best by experimenting for themselves (Flemming, 2004). This supports the fact that children who have opportunities to experiment tend to learn thorough experiences. According to

Mohler (2008) mathematical background, achievement, and problem solving ability; as well as musical background are potential roots for the development of spatial ability.

## Research Methodology

The present study was designed to find out Factors affecting Sri Lankan children's conception of Conservation and Space. Therefore, both quantitative and qualitative approach were applied in collecting data. Qualitative approach (Case study design) was applied to identify factors affecting children's conception of conservation and space and interventions required in the development of these concepts.

### *Population*

The population of the present study is all Sri Lankan primary school (5- 10 years) children. However, for practical considerations the accessible population of the study was limited to Kalutara District in the Western province. Therefore, Primary schools (5- 10years) children in the Kalutara District were the population of this study. Kalutara District consists of three Education Zones and all three social sectors namely urban, rural and estate. The researcher found that this district was the most relevant district in the Western Province in achieving all the objectives of the study.

The list of registered pre-schools in the Kalutara District was obtained from the Competent Authority in pre-school education of the Western Province Provincial Council. There were 752 pre-schools in all three Zones of Kalutara District. Out of these pre-schools 717 use the Sinhala medium while 35 use the Tamil medium. The number of schools with primary classes in the Kalutara District was collected from the Census and Statistics Unit of the Census and Statics Department of the Ministry of Education. There are 87 schools with primary grades in Kalutara district. Out of these, 67 schools use the Sinhala medium while 20 use the Tamil medium. The population of pre-schools and schools with primary grades are given in the following Table 1.

**Table 1.**

**Number of Primary Schools with Primary Classes in the Kalutara District**

| Zone | Division | No of Schools | | Total No of Schools |
|---|---|---|---|---|
| | | Sinhala | Tamil | |
| Kalutara | Panadura | 4 | 0 | 4 |
| | Dodangoda | 3 | 2 | 5 |
| | Kalutara | 1 | 0 | 1 |
| | Beruwala | 8 | 0 | 8 |
| Horana | Bandaragama | 5 | 0 | 5 |
| | Horana | 13 | 2 | 15 |
| | Bulathsinhala | 6 | 4 | 10 |
| Matugama | Matugama | 6 | 7 | 13 |
| | Agalawatta I | 6 | 4 | 10 |
| | Agalawatta II | 7 | 0 | 7 |
| | Walallawita | 8 | 1 | 9 |
| **Total** | | **67** | **20** | **87** |

Source: Statistical Hand Book- 2022, Department of Census and Statistics-Sri Lanka

***Samples of the study***

The ultimate sampling units of the study selected to achieve first two objectives were 75 primary school children between the ages of 5-10 years. They represented the age ranges: 5-6 6-7, 7-8, 8-9 and 9-10 years.

***Sampling Techniques***

A mixed method was used in selecting the samples of this study. Purposive sampling method was used in selecting the primary sampling unit (Administrative District) while stratified random sampling method was used in drawing ultimate sampling units. When subpopulations within an overall population vary, it is always advantageous to sample each subpopulation (stratum) independently.

***How the sample was selected***

The first stratum of the study population was twenty-five Districts in Sri Lanka. In view of the appropriateness to the problem investigated and other reasons such as costs involved in

conducting a study of this nature, the researcher selected Kalutara district. It consists of Kalutara, Horana and Matugama Education Zones where all ethnic groups (Sinhala, Tamils and Moor/Malay) and all social sectors (Urban, rural, Estate) live. This district was selected purposively.

The second stratum was the eleven Education Divisions functioning under the above mentioned three Education Zones (these Education Divisions are depicted in the Table 3.1). From these, the researcher selected one Education Division from each of the Education Zones. From these Education Divisions two Divisions (Kaluthara and Horana) were selected randomly while one Division (Mathugama) was selected purposively to include the estate sector.

The third stratum was the primary schools/schools with primary classes. One primary school/school with primary classes was selected from each of these Education Divisions using the Random Sampling Method. Estate schools were selected from among estate schools randomly. The sample included both media of instruction (Sinhala and Tamil) and the main social sectors (Urban, Rural and Estate).

The Fourth stratum was the children aged 5-10 years in the sample of primary schools/ schools with primary classes. This is the ultimate sampling unit of the study and was drawn using random sampling method to cover both media of instructions and the three social sectors urban rural and estate. Details of each sample are indicated in the following Tables 3.3 and 3.4.

**Table 2**

**Details of Primary School Children Sample by Education Division, Sector and Medium of Instruction**

| Age | Selected Education Division | Selected No of Schools | Selected No. of Children Sector and Medium-wise | | | Total |
|---|---|---|---|---|---|---|
| | | | Urban (Sinhala) | Rural (Sinhala) | Estate (Tamil) | |
| 5-6 years | Kalutara | 01 | 05 | - | - | 05 |
| | Horana | 01 | - | 05 | - | 05 |
| | Matugama | 01 | - | - | 05 | 05 |
| 6-7 years | Kalutara | 01 | 05 | - | - | 05 |
| | Horana | 01 | - | 05 | - | 05 |
| | Matugama | 01 | - | - | 05 | 05 |
| 7-8 years | Kalutara | 01 | 05 | - | - | 05 |
| | Horana | 01 | - | 05 | - | 05 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Matugama | 01 | - | - | 05 | 05 |
| 8-9 years | Kalutara | 01 | 05 | | | 05 |
| | Horana | 01 | | 05 | | 05 |
| | Matugama | 01 | | | 05 | 05 |
| 9-10 years | Kalutara | 01 | 05 | | | 05 |
| | Horana | 01 | | 05 | | 05 |
| | Matugama | 01 | | | 05 | 05 |
| **Total** | | 15 | **25** | **25** | **25** | **75** |

Source: Sample survey 2022

All the 75 students' parents were interviewed by the researcher. A comprehensive questionare was given to the 15 teachers.

**Main Findings of the present study**

The researcher gathered data on the child's home and school environment to identify environmental factors that reflect on children's performance in conservation and spatial tasks. According to Geist (2010), young children may not be able to add or subtract, but the relationships they are forming and their interactions with a stimulating environment encourage them to construct a foundation and framework for what will eventually become mathematical concepts. For children to act on objects they need the support of the home and school environments. Therefore, this study is focused on home backgrounds and the classroom environments to identify supportive and hindering factors in relation to conception of Conservation and Space. Kruskal-Wallis non-parametric Analysis of Variance (One-way ANOVA on ranks) was conducted using PASW Statistics 18 (formerly SPSS Statistics) to find factors affecting children's conception of 'conservation' and 'Space'.

***Results of the Kruskal-Wallis non-parametric Analysis of Variance (One-Way ANOVA)***

From the data collected on child's home and school environment the following nine variables were tested against the total score children obtained for conservation and spatial tasks.

1. Gender of the child: (Male/ Female )
2. The household sector the child lives in( Urban, Rural, Estate)
3. Family income ( Below 10000/-; Rs.10,000/-; to Rs20,000/-; Rs.20,001/- to Rs.30,000/-, Rs30,001/- to Rs.40,000/-, Rs.40,001/- to Rs.50,000/-, Rs.50,001t/- to Rs.60,000/-, Rs.60,001/- to Rs.70,000, Rs.70,001/- to Rs.80,000/-, Rs.80,001/- to Rs.90,000/-, over Rs.90,000/-)

4. Child has siblings: (Only child, has siblings )
5. Mother's education: (Primary, Secondary below (GCE OL), passed GCE(OL), passed GCE(AL), Graduate)
6. Family type: (Extended family, Nuclear family)
7. Teacher's professional qualifications (Trained/Bed/ Dip in NCOE, Untrained)
8. Teacher's educational qualifications: (GCE(OL), GCE(AL), Diploma National Colleges of Education, Graduate )
9. Teacher's experience(0-4 years, 5-8 Years, 9-12 Years, more than 12 years)

Father's education was not selected since most research specify mother's influence in predicting cognitive development of young children (Hernandez, 2014 Schady, 2011, Melhuish, 2010,) and some research consider parent's education as mother's education (Hernandez, 2014).

From the Outputs of the PASW statistics 18 to the Kruskal-Wallis non-parametric Analysis of Variance (One-way ANOVA on ranks), p-values 2 values degree of freedom of these tests are presented in the following Table 4.24.

**P values and the $\chi2$ of the Kruskal-Wallis test**

| | **Variables** | **Degree of freedom** | **Conservation** | | **Space** | |
|---|---|---|---|---|---|---|
| | | | **p-value** | $\chi2$ | **p-value** | $\chi2$ |
| 1. | Sector | 2 | 0.120 | 4.242 | 0.643 | 0.885 |
| 2. | Gender | 1 | 0.474 | 0.513 | 0.924 | 0.009 |
| 3. | Family monthly income | 9 | 0.344 | 8.975 | 0.201 | 11.013 |
| 4. | Child has siblings | 1 | **0.001** | 3.939 | **0.002** | 3.454 |
| 5. | Mother's education level | 3 | **0.003** | 5.381 | **0.001** | 3.494 |
| 6. | Family type | 1 | **0.002** | 0.877 | **0.003** | 0.953 |
| 7. | Teacher's professional qualifications | 1 | 0.158 | 0.691 | 0.336 | 0.925 |
| 8. | Teacher's Educational qualifications | 3 | 0.247 | 4.140 | 0.978 | 0.196 |
| 9. | Teacher's experience | 3 | 0.134 | 5.586 | **0.003** | 0.665 |

Source: PASW output

The confidence level was 5% (α=0.05) for this study. According to the table all the p values for conservation concept are greater than 0.05 (p>α). Therefore, there is no evidence to indicate that the nine variables tested has an effect upon performance in conservation tasks.

The p-values for child has siblings (0.001), Mother's education level (p= 0.003) and Family type (p=0.002) are less than α and p-value for the other variables are greater than for the conservation concept. This implies that, 'child has siblings' 'Mother's education level' and 'Family type' (extended or nuclear) have an effect upon the development of conservation abilities in Sri Lankan children.

The p-values for 'child has siblings' (p= 0.002), Mother's education level (p= 0.001), family type ( p=0.002) and teacher's experience (p=0.003) are less than α and p-value for the other variables are greater than for the space concept. This implies that, 'child has siblings' 'Mother's education level', 'Family type' (extended or nuclear) and 'Teachers experience' have an effect upon the development of spatial abilities in Sri Lankan children.

**Conclusions and Recommendations**

1. Variation in Sri Lankan children's conception of conservation and space according to the sectors they live in
2. Factors affecting Sri Lankan children's conception of conservation and space
3. Intervention needs of Sri Lankan children in relation to the development of conservation and spatial abilities.

**Referrences**

Elkind, D. (1961) Children's discovery of the conservation of mass, weight and volume: Piaget replication study II. *Journal of Genetic Psychology*, 98(2), pp. 219-227.

Elkind, D. (1966) Conservation across illusory transformations in young children. *Acta Psychologica*. XXV( 4), pp. 389-400.

Piaget, J. (1952). *The child's conception of number*.(C.Gttegno, F.M.Hodgson, Trans.). (London, Englnd: Routledge & Kegn Paul). (Original work published in1941).

Simon, T. J. and Halford,G.S.(eds.) (1995). *Developing cognitive competence: new approaches to process modeling*. (Hillsdale, NJ : Erlbaum).

# ENSURING EQUITY IN EDUCATION THROUGH THE 13 YEARS GUARANTEED EDUCATION PROGRAMME

**S. Sritharan**
Paddiruppu Zonal Education Office,
Kaluwanchikkudy,
ssritharanzde@gmail.com

## Abstract

The Ministry of Education (MoE) in Sri Lanka has introduced a key policy initiative to strengthen equity in education by guaranteeing equitable learning opportunities for all children, regardless of disparities. To achieve this goal, the MoE launched the "13 Years of Guaranteed Education" program (13YGEP) in 2017, targeting the Grade 12 and 13 curriculums for GCE O/L dropout students. The program aims to provide opportunities for students who fail the G.C.E O/L to qualify for GCE A/L and continue their school education by pursuing vocational subjects. This study is based on a sample of 40 teachers, 40 principals, 10 SLEAS officers, 2 Divisional Directors, 40 PSI coordinators, and all 40 SDEC members involved in the program. The primary objective of this study is to examine the implementation of the 13YGEP in schools within the Paddiruppu education zone. Specifically, it aims to assess the effectiveness of the 13YGEP in promoting equity and equal opportunities in education for all children. The findings of this study reveal that teachers, school principals, and educational administrators generally lack a comprehensive understanding of the 13YGEP's significance and its proper implementation within schools. In this context, this study intends to provide practical guidelines for enhancing the effectiveness of the 13YGEP in fostering equity in education across all schools. Data analysis employed graphical data analysis techniques. The findings indicate that 11.55% of the students who followed the program were enrolled, while 88.46% of the students were not enrolled in the last six years because these students dropped out from the 13YGEP program. The small sample size, limited geographical coverage, and short-term experience with the program are the key limitations of this study. Such surveys should be conducted continuously to monitor equity and equal opportunities for all in education through this program.

***Keywords:*** *Ensuring Equity, Education, 13 Years Guaranteed Education*

## Background of the Study:

In 2017, the 13 YGE policy has been introduced on a pilot basis in 42 schools as a 1st phase and MoE, Issurupaya plans to extend–it to 150 schools as a 2nd phase in 2018 and again extended to 1500 schools in 2019. Implement this initiative, a new curriculum consisting of 26 technical and vocational subjects have been developed and trained for these newly introduced subjects.

However, it is observed that 13 YGEP ~~is~~ has not provided an equity to all students as mentioned here. It is the researcher's hypothesis that this project which was started for a good

purpose is found to be ineffective. Therefore, this research is conducted with the aim of identifying the issues and problems, challenges of this and presenting suggestions and recommendations and mechanisms for successful implementation in schools.

**Significance of the Study**

In academic perspective, there is a difference between policy and the practice. This study would help to reconstruct these two perspectives and help to reduce the gap between policy and actions or practice? Primarily, this study can identify the reality of planning and policy implementation in school education in Sri Lanka. Findings of this research will offers guide lines for policy makers, planners and educational top level ,mid-level and low level managers and administrators to make reforms and strategies. In economic perspective, the findings of this research would help to enhance the efficiency in policy understanding, planning at the school level and the good governance and service delivery. Furthermore, it can reduce waste, human resources, physical resources and time factor and administrative delays too.

**Literature review**

Sri Lanka has given great emphasis in the field of education with the delivery of "13 YGEP which is the longest education development plan in the history of education in Sri Lanka. Moving forward, various projects, programme and development plans are introduced to the students. However, ensuring equity and equal opportunities for all in Education through the 13 YGEP in school can be a matter of concern. Is it worth for students and compulsory education law or not? In SriLanka since independence in 1948, the GoSL has provided a large, great and continuous focus to build and improve its national education policy and system. This is clearly demonstrated in significant financial investments in education, comprehensive education plans, and subsequent policy reforms to meet the country's aspirations to grow in tandem with global demands. In fact, the SriLankan education system can be regarded as an example model developed to support national development and economic growth. In order to achieve a successful educational quality, Ministry of Education (MoE) must pay more attention to the key factors such as in the field of human resources (Gholamhosseini et al., 2012; Okwukweka & Obiageli, 2015; UNESCO, 2006).

In fact, ensuring equity in education through 13 YGEP at school is not an accident, but can also be viewed as an effort or process, and this management require proper strategic planning into a comprehensive school daily performance (Okwukweka & Obiageli, 2015; Toorani, 2012). Although the effectiveness of 13 YGEP has been debated however, in Sri

Lanka context is still undeveloped. This study will explore strategies to implement efficiently and effectively in school. However, not all schools are successful with their strategies (Widodo, 2018), there are some issues must be solved before implementation of this programme in schools.

Is it ensuring the 13 YGEP and equity in education at school? Or it is just a programme that does not value the quality of education at school? At G.C.E. O/L examination in year 2022, 1.80% of students has failed in all subjects. In addition, 38.5% of students has not qualified for higher studies. As a result more than 39% of the student population may become drop outs annually. (Source: Department of Examinations, 2022).Enable students who fail the GCE O/L examination to receive vocational education, provide certified professionals to build the economy, eliminate unemployment.( Ministry of Education, 2017)

Further, 13 YGEP gives us 26 new vocational subjects introduced , Both theoretical and practical knowledge in subject areas are to be provided, NVQ level 4 certification would be awarded, Rs. 5 billion allocated to implement the programme covering the entire school system from 2019, The pilot project launched in 2017 (*Marie Perera Dept. of Humanities Education)*

In keeping with SDG 4.3 "By 2030, ensure equal access for all women and men to affordable quality technical, vocational education"

Three fundamental approaches to international education development have been conceptualized and promoted by global governance organizations since the end of the Second World War: the peace approach, the human rights approach and the development approach. These approaches form the foundation of SDG4. (2023, Sustainable Development Disciplines for Humanity).

The Development Approach id as former colonies gained independence, educational development became the center of larger modernization efforts. Using scarce budgets, these newly independent countries sought to develop their educational systems by sending students abroad to developed countries to acquire knowledge and technological skill. Japan's modernization effort during the Meiji Era is but one of countless examples of developing countries positioning education policy as modernization policy, aiming to expand education through continuous policy and financial efforts. (Zachary Romano and Rachael Ballard,2023) In this view,

"We need to learn lessons from the past and need to have a proper analysis of the performance with prudent decision-making. Sri Lanka does not have a future if we do not motivate entrepreneurs. (N.Abeysekera, 2023) / So, 13 YGEP is most of the important program is to be developed motivated to the entrepreneurs in future. Through this can contribute to the economic development.

":….the four main would contributing in school dropout of students such as related factors, family related factors , school related factors and community related factors. Every common factor affect the student's dropout rate .Essential to have sufficient physical and human resources to improve abilities and provide opportunities for better education.' (Farwis,M(2020) .Therefore , based on this literature review, 13 YGEP also affected by these kind of factors .So, the students would affect influencing above factors for the unsuccessful programme.

Equity is prior to the adoption of sustainability development goals(SDGs) the focus had been on correcting gender disparities in school enrollment, and achieving equality in terms of quantity had been emphasized rather than the promotion of equity (Kuroda 2014; Nishimura and Sasaoka 2016). Nishimura and Sasaoka (2016).

***Describe the equality and equity of education as follows***

Equality refers to a state in which all people are equal, while equity refers to the different educational treatment of people in different environments to achieve equality (Nishimura and Sasaoka 2016). From the viewpoint of equity, it is justifiable to offer more support to groups who are in a position of disadvantage (Miwa 2005). UNESCO (2017) thus analyzed the equity of education based on items such as gender equality, geographical conditions, income status, language, and disability. In addition, Schleicher (2014, p. 19) argued that equity in education can be interpreted from two perspectives, namely, equity and inclusiveness. The perspective of fairness refers to education not being restricted by gender, ethnic group, family environment, or other personal or socioeconomic conditions.

The targets of SDG4 also reflect the perspectives of "Education for development" and "educational development", as well as "education and development" to a certain extent. For example, Target 4.5 aims to "eliminate gender disparities in education and ensure equal access to all levels of education and vocational training for the in vulnerable situations" (United Nations 2015b, p. 21), which is in line with the perspective of the human rights approach. At the same time, however, "education for development" is also represented with

the inclusion of the term "vocational training", implying that education should be tied to socio economic development (Zachary Romano and Rachael Ballard, 2023 ).

Education does not necessarily increase social mobility but can reproduce inequalities by providing opportunities and resources for those already established in the society (Breault and Lack, 2009).

The term "equity in education" is deeply complex and can take on many forms, making it challenging to establish a succinct definition. But the basic meaning behind the term is the pursuit of creating an educational system that caters to students of all kinds and develops their educational experience accordingly. This means that no matter what a student's background, language, race, economic profile, gender, learning capability, disability or family history, each student has the opportunity to get the support and resources they need to achieve their educational goals.

***Identified Research gaps***

Most of the researchers have been done many studies about the policies and no one did not study significantly regarding the practical issues when implementing 13 years mandatory education programme. Also, the studies need to be done at zonal level or regional level in implementing process and related procedure but there are a few studies conducted regarding the equitable access and participation commonly to be affective. As the practitioner, I feel able to do this kind of study by me and gather the findings to the school educational leaders, managers, administrators, planners and policy makers as well. The gap between policy and practice regarding 13 YGEP implementing process. During the last 6 year–period in Paddiruppu zone 8797 students sat in GCE OL exam, but only 11.55 % of the students were enrolled in 13 years mandatory education Programme.

***Problem Identified the 13 YGEP***

Policies and programmes are not understand well ,not to be planned and implement efficiently therefore, many impacts observed on ensuring equity in education .The issues has been raised that the 13 YGEP is not been prepared and implemented efficiently at the school levels. So, There are thousands of students leave the education system either at or before GCE OL without obtaining proper knowledge, skills necessary for further education, their lives and world –of – work. Thus, expected outcomes not reached so far in the 13 YGEP. In Each year 325,000 students join Grade One but only a few qualify to enter University. The

aim of the 13 YGE policy is to ensure that all 325,000 students reach professional level. Every year 120,000 students drop out without going in for higher studies. Hence, the present system of vocational training in the country is not attractive to students. This is a big issue today,

13YGEP providing education opportunities for all children . It is to be implemented under the theme “The professional turning point in Free Education. This scheme would enable students who sit for the G.C.E. Ordinary Level Examination to obtain Higher Educational qualifications notwithstanding whether they pass or fail. Upper secondary education curriculum have been reformed including professional or vocational subject stream enabling students to obtain skills and competences related to the future job market. Under this initiative education will be mandatory for a student until Year 13 and the GCE O/L examination will no longer be a strictly “pass or fail” exam. Students will be promoted to the next class in accordance with the new education system which the government intends to introduce. Every student will remain in school after the O/L examination. It is in keeping with the Government’s proposal to lessen the burden of examinations on the students.

**Methodology**

***Objectives/Research Questions***

Main Objective is Analyzing policies and existing practices regarding 13 YGEP is planning, Implementation, and monitoring & Evaluation in Paddiruppu zone schools. Also following sub objectives are have been developed as follows.

1. Find out the factors influencing when planning and implementing 13 years guaranteed education programme
2. Find out the challenges and strengthen the strategies used when implementing 13 years guaranteed education programme.
3. To make suggestions and recommendations to fill the gap between policy and practice also to improving equitable access to and participation for 13 years guaranteed education program

**Conceptual Frame Work**




### *Research Approach:*

In this research the approaches are quantitative, qualitative, and mixed methods is to be used.

### *Research Design*

It is a Descriptive Survey research. The methods based on mixed method -qualitative and quantitative will be applied in this research. Especially descriptive research approach and explanatory research approach both of approaches are to be used by the researcher. And this will be focused on group discussion, this research will be done with the view generating a theory or finding the ideal type of ideas to increase productivity of schools and making suggestion to policy planners to forecasting.

### *Sampling*

Simple random sampling method –To select all 40 principals in the Paddiruppu education zone Stratified sampling method –To select 40 teachers, 40 principals, 10 SLEAS officers, 2 Divisional Directors, 40 PSI coordinators and all 40 SDEC members. Cluster sampling methods are to be applied in this research by selecting 1AB, 1C and Type II schools. That selection will take place as per the ratio accordingly to the number of schools and Divisions,

### *Data gathering Instruments*

- *Data gathering under the qualitative methodology-phenomenology and grounded theory types*: Literal reading, Interpretive and Reflexive reading also going to be used.

- *Data Collecting Method:*

Chiefly the questionnaire- interview, observation –Structured and Semi-Structured observation types are will be used.

*Documents:* Existing data, media articles, Research journal articles, Websites, Guidelines, Circulars and other official's records will be used in these sources of collecting information. Focus Group Discussion (Small and homogeneous group) also to be used. Field Notes –Visit the school and collecting sample prepared SBDP and Progress report of the schooling addition to that, ***Mobile Surveys:*** This is called the method data collecting, thus is a popular method which is being in this increase. For these purpose forms, data collecting electronic drives, smart phones etc. are to be used.

*Telephone:* Traditional telephone interview ***New Electronic Tools:*** Face book chatting, WhatsApp, Internet calls are to be used. Computer Assisted telephone interviews (CATI).***Mail:*** Information are to be collected via post- mail, e-mail and fax etc. ***Face and Face Interview*** and ***In –Depth interview***

**Data Analysis and Discussion**

Pass rate in G.C.E (O/L) and trend of enrolment in 13 YGEP during period between 2016 and 2021 in Paddiruppu Education zone.

| Year | No sat | No of Pass in G.C.E(O/L) | Parentage | No of students Fail in G.C.E(O/L) | Fail in Percentage | Enrolee to the 13 YMGEP | Enrolment rate | Dropout after G.C.E(O/) | Dropout rate |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2016 | **1442** | 880 | 61.03 | **562** | 38.97 | **47** | 8.36 | **515** | 91.64 |
| 2017 | **1480** | 952 | 64.32 | **528** | 35.68 | **45** | 8.52 | **483** | 91.48 |
| 2018 | **1439** | 967 | 67.2 | **472** | 32.8 | **79** | 16.73 | **393** | 83.27 |
| 2019 | **1395** | 953 | 68.32 | **442** | 31.68 | **78** | 17.66 | **364** | 82.35 |
| 2020 | **1429** | 1019 | 71.31 | **410** | 28.69 | **41** | 10 | **369** | 90 |
| 2021 | **1612** | 1173 | 72.77 | **439** | 27.77 | **35** | 7.97 | **404** | 92.03 |
| Total | **8797** | 5944 | 67.56 | **2853** | 32.43 | **325** | **11.39** | **2528** | **88.60** |

As role of education researcher on influence of planning on improvement of school is to be describe here it is not possible to take decision without keeping touch with the mixed method. That is since Qualitative and Quantitative based data are received descriptive and inferential statistics analysis is also to be used. Statistical analysis can be performed using SPSS software in this data Analysis. Exploratory data analysis is to be used in this research by using following Techniques. , Frequency and percentage tables, one way tabulating, Cross tabulation (two way higher way tabulation.) Analyzing the multiple responsible data also, Analysis the response based on indicaors.

**Annually Enrolled and not enrolled to the 13 YGEP**

| **Year** | **No sat** | **Fail in Percentage** | **Enrollee to the 13 YGEP** | **Enrolment rate** | **Dropout after G.C.E(O/)** | **Not enrolled or Dropout rate** |
|---|---|---|---|---|---|---|
| 2016 | 1442 | 38.97 | **47** | 8.36 | **515** | 91.64 |
| 2017 | 1480 | 35.68 | **45** | 8.52 | **483** | 91.48 |
| 2018 | 1439 | 32.8 | **79** | 16.73 | **393** | 83.27 |
| 2019 | 1395 | 31.68 | **78** | 17.66 | **364** | 82.35 |
| 2020 | 1429 | 28.69 | **41** | 10 | **369** | 90 |
| 2021 | 1612 | 27.77 | **35** | 7.97 | **404** | 92.03 |
| Total | 8797 | 32.43 | **325** | **11.39** | **2528** | **88.60** |

In this table, there are 88.46 % of the total students dropped out among not qualified students for GCE A/L in these years. Also, we could find out the exact degree of students to enroll in the 13 YGEP during these period of six years.

**Enrollment Trend of 1 Years Guaranteed Education Programme**




When we get the results through this analysis we came to the conclusion there is no any improvement in enrolment

rate .there is 11.54% only were enrolled and others were gone out of the system.

According the **first objective,** found there are few factors influencing in to the planning and implementing process in 13 YGEP. Mostly urban and rural area schools was selected which are already introduced and exist programme in paddiruppu education zone. Especially **Geographical factor, Economic factor, Educational status, gender wise factor were** analyzed all these factors are influencing in the enrollment and dropout. **These** factors were more significant in this study.




Further, the capacity of the teachers, Principals, ISA, ADE, DEO and the DDEe were analyzed. Actually the capacity of important of 13 YGEP or the policies in relation to the vocational stream was very lack. Especially the principals are not educated in this regard. Also, they have very good responsibility to establish network by link near the schools to provide his vocational education to the all students those who failed in G.C.E. (O/L) exam in past six years.

No any programme were conducted successfully to the parents, school development executive members and the PSI coordinators at root level. Therefore, aforesaid members has few negative opinion against this 13 YGEP in past.

**Students Enrolled in geographical area wisely to the 13 YGEP**

| DS Division | Project schools | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | Total |
|---|---|---|---|---|---|---|---|---|
| Manmunai South Eruvil Pattu | Bt/Pd/Paddiruppu MMV(NS) | 47 | 32 | 50 | 59 | 16 | 16 | **220** |
| | Bt/Pd/Kaluthavalai MV (NS) | - | - | - | 02 | 04 | - | **06** |
| | Bt/Pd/Thurai Neelawaanai MV | - | 13 | 07 | | 03 | 17 | **40** |
| Vellavely | Bt/Pd/Vellavely Kalaimaga MV | - | - | 22 | 17 | 18 | 02 | **59** |
| | Total No Enrolled | **47** | **45** | **79** | **78** | **41** | **35** | **325** |

**Students Enrolled in based on the distance wisely to the 13 YGEP**

| Name of the School in 13YGEP | No Allocated feeder School | Total Distance in Km | Average Distance in Km | Students enrolement during 6 years |
|---|---|---|---|---|
| Bt/Pd/Paddiruppu MMV(NS) | 9 | 63 | 7.00 | 220 |
| Bt/Pd/Kaluthavalai MV (NS) | 4 | 33 | 8.25 | 6 |
| Bt/Pd/Thurai Neelawaanai MV | 6 | 77 | 12.83 | 40 |
| Bt/Pd/Vellavely Kalaimaga MV | 21 | 499 | 23.76 | 59 |
| Total and Average | 40 | 672 | 16.80 | 81 |




Based on the **second objective**, here are General Components, Applied Subjects (Vocational Area) and Industrial Training strategies were used in the vocational stream in all six terms in grade12 and 13 classes.

One of the challenges faced by the 13 Years Guaranteed Education Programme (13 YGEP) is the geographical dispersion of the schools in the zone, particularly there are only four 13 YGEP schools in scattered widely in the Zone. Especially in Vellavely , where 21 other schools surrounded a particular 13 YGEP school . The average distance from Vellavely to the other 21 schools is approximately 16.8 km. Further, another significant challenge is the shortage of teachers. While a minimum of 16 teachers is required for vocational streams in each 13 YGEP school, only two teachers are currently appointed. Moreover, Upon completing their academic components, students are expected to be attached to field-related workshops or institutions near their residences. However, this proves impossible due to insufficient teachers and a lack of fundamental knowledge provided by the schools.

The prevalence of seasonal jobs, such as paddy field harvesting, weeding, corn and peanut harvesting, prawn fishing, honey hunting, brick making, and selling seasonal fruits like watermelon, blueberry, cashew nut, and others, significantly impacts student attendance

rates. Economic hardships force families to rely on these seasonal jobs, contributing to irregular attendance. Mean time ab other challenge arises from the egoistic mentality of parents who perceive attending the 13 YGEP as a mark of academic underachievement in the GCE (O/L). Approximately 80% of parents hold this mentality, fearing that allowing their children to attend the program will affect their social status and self-dignity. In addition to that Limited facilities and teachers hamper the ability of principals and teachers to compel students to attend the 13 YGEP.. When we go through the analyzing components, insufficient monitoring n and evaluation (M &E) is exist at the Zonal, Provincial, and National levels. Finally, there is a lack of specific and proper guidelines, even at the national level. The absence of a developed curriculum on the national level compounds the challenges faced by the program.

Following six major area also has introduced the students to select first three and one for specialized area. Such as Health Social Service, Social Cultural Studies, Designing, Agro and Food technology, Technical Studies, and Tourism & hospitality. In these components there are twenty six discipline have been introduced. The work to world expect these kind of competencies among the youths.

Meantime, we got the result through this analysis, in grade 12 academic period most of the students was irregular attendance to the school. Further, industrial training programme was not successful due to the unavailability of the industries near the school area. So, students are reluctant to attend the industrial turning.

**Findings**

In all schools we all are insist equity in Education as an important. So, there are numerous reasons found that why equity in education is important. Such as creating opportunity for underprivileged and underserved students so they are able to overcome disadvantages and find success**,** Giving everyone the chance to learn in the way that best supports their learning style**,** Helping students become more engaged in what they’re learning by ensuring they see people who are their same race, gender, ethnicity, etc. in their learning**,** Granting students more access to the resources that can bolster their education**,** Strengthening the connection between a student’s family and their teacher, fostering a more enriching educational environment at home**,** Guiding students to success in their educational career, and beyond**,** Closing the opportunity and achievement gap by making students equal**,** Impacting the community in positive ways, such as reducing crime rates and increasing property value and

Creating an overall economic benefit by preparing students to become contributors to society, and saving money on public assistance.

***Following matters were found as positives findings***

1. Financial provisions guaranteed in getting physical and human resources.
2. New teaching appointments have been given for some subjects.
3. A second chance for students who had dropped out of education.
4. Students are not motivated.

***Following matters were found as challenges or as negative findings.***

5. In last 6 years of period 11.55 % of the students are only were enrolled.
6. Altogether 88.46% of the students are dropped out in last 6 years year without following 13 years guaranteed education Programme.
7. Mismatch between student demand and teacher supply.
8. Lack of basic literacy and numeracy skills needed to continue with the programme.
9. Lack of awareness of the objectives of the programme by the stakeholders resulting in negative attitudes.
10. Deployment problems in the schools.
11. Need to commence in all 1C schools in rural and urban areas.
12. Lack of coordination among skill providing industrial institutions.
13. Students are not motivated by the school teachers, principals and the parents as well.

**Recommendations**

1. Establish the school with vocational stream at least requirement is 4:1 (one school for each four schools) at the all zone in Batticaloa district considering the distance between the schools by using mapping techniques.
2. Need to appoint the teachers for all subjects according the policy on 13 YGEP.
3. Select the teacher trainees among youths those who have completed at 13YGEP with credit pass in science, technical and technological subjects in G.C.E.(O/L) examination and trained them to recruit education zone wisely.
4. Establish Vocational Education Hubs (VEHs) at the area wisely to trained the students to develop their practical skills before send them to the industrial attachments.

5. Establish the "Board of Vocational Study" (BOVS) including University and UNIVOTEC professionals, registered industrial members ,SDEC members , teachers ,principals and the zonal education officials to act autonomy.
6. Awarding foreign scholarship for the student's those who have completed vocational stream through the 13 YGEP.
7. Providing equal learning opportunities in all children included rural area children by maintaining equity in education through 13 YGEP.
8. Giving job opportunities in local and foreign countries to resolve the economic crisis in the region and country.
9. Facilitating all schools in 13YGEP with the laboratory, libraries and workshop facilities as well as the high technologized end digitalized equipment.
10. Develop mechanism for effective monitoring and evaluation at the Zonal, Provincial and National level.

**Conclusion**

A very good effective concept and programme, if efficiently implemented. Meanwhile, equity in education aims to provide equal opportunity to all students to develop valuable skills and knowledge that help them live a full life and contribute to society. To succeed this policy and programme, educators to be tasked with reworking systems of learning that exist on both the school, Zonal levels and ensure this approach is adopted from the top down.The new system is then built on fairness and inclusion, with safeguards such as interventions and resources built in to make sure every student has every opportunity to achieve their academic and vocational goals. Further, to ensure equity in education needs refining, re-structuring and monitoring this 13 YGEP in all schools.

**References**

Abandzi H (2006) efficient learning for the poor: insights from the frontier of cognitive neuroscience. The World Bank, Washington D.C.

Barro RJ (1991) Economic growth in a cross section of countries. *Q J Econ* 106(2):407–443

Carnoy M (1980) International institutions and educational policy: a review of education-sector policy. *Prospects Q Rev Educ X* (3):265–283

Denison E (1962) The source of economic growth in the united states and alternatives before the U.S. Committee of Economic Development, New York

Education first (2013), MoE, issurupaya

Farwis,M.(2020) Analysis of school dropout among secondary school students. Department of Accountancy,Sri Lanka Institute of Advanced Technical Education.

Guidelne for School Level Planning (2013) ,Ministry of Education. Issurupaya.

Guide line on National Educational Standards and Asia Competencies (2010) ,Management & Quality Assurance Unit Ministry of Education.

Hirosato Y, Kitamura Y (eds). (2009). *The political economy of educational reforms and capacity development in Southeast Asia: case of Cambodia, Laos and Vietnam.* Springer.

IIE .(1955). Committee on educational interchange policy, 1955, the goals of student exchange institute of international education New York

Jayarathne, P. M. G. N. M.; Prabodanie,R.A.R (2017). Impacts of the 13 Years of Guaranteed Education Stream a Survey of the Students in Kandy District,Sri Lanka.

King K, Buchert L .(1999). *Changing international aid to education: global patterns and national context.* UNESCO Publishing.

MoE (n.d). Guideline for Child Friendly Approach: For a quality primary school. Primary Education Branch: Ministry of Education Sri Lanka

MoE (2013). Guideline for School- level planning. Battaramulla: Ministry of Education Sri Lanka

MoE (2014). Our School: How good is it? –Process of Evaluating and Monitoring for assuring the Quality in Education. Battaramulla: Ministry of Education, Sri Lanka

Ministry of Education (2017). General Education reforms 13 years guaranteed education.

Nalin, A.(2023). Bitter IMF and better future. The Open University of Sri Lanka,

Obondoh A, Nandago, M., Otiende E. (2005) managing our schools today: A practical guide on participatory school governance: A manual for training and advocacy work. PAMOJA: Africa Reflect network and ANCEFA.

The national strategy plan for General Education Sector (2012), Ministry of Education, Issurupaya.

The study on School Based teacher Development Programme(2007).University of Peradeniya.,Faculty of Education,World Bank ,

UNESCO (2015). Results- Based Programming, Management, Monitoring and Reporting (RBM) approach as applied at UNESCO- Guiding Principles. Paris: Bureau of Strategic Planning,UNESCO

Zachary Romano and Rachael Ballard.(2023). *Sustainable Development Disciplines for Humanity*.Springer.

# Politics and Human Rights

# சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகத்தவர்களுக்கிடையிலான மோதல்களும் நல்லிணக்க முயற்சிகளும் - இலங்கையில் இடம்பெற்ற முக்கிய கலவரங்களை மையப்படுத்திய ஆய்வு

**பாத்திமா நவாஸ்தீன், பேரின்பம் சச்சிதானந்தம்**
ஒப்பீட்டுச் சமயமும் சமூக நல்லுறவும் துறை,
கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.
Mnfathima6@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பல்லினக் கலாசாரங்கள் பின்பற்றப்படுகிற இலங்கை நாட்டில் நல்லிணக்கம் என்பது அவசியமாகின்றது என்பதனால் மக்கள் நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கு முயன்றாலும் இடையிடையே மோதல்கள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதென்றாகும். அந்தவகையில் சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகத்தவர்களுக்கிடையில் 1915ம் ஆண்டு துளிர்விடப்பட்ட மோதல்கள் யுத்தத்திற்குப் பின்னர் மிக வேகமாக அதிகரித்துள்ளதால் அவை பற்றி ஆராய்வது காலத்தின் தேவையாகவுள்ளது. அத்துடன், இரண்டாம் நிலைத் தரவுகளை ஆய்வு அணுகு முறைகளாகக் கொண்டு, நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள், ஆய்வுக் கட்டுரைகள், பத்திரிகைகள் என்பவற்றின் துணையுடன் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பல்லினக் கலாரச் சூழலில் இரண்டு இனத்தவர்களிடையேயும் இடம்பெற்ற கலவரங்கள் தனி நபர்கள், தனிக் குழுக்கள் சார்ந்ததாகத் துவங்கிப் பின்னராகச் சமூங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற விதத்திலான கலவரங்களாக மாற்றமடைந்தன. பேசித் தீர்த்துக்கொள்ள முடியுமான அநேக மோதல்கள் புரிந்துணர்வின்மை, அடிப்படைவாதச் சிந்தனைகள், இனவாதம் என்பன போன்ற பல்வேறு காரணங்களினால் பாரிய கலவரங்களாக வீரியமடைந்தன. மோதல்களால் உடல், உள, சமூக, பொருளாதார, கலாசார ரீதியாகப் பல்வேறுபட்ட பாதிப்புக்கள் ஏற்பட்டன. அத்துடன், பல்சமய உரையாடல், இளைஞர்கள் மத்தியிலான நல்லிணக்க முயற்சிகள், கல்வித்துறை சார்ந்த செயற்றிட்டங்கள், கலாசார நிகழ்வுகள் போன்ற பல்வேறுபட்ட வழிமுறைகளில் நல்லிணக்க முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகத்தவர்களுக்கிடையில் இடையிடையே பல்வேறு மோதல்களும் அத்துடன் கலவரங்களும் ஏற்பட்ட போதும் கூட நல்லிணக்கத்திற்கான முயற்சிகளின் காரணமாக இணக்கப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன. எனவே, உரிய திட்டங்களையும், வழிவகைகளையும் மேற்கொள்வதனூடாக மோதல்கள் மற்றும் பிரச்சினைகள் இல்லாத நல்லிணக்கமான சமூகத்தினையும் சூழலையும் உருவாக்கலாம்.

***திறவுச் சொற்கள்:*** *மோதல்கள், கலவரங்கள், சமூகம், நல்லிணக்கம், பன்மைத்துவம்*

## ஆய்வு அறிமுகம்

இலங்கையின் வரலாற்றில் மிகத்தொன்மையான காலத்தில் இருந்தே துவங்கிவிட்ட இன மோதல்கள் படிப்படியாக வளர்ச்சியினைக் கண்டு, விருட்சமாகி இன்றைய நூற்றாண்டுக் காலப்பகுதியில் பாரியளவான ஒரு சமூகப் பிரச்சினையாகவே உருமாறியுள்ளது. இலங்கையின் பல்வேறு துறைகளிலும் அதிகளவிலான தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு சமூகப் பிரச்சினையாக இது அமைந்துள்ளது. எனவே, அவற்றினை அடையாளப்படுத்தி அதற்கான காரணங்களினைக் கண்டறிவதும் காலத்தின் முக்கியமான தேவையாகக் காணப்படுகின்றது.

தனியான ஒரு சமயத்தினை மட்டும் கொண்ட மக்கள் வாழக்கூடிய நாடுகளைவிடவும் பல்வேறு சமயங்களைப் பின்பற்றக்கூடிய மக்கள் வாழுகின்ற பல்லினக் கலாசாரச் சூழலினைக் கொண்ட நாடுகளில் இன ரீதியிலான மோதல்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்கள் அதிகமாகவே உள்ளன. அவ்வாறே இலங்கையிலும் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த

மக்களும் இணைந்து வாழும் ஒரு அமைப்பே காணப்படுகின்றது. இந்நிலையில் அதிகளவிலான முரண்பாடுகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய துரதிஷ்டவசமான நிலைமை காணப்படுகின்றது. இலங்கை நாட்டில் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் என பிரதான நான்கு சமயங்கள் காணப்படுகின்றன. எனவே, பல்லினக் கலாசாரங்களைப் பின்பற்றுகின்ற நாடென்ற வகையில் பண்டைய காலம் தொட்டு நல்லிணக்கம் இருந்து வந்தாலும், மோதல்களும், கலவரங்களும் இடையிடையே இடம்பெற்றே உள்ளன.

அவ்வடிப்படையில் சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கிடையில் உறவு முறைமை பண்டைய மன்னர்கள் காலத்திலிருந்து பலமாக இருந்தாலும் பிரித்தானிய காலத்திலிருந்து பிளவுபடத் தொடங்கியது. இதனது விளைவாகவே, 1915ஆம் ஆண்டில் சிங்கள-முஸ்லிம் மோதல்கள் ஆரம்பமாகின. இதன் தொடர்ச்சியாகப் பல்வேறு கால கட்டங்களிலும் பல்வேறு மோதல்கள் இடம்பெற்றன. இவ்வாறாக, இனரீதியான மோதல்கள் தோற்றம் பெறுவதற்குப் பல்வேறுபட்ட காரணிகள் காணப்படுகின்றன. அவற்றையெல்லாம் இனங்கண்டுத் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வது அவசியமாகும். அவ்வாறாக முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்ற போது இலங்கை நாட்டில் சமாதானமான மற்றும் அமைதியான சூழலை உருவாக்க முடியும்.

எனவே, சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகத்தவர்களுக்கிடையில் உறவுசார்ந்த நிலைகள், சிங்கள மற்றும் முஸ்லிம் இன மோதல்களின் தோற்றம், மோதல்களுக்கானக் காரணங்கள் அதேபோன்று, வன்முறைகள் மூலம் ஏற்பட்ட விளைவுகள், அவற்றை தடுக்க மேற்கொள்ளப்பட வேண்டிய உரிய நடவடிக்கைகள், நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் என்றவாறாக ஆராயப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

பல்லின சமூகங்களைச் சேர்ந்த மக்களும் இணைந்து வாழும் நாடுகளில் பன்மைத்துவ நடைமுறைகளின் காரணமாகப் பல்வேறுபட்ட மோதல்களும் மற்றும் பிரச்சினைகளும் ஏற்பட்டு வருவதனைத் தவிர்க்க முடியாது. அந்தவகையில் பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், பறங்கியர்கள் போன்ற பல்லினங்களையும் சேர்ந்த மக்களும் இணைந்தே வாழுகின்ற நாடாகவே இலங்கை காணப்படுகின்றது. அவ்வகையில், நீண்டகால நல்வாழ்வுடன் கூடிய நல்லிணக்கமான சமூக வாழ்க்கை முறை நிலவிய ஒரு சூழலில், ஏன் இரண்டு சமூக மக்களுக்குமிடையில் மோதல்கள் ஏற்படுகின்றன? என்பது இவ்வாய்வினது பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

**ஆய்வு நோக்கம்**

நீண்டகாலமாக நிலவிய, நல்வாழ்வுடன் கூடிய நல்லிணக்கமான சமூக வாழ்க்கைச் சூழலில், இரு சமூகங்களையும் சேர்ந்த மக்களுக்கு மத்தியிலும் இடையிடையே இடம்பெற்று வந்த மோதல்கள் கண்டறிவதுடன் அவற்றை தடுத்து அவ்விரண்டு சமூகங்களுக்கிடையிலும் சகவாழ்வை ஏற்படுத்தும் நல்லிணக்க முயற்சிகளின் தேவைப்பாட்டினைக் வெளிக்கொணர்தல்.

**ஆய்வு கருதுகோள்**

“பன்மைத்துவக் கலாசாரங்களைக் கொண்ட இலங்கையில் நல்லிணக்கமான சூழல் நிலவிவந்த போதும் கூட இடையிடையே இடம்பெற்ற மோதல்கள் நல்லிணக்கத்தினைப் பாதித்தன. எனவே, அவற்றிலிருந்து விடுபடுவதற்கான பல்வேறு உபாயங்களையும் நல்லிணக்க முயற்சிகளையும் இவ்வாய்வு வெளிக்கொண்டு வரும்”.

**ஆய்வு வரையறை**

சிங்கள மற்றும் முஸ்லிம் இனத்தவர்களுக்கிடையில் 1915ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையில் இடம்பெற்ற முக்கியமான கலவரங்களினையும் மோதல்களைத் தவிர்த்து நல்லிணக்கத்தை ஏற்படுத்த மேற்கொள்ளப்படுகின்ற நல்லிணக்க முயற்சிகள் குறித்தும் இங்கு ஆராயப்படுகின்றது.

**இலக்கிய மீளாய்வு**

இலங்கையில் வாழக்கூடிய சிறுபான்மையின மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக, முஸ்லிம் சமூகம் வரலாற்றுக் காலம் தொடக்கம் பாரிய இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றது. இவைபோன்ற விடயங்களை முஹம்மது சமீம், அ, (1998) எழுதிய ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் பிரச்சினைகள் என்ற நூல் எடுத்தாராய்கின்றது.

இனங்களுக்குள்ளே காணப்படும் வன்முறைகள் மற்றும் பொதுவான இன-மத வன்முறை என்பவற்றுக்கிடையில் பல உறவு முறைகள் காணப்படுவதுடன் இன-மத வன்முறைகள் என்பவை சமூகத்தின் நிலையான ஸ்திரத் தன்மையைப் பாதிக்க கூடியதாகவும் பல்வேறுபட்ட மோசமான விளைவுகளையும் ஏற்படுத்தக் கூடியதாகவும் அமைந்துள்ளன. இவற்றை டெனிஸ் மெக்கில்வரி “Sri Lankan Muslims between Ethno-Nationalism and global ummah", (2011) என்ற ஆய்வினூடாக விளக்குவதுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் இலகுவானதொன்றாகவும் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியதாகவும் உள்ளது. எனவே, தேசிய நல்லிணக்கத்தின் சவால்கள், அதற்கான ஆலோசனைகள், முன்னெடுக்கப்பட வேண்டிய உரிய நடவடிக்கைகள் போன்றன பற்றி விளக்குகின்றது.

இலங்கையினுடைய இன முரண்பாட்டில் பௌத்த அடிப்படைவாதச் செயற்பாடுகள் தாக்கத்தைச் செலுத்தின. ஆனால் பௌத்த சமயச் சிந்தனைகள் முரண்பாட்டுக்கு வித்திட்டதா என்பது கேள்விக்குறி ஏனெனில், கௌதம புத்தரோ அல்லது அவருடைய போதனைகளோ வன்முறைகள் பற்றி போதிக்கவில்லை. அந்தவகையில் முரண்பாடுகள் பற்றிய பௌத்த சிந்தனைகளைப் பற்றியும் இலங்கையில் இன முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதில் பௌத்தத் தீவிரவாதக் குழுக்களினைப் பற்றியும் மஹிந்த தீகல்லே, (2003), “இலங்கையில் இன முரண்பாடுகளும் பௌத்தமும், சமாதானமும்”, நோர்வே பௌத்த சங்கம். என்ற நூலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

பன்மைத்துவக் கலாசாரச் சூழலைக்கொண்ட இலங்கையில் சிறுபான்மையின முஸ்லிம் மக்களுக்கு 1915ஆம் ஆண்டு தொடக்கம் இன எதிர்ப்புக்கள் ஒரு சில தீவிரவாதக் குழுக்களால் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான பின்னணியில் Mohamed Frook Fawas, (2021), Nonviolence Response to Ethnic Conflicts : The Case of Muslims in Sri Lanka என்ற ஆய்வினூடாகச் சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரான வன்முறை, வன்முறையற்ற பதில், இனவாதத் தேசியவாதம், அஹிம்சைக் கோட்பாடுகள் போன்ற பலவேறுபட்ட விடயங்கள் விளக்கப்பட்டுள்ளதுடன் அஹிம்சையினைத் தத்துவம், உளவியல், மானிடவியல் சார்ந்த பல பார்வைகளால் நோக்குகின்றார்.

இலங்கையில் இடம்பெற்ற நீண்டகால யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டாலும் கூட அதற்கு பின்னும் சமூகங்களிடையே முரண்பாடுகள் இடம்பெற்றே வருகின்றன. இந்நிலையில் சகவாழ்வு அவசியமான ஒன்றாகவே தான் காணப்படுகின்றது. அந்தவகையில் யுத்தத்தின் பின்னர் பல்லினச் சமூகங்களுக்கிடையில் சகவாழ்வு முறை எவ்வாறாகக் காணப்படுகின்றது. மற்றும் நல்லிணக்கத்திற்கான அவசியம் போன்றவற்றை ஸஜீதா, 2017, ''யுத்தத்திற்கு பின்னர் இலங்கையின் இன நல்லிணக்கம்'' என்ற ஆய்வுக் கட்டுரையினூடாக வெளிப்படுத்துகின்றார்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு இரண்டாம் நிலைத் தரவுகளைக் கொண்டு அமைந்திருப்பதுடன் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், புள்ளி விபரங்கள், ஏனைய மொழிகளிலே வெளிவந்த ஆய்வுத் தலைப்பினைச் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தளங்கள் மூலமான ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் ஆக்கங்கள் என்பவற்றை துணையாக கொண்டு தயார் செய்யப்பட்டுள்ளது.

**மோதல் காரணிகள்**

தேசிய மட்டத்திலாயினும் சரி சர்வதேச மட்டத்திலாயினும் சரி இடம்பெறக் கூடிய ஒவ்வொரு மோதலும் தனக்கே உரிய தனித்துவமானப் பண்புகளைக் கொண்டிருக்கும் என்ற வகையில் சிறப்பான காரணிகள் அம்மோதலின் பின்னணியில் செயற்பட்டிருக்கும். எனினும், இக்காரணிகளிலே பொதுவான அம்சங்கள் காணப்படும். இந்தப் பொதுவான பண்புகளினைக் கொண்டமைந்த வகையிலே மோதலுக்கான காரணிகளினை விளக்கும் கோட்பாடுகள் பல முன்வைக்கப்பட்டுள்ளன.

அவ்வகையில் ஒரு சமூகத்தினது அதிகாரக் கட்டமைப்பே மோதலுக்கான அடிப்படைக் காரணம் எனச் சிலர் கருதுகின்றனர், இது மோதலின் அடிப்படையில் அதிகாரத்துடன் தொடர்புபடுத்தி விளக்குவதற்கு முற்படுகின்ற ஒரு கோட்பாடாகும். எந்த ஒரு சமூகமும் அல்லது நிறுவனமும் அதனை வழிநடாத்திச் செல்கின்ற அதிகாரக் கட்டமைப்பு ஒன்றினைக் கொண்டிருக்கும். அதிகாரக் கட்டமைப்பு அதிகாரம் செலுத்தக் கூடியவர்கள், அதிகாரத்திற்கு உட்படுபவர்கள் ஆகிய இரண்டு தரப்பினர்களைக் கொண்டிருக்கின்ற நிலையில் இவ்விரு தரப்பினருக்குமிடையிலான மோதலானது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது என்பது இந்தக்

கோட்பாட்டினுடைய அடிப்படையான வாதம் ஆகும். பிசரும், சகாக்களும் மோதலுக்கான காரணிகள் சிலவற்றை அடையாளம் கண்டுள்ளனர். அவை

1. சமூக உறவுகள்
2. ஒவ்வா நிலைப்பாடுகள்
3. மனிதத் தேவைகள்
4. அடையாள உணர்வுகள்
5. கலாச்சாரங்களுக்கிடையிலான தவறான தொடர்பாடல்
6. சமூக அநீதி

அதேசமயம் ஒவ்வாத இலக்குகள் அல்லது நிலைப்பாடுகளே தான் மோதல்களைத் தோற்றுவிக்கின்றன. விதிமுறைப் பேச்சுவார்த்தைக் கோட்பாட்டின் பிரகாரம் மோதலில் ஈடுபடுகின்ற தரப்பினர் தமது இலக்குகளை முழுமையாக அடைய முற்படுகின்ற அதே சமயம் எதிர்த்தரப்பை முழுமையாகத் தோல்வியடையச் செய்ய முற்படுவதனால் இங்கு மோதல்கள் ஏற்படுகின்றன. மோதல்களுக்கான காரணங்களை விளக்குவதில் மனிதத் தேவைகள் கோட்பாடு பாரியளவு ஒரு பங்களிப்பினைச் செய்துள்ளது. மனிதர்களுக்கு மிகவும் அடிப்படையான சமூக, உடலியல் மற்றும் உளவியல் ரீதியான தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் ஏற்படுகின்ற விரக்தியின் காரணமாகவே மோதல்கள் ஏற்படுகின்றன என்பது கோட்பாட்டின் அடிப்படையாகும்.

***மோதல் குறித்து அறிஞர்களின் கருத்துக்கள்.***

A. Schellenberg, ‘‘போட்டியான அபிலாஷை, பல்வேறுபட்ட தனித்துவங்கள் மற்றும் மனப்பாங்கு மாற்றங்கள் காரணமாக, ஆட்களுக்கு அல்லது குழுக்களுக்கிடையே உருவாகும் எதிர்ப்பாகும்’’ என்கின்றார்.

Glasl, ‘‘தனிநபர்கள், குழுக்கள், நிறுவனங்கள் போன்ற நடிகர்களுக்கிடையில் நிகழுகின்ற ஒரு இடையூடாட்டமாகும். அதாவது, சிந்தனைகள், கற்பனைகள், உணர்வுகள் என்பன பரஸ்பரம் ஒத்தியங்கவில்லை என உணரும் போது ஏற்படுவதாகும்’’ என வரையறை செய்கின்றார்.

Chung & Meggison, ‘‘இணையமுடியாத தேவைகள், விருப்பங்கள், எண்ணங்கள் நபர்கள் போன்றவற்றினிடையே ஏற்படும் போராட்டம்’’ எனக் கூறுகின்றார்.

Coser, ‘‘எதிரிகளை மட்டுப்படுத்துவதை, காயப்படுத்துவதை அல்லது அழிப்பதை இலக்காகக் கொண்ட விழுமியங்கள் மற்றும் பற்றாக்குறையினுடைய அந்தஸ்து, அதிகாரம் மற்றும் வளங்களுக்கான போராட்டமாகும்’’ என்கின்றார்.

Fisher, ‘‘தம்மிடையே ஒவ்வாத இலக்குகளைக் கொண்ட அல்லது அவ்விதமாகக் கருதும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினரிடையேயான உறவு’’ என குறிப்பிடுகின்றார்.

Johan Galtung, ‘‘படிமுறையான விசைப்பண்பாகவுள்ள இதில் கட்டமைப்பு, மனப்பாங்குகள், நடத்தைகள் என்பன ஒன்றின் மீது மற்றொன்று செல்வாக்குச் செலுத்துவதுடன் தொடர்ந்தும் மாற்றமடைந்து கொண்டிருக்கும்’’ என்கின்றார். (சிவானந்தமூர்த்தி, 2010)

***சிங்கள - முஸ்லிம் மோதல்களின் சுருக்கமான பார்வை***

பன்மைத்துவச் சூழலைக் கொண்ட இலங்கை நாட்டில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலப் பகுதிகளில் பௌத்தர்களுக்கும், இஸ்லாமியர்களுக்குமிடையிலான உறவானது மிகவும் நெருக்கமாகக் காணப்பட்டதை வரலாறுகள் சான்று பகிர்கின்றன. இரு சமயங்களையும் சேர்ந்த மக்களிடையிலே நல்வாழ்வுடன்கூடிய நல்லிணக்கம் இவ்வாறாக காணப்பட்ட போதிலும் கூட இடையிடையே பல்வேறுபட்ட மோதல்ளும் இடம்பெறவே செய்தன.

இலங்கையினுடைய இனமோதல் வரலாற்றில் இரத்தக்கறை படிந்த அத்தியாயம் முதன் முதலாக 1915ல் தான் எழுதப்பட்டது. சிங்கள இனத்துவச் சிந்தனையாளர்கள் மூலமாகத் தோற்றுவிக்கப்பட்ட சிங்கள மேலாதிக்கத்தின் விளைவாகச் சிங்கள மற்றும் முஸ்லிம் வர்த்தகர்களிடையே போட்டியும், விரிசல்களும் ஏற்பட்டன. முதலாம் உலக மகாயுத்தத்தின் காரணமாகப் பொருள் பற்றாக்குறை மற்றும் பணவீக்கத்தின் காரணமாக அத்தியாவசியப் பொருட்களினுடைய விலையேற்றம் நுகர்வோர் மத்தியில் விசனத்தினை ஏற்படுத்தியிருந்தது. இதனைச் சிங்கள மேலாதிக்கத் தேசியவாதிகள் முஸ்லிம்களுக்கு எதிரான பகையாக தூண்டி விட்டார்கள்.

1915ம் ஆண்டு சிங்களவர்களினது பெரஹரா ஊர்வலம் பள்ளிவாசலை கடந்து செல்கையில் அமைதியாகச் செல்லுமாறு முஸ்லிம் தலைவர்கள் கோரிக்கை விடுத்தும் அதனை பின்பற்றாததன் விளைவாக சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் கலவரம் மூண்டது. இக்கலவரமானது தீர்விற்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் முஸ்லிம்களுக்கு எதிரானப் பிரச்சாரம் தீவிரமடைந்தது. 25 முஸ்லிம்கள் கொல்லப்பட்டதுடன் 200 பேரளவில் காயமுற்றனர். பல பள்ளிவாசல்களும் தாக்கப்பட்டன. முஸ்லிம்களின் பல்வேறு உடமைகளும் அழிக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டன (Johansson, 2019).

சுதந்திர இலங்கையிலும் பௌத்த தேசியவாதத்தின் செல்வாக்கு அதிகமாகவே காணப்பட்டது. ‘‘இலங்கை பன்மைத்துவ நாடாகக் காணப்பட்டாலும் சுதந்திரத்திற்குப் பின்னர் உருவாக்கப்பட்ட அரசு பன்மைத்துவத்தினைப் பிரதிபலிக்கவில்லை. மாறாகப் பெரும்பான்மைப் பௌத்தர்களின் ஆதிக்கம் நிறைந்த ஒற்றையாட்சியாகவே உருவாக்கப்பட்டது’’.

இவ்வாறாக, 1915ல் துவக்கி வைக்கப்பட்ட சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான மோதல்கள் இன்று வரையில் தொடர்ந்தவாறாகவே உள்ளன. அத்துடன் இரு சமூகங்களுக்குமிடையிலான மோதல்கள் 1915 கலவரத்தினைத் தொடர்ந்து 1972 மடவளைக் கலவரம், 1976 புத்தளத்தில் இடம்பெற்ற கலவரம் மற்றும் 1982 காலியில், 1999 மீயெல்லைக் கலவரம் எனக் கலவரங்கள் பலவறாகத் தொடர்ந்ததுடன் 2001 மாவனல்லையில் இடம்பெற்றக்

கலவரமும் முக்கியமான ஒன்றாக நோக்கப்படுகின்றது. இவ்வாறாக நடந்தேறிய மோதல்கள் பல்வேறு மோசமான விளைவுகளுக்கு சமூகத்தை உள்ளாக்கிவிட்டன.

இவ்வாறாகத் தொடர்ந்த ''சிங்கள முஸ்லிம் மோதல்களில் 2013ம் ஆண்டு பௌத்த அமைப்புகள் ஜமிய்யதுல் உலமாவினால் வழங்கப்படும் ஹலால் சான்றிதழ் அவசியமில்லை என்றும் அதனை தடைசெய்ய வேண்டுமென்கின்ற நோக்கிலும் 2013ம் ஆண்டினை ஹலால் ஒழிப்பு ஆண்டாகப் பிரகடனப்படுத்தியதுடன் முஸ்லிம்களுக்கு எதிராக 10 தீர்மானங்களை மேற்கொண்டு உலமா சபையைத் தடை செய்யவும் யோசனைகள் முன்வைத்தன''.

அத்துடன், 2014 அளுத்கமைக் கலவரம், 2018, 2019 போன்ற பல அண்மைக்காலக் கலவரங்களும் மக்கள் மனதில் மறக்க முடியாத வடுக்களைப் பதிவு செய்ததுடன் இரண்டு சமயங்களையும் சேர்ந்த சாதரண மக்களிடையில் மனக் கசப்புக்களையும் ஏற்படுத்தின. ஆரம்ப காலங்களில் சிங்கள மற்றும் முஸ்லிம்களுக்கிடையில் கலவரங்கள் குறித்தளவிலே நடந்தேறியிருந்தாலும் யுத்தத்தின் பின்னராக அதிகரித்தன. பௌத்தத் தேசியவாத எழுச்சி, தவறான பல கண்ணோட்டங்கள், அடிப்படைவாத அமைப்புக்கள் போன்றவற்றை இவற்றுக்குக் காரணங்களாகக் குறிப்பிடலாம்.

***சிங்கள – முஸ்லிம் மோதல்கள்***

1915 - கண்டியில் இடம்பெற்ற முதலாவது சிங்கள-முஸ்லிம் கலவரம், 1976 - புத்தளம் கலவரம், 1982 - காலி துலவத்தைக் கலவரம், 1994 - உக்ரஸ்பிட்டி கலவரம், 1996 - மடவளைக் கலவரம் 1998 - கலகெதர மடிகே கலவரம், திக்வெல்லைக் கலவரம், 1999 - மீயெல்ல கலவரம், பன்னலை அலபெடகம கலவரம், 2001 - மாவனல்லைக் கலவரம், வடதெனிய கலவரம், 2002 - பேருவளைக் கலவரம் 2014 - அளுத்கம கலவரம் 2018 - திகன கலவரம், 2019 - ஈஸ்டர் தாக்குதலுக்கு பின், குருநாகல் மாவட்ட முஸ்லிம் கிராமங்கள் தாக்கப்பட்டமை மற்றும் நீர்கொழும்பு, சிலாபம், மினுவங்கொட பகுதிகளில் பல உடமைகள் சேதப்படுத்தப்பட்டமை.

**நல்லிணக்கம்**

நல்லிணக்கம் அல்லது நல்லுறவு என்ற பதம் ஆங்கிலத்தில் ஹார்மனி (Harmony) என்று அழைக்கப்படுகின்றது. இப்பதம் கிரேக்கச் சொல்லான ஹார்மொனியா (Harmonia) என்பதிலிருந்து தோற்றம் பெற்றதாகும். (Hamonia) என்பதன் பொருள் மன இசைவு, ஒற்றுமை, சமாதானம் என்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. அதாவது, ''சமூகத்தில் உள்ள அனைவருமே வேறுபாடுகளின்றி, ஒருவருடன் ஒருவர் புரிந்துணர்வுடன் வாழ்வதே தான் சமூக நல்லிணக்கம்'' எனப்படுகின்றது.

***நல்லிணக்கம் பற்றிய வரைவிலக்கணங்கள்.***

Galla , ''சிவில் சமூகத்தில் சமநிலை மற்றும் கூட்டுறவைப் பேணுவதுடன் தொடர்புடைய விடயமாகும்'' எனக்குறிப்பிடுகின்றார்.

John Paul Lederach, “மக்கள் மனதில் ஏற்படும் சமயம் சார்ந்த இரக்கமாகும்” என்கின்றார்.Fred E.Foldvary, “அனைத்து மக்களையும் தார்மீக மனப்பான்மையுடன் சமமாக நோக்குதல்” என வரையறை செய்கின்றார்.

Luc Reyechler & Thenia Pappenholz, “முரண்பட்டு நிற்பவர்களிடையே காணப்படும் மனக்கசப்பு, வன்மங்கள் என்பவற்றிற்குப் பதிலாக நட்புறவு, தோழமை என்பவற்றை ஏற்படுத்துவதாகும்” என்கின்றனர்.

***மேற்கொள்ளப்படும் நல்லிணக்க முயற்சிகள்***

*பல்சமய சம்பாசணைகளை நிகழ்த்துதல்*

சொற்களையும் மற்றும் கருத்துக்களையும் விளங்கிக் கொள்ள மேற்கொள்ளப்படும் முயற்சியாகும். சமயங்களிடையில் சம்பாசணை என்பது மக்களை தன்னார்வமாக சம்பாசணை செய்ய வாய்ப்பை ஏற்படுத்தி பிறசமயப் பாரம்பரியங்கள், அடிப்படை உண்மைகள், அவை போதிக்கும் விடயங்களின் ஆழ்ந்த கருத்துக்கள் என்பவற்றைப் புரிந்து கொள்ள உதவியாகவும் பிற சமயம் சார்ந்த மதிப்பும் தெளிவும் கிடைக்கவும் செய்கின்றது. பல்சமயச் சம்பா'னையில் ஈடுபடக் கூடியவர்கள் தமது சமயக் கருத்துக்களுக்களை நியாயப்படுத்தவோ, எதிர்நிலையிலே நின்று வாதிடக் கிடைத்த சந்தர்ப்பமாகவோ இதனைக் கருதக்கூடாது. அத்துடன் தங்களது சமயம் சார்ந்த கருத்துக்களையும், நம்பிக்கைகளையும் வெளிப்படையாக வெளிப்படுத்த தயாராக இருப்பதுடன் இதன் அடைவு சமாதானமாகவும் இருக்க வேண்டும்.

அதேபோன்று, கைசீட் (KAICID) நிறுவனத்தினது பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த சர்வதேச உறுப்பினர்கள் மூலமாக அவர்கள் வாழும் நாடுகளில் சமாதானத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. உதாரணமாக, தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களிடையே சமயங்களிடையிலான கலந்துரையாடல் பன்மைத்துவமும் என்கிற தொனிப்பொருளில் கலாநிதி ரமீஸ் அபூபக்கர் நிகழ்த்திய செயலமர்வை குறிப்பிடலாம். இதுபோன்ற சர்வதேச மட்ட மற்றும் உள்ளூர் மட்ட நிகழ்வுகள் நல்லிணக்கத்தினை ஏற்படுத்த துணையாக அமையும்.

*இளைஞர்கள் மத்தியில் நல்லிணக்க முயற்சிகள்*

இலங்கையில் இடம்பெறும் இனமுரண்பாடுகளுக்கு தீர்வு காணுகிற உயரிய நோக்கில் நல்லிணக்கம் சார்ந்த முயற்சிகள் ஏற்படுத்தப்படுதல் மிகவும் அவசியமாக உள்ளமையினால் சமூகத்தைப் பிரதிபலிக்கக்கூடிய இளைஞர்கள் மத்தியில் சகவாழ்வினுடைய அவசியத்தினை வலியுறுத்துவதுடன் அவர்களுக்கான ஆக்கபூர்வமான பல வழிகாட்டல்களையும் வழங்குவது அவசியமாகும். பெண்கள் மற்றும் இளைஞர்களை இணைத்து மொனராகலை, வவுனியா, திருகோணமலை போன்ற பல மாவட்டங்களிலே தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் மூலமாக இளைஞர்கள் மற்றும் பெண்கள் சமூக ஒத்திசைவு மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் மாற்றத்தினது முகவர்களாகப் பயிற்சிகளைப் பெறுகின்றனர்.

அதுமட்டுமின்றி National Youth Council , National Youth Services , National Youth Corps , UN Volunteers , SUNFO, அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எனப் பல்வேறு இளைஞர் அமைப்புக்கள் இலங்கை பூராகச் செயற்பட்டு வருகின்றன. உதாரணமாக, மாவனல்லை ஹிங்குள பிரதேச மாற்றுமத ஆண்களும் கலந்துகொள்ளும் வகையில் கார்ல்டன் விளையாட்டுக் கழகம், வருடாவருடம் நோன்பு காலங்களில் இப்தார் நிகழ்வுகளை ஏற்பாடு செய்கின்றது. இது சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் ஓர் சிறந்த முயற்சியாகும்.

*கல்வி மூலமான நல்லிணக்க செயற்திட்டங்கள்*

விழுமியக் கல்வி, பண்பாடுகள், கலாசாரங்கள் மற்றும் ஒழுக்கம் சார்ந்து அறிவினையும் தெளிவினையும் வழங்கும் கல்விமுறையாகும். பாடசாலையின் நோக்கம் சமூகத்திற்கு பண்பாடு, விழுமியம் மிக்க மாணவர் சமூகத்தை உருவாக்கி, நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதாகும்.

வீட்டில் பெற்றோர், உடன்பிறப்புகள் போன்றோரை சார்ந்திருந்த சிறுவர்கள் பாடசாலை, அறநெறி வகுப்புகள் என்று செல்லும் போது ஆசிரியர்கள், நண்பர்களென புதிய உறவுகளுடன் இணைந்து வாழவேண்டிய நிலைக்குட்படுகின்றனர். பல்கலைக்கழகம், கல்லூரி, தொழிலுலகு என்பதாகச் சமூகத்துடன் இணைந்து தொடர்ந்தும் வாழவேண்டிய சந்தர்ப்பங்கள் அதிகமாக ஏற்படுகின்றன.

நல்லிணக்கப் பாடத்திட்டங்கள், பல்கலைக் கழகங்களில் ஒப்பீட்டுச் சமயமும், சமூக நல்லுறவும் போன்றன காணப்படுவது சிறப்பம்சமாகும். இக்கற்கைநெறி கிழக்குப் பல்கலைக் கழகத்திலும், ஆங்கில மொழி மூலம் களனிப் பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்றது. தங்களது சமயத்தை மட்டுமின்றி பிற சமயங்களையும், நடைமுறைகளையும், புனித நூல்கள், வரலாற்றுச் சம்பவங்கள், விழாக்கள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றியும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் அவசியத்தன்மை போன்றவற்றையும் தெரிந்து கொள்கின்ற விதமாகவும் இப் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், பாடசாலைகளிலும் இப்பாடத்திட்டங்கள் கொண்டுவரப்படும் போது சமூகத்தினுள் மாணவர்கள் செல்ல முன்னரே ஏனைய சமயங்கள் சார்ந்த புரிந்துணர்வும் தெளிவும் ஏற்படுத்தப்படுகின்றது.

*பல்லின மாணவர்களும் கலந்துகொள்ளும் நிகழ்வுகளை நடாத்துதல்*

சமூக நல்லிணக்கம், இளம்பராய மாணவர்கள் மத்தியிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற போது அது அதிகளவான பிரதிபலன்களைப் பெற்றுத்தரும். ஏனெனில், இன்றைய மாணவ சமுதாயமே நாளைய உலகைக் கொண்டு நடாத்தப் போகின்றவர்கள். அவர்களுக்கு மத்தியில் நல்லிணக்கம், சகவாழ்வு சார்ந்த ஆழமான அறிவினையும் அதற்கான வழிகாட்டல்களையும் கொடுக்கின்ற போது சிறந்த மனிதப்பண்புகளைக் கொண்டு, மக்களுடன் இணைந்து வாழக் கூடியவர்களாகவும் மாறுவார்கள்.

மேலும், அவர்களுடைய உள, சமூக ரீதியான மாற்றங்கள் ஏனைய இன, சமய மாணவர்களுடன் புரிந்துணர்வுடனும், இணக்கமாகவும் நடக்கக் காரணங்களாக அமையும். அதேபோன்று, சமூக நல்லிணக்கத்தினைக் கட்டியெழுப்ப பல்லின மாணவர்களுக்குப் பிற

சமயங்கள் பற்றிய புரிந்துணர்வினை ஏற்படுத்துகின்ற விதமான கலை நிகழ்வுகள், கல்விச் சுற்றுலாக்கள், செயலமர்வுகள் போன்றவற்றினை மேற்கொள்ளலாம். இவ்வாறான நிகழ்வுகளின் மூலமாக மாணவர்கள் மத்தியிலே சிறந்த நட்புறவானது ஏற்படுத்தப்பட்டு சமூக நல்லிணக்கம் கட்டியெழுப்பப்படும். இம்முயற்சிகள் தேசிய மட்டங்கள், உள்ளூர் மற்றும் கிராமிய மட்டங்கள், இளைஞர்களை வலுவூட்டுகின்ற செயலமர்வுகள், பல்சமய உரையாடல்களை நிகழ்த்துதல், இரத்ததான முகாம்களை நடாத்துதல், சிரமதான ஏற்பாடுகள், விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல், கல்விசார் மற்றும் ஊக்குவிப்புக் கருத்தரங்குகளை மேற்கொள்ளல் போன்ற பல செயற்திட்டங்களை முன்னெடுக்கின்ற போது புரிந்துணர்வு மற்றும் சக வாழ்வு ஏற்படுத்தப்படும்.

பெண்கள் மத்தியிலும் நல்லிணக்கத்திற்கான வழிகாட்டல்கள் வழங்கப்படுகிற போது குடும்பங்கள் அவற்றின்படி செயற்பட வழிவகுக்கும். 2023 மார்ச் 09ஆம் திகதியன்று ஜப்பான் அரசாங்கம் மற்றும் ஐ.நா பெண்கள் அமைப்பின் ஆதரவுடன் 2023-2027 காலப்பகுதியிற்கான பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான தேசிய செயற்திட்டத்தினை (WSP) ஏற்றுக் கொண்டது. இலங்கை நாட்டில் நிலையானதொரு சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கு காரணமான இன்றியமையாத பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரல்களின் பங்குதாரர்களுக்கு இடையிலான ஒரு ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதை இது நோக்காகக் கொண்டு இடம்பெற்றது.

இத்தேசியச் செயற்றிட்டத்தின் முக்கியத்துவத்தினைப் பற்றி எடுத்துதரைத்த பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சரான கௌரவ, கீதா சமன்மாலி குமாரசிங்க, கூறியதாவது ‘‘இச் செயற்றிட்டத்தை ஏற்றுக்கொண்டதன் மூலம் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரலினை நடைமுறைப்படுத்துவதற்கானக் கொள்கை சார் கட்டமைப்புடன் இலங்கையானது முதலாவது முறையாக ஏற்புடையதாக்கப் பட்டுள்ளதுடன் நிர்வாகம் மற்றும் சமாதானத்தினைக் கட்டியெழுப்பும் செயன்முறைகளில் பெண்களின் அதிகரித்த பங்கேற்பையும் பிரதிநிதித்துவத்திற்கு அழைப்பு விடுக்கும்’’ என்றார்.

மேலும், அமெரிக்க முகவரமைப்பான யூசைட் இலங்கையில் நல்லிணக்கம் சார்ந்த பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு சமூகங்களை இணைப்பதற்காகச் சர்வதேசச் சமூகத்தினரை ஈடுபடுத்தும் நோக்கில் நிதியுதவிகளை வழங்கி வருகின்றது. நல்லிணக்கத்திற்கு சவாலாகவுள்ள விடயங்களுக்கு தீர்வைக் காண்பதில் இலங்கை அரசாங்கத்துடனும் உள்ளூர் சிவில் சமூகத்துடனும் இணைந்து பணியாற்றுவதாக அமைந்திருக்கும்.

நல்லிணக்கம் என்பது ஒரு செயல்முறை என்று நம்புகின்றவர்கள் நீதிக்கூடாக பயணம் செய்தே ஆகவேண்டுமென்கின்ற கட்டாயத்திற்குள்ளே தள்ளப்படுகின்றார்கள். சமாதானத்தையும், நீதியையும் நிரப்புத்தன்மை complimentarity கொண்டதாக அணுகவேண்டும்.

இலங்கை உலகளாவிய முனைப்புடன் அணுவாயுதப் பயங்கரவாதத்தையும் எதிர்த்துப் போராடக்கூடிய நாடாகவும் பயங்கரவாதத்தினை ஒடுக்குவதற்குரிய பிராந்திய ஒத்துழைப்பு மாநாட்டிற்கானத் தெற்காசிய சங்கத்தினுடைய நாடாகவும் உள்ளதுடன், பயங்கரவாத எதிர்ப்பு

தொடர்பாகப் பிராந்திய ஒத்துழைப்புக்களை அதிகரிப்பதில் அரசாங்க அதிகாரிகள் ஆர்வமும் காட்டியுள்ளனர்.

அத்துடன், இலங்கை சமாதானப் பேரவை (National Peace Council of Sri Lanka), இலங்கை நல்லிணக்க மையங்கள் (Sri Lanka Unites Reconciliation Centres), இளைஞர் அமைப்புகள் (Youth Commissions) என்பவற்றின் பங்களிப்புகளும் முக்கியமாகும். இவ்வாறாக இடையிடையே சமூகங்களிடையே நிலவிவரும் பல முரண்பாடுகளுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் அல்லது மீண்டும் ஏற்படாத வகையில் வழிசெய்வதற்குரிய, செயற்திட்டங்களாக இவ் அமைப்புகளின் முயற்சிகளைக் கூறமுடியும்.

அதேபோன்று தான் பாடசாலை, கல்லூரி, பல்கலைக்கழகம் போன்ற கல்வி சார்ந்த நிறுவனங்களில் ஒவ்வொரு சமயங்களினதும் புனித விழாக்கள் மற்றும் பிற வைபவங்கள் என்பவற்றை அனைத்து சமயத்தவர்களுடனும் இணைந்த வகையில் முன்னெடுப்பது மூலமாக புரிந்துணர்வும் சகவாழ்வும் ஏற்படுத்தப்படும். உதாரணமாக, இப்தார் நிகழ்வுகள், தன்ஸல் நிகழ்வுகள், பொங்கல் தின விழாக்கள் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிகழ்வுகள் பிற சமய நடைமுறைகளை அறியவும் புரிந்துணர்வுடன் செயற்படவும் வழியமைக்கின்றன.

**இலங்கையில் சமூக நல்லிணக்கத்தின் சமகாலத் தேவை**

இலங்கையில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம், கிறிஸ்தவ சமூகங்கள் முற்காலத்தில் உறவு கொண்டு வாழ்ந்திருக்கின்றன என்பதனை வரலாறுகள் மூலமாக அறிந்து கொள்ளலாம். ஆனால், பின் இந்நிலை மாறி இடையிடையே இனரீதியான வன்முறைகளும், மதக்கலவரங்களும் தலைதூக்கிக் கடந்த மூன்று தசாப்தகால யுத்தத்தினை அனுபவித்தது மட்டுமின்றி ஏனைய இனங்களுக்கிடையிலும் குறிப்பாகச் சிங்கள- முஸ்லிம்களுக்கிடையிலும் 1915 முதல் அண்மைக்காலம் வரை இடையிடையே மோதல்கள் இடம்பெற்றே வந்துள்ளன.

மேலும் இன்று அவசியமாக, அவசரமாகத் தேவைப்படுவது சமூகங்களுக்கிடையிலான நல்லுறவும், சமாதானமும் ஆகும். இலங்கையின் சமூகச் சூழலைப் பொறுத்தவரையில் ஒரு இனத்தவர் அடுத்த இனத்தவர்களோடு பகைமை கொண்டு விரோதியாக வாழ்வதென்பது சாத்தியமற்ற ஒன்றாகும். ஏனெனில், இலங்கையின் புவியியல் பின்னணியும் அத்தகையதொரு பண்பினையே கொண்டுள்ளது. இலங்கையின் எந்தவொரு பிரதேசத்தை எடுத்துக்கொண்டாலும் ஒன்றுக்கு மேற்பட்ட சமூகத்தவர்கள் வாழ்கின்றனர். எனவே, இலங்கையைப் பொறுத்தவரையில் எல்லா சமூகத்தவர்களும் சுமூகமான முறையிலே உறவு கொண்டு வாழவேண்டும்.

இலங்கையில் சமூக நல்லிணக்கத்தை வேண்டி நிற்கும் காரணிகளில் கலவரங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இலங்கையின் வரலாற்றில் ஒவ்வொரு சமூகமும் அடுத்த சமூகத்தினை வெறுத்து வாழ்ந்ததாலும் ஒதுக்கி வாழ்ந்ததாலும் அதபோன்று புரிந்துணர்கின்ற தன்மையின்மையாலும் பல பிரச்சினைகளும், கலவரங்களும் ஏற்பட்டன. 1915இல் கண்டியில் சிங்கள-முஸ்லிம் சமூகத்தவர்களிடையே ஏற்பட்ட கலவரம் ஒவ்வொரு சமூகத்தவரும்

மற்றைய சமூகத்தவர்களை விரோத மனப்பான்மைகளோடு நோக்குகின்ற தன்மைக்கு இட்டுச் சென்றது. ஆனாலும் கூட தற்போது வரையில் இடையிடையே மோதல் சம்பவங்கள் நடைபெற்று தான் வருகின்றன.

இவ்வாறான ஒரு பின்னணியில் 2019ஆம் ஆண்டு முழு உலகையும் ஆட்டிப்படைத்த கொவிட்19 கொரோனாப் பெருந்தொற்றின் பின்னராக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினாலும் மக்களுடைய மனங்களில் சற்று மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. தமது உரிமைகளுக்காகக் குரல்கொடுக்கவும் அநீதிகளுக்கு எதிராகப் போராடவும் அனைத்துச் இனங்களையும் சேர்ந்த மக்களும் ஒன்றிணைந்தனர். தமது பழைய பிரச்சினைகளையும் மற்றும் குரோதங்களையும் வைத்துக்கொண்டு காலங்காலமாக முரண்பட்டுக் கொள்ளாது நல்லிணக்கத்தினை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்பது காலத்தின் தேவையாகும்.

**முடிவுரை**

வணிகத் தொடர்புகள், திருமண உறவு போன்றன அரேபியர்கள் சிங்களவர்களுடன் இணைந்து, இலங்கையில் குடியேறி வாழ வழிவகைகளை ஏற்படுத்தி கொடுத்ததுடன் பலமான உறவினை கட்டியெழுப்பவும் காரணமாயின. இருந்தபோதும் 1915ஆம் ஆண்டு முதல் சிங்கள, முஸ்லிம் விரிசலானது ஆரம்பமானது. இதனுடைய ஆரம்பப் புள்ளியிலிருந்து துவக்கிவிடப்பட்ட மோதல்கள் 2019ஆம் ஆண்டு வரையில் இடையிடையே இடம்பெற்று வருகின்றன. அவ்வாறாக இடம்பெற்ற முரண்பாடுகள் உடல், உள, சமூக, பொருளாதார, கலாசார ரீதியில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியதுடன் இரு சமூகத்தவர்களுக்கிடையிலும் நீண்ட காலமாக நிலவிய நல்லிணக்கத்தையும் பாதித்தன.

பெரும்பாலும் தனிநபர் மற்றும் தனிக் குழுக்களுக்கிடையில் ஆரம்பமாகிப் பின் தனி நபர்கள் அல்லது தனிக் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சமூகங்களைச் சார்ந்த மோதல்களாக மாற்றமடைந்ததுடன், பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்த்துக்கொள்ள முடியுமான அநேக பிரச்சினைகள் வீண் வன்முறைகளால் பாரிய அழிவுகளை ஏற்படுத்தின. மோதல்கள் இடையிடையே சந்தர்ப்ப சூழ்நிலைகளின் காரணமாக இடம்பெற்றாலும் கூட முற்றுமுழுதுமாக இரு சமூகங்களுக்குமிடையில் நல்லிணக்கம் இல்லையென முடிவுசெய்ய முடியாது. ஏனெனில், கலவரங்கள் இடம்பெற்ற பகுதிகளில் இரு சமூக மக்களும் நீண்டகாலம் நல்லிணக்கத்தோடு வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்பதற்குச் சான்றுகள் காணப்படுகின்றன.

இந்நிலையில் பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கும் சிறுபான்மை முஸ்லிம்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களையும் இரு சமூகங்களுக்குமிடையில் நல்லிணக்கத்தினை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளையும் மக்களறிந்து செயற்படுவதுடன், மோதல்கள் களையப்பட்டு நல்லிணக்கம் ஏற்படுத்தப்படுதல் அவசியமாகுமென்பது இவ்வாய்வின் முடிவாகக் கூறப்படுகின்றது.

**பரிந்துரைகள்**

- அடிப்படைவாதக் குழுக்களின் செயற்பாடுகள் தான் மோதல் சம்பவங்கள் அதிதீவிரமான நிலையினை அடையக் காரணமாக அமைந்தன எனலாம். உதாரணமாக, சிங்ஹளராவய, பொதுபலசேனா, ஐ.எஸ்.ஐ.எஸ் போன்ற அடிப்படைவாத சிந்தனைகள் கொண்ட

எந்தவொரு அமைப்பும் செயற்படுவதற்கு அரச ஆதரவு வழங்கப்படாது சட்டரீதியாக இடை நிறுத்தப்பட வேண்டும்.

- நல்லிணக்கத்தை ஏற்படுத்தப் பிரதான தடையாக மொழிப் பிரச்சினை காணப்படுகின்றது. சிங்கள சமூகத்தினர் சிங்கள மொழியினையும் முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள் தமிழ் மொழியைப் பேசக்கூடிய அமைப்பும் காணப்படுகின்றது. எனவே இவ்விரு மொழிகளையும் மற்றும் ஆங்கிலம் போன்ற மொழிகளையும் அனைவரும் கற்றுக் கொள்ளும் வகையில் அரசாங்கம் செயற்திட்டங்களைக் கொண்டுவருதல் வேண்டும்.
- 1915ம் ஆண்டு தொடக்கம் 2019 போன்ற அண்மையக் காலப்பகுதி வரை இடம்பெற்ற அநேகமான கலவரங்களினை நோக்குகின்ற போது புரிந்துணர்வின்மை தான் அவற்றினைத் தோற்றுவிப்பதற்கான மிகப்பிரதான காரணமாக அமைந்ததெனலாம். எனவே, இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வினை ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் நாட்டில் மோதல்களைத் தடுப்பதற்கு மிகச்சிறந்த வழிமுறையாகக் காணப்படும் என்பதில் ஐயமில்லை. எனவே, கலவரங்கள் இடம்பெற்ற பகுதிகளில் இரு சமூகங்களுக்குமிடையில் தொடர்ச்சியாக புரிந்துணர்வை ஏற்படுத்துகின்ற வகையிலான கலந்துரையாடல்கள், சமயத் தலைவர்களிடையில் உரையாடல்கள், கிராமிய, பிரதேச மட்டங்களிலான உரையாடல்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்தல் வேண்டும்.
- இலங்கை அரசியல் அமைப்பினூடாக நீண்ட காலமாகக் கூறப்பட்ட விடயங்களைச் சரிவர முறையில் அமுல்படுத்துவதுடன் அனைத்து இனங்களையும் சமமாக வழிநடாத்தக்கூடிய வகையில் நல்லிணக்கம் தொடர்பிலான விழிப்புணர்வுத் திட்டங்களைச் சாதாரண மக்கள் மத்தியிலிருந்து உயர்மட்ட மக்கள் வரையில் முன்னெடுப்பது மிகவும் அவசியமாகும்.
- மோதல்களை ஏற்படுத்தும் விடயதானங்கள், தடுக்கும் வழிவகைகள் என்பன குறித்த விழிப்புணர்வு நாடகங்கள், கருத்தரங்குகள் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை மத்தியில் ஏற்படுத்துவதனூடாக மோதல்களின் பாரதூரங்களை, விளைவுகளைச் சகலரும் உணர்ந்து செயற்படும் நிலை ஏற்படும்.
- கல்வித் திட்டங்களினூடாக பல சமூக மாற்றங்களைக் கொண்டுவர முடியும். அதாவது சமயக்கல்வி, விழுயக்கல்வி, ஒப்பீட்டுச்சமயம் என்பன போன்ற பாடத்திட்டங்களுக்குப் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், கல்வியியல் கல்லூரிகள் என்பவற்றில் பிரதான முன்னுரிமை கொடுப்பது சிறந்தது.
- மோதல்களை ஏற்படுத்தும் காரணிகள், விளைவுகள் போன்றன பற்றி ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். உதாரணமாக குறுந்திரைப்படங்கள், நாடகங்கள், சிறுவர் கார்டூன்கள், விழிப்புணர்வு காணொளிகளால் முரண்பாட்டு விளைவுகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் நல்லிணக்க முயற்சிகளின் அவசியப்பாட்டினை உணர்த்தலாம்.
- குறித்த சமய அடையாளங்கள், நடைமுறைகள் என்பவற்றை இழிவுபடுத்தும் வகையில் ஊடகங்களின் செயற்பாடுகள் அமையக்கூடாது. முகப்புத்தகம், வட்சப், இணையத்தளம் போன்ற சமூக வலைத்தளங்களின் மூலமாகப் பிற சமயத்தினரையும் அவர்களுடைய வழிபாடுகளையும், சமயம் சார்ந்த நடைமுறைகளையும் பற்றி ஏளனமாகவும், தவறான வகையிலும் பதிவுகளை வெளியிடுகின்றனர். அதாவது, கருத்தியல் ரீதியான பல்வேறு வன்முறைகளைத் தூண்டுவதாக இவை அமைந்துள்ளன.

எனவே, இவ்வாறான பரிந்துரைகளை ஏற்று நடப்பதனூடாக மோதல்களைத் தடுத்து நமது நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தலாம்.

**உசாத்துணைகள்**


Aliff, S.M. (2015). *Post-war conflict in sri lanka : violence against sri Lankan muslims and Buddhist hegemony*.SciPress Ltd.

Dennis MvGilvary, B and Mirak Raheem. (2001). Muslim Perspectives on the Sri Lankan Conflict. East-West Center.

Jayandeva Uyangoda.(2001). Ethnic conflict in sri lanka : Changing Dynamic. East-West Center Washington.

Johan Galtung.(1967).Theories of Peace. International Peace Research Institute Oslo.

Johansson, A. (2019). *Pragmatic muslim politics*. Springer.

Mohamed Frook Fawas. (2021).Nonviolence Response to Ethnic Conflicts : The Case of Muslims in Sri Lanka. University of oslo Norway Peace building. Retrieved Aprol 19,2023, from http://www.peacefotharmonny.org

Reconciliation-after-violent-conflict. Retrieved Aprol 19,2023,from http://www.idea.int

அனஸ், எம்.எஸ்.எம், அமீர்தீன், வீ, வஸீல், ஏ.ஜ.(2003). *இலங்கையில் இனக்கலவரங்களும் முஸ்லிம்களும்.* இஸ்லாமிக் புக் ஹவுஸ்.

கிருஷ்ணமோகன், த. (2021). *மோதல் தீர்வு கற்கைகளும் அறிமுகமும்.* குமரன் புத்தக இல்லம்.

கீதபொன்கலன், எஸ்,ஐ. (2004). *சமூக மோதல் எண்ணக்கருக்கள்.* டிரீம்லேண்ட் பிரின்டர்ஸ்.

சமய நல்லிணக்கம் ஓர் அறிமுகம். Retrieved Aprol 19,2023, from http://alltamiltips.com

சிங்கள மற்றும் முஸ்லிம் உறவை வலுவூட்டும் ஜகார்த்தா செயலமர்வு. Retrieved Aprol 19,2023, from https://vidivelli.lk

சிவானந்தமூர்த்தி, க.(2010). முரண்பாடுகளும்: தீர்வுகளும் (கட்டுரையாக்கம்).

நல்லிணக்கம் ஓர் அறிமுகம். Retrieved Aprol 18,2023, from http://www.beyondintractability

மஹிந்த தீகல்லே.(2003). *இலங்கையில் இன முரண்பாடுகளும் பௌத்தமும், சமாதானமும்.* நோர்வே பௌத்த சங்கம்.

முஹம்மது சமீம், அ. (1998). *ஒரு சிறுபான்மைச் சமூகத்தினது பிரச்சினைகள்.* ரிசானா பப்ளிஸர்ஸ்.

ரிஸ்வி, எம்.டி.எம். (2019). *இலங்கை வரலாற்றில் மதக்கலவரங்களும் வன் முறைகளும், தீர்வுகளும் முன்மொழிவுகளும்.*கிழக்குப் பல்கலைக்கழகம்.

ஸஜீதா. (2017).யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் இன நல்லிணக்கம்.

# மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமையும் பிரயோகமும்: பதுளைத் தேர்தல் மாவட்டத்தில் 2015ஆம் 2020ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**செல்லதுரை புஸ்பகுமார், ஆறுமுகம் யோகராஜா**
சமூக விஞ்ஞானங்கள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*siva7pk@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்**

நவீன ஜனநாயக அரசின் இறைமையானது மக்களுக்கு சொந்தமானதாகும். மக்கள் இறைமை என்ற எண்ணக்கருவானது அரசின் மீயுயர் அதிகாரத்தின் உரித்து மக்களுக்கு சொந்தமானது என்பதாகும். மக்களாட்சி தத்துவங்களில் ஒன்றாக வாக்குரிமை காணப்படுகின்றது. இவ் விலைமதிக்க முடியாத வாக்குரிமையின் பிரயோகமானது ஆக்கபூர்வமானதாக அமைய வேண்டியது அவசியமாகும். அண்மை காலங்களில் இலங்கையில் வாக்குரிமையின் பிரயோகம் தொடர்பிலான விடயங்கள் பெரிதும் பேசப்பட்ட ஒன்றாக காணப்படுகின்றது. இலங்கையில் மலையக தமிழ் வாக்களார்களில் பெரும்பாலானவர்கள் பெருந்தோட்டங்களிலேயே வாழ்கின்றனர். ஆதலால் தங்கள் வாழ்கையினை முன்னோக்கி நகர்த்திச் செல்ல தங்களது அரசியல் பிரதிநிதிகளை சார்ந்திருப்பது இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. இவ்வாறான நிலையில் பதுளை தேர்தல் மாவட்ட மலையக தமிழ் வாக்காளர்கள் தமது வாக்குரிமையின் பிரயோகம் தொடர்பில் காட்டும் அசமந்தமான போக்கு அவர்களுடைய பிரதிநிதித்துவத்தில் தாக்கம் செலுத்துவதாகக் காணப்படுகின்றது. இம் மக்கள் தங்களுக்காக இரண்டு தமிழ் பிரதிநிதித்துவத்தை பெற்றுள்ள நிலையில் தமக்கான மேலதிகமாக ஒரு பிரதிநிதித்துவத்தை பெற வேண்டிய நிலையில் அவ்வாய்ப்பினை 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தவறவிட்டனர். இப்பிரச்சினையினை மையமாகக் கொண்டு இவ்வாய்வு இடம்பெற்றுள்ளது. இவ்வாய்வினூடாக வாக்குரிமையின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வு, 2015ஆம் ஆண்டு, 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல்களில் இம்மக்களின் வாக்குரிமையின் பிரயோகம், பிரதிநிதிகளுடைய செயற்பாடுகள் என்பன நோக்கங்களாகக் கொண்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கான முதலாம் நிலைத்தரவுகள் வினாக்கொத்து மூலமாகப் பெறப்பட்டுள்ளதோடு, இரண்டாம் நிலைத்தரவுகள் ஆய்வுடன் தொடர்புடைய நூல்கள், அறிக்கைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பவற்றில் இருந்து பெறப்பட்டுள்ளது. சேகரிக்கப்பட்ட தரவுகள் Excel மென்பொருள் ஊடாக பண்புசார் மற்றும் அளவுசார் முறைமைகளில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பண்புசார் தரவுகள் விபரண ரீதியிலான முறையிலும் அளவுசார் தரவுகள் எளிய புள்ளிவிபர முறையிலும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *தேர்தல், பிரதிநிதித்துவம், வாக்களார்கள், வாக்குரிமை, ஜனநாயகம்.*

## அறிமுகம்

ஒரு நாட்டின் பிரஜைகள் (Citizens) அந்த நாட்டின் உண்மையான உரிமையாளர்களாவர். பிரஜைகள் கூட்டாக இணைந்து தெரிவு செய்துக் கொள்ளும் பிரதிநிதிகளைக் கொண்டு ஒரு தேசத்தை ஆளும் அரசாங்கம் உருவாக்கம் பெறுகின்றது. வாக்குரிமை (Suffrage) எனும் விலைமதிக்க முடியாத உரிமையை (Rights) பயன்படுத்தி அந்த ஆட்சியில் மக்கள் இணைந்துக் கொள்கின்றார்கள். ஒரு நாட்டிற்குரிய தகைமை பெற்ற சகல பிரஜைக்கும் இனம், மதம், மொழி, சாதி, குலம், கல்வி, சொத்துரிமை, பிறப்பு, பிறப்பிடம், ஆண், பெண் ஆகிய எதுவித பேதங்களும் அற்ற வகையில் நாட்டின் அதிகார நிருவாகத்தில் பங்கேற்கும்

உரிமையும், அத்துடன் தங்களுக்கென ஒரு பிரதிநிதியை நியமிப்பதற்கான உரிமையும் கொண்டதுவே சர்வஜன வாக்குரிமையாகும். சர்வஜன வாக்குரிமையின் மூலம், மக்கள் இறைமை பாதுகாக்கப்படுவதற்கான அதிகாரம் மக்களுக்கு உரித்தாகின்றது. மற்றொரு வகையில் கூறுவதானால், தனக்காகவும், நாட்டிற்காகவும் தீர்மானத்தை எடுக்கக்கூடிய முக்கிய பொறுப்பு மக்களுடையதாகின்றது. மன்னர் ஆட்சிக் காலத்தில் இவ்வாறான விடயங்கள் தொடர்பாக மன்னர் மாத்திரமே முக்கிய தீர்ப்பாளராக விளங்கினார். மன்னர் ஆட்சியை மாற்றியமைத்து ஜனநாயக ஆட்சி முறையின் அடிப்படையில் குடியரசுகள் உருவாகுவதற்கான மூலகாரணமாக அமைந்தது சர்வஜன வாக்குரிமை முறையாகும்.

இலங்கையானது காலனித்துவக் காலத்தில் 1931ஆம் ஆண்டு சர்வசன வாக்குரிமையினைப் பெற்றது. இது மலையக மக்களையும் உள்ளடக்கியதாகவே வழங்கப்பட்டது (Sarath, 2016). காலப்போக்கில் பிரஜாவுரிமை சட்டம், பாராளுமன்ற திருத்தச்சட்டம் போன்ற சட்ட ஏற்பாடுகளினால் இம் மக்களில் பெரும்பான்மையோர் வாக்குரிமையினை இழந்ததன் தாக்கம் பின்னரான காலங்களில் பாராளுமன்றில் தங்களது பிரதிநிதித்துவத்தையும் இழந்தனர் (Nadesan, 1993). அவ்வாறு இருக்க இன்று மலையக மக்களுக்கு அவ்வாறானதொரு பிரச்சனை நடைமுறையில் இல்லை. இருப்பினும் இம் மக்களின் வாக்குரிமையின் பிரயோகம் தொடர்பில் விமர்சனங்கள் எழுந்த வகையிலேயே இருகின்றன. குறிப்பாக பதுளை தேர்தல் மாவட்ட மலையக தமிழ் வாக்காளர்கள் தமது வாக்குரிமையின் பிரயோகம் தொடர்பில் காட்டும் அசமந்தமான போக்கு அவர்களுடைய பிரதிநிதித்துவத்தில் தாக்கம் செலுத்துவதாகக் காணப்படுகின்றது. இம் மக்கள் தங்களுக்காக இரண்டு தமிழ் பிரதிநிதித்துவத்தை பெற்றுள்ள நிலையில் தமக்கான மேலதிகமாக ஒரு பிரதிநிதித்துவத்தை பெற வேண்டிய நிலையில் அவ் வாய்ப்பினை 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தவற விட்டனர். இப் பிரச்சினையினை மையமாகக் கொண்டு இவ்வாய்வு இடம்பெற்றுள்ளது. இவ் ஆய்வினூடாக வாக்குரிமையின் முக்கியத்துவம் தொடர்பான விளிப்புணர்வு, 2015ஆம் ஆண்டு, 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல்களில் இம் மக்களின் வாக்குரிமையின் பிரயோகம், பிரதிநிதிகளுடைய செயற்பாடுகள் போன்ற நோக்கங்களைக் கொண்டு ஆராய்வோம்.

**இலக்கிய மீளாய்வு**

இரகுநாதன்.க என்பவரினால் எழுதப்பட்ட தேர்தல் முறைமைகளும் அவற்றின் பரிமாணங்களும். என்ற நூலினூடாக இலங்கையில் தேர்தல் முறை பற்றிய விளக்கங்கள் கூறப்பட்டுள்ளது. மேலும் தேர்தல் ஒன்றின் முக்கியத்துவம், வாக்காளர்களின் நிலை, அவர்களின் அறிவு நிலை பற்றியும் தேர்தல் ஒன்று ஒழுங்கு செய்யப்படும் முறை பற்றியும் பிரதிநிதித்துவ அரசாங்கம் முறைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. வயது வந்தோர் வாக்குரிமை பற்றிய விளக்கங்களையும் வாக்களிக்கத் தகுதி இன்மைக்கான காரணங்கள் பற்றியும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனோடு ஒரு நாட்டிற்கு எவ்வாறான தேர்தல் முறை மிகச் சிறந்தது என்ற கருத்தினைத் தருவதாகவும் இந்நூல் அமையப்பெற்றுள்ளது.

ஜயதேவ உயங்கொட என்பவரினால் எழுதப்பட்ட தோட்டப்புற அமைப்பின் மனித உரிமைகள். என்ற நூலானது தோட்டப்புற அமைப்பு பற்றியும், அவர்களின் உரிமைகள்

அதில் சிவில், அரசியல் உரிமைக்குள்ளான பிரஜாவுரிமை, வாக்குரிமை பற்றியும், ஏனைய உரிமைகளான சிறுவர் உரிமை, பொருளாதார உரிமை, சமூக கலாசார உரிமைகள் பற்றியும், அவர்களின் துன்ப நிலைகள் பற்றியும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடு மற்றும் தொழிற்சங்கங்கள் பற்றியும் விளக்குவதாக அமைந்துள்ளது. இதனோடு இந்நிறுவனங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்ற ஆலோசனையினையும் வழங்குவதாக இந் நூல் அமையப்பெற்றுள்ளது.

சந்திரபோஸ்.ஏ.எஸ், ரமேஷ்.இரா என்போரினால் எழுதப்பட்ட இலங்கையில் தேயிலை பெருந்தோட்ட சமூகம் 150 வருடங்கள் 1867 தொடக்கம் 2017. என்ற நூலானது மலையக மக்களுடைய வாழ்க்கை, தொழில், கல்வி, சமூகநிலை, உரிமை, ஆட்சி முறை, பெண்களுடைய சமூகநிலை, பண்பாட்டு அடையாளங்கள் அவற்றை விளக்கும் வகையில் உள்ளது. ஆறு பகுதிகளை கொண்டுள்ள இந்நூலானது நான்காவது பகுதியில் பெருந்தோட்ட மக்களுடைய உரிமைகள் பற்றிய விடயங்களை குறிப்பிட்டுள்ளதோடு மனித உரிமைகள் சட்டம் தொடர்பாகவும் விளக்குகின்றது. குறிப்பாக இலங்கை அரசியலில் மலையக தமிழ் கட்சிகளின் வகிபாகம் என்ற கட்டுரையில் மலையகத் தமிழ்மக்களின் உரிமைப் பறிப்பு சம்பந்தப்பட்ட விடயங்கள் விளக்கப்பட்டுள்ளது. அதனோடு வாக்குரிமை இன்றி அவர்கள் அரசியலில் எவ்வாறான சவால்களுக்கு முகம் கொடுத்தார்கள் என்பன பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் எவ்வாறு கிடைத்த வாக்குகளைக் கொண்டு பிரதிநிதித்துவத்தினை அடைந்து ஏனையவர்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது என்பது தொடர்பாகவும் கட்டுரை விளக்குகின்றது.

லோறன்ஸ்.அ, என்பவரினால் எழுதப்பட்ட 'மலையகம்: சமகால அரசியல் - அரசியல் தீர்வு' என்ற இந்நூலினூடாக மலையக மக்கள் சார்ந்த பல்வேறு விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மலையக மக்களுடைய குடியேற்றம், அவர்களுடைய அடையாளம், அவர்களுடைய குடியுரிமை பறிப்பு என்பன பற்றிய தெளிவான விளக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனோடு மக்களுடைய அண்மைக்கால பிரச்சினைகள் மற்றும் இலங்கையில் பரவி வாழும் அவர்களுடைய குடியேற்றம், மலையக மக்களுடைய அடையாளங்கள் போன்ற பல்வேறு விடயங்களும் அடையாளம் தொடர்பாக எழுகின்ற பிரச்சனைகள் தொடர்பாகவும் இந்நூல் ஆராய்கின்றது. மேலும் இம் மக்களுடைய பிரதிநிதித்துவம் பற்றியும் அந்த பிரதிநிதித்துவத்தில் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் சம்பந்தமாகவும் இந்நூல் விளக்குகின்றது.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வானது எண்சார் தரவுப்பகுப்பாய்வு, பண்புசார் தரவுப்பகுப்பாய்வு ஆகிய இரு முறைகளையும் பயன்படுத்தி கலப்பு தரவுப்பகுப்பாய்வு அணுகுமுறையினூடாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எண்சார் தரவுப்பகுப்பாய்வு அடிப்படையில் 2015 மற்றும் 2020 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் வரைபடமாகவும், அட்டவணையாகவும் காட்டப்பட்டுள்ளன. பண்புசார் அடிப்படையில் தேர்தல்களில் பதுளைத் தேர்தல் மாவட்ட

மலையகத் தமிழ் வாக்காளர்களின் பங்குப்பற்றல், இத் தேர்தல்களில் தமிழ் வாக்காளர்களின் தீர்மானங்கள் என்பன பகுப்பாய்வுச் செய்யப்பட்டுள்ளது.

***தரவு சேகரிப்பு முறைகள்***

*முதலாம் நிலைத்தரவு*

இவ் ஆய்விற்கான முதலாம் நிலைத்தரவுகளானது வினாக்கொத்து முறைமையினூடாக பெறப்பட்டுள்ளது. இவ் ஆய்விற்காக வினாக்கொத்து மூலமாக தரவுகளைப் பெற படையாக்கப்பட்ட எழுமாற்று மாதிரி எடுப்பு நுட்ப முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் படி பதுளை மாவட்டத்தில் உள்ள 9 தேர்தல் தொகுதியிலும் உள்ள மலையகத் தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு அமைவாக 50 வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டுள்ளது. இது 2463:1 என்ற வகையில் வழங்கப்பட்ட வினாக்கொத்துகளுக்கான எழுமாற்று மாதிரி எடுப்பு பின்வருமாறுத் தெரிவுச் செய்யப்பட்டுள்ளன.

*இரண்டாம் நிலை தரவுகள்*

இரண்டாம் நிலைத்தரவுகளாக இவ் ஆய்வு சம்பந்தமான நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளங்கள், அறிக்கைகள் என்பவற்றில் இருந்து பெறப்பட்ட தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**எழுமாற்று மாதிரி எடுப்பு விபரம்**

| **தேர்தல் தொகுதி** | **மலையகத் தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கை** | **வழங்கப்பட்ட வினாக்கொத்து 0.04%** |
|---|---:|---:|
| பசறை | 28,901 | 12 |
| பதுளை | 8,666 | 3 |
| வெளிமட | 8,370 | 3 |
| வியலுவ | 5,224 | 2 |
| ஹாலிஎல | 20,865 | 9 |
| ஊவாபரணகம | 7,423 | 3 |
| மகியங்கனை | 210 | 0 |
| பண்டாரவளை | 17,343 | 7 |
| ஹப்புதலை | 26,415 | 11 |
| **மொத்தம்** | **123,147** | **50** |

**ஆதாரம்** *: பதுளை மாவட்ட செயலகம் (2022)*

***தரவுப்பகுப்பாய்வு***

மாதிரி எடுப்பு முறையின் மூலமாக தெரிவு செய்யப்பட்ட நபர்களிடம் வழங்கப்பட்ட வினாக்கொத்திலிருந்து பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பதுளை தேர்தல் மாவட்ட மலையக தமிழ் வாக்காளர்களின் வாக்குரிமையின் பிரயோகம் தொடர்பான ஆய்வு இடம்பெற்றுள்ளது. சேகரிக்கப்பட்ட தரவுகள் நுஒஉநட மென்பொருள் ஊடாக பண்புசார் மற்றும் அளவுசார் முறைமைகளில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில்

பண்புசார் தரவுகள் விபரண ரீதியிலான முறையிலும் அளவுசார் தரவுகள் எளிய புள்ளிவிபர முறையிலும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

மாவட்டத்தில் உள்ள ஒன்பது தேர்தல் தொகுதிகளுக்கும் மலையகத் தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வினாக்கொத்தினூடாக தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தும் வகையிலும் இவ் அத்தியாயம் அமைகின்றது. அதன்படி முதலாவது பகுதியில் வினாக்கொத்தின் மூலமாக தரவுகளை வழங்கிய நபர்களின் விபரங்கள் பெறப்பட்டுள்ளன. இரண்டாவது பகுதியில் மூன்று பிரிவுகளின் கீழ் வினாக்கொத்தினூடாக தகவல்கள் பெறப்பட்டதுள்ளது. இதில் முதலாவது பிரிவில் வாக்காளர்களின் வாக்களிப்பு சம்பந்தமான தெளிவுத் தொடர்பான விடயங்களும் இரண்டாவது பிரிவில் 2015 மற்றும் 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல்களில் வாக்களிப்பின் பிரயோகம் தொடர்பான விடயங்கள், பிரிவு மூன்றில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வாக்குரிமையின் எதிர்கால பிரயோகம் தொடர்பான விடயங்கள் என்ற வகையில் தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

**2015ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் - பதுளை மாவட்டம்**

| கட்சி / குழுக்கள் | பெற்ற வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி - UNP | 258,844 | 54.76% | 5 |
| ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு – UPFA | 179,459 | 37.97% | 3 |
| மக்கள் விடுதலை முன்னணி - PLF | 21,445 | 4.54% | 0 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் - CWC | 10,259 | 2.17% | 0 |
| வேறு – Others | 2,675 | 0.56% | 0 |

**ஆதாரம்** : *https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/parliamentary-elections/general-election-2015.pdf*

**பதுளை மாவட்ட விருப்பு வாக்குகளின் அடிப்படையில் வெற்றிப் பெற்றவர்களின் விபரங்கள் - 2015**

**ஐக்கிய தேசியக் கட்சி - UNP**

1. ஹரீன் பிரணாந்து - 200,806 வாக்குகள்
2. ரவிந்ர சமரவீர - 58,507 வாக்குகள்
3. சமிந்த விஜேசிறி - 58,291 வாக்குகள்
4. அரவிந்த குமார் - 53,741 வாக்குகள்
5. வடிவேல் சுரேஷ் - 52,378 வாக்குகள்

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு – SLFP**

1. நிமல் சிறிபாலடி சில்வா - 134,406 வாக்குகள்
2. சாமர சம்பத் - 64,418 வாக்குகள்

3. தேனுக விதான கமகே - 43,517 வாக்குகள்

2015ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் பதுளை மாவட்டத்தில் தமிழ் வேட்பாளர்கள் இருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளதைக் காணலாம். உண்மையில் இந்த தேர்தல் மலையக தமிழ் மக்களுக்கு மீண்டும் தமது பிரதிநிதிகளை பாராளுமன்றம் அனுப்புவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. இதன்படி அரவிந்தகுமார் 53,741 வாக்குகளையும் வடிவேல் சுரேஷ் 52,378 வாக்குகளையும் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் பெற்றுக்கொண்டனர். ஆனால் தனித்துப் போட்டியிட்ட தமிழ் தரப்பான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எவ்வித ஆசனங்களையும் பெறவில்லை. குறிப்பாக அவர்கள் மொத்தமாக 10,259 வாக்குகளையே பெற்றனர் (Adaderana,2015).

தமிழ் வேட்பாளர்கள் அனைவரும் ஒரு கட்சியில் இருந்து கேட்கின்ற போதே அந்த கட்சி சார்பான ஆசனங்களை குறிப்பிட்ட தொகை வாக்காளர்களுக்கு மத்தியில் பெறமுடியும் என்பதே சாத்தியம். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 11 வேட்பாளர்களைக் கொண்டு தேர்தலில் களம் இறங்கிய நிலையிலும் அவர்களால் ஓர் ஆசனத்தைக் கூட பெற முடியாத நிலையே வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் - பதுளை மாவட்டம்**

| கட்சி / குழுக்கள் | பெற்ற வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன- SLPP | 309,538 | 62.06% | 6 |
| ஐக்கிய மக்கள் சக்தி – SJB | 144,290 | 28.93% | 3 |
| தேசிய மக்கள் சக்தி – JJB | 19,308 | 3.87% | 0 |
| ஐக்கிய தேசியக் கட்சி – UNP | 9,163 | 1.84% | 0 |
| வேறு – Others | 16,496 | 3.30% | 0 |

**ஆதாரம்** : https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/parliamentary elections/Badulla_R2(2020)

**பதுளை மாவட்ட விருப்பு வாக்குகளின் அடிப்படையில் வெற்றிப் பெற்றவர்களின் விபரங்கள் - 2020**

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - SLPP**

1. நிமல் சிறிபால த சில்வா - 141,901 வாக்குகள்
1. சுதர்ஷன தெனிபிட்டிய - 71,766 வாக்குகள்
2. தேனுக விதானகமகே - 68,338 வாக்குகள்
3. சாமர சம்பத் தஸநாயக்க - 66,393 வாக்குகள்
4. டிலான் பெரேரா - 53,081 வாக்குகள்
5. ஜானக திஸ்ஸகுட்டியாராச்சி - 50,151 வாக்குகள்

**ஐக்கிய மக்கள் சக்தி - SJB**

1. வடிவேல் சுரேஸ் - 49,762 வாக்குகள்
2. அரவிந்தகுமார் - 45,491 வாக்குகள்

3. சமிந்த விஜேசிறி - 36,291 வாக்குகள்

தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் 2015ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலை விட 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் மலையக தமிழ் மக்கள் தங்களுடைய வாக்குகளை பிரயோகித்த விதம் என்பது வேறுபட்டுச் செல்வதை அறிய முடிகின்றது. குறிப்பாக 2015ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு தமிழ் வேட்பாளர்களும் (அரவிந்தகுமார் - 45,491 வாக்குகள், வடிவேல் சுரேஸ் - 49,762 வாக்குகள்) இந்த தேர்தலில் தெரிவு செய்யப்பட்டனர் (Ceylontoday, 2020). இருப்பினும் அவர்கள் பெற்ற விருப்பு வாக்கு என்பது கடந்த தேர்தலைவிட இந்தத் தேர்தலில் குறைவாகவே காணப்படுகின்றது. அதனோடு நிராகரிக்கப்பட்ட வாக்குகள் என்ற வகையில் 38,621 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளது. இது ஒரு வேட்பாளர் தெரிவு செய்யப்பட வேண்டிய எண்ணிக்கையிலான வாக்கு சதவீதமாக காணப்படுகின்றது.

2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் உண்மையில் இரண்டு தமிழ் வேட்பாளர்கள் தெரிவு செய்வதற்கு மேலாக மேலும் ஒரு தமிழ் வேட்பாளரை பாராளுமன்றத்திற்கு அனுப்பக் கூடிய வாய்ப்பினை உருவாக்கிய போதும் மலையகத் தமிழர்களின் கவனயீனம், வாக்களிப்பதற்கான விழிப்புணர்வு இன்மை என்பதன் காரணமாக வாக்குகளை நிராகரிக்கப்பட்ட வாக்குகளாகவும் சில வாக்காளர்கள் பெரும்பான்மை கட்சியின் வியூகத்திற்கு அமைய பயன்படுத்தியுள்ளமையும் புலனாகின்றது.

***2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் மேலதிக தமிழ் வேட்பாளர் இழப்பு***

2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பாக ஒரு தமிழ் வேட்பாளராக செந்தில் தொண்டமான் மாத்திரமே நிறுத்தப்பட்டார். பாராளுமன்ற தேர்தலில் முடிவுகளின் அடிப்படையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு ஆறு ஆசனங்கள் கிடைக்கப்பெற்றன. அந்த ஆறு ஆசனங்களில் தமிழ் வேட்பாளர் உள்ளடக்கவில்லை. இது இவருக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கு மட்டுமன்றி ஏனைய வாக்காளர்களுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

குறிப்பாக இவரின் தோல்விக்கு காரணங்கள் என்ற வகையில் எதிரணியில் ஏற்கனவே பாராளுமன்றத்திற்கு சென்ற இரண்டு வேட்பாளர்கள் களமிறக்கப்பட்ட நிலையில், இம் மாவட்டத்தை பொறுத்தவரையில் தமிழ் வாக்குகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது ஆகவே வாக்குகள் சிதறடிக்கப்படும் ஒரு நிலையும் காணப்பட்டது. அதனோடு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சார்பில் தமிழ் வேட்பாளர் ஒருவர் போட்டியிட வைத்தது கட்சி வகுத்த தந்திரமாகவும் நோக்கப்படுகின்றது. காரணம் பலம்பொருந்திய வேட்பாளர்களை அந்த கட்சி களமிறக்கிய நிலையில் தமிழ் வேட்பாளரின் வாக்குகளை கட்சிக்கு பெற்று ஆசனங்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு விருப்பு வாக்கின் அடிப்படையில் பலம்பொருந்திய பெரும்பான்மையின வேட்பாளர்கள் தெரிவு செய்வதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்பட்ட நிலையில், அது அப்படியே நடந்தது. இதனை இந்தத் தேர்தலின் முடிவுகளின் வாயிலாக அறிய முடிகின்றது.

மேலும் செந்தில் தொண்டமான் 39,240 வாக்குகளை பெற்றிருந்தார். இவர் வெற்றிப் பெறுவதற்கு 10,911 வாக்குகள் பின்தங்கி இருந்தார். எனவே மக்கள் தங்கள் வாக்குகளை நிராகரிக்கப்பட்ட வாக்குகளாக பிரயோகிக்காமல் சரியாக பயன்படுத்தப்பட்டிருப்பின் தமிழ் பிரதிநிதித்துவம் ஒன்று மேலதிகமாகக் கிடைக்கப்பெற்றிருக்கும். எதிரணியில் 36,291 வாக்குகளை பெற்று அக்கட்சி சார்பில் பாராளுமன்றத்திற்கு தெரிவானார் என்பது குறிப்பிடத் தக்கது. முடிவாக தமிழ் பிரதிநிதித்துவம் ஒன்று இல்லாமல் போனதற்கு இம்மாவட்ட தமிழ் மக்களின் விருப்பு வாக்கு பகிர்வில் அக்கறை கொள்ளாமைக் காரணமாகின்றது. பதுளை மாவட்டத்தில் 1947 ஆம் ஆண்டு இரண்டு தமிழ் பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெற்றது. இன்றுவரை அதன் எண்ணிக்கை மாறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

*வாக்குரிமை பற்றிய தெளிவுத் தொடர்பான தகவல்கள்*

வாக்குரிமையினை பெற்ற ஒவ்வொருவரும் அந்த வாக்குரிமை தொடர்பான தெளிவினை பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும். குறிப்பாக வாக்குரிமை தொடர்பான தெளிவு காணப்படுகின்ற போதுதான் அந்த வாக்குரிமையை சரியாகப் பயன்படுத்த முற்படுவார்கள். பதுளை தேர்தல் மாவட்ட தமிழ் வாக்காளர்களின் வாக்குரிமை தொடர்பான தெளிவு தொடர்பாக ஆராய வேண்டியது அவசியமாகின்றது. அதனடிப்படையிலேயே வினாக்கொத்து மூலமாக பதுளை தேர்தல் மாவட்ட தமிழ் வாக்காளர்களின் வாக்குரிமை தொடர்பான தெளிவு சம்பந்தப்பட்ட தரவுகள் திரட்டப்பட்டுள்ளன.

- **வாக்குரிமையின் முக்கியத்துவம் பற்றிய மக்களின் புரிந்துணர்வு**

**வரைபடம் 1**




**ஆதாரம் : கள ஆய்வு (2022 ஜூன்)**

தரவுகளின் அடிப்படையில் வாக்குரிமை கட்டாயம் கிடைக்க வேண்டிய உரிமை என்பதை பெரும் வாரியாக அறிந்த பதுளை தேர்தல் மாவட்ட மலையக மக்கள் வாக்குரிமையின் முக்கியத்துவம் தொடர்பில் ஓரளவு பின்தங்கி இருப்பதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக 56% மான மக்கள் வாக்குரிமையின் முக்கியத்துவத்தினை அறிந்துள்ளார்கள். அதே நேரம் 12% மான மக்கள் வாக்குரிமையின் முக்கியத்துவம்

அறியாதவர்களாகவே உள்ளனர். இந்நிலையில்தான் இம்மக்கள் தங்களுடைய வாக்கின் பிரயோகத்தில் பொறுப்பற்ற தன்மையை வெளிக்காட்டுகின்றனர். இதன் பிரதிபலனை கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வாக்குரிமையின் முக்கியத்துவத்தை ஓரளவேனும் அறிந்தவர்கள் 32% மானவர்களாக காணப்படுகின்றனர். இவர்களின் வாக்கு பிரயோகம் நிச்சயமற்ற தன்மையாகவே காணப்படும் போக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தாங்களின் முடிவு பிழையானது என்பதை தேர்தல் முடிந்து பிற்பட்ட காலங்களிலே அரிய கூடியவர்களாக இவர்கள் காணப்படுகின்றார்கள்.

*வாக்களிப்புத் தொடர்பான அறிவூட்டல்கள்*

வாக்குரிமை தொடர்பான அறிவூட்டல்கள் என்ற வகையில் தேர்தல் காலங்களில் அரசினாலும் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் (NGO) ஊடகங்களின் மூலமாகவும் வாக்களிப்பு தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன. பதுளை மாவட்ட மலையகத் தமிழ் வாக்காளர்களின் வாக்களிப்பு தொடர்பான அறிவூட்டல் எவ்வகையில் அவர்களின் மத்தியில் சென்றடைந்துள்ளது என்பதற்கான தரவுகள் பெறப்பட்டுள்ளது. அதனைப் பின்வரும் வரைபடத்தின் மூலமாக காணலாம்.

**வரைபடம் 2**




**ஆதாரம் : கள ஆய்வு (2022 ஜுன்)**

பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் வாக்களிப்பு தொடர்பான அறிவூட்டல்கள் இப்பிரதேச மலையகத் தமிழ் வாக்காளர்களில் 52மூ மான வாக்காளர்களுக்கு போதுமானதாக இருப்பதாகவும், 32% மான வாக்காளர்களுக்கு வாக்களிப்பு தொடர்பான அறிவூட்டல் ஓரளவிற்கு விளிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் குறிப்பிட்டுள்ளனர். இங்கு 16மூ மான வாக்காளர்களின் மத்தியில் வாக்களிப்பு தொடர்பான அறிவூட்டல்கள் போதுமானதாக இல்லை என்ற நிலையில் காணப்படுகின்றனர். இங்கு நாம் ஆராய்கையில். இந்த அறிவூட்டல்கள் சரியான முறையில் இவ் வாக்காளர்களைச் சென்றடையாமையே

அவர்களுடைய வாக்குப் பிரயோகத்தில் ஆக்கபூர்வமான விடயங்கள் ஏற்படாமல் இருப்பதற்கான காரணமாகக் குறிப்பிடலாம்.

***2015 மற்றும் 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல்களில் வாக்குரிமையின் பிரயோகம்***

2015 மற்றும் 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் பதுளை மாவட்ட தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் இம்மாவட்ட மலையகத் மக்களின் வாக்களிப்பு, பிரதிநிதித்துவம் என்பவற்றை பகுப்பாய்விற்கு உட்படுத்த முடிகிறது. வாக்களித்த மக்கள் தேர்தல் தொடர்பில் கொண்டுள்ள அக்கறையும் அவர்களின் வாக்கு பிரயோக முறை, வாக்களித்ததின் பின்னரான அவர்களின் தேர்வு தொடர்பான கருத்து, வாக்கினை பிரயோகிக்கும் போது அவரிடம் தாக்கம் செலுத்திய காரணிகள் என்பன தரவுகளாகப் பெறப்பட்டுள்ளது.

***வாக்களிப்பின் தெரிவு தொடர்பான திருப்தி நிலை***

பல்வேறுபட்ட நோக்கங்களை கொண்டு தமது வாக்குரிமையின் மூலமாக தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி தொடர்பில் அவர்கள் வெற்றியடைந்த பின்னரான காலங்களிலும் மனநிறைவான தெரிவாகவே வாக்காளர்கள் திருப்தியடைகின்றனர். ஆனால் கால ஓட்டத்தின் பின்னர் தங்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி தொடர்பில் மாறுபட்ட மனப்பாங்கினை வாக்காளர்கள் கொள்கின்றனர். அதனடிப்படையிலேயே இப்பிரதேசத்தில் மலையக தமிழ் வாக்காளர்களிடம் தகவல்கள் பெறப்பட்டுள்ளது. இதனை பின்வரும் வரைபடத்தின் மூலம் காணலாம்.

**வரைபடம் 3**




**ஆதாரம் : கள ஆய்வு (2022 ஜுன்)**

பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் வாக்களிப்பு தொடர்பான திருப்தி நிலை மக்கள் மத்தியில் எவ்வாறு பிரதிபலிக்கப்பட்டுள்ளது என்ற வகையில் 72% மான வாக்காளர்கள் தங்களுடைய வாக்குரிமையின் பிரயோகத்தில் திருப்தியற்ற நிலையில் இருப்பதை காணலாம். இது வாக்குரிமையின் பிரயோகத்தை கேள்விக்குறியாகியுள்ளது. வெறுமனே 28% மான வாக்காளர்களே தங்களது தெரிவுச் சரியானது என்பதில் திருப்தி

கொண்டுள்ளனர். அதிலும் தாங்கள் வாக்களித்து வெற்றிப் பெறாத வேட்பாளர்கள் தொடர்பில், தற்பொழுது அவர்கள் வெற்றி பெறாதது சரியானதே என்ற மனநிலையிலும் காணப்படுகின்றனர்.

தங்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் ஊழல்வாதிகளாக காணப்படுகின்றார்கள் என்பது பெரும்பாலான வாக்காளர்களின் கருத்தாக அமைகிறது. எதிர்பார்த்த ஆக்கபூர்வமான விடயங்கள் எதுவும் தங்களால் தெரிவுச் செய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் இருந்து கிடைக்கவில்லை எனவும் தங்களுக்கு அளித்த வாக்குறுதிகளை காப்பாற்றவில்லை என்ற காரணங்கள் இவர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆளுமையற்ற அரசியல்வாதியாக செயற்படுபவர்களாகவும் மக்களின் நலனுக்காக அன்றி தங்களது கட்சி நலனை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றமையினால் இவர்கள் மீது அதிர்ப்தி அடைந்ததாக வாக்காளர்கள் குறிப்பிடுகின்றனர்.

***வாக்குரிமையின் பிரயோகத்தில் தாக்கங்களுக்கு உட்படுத்தியக் காரணிகள்***




**வரைபடம் 4**

**ஆதாரம் : கள ஆய்வு (2022 ஜுன்)**

இத்தரவுகளினூடாக பார்க்கின்றப் போது வாக்குரிமையின் பிரயோகத்தின் போது வேறுபட்ட காரணிகள் ஒருவருடைய வாக்கு பிரயோகத்தில் தாக்கம் செலுத்தி இருப்பதை காணமுடிகின்றது. இதில் குடும்பம், சாதி, மதம், அரசியல் கட்சி, இனம் என பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்தியுள்ளது. இப்பிரதேசத்தில் மலையகத் தமிழர் மத்தியில் குடும்பமும் அரசியல் கட்சியும் சமமான அளவு தாக்கம் செலுத்தி இருப்பதை காண முடிகின்றது. இவ்விரண்டு காரணிகளும் 35% மான தாக்கங்களை மக்களின் வாக்கு பிரயோகத்தில் தாக்கம் செலுத்தியுள்ளது. மேலும் சாதி 3% மாகவும் மதம் 6% மாகவும் தாக்கம் செலுத்தியுள்ளது. இன அடிப்படையில் 19% வாக்குரிமையின் பிரயோகத்தில்

தாக்கம் செலுத்தி இருப்பதை அறியமுடிகின்றது. உண்மையில் வாக்கின் பிரயோகம் என்ற ரீதியில் இப்பிரதேசத்தில் இவ்வாறான காரணிகளின் செல்வாக்கு இன்றும் காணப்படுவதை அறிய முடிகின்றது.

***தமிழ் பிரதிநிதிகளுக்கு மேலாக பெரும்பான்மை இன பிரதிநிதிகள் தமிழ் மக்களுக்குச் சேவை செய்கின்ற நிலை***

பிரதிநிதிகளை தெரிவு செய்து தங்களின் குரலாக பாராளுமன்றத்தில் ஒலிக்க செய்வதற்காக மக்கள் அவர்களை தெரிவு செய்கின்றனர். தங்களது வாக்குரிமையினை முறையாக பிரயோகித்து தங்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கவும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் பாதுகாப்பை வழங்குவதான ஒரு சிறந்த தலைவனாக தங்களது பிரதிநிதிகளை பார்க்கின்றனர். அதுமட்டுமன்றி தங்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதி தாங்களுக்கு எந்நிலையிலும் துணை கொண்டு செயற்பட வேண்டும் என்றும் தங்களுக்கான உதவிகளை தயங்காது செய்ய வேண்டுமென்றும் வாக்காளர்கள் எதிர்ப்பார்த்த வகையில் அந்த பிரதிநிதியை தேர்தலில் வெற்றிபெற செய்கின்றனர். இதன்படி பதுளை தேர்தல் மாவட்ட தமிழ் பிரதிநிதிகளை விடவும் பெரும்பான்மையின பிரதிநிதிகள் தமிழ் மக்களுக்கு சேவை செய்கின்ற போக்கு தொடர்பில் பெறப்பட்ட தரவுகள் வரைபடமாக காட்டப்பட்டுள்ளது.




**வரைபடம் 5**

**ஆதாரம் : கள ஆய்வு (2022 ஜூன்)**

பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பெரும்பான்மையினப் பிரதிநிதிகள் தமிழ் மக்களுக்கு அதிகமாக சேவை செய்கின்ற ஒரு நிலை காணப்படுவதினை அறியமுடிகின்றது. 60வீ மான வாக்காளர்கள் தங்களுக்கான உதவிகளை பெரும்பான்மையின பிரதிநிதிகள் செய்வதாக குறிப்பிட்டுள்ளனர். 40% மான மக்கள் தங்களுக்கான உதவிகளையும் சேவைகளையும் பெரும்பான்மையின பிரதிநிதிகளை விட தமிழ் பிரதிநிதிகள் செய்வதாக கூறியுள்ளனர். இருப்பினும் பெருவாரியாக பெரும்பான்மையின வேட்பாளர்கள் தமிழ் மக்கள் மீது அக்கறை கொண்டு பொது நலத்தோடு செயற்படுகின்ற போக்கு இப்பிரதேசத்தில் காணப்படுவதாகவுள்ளது.

***கட்சி தாவுதல் தொடர்பான மக்களின் கருத்துக்கள்***

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கட்சி மாறுதல் என்பது வாக்களித்த மக்களை ஏமாற்றும் ஒரு விடயமாகும். இவ்வாறு கட்சி மாறுகையில் அது தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு சட்டங்கள் கடினமாக்கப் படவேண்டும். அதனோடு கட்சி மாறுகின்றப் போது பிரதிநிதித்துவம் இழக்கப்பட வேண்டும் என பல விடயங்களை இம் மக்கள் தரவுகளாக வழங்கியுள்ளனர். இவ்வாறு கட்சி மாறுகின்றப் பிரதிநிதிகளை மக்கள் தங்களை ஏமாற்றுபவர்களாகவும் விலைபோக கூடியவர்களாகவும் அடையாளம் படுத்துவதை அவதானிக்கலாம்.

தாங்கள் சிறுபான்மையின மக்கள் என்ற வகையில் தங்களால் சுயமாக அதிகாரத்தை பெற்றுக்கொள்ள முடியாது. ஆகையால் கிடைக்கப் பெறும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி மக்களின் கருத்துக்களுக்கும் செவிமடுத்து அவர்களின் சம்மதத்தின் பேரில் சரியான நேரத்தில் கட்சி மாறுவது ஏற்றுக்கொள்ள கூடியது என்றக் கருத்துக்களை மக்கள் வழங்கியுள்ளனர். சிலர் இவ்வாறு அரசியலில் நிகழ்வது சாதாரண விடயம் என்றும் அது அரசியல் தந்திரம் என்றும் தங்களுடைய கருத்துக்களை கூறியுள்ளனர்.

***புதிய பாராளுமன்ற தேர்தல் தொடர்பான மக்களின் எதிர்பார்ப்பு***

வாக்குரிமையினைக் கொண்டுள்ள வாக்காளர்கள் தங்களது வாக்களிப்பின் மூலமாகத்தான் தமக்கான மற்றைய உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என உணர்கின்ற போது நடைமுறையில் தங்களது பிரதிநிதியினுடைய செயற்பாடு அல்லது நடைமுறை அரசியல் நிலை என்பவற்றை கவனத்தில் கொண்டு தங்களுடைய வாக்கினை பிரயோகிக்க, புதிய தேர்தல் ஒன்றின் அவசியம் தொடர்பில் இம்மக்களிடம் கருத்துக்கள் பெறப்பட்டுள்ளது.

**வரைபடம் 6**




**ஆதாரம் : கள ஆய்வு (2022 ஜூன்)**

பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பார்க்கின்ற போது 86% மான வாக்காளர்கள் தாங்கள் புதிய பாராளுமன்ற தேர்தல் ஒன்றினை எதிர்ப்பார்த்து தங்களுடைய வாக்குரிமையை பிரயோகிக்க காத்திருப்பதாக கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளதை அவதானிக்க

முடிகின்றது. அதனோடு 14% மான வாக்காளர்கள் தற்போதைய சூழலில் தேர்தல் ஒன்று அவசியமற்றது, தங்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளே இவ்வாறு நாட்டை சீர்குலைத்து விட்டார்கள் என்ற கருத்தினையும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். எவ்வாறு இருப்பினும் இம்மக்கள் தங்களுடைய வாக்குரிமையின் மூலமே அரசியல் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியும் என்ற நிலையில் இருப்பது புலனாகின்றது.

***இளைஞர்களின் அரசியல் பிரவேசம்***

வாக்குரிமையின் எதிர்கால பிரயோகத்தின் எதிர்பார்ப்பு என்ற ரீதியில் இளைஞர்களுடைய அரசியல் பிரவேசம் மிக முக்கியமாக தற்போது உணரப்பட்டுள்ளது. இளைஞர்களின் அரசியல் எவ்வளவு தூரம் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது என்பது பிரதான விடயமாக இன்று பார்க்கப்படுகின்றது. அதன்படியே பதுளை தேர்தல் மாவட்ட மலையக தமிழ் வாக்காளர்களிடம் முன்வைக்கப்பட்ட இளைஞர்களின் அரசியல் பிரவேசம் தொடர்பிலான தரவு சேகரிப்பில் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பின்வரும் வரைபடம் அமைக்கப்பட்டுள்ளது.

**வரைபடம் 7**




**ஆதாரம் : கள ஆய்வு (2022 ஜூன்)**

பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பார்க்கின்றபோது இளைஞர்கள் அரசியலில் ஆர்வம் காட்ட வேண்டும், அவர்களுடைய அரசியல் பிரவேசம் என்பது இன்றியமையாதது என்பதை உணர்ந்தவர்கள் 94% மானவர்களாகக் காணப்படுகின்றனர். குறிப்பாக தங்களுடைய எதிர்கால வாக்குரிமையின் பிரயோகத்தில் பெரும்பாலான தெரிவுகள் இவ்வாறு இளைஞர்களை நோக்கி செல்லக்கூடிய வாய்ப்பு காணப்படுவதாக இதிலிருந்து நாம் பார்க்கலாம். அதேசமயம் இளைஞர்களுடைய அரசியல் பிரவேசம் அவசியமற்றது என்ற நிலையில் 6% மான வாக்காளர்கள் காணப்படுவதையும் இங்கு அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

**கலந்துரையாடல்**

2020ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் இம்மக்கள் தங்களுக்கான மூன்று வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பு அதிகமாகக் காணப்பட்ட நிலையில் நிராகரிக்கப்பட்ட வாக்குகள், பொதுஜன பெரமுன கட்சியின் வியூகம் என்பவற்றில் சிக்கிய பதுளை தேர்தல் மாவட்ட மலையகத் தமிழ் வாக்காளர்கள் தங்களுக்க தெரிவு செய்யப்படவேண்டிய மூன்றாவது பிரதிநிதித்துவத்தினை இழந்தனர். அதுமட்டுமன்றி பொதுஜன பெரமுன கட்சி சார்பில் போட்டியிட்ட பலம் பொருந்திய ஆறு பெரும்பான்மையின வேட்பாளர்கள் வெற்றி கண்டனர்.

வாக்குரிமையின் தெளிவு பற்றிய தகவல்களில் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இப்பிரதேச மக்களிடம் பெரும்பான்மையான வாக்காளர்கள் தங்களுடைய உரிமை தொடர்பாக அறிந்துள்ளனர். இங்கு குறிப்பிட்ட சில வாக்காளர்கள் தங்களுடைய வாக்குரிமை தொடர்பில் அறியாதவர்களாக உள்ளனர். வாக்குரிமையின் முக்கியத்துவம், பாராளுமன்றத் தேர்தல் முறைத் தொடர்பான விளக்கங்கள், வாக்களிப்பு தொடர்பான அறிவூட்டல் மக்களிடம் சென்றடைந்த விதம் தொடர்பில் பெறப்பட்ட தரவுகளினூடாக வாக்குரிமையின் முக்கியத்துவத்தினை பற்றி அறிந்தவர்கள் பாராளுமன்ற தேர்தல் முறை பற்றி அறிந்துள்ளதோடு இவர்களுக்கு வாக்குரிமை பற்றிய அறிவூட்டல் போதுமானதாக கிடைத்துள்ளது. ஆனால் வாக்குகளை வீண்விரயமாக்கும், பெரும்பான்மையின கட்சியின் வியூகத்தில் விழும் வாக்காளர்கள் மேற்கூறப்பட்ட விடயங்களில் பின் தங்கிய நிலையில் இருப்பதை அறிய முடிகின்றது. வேட்பாளர்களைத் தெரிவுச் செய்கின்ற போது ஆய்வுப் பிரதேச மக்களின் கவனயீனம் வெளிப்படுத்தப்படுவதை அறியமுடிகின்றது. காரணம் தேர்தல் என்பது குறிப்பிட்ட காலப்பகுதியை மையமாகக் கொண்டது என்ற கருத்தை இவர்கள் கொண்டுள்ளதோடு அந்த தேர்தல் காலத்தில்தான் வேட்பாளர்களும் வாக்காளர்களும் சந்திக்கின்ற ஒரு நிலையும் காணப்படுகின்றது.

2015 மற்றும் 2020ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் ஆய்வுப் பிரதேச மக்களுடைய பங்களிப்பு தொடர்பாக பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பதுளை தேர்தல் மாவட்ட மலையக தமிழ் வாக்காளர்கள் அதிகமாக வாக்களிப்பில் ஈடுப்பட்டுள்ளதாக தரவுகள் குறிப்பிடுகின்றன. அதேசமயம் வேட்பாளர்கள் மீது வெறுப்படைந்தவர்கள், வேலை நிமித்தம் வெளிநாடு சென்றவர்கள், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் வாக்களிக்க முடியாத சில காரணங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளது. வாக்களித்து அதன் மூலம் வெற்றியினை கொண்டாடிய வாக்காளர்கள் தங்களது பிரதிநிதிகள் தொடர்பில் குறிப்பிட்ட காலத்திற்குள் தமது பிரதிநிதிகள் மீது நம்பிக்கையினை இழந்துள்ளனர். இவர்கள் மக்கள் நலன் சார்ந்து செயற்படாது சென்றுள்ளதாகவும் தங்களுடைய வாக்களிப்பின் தன்மையினை கேள்விக்குறியாக்கியுள்ளதாகவும் மக்கள் பிரதிநிதிகள் மீது எதிர்மறையான கருத்து நிலையில் உள்ளனர்.

உண்மையில் பெரும்பான்மையின பிரதிநிதிகளின் வியூகம் என்பது இம்மக்களிடம் நன்றாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது இங்கு புலப்படுகின்றது. இருப்பினும் புதிய மாற்றம், அரசியலில் புதுமுகங்கள், இளைஞர்களுடைய அரசியல் பிரவேசம் தொடர்பில் மக்கள்

மத்தியில் ஆக்கபூர்வமான கருத்துக்கள் தற்போது எழுந்துள்ள நிலையினையும் காணமுடிகின்றது. பகுப்பாய்வின் அடிப்படையில் வாக்குரிமையின் பிரயோகத்தில் வாக்குகளை வீண்விரயமாக்குதல், தங்களுக்கான பிரதிநிதித்துவத்தினை கவனத்தில் கொள்ளாது கட்சி சார்பாக செயல்பட்டு வாக்களித்தல் தொடர்பில் சில வாக்காளர்கள் தெளிவுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கான பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகள் என்பன இம் மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்கப்பட வேண்டிய ஒரு கடப்பாடு ஏற்பட்டுள்ளது.

இக் குறைபாடுகளை மையப்படுத்தி அவற்றை நிவர்த்தி செய்யும் போது சிறந்த வாக்குப்பிரயோகத்தை ஏற்படுத்தலாம். புதிய வாக்காளர்களை அரசியல் ரீதியாக அறிவூட்டி அவர்களை சிறந்த அரசியல் கலாசாரத்திற்கு பயிற்றுவிக்க வேண்டும். இதற்காக பாடசாலைகள், சமூக நிறுவனங்கள் மட்டத்தில் வேலைத்திட்டங்களை செய்ய வேண்டும். தேர்தல் முறைமைகள் தொடர்பில் தெளிவான விடயங்களை இப்பிரதேச மலையகத் தமிழ் வாக்காளர்களிடையே கொண்டுச் சேர்க்க வேண்டும். பாராளுமன்ற தேர்தல் தொடர்பிலான விளக்கங்களை வாக்காளர்களுக்கு விளங்கும் வகையில் வாக்களிக்கும் விதத்தை மிகத் தெளிவாக அவர்களுக்கு கொண்டுச் சேர்க்க வேண்டும. இதற்காக பதுளை மாவட்டத்தில் காணப்படுகின்ற மலையக கல்விமான்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வாலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சமூகநல செயற்பாட்டாளர்கள் எனப் பல தரப்பினர்களை உள்ளடக்கிய நடுநிலைத் தன்மையுடன் செயற்படக்கூடிய அமைப்பொன்றினை உருவாக்கி அதனூடாக மலையக தமிழ் மக்களுக்கான அறிவூட்கள் வழங்கப்படுகின்றப் போது முறையாக வாக்குகளைப் பயன்படுத்தி தங்களது பிரதிநிகளை தேர்தலில் வெற்றிப்பெறச் செய்ய முடியும்.

**முடிவுரை**

பிரதிநிதித்துவம் தொடர்பிலான கருத்துக்கள் இன்று பிரதான பேசுபொருளாக மாறியுள்ள நிலையில் வாக்குரிமையின் பிரயோகத்தின் முக்கியத்துவமும் பெரும்பாலானவர்கள் உணர்ந்துள்ளனர். வாக்குரிமையின் பிரயோகம் தொடர்பில் தரவுப்பகுப்பாய்வின் படி இறுதியில் சில முடிவுகள் எட்டப்பட்டுள்ளது. பதுளை தேர்தல் மாவட்ட மலையகத் தமிழ் வாக்காளர்கள் புதிய பாதையில் செல்வதற்கான ஆயத்த நிலையில் இருப்பது புலனாகின்றது. இருப்பினும் தங்களுடைய பிரதிநிதித்துவம், வாக்களிப்பு சம்பந்தமாக இம்மக்களிடம் சில குறைபாடுகளையும் அவதானிக்க முடிகின்றது. இப் பிரதேச மலையக தமிழ் வாக்காளர்கள் என்ற அடிப்படையில் பார்க்கின்றபோது 2015 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தாங்கள் தெரிவு செய்த தமிழ் பிரதிநிதிகளையே மீண்டும் 2020 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தெரிவு செய்துள்ளனர். இந்தப் பிரதிநிதிகள் மீதான நம்பிக்கை மக்களிடம் காணப்பட்ட போதிலும் நடைமுறை விடயங்களை வைத்து பார்க்கின்றபோது பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் வாக்குரிமையின் எதிர்கால பிரயோகம் தொடர்பில் பல்வேறுபட்ட மாற்றங்கள் நிகழக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இதன் அடிப்படையிலேயே பெரும்பாலான மலையகத் தமிழ் மக்கள் புதிய தேர்தலுக்கான எதிர்பார்ப்பில் உள்ளனர். இவ்வாறு இவ் ஆய்வின் அடிப்படையில் இம்மக்கள் அரசியல் ரீதியாக அக்கறைக் கொண்டு சிந்தித்து செயல்படக்கூடிய நிலையில் இருப்பது தெரிவதோடு கடந்த தேர்தல்களில் இவர்கள் விட்ட பிழைகளையும் வாக்குரிமையின் பிரயோகத்தினையும் அறிய முடிகின்றது.

**உசாத்துணைகள்**


Adaderana. (2015, August 18). Preferential votes- General Election 2015. *Adaderana.lk*. Retrieved September 04, 2023, from *https://www.adaderana.lk/news.php?nid=32022*

Ceylon Today. (2020,August 07). General Election 2020: Preferential votes of Badulla District. *Ceylon Today*. Retrieved September 04, 2023, from *https://archive.ceylontoday.lk/news/general-election-2020-preferential-votes-of-badulla-district*

Election Commission of Sri Lanka. (2015). Parliamentary Elections 2015 Districts Results by Polling Division and All Island Results. Election Commission of Sri Lanka. Retrieved September 05, 2023, from *https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/parliamentary-elections/general-election-2015.pdf*

Election Commission of Sri Lanka. (2020). Parliamentary Elections 2020 Seat Allocation by Party Electoral District - 19 - Badulla. Election Commission of Sri Lanka. Retrieved September 05, 2023, from https://elections.gov.lk/web/wp-content/uploads/election-results/parliamentary-elections/Badulla_R2.pdf

Nadesan,S. (1993). A History of The Upcountry Tamil People. A Nandalala Publication Sri Lanka.

Wickramarathne,S. (2016). Donoughmore Reforms and the Social Evolution. In S.Watagedara (Ed.), *Universal Suffrage 1931 - 2016 From Donoughmore Commission to Election Commission* (pp.166-147). Election Commission of Sri Lanka.

இரகுநாதன்.க.(2008).*தேர்தல் முறைமைகளும் அவற்றின் பரிமாணங்களும்.* குமரன் புத்தக இல்லம்.

சந்திரபோஸ்.ஏ.எஸ், ரமேஷ்.இரா.(2018*).இலங்கையில் தேயிலை பெருந்தோட்ட சமூகம் 150 வருடங்கள் 1867 தொடக்கம் 2017.* எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் சிலோன் லிமிடட் வெளியீடு.

லோறன்ஸ்.அ.(2006).*மலையகம் - சமகால அரசியல், அரசியல் தீர்வு.* மலையகம் வெளியீட்டகம்.

ஜயதேவ உயங்கொட.(1998).*தோட்டப்புற அமைப்பின் மனித உரிமைகள்.* இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம்.

# உள்நாட்டு யுத்தத்திற்குப் பின்னரான மனித உரிமை மீறல்கள் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் ஏற்படுத்திய தாக்கங்கள்

**வ. ஜெயலோஜினி**
சமூக விஞ்ஞானங்கள் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
jeyvanniyasingam@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

அரசுகள் தமது தேசிய நலன்களைச் சர்வதேச மட்டத்தில் சாத்தியமாக்கிக் கொள்வதற்கு வெளியுறவுக் கொள்கையைப் பயன்படுத்துகின்றன. எந்தவொரு நாடும் உலக அரங்கில் தனித்து வாழாது, மற்றைய நாடுகளுடன் தொடர்புகொள்ள வேண்டியது தவிர்க்க முடியாததாயினும் அந்நாட்டின் உள்விவகாரங்களில் ஏனைய நாடுகளின் தலையீடானது மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்பட வேண்டும். இல்லையாயின் ஒரு நாட்டின் சுயாதிபத்தியம், இறைமை என்பன பாதிக்கப்படும். மனித உரிமைகள் என்பது எப்போதும் வெளியுறவுக் கொள்கை விவகாரங்களில் செல்வாக்குச் செலுத்துகின்றது. ஒரு நாட்டின் அதிகாரமானது இறைமை வழி இயங்குவதற்கான நெறிமுறைகளைக் கொண்டிருக்க வேண்டும். அரசுகள் மனித உரிமைகளில் நம்பிக்கை கொள்ள வேண்டும். இல்லையாயின், ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் ஏனைய நாடுகளின் தலையீடுகள் தவிர்க்க முடியாததாகிவிடும். ஓர் நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுகையில் அந்நாடு அது பற்றிய பொறுப்புக்கூறலை செய்யவைப்பதற்கும் சர்வதேசத்தின் பங்கு இன்றியமையாது. இலங்கையானது நீண்டகால யுத்தத்தின் பின்னரான மனித உரிமை மீறல்களின் விளைவால் சர்வதேசத்தின் அழுத்தத்திற்கு உள்ளாகித் தனது அபிவிருத்திற்கும், பாதுகாப்பிற்கும் சர்வதேச நாடுகளில் தங்கியிருக்கும் ஓர் நிலை உருவாகியது. இது ஆரோக்கியமற்ற ஓர் நிலைப்பாடாகும். இந்நிலை இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் பாரிய தாக்கத்தைச் செலுத்துவதோடு அதனை வெற்றிகொள்ளும் வழிமுறைகளையும் பின்பற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இவ்வகையில், யுத்தத்தின் பின்னரான இலங்கையின் மனித உரிமை நிலையானது இலங்கையின் வெளியுறவுக்கொள்கையில் எவ்வாறான நேர்க்கணிய மற்றும் எதிர்க்கணிய விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பது பற்றி இங்கு ஆராயப்படுகின்றது. யுத்தத்திற்கு பின்னர் இலங்கையில் நிகழும் மனித உரிமை மீறல்கள் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் பல நாடுகள் தலையிடுவதற்கு ஏதுவாகின்றன. இதன் மூலம் சர்வதேச ரீதியில் இலங்கை அழுத்தங்களுக்கு உள்ளாவதுடன் வெளியுறவுக் கொள்கையிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. இதன்விளைவாக இலங்கையின் சுதந்திரம், இறைமை, சுயாதிபத்தியம், தன்னாதிக்கம் பாதிக்கப்படுகின்றன. சர்வதேச அழுத்தங்களினால் இலங்கை அரசானது தன்னைப் பாதுகாத்துக்கொள்ளக் கூடிய நாடுகளின் பக்கமாகத் தனது வெளியுறவுக் கொள்கையை வகுக்கின்றது. இதன் காரணமாக சுய பாதுகாப்பிற்காக ஏனைய நாடுகளிடம் தங்கியிருக்க வேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. இவ்வாய்வானது பண்பு ரீதியான ஆய்வு முறையினைப் பயன்படுத்தி செய்யப்பட்டுள்ளது.

***திறவுச் சொற்கள்:*** *தேசிய பாதுகாப்பு, தேசிய நலன், சர்வதேச சமூகம், சர்வதேச விசாரணை, பொறுப்புக்கூறுதல்*

## அறிமுகம்

மூன்றாம் உலகநாடுகள் காலனித்துவத்திலிருந்து விடுதலை பெற்று தேசிய அரசுகளாக வளர்ந்து வருகின்றன. தேசிய அரசுகளாக வளர்கின்ற நாடுகள் பெற்றுக்கொண்ட சுதந்திரத்தைப் பாதுகாக்கும் நோக்கில் மாறுகின்ற சர்வதேச சூழலுக்கு ஏற்பத் தேசிய நலன் சார்ந்த கொள்கைகளை வகுக்க வேண்டியுள்ளது. இவ்வகையில் ஒவ்வொரு நாடும் தமது வெளிநாட்டு கொள்கைகளை வகுத்து சர்வதேச முறையுடன் இணைந்து இயங்குகின்றன. வெளியுறவுக் கொள்கை விவகாரங்களுடன் தொடர்புபடுகின்ற விடயங்களுள் மனித

உரிமைகளும் ஒன்றாகும். மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வினா எழுப்புவது தமது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக உலக நாடுகள் கருதுகின்றன. சில நாடுகளில் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்களை வல்லரசுகள் கவனத்திற்கொள்ளாத அதேவேளையில், சில நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை கண்டனம் செய்கின்றன. உலக நாடுகள் தமது நலன்கருதியும், கேந்திர தந்திரோபாய நலன்கள் கருதியும் ஏனைய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையீடு செய்து குறித்த நாட்டின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பரப்புரை செய்கின்ற போது, மனித உரிமைகள் மற்றும் வெளியுறவுக் கொள்கை என்ற இரண்டிற்கும் இடையில் தொடர்பு ஏற்பட்டுவிடுகிறது.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் மனித உரிமை மீறல் தொடர்பில் இலங்கை அரசாங்கம் தொடர்பாக சர்வதேசத்தின் நிலைப்பாடுகள் இலங்கை வெளியுறவுக் கொள்கையில் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பாக ஆய்வுகள் செய்யப்பட வேண்டியுள்ளது. யுத்தத்திற்கு பின்னர் இலங்கையில் நிகழும் மனித உரிமை மீறல்கள் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் பல நாடுகள் தலையிடுவதற்கு ஏதுவாகின்றன. இதன் மூலம் சர்வதேச ரீதியில் இலங்கை அழுத்தங்களுக்கு உள்ளாவதுடன் வெளியுறவுக் கொள்கையிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. இதன்விளைவாக இலங்கையின் சுதந்திரம், இறைமை, சுயாதிபத்தியம், தன்னாதிக்கம் பாதிக்கப்படுகின்றன. இவ்வகையில் இவ் ஆய்வானது பின்வரும் வினாக்களுக்கு விடை தேடுகிறது. உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் மனித உரிமை பாதுகாப்பு எவ்வாறு உள்ளது?, மனித உரிமை விவகாரத்தில் சர்வதேசத்தின் கரிசனை ஏன் அதிகமாக உள்ளது?, இலங்கையின் பாதுகாப்பு மற்றும் அமைதி தொடர்பில் சர்வதேச நாடுகளின் அக்கறை ஏன் அதிக கவனயீர்ப்பிற்குள்ளாகின்றது?, மனித உரிமை விவகாரங்கள் இலங்கை வெளியுறவுக் கொள்கையில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தும்?. மேலும் இவ்வாய்வானது உள்நாட்டு யுத்தத்தின் பின்னரான இலங்கையில் மனித உரிமை பாதுகாப்பு பற்றி கண்டறிதல், மனித உரிமை விவகாரத்தில் சர்வதேசத்தின் கரிசனை பற்றி அறிதல், இலங்கையின் பாதுகாப்பு, சமாதானம் தொடர்பான சர்வதேச நாடுகளின் அக்கறையினைக் கண்டறிதல், மனித உரிமைகளுக்கும் வெளியுறவுக் கொள்கைக்கும் இடையிலான தொடர்பினைக் கண்டறிதல், மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச் சாட்டுக்கள் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் ஏற்படுத்தும் தாக்கத்தினைக் கண்டறிதல் போன்ற நோக்கங்களை கண்டறியவுள்ளது. இவ்வாய்வானது பண்பு ரீதியான ஆய்வு முறையினைப் பயன்படுத்தி செய்யப்பட்டுள்ளது. இவ்வகையில் ஆய்வுடன் தொடர்புடைய சொற்கள், சொற்றொடர்கள், கருத்துக்கள், எண்ணங்கள் போன்றவற்றிற்கும் முக்கியத்துவமளித்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வகையில் இவ் ஆய்வினை மேற்கொள்வதற்கு இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகளாக ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வுகள், ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்ற தரவுகள் சேகரிக்கப்பட்டு இவ்வாய்வு செய்யப்படுகிறது. உய்த்தறி அணுகுமுறை மூலம் பொதுவான உண்மைத்தரவுகளிலிருந்து ஒரு நுணுக்கமான முடிவுக்கு வருகிறது.

**யதார்த்தவாத கோட்பாடு**

யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டு யதார்த்த சூழலில் நின்று சர்வதேச அரசியலை விளக்கும் மோன்தோ (Hans Morgenthau), "நாடுகளுக்கிடையிலான அரசியல்" என்னும் நூலில் தேசியநலன், அதிகாரம் என்பன சர்வதேச அரசியலை ஒழுங்குபடுத்தும் பிரதான எண்ணக்கருக்களும் நியமங்களும் ஆகும் எனக் கூறுகின்றார். இவற்றை அனுசரித்து செயற்படாததால் அரசுகள் இயல்பாகவே ஒன்றுக்கொன்று மோதிக்கொள்கின்றன. அதிகாரமே சர்வதேச அரசியலில் இடம்பெறும் பிரதான காரணியாகும். ஒவ்வொரு அரசும் தனது நலனை அடைய எவ்வழிமுறைகளையும் பயன்படுத்துகிறது. மறுவார்த்தையில் கூறின் சர்வதேச அரசியலானது அதிகாரத்திற்கான போராட்டமேயாகும். ஒவ்வொரு நாடும் தனது தேசிய நலனை அடைந்து கொள்ள அதிகாரத்தை பயன்படுத்துகிறது.

சர்வதேச அரசியலின் அடிப்படை பண்பு சுய பாதுகாப்பாகும். ஓர் அரசு சுய பாதுகாப்பை எந்தவகையிலும் விட்டுக் கொடுக்கக் கூடாது. தேசிய நலனை முன்னேற்றும் போதும் எதிரிகளை வெற்றிகொள்ள வேண்டிவரும் போதும் பாதுகாப்பு தயார்நிலைக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். சமாதானத்தை வலுச்சமநிலை, கூட்டுப் பாதுகாப்பு, உலக அரசாங்கம், இராஜதந்திரம், கூட்டணி போன்ற அதிகாரத்தை முகாமை செய்யும் பொறிமுறைகளின் ஊடாக மட்டுமே பேணல் வேண்டும். நட்பு நாடுகளுடன் உறவுகளை ஏற்படுத்துவதன் மூலம் சுயபாதுகாப்புத் திறனை அதிகரித்துக் கொள்ளும் அதேவேளை, ஒரு அரசு அதன் நட்பு அரசுகளின் மீது சுயபாதுகாப்பிற்காகத் தங்கியிருக்கக்கூடாது. எனவே இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மனித உரிமைகளின் மூலம் சுய பாதுகாப்பை உறுதிப்படுத்தல், சர்வதேசத்தின் தலையீடு இலங்கை மீது எவ்வாறு ஏற்படுகிறது? மனித உரிமை மீறல்கள் வெளியுறவுக் கொள்கையில் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பாக ஆராயப்படுகிறது.

**உள்நாட்டு யுத்தத்திற்குப் பின்னர் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள்**

பேச்சு மற்றும் ஒன்றுகூடுவதற்குமான சுதந்திரம் தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்பட்டதுடன், சுய தணிக்கை பொதுவான அம்சமாக இருந்தது. பிபிசி உலக சேவை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தாலான தமிழ் நிகழ்ச்சியில் "இலக்கு வைத்த குறுக்கீடுகள்" எனக் காரணம் குறிப்பிட்டு தமிழ் மொழியிலான அதன் மீள் ஒலிபரப்பை இடைநிறுத்தியது (BBC,2013). ஒரு இனந்தெரியாத குழுவினால் உதயன் பத்திரிகையின் செய்தியாளர் தாக்கப்பட்டதோடு தமிழ் சிங்களப் புத்தாண்டுக் காலத்தில் எரியூட்டல் தாக்குதலுக்கும் உள்ளாகியிருந்து (AP,2013). வடக்கு ஊடகவியலாளர்கள் பலர் தொல்லைகளுக்கு உள்ளாகுவதோடு, இந்தத் தாக்குதல்களுக்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக வெற்றிகரமான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு இலங்கை அதிகாரிகள் தவறியிருந்தனர் (RSF,2019). அத்தோடு ஒன்று கூடுதலுக்கான சுதந்திரம் தொடர்பாகவும் பல சம்பவங்கள் இருந்தன. ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் மனுவொன்றைக் கொடுப்பதற்காகக் காணாமற் போனவர்களின் நூற்றுக்கணக்கான உறவினர்கள் கொழும்புக்கு பயணிப்பதை பொலிஸ் தடுத்தது. மத ரீதியாக தூண்டப்பட்ட பகையுணர்வுப் பிரச்சாரங்களுக்கு எதிரான ஒரு அமைதியான விழிப்புப்

போராட்டம் பொலிசாரினால் கலைக்கப்பட்டதுடன், பல செயற்பாட்டாளர்கள் தற்காலிகமாகத் தடுத்து வைக்கப்பட்டனர் (மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்துக்கான அறிக்கை,2014). திருகோணமலையில் காணாமற்போனவர்களின் குடும்பங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மனித உரிமைகள் தின ஊர்வல நிகழ்வு இனந்தெரியாத முகமூடி அணிந்த ஆட்களால் தாக்கப்பட்டது (Colombo Telegraph, 2013).

இவ்வாறாக இராணுவ அடக்குமுறை மூலம் உரிமை மீறல்களை பறைசாற்றுகின்ற சம்பவமாக பல நடந்தேறியிருப்பினும் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்த சம்பவமாக வெலிவேரிய படுகொலை சம்பவம் தடம்பதித்துள்ளது (மௌனம் களையும் போராட்டம்,2013). இச் சம்பவத்தில் 17 வயதான அகில தினேஷ் என்னும் சிறுவன் உட்பட மூன்று பேர் கொல்லப்பட, 50ற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். பொது மக்களின் சொத்துக்கள் சேதமாக்கப்பட்ட இராணுவ வன்முறைக்கு அஞ்சி தேவாலயத்தில் புகலிடம் பெற்ற மக்களை இராணுவம் அடித்து துன்புறுத்தியது. சுதந்திரமாகத் தகவல்களைச் சேகரிக்கவும், தெரிக்கவும் முடியாத வண்ணம் ஊடகங்கள் மிரட்டப்பட்டன. விசாரணையின் பெயரில் மக்களையும் ஊடகவியலாளர்களையும் தனது இராணுவ முகாமுக்கு வருமாறு மிரட்டியது. வெலிவேரியாவுக்கு இராணுவத்தை யார் வரவழைத்தது? யார் துப்பாக்கி பிரயோகத்துக்கு உத்தரவை வழங்கியது? என்று எதையும் கண்டறிய முடியாதுள்ளதாக அரசாங்கம் அறிவித்தது. எனினும் ஊடக அறிக்கைகளின் படி, பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அரசாங்க பாதுகாப்பு சபை கூட்டத்திலேயே, கம்பஹா ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான இராணுவ அணிதிரட்டலுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது (பனினி & ராஜபக்ஷ, 2013). ஆர்ப்பாட்டம் செய்த இலங்கை மீனவர் மீது 2012ஆம் ஆண்டு கொலைத் தாக்குதல் (WSWS, 2012) நடத்திய பின்னர் நடத்தப்பட்டுள்ள இந்த திட்டமிட்ட தாக்குதல் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் எந்தவொரு எதிர்ப்பையும் நசுக்க இராஜபக்ஷ அரசாங்கம் இராணுவத்தை பயன்படுத்துவது அதிகரித்து வருவதை காட்டும் மற்றொரு உதாரணமாகும்.

மனித உரிமைப் பாதுகாவலர்கள் இலங்கையில் செயற்படுவதற்கான சூழ்நிலை கடினமானதாகவே இருந்தது. முன்னணி மனித உரிமைப் பாதுகாவலர்கள் அரசாங்க உறுப்பினர்களிடமிருந்து பகிரங்கமான கண்டனங்களுக்குத் தொடர்ச்சியாக முகங்கொடுத்ததுடன், அரசினால் நடாத்தப்படும் ஊடகங்களினால் “துரோகிகள்” எனக் காண்பிக்கப்பட்டனர். தங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது மரண அச்சுறுத்தல்களைப் பெறுவது உட்பட, செயற்பாட்டாளர்கள் மிரட்டல்களுக்கு உள்ளாகினர். 2010 இல் கேலிச்சித்திரம் வரைகின்ற பிரகீத் எக்னலிகொட் மற்றும் 2011 இல் யாழ்ப்பாணத்தில் பிரச்சாரகர்கள் லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகன் ஆகியோர்களின் காணமற்போனமை உட்பட பல சம்பவங்கள் இதற்கு சான்றுபகர்கின்றன (Asian Human Rights Commission,2012). பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பதவிநீக்குவதற்கு இலங்கை ஜனாதிபதி இணங்கினார். இலங்கையின் உயர் நீதிமன்றம் இவ் அரசியல் குற்றச்சாட்டு அரசியலமைப்பிற்கு விரோதமானது என தீர்மானித்தது (Stephanie March,2015). 2006ஆம் ஆண்டு திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் கொல்லப்பட்ட வழக்கு

(‘Trinco5’) மீளவும் ஆரம்பிக்கப்பட்ட போது புலன்விசாரணைகளில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டதுடன், காவல்துறை சிறப்பு அதிரடிப் படையைச் சேர்ந்த பன்னிரெண்டு பேர்கள் கைது செய்யப்பட்டனர். எனினும், அவர்கள் பன்னிரண்டு பேர்களும் ஒக்டோபர் மாதத்தில் பிணையில் விடுவிக்கப்பட்டனர் (Human Rights Watch,2019). படுகொலை செய்யப்பட்ட பிரித்தானியப் பிரஜை குராம் ஷாயிக்கின்(Khuram Shaikh) வழக்கு வருடத்தின் இறுதி வரை வழக்கு விசாரணைக்கு வரவில்லை (Nadia Fazlulhaq,2015). 2011 ஆம் ஆண்டு தேசிய நடவடிக்கைத் திட்டத்தில் சித்திரவதை தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், காவல்துறையின் தடுப்பு காவலில் வைக்கப்படும் போது சித்திரவதை செய்யப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்கின்றன. தடுப்பு காவலில் வைத்திருக்கும் போது சித்திரவதை செய்யப்படுவதை தடுக்கும் அல்லது கவனம் செலுத்தும் சட்டங்கள் இலங்கையில் நடைமுறையில் இல்லை (Human Rights Watch,2015).

2013ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து ஜூலை வரை முஸ்லிம்களுக்கெதிரான 227 மனித உரிமை மீறல் சம்பவங்களையும் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான 60 மனித உரிமை மீறல் சம்பவங்களையும், உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனம் ஆவணப்படுத்தியுள்ளது (இலங்கை மனித உரிமைகள் அறிக்கை, 2016). ஆகஸ்ட் 11 ஆம் திகதியன்று கொழும்பு கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மீதான தாக்குதல் இரண்டு நாள் இரவு பொலிஸ் ஊரடங்கை உருவாக்கியது (வினவு, 2013) இதற்குச் சான்றாகும். பாலியல் வல்லுறவு உட்பட, பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளின் அறிக்கையிடல்கள் ஒரு கடுமையான கரிசனைக்குரியவையாக தொடர்ந்தும் இருந்தன. இராணுவத்தால் பாலியல் ரீதியான வன்முறைகள் மற்றும் வல்லுறவு பற்றிய முறையிடல்கள் உட்பட, யுத்தத்தின் காரணமான 89,000க்கும் மேற்பட்ட விதவைகள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்ந்தன (சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை, 2016). இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு, 2010 இல் இடம்பெற்ற விசுவமடு சம்பவமாகும். மெனிக்பாமிலிருந்து கிளிநொச்சி விசுவமடுவிற்குத் திரும்பிய அகதிப் பெண்கள் இருவரில் ஒருவரை இலங்கை இராணுவம் நால்வர் பாலியல் வன்புணர்வு செய்து மற்றையவரை பாலியல் ரீதியில் துன்புறுத்தினர். இவர்கள் கைது செய்யப்பட்டு நவம்பரில் பிணையில் விடுதலை பெற்றனர். எனினும் தொடர் அச்சுறுத்தல் காரணமாக 2015 ஒக்டோபரில் யாழ் உயர் நீதிமன்றம் இவர்களுக்கு 30 வருட கடூழிய சிறைதண்டனையளித்த போதும் 2019 ஒக்டோபரில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் அவர்கள் விடுவிக்கப்பட்டனர் (Samakalam, 2019).

காணாமல்போவது குறித்த 5,859 வழக்குகள் அல்லது முறைப்பாடுகள் விசாரணைகளின்றி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன (இலங்கை மனித உரிமை அறிக்கை, 2018). காணாமற்போனோர் அலுவலகம் (OMP) ஸ்தாபிக்கப்பட்டது வரவேற்கத்தக்க விடயமாயினும் அரச அனுசரணையுடன் அது இயங்குவதற்கான வசதிகள் வழங்கப்பட வேண்டும். இந்த வகையில் ஜெனீவாவில் உறுதியளித்த பொறிமுறைகள் இன்னும் திருப்திகரமான மட்டத்தில் இயங்கவே இல்லை (மனித உரிமைகளுக்கான தரவு மையம்,2019). சித்திரவதை மற்றும் பொலிஸாரினால் அதிகப்படியான பலத்தைப்

பயன்படுத்துவது, குறிப்பாக வாக்குமூலங்களைப் பெற்றுக்கொள்ள இவற்றைப் பயன்படுத்துவது தொற்றுநோய் சூழலிலும் தொடர்வதாக மனித உரிமை அமைப்புக்கள் நடத்திய நேர்காணல்களில் கண்டறியப்பட்டது. உதாரணமாக, வாக்குமூலங்களைப் பெறுவதற்கு அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான சாட்சிகளைப் பயன்படுத்த சந்தேகநபர்களுடன் பொலிஸார் "முரட்டுத்தனமாக" நடந்துகொள்வதாக பல அறிக்கைகள் கூறுவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிடுகிறது. முன்னைய ஆண்டுகளைப் போன்று கைது செய்யப்பட்டவர்கள் சித்திரவதை மற்றும் தவறாக நடத்தப்பட்டமை, அவர்களிடமிருந்து பலவந்தமான வாக்குமூலம் பெறப்பட்டமை மற்றும் சட்டத்தரணிகள் அல்லது குடும்ப உறுப்பினர்களை அணுகுவது போன்ற அடிப்படை உரிமை மறுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது (நிருபா, 2016). கொழும்பிலுள்ள சுவிஸ் தூதரகத்தில் பணியாற்றும் இலங்கைப் பணியாளர் ஒருவர் பொலிஸார் எனத் தம்மை அடையாளம் காட்டிய நபர்களினால் நவம்பர் மாதம் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார். இலங்கை அரசாங்கத்தின் மூத்த அதிகாரிகள் அந்தப் பணியாளரை பகிரங்கமாக இழிவுபடுத்தியதுடன் அவரது நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கினர். பின்னர் அவர் கைது செய்யப்பட்டு பொய்யான அறிக்கைகளை வெளியிட்டதாக குற்றம் சாட்டப்பட்டார் (BBC, 2019).

பொலிஸாரின் தகவல்களுக்கு அமைய 2019ஆம் ஆண்டு ஏப்ரல் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் முதற்கட்டமாக 2,299 பேர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளனர். செப்டெம்பர் வரையில் 293 சந்தேகநபர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தனர். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களைத் தொடர்ந்து 1,000ற்கும் அதிகமானவர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர் (US embassy, 2019). ஏப்ரல் 21 தாக்குதலைத் தொடர்ந்து ஒருதலைப்பட்சமான கைதுகள் குறித்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, ஜுலை மாதம் பதில் பொலிஸ்மா அதிபருக்குக் கடிதமொன்றை அனுப்பியிருந்தது குறிப்பிடத்தக்கது (இலங்கை மனித உரிமை அறிக்கை, 2019).

**மனித உரிமை மீறல்கள் வெளியுறவுக் கொள்கையில் ஏற்படுத்திய நேர்க்கணிய தாக்கங்கள்.**

உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கிய நாடுகளுள் அமெரிக்காவும் ஒன்றாகும். 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னராக இரு நாட்டு உறவுகளும் முன்னைய காலப் பகுதியிலிருந்து புதிய பாதையில் பயணித்தது. ஜனாதிபதி மைத்திரியின் கோரிக்கைக்கு அமைவாக மனித உரிமை மீறல் குறித்த சர்வதேச விசாரணை உள்நாட்டு விசாரணையாக்கப்பட்டதுடன், இலங்கை கோரியிருந்த கால எல்லை தொடர்பிலும் அமெரிக்கா தன்னுடைய ஆதரவைத் தெரிவித்திருந்தது. இலங்கை அரசாங்கத்தால் இக்காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட முயற்சி தொடர்பில் அமெரிக்கா நம்பிக்கை கொண்டிருந்தது. "அமெரிக்காவானது இலங்கையின் சமாதானம் மீளிணக்கப்பாடு மற்றும் நிலையான செழுமையை நோக்கிய பயணத்தில் முழுமையான பங்காளியாக இருக்கும்" என அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு

மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் ரிஷாபிஸ்வால் தெரிவித்தார் (பாஸில்,2020). போருக்குப் பின்னரான மீளிணக்கப்பாடு போர்க் குற்றங்கள் தொடர்பான மனித உரிமை மீறல்கள் மீதான விசாரணையை வலியுறுத்தும் விதமாக 2016 செப்டெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள்சபை தீர்மானத்தை இலங்கையின் நல்லாட்சி அரசாங்கம் ஏற்றுக்கொண்டதையடுத்து இலங்கைக்கு பல தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு அமெரிக்கா தயாராகியது. 2008ஆம் ஆண்டிலிருந்து சுமார் 8 வருடங்களுக்கு மேலாக இலங்கை மீது விதிக்கப்பட்டிருந்த இராணுவ வர்த்தகத் தடையானது 2016ஆம் ஆண்டு மே மாதம் அமெரிக்காவினால் நீக்கப்பட்டது (Daily FT, 2016). மேலும், UNHRC இல் இலங்கை மீது கொண்டுவரப்பட்ட யுத்தக்குற்றங்கள் தொடர்பிலான தனது இறுக்கமான பிடியை அமெரிக்கா தளர்வடையச் செய்தது.

பிரித்தானிய தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரத்துறைகள் மீள்குடியேற்றம், இனக்குழுக்கள் சார்பான இலங்கையின் மனித உரிமைக் கோட்பாடு என்பவற்றில் பூரண கவனத்தைச் செலுத்தின. 2011 அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற CHOGM இன் போது இரு நாட்டு தலைவர்களும் பரஸ்பர அரசியல் விடயங்கள் பற்றி கலந்துரையாடியதன் பிரகாரம் பிரித்தானியா இலங்கைக்கு மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதியுதவி வழங்க முன்வந்தது. 2009 தொடக்கம் 2011 வரையான காலப்பகுதியில் மனிதாபிமானச் செயற்பாடுகளுக்காக 13.5மில்லியன் அமெரிக்க டொலரினை பிரித்தானியா வழங்கியிருந்தது. இலங்கைக்கு நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் முன்னெடுக்க கால அவகாசத்தை வழங்குமாறு கோரி பிரித்தானியா பிரேரணை ஒன்றை 2017 மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது கூட்டத்தொடரில் முன்வைத்தது (Colombopage, 2017).

உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள்கட்டுமானம், மீள் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு போன்றவற்றுக்கு இந்தியா பங்களிப்பு வழங்குவதாக உறுதியளித்ததோடு, உள்நாட்டு யுத்தத்தினால் உள்நாட்டிற்குள் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கையானது இயல்பு நிலைக்கு திரும்புவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தையும் வழங்கி வருகின்றது. அத்துடன் தொழில்நுட்பம், மனிதவலு, மருத்துவம் போன்றவற்றிலும் உதவிகளையும், பல பில்லியன் பணத்தினை மானியமாகவும் வழங்கியுள்ளது (Reliefweb, 2012). உள்நாட்டு யுத்தகாலத்திலும் யுத்தமுடிவினைத் தொடர்ந்தும் சீனாவுடன் இலங்கையானது அனைத்து வகையிலான பரஸ்பர உறவுகளையும் வளர்த்து வருகிறது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக, யுத்தத்தினைத்தொடர்ந்து இலங்கையின் உள்நாட்டில் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டங்கள் போன்றவற்றினைக் குறிப்பிடமுடியும். 2012ஆம் ஆண்டு சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார். சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு மேற்கொண்ட முதல் விஜயமாக இவ் விஜயமானது அடையாளப்படுத்தப்படுகிறது. இலங்கையின் உள்நாட்டு யுத்தமானது முடிவடைந்த பின்னராக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அயல்நாடான இந்தியாவிற்கோ ஏனைய நாடுகளுக்கோ விஜயம் செய்ததைவிட சீனாவிற்கே அதிகமான விஜயங்களினை மேற்கொண்டிருந்தார். இரு நாடுகளுக்குமிடையில் அரசியல் உறவுகளின்

தொடர்ச்சியாக 2013ஆம் ஆண்டு சீனாவின் புதிய ஜனாதிபதியாக சி ஜின்பிங் பதவியேற்றதன் பின்னர் இலங்கைக்கும் சீனாவிற்குமிடையிலான உறவானது மேலும் வலுவடைந்தது. இதன்போது இலங்கை ஜனாதிபதியின் சீன விஜயத்தின் மூலம் இலங்கை ஜனாதிபதி மற்றும் சீன ஜனாதிபதி ஆகியோரிற்கு இடையில் சீனாவின் மகாமண்டபத்தில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஜனாதிபதி, “இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் ஏனைய நாடுகள் தலையிடுவதனை சீனா வன்மையாக கண்டிக்கின்றது” என்ற கருத்தினை தெரிவித்திருந்தமை இரு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர உறவினை வெளிப்படுத்துகின்றது (கிருஷ்ணமோகன், 2016). இலங்கையின் உள்விவகாரங்களில் வெளிப்படையாக தலையிடாதிருக்கும் கொள்கையினைச் சீனா பின்பற்றியிருந்ததுடன், ஏனைய நாடுகளின் தலையீடுகளை வன்மையாக கண்டித்தும் வந்தது.

ஐக்கியநாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள யுத்தக்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறலுக்கு எதிராக தன்னுடைய வீற்றோ அதிகாரத்தினை பயன்படுத்தி இலங்கைக்கு ஆதரவாக செயற்படுவதனால் ரஷ்யாவானது இலங்கைக்கு முக்கியமான நாடாக இக்கால கட்டத்தில் விளங்கியது. இதற்குச் சான்றாக, 2012, 2013ஆம் ஆண்டுகளில் மனித உரிமைப்பேரவையில் ரஷ்யா இலங்கைக்கு ஆதரவு தெரிவித்தது (The WIRE, 2021). முன்னைய காலப்பகுதியில் ஐரோப்பிய யூனியனுக்கும் இலங்கைக்குமிடையில் வலுவிழந்திருந்த உறவினை நல்லாட்சி அரசாங்கமானது ஐரோப்பிய யூனியனின் அங்கத்துவ நாடுகளுடனான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதனூடாக பலப்படுத்த நடவடிக்கை எடுத்தது. இவ்வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் பதவியேற்றதை அடுத்து தனது முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தினை Germany, Vatcan மற்றும் Austria போன்ற ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கே மேற்கொண்டிருந்தார். 2010 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்ட GSP+ வரிச்சலுகையினை ஐரோப்பிய யூனியன் 2017ஆம் ஆண்டு மீண்டும் வழங்கியது (European Commission,2017). இலங்கைக்கெதிரான யுத்தக்குற்றங்கள் தொடர்பிலான UNHRC தீர்மானங்களுக்கான 34ஆவது கூட்டத்தொடரில் பிரித்தானியா தலைமையின் கீழ் ஐரோப்பிய யூனியன் இலங்கைக்கு நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் முன்னெடுக்க கால அவகாசத்தை வழங்குமாறு கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும் (Colombopage, 2017).

**மனித உரிமை மீறல்கள் வெளியுறவுக் கொள்கையில் ஏற்படுத்திய எதிர்க்கணிய தாக்கங்கள்**

அமெரிக்காவின் பிடியானது இலங்கை தொடர்பில் இறுக்கமடைவதற்கு அமெரிக்க காங்கிரஸில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் காரணமாக அமைந்தன. 2009ஆம் ஆண்டு செக்கோஸ்லாவாக்கியாவை பயன்படுத்தி இலங்கைக்கு எதிராக மனித உரிமை பேரவையில் அமெரிக்கா முதலாவது கண்டனத் தீர்மானத்தை கொண்டு வந்த போதிலும் அது தோல்வியடைந்திருந்தது. இதனையடுத்து 2011ஆம் ஆண்டு ஜூலையில் இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் காங்கிரஸ் சர்வதேச விசாரணையை வலியுறுத்தியது. 2012ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 19வது கூட்டத்தொடரில் இலங்கையின் நல்லிணக்கத்தை முன்னேற்றுவதும் பொறுப்புகூறலும் தொடர்பான தீர்மானத்தை

கொண்டு வந்ததுடன் இத்தீர்மானத்திற்கு ஆதரவாக 24 நாடுகளும் எதிராக 15நாடுகளும் வாக்களித்திருந்தன (Center for Policy Alternatives, 2013). இதில் கூறப்பட்ட பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் செயற்படுத்தாமையினால் மற்றுமொரு கண்டனத்தீர்மானத்தை 2013ஆம் ஆண்டு மனித உரிமை பேரவையின் 22வது கூட்டத்தொடரில் கொண்டு வந்து நிறைவேற்றியிருந்தது (Human Rights Council, 2013). இத்தீர்மானத்தில் திருத்தங்களை கொண்டுவர இந்தியா முனைந்த போதிலும் அது தோல்வியில் முடிவடைந்தது. இதேவேளை 2014ஆம் அண்டு மே மாதத்திற்கு முன்னர் யுத்தத்திற்கு பின்னரான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் திருப்திகரமான முன்னேற்றங்களை இலங்கை அரசாங்கம் ஆதாரபூர்வமாக நிருபிக்க தவறினால் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை தனது நேரடியான விசாரணையினை இலங்கையில் ஆரம்பிக்கும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை அவர்கள் இலங்கைக்கான விஜயத்தின் போது குறிப்பிட்டிருந்தார் (Safna & Aliff, 2017).

ஐரோப்பிய ஒன்றியமானது இலங்கையின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை அனுபவிப்பதற்கான சூழ்நிலையை மேம்படுத்துதல் ஜனநாயகத்தை மேம்படுத்துதல் தொடர்பில் யுத்தம் முடிவுற்றது முதல் தொடர்ந்தும் இலங்கையை அழுத்தத்துக்குள்ளாக்கி வந்தது. அந்தவகையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பல்வேறு அறிக்கைகள் யுத்தத்தில் இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகள், சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டோரின் நிலை, நீதிக்கு முரணான கொலைகள், கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தின் மீதான தடைகள், அமைதியான முறையில் ஒன்று கூடுதல், மத வழிபாட்டுச் சுதந்திரம் என்பவற்றுக்கு எதிரான தடைகள், அவசரகாலச்சட்டம், பயங்கரவாதச்சட்டம் தொடர்பில் தனது கரிசனையை, விமர்சனங்களை தொடர்ந்தும் வெளிப்படுத்தி வந்துள்ளதுடன் அவற்றினை உரிமைகளை அனுபவிப்பதற்கு தடையான விடயங்களாகவும் குறிப்பிட்டு வந்துள்ளது. அதேவேளை சிவில் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகள், சித்திரவதைக்கெதிரான சர்வதேச உடன்படிக்கை, சிறுவர் உரிமை தொடர்பான உடன்படிக்கைகளில் உறுதிப்படுத்தப்பட்ட விடயங்களை இலங்கையும் உத்தரவாதப்படுத்த வேண்டும் எனக்கோரி இலங்கைக்கு வழங்கி வந்த வர்த்தக வரிச்சலுகையினை 2012ஆம் ஆண்டு தற்காலிகமாக இடைநிறுத்தியது (European Commission, 2017).

இலங்கைக்கு எதிராக மனித உரிமைப் பேரவையில் கொண்டுவரப்பட்ட இரு பிரேரணைகளையும் இந்தியா ஆதரித்து வாக்களித்தது. மனித உரிமைப் பேரவையின் 22வது அமர்வில் உரையாற்றிய இந்தியத்தூதுவர் துலிப் சின்கா (Dulip Sinka) பொறுப்புக் கூறலையும் இதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும் இலங்கை உத்தரவாதப்படுத்த வேண்டும் என்றார் (பாஸில், 2020). மனித உரிமைப் பேரவையில் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தினை இந்தியாவானது ஆதரித்திருந்தபோதிலும் பிரேரணை பேரவையில் முன்வைக்கப்பட முன்னமே இவற்றை வலுவற்றதாக்கும் முயற்சியினை மேற்கொண்டிருந்தது. அமெரிக்காவினைப் பகைத்துக் கொள்ளாமல் இந்தியாவானது பிரேரனையை ஆதரித்த அதேவேளை தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு எதிராக எழுந்த அதிருப்தியினை அரசியல் ரீதியில் தனக்கு இலாபமாக்கிக்

கொள்ள மனித உரிமைகள் பேரவையின் வாக்களிப்பை இந்தியா பயன்படுத்திக் கொண்டுத (The WIRE, 2021). பிரித்தானியாவில் இலங்கை அரசுக்கு எதிராக பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டதுடன் பல கண்டன ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன. மேலும் பிரித்தானியாவின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திற்கு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விஜயம் செய்த போது அங்கு செல்லவிடாமல் தடுக்கப்பட்டார் (Adrian Croft, 2010). 2011ஆம் ஆண்டு இடம்பெறவிருந்த இலங்கை இங்கிலாந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு இலங்கை அணி இங்கிலாந்துக்கு வருவதை அங்குள்ள தமிழ் பிரஜைகள் எதிர்த்தமை மற்றும் புலம்பெயர் தமிழர்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டமை (Ferdinando, 2011). போன்ற செயற்பாடுகள் உள்நாட்டு யுத்தத்திற்கு பின்னர் இலங்கைக்கும் பிரித்தானியாவுக்குமிடையிலான உறவில் விரிசல் நிலையினை ஏற்படுத்தின.

**கண்டுபிடிப்புக்கள் மற்றும் முடிவுரை**

ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைகள் குறித்து சட்டமியற்றப்பட்டு பல வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் மனித உரிமைகளை நிலைநிறுத்தல் தொடர்பில் சர்வதேச சமூகம் இன்றும் அரசுகளை வற்புறுத்துகின்றது.

உரிமைகளினைப் பாதுகாப்பதற்கான சர்வதேசப் பொறிமுறையானது வளர்ச்சியுற்றுள்ள போதிலும் அனைத்து சந்தர்ப்பத்திலும் சர்வதேச சமூகமானது உள்நாட்டு உரிமை மீறல்கள் தொடர்பில் உண்மையிலேயே பாதிக்கப்பட்டோரின் நலன்களின் பொருட்டு செயற்படுவதில்லை. மாறாக நாடுகள் தமது சொந்த நலன்களுக்கே முக்கியத்துவமளித்து செயற்படுகின்றன.

சர்வதேச நாடுகள் தங்களது கரிசனைகள் மூலம் இலங்கையை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தமது ஆதிக்கத்தை நிலைபெறச் செய்து உலக அதிகாரத்தை கைப்பற்ற எத்தனிக்கின்றது.

சர்வதேச நாடுகளின் கரிசனைகள் இலங்கை மீதான பொருளாதார மற்றும் அரசியல் ரீதியான அழுத்தங்களை ஏற்படுத்த வழிவகுத்துள்ளது. இதன் வழி இலங்கையின் உள்விவகாரங்களில் சர்வதேச நாடுகள் தமது தலையீட்டை செலுத்துகின்றன.

சர்வதேச அழுத்தங்களினால் இலங்கை அரசானது தன்னை பாதுகாத்துக்கொள்ளக்கூடிய நாடுகளின் பக்கமாக தனது வெளியுறவுக் கொள்கையை வகுக்கின்றது. இதன் காரணமாக சுய பாதுகாப்பிற்காக ஏனைய நாடுகளிடம் தங்கியிருக்க வேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது.

இந் நிலைமையானது ஒரு பக்கத்தில் இலங்கைக்கு பாதகமாக தென்பட்டாலும் இன்னோர் பக்கத்தில் அனைத்து நாடுகளினதும் உறவுகளை மேற்கொண்டு தனது அபிவிருத்தியை மேம்படுத்த வாய்ப்பாகவும் அமைகின்றது.

முடிவாக, அரசியல், சமூக, பொருளாதார, கலாசாரம் போன்ற பல்வேறு தேவைகளின் அடிப்படையில் நாடுகளுக்கிடையிலான உறவுகள் பேணப்பட்டு வருகின்றன. இதனூடாகவே நாட்டினுடைய தேசிய நலனை பேணக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. அரசுகளின்

வெளிவிவகார மற்றும் இராஜதந்திர செயற்பாடுகளில் மனித உரிமைகள் குறிப்பிடத்தக்களவு பங்களிப்புச் செய்கின்றன. இவ்வகையில், யுத்தத்திற்கு பின்னரான இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை தொடர்பில் சில சர்வதேச நாடுகள் அழுத்தங்களை ஏற்படுத்தி வருவதோடு, சில நாடுகள் இலங்கை மனித உரிமைகள் தொடர்பாக பாதுகாப்பான செயற்பாடுகளை மேற்கொள்கிறது என்றும் இவ்வாறான சர்வதேச அழுத்தங்கள் தேவையற்றவை என்றும் அதற்கு எதிரான ஒரு நிலைப்பாட்டையும் கொண்டுள்ளன. இவ்வாறாக இலங்கையின் மனித உரிமை விவகாரம் தொடர்பில் இலங்கைக்கு எதிரான சில நாடுகளும் சாதகமான சில நாடுகளும் உள்ளன. யுத்த முடிவிற்கு பின்னரான இலங்கையின் வெளிநாட்டு உறவானது நாட்டின் தேசிய நலனை அடிப்படையாகக்கொண்டு காணப்பட்டதுடன் யுத்தத்திற்கு பின்னரான அபிவிருத்தியை கருத்திற் கொண்டதாகவும் அமைந்திருந்தது. யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக இராணுவ, ஆயுத மற்றும் பொருளாதார ரீதியாக இலங்கைக்கு ஆதரவு வழங்கிய சீனாவுடனும் இந்தியா, பாகிஸ்தான் போன்ற தென்னாசிய நாடுகளுடனும் ஈரான், ஈராக் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளுடனும் மற்றும் ஆபிரிக்க நாடுகளுடனும் நெருக்கமான உறவினை கடைப்பிடித்து வந்தது. இவ்வாறு இந்நாடுகளுடன் உறவினை பேணுவதில் காட்டிய ஆர்வம் மேற்கத்தேய நாடுகளுடனான உறவினை பெரிதும் கேள்விக்குள்ளாக்கியிருந்ததுடன் மேற்கைரோப்பிய நாடுகளுடனான உறவில் இழுபறி நிலையினையும் தோற்றுவித்திருந்தது. இதனால் மேற்கைரோப்பிய நாடுகளுக்கும் இலங்கைக்குமிடையில் பாரியளவிலான உறவு நிலை பேணப்பட்டிருக்கவில்லை. குறைந்த அளவிலான வர்த்தக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியிலான உறவுகளே கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. சீனாவின் அதிகூடிய பிரசன்னமானது மேற்கு நாடுகளுக்கு இலங்கை மீதான அதிருப்தி நிலையை தோற்றுவித்ததுடன் இலங்கைக்கு எதிராக எதிர் செயற்பாடுகள் பலவற்றை முன்னெடுக்கவும் காரணமாக அமைந்திருந்தது. இதனால் இலங்கை தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் சவால்களை முகங்கொடுக்க நேர்ந்தது. மறுபுறமாக அமெரிக்கா தலைமையிலான மேற்கைரோப்பிய நாடுகள் தமது கட்டுக்குள் இலங்கையை கொண்டுவரும் வகையில் இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்த்திருந்தன.

அதற்கேற்ப 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றதுடன் அது மேற்கைரோப்பிய நாடுகளுக்கான வாய்ப்பினையும் வழங்கியிருந்தது. இத்தேர்தலில் வெற்றி பெற்ற மைத்திரிபால சிறிசேன – ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நல்லாட்சி அரசாங்கமானது இலங்கை மீது திணிக்கப்பட்டிருந்த கெடுபிடி நிலையை தணிக்கும் வகையில் சீனா சார்புடையதாகக் காணப்பட்ட வெளிநாட்டு உறவினை மேற்கு சார்பானதாக மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. புதிய ஆட்சியின் கீழ் மேற்கு நாடுகளுக்கான உத்தியோகபூர்வ விஜயங்கள் பல இடம்பெற்றதுடன் பொருளாதார மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு ஒத்துழைப்புக்களும் ஏற்படுத்தப்பட்டன. இதனால் இலங்கை மீது முன்வைக்கப்பட்ட மனித உரிமை மீறல் தொடர்பான குற்றச்சாட்டுக்களின் கடினப்போக்கு தளர்வடைந்ததுடன் மேற்கு நாடுகளின் விடாப்பிடி நிலையும் தளர்வடையத் தொடங்கியது. இலங்கை மேற்கு நாடுகளிடமிருந்து அதிகமான பொருளாதார உதவிகளை பெற்றுக்கொண்டதுடன் இராஜதந்திர ரீதியிலான உறவுகளும் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. தேசிய அரசாங்கத்தின் கீழ் மேற்கு நாடுகளுடனான உறவானது பொருளாதார அபிவிருத்தி

மற்றும் யுத்தக்குற்றங்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுபடுதல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பாரம்பரிய மேற்கத்தேய சார்புக் கொள்கையினாலும் முன்னைய ஆட்சிக்காலப்பகுதியிலும் பார்க்க வரவேற்கத்தக்களவில் வளர்ச்சியடைந்து வந்தது. எனினும் சிறிசேனவின் கம்யூனிச போக்குக் காரணமாகவும் சீனாவின் கடனுதவி வலையினுள் இலங்கை அகப்பட்டுள்ளதனாலும் மேற்குசாரா நாடுகளை முழுமையாக விலக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டது. இதனால் மேற்குசார் மற்றும் மேற்குசாரா நாடுகளை அனுசரித்து செல்லும் வகையிலான வெளியுறவினை கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. இந்து சமுத்திரத்தின் கேந்திர நிலையமாக விளங்கும் இலங்கை மீது அமெரிக்கா, சீனா, இந்தியா போன்ற வல்லரசுகளின் கவனம் ஆரம்ப காலத்திலிருந்தே இருந்து வருகின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் இலங்கை தனது வெளியுறவினை சிறந்த முறையில் கையாள்வதனூடாக தேசிய நலனை அடைந்து கொள்ளவும் சர்வதேச சமூகத்தை வெற்றி கொள்ளவும் முடியுமானதாக இருக்கும் என்பது கண்கூடு.

இவ்வகையில் இதன் முடிவாக நோக்கின், ஒரு நாட்டில் மக்களும் அரசும் இணைந்து பலம் பெற்றால்தான் அந்நாட்டில் மனித உரிமைகள் நிலவரம் சிறப்பாக இருக்கும். மனித உரிமைகள் சிறப்பாக இருந்தால் மக்களும் நல்ல நிலையில் இருப்பர். ஆனால் மனித உரிமைகள் பலவீனமடைந்தால் மக்களும் பலவீனம் அடைந்து அரசு மிகவும் பலம் வாய்ந்த தன்மையைப் பெற்று விடும். இது நாட்டுக்கு நல்லதல்ல. இவ் மனித உரிமைகள் யாரினால் மீறப்பட்டாலும் ஓர் அரசின் ஆட்புலத்தினுள்ளேயே அவ் உரிமை மீறல்கள் நிகழுகின்றன என்றவகையில் அதனை பாதுகாக்கும் முக்கிய பொறுப்பு அரசினையே சாரும். இப் பொறுப்பிலிருந்து அரசுகள் தவறுமாயின் சர்வதேசமானது அரசுகளின் பொறுப்புக்கூறும் கடப்பாட்டினை உறுதி செய்வதற்காக தலையீடுகளை மேற்கொள்ளும். ஆயினும் அத்தகைய தலையீடுகள் உரிமைகளினைப் பாதுகாக்கும் சர்வதேசத்தின் பொறிமுறைகளினூடாக உள்நாட்டு இறைமையினை மீறும் செயலாக கருதப்படுவதில்லை. எனினும் சர்வதேசத்தின் இவ்வாறான கரிசனைகள் உண்மையில் உரிமையை பாதுகாக்க அன்றி தமது நலனை அடைவதற்காகவே செயற்படுகின்றன. யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் மனித உரிமை விவகாரம் தொடர்பில் சர்வதேசத்தின் நிலைப்பாடு இதற்கு சான்றுபகர்கின்றது. அதாவது, தேசிய நலன் என்ற அடிப்படையில் பாதுகாப்பு மற்றும் அதிகாரம் என்ற இரண்டையும் மையப்படுத்தியதான யதார்த்தவாத கோட்பாட்டின் நிமித்தம் அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் தனது தேசிய நலனை அடைந்து கொள்ள அதிகாரத்தை பயன்படுத்துகின்றன. இலங்கையின் உள்நாட்டு யுத்தத்திற்கு பின்னரான மனித உரிமை மீறல்களை மையப்படுத்தி சர்வதேசத்தின் தலையீடு இலங்கையில் நிலைகொண்டு அழுத்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்நிலையிலிருந்து தன்னை பாதுகாக்க இலங்கை அரசானது தனது வெளியுறவுக் கொள்கைகளை தனக்கு சார்பான நாடுகளுடனும் தன்னை சர்வதேசத்தின் அழுத்தங்களிலிருந்து பாதுகாக்கக்கூடிய நாடுகளுடனும் வகுத்து வருகின்றது. இதன் மூலம் இலங்கையின் சுயபாதுகாப்பு என்பது அதன் நட்பு நாடுகளின் மீது தங்கியிருக்கும் ஓர் நிலையே உருவாகியுள்ளது. இந்நிலையில் இலங்கை அரசு தனது சுய பாதுகாப்பை விட்டுக் கொடுக்க கூடிய நிலை உருப்பெற்றுள்ளது. இதன் காரணமாக

உள்நாட்டு யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் பின்பற்றப்பட்ட வெளியுறவுக் கொள்கையானது நிலையானதாக இல்லை எனலாம். இது ஓர் வகையில் இலங்கைக்கு பாதகமாக தெரிந்தாலும் இன்னோரன்ன வகையில் இது சாதகமான நிலையையும் உண்டு பண்ணுகிறது என்பது மறுக்க முடியாததாகும். எதுஎவ்வாறு இருப்பினும், இந்நிலையை இலங்கையால் எந்தவகையிலும் தவிர்க்க முடியாது என்பதே நிதர்சனம். எனவே இவற்றைக்கொண்டு நோக்கின் இவ்வாய்வானது வெளியுறவுக் கொள்கையில் மனித உரிமைகளின் தாக்கத்தை விரிவாக எடுத்தியம்பியதோடு, மனித உரிமை விவகாரம் தொடர்பான சர்வதேசத்தின் கரிசனை என்பது சர்வதேச நாடுகளின் சுய நலனே தவிர அக்கறையல்ல என்பதனூடாக இது ஓர் விம்பம் என்பதையும் நிரூபித்துள்ளது. இலங்கையின் கேந்திர நிலையே இவையனைத்திற்குமான மூலவேர் என்பதும் ஊர்ஜிதமாகியுள்ளதோடு இதிலிருந்து இலங்கை வெளிவர முடியாது என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**உசாத்துணை**


இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு. (2016). *இலங்கை மனித உரிமைகள் அறிக்கை* 2016. https://lk.usembassy.gov/wp-content/uploads/sites/149/2017/04/Sri-Lanka-2016-Human-Rights-Report-Tamil.pdf

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு. (2018). *இலங்கை மனித உரிமைகள் அறிக்கை* 2018. https://lk.usembassy.gov/wp-content/uploads/sites/149/Human-Rights-2018-Tamil.pdf

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு. (2019). *இலங்கை மனித உரிமைகள் அறிக்கை* 2019.

கிருஷ்ணமோகன்.த. (2016). *இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான அறுபது வருட இராஜதந்திர உறவு: தந்திரோபாயக் கூட்டாண்மை – ஓர் மீளாய்வு.* https://www.researchgate.net/profile/Thanabalasingam-

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கை. (2016). *இலங்கை : மனித உரிமைகள் நிலை 2016.* கின்சி டெரஸ். கொழும்பு. இலங்கை.

நிருபா.கு.(2016, May 15). சித்திரவதை விடயத்தில் அரசாங்கம் பொறுப்புணர்வை வெளிக்காட்ட வேண்டும். *வீரகேசரி.*

பனினி விஜேசிறிவர்த்தன & ராஜபக்ஷ.எம். (2013). *இலங்கை இராணுவம் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து 17 வயது இளைஞனைக் கொன்றது.* Retrieved from https://www.wsws.org/tamil/articles/2013/aug/130809_sri.shtml

பாஸில்.எம்.எம். (2020). *போருக்குப் பிந்திய அரசும் சமூகமும் - இலங்கையின் அனுபவங்கள்.* குமரன் புத்தக இல்லம்.

*மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்துக்கான அறிக்கை.* (2014). https://www.gov.uk/government/publications/human-rights-in-countries-of-concern-sri-lanka.taa

மனித உரிமைகளுக்கான தரவு மையம். (2019). *இலங்கையின் மாற்றுக்கருத்துக்களை ஒடுக்குதல்: 2019, ஏப்பிரல் 1 – யூன்31.* https://www.inform.lk/wp-content/uploads/2019/09/Tam.Dissent-report-April-June2019.pdf

மௌனம் களையும் போராட்டம்.(2013, September 10). *இராணுவ ஆட்சியும் வெலிவேரிய படுகொலையும், போராட்டம்.* http://www.padippakam.com/document/porattam/porattam_005.pdf

வினவு. (2013). *இலங்கை இஸ்லாமியர்களை குறிவைக்கும் பௌத்த மதவெறி!.* https://www.vinavu.com/2013/08/15/sl-buddhist-attack-on-muslims/

Adrian Croft. (2010). *Sri Lanka leader's UK speech cancelled due to protests*. https://www.reuters.com/article/idINIndia-53288320101202

AP. (2013, April 13). Armed men set fire to Sri Lankan newspaper press. *USA TODAY*. Retrieved, from https://www.usatoday.com/story/news/world/2013/04/13/sri-lankan-fire-newspaper/2079657/

Asian human rights commission. (2012). *SRI LANKA: Lalith Kumar Weeraju and Kugan Murugan kept in detention.* http://www.humanrights.asia/news/ahrc-news/AHRC-STM-090-2012/

BBC. (2013). *BBC suspends Sri Lanka broadcasts due to 'interference*. https://www.bbc.com/news/world-asia-21942532

BBC. (2019). *Sri Lankan worker at Swiss embassy arrested over kidnap claim*. https://www.bbc.com/news/world-asia-50815439

Center for Policy Alternatives. (2013, March). *Guide to UN HRC Resolution on Sri Lanka*. https://www.cpalanka.org/wp-content/uploads/2013/02/Guide-on-UNHRC-Resolution-February.pdf

ColomboPage. (2017). *UK to sponsor a new consensus resolution on Sri Lanka at UNHRC*. http://www.colombopage.com/archive_17A/Feb14_1487096942CH.php

COLOMBO TELEGRAPH. (2013). *Families of Disappeared Attack In Eastern Sri Lanka On Human Rights Day*. https://www.colombotelegraph.com/index.php/families-of-disappeared-attack-in-eastern-sri-lanka-on-human-rights-day/

Daily FT. (2016). *US eases military trade restrictions on SL*. https://www.ft.lk/article/540503/ft

European Commission. (2017). *EU grants Sri Lanka improved access to its market as incentive for reform*. https://policy.trade.ec.europa.eu/news/eu-grants-sri-lanka-improved-access-its-market-incentive-reform-2017-05-17_en

Ferdinando,S. (2011). *Sri Lankan cricket tour of England under fire*. https://cricketique.live/2011/05/04/sri-lankan-cricket-tour-of-england-under-fire/

Human Rights Council. (2013). *Human Rights Council adopts nine resolutions and two decisions*. https://www.ohchr.org/en/press-releases/2013/03/human-rights-council-adopts-nine-resolutions-and-two-decisions

Human Rights Watch. (2015). *We Live in Constant Fear, Lack of Accountability for Police Abuse in Sri Lnka*. https://www.hrw.org/report/2015/10/23/we-live-constant-fear/lack-accountability-police-abuse-sri-lanka

Human Rights Watch. (2019). *Sri Lanka: No Justice for 'Trinco 5' Magistrate Acquits 13 Police for 'Lack of Evidence*. https://www.hrw.org/news/2019/07/08/sri-lanka-no-justice-trinco-5

Nadia Fazlulhaq. (2015). *Tangalle: Paradise lost*. https://www.sundaytimes.lk/120101/News/nws_22.html

Reliefweb. (2012). *Sri Lanka appreciates India's contribution to Sri Lanka's post-conflict era*. https://reliefweb.int/report/sri-lanka/sri-lanka-appreciates-india%E2%80%99s-contribution-sri-lanka%E2%80%99s-post-conflict-era

RSF. (2019, June 06).*Alarming resurgence in Sri Lankan police attacks on Tamil journalists*. https://rsf.org/en/alarming-resurgence-sri-lankan-police-attacks-tamil-journalists

Safba Sakki.M.B & Aliff.S.M. (2017). *Sri Lanka's Foreign Relations with United States of America and European Countries: Study Based on 2009 – 2015*. http://ir.lib.seu.ac.lk/bitstream/123456789/3192/1/Proceedings%20of%20Articles%20-%20Page%20189-201.pdf

Samakalm. (2019). *3 Army men convicted in Visuvamadu Gang Rape case released by Colombo Appeal Court*. http://tamildiplomat.com/124614-2/

Stephanie March. (2015). *Sri Lanka reinstates impeached chief justice Shirani Bandaranayake*. https://www.abc.net.au/news/2015-01-29/sri-lanka-reinstates-impeached-chief-justice/6054176

The WIRE. (2021). *India Abstains From Voting on UNHRC Resolution Critical of Sri Lanka*. https://thewire.in/diplomacy/india-abstain-vote-unhrc-resolution-critical-sri-lanka

USembassy. (2019). *Contry Reports on Terrorism 2019:Sri Lnka*. https://lk.usembassy.gov/wp-content/uploads/sites/149/Country-Reports-on-Terrorism-2019.pdf

US Embassy. மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்துக்கான அறிக்கை, (2014), Retrieved from uploads/sites/149/2019-Human-Rights-Report-Tamil.pdf

WSWS. (2012). *Fisherman killed as Sri Lankan police fire on protest*. https://www.wsws.org/en/articles/2012/02/sril-f16.html

# PANEL OF REVIEWERS

| | |
|---|---|
| 1. Prof. V. Gunaretnam | Eastern University, Sri Lanka |
| 2. Prof. T. Krishnamohan | Eastern University, Sri Lanka |
| 3. Prof. V. Inpamohan | Eastern University, Sri Lanka |
| 4. Prof. S. Santhirasegaram | Eastern University, Sri Lanka |
| 5. Prof. K Rajendram | Eastern University, Sri Lanka |
| 6. Prof. S. Jeyasankar | Eastern University, Sri Lanka |
| 7. Prof. Suresh Kanesh | Eastern University, Sri Lanka |
| 8. Prof. K.T. Ganeshalingam | University of Jaffna |
| 9. Prof.Vigneswary Pavanesan | University of Jaffna |
| 10. Prof.T. Thanaraj | Sri Lanka Institute of Information Technology (SLIIT) |
| 11. Prof.T.Mukunthan | Open University of Sri Lanka |
| 12. Prof. ALM. Riyal | South Eastern University of Sri Lanka |
| 13. Prof. SM. Ayoob | South Eastern University of Sri Lanka |
| 14. Prof. MAM. Fowsar | South Eastern University of Sri Lanka |
| 15. Dr.S.Yogarajah (Retired Prof) | Eastern University, Sri Lanka |
| 16. Dr.C.Arulmoly (Retired Prof) | Eastern University, Sri Lanka |
| 17. Dr. S. Kesavan | Eastern University, Sri Lanka |
| 18. Dr. M. Nadira | Eastern University, Sri Lanka |
| 19. Dr. S.Umashankar | Eastern University, Sri Lanka |
| 20. Dr. Jeyaranjini Gnanathas | Eastern University, Sri Lanka |
| 21. Dr.R. Premkumar | Eastern University, Sri Lanka |
| 22. Dr.S. Karunakaran | National Institute of Education |
| 23. Dr.M. B. Fowzul | Eastern University, Sri Lanka |
| 24. Dr.A.Vimalraj | Eastern University, Sri Lanka |
| 25. Dr. S. Baskaran | University of Peradeniya |
| 26. Dr. P Sarawanakumar | University of Peradeniya |
| 27. Dr. S.Jeevasuthan | University of Jaffna |
| 28. Dr. A.Nithlavarnan | University of Jaffna |
| 29. Dr. B. Sathiyamoorthy | Madurai Kamaraj University |
| 30. Dr.V.Muthulakshmi | GTN Arts College, Dindigul |
| 31. Dr. M. Riswan | South Eastern University of Sri Lanka |
| 32. Mr. C. Sivanayagam | Eastern University, Sri Lanka |
| 33. Mrs. R. V. Francis | Eastern University, Sri Lanka |
| 34. Mr. M. Ravi | Eastern University, Sri Lanka |
| 35. Mr. P. Sachithanantham | Eastern University, Sri Lanka |
| 36. Mrs. P. Moses | Eastern University, Sri Lanka |
| 37. Mr. S. Jeganathan | Eastern University, Sri Lanka |
| 38. Mr. R. Sahayaseelan | Eastern University, Sri Lanka |
| 39. Mr. K. Mathiseelan | Eastern University, Sri Lanka |
| 40. Mr. R. Kiruparajah | Eastern University, Sri Lanka |

| | |
|---|---|
| 41. Mr. G. Vigneswaran | Eastern University, Sri Lanka |
| 42. Mr. A. Yogarajah | Eastern University, Sri Lanka |
| 43. Mr. S. K. Shivahaneshan | Eastern University, Sri Lanka |
| 44. Mr. A. L. M. Mujahid | Eastern University, Sri Lanka |
| 45. Mr. V. Alagaratnam | Eastern University, Sri Lanka |
| 46. Rev. Fr. A. A. Navaretnam | Eastern University, Sri Lanka |
| 47. Mr. A. Kanneraj | Eastern University, Sri Lanka |
| 48. Mrs. T Sachithanantham | Eastern University, Sri Lanka |
| 49. Mr. C. Sasitharan | Eastern University, Sri Lanka |
| 50. Mr. K. Ravichandran | Eastern University, Sri Lanka |
| 51. Mrs. V. Selvanayagam | Eastern University, Sri Lanka |
| 52. Mrs. R. Thakshaayini | Eastern University, Sri Lanka |
| 53. Mr. N. Vaman | Eastern University, Sri Lanka |
| 54. Mrs. Vijitha Thivakaran | Eastern University, Sri Lanka |
| 55. Mr. K. Thiruchenthuran | Eastern University, Sri Lanka |
| 56. Ms. Soba Balasundaram | Eastern University, Sri Lanka |
| 57. Mr.Shandru Mariyadas | Eastern University, Sri Lanka |
| 58. Mr.K.Gnanaretnam | Open University of Sri Lanka |
| 59. Mr.K.Ketheeswaran | Open University of Sri Lanka |
| 60. Mr.R.Rajeshkannan | University of Jaffna |
| 61. Mr.S.Sivakanthan | University of Jaffna |
| 62. Mr.T.Vigneswaran | University of Jaffna |
| 63. Mr.S.Thiruchchenthuran | University of Jaffna |
| 64. Mr. S. Ramanarajah | University of Jaffna |
| 65. Mr. V. Vijayabaskar | University of Jaffna |
| 66. Mr.R.Sarveswara | University of Jaffna |
| 67. Mr.S.Nirosan | University of Jaffna |
| 68. Mr.T.Thileepan | University of Jaffna |
| 69. Mr. N. Subaraj | South Eastern University of Sri Lanka |
| 70. Fr. Ronson CMF | Claretian Congregation |